In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருத்தொண்டர் புராணம்
என்னும்
பெரியபுராணம்

(மூலமும் – உரையும்)

முதலாம் தொகுதி



உரையாசிரியர்

சு. சுப்பராயநாயகரவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

REDLOLLIPOP
No. 129/67, RK Mutt Road,
Mandaveli,
Chennai - 600 028.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேக்கிழார் அருளிய

திருத்தொண்டர் புராணம்

என்னும்

பெரியபுராணம்

(மூலமும் - உரையும்)

உரையாசிரியர்

கூ. சுப்பராயநாயகரவர்கள்

பதிப்பாசிரியர்

சு. இலம்போதரன்

முல்லை நிலையம்

9, பாரதி நகர் முதல் தெரு,

தி. நகர், சென்னை – 600 017.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதல் பதிப்பு : 2010

நூல் பற்றிய விவரங்கள்

நூற் பெயர் : பெரியபுராணம்

உரையாசிரியர் : சூ. சுப்பராயநாயகரவர்கள்

பதிப்பாசிரியர் : சு. இலம்போதரன்

பதிப்புரிமை : முல்லை நிலையம்

தாள் : வெள்ளைத்தாள் 18.1கி.கி.

நூலின் அளவு : டெம்மி

மொத்தப் பக்கங்கள் : 704

வெளியிடுவோர் : முல்லை நிலையம்
9, பாரதி நகர் முதல் தெரு,
தி. நகர், சென்னை – 17.
போன்: 28342249

விற்பனை உரிமை : பாரி நிலையம்,
184/88, பிராட்வே,
சென்னை – 600 108.

பொருள் : திருத்தொண்டர் வரலாறு

கணினி : லதா கம்பியூட்டர்,
சென்னை – 1. 9840405847.

நூலின் விலை: ரூ. 400.00

அச்சிட்டோர் : மோனார்க் கிராபிக்ஸ்
பெரியார் பாதை, சென்னை–94.
போன்: 23621086

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிப்புரை

'திருமுறை' என்ற சொல், முதன்முதலாக திருமந்திரத்தில்தான் 'பாடுந்திருமுறை' என்று வருவதாக ஆய்வறிஞர் கூறுவர். திருமுறை என்றால் தெய்வத்தன்மை, அழகு, அருள், செல்வம் போன்றவைகளைக் கொண்ட பனுவல் என்று பொருள். சைவத் திருமுறைகள் பன்னிரண்டு என்பது தெரியும். அதில் பன்னிரண்டவதாக வைத்தெண்ணப்படுவது பெரிய புராணம். இந்த நூலை திருத்தொண்டர் புராணம் என்றும் கூறுவர். அறுபத்து மூன்று தனி அடியார்களைப் பற்றியும், ஒன்பது தொகையடியார் களைப் பற்றியும் வரலாற்றுப் பாடல்களைக் காண்டங்களையும், பதின்மூன்று சருக்கங்களையும், 4286 பாடல்களையும் கொண்ட தெய்வப் பனுவல்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், நாயன்மார்களைப் பற்றி 'திருத்தொண்டத் தொகை' என்ற நூலைப் பாடியருளினார். திருநறையூர் நம்பியாண்டார் நம்பி என்ற மேலார் திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலைப் பாடினார். இவை பெரிய புராணத்திற்கு முதல் நூலாகவும், வழிநூலாகவும் வைத்து எண்ணப்படுகின்றன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் போன்றவர்களின் தொண்டுகளையும், அவர்கள் இயற்றிய முதல் ஏழு திருமுறைகளின் சிறப்பையும் எடுத்து இயம்புகின்றது.

திருஞானசம்பந்தருக்கு 1256 பாடல்களையும், திருநாவுக்கரசருக்கு 429 பாடல்களையும், பெரியபுராணத்துள் தெய்வச் சேக்கிழார் பாடி வைத்துள்ளார். எனவே அறிஞர் பெருமக்கள் 'பிள்ளை பாதி', 'புராணம் பாதி' என்று கூறுவர். அதாவது, திருஞானசம்பந்தப் பிள்ளையாரைப் பற்றி பாதி புராணமும், மற்ற அடியார்களைப் பற்றி மீதி பாதி புராணமும் இருப்பதாகவும் கூறி மகிழ்வர். தமிழர்களுக்கு வரலாற்று உணர்வு இல்லை என்பது பலர் கூறும் குறை. 'வாழ்வாங்கு வாழ்ந்தவரை' வையம் மறக்குமா? புறநானூறு, சிலப்பதிகாரம், கலிங்கத்துப் பரணி முதலியவை, கலை நயம் ததும்ப படைக்கப் பட்ட காப்பியங்களைப் போலவே, பாமரனைப் பற்றியும் பாடி அவன் பெயர் நிலைக்கச் செய்த பெருங்காப்பியம் பெரிய புராணம்.

			51
சிவவேதியர்	5	பாணர்	1
அந்தணர்	13	பரதவர்	1
மாமத்திரர்	1	வேடர்	1
வேந்தர்	6	சான்றார்	1
மன்னர்	5	சாலியர்	1
வணிகர்	5	செக்கார்	1
வேளாளர்	13	ஏகாலி	1
இடையர்	2	புலையர்	1
குயவர்	1	மரபு அறியாதவர்	6
	51		65

அறுபத்து மூன்று நாயன்மார்களுடன் சுந்தரமூர்த்தி பெருமானின் தந்தையார் சடையனார், தாயார் இசைஞானியார் இருவரையும் சேர்த்து இங்கு 65–எனச் சுட்டப்பட்டது. எல்லா மனிதர்களையும் 'இறையடியார்கள்' என்ற உயர்ந்த நோக்கத்துடன் இணைத்த சேக்கிழாரை அறுபத்து நான்காம் நாயனார் என்றும் சொல்லாம்.

சேக்கிழார் 12–ஆம் நூற்றாண்டிலே, 2ஆம் குலோத்துங்க சோழ அரசனின் தலைமை அமைச்சராகத் திகழ்ந்தார். இவருடைய நேர்மை, ஊக்கம், உழைப்பு, வீரம், ஆழ்ந்தகன்ற அறிவு இவற்றைக் கண்ட மன்னன், 'உத்தம சோழ பல்லவன்' என்று பட்டம் அளித்துப் பாராட்டினான். சேக்கிழார் பிறந்த இடம், தொண்டை நாட்டு புலியூர் கோட்டத்து, குன்றத்தூர். இது சென்னைக்கு மிக அருகில் உள்ளது. இவருடைய தம்பியின் பெயர் பலறாவாயர் என்பதாகும். இருபதாம் நூற்றாண்டின் கவிச் சக்ரவர்த்தி என்று போற்றப் பெற்ற திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை (இவர் தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயரின் ஆசிரியர்) அவர்கள் சேக்கிழாரின் மீது ஈடுபாடு கொண்டவர்கள். அதனால் 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்' என்ற நூலை சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய கவிவலவ' என்று குறிப்பிட்டுள்ளார். பெரிய புராணத்தை எழுதத் தொடங்கும் பொழுது இறைவனே 'உலகெலாம்' என அடி எடுத்துக் கொடுக்கின்றான். யாருக்கும் தராத அடைமொழியை 'தெய்வச் சேக்கிழார்' என்று கூறி போற்றுவர் தமிழ் மக்கள். அவர் தெய்வத் தன்மை பொருந்தியவர் என்பதற்கு ஒரு சான்று. 'உலகெலாம்' என்று தொடங்கும் கடவுள் வாழ்த்துப் பாடலில் உள்ள எல்லா எழுத்துகளையும் கூட்டினால் (ஒற்று உள்பட) 63 என்று வரும். அந்தப் பாடலையே பிரித்து எழுதிக் கூட்டினால் 72–என்று வரும். இது எதைக் குறிக்கின்றது? அறுபத்து மூன்று தனியடியார்களையும், 9 தொகையடியார் களையும் சேர்த்து அல்லவோ குறிக்கின்றன. சேக்கிழார் சுவாமிகள் இதை யெல்லாம் எண்ணி யெண்ணியா பாடி இருப்பார். இவருக்கு இறையருள் நலம் இருந்ததால் இயற்கையாக இவை அமைந்தது. நாமும் பெரிய புராணத்தை நாள்தோறும் ஓதி வந்தால் இறையருள் கிட்டும் என்பது உறுதி.

பெரிய புராணத்தில் சில பகுதிகளை மட்டும் முதன்முதலாகப் பதிப்பித்தவர் மழவை மகாலிங்க ஐயர் ஆவார். இப்பதிப்பு 1843–இல் வெளி வந்தது. காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார் பதிப்பு 1859–லும் பே. இராமலிங்கம் பிள்ளை பதிப்பு 1879–லும், ஆறுமுக நாவலரின் பதிப்பு 1884–லும் வெளிவந்தன. திருவண்ணாமலை ஆதீனம் ஆறுமுகத்தம்பிரான் சில பகுதிகளுக்கு மட்டும் பதவுரை எழுதி வெளியிட்டார். 1893–ல் சுப்பராய நாயகர் பதவுரை, விளக்கம் எழுதி வெளியிட்டார். இப்பேரறிஞர் பல நூல்களுக்குப் பேருரை எழுதினார். 117 ஆண்டுகளுக்குப் பின் இவ்வுரை வெளிவருகிறது. தெளிவான உரை, எல்லோரும் படித்துப் புரிந்து கொள்ளக் கூடிய எளிய நடை. இதனை மீண்டும் அச்சு வாகனம் ஏற்றி, தமிழர்தம் மன வீதிகளிலே உலா வரவிட்ட பாரிநிலைய உரிமையாளர் திரு. செ. அமர்ஜோதி அவர்களின் தொண்டு போற்றுதற்குரியதாகும்.

சில நூல்களைப் படித்தால் 'அற' உணர்வு தோன்றும். சில நூல்கள் 'பொருள்' உணர்வைத் தோற்றுவிக்கும். சில நூல்கள் இன்பக் கிளர்ச்சியை ஊட்டும். வீடு பேறு குறித்து நம்மைச் சிந்திக்கத் தூண்டுவன திருவாசகம் போன்ற ஒரு சிலவே. இப் பெரிய புராணத்தை ஓதினால் அறம், பொருள், இன்பம், வீடடைதல் உறுதி. பண்பட்ட சொற்கள், பண்பட்ட ஓசைகள், பண்படுத்தும் கருத்துகள் கொண்டது பெரிய புராணம். 'தொண்டல்லால் துணையும் இல்லை' என்பார் அப்பரடிகள். கற்கக் கற்க நாமும் தொண்டராவோம். இறையருள் பெறுவோம்.

பணிவுடன்

சு. இலம்போதரன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

பக்கம்

பெரியபுராணம்

1. பாயிரம் ... 7
2. திருமலைச் சிறப்பு ... 12
3. திருநாட்டுச் சிறப்பு ... 27
4. திருவாரூர்ச் சிறப்பு ... 40
5. திருக்கூட்டச் சிறப்பு ... 58
6. தடுத்தாட்கொண்ட புராணம் ... 62

தில்லைவாழந்தணர் சருக்கம்

7. தில்லைவாழந்தணர் புராணம் ... 139
8. திருநீலகண்டநாயனார் புராணம் ... 143
9. இயற்பகைநாயனார் புராணம் ... 159
10. இளையான்குடிமாறநாயனார் புராணம் ... 174
11. மெய்ப்பொருள்நாயனார் புராணம் ... 184
12. விறன்மிண்டநாயனார் புராணம் ... 194
13. அமர்நீதிநாயனார் புராணம் ... 199

இலைமலிந்த சருக்கம்

14. எறிபத்தநாயனார் புராணம் ... 217
15. ஏனாதிநாதநாயனார் புராணம் ... 238
16. கண்ணப்பநாயனார் புராணம் ... 253
17. குங்கிலியக்கலயநாயனார் புராணம் ... 321
18. மானக்கஞ்சாறநாயனார் புராணம் ... 334

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

19. அரிவாட்டாய நாயனார் புராணம் ... 347

20. ஆனாயநாயனார் புராணம் ... 355

மும்மையால் உலகாண்ட சருக்கம்

21. மூர்த்திநாயனார் புராணம் ... 370

22. முருகநாயனார் புராணம் ... 387

23. உருத்திரபசுபதிநாயனார் புராணம் ... 392

24. திருநாளைப்போவார்நாயனார் புராணம் ... 396

25. திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணம் ... 409

26. சண்டேசுரநாயனார் புராணம் ... 458

திருநின்ற சருக்கம்

27. திருநாவுக்கரசுசுவாமிகள் புராணம் ... 480

28. குலச்சிறைநாயனார் புராணம் ... 631

29. பெருமிழலைக்குறும்பநாயனார் புராணம் ... 635

30. காரைக்காலம்மையார் புராணம் ... 640

31. அப்பூதியடிகணாயனார் புராணம் ... 663

32. திருநீலநக்கநாயனார் புராணம் ... 679

33. நமிநந்தியடிகள்நாயனார் புராணம் ... 692

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர்புராணம்

என்னும்

பெரிய புராணம்.

முதற்காண்டம்.

பாயிரம்.

நடேசர்துதி.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 1

எல்லா உலகத்தவரும் இத்தன்மையினன் என்று அறிந்து சொல்லுதற்கரியவரும், சந்திரன் உலாவுகின்ற தங்கை தங்கிய சடையினை உடைய வரும், அளவில்லாத சோதி சொரூபமான வரும், திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் செய்தருளு கின்றவருமாகிய ஸ்ரீ நடராஜ வள்ளலாரது தாமரை மலர் போன்ற சிலம் பணிந்த ஸ்ரீ பாதங்களை (யாம்) துதித்து வணங்கு கின்றோம் என்றவாறு.

இந்தச் செய்யுளில், "உலகெலாம்" என்பது ஸ்ரீ நடராஜ வள்ளல் அசரீரியாக அருளிச்செய்தது. ஏனைய பகுதி ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியது. சிவனார் முதலெடுத்துக் கொடுத்ததைச் சேக்கிழார் பூர்த்தி செய்தமை யால், இருவர்வாக்கையும் ஒரேவாக்காகத் தெளிதலே அமைவுடைத்து. ஸ்ரீ சிவபெருமான் முதற்பகுதியை அசரீரியாகத் திருவாய்மலர்ந்தருளியபடி ஏனைய பகுதியைச் சேக்கிழாரை அதிட்டித்து அச்சிவபரஞ்சுடரே கூறியருளினாரெனவறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மானிடப் பிறவியின் பயன்

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்;
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டஞ்செய் வரதர்பொற் றாள்தொழ. **2**

(இ - ள்.) தேன்பொருந்திய மலர்களையுடைய சோலை சூழ்ந்த திருத்தில்லைப்பதியில் ஆனந்தத் தாண்டவஞ் செய் தருளுகின்ற நடேசமூர்த்தியினது அழகிய குஞ்சிதபாதத்தைத் தொழுதலால் மாமிசம் பொருந்திய உடம்பினாலாகிய பிறப்பானது தான் உலகத்திற்பிறந்ததனா லடையவேண்டிய உறுதிப்பயனை யடையும். - எ.று.

விநாயகர் வணக்கம்

எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம். **3**

(இ-ள்.) எடுத்துச்சொல்லுகின்ற மகத்தாகிய திருத் தொண்டர்புராணமானது (இடையூறின்றி) இனிய தமிழ்ச் செய்யுள் நடையாக எம்மால் முடிவு பெறத்தக்க மேன்மையை எமக்கருள் செய்யும்படி, விசாலம்பொருந்திய ஐந்து திருக்கரங் களையும், தாழ்ந்த செவிகளையும், நீண்ட திருமுடியினை "யுமுடைய மதம் பொழிகின்ற யானை முகத்தையுடைய (கற்பகவிநாயகக்) கடவுளை எமதுள்ளத்தில் பொருந்தத் தியானிப்போம். - எ.று.

திருக்கூட்ட வாழ்த்து

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே. **4**

(இ-ள்.) இளம்பிறை வளர்கின்ற சடைமுடியினையுடைய ஸ்ரீநடராஜமூர்த்தியைப் பூர்வத்தில் துதித்துப் பேறுபெற்ற திருத்தொண்டர்களது பரிசுத்தம் பொருந்திய சொல்லாகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலர்களில் நிறைந்த பயனாகிய தேனையுண்ணுகின்ற மலரகிதர்களாகிய அடியார்களது பெரியதிருக்கூட்டமானது வேதசிவாகம விதிமுறைப்படியே உலகத்தில் பிரகாசித்து மேன்மைபெறக்கடவது. - எ - று.

அவையடக்கம்

அளவி லாத பெருமைய ராகிய
அளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்
அளவு கூடஉ ரைப்பரி தாயினும்
அளவி லாசை அறைகுவேன். 5

(இ - ள்.) யாவராலு மளவிட்டுச் சொல்லுதற்கரிய பெருமை யினையுடையராகிய எண்ணிறந்த சிவனடியார்களது புகழமைந்த சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கிய யான் அதனை அளவுபடுத்திச் சொல்லுதல் எனக்கு அரிதாயிருந்தாலும், (அதனைச் சொல்லவேண்டுமென்னும்) அளவில்லாத ஆசையானது என்னைப் பிடித்து உந்துதலால் சொல்லத் தொடங்கினேன். - எ - று.

தெரிவ ரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்
பொருவ ருஞ்சீர் புகலலுற் றேன்முற்றப்
பெருகு தண்கடல் ஊற்றுண் பெருநசை
ஒருசு ணங்கனை ஒக்கும் தகைமையேன். 6

(இ-ள்.) வெள்ளமாகப் பெருகுகின்ற குளிர்ந்த சமுத்திர நீரை (அப்படியே யெடுத்து ஊரிலுள்ளவர்களுக்கு) ஊற்றி யுபகரிக்க வெண்ணும் பேராசையையுடைய ஒரு (சிறிய) நாயினையொத்த தகுதியுடைய யான் அறிதற்கரிய பெருமை பொருந்திய ஒப்பற்ற திருத்தொண்டர்களின் திவ்யசரித்திரத்ததைச் சொல்லத் தொடங்கினேன். - எ - று.

செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொ ருட்குரை யாவருங் கொள்வரால்
இப்பொ ருட்கென் னுரைசிறி தாயினும்
மெய்ப்பொ ருட்குரிய யார்கொள்வர் மேன்மையால். 7

(இ - ள்.) ஒருவன் சொல்லுகின்ற பொருளின் சிறப்பை நோக்கி அப்பொருளைத் தெரிவிக்கின்ற மொழிகளைச் (சிறப்பில்லாதிருந்தாலும்) யாவரும் அங்கீகரிப்பார்கள். (அதுபோல)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இத்தொண்டர்களின் சரித்திரத்தை வகுத்துச் சொல்வதற்கு என்னுடையசொற்கள் அற்பமாயிருந்தாலும், (சொல்லப்பட்ட பொருளின் மேன்மைக்கருதி) உண்மைப் பொருளை யறிதற்குரிய பெரியோர்கள் அங்கீகரித்துக் கொள்ளவார்கள். - எ - று.

மேய இவ்வுரை கொண்டு விரும்புமாம்
சேய வன்திருப் பேரம்ப லம்செய்ய
தூய பொன்னணி சோழன்நீ டூழிபார்
ஆய சீர்அந பாயன் அரசவை. *8*

(இ - ள்.) சிவந்த திருமேனியையுடைய ஸ்ரீநடராஜமூர்த்தியினது அழகிய கனகசபையைக் களங்கமற்ற செம்பொன்னினால் அலங்கரித்த திருநீற்றுச்சோழனென்னும் அபிடேகத் திருநாமமுடையவனும், நீண்ட கற்பகாலம்வரையிலும் உலகத்தில் நிலைக்கப்பெற்ற கீர்த்தியையுடையவனுமாகிய அநபாயச் சக்கரவர்த்தியினது இராஜஸபையிலுள்ளவர்கள் மேன்மை பொருந்திய இப்புராணத்தை அங்கீகரிப்பார்கள். - எ - று.

அருளின் நீர்மைத் திருத்தொண் டறிவரும்
தெருளி நீரிது செப்புதற் காம்எனின்
வெருளின் மெய்ம்மொழி வான்நிழல் கூறிய
பொருளின் ஆகும் எனப்புகல் வாம்அன்றே. *9*

(இ - ள்.) (சிவபெருமானது) திருவருட்டன்மையைப்பெற்ற அடியார்களது திருத்தொண்டினியல்பை (இத்தன்மையினவென்று) அறியத்தக்க உண்மையறிவில்லாத நீர் இப்புராணத்தைச் சொல்லக்கூடுமோவென்றால், மயக்கமற்ற வேதசிவாகமங்களை யருளிச்செய்த ஸ்ரீநடராஜமூர்த்தியே (யாவருமறிய) அசரீரியாக முதலடியெடுத்துக் கொடுத்தருளிய காரணத்தினால் ஆகுமென்று சொல்லுவோம். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூற்பெயர்

இங்கிதன் நாமம் கூறின்
இவ்வுல கத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள்
சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப்
புறஇருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீங்கும்
திருத்தொண்டர் புராணம் என்பாம். 10

(இ - ள்.) இவ்விடத்து இப்புராணத்தினது திருப்பெயரைச் சொல்லப்புகுந்தால், இந்த வுலகத்தில் தொன்றுதொட்டு வருகின்ற புறவிருளும் அகவிருளுமாகிய இரண்டனுள் மனிதர்களுடைய உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் நிறைந்த அஞ்ஞானவிருளை, மற்றைப்புறத்தில் கண்ணுக்குப் புலனாகத் தோன்றும் பூதவிருளைப்போக்குகின்ற சிவந்தகிரணங்களையுடைய சூரியனைப்போல நீக்குகின்ற திருத் தொண்டர்புராணமென்று சொல்லுவோம், - எ - று.

பாயிரம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

2. திருமலைச் சிறப்பு.

பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரிய யான்என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை. 1

(இ - ள்.) தம்முடைய சொரூபத்தைப் (பத்தி செலுத்துகின்ற அன்பர்களன்றி) மற்றை யாவர்க்கும் அறிதற்கரியவராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பெருமைபொருந்திய திருக்கயிலாயமலையானது பொன்னின்மேல் வெண்மையாகிய திருநீற்றைத் தரித்ததுபோலப் (புலவர்களால்) புகழ்ந்து சொல்லப்பட்ட நீண்ட இமயமலையின் பக்கத்திலுள்ளது.

அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
நண்ணும் மூன்றுல குந்நான் மறைகளும்
எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணிய யந்திரண் டுள்ளது போல்வது. 2

(இ - ள்.) (அத்திருக்கயிலையானது) சிவபெருமான் எழுந்திருளியிருக்கப் பெற்றதாதலால், நிலைபெற்ற (சுவர்க்க மத்திய பாதல மென்னும்) மூன்றுலகத்திலுள்ளவர்களும், நான்குவேதங்களும் அளவில்லாத பெரிய தவத்தைச் செய்தலால், வந்தடைந்த புண்ணியமனைத்தும் ஒன்றாகத் திரண்டுள்ளதுபோலுந் தோற்றமுடையது. - எ - று.

நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்தளிர் ஆகஎ மூந்ததோர்
உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை. 3

(இ - ள்.) அந்தப் பெருமைபொருந்திய திருக்கயிலாயமலை யானது (தெய்வத்தன்மைபொருந்தி) விளங்குகின்ற அளவற்ற

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவஸ்தலங்களையும் பிரகாசம் பொருந்திய குளிர்ந்த துளிராகக் கொண்டு தோன்றிய உலகமென்று சொல்லப்பட்ட அழகிய கொடியின்மேல் படர்ந்த வெள்ளிய மலர்போலப் பிரகாசிப்பது.

மேன்மை நான்மறை நாதமும் விஞ்சையர்
கான வீணையின் ஓசையும் காரெதிர்
தான மாக்கள் முழக்கமும் தாவில்சீர்
வான துந்துபி ஆர்ப்பும் மருங்கெலாம். **4**

(இ - ள்.) மேன்மைபொருந்திய (இருக்கு - எசுர் - சாமம் - அதர்வணமென்னும்) நான்கு வேதங்களின் ஓசையும், வித்தியாதரர்கள் கானஞ்செய்கின்ற வீணையின் ஓசையும், மேகத்திற்கு மாறாக மதம்பொழிகின்ற யானைகள் முழங்கும் முழக்கமும், கெடாத சிறப்பினையுடைய தேவதுந்துபியின் முழக்கமும், (அத்திருக்கயிலாயமலையின்) பக்கங்களிலெல்லாம் உண்டாயிருக்கின்றன. - எ - று.

பனிவி சும்பில் அமரர் பணிந்துசூழ்
அனித கோடி அணிமுடி மாலையும்
புனித கற்பகம் பொன்னரி மாலையும்
முனிவர் அஞ்சலி மாலையும் முன்னெலாம். **5**

(இ - ள்.) குளிர்ச்சிபொருந்திய விண்ணுலகத்திலுள்ள தேவர்கள் வணங்கிச் சூழ்ந்துநிற்கின்ற அளவற்ற அழகிய முடிகளின் வரிசையும், பரிசுத்தம்பொருந்திய கற்பகமலர்களால் தொடுக்கப்பட்ட பொன்னரிமாலைகளும், முனிவர்களின் அஞ்சலியாகிய வரிசைகளும் ஆகிய இவைகள் (அம்மலையின்) முன்பக்கமெல்லாம் பிரகாசிக்கின்றன. - எ - று.

நீடு தேவர் நிலைகளும் வேண்டிடின்
நாடு மைம்பெரும் பூதமும் நாட்டுவ
கோடி கோடி குறட்சிறு பூதங்கள்
பாடி யாடும் பரப்பது பாங்கெலாம். **6**

(இ - ள்.) உயர்ந்த தேவர்களுடைய பதவிகளையும், விருப்பமுண்டானால் நினைக்கப்பட்ட ஸ்தூல பஞ்சபூதங்களையும் வேறேயுண்டாக்கத்தக்க வல்லமையுள்ளனவாகிய அநேககோடி குறள்வடிவினதாகிய சிறுபூதங்கள் பாடுவதும், ஆடுவதுமாகிய பரப்பினையுடையது (அத்திருக்கயிலாயமலையின்) பக்க இடங்களெல்லாம். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாய கன்கழல் சேவிக்க நான்முகன்
மேய காலம் அலாமையின் மீண்டவன்
தூய மால்வரைச் சோதியில் மூழ்கியொன்
றாய அன்னமும் காணா தயர்க்குமால். 7

(இ - ள்.) சிவபெருமானுடைய திருவடிகளைத் தரிசிக்கும்படி (உள்ளே சென்ற) பிரமனானவன் (அப்போது தரிசிப்பதற்கு) அகலமாயிருந்தபடியால், திரும்பி வந்து பரிசுத்தம்பொருந்திய பெரிய திருக்கயிலைமலையினது வெள்ளிய பிரகாசத்தில் கலந்து வேற்றுமை தோன்றாமலிருக்கின்ற (தனது) அன்னவாகனத்தை யுங் காணாமல் வருந்துவான். - எ - று.

இது வெள்ளிப்பாடல்

காதில்வெண் குழையோன் கழறொடி நெடியோன்
காலம்பார்த் திருந்தது மறியான்
சோதிவெண் கயிலைத் தாழ்வரை முழையிற்
றுதிக்கையோ னூர்தியைக் கண்டு
மீதெழு பண்டைச் செஞ்சுடர் இன்று
வெண்சுட ரானதென் றதன்கீழ்
ஆதியே னமதா யிடக்கலுற் றானென்
றதனைவந் தணைதருங் கலுழன். 8

(இ - ள்.) திருச்செவிகளில் வெள்ளிய சங்கக்குழையைத் தரித்த சிவபெருமானது திருவடிகளை வணங்குவதற்கு விஷ்ணு வானவர் சமயம் பார்த்துக்கொண்டிருப்பதை அறியாமல், (அவரது வாகனமாகிய) கருடன் பிரகாசம்பொருந்திய வெள்ளிய திருக்கயிலைமலையின் அடிவாரத்திலுள்ள குகையில் விநாயகமூர்த்தியின் வாகனமாகிய மூஷிகத்தைப் பார்த்து பூர்வத்தில் உயர்ந்தெழுந்த சிவந்த சோதியானது இப்பொழுது வெள்ளிய சோதியாய்த் தோன்றியதென்று அச்சோதியினடியில் ஆதிவராகரூபமாய்ப் பூமியைத் தோண்டிச் செல்கின்றானென்று அம் மூஷிகத்தை வந்துசேரும். - எ - று.

அரம்பையர் ராடல் முழவுடன் மருங்கி
னருவிகள் எதிரெதிர் முழங்க
வரம்பெறுங் காதன் மனத்துடன் றெய்வ
மதுமலர் இருகையும் ஏந்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிரந்தர மிடைந்த விமானசோ பான
நீடுயர் வழியினால் ஏறிப்
புரந்தரன் முதலாம் கடவுளர் போற்றப்
பொலிவதத் திருமலைப் புறம்பு. 9

(இ - ள்.) தேவரம்பையர்கள் நிருத்தஞ்செய்யுங்காலத்து முழங்குகின்ற மத்தளவோசையுடன் (அத்திருமலையின்) பக்கங்களிலுள்ள அருவிகளி னோசை எதிரெதிராக முழங்கவும், (சிவபெருமானிடத்துத் தாங்கள் விரும்பிய) வரத்தை பெறவேண்டுமென்னும் ஆசைபொருந்தியமனத்தோடு தெய்வத்தன்மைபொருந்திய தேனையுடைய கற்பகமலர்களை இரண்டு கைகளிலும் ஏந்திக் கொண்டு சதாகாலமும் (சனங்கள்) நெருங்கிய கோபுரவிமானங்களின் கீழுள்ள படிகளின் சிறந்த வழியாக ஏறிச்சென்று இந்திரன்முதலாகிய தேவர்கள் துதிக்கும்படி அத்திருக்கயிலாயமலையானது விளங்கும் - எ - று.

வேதநான் முகன்மால் புரந்தரன் முதலாம்
விண்ணவ ரெண்ணிலார் மற்றுங்
காதலான் மிடைந்த முதற்பெருந் தடையாங்
கதிர்மணிக் கோபுரத் துள்ளார்
பூதவே தாளப் பெருங்கண நாதர்
போற்றிடப் பொதுவினின் றாடு
நாதனா ராதி தேவனார் கோயில்
நாயக னந்தியெம் பெருமான். 10

(இ - ள்.) வேதங்களையுணர்ந்த பிரமன், விஷ்ணு, இந்திரன்முதலிய தேவர்களும், மற்றைய தேவர்களும் தரிசிக்கவேண்டுமென்னும் விருப்பத்தினால், நெருங்கியுள்ள பெரிய முதல் தடையாகப் பொருந்திய ஒளிவிளங்கும் அழகிய திருக்கோபுரவாயிலின் கணுள்ளவர். (அவர் யாரென்றால்) பெரிய பூதவேதாளமென்னுஞ் சிவகணத்தலைவர்கள் தோத்திரஞ்செய்ய திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற தலைவரும், முதற்பெருங்கடவுளுமாகிய சிவபெருமானது திருக்கோயிலைக் காக்குந் தலைமைபூண்ட எம்பெருமானாகிய திருநந்திதேவர். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனிய ரனேகர்
பெற்றமேற் கொண்ட தம்பிரா னடியார்
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாந் தலைமையாம் பணியு
மலர்க்கையிற் சுரிகையும் பிரம்புங்
கற்றைவார் சடையா னருளினாற் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான். 11

(இ - ள்.) நெற்றியிற் கண்களையும், நான்கு பெரிய திருந் தோள்களையும், திருநீறுதரித்த திருமேனியையுமுடையவர் களாகிய அளவற்ற சிவசாரூப்பியம் பெற்றவர்களும், ரிஷப வாகனத்தின் மீது எழுந்தருளிய சிவபெருமானுக்கடியவர்களும், இன்னும் அக்கடவுளின் திருவருளைப் பெறுதற்குக் காத்திருப் பவர்களுமாகிய அனைவர்க்கும் முதன்மையாயிருக்கின்ற பணிவிடையும், தாமரைமலர்போன்ற திருக்கரத்தில் உடைய வாளும், பிரம்பும், கூட்டமாகிய நீண்ட சடைமுடியினையுடைய சிவபெருமானது திருவருளினாற்பெற்றவராகிய திருநந்திதேவ ரால் காக்கப்படுவது அந்தப் பெருமைபொருந்திய திருக்கயிலாய மலை. - எ - று.

கையின்மான் மழுவர் கங்கைசூழ் சடையிற்
கதிரிளம் பிறைநறுங் கண்ணி
யையர்வீற் றிருக்குந் தன்மையி னாலும்
அளப்பரும் பெருமையி னாலும்
மெய்யொளி தழைக்குந் தூய்மையி னாலும்
வென்றிவெண் குடையந பாயன்
செய்யகோ லபயன் றிருமனத் தோங்குந்
திருக்கயி லாயநீள் சிலம்பு. 12

(இ - ள்.) திருக்கரத்தில் மான்மழுவைத் தரித்தவரும், கங்காநதிபொருந்திய சடையில் ஒளிவிளங்கும் இளம்பிறையை யும், நல்லவாசனை வீசுகின்ற கொன்றை மலர்மாலையையும் தரித்தவருமாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் தன்மை யினாலும், அளவில்லாத பெருமையினாலும், உண்மை பொருந்திய வெண்மையாகிய ஒளிவீசுகின்ற பரிசுத்தத்தினா லும், நீண்ட அத்திருக்கயிலாயமலையானது வெண் கொற்றக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குடையினையுடைய செங்கோல் செலுத்தும் அநபாயச் சோழமகாராஜாவினது திருவுள்ளத்தைப்போல விளங்கிக் கொண்டிருக்கும். - எ - று.

அன்ன தன்திருத் தாழ்வரை யின்இடத்(து)
இன்ன தன்மையன் என்றறி யாச்சிவன்
தன்னை யேஉணர்ந் தார்வம் தழைக்கின்றான்
உன்ன ருஞ்சீர் உபமன் னியமுனி. 13

(இ - ள்.) நினைப்பதற்கரிய தவச்சிறப்பினையுடைய உபமன்னியமுனிவரானவர் அப்படிப்பட்ட பெருமை பொருந்திய திருக்கயிலாயமலையின் அடிவாரத்தில் (யாவராலும்) இப்படிப்பட்ட தன்மையினரென்று அறியக் கூடாத சிவபெருமானையே தியானித்து (அதனால்) அன்பு தழையப்பெற்றிருக்கின்றார். - எ - று.

யாத வன்துவ ரைக்கிறை யாகிய
மாத வன்முடி மேலடி வைத்தவன்
பூத நாதன் பொருவருந் தொண்டினுக்(கு)
ஆதி அந்தம் இலாமை அடைந்தவன். 14

(இ - ள்.) யதுகுலத்திற் பிறந்தவரும், துவாரகாபுரிக்கு அரசருமாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியினது முடியின்மேல் தம்முடைய திருவடியை வைத்தவர்; சிவகணங்களுக்குத் தலைவராகிய சிவபெருமானுக்குச் செய்யவேண்டிய ஒப்பற்ற திருத்தொண்டினுக்காக முதல்வராயுள்ளவர்; ஓர்காலத்தும் அழியாத நிலைமையைப் பெற்றுள்ளவர். - எ - று.

அத்தர் தந்த அருட்பால் கடலுண்டு
சித்தம் ஆர்ந்து தெவிட்டி வளர்ந்தவன்
பத்த ராய முனிவர்பல் லாயிரர்
சுத்த யோகிகள் சூழ இருந்துழி. 15

(இ - ள்.) சிவபெருமான் கிருபையோடு தந்தருளிய திருப்பாற் கடலைத் தமது பசிப்பிணிநீங்க மனமகிழ்ந்து தெவிட்டும்படி உண்டு வளர்ந்தவர். இப்படிப்பட்ட தன்மையுடைய அவ் வுபமன்னியமுனிவர் தமக்கு அடியவர்களாகிய அநேகமாயிர முனிவர்களும், பரிசுத்தம்பொருந்திய சிவயோகிகளும் தம்மைச் சூழும்படியாக இருந்த சமயத்தில். - எ - று.

Public Domain. Digitization Muthulakshmi Research Academy

அங்கண் ஓரொளி ஆயிர ஞாயிறு
பொங்கு பேரொளி போன்றுமுன் தோன்றிடத்
துங்க மாவர் சூழ்ந்திருந் தாரெலாம்
"இங்கி தென்கொல் அதிசயம்" என்றலும். 16

(இ - ள்.) அவ்விடத்தில் ஒருபிரகாசமானது ஆயிரஞ் சூரியர்களுடைய மிகுந்த பிரகாசம்போல அவர்க்கெதிரே தோற்ற, (அப்பொழுது தம்மைச்) சூழ்ந்திருந்த உயர்ந்த தவத்தினையுடைய முனிவர்களும், சிவயோகிகளுமாகிய யாவரும் உபமன்னியமுனிவரைப் பார்த்து இவ்விடத்தில் தோன்றுகின்ற பிரகாசமானது என்ன ஆச்சரியமுடையதா யிருக்கின்றதென்று கேட்கவும். - எ - று.

அந்தி வான்மதி சூடிய அண்ணல்நாள்
சிந்தி யாஉணர்ந் தம்முனி "தென்திசை
வந்த நாவலர் கோன்புகழ் வன்றொண்டன்
எந்தை யார்அரு ளால்அணை வான்" என. 17

(இ - ள்.) (அந்தவார்த்தையைக் கேட்ட உபமன்னியமகா முனிவரானவர்) மாலைக்காலத்தில் ஆகாயத்திற் றோன்றுகின்ற இளஞ்சந்திரனைத் தரித்த சடை முடியினையுடைய சிவபெருமானது திருவடிகளைத் தியானித்தறிந்து, தென்றிசையிலே திருவவதாரஞ்செய்தருளிய திருநாவலூரரென்னுங் கீர்த்தியை யுடைய வன்றொண்டப் பெருமான் எமது பரமபிதாவாகிய சிவபெருமானது திருவருளினாலே மீண்டு இத்திருக்கயிலைக்கு எழுந்தருளுகின்றாரென்று சொல்லி - எ - று.

கைகள் கூப்பித் தொழுதெழுந் தத்திசை
மெய்யில் ஆனந்த வாரி விரவிடச்
செய்ய நீள்சடை மாமுனி செல்வுழி
ஐயம் நீங்க வினவுவோர் அந்தணர். 18

(இ - ள்.) அந்தத்திசையை நோக்கி இரண்டு திருக்கரங்களையுங் குவித்துப் (பூமியில் விழுந்து) வணங்கி எழுந்துநின்று, தம்முடைய திருமேனியில் ஆனந்தக்கண்ணீர் பெருகும்படி, செந்நிறம்பொருந்திய நீண்ட சடையினையுடைய உபமன்னிய மகா முனிவர் போகும்பொழுது, மற்றைய முனிவர்கள் யாவரும் தங்களுக்குண்டாகிய சந்தேகம் நீங்கும்படியாக (அம்முனிவரை) வினவுவார்கள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"சம்பு வின்அடித் தாமரைப் போதலால்
எம்பி ரான்இறைஞ் சாயிஃதென்" எனத்
"தம்பி ரானைத்தன் உள்ளம் தழீஇயவன்
நம்பி ஆரூரன் நாம்தொழும் தன்மையான்" 19

(இ - ள்.) எம்பெருமானாகிய முனிவரே! (நீர்) பரமேஸ் வரனுடைய திருவடித்தாமரையை யல்லாமல் வேறொரு கடவுளரையும் வணங்கமாட்டீர். அப்படியிருக்க, இப்போது இச்சோதியைக் கண்டு வணங்கிய காரணம் என்னவென்று கேட்க, (அதற்கு உபமன்னியர்) சொல்லுவார். ஆத்மநாயகராகிய சிவபெருமானைத் தம்முள்ளத்திலே பொருந்தச் செய்தவராகிய நம்பியாரூரரென்னுந் திருநாமத்தையுடையவர், நாம் அனைவரும் வணங்கத்தக்க தகுதியையுடையவர். - எ - று

என்று கூற இறைஞ்சி இயம்புவார்
"வென்ற பேரொளி யார்செய் விழுத்தவம்
நன்று கேட்க விரும்பும் நசையினோம்
இன்றெ மக்குரை செய்தருள்" என்றலும். 20

(இ - ள்.) (ஆதலால் முனிவர்களே! நாம் வணங்கியதற்குக் காரணம் இதுவாகும்) என்று சொல்ல அதைக்கேட்ட முனிவர்கள் (அவரை) நமஸ்கரித்துச் சொல்லுவார்கள். எல்லா வொளிகளுக்கும் மேற்பட்ட பேரொளியினராகிய அந்நம்பி யாரூரர்செய்த பெருந்தவத்தினை நன்றாகக் கேட்கவேண்டு மென்னும் ஆசையுடையவர்களா யிருக்கின்றோம். (ஆதலால்) அதனை இப்பொழுது எங்களுக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொள்ளவும். - எ - று.

உள்ள வண்ணம் முனிவன் உரைசெய்வான்
"வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொரு ளாகிய
வள்ளல் சாத்தும் மதுமலர் மாலையும்
அள்ளும் நீறும் எடுத்தணை வானுளன். 21

(இ - ள்.) உபமன்னியமகாமுனிவர் (அம்முனிவர்களுக்கு) உள்ளபடியே சொல்லுகின்றார். வெள்ளமாகப்பொருந்திய கங்கைநீரைத் தரித்த சடைமுடியினையுடைய உண்மைப் பொருளாகிய சிபெருமான் அணிந்துகொள்ளுகின்ற தேன் பொருந்திய மலர்மாலையினையும், (தரித்துக் கொள்வதற்குத் திருவிரல்களால்) அள்ளுகின்ற திருவெண்ணீற்றினையும் எடுத்துக்கொண்டு சமீபத்திலிருப்பவர் ஒருவரிருந்தார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்ன வன்பெயர் ஆலால சுந்தரன்
முன்னம் ஆங்கொரு நாள்முதல் வன்தனக்(கு)
இன்ன ஆமெனும் நாண்மலர் கொய்திடத்
துன்னி னான்நந் தனவனச் சூழலில் **22**

(இ - ள.) அப்படிப்பட்ட தன்மையினையுடையவரது திருநாமமோ வென்றால் ஆலாலசுந்தரர் (என்று சொல்லுவர்.) அவர் முற்காலத்தில் அத்திருக்கயிலாய மலையில் ஒருநாள் சிபெருமானுக்கு இன்ன இன்ன மலர்கள் தகுந்தனவென்று சிவாகமங்களிற் சொல்லுகின்ற புதிய மலர்களைப் பறிக்கும்படியாகத் திருநந்தன வனத்திற்குச் சமீபத்தில் வந்தார், - எ - று.

அங்கு முன்னரே ஆளுடை நாயகி
கொங்கு சேர்குழற் காமலர் கொய்திடத்
திங்கள் வாள்முகச் சேடியர் எய்தினார்
பொங்கு கின்ற கவினுடைப் பூவைமார். **23**

(இ - ள்.) அத்திருநந்தனவனத்திற்குச் சமீபத்தில், (ஆலாலசுந்தரருக்கு) முன்னமே (நம்மை) அடிமையாகவுடைய உமதேவியாரது இயற்கையாகவே மணம் வீசுகின்ற கூந்தலுக்குத் தகுந்த மலர்களைப் பறிக்கும்படி மிகுந்த அழகினையுடைய நாகணவாய்ப்பறவையையொத்த வார்த்தையினையும், பூரணச் சந்திரனையொத்த ஒளிபொருந்திய முகத்தினையுமுடைய தோழிப்பெண்கள் வந்திருந்தார்கள். - எ - று.

அந்த மில்சீர் அனிந்திதை ஆய்குழல்
கந்த மாலைக் கமலினி என்பவர்
கொந்து கொண்ட திருமலர் கொய்வுழி
வந்து வானவர் ஈசர் அருளென. **24**

(இ - ள்.) முடிவில்லாத அழகினையுடைய அனிந்திதை என்றும், வகிர்ந்துசிக்கெடுக்கப்பட்ட கூந்தலில் வாசனை வீசுகின்ற மலர்மாலையைத் தரித்த கமலினி என்றும் சொல்லப் பட்ட இருவரும், கொத்துக்களாயுள்ள சிறந்த மலர்களைக் கொய்துகொண்டிருக்கும் பொழுது (ஆலாலசுந்தரர்) வந்து (அப்பெண்களைப் பார்த்து) தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமானுடைய திருவருள் (இவ்வாறிருந்தது) என்று நினைத்து. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாத வம்செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்
போது வார்அவர் மேல்மனம் போக்கிடக்
காதல் மாதருங் காட்சியில் கண்ணினார். 25

(இ - ள்.) மகத்தாகிய தவத்தைச்செய்த தென்திசையானது (அத்தவப்பேற்றால்) சிவாநந்தப் பெருவாழ்வடையவும், குற்றமற்ற (சிவனடியார்களைத் தெரிவிக்கின்ற) திருத்தொண்டத் தொகை என்னுந் திருப்பதிகத்தை அருளிச்செய்யவும் போகின்றவராகிய ஆலாலசுந்தரர், அப்பெண்களின்மேல் மனதைச் செலுத்த, அவ்வாலாலசுந்தரர்மேல் ஆசைகொண்ட அப்பெண்களும் தமது கண்களினால் அவரைப் பொருந்தப் பார்த்தார்கள். - எ-று.

முன்னம் ஆங்கவன் மொய்ம்முகை நாண்மலர்
என்னை ஆட்கொண்ட ஈசனுக் கேய்வன
பன்ம லர்கொய்து செல்லப் பனிமலர்
அன்னம் அன்னவ ருங்கொண் டகன்றபின். 26

(இ - ள்.) முதலில் அந்த ஆலாலசுந்தரர் நெருங்கிய அரும்புளோடுகூடிய புதியமலர்களில் என்னை அடிமையாகக் கொண்ட சிவபெருமானுக்குப் பொருந்துவனவாகிய (சிறந்த) பலமலர்களைப் பறித்துக் கொண்டுபோக அன்னம்போலும் நடையினையுடைய அப்பெண்களிருவரும் குளிர்ச்சிபொருந்திய மலர்களைப் பறித்தெடுத்துக்கொண்டு போனபின்பு. - எ - று.

ஆதி மூர்த்தி அவன்திறம் நோக்கியே
'மாதர் மேல்மனம் வைத்தனை தென்புவி
மீது தோன்றிஅம் மெல்லிய லாருடன்
காதல் இன்பம் கலந்தணை வாய்' என. 27

(இ - ள்.) (எல்லாக்கடவுளருக்கும்) முதற்கடவுளாயுள்ள சிவபெருமான் (அப்பெண்களின்மேல் தமது சிந்தையைச் செலுத்திவருகின்ற) அவ்வாலாலசுந்தரரது எண்ணத்தை யறிந்து (நீ மலர்கொய்யும்படிவந்த அனிந்திதை - கமலினி என்னும்) பெண்களின்மேல் இச்சைகொண்டனை. (ஆதலால் பரத கண்டத்தின்) தென்திசையிலே பிறந்து அந்தப்பெண்களுடன் காமஇன்பத்தைக் கூடி அனுபவித்து மீண்டு இங்குவரக்கடவாயாக வென்று கட்டளையிட்டருள. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கினான்
'செய்ய சேவடி நீங்குஞ் சிறுமையேன்
மையல் மானுட மாய்மயங் கும்வழி
ஐய னே! தடுத் தாண்டருள் செய்'என. 28

(இ - ள்.) (அப்பொழுது ஆலாலசுந்தரர் தம்முடைய இரண்டு) திருக்கரங்களையும் சிரசின்மேல் அஞ்சலியாகக் குவித்து வணங்கி மனங்கலங்கினவராய், எம்பெருமானே! தேவரீரது மேன்மைபொருந்திய சிவந்த தாமரைமலர்போலுந் திருவடிகளினின்றும் நீங்குகின்ற அற்பனாகிய அடியேன் மாயாசம்பந்தமாகிய மானிடஜனனமெடுத்து, செய்ய வேண்டியது இன்னதென்றும், நீக்கவேண்டியது இன்னதென்று மறியாமல் மயங்கும்பொழுது என்னைத் தடுத்தாட்கொண் டருளவேண்டும் என்று வேண்டிக்கொள்ள - எ - று.

அங்க ணாளன் அதற்கருள் செய்தபின்
நங்கை மாருடன் நம்பிமற் றத்திசை
தங்கு தோற்றத்தில் இன்புற்றுச் சாருமென்(று)
அங்க வன்செயல் எல்லாம் அறைந்தனன். 29

(இ - ள்.) அழகிய கிருபாநோக்கத்தையுடையவராகிய சிவபெருமான் அவர் வேண்டிக்கொண்டதற்குத் திருவருள் செய்த பின்பு, அனிந்திதை - கமலினி என்னும் இரண்டு பெண்களோடும் அவ்வாலாலசுந்தரர் அத்தென்திசையில் திருவவதாரஞ்செய்த மானிடப்பிறப்பில் அவர்களோடு இன்பமனுபவித்து இங்கு எழுந்தருளிவருகின்றாரென்று அவருடைய செயல்களையெல்லாம் அருளிச்செய்தார். - எ - று.

அந்த ணாளரும் ஆங்கது கேட்டவர்
"பந்த மானிடப் பாற்படு தென்திசை
இந்த வான்திசை எட்டினும் மேற்பட
வந்த புண்ணியம் யாதெ"ன மாதவன். 30

(இ - ள்.) (இவ்விதமாக உபமன்னியமுனிவர் அருளிச் செய்ததை) முனிவர்கள் கேட்டு, அவ்வாலாசுந்தரர் மாயா பந்தத்தையுடைய மானிடப்பிறப்பில் திருவவதாரஞ்செய் தருளிய தென்திசையானது இந்தப் பெருமைபொருந்திய எட்டுத்திசைகளைப் பார்க்கிலும் மேற்படும்படியாக வுண்டான புண்ணியம்யாது? என்று கேட்க, (அதற்கு) உபமன்னியமுனிவர் சொல்லுகின்றார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பொருவ ருந்தவத் தான்புலிக் காலனாம்
அருமு னிஎந்தை அர்ச்சித்தும் உள்ளது
பெருமை சேர்பெரும் பற்றப் புலியூர்என்(று)
ஒருமை யாளர்வைப் பாம்பதி ஓங்குமால். 31

(இ - ள்.) ஒப்பற்ற (பெரிய) தலத்தினையிடைய வியாக்கிர பாத ரென்னும் எமது பிதாவாகிய அரியமுனிவரால் பூசிக்கப் பட்டது. (அக்காரணத்தினால்) பெருமைபொருந்திய பெரும் பற்றப்புலியூரென்று சொல்லப்பட்ட ஜீவன்முத்தர்களுக் கிருப்பிடமாகிய ஒரு திவ்வியக்ஷேத்திரமானது அத்தென் திசையில் விளங்கிக்கொண்டிருக்கும். - எ - று.

அத்தி ருப்பதி யில்நமை ஆளுடை
மெய்த்த வக்கொடி காண விருப்புடன்
அத்தன் நீடிய அம்பலத் தாடும்மற்
றித்தி றம்பெற லாம்திசை எத்திசை. 32

(இ - ள்.) அப்படிப்பட்ட பெரும்பற்றப்புலியூரென்னுந் திருப்பதியில், நம்மை அடிமையாகவுடைய மெய்ம்மை பொருந்திய தவக்கொடியாகிய சிவகாமியம்மையார் காணும்படியாக விருப்பத்தோடும் அழிவில்லாதவராகிய சிவபெருமான் நீண்ட பொன்னம்பலத்திலே திருநடனஞ் செய்தருளுவர். ஆதலால், இப்படிப்பட்ட, மேன்மையைப் பெறும்படியான திசை (அந்தத் தென்றிசையேயன்றி) வேறே எந்தத்திசையாகும். - எ - று.

பூதம் யாவையின் உள்ளலர் போதென
வேத மூலம் வெளிப்படு மேதினிக்
காதல் மங்கை இதய கமலமாம்
மாதொர் பாகனார் ஆரூர் மலர்ந்ததால். 33

(இ - ள்.) பார்வதிதேவியை ஒப்பற்ற வாமபாகத்திலே யுடையவரும், வேதங்களுக்கு மூலகாரணருமாகிய சிவ பெருமான் வெளிப்படுதற்கிடமாகியும், விருப்பத்தைத் தருகின்ற பூமிதேவியின் இதயகமலமாகியும் உள்ள திருவாரூர் என்னும் திவ்வியக்ஷேத்திரமானது. அக்கடவுள் எழுந்தருளியிருக்கின்ற எல்லாச்சீவராசிகளுள்ளும் மலர்ந்த இதயகமலம்போல அத்தென்திசையில்விளங்குகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எம்பி ராட்டிஇவ் வேழுல கீன்றவள்
தம்பி ரானைத் தனித்தவத் தால்எய்திக்
கம்பை யாற்றில் வழிபடு காஞ்சிஎன்(று)
உம்பர் போற்றும் பதியும் உடையது. **34**

(இ - ள்.) இந்த ஏழுலகங்களையும் பெற்றருளிய எமது மாதாவாகிய காமாட்சியம்மையார், தமது பிராணநாயகராகிய சிவபெருமானை ஒப்பற்ற தவப்பேற்றினால் அடைந்து, கம்பாநதியின் கரையில் பூசித்த காஞ்சீபுரமென்று தேவர்கள் வணங்குகின்ற திவ்வியக்ஷேத்திரத்தையும் (அத்தென்திசை யானது) தன்னிடத்தில் உடைத்தாயிருக்கின்றது. - எ - று.

நங்கள் நாதனாம் நந்தி தவஞ்செய்து
பொங்கு நீடருள் எய்திய பொற்பது
கங்கை வேணி மலரக் கனல்மலர்
செங்கை யாளர் ஐயாறும் திகழ்வது. **35**

(இ - ள்.) நமக்கெல்லாந் தலைவராகிய திருநந்திதேவர் தவத்தைச்செய்து உயர்ந்த பேரருளைப்பெற்ற சிறப்பினை யுடையது; கங்காநதியானது சடையின் விளங்க, அக்கினிமய மாகிய மழுவானது விளங்குகின்ற திருக்கரத்தினையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருவயையாறென்னும் திவ்வியக்ஷேத்திரமும் (அத்தென்திசையில்) விளங்கியுள்ள.எ -று.

தேசம் எல்லாம் விளக்கிய தென்திசை
ஈசர் தோணி புரத்துடன் எங்கணும்
பூச னைக்குப் பொருந்தும் இடம்பல
பேசில் அத்திசை ஒவ்வா பிறதிசை" **36**

(இ - ள்.) எல்லாத்தேசங்களையும் தனது மகிமையினாலே விளங்கப்பண்ணின தென்திசையில், சிவபெருமானது திருத் தோணிபுரத்துடன் அடியவர்செய்யும் பூசையின்பொருட்டு அக்கடவுள் எழுந்தருளியிருக்கும் திவ்வியக்ஷேத்திரங்கள் எவ்விடத்திலும் பலவுள்ளன; (ஆதலால்) ஆராய்ந்து சொல்லு மிடத்து மற்றைத் திசைகள் அத்தென்திசைக்கு ஒப்பாகமாட்டா.- எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று மாமுனி வன்றொண்டர் செய்கையை
அன்று சொன்ன படியால் அடியவர்
தொன்று சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
இன்றென் ஆதர வால்இங் கியம்புகேன். 37

(இ - ள்.) என்று இவ்விதமாக உபமன்னியமகாமுனிவர் சுந்தரமூர்த்திசுவாமிகளின் திவ்யசரித்திரத்தை அக்காலத்தில் (முனிவர்களுக்கு) அருளிச்செய்த காரணத்தினால், அடியவர் களது நிலைபெற்ற சரித்திரமென்னுந் திருத்தொண்டத் தொகையினது விரியை இப்போது எனக்குண்டாகிய ஆசை யினால் சொல்லத் தொடங்கினேன். - எ - று.

மற்றி தற்குப் பதிகம்வன் றொண்டர்தாம்
புற்றி டத்தெம் புராணர் அருளினால்
சொற்ற மெய்த்திருத் தொண்டத் தொகைஎனப்
பெற்ற நற்பதி கம்தொழப் பெற்றதாம். 38

(இ - ள்.) (அடியேன் சொல்லத்தொடங்கிய) இத்திருத் தொண்டர்புராணத்திற்குப் பதிகமானது, சுந்தரமூர்த்தி சுவாமிகள் (திருவாரூரில்) புற்றிடங்கொண்டெழுந்தருளிய புராதனராகிய சிவபெருமானுடைய திருவருளினால் அருளிச் செய்த உண்மைபொருந்திய திருத்தொண்டத்தொகை என்று திருப்பெயர் பெற்ற நல்ல திருப்பதிகமாம். அது எம்மால் வணங்கப் பெற்றதாயுள்ளது. - எ - று.

அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை
நந்தம் நாதனாம் நம்பியாண் டார்நம்பி
புந்தி ஆரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம். 39

(இ - ள்.) அந்த உண்மைபொருந்திய திருத்தொண்டத் தொகை என்னுந் திருப்பதிகத்தில் (தொகுத்துச் சொல்லப்பட்ட) அடியார்களை நமது பரமாசாரியராகிய நம்பியாண்டார்நம்பி யென்னும் பெரியோர் நமது புத்திக்கு அத்திருப்பதிகத்தின் பொருள் பொருந்தும்படி (பொல்லாப்பிள்ளையாரது திருவருளால்) அருளிச்செய்த (திருவந்தாதியின்) வகையைக் கொண்டு அவ்வடியவர்களின் வரலாறனைத்தையும் வழுவாமல் விரித்துச் சொல்லுவோம். - எ. று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகம் உய்யவும் சைவம்நின் றோங்கவும்
அலகில் சீர்நம்பி ஆரூரர் பாடிய
நிலவு தொண்டர்தம் கூட்டம் நிறைந்துறை
குலவு தண்புனல் நாட்டணி கூறுவாம். 40

(இ - ள்.) உலகத்திலுள்ள மானிடர்கள் (மாயாபந்தத்தினின்று நீங்கிக்) கடைத்தேறவும், சைவசமயமானது உலகத்தில் நிலைபெற்றோங்கவும் அளவில்லாத பெருஞ்சிறப்பினையுடைய சுந்தரமூர்த்திசுவாமிகளால் துதிக்கப்பெற்ற அடியார்களின் திருக்கூட்டமானது நிறைந்து வாசஞ்செய்யாநின்ற விளங்குகின்ற குளிர்ச்சிபொருந்திய சோழநாட்டினது சிறப்பைக் குறித்துச் சொல்லுவோம்.

திருமலைச்சிறப்பு முற்றிற்று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

௩. திருநாட்டுச் சிறப்பு

பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன். 1

(இ - ள்.) பெருமைபொருந்திய இயற்றமிழ் மொழியானது வழங்குகின்ற எல்லையின்கண்ணுள்ளதும், சிகரங்களால் உயர்ந்த இமயமலையி னுச்சியில் நீண்ட புலிக்கொடியைக் கொண்டுபோய் நாட்டிய சோழராஜாக்களுக்குரியதுமாகிய காவிரிநதிசூழ்ந்த சோழநாட்டின் வளப்பத்தை யான் இங்குச் சொல்லத்தொடங்கினேன். - எ - று.

ஆதிமா தவமுனி அகத்தி யன்தரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர்மண் மடந்தைபொன் மார்பில் தாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால். 2

(இ - ள்.) முதன்மைபொருந்திய மகத்தாகிய தவத்தினை யுடைய அகத்திய முனிவரால் கொண்டுவரப்பட்ட பரிசுத்தம் பொருந்திய நீரையிடைய கமண்டலத்தினின்றும் சொரிந்த காவிரிநதியானது, அழகிய பூமிதேவியினுடைய பொன்னிறம் பொருந்திய திருமார்பில் தாழ்ந்துவிளங்குகின்ற குளிர்ந்தநீரில் தோன்றிய முத்துமாலையை யொத்திருக்கும். - எ - று.

சையமால் வரைபயில் தலைமை சான்றது
செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்ந்து நாடொறும்
உய்யவே சுரந்தளித் தூட்டு நீரது. 3

(இ - ள்.) (அக்காவிரிநதியானது) பெருமைபொருந்திய சையமலையில்தேன்றிய தலைமைபொருந்தியது. செவ்விய பூமியென்னும் மகளுக்கு நல்ல செவிலித்தாயை யொத்துள்ளது. உலகத்திலுள்ள சகல சீவராசிகளையும் நாள்தோறும் வளர்த்து, அச்சீவராசிகள் பிழைக்கும்படியாக நீரைச் சுரந்தளித்து உண்பிக்கின்ற குணத்தையுடையது. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாலின்உந் திச்சுழி மலர்தன் மேல்வருஞ்
சால்பினால் பல்லுயிர் தருதன் மாண்பினால்
கோலநற் குண்டிகை தாங்குங் கொள்கையால்
போலும்நான் முகனையும் பொன்னி மாநதி. 4

(இ - ள்.) பெரிய நீர்ச்சுழிகளையும், மலர்களையும், தன்மேல் தாங்கிவருகின்ற பெருமையினாலும், சகல சீவராசிகளையும் வளர்க்கின்ற குணத்தினாலும், அழகிய கமண்டலமானது தன்னைத் தாங்குகின்ற தன்மையினாலும், (சிலேடைவகையால்) மகாவிஷ்ணுவினது நாபிக்கமலத்தில் தோன்றிய பெருமை யினாலும், சகல சீ வராசிகளையும் சிருட்டிக்கின்ற குணத்தினா லும், அழகிய கமண்டலத்தைத் தாங்குகின்ற தன்மையினாலும், காவிரிநதியானது பிரமதேவனையும் ஒத்திருக்கும்.

திங்கள்சூ டியமுடிச் சிகரத் துச்சியில்
பொங்குவெண் தலைநுரை பொருது போதலால்
எங்கள்நா யகன்முடி மிசைநின் றேயந்திழி
கங்கையாம் பொன்னியாம் கன்னி நீத்தமே. 5

(இ - ள்.) அழிவில்லாத காவிரிநதியின் பிரவாகமானது, சந்திரன் தவழுகின்ற சையமலையின் கொடுமுடியினது உச்சியில் வெள்ளிய தலைபோலும் நுரைகளை மோதிக்கொண்டு போவதனாலும் (சிலேடைவகையால்) இளம்பிறையைத் தரித்த சிவபெருமானது திருமுடியினது உச்சியினின்றும் பொலிவினை யுடைய நகுவெண்டலையில் நுரைகளை வீசிக்கொண்டு போவதினாலும், நமது தலைவராகிய சிபெருமானது திருமுடி யினின்றும் (பகீரதசக்கரவர்த்தியின்பொருட்டு) உலகத்தில் வந்திரங்கிய கங்காநதிக்குச் சமானமாகும். - எ - று.

வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது. 6

(இ - ள்.) (அக்காவிரிநதியானது) அழகிய நீண்ட சையமலை உதிப்பிக்கவந்த மேன்மையினாலும், அளவில்லாத பெரிய தருமங்களை விருத்திசெய்கின்ற ஈகையினாலும், (சிலேடை வகையால்) அழகிய நீண்ட பர்வதராஜன் புத்திரியாகப் பெறவந்த மேன்மையினாலும், அஃவற்ற பெரிய தருமங்களை

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வளர்க்கின்ற தன்மையினாலும், சிவபெருமானது இடப் பாகத்தைத் தமக்கிடமாகவுடைய உமாதேவியாரையும், அவரது திருவுள்ளத்திற்கனிந்த கிருபைத் தன்மையையும் ஒத்துள்ளது.

வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்(து)
எம்பி ரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்குமால். 7

(இ - ள்.) வாசனைபொருந்தியமலர்களினாலும், நீரினாலும் வழிபட்டுச் சிவந்த பொற்பொடிகள் பொருந்திய நீண்ட இருகரையிலுமுள்ள அளவற்ற சிவாலயங்களில் (எழந்தருளி யிருக்கும்) எமது பெருமானாகிய பரமசிவனை வணங்குவதனால், குளிர்ச்சிபொருந்திய காவிரிநதியானது, தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமானது அடியார்களையும் ஒத்திருக்கும். - எ - று.

வாச நீர்குடை மங்கையர் கொங்கையில்
பூசு குங்கும மும்புனை சாந்தமும்
வீசு தெண்டிரை மீதிழிந் தோடுநீர்
தேசு டைத்தெனி னும்தெளி வில்லதே. 8

(இ - ள்.) வாசனைபொருந்திய நீரில் ஸ்நானஞ்செய்கின்ற பெண்கள் தங்களுடைய ஸ்தனங்களில் பூசிய குங்குமக்குழம்பை யும், அணிந்த சந்தனக்குழம்பையும், வீசுகின்ற தெளிந்த அலைகளினால் தன்னிடத்தில் கரைத்துக்கொண்டு ஓடுகின்ற அக்காவிரிநதியானது மிகுந்த பிராகசமுடையதாயிருந்தாலும் கலங்கலாயிருக்கின்றது. - எ - று.

மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு
பூவி ரித்த புதுமதுப் பொங்கிட
வாவி யிற்பொலி நாடு வளந்தரக்
காவி ரிப்புனல் கால்பரந் தோங்குமால். 9

(இ - ள்.) வண்டுகள் ஆரவாரித்தெழுந்து கானஞ்செய்யவும், மலைகளிலிருந்து வருகின்ற மலர்கள் மலர்தலினாலுண்டாகிய தேன்கள் அதிகரிக்கவும், தடாகங்களினால் பிரகாசிக்கின்ற சோழநாடானது பலவளங்களைக்கொடுக்கவும் காவிரியாற்றின் நீரானது அநேகங்கால்வழிகளாகப் பிரிக்கப்பட்டு விளங்கும். எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓண்து றைத்தலை மாமத கூடுபோய்
மண்டு நீர்வய லுட்புக வந்தெதிர்
கொண்ட மள்ளர் குரைத்தகை ஓசைபோய்
அண்டர் வானத்தின் அப்புறஞ் சாருமால். 10

(இ - ள்.) மிகுந்த நீரானது (உயர்ந்து) விளங்குகின்ற கரையின் கணுள்ள பெரிய மதகின்வழியாகப் போய் வயல்களிற் பாய்வதினால், அக்கரையில்வந்து (அந்நீரைக் கால்வழியாகக் கொண்டுபோக) எதிர்வந்த உழவர்கள் (சந்தோஷத்தினால்) கைகொட்டுதலாலுண்டாகிய ஓசையானது தேவர்கள் வாழு கின்ற விண்ணுலகத்திற்கு அப்புறத்திலும்போய்ச்சேரும். - எ - று.

மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்
சீத நீர்முடி சேர்ப்பவர் செய்கையும்
ஓதை யார்செய் உழுநர் ஒழுக்கமும்
காதல் செய்வதோர் காட்சி மலிந்ததே. 11

(இ - ள்.) அழகுபொருந்திய நாற்றைப் பறிக்கின்றவர் களுடைய சிறப்பும் குளிர்ச்சிபொருந்திய நீரினிடத்தில் அந்த நாற்றைமுடிகளாகக்கட்டிச் சேர்க்கின்றவர்களுடைய செயலும், முழக்கத்தினையுடைய வயல்களையுழுகின்ற மள்ளர்களின் வரிசையும் (பார்ப்பவர்களுக்கு) விருப்பத்தைத் தரத்தக்கதாகிய காட்சியினால் பிரகாசித்தன. - எ - று.

உழுத சால்மிக வூறித் தெளிந்தசே(று)
இழுது செய்யினுள் இந்திரத் தெய்வதம்
தொழுது நாறு நடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம். 12

(இ - ள்.) உழவர்களால் உழப்பட்ட படைச்சால்களில் மிகவும் ஊறித்தெளிந்த சேறானது குழம்பாயிருக்கின்ற வயல்களில் தேவேந்திரனாகிய தெய்வத்தை வணங்கி நாற்றை நடுகின்ற கடைசியர்களின் கூட்டமே, குற்றமற்ற காவிரி நதிசூழ்ந்த சோழநாட்டினது பரந்த இடங்களிலெல்லாம் மிகுதியாயிருக்கும்.

மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரியக்
கண்டுழவர் பதங்காட்டக் களைகளையுங் கடைசியர்கள்
தண்டரளஞ் சொரிபணிலம் இடறியிடை தளர்ந்தசைவார்
வண்டலையும் குழல்அலைய மடநடையின் வரம்பணைவார். 13

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) மிகுந்த நீர்பரந்த வயல்களில் வளர்கின்ற நெற்பயிர்களின் சுருள்கள் விரிந்து தழைக்கின்ற பருவத்தைக் கண்டு பள்ளர்கள் களைகடியும் பருவம் இதுதானென்று காட்டும்பொழுது, அப்பயிர்களிலுள்ள களைகளைப் பறிக்கின்ற பள்ளஸ்திரீகள் குளிர்ந்தமுத்துகளைச் சிந்துகின்ற சங்குகள் காலில் இடறி (அதனால்) இடைதளர்ந்து வருந்தினவர்களாய்ப் (பின் அவர்கள்) வண்டுகள் (தேனுண்ணும் விருப்பத்தினால்) மொய்க்கின்ற கூந்தல் அவிழ்ந்தலையும்படி மிருதுவான நடையினாலே வரம்பினிடத்திற்போய்ச் சேருவார்கள். - எ - று.

(ஸ்திரீ - பெண்)

செங்குவளை பறித்தணிவார் கருங்குழல்மேல் சிறைவண்டை
அங்கைமலர் களைக்கொடுகைத் தயல்வண்டும் வரவழைப்பார்
திங்கள்நுதல் வெயர்வரும்பச் சிறுமுறுவல் தளவரும்பப்
பொங்குமலர்க் கமலத்தின் புதுமதுவாய் மடுத்தயர்வார். 14

(இ - ள்.) (பள்ளஸ்திரீகளில் சிலர்) கருமைநிறம்பொருந்திய கூந்தலில் செங்குவளை மலர்களைப்பறித்துத் தரித்துக் கொள்ளுவார்கள். (சிலர் அக்கூந்தலின்மேல் விழுகின்ற) சிறகினையுடைய வண்டுகளைத் (தமது) அழகியமையாகிய தாமரைமலர்களைக்கொண்டு ஓட்டி அயலிலுள்ள வண்டுகளையும் வரும்படி அழைப்பார்கள். (சிலர்) மூன்றாம்பிறையையொத்த தமது நெற்றியில் வெயர்வையுண்டாகவும், புன்னகையாகிய முல்லையரும்புகள் மலரவும், ஒளிவிளங்குகின்ற தாமரை மலரிலுள்ள புதியதேனைக்குடித்து (அதனால்) மயங்குவார்கள்.- எ - று.

கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்ல கரும்பென்னச்
சுரும்பல்லி குடைநீலத் துகளல்ல பகலெல்லாம்
அரும்பல்ல முலையென்ன அமுதல்ல மொழியென்ன
வரும்பல்லா யிரங்கடைசி மடந்தையர்கள் வயல்எல்லாம். 15

(இ - ள்.) பகற்காலமுழுவதும் (வேளாண்மையின் வளப்பத்தைப் பார்க்கவரும் அன்னியர்களுக்கு, இவைகள்) கரும்பு அல்ல நெற்பயிர்கள் என்று சொல்லவும், (இவைகள்) கமுகமரமல்ல கரும்பென்று சொல்லவும், (இவைகள்) வண்டு களல்ல (அவ்வண்டுகள்) அகவிதழைக் குடைதலாலுண்டாகிய நீலோற்பலமலரின் கரியதுகளென்று சொல்லவும், (இவைகள்) அரும்புகளல்ல முலை யென்று சொல்லவும் (இவைகள்) அமுதமல்ல வார்த்தையென்று சொல்லவும் வருகின்ற அநேகமாயிரம் பள்ளஸ்திரீகள் வயல்களிலெல்லாம் நிறைந் திருக்கின்றார்கள்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

***கயல்வாய்பைந் தடநந்தூன் கழிந்தபெருங் கருங்குழிசி
வியல்வாய்வெள் வளைத்தரள மலர்வேரி உலைப்பெய்தங்
கயலாமை அடுப்பேற்றி அரக்காம்பல் நெருப்பூதும்
வயல்மாதர் சிறுமகளிர் விளையாட்டு வரம்பெல்லாம். 16***

(இ - ள்) கெண்டைமீன்கள் பாய்ந்து விளையாடுகின்ற குளிர்ந்த நீரையுடைய தடாகத்தில் தோன்றிய ஊன்கழிந்த சங்குகளை பெரிய கருமைபொருந்திய பானையாக வைத்து, அகன்ற வாயையுடைய வெண்மையாகிய சங்குகளீன்ற முத்துக்களாகிய அரிசியை (அந்தப்பானையில் வார்க்கும்) பூந்தேனாகிய உலையிற் போட்டு, அயலிலிருக்கின்ற ஆமையோடாகிய அடுப்பின்மேலேற்றிச், செவ்வாம்பல் மலராகிய நெருப்பை (அவ்வடுப்பில்வைத்து) ஊதுகின்ற பள்ளஸ்ரீகளின் சிறுபெண்களினுடைய விளையாட்டானது வயலின் வரம்பிடங்களெல்லாம் இருக்கும். எ - று.

***காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம். 17***

(இ - ள்.) (அம்மருதநிலத்திலுள்ள) காடுகளெல்லாம் கழையாகிய கரும்புகளும், சோலைகளெல்லாம் குழையோடு கூடிய அரும்புகளும், வயலின் பக்கங்களெல்லாம் நீலோற்பல மலர்களும், வயலிடங்களெல்லாம் நெருங்கிய சங்குகளும், தடாகக் கரைகளெல்லாம் இளமைபொருந்திய அன்னங்களு முள்ளன. தடாகங்களெல்லாம் சமுத்திரத்தைப் போல விசாலித்து ஆழமாகவுள்ளன. (ஆதலால்) எல்லா நலங்களி னாலும், மற்ற நாடுகளெல்லாம் நீர்வளம் பொருந்திய சோழ நாட்டுக்கு ஒப்பாகா. - எ - று.

***ஆலை பாய்பவர் ஆர்ப்புறும் ஒலமும்
சோலை வாய்வண் டிரைத்தெழு சும்மையும்
ஞாலம் ஓங்கிய நான்மறை ஓதையும்
வேலை ஓசையின் மிக்கு விரவுமால். 18***

(இ -ள்.) ஆலைகளில் கரும்புகளைப் பாய்ச்சுகின்றவர்கள் ஆரவாஞ்செய்யுமோசையும், சோலைகளில் (தேனுண்ணுதற்கு வந்து) பொருந்திய வண்டுகள் இரைத்தெழுகின்ற ஓசையும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகத்தில் உயர்ந்த நான்கு வேதங்களினுடைய அத்தியயன வோசையும் (ஆகிய இவ்வோசைகள்) சமுத்திர வோசையைப் பார்க்கிலும் அதிகப்பட்டு முழங்கும் - எ. று.

அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்
துன்னும் மேதி படியத் துதைந்தெழும்
கன்னி வாளை கமுகின்மேற் பாய்வன
மன்னு வான்மிசை வானவில் போலுமால். 19

(இ - ள்.) அன்னப்பட்சிகள் கூடிவிளையாடுகின்ற விசால மாகிய கரையினையுடைய தடாகங்களில், அங்குள்ள எருமைக் கடாக்கள் விழுந்து முழுகுதலால், (அத்தடாகங்களிலிருந்து) நெருங்கி மேலெழும்புகின்ற இளமைபொருந்திய வாளை மீன்கள் கமுகமரத்தின்மேல் பாயுந் தோற்றமானது (எவ்வா றிருக்குமென்றால்) ஆகாயத்தில் பொருந்திய இந்திரவில்லை யொத்திருக்கும். - எ - று.

காவி னிற்பயி லுங்களி வண்டினம்
வாவி யிற்படிந் துண்ணும் மலர்மது
மேவி அத்தடம் மீதெழப் பாய்கயல்
தாவி அப்பொழி லின்கனி சாடுமால். 20

(இ - ள்.) சோலைகளிற் சஞ்சரிக்கின்ற மதுமயக்கத்தினை யுடைய வண்டின் கூட்டங்கள் தடாகங்களிலுள்ள மலர்களில் விழுந்து அம்மலர்களிலுள்ள தேனையுண்ணும். அத்தடாகங் களில் பொருந்திய மேலெழுந்து பாய்கின்ற கெண்டைமீன் களானவை (அவ்வண்டுகள் தன்னுடையவாசஸ்தலத்தை யடைந்து மதுவையுண்டனவென்னும் கோபத்தினால் அவைகள் வாசஞ்செய்கின்ற) அச்சோலைகளிலுள்ள பழங்களை யெல்லாம் தாவிச்சிதறும். - எ - று.

சாலிநீள் வயலின் ஓங்கித் தந்நிகர் இன்றி மிக்கு
வாலிதாம் வெண்மை உண்மைக் கருவினாம் வளத்த வாகிச்
சூல்முதிர் பசலை கொண்டு சுருள்விரித் தரனுக் கன்பர்
ஆலின சிந்தை போல ஆலர்ந்தன கதிர்க ளெல்லாம். 21

(இ - ள்.) நெற்பயிர்கள் நீண்ட வயலினிடத்தில் ஓங்கி வளர்ந்து, (யாதொன்றுந்) தனக்குச் சமானமில்லாமல் உயர்ந்து, பரிசுத்தம் பொருந்திய வெண்ணிறத்தைத் தன்னள்ளேயுள்ள கருவினாலாகின்ற வளப்பத்தை யுடையனவாகி, அக்கரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதிர்தலாகிய பசலைநிறத்தையடைந்து, பின்பு கதிர்ச்சுருளை விரித்து, சிவபெருமானிடத்தில் அன்புசெலுத்துகின்ற அடியார் களின் விசாலமாகிய திருவுள்ளம்போலக் கதிர்களை மலர்ந்தன. எ - று.

பத்தியின் பால ராகிப் பரமனுக் காளாம் அன்பர்
தத்தமிற் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்துநீள் பத்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம். 22

(இ-ள்.) பத்தியின்வழிப்பட்டவர்களாகிச் சிவபெருமானுக்கு அடிமைபூண்டொழுகுகின்ற அன்பர் தங்களுக்குத் தாங்களே கூடினவர்களாகி ஒருவர்க்கொருவர் தலையைத் தாழ்த்தி வணங்குவதுபோல, நெருங்கி நீண்ட வரிசையினையுடையன வாகிப் பால் முதிர்ந்த கதிராகிய தலைகளைத் தாழ்த்தி, மேற்சொல்லிய அடியார்களின் சிவானுபவத் தன்மையைப் போல நெற்பயிர்களெல்லாம் விளைந்தன. - எ - று.

அரிதரு செந்நெற் சூட்டின் அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார்
பரிவுறத் தடிந்த பன்மீன் படர்நெடுங் குன்று செய்வார்
சுரிவளை சொரிந்த முத்தின் சுடர்ப்பெரும் பொருப்பு யர்ப்பார்
விரிமலர்க் கற்றை வேரி பொழிந்திழி வெற்பு வைப்பார். 23

(இ - ள்.) (மள்ளர்களில்) அரிவாளினால் அரியப்பட்ட செந்நெல்லரிகளால் ஒன்றின்மே லொன்றாக அடுக்கப்பட்ட சுமைகளை மலைபோலக் குவிப்பார்கள். (சிலர்) ஆசையோடு பிடித்த பலவகைப்பட்ட மீன்களையும் படர்ந்த பெரிய மலைபோலக் குவிப்பார்கள். (சிலர்) சுரிந்த சங்குகளீன்ற முத்துக்களை ஒளிபொருந்திய பெரியமலைகளைப்போல உயர்த்துவார்கள். (சிலர்) வாசனை வீசுகின்ற மலர்க்கூட்டங் களைத் தேனாகிய அருவிபொழிந்தோடுகின்ற மலைபோலக் குவிப்பார்கள். - எ - று.

சாலியின் கற்றை துற்ற தடவரை முகடு சாய்த்துக்
காலிரும் பகடு போக்கும் கரும்பெரும் பாண்டில் ஈட்டம்
ஆலிய முகிலின் கூட்டம் அருவரைச் சிமயச் சாரல்
மேல்வலங் கொண்டு சூழுங் காட்சியின் மிக்க தன்றே. 24

(இ - ள்.) நெல்லரியின் கற்றைகள்பொருந்திய (நெற்போரா கிய) பெரிய மலையினது உச்சியைச் சரித்து (அப்போரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிதிக்கும்படி) வலியகால்களையுடைய பெரிய எருமைக்கடாக் களோடுசேர்த்து நடத்துகின்ற கருமைபொருந்திய எருதுகளின் கூட்டங்கள், அசைகின்ற மேகக்கூட்டமானது அளவிடுதற்கரிய மலையினது உச்சியின்மேல் வலமாகச் சூழ்ந்துவருகின்ற காட்சியிலும் மிகுதியாயிருந்தது.

வைதெரிந் தகற்றி ஆற்றி மழைப்பெயல் மானத் தூற்றிச்
செய்யபொற் குன்றும் வேறு நவமணிச் சிலம்பும் என்னக்
கைவினை மள்ளர் வானம் கரக்கவாக் கியநெற் குன்றால்
மொய்வரை உலகம் போலும் முளரிநீர் மருத வைப்பு. **25**

(இ - ள்.) கைத்தொழிலில் வல்லவர்களாகிய உழவர்கள் (நெற்போர் மிதித்தவுடனே) வைக்கோல்களை ஆராய்ந்து நீக்கி, (அந்நெல்லிலுள்ள பதர்கள் நீங்கும்படி) மழைத்துளிகள் துளிப்பதுபோலத் தூற்றுதல்செய்து, சிவந்த பொன்மலையும் அதற்கு வேறாகிய நவரத்தினங்களாலாகிய மலைகளும்போல விண்ணுலகம் மறையும்படி உயர்த்திய நெல்மலைகளினால் தாமரை மலர்களையுடைய நீர்வளம்பொருந்திய மருதநில மானது நெருங்கிய மலைகளையுடைய குறிஞ்சி நிலத்தை யொத்திருக்கும். - எ - று.

அரசுகொள் கடன்கள் ஆற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையும் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடம்நீடி மலர்ந்துள பதிகள் எங்கும். **26**

(இ - ள்.) (அப்படித்தொகுத்த நெற்களுள்) அரசன் பெற வேண்டிய ஆறிலொருபாகத்தை அவனுக்குச் செலுத்தி, மிகுந்த ஐந்துபங்கையும் தாங்களெடுத்துக்கொண்டு தருமங்களை விரும்பிச்செய்து, வணங்கத்தக்க தெய்வங்களைப் பூசித்து, பெரியயோர்களையும் - விருந்தினரையும், அன்போடு வந்து சேர்ந்த உறவினைரையும் பாதுகாத்து (அதனால் புகழ்பெற்று) விளங்குகின்ற குடிகள் அதிகரித்து, அவர்கள் வாசஞ்செய்வதற் கமைந்த மலைபோன்ற மாளிகைகள் உயர்ந்து விளங்கியுள்ளன அச்சோழநாடெங்கும். - எ - று.

கரும்படு களமர் ஆலைக் கமழ்நறும் புகையோ மாதர்
சுரும்பெழ அகிலால் இட்ட தூபமோ யூப வேள்விப்
பெரும்பெயர்ச் சாலை தோறும் பிறங்கிய புகையோ வானின்
வருங்கரு முகிலோ சூழ்வ மாடமும் காவும் எங்கும். **27**

Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) கருப்பஞ்சாற்றைக் காய்ச்சுகின்ற மள்ளர்களினது ஆலையிருக்குமிடத்திலிருந்து தோன்றிய மணம்பொருந்திய நல்லபுகையோ! பெண்கள் வண்டுகளெழும்படி அகிற்கட்டைகளால் தங்கள் கூந்தலுக்கு ஊட்டிய புகையோ! யூப ஸ்தம்பங்களை நிறுத்திச் செய்கின்ற பெரிய யாகசலைகளிலிருந்து வெளிப்பட்டு விளங்குகின்ற புகையோ! ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற கறுத்தமேகமோ! மாளிகைகளிலுஞ் சோலைகளிலுஞ் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. (ஈது இன்னதென்று வேறுபாடறியக் கூடவில்லை.) எ - று.

நாளிகே ரஞ்செ ருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்
கோளிசா லந்த மாலம் குளிர்மலர்க் குரவம் எங்கும்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாகம் எங்கும்
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும். 28

(இ - ள்.) (அச்சோழநாட்டின்) எவ்விடங்களிலுந் தென்னை மரங்களும், செருந்திமரங்களும், நல்லமலர்கள் பொருந்திய நாரத்த மரங்களும், பூவாதுகாய்க்கும் மரங்களும், பச்சிலை மரங்களும், குளிர்ந்த மலர்களையுடைய குராமரங்களும், அடிபருத்து உயர்ந்த பனைமரங்களும், சந்தனமரங்களும், குளிர்ச்சிபொருந்திய மலர்களையுடைய குங்குமமரங்களும், நீண்ட இலைகளமைந்த வஞ்சிமரங்களும், காஞ்சிமரங்களும், நிறைந்தமலர்கள் பொருந்திய கோங்கமரங்களும் இருக்கின்றன.

சூதபா டலங்கள் எங்கும் சூழ்வழை ஞாழல் எங்கும்
சாதிமா லதிகள் எங்கும் தண்தளிர் நறவம் எங்கும்
மாதவி சரளம் எங்கும் வகுளசண் பகங்கள் எங்கும்
போதவிழ் கைதை எங்கும் பூகபுன் னாகம் எங்கும். 29

(இ-ள்.) எவ்விடங்களிலும் மாமரங்களும், பாதிரிமரங்களும், சூழ்ந்திருக்கின்ற சுரபுன்னை மரங்களும், ஞாழல்களும், சிறுசண்பகங்களும், மல்லிகைகளும், குளிர்ச்சிபொருந்திய துளிர்களையுடைய அனிச்சமரங்களும், குருக்கத்திக்கொடிகளும், சரள மரங்களும், மகிழமரங்களும், சண்பகமரங்களும், புஷ்பங்கள் விரிந்த தாழைமரங்களும், கமுகமரங்களும், புன்னைமரங்களும் இருக்கின்றன. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மங்கல வினைகள் எங்கும் மணஞ்செய்கம் பலைகள் எங்கும்
பங்கய வதனம் எங்கும் பண்களின் மழலை எங்கும்
பொங்கொளிக் கலன்கள் எங்கும் புதுமலர்ப் பந்தர் எங்கும்
செங்கயல் பழனம் எங்கும் திருமகள் உறையுள் எங்கும். 30

(இ - ள்.) எவ்விடங்களிலும் மங்கலத்தொழில்களும், கலியாணஞ் செய்வதனாலுண்டாகின்ற வாத்தியங்களின் ஓசைகளும், (பெண்களினுடைய) தாமரைமலர்போன்ற முகங்களும், அப்பெண்களினுடைய பண்ணொடு இசைந்த மழலைச் சொற்களும் ஒளிவீசுகின்ற ஆபரணங்களும், புதியமலர்களால் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களும், சிவந்த கெண்டைமீன்கள்பொருந்திய வயல்களும், இலக்குமி வாசஞ்செய்யத் தக்க இடங்களும் இருக்கின்றன. - எ - று.

மேகமும் களிறும் எங்கும் வேதமும் கிடையும் எங்கும்
யாகமும் சடங்கும் எங்கும் இன்பமும் மகிழ்வும் எங்கும்
யோகமும் தவமும் எங்கும் ஊசலும் மறுகும் எங்கும்
போகமும் பொலிவும் எங்கும் புண்ணிய முனிவர் எங்கும். 31

(இ - ள்.) எவ்விடங்களிலும் மேகக்கூட்டகங்களும், யானைகளும், வேதவொலியும், அவ்வேதத்தை அத்தியயனம் பண்ணுகின்றவர்களின் கூட்டங்களும், வேள்விகளும், அவ்வேள்விக்கு அங்கங்களாயுள்ள சடங்குகளும், இன்பமும், அவ்வின்பத்தாலுண்டாகிய சந்தோஷமும், அஷ்டாங்கமுதலிய யோகஞ் செய்தலும், விரதமுதலிய தவஞ்செய்தலும், ஊஞ்சலாடுதலும், அவைகளையுடைய வீதிகளும், பல வகையாகிய இன்பங்களை யனுபவித்தலும், அதனாலுண்டாகிய பொலிவும் இருக்கின்றன. புண்ணியசொருபராகிய முனிவர்களுமிருக்கின்றார்கள். - எ - று.

பண்தரு விபஞ்சி எங்கும் பாதசெம் பஞ்சி எங்கும்
வண்டறை குழல்கள் எங்கும் வளரிசைக் குழல்கள் எங்கும்
தொண்டர்தம் இருக்கை எங்கும் சொல்லுவ திருக்கை எங்கும்
தண்டலை பலவும் எங்கும் தாதகி பலவும் எங்கும். 32

(இ - ள்.) எவ்விடங்களிலும் (பலவகையாகிய) பண்களைப் பாடுதற்குரிய வீணைகளும், (பெண்களினது) கால்களில் ஊட்டிய செம்பஞ்சுக்குழம்பின் குறிகளும், வண்டுகள் முழங்குகின்ற அப்பெண்களின் கூந்தல்களும், இசைகள் பொருந்திய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புள்ளாங்குழல்களும், சிவனடியார்களின் திருமடங்களும், வேதங்களை அத்தியயனம் பண்ணுவதும், பலசோலைகளும், ஆத்திமரமும், பலாமரமும் இருக்கின்றன. - எ - று.

மாடுபோ தகங்கள் எங்கும் வண்டுபோ தகங்கள் எங்கும்
பாடும்அம் மனைகள் எங்கும் பயிலும்அம் மனைகள் எங்கும்
நீடுகே தனங்கள் எங்கும் நிதிநிகே தனங்கள் எங்கும்
தோடுசூழ் மாலை எங்கும் துணைவர்சூழ் மாலை எங்கும். 33

(இ - ள்.) எவ்விடத்திலும் பக்கங்களில் யானைக்கன்றுகளும், வண்டுகள் பொருந்திய மலரிடங்களும், பாடகர்பாடுகின்ற அழகிய வீடுகளும், சிறுபெண்கள் விளையாடுகின்ற அம்மனைக் காய்களும், (மேல்வீடுகளில் கட்டப்பட்டு) உயர்ந்திருக்கின்ற கொடியாடைகளும், பொக்கிஷசாலைகளும், இதழ்களோடு பொருந்திய மலர் மாலைகளும், புருஷர்கள் சூழ்ந்துவருகின்ற வரிசைகளும் இருக்கின்றன.

வீதிகள் விழவின் ஆர்ப்பும் விரும்பினர் விருந்தின் ஆர்ப்பும்
சாதிகள் நெறியில் தப்பா தனயரும் மனையில் தப்பா
நீதிய புள்ளும் மாவும் நிலத்திருப் புள்ளு மாவும்
ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத்தாம் அஞ்சும். 34

(இ - ள்.) திருவீதிகளிலெல்லாம் திருவிழாவினா லுண்டாகிய ஆரவாரமும், தம்மை விரும்பி வந்த அதிதிகளுக்கு விருந்திடுவதினா லுண்டாகிய ஆரவாரமும், இருக்கின்றன. அந்தணர் முதலிய நான்கு சாதியர்களும் தங்கள் தங்களுக்கு விதித்திருக்கின்ற ஒழுக்கத்தினின்றுந் தவறாதிருப்பார்கள். சிறுவர்களும் அவ்வவ் வீடுகளில் தப்பாதிருப்பார்கள். பறவைகளும், மிருகங்களும் ஒன்றற்கொன்று விரோதமில்லாமல் உறவாயிருக்கும். இலட்சுமியும், அச்சோழநாட்டில் வாசஞ் செயவதற்கு விரும்புவாள். அந்நாட்டிலுள்ளவர்களால் ஓதப் படுவன ஸ்ரீ பஞ்சாக்ஷரங்களேயாம். (அதனால்) பொருந்திய பிணிகள் அவர்களை நெருங்குவதற்குப் பயப்படும். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நற்றமிழ் வரைப்பின் ஓங்கு நாம்புகழ் திருநாடென்றும்
பொற்றடந் தோளால் வையம் பொதுக்கடிந் தினிது காக்கும்
கொற்றவன் அநபா யன்பொற் குடைநிழற் குளிர்வ தென்றால்
மற்றதன் பெருமை நம்மால் வரம்புற விளம்ப லாமோ. ***35***

(இ - ள்.) செந்தமிழ் மொழி வழங்கும் நாட்டில் விளங்குகின்ற நம்மால் புகழ்ந்து சொல்லப்பட்ட அழகிய சோழ நாடானது, எப்பொழுதும் அழகு பொருந்திய விசாலமாகிய பயத்தினது வல்லமையால் உலகத்தை வேற்றரசர்களுக்குப் பொதுவாயிருக்குந் தன்மையினின்று நீக்கி இனிமையோடு பாதுகாத்துவருகின்ற அநபயாச் சோழமகாராஜனது அழகிய வெண்கொற்றக்குடையினது நிழலினாலே குளிர்ந்து சவுக்கியத்தை யடைகிறதென்று சொன்னால், அச்சோழநாட்டின் பெருமையை நம்மால் அளவுபடுத்திச் சொல்லக்கூடுமோ? (கூடாது.) - எ - று

திருநாட்டுச் சிறப்பு முற்றிற்று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. திருவாரூர்ச் சிறப்பு

சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர். 1

(இ - ள்.) வன்னிப்பத்திரமும், கங்காநதியும், இளம்பிறையும் தரித்த சிவந்த சடைபொருந்திய திருமுடியினையுடைய சிவபெருமான் (எழுந்தருளியிருக்கின்ற) திருவாரூர் என்னும் சிறந்த நகரமானது, முன் சொல்லப்பட்ட சோழ நாட்டில் சோழவம்சத்தரசர்கள் அரசுசெய்தற்குப் பழமையால் சிறந்ததாயும், தாமரைமலரில் வசிக்கின்ற இலட்சுமியானவள் பூசிக்கப்பெற்றதாயும் உள்ளது.

வேத ஓசையும் வீணையின் ஓசையும்
சோதி வானவர் தோத்திர ஓசையும்
மாதர் ஆடல் மணிமுழ வோசையும்
கீத ஓசையு மாய்க்கிளர் வுற்றவே. 2

(இ-ள்) அந்நகரத்தில், வேதத்தினது அத்தியயனவோசையும், வீணைவாசிப்பதாலுண்டாகின்ற வோசையும், ஒளி பொருந்திய தேவர்கள் ஸ்தோத்திரஞ்செய்தலாலுண்டாகின்ற வோசையும், ருத்திரகணிகையர்கள் செய்கின்ற நடனத்திற் கிசைந்த அழகிய மத்தளவோசையும், சங்கீதங்களின் ஓசையும் ஏகோபித்து முழங்கியது. - எ - று.

பல்லி யங்கள் பரந்த ஒலியுடன்
செல்வ வீதிச் செழுமணித் தேரொலி
மல்லல் யானை ஒலியுடன் மாவொலி
எல்லை இன்றி எழுந்துள எங்கணும். 3

(இ-ள்.) பலவகையாகிய வாத்தியங்களிலிருந்தும் உண்டாகிய ஒலியோடு பலவகையாகிய செல்வங்களும் நிரம்பிய வீதிகளி லோடுகின்ற அழகிய மணிகள் கட்டிய தேரின் ஒலியும், வளப்பம்பொருந்திய யானைகளின் ஒலியோடு குதிரைகளின் ஒலியும் ஓரளவில்லாமல் அந்நகரத்தின் எவ்விடங்களிலும் ஒலித்துள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாட மாளிகை சூளிகை மண்டபம்
கூட சாலைகள் கோபுரம் தெற்றிகள்
நீடு சாளர நீடரங் கெங்கணும்
ஆடல் மாதர் அணிசிலம் பார்ப்பன. 4

(இ - ள்.) மேல்வீடுகளையுடைய மாளிகைகளும் செய்குன்றுகளும் - மண்டபங்களும் - கூடங்கள் பொருந்திய வீடுகளும் - கோபுரவாசல்களும் - திண்ணைகளும் - நீண்ட பலகணிகளையுடைய பெரிய சபைகளும் ஆகிய எவ்விடங்களிலும் நாட்டியஞ் செய்கின்ற பெண்கள் (கால்களில்) தரித்திருக்கின்ற சிலம்புகள் முழங்குவன. - எ - று.

அங்கு ரைக்கென் னளவப் பதியிலார்
தங்கள் மாளிகை யின்னொன்று சம்புவின்
பங்கி னாள்திருச் சேடி பரவையாம்
மங்கை யார்அவ தாரஞ்செய் மாளிகை. 5

(இ - ள்.) அத்திருவாரூரினது சிறப்பினை என் புத்தியினளவைக் கொண்டு என்ன சொல்லப்போகின்றேன். அந்நகரத்தில் நாயகனில்லாத ருத்திரகணிகையரது மாளிகைகளில் ஒரு மாளிகையானது சிவபெருமானது இடப்பாகத்தில் எழுந்தருளியிருக்கின்ற உமாதேவியாரது சிறந்த தோழியர்களில் ஒருவராகிய கமலினியென்னும் பரவைநாச்சியார் திருவவதாரஞ் செய்த திரு மாளிகையாம். - எ - று.

படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிதான்
இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய்
நடந்த செந்தா மரையடி நாறுமால். 6

(இ - ள்.) நான்கு பக்கங்களிலும் பரவிய பேரொளியையுடைய பல மணிகளால் அலங்கரிக்கப்பட்ட மாடவீதிகளுள் ஒன்றில் பூமியைத் தோண்டிச்சென்ற விஷ்ணுவாகிய பன்றியினாலும், ஆகாயத்திற் பறந்துசென்ற பிரமனாகிய அன்னத்தினாலும் அடியையும் முடியையும் தேடிக்காணப்பெறாதவராகிய தியாகேசரானவர் தம்மைப்பழைய அன்புகொண்டு தொடர்ந்த சுந்தரமூர்த்திசுவாமிகளுக்காகப் பரவைநாச்சியாரிடத்தில் (அவர் கொண்ட வூடலைத் தணிக்கும்பொருட்டுத்) தூதாக நடந்தருளிய செந்தாமரைமலர்போன்ற திருவடிகளின் வைப்பானது மணக்கும். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செங்கண் மாதர் தெருவில் தெளித்தசெங்
குங்கு மத்தின் குழம்பை அவர்குழல்
பொங்கு கோதையிற் பூந்துகள் வீழ்ந்துடன்
அங்கண் மேவி அளறு புலர்த்துமால். 7

(இ - ள்.) செந்தாமரைமலர்போன்ற கண்களையுடைய பெண்கள் திருவீதிகளில் தெளித்த சிவந்த குங்குமக்குழம்பை அப்பெண்கள் தங்கள் கூந்தலில் தரித்த மணம்வீசுகின்ற மாலையிலுள்ள புஷ்பத் துகள் விழுந்து உடனே அதனோடு சேர்ந்து அக்குங்குமக்குழம்பாகிய சேற்றை உலரச்செய்யும். எ-று.

உள்ளம் ஆர்உரு காதவர் ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள். 8

(இ-ள்.) ரிஷபத்தை வாகனமாகக்கொண்டூர்ந்த சிவபெருமான் எழுந்தருளியிருக்கப்பெற்ற திருவாரூரின் பக்கங்களிலெல்லாம் இனிய பண்களமைந்த தேவாரத் திருப்பதிகங்களை பசிய கிளிப்பிள்ளைகள் பாட, அதனை நாகணவாய்ப்பறவைகள் (காதுகொடுத்து) கேட்கின்றன; (ஆதலால்) அத்திருப்பதிகங்களை யோதிப் பத்தியினால் தமது உள்ளம் உருகப்பெறாதவர்கள் (அந்நகரத்தில்) யாரிருக்கின் றார்கள்? (ஒருவருமில்லை.) - எ - று.

விளக்கம் மிக்க கலன்கள் விரவலால்
துளக்கில் பேரொலி யால்துன்னு பண்டங்கள்
வளத்தொ டும்பல வாறு மடுத்தலால்
அளக்கர் போன்றன ஆவண வீதிகள். 9

(இ - ள்.) பிரகாசம்பொருந்திய அநேக ஆபரணங்கள் நிறைந் திருப்பதனாலும், நீங்காத பேரொலியினாலும், நெருங்கிய பலவகையான பண்டங்களை வளப்பத்துடன் அநேகவழிகளால் கொண்டுவரப்பெற்றிருப்பதனாலும் அந்நகரத்திலுள்ள கடை வீதிகள் சமுத்திரத்தை ஒத்திருந்தன. - எ - று.

ஆர ணங்களே அல்ல மறுகிடை
வார ணங்களும் மாறி முழங்குமால்
சீர ணங்கிய தேவர்க ளேயலால்
தோர ணங்களில் தாமமும் சூழுமால். 10

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) திருவீதிகளில் வேதபாராயண வொலியேயல்லாமல், யானைகளும் அவ்வேதபாராயண வொலியோடு மாறுபட்டொலிக்கும். சிறப்புப்பொருந்திய அழகிய தேவர் கூட்டங்கள் சூழ்வதேயல்லாமல், தோரணங்களில் கட்டப்பட்ட மாலைகளும் சூழ்ந்து விளங்கும். - எ - று.

தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர்
வாழ்ந்த சிந்தை முனிவர் மறையவர்
வீழ்ந்த இன்பத் துறையுள் விரவுவார்
சூழ்ந்த பல்வே றிடத்ததத் தொல்நகர். 11

(இ - ள்.) தாழ்ந்த சடையினையுடைய சிவபெருமானிடத்தினின்றுந் தோன்றிய ஆதிசைவர்களும், சிவசம்பந்தமான தவச்செல்வத்தையுடைய பெரியோர்களும், சிவாநந்தப் பெருவாழ்வடைந்த திருவுள்ளத்தையுடைய சைவமுனிவர்களும், ஸ்மார்த்தர்களாயிருந்து பின் சிவதீக்ஷை பெற்றுக்கொண்ட மகாசைவர்களும், சிவாநந்தத்தை யடையும்பொருட்டு பலவகையாக அமைந்துள்ள இன்பம்பொருந்திய மார்க்கங்களிற் சேர்ந்துள்ளவர்களுமாகிய இவர்கள் சூழ்ந்து வாசஞ்செய்கின்ற வெவ்வேறான பல இடங்களையுடைய அப்பழமைபொருந்திய திருவாரூரென்னுந் திருநகரம் - எ - று.

நிலம கட்கழ கார்தரு நீள்நுதல்
திலதம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் தாமரை போல்மலர்ந்(து)
அலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால். 12

(இ - ள்.) சோழராசர்களால் அரசாட்சி செய்யப்பட்ட சோழநாடானது பூமிதேவியினது அழகுபொருந்திய நெற்றியிலிட்ட திலகத்தை யொத்துள்ளது. (அந்தநாட்டில்) அளவில்லாத பெருஞ்சிறப்பினையுடைய திருவாரூரென்னுந்திரு நகரமானது திருமகளுக்கு (வசஸ்தானமாகப் பொருந்திய) வளப்பத்தையுடைய செந்தாமரைமலரைப்போல விளங்கி பிரகாசித்துக் கொண்டிருக்கும். - எ - று.

அன்ன தொல்நக ருக்கர சாயினான்
துன்னு செங்கதி ரோன்வழித் தோன்றினான்
மன்னு சீர்அந பாயன் வழிமுதல்
மின்னும் மாமணிப் பூண்மனு வேந்தனே. 13

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அப்படிப்பட்ட சிறப்பினையுடைய பழமையாகிய திருநகரத்திற்கு அரசரயுள்ளவரும், நெருங்கிய சிவந்த கிரணங் களையுடைய சூரியனது வமிசத்தில் பிறந்தவரும், நிலைபெற்ற கீர்த்தியினையுடைய அநபாயச்சோழமகாராஜாவின் குலத்திற்கு முதல்வராயுள்ளவரும், விளங்குகின்ற சிறந்தரத்தினாபரணங் களைத்தரித்த மனுவென்னுந் திருநாமத்தினையுடையவருமாகிய ஒரு சோழரிருந்தார்.

மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்
விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்
எண்ணி லாதன மாண இயற்றினான். 14

(இ - ள்.) (அவ்வரசர்பெருமான்) பூமியில்வாழ்கின்ற நிலைபெற்ற எல்லா வுயிர்களுக்கும், கண்ணும், உயிருமாக இருந்து அவைகளைக் காப்பதே தனக்குப் பெரிய காவல் தொழிலாக வுடையவர். விண்ணுலகத்திலுள்ள தேவர்கள் மனம் மகிழும்படியாக அளவில்லாத யாகங்களை மாட்சிமை பொருந்தும்படிச் செய்தவர். - எ - று.

கொற்ற ஆழி குவலயஞ் சூழ்ந்திடச்
சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திடச்
செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்
பெற்ற நீதியும் தன்பெயர் ஆக்கினான். 15

(இ - ள்.) தனது வெற்றிபொருந்திய ஆக்கினாசக்கரமானது (உயிர்களுக்கு யாதொரு குறைவும் வராமல் காக்கும்பொருட்டு) உலக முழுவதும் சுற்றிவரவும், (தமதுதேசத்தைச்) சூழ்ந்திருக் கின்ற அரசர்கள் (கொண்டுவந்த) பகுதிப்பொருள்களானவை அரண்மனைவாசலில் நிறைந்திருக்கவும், (வீணாக வேற்றரசர்கள் மேல்) பகைகொள்ளாமல் ஒழித்த செவ்விய குணத்தையுடைய உண்மைபொருந்திய மனுவென்னும் அரசனால் உலகத்தார டைந்த தரும நூலையும் தன்பெயரால் விளங்கச் செய்தவர். எ-று.

பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்(கு)
அங்கண் வேண்டும் நிபந்தமா ராய்ந்துளான்
துங்க ஆகமம் சொன்ன முறைமையால். 16

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) விளங்குகின்ற பெரிய வேதவடிவமாகிய புற்றைத் தமக்கு இடமாகக் கொண்டவரும், எவ்விடங்களிலும் வியாபக வடிவமா யெழுந்தருளியிருக்கின்றவருமாகிய வன்மீகா நாதருக்குச் செய்யும் நித்தியபூசைக்கு அவ்விடத்தில் வேண்டிய படித்தரங்களை உயர்ந்த காமிகமுதலிய சிவாகமங்களில் விதித்த முறைவழுவாமல் ஆராய்ந்து கொண்டிருப்பவர். - எ - று.

அறம்பொரு ளின்ப மான அறநெறி வழாமற் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற வையகம் காக்கும் நாளில்
சிறந்தநல் தவத்தால் தேவி திருமணி வயிற்றின் மைந்தன்
பிறந்தனன் உலகம் போற்றப் பேர்அரிக் குருளை அன்னான்.17

(இ - ள்.) அறம், பொருள், இன்பம் என்று வகுக்கப்பட்ட தருமநூல் விதியை (உலகத்திலுள்ளவர்கள்) தவறாமல் தழுவும் படிச் செய்வித்து, (குடிகளை வரிமுதலியவைகளால் மிகவும் வருத்தப்படுத்துகின்ற) கொடுங்கோலரசரை நாசஞ்செய்து (தமக்குக்கீழ்ப்பட்டுச்) செங்கோல் செலுத்துகின்ற அரசர்கள் தம்மைத் துதிக்கும்படி பூமியை அரசாளுங்காலத்தில், (அவ் வரசர் பெருமான் செய்த) சிறப்புப்பொருந்திய நல்ல தவப் பேற்றால் (இரத்தினமாலை யென்னும்) தமது மனைவியாரது திருவயிற்றினின்றும். உலகத்தார் துதிக்கும்படியாகப் பெரிய சிங்கக்குட்டிக்குச்சமான மாகிய ஒரு புத்திரன் பிறந்தான். எ - று.

தவமுயன் றரிதில் பெற்ற தனிஇளங் குமரன் நாளுஞ்
சிவமுயன் றடையுந் தெய்வக் கலைபல திருந்த ஓதிக்
கவனவாம் புரவி யானை தேர்ப்படைத் தொழில்கள் கற்றுப்
பவமுயன் றதுவும் பேறே எனவரும் பண்பின் மிக்கான். 18

(இ - ள்.) (மனுச்சக்கிரவர்த்தியானவர்) தவத்தைச்செய்து அருமையாகப் பெற்ற ஒப்பற்ற இளமைபொருந்திய இராச குமாரன் நாள்தோறும் நற்காரியங்களிலேயே முயற்சித்து அடையத்தக்க தெய்வத் தன்மை பொருந்திய பல கலைஞானங் களைத் தெளிவாக ஓதியுணர்ந்து, வேகத்தோடு தாவிச்செல்லு கின்ற குதிரை யேற்றமும், யானை யேற்றமும், தேரூர்தலும், (வில்வித்தைமுதலிய) ஆயுதப்பயிற்சிகளும் (ஆகிய இவை களைக்) கற்றுணர்ந்து, மானிடதேகமெடுத்துப் பிறந்ததும் ஓர் பெரும் பயனேயென்று யாவருஞ்சொல்லும்படியான நற்குணங் களால் சிறந்தவனாயினான். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அளவில்தொல் கலைகள் முற்றி அரும்பெறல் தந்தை மிக்க
உளமகிழ் காதல்கூர ஓங்கிய குணத்தால் நீடி
இளவர சென்னுந் தன்மை எய்துதற் கணிய னாகி
வளரிளம் பரிதி போன்று வாழுநாள் ஒருநாள் மைந்தன். 19

(இ - ள்.) (மற்றுஞ்சொல்லப்பட்ட) அளவில்லாத பழய வேதவேதாங்கங்களை யோதிமுடித்து, (தனக்குப்) பெறுதற்கரிய தந்தையாகிய மனுச்சோழரது மிகுந்த மனமகிழ்தற்குக் காரணமான ஆசை அதிகரிக்க உயர்ந்த நற்குணங்களால் சிறந்து, இளவரசென்று சொல்லத்தக்க பருவத்தை யடைதற்குச் சமீபித்தவனாகி, வளருகின்ற இளஞ்சூரியனையொத்து வாழுகின்ற நாள்களில் ஒருநாள் அவ்விராசகுமாரன். - எ - று.

திங்கள்வெண் கவிகை மன்னன் திருவளர் கோயில் நின்று
மங்குல்தோய் மாட வீதி மன்னிளங் குமரர் சூழக்
கொங்கலர் மாலை தாழ்ந்த குங்குமக் குலவு தோளான்
பொங்கிய தானை சூழத் தேர்மிசைப் பொலிந்து போந்தான். 20

(இ - ள்.) மணம்வீசுகின்ற மலர்மாலைகளை மார்பில் தொங்கும்படி யணிந்து, குங்குமச்சந்தனம் விளங்குகின்ற தோள்களையுடைய அவ்விராஜகுமாரனானவன், பூரணச் சந்திரன்போன்ற வெண்கொற்றக் குடையினையுடைய மனுச்சோழரது அழகுவிளங்குகின்ற அரண்மனையினின்றும் (புறப்பட்டு) மேகங்கள் தவழுகின்ற மாளிகைகளையுடைய திருவீதியில் இளமைபொருந்திய இராஜகுமாரர்கள் தன்னைச் சூழ்ந்துவரவும், மிகுந்த சேனைகள் சூழ்ந்துவரவும், தேரின் மேலேறிப் பவனிவந்தான். - எ - று.

பரசுவந் தியர்முன் சூதர் மாகதர் ஒருபால் பாங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வளை ஒருபால் மிக்க
முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங்கொலி ஒருபால் வென்றி
அரசிளங் குமரன் போதும் அணிமணி மாட வீதி. 21

(இ - ள்.) வெற்றிபொருந்திய இளவரசனாகிய இராஜ குமாரன் பவனிவருகின்ற அழகிய இரத்தினகசிதமான மாடவீதி யானது, துதிக்கின்ற மங்கலப்பாடகர்கள் முன்னேசெல்லவும், சூதர்களும் மாகதர்களும் ஒருபக்கத்தில் வரவும், அருகில் வாசனை பொருந்திய நல்ல கூந்தலையுடைய பெண்கள் (மோகங் கொண்டு தேகமிளைத்தலால் கையினின்றும் நழுவிவிழச்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிந்திய வெண்மைபொருந்திய வளையல்கள் ஒருபக்கத்தி லிருக்கவும், மிகுந்த முரசவாத்தியத்துடன் சங்குகள் ஆரவாரித்தலாலுண்டாகும் பேரோசையாது ஒருபக்கத்தில் பொருந்தவும் (ஆகிய பெருஞ்சிறப்பினையுடையதாயிருந்தது.) எ - று.

தனிப்பொருந் தருமம் தானோர் தயாஇன்றித் தானை மன்னன்
பனிப்பில்சிந் தையினில் உண்மைப் பான்மைசோ தித்தால்என்ன
மனித்தர்தன் வரவு காணா வண்ணமோர் வண்ணம் நல்ஆன்
புனிற்றிளங் கன்று துள்ளிப் போந்ததம் மறுகி னூடு. 22

(இ - ள்.) ஒப்பற்ற பெருமைபொருந்திய தருமதேவதை யானது எவ்வள்வுந் தயவில்லாமல், ரதகஜதுரக பதாதிக ளென்னும் நால்வகைச் சேனைகளையுமுடைய மனுச்சோழரது அசைதலில்லாத மனத்திலுள்ள உண்மைத்தன்மையைச் சோதிக்க வந்ததுபோல ஒரு அழகிய நல்ல பசுவின் இளங்கன் றானது, மனிதர்கள் தன் வருகையை அறியாதிருக்கும்படி அத்திருவீதியில் துள்ளி ஓடியது. - எ - று.

அம்புனிற் றாவின்கன்றோர் அபாயத்தின் ஊடு போகிச்
செம்பொனின் தேர்க்கால் மீது விசையினால் செல்லப் பட்டே
உம்பரின் அடையக் கண்டங் குருகுதாய் அலமந் தோடி
வெம்பிடும் அலறும் சோரும் மெய்ந்நடுக் குற்று வீழும். 23

(இ - ள்.) பசுவினது அழகிய அவ்விளங் கன்றானது ஒரு அபாயவழியாகச் சென்று, (அவ்விராச குமாரனது) சிவந்த பொன்மயமாகிய தேரின் சக்கரம் தன்மேல் விசையினால் இழுக்கப்பட்டு இறந்துபோக, அதனிடத்தில் உருக்கமுற்றிருக் கின்ற தாய்ப்பசுவானது கண்டு அவ்விடத்தில் மனம்வருந்தி ஓடிவந்து (கன்று இறந்த சோகத்தினால்) கலங்கும், அலறும், சோர்வடையும், உடம்பு நடுங்கிக் கீழேவிழும். - எ - று.

மற்றது கண்டு மைந்தன் "வந்ததிங் கபாயம்" என்று
சொற்றடு மாறி நெஞ்சில் துயருழந் தறிவ ழிந்து
"பெற்றமுங் கன்றும் இன்றென் உணர்வெனும் பெருமை மானச்
செற்ற, என்செய்கேன்" என்று தேரினின் றிழிந்து வீழ்ந்தான். 24

(இ - ள்.) இவ்விதமாக அப்பசுவானது படுகின்ற துன்பத்தை இராஜகுமாரன் பார்த்த இவ்விடத்தில் அபாயம் நேரிட்ட தென்று, தான் சொல்லுகின்ற சொல்லானது தடுமாறி, மனதில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வருத்தமடைந்து, அறிவுசோர்ந்து, இப்பசுவும் கன்றும் இன்றைக்கு என்னுடைய அறிவாகிய பெருமையானது கெடும்படியாகச் செய்தன. (ஆதலால்) என்ன செய்வேனென்று தேரினின்றும் நழுவிக் கீழே விழுந்தான். - எ - று.

அலறுபேர் ஆவை நோக்கி ஆருயிர் பதைத்துச் சோரும்
நிலமிசைக் கன்றை நோக்கி நெடிதுயிர்த் திரங்கி நிற்கும்
"மலர்தலை உலகங் காக்கும் மனுவெனும் என்கோ மானுக்(கு)
உலகில்இப் பழிவந் தெய்தப் பிறந்தவா ஒருவன்" என்பான். 25

(இ - ள்.) அவ்விராஜகுமாரன் கன்று இறந்ததைக் குறித்து அலறுகின்ற பெரிய தாய்ப்பசுவைப் பார்த்துத் தன்னுடைய அருமையாகிய உயிர்பதைத்துச் சோர்வான். பூமியின்மேல் இறந்துகிடக்கும் இளங்கன்றைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டு அழுவான். பரந்த இடத்தையுடைய இவ்வுலகத்தைப் பாதுகாக்கின்ற மனுவென்னும் பெயரையுடைய அரசனுக்கு உலகத்தில் இப்படிப்பட்ட பழிமொழியுண்டாகத்தான் போலும் யானொருவன் பிள்ளையாகப் பிறந்தவண்ண மென்று சொல்லுவான். எ-று.

"வந்தஇப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவ தறமே ஆகில்
எந்தைஈ தறியா முன்னம் இயற்றுவன்" என்று மைந்தன்
சிந்தைவெந் துயரந் தீர்ப்பான் திருமறை யவர்முன் சென்றான். 26

(இ - ள்.) (இப்பொழுது என்னை யறியாது) நேரிட்ட இப்பழியை நீக்குதற்குரிய பிராயச்சித்த விதியை வேதங்களின் உண்மையையுணர்ந்த பிராமணர்கள் சொல்லுகின்ற தருமசாஸ்திரப்படியே செய்து பரிகரிப்பது தருமமானால் எனது தந்தையாகிய மனுச்சோழர் இச்செய்தி அறியாமுன்னமே செய்து (அப்பழியைப்) பரிகரித்துக் கொள்வேனென்று அம்மனுவின் புத்திரன் தன் மனத்திலுள்ள வெவ்வியதுன்பத்தை நீக்கிக் கொள்ளும்படி சிறப்புப்பொருந்திய பிராமணர்களிடத்திற்குப் போயினான். - எ - று.

தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்தஆத் தரியா தாகி
முன்நெருப் புயிர்த்து விம்மி முகத்தினில் கண்ணீர் வார
மன்னுயிர் காக்குஞ் செங்கோல் மனுவின்பொற் கோயில் வாயில்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினால் புடைத்த தன்றே. 27

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) தன்னுடைய உயிரையொத்த கன்றானது இறந்து போக, அதனால் வருந்திய தாய்ப்பசுவானது அத்துன்பத்தைச் சகிக்கமாட்டாமல் முன்னே நெருப்புப்பொறி பறக்கப் பெருமூச்சு விட்டழுது, முகத்தில் கண்ணீரானது ஒழுக, நிலைபெற்ற ஆன்மகோடிகளைக் காக்கின்ற செங்கோலையுடைய மனுச் சோழரது அழகிய அரண்மனைவாசலில் கட்டப்பட்டுப் பொன்னினால் அலங்கரிக்கப்பட்ட ஆராய்ச்சி மணியினிடத்திற் போய் அதைத் தன்னுடைய கொம்பினால் அடித்தது. - எ - று.

பழிப்பறை முழக்கோ ஆர்க்கும் பாவத்தின் ஒலியோ வேந்தன்
வழித்திரு மைந்தன் ஆவி கொளவரும் மறலி ஊர்திக்
கழுத்தணி மணியின் ஆர்ப்போ என்னத்தன் கடைமுன் கேளாத்
தெழித்தெழும் ஓசை மன்னன் செவிப்புலம் புக்கபோது. 28

(இ-ள்.) பழிவரும்போது ஒலிக்கின்ற பறையினது ஓசையோ! (அல்லது) பாவமானது ஒருருவமெடுத்து ஆரவாரித்தலா லுண்டாகிய ஓசையோ! மனுவென்னும் அரசனுடைய சந்ததியில் அவதரித்த அழகிய புத்திரனது உயிரைக் கொண்டுபோகவந்த இயமனுடைய வாகனமாகிய எருமைக்கடாவின் கழுத்திற் கட்டப்பட்ட மணியினது ஓசையோ! என்று யாவரும் சொல்லும்படி, தனது அரண்மனைவாயிலில் இதுவரையிலுங் கேளாத பேரோசையானது மனுச்சோழருடைய காதில் கேட்டபோது - எ று.

ஆங்கது கேட்ட வேந்தன் அரியணை இழிந்து போந்து
பூங்கொடி வாயில் நண்ணக் காவலர் எதிரே போற்றி
"ஈங்கிதோர் பசுவந் தெய்தி, இறைவ! நின் கொற்ற வாயில்
தூங்கிய மணியைக் கோட்டால் துளக்கிய" தென்று சொன்னார். 29

(இ - ள்.) (எப்பொழுதுங் கேட்டறியாத) அந்த ஆராய்ச்சி மணியினது ஓசையைக் கேட்ட மனுநீதிச் சோழர் சிங்காசனத் தினின்றும் இறங்கிச் சென்று அழகிய கொடியாடைகள் கட்டி யிருக்கின்ற வாசலில் வந்தபோது அங்குள்ள காவலாளர்கள் எதிரேவந்து வணங்கி, ஆண்டவரே! இவ்விடத்தில் இப்பசு வானாது வந்து உமது வெற்றிபொருந்திய வாசலில் கட்டித் தொங்குகின்ற ஆராய்ச்சிமணியைத் தனது கொம்பினால் அசைத்ததென்று சொன்னார்கள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன்னவன் அதனைக் கேளா வருந்திய பசுவை நோக்கி
“என்இதற் குற்ற” தென்பான் அமைச்சரை இகழ்ந்து நோக்க,
முன்னுற நிகழ்ந்த எல்லாம் அறிந்துளான் முதிர்ந்த கேள்வித்,
தொன்னெறி அமைச்சன் மன்னன் தாளினை தொழுது சொல்வான். 30

(இ - ள்.) அம் மனுநீதிச்சோழரானவர் காவலாளர்கள் சொல்லிய அவ்வார்த்தையைக் கேட்டு, வருத்தப்படுகின்ற பசுவைப்' பார்த்து இப்பசுவிற்கு (உங்கள் அசாக்கிரதையினால்) நேரிட்டதுன்பம் என்னவென்று கேட்கின்றவராய் மந்திரிகளை இகழ்ந்து (கோபித்துப்) பார்க்க, (அப்போது) முன்னே நடந்த செய்திகளை யெல்லாம் அறிந்துள்ளவனும் முதிர்ந்த கல்விகேள்விகளைப்பெற்று அதனால் பழய தருமநெறியில் நடக்கின்றவனுமாகிய ஒரு மந்திரியானவன் அவ்வரசனது பாதங்களை வணங்கிச் சொல்லுகின்றான். - எ - று.

“வளவ! நின் புதல்வன் ஆங்கோர் மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில்தேர்த் தானை சூழ அரசுலாந் தெருவில் போங்கால்
இளையஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந் திறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்ததித் தன்மை” என்றான். 31

(இ - ள்.) சோழர்பெருமானே! உம்முடைய புத்திரனானவன் மணிகள் கட்டிய ஒரு பெரிய தேரின்மேலேறி அளவில்லாத தேர்களும், சேனைகளும் தன்னைச் சூழ்ந்துவர இராஜவீதியில் போகும்பொழுது, இளமைபொருந்திய ஒரு பசுவின் கன்றனாது அத்தேர்ச்சக்கரத்தின் நடுவே புகுந்து இறந்துவிட, (அதனால்) வருத்தப்படுகின்ற இத்தாய்ப்பசுவானது இவ்விடத்திற்கு வந்து இம்மணியை யசைத்ததென்று சொன்னான். - எ - று.

அவ்வுரை கேட்ட வேந்தன் ஆவுறு துயரம் எய்தி
வெவ்விடந் தலைக்கொண் டாற்போல் வேதனை அகத்து மிக் “கிங்
கிவ்வினை விளைத்த வா” றென் றிடருறும் இரங்கும் ஏங்கும்
“செவ்விதென் செங்கோல்!” என்னும் தெருமரும் தெளியும் தேறான். 32

(இ - ள்.) அந்த மந்திரியின் வார்த்தையைக்கேட்ட மனுச் சோழரானவர் (கன்றைப்பறிகொடுத்த) அப்பசுவானது எவ்வளவு துன்பமடைகிறதோ அவ்வளவு துன்பத்தைத் தாமடைந்து, கொடிய விஷமானது தலைக்கேறினதுபோல மனதில் துயரமானது அதிகரித்து இங்கு இப்பழியானது இவ்வண்ணம் நேரிட்ட தென்று வருத்தப்படுவார்; இரங்குவார்;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏங்குவார்; எனது செங்கோலானது (மிகவும்) நன்றாயிருக்கின்ற தென்பார்; மனங்கலங்குவார்; (இதற்குப் பிராயச்சித்தஞ் செய்வோமென்று) தெளிவார்; (மறுபடியும் செய்யும் வகையின்னதென்று) தேறமாட்டார். - எ - று.

"மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தில் நீடும்
என்னெறி நன்றால்" என்னும் "என்செய்தால் தீரும்" என்னும்
தன்னிளங் கன்று காணாத் தாய்முகங் கண்டு சோரும்
அந்நிலை அரசன் உற்ற துயரம்ஓர் அளவிற் றன்றால். **33**

(இ - ள்.) நிலைபெற்ற ஆன்மகோடிகளைப் பாதுகாத்து, பூமியைப் பகையரசர்களுக்குப் பொதுவாயிருத்தலினின்றும் நீக்கி, தருமவழியில் நீடித்திருக்கின்ற என்னுடைய அரசாட்சி யானது நன்றாயிருக்கின்றதென்று சொல்லுவார்; (இப்பசுங்கன் றின்கொலை) என்ன பரிகாரஞ் செய்தால் நீங்குமென்பார்; தனது இளங்கன்றைக் காணாமல் வருந்துகின்ற தாய்ப்பசுவின் முகத்தைப் பார்த்துச் சோர்வடைவார்; அச்சமயத்தில் அவ்வரசர் பெருமானடைந்த துன்பமானது இவ்வளவென்று அளவு சொல்லக் கூடாததாயிருந்தது. - எ - று.

மந்திரிகள் அதுகண்டு மன்னவனை அடிவணங்கிச்
"சிந்தைதளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றால்
கொந்தலர்தார் மைந்தனைமுன் கோவதைசெய் தார்க்குமறை
அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம்" என்றார். **34**

(இ - ள்.) அப்படி விசனப்படுகின்ற மனுச்சோழரது துன்பத்தை மந்திரிகள் பார்த்து அவரது பாதத்தில்வணங்கி (எமது அரசே! நீர்) மனந்தளர்வது இப்பழிக்குப் பரிகாரமாக மாட்டாது; (ஆதலால்) கொத்தாகிய மாலையைத்தரித்த (உம்முடைய) புத்திரனை முன்னாளில் பசுக்கொலை செய்தவர் களுக்குப் பிராயச்சித்தஞ் செய்யும்படியாக வேதங்களை யுணர்ந்த பிராமணர்களால் விதிக்கப்பட்ட முறைமையின் வழியே பிராயச்சித்தஞ் செய்யும்படி கட்டளையிடுவதே தருமமென்று சொன்னார்கள். - எ - று.

"வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை இழந்தலறும் கோவுறுநோய் மருந்தாமோ?
இழக்கின்றேன் மைந்தனைஎன் றெல்லீருஞ் சொல்லியஇச்
சழக்கின்று நானிசைந்தால் தருமந்தான் சலியாதோ?" **35**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) (மந்திரிகளே! கோவதை செய்தவர்களுக்கு பிராமணர்கள் மூலமாகப் பிராயச்சித்தஞ்செய்து கொள்வது) உலகவழக்கமென்று நீங்கள் சொன்னால் அப்பிராயச் சித்தமானது தன் இளங்கன்றை யிழந்து மனம்வருந்தி அலறு கின்ற பசுவடைந்திருக்கின்ற துன்பமாகிய நோய்க்கு மருந் தாகுமோ? (அதானல்) நான் புத்திரனை யிழந்துவிடுகிறே னென்று நீங்களெல்லோருஞ் சொல்லுகின்ற இக்குற்றம் பொருந்திய பரிகாரத்திற்கு நான் உடன்படுவேனானால் (என் விஷயத்தில்) தருமதேவதையானது சலிப்பை யடையாதோ. எ-று

மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தான் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ? 35

(இ - ள்.) பெரிய பூமிக்கு அரசனாயிருக்கின்றவன் நிலை பெற்ற ஆன்மகோடிகளைக் காக்குங்காலத்தில் அவ்வுயிர்களுக்கு இடையூறாகத் தன்னாலவது, தன்பரிசனங்களாலாவது, கெடுதியை விளைக்கின்ற பகைவர்களாலாவது, திருடர்களாலா வது, பிறவுயிர்களாலாவது உண்டாகிய ஐந்து பயத்தையும் நீக்கித் தருமத்தை வழுவாமல் பரிபாலனம்பண்ணுகின்ற வனன்றோ? - எ - று.

என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செயஇசைந்தே
அன்னியன்ஓர் உயிர்கொன்றால் அவனைக்கொல் வேனானால்
தொன்மனுநூல் தொடைமனுவால் துடைப்புண்ட தெனும்வார்த்தை
மன்னுலகில் பெறமொழிந்தீர்! மந்திரிகள்! வழக் கென்றான். 37

(இ - ள்.) என் புத்திரனானவன் செய்த (இப்பசுக்கொலை யாகிய) பாதகத்திற்கு (உயிர்க்கொலை செய்யாமல்) பெரிய பிராயச்சித்தங்கள் செய்யும்படியாக வுடன்பட்டு, பின்பு அன்னியனொருவன் ஒருயிரைக் கொன்றால் (அதற்கும் பிராயச் சித்தஞ் செய்யாமல்) அவனைக் கொலைசெய்வேனானால், பழமையாகிய மனுநூலில் விதித்த ஒழுக்கமானது இம்மனுச் சோழனால் நீக்கப்பட்டது என்னும் பழிமொழியானது நிலைபெற்ற வுலகத்தில் வழங்கும்படியாகச் சொன்னீர்கள்; (இப்படிச் சொல்வது) மந்திரிகள் வழக்கமென்று சொன்னார். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றரசன் இகழ்ந்துரைப்ப எதிர்நின்ற மதி அமைச்சர்
"நின்றநெறி உலகின்கண் இதுபோல்முன் நிகழ்ந்ததால்
பொன்றுவித்தல் மரபன்று மறைமொழிந்த அறம்புரிதல்
தொன்றுதொடு நெறியன்றோ? தொல்நிலங்கா வல!" என்றார். 38

(இ - ள்.) இவ்விதமாக மனுச்சோழர் தமதுமந்திரிகளை நிந்தித்துச் சொல்ல, அவ்வரனுக்கெதிரே நிற்கின்ற புத்திசாலி களாகிய மந்திரிகள், நிலைபெற்ற தரும சாஸ்திரவிதிப்படி நடக்கின்ற இவ்வுலகத்தில் இதுபோலப்பசுக்கொலைகள் முன்பு நடந்திருத்தலால் அதுகாரணமாக அப்புதல்வனைக் கொல்லு தல் முறைமையல்ல; (அதேனென்றால்) வேதத்திற் சொல்லிய படியே பிராயச்சித்தஞ்செய்வது வெகு காலமாக அனுஷ்டித்து வருகின்ற விதியன்றோ? பழமையாகிய உலகத்தைக் காக்கின்ற அரசனே என்றார்கள். - எ - று.

அவ்வண்ணம் தொழுதுரைத்த அமைச்சர்களை முகம் நோக்கி
மெய்வண்ணந் தெரிந்துணர்ந்த மனுவென்னும் விறல்வேந்தன்,
இவ்வண்ணம் பழுதுரைத்தீர்" என் றெரியின் இடைத்தோய்ந்த,
செவ்வண்ணக் கமலம் போல் முகம்புலர்ந்து செயிர்த்துரைப்பான். 39

(இ - ள்.) நீதியினுண்மையை இப்படிப்பட்ட தென்று ஆராய்ந்தறிந்த மனு என்னும் பெயரையுடைய வல்லமை பொருந்திய சோழராஜாவானவர் அப்படி வணங்கிச்சொல்லிய மந்திரிகளின் முகத்தைப் பார்த்து, (உயிர்க்கு உயிர்ப்பழி வாங்கவேண்டுமென்று என்னாற் சொல்லப்பட்ட தருமநெறியை நீங்கள்) இவ்வாறு பழுதுபடச் சொன்னீர்களென்று நெருப்பி லிட்ட சிவந்த நிறத்தையுடைய தாமரைமலரைப் போல முகம்வாடிக் கோபித்துச் சொல்லுவார். - எ - று.

"அவ்வுரையில் வருநெறிகள் அவைநிற்க அறநெறியின்
செவ்வியஉண் மைத்திறம்நீர் சிந்தைசெயா துரைக்கின்றீர்
எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித் தாம் இடராமல்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி எறிந்துவிழுந் தது?" விளம்பீர். 40

(மந்திரிகளே!) நீங்கள் சொல்லுகின்ற அவ்வேதவாக்கியங் களில் தோற்றுகின்ற பிராயச்சித்த விதிகள்நிற்க, தருமவழி யினது செம்மையாகிய உண்மைத்திறத்தை நீங்கள் மனதிற் (கொஞ்சமுங்) கவனியாமல் சொல்லுகின்றீர்கள்; முன் எந்தத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேசத்திலே எந்தப்பசுவானது (கன்றை யிழந்ததனாலுண்டாகிய) இப்படிப்பட்ட துன்பத்தினால் பெருமூச்சுவிட்டழுது ஆராய்ச்சி மணியை யடித்து விழுந்தது சொல்லுங்கள். - எ - று.

"போற்றிசைத்துப் புரந்தரன்மால் அயன் முதலோர் புகழ்ந்திறைஞ்சு,
வீற்றிருந்த பெருமானார் மேவியுறை திருவாரூர்த்,
தோற்றமுடைய உயிர்கொன்றான் ஆதலினால் துணிபொருள்தான்
ஆற்றவுமற் றவற்கொல்லும் அதுவேயாம் எனநினைமின்" 41

(இ - ள்.) தேவேந்திரன், விஷ்ணு, பிரமன் முதலாகிய தேவர்கள் போற்றிசெய்து புகழ்ந்து வணங்கத் திருகயிலாயத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் (தமது பூரணாமிசத்துடனே) எழுந்தருளியிருக்கின்ற திருவாரூரிலே பிறந்த உயிரைக் கொன்றான்; ஆகையால், அதற்குத் துணிந்து செய்யவேண்டிய பிராயச்சித் தமாவது மிகவும் அவனைக் கொல்லுவதேயாகு மென்று நினையுங்கள். - எ - று.

எனமொழிந்து"மற்றிதனுக் கினியிதுவே செயல்இவ்ஆன்
மனம்அழியுந் துயர்அகற்ற மாட்டாதேன் வருந்தும்இது
தனதுறுபேர் இடர்யானும் தாங்குவதே கருமம்" என
அனகன்அரும் பொருள்துணிந்தான் அமைச்சரும் அஞ்சினர்அகன்றார். 42

(இ - ள்.) என்று இவ்விதமாக மனுச்சோழர் மந்திரிகளுக்குச் சொல்லி இனிப் பசுக்கொலைக்குப் பதிலாக இவனைக் கொல்வதே தகுந்த செயலாகும். (அதேனென்றால்) இப்பசு வானது மனம் வருந்துகின்ற துன்பத்தை நீக்கமாட்டாதவனாகிய யானும், வருத்தப்படுகின்ற இப்பசுவினது பெருந்துன்பத்தைப் போலப் புத்திரனை யிழந்து அதனால் துன்பமடைவதே தகுதியென்று அம்மனுநீதிச்சோழர் அவ்வரிய செய்கையைச் செய்யத் துணிந்தார்; (அதைக்கேட்ட) மந்திரிகளும் அச்சப்பட்டு அவ்விடத்தினின்றும் நீக்கித் தூரத்திற் சென்றார்கள். - எ - று.

மன்னவன்தன் மைந்தனைஅங் கழைத்தொருமந் திரிதன்னை
"முன்னிவனை அவ்வீதி முரண்தேர்க்கால் ஊர்க" என
அன்னவனும் அதுசெய்யா தகன்றுதன்ஆ ருயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறுகணைந்தான். 43

(இ - ள்.) மனுச்சோழர் தம்முடைய புத்திரனை அங்கு வரவழைத்து ஒரு மந்திரியைப் பார்த்து இப்புத்திரனை முன்னே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இப்பசுவின்கன்றிறந்த) அவ்வீதியிலேயே வலிய தேர்க்காலி லிட்டுத் தேரை நடத்தக்கடடவையென்று கட்டளையிட, அந்த மந்திரியும் அப்படிச்செய்ய மனமில்லாமல், அவ்விடத்தினின் றும் நீங்கித் தன்னுடைய அருமையாகிய உயிரைவிட்டு இறக்க, (அதைக்கேட்ட மனுச்சோழரானவர்) தம்முடைய குலத்திற்குரிய புத்திரனைத் தாமே அழைத்துக் கொண்டு பசுவின் கன்றிறந்த வீதிக்குப் போயினார். - எ - று.

ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான்என் பதும்உணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ?மற் றெளிதோதான். **44**

(இ - ள்.) மனுச்சோழரானவர் தம்முடைய குலத்திற்குரிய அரசாட்சிசெய்வதற்கு ஒரு புத்திரன்தா னிருக்கின்றானென்பதை நினையாமல், தருமத்தின் வழியே நடப்பது முறைமையென்று கருதி, தம்முடைய புதல்வனது மார்பில் தமது தேர்ச் சக்கர மானது பொருந்தும்படியாகத் தேரைநடத்தினார்; (ஆதலால்) அருமையாகிய தேவாமுதத்தைப்போலும் (சுகத்தைக் கொடுக்கின்ற) அரசாட்சியானது அருமையானதோ? அல்லது இலேசானதோ? - எ - று.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழுநின்றான் வீதிவிடங் கப்பெருமான். **45**

(இ - ள்.) உயிர்களின்மேல்வைத்த தண்ணருளாகிய வெள்ளைக் குடையினையுடைய மனுச்சோழரது செய்கையைக் கண்டு சகிக்காதவர்களாய்ப் பூமியிலுள்ளவர்கள் கண்ணீராகிய மழையைச் சொரிந்தார்கள்; தேவர்கள் புஷ்பமாரி பொழிந் தார்கள்; அப்பொழுது அம்மனுச்சோழரது கண்ணுக்கெதிரே அழகிய திருவீதியில் இளமைபொருந்திய ரிஷபவாகனத்தின் மேல் தேவர்கள் சூழ்ந்து வணங்கும்படி வீதிவிடங்கப் பெருமானாகிய தியாகேசர் காட்சிகொடுத்தருளினார்.

சடைமருங்கில் இளம்பிறையும் தனிவிழிக்குந் திருநுதலும்,
இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்,
புடைநெருங்கும் பெருமை யும்முன் கண்டரசன் போற்றிசைப்ப,
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான். **46**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) சடையினிடத்தில் விளங்குகின்ற மூன்றாம்பிறைச் சந்திரனையும், தனிமையாக ஒவ்வோர் காலத்தில் விழிக்கின்ற அக்கினிக்கண்பொருந்திய அழகிய நெற்றியினையும், இடப் பாகத்தில் பார்வதியாரையும், எவ்விடங்களிலும் பூதகணங்கள் நெருங்கியிருக்கின்ற பெருமையினையும் மனுச்சோழர் தமக்கு எதிரே கண்டு துதித்து நிற்க, ரிஷபவாகனரூடராகிய அவ்வீதி விடங்கப்பெருமானரும், வல்லமைபொருந்திய அச்சோழருக்குத் திருவருள் புரிந்தார். - எ - று.

அந்நிலையே உயிர்பிரிந்த ஆன்கன்றும் அவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியும் உடன்எழலும்
இன்னபரி சானான்என் றறிந்திலன்வேந் தனும்யார்க்கும்
முன்னவனே முன்நின்றால் முடியாத பொருளுளதோ? 47

(இ - ள்.) அப்படிக் காட்சிகொடுத்தபொழுதே உயிர்விட் டிறந்ததுகிடந்த பசுவின் கன்றும், அந்த மனுச்சோழருடைய அரசாட்சிக்குரிய ஒப்பற்ற புத்திரனும், (அப்புத்திரனுக்காகத் தன்னுயிர்விட் டிறந்த) மந்திரியும் உடனே உயிர் பெற்றெழுந் திருக்கவும், அதைக்கண்ட மனுச்சோழரும் தமக்குண்டாகிய ஆநந்தத்தினால் தாம் இத்தன்மையுடையவரென்றறியாத வராயினார். எப்படிப்பட்டவர்களுக்கும் முதல்வராகிய சிவபெருமானே முன்னிற்பாரானால், அவரால் முடியாத பொருள்களும் உண்டோ? (இல்லை.) - எ - று.

அடிபணிந்த திருமகனை ஆகமுற எடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயரம் நீங்கினான் நிலவேந்தன்
மடிசுரந்து பொழிதீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பருவரல்நீங் கியதன்றே. 48

(இ-ள்.) பூமியை அரசாட்சி செய்கின்ற மனுச்சோழரானவர் தம்முடைய பாதங்களில் விழுந்து வணங்கின அழகிய புத்திரனை மார்பில் பொருந்த எடுத்துத் தழுவி மிகவும் மகிழ்ச்சியடைந்து, கொடிய துன்பத்தினின்றும் நீங்கினார், மடியானது சுரந்து பொழிகின்ற மதுரம்பொருந்திய பாலை உயிர்பெற்றெழுந்த இளங்கன்றும் சந்தோஷித்து உண்டு அதனால் பூமியை நனைக்க, கன்றிழந்த காரணமாக வந்த தாய்ப்பசுவும் தனது துன்பத்தினின்றும் நீங்கினது. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொன்தயங்கு மதிலாரூர்ப் பூங்கோயில் அமர்ந்தபிரான்
வென்றிமனு வேந்தனுக்கு வீதியிலே அருள்கொடுத்துச்
சென்றருளும் பெருங்கருணைத் திறங்கண்டு தன்அடியார்க்(கு)
என்றும்எளி வரும்பெருமை ஏழுலகும் எடுத்தேத்தும். 49

(இ - ள்.) பொன்மயமாக விளங்குகின்ற மதில்சூழ்ந்த திருவாரூரில் பூங்கோயிலில் எழுந்தருளி யிருக்கின்ற வீதி விடங்கப் பெருமான் வெற்றிபொருந்திய மனுச்சோழருக்கு அவ்வீதியிலே காட்சிகொடுத்தருளி மறைந்தருளிய பெருங் கருணைத்திறத்தைக் கண்டு, தம்முடைய அடியார்களுக்கு எக்காலத்திலும் எளிதாக வந்து அனுக்கிரகஞ்செய்யும் பெருமையைக் குறித்து ஏழுலகத்தாரும புகழ்வார்கள். - எ - று.

பூங்கோயிலென்பது - ஆலயத்தின் திருப்பெயர்.

இனையவகை அறநெறியில் எண்ணிறந்தோர்க் கருள்புரிந்து
முனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர்மேல்
புனையும்உரை நம்மளவில் புகலலாந் தகைமையதோ?
அனையதனுக் ககமலராம் அறவனார் பூங்கோயில். 50

(இ - ள்.) இவ்விதமாகத் தருமவழியில் அளவில்லாத அடியார்களுக்குத் திருவருள் புரிந்து வீதிவிடங்கப்பெருமான் மகிழ்ச்சியோடு எழுந்தருளியிருக்கப் பெற்றுள்ளதாகிய பழமை பொருந்திய திருவாரூரைக் குறித்துப் புகழ்ந்து சொல்லுஞ் சிறப்பானது நம்மால் சொல்லப்படுந் தகுதியுடையதோ? அப்படிப்பட்ட திருநகரத்திற்குச் சிவபெருமான் எழுந்தருளியிருக் கின்ற பூங்கோயிலனாது இதயகமலம்போல் இருக்கின்றது. எ-று.

திருவாரூர்ச்சிறப்பு முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. திருக்கூட்டச்சிறப்பு

பூத நாயகர் புற்றிடங் கொண்டவர்
ஆதி தேவ ரமர்ந்தபூங் கோயிலிற்
சோதி மாமணி நீள்சுடர் முன்றில்சூழ்
மூதெ யில்திரு வாயில்முன் னாயது. 1

(இ - ள்.) பூதகணங்களுக்கு நாயகரும், புற்றினை யிடமாகக் கொண்டருளியவரும், முதற்கடவுளும் ஆகிய சிவபெருமனார் எழுந்தருளியிருக்கின்ற பூங்கோயிலினிடத்தில், பிரகாசிக்கின்ற மாணிக்கங்களின் மிகுந்த கிரணங்களையுடைய திருமுற்றத்தைச் சூழ்ந்த பழய மதில்கள் பொருந்திய திருவாயிலின் முன்னே யுள்ளது; (அது யாதென்றால்,) - எ - று.

பூவார் திசைமுக னிந்திரன் பூமிசை
மாவா ழகலத்து மான்முதல் வானவர்
ஓவா தெவரு நிறைந்துறைந் துள்ளது
தேவா சிரிய னெனுந்திருக் காவணம். 2

(இ - ள்.) தாமரைமலரில் இருக்கின்ற பிரமதேவனும், தேவேந்திரனும், அம்மலரில் வசிக்கும் இலட்சுமியானவள் வாழ்கின்ற மார்பினையிடைய விஷ்ணு முதலாகிய தேவர்களு மாகிய எல்லாரும் விட்டுநீங்காமல் நிறைந்து வசிக்கப் பெற்றுள்ளதாகிய தேவாசிரியனென்னும் திருப்பெயரையுடைய அழகிய மண்டபம்.

அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றொளி யால்நிறை தூய்மையால்
புரந்த அஞ்செழுத் தோசை பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது. 3

(இ - ள்.) (அத்தேவாசிரியமண்டபமானது) பிறவித் துன்பத்தை யொழித்த சிவனடியார்கள் திருமேனியில் தரித்த விபூதியின் பிரகாசத்தினாலும், நிறைந்த பரிசுத்தத்தினாலும், (தன்னை உச்சரித்தவர்களைக்) காப்பாற்றுதற்குரிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதுதலினாலுண்டாகின்ற ஓசையானது பொலிந்து தோன்றுதலினாலும் விசாலமாகிய ஆயிரந் திருப்பாற்கடலை யொத்துள்ளது - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகில காரணர் தாள்பணி வார்கள்தாம்
அகில லோகமும் ஆளற் குரியர்என்(று)
அகில லோகத்து ளார்கள் அடைதலின்
அகில லோகமும் போல்வ ததனிடை. **4**

(இ - ள்.) சர்வகாரணமாகிய சிவபெருமானது திருவடியை வணங்குகின்ற அடியார்கள் எல்லாலவுலகங்களையும் (தமக்குச் சொந்தமாக) ஆளுதற்குரியவர்கள் என்று கருதி, (அக்கடவுளை வணங்கும்பொருட்டு) எல்லாவுலகத்திலுள்ளவர்களும் அதனிடையில் சேர்ந்து வசித்திருப்பதனால் (அத்தேவாசிரியமண்டபமானது) சர்வலோகத்தையும் ஒத்திருந்தது. - எ - று.

அத்தர் வேண்டிமுன் ஆண்டவர் அன்பினால்
மெய்த்த ழைந்து விதிர்ப்புறு சிந்தையார்
கைத்தி ருத்தொண்டு செய்கடப் பாட்டினார்
இத்தி றத்தவர் அன்றியும் எண்ணிலார். **5**

(இ - ள்.) சிவபெருமான் தாமே விரும்பி முன் அடிமை கொள்ளப்பட்டவர்களும், (அக்கடவுளது திருவருளைப் பெறவேண்டுமென்னும்) அன்பினால் தேகம்பூரித்து இளகியிருக்கின்ற திருவுள்ளத்தையுடையவர்களும், கைகளினாற் செய்யுந் திருத்தொண்டுகளைச் செய்தலே உறுதிப்பாடாகவுடையவர்களுமாகிய இத்தகைய பத்தியுடையவர்களன்றியும் வேறுவகையால் அன்புசெலுத்துகின்ற அடியார்களும் (அம்மண்டபத்தில்) அநேகரிருக்கின்றனர். - எ - று.

மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசி னால்எத் திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார். **6**

(இ - ள்.) களங்கமில்லாத ருத்திராக்ஷமணிகள் விளங்குகின்ற திருமேனியின்மேல் தரிக்கின்ற விபூதியைப் போலத் தமதுள்ளத்திலும் பரிசுத்தத்தையுடையவர்கள்; (தமது சிவஞானமாகிய) பிரகாசத்தினால் எந்தத் திக்குகளையும் விளங்கச்செய்தவர்கள்; இப்படிப்பட்டவர்களென்று யாவராலும் அளவிட்டுச் சொல்லப்படாத பெருமையினால் விளங்குகின்றவர்கள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறிநின்றார்
கோதி லாத குணப்பெருங் குன்றனார். 7

(இ - ள்.) ஐந்து பூதங்களும் தத்தம் நிலையினின்று மாறினகாலத்திலும் பார்வதியாரை இடப்பாகத்திலுடைய சிவபெருமானது தாமரைமலர்போன்ற திருவடிகளை மறவாத வர்கள்; சதாகாலமுந் துதிசெய்து கொண்டிருக்கின்ற அன்பினது உறைப்பின் வழியே நின்றவர்கள்; குற்றமற்றகுணங் களினால் பெரியமலையை ஒத்தவர்கள். - எ - று.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார். 8

(இ-ள்.) பொருளிழத்தலால் வருங் கெடுதியும், அப்பொருள் வளர்தலால் வரும் ஆக்கமும் ஒழிந்த அருட்செல்வத்தை யுடையவர்கள்; ஓட்டையும் செம்பொன்னையும் (உயர்வுதாழ்வு கருதாமல்) சமமாகப் பார்க்கின்றவர்கள்; தம்மிடத்துத் தோன்று கின்ற அன்பினால் சிவபெருமானை வணங்குவதேயல்லாமல் மோக்ஷத்தையும் விரும்பாத அன்பின் உறுதியினால் விளங்கு கின்வர்கள். - எ - று.

ஆரம் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணிஅல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ? 9

(இ-ள்) தரிக்கும் ஆரமானது உருத்திராக்ஷகண்டிகையேயாம்; உடுக்கும்வஸ்திரமுங் கந்தையேயாகும்; தமக்குப் பெரிதாக நினைத்துச்செய்து சிவபெருமானது திருப்பணியேயல்லது வேறொருதொழிலு மில்லாதவர்கள்; சாந்தமாகியபேரன்பினை யுடையவர்கள்; கிடைத்தவரையில் சந்தோஷிப்பதேயன்றி ஒன்றுங்குறையில்லாதவர்கள்; (அப்படிப்பட்ட அடியார்களின்) பத்தியின் வலிமையானது என்னால் அளவுபடுத்திச் சொல்லுந் தகுதியையுடையதோ? - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டு மாறு விருப்புறும் வேடத்தர்
தாண்ட வப்பெரு மான்தனித் தொண்டர்கள்
நீண்ட தொல்புக ழார்தம் நிலைமையை
ஈண்டு வாழ்த்துகேன் என்னறிந் தேத்துகேன். 10

(இ - ள்.) தங்கள் தங்களுக்கு வேண்டியபடியே விரும்பித் தரித்தக்கொள்ளுகின்ற பல திருவேடங்களை யுடையவர்களும், திருநடனஞ்செய்தருளுகின்ற தியாகேசரது ஒப்பற்ற திருத் தொண்டர்களும், நீடித்த பழமைபொருந்திய புகழினை யுடையவர்களும் ஆகிய அடியார்களின் அன்பின்தன்மையை இப்பொழுது துதிக்கத் தொடங்கிய யான் அவரது பெருமைகளில் எதை அறிந்து எடுத்துத்துதிப்பேன். - எ - று.

இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான்
அந்தம் இல்புகழ் ஆலால சுந்தரன்
சுந்த ரத்திருத் தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ணம் உரைசெய்வோம். 11

(இ - ள்.) இத்தகைய மகத்தாகிய தவத்தினையுடைய அடியார்களின் திருக்கூட்டத்தைக் குறித்து, எமது பெருமானாகிய அளவில்லாத புகழினையுடைய ஆலாலசுந்தரானவர் அழகிய “திருத்தொண்டத்தொகை” என்னும் தமிழ்ப்பதிகத்தைத் திருக்கயிலாயத்தினின்றும் இந்நிலவுலக்தில் திருவவதாரஞ் செய்து பாடியருளிய வகையினைச் சொல்லத் தொடங்குகின்றோம். - எ - று.

திருக்கூட்டச்சிறப்பு முற்றிற்று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. தடுத்தாட்கொண்டபுராணம்

கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் வைத்த
அங்கணர் ஓலைகாட்டி ஆண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதிஇரு மருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப் பாடி நாடு. 1

(இ - ள்.) கங்காநதியையும், பிறைச்சந்திரனையும், சர்ப்பத்தையும், கொன்றைமாலையையும் திருமுடியில் தரித்தருளிய சிவபெருமான் முறி யோலையைக் காட்டி அடிமைகொள்ளப் பெற்ற ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு ஜனனதேசமாவது, மாதர்களின் முகமாகிய குளிர்ந்த சந்திரனுடைய இரண்டு பக்கத்திலும் அவர் கண்களாகிய கெண்டைமீன்கள் ஓடிச் செவிகளைத் தாவுகின்ற திருமுனைப் பாடி நாடாகும். - எ - று.

பெருகிய நலத்தால் மிக்க பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவம் ஓங்க அருளினால் அவத ரித்த
மருவிய தவத்தால் மிக்க வளம்பதி, வாய்மை குன்றாத்
திருமறை யவர்கள் நீடும் திருநாவ லூராம் அன்றே. 2

(இ - ள்.) நிறைந்த பல வளங்களினால் மிகுந்திருக்கின்ற பெரிய அத்திரு முனைப்பாடி நாட்டில், அருமையாகிய வேதத்தின் சாரமாகிய சைவசமயமானது (உலகத்தில்) நிலை பெற்றோங்க, சிவபெருமானது திருவருளினால் (ஆலாலசுந்தரர்) திருவவதாரஞ் செய்தற்கிடமான மேன்மைபொருந்திய தவத்தினால் சிறந்த வளப்பத்தையுடைய பதியாவது, சத்தியந் தவறாத அழகிய பிராமணர்கள் மிகுந்திருக்கின்ற திருநாவலூ ராகும். - எ - று.

மாதொரு பாக னார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடைய னாருக்(கு)
ஏதமில் கற்பின் வாழ்க்கை மனைஇசை ஞானி யார்பால்
தீதகன் றுலகம் உய்யத் திருஅவ தாரம் செய்தார். 3

(இ - ள்.) உமாதேவியை இடப்பாகத்திலுடைய சிவபெருமானுக்கு வமிசபரம்பரையாக அபிஷேக பூசா நைவேத்திய முதலாகிய அகத்தடிமைத்தொண்டு செய்தொழுகுகின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகிசைவர் குலத்தில் பிறந்து மேன்மைபெற்றிருந்த சடைய நாயனார் என்பவருக்குக் குற்றமற்ற கற்பினையுடைய இல்வாழ்க்கைக்குரிய மனைவியாராகிய இசைஞானியாரிடத்தில் உலகத்தார் தீய நெறியினின்றும் நீங்கி மோக்ஷத்தையடையும் பொருட்டு (ஆலாலசுந்தரர்) ஒரு புத்திரராகத் திருவவதாரஞ் செய்தருளினார். - எ - று.

தம்பிரான் அருளி னாலே தவத்தினால் மிக்கோர் போற்றும்,
நம்பியா ரூரர் என்றே நாமமுஞ் சாற்றி மிக்க,
ஐம்படை சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டி சாத்திச்,
செம்பொன்நாண் அரையில் மின்னத் தெருவில் தேர் உருட்டு நாளில். 4

(இ - ள்.) சிவபெருமானுடைய திருவருளினாலே தவத்திற் சிறந்த பெரியோர்கள் ஒன்றாகச் சேர்ந்து அவருக்கு நம்பியாரூரரென்று நாமகரணஞ்செய்து, சிறப்பு மிகுந்த பஞ்சாயுதத்தையும் சிறுசதங்கையையும் முறையே மார்பிலும் கால்களிலும் தரித்து, அழகிய ரத்தினச் சுட்டியைச் சிரசிலணிந்து, செம்பொன்னாலாகிய அரைஞாணானது இடையில் விளங்க வீதியில் சிறுதேருருட்டி விளையாடுகின்ற நாள்களில் (ஒருநாள்.) - எ - று.

நரசிங்க முனையர் என்னும் நாடுவாழ் அரசர் கண்டு
பரவருங் காதல் கூரப் பயந்தவர் தம்பால் சென்று
விரவிய நண்பி னாலே வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற் கேற்ப அன்பினால் மகன்மை கொண்டார். 5

(இ - ள்.) அந்நாட்டில் அரசுசெய்து வாழ்கின்ற நரசிங்க முனையரென்னும் அரசரானவர் (அப்புத்திரரைப்) பார்த்து அவர்மேல் சொல்லுதற்கரிய ஆசையதிகரித்தலால் அவரது தந்தையாராகிய சடையநாயனாரிடத்திற்போய் முன்பு அவருக்குந் தமக்கு முண்டாயிருந்த சிநேகத்தினால் (அந்நம்பியாரூரரைத் தமக்கு அபிமானபுத்திரராகக்கொடுக்கக்) கேட்டுப் பெற்றுக்கொண்டு தங்கள் ராஜவமிசத்திற் பிறந்த சிறுகுழந்தைக் கொப்ப அன்போடு புத்திரராகக் கொண்டார்.

பெருமைசால் அரசர் காதற் பிள்ளையாய்ப் பின்னும்தங்கள்
வருமுறை மரபில் வைகி வளர்ந்துமங் கலஞ்செய் கோலத்(து)
அருமறை முந்நூல் சாத்தி அளவில்தொல் கலைகள் ஆய்ந்து
திருமலி சிறப்பின் ஓங்கிச் சீர்மணப் பருவஞ் சேர்ந்தார். 6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) (அந்நம்பியாரூரராகிய சந்தரமூர்த்திசுவாமிகள்) பெருமைபொருந்திய நரசிங்கமுனையரது அபிமானபுத்திரராய் அதன்பின்னுந் தங்கள் சாதியில் வழுவாத ஒழுக்கத்தை அனுஷ்டித்து வளர்ந்து மங்கலகரமாகிய உபநயனஞ் செய்யும் பருவத்தில் அருமையாகிய வேதவிதிப்படியே பூணூல் தரித்து, அதன் பின் அளவில்லதா வேதசாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்து, நிறைந்த செல்வச் சிறப்பினால் வளர்ந்து நன்மை பொருந்திய திருமணப்பருவத்தையடைந்தார்.

தந்தையார் சடைய னார்தம் தனித்திரு மகற்குச் சைவ
அந்தணர் குலத்துள் தங்கள் அரும்பெரும் மரபுக் கேற்ப
வந்ததொல் சிறப்பிற் புத்தூர்ச் சடங்கவி மறையோன் தன்பால்
செந்திரு அனைய கன்னி மணத்திறஞ் செப்பி விட்டார். 7

(இ - ள்.) தந்தையாராகிய சடையநாயனார் தம்முடைய ஒப்பற்ற செல்வப்புத்திரருக்கு ஆதிசைவப்பிராமணகுலத்தில் தங்களுடைய அருமையாகிய சிறந்த கோத்திரத்திற்கேற்ப வந்த சிறப்பினையுடையவராய்ப் புத்தூரில் வாழ்கின்ற சடங்கவி சிவசாரியரிடத்தில் இலட்சுமிக்கொப்பாகிய அவரது புத்திரி யைத் திருக்கலிணாஞ் செய்தவதற்காகக் கேட்டனுப்பினார். எ-று.

குலமுதல் அறிவின் மிக்கார் கோத்திர முறையும் தேர்ந்தார்
நலமிகு முதியோர் சொல்லச் சடங்கவி நன்மை ஏற்று
மலர்தரு முகத்தன் ஆகி மணம்புரி செயலின் வாய்மை
பலவுடன் பேசி ஒத்த பண்பினால் அன்பு நேர்ந்தான். 8

(இ - ள்.) இவர் இன்ன குலத்தினரென்று அறியும் சிறந்தவர் களும், அவர்களின் கோத்திரமுறைமையையும் நன்றாகத் தெரிந்தவர்களுமாகிய நன்மைபொருந்திய (தமது சுற்றத்தா ராகிய) விருத்தர்கள் சொல்ல, (அதைக்கேட்ட) சடங்கவிசிவா சாரியார் நன்மையாக அங்கீகரித்துக்கொண்டு முகமலர்ச்சியை யடைந்து விவாகஞ்செய்வதைக் குறித்துப் பேசவேண்டிய பல சங்கதிகளையும் பேசிமுடித்து எல்லாவகையிலும் ஒத்திருக்கின்ற தன்மையினால் (தம்முடைய புத்திரியைச் சுந்தரமூர்த்திசுவாமி களுக்குத் திருமணஞ்செய்துகொடுக்க) அன்புடனே உடன் பட்டார். - எ - று.

மற்றவன் இசைந்த வார்த்தை கேட்டவர் வள்ளல் தன்னைப்
பெற்றவர் தம்பால் சென்று சொன்னபின் பெருகு சிந்தை
உற்றதோர் மகிழ்ச்சி எய்தி மணவினை உவந்து சாற்றிக்
கொற்றவர் திருவுக் கேற்பக் குறித்து நாள்ஓலை விட்டார். 9

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அச்சடங்கவிசிவாசாரியர் தமது புத்திரியைக் கலியாணஞ்செய்து கொடுக்கச் சம்மதித்துச் சொல்லிய வார்த்தையைக் கேட்டவர்கள் சுந்தமூர்த்தி சுவாமிகளைப் பெற்ற தந்தையாராகிய சடைய நாயனாரிடத்திற்போய்ச் சொன்ன பின்பு முன்னமே மகிழ்ச்சியடைந்திருக்கின்ற மனத்தில் பின்னும் பொருந்திய பெருமகிழ்ச்சியையடைந்து, திருமணச்செயலைத் தம்முடைய சுற்றத்தாருக்குச் சந்தோஷத்தோடு சொல்லி, நரசிங்கமுனையருடைய செல்வத்திற் கேற்ப முகூர்த்தநாளை நிச்சயித்து யாவரும் வரும்படியாகத் திருமணவோலை யனுப்பினார். எ - று.

மங்கலம் பொலியச் செய்தமணவினை ஓலை ஏந்தி
அங்கயற் கண்ணி னாரும் ஆடவர் பலரும் ஈண்டிக்
கொங்கலர்ச் சோலை மூதூர் குறுகினார் எதிரே வந்து
பங்கய வதனி மாரும் மைந்தரும் பணிந்து கொண்டார். 10

(இ - ள்.) மங்கலகரமானது விளங்க எழுதிய திருமண வோலையை எடுத்துக்கொண்டு அழகிய கெண்டைமீனை யொத்த கண்களையுடைய மாதர்களும் பல புருஷர்களும் நெருங்கிவந்து மணம்பொருந்திய மலர்களையுடைய சோலை சூழ்ந்த புத்தூரை யடைந்தார்கள்; அப்பொழுது சடங்கவி சிவாசாரியரது உறவினராகிய) தாமரைமலர் போன்ற அழகிய முகத்தினையுடையமாதர்களும் மைந்தர்களும் அவர்களை எதிர்கொண்டுபோய் வணங்கி (அத்திருமணவோலையைப்) பெற்றுக்கொண்டார்கள். - எ - று.

மகிழ்ச்சியால் மணமீக் கூறி மங்கல வினைகள் எல்லாம்
புகழ்ச்சியால் பொலிந்து தோன்றப் போற்றிய தொழில ராகி
இகழ்ச்சியொன் றானும் இன்றி ஏந்துபூ மாலைப் பந்தர்
நிகழ்ச்சியின் மைந்தர் ஈண்டி நீள்முளை சாத்தி னார்கள். 11

(இ - ள்.) சந்தோஷத்தோடு திருக்கலியாணமென்று யாவரும் அறியும்படிச் சொல்லி அதற்குச் செய்யவேண்டிய சுபகாரியங்களெல்லாம் புகழோடு விளங்கித்தோன்றும்படிச் செய்துமுடித்து ஒன்றிலுங் குறைவில்லாமல் பூமாலைகளைக் கட்டியிருக்கின்ற திருமணப் பந்தலில் ஆதிசைவப் பிராமணர்கள் அன்போடு நெருங்கி நீண்டுவளர்ந்த முளைப்பாலிகை சாத்தினார்கள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மணவினைக் கமைந்த செய்கை மாதினைப் பயந்தார் செய்யத்
துணர்மலர்க் கோதைத் தாமச் சுரும்பணை தோளி னாரைப்
புணர்மணத் திருநாள் முன்னாட் பொருந்திய விதியி னாலே
பணைமுர சியம்ப வாழ்த்திப் பைம்பொன்நாண் காப்புச் சேர்த்தார். 12

(இ - ள்.) இப்படி விவாகச்சடங்கிற்குச் செய்யவேண்டிய காரியங்களைப் பெண்ணைப்பெற்றவராகிய சடங்கவி சிவா சாரியரும் அவரது பந்துக்களுஞ் செய்ய, வண்டுகள் மொய்க் கின்ற கொத்தாகிய மலர்மாலையைத் தரித்த திருத்தோள் களையுடைய சுந்தரமூர்த்திசுவாமிகளைத் திருக்கலியாண தினத் திற்கு முன்னாள் வேதவிதிப்படியே பருத்த முரசு முதலாகிய வாத்தியங்கள் சப்திக்க வாழ்த்துதல் செய்து பசும்பொன்னா லாகிய கங்கணத்தை அவர் கையிற்கட்டினார்கள். - எ- று.

மாமறை விதிவ ழாமன் மணத்துறைக் கடன்க ளாற்றித்
தூமறை மூதூர்க் கங்குல் மங்கலந் துவன்றி யார்ப்பத்
தேமரு தொடையன் மார்பன் திருமணக் கோலங் காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவ னுதயஞ் செய்தான். 13

(இ - ள்.) மகத்தாகிய வேதவிதிப்படியே விவாகத்திற்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து பரிசுத்தம்பொருந்திய வேதங்கள் ஒலிக்கின்ற பழமையாகிய அத்திருநாவலூரில் அன்று முன்னாளிரவில் மங்கலகரமான பலவாத்தியங்கள் ஆரவாரித் துக்கொண்டிருக்க, தேன்பொருந்திய மலர்மாலை யைத் தரித்த மார்பினையுடைய சுந்தரமூர்த்திசுவாமிகளது திருமணக்கோலத் தைக் காணும்படி ஆசை கொண்ட மன முடையவன் போலச் சூரியனுதயமானான். - எ - று.

காலைசெய் வினைகள் முற்றிக் கணிதநூற் புலவர் சொன்ன
வேலைவந் தணையும் முன்னர் விதிமணக் கோலம் கொள்வான்
நூலசைந் திலங்கு மார்பின் நுணங்கிய கேள்வி மேலோன்
மாலையுந் தாரும் பொங்க மஞ்சன சாலை புக்கான். 14

(இ - ள்.) அன்று காலையிற் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து முடித்துச் சோதிடசாஸ்திரிகள் ஏற்படுத்திய முகூர்த்த வேளை வருவதற்கு முன்னே பூணூலசைத்து விளங்குகின்ற மார்பினையுடையவரும், நுட்பமாகிய கேள்விகளில் சிறந்தவரு மாகிய சுந்தரமூர்த்திசுவாமிகள் விவாகவிதிக்குரிய திருமணக் கோலங் கொள்ளும்படி ரத்தினமாலையும், மலர்மாலையும் தமதுமார்பில் விளங்கத் திருமஞ்சனச்சாலைக்கு எழுந்தருளி னார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***வாசநெய் யூட்டி மிக்க மலர்விரை அடுத்த தூநீர்ப்
பாசனத் தமைந்த பாங்கர்ப் பருமணிப் பைம்பொன் திண்கால்
ஆசனத் தணிநீர் ஆட்டி அரிசனஞ் சாத்தி அன்பால்
ஈசனுக் கினியான் மேனி எழில்பெற விளக்கி னார்கள். 15***

(இ - ள்.) வாசனைபொருந்திய தயிலந் தேய்த்து மிகுந்த மணம் வீசுகின்ற மலர்களைப் பெய்திருக்கின்ற பரிசுத்தம் பொருந்திய நிரையுடைய பாத்திரத்தின் சமீபத்தில் வைத்த பருத்த ரத்தினங்களிழைத்த பசும்பொன்னாலாகிய வலியகால் களையுடைய ஆசனத்தில் உட்காரவைத்து அழகாக நீராட்டி, மஞ்சள் கலந்த கலவைப்பொடியைப் பூசி, அன்போடு சிவபெருமானுக்கு இனியவராகிய சுந்தர மூர்த்தி சுவாமிகளின் திருமேனியை (அவரது சுற்றத்தார்) அழகு பொருந்த ஸ்நானஞ் செய்வித்தார்கள். - எ - று.

***அகில்வரைத் தூப மேய்ந்த அணிகொள்பட் டாடை சாத்தி
முகில்நுழை மதியம் போலக் கைவலான் முன்கை சூழ்ந்த
துகில்கொடு குஞ்சி ஈரம் புலத்தித்தன் தூய செங்கை
உகிர்நுதி முறையில் போக்கி ஒளிர்நறுஞ் சிகழி ஆர்த்தான். 16***

(இ - ள்.) வாசனைபொருந்திய அகிற்புகை யூட்டிய அழகிய பட்டாடையை இடையில் தரித்து அலங்கரித்தலில் வல்லவ னாகிய ஒருவன் மேகத்தில் நுழைகின்ற சந்திரனைப்போலத் தன் முன்கையில் சுற்றிய வஸ்திரத்தினால் குடுமியின் ஈரத்தைப் புலர்த்தி அவரது பரிசுத்தம் பொருந்திய கைவிரல் நகத்தின் நுனியிலுள்ள அழுக்கை முறையே துடைத்து விளங்குகின்ற வாசனை பொருந்திய சிகையை முடித்தான். - எ - று.

கைவலான் ஆர்த்தான் எனக் கூட்டுக.

***தூநறும் பசுங்கர்ப் பூரக் சுண்ணத்தால் வண்ணப் போதில்
ஆனதண் பனிநீர் கூட்டி அமைத்தசந் தனச்சே றாட்டி
மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப்
பான்முறை முந்நூல் மின்னப் பவித்திரஞ் சிறந்த கையான். 17***

(இ - ள்.) (அவ்வலங்கரிப்போனால்) நல்ல மணம்பொருந்திய பச்சைக்கர்ப்பூரப் பொடியோடு பல வர்ணங்களையுடைய மலர்களாலுண்டான குளிர்ந்தபனி நீரை விட்டரைத்த சந்தனக் குழம்பால் பூசப்பட்டு, கஸ்தூரிக்குழம்பு கலந்த மங்கலகரமான கலவைச்சந்தனத்தைச் சாத்தப்பட்டு, விதிப்படி தரித்த பூணூலானது மார்பில் விளங்கப் பவித்திரஞ் சிறந்துவிளங்கு கின்ற கையையுடையவராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தூமலர்ப் பிணையல் மாலை துணர்இணர்க் கண்ணி கோதை
தாமம் என் றினைய வேறு தகுதியால் அமையச் சாத்தி
மாமணி அணிந்த தூய வளர்ஒளி இருள்கால் சீக்கும்
நாமநீள் கலன்கள் சாத்தி நன்மணக் கோலம் கொண்டான். 18

(இ - ள்.) பரிசுத்தம்பொருந்திய மலர்களால் பிணைக்கப் பட்ட பிணையல் மாலையும், பூங்கொத்துக்களாலாகிய கண்ணிமாலையும், பத்திமாலையும் என்று சொல் இடங்களில் பொருந்த அலங்கரித்து மாணிக்கங்களிழைத்த இருளை யோட்டத்தக்க பேரொளியையுடைய பெயர்பெற்ற ஆபரங் களைப் பூண்டு நல்லதிருமணக் கோலங் கொண்டார். - எ - று.

மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியா ரூரர் நாதன்
தன்னடி மனத்துட் கொண்டு தகுந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவிமேற் கொண்டு போந்தார். 19

(இ - ள்.) இராஜ சம்பந்தமான செல்வமும், தம்முடைய வைதிக சம்பந்தமான செல்வமும் விளங்க, நல்ல திருநாவலூ ரானது திருமணத்திற்குரிய விழாவைக் கொள்ள, சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானது திருவடிகளை மனதில் தியானித்து, சிறப்புப்பொருந்திய திருநீறணிந்துகொண்டு, பொன்னா பரணங்களினாலும், ரத்தினாபரணங்களினாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளதாகிய செல்வத்தைத்தரத்தக்க குதிரையின் மேலெழுந் தருளிச் சென்றார். - எ - று.

இயம்பல துவைப்ப எங்கும் ஏத்தொலி எடுப்ப மாதர்
நயந்துபல் லாண்டு போற்ற நான்மறை ஒலியின் ஓங்க
வியந்துபார் விரும்ப வந்து விரவினர்க் கின்பஞ் செய்தே
உயர்ந்தவா கனயா னங்கள் மிசைக்கொண்டார் உழைய ரானார். 20

(இ - ள்.) பலவகையான வாத்தியங்கள் முழங்கவும், எவ் விடங்களிலும் பாடகர்கூறுந் தோத்திரவோசை யுண்டாகவும், மாதர்கள் விரும்பிப் பல்லாண்டு கூறவும், நான்கு வேதங்களும் இசையோடு ஒலிக்கவும், விவாகத்தை வியந்துவந்து அவ்விடத் திற் கூடினவர்களுக்கு அவர்கள் விரும்பும்படி உபசாரஞ் செய்து (அச்சுந்தரமூர்த்திசுவாமிகளது) பரிஜனங்கள் யானை குதிரை முதலிய வாகனங்களிலும், சிவிகைகளிலும் ஏறிக்கொண் டார்கள். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மங்கல கீத நாத மறையவர் குழாங்க ளோடு
தொங்கலும் விரையும் சூழ்ந்த மைந்தரும் துவன்றிச் சூதும்
பங்கய முகையும் சாய்த்துப் பணைத்தெழுந் தணியில் மிக்க
குங்கும முலையி னாரும் பரந்தெழு கொள்கைத் தாகி. 21

(இ - ள்.) மங்கலகரமாகிய சங்கீதத்தைப் பாடுகின்ற பிராமணக் கூட்டத்தோடு மலர்மாலைகளையும் வாசனைத் திரவியங்களையுந் தரித்துக்கொண்ட யவ்வன புருஷர்களும், (இடைவெளியில்லாமல்) நெருங்கிச் சூதாடு கருவியையும் தாமரையரும்பையுந் தோற்கச் செய்து, பருத்து எழுந்து அழகினால் மிகுந்த குங்குமக் குழம்பைப்பூசிய ஸ்தனங்களை யுடைய மாதர்களும் அதிகரித்து வருகின்ற சிறப்பினையுடைய தாகி. - எ - று.

இதுமுத லிரண்டுபாடலுங் குளகம்.

அருங்கடி எழுந்த போழ்தின் ஆர்த்தவெள் வளைக ளாலும்
இருங்குழை மகரத் தாலும் இலங்கொளி மணிக ளாலும்
நெருங்கிய பீலிச் சோலை நீலநீர்த் தரங்கத் தாலும்
கருங்கடல் கிளர்ந்த தென்னக் காட்சியிற் பொலிந்த தன்றே. 22

(இ - ள்.) அருமையான திருமணமானது இவ்வாறெழுந்த சமையத்தில், முழங்கிய வெண்மைபொருந்திய சங்குவளையல் களினாலும், பெரிய மகரகுண்டலங்களினாலும், விளங்குகின்ற பிரகாசத்தையுடைய ரத்தினா பரணங்களினாலும், நெருங்கிய மயிற்பீலிக்கற்றைகளாகிய கருநிறத்தையுடைய சோலையினது வரிசைகளினாலும், (சிலேடைவகையால்) சூலுளைந்தலறுகின்ற சங்குகளினாலும், எதிரிலுள்ள பொருள்களை மோதுகின்ற பெரியமகரமீன்களினாலும், விளங்குகின்ற முத்துக்களினாலும், நெருங்கித் தழைத்த சோலைபோலக் கருநிறத்தையுடைய அலைகளினாலும் (அத்திருமணவெழுச்சியானது) கருங்கட லானது பெருக்கெடுத்துப் பிரவகித்ததுபோலப் பார்வைக்குப் பொலிவுற்றிருந்தது. - எ - று.

நெருங்குதூ ரியங்கள் ஏங்க நிரைத்தசா மரைகள் ஓங்கப்
பெருங்குடை மிடைந்து செல்லப் பிணங்குபூங் கொடிகள் ஆட
அருங்கடி மணம்வந் தெய்த அன்றுதொட் டென்றும் அன்பில்
வருங்குல மறையோர் புத்தூர் மணம்வந்த புத்தூ ராமால். 23

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) மிகுந்த பேரிகைமுதலாகிய வாத்தியங்கள் முழங்கவும், வரிசையாகப் பிடித்து வீசுகின்ற சாமரங்களும் மணிக்குஞ்சங்கள் கட்டிய பெருங்குடைகளுமாகிய இவைகள் நெருங்கிச் செல்லவும், விளங்குகின்ற அழகிய கொடிகளாடவும், அருமையாகிய திருமணக்கோலம் அவ்வூரில் வரப்பெற்றமை யால் அன்றுமுதற்கொண்டு எந்நாளும் அன்பினால் மிகுந்து வருகின்ற குலத்திற் சிறந்த ஆதிசைவப்பிராமணர்கள் வாழ்தற் கிடமாகிய புத்தூரானது மணம்வந்த புத்தூரெனப் பெயர் பெற்றது. - எ - று.

நிறைகுடம் தூபம் தீபம் நெருங்குபா லிகைகள் ஏந்தி
நறைமலர் அறுகு சுண்ணம் நறும்பொரி பலவும் வீசி
உறைமலி கலவைச் சாந்தின் உறுபுனல் தெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளல் மணம்எதிர் கொள்ள வந்தார். 24

(இ - ள்.) பூரண கலசங்களையும், தூபதீபங்களையும், நெருங்கிய முளைப்பா லிகைகளையும் கையிலேந்திக் கொண்டு, வாசனைபொருந்திய மலர்களும், அறுகும், கந்தப்பொடியும், நல்ல பொரியுமாகிய பல பொருள்களையும் வீசி, துளியாக மிகுந்த கலவைச்சந்தனத்தி னின்றுந் தெளிந்த நீரை வீதியில் தெளித்துப் பிராமண ஸ்திரீகள் சுந்தரமூர்த்திசுவாமிகளது திருமணக்கோலத்தை எதிர்கொள்ளும்படியாக வந்தார்கள். எ-று

கண்களெண் ணிலாத வேண்டுங் காளையைக் காண வென்பார்
பெண்களி லுயர நோற்றாள் சடங்கவி பேதை யென்பார்
மண்களி கூர வந்த மணங்கண்டு வாழ்ந்தோ மென்பார்
பண்களி நிறைந்த கீதம் பாடுவா ராடு வார்கள். 25

(இ - ள்.) (எதிர்கொள்ளும்படிவந்த பெண்களுள் சிலர்) இந்த மணமகனுடைய அழகைப்பார்பதற்கு அளவற்ற கண்கள் வேண்டுமென்பார்கள்; (சிலர்) சடங்கவி சிவாசாரியருடைய புத்திரியே (இம்மணமகனைத் திருக்கலியாணஞ்செய்து கொள்வதற்கு) மற்றைப் பெண்களைப் பார்க்கிலும் மிகுந்த தவஞ்செய்தவளென்பார்கள்; (சிலர்) உலகத்தார் மனமகி ழும்படி வந்த திருமணக்கோலத்தைக்கண்டு பெருவாழ் வடைந்தோ மென்பார்கள்; (சிலர்) இசைநிறைந்த சங்கீதங் களைப் பாடிக்கொண்டு ஆநந்தக் கூத்தாடுவார்கள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***"ஆண்டகை அருளி நோக்கின் வெள்ளத்துள் அலைந்தோம்" என்பார்,
"தாண்டிய பரியும் நம்பால் தகுதியின் நடந்த" தென்பார்,
"பூண்டயங் கிவனே காணும் புண்ணிய மூர்த்தி" என்பார்,
ஈண்டிய மடவார் கூட்டம் இன்னன இசைப்பச் சென்றார். 26***

(இ - ள்.) சிலர்) இம்மணமகனது கிருபாநோக்கமென்னும் பெரிய வெள்ளத்தில் தடுமாறினோமென்பார்கள்; (சிலர்) வேகமாகத் தாண்டிச்செல்லுகின்ற குதிரையும் (நமது எண்ணத் திற்கேற்ப) நம்மிடத்தில் மெல்ல வருகின்றதென்று சொல்லு வார்கள்; (சிலர்) பலவகையாகிய ஆபரணங்களும் விளங்கப் பெற்ற இம்மணமகனே புண்ணியசொரூபி யென்பார்கள்; திருமணக்கோலத்தை யெதிர்கொள்ள நெருங்கியபெண்களின் கூட்டம் இவ்விதமாகச் சொல்லிக்கொள்ளும்படியாகச் சுந்தமூர்த்திசுவாமிகள் எழுந்தருளினார். - எ - று.

***வருமணக் கோலத் தெங்கள் வள்ளலார் தெள்ளும் வாசத்
திருமணப் பந்தர் முன்பு சென்றுவெண் சங்கம் எங்கும்
பெருமழைக் குலத்தின் ஆர்ப்பப் பரிமிசை இழிந்து பேணும்
ஒருமணத் திறத்தின் அங்கு நிகழ்ந்தது மொழிவேன் உய்ந்தேன். 27***

(இ - ள்.) இவ்விதமாகத் திருமணக்கோலங்கொண்டுவந்த எங்கள் அருள் வள்ளலாகிய சுந்தரமூர்த்திசுவாமிகள் சிறந்த வாசனை வீசுகின்ற திருமணப்பந்தலுக்கு முன்னே எழுந்தருளி, எவ்விடத்திலும் வெண்மைபொருந்திய சங்கங்கள் மேகக்கூட்டம் போல முழங்கக் குதிரையினின்றும் கீழே இறங்கித்தாம் விரும்பிச்செய்கின்ற ஒப்பற்ற விவாகமுகூர்த்தசமையத்தில், அவ்விடத்தில் நடந்த சங்கதியைச் சொல்லத் தொடங்குவேன்; இச்சரிதையைப் பாடத்தொடங்கியதால் அருள்பெற்றுய்ந்த யான். - எ - று.

***ஆலுமறை சூழ்கயிலை யின்கண்அருள் செய்த
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுற எழுந்துமிகு கீழுற அகழ்ந்து
மாலும்அய னுக்கும் யார்ஒருவர் வந்தார். 28***

(இ-ள்.) வேதங்கள் சூழ்ந்து முழங்குகின்ற திருக்கயிலாசத்தில் (ஆலாலசுந்தரருக்கு) அருளிச்செய்த சிறந்த திருவாக்கின்படியே (அவரது அவதாரமாகிய சுந்தரமூர்த்திசுவாமிகளை) வழித் தொண்டாய்த் திருமணஞ்செய்யாது தடுத்து அடிமை கொள்ளும் பொருட்டு, அன்னரூபமாய் மேற்கொண்டு பறந்தும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வராகரூ பமாய் மிகக் கீழாகப் பூமியைத் தோண்டிச்சென்றும், (அடியையும் முடியையும் காணாமல்) மயங்கி விஷ்ணு பிரமன் என்னும் இருவருக்கும் அரியவராகிய சிவபெருமான் அவ் விடத்தில் ஒருதிருமேனி கொண்டெழுந்தருளிவந்தார்.

கண்ணிடை கரந்தகதிர் வெண்படம் எனச்சூழ்
புண்ணிய நுதல்புனித நீறுபொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதென மீதே
வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க. 29

(இ - ள்.) நெற்றிக்கண்ணைச் சூழ்ந்து மறைத்த வெண்மை பொருந்திய வஸ்திரம்போலப் புண்ணியமயமாகிய பரிசுத்தம் பொருந்திய விபூதியானது நெற்றியில் விளங்கவும், குளிர்ச்சி பொருந்திய இளம்பிறையானது முதிர்ந்த அதனுடைய கிரணங்கள் சாய்வதுபோல உச்சியில் முடித்த வெள்ளிய நரைமுடியானது இடையில் விழுந்து அசையவும். - எ - று.

காதிலணி கண்டிகை வடிந்தகுழை தாழச்
சோதிமணி மார்பின்அசை நூலினொடு தோளின்
மீதுபுனை உத்தரிய வெண்துகில் நுடங்க
ஆதபம் மறைக்குடை அணிக்காரம் விளங்க. 30

(இ - ள்.) காதில் அணிந்த ருத்திராக்ஷத்தாலாகிய வளைந்த குண்டலமானது தாழ்ந்து தொங்கவும், பிரகாசம் பொருந்திய ருத்திராக்ஷமாலையணிந்த மார்பில் தரித்தருளிய பூணூலோடு தோளின்மேல் அணிந்த உத்தரீயமாகிய வெண்மைபொருந்திய வஸ்திரமசையவும், வெயிலை மறைப்பதற்குக் கொண்டுவந்த குடையானது அழகிய கையில் விளங்கவும். எ-று.

பண்டிசரி கோவண உடைப்பழமை கூரக்
கொண்டதோர் சழங்கலுடை ஆர்ந்தழகு கொள்ள
வெண்துகி லுடன்குசை முடிந்துவிடு வேணுத்
தண்டொருகை கொண்டுகழல் தள்ளுநடை கொள்ள. 31

(இ - ள்.) வயிற்றின்கீழ் சரிய வுடுத்தின கோவணமாகிய மிக்க பழமை பொருந்தத் தரித்த ஒரு நழுவுகின்ற வுடையானது இடையில் பொருந்தி அழகைச்செய்யவும், வெண்மை பொருந் திய வஸ்திரத்தோடு தருப்பையையும் முடிந்துவிட்டிருக்கின்ற மூங்கில் தடியை ஒருகையில் பிடித்துக்கொண்டு திருவடிகள் தளர்ந்து நடக்கும் நடையைக் கொள்ளவும். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனும் அதன்படிவ மேயோ
மெய்த்தநெறி வைதிகம் விளைந்தமுத லேயோ
இத்தகைய வேடமென வையமுற வெய்தி. 32

(இ - ள்.) இத்தன்மையினையுடைய திருவேடமானது நெருங்கி வளருகின்ற பேரழகானது இளமையினின்றும் முதிர்ந்த ஒருருவமோ? அப்படியே ஒருங்குசேர்ந்து வளர்ந்து முதிர்ந்த மூப்பினது வடிவமோ? உண்மை பொருந்திய வைதிகவிதிகளை முற்றுப்பெறச்செய்தருளிய முதல்வரோ? என்று யாவரும் சந்தேகிக்கும்படியாக அத்திருமணப்பந்தலுக்கு எழுந்தருளி. - எ -று.

வந்துதிரு மாமறை மணத்தொழில் தொடங்கும்
பந்தரிடை நம்பிஎதிர் பன்னுசபை முன்னின்(று)
"இந்தமொழி கேண்மின்எதிர் யாவர்களும்" என்றான்
முந்தைமறை ஆயிரம் மொழிந்ததிரு வாயான். 33

(இ-ள்.) பெருமைபொருந்திய வேதவிதிப்படியே திருமணஞ் செய்யத் தொடங்கும் கலியாணப்பந்தலில், இப்படிப்பட்ட திருவேடத்தோடும் எழுந்தருளிவந்து சுந்தரமூர்த்திசுவாமி களுக்கு முன்னே நெருங்கியிருக்கின்ற சபையார்களுக்கு எதிரில் நின்று, எனக்கெதிரில் நிற்கின்ற சபையார்கள் யாவரும் யான்சொல்லப்போகின்ற இந்தவார்த்தையைக் கேளுங்களென் றார்; (அவர் யாரென்றால்) ஆதிகாலத்தில் அநேகவேதங்களைச் செய்தருளிய திருவாயினை யுடையவராகிய சிவபெருமான். எ-று.

என்றுரைசெய் அந்தணனை எண்ணில்மறை யோரும்
மன்றல்வினை மங்கல மடங்கலனை யானும்
"நன்றுமது நல்வரவு நங்கள்தவம் என்றே
நின்றதிவண் நீர்மொழிமின் நீர்மொழிவ" தென்றார். 34

(இ - ள்.) என்று இவ்விதமாகச் சொல்லிய பிராமணரை அச்சபையிலுள்ள அளவற்ற பிராமணர்களும், விவாகத்தின் பொருட்டுச் சுபகாரியங்களைச் செய்து கொண்டிருக்கின்ற ஆண்சிங்கம்போன்ற வலிமையையுடைய சுந்தமூர்த்திசுவாமி களும் (அவரைப்பார்த்து) உமது நல்வரவு நன்றாயிருக்கின்றது; (அப்படி நீர் இங்கெழுந்தருளியது) நாங்கள் பூர்வத்தில் செய்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தவமாகவே யிருந்ததென்று சொல்லி இனி இவ்விடத்தில் நீர் சொல்ல வேண்டியதாக நினைத்து வந்ததைச் சொல்லுமென்று சொன்னார்கள். - எ - று.

பிஞ்ஞகனும் நாவலர் பெருந்தகையை நோக்கி
"என்னிடையும் நின்னிடையும் நின்றஇசை வால்யான்
முன்னுடைய தோர்பெரு வழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வியினை நீமுயல்தி" என்றான். **35**

(இ - ள்.) (இப்படி அச்சபையார்கள் சொன்னபோது) சிவபெருமானாகிய பிராமணரும் சுந்தரமூர்த்திசுவாமிகளைப் பார்த்து, எனக்கும் உனக்கும் இருக்கின்ற ஒரு சம்பந்தத்தைப்பற்றி யான் முன்னமே கொண்டிருக்கின்ற ஒரு பெரிய வழக்கைத் தீர்த்துவிட்டுப் (பின்பு) உன்னுடைய கலியாணவேலையை நீ நடத்தக்கடவை யென்று அருளிச்செய்தார். - எ - று.

நெற்றிவிழி யான்மொழிய நின்றநிகர் இல்லான்
"உற்றதொர் வழக்கெனிடை நீயுடைய துண்டேல்
மற்றது முடித்தலது யான் வதுவை செய்யேன்;
முற்றஇது சொல்லு" கென எல்லைமுடி வில்லான். **36**

(இ - ள்.) நெற்றிக்கண்ணை யுடையவராகிய சிவபெருமான் இப்படிச் சொல்ல அங்கு நிற்கின்றவராகிய ஒப்பற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் (அவரைப்பார்த்து) பழமையாகப் பொருந்தியஒரு வழக்கை என்னிடத்தில் நீர் உடைத்தா யிருப்பீராயின் அந்த வழக்கினைமுடித்தால் அல்லாமல் யான் கலியாணஞ் செய்து கொள்ளேன், (ஆதலால்) இவ்வழக்கினைமுழுவதும் சொல்வீ ராக வென்று சொல்ல (அப்போது) அளவிடப்படாதவராகிய சிவபெருமான் (சொல்லுகின்றார்.) - எ- று.

"ஆவதிது கேண்மின்மறை யோர்! என்அடி யான்இந்
நாவல்நகர் ஊரான்இது நான்மொழிவ" தென்றான்
தேவரையும் மாலயன் முதன்திருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய எம்மான். **37**

(இ-ள்.) மறையவர்களே! நான் சொல்லுவதாகிய இவ் விஷயத்தைக்கேளுங்கள்; இத்திருநாவலூரனாகிய நம்பியாரூரன் என்னுடைய அடிமையானவன். இதுதான் நான்சொல்ல வேண்டிய சங்கதிஎன்று அருளிச்செய்தார். (அவர் யாரென் றால்) இந்திரன்முதலாகிய தேவர்களையும், விஷ்ணு - பிரமன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலாகிய செல்வத்தில் மிகுந்த மற்றையாவரையும் வேறு வகையில் அடிமையாகவுடைய சிவபெருமான். - எ - று.

என்றான் இறையோன் அதுகேட்டவர் எம்ம ருங்கும்
நின்றார் இருந்தார் "இவன் என்நினைந் தான்கொல்" என்று
சென்றார் வெகுண்டார் சிரித்தார், திருநாவ லூரான்
"நன்றால் மறையோன் மொழி" என்றெதிர் நோக்கி நக்கான். 38

(இ - ள்.) பிராமணத் திருவுருவங்கொண்டு வந்த கடவுளானவர் இப்படிச் சொன்னவுடனே, எவ்விடத்திலும் சூழ்ந்து நின்றவர்களும், இருந்தவர்களுமாகிய யாவரும் இவ்வார்த்தையைக் கேட்டவர்களாய் இப்பிராமணன் என்ன காரியஞ் செய்ய நினைத்தானென்று (சிலர்) அவர் சமீபத்திற் சென்றார்கள்; (சிலர்) கோபித்தார்கள்; (சிலர்) சிரித்தார்கள்; அப்போது திருநாவலூரராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள் இப் பிராமணன் சொல்லுகிற வார்த்ததை நன்றாயிருக்கிறதென்று அவரைநேராகப் பார்த்துச் சிரித்தார். - எ - று.

நக்கான் முகம்நோக்கி நடுங்கி நுடங்கி யார்க்கும்
மிக்கான் மிசையுந் தரியத்துகில் தாங்கி மேற்சென்(று)
"அக்கா லம்உன் தந்தை தன்தந்தை ஆள்ஓலை ஈதால்
இக்கா ரியத்தை நீஇன்று சிரித்ததென் ஏட" என்ன 39

(இ - ள்.) யாவருக்கும் தலைவராகிய சிவபெருமான் (தம்மை இகழ்ந்து) சிரித்த சுந்தரமூர்த்திசுவாமிகளது முகத்தைப் பார்த்து (திருமேனி) நடுங்கித்தள்ளாடித் தோளின்மேல் தரித்த உத்தரீயத்தை விழாமல் கையால் தாங்கிக்கொண்டு, அவர் சமீபத்திற்போய், அக்காலத்தில், உன்பாட்டன் எழுதிக்கொடுத்த அடிமையோலை யிதுவாகும்; (அப்படியிருக்க) ஏடா? இக் காரியத்தைக்குறித்து இன்று நீ இகழ்ந்து சிரித்தது என்றருளிச் செய்தார். - எ - று.

மாசிலா மரபில் வந்த வள்ளல்வே தியனை நோக்கி
நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியால் சிரிப்பு நீங்கி
"ஆசில்அந் தணர்கள் வேறோர் அந்தணர்க்கடிமை ஆதல்
பேசஇன் றுன்னைக்கேட்டோம் பித்தனோ மறையோன்" என்றார். 40

(இ-ள்.) குற்றமற்ற ஆதிசைவப் பிராமணகுலத்தில் திருவ வதாரஞ்செய்தருளிய சுந்தரமூர்த்திசுவாமிகள் சிவபெருமானா கிய விருத்தப் பிராமணரைப் பார்த்து அன்பானது முந்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யிருக்கப்பெற்ற மனவுருக்கத்தினால் தமக்குண்டாகிய சிரிப்பு நீங்கிக் களங்மற்ற ஆதிசைவப்பிராமணர்கள் வேறொரு பிராமணர்களுக்கு அடிமையாவதைப் பேசும்படியாக இன்று உன்னிடத்தில் கேட்டோம்; (ஆதலால்) ஒ பிராமணரே! நீர் பித்தங்கொண்டவரோ? என்று சொன்னார். - எ - று.

"பித்தனும் ஆகப் பின்னும் பேயனும் ஆக நீயின்(று)
எத்தனை தீங்கு சொன்னால் யாதுமற் றவற்றால் நாணேன்
அத்தனைக் கென்னை ஒன்றும் அறிந்திலை யாகில்நின்று
வித்தகம் பேச வேண்டாம் பணிசெய வேண்டும்" என்றார். 41

(இ - ள்.) (சுந்தரமூர்த்திசுவாமிகள்சொல்லிய அவ்வார்த்தையைக் கேட்ட சிவபெருமானாகிய பிராமணர்) நான் பித்தனானாலும் ஆகுக, பேயனானாலும் ஆகுக, நீ இப்பொழுது எவ்வளவு கெட்டவார்த்தைகளைச் சொல்லினை, அவ்வார்த்தைகளால் நான் கொஞ்சமும் வருத்தப்படமாட்டேன், அப்படி வருத்தப் படாமையைக்குறித்து என்னை நீ சிறிதும் அறியவில்லை, ஆனாலும் எனக்கு எதிராகநின்று இப்படிப் பரிகாசவார்த்தைகளைப் பேசவேண்டாம், எனக்கு அடிமைத் தொழில் செய்ய வேண்டுமென்று சொன்னார். - எ - று.

"கண்டதோர் வடிவால் உள்ளங் காதல்செய் துருகா நிற்கும்;
கொண்டதோர் பித்த வார்த்தை கோபமும் உடனே ஆக்கும்;
உண்டொராள் ஓலை என்னும் அதன்உண்மை அறிவேன் என்று
தொண்டனார்" ஓலை காட்டு "கென்றனர் துணைவ னாரை. 42

(இ - ள்.) அப்பொழுது தொண்டராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னால் காணப்பட்ட ஒப்பற்ற இப்பிராமணரது திருவுருவத்தால் என்மனமானது அன்புண்டாகியுருகும்; இவர் எனக்கு நீ அடிமையென்று சொல்லிய பயித்தியமாகிய வார்த்தையானது கோபத்தையும் உடனே யுண்டாக்கும். (ஆதலால்) அடிமையோலை யொன்றுண்டென்று சொல்லுகின்ற அவ்வார்த்தையினது உண்மையை அறிவேனென்று கருதித் தமது உயிர்த்துணைவராகிய சிவபெருமானைப் பார்த்து நீர் கொண்டுவந்த அடிமையோலையைக் காட்டுமென்று சொன்னார். - எ - று.

"ஓலைகாட்" டென்று நம்பி உரைக்க "நீஓலை காணற்,
பாலையோ அவைமுன் காட்டப் பணிசெயற் பாலை", என்ற
வேலையில் நாவ லூரர் வெகுண்டு மேல்விரைந்து சென்று,
மாலயன் தொடரா தானை வலிந்து பின்தொடர லுற்றார். 43

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) சுந்தரமூர்த்திசுவாமிகள் அடிமையோலையைக் காட்டுமென்று சொல்ல, (அதற்குச் சிவபெருமானாகிய பிராமணர் அவரைப்பார்த்து) நீ அவ்வடிமையோலையைப் பார்த்து நிச்சயிக்கவல்லவனோ? நான் இந்தச்சபையாருக்கு முன்னே அங்கீகரிக்கும்படிக் காட்டினபின்பு நீ ஊழியஞ் செய்வதற்கு மாத்திரம் உரியவன் என்று சொன்னபோது, சுந்தரமூர்த்திசுவாமிகள் கோபங்கொண்டு அவருக்கெதிரே விரைவாகப்போய்ப் பிரமவிஷ்ணுக்களால் தொடர்ந்தறியப் படாதவராகிய அச்சிவபெருமானை வலிசெய்து அவர் ஓடப் பின்றொடர்ந்து பிடிக்கத் தொடங்கினார். - எ-று.

ஆணவம் பறிக்கச் சென்ற அளவினில் அந்த ணாளன்
காவணத் திடையே ஓடக் கடிதுபின் தொடர்ந்து நம்பி
பூவணத் தவரை உற்றார் அவரலால் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி னாரை யார்தொடர்ந் தெட்ட வல்லார்? 44

(இ - ள்.) அடிமையோலையைப் பறிக்கப்போனபொழுது, சிவபெருமானாகிய பிராமணர் பந்தலின் கீழ் ஓட, சுந்தரமூர்த்தி சுவாமிகள் விரைவாகப் பின்றொடர்ந்து, அழகிய செந்நிறத்தை யுடையவராகிய அக்கடவுளையடைந்தார்; திரிபுரங்களை யழித்து அம்போடுசேர்ந்த மேருமலையாகிய வில்லையுடைய சிவபெருமானை அச்சுந்தரமூர்த்திசுவாமிகளேயல்லாமல் வேறுயார்தொடர்ந்து பிடிக்கவல்லவர்கள் (ஒருவருமில்லை.) - எ - று.

மறைகளா யினமுன் போற்றி மலர்ப்பதம் பற்றி நின்ற
இறைவனைத் தொடர்ந்து பற்றி எழுதும்ஆள் ஓலை வாங்கி
அறைகழல் அண்ணல் "ஆளாய் அந்தணர் செய்தல் என்ன
முறை" எனக்கீறி யிட்டார்; முறையிட்டான் முடிவிலாதான். 45

(இ - ள்.) வேதங்களானவை முன்னே துதிசெய்து தாமரை மலர்போன்ற திருவடிகளைத் தொடர்ந்து நிற்கின்ற சிவபெருமானைச் சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த சுந்தர மூர்த்திசுவாமிகள் பின்றொடர்ந்து பிடித்து எழுதியிருக்கின்ற அடிமையோலையை வாங்கி ஆதிசைவப்பிராமணர்கள் வேறொருவருக்கு அடிமையாளய்ப் பணிசெய்தல் எந்த நூலில் சொல்லபட்டிருக்கின்ற முறைமையென்று சொல்லிக்கிழித் தெறிந்தார். (அப்பொழுது) முடிவில்லாதவராகிய சிவபெருமான் இது முறையோவென்று முறையிட்டார். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருமறை முறையிட் டின்ன மறிவதற் கரியான் பற்றி
யொருமுறை முறையோ வென்ன வுழைநின்றார் விலக்கி யிந்தப்
பெருமுறை யுலகி லில்லா நெறிகொண்டு பிணங்கு கின்ற
திருமறை முனிவ ரேநீ ரெங்குளீர் செப்பு மென்றார். 46

(இ - ள்.) அருமையாகிய வேதங்கள் முறையிட்டு இதுவரையிலும் இப்படிப்பட்டவரென்று அறிதற்கரியவராகிய சிவபெருமான் சுந்தரமூர்த்திசுவாமிகளைக் கையால் பிடித்துக் கொண்டு ஒருதரம் முறையோவென்று கூச்சலிட, சமீபத்தி லிருப்பவர்கள் இருவரையும் விலக்கி இந்த உலகத்திலில்லாத வழக்காகிய பெருவழக்கைக்கொண்டு அதை முடிக்கவேண்டு மென்று பிணக்குச்செய்கின்ற சிறந்தவேதங்களையறிந்த முனிவரே! நீர் எங்கேயிருக்கின்றவர் சொல்லுமென்று கேட்டார்கள். - எ-று.

என்றலும் நின்ற ஐயர் "இங்குளேன் இருப்புஞ் சேய்த்த
தன்றிந்த வெண்ணெய் நல்லூர் அதுநிற்க அறத்தா றின்றி
வன்றிறல் செய்தென் கையில் ஆவணம் வலிய வாங்கி
நின்றிவன் கிழித்துத் தானே நிரப்பினான் அடிமை" என்றான். 47

(இ - ள்.) (விலக்கிய பிராமணர்கள்) இவ்வாறு கேட்கவும், அதைக்கேட்டு நிற்கின்ற சிவபெருமானாகிய வேதியர் இங்கிருக்கின்ற என்னுடைய ஊரும் தூரமானதல்ல, இந்தத் திருவெண்ணெய்நல்லூரேயாகும்; அது அப்படியிருக்க இந்த நம்பியாரூரன் தருமவழிக்கு விரோதமாய்ப் பலவந்தஞ்செய்து என்கையிலுள்ள அடிமைச்சீட்டை வலியவாங்கி நின்று அதைக் கிழித்து, தானே எனக்கு அடிமையென்பதை ஸ்திரப்படுத் தினான் என்று சொன்னார். - எ - று.

குழைமறை காதி னானைக் கோதில்ஆ ரூரர் நோக்கிப்
பழையமன் றாடிபோலும் இவன்என்று பண்பின்மிக்க
விழைவுறு மனமும் பொங்க "வெண்ணெய்நல் லூராயேல் உன்
பிழைநெறி வழக்கை ஆங்கே பேசநீ போதாய்" என்றார். 48

(இ - ள்.) சங்கக்குழையை மறைத்துவந்த காதினையுடைய சிவபெருமானாகிய பிராமணரைக் குற்றமற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் பார்த்து இவர் பழயநியாயசபையில் வழக்காடி போலுமென்னுங் குறிப்பால் இவர்பழயகனகசபையில் நடனஞ் செய்தருளுகின்ற சிவபெருமான்போலுமென்று அன்பினால் மிகுந்த ஆசை பொருந்திய மனமானதுபொங்க, நீர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவெண்ணெய் நல்லூரி லிருப்பவரேயானால் உம்முடைய குற்றவழியாகிய வழக்கை அவ்விடத்திலேதானே பேசும்படியாக வாருமென்று சொன்னார். - எ - று.

வேதியன் அதனைக் கேட்டு "வெண்ணெய்நல் லூரி லேநீ
போதினும் நன்று மற்றப் புனிதநான் மறையோர் முன்னர்
ஆதியில் மூல வோலை காட்டிநீ அடிமை யாதல்
சாதிப்பன்" என்று முன்னே தண்டுமுன் தாங்கிச் சென்றான். 49

(இ-ள்) சிவபெருமானாகிய பிராமணர் அவ்வார்த்தையைக் கேட்டு நீ திருவெண்ணெய் நல்லூருக்கு வந்தாலும் நல்லது; அவ்வூரிலிருக்கின்ற பரிசுத்தம்பொருந்திய நான்கு வேதங்களையு முணர்ந்த பிராமணர்களுக்கு முன்பாக ஆதியில் எழுதிக் கொடுத்த மூலபத்திரத்தைக் காண்பித்து நீ எனக்கு அடிமை யாவதை நிலைநிறுத்துவேனென்று சொல்லி அவர்க்கு முன்னாகத் தம்முடைய கையிலுள்ள தண்டை முன்னே யூன்றிக்கொண்டு திருவெண்ணெய் நல்லூருக் கெழுந்தருளி னார். - எ - று.

மூலவோலையென்பது இக்காலத்தில் அசல்என்று வழங்குகின்றது

செல்லுநான் மறையோன் தன்பின் திரிமுகக் காந்தஞ் சேர்ந்த
வல்லிரும் பணையு மாபோல் வள்ளலுங் கடிது சென்றான்
எல்லையில் சுற்றத் தாரும் "இதுஎன்னாம்" என்று சொல்ல
நல்லஅந் தணர்கள் வாழும் வெண்ணெய்நல் லூரை நண்ணி. 50

(இ - ள்.) திருவெண்ணெய் நல்லூரைநோக்கிப் போகின்ற சிவபெருமானாகிய பிரமாணருக்குப் பின்னே வேறுபடுத்து கின்ற முகத்தையுடைய காந்தத்தைச்சமீபித்த வலிய இரும் பானது அக்காந்தத்தைச் சேர்ந்து ஒன்றுதல்போல அளவற்ற பந்துசனங்களும் இது எப்படியாகுமோவென்று பின்றொடர்ந்து போக நம்பியாரூரரும் நல்ல பிராமணர்கள் வாழுகின்ற திருவெண்ணெய்நல்லூரை விரைவாகப் போய்ச் சேர்ந்தார். எ-று.

வேதபா ரகரின் மிக்கார் விளங்குபேர் அவைமுன் சென்று
நாதனாம் மறையோன் சொல்லும் "நாவலூர் ஆரூ ரன்தான்
காதலென் அடியான்என்னக் காட்டிய ஓலை கீறி
மூதறி வீர்முன் போந்தா னிதுமற்றென் முறைப்பா டென்றான். 51

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) வேதமுணர்ந்தவர்களில் சிறந்த பிராமணர்கள் விளங்குகின்ற பெரியசபையின் முன்பாகப் போய் சிவபெருமானாகிய பிராமணர் சொல்லுவார், திருநாவலூரில் வாழ்கின்ற இந்த நம்பியாரூரன் ஆசைபொருந்திய எனது அடிமையென்று யான் அவனுக்குக்காட்டிய முறியோலையைக் கிழித்துப் பேரறிவினையுடைய பிராமணர்களே! உங்களிடத்திற்கு வந்தான்; இதுதான் என்னுடைய முறைப்பாடென்று சொல்லியருளினார். - எ - று.

அந்தணர் அவையில் மிக்கார் "மறையவர் அடிமை ஆதல்
இந்தமா நிலத்தில் இல்லை என்சொன்னாய் ஐயா" என்றார்
"வந்தவா றிசைவே அன்றோ வழக்கிவன் கிழித்த ஓலை
தந்தைதன் தந்தை நேர்ந்த(து என்றனன்)" தனியாய் நின்றான். 52

(இ - ள்.) அச்சபையில் தலைவர்களாயுள்ள பிராமணர்கள் (இப்படிப் பிரியாது சொல்லிய அந்தணரைப்பார்த்து) பிராமணர்கள் அடிமையாவது பெருமை பொருந்திய இந்தவுலகத்தில் இதுவரையிலும் வழக்கமில்லை. (அங்ஙனமாக,) ஐயரே! நீர் என்னபொருந்தாத வழக்கைச் சொன்னீர் என்றார்கள்; அப்பொழுது பிராமணத் திருஉருவங்கொண்டு தனித்து நின்றவராகிய கடவுள் யான்கொண்டு வந்த வழக்குப் பொருத்தமுடையதல்லவோ? இவன் கிழித்த அடிமையோலை இவன் பாட்டன் எழுதிக்கொடுத்தது என்றருளிச் செய்தார். - எ - று.

"இசைவினால் எழுதும் ஓலை காட்டினான் ஆகில் இன்று
விசையினால் வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றி ஆமோ?
தசையெலாம் ஒடுங்க மூத்தான் வழக்கினைச் சாரச் சொன்னான்;
அசைவில் ஆரூரர் எண்ணம்என்" என்றார் அவையில் மிக்கார். 53

(இ - ள்.) உடன்பாட்டால் 'எழுதிக்கொடுத்த அடிமையோலையை பிராமணர்கள் பலருமறிய இன்று காண்பித்தாராகில் அதனை விசையாக வலியவாங்கிக் கிழித்துவிடுவது வெற்றியாகுமோ? உடம்பிலுள்ள மாமிசமெல்லாம் சுருங்கும்படி மூப்பினையடைந்த இப்பிராமணர் தமது வழக்கை யாவரும் அங்கீகரிக்கும் படியாகச் சொன்னார்; இனி மனக்கவலையற்ற இந்த நம்பியாரூரரது கருத்து என்னவென்று கேட்டார்கள் அச்சபையிலுள்ள பெரியோர்கள். - எ - று.

அனைத்துநூல் உணர்ந்தீர்! ஆதி சைவனென் றறிவீர்! என்னைத்,
தனக்குவே றடிமை என்றிவ் வந்தணன் சாதித் தானேல்,
மனத்தினா லுணர்தற் கெட்டா மாயைஎன் சொல்லு கேன்யான்,
எனக்கிது தெளிய வொண்ணா தென்றனன்" எண்ணம் மிக்கான். 54

(இ - ள்.) வேதாகம புராணமுதலிய சகலசாஸ்திரங்களையும் அறிந்த பெரியோர்களே! நீங்கள் என்னை ஆதிசைவப்பிராமண னென்று அறிவீர்கள்; அப்படியிருக்க இந்தப்பிராமணர் (உலகவழக்கத்திற்கு விரோதமாக) என்னைத் தனக்குச் சாதாரண அடிமையென்று சாதிப்பாரானால் இது மனதினால் இப்படிப் பட்டதென்று நிச்சயித்தறியப்படாத மாயையாகவேயிருக் கின்றது. இதைக்குறித்து யான் என்னசொல்லப்போகின்றேன். எனக்கு இவ்வழக்கு நிச்சயிக்கக்கூடாததாக இருக்கின்றதென்று சொன்னார் யாவருடைய எண்ணங்களையும் பகுத்தறிவதில் வல்லவராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள். - எ-று.

அவ்வுரை அவையின் முன்பு நம்பியா ரூரர் சொல்லச்
செவ்விய மறையோர் நின்ற திருமறை முனியை நோக்கி
"இவ்வுல கின்கண் நீரின் றிவரையுன் னடிமை என்ற
வெவ்வுரை எம்முன் பேற்ற வேண்டும்" என் றுரைத்து மீண்டும். 55

(இ - ள்.) அப்படிப்பட்ட வார்த்தைகளை அச்சபையாருக்கு முன்பாகச் சுந்தரமூர்த்திசுவாமிகள் எடுத்துச் சொல்ல, உடனே நடுவுநிலையையுடைய பிராமணர்கள் (அங்கு வல்வழக்கிட்டு) நிற்கின்ற சிவபெருமானாகிய பிராமணரைப்பார்த்து, இந்த வுலகத்தில் இன்று நீர் இந்நம்பியாரூரரை உமது அடிமை யென்று சாதித்த இக்கொடிய மொழியை எங்களுக்கு முன்னே உறுதிப்படுத்தவேண்டுமென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லு வார்கள். - எ - று.

ஆட்சியில் ஆவணத்தில் அன்றிமற் றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய் என்ன "முன்னே
மூட்சியிற் கிழித்த ஓலல படியோலை மூல ஓலை
மாட்சியிற் காட்ட வைத்தேன்" என்றனன் மாயை வல்லான். 56

(இ - ள்.) (ஒருவிவகாரத்தை உண்மையென்று நிச்சயிக்க வேண்டுமாயின் அதற்கு) அனுபவமும், லிகிதமும், அயலார் சொல்லுகின்ற சாட்சியுமாகிய இம் மூன்றும் வேண்டுமாதலால்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீர் இம்மூன்றில் ஒன்றை (இந்நம்பியாரூரர் உமக்கடிமை யென்பதற்குக்) காட்டுவீராக வென்றுசொல்ல, (அதற்கு) மாயையில்வல்ல சிலபருமானாகிய பிராமணர் முன்பு இவன் கோபத்தால் கிழித்த ஓலையானது மூலவோலையைப் பார்த்தெழுதிய படியோலையாம்; இவனடிமையென்பதை நியாயசபையில் பெருமையோடு காட்டுவதற்கு அம்மூல சாதனத்தை வைத்திருக்கின்றேனென்று சொன்னார். - எ - று.

படியோலை என்பது இக்காலத்துக் குறிப்பு என்று வழங்குகின்றது.

வல்லையேல் காட்டிங் கென்ன மறையவன் வலிசெய் யாமல்
சொல்லநீர் வல்லீ ராகில் காட்டுவேன் என்று சொல்லச்
செல்வநான் மறையோய்! நாங்கள் தீங்குறஒட்டோம் என்றார்
அல்லல்தீர்த் தாள நின்றார் ஆவணங் கொண்டு சென்றார். 57

(இ - ள்.) (அச்சபையிலுள்ள வேதியர்கள் வாதியாகவந்த பிராமணரைப் பார்த்து) நீர் அம்மூலசாதனத்தைக் காட்டக் கூடுமானால் இவ்விடத்திற் காட்டக் கடவீரென்று சொல்ல, (அவர்) இந்நம்பியாரூரன் மூலவோலையையும் முன்கிழித்தது போல பறித்துக் கிழிக்காமலிருக்கும்படி நீங்கள்சொல்ல வல்லவர்களானால் அதனைக் காட்டுகின்றேனென்று சொல்ல, (அதற்கு) செல்வமிகுந்த அப்பிராமணர்கள் நாங்கள் உமக்கு அப்படி ஒரு தீங்கும்வரவொட்டோ மென்றார்கள். (அப் பொழுது) சுந்தரமூர்த்திசுவாமிகளைத் துன்பத்தின்று நீக்கித் தடுத்தாட்கொள்ளப் பிராமணத்திருவுருவங்கொண்டு நிற்கின்ற வராகிய கடவுள் (அச்சபைக்கு மறைவாகப்போய்) மூல வோலையை யெடுத்துக்கொண்டு வந்தார். - எ-று.

இருள்மறை மிடற்றோன் கையில் ஓலைகண் டவையோர் ஏவ
அருள்பெறு கரணத் தானும் ஆவணம் தொழுது வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி விரித்தனன் தொன்மை நோக்கித்
தெருள்பெறு சபையோர் கேட்ப வாசகம் செப்பு கின்றான். 58

(இ - ள்.) விஷத்தின் கருநிறத்தை மறைத்த கண்டத்தை யுடைய சிவபெருமானது திருக்கரத்திலுள்ள ஓலையைப் பார்த்து அச்சபையிலுள்ளவர்கள் கட்டளையிட, அக் கட்ட ளைப் பெற்ற கருணீகனும் அவ்வடிமையோலையை வணங்கி வாங்கிச் சுருளாயிருக்கின்ற மடிப்பை நீக்கி விரித்து அப்பத்திரத் தின் பழமையைப் பார்த்துக் கல்விகேள்விகளால் தெளிவடைந் திருக்கின்ற அச்சபையாரனை வருங்கேட்கும்படியாக அதி லெழுதியிருக்கின்ற வாசகத்தைப்படிக்கத் தொடங்கினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருமறை நாவல் ஆதி சைவன்ஆ ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானும் என்பால்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கிவைஎன்ன மூத்து. **59**

(இ - ள்.) அருமையாகிய வேதத்தையுணர்ந்த திருநாவலூரிலிருக்கின்ற ஆதிசைவப்பிராமணனாகிய ஆரூரனென்னும் பெயரையுடைய யான் எழுதிக்கொடுத்த உடன்படிக்கையாவது பெரிய முனிசிரேஷ்டராகிய திருவெண்ணெய் நல்லூரில் வசிக்கும் வழிவழி அடிமைசெய்வதற்கு உள்ளும்புறம்பும் ஒத்து இவ்வடிமைப்பத்திரத்தை எழுதிக்கொடுத்தேன்; இப்படிச் சம்மதித்தெழுதிக்கொடுத்ததற்காக இவை என்னுடைய கையெழுத்தாம். - எ - று.

வாசகங் கேட்ட பின்னர் மற்றுமேல் எழுத்திட் டார்கள்
ஆசிலா எழுத்தை நோக்கி அவையொக்கும் என்ற பின்னர்
மாசிலா மறையோர் "ஐயா! மற்றுங்கள் பேர னார்தம்
தேசுடை எழுத்தே ஆகில் தெளியப்பார்த் தறிமின்" என்றார். **60**

(இ - ள்) (இப்படிக்கு அவர்கொண்டுவந்த மூலவோலையில் எழுதியிருக்கின்ற) வாசகத்தைக் கேட்டபின்பு அதற்குச் சாட்சிக் காரராகக் கையெழுத்திட்டவர்களின்குற்றமில்லாத வேறு கையெழுத்துக்களை வருவித்து ஒத்துப்பார்த்து அவைகளும் சரியாகவே ஒத்திருக்கின்றனவென்று சொன்னபின்பு, குற்றமற்ற அப்பிராமணர்கள் (சுந்தரமூர்த்திசுவாமிகளைப் பார்த்து) ஐயரே! இவைகள் உம்முடைய பாட்டனாரது உண்மையான கையெழுத்தாக இருக்குமானால் தெளிவாகப் பார்த் துணர்வீரென்றார்கள் - எ - று.

அந்ணர் கூற "இன்னும் ஆள்ஓலை இவனே காண்பான்
தந்தைதன் தந்தை தான்வேறெழுதுகைச் சாத்துண் டாகில்
இந்தஆ வணத்தி னோடும் எழுத்துநீர் ஒப்பு நோக்கி
வந்தது மொழிமினி" என்றான் வலிய ஆட்கொள்ளும் வள்ளல். **61**

(இ - ள்.) அச்சபையிலுள்ள பிராமணர்கள் இவ்விதமாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பார்த்துச் சொல்ல, (அப்பொழுது) வலியவே தடுத்தாட்கொள்ளும் படி எழுந்தருளிய கடவுளான வர் இன்னும் இவன்பாட்டன் எழுதிக்கொடுத்த அடிமை யோலையை இவனோ கண்டறியத்தக்கவன்? இவன் பாட்டன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுவன்றி வேறே எழுதியிருக்கும் கைச்சாத்துகள் இருக்குமானால் அவைகளைத் தருவித்து இந்தச்சாசனத்தோடு எழுத்துக்கள் நேராக ஒத்திருக்கப்பார்த்து (அதற்குமேல்) உங்கள் மனதில் தோன்றிய நியாயத்தைச் சொல்லுங்களென்று சொன்னார். - எ - று.

திரண்டமா மறையோர் தாமும் திருநாவ லூரர் கோமுன்
மருண்டது தெளிய மற்றை மறையவன் எழுத்தால் ஓலை
அரண்தரு காப்பில் வேறொன் றழைத்துடன் ஒப்பு நோக்கி
"இரண்டும்ஒத் திருந்த தென்னே! இனிச்செயல் இல்லை" என்றார். 62

(இ - ள்.) கூட்டமாயிருக்கின்ற பெருமைபொருந்திய பிராமணர்கள் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குமுன்னே சந்தேகித்த விஷயத்தைத் தெளிந்து கொள்ளும்படி அவர் பாட்டனார் கையெழுத்தால் அவர் வீட்டில் காவலான இடத்தில் வைத்திருக்கின்ற வேறொரு கைச்சாத்தினை வரவழைத்து அதனோடு இதனை ஒத்துப் பார்த்துப் பின்பு இரண்டும் ஒத்திருக்கின்றன; இது என்ன ஆச்சரியம்! (ஆதலால் நீர் இதனை மறுப்பதற்கு) இனி வேறொரு செயலுமில்லை என்றார்கள். - எ - று.

"நான்மறை முனிவ னார்க்கு நம்பியா ரூரர் தோற்றீர்
பான்மையின் ஏவல் செய்தல் கடன்" என்றுபண்பில் மிக்க
மேன்மையோர் விளம்ப, நம்பி "விதிமுறை இதுவே ஆகில்
யான்இந்த கிசையேன் என்ன இசையுமோ" என்று நின்றார். 63

(இ - ள்.) நான்கு வேதங்களையுமுணர்ந்த இப்பிராமணருக்கு, நம்பியாரூரரே! நீர்வழக்கில் தோற்றீர். ஆதலால் அவரிஷ்டப்படி இடுகின்ற ஏவல்தொழில்செய்வதே உமக்குக்கடமையென்று நற்குணத்திற்சிறந்த அச்சபையிலுள்ள பெரியோர்கள் சொல்ல, அதைக்கேட்ட சுந்தமூர்த்திசுவாமிகள் எனது ஊழ்வினையின் முறைமை இப்படியிருக்குமானால், நானிதற்குச் சம்மதிக்கமாட்டேனென்று சொல்லுவது பொருந்துமோ? என்று உடன்பட்டுச் சொல்லி நின்றார். - எ - று.

திருமிகு மறையோர் நின்ற செழுமறை முனியை நோக்கி
"அருமுனி! நீமுன் காட்டும் ஆவணம் அதனில் எங்கள்
பெருமைசேர் பதியே யாகப் பேசிய துமக்கிவ் வூரில்
வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டு" கென்றார். 64

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) பலவகைச் செல்வங்கள் பொருந்திய அந்தப் பிராமணர்கள் தங்களுக்கு முன்னே நிற்கின்ற சிறந்த வேதங்களையுணர்ந்த சிவபெருமானாகிய பிராமணரைப் பார்த்து அரியதவமுனிவரே! நீர் முன்பு இச்சபையில் காட்டிய அடிமைப்பத்திரத்தில் எங்கள் பெருமைபொருந்திய இத் திருவெண்ணெய்நல்லூரே உம்முடைய ஊராக எழுதப்பட் டிருக்கின்றது, (ஆதலால்) உமக்கு இவ்வூரில் தலை முறையாக வந்த வீட்டையும், நிலையான சம்பத்தையுங் காட்டுமென்று சொன்னார்கள். - எ - று.

பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவர் என்னை
ஒருவரும் அறியீ ராகில் 'போதும்' என்றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர்கு ழாமும் நம்பியும் பின்பு செல்லத்
திருவருட் டுறையே புக்காார் கண்டிலர் திகைத்து நின்றார். 65

(இ - ள்.) ஒப்பற்ற வல்வழக்கினால் வெற்றியடைந்த புண்ணியசொரூபராகிய அப்பிராமணர் (இவ்வளவு விருத்தர் களாகிய உங்களில்) ஒருவரும் என் வீடு முதலியவற்றை யறியா திருப்பீர்களானால் (அவற்றைக் காட்டுகிறேன்) வாருங்க ளென்று சொல்லித் தம்மைச் சூழ்ந்த பெருமைபொருந்திய பிராமணர் கூட்டமும் சுந்தரமூர்த்திசுவாமிகளும் பின்னே வரும்படி (அத்திருவெண்ணெய் நல்லூரிலுள்ள) திருவருட்டுறை என்னும் ஆலயத்துள் நுழைந்தார்; (அதன்பின்பு) அவர்கள னைவரும் அவரைக்காணாமல் திகைப்புற்று நின்றார்கள். எ - று.

எம்பிரான் கோயில் நண்ண இலங்குநூல் மார்பர் "எங்கள்
நம்பர்தங் கோயில் புக்க தென்கொலோ" என்று நம்பி
தம்பெரு விருப்பினோடு தனித்தொடர்ந் தழைப்ப மாதோ(டு)
உம்பரின் விடைமேல் தோன்றி அவர்தமக் குணர்த்தல் உற்றார். 66

(இ - ள்.) (பிராமணத்திருவுருவங் கொண்டுவந்த) எமது பெருமானாகிய பரமசிவன் அத்திருக்கோயிலினுள்ளே சென்று மறைந்தருள, அப்பொழுது சுந்தரமூர்த்திசுவாமிகள் விளங்கு கின்ற பூணூலை யணிந்த மார்பினையுடைய பிராமணர் எமது பெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருக்கோயிலினுள்ளே புகுந்தது என்ன ஆச்சரியமென்று தமக்குண்டாயிருக்கின்ற மிகுந்த ஆசையோடும் தனியே தொடர்ந்துபோய்க் கூப்பிட (அப்பொழுது சிவபெருமான்) ஆகாயத்தில் ரிஷபவாகனத்தின் மேல் பார்வதி சமேதராயெழுந்தருளி அச்சுந்தரமூர்த்திசுவாமி களுக்கு அருளிச்செய்கின்றார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**"முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கைகூரப்
பின்பு நம் ஏவலாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம்தடுத் தாண்டோம்" என்றார். 67**

(இ - ள்.) முற்பிறப்பில் நீ நமக்குத் தொண்டனாகியிருந் தனை; பெண்களின் மேல் வைத்த ஆசைமிகுதியினாலே பின்பு நம்முடைய உத்தரவின்படியே பூமியில் மானிடனாகப் பிறந்தாய்; (அதனால்) துன்பத்தைத் தருகின்ற இவ்வுலக வாழ்க்கையானது உன்னைத் தொடராதிருக்கும்படி நாமே வலியத் தொடர்ந்துவந்து, நல்ல அறிவினையுடைய பிராமணர் களுக்குமுன்னே தடுத்தாட்கொண்டோமென்றருளிச்செய்தார். எ - று.

**என்றெழும் ஓசை கேளா ஈன்றஆன் கனைப்புக்கேட்ட
கன்றுபோல் கதறி நம்பி கரசர ணாதி அங்கம்
துன்றிய புளகம் ஆகத் தொழுதகை தலைமேல் ஆக
"மன்றுளீர்! செயலோ வந்து வலியஆட் கொண்ட" தென்றார். 68**

(இ - ள்.) இவ்விதமாக எழுந்த ஓசையைக்கேட்டுத் தன்னை யீன்ற தாய்ப்பசுவின் குரலைக்கேட்ட கன்றைப்போல, சுந்தர மூர்த்திசுவாமிகள் அலறிக் கைகால் முதலிய அவயவங்களி லெல்லாம் நெருங்கியெழுந்த மயிர்க்குச்சானது உண்டாகக் குவித்தெடுத்த கைகள் சிரசின்மேல் பொருந்த, திருச்சிற்றம் பலத்தில் அநந்தத் தாண்டவஞ்செய்தருளுகின்ற எம்பெரு மானே! தேவரீரது கிருபையின் செய்கையோ? (அடியேனை) இவ்வாறு வலியவந்து தடுத்தாட்கொண்டதென்று விண்ணப் பஞ் செய்தார். - எ - று.

**எண்ணிய ஓசை ஐந்தும் விசும்பிடை நிறைய எங்கும்
விண்ணவர் பொழிபூ மாரி மேதினி நிறைந்து விம்ம
மண்ணவர் மகிழ்ச்சி பொங்க மறைகளும் முழங்கி ஆர்ப்ப
அண்ணலை ஓலை காட்டி ஆண்டவர் அருளிச் செய்வார். 69**

(இ - ள்.) யாவரும் அறியும்படியாக ஐந்து வாத்தியங்களின் ஓசையும் ஆகாயத்தில் நிறையவும், எவ்விடங்களிலும் தேவர்கள் பொழிகின்ற புஷ்ப வருஷங்கள் பூமியில் நிறைந்து பரிமளிக்கவும், பூமியிலுள்ளவர்கள் மிகுந்த சந்தோஷத்தை யடையவும், நான்கு வேதங்களும் மிகுதியாகச் சப்திக்கவும் சுந்தரமூர்த்தி சுவாமி களை அடிமையோலைகாட்டித் தடுத்தாட்கொண்ட சிவ பெருமான் அருளிச் செய்கின்றார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை; நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும்; ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு" கென்றார் தூமறை பாடும் வாயார். 70

(இ - ள்.) அதுவன்றிப் பின்னும் நீ எம்மோடு வன்மையான வார்த்தைகளைச் சொல்லி வன்றொண்டனென்னும் பெயரைப் பெற்றனை; நமக்கும் அன்பினால் மிகுந்தசிறப்போடு செய்யும் பலவகை ஆராதனைகளிலும் மேலான அர்ச்சனையாவது பாடல்களேயாகும்; ஆதலால், பூமியில் நம்மை மதுரமாகிய சொற்களையுடைய தமிழினாலே பாடென்று அருளிச் செய்தார். (அவர் யாரென்றால்) பரிசுத்தம் பொருந்திய வேதங் களை ஆதிகாலத்தில் அருளிச்செய்த சிவபெருமான். - எ - று.

தேடிய அயனும் மாலும் தெளிவுறா ஐந்தெ ழுத்தும்
பாடிய பொருளாய் உள்ளான் "பாடுவாய் நம்மை" என்ன
நாடிய மனத்த ராகி நம்பியா ரூரா, மன்றுள்
ஆடிய செய்ய தாளை அஞ்சலி கூப்பி நின்று. 71

(இ - ள்.) (முன்னாளில் அன்னமாகவும், பன்றியாகவும் உருவங்கொண்டு திருமுடியையுந் திருவடியையுந்) தேடித் திரிந்த பிரமனும், விஷ்ணுவுங்காணாமல் மறைந்து, ஸ்ரீபஞ்சா க்ஷரத்தினாற் சொல்லப்பட்ட உண்மைப் பொருளாயுள்ள சிவபெருமான் நம்மைத் தமிழ்ப்பாடலால் பாடக்கடவாயென் றருளிச்செய்ய, (அதைக்கேட்டுச்) சிவபெருமானது திருவருளைப் பற்றுங் கருத்தினையுடையவராய்ச் சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவம்பலத்தில் ஆனந்தத் தாண்டவஞ்செய்தருளுகின்ற ஸ்ரீநடராஜமூர்த்தியின் சிவந்த தாமரைமலர்போன்ற திருவடி களைக் கைகுவித்து வணங்கிநின்று. - எ - று.

வேதியன் ஆகி என்னை வழக்கினால் வெல்ல வந்த
ஊதியம் அறியா தேனுக் குணர்வுதந் துய்யக் கொண்ட
கோதிலா அமுதே! இன்றுன் குணப்பெருங் கடலை நாயேன்
யாதினை அறிந்தேன் சொல்லிப் பாடுகேன்" என மொழிந்தார். 72

(இ - ள்.) பிராமணத் திருவுருவங்கொண்டு சிறியேனாகிய என்னை வழக்கினால் வெல்லும்படிக்கு எழுந்தருளிவந்த இலாபத்தையறியாத அடியேனுக்குப் பழையவுணர்ச்சியைக் கொடுத்து உலகவாழ்க்கையினின்றும் பிழைக்கும்படித்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தடுத்தாட்கொண்டருளிய குற்றமற்ற தேவாமுதம்போன்ற எம்பெருமானே! இன்றைக்குத் தேவரீருடைய பெருமை பொருந்திய சமுத்திரம்போன்ற மிகுந்த குணங்களை நாய்க்கு ஒப்பாகிய யான் எக்குணத்தையறிந்து என்னசொல்லிப் பாடுவே னென்று விண்ணப்பஞ்செய்தார். - எ - று.

அன்பனை அருளின் நோக்கி அங்கணர் அருளிச் செய்வார்
முன்பெனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆத லாலே
என்பெயர் பித்தன் என்றே பாடுவாய்" என்றார்; நின்ற
வன்பெருந் தொண்டர் ஆண்ட வள்ளலைப் பாட லுற்றார். 73

(இ - ள்.) (இப்படி விண்ணப்பஞ்செய்த) தமது அடியவ ராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளைக் கிருபையோடு பார்த்து அழகிய காருண்யமூர்த்தியாகிய சிவபெருமான் அருளிச் செய்கின்றார், (அதுயாதென்றால்) முன்பு (யாம் உனது கலியாணகாலத்தில் வந்து அதைத்தடுத்தபோது) எம்மை பித்தனென்று சொல்லினை; ஆகையால் என்பெயரைப் பித்தனென்றேகொண்டு (அதை முதலாகவைத்துப்) பாடக் கடவையென் றருளிச்செய்தார். அவ்வார்த்தையைக்கேட்டு நின்ற பெருமை பொருந்திய வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்மைத் தடுத்தாட் கொண்டருளிய சிவபெரு மானைப் பாடத்தொடங்கினார். - எ- று.

கொத்தார்மலர்க் குழலாளொரு கூறாய்அடி யவர்பால்
மெய்த்தாயினும் இனியானைஅவ் வியன் நாவலன் பெருமான்
"பித்தாபிறை சூடி எனப் பெரிதாந்திருப் பதிகம்
இத்தாரணி முதலாம்உல கெல்லாம்உ(ய்)ய எடுத்தார். 74

(இ - ள்.) கொத்துக்களாகப் பொருந்திய மலர்மாலையைத் தரித்த கூந்தலையுடைய உமாதேவியாரது திருமேனியில் ஒரு பாதியாக இருந்து, தம்முடைய அடிவர்களிடத்தில் மெய்யன் புடைய தாயைப் பார்க்கிலும் இனியவராகிய சிவபெருமானை விசாலம்பொருந்திய திருநாவலூரிலுள்ளவர்களுக்குத் தலைவ ராகிய அச்சுந்தரமூர்த்திசுவாமிகள் "பித்தாபிறைசூடீ" என்னும் முதலையுடைய பெருமைபொருந்திய திருப்பதிகத்தை இம் மண்ணுலக முதலாகிய எல்லாவுலகத்திலுள்ளவர்களும் ஓதிக் கதியடையும் பொருட்டு எடுத்தருளினார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முறையால்வரு மதுரத்துடன் மொழி இந்தள முதலில்
குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினால்
நிறைபாணியின் இசைகோள்புணர் நீடும்புகழ் வகையால்
இறையான்மகிழ் இசைபாடினன் எல்லாம்நிக ரில்லான். 75

(இ - ள்.) படிப்படியாய் உயர்ந்துவருகின்ற (ஸ்வரவின்னியாச விசேஷங்களால் உண்டாகின்ற) நயப்போடு முதலில் எடுத்துப்பாடுகின்ற இந்தளமென்னும் பண்ணையுடைய அத்திருப்பதிக்கத்தைத் துரித விளம்பித மத்தியம் என்னும் இசை வேறுபாடுகுறையாமல் பொருந்திய உரிமையினாலும், நிறைந்த கைத்தாளத்தினின்றுண்டாகின்ற இசையின் பகுதி புணர்ந்து மிகுதியாகப்பொருந்திய வகையினாலும் சிவபெருமான் மகிழ்வடைதற்குக் காரணமாக இசையோடு பாடினார் எல்லா மேன்மைகளிலும் தமக்கு ஒருவரும் ஒப்பில்லாதவராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள். - எ- று.

சொல்லார் தமிழ் இசைபாடிய தொண்டன் தனை "இன்னும்
பல்லாறுல கினில்நம்புகழ் பா(டு)" என்றுறு பரிவில்
நல்லார்வெண்ணெய் நல்லூரருட் டுறைமேவிய நம்பன்
எல்லாவுல குய்யப்புரம் எய்தான் அருள் செய்தான். 76

(இ-ள்) சிவஞானச்செல்வங்கள் வாழ்கின்ற திருவெண்ணெய் நல்லூரில் திருவருட்டுறை என்னும் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கின்றவரும், எல்லாவுலகத்தாரும் பிழைக்கும்படியாகத் திரிபுரங்களை யெரித்தருளியவரும் ஆகிய சிவபெருமான் குற்றமற்ற சொற்கள் நிறைந்த தமிழ்ப்பதிகத்தை இசையோடு பாடிய சுந்தரமூர்த்திசுவாமிகளை இவ்வுலகத்தில் இன்னும் நமது புகழைக்குறித்துப் பலவகையாகச்சிறப்பித்துப் பாடக் கடவையென்று மிகுந்த கருணையோடு கட்டளையிட் டருளினார். - எ - று.

அயலோர்தவம் முயல்வார்பிறர் அன்றேமணம் அழியும்
செயலால்நிகழ் புத்தூர்வரு சிவவேதியன் மகளும்
உயர்நாவலர் தனிநாதனை ஒழியாதுணர் வழியில்
பெயராதுயர் சிவலோகமும் எளிதாம்வகை பெற்றாள். 77

(இ - ள்.) தனக்குத்தானே சமானமாக விளங்குகின்ற புத்தூரில்வாழும் சடங்கவிசிவாசாரியருடைய புத்திரியும், (சிவபெருமான் சுந்தரமூர்த்திசுவாமிகளைத் தடுத்தாட்கொண்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழுது) அத்திருமணந் தவிர்ந்த காரணத்தால் உயர்வு பொருந்திய நம்பியாரூரரை இடைவிடாமல் மனதில் தியானித்துக் கொண்டு அவ்வழியினின்றுந் தவறாமல் இருந்து பின்பு கிடைத்தற்கரிய சிவலோகத்தையும் எளிதாகக் கிடைக்கப் பெற்றாள்; அப்படிப் பெறுதற்கு அயலோராயுள்ளவர்கள் வேறிடங்களிற் சென்று தவஞ்செய்வார்கள்; சடங்கவி சிவாசாரியருடைய புத்திரியார் அத்தன்மையையுடைய பிறர்போலன்று. - எ - று.

நாவலர்கோன் ஆரூரன் தனைவெண்ணெய் நல்லூரில்
மேவும்அருட் டுறையமர்ந்த வேதியராட் கொண்டதற்பின்
பூவலருந் தடம்பொய்கைத் திருநாவ லூர்புகுந்து
தேவர்பிரான் தனைப்பணிந்து திருப்பதிகம் பாடினார். 78

(இ-ள்.) திருநாவலூரருக்குத் தலைவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளைத்திருவெண்ணெய் நல்லூரிலுள்ள திருவருட்டுறை என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானாகிய பிராமணர் தடுத்தாட்கொண்ட பின்பு (அவ்விடத்தினின்றுந்) தாமரைமுதலிய மலர்கள் மிகுதியாக மலர்கின்ற விசாலம்பொருந்திய தடாகங்கள் சூழ்ந்த திருநாவலூரையடைந்து அந்தத்தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானை நமஸ்கரித்துத் தருப்பதிகம்பாடியருளினார். - எ - று.

சிவனுறையுந் திருத்துறையூர் சென்றணைந்து "தீவினையால்
அவநெறியிற் செல்லாமே தடுத்தாண்டாய் அடியேற்குத்
தவநெறிதந் தருள்" என்று தம்பிரான் முன்னின்று
பவநெறிக்கு விலக்காகுந் திருப்பதிகம் பாடினார். 79

(இ - ள்.) சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருத்துறையூரென்னுந் தலத்தையடைந்து, கொடிய தீவினையினாலே பாவவழியில் பிரவேசிக்காமல் தடுத்தாட் கொண்ட எம்பெருமானே! அடியேனுக்குத் தவத்திற்குரிய மார்க்கத்தைக் கட்டளையிட்டருளுமென்று, சிவபெருமானது திருமுன்னே நின்று ஜனன வழிக்கு விலக்காகிய திருப்பதிகத்தைப் பாடியருளினார். - எ - று.

புலனொன்றும் படிதவத்திற் புரிந்தநெறி கொடுத்தருள
அலர்கொண்ட நறுஞ்சோலைத் திருத்துறையூர் அமர்ந்தருளும்
நிலவுந்தண் புனலும்ஒளிர் நீள்சடை யோன் திருப்பாதம்
மலர்கொண்டு போற்றிசைத்து வந்தித்தார் வன்றொண்டர். 80

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) பஞ்சேந்திரியங்களும் அவற்றின் விஷயங்களிற் செல்லாமல் அடங்கும்படிக்குத் தவத்தில் அவர்விரும்பிய நெறியைக் கொடுத்தருள, நல்லவாசனைவீசுகின்ற மலர்கள் பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருத்துறையூரில் வீற்றிருந் தருளும் சந்திரனும், குளிர்ச்சிபொருந்திய கங்காநதியும் விளங்கு கின்ற நீண்ட சடையினையுடைய சிவபெருமானது திருவடிகளை மலர்களைக் கொண்டு அருச்சனை செய்து ஸ்தோத்திரஞ் செய்தார் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள். - எ - று.

திருத்துறையூர் தனைப்பணிந்து சிவபெருமான் அமர்ந்தருளும்
பொருத்தமாம் இடம்பலவும் புக்கிறைஞ்சிப் பொற்புலியூர்
நிருத்தனார் திருக்கூத்துத் தொழுவதற்கு நினைவுற்று
வருத்தமிகு காதலினால் வழிக்கொள்வான் மனங்கொண்டார். 81

(இ - ள்.) திருத்துறையூரென்னுந் தலத்தை வணங்கிப் (பின்பு) சிவபெருமான் வீற்றிருக்கின்ற தகுதியையுடைய பலதலங் களுக்கும் போய் வணங்கி அழகிய திருப்புலியூரென்னுஞ் சிதம்பரத்தில் திருநடனஞ் செய்தருளுகின்ற ஸ்ரீநடராஜ மூர்த்தியின் ஆனந்தத்தாண்டவத்தைத் தரிசனஞ்செய்தவற்கு எண்ணங்கொண்டு ஆராமை மிகுந்த பேரன்பினால் அவ்விடத் திற்குப் போகும்படித் திருவுள்ளங்கொண்டருளினார். எ - று.

மலைவளர்சந் தகில்பீலி மலர்பரப்பி மணிகொழிக்கும்
அலைதருதண் புனற் பெண்ணை யாறுகடந் தேறியபின்
நிலவுபசும் புரவிநெடுந் தேரிரவி மேல்கடலிற்
செலவணையும் பொழுதணையத் திருவதிகைப் புறத்தணைந்தார். 82

(இ - ள்.) மலையிலுண்டாகி வளர்ந்த சந்தனமரங்களும், அகில்மரங்களும், மயிற்பீலிகளும், பலவகைமலர்களுமாகிய இவைகளைப் பரப்பி முத்துமுதலியமணிகளைக் கரையில் ஒதுக்குகின்ற அலைகளையுடைய குளிர்ந்த நீர்பொருந்திய பெண்ணையாற்றினைக்கடந்து கரையேறியபின்பு, விளங்குகின்ற பச்சைக்குதிரைகள் கட்டிய பெரிய இரதத்தையுடைய சூரியனா னவன் மேல் திசைக்கடலிற் சென்று அஸ்தமிக்கும் மாலைக் காலம்வர, (அப்பொழுது தாம் தங்கியிருப்பதற்காகத்) திருவதிகை என்னுந் தலத்திற்குச் சமீபத்தில்வந்திருளினார். - எ - று.

“உடையஅர(சு) உலகேத்தும் உழவாரப் படையாளி
விடையவர்க்குக் கைத்தொண்டு விரும்புபெரும் பதியைமிதித்(து)
அடையுமதற் கஞ்சுவான்” என் றந்நகரில் புகுதாதே
மடைவளர்தண் புறம்பணையிற் சித்தவட மடம் புகுந்தார். 83

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) உலகத்தார் துதித்து வணங்குகின்ற உழவாரப் படையை யுடையவரும், நம்மை அடிமையாகவுடையவருமாகிய திருநாவுக்கரசு சுவாமிகள் ரிஷபா ரூடராகிய சிவபெருமானுக்குக் கைத்தொண்டு விரும்பிச்செய்த பெருமை பொருந்திய இந்தத் தலத்தை மிதித்துச் செல்வதற்கு அடியேன் அஞ்சுகின்றே னென்று அந்தத்திருவதிகை வீரட்டானமென்னுந் தலத்தி னுள்ளே போகாமல் நீர் மடைகளையுடைய குளிர்ந்தவயல்களி னருகிலிருக்கின்ற சித்தவடமடத்தையடைந்தருளினார். - எ - று.

வரிவளர்பூஞ் சோலைசூழ் மடத்தின்கண் வன்றொண்டர்
விரிதிரை நீர்க் கெடிலவட வீரட்டா னத்திறைதாள்
புரிவடைய மனத்தினராய்ப் புடைஎங்கும் மிடைகின்ற
பரிசனமும் துயில்கொள்ளப் பள்ளியமர்ந் தருளினார். ***84***

(இ - ள்.) வண்டுகள் ரீங்காரம் பண்ணுகின்ற ஓசைமிகுந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த சித்தவடமடத்தில், ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் பரந்த அலைகளையுடைய நீர்பொருந்திய கெடில நதிக்கு வடபுறத்திலுள்ள திருவீரட்டானத்தில் எழுந்தருளிய சிவபெருமானது திருவடிகளை விரும்புகின்ற திருவுள்ளத்தினை யுடையவராய்த் தம்மைச் சுற்றி எவ்விடத்திலும் நெருங்கி யிருக்கின்ற பரிசனங்களும் நித்திரைசெய்யத் தாமும் நித்திரை செய்தருளினார். - எ - று.

அதுகண்டு வீரட்டத் தமர்ந்தருளும் அங்கணரும்
முதுவடிவின் மறையவராய் முன்னொருவர் அறியாமே
பொதுமடத்தி னுட்புகுந்து பூந்தாரான் திருமுடிமேல்
பதுமமலர்த் தாள்வைத்துப் பள்ளிகொள்வார் போறப்பயின்றார். ***85***

(இ - ள்.) அப்படிச் சுந்தரமூர்த்திசுவாமிகள் நித்திரை செய்வதைத் திருவீரட்டானத்தில் வீற்றிருகுஞ் சிவபெருமான் அறிந்து முதிர்ந்தவடிவினையுடைய ஒரு விருத்தப்பிராமணராகி முதலில் ஒருவரும் அறியாமலிருக்கும்படி யாவருக்கும் பொது வாகிய அத்திருமடத்தினுள்ளே புகுந்து மலர்மாலையைத் தரித்த ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளது திருமுடியின்மேல் தாமரை மலர் போன்ற தமது திருவடிகளை வைத்து நித்திரை செய்பவரைப் போல இருந்தார். - எ - று.

அந்நிலைஆ ரூரன் உணர்ந் தருமறையோய்! உன்னடிஎன்
சென்னியில்வைத் தனை என்னத் திசையறியா வகைசெய்த(து)
என்னுடையமூப் புக்கான் என்றருள அதற்கிசைந்து
தன்முடிஅப்பால் வைத்தே துயிலமர்ந்தான் தமிழ்நாதன். ***86***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அப்படித் திருவடிகளைத் தமது முடியின்மேல் வைத்த தன்மையைச்சுந்தரமூர்த்திசுவாமிகள் அறிந்து (அவரைப்பார்த்து) அரியவேதங்களையுணர்ந்த பிராமணரே! உம்முடைய பாதங்களை எனது தலையின் மேல்வைத்தீரென்று சொல்ல, (அதற்குச் சிவபெருமானாகிய பிராமணர்) நீர் நித்திரை செய்யுந் திசையறியாமல் காலைவத்தது என்னுடைய விருத்தாப்பியமென்று அருளிச்செய்ய, அதற்கு ஒத்துக் கொண்டு தம்முடைய சிரசினை வேறொருதிசையில் வைத்து நித்திரைசெய்தருளினார் தமிழ்த்தலைவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள். - எ - து.

அங்குமவன் திருமுடிமேல் மீட்டும்அவர் தாள்நீட்டச்
செங்கயல்பாய் தடம்புடைசூழ் திருநாவ லூராளி
இங்கென்னைப் பலகாலும் மிதித்தனைநீ யார்என்னக்
கங்கைசடைக் கரந்தபிரான் அறிந்திலையோ எனக்கரந்தான். 87

(இ - ள்.) அவ்விடத்திலும் அந்தச் சுந்தரமூர்த்திசுவாமி களின் திருமுடியின்மேல் மறுபடியும் அப்பிராமணராகிய கடவுள் தமதுதிருவடிகளை நீட்டியருள, புறத்தில் செவ்விய கெண்டைமீன்கள் பாய்ந்து விளையாடுகின்ற நீர்வளம் பொருந்திய தடாகங்கள் சூழ்ந்த திருநாவலூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவ்விடத்தில் என்னைப் பலதரமும் மிதித்தீர், அவ்வாறுசெய்த நீர் யாரென்றுகேட்க, (அப்பொழுது) கங்கையைச் சடையில் மறைத்துப் பிராமணத் திருவுருவங் கொண்டெழுந்தருளிய சிவபெருமான் என்னை அறியாயோ? வென்று சொல்லி மறைந்தருளினார். - எ - று.

செம்மாந்திங் கியானறியா தென்செய்தேன் எனத்தெளிந்து
தம்மானை அறியாத சாதியார் உளரேஎன்(று)
அம்மானைத் திருவதிகை வீரட்டா னத்தமர்ந்த
கைம்மாவின் உரியானைக் கழல்பணிந்து பாடினார். 88

(இ - ள்.) (அப்பொழுது சுந்தரமூர்த்திசுவாமிகள் தமது முடியின்மேல் திருவடியைச் சூட்டினவர் சிவபெருமானென் றுணர்ந்து) இவ்விடத்தில் எழுந்தருளியவர் சிவபெருமானென் றறியாமல் இறுமாப்படைந்து யான் என்னகாரியஞ்செய்தே னென்று (மனங்கலங்கித்) தெளிவடைந்து, பெருமைபொருந்திய வராகிய திருவதிகை வீரட்டானத்தில் வீற்றிருக்கின்ற யானைத் தோலைப் போர்வையாகக் கொண்டருளிய வீரட்டானே சுரரைப் பாதம்பணிந்து "தம்மானையறியாத சாதியாருளரே" என்று முதலெடுத்துத் திருப்பதிகம் பாடியருளினார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொன்திரளும் மணித்திரளும் பொருகரிவெண் கோடுகளும்
மின்றிரண்ட வெண்முத்தும் விரைமலரும் நறுங்குறடும்
வன்றிரைக ளாற்கொணர்ந்து திருவதிகை வழிபடலால்
தென்றிசையில் கங்கையெனும் திருக்கெடிலம் தளைத்தாடி. 89

(இ - ள்.) திரட்சியாகிய பொற்பொடிகளையும், மணிகளின் தொகுதிகளையும், போர்செய்கின்ற யானைகளின் வெண்மை யான தந்தங்களையும், பிரகாசம் பொருந்திய வெண்மையாகிய முத்துக்களையும், வாசனைவீசுகின்ற பலவகை மலர்களையும், நல்ல சந்தனக்கட்டைகளையும் வலிய அலையென்னுங் கைகளால் கொண்டுவந்து திருவதிகை என்னுந் தலத்தை வழிபடுதலாலே தென்திசையிலுள்ள கங்கையென்று பெரியோர்களால் சொல்லப்பட்ட திருக்கெடில நதியில் மூழ்கி ஸ்நானஞ்செய்து. - எ - று.

அங்கணரை அடிபோற்றி அங்ககன்று மற்றந்தப்
பொங்குநதித் தென்கரை போய்ப் போர்வலித்தோள் மாவலிதன்
மங்கலவேள் வியில் பண்டு வாமனனாய் மண்இரந்த
செங்கணவன் வழிபட்டதிரமாணிக் குழி அடைந்தார். 90

(இ - ள்.) அழகிய கிருபாநோக்கத்தையுடையவராகிய வீரட்டானேசுவரரது திருவடிகளை வணங்கி அவ்விடத்தி னின்று நீங்கிப் பொங்குகின்ற நீரையுடைய அந்தக் கெடில நதியின் தென்கரைவழியே போய் யுத்தஞ்செய்தலில் வல்லமை பொருந்திய தோள்களையுடைய மாவலிச்சக்கிரவர்த்தி செய்த மங்கலகரம் பொருந்திய யாகசாலையில் முற்காலத்தில் வாமனாவதாரங்கொண்டுபோய் மூன்றடிமண்ணை யாசித்த சிவந்தகண்களையுடைய விஷ்ணுவானவர் பூசித்த திருமாணி குழியென்னுந் தலத்தை யடைந்தருளினார் ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள். - எ - று.

பரம்பொருளைப் பணிந்துதாள் பரவிப்போய்ப் பணிந்தவர்க்கு
வரந்தருவான் தினைநகரை வணங்கினர் வண்டமிழ்பாடி
நரம்புடையாழ் ஒலிமுழவின் நாதஒலி வேதஒலி
அரம்பையர்தம் கீதஒலி அறாத்தில்லை மருங்கணைந்தார். 91

(இ - ள்.) அத்திருமாணிகுழியென்னுந் தலத்தில் வீற்றிருக் கின்ற சிவபெருமானது திருவடிகளை வணங்கித் துதித்து அவ்விடத்தினின்று நீங்கித் தம்மிடத்தில் வந்து வந்தனஞ் செய்யும் அடியார்களுக்கு வேண்டிய வரத்தைக் கொடுக்கின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருத்தினைநகரை வணங்கிச் சிறந்த தமிழ்ப்பதிகத்தைப் பாடி, நரம்பினையுடைய வீணைகளின் ஓசையும், மத்தளங்களின் இனியவோசையும், வேதபாராயண வோசையும், அரம்பாஸ்திரீகள் பாடுகின்ற சங்கீதத்தின் ஓசையும் எக்காலத்தும் நீங்காதிருக்கின்ற ஸ்ரீசிதம்பரத்திற்குச்சமீபமாக எழுந்தருளினார். - எ - று.

தேம லங்கலணி மாமணி மார்பிற் செம்மல் அங்கயல்கள் செங்கமலத்தண்,
பூம லங்கஎதிர் பாய்வன மாடே புள்ள லம்புதிரை வெள்வளைவாவித்,
தாம லங்குகள் தடம்பணை சூழும் தண்மருங்கு தொழுவார்கள்தம் மும்மை,
மாம லங்களற வீடருள் தில்லை மல்லல் அம்பதியின் எல்லை வணங்கி.
92

(இ - ள்.) தேன்பொருந்திய மலர்மாலைகளையும், அழகிய மாணிக்க மாலைகளையுந்தரித்த மார்பினையுடைய ஸ்ரீசுந்தர மூர்த்திசுவாமிகள் அருகில் அன்னமுதலியபட்சிகள் சப்திக்கின்ற அலையோடு கூடிய வெண்மையான சங்குகளைத் தடாகங் களிலுள்ள குளிர்ந்த செந்தாமரைமலர்கள் அசையும்படி அழகிய கெண்டைமீன்கள் பாய்தற்கேதுவாகத் தாவுகின்ற மலங்குமீன்கள் விசாலமாகிய வயல்களில் சூழ்ந்திருக்கின்ற அத்தில்லையின் புறவிடங்களை வணங்குகின்றவருடைய ஆணவம்மாயை - கன்மமென்னும் மும்மலங்களும் ஒழிய மோக்ஷத்தைக் கொடுக்கின்ற ஸ்ரீசிதம்பரமென்னும் வளப்பம் பொருந்திய தலத்தின் அழகிய திருவெல்லையை வணங்கி. எ- று.

நாக சூதவகு ளஞ்சர ளஞ்சூழ் நாளி கேரம்இல வங்க நரந்தம்,
பூக ஞாழல்குளிர் வாழைம தூகம் பொதுளும் வஞ்சிபல எங்கும் நெருங்கி,
மேக சாலமலி சோலைக ளாகிமீது கோகிலம் மிடைந்து மிழற்றப்,
போகபூமியினும் மிக்கு விளங்கும் பூம்பு றம்பணை கடந்து புகுந்தார். 93

(இ - ள்.) புன்னை - மா - மகிழ் - சரளம் - சூழ்ந்திருக்கின்ற தென்னை - இலவங்கம் - நாரத்தை - கமுகு - குங்குமம் - குளிர்ச்சி பொருந்திய வாழை - இலுப்பை - நெருங்கிய வஞ்சி - பலா முதலிய விருக்ஷங்கள் எவ்விடங்களிலும் நெருக்கமுற்று மேகக் கூட்டங்கள் பொருந்திய சோலைகளாகி அச்சோலைகளிலுள்ள மரங் களின்மேல் குயில்கள் நெருங்கிக் கூவிக்கொண்டிருக்க, தெய்வலோகத்தைப் பார்க்கிலும் மிகுதியாகச் சிறந்துவிளங்கு கின்ற புறத்திலுள்ள அழகிய வயல்களைக்கடந்து ஸ்ரீசிதம்பரத் தின் எல்லைக்குள் சென்றருளினார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வன்னி கொன்றைவழை சண்பகம் ஆரம் மலர்ப்ப லாசொடு செருந்திமந் தாரம்,
கன்னி காரங்குர வங்கமழ் புன்னை கற்பு பாடலம் கூவிளம் ஓங்கித்,
துன்னு சாதிமரு மாலதி மௌவல் துதைந்த நந்திகர வீரம் மிடைந்த,
பன்ம லர்ப்புனித நந்த வனங்கள் பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான்.
94

(இ - ள்.) வன்னி - கொன்றை - சுரபுன்னை - சண்பகம் - சந்தனம் - மலர்கள் பொருந்திய முருக்கமரத்தோடு செருந்தி - மந்தாரை - கோங்கு - குரா - வாசனை வீசுகின்ற புன்னை கொடிமல்லிகை - பாதிரி - வில்வம் முதலிய விருட்சங்கள் உயர்ந்து, மலர்கள் நெருங்கிய சிறுசண்பகம் - வாசனை பொருந்திய முல்லை - மல்லிகை - இதழ்கள் பொருந்திய நந்தியாவர்த்தம் அலரி முதலியவற்றின் மிகுந்த பலமலர்களை யுடைய பரிசுத்தம்பொருந்திய திருநந்தவனங்களை வணங்கிச் சென்றார் மணம் வீசுகின்ற மாலையைத்தரித்த ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள். - எ - று.

இடம ருங்குதனி நாயகி காண ஏழ்பெ ரும்புவனம் உய்ய எடுத்து,
நடநவின்றருள் சிலம்பொலி போற்றும் நான்ம றைப்பதியை நாளும் வணங்கக்,
கடல்வ லங்கொள்வது போற்புடை சூழுங் காட்சி மேவிமிகு சேட்செல ஓங்கும்,
தடம ருங்குவளர் மஞ்சிவர் இஞ்சித் தண்கிடங்கை எதிர்கண்டு மகிழ்ந்தார்.
95

(இ - ள்.) இடப்பாகத்தில் ஒப்பற்ற உமாதேவியார் நின்று தரிசிக்கவும், பெருமைபொருந்திய ஏழுலகத்தி லுள்ளவர்களும் தரிசித்துக் கடைத்தேறவும் தூக்கி ஆநந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற (குஞ்சிதபாதத்தின்) திருச்சிலம் போசையை யாவருந் துதிக்கும் நான்குவேதங்களும் சூழ்ந்துமுழங்குகின்ற அச்சிதம்பரத்தை நாள்தோறும் வணங்கும்பொருட்டுச் சமுத்திர மானது பிரதக்ஷணஞ்செய்வதுபோல நான்கு பக்கங்களிலுஞ் சூழும்படியாகிய காட்சியையடைந்து மிகவும் நெடுந்தூரமளவும் உயர்ந்திருக்கின்ற விசாலமாகிய அதன் அடிப்புறத்தில் பொருந்திய மேகங்கள் தவழ்ந்தேறுகின்ற மதிலைச் சூழ்ந்த குளிர்ச்சி பொருந்திய நீருள்ள அகழியை (ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்) தமக்கெதிராகக்கண்டு மகிழ்வடைந்தார். - எ - று.

மன்று ளாடுமது வின்னசை யாலே மறைச்சு ரும்பறை புறத்தின் மருங்கே,
குன்று போலுமணி மாமதில் சூழுங் குண்ட கழக்கமல வண்டலர் கைதைத்,
துன்று நீறுபுனை மேனிய வாகித் தூய நீறுபுனை தொண்டர்கள் என்னச்,
சென்று சென்றுமுரல் கின்றன கண்டு சிந்தை அன்பொடு திளைத்ததெதிர் சென்றார்.
96

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) திருச்சிற்றம்பலத்தில் ஆநந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற சபாநாயகராகிய தேனையுண்ணவேண்டு மென்னும் ஆசையினாலே வேதங்களாகிய வண்டுகள் முழங்கு கின்ற அச்சிதம்பரத்தின் சுற்றுப்பக்கத்திலுள்ள மலைபோலு யர்ந்த அழகுபொருந்திய பெரிய மதிலைச்சூழ்ந்த ஆழமாகிய அகழியிலுள்ள தாமரைமலர்களிலிருக்கும் வண்டுகளானவை (அதனருகில்) அலர்ந்த தாழம்பூவில் செறிந்திருக்கின்ற வெண் பொடியைப்பூசிய உடம்பினையுடையவைகளாய்ப் பரிசுத்தம் பொருந்திய விபூதியைத் தரித்த அடியார்களைப்போல மலர்கள்தோறும் போய்ச் சப்திப்பதைக்கண்டு உள்ளத்தில் மிகுந்த பேரன்போடும் பத்தியில் முழுகி எதிராகச் சென்றார். - எ - று.

பார்வி ளங்கவளர் நான்மறை நாதம் பயின்ற பண்புமிக வெண்கொடி ஆடும்,
சீர்வி ளங்குமணி நாவொலி யாலும் திசைகள் நான்கெதிர் புறப்படலாலும்,
தார்வி ளங்குவரை மார்பின் அயன்பொன் சதுர்மு கங்களென ஆமின் தில்லை,
ஊர்வி ளங்குதிரு வாயில்கள் நான்கின் உத்த ரத்திசை வாயில்முன் எய்தி.
97

(இ - ள்.) உலகத்தார் நன்னெறியையடைந்து கடைத்தேறும் பொருட்டு விளங்குகின்ற நான்குவேதங்களின் அத்தியயன வோசை மிகுதியாக வுண்டாயிருப்பதினாலும், வெண்மை யாகிய கொடிகளில் கட்டப்பட்டு அசைகின்றசிறப்புப் பொருந் திய மணிகளின் நாவின் ஓசையினாலும், நான்கு திசைகளுக்கு நேராகப்புறப்பட்டுப்போவதற்கு வழிகளையுடைமையாலும், (சிலேடைவகையால்) நான்கு வேதங்களையும் நன்றாக வோதி யுணர்ந்த நற்குணமிகும்படி சரஸ்வதி வசிக்கப்பெற்ற சிறப்புப் பொருந்திய அழகிய நாவில்நின்றும் வருகின்ற வேதமுழக்கத் தினாலும், நான்கு திக்கிற்கும் நேராகக் காணப்படுதலாலும் மலர்மாலையைத் தரித்த மலைபோன்ற மார்பினையுடைய பிரமதேவனது அழகிய நான்கு முகங்களைப்போலிருக்கும் ஸ்ரீசிதம்பரத்தில் விளங்குகின்ற நான்கு திருவாயில்களில் வடக்குத்திருவாயிலின்முன் அடைந்து. - எ - று.

அன்பின் வந்தெதிர் கொண்டசீர் அடியார் அவர்க ளோநம்பி ஆரூரர் தாமோ,
முன்பி றைஞ்சின ரியாவரென் றறியா முறைமை யால்எதிர் வணங்கி மகிழ்ந்து,
பின்பு கும்பிடும் விருப்பில் நிறைந்து பெருகு நாவல்நக ரார்பெரு மானும்,
பொன்பி றங்குமணி மாளிகை நீடும் பொருவி றந்ததிரு வீதி புகுந்தார்.
98

Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) சுந்தரமூர்த்திசுவாமிகளைத் தரிசிக்கவேண்டு மென்னும் ஆசையோடு எதிர்கொண்டுவந்த சிறப்புப்பொருந்திய அடியார்களோ! அல்லது அச்சுந்தரமூர்த்திசுவாமிகளோ! முதலில் வணங்கினவர்கள் இன்னாரென்றறியக்கூடாத முறைமையோடு எதிரெதிராகவணங்கிச் சந்தேஷித்துப் பின்பு ஸ்ரீ நடராஜப்பெருமானை வணங்கவேண்டுமென்னும் ஆசை யினால் தமது உள்ளம்பூரித்து அன்புபெருகுகின்ற திருநாவலூரி லுள்ளவர்களுக்குத் தலைவராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளும் பொன்மயமாக விளங்குகின்ற அழகிய மாளிகைகள் நிறைந்த ஒப்பற்ற திருவீதியில் சென்றருளினார். - எ - று.

அங்கண் மாமறை முழங்கும் மருங்கே ஆட ரம்பையர் அரங்கு முழங்கும்,
மங்குல் வானின்மிசைஐந்தும் முழங்கும் வாச மாலைகளில் வண்டு முழங்கும்,
பொங்கும் அன்பருவி கண்பொழி தொண்டர் போற்றி சைக்கும்ஒலி எங்கும் முழங்கும்,
திங்கள் தங்குசடை கங்கை முழங்கும் தேவ தேவர்புரி யுந்திரு வீதி.
99

(இ - ள்.) சந்திரன் பொருந்திய சடையில் கங்கையாறானது சப்திக்கின்ற தேவதேவராகிய ஸ்ரீ நடராஜப்பெருமான் எழுந் தருளியிருக்கின்ற அழகியதிருவீதியில் சிறப்புப் பொருந்திய பலசாகைகளாகிய வேதங்கள் ஒலிக்கும், அதன்பக்கத்தில் நாட்டியஞ்செய்கின்ற அரம்பாஸ்திரீகளினது நாடகசாலைகள் ஒலிக்கும், மேகங்கள் தவழுகின்ற ஆகாயத்தில் ஐந்துவகையாகிய வாத்தியங்களும் ஒலிக்கும், வாசனை பொருந்திய மலர்மாலை களில் வண்டுகள் ஒலிக்கும், மிகுந்த அன்பினால் அருவி யாற்றைப் போல ஆநந்தக்கண்ணீரைச் சிந்துகின்ற அடியார்கள் துதிசெய்கின்ற தோத்திர வொலியானது எவ்விடத்திலும் ஒலிக்கும். - எ - று.

போக நீடுநிதி மன்னவன் மன்னும் புரங்கள் ஒப்பன வரம்பில ஓங்கி,
மாகம் முன்பருகு கின்றனபோலும் மாளிகைக்குலம் மிடைந்த பதாகை,
யோக சிந்தைமறை யோர்கள் வளர்க்கும் ஓம தூமமுயர் வானில் அடுப்ப,
மேக பந்திகளின் மீதிடை எங்கும் மின்னு டங்குவன என்ன விளங்கும்.
100

(இ - ள்.) மிகுந்த போகத்தையனுபவிக்கின்ற இந்திரனும், பெருஞ்செல்வத்தையுடைய குபேரனும், நிலைத்துவாழுகின்ற அமராவதி - அளகாபுரியென்னும் பட்டணங்களிலுள்ள மாளிகைகளை ஒப்பனவாகிய திருமாளிகைகளின்மேல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெருங்கக்கட்டியிருக்கின்ற அளவற்ற கொடியாடைகள் ஆகாயத்தை முற்பட்டு விழுங்குகின்ற தோற்றம்போல உயர்ந்து சிவயோகம் பொருந்திய திருவுள்ளத்தினையுடைய பிராமணர்கள் ஆகுதியால்வளர்க்கின்ற யாகப்புகையானது உயர்ந்த ஆகாயத்தையடைய (அதனால்) மேகக்கூட்டங்களின் இடைவெளிகளிலெல்லாம் மின்னல்கள் தோன்றிமறைவன போலப் பிரகாசிக்கும். - எ - று.

ஆடு தோகைபுடை நாசிகள் தோறும் அரணி தந்த சுடர் ஆகுதி தோறும்,
மாடு தாமமணி வாயில்கள் தோறும் மங்க லங்ககலசம் வேதிகை தோறும்,
சேடு கொண்டஒளி தேர்நிரை தோறும் செந்நெல் அன்னமலை சாலைகள் தோறும்,
நீடு தண்புனல்கள் பந்தர்கள் தோறும் நிறைந்த தேவர்கணம் நீளிடை தோறும்.
101

(இ - ள்.) கோபுரவிமானங்களின் உறுப்பாகிய மகா நாசியின் பக்கங்களிலெல்லாம் சிறைவிரித்தாடுகின்ற மயில்களும், ஆகுதி செய்தற் கிடமாகிய யாகசாலைகளிலெல்லாம் தீக்கடைக் கோலினாற் கடைந்த அக்கினிகளும், அழகிய வாயில்களின் புறங்களிலெல்லாம் கட்டப்பட்ட மலர்மாலைகளும், திண்ணைகளிலெல்லாம் மங்கலகரமான பூரணகலசங்களும், இரதங்களின் வரிசைகளிலெல்லாம் பெருமைபொருந்திய மிகுந்த பிரகாசமும், அன்னசாலைகளிலெல்லாம் செந்நெல் அரிசியால் சமைக்கப் பட்ட அன்னமலைகளும், தண்ணீர்ப்பந்தல்களிலெல்லாம் (வெவ்வேறு வகையாகப் பொருந்திய) மிகவுங் குளிர்ந்தநீரும், நீண்ட திருவீதிகளிலெல்லாம் நெருங்கிய தேவர் கூட்டங்களும் உண்டாயிருந்தன. - எ - று.

எண்ணில் பேர்உல கனைத்தினும் உள்ள எல்லை யில்அழகு சொல்லிய எல்லாம்,
மண்ணில் இப்பதியில் வந்தன என்ன மங்க லம்பொலி வளத்தன ஆகிப்,
புண்ணி யப்புனித அன்பர்கள் முன்பு புகழ்ந்து பாடல்புரி பொற்பின் விளங்கும்,
அண்ணல் ஆடுதிரு அம்பலம் சூழ்ந்த அம்பொன் வீதியினை நம்பி வணங்கி.
102

(இ - ள்.) எண்ணிக்கையில்லாத பெரிய எல்லாவுலகங்களிலுமிருக்கின்ற அளவில்லாதனவாகச் சொல்லப்பட்ட எல்லா அழகுகளும் நிலவுலகத்திலுள்ள இத்திருத்தில்லைப் பதியில் வந்தனவென்று சொல்லும்படி மங்கலகரம் பொருந்திய வளங்களையுடையனவாகிப் புண்ணியசொரூபர்களாகிய பரிசுத்தம் பொருந்திய திரு ஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலிய சைவசமயாரியர்கள் முன்னாளில் புகழ்ந்து (தேவார திருவாசகங்களாகிய) திருப்பாசுரங்களைப்பாடப்பெற்ற சிறப் போடும் விளங்கும் சிவபெருமான் ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற திருச்சிற்றம்பலத்தைச் சூழ்ந்த அழகிய பொன்மயமான (தேரோடுந்) திருவீதியை ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் நம்கஸ்கரித்து. - எ - று.

மால யன்சத மகன்பெருந் தேவர் மற்றும் உள்ளவர்கள் முற்றும் நெருங்கிச்,
சீல மாமுனிவர் சென்றுமுன் துன்னித் திருப்பி ரம்பின் அடிகொண்டு திளைத்துக்,
காலம் நேர்படுதல் பார்த்தயல் நிற்பக் காதல் அன்பர்கண நாதர் புகும்பொற்,
கோல நீடுதிரு வாயி லிறைஞ்சிக் குவித்த செங்கைதலை மேற்கொடு புக்கார். 103

(இ - ள்.) திருமால் - பிரமன் - இந்திரன்முதலிய பெரிய தேவர்களும் அவர்களல்லாத மற்றுமுள்ளவர்களும் முழுவதும் நெருங்கியும், நல்ல தவவொழுக்கத்தையுடைய சிறந்த முனிவர் களும் முதலில்சென்று நெருங்கியும், (அகாலமானபடியால் திருநந்திதேவரது திருக்கரத்திலுள்ள) திருப்பிரம்பினடியைப் பெற்றுக்கொண்டு அதனால் வருந்திப்போய்த் தரிசிப்பதற்குரிய காலம் வருவதை எதிர்பார்த்துக்கொண்டு அருகில்நிற்க, மிகுந்த பத்தியையுடைய அடியார்கூட்டங்களும் சிவகணநாதர்களும் தடையின்றி உள்ளே செல்லுகின்ற பொன்மயமாகிய அழகிய நீண்ட திருக்கோபுரவாயிலை வணங்கிக் குவித்த திருக்கரங் களைச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு உள்ளே புகுந்தருளி னார். - எ- று.

பெருமதில் சிறந்த செம்பொன்மா ளிகைமின் பிறங்குபே ரம்பலம் மேரு,
வருமுறை வலங்கொண் டிறைஞ்சிய பின்னர் வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார்,
அருமறை முதலில் நடுவினில் கடையில் அன்பர்தம் சிந்தையில் அலர்ந்த,
திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம்பலம்முன் திருஅணுக்கன்திரு வாயில். 104

(இ - ள்.) பெரியமதிலால் சிறப்பினையடைந்த செம்பொன் மயமாகி மாளிகைவரிசையினுள்ளே மின்னலைப்போல ஒளிவீசுகின்ற பேரம்பலமாகிய மேருவை வலம்வரவேண்டிய முறைமைப்படிவலமாக வந்து வணங்கினபின்பு, (ஸ்ரீ நடராஜப் பெருமானை) வணங்கும்படிக்கு மிகுந்த களிப்போடும் அறிதற் கருமையாகிய வேதங்களின் முதல் - இடை - கடையென்னு மூன்றிடங்களிலும், அடியார்களது இதயதாமரைகளிலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளிப்பட்டிருக்கின்ற அழகு வளருகின்ற பிரகாசம் பொருந்திய திருச்சிற்றம்பலத்திற்கு முன்பாகவுள்ள திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார். - எ - று.

வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப மன்றுளே மாலயன் தேட,
ஐயர்தாம் வெளியே ஆடுகின் றாரை அஞ்சலி மலர்த்திமுன் குவித்த,
கைகளோ திளைத்த கண்களோ அந்தக்கரணமோ கலந்தஅன் புந்தச்,
செய்தவப் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான் திருக்களிற்றுப்படி மருங்கு. 105

(இ - ள்.) விஷ்ணு, பிரமன் என்னும் இருவர்களும் முன்னாளில் அடியையும் முடியையும் தேட அவர்களுக்கு அரியவராய் உலகத்தார் தரிசித்துக் களிப்படையும்படி வேதங்களாகிய சிலம்புகள் சப்திக்க கனகசபையில் பகிரங்கமாக ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற ஸ்ரீநடராஜமூர்த்தியைத் திருமுன்னே அஞ்சலிசெய்து தலைமேல் ஏறக் குவித்தகைகளோ! திருமேனியைத் தரிசித்து அதனிடத்தே கலந்தகண்களோ! அக்கண்களின் விழயேசென்ற அந்தக்கரணங்களோ! கலப்பான அன்பின்வழியே செலுத்த, தவஞ்செய்தலில் பெரியோராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் திருக்களிற்றுப்படியி னருகில் சென்று நமஸ்காரஞ்செய்து எழுந்துநின்றார். - எ - று.

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும்,
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும் திருந்துசாத் துவிகமே ஆக,
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின்,
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். 106

(இ - ள்.) சத்தம் - ஸ்பரிசம் ரூபம் - ரசம் - கந்தம் என்னும் பெரியஐம்புலவுணர்ச்சியினையும் மற்றை இந்திரியங்களன்றிக் கண்களே பெற்றுக்கொள்ளவும், இத்தன்மையினவென்று அளவிட்டுரைப்பதற்கரிய மனம் - புத்தி - சித்தம் - அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கும் சித்தமேயாகவும், அக் கரணங்களைச் செலுத்துகின்ற சத்துவகுணம் - ரசோகுணம் - தமோகுணம் என்னும் முக்குணங்களும் திருத்தமாகிய சத்துவகுணமேயாகவும் சந்திரன் விளங்குகின்ற சடையினை யுடைய சிவபெருமான் ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற அளவில்லாத சிவானந்தத்தை விளைக்கும் ஒப்பற்ற திருநடனத் தின் காட்சியினாலலுண்டாகிய பேரின்ப வெள்ளத்தில் முழுகினவராய் ஓர்காலத்துங் கெடாத மகிழ்ச்சியினால் உடலம் பூரித்தார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப் பெற்று, மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம்ஆம்" என்று, கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக் கைம்மலர் உச்சிமேற் குவித்துப், பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார். 107

(இ - ள்.) பரிசுத்தம்பொருந்திய சந்திரன் விளங்குகின்ற சடையினையுடைய பெருமானே! தேவரீரது திருநடனத்தைத் தரிசிக்கப்பெற்று மண்ணுலகத்திலே பிறந்த இம்மானிடப் பிறவியே அடியேனுக்கு மேலான இன்பமாமென்று சொல்லி இரண்டு கண்ணிகளிலும் அருவியாற்றைப்போல ஆனந்தக் கண்ணீர் சிந்தத் தாமரைமலர் போன்ற கைகளைச் சிரசின் மேலேறக் குவித்துப் பண்ணோடுகூடி அரிதற்கரிய திருப்பதிகத் தைப் பாடித் துதித்து வணங்கினார். - எ - று.

தடுத்துமுன் ஆண்ட தொண்டனார் முன்பு தனிப்பெருந் தாண்டவம் புரிய, எடுத்தசே வடியார் அருளினால் "தரளம் எறிபுனல் மறிதிரைப் பொன்னி, மடுத்தநீள் வண்ணப் பண்ணை ஆரூரில் வருக நம்பால்" என வானில், அடுத்தபோ தினில்வந் தெழுந்ததோர் நாதம் கேட்டலும் அதுவுணர்ந் தெழுந்தார். 108

(இ - ள்.) முன் திருமணக்காலத்திலே தனக்கடிமையென்று முறியோலையைக்காட்டித் தடுத்தாட்கொள்ளப்பெற்றவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கெதிரே ஒப்பற்ற பெரிய ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளும் பொருட்டுத் தூக்கிய சிவந்தகுஞ்சித பாதத்தையுடைய சிவபெருமானது திருவருளினால் முத்துக் களைக் கரையில்வீசுகின்ற நீரையுடைய காவிரியாறானது பாய்கின்ற அழகிய பெரியவயல்கள் சூழ்ந்த திருவாரூரில் நம் மிடத்தில் நீ வரக்கடவையென்று ஆகாயத்தில் அப்பொழுதே ஒலித்தெழுந்த ஒரசரீரிவாக்கைக் கேட்டவுடனே அதையறிந்து திருவாரூருக்குப் போகும்படி எழுந்தருளினார். - எ - று.

ஆடுகின் றவர்பேர் அருளினால் நிகழ்ந்த அப்பணி சென்னிமேற் கொண்டு, சூடுதங் கரங்கள் அஞ்சலி கொண்டு தொழுந்தொறும் புறவிடை கொண்டு, மாடுபே ரொளியின் வளரும்அம் பலத்தை வலங்கொண்டு வணங்கினர் போந்து, நீடுவான் பணிய உயர்ந்த பொன் வரைபோ நிலைஎழு கோபுரங் கடந்து. 109

(இ - ள்.) (கனகசபையில்) ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளு கின்ற ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய திருவருளினால் ஆகாயத் தில் அசரீரியாகத்தோன்றிய அந்தக்கட்டளையைச் சிரசின்மேல் வைத்துக் கொண்டு, தலையின் மேல்சூடிய தமது கைகளை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஞ்சலிசெய்து வணங்கும்போதெல்லாம் அத்திருத்தில்லையி னின்றும் புறத்தேபோவதற்கு அனுமதி பெற்றுக்கொண்டு, மிகுந்த பிரகாசமாக விளங்குகின்ற பொன்னம்பலத்தைப் பிரதக்ஷணஞ்செய்து வணங்கிப் புறத்தே சென்று, நீண்ட மேகமண்டலமுந் தாழும்படி உயர்ந்த மேருமலை போன்றிருக் கின்ற ஏழு நிலைகளையுடைய (தென்றிசைக்) கோபுரத்தைக் கடந்துசென்று, - எ - று.

நின்றுகோ புரத்தை நிலமுறப் பணிந்து நெடுந்திரு வீதியை வணங்கி,
மன்றலார் செல்வ மறுகினூ டேகி மன்னிய திருப்பதி அதனில்,
தென்றிசை வாயில் கடந்து முன் போந்து சேட்படுந் திருவெல்லை இறைஞ்சிக்,
கொன்றைவார் சடையான் அருளையே நினைவார் கொள்ளிடத் திருநதி கடந்தார்.
110

(இ - ள்.) அவ்விடத்தில் நின்று அத்திருக்கோபுரத்தைப் பூமியில் தமது தேகம் பொருந்தும்படிச் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து, பெரிய திருவீதியைத் தொழுது, கலியாணமுதலிய சுபகாரியங்கள் நீங்காதிருக்கின்ற செல்வத்தையுடைய அவ் வீதியின் வழியாகப்போய் நிலைபெற்ற அத்திருப்பதியிலுள்ள தெற்குவாயிலைக்கடந்து, புறத்தில் வந்து தூரத்திலிருக்கும் அத்திருவெல்லையைத் தொழுது, கொன்றைமலர்மாலைத் தரித்த நீண்டசடையினையுடைய சிவபெருமானாது திருவரு ளையே தியானித்துச் செல்கின்றவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அழகிய கொள்ளிடமென்னும் நதியைக்கடந்து சென்றருளினார். - எ - று.

புறந்தருவார் போற்றிசைப்பப் புரிமுந்நூல் அணிமார்பர்
அறம்பயந்தான் திருமுலைப்பால் அமுதுண்டு வளர்ந்தவர்தாம்
பிறந்தருளும் பெரும்பேறு பெற்றதென முற்றுலகில்
சிறந்தபுகழ்க் கழுமலமாம் திருப்பதியைச் சென்றணைந்தார். 111

(இ - ள்.) தம்மைச் சூழ்ந்து வருகின்ற பரிசனங்கள் துதிசெய்ய முப்புரியாகிய உபவீதத்தைத் தரித்த திருமார்பினையுடைய ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள், முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்த உமாதேவியாரது திருமுலைப்பாலமுதத்தையுண்டு வளர்ந்தவராகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருவ வதாரஞ் செய்தருளுதற்கு ஏதுவான பெரிய தவப்பேற்றைப் பெற்றதென்று உலகமுழுவதும்பரவிய பெரும்புகழையுடைய சீகாழிஎன்னுந் திருப்பதிக்கு எழுந்தருளினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிள்ளையார் திருவவதா ரஞ்செய்த பெரும்புகலி
யுள்ளுநான் மிதியேனென் றூரெல்லைப் புறம்வணங்கி
வள்ளலார் வலமாக வரும்பொழுது மங்கையிடங்
கொள்ளுமால் விடையானு யெதிர்காட்சி கொடுத்தருள. 112

(இ - ள்.) திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவவதாரஞ் செய்தருளிய பெருமைபொருந்திய சீகாழியென்னுந்தலத்தின் திருவெல்லையுள்ளும் நான் காலினால் மிதிக்கமாட்டேனென்று அத்திருப்பதியின் புறவெல்லையை வணங்கி ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிரதக்ஷணமாக வரும்பொழுது, உமாதேவியாரை இடப்பாகத்தில் வைத்தருளிய தோணியப்பரும் அவருக் கெதிராக எழுந்தருளித் தரிசனங்கொடுத்தருள. - எ - று.

மண்டியபே ரன்பினால் வன்றொண்டர் நின்றிறைஞ்சித்
'தெண்டிரைவே லையில்மிதந்த திருத்தோணி புரத்தாரைக்
கண்டுகொண்டேன் கயிலையினில் வீற்றிருந்தபடி' என்று
பண்டரும்இன் னிசைபயின்ற திருப்பதிகம் பாடினார். 113

(இ - ள்.) நிறைந்த பேரன்பினாலே ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் (தமக்குக் காட்சிகொடுத்தருளிய) சிவபெருமானது திருமுன்னே நின்று வணங்கிப் பரிசுத்தம் பொருந்திய அலைகளையுடைய சமுத்திரத்தில் (கற்பகாலங்கள் தோறும்) மிதந்தருளிய திருத்தோணிபுரம் என்னும் சீகாழியில் எழுந் தருளியிருக்கின்ற பெருமானைத் திருக்கயிலாயத்தில் வீற்றிருந் தருளிய திருக்கோலமாக இங்குக் "கண்டு கொண்டேன்" என்று பண்ணமைந்த இனிய இசையோடு பொருந்திய திருப்பதிகத் தைப் பாடியருளினார். - எ - று.

இருக்கோலம் இடும்பெருமான் எதிர் நின்றும் எழுந்தருள
வெருக்கோளுற் றதுநீங்க ஆரூர்மேற் செலவிரும்பிப்
பெருக்கோதஞ் சூழ்புறவப் பெரும்பதியை வணங்கிப்போய்த்
திருக்கோலக் காவணங்கிச் செந்தமிழ்மா லைகள்பாடி. 114

(இ - ள்.) வேதங்கள் இன்னமும் இத்தன்மையினரென்று உணரமாட்டாமல் முறையிட்டுக்கொண்டிருக்கின்ற சிவபெருமான் ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு எதிரில் நின்றும் தரிசனந்தந்தருளி அந்தர்த்தானமாக அதனால் பயந்து பின் அப்பயத்தினின்றும் நீங்கித் திருவாரூருக்கு எழுந்தருளத் திருவுள்ளங்கொண்டு நீர்ப்பெருக்கினையுடைய சமுத்திரஞ் சூழ்ந்த சீகாழியென்னும் பெருமை பொருந்திய திருப்பதியை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வணங்கி அவ்விடத்தினின்றும்போய்த் திருக்கோலக்கா வென்னுந் திருப்பதியை வணங்கி அவ்விடத்தினின்றும்போய்த் திருக்கோலக்காவென்னுந் திருப்பதியை செவ்விய தமிழ்ப் பதிகத்தைப் பாடியருளி. - எ - று.

தேனார்க்கும் மலர்ச்சோலைத் திருப்புன்கூர் நம்பர்பால்
ஆனாப்பே ரன்புமிக அடிபணிந்து தமிழ்பாடி
மானார்க்கும் கரதலத்தார் மகிழ்ந்தஇடம் பலவணங்கிக்
கானார்க்கும் மலர்த்தடஞ்சூழ் காவிரியின் கரையணைந்தார். 115

(இ - ள்.) வண்டுகள் (தேனையுண்டு) ஆரவாரிக்கின்ற மலர்கள் பொருந்திய சோலை சூழ்ந்த திருப்புன்கூரென்னுந் தலத்தில் எழுந்தருளிய சிவலோகநாதரிடத்தில் நீங்காத பேரன்பானது அதிகரிக்க அவரது திருவடிகளில் வணங்கித் தமிழ்வேதமாகிய திருப்பதிகம் பாடி மானானது சப்தித்துக் கொண்டிருக்கின்ற திருக்கரத்தையுடைய சிவபெருமான் மனமகிழ்ந்து வீற்றிருக்கின்ற திருநீடூர் முதலிய பலதிருப் பதிகளையும் வணங்கி வாசனைபொருந்திய தாமரைமுதலிய மலர்களையுடைய தடாகங்கள் சூழ்ந்த காவிரிநதியின் கரையினை யடைந்தார் ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள். - எ - று.

வம்புலா மலர்அலைய மணிகொழித்து வந்திழியும்
பைம்பொன்வார் கரைப்பொன்னிப் பயில்தீர்த்தம் படிந்தாடித்
தம்பிரான் மயிலாடு துறைவணங்கித் தாவில்சீர்
அம்பர்மா காளத்தின் அமர்ந்தபிரான் அடிபணிந்தார். 116

(இ - ள்.) வாசனைவீசுகின்ற பலவகை மலர்கள் அலைந்துகொண்டுவர முத்துமுதலிய மணிகளைக் கரையில் ஒதுக்கிக்கொண்டுவந்து பாய்கின்ற பசும்பொன் மயமாகிய நீண்ட கரையினையுடைய காவிரிநதியென்று சொல்லப்பட்ட தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்து ஆத்மநாயகராகிய மயூரேசர் வீற்றிருக்கும் திருமயிலாடுதுறை என்னுந் தலத்தை வணங்கி அங்குநின்றும் எழுந்தருளிக் கெடாத சிறப்பினையுடைய திருவம்பர்மாகாளமென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானது திருவடிகளை வணங்கியருளினார். - எ - று.

மின்னார்செஞ் சடைஅண்ணல் விரும்பு திருப்புகலூரை
முன்னாகப் பணிந்தேத்தி முதல்வன்தன் அருள்நினைந்து
பொன்னாரும் உத்தரியம் புரிமுந்நூல் அணிமார்பர்
தென்னாவ லூராளி திருவாரூர் சென்றணைந்தார். 117

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) மின்னலைப்போலும் விளங்குகின்ற சிவந்த சடைமுடியினையுடைய சிவபெருமான் விருப்பங்கொண்டு வீற்றிருக்கின்ற திருப்புகலூரைத்தமக்கு முன்பாகவணங்கித் துதித்து முதற்பெருங்கடவுளாகிய அப்பெருமானது திருவருளை நினைந்து பீதாம்பரவுத்தரியத்தை யுடைத்தாகிய முப்புரி நூலையணிந்த மார்பினையுடைய ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாரூரின் திருவெல்லையை யடைந்தருளினார். - எ- று.

தேராரும் நெடுவீதித் திருவாரூர் வாழ்வாருக்(கு)
"ஆராத காதலினம் ஆரூரன் நாம்அழைக்க
வாராநின் றான்அவனை மகிழ்ந்தெதிர்கொள் வீர்"என்று
நீராரும் சடைமுடிமேல் நிலவணிந்தார் அருள்செய்தார். 118

(இ - ள்.) கங்காநதி பொருந்திய சடையின்மேல் இளம் பிறையைத் தரித்தருளிய தியாகேசரானவர், நீண்டதேரோடுந் திருவீதிகளையுடைய திருவாரூரில் வாழ்கின்ற அடியார்களுக் குச் சொப்பனத்தில் தோன்றி, குறையாத பேரன்பினையுடைய நமது நம்பியாரூரன் நாம் அழைத்தகாரணத்தினால் இவ் விடத்திற்கு வருகின்றான், (ஆதலால்) அந்நம்பியாரூரனைச் சந்தோஷத்தோடு எதிர்கொண்டழைத்துவரக் கடவீர்க ளென்று கட்டளை யிட்டருளினார். - எ - று.

தம்பிரான் அருள்செய்யத் திருத்தொண்டர் அதுசாற்றி
"எம்பிரா னார்அருள்தான் இருந்தபரி சிதுவானால்
நம்பிரா னார்ஆவார் அவரன்றே" எனும்நலத்தால்
உம்பர்நா டிழிந்ததென எதிர்கொள்ள உடன் எழுந்தார். 119

(இ - ள்.) சிவபெருமான் (அடியார்களின் சொப்பனத் தில்தோன்றி) இவ்வறாகக் கட்டளையிட்டருள, திருத்தொண் டர்கள் அக்கட்டளையை யாவரு மறியும்படித் தெரிவித்து எமது பெருமானுடைய திருவருளானது இத்தன்மையினையுடைதா யிருந்ததென்றால் நமக்கு ஆண்டவராயுள்ளவர் அந்த நம்பியாரூரரேயென்று நினைக்கும் அன்போடு உடனே தேவருலகம் ஒருங்கே புறப்பட்டு இப்பூவுலகத்தில் வந்ததென்று யாவருஞ் சொல்ல அவரை எதிர்கொண்டழைத்து வரும்படிச் சேர்ந்தெழுந்தார்கள். - எ - று.

மாளிகைகள் மண்டபங்கள் மருங்குபெருங் கொடிநெருங்கத்
தாளின்நெடுந் தோரணமும் தழைக்கமுகும் குழைத்தொடையும்
நீளிலைய கதலிகளும் நிறைந்தபசும் பொற்றசும்புற்
ஒளிநெடு மணிவிளக்கும் உயர்வாயில் தோறும் நிரைத்தார். 120

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) மேல்வீடுகளிலும், மண்டபங்களிலும் பெரிய கொடியாடைகள் நெருங்கியிருக்கவும், கால்கள்நாட்டி அதில் கட்டப்பட்ட நீண்டதோரணங்களையும் தழைகளையுடைய கமுகமரங்களையும், மாவிலை முதலிய தழைகளால் கட்டப்பட்ட தோரணங்களையும், நீண்ட இலைகளையுடைய வாழைமரங்களையும், நீர் நிறைந்த பசும்பொன்னாலாகிய பூரணகலசங்களையும், ஒழுங்காக நீண்டிருக்கின்ற இரத்தின தீபங்களையும் உயர்ந்தவீட்டின் வாயில்கள்தோறும் வரிசையாக வைத்தார்கள். - எ - று.

சோதிமணி வேதிகைகள் தூய்நறுஞ்சாந் தணிநீவிக்
கோதில்பொரி பொற்சுண்ணங் குளிர்தரள மணிபரப்பித்
தாதிவர்பூந் தொடைமாலைத் தண்பந்தர் களுஞ்சமைத்து
வீதிகள்நுண் துகள்அடங்க விரைப்பனி நீர்மிகத் தெளித்தார். 121

(இ - ள்.) பிரகாசம்பொருந்திய நவரத்தினங்கள் பதித்த திண்ணைகளில் பரிசுத்தமாகிய நல்ல சந்தனக்குழம்பை அழகாக மெழுகி அதன்மேல் குற்றமற்ற பொரிகளையும், பொற்சுண்ணங் களையும், குளிர்ச்சிபொருந்திய முத்துக்களையும், பல வகை ரத்தினங்களையிம்பரப்பி மகரந்தங்களைச்சிந்தி அலர்ந்த மலர்மாலைகளால் குளிர்ந்த பூம்பந்தல்களையும் உண்டாக்கித் திருவீதிகளில் சிறிய தூசுகளடங்கும்படி வாசனைவீசுகின்ற பனிநீரை மிகுதியாகத் தெளித்தார்கள். - எ - று.

மங்கலகீ தம்பாட மழைநிகர்தூ ரியம்முழங்கச்
செங்கயற்கண் முற்றிழையார் தெற்றிதொறும் நடம்பயில
நங்கள்பிரான் திருவாரூர் நகர்வாழ்வார் நம்பியைமுன்
பொங்கெயில்நீள் திருவாயில் புறம்உறவத் தெதிர்கொண்டார். 122

(இ - ள்.) மங்கலகரமான சங்கீதங்களைப் பாடவும், மேகத்தின் முழக்கத்தையொத்த பேரிகைமுதலிய வாத்தியங்கள் முழங்கவும், செவ்விய கெண்டை மீன்போன்ற கண்களையுடைய செய்தொழிலில் குறைவின்றி முற்றிய ஆபரணங்களையணிந்த நடனமாதர்கள் நடனாசாலைகள் தோறும் நடனஞ்செய்யவும், நமது தியாகராஜப்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருவா ரூர்த் திருநகரில் வாழ்கின்ற அடியார்கள் ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகளை முன்னே பொலிவினையுடைய நகர்ப்புறத்திலுள்ள நீண்ட மதிலினையுடைய திருவாயிலின் புறத்தேவந்து எதிர் கொண்டார்கள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்தெதிர் கொண்டு வணங்கு வார்முன் வன்றொண்டர் அஞ்சலி கூப்பிவந்து,
சிந்தை களிப்புற வீதியூடு செல்வார் திருத்தொண்டர் தம்மை நோக்கி,
"எந்தை இருப்பதும் ஆரூர்அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்" என்னும்,
சந்த இசைப்பதிகங்கள் பாடித் தம்பெருமான் திருவாயில் சார்ந்தார். 123

(இ - ள்.) வன்றொண்டப் பெருமானாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்மை யெதிர்கொண்டு வந்து வணங்கும் அடியார் களுக்கு முன்னே தமது கைகளை அஞ்சலியாகக் குவித்து வணங்கி அவர்களுக்கெதிரே வந்து மனதில் சந்தோஷமுண் டாகத் திருவீதியில் எழுந்தருளுகின்றவர் அத்திருத்தொண்டர் களைப் பார்த்து "எந்தையிருப்பதும் ஆரூரவ ரெம்மையு மாள்வரோ கேளீர்" என்கிற சந்தமாகிய இசையினையுடைய திருப்பதிகத்தைப்பாடியருளித் தமது பெருமானாகிய கடவுளி னது திருக்கோயிலின் திருவாயிலை யடைந்தருளினார். - எ - று.

வானுற நீள்திரு வாயில் நோக்கி மண்ணுற ஐந்துறப்பால் வணங்கித்,
தேனுறை கற்பக வாசமாலைத் தேவாசிரியன் தொழுதிறைஞ்சி,
ஊனும் உயிரும்உருக்கும் அன்பால் உச்சி குவித்த செங்கைகளோடும்,
தூநறுங் கொன்றையான் மூலட்டானம் சூழ்திரு மாளிகை வாயில் புக்கார். 124

(இ - ள்.) ஆகாயத்தை யளாவ வுயர்ந்திருக்கின்ற திருவாயிலைத் தரிசித்துப் பூமியிலே தமது திருமேனி பொருந்தப் பஞ்சாங்கவிதிப்படி நமஸ்கரித்துத் தேன் பொருந்திய கற்பகமலர்களால் தொடுத்த வாசனைவீசுகின்ற மாலைகள் கட்டியிருக்கின்ற தேவாசிரியமண்டபத்தை வணங்கித் துதித்து, உடம்பையும் உயிரையும் உருகச்செய்கின்ற பேரன்பினால் தமது சிரசின்மேல் குவித்த சிவந்த திருக்கைகளோடும் பரிசுத்தம் பொருந்திய நல்லமணம்வீசுகின்ற கொன்றை மலர் மாலையைத் தரித்தருளிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருமூலத்தானத் தைச் சூழ்ந்த திருமாளிகையின் திருவாயிலையடைந்தருளினார். எ - று.

புற்றிடங் கொண்ட புராதனனைப் பூங்கோயில் மேய பிரானை யார்க்கும்,
பற்றிடம்ஆய பரம்பொருளைப் பார்ப்பதி பாகனைப் பங்க யத்தாள்,
அர்ச்சனைசெய்ய அருள்புரிந்த அண்ணலை மண்மிசை வீழ்ந்திறைஞ்சி,
நற்றமிழ் நாவலர் கோன்உடம்பால் நன்மையின் தன்மையை மெய்ம்மை பெற்றார். 125

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) புற்றினைத் தமக்கிடமாகக்கொண் டெழுந்தருளிய பழம்பொருளாயுள்ளவரை, பூங்கோயிலில் வீற்றிருக்கின்ற பெருமானை, யாவர்க்கும் அடைதற்கிடமாகிய பரம்பொருளை, உமாதேவியாரை யிடப்பாகத்திலுடைய கடவுளை, இலக்குமி தேவி பூசிக்க அவளுக்கு (மாங்கல்யபிக்ஷைதந்து) திருவருள் செய்த தலைவரைப் பூமியில் விழுந்து நமஸ்காரஞ்செய்து, நல்ல தமிழ்ப்பதிகத்தைப் பாடுகின்ற திருநாவலூராகிய ஸ்ரீ சுந்தர மூர்த்திசுவாமிகள் தேகத்தைப் பெற்றதனாலடைய வேண்டிய நன்மையின் விளைவை மெய்மையாகப் பெற்றார். - எ - று.

அன்பு பெருக உருகி உள்ளம் அலையஅட் டாங்க பஞ்சாங்க மாக,
முன்பு முறைமையி னால்வணங்கி முடிவிலாக் காதல் முதிர ஓங்கி,
நண்புலன் ஆகிய ஐந்தும்ஒன்றி நாயகன் சேவடி எய்தப் பெற்ற,
இன்பவெள் ளத்திடை மூழ்கிநின்றே இன்னிசை வண்டமிழ் மாலை பாட. 126

(இ - ள்.) அன்பானது தம்முள்ளே பெருக்கெடுத்து அதனால் மனங்கசிந்துருகித் ததும்ப அஷ்டாங்கமுறையும் பஞ்சாங்க முறையும் பொருந்த முன்னே முறைமைப்படி வணங்கி முடிவில்லாத பேரன்பானது அதிகரிக்க அதனால் உயர்வை யடைந்த நன்மை பொருந்திய ஐம்புலன்களும் ஒருவழிபட்டுச் சிவபெருமானுடைய திருவடிகளை அடையப்பெற்ற பேரின்பவெள்ளத்தில் முழுகிநின்று இனிய இசைபொருந்திய வளமாகிய தமிழ்ப்பதிகத்தைப்பாடியருள. - எ - று.

வாழிய மாமறைப் புற்றிடங்கொள் மன்னவ னார்அருளாலோர் வாக்குத்,
"தோழமை ஆக உனக்கு நம்மைத் தந்தனம் நாம்முன்பு தொண்டு கொண்ட,
வேள்வியில் அன்றுநீ கொண்ட கோலம் என்றும் புனைந்துநின் வேட்கைதீர,
வாழிமண் மேல்விளை யாடுவாய்" என்றாரூரர் கேட்க எழுந்த தன்றே.
127

(இ - ள்.) பெருமை பொருந்திய பிரணவசொரூபமாகிய புற்றினை யிடமாகக் கொண்டருளிய சிவபெருமானது திருவருளினால் ஓர் அசரீரிவாக்கானது நம்மை உனக்குத் தோழனாகக் கொடுத்தோம், நாம் முன்பு உன்னைத் தடுத்தாட்கொண்ட கலியாண காலத்தில் நீ தரித்திருந்த மணக்கோலத்தை எந்நாளும் தரித்துக் கொண்டு உன்னுடைய ஆசைதீரும்படி சமுத்திரஞ்சூழ்ந்த இந்நிலவுலகத்தில் விளையாடுவாயாக வென்று ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் காதில் கேட்கும்படியாக எழுந்தது. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேட்க விரும்பிவன் றொண்டர் என்றும் கேடிலா தானை இறைஞ்சி நின்றே,
"ஆட்கொள வந்த மறையவனே! ஆரூர் அமர்ந்த அருமணியே!,
வாட்கயல் கொண்டகண் மங்கை பங்கா! மற்றுன் பெரிய கருணையன்றே!
நாட்கம லப்பதம் தந்ததின்று நாயினே னைப்பொரு ளாக" என்றார்.
128

(இ - ள்.) ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் அவ்வசரீரிவாக்கைக் கேட்டவுடனே விருப்பங்கொண்டு, எக்காலத்திலும் அழிவில்லாத சிவபெருமானை வந்தனஞ்செய்து நின்று, என்னைத்தடுத்தாட்கொள்ளும்படி பிராமணத்திருவுருவங் கொண்டு எழுந்தருளிவந்த பெருமானே! திருவாரூரில் புற்றினையிடமாகக்கொண்டு வீற்றிருக்கின்ற விலையிடுதற்கரிய மாணிக்கமே! வாளையும் - கெண்டைமீனையும் ஒத்த கண்களை யுடைய உமாதேவியாரை இடப்பாகத்திலுடையவரே! நாயினை யொத்த அடியேனை இன்று ஒரு பொருளாகமதித்து புதிய தாமரைமலர் போன்ற திருவடிகளை அடைக்கலமாகக் கொடுத்தருளியது தேவரீரது பெருங்கருணையல்லவோ? என்று விண்ணப்பஞ்செய்தார். - எ - று.

என்று பலமுறை யால்வணங்கி எய்திய உள்ளக் களிப்பினொடும்,
வென்றி அடல்விடை போல்நடந்து வீதிவிடங்கப் பெருமான் முன்பு,
சென்று தொழுது துதித்து வாழ்ந்த திருமாளி கைவலம் செய்து போந்தார்,
அன்று முதலடி யார்களெல்லாம் தம்பிரான் தோழர் என்றே அறைந்தார். 129

(இ - ள்.) இவ்விதமாகத் துதித்துப் பலமுறை வணங்கித் தமக்குண்டாகிய மனமகிழ்ச்சியோடும் வெற்றி பொருந்திய வலிய ரிஷபத்தைப்போல நடந்து, தியாகப்பெருமானது திருமுன்னே சென்று வணங்கித்துதித்து, அதனால் சிவாநந்தப் பெருவாழ்வடைந்து, ஆலயத்தைச் சூழ்ந்த திருமாளிகையைப் பிரதக்ஷிணஞ் செய்து புறப்பட்டார். அன்றுமுதலாக அடியார் கள் யாவரும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தம்பிரான் தோழரென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். - எ - று.

மைவளர் கண்டர் அருளி னாலே வண்டமிழ் நாவலர் தம்பெருமான்,
சைவ விடங்கின் அணிபு னைந்து சாந்தமும் மாலையும் தாரும் ஆகி,
மெய்வளர் கோலமெல்லாம் பொலிய மிக்க விழுத்தவ வேந்தர் என்னத்,
தெய்வ மணிப்புற்று ளாரைப் பாடித் திளைத்து மகிழ்வொடுஞ் செல்லா நின்றார்.
130

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) காளகண்டத்தையுடைய சிவபெருமானது திருவருளினாலே வளப்பம் பொருந்திய தமிழில் வல்லவராகிய, ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவமிகள் சைவமறையவர்ககுரிய சுந்தர வேடத்தைத் தரித்துக்கொண்டு சந்தனத்தையும், முத்துமாலை யையும், மலர்மாலையையுந் தரித்தவராகி தமது திருமேனியில் விளங்குகின்ற அலங்காரமெல்லாம் பொலிந்து தோன்ற மிகவும் சிறந்ததவத்தலைவர் என்று சொல்லும்படிக்குத் தெய்வத் தன்மை பொருந்திய அழகிய புற்றிடங்கொண்டருளிய சிவபெருமானைத் திருப்பதிகங்கள் பாடித் துதித்துச் சிவாநந்த வெள்ளத்தில் முழங்கி மகிழ்ச்சி யோடு நாள்தோறும் தரிசித்துச் செல்கின்றவராயினார். - எ - று.

இதற்குமுன் எல்லை இல்லாத் திருநகர் இதனுள் வந்து
முதற்பெருங் கயிலைஆதி முதல்வர்தம் பங்கி னாட்குப்
பொதுக்கடிந் துரிமை செய்யும் பூங்குழற் சேடி மாரில்
கதிர்த்த பூண்ஏந்து கொங்கைக் கமலினி அவத ரித்தாள். 131

(இ - ள்.) ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் இங்கு எழுந்தருளு வதற்கு முன்னமே அளவில்லாத பெருமையினையுடைய இத்திருவாரூரிலே முதன்மைபொருந்திய பெருமையினை யுடைய திருக்கயிலாயத்தில் வீற்றிருந்தருளும் ஆதிகாரணமாகிய சிவபெருமானது இடப்பாகத்திலுள்ள உமாதேவியாருக்குச் சிறப்பாக உரிமைத் தொண்டு செய்கின்ற மலர்களைத் தரித்த கூந்தலையுடைய தோழிமார்களில் ஒளி பொருந்திய ஆபரணங் களைத் தாங்கிய ஸ்தனங்களையுடைய கமலினி என்னுந் தோழியார் வந்து திருவவதாரஞ் செய்தார். - எ - று.

கதிர்மணி பிறந்த தென்ன உருத்திர கணிகை மாராம்
பதியிலார் குலத்துள் தோன்றிப் பரவையார் என்னும் நாமம்
விதியுளி விளக்கத் தாலே மேதகு சான்றோர் ஆன்ற
மதியணி புனிதன் நன்னாள் மங்கல அணியால் சாற்றி. 132

(இ - ள்.) தங்கட்கு ஒருநாயகனையும் எய்தாதவர்களாகிய உருத்திரகணிகையர் குலத்தில் ஒளிபொருந்திய சிறந்த மாணிக்கம்போலத் திருவவதாரஞ் செய்து மேன்மை பொருந் திய பெரியோர்களால் பிரசித்தமாகிய வேதவிதிப்படியே சிறந்த திருவாதிரை நட்சத்திரத்தில் மங்கலகரமான சிறப்புடன் பரவை யாரென்னுந் திருநாமஞ் சாற்றப்பட்டு. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரவினர் காப்புப் போற்றிப் பயில்பெருஞ் சுற்றம் திங்கள்
விரவிய பருவம் தோறும் விழாஅணி எடுப்ப மிக்கோர்
"வரமலர் மங்கை இங்கு வந்தனன்" என்று சிந்தை
தரவரு மகிழ்ச்சி பொங்கத் தளர்நடைப் பருவஞ் சேர்ந்தார். 133

(இ - ள்.) அந்நகரத்தில் வசிக்கின்ற பெருமை பொருந்திய தமது சுற்றத்தார்கள் தங்கள் குலதெய்வங்களை வணங்கினவர்களாய்க் காவலைப்பேணி மாதங்களால் நிறையப்பெற்ற பருவங்கள்தோறும் விழாவணிகளைச் செய்யவும், அறிஞர்கள் சிறந்ததாமரை மலரிலிருக்கும் இலக்குமியே இங்கு வந்து அவதரித்தனளென்று தங்கள் மனதிலுண்டாகிய மகிழ்ச்சி யதிகரிக்கவும் தளர்நடைப் பருவத்தை யடைந்தார். - எ - று.

மானிளம் பிணையோ? தெய்வ வளரின முகையோ? வாசத்
தேனிளம் பதமோ? வேலைத் திரைஇளம் பவள வல்லிக்
கானிளம் கொடியோ? திங்கட் கதிரிளங் கொழுந்தோ? காமன்
தானிளம் பருவம் கற்கும் தனிஇளந் தனுவோ என்ன. 134

(இ - ள்.) இளமையாகிய பெண்மானோ! தெய்வத்தன்மை பொருந்திய கற்பகவிருக்ஷத்தின் வளருகின்ற இளமையான அரும்போ! வாசனை வீசுகின்ற தேனின் இளம்பதமோ! அலைகளையுடைய சமுத்திரத்திலுள்ள இளமை பொருந்திய பவளவல்லியென்னுங் காட்டிற்றோன்றிய இளங்கொடியோ! கிரணங்களையுடைய இளஞ் சந்திரனோ! மன்மதனானவன் தான் சிறுபிராயத்தில் கற்பதற்கேதுவாக இருந்த ஒப்பற்ற இளமைபொருந்திய கருப்புவில்லோ! என்று பார்ப்பவர்கள் சொல்லும்படியாக. - எ - று.

நாடும்இன் பொற்பு வாய்ப்பு நாளுநாள் வளர்ந்து பொங்க
ஆடுமென் கழங்கும் பந்தும் அம்மனை ஊசல் இன்ன
பாடும்இன் னிசையும் தங்கள் பனிமலை வல்லி பாதம்
கூடும்அன் புருகப் பாடும் கொள்கையோர் குறிப்புத் தோன்ற. 135

(இ - ள்.) பலரும் விரும்பத்தகுந்த இனிய அழகின் சிறப்பானது நாளுக்கு நாள் வளர்ந்து அதிகரிக்க, மெல்லிய கழற்சிக்காயும், பந்தும், அம்மனையும், ஊசலுமாகிய இவை முதலானவகைளை ஆடுவார், தங்கள் முதல்வியாகிய பார்வதியாரது திருவடிகளில் பொருந்திய அன்பினால் மனமுருகப் பாடுகின்ற கொள்கையையுடைய பெரியோர்களைப் போல ஓர் குறிப்புத் தோன்றும்படி இனிய சங்கீதத்தையும் பாடுவார். எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***பிள்ளைமைப் பருவம் மீதாம் பேதைமைப் பருவம் நீங்கி
அள்ளுதற் கமைந்த பொற்பால் அநங்கன்மெய்த் தங்கள் ஈட்டம்
கொள்ளமிக் குயர்வ போன்ற கொங்கைகோங் கரும்பை வீழ்ப்ப
உள்ளமெய்த் தன்மை முன்னை உண்மையும் தோன்ற உய்ப்பார். 136***

(இ - ள்.) குழந்தைப் பருவமாகிய ஐந்து வயதிற்கு மேல் வந்த பேதைப் பருவத்தினின்றும் நீங்கி அள்ளிக் கொள்ளுதற்கு அமைந்த பேரழகினால் மன்மதன் தேடிய உண்மையாகிய திரவியக்குவையைப் பெற்றுக் கொள்வதற்கு மிகவும் உயர்வதைப்போன்ற ஸ்தனங்கள் கோங்கரும்புகளைத் தோற்க செய்ய, தமக்குள்ள மெய்ம்மைத் தன்மையையும், முன்பு திருக்கயிலாயத்தில் பார்வதியாருக்குத் தோழியாயிருந்த தன்மையையும் யாவருக்குந் தோன்றும்படி குறிப்பிப்பாரா யினார் பரவை நாச்சியார். - எ - று.

***பாங்கியர் மருங்குசூழப் படரொளி மறுகுசூழத்
தேங்கமழ் குழலின் வாசம் திசையெல்லாம் சென்றுசூழ
ஓங்குபூங் கோயில் உள்ளார் ஒருவரை அன்பி னோடும்
பூங்கழல் வணங்க என்றும் போதுவார் ஒருநாட் போந்தார். 137***

(இ - ள்.) தோழிமார்கள் பக்கங்களில் சூழ்ந்துவரவும், படர்ந்த தேககாந்தியானது திருவீதியில் சூழவும், தேன் கமழுகின்ற கூந்தலிலுள்ள வாசனையானது திசைகளெல்லாம் பரவிச்சூழவும், உயர்ந்த பூங்கோயிலில் வீற்றிருக்கின்ற வராகிய ஒப்பற்ற சிவபெருமானை அன்போடும் அழகிய திருவடிகளை வணங்க நாள்தோறும் போகின்றவராகிய பரவை நாச்சியார் ஒருநாள் அப்பூங்கோயிலுக்குப் போயினார். - எ - று.

***அணிசிலம் படிகள் 'பார்வென் றடிப்படுத் தனம் என்றார்ப்ப
மணிகிளர் காஞ்சி அல்குல் வரிஅர வுலகை வென்ற
துணிவுகொண் டார்ப்ப மஞ்சு சுரிகுழற் கழிய விண்ணும்
பணியும் என்றினவண் டார்ப்பப் பரவயைார் போதும் போதில். 138***

(இ - ள்.) பாதங்களில் அணிந்த சிலம்புகள் இப்பூவுலகத்தை வென்று கீழாக்கினோமென்று முழங்கவும், நிதம்பஸ்தானத்தின் மீதணிந்த முத்து முதலிய மணிகளால் கோக்கப்பட்ட காஞ்சி என்னும் ஆபரணமானது சர்ப்பங்கள் வாழுகின்ற நாகலோ கத்தை வென்ற துணிவு பற்றி முழங்கவும், மேகங்கள் சுருண்ட கூந்தலுக்குத் தோற்ற காரணத்தினால் விண்ணுலகமும் இவரை வணங்குமென்று அக் கூந்தலில் மொய்க்கின்ற வண்டின் கூட்டங் கள் முழங்கவும் பரவை நாச்சியார் போகும் பொழுதில். எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புற்றிடம் விரும்பி னாரைப் போற்றினர் தொழுது செல்வார்
சுற்றிய பரிச னங்கள் சூழஆ ளுடையநம்பி
நற்பெரும்பான்மை கூட்ட நகைபொதிந் திலங்கு செவ்வாய்
விற்புரை நுதலின் வேற்கண் விளங்கிழை யவரைக் கண்டார். 139

(இ - ள்.) நெருங்கிய பரிசனங்கள் சூழ்ந்துவரப் புற்றினை யிடமாகக் கொண்டு வீற்றிருக்கின்ற சிவபெருமானைத் துதித்து வணங்கிச் செல்கின்றவராகிய நம்மையடிமையாகவுடைய ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் நன்மையும் பெருமையுமுடைய அச்சிவபெருமானது திருவருளானது கூட்ட மகிழ்ச்சியின் நகையைத் தன்னுள் அடக்கி விளங்குகின்ற சிவந்தவாயினையும், வில்லையொத்த நெற்றியினையும், வேல்போன்ற கண்களையும், விளங்குகின்ற ஆபரணத்தையும் உடையவராகிய பரவை நாச்சியாரைக் கண்டார். - எ - று.

கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்தன் பெருவாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ? அறியேன் என்றதிசயித்தார். 140

(இ - ள்.) கற்பகத்தருவினது பொலிவினையுடைய கொம்போ! மன்மதனது பெருமை பொருந்திய சம்பத்தோ! அழகு பொருந்திய புண்ணியத்தினின்றுந் தோன்றிய ஓர் புண்ணிய சொரூபமோ! மேகத்தைச் சுமந்து வில்லினையும் நீலோற் பலமலரையும், பவளத்தினையும், பிறமலர்மாலைகளை யும், சந்திரனையும் தன்னிடத்தில் மலரப்பெற்றவாசனை வீசுகின்ற ஓர் கொடியோ! அற்புதத்தின் திரண்டவடிவமோ! அல்லது சிவபெருமானது திருவருளாகிய ஓர் உருவமோ! இதனை இன்ன தென்று நான் அறியேன் என்று ஆச்சரியப் பட்டார். - எ - று.

ஓவியநான் முகன்எழுத ஒண்ணாமை உள்ளத்தால்
மேவியதன் வருத்தமுறை விதித்ததொரு மணிவிளக்கோ?
மூவுலகின் பயனாகி முன்நின்ற தெனநினைந்து
நாவலர்கா வலர்நின்றார்; நடுநின்றார் படைமதனார். 141

(இ - ள்.) பிரமனானவன் (பேரழகுள்ள ஒரு பெண்ணைச் சிருஷ்டிக்க நினைத்துத் தான் நினைத்தபடியே) ஒரு சித்திரப் படமெழுத முடியாமையால் இவ்விதமாக இருக்க வேண்டு

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மென்று வருந்தித் தன்மனசினால் உண்டாக்கிய ஒரு மாணிக்க தீபமோ! சுவர்க்க மத்திய பாதல மென்னும் மூன்றுலகத்திலுள்ள வர்களும் கண்டுகளிப்படையும் படியாக எனக்கு முன்னே நிற்கின்றதென்று நினைந்து ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் இடம் விட்டுப் பெயராது நின்றருளினார், (அப்பொழுது) பஞ்சபாணங் களையுடைய மன்மதனும் (சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும், பரவை நாச்சியாருக்கும் காமத்தை விளைக்க வேண்டி) நடுவே நின்றான். - எ - று.

தண்டரள மணித்தோடும் தகைத்தோடும் கடைபிறழும்
கெண்டைநெடுங் கண்வியப்பக் கிளர்ஒளிப்பூண் உரவோனை
அண்டர்பிரான் திருவருளால் அயல் அறியாமனம் விரும்பப்
பண்டைவிதி கடைகூட்டப் பரவையா ருங்கண்டார். 142

(இ - ள்.) குளிர்ச்சி பொருந்திய முத்துக்களினாலும், இரத்தினங்களினாலும் அமைத்த காதணிகளையுந் தாக்கி அதன் புறத்திற் செல்லுகின்ற நீண்ட கெண்டை மீனையொத்த கண்கள் களிப்படையும்படி ஒளிவிளங்குகின்ற ஆபரணத்தைத் தரித்த ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தேவநாயகராகிய சிவபெருமானது திருவருளினால் முன்னாளில் அமைந்த கட்டளையானது முற்றுப் பெறச் சேர்ப்பித்தலால் பரவை நாச்சியாரும் தம்மை அறியாமலேயே மனம்விரும்பப் பார்த்தருளினார்.

கண்கொள்ளாக் கவின்பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப
விண்கொள்ளாப் பேரொளியான் எதிர்நோக்கும் மெல்லியலுக்(கு)
எண்கொள்ளாக் காதலின்முன் பெய்தாத தொருவேட்கை
மண்கொள்ளா நாண்மடம்அச் சம்பயிர்ப்பை வலிந்தெழலும். 143

(இ - ள்.) கட்புலனுக்கடங்காத அழகினைப்பொழிந்த திருமேனியானது பிரகாசத்தை வீச அதனால் ஆகாயவிட முழுவதும் அடங்காத பேரோளியையுடைய வராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளை எதிராகப் பார்த்த பரவை நாச்சியாருக்கு அளவில்லாத ஆசையினாலே முன்பு (ஒரு காலத்தும் ஒருவரிடத்தும்) உண்டாயிராத ஒரு பேராசையானது இவ்வுலகமுங் கொள்ளாதென்று சொல்லும்படி நாணம் - மடம்-அச்சம்-பயிர்ப்பு என்னும் பெண்மைக்குணங்கள் நான்கையும் தடுத்து மேலெழுதலும். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னேவந் ததிர்தோன்றும் முருகனோ? பெருகொளியால்
தன்னேரில் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர்செஞ் சடைஅண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ?
என்னே!என் மனந்திரித்த இவன்யாரோ எனநினைத்தார். 144

(இ - ள்.) எனக்கு முன்னே வந்து எதிரில் தோன்றுகின்ற முருகக்கடவுளோ! மிகுந்த தேககாந்தியினால் தனக்கொருவரும் ஒப்பில்லாத மன்மதனோ! மாலையைத் தரித்த மார்பினை யுடைய வித்தியாதரனோ! மின்னலைப் போலும் விளங்குகின்ற சிவந்த சடையினையுடைய சிவபெருமானது உண்மையாகிய திருவருளைப் பெற்றுள்ளவனோ! இது என்ன காரணம்? என்னுடைய மனதைத் தன்வசமாக விகாரப்படுத்திய இவன் யாரோவென்று நினைந்தார். - எ - று.

அண்ணலவன் தன்மருக்கே அளவிறந்த காதலினால்
உண்ணிறையும் குணநான்கும் ஒருபுடைசாய்ந் தனஎனினும்
வண்ணமலர்க் கருங்கூந்தல் மடக்கொடியை வலிதாக்கிக்
கண்ணுதலைத் தொழும்அன்பே கைக்கொண்டு செலவுய்ப்ப. 145

(இ - ள்.) பெருமை பொருந்திய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமி களிடத்தில் அளவில்லாத ஆசைமிகுதியால் தனதுள்ளத்தில் நிறைந்த நாணம் முதலிய நான்கு குணங்களும் ஒரு புறத்தில் தடையின்றி விலகினவாயினும் நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானைத் தொழுதற்குக் காரணமாகிய அன்பே அழகிய மலர் மாலையைத் தரித்த கரிய கூந்தலையுடைய பரவை நாச்சியாரை அவ்வாசையினின்றும் நீக்கித் தன் வசமாக்கித் திருக்கோயிலுக்குப் போகும்படிச் செய்ய. - எ - று.

பாங்கோடிச் சிலைவளைத்துப் படைஅனங்கன் விடுபாணம்
தாங்கோலி எம்மருங்கும் தடைசெய்ய மடவரலும்
தேங்கோதை மலர்க்குழல்மேல் சிறைவண்டு கலந்தார்ப்பப்
பூங்கோயில் அமர்ந்தபிரான் பொற்கோயில் போய்ப்புகுந்தாள். 146

(இ - ள்.) நால்வகைச் சேனைகளையுடைய மன்மதன் அருகில் ஓடிவந்து கருப்புவில்லை வளைத்து விடுகின்ற புஷ்பபாணங்கள் நாற்புறத்திலும் வளைந்து தடை செய்யப் பரவை நாச்சியாரும் தேன் பொருந்திய மலர்மாலையைத் தரித்த கூந்தலின்மேல் சிறகினையுடைய வண்டுகள் நெருங்கி யாரவாரிக்கப் பூங்கோயிலில் வீற்றிருக்கின்ற சிவபெருமானது அழகிய ஆலயத்துக்குள் சென்றார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வன்றொண்டர் அதுகண்(டு) "என் மனங்கொண்ட மயிலியலின்
இன்தொண்டைச் செங்கனிவாய் இளங்கொடிதான் யார்" என்ன
அன்றங்கு முன்நின்றார் "அவர்நங்கை பரவையார்
சென்றும்பர் தரத்தார்க்கும் சேர்வரியார் எனச்செப்ப. 147

(இ - ள்.) பரவை நாச்சியார் கோயிலுக்குள் சென்ற தன்மையை ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் பார்த்து என்னுடைய மனதைத் தன்னிடத்தில் கவர்ந்து கொண்டு சென்ற மயில் போன்ற சாயலையும், இனிய கொவ்வையின் சிவந்த கனி போலும் வாயினையுடைய இளமைபொருந்திய கொடிபோன்ற இப்பெண்யாரொன்று கேட்க, அப்பொழுது அவ்விடத்தில் முன்னே நின்றவர்கள் அவர்பெண்களிற் சிறந்த பரவை யாரென்னுந் திருப்பெயரையுடையவர், தேவர்களுக்குஞ் சென்று சேர்தற்கரியவர் என்று சொல்ல. - எ - று.

"பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை
சீர்பரவை ஆயினால் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்ஆசை எழுபரவை" 148

(இ - ள்.) பெயர் பரவையென்று சொல்லப்படுவது, அவளுடைய பெண்ணிற்குரிய அழகு முதலியவைகளாற் குறிக்குமிடத்துப் பெரிய தேவர் கூட்டம் விரும்புகின்ற திலோத்தமை முதலிய அரம்பாஸ்திரீகள் துதிசெய்யத்தக்க தெய்வமாம், அழகு விளங்குகின்ற வரிசையாகிய பற்கள் முல்லையரும்புகளை யொப்பானவை, சிறப்புப் பொருந்திய பரவையென்னுங் கூத்தினையுடைய வளாகிய இலக்குமியி னுடைய சௌந்தரியம் பொருந்திய வடிவம்போன்ற மெல்லிய சாயலைவுடைய அப்பெண்ணினது அழகாகிய சமுத்திரத் தினிடத்தில் அகப்பட்ட என்னுடைய ஆசையானது ஏழு சமுத்திரங்களையு மொத்திருக்கின்றது. - எ - று.

என்றினைய பலவுநினைந் தெம்பெருமான் அருள்வகையான்,
முன்தொடர்ந்து வருங்காதல் முறைமையினால் தொடக்குண்டு,
"நன்றெனையாட் கொண்டவர்பால் நண்ணுவன்" என் றுள்மகிழ்ந்து,
சென்றுடைய நம்பியும் போய்த் தேவர்பிரான் கோயில்புக. 149

(இ - ள்.) என்று இவ்விதமாகிய பலவற்றையும் நினைந்து எமது பெருமானாகிய பரமசிவனது திருவருளின்படியே முன்னம் (தம்மைத்) தொடர்ந்து வருகின்ற ஆசையின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முறைமையால் தாம் பந்திக்கப்பட்டு நல்லது என்னை அடிமையாகக் கொண்டருளிய சிவபெருமானிடத்தில் நான் சேர்வேனென்று மனமகிழ்ந்து சென்று ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளுந் தேவநாயகராகிய வன்மீகநாதர் வீற்றிருக்கின்ற திருக்கோயிலுக்குள்போக. - எ - று.

பரவையார் வலங்கொண்டு பணிந்தேத்தி முன்னரே
புரவலனார் கோயிலினின் றொருமருங்கு புறப்பட்டார்
விரவுபெருங் காதலினால் மெல்லியலார் தமைவேண்டி
அரவின்ஆ ரம்புனைந்தார் அடிபணிந்தார் ஆரூரர். 150

(இ - ள்.) (அப்பொழுது) பரவைநாச்சியார் வன்மீகநாதரைப் பிரதக்ஷிணைஞ் செய்து வணங்கித் துதித்து ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் போவதற்கு முன்னமே சிவபெருமானது சந்நிதானத்தினின்றும் ஒருபக்கமாகப் புறப்பட்டார், பின் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் அடைந்த பேராசையினால் பரவை நாச்சியாரைச் சேர விருப்பங்கொண்டு சர்ப்பாபரணத்தையணிந்த வன்மீக நாதரது திருவடிகளை வணங்கினார். - எ - று.

அவ்வாறு பணிந்தேத்தி "அணிஆரூர் மணிப்புற்றின்
மைவாழும் திருமிடற்று வானவர்பால் நின்றும்போந்(து)
எவ்வாறு சென்றாள்என் இன்னுயிராம் அன்னம்" எனச்
செவ்வாய்வெண் நகைக்கொடியைத் தேடுவா ராயினார். 151

(இ - ள்.) (ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள்) அவ்விதமாகப் பரவை நாச்சியாரைப் பெறும்படி வணங்கித் துதித்துத் திருவாரூரில் அழகிய புற்றினையிடமாகக் கொண்டருளிய காளகண்டராகிய சிவபெருமானிடத்தில் நின்றும் வெளிப்பட்டு வந்து என்னுடைய இனிய வுயிரையொத்த அந்தப் பெண்ணானவள் எந்தவழியாகப் போயினாளென்று சிவந்த வாயினையும் வெண்மை பொருந்திய பற்களையுமுடைய பரவை நாச்சியாரைத் தேடத் தொடங்கினார். எ - று.

"பாச மாம்வினைப் பற்றறுப் பான்மிகும்
ஆசை மேலும்ஓர் ஆசை அளிப்பதோர்
தேசின் மன்னிஎன் சிந்தை மயக்கிய
ஈச னார்அருள் எந்நெறிச் சென்றதே". 152

(இ - ள்.) (ஆன்மாக்களின்) பாசசம்பந்தமாக வருகின்ற இருவினையினது தொடர்பை அறவே நீக்குகின்றவராகிய சிவபெருமான் விஷயமாக அதிகரித்து வருகின்ற ஆசையின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும் வேறொரு ஆசையைக் கொடுக்கத் தக்கதாகிய ஒரு பிரகாசமாக விளங்கி எனது புத்தியை மயங்கச் செய்த அச்சிவபெருமானுடைய திருவருளானது எந்த வழியாகச் சென்றது. - எ - று.

"உம்பர் நாயகர் தங்கழல் அல்லது
நம்பு மாறறி யேனை நடுக்குற
வம்பு மால்செய்து வல்லியின் ஒல்கியின்(று)
எம்பி யார்அருள் எந்நெறிச் சென்றதே." **153**

(இ - ள்.) தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமானுடைய திருவடிகளையல்லாமல் வேறொன்றையும் ஒருபொருளென்று நம்பியிருக்கும் வகையினையறியாத அடியேனை மனநடுங்கச் செய்ய நிலையில்லாத ஆசையைக் கொடுத்துக் கற்பக்க கொடிபோலத் துவண்டு எமது பெருமானுடைய திருவருளானது இன்று எந்தவழியாகச் சென்றது. - எ - று.

"பந்தம் வீடு தரும்பர மன்கழல்
சிந்தை ஆரவும் உன்னும்என் சிந்தையை
வந்து மால்செய்து மான்என வேவிழித்(து)
எந்தை யார்அருள் எந்நெறிச் சென்றதே." **154**

(இ - ள்.) உடம்போ டுயிரைக்கூட்டும் பந்தத்தையும், அதன் நீக்கமாகிய மோக்ஷத்தையும் தந்தருளுகின்ற சிவபெருமானது திருவடிகளில் மனமானது ஒருமைப்பட்டு நிற்கத் தியானிக்கின்ற என்னுடைய மனத்தை வந்து மயங்கச் செய்து மானைப் போல விழித்து (அவ்வாசையை அதிகப்படுத்திய) எமது பெருமானுடைய திருவருளானது எந்தவழியாகச் சென்றது. - எ - று.

என்று சாலவும் ஆற்றலர் "என்னுயிர்
நின்ற தெங்"கென, நித்திலப் பூண்முலை
மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்
சென்று தேவா சிரியனைச் சேர்ந்தபின். **155**

(இ - ள்.) என்று இவ்விதமாகக் கூறி ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் மிகவும் விரகத்தைப் பொறுக்கமுடியாதவராய் என்னுடைய உயிரானது எங்கு நிற்கின்ற தென்று முத்து மாலையை யணிந்த ஸ்தனங்களையும் (இயற்கையாகவே) நல்ல வாசனை வீசுகின்ற நீண்ட அளகபாரத்தையுமுடைய அப் பரவை நாச்சியாரைத் தேடும் பொருட்டு ஆலயத்தினின்றுய புறப்பட்டுத் தேவாசிரியர் மண்டபத்தை யடைந்தபின்பு. எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காவிரி நேர்வருங் கண்ணியை நண்ணுவான்
யாவ ரோடும் உரையியம் பாதிருந்(து)
"ஆவி நல்குவர் ஆரூரை ஆண்டவர்
பூவின் மங்கையைத் தந்(து) " எனும்போழ்தினில். 156

(இ - ள்.) நீலோற்பல மலரையொத்த கண்களையுடைய பரவை நாச்சியாரை யடையும் பொருட்டு (அங்குள்ள தமது பரிசனத்தார் முதலிய) யாவரிடத்திலும் இம்மாற்றத்தைச் சொல்லாதிருந்து திருவாரூரில் வீற்றிருக்கின்ற தியாகராஜப் பெருமான் தாமரை மலரிலிருக்கின்ற இலக்குமியையொத்த பரவையாரை எனக்கு அனுக்கிரகித்து எனது பிராணனை உடலில் நின்றும் நீங்காமல் பாதுகாத்தருளுவர் என்று நினைத்துக் கொண்டிருந்த சமையத்தில். - எ - று.

நாட்டு நல்லிசை நாவலூ ரன்சிந்தை
வேட்ட மின்னிடை இன்னமு தத்தினைக்
காட்டுவன் கடலைக்கடந் தென்பபோல்
பூட்டும் ஏழ்பரித் தேரோன் கடல்புக. 157

(இ - ள்.) நிலைபெற்ற நல்ல கீர்த்தியையுடைய சுந்தர மூர்த்திசுவாமிகள் தம் முள்ளத்தில் விருப்பங்கொண்டிருக்கின்ற மின்னற்கொடிபோன்ற இடையினையுடைய இனிய தேவா முதத்தையொத்த பரவை நாச்சியாரை, நான் இப்பொழுது சமுத்திரத்தைக் கடந்து சென்று அவருக்கு நாளை வந்து காட்டுவேனென்று சொல்வது போல ஏழ் பரியினைப் பூட்டிய தேரினையுடைய சூரியனானவன் மேற்றி சைக்கடலில் சென்று அஸ்தமிக்க. - எ - று.

எய்து மென்பெடை யோடிரை தேர்ந்துண்டு
பொய்கை யிற்பகல் போக்கிய புள்ளினம்
வைகு சேக்கைகண் மேற்செல வந்தது.
பையுள் மாலை தமியோர் பனிப்புற. 158

(இ - ள்.) தம்முடன் பிரியாதிருக்கின்ற மெல்லிய சிறகுகளையுடைய பெண் பறவைகளோடு நல்ல இரைகளை ஆராய்ந்துண்டு தடாகங்களில் பகற்காலத்தைக் கழித்தனவாகிய பலவகைப் பறவைக் கூட்டங்கள் தாம் தங்கிவசிக்கின்ற கூடுகளில் செல்லவும், பிரிவுற்ற நாயகனும் நாயகியுமாகிய இருவர்களும் விரகவேதனையடையவும் துன்பத்தைத் தருக்கின்ற மாலைக் காலமானது வந்தது. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சின் மெல்லடிப் பாவையார் உள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யும்அரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான். **159**

(இ - ள்.) பஞ்சினைப்போலும் மிருதுவாயிருக்கின்ற கால்களையுடைய பெண்களினது மனமும், வஞ்சகவொழுக்கத்தையுடைய மனிதர்களின் கொடிய தீவினையும், சிவபெருமானது திருமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைத் தியானித்துணராத மூடர்களின் மனமும் என்று சொல்லும்படி உயர்ந்த ஆகாயமானது. இருள் நிறத்தை யடைந்தது. - எ - று.

"மறுவில் சிந்தைவன் றொண்டர் வருந்தினால்
இறும ருங்குலார்க் கியார்பிழைப் பார்" என்று
நறும லர்க்கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவல் என்ன முகிழ்த்தது வெண்ணிலா. **160**

(இ - ள்.) களங்கமற்ற திருவுள்ளத்தினையுடைய ஸ்ரீ சுந்தர மூர்த்திசுவாமிகளே வருத்தப்பட்டால் (ஸ்தனபாரத்தினால்) வளைகின்ற இடையினையுடைய மாதர்களின் ஆசையினின்றும் யாவர்தாம் பிழைப்பார்களென்று நல்ல வாசனை வீசுகின்ற மலர்களையணிந்த கூந்தலையுடைய இராக்காலமாகிய பெண்ணானவள் முன்னதாக புன்சிரிப்பைப்போல வெண்மை பொருந்திய சந்திரன் உதயமாயிற்று. - எ - று.

அரந்தை செய்வார்க் கழுங்கித்தம் மாருயிர்
வரன்கை தீண்ட மலர்குல மாதர்போற்
பரந்த வெம்பகற் கொல்கிப் பனிமதிக்
கரங்கள் தீண்ட அலர்ந்த கயிவரம். **161**

(இ - ள்.) தம்மை விரும்பித் துன்பஞ் செய்கின்ற அன்னிய புருஷர்களுக்குச் சம்மதப்படாமல் பயந்து வருந்தித் தம்முடைய அருமையாகிய உயிரையொத்த புருஷர்கள் தமது கையைத் தீண்டுதலால் முகமலர்ச்சியை யடைகின்ற (கற்புள்ள) குலமாதர்களைப்போல நாற்புறங்களிலும் பரந்த வெவ்விய கிரணங்களையுடைய சூரியனுக்கு மலராமல் சுருங்கியிருந்து குளிர்ச்சி பொருந்திய சந்திரனது கிரணங்களாகிய கைகள் தீண்டுதலால் ஆம்பல்கள் மலர்ந்தன. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தோற்றும் மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்றும் இன்பமும் தண்மையும் தந்துபோய்
ஆற்ற அண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா. 162

(இ - ள்.) நிலவுலகத்தில் தோன்றுகின்ற நிலைபெற்ற ஜீவகோடிகளுக்கெல்லாம் பரிசுத்தத்தையும் யாவராலும் புகழத்தக்க இன்பத்தையும் குளிர்ச்சியையுங் கொடுத்து மேலேச் சென்று அண்டத்தின் வெளியெல்லா மிகுதியாகப் பரவிச் சிவபெருமானது வெண்மை பொருந்திய திரு நீற்றின் மிகுந்த பிரகாசத்தையொத்தது நீண்ட நிலா. - எ - று.

வாவி புள்ளொலி மாறிய மாலையில்
நாவ லூரரும் நங்கை பரவையாம்
பாவை தந்த படர்பெருங் காதலும்
ஆவி சூழ்ந்த தனிமையும் ஆயினார். 163

(இ - ள்.) தடாகங்களில் பொருந்திய பறவைகளின் முழக்கத்தை நீக்கிய மாலைக்காலத்தில் திருநாவலூரராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளும், பெண்களிற் சிறந்த பரவை நாச்சியார் கொடுத்த பரந்த பெரிய ஆசையும் தமது உயிரச்சூழ்ந்திருக்கின்ற தனிமையென்னும் வஸ்துவும் அன்றி வேறொருதுணையும் இல்லாதவராயினார். - எ - று.

"தந்தி ருக்கண் எரிதழ லிற்பட்டு
வெந்த காமன் வெளியே உருச்செய்து
வந்தென் முன்னின்று வாளி தொடுப்பதே!
எந்தை யார்அருள் இவ்வண்ணமோ?" என்பார். 164

(இ - ள்.) சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணினின் றுண்டாகிய அக்கினியில் அகப்பட்டு முன்னாளில் எரிந்து விழுந்த மன்மதனானவன் இப்பொழுது உருவமெடுத்து வெளியே எனக்கு முன்னே வந்து நின்று புட்பபாணங்களைத் தொடுப்பது என்ன காரணம்? எமது பெருமானுடைய திருவருளானது என்மேலிருப்பது இப்படித்தானோ வென்று சொல்லுவார். - எ - று.

ஆர்த்தி கண்டும்என் மேல்நின் றழற்கதிர்
தூர்ப்பதே! எனைத் தொண்டுகொண் டாண்டவர்
நீர்த்த ரங்க நெடுங்கங்கை நீள்முடிச்
சாத்தும் வெண்மதி போன்றிலை தண்மதி!" 165

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) குளிர்ச்சி பொருந்திய சந்திரனே! யான் பரவையாரிடமாகக் கொண்டிருக்கின்ற ஆசையினால் படுந்துன்பத்தைப் பார்த்திருந்தும் ஆகாயத்தில் நின்று நெருப்புமயமாகிய கிரணங்களை என்மேல் நிறைப்பது தகுதியாகுமோ? (அதனால் நீ) என்னை அடிமை கொண்டவராகிய சிவபெருமானது நீருருவமான அலைகளையுடைய நெடிய கங்காநதியைத் தரித்த நீண்ட சடைமுடியில் தரிக்கப் பட்ட வெண்மை பொருந்திய சந்திரனை யொத்திருக்கின்றாயில்லை. - எ -று.

"அடுத்து மேன்மேல் அலைத்தெழும் ஆழியே!
தடுத்து முன்எனை ஆண்டவர் தாம்உணக்
கடுத்த நஞ்சுன் தரங்கக் கரங்களால்
எடுத்து நீட்டுநீ என்னைஇன் றென்செயாய்?" **166**

(இ - ள்.) இடைவிடாமல் ஒன்றின்மேலொன்றாக அலைகளை வீசி எழுகின்ற கடலே! உலகமாயையிற் செல்லாமல் தடுத்து முன்னே என்னை அடிமை கொண்டவராகிய சிவபெருமான் உண்ணும்படியாகக் கொடுமை பொருந்திய விஷத்தை உன்னுடைய அலைகளாகிய கைகளால் (சற்றும் இரங்காமல் மனம் சம்மதித்து) எடுத்துக்கொடுத்த நீ (அவர்க்கு அடிமைப் பூண்டொழுகுகின்ற) என்னை இப்பொழுது யாது செய்யாய். - எ - று.

"பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடைச்
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டினில்
புறம்ப ணைத்தடம் பொங்கழல் வீசிட
மறம்ப யின்றதெங் கோ? தமிழ் மாருதம்!" **167**

(இ - ள்.) தமிழோடு சேர்ந்து பழகிய தென்றற் காற்றே! நீ பிறந்தது எங்கள் சிவபெருமான் வீற்றிருக்கின்ற பொதிய மலையில், பின் அம்மலையிலிருந்து சிறப்போடு வந்து சேர்ந்த இடம் தெய்வத் தன்மைபொருந்திய சோழ நாட்டிலுள்ள அழகிய மருத நிலங்களில் உள்ள தடங்கள், (இவ்வாறிருக்க நீ குளிர்ச்சி நன்மணம் சுகம் முதலிய நற்குணங்களைக் கொடாமல் என்மேல் கொஞ்சமும் இரக்கமின்றி) கொதிக்கின்ற நெருப்பின் சுவாலையை வீசுதற்குக் கொடுமையை நீ எவ்விடத்திற் கற்றுக் கொண்டாய். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்ன தன்மைய பின்னும் இயம்புவான்
மன்னு காதல னாகிய வள்ளல்பால்
தன்ன ரும்பெறல் நெஞ்சு தயங்கப்போம்
அன்னம் அன்னவள் செய்கை அறைகுவாம். 168

(இ - ள்.) (மன்மதன், சந்திரன், சமுத்திரம், தென்றல் முதலியவைகளைத் தூஷித்ததல்லாமல் பின்னும்) இத்தன்மை யினவாகிய குயில்முதலாகிய பொருள்களையும் தூஷிக்கின்ற நிலை பெற்ற காதலனையுடையவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்தில் பெறுதற்கருமையாகிய தன்னுடைய மனமானது மீளாது வருந்திச் செல்லத் (தாம் மாத்திரம் தனியே) திருமாளிகைக்குப் போகின்ற அன்னத்தின் நடையைப் போலும் நடையினையுடைய பரவை நாச்சியாரது செய்கையைக் குறித்துச் சொல்லுகின்றோம். - எ - று.

கனங்கொண்ட மணிகண்டர் கழல்வணங்கிக் கணவனைமுன் பெறுவாள்போல,
இனங்கொண்ட சேடியர்கள் புடைசூழ எய்துபெருங் காத லோடும்,
தனங்கொண்டு தளர்மருங்குற் பரவையும்வன் றொண்டர்பால் தனித்துச் சென்ற,
மனங்கொண்டு வரும்பெரிய மயல்கொண்டு தன்மணிமா ளிகையைச் சார்ந்தாள். 169

(இ - ள்.) உயர்ந்த நீலமணி போன்ற காளகண்டத்தையுடைய சிவபெருமானது திருவடிகளை வணங்கித் தாம் விரும்பிய ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளாகிய நாயகரை இனிமேல் பெறுபவரைப் போலக் கூட்டமாகிய தமது தோழி மார்கள் பக்கங்களில் சூழ்ந்துவர, பருத்ததனங்களைத் தாங்கி அதனால் தளர்ச்சியடைந்த இடையிணையுடைய பரவை நாச்சியாரும் தாம் கொண்டிருக்கின்ற பெரியகாதலோடும் அச்சுந்தரமூர்த்தி சுவாமிகளிடமாகத் தனியே போன மனத்தை ஒருவகையாக வலிந்து தன் வசப்படுத்திக் காமத்தால் அதிகரித்து வருகின்ற பெரியமயக்கத்தைக் கொண்டு தமது இரத்தினமயமாகிய உபரிகையை யடைந்தார். - எ - று.

சீறடிமேல் நூபுரங்கள் அறிந்தனபோல் சிறிதளவே ஒலிப்ப முன்னர்,
வேறொருவர் உடன்பேசான் மெல்லஅடி ஒதுங்கி மாளிகைகளின் மேலால்
ஏறிமா கதத்தூணத் திலங்குமணி வேதிகையில் நலங்கொள் பொற்காலம்,
மாறில்மலர்ச் சேக்கைமிசை மணிநிலா முன்றில்மருங் கிருந்தாள் வந்து. 170

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) சிறிய பாதங்களின்மேல் தரிக்கப்பட்ட சிலம்புகள் இப்பரவை நாச்சியார் ஆசைகொண்டிருப்பதை அறிந்தாற் போல் மெல்ல ஒலிக்க, நமக்கு முன்னே நிற்கின்ற மற்றை மாதர்கள் ஒருவருடனும் பேசாதவராய்ப் பாதங்களை மிருதுவாக வைத்து நடந்து மாளிகையின் மேல்வீட்டிலேறி மரகத ரத்தினத்தினால் செய்யப்பட்ட தூண்கள் நிறுத்தி விளங்குகின்ற நவரத்தினங்களால் இழைத்துக் கட்டப்பட்ட திண்ணையில் அழகிய பொற்கால்களையுடைய வாடுதலில்லாத புஷ்ப சயனத்தின்மேல் அழகிய நிலாமுற்றத்தில் வந்திருந்தார் பரவை நாச்சியார். - எ - று.

அவ்வளவில் அருகிருந்த சேடிதனை முகநோக்கி "ஆரூர் ஆண்ட, மைவிரவு கண்டரைநாம் வணங்கப் போம் மறுகெதிர் வந்தவரார்?" என்ன, "இவ்வுலகில் அந்தணராய் இருவர்தே டொருவர்தாம் எதிர்நின்ற றாண்ட, சைவ முதல் திருத்தொண்டர்; தம்பிரான் தோழனார்; நம்பி" என்றாள்.

171

(இ - ள்.) அச்சமயத்தில் தமக்குச் சமீபத்திலிருந்த ஒரு தோழியினது முகத்தைப் பார்த்து, திருவாரூரில் வீற்றிருக்கின்ற கருநிறம் பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமானை யாம் வணங்குவதற்காகப் போகும் வீதியின் எதிரில் வந்தவர் யாரென்று கேட்க, (அதற்கு அந்தத் தோழியானவள் மறுமொழியாக) இவ்வுலகத்தில் திருமால் பிரமன் என்னும் இருவர்களும் (பன்றியாகவும் அன்னமாகவும், அடியையும் முடியையும்) தேடிக்காணாத ஒப்பற்ற சிவபெருமான் பிராமணத்திருவுருவங் கொண்டு வந்து (திருக்கலியாண காலத்தில்) எதிரே நின்று தடுத்தாட் கொண்ட ஆதிசைவப் பிராமண குலத்தலைவராகிய திருத்தொண்டரும், தம்பிரான் தோழர் என்னுந் திருநாமத்தையுடையவருமாகிய நம்பியாரூரர் என்று சொன்னாள். - எ - று.

என்றவுரை கேட்டலுமே "எம்பிரான் தமரேயோ!" என்னாமுன்னம் வன்றொண்டர் பால்வைத்த மனக்காதல் அளவின்றி வளர்ந்து பொங்க, நின்றநிறை நாண்முதலாங் குணங்களுடன் நீங்க உயிர்ஒன்றுந் தாங்கி, மின்றயங்கு நுண்ணிடையாள் வெவ்வுயிர்த்து மெல்லணைமேல் வீழ்ந்தபோது.

172

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) என்று இவ்விதமாகத் தோழியானவள் சொல்லிய வார்த்தையைக் கேட்ட பொழுதே எமது பெருமான் தடுத்தாட்கொண்ட அடியவரேயோ? என்று சொல்வதற்கு முன்னமே ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளிடத்து வைத்த மனத்தில் காதலானது அளவைக்கடந்து வளர்ந்து அதிகரிக்கத் தமக்குத் துணையாகக் கூடி நின்ற நிறை நாணம் முதலாகிய பெண்மைக் குணங்கள் உடனே தம்மை விட்டு நீங்க உயிரொன்றை மாத்திரந் தாங்கிக் கொண்டு மின்னலைப் போல விளங்குகின்ற சிறிய இடையினையுடைய பரவை நாச்சியார் பெருமூச்செறிந்து மிருதுவாகிய புஷ்பசயனத்தின்மேல் (சோகத்தால் மயங்கி) விழுந்த சமையத்தில். எ - று.

ஆரநறுஞ் சேறாட்டி அரும்பனிநீர் நறுந்திவலை அருகுவீசி,
ஈரஇளந் தளிர்க்குளிரி படுத்துமட வார்செய்த இவையும் எல்லாம்,
பேரழலின் நெய்சொரிந்தால் ஒத்தனமற் றதன்மீது சமிதை என்ன,
மாரனுந்தன் பெருஞ்சிலையின் வலிகாட்டி மலர்வாளி சொரிந்தான்வந்து. 173

(இ - ள்.) (காமவெப்பந்தணியும் பொருட்டு) நல்ல வாசனை வீசுகின்ற சந்தனக்குழம்பை உடம்பில் பூசி அருமையாகிய நல்ல பனிநீர்த்துளிகளைச் சமீபத்தில் நின்று தெளித்துக் குளிர்ச்சி பொருந்திய இளந்துளிர்களையும் நீர்க்குளிரியையும் பரப்பித் தோழிமார்கள் செய்த இவை முதலாகிய எல்லா உபசாரங்களும் பெரிய நெருப்பினிடத்தில் சொரிந்த நெய்யையொத்து மிகுந்த வெப்பத்தைக் கொடுத்திருந்தன; அந்த நெருப்பின்மேலிட்ட சமிதையைப்போல மன்மதனும் தனது பெரிய கருப்புவில்லின் வல்லமையைக் காட்டிப் புஷ்பபாணங்களைக் கொண்டு வந்து சொரிந்தான். - எ - று.

மலரமளித் துயிலாற்றாள்; வருந்தென்றல் மருங்காற்றாள்; மங்குல வானில்,
நிலவுமிழும் தழலாற்றாள்; நிறையாற்றும் பொறையாற்றா நீர்மை யோடும்,
கலவமயில் எனஎழுந்து கருங்குழலின் பரமாற்றாக் கையளாகி,
இலவ இதழ்ச் செந்துவர்வாய் நெகிழ்ந்தாற்றா மையின்வறிதே இன்ன சொன்னாள். 174

(இ - ள்.) புஷ்பசயனத்தின் மேல் படுத்து நித்திரை கொள்ளார்; பொதிய மலையிலிருந்து வந்து தன்மேல் வீசுகின்ற சிறுதென்றற் காற்றனைச் சகியார்; மேகங்கள் பொருந்திய

ஆகாயத்தில் தோன்றும் சந்திரனது நிலவாகிய நெருப்பை ஆற்றார்; நிறைமுதலாகிய குணங்கள் செய்யும் பாரத்தைப் பொறுக்கார்; இக்குணங்களோடு கலாபத்தையுடைய மயில் போல எழுந்து கரிய கூந்தலின் பாரத்தைத் தாங்கமுடியாத குணத்தையுடையவராய் இலவமலரையொத்த சிவந்த வாயைத்திறந்து பிரிவாற்றாமையால் வீணாக இப்படிப்பட்ட மொழிகளைச் சொல்லத் தொடங்கினார் பரவை நாச்சியார். - எ - று.

கந்தங் கமழ்மென் குழலீர்! இதுஎன்? கலைவாண் மதியம் கனல்வான் எனைஇச்,
சந்தின் தழலைப் பனிநீர் அளவித் தடவுங் கொடியீர்! தவிரீர்! தவிரீர்!,
வந்திங் குலவும் நிலவும் விரையார் மலயா னிலமும் எரியாய் வருமால்,
அந்தண் புனலும் அரவும் விரவும் சடையான் அருள்பெற் றுடையார் அருளார்".
175

(இ - ள்.) மணம் வீசுகின்ற மிருதுவாகிய கூந்தலினையுடைய தோழிமார்களே! கலைகள் நிறைந்த ஒளிபொருந்திய சந்திரன் என்னைச் சுடுதல் என்ன காரணத்திற்காக? இச்சந்தனத்தி னின்றுந் தேய்த்த குழம்பாகிய நெருப்பைப் பனிநீரோடு கலந்து அன்புள்ளவர்களைப் போல் எனது உடம்பிற்பூசுகின்ற கொடியவர்களே! இதனைத் தவிருங்கள் தவிருங்கள். முன்பு இங்குவந்து உலாவிக்கொண்டிருந்த வாசனை பொருந்திய சிறுதென்றற் காற்றும் (இப்பொழுது) நெருப்பின் தன்மையை யடைந்து வருகின்றது. அழகிய குளிர்ந்த கங்காநதியும், பாம்பும் சேர்ந்திருக்கின்ற சடையினையுடைய சிவபெருமானது திருவருளைப் பெற்றுள்ள வராகிய அந்த நம்பியாரூரர் நமக்குக் கிருபை செய்கின்றாரில்லை. - எ - று.

"புலரும் படியன் றிரவென் னளவும்; பொறையும் நிறையும் இறையும் தரியா,
உலரும் தனமும் மனமும்; வினையேன் ஒருவேன் அளவோ? பெருவாழ் வுரையீர்!,
பலரும் புரியும் துயர்தான் இதுவோ? படைமன் மதனார் புடைநின் றகலார்!,
அலரும் நிலவும் மலரும் முடியார் அருள்பெற் றுடையார் அவரோ அறியார்".
176

(இ - ள்.) இவ்விரவானது என்விஷயத்தில் விடியுந்தன்மை யுடையதன்று; என்னுடைய பொறைக்குணமும் நிறை முதலாகிய பெண்மைக்குணங்களும் சிறிதும் தங்கவில்லை; வெப்பத்தால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்தனமுதலியவற்றை உலரச்செய்கின்ற ஸ்தனங்களும் வருந்து கின்ற மனமும் தீவினையையுடைய ஒருத்தியளவோ? (இப்படி வருந்துவதோ?) பெருவாழ்வானது நீங்கள் சொல்லுங்கள்; நீங்கள் யாவருங் கூடிச்செய்கின்ற துன்பம் இதுதானோ? பஞ்ச பாணங்களையுடைய மன்மதன் என்னருகினின்றும் நீங்காத வனாயிருக்கின்றான்; கொன்றை முதலாகிய மலர்களும் சந்திரனும் விளங்குகின்ற சடைமுடியினையுடைய சிவபெரு மானது திருவருளைப் பெற்றுள்ளவராகிய நம்பியாரூரரோ இவ்வருத்தத்தையறியார்.. - எ - று.

***"தேரும் கொடியும் மிடையும் மருகில் திருவா ரூரீர்!' நீரே அல்லாமல்,
ஆரென் துயரம் அறிவார்? அடிகேள் அடியேன் அயரும் படியோ இதுதான்?,
நீரும் பிறையும் பொறிவாள் அரவின் நிரையும் நிரைவெண் டலையின் புடையே,
ஊரும் சடையீர்! விடைமேல் வருவீர்! உமதன் பிலர்போல் யானோ உறுவேன்?"***
177

(இ - ள்.) தேர்களும் கொடிகளும் நெருங்கிய திருவீதிகளை யுடைய திருவாரூரில் வீற்றிருக்கின்ற பெருமானே! தேவரீரேயல் லாமல் யான் படுகின்ற விரகவேதனையை யாவர் அறியவல்லவர் கள்; எமது தலைவரே! இவ்விரகமும் அடியேன் துன்பப்படும் படியோவந்தது; கங்கையும், பிறைச்சந்திரனும், படப்பொறிகளை யுடைய ஒளிபொருந்திய பாம்பின் வரிசையும், வரிசையாகத் தரித்த வெண்தலையின் பக்கத்தில் உலாவுகின்ற சடையினை யுடையவரே! இடபவாகனத்தின்மேல் எழுந்தருளிவருகின்ற கடவுளே! தேவரீரிடத்தில் அன்பில்லாதவர்களைப் போல யானோ வருந்துவேன். - எ - று.

***என்றின் னனவே பலவும் புகலும் இருளார் அளகச் சுருளோ
தியையும், வன்றொண்டரையும் படிமேல் வரமுன்பருள்வான் அருளும்
வகையார் நினைவார்?, சென்றும் பர்களும் பணியும் செல்வத்
திருவா ரூர்வாழ் பெருமான் அடிகள், அன்றங் கவர்மன் றலைநீர்
செயும்" என் றடியார் அறியும் படியால் அருளி.*** ***178***

(இ - ள்.) என்று இத்தன்மையான பல மொழிகளையும் எடுத்துச் சொல்லுகின்ற இருள்போலுங் கருநிறம் பொருந்திய சுருண்ட கூந்தலையுடைய பரவை நாச்சியாரையும் ஸ்ரீ சுந்தர மூர்த்திசுவாமிகளையும் இந்நிலவுலகத்திலே (மானிடத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவுருவங் கொண்டு) அவதரிக்கும்படி கட்டளையிட்டருளிய சிவபெருமான் (அவர்களுக்கு அவ்விருப்பத்தைக் கூட்டி முடிக்கக்) கருணை செய்யும் வகையை யார் அறிவார்கள்? தேவர்களும் வந்து வணங்குகின்ற பலவகைச் செல்வங்கள் நிறைந்த திருவாரூரில் வீற்றிருந்தருளும் பெருமானாகிய கடவுள், அப்பொழுது நம்பியாரூரர் பரவை நாச்சியாரென்னும் அவ் விருவர்களுக்கும் கலியாணத்தை நீங்கள் செய்விக்க வேண்டு மென்று அடியார்க ளுணரும்படி கட்டளையிட்டருளி. எ - று.

மன்னும் புகழ்நா வலர்கோன் மகிழ "மங்கை பரவை தன்னைத் தந்தோம்;
இன்னவ் வகைநம் அடியார் அறியும் படியே உரைசெய் தனம்" என் றருளிப்,
பொன்னின் புரிபுன் சடையன் விடையன் பொருமா கரியின் உரிவை புனைவான்,
அன்னந் நடையாள் பரவைக்(கு) "அணிய தாரூ ரன்பால் மணம்" என் றருள.
179

(இ - ள்.) நிலைபெற்ற புகழினையுடைய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் மனமகிழும்படி (அவரிடத்தில்) நாம் பரவை நாச்சியாரை உனக்குக் கொடுத்தோம்; இந்தச்சங்கதியை நம் அடியார்கள் அறியும்படிக்கு அருளிச் செய்தோமென்று கூறி பொன்னின் புரிபோன்ற மெல்லிய சடையினையுடையவரும், ரிஷபவாகனத்தை யுடையவரும், போர் செய்த பெரியயானைத் தோலை ஆடையாகத் தரித்தவருமாகிய சிவபெருமான் அன்னத்தின் நடைபோலும் நடையினையுடைய பரவை நாச்சியாரிடத்திற் சென்று நம்பியாரூரன் விஷயமாக உனக்குக் கலியாணம் சமீபித்ததென்று அருளிச் செய்ய. - எ - று.

காமத் துயரில் கவல்வார் நெஞ்சிற் கரையில் இருளும் கங்குல் கழிபோம்,
யாமத் திருளும் புலரக் கதிரோன் எழுகா லையில்வந் தடியார்கூடிச்,
சேமத் துணையாம் அவர்போல் அருளைத் தொழுதே திருநா வலர்கோன் மகிழத்,
தாமக் குழலாள் பரவை வதுவை தகுநீர் மையினால் நிகழச் செய்தார்.
180

(இ - ள்.) காமநோயினால் வருந்துகின்ற ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவை நாச்சியார் என்னும் இவ்விருவர்களின் மனத்தில் அடங்காத காமமாகிய இருளும், அவர்களுக்கு அன்று மிகுதியும் நீடித்திருந்த இராத்திரியின் இருளும்விடியச் சூரியன் உதயமாகின்ற காலைப் பொழுதில் சிவனடியார்கள் யாவரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்து ஒன்றாகக் கூடித் தமக்குச் சேமநிதிபோலுந் துணையா யுள்ள சிவபெருமானது பெரியதிருவருளைத் தொழுது ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் மனம் மகிழும்படி மலர் மாலையைத் தரித்த கூந்தலையுடைய பரவை நாச்சியாரது திருக்கலியாணத் தைத் தகுந்த வேதவிதிப்படியே சுபகரமாக நடக்கும்படிச் செய்தார்கள். - எ - று.

தென்னாவ லூர்மன்னன் தேவர்பிரான் திருவருளால்
மின்னாரங் கொடிமருங்குல் பரவையெனும் மெல்லியல்தன்
பொன்னாரும் முறைஓங்கல் புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினார். ***181***

(இ - ள்.) அழகிய திருநாவலூருக்குத் தலைவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவர்களுக்குத் தலைவராகிய சிவபெருமானது திருவருளினால் மின்னற் கொடிபோலும் இடையினையுடைய பரவை நாச்சியாரென்னும் அம்மையாரது பொற் கொடிபோலுந் தேமல் படர்ந்த ஸ்தனங்களாகிய மலைச் சிகரங்களே தமக்குச் சாருமிடமாகப் பலநாளும் அனுபவிக்கின்ற போகத்தை முறைமைப்படியே விரும்பி அனுபவித்திருந்தார். - எ - று.

தன்னையா ளுடையபிரான் சரணார விந்தமலர்
சென்னியிலும் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனும்
மின்னிடையாள் உடன்கூடி விளையாடிச் செல்கின்றார். ***182***

(இ - ள்.) (ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்) தம்மை யடிமையாகக் கொண்டருளிய சிவபெருமானது திருவடித்தாமரைகளைத் தமது திருமுடியிலும் திருவுள்ளத்திலும் மலரும்படிச் செய்து திருப்பதிகமாகிய நல்ல தமிழ்ச் சொற்களால் தொடுத்த பல மாலைகளைச் சாத்திப் பரவை நாச்சியாரென்னும் மின்னற் கொடிபோலும் இடையினையுடைய அம்மையாரோடு கூடி விளையாடிக் கொண்டு செல்கின்றவராயிருந்தார். - எ - று.

மாதுடன் கூடவைகி மாளிகை மருங்கு சோலை
போதலர் வாவி மாடு செய்குன்றின் புடையோர் தெற்றிச்
சீதளத் தரளப் பந்தர்ச் செழுந்தவி சிழிந்து தங்கள்
நாதர்பூங் கோயில் நண்ணிக் கும்பிடும் விருப்பால் நம்பி. ***183***

(இ - ள்.) திருமாளிகையிலும், அருகிலுள்ள சோலை களிலும், தாமரை முதலாகிய மலர்கள் மலர்ந்திருக்கின்ற தடாகங்களிலும், பக்கத்திலுள்ள செய்குன்றிலும், அதன் சமீபத்திலுள்ள திண்ணைகளிலும் பரவை நாச்சியாரோடு கூட இருந்துவிளையாடி, பின்பு குளிர்ச்சி பொருந்திய முத்துப் பந்தலின் கீழிட்டிருக்கும் செழுமை பொருந்திய மலரணையி னின்றும் நீங்கித் தங்கள் நாயகராகிய சிவபெருமானது, பூங்கோயிலுக்குச் சென்று அப்பெருமானை வந்தனஞ் செய்ய வேண்டுமென்னும் விருப்பத்தினால் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள். - எ - று.

அந்தரத் தமரர் போற்று மணிகிள ராடை சாத்திச்
சந்தனத் தளறு தோய்த்த குங்குமக் கலவை சாத்திச்
சுந்தரச் சுழியஞ் சாத்திச் சுடர்மணிக் கலன்கள் சாத்தி
இந்திரத் திருவின் மேலாம்எழில்மிக விளங்கித் தோன்ற. 184

(இ - ள்.) சுவர்க்கலேகாத்தில் வசிக்கின்ற தேவர்களும் துதிக்கதக்க அழகு விளங்குகின்ற பீதாம் பரத்தையணிந்து, சந்தனக் குழம்புகலந்த கலவையாகிய குங்குமச் சந்தனத்தைப் பூசி, (திருமுடியில்) அழகிய கிரீடத்தையணிந்து, ஒளி வீசுகின்ற பலவகை இரத்தினா பரணங்களையுந் தரித்து, தேவேந்திர சம்பத்திற்கும் மேற்பட்ட செல்வச் சிறப்பானது மிகவும் விளங்கித் தோன்ற. - எ - று.

கையினிற் புனைபொற் கோலும் காதினில் இலங்கு தோடும்
மெய்யினில் துவளு நூலும் நெற்றியில் விளங்கு நீறும்
ஐயனுக் கழகிதாம் "என் றாயிழை மகளிர் போற்றச்
சைவமெய்த் திருவின் கோலந் தழைப்பவீ தியினைச் சார்ந்தார். 185

(இ - ள்.) தமது திருக்கரத்தில் பொன்னினால் அலங்கார மாகப் புனைந்து செய்த கோலும், திருச்செவிகளில் விளங்கு கின்ற பொன்னாலாகிய தோடும், திருமேனியில் துவளுகின்ற உபவீதமும், நெற்றியில் விளங்குகின்ற விபூதியும் ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு அழகாயிருக்கிறதென்று திருத்தமாகிய ஆபரணங்களையணிந்த மாதர்கள் புகழ உண்மையாகிய சைவத்திருக் கோலமானது விளங்கும்படியாகத் திருவீதியில் எழுந்தருளினார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"நாவலூர் வந்த சைவ நற்றவக் களிறே!" என்றும்
"மேவலர் புரங்கள் செற்ற விடையவர்க் கன்ப!" என்றும்
"தாவில்சீர்ப் பெருமைஆரூர் மறையவர் தலைவ!" என்றும்
மேவினர் இரண்டு பாலும் வேறுவே றாயம் போற்ற. 186

(இ - ள்.) திருநாவலூரில் திருவவதாரஞ் செய்தருளிய நல்ல தவக்களிறேயென்றும், பகைவர்களின் திரிபுரங்களை யழித் தருளிய சிவபெருமானுக்குரிய அன்பரே என்றும், கெடாத பெருஞ்சிறப்பினையுடைய திருவாரூரில் வாழ்கின்ற வேதியர் களுக்குத் தலைவரே என்றும் இரண்டு பக்கங்களிலும் சூழ்ந்து வருகின்ற வர்களாகிய வெவ்வேறாகிய மாதர்கூட்டங்கள் போற்றுதல் செய்ய. - எ - று.

கைக்கிடா குரங்கு கோழி சிவல்கவு தாரி பற்றிப்
பக்கமுன் போது வார்கள் பயில்மொழி பயிற்றிச் செல்ல
மிக்கபூம் பிடகை கொள்வோர் விரையடைப் பையோர் சூழ
மைக்கருங் கண்ணினார்கள் மறுகநீள் மறுகில் வந்தார். 187

(இ - ள்.) கையில் கொண்டு திரிகின்ற ஆட்டுக்கடா, குரங்கு, கோழி, காடை, கவுதாரி முதலியவைகளைப் பிடித்துக் கொண்டு இருபக்கங்களிலும் முன்னும் வருகின்றவர்கள் (போர் செய்தலுக்கும் விளையாடுதலுக்கும் உரிய) குறிப்பு மொழிகளை அவைகளுக்குக் கற்றுக் கொடுத்த (அத்தொழில்களைச் செய்யும் படி செய்து) செல்லவும் சிறந்த மலர்கள் நிறைந்திருக்கும் பூக்குடலைகளைத் தாங்கினவர்களும், வாசனைத் திரவியங்கள் பொருந்திய அடைப்பையைத் தாங்கினவர்களும் சூழ்ந்து வரவும், மையைத் தரித்த கரிய கண்களையுடைய மாதர்கள் மையல் கொள்ளவும் திருவீதியில் எழுந்தருளினார். - எ - று.

பொலங்கலப் புரவி பண்ணிப் போதுவார் பின்புபோத
இலங்கொளி வலயப் பொற்றோள் இடையிடை மிடைந்து தொங்கல்
நலங்கிளர் நீழல்சூழ நான்மறை முனிவரோடும்
அலங்கலந் தோளி னான்வந் தணைந்தனன் அண்ணல் கோயில். 188

(இ - ள்.) பொன்மயமாகிய ஆபரணங்களைப் பூட்டப்பட்ட குதிரையை அலங்கரித்துக் கொண்டு போகின்றவர்கள் தமக்குப் பின்னாகவரவும், விளங்குகின்ற காந்தியினையுடைய வாகுவ லயத்தை யணிந்த அழகிய தோள்களின் இடையிடையில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாலையானது நெருங்கி அதன் சிறந்த ஒளிசூழவும், நான்கு வேதங்களையு முணர்ந்த மறையவர்களோடும் மாலையைத் தரித்த அழகிய தோள்களையுடைய வராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானது திருக்கோயிலை வந்தடைந்தார்.எ-று

கண்ணுதல் கோயில் தேவா சிரியனாங் காவ ணத்து
விண்ணவர் ஒழிய மண்மேல் மிக்கசீர் அடியார்கூடி
எண்ணிலார் இருந்த போதில் "இவர்க்கியான் அடியேனாகப்
பண்ணுநாள் எந்நாள்" என்று பரமர்தாள் பரவிச் சென்றார். 189

(இ - ள்.) நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானது திருக்கேயிலினிடத்துள்ள தேவாசிரியன் என்னும் மண்டபத்தில் தேவர்கள் நீங்கலாக நிலவுலகத்தில் வாழ்கின்ற மிகுந்த சிறப்பினையுடைய அளவில்லாத அடியார்கள் கூடியிருந்த சமையத்தில் இவ்வடியார்களுக்கு யான் அடியவானாக என்னைச் செய்து கொள்ளுங் காலம் எக்காலமென்று தமது உள்ளத்தில் நினைத்துக் கொண்டு சிவபெருமானது திருவடிகளை வணங்கப் போயினார் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள். எ-று.

"அடியவர்க் கடிய னாவேன்" என்னும்ஆ தரவுகூரக்
கொடிநெடுங் கொற்ற வாயில் பணிந்துவகை குவித்துப் புக்கார்
கடிகொள் பூங்கொன்றை வேய்ந்தார் அவர்க்கெதிர் காணக் காட்டும்
படியெதிர் தோன்றி நிற்கப் பாதங்கள் பணிந்து பூண்டு. 190

(இ - ள்.) அடியார்களுக்கு யான் அடியேனாவேன் என்னும் அன்பு அதிகரிக்க வெற்றிக் கொடிகள் கட்டிய நெடிய திருவாயிலைப் பணிந்து தமது கைகளைக் குவித்து உள்ளே புகுந்தருளினார். (அப்பொழுது) வாசனை பொருந்திய கொன்றை மலர் மாலையைத் தரித்த சிவபெருமான் அச்சுந்தர மூர்த்தி சுவாமிகளுக் கெதிராகத் தம்மைக் காணும்படி தரிசனங்கொடுத்து நிற்க, அக்கடவுளின் திருவடிகளை வணங்கிச் சிரசின்மேல் சூடிக்கொண்டு. எ - று.

மன்பெ ருந்திரு மாமறை வண்டுசூழ்ந்(து)
அன்பர் சிந்தை அலர்ந்தசெந் தாமரை
நன்பெ ரும்பர மானந்த நன்மது
என்ற ரத்தும் அளித்தெதிர் நின்றன. 191

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) நிலைபெற்ற பெருமை பொருந்திய மகத்தாகிய வேதங்களென்னும் வண்டுகள் சூழ்ந்த அடியார்களின் இதயமென்னும் அலர்ந்த தாமரை மலரில் பொருந்திய சிறந்த பரமாநந்தமென்னுந் தேனைச் சிறியேனாகிய எனக்கும் பிரசாதித் தருளி எதிரே வெளிப்பட்டு நின்றன. - எ - று.

ஞாலம் உய்ய நடம்மன்றுள் ஆடின;
காலன் ஆருயிர் மாளக் கருத்தன;
மாலை தாழ்குழல் மாமலை யாள்செங்கை
சீல மாக வருடச் சிவந்தன. ***192***

(இ - ள்.) உலகத்திலுள்ளவர்கள் (தரிசித்துத் தமது கர்பந்தத் தினின்று நீங்கிப்) பிழைக்கும்படி கனகசபையில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளின; யமனுடைய உயிர் அவனது உடலை விட்டு நீங்கும்படி கோபித்தன; மலர்மாலையோடு தாழ்ந்த கூந்தலினையுடைய உமாதேவியார் தமது அழகிய திருக்கரங் களால் மிருதுவாகத் தடவ அதனால் சிவப்படைந்தன. - எ - று.

நீதி மாதவர் நெஞ்சிற் பொலிந்தன;
வேதி யாதவர் தம்மைவே திப்பன;
சோதி யாய்எழுஞ் சோதியுட் சோதிய;
ஆதி மாலயன் காணா அளவின. ***193***

(இ - ள்.) தருமநீதியில் நடக்கின்ற சிறந்த தபோதனர்களினது திருவுள்ளத்தில் எப்பொழுதும் பிரகாசிக்கின்றன; மலத்தில் நின்றும் நீங்காத அபக்குவர்களைப் பக்குவப்படுத்தி அம்மலத்தி னின்றும் நீக்குகின்றன; பிரகாசமாக எழுகின்ற சோதிக்கு உட்சோதியாய் விளங்குகின்றன; முதன்மையாகிய திருமால் பிரமன் என்னும் இருவரும் காணக்கூடாத பெருமையை யுடையனவாயிருக்கின்றன.

வேத ஆரணம் மேற்கொண் டிருந்தன;
பேதை யேன்செய் பிழைபொறுத் தாண்டன;
ஏத மானவை தீர்க்க இசைந்தன;
பூத நாத! நின் புண்டரீ கப்பதம். ***194***

(இ - ள்.) வேதங்களாகிய குதிரைகளின்மேல் எழுந்தருளி யிருந்தன; சிற்றறிவினனாகிய அடியேன் செய்த குற்றங்களைப் பொறுத்து ஆட்கொண்டன; அடியார்களது துன்பத்தைத் தீர்க்கும்படி இசைந்திருந்தன; பூதகணங்களுக்குத் தலைவராகிய எம்பெருமானே! தேவரீரது தாமரை மலர் போன்ற திருடிவகள். எ - று.

இன்னவா றேத்து நம்பிக் கேறுசே வகனார் தாமும்
அந்நிலை அவர்தாம் வேண்டும் அதனையே அருளவேண்டி
மன்னுசீர் அடியார் தங்கள் வழித்தொண்டை உணர நல்கிப்
பின்னையும் அவர்கள் தங்கள் பெருமையை அருளிச்செய்வார். 195

(இ - ள்.) இவ்விதமாகத் துதிக்கின்ற ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ரிஷபவாகனத்தின் மேலெழுந்தருளுகின்ற சிவபெருமானும் அப்பொழுது அச்சுந்தரமூர்த்தி சுவாமிகள் விரும்பிய அடியார்க் கடியராந் தன்மையையே அருளிச் செய்ய விரும்பி நிலைபெற்ற சிறப்பினையுடைய அடியார்களின் வழிபாட்டை உணர்ந்து கொள்ளும்படி அனுக்கிரகஞ்செய்து பின்னும் அவ்வடியார்களின் பெருமைகளையும் அருளிச் செய்கின்றார். - எ - று.

"பெருமையால் தம்மை ஒப்பார்; பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்! ஊனமேல் ஒன்றும் இல்லார்;
அருமையாம் நிலையில் நின்றார்; அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையுங் கடந்து நின்றார்; இவரைநீ அடைவாய்" என்று. 196

(இ - ள்.) இவர்களுக்குள்ள பெருமையினாலே தமக்குத் தாமே ஒப்பானவர்கள்; அடிமைபூண்டடொழுகுகின்ற குணத்தினால் எம்மை அடையப் பெற்றவர்கள்; ஒப்பற்ற சிவானுபூதியினால் இவ்வுலகத்தை வெல்பவர்கள்; தமக்கு மேல் வருகின்ற ஒரு குறைவுமில்லாதவர்கள்; யாவர்க்கும் அடைதற்கரிய மோன நிலையில் நின்றவர்கள்; தாம் செய்கின்ற அன்பின் மிகுதியால் சிவானந்தத்தை யனுபவிக்கின்வர்கள்; இம்மை மறுமை என்னும் இவ்விரண்டின் சுகங்களையும் கடந்து நின்றவர்கள்; இத்தன்மையாகிய அடியார்களை நீ அடைவாயாகவென்று. எ- று.

நாதனார் அருளிச் செய்ய நம்பியா ரூரர் "நானிங்(கு)
ஏதந்தீர் நெறியைப் பெற்றேன்" என்றெதிர் வணங்கிப் போற்ற
"நீதியால் அவர்கள் தம்மைப் பணிந்துநீ நிறைசொன் மாலை
கோதிலா வாய்மையாலே பா" டென அண்ணல் கூற. 197

(இ - ள்.) சிவபெருமான் இவ்வாறு அருளிச் செய்ய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அடியேன் இவ்விடத்தில் குற்றமற்ற நல்லமார்க்கத்தைப் பெற்றேனென்று அப்பெருமானது திருமுன்னேநின்று வணங்கித் துதிக்க (அப்பொழுது)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் முறைமைப்படியே நீ அவ்வடியார்களைப் பணிந்து பொருள் நிறைந்த பாமாலையைக் குற்றமற்ற மனவுண்மையாயினாலே பாடுவாயாக வென்று அருளிச்செய்ய.

தன்னையா ளுடைய நாதன் தானருள் செய்யக் கேட்டுச்
சென்னியால் வணங்கி நின்ற திருமுனைப் பாடிநாடர்
"இன்னவா றின்ன பண்பென் றேத்துகேன்? அதற்கியானார்?
பன்னுபா மாலை பாடும் பரிசெனக் கருள்செய்" என்ன. 198

(இ - ள்.) தம்மை அடிமையாக வுடைய சிவபெருமான் இவ்வாறு அருளிச் செய்யக் கேட்டு அவரது திருவடிகளில் சிரசினால் வணங்கி நின்ற ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவ் வடியார்களைக் குறித்து அவர்கள் சரித்திரம் இவ்விதமானது, அவர்களது அன்பின் தன்மை இப்படிப்பட்டது என்று அறியாதயான் எவ்வாறு துதிப்பேன். அவ்வாறு துதிப்பதற்கு அடியேன் யார். (அதனால்) அவர்கள் புகழைச் சொல்லுகின்ற திருப்பதிகத்தைப் பாடுகின்ற சக்தியை அடியேனுக்கு அருள் செய்ய வேண்டுமென்று சொல்ல. - எ - று.

தொல்லைமால் வரைபயந்த தூயாள்தன் திருப்பாகன்
அல்லல்தீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்
"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று
"எல்லையில்வண் புகழாரை எடுத்திசைப்பா மொழி" என்றார். 199

(இ - ள்.) பழமையாகிய பெரிய இமயபர்வதராஜன் புத்திரியாகப் பெற்ற உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய சிவபெருமான் உலகத்திலுள்ளவர்கள் தீவினையினின்றும் நீங்கிக் கதியடையும் பொருட்டு வேதங்களை யருளிச் செய்த திருவாக்கினால் "தில்லைவாழ்ந்தணர் தமடியார்க்குமடியேன்" என்று அளவில்லாத புகழையுடைய அடியார்களை முதலில் எடுத்த இசையோடு பொருந்திய திருப்பதிகத்தைப் பாடுவாயாக வென்று கட்டளையிட்டருளினார். - எ - று.

மன்னுசீர் வயல்ஆரூர் மன்னவரை வன்றொண்டர்
சென்னியுற அடிவணங்கித் திருவருள்மேற் கொள்பொழுதில்
முன்னமால் அயன்அறியா முதல்வர்தாம் எழுந்தருள
அந்நிலைகண் டடியவர்பால் சார்வதனுக் கணைகின்றார். 200

(இ - ள்.) நிலை பெற்ற சிறப்பினையுடைய வயல்கள் சூழ்ந்த திருவாரூரில் வீற்றிருக்கின்ற சிவபெருமானை ஸ்ரீ சுந்தரமூர்த்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுவாமிகள் தமது சிரசு பொருந்தும் படியாகத் திருவடிகளில் வணங்கித் திருவருளைப் பெற்றுக் கொள்ளும் சமயத்தில் பூர்வத்தில் திருமால் பிரமன் என்னும் இருவர்களாலுங் காணப்படாத சிவபெருமான் மறைந்தருள, அவ்வாறு மறைந் தருளிய தன்மையைக் கண்டு (பின்தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளியிருக்கின்ற) அடியார்களை அடையும்படி செல்கின்றவராயினார். - எ - று.

தூரத்தே திருக்கூட்டம் பலமுறையால் தொழுதன்பு
சேரத்தாழ்ந் தெழுந்தருகு சென்றெய்தி நின்றழியா
வீரத்தார் எல்லார்க்குந் தனித்தனிவே(று) அடியேன் என்(று)
ஆர்வத்தால் திருத்தொண்டத் தொகைப்பதிகம் அருள்செய்வார். 201

(இ - ள்.) (அத்தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளியிருக் கின்ற அடியார்களின்) திருக்கூட்டத்தைத் தூரத்திற் கண்ட பொழுதே பலதரம் வணங்கி அன்பு மிகுதியும் அதிகரிக்கப் பூமியில் சாஷ்டாங்கமாகவிழுந்து நமஸ்கரித் தெழுந்து அவ் வடியார்களின் சமீபத்திற்போய் நின்று ஓர் காலத்துங் கெடாத அன்பின் வலியையுடைய அடியார்களுக் கெல்லாம் தனித் தனியே ஒவ்வொருவருக்கும் வேறாக அடியேன் என்று பேரன் போடுந் திருத்தொண்டத்தொகை என்னுந் திருப்பதிகத்தை அருளிச் செய்வாராயினார் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள். எ - று.

தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்
செம்பொருளால் திருத்தொண்டத் தொகையான திருப்பதிகம்
உம்பர்பிரான் தானருளும் உணர்வுபெற உலகேத்த
எம்பெருமான் வன்றொண்டர் பாடிஅவர் எதிர்பணிந்தார். 202

(இ - ள்.) தமது பெருமானாகிய வன்மீகநாதர் அடியெடுத் துக் கொடுத்தருளிய "தில்லை வாழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்னுந் தொடர் மொழியை முதலாகவைத்துச் செவ்விய பொருளோடு திருத்தொண்டத்தொகை என்னுந் தமிழ் மாலையாகிய திருப்பதிகத்தைத் தேவ நாயகராகிய சிவபெருமான் (தமது திருவாக்கால் அடியார்களின் பெருமையை) தமக்கு அருளிய உணர்ச்சியுண்டாக உலகத்தார் துதிக்கும்படி எமது பெருமானாகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடி அவ்வடியார்களுக்கு எதிரே வணங்கியருளினார். எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உம்பர்நா யகரடியார் பேருவகை தாமெய்த
நம்பியா ரூரர்திருக் கூட்டத்தி னடுவணைந்தார்
தம்பிரான் றோழரவர் தாமொழிந்த தமிழ்முறையே
யெம்பிரான் தமர்கள்திருத் தொண்டேத்த லுறுகின்றேன். 203

(இ-ள்) சிவபெருமானது அடியார்கள் மிகுந்த சந்தோஷத்தை யடைய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவ்வடியார் திருக்கூட்டத்தின் நடுவேபோய் அவர்களுக்கடியவராக இருந்தருளினார். தம்பிரான் தோழராகிய அச்சுந்தரமூர்த்திசுவாமிகள் தாம் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டத் தொகை என்னுந் திருப்பதிகத்தின் முறைப்படி எமது சிவபெருமானுடைய அன்பினராகிய அடியார்களின் திருத்தொண்டினியல்பை (யான்) துதிக்கத் தொடங்குகின்றேன். - எ - று.

தடுத்தாட் கொண்ட புராணம் முற்றிற்று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தில்லைவாழந்தணர் சருக்கம்

௧. தில்லைவாழந்தணர் புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி! 1

(இ - ள்.) சர்வ லோககங்களுக்கும் முதற் காரணமாகவும், அவற்றின் நடுவாகவும், இவ்வளவினதென்று நிச்சயித்தறிதற்கரிய வியாபகமுடையதாகவும், சோதியே ஸ்வரூபமாகவும், சர்வ ஆன்மாக்களின் உணர்வுக் குணர்வாகவும், கட்புலனுக்குக் காணப்பட்ட எவ்வகைப் பொருள்களுமாகவும், பேதிக்கப்படாத ஏக வஸ்துவாகவும், பெண்ணாகவும், ஆணாகவும் வேதசிவாகமங்களால் போதிக்கப்படுகின்ற தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் செய்தருளுகின்ற திருநடனத்திற்கு வந்தனம் வந்தனம். - எ - று.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி! போற்றி!! 2

(இ - ள்.) (பல மதஸ்தர்களாலும் தங்கள் தங்களுக்குத் தோன்றியவாறே புனைந்துரைக்கப்பட்ட) கற்பனையைக் கடந்துநின்ற நடன சோதியானது தனது காருண்ணியமே திருவுருவமாகக் கொண்டு யாவருக்கும் அற்புதத்தை விளைக்குந் திருக்கோலத்தால் சிறப்புற்று அருமையாகிய உபநிடதங்களின் உச்சியின்மேலாக விளங்கும் சிறந்த சிதாகாசவடிவமாகிய திருச்சிற்றம்பலத்துள் நின்று அழகோடு ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற பொலிவினையுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளுக்கு வந்தனம் வந்தனம். - எ - று.

போற்றி நீள்தில்லை வாழ்அந் தணர்திறம் புகல லுற்றேன்;
நீற்றினால் நிறைந்த கோல நிருத்தனுக் குரிய தொண்டாம்
போற்றினார்; பெருமைக் கெல்லை ஆயினார் பேணி வாழும்
ஆற்றினார்; பெருகும் அன்பால் அடித்தவம் புரிந்து வாழ்வார். 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) இவ்விதமாகத் துதித்துப் (பலவகைச் செல்வத் திலுங் குறைவின்றி) நிறைந்த தில்லை வாழந்தணர்களின் சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கினேன்; (அவர்கள் எத்தன்மையினரென்றால்) விபூதியின் உத்தூளனத்தினால் நிறைந்த அழகினையுடைய ஸ்ரீ நடராஜப் பெருமானுக்குரிய தொண்டு செய்தலாகிய பெரும்பேற்றையுடையவர்கள்; பெருமையென்னும் பொருளுக்கு ஓர் எல்லையாயுள்ளவர்கள்; தாம் அனுசரித்து வாழ்தற்குரிய நல்லொழுக்கங்களையுடைய வர்கள்; மிகுந்த அன்பினால் அந்நடராஜப் பெருமானுடைய திருவடிகளை தியானிக்கின்ற தவத்தைச் செய்து வாழ்கின்ற வர்கள். - எ - று.

பொங்கிய திருவில் நீடும் பொற்புடைப் பணிகள் ஏந்தி
மங்கலத் தொழில்கள் செய்து மறைகளால் துதித்து மற்றும்
தங்களுக் கேற்ற பண்பில் தகும்பணித் தலைநின் றுய்த்தே
அங்கணர் கோயில் உள்ளா அகம்படித் தொண்டு செய்வார். 4

(இ - ள்.) சிறந்த பொன்னினாலும் பலவகை இரத்தினங் களினாலும் அதிகரித்திருக்கின்ற அழகிய திருவாபரணங்களைத் தாங்கிக்கொண்டு ஸ்ரீ நடராஜப்பெருமானை அலங்கரித்தல் ஆராதித்தல் முதலிய மங்கலகரமான தொழில்களைச் செய்து இருக்கு முதலிய வேதங்களால் துதிசெய்து பின்னும் தங்களுக்கு ஏற்ற வகையாகவுள்ள தகுந்த வேறு திருத்தொண்டுகளையும் முக்கியமாக மேற்கொண்டு செய்து அழகிய கண்ணாளராகிய அப்பெருமானது திருக்கோயிலுள்ளாக இவ்விதமாக அகம்படித் தொண்டு செய்கின்றவர்கள். - எ - று.

வருமுறை எரிமூன் றோம்பி மன்னுயிர் அருளால் மல்கத்
தருமமே பொருளாகக் கொண்டு தத்துவ நெறியிற் செல்லும்
அருமறை நான்கி னோடா றங்கமும் பயின்று வல்லார்;
திருநடம் புரிவார்க் காளாம் திருவினால் சிறந்த சீரார். 5

(இ - ள்.) வேதத்திற் சொல்லுகின்ற முறைமைப்படியே மூன்று அக்கினிகளையும் வளர்த்து நிலைபெற்ற ஆன்ம கோடிகள் தமது கருணையினால் சுகத்தையடையும் படி தருமம் ஒன்றையே பொருளாகக்கொண்டு உண்மை நெறியில் செல்லு கின்ற அரிய நான்கு வேதங்களோடு ஆறு வேதாங்கங் களையும் கற்று வல்லவர்கள்; (திருச்சிற்றம்பலத்தில்) திருநடனஞ் செய் தருளுகின்ற ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு அடிமையாகிய செல்வத்தினால் சிறந்த கீர்த்தியையுடையவர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மறுவிலா மரபின் வந்து மாறிலா ஒழுக்கம் பூண்டார்;
அறுதொழில் ஆட்சி யாலே அருங்கலி நீக்கி உள்ளார்;
உறுவது நீற்றின் செல்வம் எனக்கொளும் உள்ளம் மிக்கார்;
பெறுவது சிவன்பால் அன்பாம் பேறெனப் பெருகி வாழ்வார். 6

(இ - ள்.) குற்றமற்ற வேதியர் குலத்தில் அவதரித்துத் தங் குலவொழுக்கத்திற்கு மாறுதலில்லாத நல்லொழுக்கத்தையே மேற்கொண் டொழுகுகின்றவர்கள்; தாம் அறுவகையாகிய தொழில்களைச் செய்தலினால் (உலகத்தில் வருகின்ற) அரிய நோய் வறுமைமுதலிய துன்பங்களை நீக்கினவர்கள்; நமக்குப் பயனாகவுள்ளது திருநீற்றின் செல்வமே என்று எண்ணியிருக் கின்ற திருவுள்ளத்தையுடையவர்கள்; நாம் அடையத்தக்கது சிவபெருமானிடத்தில் பத்தி செய்வதாகிய பேறே யென்று மனங்களித்து வாழ்கின்றவர்கள். - எ - று.

ஞானமே முதலா நான்கும் நவையறத் தெரிந்து மிக்கார்;
தானமும் தவமும் வல்லார்; தகுதியின் பகுதி சார்ந்தார்;
ஊனமேல் ஒன்றும் இல்லார்; உலகெல்லாம் புகழ்ந்து போற்றும்
மானமும் பொறையும் தாங்கி மனை அறம்புரிந்து வாழ்வார். 7

(இ - ள்.) ஞானம் முதலாகிய நான்கு பாதப்பொருள்களை யும் குற்றமறத் தெரிந்து அதனால் சிறந்தவர்கள்; தானஞ் செய்வதிலும் தவஞ்செய்வதிலும் மிகவும் வல்லவர்கள்; மேன்மையாகிய பிரிவில் சேர்ந்துள்ளவர்கள்; தமக்குமேல் வருவதாகிய ஓர் குற்றமும் இல்லாதவர்கள்; எவ்வுலகத்திலுள்ள வர்களும் புகழ்ந்து துதிக்கத்தக்கதாகிய மானத்தையும் பொறுமையையுந் தாங்கிக்கொண்டு இல்லற தருமத்தை நடத்தி வாழ்கின்றவர்கள். - எ - று.

செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வவே தியர்களானார்
மும்மை ஆயிரவர் தாங்கள் போற்றிட முதல்வனாரை
இம்மையே பெற்று வாழ்வார் இனிப்பெறும் பேறொன் றில்லார்;
தம்மையே தமக்கொப் பான நிலைமையால் தலைமை சார்ந்தார். 8

(இ - ள்.) நல்லொழுக்கத்தோடு அடங்கிய சிந்தையினை யுடைய தெய்வத்தன்மைப்பொருந்திய வேதியர்கள் மூவாயிர வர்; அவர்கள் ஸ்ரீ நடராஜப் பெருமானைத் துதிப்பதற்கு இப்பிறப்பிலே தானே பெற்று வாழ்கின்றவர்கள்; இனி தாம்பெற வேண்டிய பேறாகிய பொருள் வேறொன் றுமில்லாதவர்கள்; தங்களுக்குத் தாங்களே சமானமாகிய மேன்மையினால் உயர்வடைந்தவர்கள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***இன்றிவர் பெருமை எம்மால் இயம்பலாம் எல்லைத் தாமோ?
தென்றமிழ்ப் பயனாய் உள்ள திருத்தொண்டத் தொகை முன்பாட
அன்றுவன் றொண்டர் தம்மை அருளிய ஆரூர் அண்ணல்
முன்திரு வாக்கால் கோத்த முதற் பொருளானார் என்றால். 9***

(இ - ள்.) இப்பொழுது இந்தத் தில்லை வாழ்ந்தணர்களின் பெருமையானது எம்மால் இவ்வளவினதென்று எடுத்துச் சொல்லுதற்குரிய தகுதியையுடைய தாகுமோ? அழகிய தமிழ் வேதத்தின் பயனாகவுள்ள திருத்தொண்டத் தொகையை அடியார்கள் முன்னே பாடும்படியாக அந்நாளில் ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு அருளிச் செய்த தியாகராஜப்பெருமான் தமது திருவாக்கினால் முதலில் "தில்லை வாழந்தணர் தமடியார்க்குமடியேன்" என்று எடுத்துக் கொடுத்த முதற் பொருளாயிருந்தார்களென்றால். எ - று.

***அகலிடத் துயர்ந்த தில்லை அந்தணர் அகிலம் எல்லாம்
புகழ்திரு மறையோர் என்றும் பொதுநடம் போற்றி வாழ!
நிகழ்திரு நீல கண்டக் குயவனார் நீடு வாய்மை
திகழும்அன் புடைய தொண்டர் செய்தவம் கூறலுற்றாம். 10***

(இ - ள்.) விசாலமாகிய இந்நிலவுலகத்தில் மேன்மை பொருந்திய தில்லைவாழந்தணர்கள் எல்லாவுலகத்தாராலும் புகழத்தக்க சிறந்தமறையவர்கள்; அவர்கள் எக்காலத்தும் திருச்சிற்றம்பலத்திற் செய்தருளுகின்ற ஆனந்தத் தாண்டவத்தைத் துதித்து வாழக்கடவர்களாக. இனி, சிறப்புற்று விளங்குகின்ற திருநீலகண்டக் குயவனார் என்னும் மிகுந்த மெய்மை விளங்கப் பெற்ற பேரன்பினையுடைய திருத்தொண்டர் தாம் அருமையாகச் செய்த தவத்தின் செய்கையைச் சொல்லத் தொடங்குகின்றோம். - எ - று.

தில்லை வாழந்தணர் புராணம் முற்றிற்று.

❑ ❑ ❑

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

௮. திருநீலகண்டநாயனார் புராணம்

வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்;
மாதொரு பாகம் நோக்கி மன்னுசிற் றம்ப லத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார். 1

(இ - ள்.) (மேற்சொல்லிய சிறப்பினையுடைய) தில்லை வாழந்தணர்கள் வாழ்கின்ற பழமையாகிய ஸ்ரீ சிதம்பரத்தில் குயவர் குலத்தில் திருவவதாரஞ் செய்தவர்; உமாதேவியார் தமது இடப்பாகத்தில் நிருத்த தரிசனஞ் செய்து கொண்டிருப் பதைப் பார்த்துக் கொண்டு நிலை பெற்ற திருச்சிற்றம்பலத்தில் முதலும் முடிவுமில்லாத அற்புதமாகிய ஒப்பற்ற திருநடனத்தைச் செய்தருளுகின்ற ஸ்ரீ நடராஜப் பெருமானது திருவடிகளைத் துதித்துத் திருத்தொண்டு செய்கின்ற நன்மையில் சிறந்தவர். எ-று

பொய்கடிந் தறத்தின் வாழ்வார்; புனற்சடை முடியார்க் கன்பர்
மெய்யடி யார்கட் கான பணிசெயும் விருப்பில் நின்றார்;
வையகம் போற்றும் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்;
சைவமெய்த் திருவின் சார்வே பொருளெனச் சாரு நீரார். 2

(இ - ள்.) பொய் சொல்வதினின்றும் நீங்கித் தருமவழியில் வாழ்கின்றவர்; கங்காநதியைத் தரித்த சடைமுடியினையுடைய சிவபெருமானுக்குச் சிறந்த அன்பராயுள்ளவர்; உண்மையாகிய திருத்தொண்டர்களுக்குத் தகுந்த தொண்டு செய்கின்ற விருப்பத்தையுடையவர்; உலகத்திலுள்ளவர்கள் புகழத்தக்க நற்செய்கையையுடைய இல்லற தருமத்தை நடத்தி வாழ்கின்றவர்; சைவநெறியில் வாழுகின்ற உண்மையாகிய செல்வத்தை யடைதலே தமக்குரிய மெய்ப்பொருளென்று அதனையடைந் தொழுகுங் குணத்தையுடையவர். - எ - று.

அளவிலா மரபின் வாழ்க்கை மட்கலம் அமுதுக் காக்கி
வளரிளம் திங்கட் கண்ணி மன்றுளார் அடியார்க் கென்றும்
உளமகிழ் சிறப்பின் மல்க ஓடளித் தொழுகும் நாளில்
இளமைமீ தூர இன்பத் துறையினில் எளியர் ஆனார். 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) தம்முடைய மரபிற்குத் தக்கபடி செய்கின்ற அளவில்லாத மட்பாண்டங்களைத் தமது இல்வாழ்க்கைக்கு வேண்டிய அமுது முதலியவற்றிற்கு மாத்திரம் அமைத்து ஜீவனஞ் செய்துக்கொண்டு, வளர்கின்ற இளமைபொருந்திய பிறைச் சந்திரனைக் கொண்டை மாலையாகத் தரித்த ஸ்ரீ நடராஜ பெருமானுடைய அடியார்களுக்கு எந்நாளும் மனமகிழ் தற்குக் காரணமான சிறப்பினால் விளங்கத் திருவோடுகளைக் கொடுத்துக் கொண்டு வாழுங்காலத்தில் இளமைப் பருவம் அதிகரித்துவர, சிற்றின் பவழியில் மிகுந்த விருப்பமுடையவரா யிருந்தார். எ - று.

அவர்தங்கண் மனைவி யாரும் அருந்ததிக் கற்பின் மிக்கார்;
புவனங்கள் உய்ய ஐயர் பொங்குநஞ் சுண்ண யாம்செய்
தவநின்று தடுத்த தென்னத் தகைந்துதான் தரித்த தென்று
சிவன்எந்தை கண்டந் தன்னைத் திருநீல கண்டம் என்பார். 4

(இ - ள்.) (அந்நாயனார்) சிவபெருமான் சர்வலோகங்களும் பிழைக்கும் பொருட்டு (திருப்பாற் கடலில்) தோன்றிய கொடியவிஷத்தை அமுது செய்ய நாம் அனைவருஞ் செய்த தவமானது அங்குநின்று தடுத்தாற் போல (உள்ளே புகவொட் டாமல்) தகைவு செய்து தானே அவ்விஷத்தைத் தரித்துக் கொண்ட தென்று எமது முதல்வராகிய சிவபெருமானது கண்டத்தைத் திருநீலகண்டமென்று எந்நாளும் சொல்லிக் கொண்டிருப்பார். அவருடைய மனைவியாரும் அருந்ததியை யொத்த கற்பிற் சிறந்தவர். - எ - று.

ஆனதங் கேள்வர் அங்கோர் பரத்தைபால் அணைந்து நண்ண
மானமுன் பொறாது வந்த ஊடலால் மனையின் வாழ்க்கை
ஏனைய எல்லாஞ் செய்தே உடனுறை(வு) இசையார் ஆனார்;
தேனலர் கமலப் போதில் திருவினும் உருவம் மிக்கார். 5

(இ - ள்.) தேன் பொருந்திய தாமரை மலரிலிருக்கின்ற இலக்குமியைப் பார்க்கிலும் சிறந்த அழகினையுடையவராகிய அந்நாயனாரது மனைவியாரானவர் பிரியமுள்ள தமது கணவனார் அவ்வூரிலுள்ள ஓர் வேசியினிடத்தில் கூடியிருந்து தம்முடைய வீட்டிற்கு வருதலும் (அதைப் பார்த்து) மானத்தை முன்னிட்டு அதனைப்பொறுக்காமல் தம்மிடத்து உண்டாகிய பிணக்கினால் இல்லற வாழ்க்கைக்குச் செய்ய வேண்டிய மற்றை எல்லாப் பணிகளையுஞ் செய்து தம்புருஷரோடு சம்பந்தப் படுதற்கு மாத்திரம் இஷ்டமில்லாதவராயிருந்தார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூண்டஅப் புலவி தீர்க்க அன்பனார் முன்பு சென்று
பூண்டயங் கிளமென் சாயல் பொற்கொடி அனையார் தம்மை
வேண்டுவ இரந்து கூறி மெய்யுற அணையும் போதில்
தீண்டுவீ ராயின் எம்மைத் திருநீல கண்டம் என்றார். 6

(இ - ள்.) (அதனையுணர்ந்த) திருநீலகண்ட நாயனார் தமது மனைவியாருள்ளத்தில் அதிகரித்தெழுந்த அப்பிணக்கை நீக்கும் பொருட்டு அவரிடத்திற் போய் ஆபரணங்கள் விளங்குகின்ற இளமை பொருந்திய மெல்லிய சாயலையுடைய பொற் கொடிபோன்ற தமது மனைவியாரை வேண்டுவனவாகிய பிரியவசனங்களை எளிமையாகச் சொல்லி அவர் திருமேனி யைப் பொருந்தத்தழுவும் போதில் (அதற்கு அவ்வம்மையார் பிணங்கி) இனி எம்மை நீர் தீண்டினால் திருநீலகண்டம் என்று திருவாணை கூறினார். எ - று.

ஆதியார் நீல கண்டத் தளவுதாங் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி எம்மைஎன் றதனால் மற்றை, மாதரார்
தமையும் என்றன் மனத்தினும் தீண்டேன் என்றார். 7

(இ - ள்) முதற் பெருங்கடவுளாகிய சிவபெருமானது திரு நீலகண்டத்தினளவிலே தாம் வைத்திருக்கின்ற அன்பினின்றும் சிறிதும் வேறுபடாத அத்திருவாணையைக் கேட்ட திருநீலகண்ட நாயனார் உடனே அவரைத் தீண்டாமல் நீங்கி அயலான் மனைவியைப்போலப் பார்த்து எம்மை என்று தன்மைப் பன்மையாகச் சொன்னதனால் மற்றை ஸ்திரீகளையும் (என்காயத்தினாலன்றி) என்மனத்தினாலும் தீண்டமாட்டே னென்று உறுதி செய்து கொண்டார். - எ - று.

கற்புறு மனைவி யாரும் கணவனார்க் கான எல்லாம்
பொற்புற மெய்யு றாமல் பொருந்துவ போற்றிச் செய்ய
இற்புறம் பொழியா தங்கண் இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி இன்மை அயலறி யாமை வாழ்ந்தார். 8

(இ - ள்.) கற்பினையுடைய அத்திருநீலகண்ட நாயனா ருடைய மனைவியாரும் தமது கணவருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளை யெல்லாம் அழகாக அவரது திருமேனியில் தம்முடம்பு மாத்திரம் தீண்டாமல் செய்தற்குரியவைகளை விரும்பிச்செய்து தமது வீட்டில் நின்று புறத்திற் செல்லாமல்

Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்திரீபுருஷர்களாகிய இவ்விருவரும் வேறுவேறிடத்தில் வசித்து அன்பு பொருந்திய புணர்ச்சியில்லாமலிருப்பதை அயலார் அறிந்து கொள்ளாதபடிக்கு வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இளமையின் மிக்கு ளார்கள் இருவரும் அறிய நின்ற
அளவில்சீர் ஆணை போற்றி ஆண்டுகள் பலவுஞ் செல்ல
வளமலி இளமை நீங்கி வடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் திறத்துச் சாயார். 9

(இ - ள்.) இளமைப் பருவத்தால் சிறந்துள்ளவர்களாகிய திரு நீலகண்ட நாயனாரும், அவர் மனைவியாரும் (பிறர் அறியாமல்) தாங்களிருவரும் அறியும்படி நின்ற அளவில்லாத பெருஞ் சிறப்பினையுடைய அத்திரு வாணையைத் தவறாமல் பாதுகாத்துப் பல வருஷங்களுஞ் செல்லா நிற்க, வளப்பமிகுந்த இளமைப் பருவம் நீங்கித் திரை முதலியவைகளையுடைய முதுமைப்பருவம் வந்து (அதனால்) தேகத்தளர்ச்சி யோடு சாய் வடைந்தும் தாம் சிவபெருமானிடத்தில் வைத்த அன்பினின்றும் சிறிதும் நீங்காதவரானார்கள். எ - று.

இந்நெறி ஒழுகும் நாளில் எரிதளிர்த் தென்ன நீண்ட
மின்னொளிர் சடை யோன் தானுந் தொண்டரை விளக்கங் காண
நன்னெறி இதுவாம் என்று ஞாலத்தார் விரும்பி உய்யும்
அந்நெறி காட்டும் ஆற்றல் அருட்சிவயோகி யாகி. 10

(இ - ள்.) (திருவாணையைப் போற்றி) இத்தன்மையான அன்பின் வழியில் நடக்கும் நாள்களில், நெருப்புத் தளிர் விட்டதைப் போலச் சிவந்து நீண்டிருக்கின்ற மின்னலைப் போல விளங்குஞ் சடையினையுடைய சிவபெருமானும் தமது அன்பராகிய திரு நீலகண்ட நாயனாரது மகிமையை யாவரும் இத்தன்மையினரென்று அறிந்து கொள்ளவும், நன்மையாகிய மார்க்கம் இதுவேயாகுமென்று இப்பூவுலகத்திலுள்ளவர்கள் விரும்பிக் கடைத்தேறுதற்குக் காரணமான அப்படிப்பட்ட நல்ல வழியைக் காட்டும் படியாகவும் அருள் பொருந்திய ஓர் சிவயோகியின் வடிவமெடுத்து. - எ - று.

கீளொடு கோவணம் சாத்திக் கேடிலா
வாள்விடு நீற்றொளி மலர்ந்த மேனிமேல்
தோளொடு மார்பிடைத் துவளும் நூலுடன்
நீளொளி வளர்திரு முண்ட நெற்றியும். 11

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) (திருவரையில்) கீளுடனே கோவணத்தைத் தரித்துக் கெடுதலில்லாத ஒளிவீசுகின்ற திருவெண்ணீற்றின் பிரகாச மானது விளங்குகின்ற திருமேனியின்மேல் தோளிலும் மார்பிலும் அசைகின்ற பூணூலுடனே மிகுந்த வொளி விளங்கு கின்ற சிறந்த திரிபுண்டரந் தீட்டிய நெற்றியும். - எ - று.

நெடுஞ்சடை கரந்திட நெறித்த பம்பையும்
விடுங்கதிர் முறுவல்வெண் ணிலவும் மேம்பட
இடும்பலிப் பாத்திரம் ஏந்து கையராய்
நடந்துவேட் கோவர்தம் மனையில் நண்ணினார். 12

(இ - ள்.) நெடிய சடையானது மறையும்படி நெறித்து வளர்ந்திருக்கின்ற பம்பையும், ஒளி வீசுகின்ற பற்களின்றுந் தோன்றுகின்ற வெண்மை பொருந்திய பிரகாசமும் அதிகரிக்கப் பிச்சையேற்பதற்குரிய பாத்திரத்தை யேந்திய திருக்கரத்தை யுடையவராய் எழுந்தருளித் திருநீலகண்ட நாயனாருடைய மனையில் வந்தருளினார். - எ - று.

(பம்பை - பரட்டை மயிர்)

நண்ணிய தவச்சிவ யோக நாதரைக்
கண்ணுற நோக்கிய காதல் அன்பர்தாம்
புண்ணியத் தொண்டராம் என்று போற்றிசெய்(து)
எண்ணிய வகையினால் எதிர்கொண் டேத்தினார். 13

(இ - ள்) அவ்வாறு திருவேடங் கொண்டு வந்தருளிய தவத்தினையுடைய சிவயோகியாகிய சிவபெருமானைத் தம்முடைய கண்களால் நன்றாகத் தரிசித்த பேரன்பினையுடைய திருநீலகண்ட நாயனார் இவர் புண்ணியவடிவத்தையுடைய ஓர் சிவனடியவரென்று கருதித் துதித்து மதிக்கத்தகுந்த பலவகை உபசாரங்களோடு எதிர் கொண்டு சென்று நமஸ்கரித்தார். எ-று

பிறைவளர் சடைமுடிப் பிரானைத் தொண்டரென்
றுறையுளி லணைந்துபே ருவகை கூர்ந்திட
முறைமையின் வழிபட மொழிந்த பூசக
ணிறைபெரு விருப்பொடு செய்து நின்றபின். 14

(இ - ள்.) இளம்பிறைச் சந்திரன் வளருகின்ற சடைமுடி யினையுடைய சிவபெருமானை அவரது அடியவரென்று நினைத்துத் தமது வீட்டிற் கழைத்துக் கொண்டுபோய் மிகுந்த சந்தோஷமுண்டாகச் சிவனடியார்களுக்கு வழிபாடு செய்யும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருட்டுச் சாஸ்திரங்களில் விதித்திருக்கின்ற பூசைகளை அம்முறைமைப்படியே தம்முள்ளத்தில் நிறைந்த பேரன்போடு செய்து நின்ற பின்பு. - எ - று.

"எம்பிரான்! யான் செயும் பணிஎது?" என்றனர்
வம்புலா மலர்ச்சடை வள்ளல் தொண்டனார்;
உம்பர்நா யகனும் "இவ் வோடுன் பால்வைத்து
நம்பி!நீ தருகநாம் வேண்டும் போ" தென்று. 15

(இ - ள்.) வாசனை வீசுகின்ற மலர் மாலையைத் தரித்த சிவபெருமானுக்கு உரிய திருத்தொண்டராகிய திருநீலகண்ட நாயனார் (அச்சிவயோகியாகிய கடவுளைப் பார்த்து) எம் பெருமானே! அடியேன் தேவரீருக்குச் செய்ய வேண்டிய குற்றேவல் யாதென்று கேட்டனர். (அப்பொழுது) தேவநாயக ராகிய சிவயோகியாரும் சிறந்த அன்பனே! இந்தத் திரு வோட்டை உன்னிடத்தில் வைத்துக் கொண்டிருந்து நாம் கேட்கும் பொழுது நீ கொடுப்பாயாக வென்று சொல்லி. எ - று.

"தன்னைஒப் பரியது; தலத்துத் தன்னுழைத்
துன்னிய யாவையுந் தூய்மை செய்வது;
பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவ(து);
இன்னதன் மையதிது; வாங்குநீ" என. 16

(இ - ள்.) (இந்தப்பிக்ஷாபாத்திரமானது) ஒப்பிடுங்கால் தனக்குத்தானே ஒப்பானது; இந்நிலவுலகத்தில் தன்னிடத்திற் சேர்ந்த அன்னங் கறிமுதலிய எல்லாப் பொருள்களையும் பரிசுத்தஞ் செய்வது; பொன்னைப் பார்க்கிலும் நவமணிகளைப் பார்க்கிலும் சிறந்ததாக வைத்துக் காப்பாற்றத்தக்கது; இப்படிப் பட்ட தன்மையையுடைய இதனை நீ வாங்கிவையென்று கொடுத்தருள. - எ - று.

தொல்லைவேட் கோவர்தங் குலத்துள் தோன்றிய
மல்குசீர்த் தொண்டனார் வணங்கி வாங்கிக்கொண்(டு)
ஒல்லையின் மனையிலோர் மருங்கு காப்புறும்
எல்லையில் வைத்துவந் திறையை எய்தினார். 17

(இ - ள்.) பழைமையாகிய குயவரது குலத்தில் திருவவதாரஞ் செய்தருளிய நிறைந்தகீர்த்தியினையுடைய திருநீலகண்ட நாயனார் நமஸ்காரஞ் செய்து அத்திரு வோட்டினை வாங்கிக் கொண்டு சீக்கிரமாகத் தம்வீட்டில் ஓர் பக்கத்தில் (அரிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருள்களை வைத்துக்) காப்பாற்றத்தக்க ஓரிடத்தில் பத்திரப்படுத்தி வந்து சிவபெருமானாகிய சிவயோகியாரை யடைந்தார். எ - று.

வைத்தபின் மறையவ ராகி வந்தருள்
நித்தனார் நீங்கிட நின்ற தொண்டரும்
உய்த்துடன் போய்விடை கொண்டு மீண்டனர்
அத்தர்தம் அம்பலம் அணைய மேவினார். 18

(இ - ள்.) அப்பிக்ஷாபாத்திரத்தைக் காவலான இடத்தில் வைத்து வந்த பின்பு பிராமணத்திருவுருவங்கொண்டெழுந் தருளி வந்த சிவபெருமான் அவ்விடத்தினின்று நீங்க, அங்கு நின்ற திரு நீலகண்ட நாயனாரும் அவரோடுகூடக் கொஞ்சத் தூரம்வரையில் பின்சென்று பின்பு அவரிடத்தில் விடை பெற்றுக் கொண்டு வீட்டிற்குத் திரும்பி வந்தார். சிவயோகியாக வந்த சிவபெருமானும் திருவம்பலத்தை யடைந்தருளினார். எ-று.

சாலநாள் கழிந்த பின்பு தலைவனார் தாம்முன் வைத்த
கோலமா ஓடு தன்னைக் குறியிடத் தகலப் போக்கிச்
சீலமார் கொள்கை என்றும் திருந்துவேட் கோவர் தம்பால்
வாலிதாம் நிலைமை காட்ட முன்புபோல் மனையில் வந்தார். 19

(இ - ள்.) அவ்வோட்டைக் கொடுத்துப் பலநாள்கள் கழிந்தபிறகு முதல்வராகிய சிவபெருமான் தாம் முன்பு அவரிடத்தில் கொடுத்து வைத்த அழகு பொருந்திய திருவோட்டை அதை வைத்திருந்த இடத்தினின்றும் வேறிடத்திற் போகும்படி மறைத்து எப்பொழுதும் சிறப்புப் பொருந்திய நற்குணங்களால் திருந்திய திருநீலகண்ட நாயனாரிடத்திலுள்ள பரிசுத்தமாகிய பத்தி நிலைமையைப் பிறருக்குக் காட்டும் பொருட்டு முன்புபோலத் திருவுருவங் கொண்டு அவரது மனைக்கு வந்தருளினார். - எ - று.

வந்தபின் தொண்ட னாரும் எதிர்வழி பாடுசெய்து
"சிந்தைசெய் தருளிற் றெங்கள் செய்தவம்" என்றுநிற்ப
"முந்தைநாள் உன்பால் வைத்த மொய்யொளி விளங்கும் ஓடு
தத்துநில்" என்றான் எல்லாம் தான்வைத்து வாங்க வல்லான். 20

(இ - ள்.) அவ்விதமாகச் சிவபெருமான் தமது மனைக்கு எழுந்தருளி வந்த பின்பு திருநீலகண்ட நாயனாரும் எதிராகச் சென்று வந்தன முதலிய வுபசாரங்களைச் செய்து, தேவரீர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவுள்ளங் கொண்டு இவ்விடத்திற்கு எழுந்தருளியது நாங்கள் பூர்வத்தில் செய்த தவப்பயனென்று சொல்லி நிற்க, (அப்பொழுது) எல்லாப் பொருளையும் வைக்கவும் வாங்கவும் வல்லவராகிய சிவபெருமான் (அத்திரு நீலகண்ட நாயனாரைப் பார்த்து அன்பனே!) முன்னாளில் உன்னிடத்தில் யான்வைத்த மிகுந்த ஒளிவிளங்குகின்ற திருவோட்டை என்னிடத்திற் கொடுத்து அதன் பின்பு நின்று பேசுவாயாகவென்றார். எ- று.

என்றவர் விரைந்து கூற இருந்தவர் ஈந்த ஓடு
சென்றுமுன் கொணர்வான் புக்கார் கண்டிலர் திகைத்து நோக்கி
நின்றவர் தம்மைக் கேட்டார்; நேடியும் காணார்; மாயை
ஒன்றுமங் கறிந்தி லார்தாம் உரைப்ப தொன்றின்றி நின்றார். 21

(இ - ள்.) என்று இவ்விதமாக அச்சிவயோகியாகிய கடவுள் துரிதமாகச் சொல்ல அவர் கொடுத்த அத்திருவோட்டை அது வைத்திருந்த இடத்திற்குப் போய்க் கொண்டு வரும்படி சென்ற திருநீலகண்ட நாயனார் அதனைக் காணாமல் பார்த்துத் திகைத்து அங்கு நின்ற தமது மனைவியாரைக் கேட்டும் பிறவிடங்களில் தேடியுங் காணாதவராய்ச் சிவபெருமானால் செய்யப்பட்ட மாயையைச் சிறிதும் அறியாதவராய் தாம் அச்சிவயோகியாருக்கு உத்தரஞ் சொல்வதற்கு ஒன்றுந் தோன்றாமல் நின்று கொண்டிருந்தார். - எ - று.

மறையவ னாகி நின்ற மலைமகள் கேள்வன் தானும்
உறையுளிற் புக்கு நின்ற ஒருபெருந் தொண்டர் கேட்ட
இறையிலிங் கெய்தப் புக்காய்! தாழ்த்ததென்? என்ன வந்து
கறைமறை மிடற்றி னானைக் கைதொழு துரைக்கலுற்றார். 22

(இ - ள்.) பிராமணத்திருவுருவங்கொண்டு எழுந்தருளி நிற்கின்ற பார்வதி நாயகராகிய சிவபெருமானும் வீட்டில் நுழைந்து வருவதற்குத் தாமதப்பட்டு நிற்கும் ஒப்பற்ற, பெருந் தொண்டராகிய திருநீலகண்ட நாயனார் கேட்கும்படியாக நொடிப்பொழுதில் இவ்விடத்தில் வருகின்றேனென்று புகுந்த நீ நெடுநேரம் காலதாமதப்பட்டு ஏன் நிற்கின்றாயென்று சொல்ல, திருநீலகண்ட நாயனார் விஷத்தை மறைத்துவைத்த கண்டத்தை யுடையவராகிய சிவபெருமானிடத்திற்கு வந்து தமது கைகளால் தொழுது சொல்லத் தொடங்கினார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"இழையணி முந்நூல் மார்பின் எந்தை! நீர்தந்து போன
விழைதகும் ஓடு வைத்த வேறிடம் தேடிக் காணேன்;
பழையமற் றதனில் நல்ல பாத்திரந் தருவன் கொண்டிப்
பிழையினைப் பொறுக்க வேண்டும் பெரும! என்றிறைஞ்சி நின்றார். 23

(இ - ள்.) இழையாக விளங்குகின்ற அழகிய முப்புரி நூலினையணிந்த திருமார்பினையுடைய எமது தலைவரே! தேவரீர் அடியேனிடத்திற்கொடுத்துவைத்துச் சென்ற விரும்பத் தக்கதாகிய அந்தப் பாத்திரம் வைத்த இடத்திலும் வேறிடங் களிலும் தேடி அதைக்கண்டிலேன், தேவரீரது அப்பழைய பாத்திரத்தைப் பார்க்கிலும் புதிதான நல்ல பாத்திரந் தருகின் றேன், அதனைத் திருவுள்ளங் கொண்டு ஏற்று (அடியேனுடைய அசாக்கிரதையினால் நேரிட்ட) இப்பிழையினை மன்னித்தருள வேண்டும் பெருமானே! என்று வணங்கி விண்ணப்பஞ் செய்து நின்றார் திருநீலகண்ட நாயனார். எ - று.

சென்னியால் வணங்கி நின்ற தொண்டரைச் செயிர்த்து நோக்கி
"என்னிது மொழிந்த வாநீ? யான்வைத்த மண்ணோ டன்றிப்
பொன்னினால் அமைத்துத் தந்தாய் ஆயினுங் கொள்ளேன்; போற்ற
முன்னைநான் வைத்த ஓடே கொண்டுவா" என்றான் முன்னோன். 24

(இ - ள்.) தலையினால் வணங்கித் தாம் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று வேண்டிக் கொண்ட திரு நீலகண்ட நாயனாரை முதல் வராகிய கடவுள் கோபித்துப் பார்த்து என்ன காரணத்திற்காக இவ்வாறு நீ சொன்னது; யான் உன்னிடத்தில் வைத்த மண்பாத்திரமேயல்லாமல் பொன்னினாற் செய்து ஒன்றைக் கொடுத்தாயானாலும் யான் அதனை வாங்மாட்டேன்; இனியான் காப்பாற்றும் பொருட்டு முன்பு உன்னிடத்தில் வைத்துப்போன அத்திரு வோட்டையே கொண்டு வருவாயாகவென்றார். - எ - று.

கோடிலாப் பெரியோய்! என்பால் வைத்தது கெடுத லாலே
நாடியும் காணேன்; வேறு நல்லதோர் ஓடு சால
நீடுசெல் வதுதான் ஒன்று தருகிறேன் எனவும் கொள்ளா(து)
ஊடிநின் றுரைத்த தென்றன் உணர்வெலாம் ஒழித்த தென்ன. 25

(இ - ள்.) ஓர் குறைவுமில்லாத பெரியவரே! தேவரீர் என்னிடத்தில் வைத்த திருவோடு கெட்டுப்போனபடியினால் அதனை எவ்விடத்துந் தேடியுங் காணவில்லை. (ஆகையால்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதற்கு வேறாகிய ஓர் நல்ல பாத்திரம் மிகவும் நெடுங்காலம் கெடாமல் நீடித்திருக்கத் தக்கதாகிய ஒன்றைத் தருகின்றே னென்று சொன்னாலும் அதனை அங்கீகரியாமல் தேவரீர் கோபங்கொண்டு அதுவே வேண்டுமென்று கூறியது என் னுடைய அறிவு முழுமையும் கெடுத்துவிட்டதென்று சொல்ல.

"ஆவதென்? உன்பால் வைத்த அடைக்கலப் பொருளை வெளவிப்
பாவகம் பலவும் செய்து பழிக்குநீ ஒன்றும் நாணாய்!
யாவரும் காண உன்னை வளைத்துநான் கொண்டே அன்றிப்
போவதும் செய்யேன்" என்றான் புண்ணியம் பொருளாய் நின்றான். 26

(இ - ள்.) இனி உன்னாலாகவேண்டிய தென்ன? உன்னிடத் தில் அடைக்கலமாகவைத்த பொருளை அபகரித்துக் கொண்டு (அதை இல்லை என்று சாதிப்பதற்காகப்) பல வஞ்சக நடிப்புக் காட்டிப் பழியான காரியஞ் செய்வதற்கு நீ சிறிதும் அஞ்சாதவ னாக இருக்கின்றாய் (ஆதலால்) இவ்வூரிலுள்ள யாவரும் அறியும்படியாக உன்னைத் தப்பிப் போக வொட்டாமல் பிடித்துக்கொண்டு அத்திரு வோட்டை உன்னிடத்தி நின்றும் நான் வாங்கிக் கொள்ளாமல் போகவேமாட்டேன் என்று சொல்லி யருளினார் புண்ணியத்தின் பயனாயுள்ள சிவபெருமான். எ - று.

வளத்தினால் மிக்க ஓடு வெளவினேன் அல்லேன்; ஒல்லை
உளத்தினும் களவி லாமைக் கென்செய்கேன்? உரையும் எனைக்
களத்துநஞ் சொளித்து நின்றான் "காதல்உன் மகனைப் பற்றிக்
குளத்தினில் மூழ்கிப்போ" என் றருளினான் கொடுமை இல்லான். 27

(இ - ள்.) தூய்மை முதலிய வளப்பத்தினால் சிறந்த அந்தப் பாத்திரத்தை அடியேன் கவர்ந்து கொண்ட வனல்லன்; எனது மனத்திலும் கொஞ்சமும் கள்ள மில்லாமையைத் தெரிவிப் பதற்கு யான் என்ன செய்வேன் சொல்லுமென்று கேட்க, கண்டத்தில் விஷத்தை மறைத்து வந்தருளிய சிவபெருமானாகிய நன்மைபொருந்திய சிவயோகியானவர் (ஆனால்) விருப்பத்தை யுடைய உனது புத்திரனைப் பிடித்துக் கொண்டு குளத்தினில் முழுகி நான் அபகரிக்கவில்லை என்று சத்தியஞ்செய்துவிட்டுப் போவென்று அருளிச்செய்தார். எ - று.

"ஐயா! நீர் அருளிச் செய்த வண்ணமி யான்செய்வ தற்குப்
பொய்யில்சீர்ப் புதல்வன் இல்லை; என்செய்கேன்? புகலும் என்ன
மையறு சிறப்பின் மிக்க மனையவள் தன்னைப் பற்றி
மொய்யலர் வாவி புக்கு மூழ்குவாய்" எனமொழிந்தார். 28

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) சுவாமீ! தேவரீர் அருளிச் செய்தபிரகாரம் அடியேன் சத்தியஞ் செய்து கொடுப்பதற்கு உண்மையாகிய சிறப்பினையுடைய புத்திரனில்லை ஆகையால் யான் அதற்கு என்ன செய்வேன் அருளிச் செய்யு மென்று கேட்க; (ஆனால்) குற்றமற்ற சிறப்பினையுடைய உனது மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு நெருங்கிய மலர்களையுடைய தடாகத்தில் புகுந்து முழுகி இல்லையென்று சொல்லென்றார். - எ - று.

கங்கைநதி கரந்தசடை கரந்தருளி எதிர்நின்ற
வெங்கண்விடை யவர்அருள வேட்கோவர் உரைசெய்வார்;
"எங்களில் ஓர் சபதத்தால் உடன்மூழ்க இசைவில்லை;
பொங்குபுனல் யான்மூழ்கித் தருகின்றேன்; போதும்" என. 29

(இ - ள்.) கங்காநதியானது மறைந்திருக்குஞ் சடையினை மறைத்தருளிச் சிவயோகியாராகத் திருவுருவங் கொண்டு எதிராக நிற்கின்ற கோபக் கண்ணையுடைய ரிஷபத்தை வாகனமாகக் கொண்டருளிய சிவபெருமான் இவ்வாறு அருளிச் செய்ய, திருநீலகண்ட நாயனார் அதற்கு உத்தரஞ் சொல்லுவார்; யானும் என்மனை வியுமாகிய எங்கள் இருவரிடத்திலும் உண்டாயிருக்கின்ற ஓர் சபதத்தினால் என்மனைவியோடு குளத்தில் முழுகிச் சொல்வதற்கு இஷ்டமில்லை; மிகுந்த நீரில் நானே முழுகி சத்தியஞ் செய்கின்றேன் வாருமென்று சொல்ல. - எ - று.

"தந்துமுன் தாராதே கொள்ளாமைக் குன்மனைவி
அந்தளிர்ச்செங் கைப்பற்றி அலைபுனலில் மூழ்காதே
சிந்தைவலித் திருக்கின்றாய்! தில்லைவாழ் அந்தணர்கள்
வந்திருந்த பேரவையில் மன்னுவன்யான்" எனச்சென்றார். 30

(இ - ள்.) (அப்பொழுது சிவபெருமான் திருநீலகண்ட நாயனாரைப் பார்த்து) நான் முன்பு உன்னிடத்திற்கொடுத்த பாத்திரத்தை நீ கொடுக்காமலும், அதை அபகரித்துக் கொள்ள வில்லை யென்பதற்கு உன் மனைவியின் அழகிய தளிர் போன்ற சிவந்தகையைப் பிடித்துக் கொண்டு அலைகளை வீசுகின்ற நீரில் முழுகிச் சத்தியஞ் செய்யாமலும் மனத்தை உறுதிசெய்து கொண்டிருக்கின்றாய். தில்லையில் வாழ்கின்ற வேதியர்கள் வந்து கூடியிருக்கின்ற பெரிய சபையில் இந்த விவகாரத்தைக் குறித்துப் பேசப்போகின்றேனென்று சொல்லிப்போனார். எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நல்லொழுக்கம் தலைநின்றார் நான்மறையின் துறைபோனார்
தில்லைவாழ் அந்தணர்கள் வந்திருந்த திருந்தவையில்
எல்லையிலான் முன்செல்ல இருந்தொண்டர் அவர்தாமும்
மல்குபெருங் காதலினால் வழக்குமே லிட்டணைந்தார். 31

(இ - ள்.) நல்லொழுக்கத்தில் முதன்மையாக நின்றவர்களும், நான்கு வேதங்களாகிய கடலின்கரையைக் கண்டவர்களுமாகிய தில்லை மூவாயிரவரென்னும் வேதியர்கள் வந்து கூடியிருந்த குற்றமற்ற சபையில் அளவில்லாத குணக்கடலாகிய சிவபெருமான் முன்னே எழுந்தருள, பெருமை பொருந்திய திருநீலகண்ட நாயனாரும் நிறைந்த பேரன்போடு சுவாமியினால் சொல்லப்பட்ட வழக்கினை மேற்கொண்டு போயினார். - எ - று.

அந்தணனாம் எந்தைபிரான் அருமறையோர் முன்பகர்வான்
"இந்தவேட் கோவன்பால் யான்வைத்த பாத்திரத்தைத்
தந்தொழியான்; கெடுத்தானேல் தன்மனைவி கைப்பற்றி
வந்துமூழ் கியுந்தாரான்; வலிசெய்கின் றான்"என்றார். 32

(இ - ள்.) பிராமணத் திருவுருவங் கொண்டு எழுந்தருளிய எமது பெருமானாகிய கடவுள் அரிய வேதங்களையுணர்ந்து தில்லை மூவாயிரவர்களுக்கு முன்னே சொல்லுவார். இந்தத் திருநீலகண்ட நாயனாரிடத்தில் யான் கொடுத்துவைத்திருந்த பிக்ஷாபாத்திரத்தை நான் கேட்ட பொழுது எனக்குக் கொடுக்காமலிருக்கின்றார்; (அதனைவைத்த இடத்திலின்றும்) இழந்துவிட்டானானால், தன்பெண் சாதியின் கையைப் பிடித்துக் கொண்டு குளத்திற்கு வந்து அதில் முழுகிச் சத்தியமுஞ் செய்யான்; மனதை உறுதிப்படுத்தி யிருக்கின்றா னென்று சொன்னார். எ - று.

நறைகமழுஞ் சடைமுடியும் நாற்றோளும் முக்கண்ணும்
கறைமருவும் திருமிடறும் கரந்தருளி எழுந்தருளும்
மறையவன்இத் திறம்மொழிய மாமறையோர் உரைசெய்வார்
"நிறையுடைய வேட்கோவர்! நீர்மொழியும் புகுந்த"தென. 33

(இ - ள்.) வாசனைவீசுகின்ற சடைமுடியையும், நான்கு திருத்தோள்களையும் மூன்று கண்களையும், விஷம்பொருந்திய அழகிய கண்டத்தையும் மறைத்துக் கொண்டு எழுந்தருளிவந்த சிவபெருமானாகிய பிராமணர் இவ்வார்த்தைகளைச் சொல்ல, சிறந்ததில்லை மூவாயிரவர்கள் சொல்வார்கள், மாட்சிமை பொருந்திய திருநீலகண்டரே! நடந்த விருத்தாந்தத்தை நீர் சொல்லுமென்று கேட்க. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"நீணிதியாம் இதுவென்று நின்றஇவர் தரும்ஓடு
பேணிநான் வைத்தஇடம் பெயர்ந்துகரந் ததுகாணேன்;
பூணணிநூல் மணிமார்பீர்! புகுந்தபரி சிது" என்று
சேணிடையும் தீங்கடையாத் திருத்தொண்டர் உரைசெய்தார். 34

(இ - ள்.) இது உயர்ந்த நிதிக் கொப்பானதென்று சொல்லி நிற்கின்ற இப்பெரியவரால் முன்பு கொடுக்கப்பட்ட பாத்திர மானது நான் விரும்பிப் பாதுகாப்பாக வைத்த இடத்தில் நின்றும் நீங்கி மறைந்து போய்விட்டது. (அதனால்) நான் அதைத்தேடிப்பார்த்துங் கண்டிலேன். ஆபரணமாக அணிந்த உபவீதம் பொருந்திய அழகிய மார்பினையுடைய மறைவர்களே! நடந்தவர்த்தமானம் இதுதானென்று சொன்னார் தீங்கென்பது நெடுந்தூரத்தும் தம்மை யணுகப்பெறாதவராகிய திருநீலகண்ட நாயனார். எ - று.

திருவுடை அந்த ணாளர் செப்புவார் "திகழ்ந்த நீற்றின்
உருவுடை இவர்தாம் வைத்த ஓட்டினைக் கெடுத்தீ ரானால்
தருமிவர் 'குளத்தில் மூழ்கித் தருக' என் றுரைத்தா ராகில்
மருவிய மனைவி யோடு மூழ்குதல் வழக்கே" என்றார். 35

(இ - ள்.) சிவஞானச் செல்வம் பொருந்திய தில்லை மூவாயிரவர்கள் நிச்சயம் சொல்பவர்களாய் விபூதியினால் விளங்குகின்ற திருவுருவத்தையுடைய இந்தச் சிவயோகியார் கொடுத்த பாத்திரத்தை வைத்த இடத்தினின்றும் இழந்தீரா னால் அதனை உம்மிடத்தில் கொடுத்த இவர் குளத்தில் மூழ்கிச் சத்தியஞ் செய்து கொடும் என்று சொன்னால் இல்வாழ்க்கைக் குப் பொருந்திய உமது மனைவியோடும் மூழ்கிச் சொல்லுதல் நியாயந்தானே என்று சொன்னார்கள். - எ - று.

அருந்தவத் தொண்டர் தாமும் அந்தணர் மொழியக் கேட்டுத்
திருந்திய மனைவி யாரைத் தீண்டாமை செப்ப மாட்டார்;
"பொருந்திய வகையால் மூழ்கித் தருகின்றேன் போதும்" என்று
பெருந்தவ முனிவரோடும் பெயர்ந்துதம் மனையைச் சார்ந்தார். 36

(இ - ள்.) அருமையாகிய தவத்தினையுடைய திருநீலகண்ட நாயனாரும் தில்லைவாழந்தணர்கள் இவ்வாறு சொல்லக் கேட்டு இல்லறத்தில் வழுவாதிருக்கின்ற தமது மனைவியாரைத் தீண்டாமலிருக்குங் காரணத்தை அவ்விடத்து ஒன்றுஞ் சொல்லாதவராய்த் தகுந்தபடி குளத்தில் மூழுகிச் சத்தியஞ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்கின்றேன் என்னுடன் வருவீராக வென்று பெரியதவத்தை யுடைய சிவயோகியாரோடும் அவ்விடத்தைவிட்டு நீங்கித் தமது வீட்டிற்கு வந்தார். - எ - று.

மனைவியார் தம்மைக் கொண்டு மறைச்சிவ யோகி யார்முன்
சினவிடைப் பாகர் மேவும் திருப்புலீச் சரத்து முன்னர்
நனைமலர்ச் சோலை வாவி நண்ணித்தம் உண்மை காப்பார்
புனைமணி வேணுத் தண்டின் இருதலை பிடித்துப் புக்கார்; 37

(இ - ள்.) தமது மனைவியாரை அழைத்துக் கொண்டு வேதங்களையுணர்ந்த சிவயோகியாருக்கு முன்னே கோபத்தை யுடைய ரிஷபத்தை வாகனமாகக் கொண்டருளிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருப்புலீச்சரமென்னும் ஆலயத்தின் முன்னுள்ள அரும்புகளும் மலர்களும் பொருந்திய சோலைசூழ்ந்த தடாகத்தின் சமீபத்தில் வந்து தாம் மனைவியாரைத் தீண்டாமலிருக்கின்ற உண்மை தவறாமலிருக்கும்படி பல பேரழகினையுடைய மூங்கில் தண்டினை இருபுறத்திலும் தாமும் தமது மனைவியுமாகப் பிடித்துக் கொண்டு தடாகத்தைச் சேர்ந்தார்கள். - எ - று.

தண்டிரு தலையு பற்றிப் புகும்அவர் தம்மை நோக்கி,
"வெண்டிரு நீற்று முண்ட வேதியர் மாதைத் தீண்டிக்
கொண்டுடன் மூழ்கிர்" என்னக் கூடாமை பாரோர் கேட்கப்
பண்டுதம் செய்கை சொல்லி மூழ்கினார் பழுதி லாதார். 38

(இ - ள்.) (ஒருவரையொருவர் தீண்டாமல்) மூங்கிற்றண்டின் இருபுறத்தையும் பிடித்துக்கொண்டு குளத்தில் முழுகப் போகின்ற அத்திருநீலகண்ட நாயனாரை வெண்மையாகிய விபூதிப் புண்டரத்தையுடைய சிவயோகியார் பார்த்து உம்முடைய மனைவியின் கையைப்பிடித்துக் கொண்டு கூட முழுகுமென்று சொல்ல தாம் அப்படி மனைவியாரின் கையைப் பிடித்துக் கொண்டு முழுகக் கூடாமையாயிருப்பதை உலகத்தார் கேட்கும்படி முன்னாளில் நடந்த தம்முடைய சபதத்தை எடுத்துச் சொல்லித் தடாகத்தில் முழுகினார் ஓர் குற்றமில்லாத திரு நீலகண்டநாயனார். - எ - று.

வாவியின் மூழ்கி ஏறுங் கணவரும் மனைவி யாரும்
மேவிய மூப்பு நீங்கி விருப்புறும் இளமை பெற்றுத்
தேவரும் முனிவர் தாமும் சிறப்பொடு பொழியுந் தெய்வப்
பூவின்மா மழையின் மீள மூழ்குவார் போற்று தோன்ற. 39

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) தடாகத்தில் முழுகிக் கரையேறுகின்ற திருநீல கண்ட நாயனாரும் அவருடைய மனைவியாரும் தாமடைந் திருந்த கிழப்பருவம் நீங்கி யாவரும் விரும்பத்தகுந்த இளமைப் பருவத்தையடைந்து தேவர்களும் முனிவர்களும் சிறப்பாகப் பொழிகின்ற தெய்வத்தன்மை பொருந்திய கற்பக மலர்மாரியால் பின்னும் மூழ்குகின்றவர்களைப் போலப் பொலிவடைந்து தோன்ற. - எ - று.

அந்நிலை அவரைக் காணும் அதிசயம் கண்டார் எல்லாம்
முன்னிலை நின்ற வேத முதல்வரைக் கண்டார் இல்லை;
"இந்நிலை இருந்த வண்ணம்என்?" என மருண்டு நின்றார்
துன்னிய விசும்பி னூடு துணையுடன் விடைமேற் கண்டார். 40

(இ - ள்.) தடாகத்தில் முழுகி இளமைப்பருவமடைந்த அவ்விருவரையும் (முன்னிருந்த முதுமைநிலைக்கு வேறாகவுள்ள நிலைமையாகப்) பார்த்தவர்கள் யாவரும் தங்களுக்கு முன்னே நின்று கொண்டிருந்த வேதகாரணமாகிய சிவபெருமானைக் காணாதவர்களாய், இப்படி உண்டாவதற்குக் காரணம் என்னவென்று மயங்கி நின்றார்கள் பொருந்திய ஆகாயத்தில் ரிஷபவாகனத்தின்மேல் உமாதேவியாரோடு சிவபெருமான் எழுந்தருளக் கண்டார்கள். - எ - று.

கண்டனர்; கைக ளாரத் தொழுதனர்; கலந்த காதல்
அண்டரும் ஏத்தி னார்கள்; அன்பர்தம் பெருமை நோக்கி
விண்டரும் பொலிவு காட்டி விடையின்மேல் வருவார் தம்மைத்
தொண்டரும் மனைவி யாரும் தொழுதுடன் போற்றி நின்றார். 41

(இ - ள்.) அவ்வாறு சிவபெருமான் ஆகாயத்தில் ரிஷபாரூட ராய் எழுந்தருளியதைத் தரிசித்தவர்கள் யாவரும் தங்கள் கைகளால் பொருந்த வணங்கினார்கள். அவ்வடியாருடைய நிறைந்த அன்பினையும் பெருமையினையும் பார்த்துத் தேவர் களும் துதித்தார்கள். ஆகாயத்தில் காணப்படுகின்ற திருக் கோலப் பொலிவைக்காட்டி ரிஷபவாகனத்தின்மேல் எழுந்தருளிய சிவபெருமானைத் திருநீலகண்டநாயனாரும் அவர் மனைவி யாரும் உடனே வணங்கித் தோத்திரஞ் செய்து நின்றார்கள்.

மன்றுளே திருக்கூத் தாடி அடியவர் மனைகள் தோறும்
சென்றவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவர் தாமும்
"வென்றஐம் புலனால் மிக்கீர் விருப்புடன் இருக்க நம்பால்
என்றும்இவ் இளமை நீங்கா" தென்றெழுந் தருளி னாரே. 42

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) கனகசபையினிடத்தே ஆனந்தத் தாண்டவஞ் செய்து அடியார்களுடைய வீடுகள் தோறும் எழுந்தருளி அவர்கள் அன்பின் நிலையை யாவரும் அறியும்படிகாட்டி யருளுகின்ற தேவர்கள் தேவராகிய சிவபெருமானும் ஐம்புலன் களையும் வென்றதனால் சிறந்த அன்பர்களே! நம்மிடத்தில் அன்போடும் நீங்கள் இருவரும் எக்காலத்திலும் இந்த இளமைப் பருவம் நீங்காமல் இருக்கக் கடவீர்களென்று அருளிச் செய்து மறைந்தருளினார். - எ - று.

விறலுடைத் தொண்ட னாரும் வெண்ணகைச் செவ்வாய் மென்றேன்
அறலியத் கூந்த லாளாம் மனைவியும் அருளின் ஆர்ந்த
திறலுடைச் செய்கை செய்து சிவலோகம் அதனை எய்திப்
பெறலரும் இளமை பெற்றுப் பேரின்பம் உற்றார் அன்றே. 43

(இ - ள்.) அன்பின் வல்லமையையுடைய திருநீலகண்ட நாயனாரும் வெண்மை பொருந்திய நகையையும் சிவந்த வாயை யும், மெல்லிய தோள்களையும், கருமணல் போன்ற கூந்தலை யுடை வராகிய அவரது மனைவியாரும் சிவபெருமானது திருவருளினால் செய்தற்கரிய மிகுந்த உறுதியாகிய செய்கை யைச் செய்து அதனால் சிவலோகத்தையடைந்து யாவரும் பெறுதற்கரிய இளமைப்பருவத்தைப் பெற்றுப் பேரின்ப மடைந்தார்கள். எ - று.

அயலறி யாத வண்ணம் அண்ணலார் ஆணை உய்த்த
மயலில்சீர்த் தொண்ட னாரை யான்அறி வகையால் வாழ்த்திப்
புயல்வளர் மாடம் நீடும் பூம்புகார் வணிகர் பொய்யில்
செயல்இயற் பகையார் செய்த திருத்தொண்டு செப்ப லுற்றேன். 44

(இ - ள்.) அயலில் உள்ளவர்கள் யாவரும் அறியா திருக்கும்படி சிவபெருமானது திருநீலகண்டத்தின் விஷயமாக இடப்பட்ட திருவாணையைத் தவறாமல் பாதுகாத்த மயக்கமற்ற சிறப்பினையுடைய திருநீலகண்ட நாயனாரை யானறிந்தவளவில் வாழ்த்துதல் செய்து, மேகங்கள் தவழுகின்ற மாளிகைகள் நிறைந்திருக்கின்ற அழகிய காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் அவதரித்திருந்த குற்றமற்ற சிவநேசத்தையுடைய இயற்பகைநாயனார் செய்த திருத்தொண்டின் இயல்பைச் சொல்லத் தொடங்கினேன். - எ - று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

௯. இயற்பகைநாயனார் புராணம்

சென்னி வெண்குடை நீடந பாயன் திருக்கு லம்புகழ் பெருக்கிய சிறப்பின்,
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு வயல்வ ளந்தர இயல்பினில் அளித்துப்,
பொன்னி நல்நதி மிக்க நீர் பாய்ந்து புணரி தன்னையும் புனிதமாக் குவதோர்,
நன்னெ டும்பெருந் தீர்த்தமுன் னுடைய நலஞ்சி றந்தது வளம்புகார் நகரம்.
1

(இ - ள்.) வெண்கொற்றக் குடையினையுடைய அநபாயச் சோழமகாராஜாவினது சிறந்த குலத்தரசர்கள் தங்கள் கீர்த்தியை விளங்கச் செய்வதற்குக் காரணமாகிய சிறப்பினால் நிலைபெற்ற பழமையாகிய புகழினையுடைய மருத நிலஞ்சூழ்ந்த சோழநாட்டிலுள்ள வயல்கள் நல்ல விளைவைத்தரும் பொருட்டுக் காவிரி நதியானது காலந்தவறாமல் இயல்பாக நீரைக் கொடுத்து மிகுந்த நீரானது போய்ப் பாய்ந்து சமுத்திரத்தையும் பரிசுத்தமாகச் செய்கின்ற ஒரு நல்ல பெரிய காவிரி சங்கமம் என்னுந் தீர்த்தத்தைத் தனக்கு முன்னாகவுடைய நன்மையால் சிறப்படைந்துள்ளது வளப்பம் பொருந்திய காவிரிப்பூம்பட்டினம். - எ - று.

அக்கு லப்பதிக் குடிமுதல் வணிக அளவில் செல்வத்து வளமையின் அமைந்தார்,
செக்கர் வெண்பிறைச் சடையவர் அடிமைத் திறத்தின் மிக்கவர்; மறைச்சிலம் படியார்,
மிக்க சீரடி யார்கள்யா ரெனினும் வேண்டும் யாவையும் இல்லையென் னாதே, இக்க டற்படி
நிகழமுன் கொடுக்கும் இயல்பின் நின்றவர்; உலகியற் பகையார். 2

(இ - ள்.) அந்த உயர்வு பொருந்திய காவிரிப் பூம்பட்டினத்தில் குடியாகவுள்ள முதன்மை பொருந்திய வணிகர், அளவில்லாத செல்வத்தாலாகிய வளப்பத்தில் சிறந்தவர், வெண்மையாகிய பிறைச்சந்திரனையணிந்த சிவந்த சடையினையுடைய சிவபெருமானுக்குரிய அடிமைத் திறஞ் செய்வதில் மேம்பட்டவர், வேதமாகிய சிலம்பையணிந்த திருவடிகளையுடைய சிவபெருமானது அடியவர்கள் எக்குலத்தினராயிருப்பினும் அவர்கள் விரும்பிய பொருள்கள் எல்லாவற்றையும் இல்லையென்று சொல்லாமல் சமுத்திரஞ் சூழ்ந்த இவ்வுலகத்தில் புகழ்விளங்கும்படி கொடுக்கின்ற தருமச்செய்கையில் முதன்மையாக நின்றவர், (அவர் திருப்பெயர் யாதென்றால்) உலகத்தார் புகழ்கின்ற இயற்பகையார் என்று சொல்லப்பட்டவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறு சூடிய ஐயர்மெய் யடிமை அளவி லாததோர் உளம்நிறை அருளால்,
நீறு சேர்திரு மேனியர் மனத்து நினைத்த யாவையும் வினைப்பட முடித்து,
மாறி லாதநன் னெறியினில் விளங்கும் மனைய றம்புரி மகிழ்ச்சியின் வந்த,
பேறெ லாம்அவர் ஏவினசெய்யும் பெருமையே எனப் பேணிவாழ் நாளில்.
3

(இ - ள்.) கங்காநதியைத் தரித்த சிவபெருமானுக்குச் செய்யும் மெய்மையாகிய அடிமைத்திறத்தை ஒப்பில்லாததாகத் தமது உள்ளத்தில் நினைத்திருப்பதனால் விபூதியினையணிந்த திருமேனியையுடைய அடியார்கள் திருவுள்ளத்தில் நினைத்த வைகளையெல்லாம் அவர்கள் எண்ணம் முற்றுப் பெறும்படி யாகத் திருப்தி செய்து, மாறுபாடில்லாத நல்ல வழியில் நிலைபெற்று விளங்குகின்ற இல்லற தருமத்தை நடத்துகின்ற சந்தோஷத்தினால் உண்டாகிய கீர்த்தி முதலிய பேறுகளெல் லாம் அவ்வடியார்கள் ஏவியபணிவிடைகளைச் செய்கின்ற பெருமையினாலேயே வந்தனவென்று அதனை விரும்பி வாழ்கின்ற காலத்தில். - எ - று.

ஆயும் நுண்பொரு ளாகியும் வெளியே அம்ப லத்துள்நின் றாடுவார் உம்பர்,
நாய கிக்குமஃ தறியவோ? பிரியா நங்கை தானறி யாமையோ? அறியோம்,
தூய நீறுபொன் மேனியில் விளங்கத் தூர்த்த வேடமும் தோன்ற வேதியராய்,
மாய வண்ணமே கொண்டுதந் தொண்டர் மறாத வண்ணமும் காட்டுவான் வந்தார்.
4

(இ - ள்.) அறிஞர்கள் ஆராயத்தக்க நுட்பமாகிய பொருளா யிருந்தும், யாவருங்காணத் திருவம்பலத்தில் வெளிப்பட்டு நின்று ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற சிவபெருமான், தேவர்களுக்கெல்லாம் முதல்வியாகிய உமாதேவியாருக்குத் தாம் இங்குச் செய்யப்போகின்ற காரியம் அறிந்துதானோ? (அல்லது) எப்பொழுதும் பிரியாமல் தமது வாமபாகத்திற் பொருந்தியிருக்கின்ற அப்பெருமாட்டியார் அறியாமல்தானோ? யாம் அறியோம்; பரிசுத்தம்பொருந்திய திருவெண்ணீறு அழகிய திருமேனியில் பிரகாசிக்க அதனோடு காமுகர்க்குரிய வேடப் பொலிவுந் தோன்றும்படி பிராமணராய், பிறர் தம்மை இன்னா ரென்று அறியக்கூடாத மாயையினுடைய ஓர் திருவுருவத்தைக் கொண்டு தமது அடியவராகிய இயற்பகை நாயனார் அடியார்கள் கேட்ட பொருள்களை இல்லையென்று தடை செய்யாமல் கொடுக்கின்ற இயல்பையும் (அவர் அன்பின் தன்மையையும்) பலர்க்குங் காட்டும் படி வந்தருளினார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்து தண்புகார் வணிகர்தம் மறுகின் மருங்(கு) இயற்பகை யார்மனை புகுந்த,
"எந்தை எம்பிரான் அடியவர் அணைந்தார்" என்று நின்றதோர் இன்பஆதரவால்,
சிந்தை அன்பொடு சென்றெதிர் வணங்கிச் சிறப்பின் மிக்கஅர்ச் சனைகள்முன் செய்து,
"முந்தை எம்பெருந் தவத்தினா லென்கோ? முனிவர் இங்கெழுந் தருளிய" தென்றார். 5

(இ - ள்.) (நீர்வளப்பத்தால்) குளிர்ச்சிபொருந்திய காவிரிப் பூம்பட்டினத்திலுள்ள வணிகர்வீதியில் வந்து இயற்பகை நாயனாருடைய வீட்டிற்கு எழுந்தருள, அதைக் கண்ட நாயனார் எமது முதல்வராகிய சிவபெருமானது அடியவர் எழுந்தருளினா ரென்று தம்முடைய மனதில் தோன்றிய ஒப்பற்ற இன்பத்தைத் தரத்தக்க பெருங் காதலினா லுண்டாகிய அன்புடனே அவர் எதிர்சென்று நமஸ்கரித்து, சிறப்பினால் மிகுந்த பாதபூசை முதலிய வழிபாடுகளைச்செய்து, முற்பிறப்பில் யாங்கள் செய்த ஒப்பற்ற பெருந்தவத்தினால் என்று சொல்லுவேனோ? தவ முனிவரே! தேவரீர் இவ்விடத்து எழுந்தருளி வந்ததென்று சொன்னார். - எ - று.

என்று கூறிய இயற்பகை யார்முன் எய்தி நின்றஅக் கைதவ மறையோர்,
"கொன்றை வார்சடை யாரடி யார்கள் குறித்து வேண்டின குணமெனக் கொண்டே,
ஒன்றும் நீர்எதிர் மறா(து) உவந் தளிக்கும் உண்மை கேட்டுநும் பாலொன்று வேண்டி,
இன்று நான் இங்கு வந்தனன் அதனுக் கிசைய லாம்எனில் இயம்பலாம்" என்றார். 6

(இ - ள்.) இவ்விதமாகச் செல்லிய இயற்பகை நாயனாருக்கு முன்னே எழுந்தருளிக் கபடமாகப் பிராமணத் திருவுருவங் கொண்டு வந்து நிற்கின்ற அக்கடவுள் அந்நாயனாரைப் பார்த்து கொன்றைமலர் மாலையைத் தரித்த நீண்ட சடையினையுடைய சிவபெருமானுக்குரிய அடியார்கள் விரும்பிக் கேட்ட பொருள் களை நன்மையாக அங்கீகரித்து அவற்றில் ஒன்றாவது நீர் இல்லையென்று எதிர்மறுக்காமல் சந்தோஷித்துக் கொடுக்கின் றீரென்கிற உண்மையான வார்த்தையைக் கேட்டு உம்மிடத்தில் உள்ள ஒரு பொருளை விரும்பி இன்றைக்கு நான் இங்கு வந்தேன்; அப்பொருளை நீர் கொடுப்பதற்குச் சம்மதிப்பீரானால் நான் அதனை இன்னதென்று சொல்லுவே னென்றார். - எ - று.

என்ன அவ்வுரை கேட்டியற் பகையார் "யாதும் ஒன்றும்என் பக்கல் உண் டாகில்;
அன்ன தெம்பிரான் அடியவர் உடைமை; ஐயம் இல்லை; நீர் அருள்செயும்" என்ன,
"மன்னு காதல்உன் மனைவியை வேண்டிவந்த திங்"கென அங்கணர் எதிரே,
சொன்ன போதிலும் முன்னையில் மகிழ்ந்து தூய தொண்டனார் தொழுதுரை செய்வார். 7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) இவ்விதமாக அச்சிவபெருமானாகிய பிராமணர் சொல்லிய வார்த்தையை இயற்பகைநாயனார் கேட்டு எப்படிப்பட்ட பொருளாயினும் என்னிடத்தில் இருக்குமாயின் அந்தப் பொருள்கள் எமது சிவபெருமானது அடியார்களுக்கு உரிய உடைமையேயாம்; இவ்விஷயத்தில் உமக்குக் கொஞ்சமும் சந்தேகம் வேண்டுவதில்லை; தேவரீர் திருவுள்ளத்தில் விரும்பி யதை அடியேனுக்கு இன்னதென் றருளிச் செய்யவேண்டு மென்று சொல்ல, அப்பொழுது சிவபெருமானாகிய பிராமணர் அவரைப் பார்த்து நிலைபெற்ற ஆசையை உன்னிடத்தில் வைத்திருக்கின்ற உன் மனைவியை விரும்பி இவ்விடத்திற்கு வந்தேனென்று எதிரே சொன்ன போதும் அப்படிச் சொல்வ தற்கு முன் அந்தப் பிராமணரிடத்தில் எவ்வளவு மகிழ்ச்சி யுடையவராகவிருந்தாரோ அதைப் பார்க்கிலும் மிகுதியாக மகிழ்வடைந்து பரிசுத்தராகிய இயற்பகை நாயனார் வணங்கிச் சொல்லுகின்றார். - எ - று.

இதுஎ னக்குமுன் புள்ளதே வேண்டி எம்பி ரான்செய்த பேறெனக் ” கென்னாக்,
கதுமெ னச்சென்று தம்மனை வாழ்க்கைக் கற்பின் மேம்படுகாதலி யாரை,
“விதிம ணக்குல மடந்தை!இன் றுனைஇம் மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன்” என்ன,
மதும லர்க்குழல் மனைவியார் கலங்கி மனந்தெ ளிந்தபின் மற்றிது மொழிவார். 8

(இ - ள்.) எமது பெருமானே! அடியேனுக்கு முன்பே உண்டாயிருக்கின்ற இந்தப்பொருளையே தேவரீர் விரும்பிக் கேட்டது என்னுடைய பாக்கியமென்று சொல்லிச் சீக்கிரமாகப் போய்த் தமது இல்லறத்திற்குத் தகுந்த நன்னடக்கையையும் சிறந்த கற்பினையுடைய மனைவியாரைப்பார்த்து, நான் வேத விதிப்படியே கலியாணஞ்செய்து கொண்ட நற்குலத்திற் பிறந்த பெண்ணே! இன்றையதினம் உன்னை இந்த மெய்மை பொருந்திய தவத்தினையுடைய பிராமணருக்கு நான் கொடுத்து விட்டேனென்று சொல்ல, (அதைக் கேட்டுத்) தேன்பொருந்திய மலரைக் கூந்தலில் தரித்த அவரது மனைவியார் மனங்கலங்கிப் பின் தெளிந்து இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்று நீரெனக் கருள் செய்த திதுவேல் என்னுயிர்க் கொரு நாத! நீர் உரைத்த, தொன்றை நான்செயும் அத்தனை யல்லாமல் உரிமை வேறுள தோஎனக்(கு)" என்று, தன்தனிப்பெருங் கணவரை வணங்கத் தாழ்ந்து தொண்டனார் தாமெதிர் வணங்கச், சென்று மாதவன்சேவடி பணிந்து திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள்.

9

(இ - ள்.) என்னுடைய உயிருக்கு ஒப்பற்ற துணைவராகிய தலைவரே! இன்றைக்குத் தேவரீர் அடியாளாகிய எனக்கு அருள் செய்தது இப்படிப் பட்ட தாயிருந்தால் தேவரீர் கட்டளையிட்ட தொன்றையே அடியேன் செய்வதேயல்லாமல் என்னிஷ்டம் போலச் செய்யத்தக்க காரியம் எனக்கு வேறொன்றிருக் கின்றதோ? என்று சொல்லித் தம்முடைய ஒப்பற்ற கணவரை வணங்கினபோது இயற்பகை நாயனாரும் நிலமுறத் தாழ்ந்து தமது மனைவியாரை எதிரே வணங்கி நிற்க (அப்பொழுது) இலட்சுமியைப் பார்க்கிலும் சிறந்த அழகினையுடையவராகிய அவ்வம்மையார் (தமது கணவனாரது கருத்தின் படியே) சென்று சிவபெருமானாகிய மறையவரது திருவடிகளை வணங்கித் திகைத்து நின்றார். - எ - று.

மாது தன்னைமுன் கொடுத்தமா தவர்தாம் மனம கிழ்ந்துபே ருவகையின் மலர்ந்தே, "யாது நான்இனிச் செய்பணி?" என்றே இறைஞ்சி நின்றவர் தம்மெதிர் நோக்கிச், சாதி வேதிய ராகிய தலைவர் "தையல் தன்னையான் தனிக்கொடு போகக், காதல் மேவிய சுற்றமும் பதியும் கடக்க நீதுணை போதுக!" என்றார். 10

(இ - ள்.) தம்முடைய மனைவியாரைச் (சிவபெருமானாகிய வேதியர்) கேட்டவுடனே தடை சொல்லாமல்கொடுத்த மகத்தாகிய தவத்தினையுடையவராகிய இயற்பகை நாயனார் (இவ்வடியவர் கேட்டதை இல்லையென்று சொல்லாமல் கொடுக்கப் பெற்றே னென்னுங் கருத்தினால்) மனமகிழ்ந்து உடலம் பூரித்து எம்பெருமானே! அடியேன் இனி செய்ய வேண்டு வதாகிய பணிவிடையாதென்று வணங்கி நிற்கின்றவ ராகிய அவ்வியற்பகை நாயனாரைச் சிறந்த வேதியர் குலத் தலைவராக எழுந்தருளி வந்த சிவபெருமான் எதிராகப் பார்த்து அன்பனே! இந்தப் பெண்ணை நான் தனியே அழைத்துக் கொண்டு போகிற படியால் உங்கள் மேல் அன்புள்ள பந்துக் களையும், இந்த நகரத்தையும் கடந்து போகும்படி (எனக்கு ஓரிடையூறுண்டா காமல்) நீ துணையாக வரவேண்டுமென்று அருளிச் செய்தார். - எ - று.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றவர் அருளிச் செய்ய "யானேமுன் செய்குற் றேவல்
ஒன்றியது தன்னை என்னை உடையவர் அருளிச் செய்ய
நின்றது பிழையாம்" என்று நினைந்துவே றிடத்துப் புக்குப்
பொன்றிகழ் அறுவை சாத்திப் பூங்கச்சுப் பொலிய வீக்கி. 11

(இ - ள்.) இவ்விதமாகச் சிவபெருமானாகிய வேதியர் அருளிச்செய்ய (அதைக் கேட்ட இயற்பகை நாயனார்) கட்டளை யிடுதற்கு முன்னமே அடியேனே செய்ய வேண்டுவதாகிய இக்குற்றேவலொன்றை என்னை அடிமையாகவுடைய இவ் வேதியர் கட்டளையிடும்படி அடியேன் தாழ்த்து நின்றது குற்றமாமென்று நினைந்து அங்கு நின்றும் வேறொரிடத்திற்குப் போய்ப் பீதாம்பரத்தை யணிந்து (அதன்மேல்) அழகிய கச்சை இடையில் விளங்கும்படி கட்டி - எ - று.

வாளொடு பலகை ஏந்தி வந்தெதிர் வணங்கி மிக்க
ஆளரி ஏறு போல்வார் அவரைமுன் போக்கிப் பின்னே
தோளிணை துணையே யாகப் போயினார் துன்னி னாரை
நீளிடைப் படமுன் கூடி நிலத்திடை வீழ்த்த நேர்வார். 12

(இ - ள்.) வாளாயுதத்தையும் கேடகத்தையும் கையில் பிடித்துக் கொண்ட (சிவபெருமானாகிய வேதியருக்கு) எதிராகவந்து வணங்கி மிகுந்த வல்லமை பொருந்திய ஆண் சிங்கம் போன்ற பராக்கிரமத்தை யுடையவராகிய இயற்பகை நாயனார் இவ்விஷயத்தைக் குறித்துத் தம்மை எதிர்த்து வந்தவர்களை நெடுந்தூரத்தில் வரும் பொழுதே அவர்களோ டெதிர்த்துப் பூமியில் வெட்டுண்டு விழும்படிச் செய்து கொல்ல இஷ்டமுள்ளவராய் அவ்வேதியரையும் மனைவியாரையும் தமக்கு முன்னே போகச் செய்து அவர்களுக்குப் பின்னே தம்முடைய இரண்டு தோள்களுமே தமக்குச் சகாயமாகச் சென்றார். - எ - று.

மனைவியார் சுற்றத் தாரும் வள்ளலார் சுற்றத் தாரும்
"இனையதொன் றியாரே செய்தார்? இயற்பகை பித்த னானால்
புனையிழை தன்னைக் கொண்டு போவதாம் ஒருவன்" என்று
துணைபெரும் பழியை மீட்பான் தொடர்வதற் கெழுந்து சூழ்வார். 13

(இ - ள்.) இயற்பகை நாயனாரது மனைவியாருடைய உறவினரும், அவ்வியற்பகை நாயனாருடைய உறவினரும், தனது மனைவியை ஒருவனுக்குக் கொடுத்தலாகிய இக் கொடுஞ் செய்கையை இதுவரையில் யாவர் செய்தவர்கள், ஒருவரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இல்லை; இவ்வியற்பகைதான் பயித்தியங் கொண்டவனானால் ஒரு வேதியன் ஆபரணங்களையணிந்த இப்பெண்ணைக் கொண்டுபோவது தகுதியாகுமோவென்று தங்கள் குடும்பத்தைத் தொடர்ந்த இப்பெரும்பழியை நீக்கிக் கொள்ளும் பொருட்டு அவர்களைப் பின்றொடர்வதற்கு எழுந்து சூழ்கின்றவரானார்கள். - எ - று.

வேலொடு வில்லும் வாளும் சுரிகையும் எடுத்து மிக்க
காலென விசையிற் சென்று கடிநகர்ப் புறத்துப் போகிப்
பாலிரு மருங்கும் ஈண்டிப் பரந்தஆர்ப் பரவம் பொங்க
மால்கடல் கிளர்ந்த தென்ன வந்தெதிர் வளைத்துக் கொண்டார். 14

(இ - ள்.) வேலாயுதத்தோடு வில்லையும், வாளையும், சுரிகையையும் கையில் எடுத்துக் கொண்டு பெருங்காற்றைப் போல விரைவாக நடந்த காவலையுடைய அக்காவிரிப்பூம் பட்டணத்திற்குப் புறத்தேபோய்ச் சிவபெருமானாகிய வேதியருக்கு இருபுறத்திலும் நெருங்கிப் பரவிய ஆரவாரமானது அதிகரித்துப் பெரிய சமுத்திரமானது எழுந்தது போலத் தோன்றி எதிரே வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

வழிவிடுந் துணைபின் போத வழித்துணை யாகி யுள்ளார்
கழிபெருங் காதல் காட்டிக் காரிகை யுடன்போம் போதில்
"அழிதகன்! போகேல்; ஈண்டவ் வருங்குலக் கொடியை விட்டுப்
பழிவிட நீபோ" என்று பகர்ந்தெதிர் நிரந்து வந்தார். 15

(இ - ள்.) தம்மை வழிவிடுதற்குத் துணையாக வந்த இயற்பகை நாயனார்பின்னேவர, வழிக்குத் துணைவராகவுள்ள சிவபெருமான் இயற்பகை நாயனாருடைய மனைவியாருக்கு மிகுந்த விருப்பத்தைக் காட்டிக்கொண்டு அவ்வம்மையாரோடு போகும் பொழுது, (அவ்வுறவினர்கள் வந்து தடுத்து) ஓ பெருமை கெட்டவனே! நீ போகாதே; இவ்விடத்தில் எமது அருமையாகிய குலத்திற் பிறந்த அப்பெண்கொடியை எங்களுக்குப் பழியுண்டாகாமலிருக்கும்படி விட்டுவிட்டுப் பின்பு நீ போவாயாகவென்று சொல்லிக் கொண்டு அவருக்கெதிரே வரிசையாக வந்தார்கள். - எ - று.

மறைமுனி அஞ்சி னான்போல் மாதினைப் பார்க்க மாதும்
'இறைவனே! அஞ்ச வேண்டாம்; இயற்பகை வெல்லும்' என்ன
அறைகழல் அண்ணல் கேளா "அடியனேன் அவரை எல்லாம்
தறையிடைப் படுத்து கின்றேன்; தளர்ந்தருள் செய்யேல்" என்று. 16

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) வேதங்களையுணர்ந்த சிவபெருமானாகிய வேதியர் பயங்கொண்ட வரைப்போல நடித்து அவ்வியற்பகை நாயனாரது மனைவியாரைப் பார்க்க, அதற்கு அவ்வம்மையாரும் அவரைப் பார்த்து எம்பெருமானே! தேவரீர் சிறிதும் அஞ்சவேண்டுவதில்லை; இவ்வியற்பகையார் அவர்களை வெல்வாரென்று சொல்ல, அவ்வார்த்தையைச் சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த இயற்பகைநாயனார் கேட்டு எமதாண்டவரே! அடியேன் தேவரீரை எதிர்த்து வந்தவர்களையெல்லாம் கொன்று பூமியில் தள்ளுகின்றேன், இதற்காகத்தேவரீர் மனக்கலக்கங் கொள்ளவேண்டாமென்று சொல்லி, - எ - று.

பெருவிறல் ஆளி என்னப் பிறங்கெரி சிதற நோக்கிப்
பரிபவப் பட்டு வந்த படர்பெருஞ் சுற்றத் தாரை
"ஒருவரும் எதிர்நில் லாமே ஓடிப்போய்ப் பிழையும்; அன்றேல்
எரிசுடர் வாளிற் கூறாய்த் துடிக்கின்றீர்" என்று நேர்ந்தார். 17

(இ - ள்.) தங்களுக்கு அவமானம் உண்டானதென்று எண்ணிவந்த நெருங்கிய பெருமைபொருந்திய தமது உறவினரை மிகுந்த வல்லமை பொருந்திய சிங்கத்தைப் போல விளங்குகின்ற நெருப்புப் பொறிகள் பறக்கும்படியாகப் பார்த்து, நீங்கள் ஒருவரும் எனக்கெதிரில் நிற்காமல் ஓடிப்போய்ப் பிழையுங்கள்; அப்படி ஓடாதிருப்பீர்களானால் (என்கையிலிருக்கின்ற) ஒளிவீசுகின்ற வாளினால் இரண்டு துண்டாக விழுந்து துடிக்கின்றீர்களென்று அவர்களைச் சமீபித்தார், இயற்பகை நாயனார் - எ - று.

ஏட! நீ என்செய் தாயால்? இத்திறம் இயம்பு கின்றாய்
நாடுறு பழியும் ஒன்னார் நகையையும் நாணாய்; இன்று
பாடவம் உரைப்ப துன்றன் மனைவியைப் பனவற்(கு) ஈந்தோ!
கூடவே மடிவ தன்றிக் கொடுக்காயம் ஒட்டோம்" என்றார். 18

(இ - ள்.) ஏடா இயற்பகையே! நீ இங்கு என்ன தகாத காரியஞ் செய்தாய்; (அப்படிச் செய்ததை நாங்கள் தடுப்பதற்கு யத்தனப்பட்டால்) இவ்விதமான சாமர்த்திய மொழிகளைப் பேசுகின்றாய்; நாட்டிலுள்ளவர்களால் நமக்குண்டான பழிக்கும், நம்முடைய பகைவர்கள் இதைப் பற்றிச் செய்யும் நகைப்புக்கும் நீ சிறிதும் நாணவில்லை; நீ இப்பொழுது சாமர்த்திய மொழிகளைப் பேசுவது உன்னுடைய மனைவியை ஒரு வேதியனுக்குக் கொடுத்துத்தானோ? நாங்களனைவரும் ஒருங்கே மடிவதேயல்லாமல், இப்பெண்ணைப் பிராமணருக்குக் கொடுக்கச் சம்மதிக்கமாட்டோமென்றார்கள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்றவர் சொன்ன மாற்றம் கேட்டலும் மனத்தின் வந்த
செற்றமுன் பொங்க "உங்கள் உடற்றுணி எங்குஞ் சிந்தி
முற்றும்நும் உயிரை எல்லாம் முதல்விசும் பேற்றிக்கொண்டு
நற்றவர் தம்மைப் போகவிடுவேன்" என்றெழுந்தார் நல்லோர். 19

(இ - ள்.) நன்மைபொருந்திய இயற்பகைநாயனார் அவ்வுறவினர்கள் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டவுடனே மனத்தில் உண்டாகிய கோபமானது முன்னே அதிகப்பட உங்கள் உடம்பின் துண்டுகளை எவ்விடத்திலுஞ் சிந்தி உங்க ளனைவருடைய உயிரையும் முதன்மையாகிய வீரசுவர்க்கத்தை யடையச் செய்துவிட்டு (அதன்பின்பு) சிறந்த தவத்தினை யுடையவராகிய இவ்வேதியரைத் தடையில்லாமல் போகும்படி செய்வேனென்று எழுந்தார். - எ - று.

நேர்ந்தவர் எதிர்ந்துபோது நிறைந்தஅச் சுற்றத்தாரும்
சார்ந்தவர் தம்முன் செல்லார் தையலைக் கொண்டு பெற்றம்
ஊர்ந்தவர் படிமேற் செல்ல உற்றெதிர் உடன்றுபொங்கி
ஆர்ந்தவெஞ் சினத்தால் மேற்சென் றடர்ந்தெதிர் தடுத்தார் அன்றே. 20

(இ - ள்.) இயற்பகை நாயனார் இவ்வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு அவர்களை எதிர்த்தபொழுது, (அவர் மனைவியாரை அழைத்துக் கொண்டுபோக வொட்டாமல் தடுக்கும்படி) திரளாகக் கூடிவந்த அச்சுற்றத்தார்கள் தங்களைக் கிட்டிப் போர்செய்து கொல்ல வந்தவராகிய இயற்பகை நாயனாரை எதிர்க்காமல், ரிஷபத்தை வாகனமாகச் செலுத்திய சிவபெருமானாகிய வேதியர் அவரது மனைவியாரை அழைத்துக் கொண்டு பூமியின்மேல் நடந்து செல்ல அவருக் கெதிராகப் போய் மிகுதியாகக் கோபித்துப் பொருந்திய அக்கொடிய கோபத்தினால் மேற்கொண்டு சென்று நெருங்கி (அவரைப் போகவொட்டாமல்) எதிரே தடுத்தார்கள். எ - று.

சென்றவர் தடுத்த போதில் இயற்பகை யார்முன் சீறி
வன்றுணை வாளே யாகச் சாரிகை மாறி வந்து
துன்றினர் தோளும் தாளும் தலைகளும் துணிந்து வீழ்த்து
வென்றடு புலியே றென்ன அமர்வினை யாட்டில் மிக்கார். 21

(இ - ள்.) இவ்விதமாக அவ்வேதியர் மேற்சென்று அச்சுற்றத் தார்கள் தடுத்தபொழுது (அதைக்கண்ட) இயற்பகை நாயனார் அவர்கள் முன் கோபங்கொண்டு தமக்கு வலியது துணையானது வாளாயுதமேயாகக் கையிற்கொண்டு இடசாரிவலசாரியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாறிமாறிச் சுற்றி வந்து தம்மை எதிர்த்து வந்த சுற்றத்தார்களது தோள்களையும், கால்களையும், தலைகளையும் வெட்டிக் கீழேதள்ளிப் பலமிருகங்களையும் வென்று கொல்லுகின்ற ஆண்புலியைப் போலப் போர் செய்தலாகிய விளையாட்டிலே சிறந்தவராக விளங்கினார். - எ - று.

மூண்டுமுன் பலராய் வந்தார் தனிவந்து முட்டி னார்கள்
வேண்டிய திசைகள் தோறும் வேறுவே றமர்செய் போழ்தில்
ஆண்டகை வீரர் தாமே அனைவர்க்கும் அனைவ ராகிக்
காண்டகு விசையிற் பாய்ந்து கலந்துமுன் துணிந்து வீழ்த்தார். 22

(இ - ள்.) (ஓர் வேதியனுக்கு இயற்பகையார் தமது மனைவியைக் கொடுத்தாரென்னும் அவமானத்தினாலுண்டாகிய கோபமானது) அதிகரித்து முன்னே இயற்பகை நாயனாரிடத்துப் பலராகத் திரண்டு வந்து எதிர்த்தர்வகளும், அதன்பின் ஒவ்வொருவராக வந்து எதிர்த்தவர்களுமாகிய சுற்றத்தார்கள் அவரவர்களுக்கு வேண்டியபடியே எட்டுத் திக்குகளிலும் சூழ்ந்து (வாள்முதலாகிய ஆயுதங்களைக் கையில் பிடித்து) வெவ்வெறாகப் போர்செய்த சமையத்தில் ஆண் தன்மையையுடைய சுத்தவீரராகிய இயற்பகைநாயனார் அவர்கள் எல்லாருக்கும் அவ்வெல்லாரும் மாகிப்பார்ப்பவர்கள் மதிக்கத்தகுந்த மிகுந்த விசையாகப் பாய்ந்து அவர்களோடு கலந்து முன்னே பூமியில்வெட்டித் தள்ளினார். - எ - று.

சொரிந்தன குடல்கள் எங்கும்; துணிந்தன உடல்கள் எங்கும்;
விரிந்தன தலைகள் எங்கும்; மிடைந்தன கழுகும் எங்கும்;
எரிந்தன விழிகள் எங்கும்; எதிர்ப்பவர் ஒருவர் இன்றித்
திரிந்தனர் களனில் எங்கும் சிவன்கழல் புனைந்த வீரர். 23

(இ - ள்.) (இயற்பகை நாயனார் தமது சுற்றத்தினாராகிய பகைவர்களை வாளால் வெட்டித் தள்ளும் பொழுது) குடல்கள் எவ்விடங்களிலும் சொரிந்துகிடந்தன; உடல்கள் எவ்விடங்களிலும் துண்டுகளாக வெட்டப்பட்டுக் கிடந்தன; தலைகள் எவ்விடங்களிலும் பிளந்து விரிந்துகிடந்தன; கழுகுகளும் (பருந்துகளும்) இறைச்சியையுண்பதற்காக எவ்விடங்களிலும் வந்த நிறைந்தன; கண்கள் கோபத்தினால் எவ்விடங்களிலும் சிவந்து எரிந்து கொண்டிருந்தன; சிவபெருமானுடைய திருவடிகளை மனதில் தியானித்துக் கொண்டிருக்கின்ற வீரராகிய இயற்பகை நாயனார் தம்மை எதிர்ப்பவர் ஒருவருமில்லாமல் அந்தப் போர்க்கள முழுமையும் நிர்ப்பயமாகத் திரிந்து கொண்டிருந்தார். எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**மாடலை குருதி பொங்க மடிந்தசெங் களத்தின் நின்றும்
ஆடுறு செயலின் வந்த கிளைஞரோ டணைந்தார் தம்மில்
ஓடினார் உள்ளார் உய்ந்தார்; ஒழிந்தவர் ஒழிந்தே மாண்டார்;
நீடிய வாளும் தாமும் நின்றவர் தாமே நின்றார்.** 24

(இ - ள்.) பக்கங்களில் இரத்தவெள்ளமானது அலைகளை வீசிக்கொண்டு பொங்கியோடும்படி (எதிர்ந்த சீற்றத்தாராகிய பகைவர்கள்) இறந்துகிடக்கின்ற செந்நிறமாக அந்த யுத்தகளத்தினின்றும் போர் செய்து வெற்றி கொள்வோமென்று வந்த தமையன் - தம்பி - மாமன் - மைத்துனன் முதலாகிய உறவினரோடு வந்தவர்களில், போர் செய்யப் பயந்து ஓடினவர்கள் உயிர் பிழைத்தார்கள்; அப்படி ஓடாமல் எதிர்த்தவர்கள் ஒருவரும் தவறாமல் உயிர்போய் மாண்டார்கள்; நீண்டவாளாயுதமும் தாமுமாக வந்து முன்னே நின்ற இயற்பகை நாயனார் தாம் ஒருவருமே அங்கு நின்றார். எ - று.

**திருவுடை மனைவி யாரைக் கொடுத்திடைச் செறுத்து முன்பு
வருபெருஞ் சுற்றம் எல்லாம் வாளினால் துணித்து மாட்டி
அருமறை முனியை நோக்கி "அடிகள்நீர் அஞ்சா வண்ணம்
பொருவருங் கானம் நீங்க விடுவன்" என் றுடனே போந்தார்.** 25

(இ - ள்.) கற்பினையே செல்வமாகவுடைய தமது மனைவியாரை வேதியருக்குக் கொடுத்து அதுகாரணமான இடையில் தம்மிடத்திற் கோபங்கொண்டு முன்னே வந்த பெருமை பொருந்திய பந்துக்களை யெல்லாம் தம்முடைய கையிலுள்ள வாளாயுதத்தினால் வெட்டி இறக்கச் செய்து பின்பு அரிய வேதங்களையுணர்ந்த சிவபெருமானாகிய வேதியரைப் பார்த்து எமது ஆண்டவரே! தேவரீர் பயப்படாதிருக்கும்படியாக ஒப்பற்ற இந்தக் காட்டைக் கடந்து போகும்படி உம்மோடு துணையாக வந்து அனுப்புகின்றேனென்று அவரோடு கூடச் சென்றார். - எ - று.

**இருவரால் அறியஒண்ணா ஒருவர்பின் செல்லும் ஏழை
பொருதிறல் வீரர் பின்பு போகமுன் போகும் போதில்
அருமறை முனிவன் சாய்க்கா டதன்மருங் கணைய மேவித்
திருமலி தோளி னானை "மீள்" எனச் செப்பி னானே.** 26

(இ - ள்.) விஷ்ணு - பிரமன் என்னும் இவ்விருவர்களாலும் அடியையும் முடியையும் தேடிக் காணப்படாத சிவபெருமானாகிய வேதியருக்குப் பின்னே போகின்ற அவ்வியற்பகை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாயனாரது மனைவியார் போர் செய்யும் வல்லமை பொருந்திய சுத்தவீராகிய இயற்பகை நாயனார் பின்னே வரத் தாம் முன்னே போகும்பொழுதில் அரிய வேதங்களையுணர்ந்த அவ்வேதியர் திருச்சாய்க்காடென்னுந் தலத்தின் சமீபத்தையடைந்து வீரலட்சுமி விளங்குகின்ற தோள்களையுடைய இயற்பகை நாயனாரைப் பார்த்து இனி நீர் உம்முடைய வீட்டிற்குத் திரும்பிப்போகலாம் என்று சொன்னார். - எ - று.

தவமுனி தன்னை மீளச் சொன்னபின் தலையால் ஆர
அவன்மலர்ப் பதங்கள் சூடி அஞ்சலி கூப்பி நின்று
புவனமூன் றுய்ய வந்த பூசுரன் தன்னை ஏத்தி
'இவனருள் பெறப்பெற் றேன்'என் றியற்பகை யாரும் மீண்டார். 27

(இ - ள்.) தவமுனிவராகிய வேதியர் தம்மை வீட்டிற்குத் திரும்பிப்போவென்று சொன்னபின்பு, சிரசினாலே பொருந்தும்படி அவரது தாமரை மலர்போன்ற திருவடிகளை வணங்கி அஞ்சலிகூப்பி நின்றுகொண்டு (சுவர்க்க மத்திய பாதலமென்னும்) மூன்றுலகத்தாரும் திருவருள் பெற்றுய்யும்படி யெழுந்தருளிய பிராமணராகிய சிவபெருமானைத் துதித்து அடியேன் இவ்வேதியரது திருவருளை அடையப் பெற்றேனென்று சொல்லி இயற்பகை நாயனாரும் தமது வீட்டிற்குத் திரும்பினார். - எ - று.

செய்வதற் கரிய செய்கை செய்தநற் றொண்டர் போக
மைதிகழ் கண்டன் எண்டோள் மறையவன் மகிழ்ந்து நோக்கிப்
"பொய்தரும் உள்ளம் இல்லான் பார்க்கிலான் போனான்"என்று
மெய்தரு சிந்தை யாரை மீளவும் அழைக்க லுற்றான். 28

(இ - ள்.) யாவரும் செய்வதற்கு அருமையாகிய செய்கையைச் செய்த சிறந்த அன்பினையுடைய இயற்பகை நாயனார் தமது வீட்டிற்குத் திரும்பிப்போக, விஷம் பொருந்திய கண்டத்தையும், எட்டு திருப்புயங்களையுமுடைய சிவபெருமானாகிய வேதியர் மகிழ்ச்சியடைந்து பார்த்துப் பொய்முதலாகிய களங்கமில்லாத மனத்தினையுடைய இயற்பகை (தன் மனைவியைக் கொடுத்து) திரும்பிப் பாராமல் போகின்றானென்று மெய்மையாகிய திருவுள்ளத்தினையுடைய அவ்வியற்பகை நாயனாரை மறுபடியும் அழைக்கத் தொடங்கினார். - எ - று.

"இயற்பகை முனிவா ஓலம்! ஈண்டு! நீ வருவாய் ஓலம்!
அயர்ப்பிலா தானே ஓலம்! அன்பனே ஓலம்! ஓலம்!
செயற்கருஞ் செய்கை செய்த தீரனே ஓலம்" என்றான்
மயக்கறு மறைஓ லிட்டு மாலயன் தேட நின்றான். 29

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) இயற்பகை முனிவரே! அபயம்; இவ்விடத்தில் நீ விரைவில் வரவேண்டும் உனக்கு அபயம்; (மனையாளைக் கொடுத்ததனால் மனத்தில் கொஞ்சமும்) சோர்வில்லாதவனே! அபயம்; எம்மிடத்தில் சிறந்த அன்புடையவனே! அபயம் அபயம்; ஒருவருக் செய்தற் கருமையாகிய காரியத்தைச் செய்த தீரபுருஷனே! அபயம் என்று சொன்னார்; குற்றமற்ற வேதங்கள் ஓலமிட்டுத் தம்மைக் காணாது. தேடவும், திருமால் பிரமன் என்னும் இருவரும் அடியையும் முடியையும் காணாது தேடவும் நின்றவராகிய சிவபெருமான். - எ - று.

அழைத்தபேர் ஓசை கேளா "அடியனேன் வந்தேன்! வந்தேன்!
பிழைத்தவர் உளரேல் இன்னும் பெருவலித் தடக்கை வாளின்
இழைத்தவ ராகின் றார்" என் றியற்பகை யார்வந் தெய்தக்
குழைப்பொலி காதி னானும் மறைந்தனன் கோலங் கொள்வான். 30

(இ - ள்.) இவ்வாறு சிவபெருமானாகிய வேதியர் அழைத்த பெரிய ஓசையைக் கேட்டு அடியேன் இதோ வந்தேன்; எனது கைவாளுக்குத் தப்பி உயிர் பிழைத்த எனது உறவினர்கள் தேவரீருக்குத் தீங்குசெய்ய இன்னும் இருப்பார்களானால் அவர்கள் மிகுந்த வல்லமை பொருந்திய எனது நீண்ட கையிலிருக்கும் வாளாயுதத்தினால் தங்கள் உயிரைப் போக்கடித்தவராகின்றார்கள் என்று சொல்லிக் கொண்டு இயற்பகை நாயனார் சீக்கிரமாகத் திரும்பிவர, (அப்பொழுது) சங்கக் குழை விளங்குகின்ற காதினையுடைய சிவபெருமானாகிய வேதியர் அவருக்குக் காட்சி கொடுக்கத் திருக்கோலங் கொள்ளும்படி மறைந்தருளினார். - எ- று.

சென்றவர் முனியைக் காணார்; சேயிலை தன்னைக் கண்டார்;
பொன்றிகழ் குன்று வெள்ளிப் பொருப்பின்மேற் பொலிந்த தென்னத்
தன்றுணை யுடனே வானில் தலைவனை விடைமேற் கண்டார்;
நின்றிலர்; தொழுது வீழ்ந்தார்; நிலத்தினின் றெழுந்தார்; நேர்ந்தார். 31

(இ - ள்.) (வேதியரிடத்து விரைந்து திரும்பிச்) சென்ற இயற்பகை நாயனார் அவ்வேதியரைக் காணாமல் தமது மனைவியாரை மாத்திரங்கண்டார்; (அப்பொழுது) விளங்குகின்ற பொன்மாலையானது வெள்ளிமலையின் மேலிருந்து பிரகாசித்தது போலத் தமது இடப்பகாத்தில் எழுந்தருளிய உமாதேவியாரோடு, ஆகாயத்தில் சிவபெருமானை ரிஷப வாகனத்தின்மேல் கண்டு தரிசித்தார்; ஆராமையினால் பூமியில் நில்லாமல் விழுந்து தொழுதார்; பூமியினின்று எழுந்து பின்னும் வந்தனஞ் செய்தார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"சொல்லுவ தறியேன் வாழி! தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய்! போற்றி!
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலந்து ளாடும் சேவடி போற்றி" என்ன. 32

(இ - ள்.) (எம்பெருமானே! ஒன்றுக்கும் பற்றாத சிறியேனையும் ஓர்பொருளாகக் கருதி இவ்வாறு எழுந்தருளி வந்த கருணையின் பெருமையைக் குறித்துத்) தேவரீரைத் துதிப்பதற்கு ஒன்றும் அறியாதவனாக இருக்கின்றேன்; (ஆதலால் தேவரீரது பெருங்கருணையானது) நீடூழிவாழக்கடவது; இப்பொழுது அடியேனுக்குத் தரிசனங் கொடுத்தற் கெழுந்தருளிய திருக்கோலத்திற்கு வந்தனஞ் செய்கின்றேன்; விரைவாக எழுந்தருளி வந்து என்னை வழியடியனாக அடிமை கொண்டவரே! தேவரீருக்கு வந்தனம்; அளவிடப்படாத பேரின்பவெள்ளத்தையென்னுள்ளே பெருகும்படி திருவருள் புரிந்த பெருமானே! தேவரீருக்கு வந்தனம்; தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற திருவடிகளுக்கு வந்தனம் என்று துதிக்க. - எ - று.

விண்ணிடை நின்ற வெள்ளை விடையவர் அடியார் தம்மை
"எண்ணிய உலகு தன்னில் இப்படி நம்பால் அன்பு
பண்ணிய பரிவு கண்டு மகிழ்ந்தனம்; பழுதி லாதாய்!
நண்ணிய மனைவி யோடுநம்முடன் போது" கென்று. 33

(இ - ள்.) ஆகாயத்தில் காட்சி கொடுத்தருளிய வெள்ளிய ரிஷபவாகனத்தையுடைய சிவபெருமான் தமது அடியவராகிய இயற்பகை நாயனாரைப் பார்த்து யாவராலும் மதிக்கும்படி இந்நிலவுலகத்திலே இவ்விதமாக நம்மிடத்து அன்பு செய்த அடிமைத் திறத்தைப் பார்த்து சந்தோஷத்தை யடைந்தோம்; ஓர் குற்றமும் இல்லாத அன்பனே! உனக்கு உரிமையாகப் பொருந்திய மனைவியாரோடு நம்முடனே வரக்கடவாய் என்று அருளிச் செய்து. - எ - று.

திருவளர் சிறப்பின் மிக்க திருத்தொண்டர் தமக்குந் தேற்றம்
மருவிய தெய்வக் கற்பின் மனைவியார் தமக்குந் தக்க
பெருகிய அருளின்நீடு பேறளித் திமையோர் ஏத்தப்
பொருவிடைப் பாகர் மன்னும் பொற்பொது அதனுட் புக்கார். 34

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அருட் செல்வமானது வளர்தற்குக் காரணமாகிய பெருஞ் சிறப்பினையுடைய இயற்பகை நாயனாருக்கும், தெளிவு பொருந்திய தெய்வீகமாகிய கற்பினையுடைய அவரது மனைவியாருக்கும் நிறைந்த பேரருளினால் உயர்ந்த மோக்ஷத்தைக் கொடுத்துத் தேவர்கள் வணங்கும்படியாக, போர்செய்கின்ற ரிஷபவாகனத்தையுடைய சிவபெருமான் கனகசபையில் பிரவேசித்தருளினார். - எ - று.

வானவர் பூவின் மாரி பொழியமா மறைகள் ஆர்ப்ப
ஞானமா முனிவர் போற்ற நலமிகு சிவலோ கத்தில்
ஊனமில் தொண்டர் கும்பிட் டுடன்உறை பெருமை பெற்றார்
ஏனைய சுற்றத் தாரும் வானிடை இன்பம் பெற்றார். 35

(இ - ள்.) தேவர்கள் புஷ்பமாரி பொழியவும், சிறந்த வேதங்கள் முழங்கவும், சிவஞானத்தையுடைய பெரிய முனிவர்கள் தோத்திரஞ் செய்யவும் நன்மை பொருந்திய சிவலோகத்தில் யாதொரு குறைவுமில்லாத அவ்வியற்பகை நாயனார் சிவபெருமானைத் தொழுது கொண்டே அவர் சமீபத்தில் வாழ்ந்திருக்கும் பெருமையைப் பெற்றார்; அவரோடு பகைத்துப் போர் செய்து இறந்த சுற்றத்தார்களனைவரும் சுவர்க்கலோகத்திற் சென்று இன்பத்தை அனுபவித்தார்கள். எ-று

இன்புறு தாரந் தன்னை ஈசனுக் கன்பர் என்றே
துன்புறா துதவும் தொண்டர் பெருமையைத் தொழுது வாழ்த்தி
அன்புறு மனத்தால் நாதன் அடியவர்க் கன்புநீடு
மன்புகழ் இளைசை மாறன் வளத்தினை வழுத்த லுற்றேன். 36

(இ - ள்.) தாம் இன்பம் அனுபவிப்பதற்குக் காரணமாயிருந்த மனைவியைச் சிவபெருமானுக்குரிய அடியவரென்று நினைத்து யாதொரு வருத்தமுமில்லாமல் அவருக்குக் கொடுத்துவிட்ட இயற்பகை நாயனாருடைய திருத்தொண்டின் பெருமையை வணங்கி வாழ்த்துதல் செய்து? அன்பானது பொருந்திய மனத்தினால் சிவபெருமானுடைய அடியார்களிடத்தில் அன்பு மிகுந்திருக்கின்ற நிலைபெற்ற புகழினையுடைய இளையான் குடிமாறநாயனாருடைய பத்தியின் வளப்பத்தை அடியேன் துதிக்கத் தொடங்கினேன். - எ - று.

இயற்பகை நாயனார்புராணம் முற்றிற்று.

In.Public domain. Digitization Muthulakshmi Research Academy

10. இளையான்குடி மாறநாயனார் புராணம்

அம்பொன் நீடிய அம்ப லத்தினில் ஆடு வார்அடி சூடுவார்
தம்பி ரான்அடி மைத்தி றத்துயர் சால்பின் மேன்மை தரித்துள்ளார்
நம்பு வாய்மையில் நீடு சூத்திர நற்கு லஞ்செய் தவத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கி னார்இளை யான்குடிப்பதி மாறனார். 1

(இ - ள்.) அழகிய பொன்னினால் அலங்கரித்துச் சிறந்து விளங்குகின்ற திருவம்பலத்திலே அனந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற சிவபெருமானுடைய திருவடிகளைச் சதாகாலமும் தமது உள்ளத்தில் தியானஞ் செய்கின்றவர்; அப்பெருமானுடைய அடிமைத்திறத்தில் உயர்ந்த மேன்மையைப் பெற்றுள்ளவர்; யாவரும் நம்பத்தகுந்த சத்தியத்தினால் உயர்ந்த வேளாளர்களது நல்லகுலத்தார் செய்த தவத்தினாலே அவதாரஞ் செய்து இந்நிலவுலகத்தைப் பத்திமுதலியவற்றால் விளங்கச் செய்தவர் (அவர் திருப்பெயர் யாதென்றால்) இளையான் குடிமாறநாயனார்.

ஏரின் மல்கு வளத்தி னால்வரும் எல்லை இல்லதோர் செல்வமும்
நீரின் மல்கிய வேணி யார்அடி யார்தி றத்து நிறைந்ததோர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை பெற்ற நீடு பயன்கொள்வார். 2

(இ - ள்.) உழவுத்தொழில் செய்து பயிரிடும் வளப்பத்தால் உண்டாகிய அளவில்லாத செந்நெல்முதலாகிய செல்வங்களும், கங்கைநீரினால் விளங்குகின்ற சடையினையுடைய சிவபெருமானது அடியார்கள் விஷயத்தில் நிறைந்திருக்கின்ற சிறப்புப் பொருந்திய அன்பினால் மேன்மையுற்றுத் திருத்தமாக நிலைபெற்ற மனமும் இந்நிலவுலகத்தில் தமக்கு உண்டாயிருக்கும்படி விரும்பி அவ்விரண்டினையும் அடைந்ததனாலுண்டாகிய பயனைப் பெற்றுக் கொள்வராயினார். - எ - று.

ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர் என்பதோர் தன்மையால்
நேர வந்தவர் யாவ ராயினும் நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்(து)
ஈரம் மென்மது ரப்ப தம்பரி வெய்த முன்னுரை செய்தபின். 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) எலும்பினை மாலையாகத்தரித்த சிவபெருமானுடைய அடியார்களென்று சொல்லப்படுந் தன்மையினால் தம்மிடத்தில் வந்தவர்கள் எவர்களாயிருந்தாலும் அழிவில்லாத பத்தி மிகும்படி எதிர்கொண்டு வந்து தமது இரண்டு கைகளையும் குவித்துக் கொண்டு நின்று அவர்கள் காதுகளில் குளிர்ந்த மிருதுவான இனியவார்த்தைகளை அவர்கள் சந்தோஷிக்கும்படி முதலில் சொன்னபின்பு.- எ - று.

கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய அளித்துளார். 4

(இ - ள்.) இவ்வித உபசாரத்தோடு சிவனடியார்களை அழைத்துக் கொண்டு வந்து தமது வீட்டிற்குள் பிரவேசித்து அவ்வடியார்களின் விளங்குகின்ற திருவடிகளை நீரினால் அலம்பி நிறைந்த அன்போடு அவர்களை ஆசனத்தில் உட்கார வைத்துப் பாதபூசை செய்தபின்பு உணவுகளை நான்கு விதத்தினால் அறுவகைச் சுவையோடும் ஒப்பில்லாத தேவநாயகராகிய சிவபெருமானது அடியார்கள் தங்கள் இஷ்டப்படியே அமுது செய்யும்படி நாள்தோறும் இடுகின்றவர். எ - று.

ஆளும் நாயகர் அன்பர் ஆனவர் அளவி லார்உளம் மகிழவே
நாளு நாளும் நிறைந்து வந்து நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளு மாநிதி யின்பரப்பு நெருங்கு செல்வம் நிலாவிஎண்
தோளி னார்அள கைக்கி ருத்திய தோழ னாரென வாழுநாள். 5

(இ-ள்) தம்மை அடிமையாகக் கொண்டருளிய சிவபெருமானுடைய எண்ணிறந்த அடியார்கள் மனங்களிக்கும்படி தினந்தோறும் கூட்டமாகத் திரண்டுவந்து தமது வீட்டில் புசித்துக் கொண்டிருக்கின்ற நன்மையினாலே மிகுந்த பொன்மணி முதலிய பெருஞ்செல்வத்தின் தொகுதியானது மிகுதியாகத்தக்க செல்வமானது மேற்பட்டு விளங்கி, எட்டுத் திருப்புயங்களையுடைய சிவபெருமானானவர் அளகாபுரிக்குத் தலைவனாக ஏற்படுத்திய தோழனாகிய குபேரனைப் போல வாழ்கின்ற காலத்தில். எ - று.

செல்வம் மேவிய நாளில் இச்செயல் செய்வ தன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குர வான போதினும் வல்லர் என்றறி விக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல மறைந்து நாடொறும் மாறிவந்(து)
ஒல்லை யில்வறு மைப்ப தம்புக உன்னி னார்தில்லை மன்னினார். 6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) தமக்குச் செல்வமுண்டாகிய காலத்தில் இவ்விதமாக அடியார்களுக்கு அமுதுபடைத்தல் முதலிய பணிவிடைகளைச் செய்வதும் மாத்திரமல்லாமல் துன்பத்தைத் தருகின்ற தரித்திரம் உண்டானகாலத்திலும் தமது மெய்மை யாகிய அன்பினால் இவ்வாறே செய்யத்தக்கவரென்று யாவர்க்குந் தெரிவிக்கும் பொருட்டு, வளப்பம் பொருந்திய இவரது பெருஞ்செல்வமானது நாளுக்கு நாள் மெல்ல மெல்லக் குறைந்து முன்னிருந்த நிலைமைமாறி விரைவாகத் தரித்திர நிலைமையடையும்படி திருத்தலத்தில்லையில் எழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானார் திருவுள்ளங் கொண்டருளினார். - எ - று.

இன்ன வாறுவ ளஞ்சு ருங்கவும் எம்பி ரான்இளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்கு தல்இன்றி உள்ளன மாறியும்
தன்னை மாறிஇறுக்க உள்ள கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறில் திருப்ப ணிக்கண் முதிர்ந்த கொள்கைய ராயினார். 7

(இ - ள்.) இவ்விதமாகச் சிவபெருமானுடைய திருவருளால் தமது செல்வங்கள் நாளுக்கு நாள் குறையவும் எமது பெருமானாகிய இளையான் குடிமாறநாயனார் தமது மனத்தில் கொஞ்சமும் பத்திகுறையாமல் தம்வீட்டிலுள்ள நகைமுத லாகிய பொருள்களை விற்றும், தம்மைக் கூட ஒருவனுக்கு விற்றுக் கொடுக்கத்தக்க அவ்வளவு கடன்களைத் தகுதியாக வாங்கியும் பின்பு முன்போலக் குறைவில்லாத திருத்தொண்டு செய்வதில் மேம்பட்ட செய்கையையுடையவரா யிருந்தார். எ-று.

மற்றவர்செயல் இன்ன தன்மைய தாக மாலய னானஅக்
கொற்ற ஏனமும் அன்ன மும்தெரி யாத கொள்கைய ராயினார்
பெற்றம் ஊர்வதும் இன்றி நீடிய பேதை யாளுடன் இன்றிஓர்
நற்ற வத்தவர் வேட மேகொடு ஞாலம் உய்ந்திட நண்ணினார். 8

(இ - ள்.) இளையான் குடிமாறநாயனாருடைய பத்தியின் செயலானது இப்படிப்பட்டதாயிருக்கத் திருமால் - பிரமன் என்று சொல்லப்பட்ட அவ்வெற்றிபொருந்திய பன்றியும், அன்னமும் (அடியையும் முடியையும் தேடி) அறியாமல் மறைந்து நின்ற சிவபெருமான் ரிஷபவாகனத்தில் எழுந்தருளாமலும் தமது இடப்பாகத்தில் வீற்றிருக்கின்ற உமாதேவியாரில்லாமலும் தாமே ஓர் சிறந்த தவத்தையுடைய சிவனடியார் வேடங் கொண்டு உலகத்தார் பிழைக்கும்பொருட்டு அவ்விளையான் குடிமாற நாயனாருடைய வீட்டிற்கு எழுந்தருளினார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரித் தில்லம் அடைந்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்தெதிர் கொண்டனன். 9

(இ - ள்.) மழைக்காலத்தில் ஒருநாளிரவில் தனியே விழித்துக் கொண்டிருந்து தமக்கு உபகரிப்பார் ஒருவருமில்லாமல் (உணவு கொள்ளாமையால்) பசி அதிகப்படுவதை அடக்கிக் கொண்டு தம்முடைய வீட்டுக்கதவை மூடினபின்பு தேன் பொருந்திய மலர் மாலையைத் தரித்த இளையான்குடிமாறநாயனார் தம்முடைய வீட்டின் கதவைத்தட்டி அழைத்த சிவபெருமானாகிய விருந் தினரை ஆசையோடு எதிர்கொண்டு வரவழைத்தார். - எ - று.

ஈர மேனியை நீக்கி இடங்கொடுத்
தார இன்னமு தூட்டுதற் காசையால்
தார மாதரை நோக்கித் "தபோதனர்
தீர வேபசித் தார்செய்வ தென்" என்று. 10

(இ - ள்.) மழையினால் நனைந்து வந்த சிவபெருமானாகிய அவ்விருந்தினரது திருமேனியின் ஈரத்தை வஸ்திரத்தினால் துடைத்து, அவரிருப்பதற்குத் தகுதியான இடத்தைக் கொடுத்து அவருக்குத் திருப்தியாக இனிய உணவை உண்ணும்படி செய்வதற்கு ஆசை கொண்டு தமது மனைவியாரைப் பார்த்துச் சிறந்த தவச்செல்வத்தினையுடைய இவ்வடியவர் மிகவும் பசித்திருக்கின்றார் (ஆதலால்) இதற்காக நாம் செய்ய வேண்டிய தென்னவென்று சொல்லிப் (பின்னுஞ் சொல்லுகின்றார்.)

"நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாம்இன் அடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ங னே? அணங் கே?" என. 11

(இ - ள்.) நமது வீட்டில் நாம் உண்ணுதற்கு முன்னமே உணவில்லை, அப்படியிருந்தாலும் சிறந்த பர்வதராஜபுத்திரி யாகிய உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய சிவபெருமா னுக்கு அன்பராகிய இவ்வடியவருக்கு நாம் ஊட்டுதற்கு இனிய உணவை மேன்மையாகச் சமைக்கும் விதம் எப்படி பெண்ணே! என்று சொல்ல. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாது கூறுவள் "மற்றொன்றுங் காண்கிலேன்;
ஏதி லாரும் இனித்தரு வாரில்லை;
போதும் வைகிற்றுப் போம்இடம் வேறில்லை;
தீது செய்வினை யேற்கென் செயல்" என்று. 12

(இ - ள்.) இப்படி இளையான் குடிமாறாநாயனார் சொல்ல (அதைக்கேட்ட) அவரது மனைவியார் சொல்லுவார், (அவருக்குத் திருவமுது சமைப்பதற்கு) ஒரு பதார்த்தமும் இல்லை; இனிமேல் கடன் கொடுப்பதற்கு அயலாருமில்லை; (கடன் வாங்கவென்றாலும்) நெடுநேரமாயிற்று; ஆதலால் போய்க் கேட்பதற்கு இடமும் வேறேயில்லை; கொடிய தீவினையை யுடைய எனக்கு என்ன செயலிருக்கின்ற தென்று சொல்லி. எ-று.

"செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலும் ஆகும்; மற்(று)
அல்ல தொன்றறி யேன்" என் றயர்வுற. 13

(இ - ள்.) நமது துன்பம் நீங்கும்படி இன்று பகல் கழனியில் விதைத்திருக்கின்ற சம்பா நெல்லினது வளப்பத்தையுடைய நீரிலூறிய முளையை ஓர் கூடையில் வாரிக் கொண்டு வந்தால் கூடினவரையில் அமுது சமைப்பதற்கும் ஆகும்; இதுவல்லாமல் வேறொன்றையும் அடியாள் அறியமாட்டேனென்று சொல்லி துன்பப்பட்டபொழுது. - எ - று.

"செல்வநீங்க" என்றும் பாடபேதம்.

மற்ற மாற்றம் மனைவியார் கூறமுன்
பெற்ற செல்வம் எனப்பெரி துள்மகிழ்ந்(து)
உற்ற காதலி னால்ஒருப் பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார். 14

(இ - ள்.) இவ்வாறான வார்த்தையைத் தமது மனைவியார் சொல்லக் கேட்டு இளையான் குடிமாறநாயனார் தாம் முன்பு அடைந்த செல்வத்தைப் போல அதைக் கேட்டவுடனே மிகுதியும் சந்தோஷத்தையடைந்து தம்மிடத்தில் தோன்றிய அன்பினால் அப்படிச்செய்வதற்குச் சம்மதித்து நீர் நிறைந்த கழனிக்குப் போகும்படியாகப் புறப்பட்டார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்(து)
அருகு நாப்பண் அறிவருங் கங்குல்தான்
கருகு மையிரு ளின்கணம் கட்டுவிட்(டு)
உருகு கின்றது போன்ற துலகெலாம். 15

(இ - ள்.) (இளையான்குடிமாற நாயனார் நென்முளை வாரிக் கொண்டு வரும்படி தமது வயலுக்குப் போகும்பொழுது) மிகுதியாகிய மேகக்கூட்டங்கள் அதிமாக மழைபெய்து (அதனால்) சமீபமான இடமும், மத்தியிலுள்ள இடமும் அறிதற் கருமையாகிய அவ்வர்த்தராத்திரியானது கறுத்தமை போன்ற இருட்கூட்டங்கள் நெக்குவிட்டு உலகமுழுவதும் உருகினாற் போலப் பரவியிருந்தது. - எ - று.

எண்ணும் இவ்வுலக கத்தவர் யாவரும்
துண்ணெ னும்படி தோன்றமுன் தோன்றிடில்
வண்ண நீடிய மைக்குழம் பாம்என்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து. 16

(இ - ள்.) மதிக்கத்தகுந்த இவ்வுலகத்தில் உள்ளவர்கள் யாவரும் அஞ்சும்படி (இருள் கண்களுக்குத்) தோன்ற அவ்விரு ளின் முன்னே சென்றால் கருமைநிறமிகுந்த மைக்குழம்பினால் பூசப்படுவோமென்று ஒருவரும் வெளியில் புறப்படுதலில்லாத இருளினையுடைய நடுராத்திரிப் பொழுதில். - எ - று.

உள்ளம் அன்புகொண் டுக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினார்
வள்ள லார்இளை யான்குடி மாறனார். 17

(இ - ள்.) தமது மனத்தை அன்பானது இழுத்துச் செலுத்த ஒரு பெரிய கூடையை நனையாதிருக்கும்படி தலையில் கவிழ்த்துக் கொண்டு தம்முடைய வயல் இவ்விடத்திருக்கின்ற தென்னுங் குறிப்பின் வழியே பறவைகள் நித்திரை கொள்ளுதற் கிடமாகிய வயலினிடத்திற்குப் போயினார், (துன்பம் நேரிட்ட காலத்தும் தம்மை யடைந்தவர்களுக்கு இல்லையென்னாமல் திருவமுது படைக்கின்ற) பெருவள்ளலாகிய இளான்குடி மாற நாயனார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலி னால்தட விச்சென்று கைகளால்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி இடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்தொல்லை மீண்டனர். 18

(இ - ள்.) (முளைகள் நாற்றுவிட்டிருக்கும் இடத்தைத்) தமது கால்களினால் தடவிக் கொண்டு போய் அவ்வயலையடைந்து கைகளினால் செந்நெல்லினது வெண்மையாகிய முளைகள் நீரின் வழியே மிதந்து ஒதுங்கியிருக்கின்றவைகளைச் சேர்த்து வாரிக் கூடை நிறையப்போட்டுத் தலைமே லெடுத்து வைத்துச் சுமந்து கொண்டு விரைவாகத் தமது வீட்டிற்குத் திரும்பிவந்தார். எ - று.

வந்தபின் மனைவி யாரும் வாய்தலின் நின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரில் சேற்றினை அலம்பி ஊற்றி
வெந்தழல் அடுப்பின் மூட்ட விறகில்லை என்ன மேலோர்
அந்தமில் மனையில் நீடும் அலக்கினை அறுத்து வீழ்த்தார். 19

(இ - ள்.) (இளையான் குடிமாற நாயனார் வயலிற்சென்று கூடையில் சம்பா வின்முளைகளை வாரிக் கொண்டு) தமது வீட்டிற்கு வந்தபின்பு அவரது மனைவியாரும் வாசலில் நின்று எதிர்பார்த்திருந்து அக்கூடையை வாங்கிக்கொண்டு மனத்தில் சந்தோஷத்தை யடைந்து நீரினாலே அந்த நெல்லில் ஒட்டி யிருந்த சேற்றைக் கழுவியூற்றிப் பின்பு அடுப்பில் வைத்து நெருப்பு மூட்டுவதற்கு விறகில்லையேயென்று சொல்ல அவ்விளையான் குடிமாற நாயனார் கிலமாயிருக்கின்ற தம்முடைய வீட்டின் வரிச்சுகளை அறுத்துத்தள்ளினார். - எ - று.

முறித்தவை அடுப்பின் மாட்டி முளைவித்துப் பதமுன்கொள்ள
வறுத்தபின் அரிசி யாக்கி வாக்கிய உலையிற் பெய்து
வெறுப்பில்இன் அடிசில் ஆக்கி மேம்படு கற்பின் மிக்கார்
"கறிக்கினி என்செய் கோம்!" என் றிறைஞ்சினார் கணவனாரை. 20

(இ - ள்.) அந்தவீட்டின் வரிச்சுகளை முறித்து அடுப்பில் வைத்து முளைத்த நெல்விரைகள் ஈரம்போய்ப் பதமாகும்படி வறுத்தபின்பு அரிசியாகக் குத்தியெடுத்து நீர்வார்த்துக் காய்ந்திருக்கின்ற உலையில் அவ்வரிசியைப் போட்டு விருப்பத் தைத் தரத்தக்க இனிய சோறாகச்சமைத்து மேலாகிய கற்பிற் சிறந்த அந்நாயனாரது மனைவியார் தமது கணவனாராகிய இளையான் குடிமாற நாயனாரைப் பார்த்துப் பதார்த்தத்திற்கு ஒன்றுமில்லையே இனி என்னசெய்வோமென்று வணங்கினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழிவரும் இளைப்பி னோடும் வருத்திய பசியி னாலே
"அழிவுறும் ஐயன்" என்னும் அன்பினிற் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க. 21

(இ - ள்.) வழிநடந்து வந்ததனா லுண்டாகிய இளைப்போடு தம்மை வருத்துகின்ற பசியினாலே இச்சிவனடியார் களைத்து வருந்துவாரென்னும் இரக்கத்தோடும் விரைவாகப் போய்க் குழிநிரம்பி மேல் எழும்பாது அடங்கியிருக்கின்ற புன்செய்களி லுள்ள சிறிய பயிர்களைத் தடவித் தமக்குண்டாகிய பாசத்தின் இழிவாகிய வேரைப் பறிப்பவரைப்போல அவ்வகைளைப் பறித்துக்கொண்டு வந்து கறியமுதுசெய்யும்படி கொடுக்க. எ-று.

மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிகள் ஆய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க புனிதபாத் திரத்துக் கைம்மை
வினையினால் வேறு வேறு கறியமு தாக்கிப் பண்டை
நினைவினால் குறையை நேர்ந்து திருவமு தமைத்து நின்று. 22

(இ - ள்.) இளையான்குடிமாற நாயனாரது மனைவியார் தமது கணவனார்கொடுத்த மனமகிழத்தக்கதாகிய பயிர்க்கறிகள் ஆராய்ந்து பின்பு நீர்விட்டுக் கழுவித் தகுந்த பரிசுத்தம் பொருந் திய பாத்திரங்களில் இட்டுக் கைத்திறத்தினால் அவைகளைத் தனித்தனி கறியமுதாகச் செய்து முன்பு தாம் செல்வத்தோடு வாழ்ந்திருந்த காலத்தில் வேண்டிய உபகரணங்ளனைத்து மிருந்ததுபோல இப்பொழுது இல்லையேயென்னும் நினைவி னால் மனத்தில் குறைவைத்துக் கொண்டு மற்றும் செய்ய வேண்டிய திருவமுதுஞ் செய்து நின்று. - எ - று.

கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி
இணையிலா தாரை ஈண்டு அமுதுசெய் விப்போம் என்ன
உணர்வினால் உணர ஒண்ணா ஒருவரை உணர்த்த வேண்டி
அணையமுன் சென்று நின்றங் கவர்துயில் அகற்ற லுற்றார். 23

(இ - ள்.) தம்முடைய கணவனாராகிய இளையான் குடிமாறாநாயனாரைப் பார்த்துச் சமைக்கப்பட்டிருக்கின்ற பதார்த்தத்தையும் திருவமுதையும் அவருக்குக் காண்பித்து ஒப்பில்லாத இவ்வடியவரைத் திருவமுது செய்விப்போமென்று சொல்ல, அப்பொழுது இளையான் குடிமாறநாயனார் தமது அறிவினால் இத்தன்மையினரென்று அறிதற்கரிய சிவபெருமா னாகிய அடியவருக்குத் தெரிவிக்கும்படியாகச் சமீபமாக அவர் திருமுன்னே சென்று நின்று அவரை நித்திரையினின்றும் எழுப்பத் தொடங்கினார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய்! ஈண்டு அமுதுசெய் தருள்கஎன்று
தொழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாரும் தொண்டரும் திகைத்து நின்றார். 24

(இ - ள்.) பிறவிச் சேற்றில் அழுந்திக்கிடக்குந் துன்பத்தி னின்று நீங்கி அடியேன் பிழைக்கும் பொருட்டுத் திருவுள்ளங் கொண்டு என்னிடத்தில் விருந்தினனாக எழுந்தருளிய பெரியோனே! அடியேனால் சமைக்கப்பட்ட உணவினைத் தேவரீர் அங்கீகரித்துத் திருவமுது செய்தருள வேண்டுமென்று இளையான்குடிமாற நாயனார் விண்ணப்பஞ்செய்த பொழுது அடியவர் வேடங் கொண்டு வந்த சிவபெருமான் சோதி சொரூபமாக எழுந்து மேலே தோன்ற, சிறந்த அன்பாகிய செல்வத்தையுடைய மனைவியாரும் நாயனாரும் அதைக் கண்டு திகைத்து நின்றார்கள். - எ - று.

மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதியாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் தான்ம கிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோ டிடபவா கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி. 25

(இ - ள்.) திருமால் - பிரமன் என்னும் இருவர்களாலும் தேடிக் காணப்படாதவராகிய சிவபெருமானது திருவுருவ மானது ஒப்பற்ற சோதி சொரூபமாக இருக்கப் பார்த்து (இஃதென்ன வென்று கருதி) மிகவும் மயங்குகின்றவராகிய அவ்விருவர்க்கும், சிவபெருமான் திருவுள்ளமகிழ்ந்து மயிர்ச் சார்ந்தணிந்த நீண்ட கூந்தலையுடைய உமாதேவியாரோடு ரிஷபவாகனத்தின் மேல் எழுந்தருளிக் காட்சி கொடுத்து, சிறந்த அடியார் பூசையைச் செய்த இளையான் குடிமாற நாயனரைப் பார்த்தருளி. - எ - று.

"அன்பனே! அன்பர் பூசை அளித்த நீஅணங்கி னோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன்பெரு நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல்கேட்ப
இன்பமார்ந் திருக்க"என்றே அருள்செய்தான் எவர்க்கும் மிக்கான். 26

(இ - ள்.) (நம்மிடத்துச் சிறந்த பத்தியுள்ள) அன்பனே! அடியார்களுக்குத் திருவமுது படைத்தலாகிய பூசையைச் செய்த நீ உனது மனைவியாரோடும் எமது சிறந்த சிவபதத்தை யடைந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருஞ்செல்வத்தையுடைய குபேரனானவன் உனக்கு முன்னே பெரிய சங்கநிதி முதலாகிய பொருள்களைக் கையிலேந்திக் கொண்டு உன் உத்தரவின்படியே ஏவல்தொழிலைச் செய்ய இன்பத்தை யனுபவித்திருக்கக் கடவாயாகவென்று அருளிச் செய்தார், எல்லாத் தேவர்களுக்கும் தலைவராகிய சிவபெருமான். - எ - று.

இப்பரி சிவர்க்குத் தக்க வகையினால் இன்பம் நல்கி
முப்புரஞ் செற்றார் அன்பர் முன்பெழுந் தருளிப் போனார்
அப்பெரி யவர்தம் தூய அடியிணை தலைமேற் கொண்டு
மெய்ப்பொருட் சேதி வேந்தன் செயலினை விளம்ப லுற்றேன். 27

(இ - ள்.) இவ்விதமாக இவ்விளையான் குடிமாற நாயனாருக்கும் இவரது மனைவியாருக்கும் தகுந்தவகையோடு (சிவபதத்தில் வாழ்ந்திருத்தலாகிய) பேரின்பத்தைக் கொடுத்துத் திரிபுர தகனராகிய சிவபெருமான் அவ்வடியவருக்கு முன்னே அந்தர்த்தானமாயினார். அத்தன்மையாகிய இளையான் குடிமாற நாயனாரென்னும் பெரியோரது பரிசுத்தம் பொருந்திய இரண்டு திருவடிகளையும் சிரசின்மேல் வைத்துக் கொண்டு சேதிநாட்டரசராகிய மெய்ப் பொருணாயனாரது அடிமைத் திறத்தைச் சொல்லத் தொடங்குகின்றேன். - எ - று.

இளையான் குடிமாற நாயனார் புராணம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. மெய்ப்பொருள் நாயனார் புராணம்

சேதிநன் னாட்டு நீடு திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாகர் அன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு
காதலால் ஈசர்க் கன்பர் கருத்தறிந் தேவல் செய்வார். 1

(இ - ள்.) நல்ல சேதி நாட்டில் சிறப்புற்றோங்கிய திருக்கோவலூரில் நிலையாக வாசஞ்செய்து, உமாதேவியை ஒரு பாகத்திலுடைய சிவபெருமானுக்கு அன்பு செய்தொழுகுகின்ற மலையாளர்களுக்கு அரசராயுள்ளவர், வேதத்திற் சொல்லப்பட்ட நன்மார்க்கத்தின் உண்மையானது (உலகத்தில்) விளங்கும்படியாக அதனை மேன்மையாகக் கொண்டு அன்போடும் சிவபெருமானுடைய அடியார்களது திருவுள்ளக் குறிப்பையறிந்து (அவர்களுக்குப்) பணிவிடை செய்கின்றவர். - எ - று.

அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமல் காத்து
வரைநெடுந் தோளால் வென்று மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம் பாத நீதி ஓங்குநீர் மையினின் மிக்கார்
திரைசெய்நீர்ச் சடையான் அன்பர் வேடமே சிந்தை செய்வார். 2

(இ - ள்.) அரசாட்சிக் குரியவழியினின்றும் முறைமையாக வந்த தருமவழியைத் தவறாமல் பாதுகாத்து, மலையையொத்த பெரிய புஜபலத்தின் மிகுதியால் (பகைவர்களை) வென்று அப்பகைவர்களது படைமுனையை யழித்து, சொன்ன சொல் தவறாமல் நடக்கின்ற நீதிமிகுந்த நற்குணத்தில் சிறந்தவர், (அவர்) அலைகளை வீசுகின்ற கங்கா நதியைத் தரித்த சடையினையுடைய சிவபெருமானது அடியார்களின் திருவேடத்தையே சிந்திக்குங் காரணத்தினால் மெய்ப் பொருணாயனாரென்று சொல்லப்படுகின்றவர். - எ - று.

மங்கையைப் பாக மாக உடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள்நா யகருக் கன்பர் தாளலால் சார்பொன் றில்லார். 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) உமா தேவியாரை இடப்பாகத் திலுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருக்கோயில்களிலெல்லாம் பூசைகளைக் குறைவில்லாமல் நடத்தி சப்தஸ்வரத்தோடு கூடிய பாடல்களும் ஆடல்களும் மிகுந்த திருவிழாச் சிறப்போடும் ஓங்கும் பொருட்டு அவைகளைப் பாதுகாத்து வாழ்கின்றவர்; தங்கள் நாயகராகிய சிவபெருமானது அடியார்களின் திருவடிகளேயல்லாமல் வேறொன்றையுந் தமக்குத் துணையாக எண்ணாதவர். - எ - று.

தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுன்
ஆடிய பெருமான் அன்பர்க் காவன ஆகும்என்று
நாடிய மனத்தி னோடு நாயன்மார் அணைந்தபோது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார். 4

(இ - ள்.) தாம் தேடிய பொன்னும், விருத்தியாயிருக்கின்ற மற்றைய செல்வங்களும் தில்லைத் திருச்சிற்றம் பலத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற சிவபெருமானது அடியவர்களுக்கே உரியனவாகுமென்று மனதில் விருப்பத்தோடு சிவனடியார்கள் தம்மிடத்திற்கு எழுந்தருளும்போது அதனால் உண்டாகிய (அன்பினால்) சந்தோஷமதிகரிக்க அவர்களுக்கு ஓர் குறைவுமில்லாமலிருக்கும் படி வேண்டிய பொருள்களை மிகுதியாகக் கொடுத்து வந்தார். - எ - று.

இன்னவா றொழுகும் நாளில் இகல்திறம் புரிந்தோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும் ஆசையால் அமர்மேற் கொண்டு
பொன்னணி ஓடை யானைப் பொருபரி காலாள் மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப் பரிபவப் பட்டுப் போனான். 5

(இ - ள்.) இவ்விதமாக மெய்ப்பொருணாயனார் சிவனடியார்களுக்கு வழிபாடு செய்து நீதியோடு அரசாட்சி செய்து வருங்காலத்தில் (முத்தநாதனென்னும்) ஒரு அரசனானவன் அவரோடு பகைத்துநின்று அவரைப் போர் செய்து வெல்லவேண்டு மென்னும் ஆசையினாலே போர் செய்தலை மேற்கொண்டு செய்து பொன்னினால் செய்த நெற்றிப் பட்டத்தை யணிந்தயானைகளையும், போர் செய்தற்குரிய குதிரைகளையும் காலாட் சேனைகளையும், மற்றும் தேர்படை வீரர் முதலிய பலபொருள்களையும் பலமுறையிழந்து தோற்று அவமானப் பட்டுப் போயினான். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்படி இழந்த மாற்றான் இகலினால் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தன் சீலம் அறிந்துவெண் ணீறுசாத்தும்
அப்பெரு வேடங் கொண்டே அற்றத்தில் வெல்வா னாகச்
செப்பரு நிலைமை எண்ணித் திருக்கோவ லூரிற் சேர்வான். 6

(இ - ள்.) இவ்விதமாகப் பலமுறை தோற்று ஓடிப்போயின பகையரசனானவன் தனது சாமர்த்தியத்தினால் ஜயிக்கச் சக்தியற்றவனாகி மெய்ப் பொருணாயனார் அடியார்களிடத்தில் வைத்திருக்கும் அன்பின் தன்மையையறிந்து திருவெண்ணீற்றைத் தரிக்கும் அச்சிவனடியார்களின் சிறந்த திருவேடத்தை வஞ்சகமாகத் தரித்துச் சமயமறிந்து வெல்லுங்கருத்துடையவனாய்ச் சொல்லக் கூடாத தீமையைச் செய்யும்படி நினைத்துத் திருக்கோவலூருக்குப் போகப் புறப்படுவானாயினான்.

மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்தநாதன். 7

(இ - ள்.) தனது தேகமுழுமையும் விபூதியைத் தரித்துத் தலையிலுள்ள சடைகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி உடைவாளை மறைத்துவைத்திருக்கின்ற புத்தகக் கவளிகையைக்கையில் தாங்கிக்கொண்டு கருமை நிறத்தைத் தன்னுள்ளே வைத்திருக்கின்ற தீபத்தைப்போல மனதில் களங்கத்தை வைத்துக் கொண்டு பொய்யாகிய தவவேடத்தைப் பூண்டு முத்தநாதனென்னும் அப்பகையரசனானவன் மெய்ப் பொருணாயனாரிடத்திற்கு வந்தான். - எ - று.

மாதவ வேடங் கொண்ட வன்கணான் மாடம் தோறும்
கோதைசூழ் அளக பாரக் குழைக்கொடி ஆட மீது
சோதிவெண் கொடிகள் ஆடுஞ் சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயில் திருமணி வாயில் சேர்ந்தான். 8

(இ - ள்.) சிவனடியார்களைப் போல மகத்தாகிய தவவேடத்தைக் கொண்டு வந்த கொடியவஞ்சகனாகிய முத்தநாதனென்பவன் மேல்வீடுகள் தோறும் மாலைகள் சூழ்ந்த அளகபாரத்தையுடைய குண்டலமணிந்த பெண்களாகிய கொடிகள் நாட்டியஞ் செய்ய, அதன்மேல் பிரகாசம் பொருந்திய வெள்ளைக் கொடிகளாடுகின்ற ஒளிபொருந்திய பெரியவீதியிலேபோய் மெய்ப்பொருணாயனாரது அரண்மனையின் சிறந்த ரத்தினங்கள் பதிக்கப்பட்டிருக்கின்ற வாயிலையடைந்தான். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடையுடைக் காவ லாளர் கைதொழு தேற நின்றே
"உடையவர் தாமே வந்தார்; உள்ளெழுந் தருளும்" என்னத்
தடைபல புக்க பின்பு தனித்தடை நின்ற தத்தன்
இடைதெரிந் தருள வேண்டும் துயில்கொளும் இறைவன்" என்றான். 9

(இ - ள்.) (முத்தநாதன் இவ்வித வஞ்சகவேடங் கொண்டு மெய்பபொருணாயனாருடைய அரண்மனை வாசலிற் போன பொழுது) வாசலில் காவல் செய்கின்றவர்கள் தங்கள் கைகளைக் குவித்து வணங்கித் தூரத்தில் நின்று நம்மை அடிமையாக வுடைய சிவனடியவர் இங்குத் தாமே எழுந்தருளினாரென்று சொல்லி (சுவாமிகளே! தேவரீர்) உள்ளே எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, இப்படி அடுத்தடுத்துள்ள பலதடைகளையுங் கடந்து உள்ளே புகுந்த பின்பு மெய்ப் பொருணாயனாருக்கு ஒப்பற்ற உயிர்க்காவலாய்த் தனியே நின்ற தத்தனென்பவன் (அவனைப் பார்த்துச்) சமயந்தெரிந்து தேவரீர் உள்ளே எழுந்தருள வேண்டும்; இப்பொழுது நம்முடைய அரசன் நித்திரை செய்கின்றாரென்று சொன்னான். - எ - று.

என்றவன் கூறக் கேட்டே "யான்அவற் குறுதிகூற
நின்றிடு நீயும்" என்றே அவனையும் நீக்கிப் புக்குப்
பொன்றிகழ் பள்ளிக் கட்டில் புரவலன் துயில மாடே
மன்றலங் குழல்மென் சாயல் மாதேவி இருப்பக் கண்டான். 10

(இ - ள்.) இவ்விதமாகத் தத்தனென்பவன் சொல்ல அதனை முத்தநாதன் கேட்டு நான் இந்த அரசனுக்கு மோக்ஷமடைதற் குரிய உறுதிப்பொருளை உபதேசிக்கப் போகிறபடியால் நீ தடை செய்யாமல் நில்லென்று அந்தத் தத்தனையும் விலக்கிக் கொண்டு உள்ளே புகுந்து பொன்னினால் செய்யப்பட்டு விளங்குகின்ற பள்ளியறைக் கட்டிலில் மெய்ப் பொருணாயனார் நித்திரை செய்ய அவர் பக்கத்தில வாசனை பொருந்திய அழகிய கூந்தலையும் மிருதுவான சாயலையுமுடைய அவரது பத்தினியார் இருக்கப் பார்த்தான். - எ - று.

கண்டுசென் றணையும் போது கதுமென இழிந்து தேவி
வண்டலர் மாலை யானை எழுப்பிட உணர்ந்து மன்னன்
"அண்டர்நா யகனார் தொண்ட ராம்" எனக் குவித்த செங்கை
கொண்டெழுந் தெதிரே சென்று கொள்கையின் வணங்கி நின்று. 11

(இ - ள்.) முத்தநாதனென்பவன் அவரது பத்தினியார் இருப்பதை பார்த்துச் சிறிதும் அச்சமில்லாமல் உள்ளே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நுழையும் பொழுது (அதைக் கண்ட அந்நாயனாரது மனைவியார்) சீக்கிரமாக எழுந்து வண்டுகள் மொய்க்கின்ற மலர் மாலையைத் தரித்த மெய்ப் பொருணாயனாரை எழுப்ப அந்நாயனார் நித்திரை தெளிந்து தேவநாயகராகிய சிவபெருமானது அடியவரென்று நினைத்துத் தமது சிவந்தகைகளைத் தலைமேல் குவித்துவைத்துக் கொண்டு எழுந்திருந்து எதிராகப் போய் ஆகமவிதிப்படியே வந்தனஞ் செய்து நின்று கொண்டு. - எ - று.

"மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ?" என்றுகூற
"உங்கள்நா யகனார் முன்னம் உரைத்தஆ கமநூல் மண்மேல்
எங்குமில் லாததொன்று கொடுவந்தேன் இயம்ப" என்றான். 12

(இ - ள்.) மங்கலமானது பெருகும்படிக்கு என்னுடைய செல்வமானது விரைந்து வந்து சேர்ந்ததுபோல, தேவரீர் இவ்விடத்தில் எழுந்தருளப் பெற்றது என்ன காரணமாகவோ வென்று சொல்ல, முத்த நாதன் உங்கள் நாயகராகிய சிவபெருமான் முன்னாளில் அருளிச் செய்த ஆகம சாஸ்திரத் துள் உலகத்தில் எங்குமில்லாத தாகிய ஒரு நூலை உனக்கு உபதேசிக்கக் கொண்டு வந்தேனென்று சொன்னான்.

"பேறெனக் கிதன்மேல் உண்டோ? பிரான்அருள் செய்தஇந்த
மாறிலா கமத்தை வாசித் தருள்செய வேண்டும்" என்ன
"நாறுபூங் கோதை மாது தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருக்க வேண்டும்" என்றவன் விளம்ப வேந்தன். 13

(இ - ள்.) (மெய்ப் பொருணாயனார் அடியார் வேடங்கொண்டு வந்த வஞ்சகனைப் பார்த்துத் தேவரீர் எழுந்தருளி வந்து திருவாய்மலர்ந்தருளிய இந்தக் கட்டளையைப் பார்க்கிலும்) சிறந்தபேறு அடியேனுக்கு உண்டோ இல்லை; சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட குற்றமற்ற இந்தச் சிவாகமசாஸ்திரத்தை வாசித்து அதன் பொருளை அடியே னுக்கு விளங்கும்படி அருளிச் செய்ய வேண்டுமென்று சொல்ல, (அவரை முத்தநாதன் பார்த்து) வாசனை வீசுகின்ற மலர் மாலையைத் தரித்த கூந்தலையுடை உனது பட்டத்தரசி யில்லாமல் நானும் நீயும் தனித்திருக்கவேண்டுமென்று சொல்ல (அப்பொழுது) மெய்ப் பொருணாயனார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமகள் என்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப்
புரிவுடன் விரைய அந்தப் புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத் தவிசின்மேல் இருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி "இனியருள் செய்யும்" என்றார். 14

(இ - ள்.) இலட்சுமியைப் போல அவ்விடத்தில் நிற்கின்ற தமது மனைவியாரைப் பார்த்து ஆசையோடு விரைவாக அந்தப் புரத்திற்குப் போகும்படி உத்தரவு செய்து வஞ்சகமாகச் சிவனடியார் வேடங் கொண்டு வந்த அம்முத்தநாதனென் பவனை ஆசனத்தின்மேல் உட்காரவைத்துத் தாமும் பெருமை யாகிய பூமியில் ஆசனமில்லாமல் இருந்து அவனைத் துதித்து இனிமேல் தேவரீர் அருளிச் செய்ய வேண்டுமென்று சொன்னார். - எ - று.

கைத்தலத் திருந்த வஞ்சகக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்ற புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன் நினைத்தஅப் பரிசே செய்ய
மெய்த்தவ வேட மேமெய்ப் பொருள்" எனத் தொழுது வென்றார். 15

(இ - ள்.) (அப்பொழுது முத்தநாதன்) தன்கையில் வைத்திருந்த வஞ்சகமான புத்தகக்கவளிகையைத் தன்னுடைய மடியின் மேல் வைத்து அதனுள்ளிருக்கும் புத்தகத்தை அவிழ்க் கின்றவன் போல, அம்மெய்ப் பொருணாயனார் விரும்பி வணங்கின பொழுது அதனுள் ஒளித்துவைத்திருந்த உடை வாளைக் கையில் எடுத்துத் தான் முன்பு நினைத்தபிரகாரம் செய்ய, (அப்பொழுது நாயனார்) தாம் மெய்ப்பொருளாகக் கொண்ட தவவேடத்தையே உண்மைப் பொருளாக நினைத்துத் தொழுது (தம்முடைய பொறுமையினாலே பிறவிக்கேதுவாகிய அஞ்ஞானத்தை) வென்றார். - எ - று.

மறைத்தவன் புகுந்த போதே மனம்அங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கட் கூடி வாளினால் எறிய லுற்றான்
நிறைத்தசெங் குருதி சோர வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில் "தத்தா நமர்" எனத் தடுத்து வீழ்ந்தார். 16

(இ - ள்.) வஞ்சனையாகப் பூண்ட சிவனடியார் வேடத்தை யுடைய அம்முத்த நாதன் உள்ளேபுகுந்த பொழுதே (நமது அரசனுக்கு என்ன ஆபத்து நேரிடுமோவென்று) மனதை அவ்விடத்திலேயே செலுத்தியிருந்த தத்த னென்பவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

க்ஷணநேரத்தில் உள்ளே புகுந்து தன்கையிலுள்ள வாளாயுதத்தினால் அவனை வெட்டத் தொடங்கினபொழுது, உடைவாளினால் குத்தப்பட்டுத் தமது திருமேனியினின்றும் சிவந்த உதிரமானது பெருக் கெடுத்தோடும்படி பூமியில் விழப் போகின்ற அம்மெய்ப் பொருணாயனார் பூமியில் விழும் பொழுது தமது நீளமாகிய கையினால் தத்தனே! இவர் நமது பெரியோர், (ஆதலால் இவருக்கு ஒரு தீங்குஞ் செய்யாதேயென்று) தடுத்து விழுந்தார். - எ - று.

வேதனை எய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனாந் தத்தன் தானும் தலையினால் வணங்கித் தாங்கி
"யாதுநான் செய்கேன்?" என்ன "எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம் கொண்டுபோய் விடுநீ" என்றார். 17

(இ - ள்.) அம்முத்தநாதனால் வருததத்தையடைந்து கீழே விழுந்து மெய்ப் பொருணாயனாரால் (தத்தா! நமர்) என்று சொல்லி விலக்கப்பட்ட அவரது பணிவிடை செய்வோனாகிய தத்தனென்பவனும் அந்நாயனாரைத் தலையினால் வணங்கி அவர் சிரத்தைக்கையினால் தாங்கிக்கொண்டு அடியேன் செய்யவேண்டிய பணிவிடை யாதென்று கேட்க, அவர் எமது சிவபெருமானுடைய அடியவராகிய இவர் போகும் பொழுது இடைவழியில் காவலாளர் ஒருவரும் தடை செய்யாமலிருக்கும் படி நீ இவருக்குத் துணையாக இருந்து அழைத்துக் கொண்டு போய் விடக்கடவாயென்று கட்டளையிட்டார். எ - று.

அத்திறம் அறிந்தார் எல்லாம் அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக் கொல்வோம் எனப்புடை சூழ்ந்த போது
தத்தனும் அவரை எல்லாம் தடுத்துடன் கொண்டு போவான்
"இத்தவன் போகப் பெற்ற திறைவன தாணை" என்றான். 18

(இ - ள்.) (தத்தன் முத்த நாதனென்பவனை வெளியில் அழைத்துக் கொண்டு போகையில்) அவன் அரண்மனையில் செய்த கொடுஞ் செய்கையை அறிந்தவர்களெல்லாரும் நமது அரசனுக்கு உயிர்ச் சேதமாகிய தீமையைச் செய்த பொய்யாகிய தவவேடத்தையுடைய இவனைக் கொல்வோமென்று அவன் பக்கங்களில் சூழ்ந்த பொழுது தத்தனென்பவனும் அவர் களெல்லாரையும் தடுத்துத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போவதற்கு, இந்தத் தவவேடத்தையுடையவன் ஒரு அபாயமும் நேரிடாமல் தன்னிடத்திற்குப் போகப் பெற்றுக் கொண்டது நமது அரசனது கட்டளையாமென்று அவர்களுக்குச் சொன்னான். - எ - று.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வழி அவர்கள் எல்லாம் அஞ்சியே அகன்று நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன் திருநகர் கடந்து போந்து
கைவடி நெடுவாள் ஏந்தி ஆளுறாக் கானஞ் சேர
வெவ்வினைக் கொடியோன் தன்னை விட்டபின் மீண்டு போந்தான். 19

(இ - ள்.) தத்தன் சொல்லிய வார்த்தையைக் கேட்டவளவில் அவனைக் கொல்லும்படி வந்து சூழ்ந்தவர்களெல்லாரும் அரசன் ஆணைக்குப்பயந்து அவ்விடத்தினின்றும் நீங்கிப்போக, தத்தனென்பவன் கையில் கூர்மையாகிய பெரியவாளா யுதத்தைப் பிடித்து நல்லவழியாக அந்த நகரத்தைக் கடந்துபோய் மனிதர் சஞ்சரிக்காத காட்டையடையவும் (அவ்விடத்தில்) கொடிய தீவினையையுடைய முத்த நாதனை அனுப்பிவிட்டு அந்தத் தத்தன் தன்னுடைய பட்டணத்திற்குத் திரும்பிவந்தான். - எ - று.

மற்றவன் கொண்டு போன வஞ்சனை வேடத் தான்மேற்
செற்றவர் தம்மை நீக்கித் தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறங் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்றான் கோமகன் குறிப்பில் நின்றான். 20

(இ - ள்.) அந்தத்தத் தனென்பவன் அழைத்துக் கொண்டு போன வஞ்சனையாகிய தவவேடத்தையுடைய முத்தநாதன் மேல் கோபித்துக் கொல்ல எதிர்த்தவர்களை விலக்கிக் குற்றமில்லாத நல்ல இடத்தில் கொண்டு போய் விட்டுவந்த உண்மை வார்த்தைகளைக் கேட்பதற்காகத் தன்னைவிட்டு நீங்குகின்ற உயிரைத் தாங்கிக் கொண்டிருக்கும் மெய்ப் பொருணாயனாருக்கு முன்னே அவரது திருவுள்ளக்குறிப்பை யறிந்து நடக்கின்ற தத்தன் போய் நின்றான்.- எ - று.

சென்றடி வணங்கி நின்று "செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி விட்டனன்" என்று கூற
"இன்றெனக்(கு) ஐயன் செய்த தியார்செய்ய வல்லார்?" என்று
நின்றவன் தன்னை நோக்கி நிறைபெருங் கருணை கூர்ந்தார். 21

(இ - ள்.) தத்தன் மெய்ப் பொருணாயனார் சமீபத்தில் போய் அவரது திருவடிகளில் நமஸ்கரித்து, வஞ்சனையாகிய தவவேடவத்தைக் கொண்டு தேவரீரை வென்றவனுக்கு யாதொரு இடையூறுமில்லாமல் அடியேன் அழைத்துக் கொண்டு போய் விட்டேனென்று சொல்ல, (அதை மெய்ப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருணாயனார் கேட்டு) ஐயனே! இன்றைக்கு நீசெய்த உபகாரத்தைப் போல யாவர் செய்யவல்லவர்களென்று தமக்கு எதிரில் நிற்கின்ற அந்தத்தத்தனைப் பார்த்து மிகுந்த பெருங்கருணை செய்தார். எ - று.

அரசியல் ஆயத் தார்க்கும் அழிவுறும் காத லார்க்கும்
விரவிய செய்கை தன்னை விளம்புவார் விதியி னாலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீர்" என்று
புரவலர் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை செய்தார். 22

(இ - ள்.) மெய்ப்பொருணாயனார் தமக்குப்பின் அரசாட்சி செய்வதற்குரிய புத்திரர் சகோதரர்களுக்கும், தமக்கு நேரிட்ட ஆபத்தைக்குறித்து மனம் வருந்துகின்ற விருப்பத்தையுடைய மந்திரி முதலானவர்களுக்கும் தம்முள்ளத்தில் கலந்திருக்கின்ற கொள்கையைச் சொல்லுகின்றார்; வேதவிதிப்படியே உலக முழுமையும் மேன்மையாகப் பரவியிருக்கின்ற திருவெண்ணீற்றி னிடத்தில் அன்புவைத்து அதற்கு ஓர் குறையும் நேரிடாமல் பாதுகாத்து வரக்கடவீர்களென்று, அம்மெய்ப் பொருணாய னார் கனகசபையில் ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற சிவபெருமானுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தியானஞ் செய்தார். - எ - று.

தொண்டனார்க்(கு) இமயப் பாவை துணைவனார் அவர்முன் தம்மைக்
கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா அருட்கழல் நிழல் சேரக்
கொண்டவா றிடையறாமல் கும்பிடும் கொள்கை ஈந்தார். 23

(இ - ள்.) அடியவராகிய மெய்ப்பொருணாயனாருக்கு, பர்வதராஜ புத்திரியாகிய உமாதேவியாரது நாயகராகிய சிவபெருமான் அந்நாயனார் முன்பு தம்மைத்தியானஞ்செய்த உருவமாகவே அவருக்கு முன்னே நின்று காட்சி கொடுத்தருளி, சிறந்த சுவர்க்கலோகத்தில் வாழ்கின்ற தேவர்களுக்கும் எட்டாத திருவருளுருவமாகிய திருவடி நிழலையடையும்படி ஆட் கொண்டு தம்மை இடைவிடாமல் கும்பிட்டுக் கொண்டிருக் கின்ற சிறந்த பேற்றைக் கொடுத்தருளினார். எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்னுயிர் செகுக்கக் கண்டும் எம்பிரான் அன்பர் என்றே
நன்னெறி காத்த சேதி நாதனார் பெருமை தன்னில்
என்னுரை செய்தே னாக இகல்விறன் மிண்டர் பொற்றாள்
சென்னிவைத் தவர்முன் செய்த திருத்தொண்டு செப்பலுற் றேன். 24

(இ - ள்.) எல்லாப் பொருள்களிலும் சிறந்ததாகப் பாதுகாக்கின்ற இனிய உயிரை உடைவாளால் குத்தக்கண்டும், இவர் எமது சிவபெருமானுடைய அடியவரென்று நினைத்து நன்மையாகிய சிவவேடமே உண்மைப் பொருளென்று தாங் கொண்ட கொள்கையைக் காப்பாற்றிய சேதி நாட்டரசராகிய மெய்ப்பொருணாயனாரது பெருமைகளில் கொஞ்சஞ் சொன்னேன்; இனி வல்லமை பொருந்திய விறன்மிண்ட நாயனாருடைய அழகிய திருவடிகளைச் சிரசின்மேல் வைத்துக் கொண்டு அவர் முன்னே செய்த திருத்தொண்டைச் சொல்லத் தொடங்குகின்றேன்.

மெய்ப் பொருணாயனார் புராணம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. விறன்மிண்ட நாயனார் புராணம்

விரைசெய் நறும்பூந் தொடையிதழி வேணி யார்தங் கழல்பரவிப்
பரசு பெறுமா தவமுனிவன் பரசு ராமன் பெறுநாடு
திரைசெய் கடலின் பெருவளனும் திருந்து நிலனின் செழுவளனும்
வரையில் வளனும் உடன்பெருகி மல்குநாடு மலைநாடு. 1

(இ - ள்.) வாசனை வீசுகின்ற நல்ல கொன்றை மலர் மாலையைத் தரித்த சடையினையுடைய சிவபெருமானது திருவடிகளை வணங்கி மழுவாயுதத்தைப் பெற்ற பெரிய தவத்தினையுடைய முனிவராகிய பரசுராமரால் உண்டான நாடாகியும், அலைகளை வீசுகின்ற சமுத்திரத்தில் உண்டாகிய பெரியவளங்களும், திருத்தமாகிய நிலத்தில் உண்டாகிய செழியவளங்களும், மலையினிடத்தில் உண்டாகிய வளங்களும் ஒன்றாகச் சேர்ந்து அதிகரித்திருக்கும் நாடாகியுமுள்ளது மலை நாடாகும்.

வா.ரி சொரியுங் குளிர்முத்தும் வேழ மருப்பின் ஒளிர்முத்தும்
வேரல் விளையுங் குளிர்முத்தும் வேழ மருப்பின் ஒளிர்முத்தும்
மூரல் எனச்சொல வெண்முத்த நகையார் தெரிந்து முறைகோக்கும்
சேரர் திருநாட் டூர்களின்முன் சிறந்த மூதூர் செங்குன்றூர். 2

(இ - ள்.) சமுத்திரத்தின் அலைகளால் கரையில் ஒதுக்கப் பட்ட பிரகாசம் பொருந்திய முத்துக்களும், வயல்களிலுள்ள மெல்லியகரும்புகளில் தோன்றிய முத்துக்களும், மூங்கில்களில் பிறந்த குளிர்ந்த முத்துக்களும், யானைத் தந்தங்களிலிருந்து தோன்றிய விளங்குகின்ற முத்துக்களும் பற்களென்று சொல்லப் பட்ட வெள்ளிய முத்தின் ஒளியையுடையபெண்கள் தனித் தனியே ஆராய்ந்தெடுத்து வெவ்வெறு வரிசையாகக் கோக்கின்ற சிறப்பினையுடைய சேரநாட்டிலுள்ள ஊர்களில் முதன்மை யாகச் சிறந்த ஊரானது பழமையாகிய திருச்செங்குன்றூர் என்று சொல்லப்படும். - எ - று.

என்னும் பெயரின் விளங்கியுல கேறும் பெருமை யுடையதுதான்
அன்னம் பயிலும் வயலுழவின் அமைந்த வளத்தால் ஆய்ந்தமறை
சொன்ன நெறியின் வழியொழுகும் தூய குடிமைத் தலைநின்றார்
மன்னுங் குலத்தின் மாமறைநூல் மரபிற் பெரியோர் வாழ்பதியாம். 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) திருச்செங்குன்றூர் என்னும் பெயரினால் விளக்கத்தையடைந்து, உலகத்தில் சிறந்த பெருமையையுடைய அந்நகரமானது, அன்னப்பட்சிகள் சஞ்சரிக்கின்ற வயல்களை உழுது பயிர்செய் துண்டாகிய பயிர்வளத்தினால் தெளிந்த பொருளமைந்த வேதத்தில் சொல்லிய விதிப்படியே நடக்கின்ற பரிசுத்தம் பொருந்திய உயர்ந்த குடியிற் பிறந்தவர்களும், நிலைபெற்ற குலத்தினையுடைய பெருமை பொருந்திய வேத விதிப்படி யொழுகுகின்றவர்களுமாகிய வேதியர்கள் வாழ்கின்ற ஊராகும். - எ - று.

அப்பொற் பதியி னிடைவேளாண் குலத்தை விளக்க அவதரித்தார்;
செப்பற் கரிய பெருஞ்சீர்த்திச் சிவனார் செய்ய கழல்பற்றி
எப்பற் றினையும் அறஎறிவார் எல்லை தெரிய ஒண்ணாதார்
மெய்ப்பத் தர்கள்பாற் பரிவுடையார் எம்பி ரானார்; விறன்மிண்டர். 4

(இ - ள்.) அத்தன்மையாகிய அழகிய திருச்செங்குன்றூரில் வேளாளரது குலத்தை விளக்கும் பொருட்டுத் திருவவதாரஞ் செய்தவர்; (யாவராலும்) சொல்லுதற்கரிய பெருஞ்சிறப்பினை யுடைய சிவபெருமானது சிவந்த திருவடிகளைத் தமக்கு ஆதரவாக இடைவிடாது சிந்தித்து எப்படிப்பட்ட ஆசைகளை யும் சிறிதும் விரும்பாமல் ஒழிக்கின்றவர்; (அவரது பெருமையை) இவ்வளவென்று அளவிட்டுரைக்கக் கூடாதவர்; உண்மை யாகிய சிவனடியார்களிடத்தில் பேரன்புடையவர்; (அவர் யாரென்றால்) எமது பெருமானாகிய விறன்மிண்ட நாயனா ராகும். எ - று.

நதியும் மதியும் புனைந்தசடை நம்பர் விரும்பி நலம்சிறந்த
பதிகள் எங்கும் கும்பிட்டுப் படரும் காதல் வழிச்செல்வார்
முதிரும் அன்பிற் பெருந்தொண்டர்முறைமை நீடு திருக்கூட்டத்(து)
எதிர்முன் பரவும் அருள்பெற்றே இறைவர் பாதம் தொழப்பெற்றார். 5

(இ - ள்.) (அவ்விறன்மிண்டநாயனார்) கங்காநதியையும், பிறைச்சந்திரனையுந் தரித்த சடையினையுடைய சிவபெருமான் திருவுள்ளங் கொண்டெழுந்தருளியிருக்கின்ற நன்மை பொருந்திய க்ஷேத்திரங்களெங்கும்போய் வணங்கிப் பரந்த அன்பின் வழியே செல்கின்றவர்; மிகுந்த பேரன்பினால் பெருமை பொருந்திய சிவனடியனார்கள் முறைமையாகக் கூடியிருக்கின்ற திருக்கூட்டத்திற்கு எதிராகப் போய் முன்னே வணங்குவதற்கு அருளைப் பெற்று, பின்பு சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கத்தக்க மேன்மையைப் பெற்றவர். எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**பொன்தாழ் அருவி மலைநாடு கடந்து கடல்சூழ் புவிஎங்கும்
சென்(று)ஆள் உடையார் அடியவர்தம் திண்மை ஒழுக்க நடைசெலுத்தி
வன்தாள் மேருச் சிலைவளைத்துப் புரங்கள் செற்ற வைதிகத்தேர்
நின்றார் இருந்த திருவாரூர் பணிந்தார் நிகரொன் றில்லாதார். 6**

(இ - ள்.) பொன்னின் பொடிகளோடு தாழ்ந்து விழுகின்ற அருவிகளையுடைய சேரநாட்டைக் கடந்து, சமுத்திரஞ் சூழ்ந்த இப்பூவுலகிலுள்ள எல்லாக்ஷேத்திரங்களிலுஞ் சென்று நம்மை அடிமையாகவுடைய சிவபெருமானது அடியார்கள் நடக்கின்ற உறுதியாகிய திருத்தொண்டின் நெறியில் தம்மை நடக்கும்படி செய்து கொண்டு, வலிமை பொருந்திய அடியினையுடைய மேருவாகிய வில்லைவளைத்து முப்புரங்களையெரித்த வேதங்களாகிய குதிரைப்பூட்டிய இரதத்தில் நின்றருளிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருவாரூரை அடைந்து வணங்கினார்; தமக்கு வேறொருவரும் ஒப்பில்லாதவராகிய விறன் மிண்டநாயனார். - எ - று.

**திருவார் பெருமை திகழ்கின்ற "தேவா சிரிய னிடைப் பொலிந்து
மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்தணையா(து)
ஒருவா றொதுங்கும் வன்றொண்டன் புறகென்" றுரைப்பச் சிவனருளால்
பெருகா நின்ற பெரும்பேறு பெற்றார்; மற்றும் பெறநின்றார். 7**

(இ - ள்.) மங்கலகரம் பொருந்திய பெருமையினால் விளங்குகின்ற தேவாசிரிய மண்டபத்தில் நிறைந்து பொருந்தி யிருக்கின்ற சிவனடியார்களை (புறத்தில்) வணங்கி அவர் களோடு வந்து சேராமல் ஒருவகையாக ஒதுங்கிப் போன்கின்ற ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளை இவ்வடியார்களின் திருக்கூட்டத் திற்குப் புறம் பென்று சொல்ல, சிவபெருமானது திருவருளினால் மிகுதியாக வளருகின்ற பெரிய பேற்றினைப் பெற்றவர்; பின்னும் வேண்டியபேறுகளைப் பெறும்படி நின்றவர். - எ - று.

**சேணார் மேருச் சிலைவளைத்த சிவனார் அடியார் திருக்கூட்டம்
பேணா தேகும் ஊரனுக்கும் பிரானாம் தன்மைப் பிறைசூடிப்
பூணார் அரவம் புனைந்தார்க்கும் புற கென் றுரைக்க மற்றவர்பால்
கோணா அருளைப் பெற்றார்மற் றினியார் பெருமை கூறுவார். 8**

(இ - ள்.) ஆகாயத்தையளாவிய மேருவாகிய வில்லை வளைத்த சிவபெருமானது அடியவராகிய விறன்மிண்ட நாயனார், திருக்கூட்டத்தடியவரை வணங்காமற் போகின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நம்பியாரூரருக்கும், அவர்க்கு முதல்வராகிய தன்மையைப் பெற்றுத் தடுத்தடிமை கொண்ட சந்திரனை அணிந்து சர்ப்பத்தை ஆபரணமாகப் பூண்ட சிவபெருமானுக்கும் புறம்பு என்று சொல்ல, அச்சிவபெருமானிடத்தும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்தும் கெடாததிருவருளைப் பெற்றுக் கொண்டா ரென்றால் அவ்விறன் மிண்டநாயனாரது பெருமையைக்குறித்து இனியாவர் சொல்ல வல்லவர்கள்.

ஞாலம் உய்ய நாம்உய்ய நம்பி சைவ நன்னெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பாடச் செழுமறைகள்
ஓலம் இடவும் உணர்வியார் "அடியார் உடனாம்உள" தென்றால்
ஆலம் அமுது செய்தபிரான் அடியார் பெருமை அறிந்தாரார்? 9

(இ - ள்.) ஸ்ரீ சுந்தர மூர்த்திசுவாமிகள் உலகத்தார் கடைத்தேறவும், நாமனைவரும் பிழைக்கவும், சிறந்த சைவ சமயத்தின் நல்லொழுக்கங்கள் வளர்ந்தோங்கவும் திருத் தொண்டத் தொகையைப் பாடியருள, (அப்பொழுது இந் நயனார்) சிறந்த வேதங்கள் இத்தன்மையினரென்று முறை யிட்டும் காணுதற்கரியவராகிய சிவபெருமானது அடியார் திருக்கூட்டத்தோடு அவ்விருவரும் உடனாதல் உளதென்று சொன்னால், விஷத்தை அமுதமாகவுண்டருளிய சிவபெருமா னது அடியவராகிய இவ்விறன்மிண்ட நாயனாரது பெருமையை அறிந்தவர்கள் யார் (ஒருவருமில்லை.) - எ - று.

ஒக்க நெடுநாள் இவ்வுலகில் உயர்ந்த சைவப் பெருந்தன்மை
தொக்க நிலைமை நெறிபோற்றித் தொண்டு பெற்ற விறன்மிண்டர்
தக்க வகையால் தம்பெருமான் அருளி னாலே தான்நிழற்கீழ்
மிக்க கணநா யகராகும் தன்மை பெற்று விளங்கினார். 10

(இ - ள்.) யாவரும் மதிக்கும்படி வெகுநாளளவும் இந்நிலவுலகத்தில் உயர்வாகிய சைவசமயத்தின் பெருந்தன்மை யாகிய முதன்மை பொருந்திய ஒழுக்கநெறியைப் பாதுகாத்து, அடியார்களுக்குத் திருத் தொண்டு செய்யும் பேற்றைப் பெற்ற விறன்மிண்ட நாயனார் தகுந்த பத்தி செய்தலாலே தமது பெருமானாகிய பரமசிவனது திருவருளைப் பெற்று அவரது திருவடி நிழலின் கீழே சிறந்த சிவகணங்களுக்குத்தலை வராயிருக்கின்ற மேன்மையைப் பெற்று விளங்கினார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேறு பிறிதென்? திருத்தொண்டத் தொகையால் உலகு விளங்கவரும்
பேறு தனக்குக் காரணராம் பிரானார் விறன்மிண்டரின் பெருமை
கூறும் அளவென் அளவிற்றே? அவர்தாள் சென்னி மேற்கொண்டே
ஆறை வணிகர் அமர்நீதி அன்பர் திருத்தொண் டறைகுவாம். 11

(இ - ள்.) இவரது அன்பின் பெருமையைக் குறித்து வேறு சொல்லுந்திறம்யாது? திருத்தொண்டத் தொகை அருளிச் செய்யுங் காரணத்தினால் உலகத்தார் நற்கதியடையவருகின்ற பெரும்பேற்றிற்குக் காரணராயிருந்த நமது பெருமானாகிய விறன் மிண்ட நாயனாரது பெருமையை அளவு படுத்திக் கூறுந்தன்மை என்னளவினதன்று; ஆதலால் இவ்வடியவரது திருவடிகளை எமது சிரசின்மேல் வைத்துக் கொண்டு, திருப் பழையாறை என்னும் திருப்பதியில் வாழ்ந்திருந்த வணிகர் குலத்தலைவராகிய அமர் நீதிநாயனாருடைய திருத்தொண்டைக் குறித்துச் சொல்லுகின்றோம். - எ - று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. அமர்நீதி நாயனார் புராணம்

சீரின் நீடிய செம்பியர் பொன்னிநன் னாட்டுக்
காரின் மேவிய களிஅளி மலர்ப்பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமைசேர் பதிபழை யாறை. **1**

(இ - ள்.) சிறப்பினால் மிகுந்த சோழராஜக்களுக்குரிய நல்ல காவிரி நாட்டில் மேகமண்டலமளவும் உயர்ந்த களிப்பினை யுடைய வண்டுகள் வாழும் மலர்கள் பொருந்திய சோலைகளால் சூழப்பட்டு, தேர்களோடு கூடிய உயர்ந்த இரத்தினங்கள் இழைக்கப்பட்டிருக்கும் வீதிகளால் சிறப்படைந்து, உலகத்தில் மிகுந்த பெருமை பெற்றுள்ள நகரமானது திருப்பழையாறை என்று சொல்லப்படும்.

மன்னும் அப்பதி வணிகர்தங் குலத்தினில் வந்தார்
பொன்னும் முத்தும்நன் மணிகளும் பூந்துகில் முதலா
எந்நி லத்தினும் உள்ளன வருவளத் தியல்பால்
அந்நி லைக்கண்மிக் கவர்அமர் நீதியார் என்பர். **2**

(இ - ள்.) நிலை பெற்ற அந்தத் திருப்பழையாறை என்னும் நகரத்தில் வைசியார் குலத்தில் திருவவதாரஞ் செய்தவர்; பொன்களும், முத்துக்களும், நல்லரத்தினங்களும், அழகிய வஸ்திரங்களுமாகிய இவை முதலாக எந்தத் தேசங்களின் முள்ளவைகள் வருதற்கேதுவான வியாபாரமுறைமையால், அவ்வியாபாரத் தொழிலில் சிறந்த வராயிருந்தார் அமர் நீதி நாயனாரென்று சொல்லப்பட்டவர். - எ - று.

சிந்தை செய்வது சிவன்கழல் அல்லதொன் றில்லார்;
அந்தி வண்ணர்தம் அடியவர்க் கமுதுசெய் வித்துக்
கந்தை கீளுடை கோவணம் கருத்தறிந் துதவி
வந்த செல்வத்தின் வளத்தினால் வரும்பயன் கொள்வார். **3**

(இ - ள்.) தாம் சதாகாலமும் சிந்தித்திருப்பது சிவபெருமானு டைய திருவடிகளேயல்லாமல் வேறொன்றையும் சிந்தியாதவ ராகிய அவ்வமர்நீதி நாயனார், செவ்வனாம் போலும் நிறத் தினையுடைய சிவபெருமானது அடியார்களுக்குத் திருவமுது படைத்து, கந்தை - கீள் - உடை - கோவணம் இவைகளை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்கள் திருவுள்ளக்குறிப்பறிந்து கொடுத்து, தமக்குண்டாகிய செல்வச்சிறப்பினால் வருகின்ற புண்ணியப் பயனைக் கொள்ளுகின்ற வராயிருந்தார். - எ - று.

முக்கண் நக்கராம் முதல்வனா ரவர்திரு நல்லூர்
மிக்க சீர்வளர் திருவிழா விருப்புடன் வணங்கித்
தக்க அன்பர்கள் அமுதுசெய் திருமடம் சமைத்தார்
தொக்க சுற்றமும் தாமும்வந் தணைந்தனர் தூயோர். 4

(இ-ள்.) திரிநேத்திரங்களையுடை திகம்பரராகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருநல்லூர் என்னும் க்ஷேத்திரத்தில் மிகுந்த சிறப்போடு நடக்கின்ற திருவிழாவைப் பெருவிருப்பத்தோடு போய்த் தரிசனஞ் செய்து அவ்விடத்தில் தகுந்த சிவனடியார்கள் திருவமுது செய்வதற்காக ஒரு சத்திரத்தைக் கட்டி, தம்மோடு கூடிய சுற்றத்தினரும் தாமுமாக அங்குவந்து சேர்ந்தனர், பரிசுத்தராகிய அமர்நீதி நாயனார். - எ - று.

மருவும் அன்பொடு வணங்கினர் மணிகண்டர் நல்லூர்த்
திருவி ழாஅணி சேவித்துத் திருமடத் தடியார்
பெருகும் இன்பமோ டமுதுசெய் திடஅருள் பேணி
உருகு சிந்தையின் மகிழ்ந்துறை நாளிடை ஒருநாள். 5

(இ - ள்.) காளகண்டராகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருநல்லூரில் நடக்கின்ற திருவிழாவின் சிறப்பினைத் தம்மிடத்திற் பொருந்திய பேரன்போடு வணங்கித் துதித்து, தம்மால் கட்டப் பட்டுள்ள திருமடத்தின் சிவனடியார்கள் மிகுந்த ஆசையோடு திருவமுது கொள்ளும்படி அவர்களுடைய திருவருளைப் பெற்றுக் கொண்டு அதனால் கசிந்துருகுகின்ற திருவுள்ளத்தில் சந்தோஷித்து வாழ்கின்ற நாள்களில் ஒரு நாள். எ - று.

பிறைத்த ளிர்சடைப் பெருந்தகைப் பெருந்திரு நல்லூர்க்
கறைக்க ளத்திறை கோவணப் பெருமைமுன் காட்டி
நிறைத்த அன்புடைத் தொண்டர்க்கு நீடருள் கொடுப்பான்
மறைக்கு லத்தொரு பிரமசா ரியின்வடி வாகி. 6

(இ - ள்.) பிறைக் கொழுந்ததையணிந்த சடையினையுடைய உயர்ந்தகுணங்களையுடையவரும், சிறந்த திருநல்லூர் என்னும் க்ஷேத்திரத்தில் வீற்றிருக்கின்ற காள கண்டருமாகிய சிவபெருமான், தமது அடியார்களுக்கு இந்நாயனார் விரும்பிக் கொடுக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோவணத்தினது பெருமையை முதலிலே காண்பித்து, தம்முள்ளத்தில் நிறைந்த பேரன்பினையுடைய அமர்நீதி நாயனாருக்கு மிகுந்த திருவருள் செய்யும் பொருட்டுப் பிராமணர் குலத்தில் தோன்றிய ஒரு பிரமசாரியின் வடிவத்தை யடைந்து. - எ - று.

செய்ய புன்சடை கரந்ததோர் திருமுடிச் சிகையும்
சைவ வெண்டிரு நீற்றுமுண் டகத்தொளித் தழைப்பும்
மெய்யின் வெண்புரி நூலுடன் விளங்குமான் தோலும்
கையில் மன்னிய பவித்திர மரகதக் கதிரும். 7

(இ - ள்.) செந்நிறம் பொருந்திய மிருதுவாகிய சடையை மறைத்திருக்கின்ற திருமுடியின்மேல் குடுமியும், (நெற்றியில்) சைவநெறிக்குரிய திருவெண்ணீற்றினால் விளங்கும் திரிபுண்டரத்தின் பிரகாசமும், திருமேனியில் வெண்மையாகிய முப்புரிநூலோடு பொருந்தி விளங்குகின்ற மான்தோலும், திருக்கரத்தின் விரலில் பொருந்திய பவித்திரத்தினது மரகதரத்தினத்தின் ஒளியும். - எ - று.

முஞ்சி நாணுற முடிந்தது சாத்திய அரையில்
தஞ்ச மாமறைக் கோவண ஆடையின் அசைவும்
வஞ்ச வல்வினைக் கறுப்பறும் மனத்தடி யார்கள்
நெஞ்சில் நீங்கிடா அடிமலர் நீணிலம் பொலிய. 8

(இ - ள்.) முஞ்சி என்னுந் தருப்பையை நாணாக முடிந்து அதனைக் கட்டியிருக்கின்ற திருவரையில் யாவருக்கும் ஆதரவாகவுள்ள சிறந்த வேதமாகிய கோவணத்தின் அசைவும் வஞ்சமாகிய வலியதீவினையின் களங்கத்தையறுத்த மனத்தினையுடைய அடியார்களின் திருவுள்ளத்தினின்றும் எக்காலத்தும் நீங்காத திருவடித் தாமரைகள் நீண்ட நிலத்தில் பொருந்திவிளங்க. எ-று.

கண்ட வர்க்குறு காதலின் மனங்கரைந் துருகத்
தொண்டர் அன்பெனுந் தூநெறி வெளிப்படுப் பாராய்த்
தண்டின் மீதிரு கோவண நீற்றுப்பை தருப்பை
கொண்டு வந்(து) அமர் நீதியார் திருமடம் குறுக. 9

(இ - ள்.) தமது திருவுருவத்தைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த ஆசையினாலே அவர்கள் மனமானது கரைந்து உருகும்படி அமர்நீதிநாயனாரது அன்பென்று சொல்லப்பட்ட பரிசுத்தம் பொருந்திய நல்ல நெறியை (உலகத்தில் யாவரும் அறிந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடைத்தேறும் பொருட்டு) வெளிப்படுத்தும் திருவுள்ளமுடைய வராய், தமது கையில் பிடித்து வந்த பலாசத்தண்டின்மேல் இரண்டு கோவணத்தையும், திரு நீற்றுப்பையையும், தருப்பையை யும் கட்டிக் கொண்டு எழுந்தருளி வந்து அமர்நீதி நாயனார் வாழுகின்ற திருமடத்தையடைய. எ - று.

வடிவு காண்டலும் மனத்தினும் மிகமுக மலர்ந்து
கடிது வந்தெதிர் வணங்கி "இம் மடத்தினிற் காணும்
படியி லாதநீர் அணையமுன் பயில்தவம் என்னோ
அடிய னேன்செய்த(து)?" என்றனர் அமர்நீதி அன்பர். 10

(இ - ள்.) அமர்நீதிநாயனார் சிவபெருமானாகிய பிரமசாரி யின் திருவுருவத்தைக் கண்டவுடனே மனதைப் பார்க்கிலும் முகமானது மிகவும் மலர்ச்சியை யடைந்து விரைவாக வந்து அவருக் கெதிரே வந்தனஞ் செய்து இத்திருமடத்தில் இது வரையிலும் காணும் படியாக வராத தேவரீர் இப்பொழுது எழுந்தருள அடியேன் பூர்வத்தில் செய்து பழகியதவம் யாதோ? என்று சொன்னார். - எ - று.

பேணும் அன்பரை நோக்கி "நீர்பெருகிய அடியார்க்(கு)
ஊணும் மேன்மையில் ஊட்டிநற் கந்தைகீழ் உடைகள்
யாணர் வெண்கிழிக் கோவணம் ஈதல்கேட் டும்மைக்
காண வந்தனம்" என்றனன் கண்ணுதற் கரந்தோன். 11

(இ - ள்.) நெற்றிக்கண்ணை மறைத்துப் பிரமசாரியின் திருவுருவங்கொண்டு வந்த சிவபெருமான் தம்மை உபசரித்து வணங்கிய அமர்நீதி நாயனாரைப் பார்த்து (அன்பரே!) நீர் திரண்டு வருகின்ற அடியார்களுக்குத் திருவமுதைச் சிறப்பாக உண்பித்து, நல்ல கந்தையும் - கீளும் - உடையுமாகிய இவை களுடன் துண்டாகக் கிழிக்கப்பட்டிருக்கின்ற வெண்மையாகிய அழகியகோவணமும் கொடுப்பதைக் கேள்விப்பட்டு உம்மைப் பார்க்க வந்தோமென்று சொன்னார். - எ - று.

என்று தம்பிரான் அருள்செய "இத்திரு மடத்தே
நன்று நான்மறை நற்றவா அமுதுசெய் தருளத்
துன்று வேதியர் தூய்மையின் அமைப்பதும் உளதால்
இன்று நீரும்இங் கமுதுசெய் தருளும்" என் றிறைஞ்ச. 12

(இ - ள்.) இவ்விதமாகச் சிவபெருமானாகிய பிரமசாரியர் அருளிச்செய்ய (அப்பொழுது அமர்நீதிநாயனார் அவரைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்த்து சுவாமி!) இந்தத் திருமடத்தில் நன்மை பொருந்திய நான்கு வேதங்களையு முணர்ந்த பெருந்வத்தினையுடைய பிராமணர்கள் போசனஞ் செய்யும் படி பெருமை பொருந்திய வேதியர்கள் பரிசுத்தமாகச் சமைக்குந் திருவமுதும் இருக்கின் றது; (ஆதலால்) இன்றைக்குத் தேவரீரும் இத்திருமடத்தில் திருவமுது செய்தருளுமென்று வணங்க. - எ - று.

வணங்கும் அன்பரை நோக்கிஅம் மறையவர் இசைந்தே
அணங்கு நீர்ப்பொன்னி ஆடிநான் வரமழை வரினும்
உணங்கு கோவணம் வைத்துநீர் தாரும் "என் றொருவெண்
குணங்கொள் கோவணம் தண்டினில் அவிழ்த்தது கொடுப்பார். 13

(இ - ள்.) இவ்விடத்தில் திருவமுது செய்தருள வேண்டு மென்று தம்மை வணங்கிய அமர்நீதி நாயனாரைப் பார்த்து அந்தச் சிவபெருமானாகிய வேதியர் அதற்குச் சம்மதித்து, தெய்வத் தன்மை பொருந்திய நீரையுடைய காவிரி நதியில் ஸ்நானஞ் செய்து நான் வர மழை பெய்தாலும் (அப்பொழுதும் வருத்தமின்றித் தரித்துக் கொள்வதற்கு) உலர்ந்திருக்கின்ற இந்தக் கோவணத்தைப் பத்திரப்படுத்திவைத்திருந்து நீர்தாரும் என்று (பலாசத்தண்டில் கட்டியிருந்த இரண்டு கோவணத்துள்) ஒருவெண்ணிறத்தையுடைய கோவணத்தை அத்தண்டினின்றும் அவிழ்த்துக் கொடுப்பாராயினார். - எ - று.

"ஓங்கு கோவணப் பெருமையை உள்ளவா றுமக்கே
ஈங்கு நான்சொல வேண்டுவ தில்லை! நீர்இதனை
வாங்கி நான்வரும் அளவும்உம் மிடத்திக ழாதே
ஆங்கு வைத்துநீர் தாரும்" என் றவர்கையிற் கொடுத்தார். 14

(இ - ள்.) உயர்வாகிய இந்தக் கோவணத்தின் பெருமையைக் குறித்து உண்மையாக இப்படிப்பட்ட தென்று உமக்கு இவ் விடத்தில் நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை! (உமக்கே தெரியும்.) நீர் இக்கோவணத்தை வாங்கிக்கொண்டு நான் ஸ்நானஞ் செய்து வருகிறவரைக்கும் உம்மிடத்தில் இது அற்ப மென்று அலட்சியஞ் செய்யாமல் பத்திரப்படுத்திவைத்திருந்து நீர்கொடும் என்று சொல்லி அவ்வமர் நீதி நாயனார் கையில் கொடுத்தார். - எ - று.

கொடுத்த கோவணங் கைக்கொண்டு கோதிலா அன்பர்
"கடுப்பில் இங்கெழுந் தருளுநீர் குளித்"தெனக் கங்கை
மடுத்த தும்பிய வளர்சடை மறைத்தஅம் மறையோர்
அடுத்த தெண்டிரைப் பொன்னிநீர் ஆடவென் றகன்றார். 15

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) சிவபெருமானால் கொடுக்கப்பட்ட கோணவத்தைக்குற்றமற்ற அமர் நீதிநாயனார் கையில் வாங்கிக் கொண்டு, தேவரீர் ஸ்நானஞ்செய்து விரைவில் இவ்விடத்தில் எழுந்தருள வேண்டு மென்று சொல்ல, கங்கை நீரானது ததும்புகின்ற நீண்ட சடையினை மறைத்து வந்த சிவபெருமானாகிய அம்மறையவர் அத்திரு நல்லூருக்குச் சமீபத்திலிருக்கின்ற தெளிவாகிய அலைகளையுடைய காவிரிநீரில் ஸ்நானஞ் செய்வதற்குச் சென்றார். - எ - று.

தந்த கோவணம் வாங்கிய தனிப்பெருந் தொண்டர்
முந்தை அந்தணர் மொழிகொண்டு முன்புதாம் கொடுக்கும்
கந்தை கீளுடை கோவணம் அன்றியோர் காப்புச்
சிந்தை செய்துவே றிடத்தொரு சேமத்தின் வைத்தார். 16

(இ - ள்.) சிவபெருமானாகிய வேதியர் கொடுத்த கோவணத்தை வாங்கிக் கொண்ட ஒப்பற்ற பெருந்தொண்டராகிய அமர்நீதி நாயனார் அவ்வேதியர் முன்பு சொல்லிய வார்த்தையை உறுதியாகக்கொண்டு, முன்னே தாம் அடியார்களுக்குக் கொடுக்கின்ற கந்தையும் - கீளும் - உடையும் - கோவணமுமாகிய இவைகளை வைத்திருக்கும் இடமல்லாமல் ஒரு காவலான இடத்தைச் சிந்தித்துச் சேமமாகிய ஒரு தனியிடத்தில் வைத்தார். - எ - று.

போன வேதியர் வைத்தகோ வணத்தினைப் போக்கிப்
பான லந்துறைப் பொன்னிநீர் படிந்துவந் தாரோ?
தூந றுஞ்சடைக் கங்கைநீர் தோய்ந்துவந் தாரோ?
வான நீர்மழை பொழிந்திட நனைந்துவந் தணைந்தார். 17

(இ - ள்.) காவிரி நதியில் நீராடுதற்குப் போன அப்பிராமணரானவர் அமர்நீதி நாயனார் தாம் பத்திரப்படுத்தி வைத்திருந்த கோவணத்தினை அவ்விடத்தினின்று மறைந்து போகும்படி செய்து, குவளைமலர்கள் மலர்ந்திருக்கின்ற துறையினையுடைய காவிரி நீரில் ஸ்நானஞ்செய்து வந்தாரோ! அல்லது பரிசுத்தம் பொருந்திய அழகிய சடையிலுள்ள கங்கை நீரில் ஸ்நானஞ் செய்து வந்தாரோ! (அறியோம்;) மேகமானது மழைபொழிந்து கொண்டிருக்க அதில் நனைந்து கொண்டு அமர்நீதி நாயனாரது திருமடத்தில் வந்துசேர்ந்தார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கதிர்இ ளம்பிறைக் கண்ணியர் நண்ணிய பொழுதில்
முதிரும் அன்புடைத் தொண்டர்தாம் முறைமையின் முன்னே
அதிக நன்மையின் அறுசுவைத் திருவமு தாக்கி
எதிரெ ழுந்துசென் றிறைஞ்சிட நிறைந்தநூல் மார்பர். 18

(இ - ள்.) கிரணங்களையுடைய இளம்பிறையைக் கொண்டை மாலையாகத் தரித்த சிவபெருமானாகிய வேதியர் திருமடத்திற்கு வந்தபொழுது முதிர்ந்த அன்பினையுடைய அமர்நீதி நாயனார் அதற்கு முன்னமே கிரமப்படி மிகுந்த பக்குவமாக அறுவகைச் சுவைகளோடு கூடிய திருவமுதைச் சமைத்து அவருக்கெதிரே எழுந்து போய்த் திருவடிகளில் வணங்க, விளங்குகின்ற முப்புரி நூலினையணிந்த மார்பினை யுடைய அப்பிரமசாரியாகிய கடவுளானவர். - எ - று.

தொண்டர் அன்பெனும் தூயநீர் ஆடுதல் வேண்டி
"மண்டு தண்புனல் மூழ்கிய ஈரத்தை மாற்றத்
தண்டின் மேலதும் ஈரம், நான் தந்தகோ வணத்தைக்
கொண்டு வாரும்" என் றுரைத்தனர்; கோவணக் கள்வர். 19

(இ - ள்.) தொண்டராகிய அமர்நீதி நாயனாரது அன்பென்று சொல்லப்பட்ட பரிசுத்தம் பொருந்திய நீரில் முழுகத்திருவுள்ளங் கொண்டு விசையாகப் போகின்ற குளிர்ச்சியாகிய நீரில் மூழ்கியதனால் உண்டாகிய ஈரத்தை நீக்கிக் கொள்ள (அந்நாயனாரைப் பார்த்து அன்பரே!) இப்பலாசத்தண்டின்மேல் கட்டியிருக்கின்ற கோவணமானது ஈரமாயிருக்கின்றது ஆதலால் நான் உம்மிடத்தில் முன்பு கொடுத்துவிட்டுப் போன கோவணத்தைக் கொண்டு வாரும் என்று சொன்னார்; அவர் வைத்த கோவணத்தை வேறிடத்துச் செல்லும்படி மறைத்த கள்வராகிய சிவபெருமான். - எ - று.

ஐயர் கைதவம் அறிவுறா தவர்கடி தணுக
எய்தி நோக்குறக் கோவணம் இருந்தவே றிடத்தில்
மையில் சிந்தையர் கண்டிலர்; "வைத்தகோ வணம்முன்
செய்த தென்" என்று திகைத்தனர்; தேடுவா ரானார். 20

(இ - ள்.) கோவணங் காணாமற்போக மறைத்தருளிய சிவபெருமானாகிய அப்பிரமசாரியின் வஞ்சகத்தையறியாமல் களங்கமற்ற திருவுள்ளத்தையுடைய அமர்நீதி நாயனார் அதனைக் கொண்டு வரும்படி விசையாகச் சென்றுபார்க்க,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்கோவணம் வைத்திருந்த தனி இடத்தில் அதனைக் காணாமல் முன்பு நாம்வைத்த கோவணம் எவ்வாறு போய் விட்டதென்று மனந் திகைத்து தேடத்தொடங்கினார். - எ - று.

"பொங்கு வெண்கிழிக் கோவணம் போயின நெறிமேல்
சங்கை இன்றியே தப்பின" தென்றுதம் சரக்கில்
எங்கு நாடியும் கண்டிலர்; என்செய்வார்? நின்றார்;
அங்கண் வேதியர் பெருந்தொடக் கினில்அகப் பட்டார். 21

(இ - ள்.) பிரகாசத்தையுடைய வெண்மை பொருந்திய துண்டாகிய இந்தக் கோவணமானது போனவழியை மேல் கருதுமிடத்துச் சந்தேகமில்லாமல் தப்பிப் போய்விட்டதென்று, தான் தருமத்தின் பொருட்டு வைத்திருக்கின்ற எல்லாச் சரக்கு களிலும் தேடிப்பார்த்துங் காணதவராய் நின்றார்; அழகிய கண்ணாளராகிய அப்பிராமணரது பெரியவிவாதமாகிய வலையில் அகப்பட்டார்; என்னசெய்வார். எ - று.

மனைவி யாரொடு மன்னிய கிளைஞரும் தாமும்
இனைய தொன்றுவந் தெய்திய தெனஇடர் கூர்ந்து
நினைவ தொன்றிலர் வருந்தினர்; நிற்கவும் மாட்டார்;
புனைய வேறொரு கோவணங் கொடுபுறப் பட்டார். 22

(இ - ள்.) அந்நாயனார் தமது மனைவியாரோடு நிலைபெற்ற சுற்றத்தாரும் தாமுமாக இதுவரையிலும் வராத இப்படிப்பட்ட பொல்லாங்கு ஒன்று வந்து சம்பவித்ததே என்று மனவருத்த முற்று தாம் அதனை நீக்குவதற்கு வேறொன்றையும் நினையாமல் வருத்தப்பட்டு அவ்விடத்தில் தரித்துநிற்காமல் அப்பிராமணர் தரித்துக் கொள்ளும் பொருட்டு வேறொரு கோவணத்தை எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டார். - எ - று.

அத்தர் முன்புசென்(று) "அடிகள்!நீர் தந்தகோ வணத்தை
வைத்தி டத்துநான் கண்டிலன்; மற்றுமோ ரிடத்தில்
உய்த்தொ ளித்தனர் இல்லை; அஃதொழிந்தவா றறியேன்;
இத்த கைத்தவே றதிசயம் கண்டிலேன்" என்று. 23

(இ - ள்.) அமர்நீதிநாயனார் சிவபெருமானாகிய பிரமசாரி யின் முன்னே சென்று எமது ஆண்டவரே! தேவரீர் அடியே னிடத்திற் கொடுத்த கோவணத்தைச் சேமமாக வைத்திருந்த இடத்தில் நான் காணவில்லை; அதனை வேறோரிடத்தில் கொண்டு போய் ஒளித்துவைத்தவர்களும் இல்லை; அது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காணாமல் போன விதத்தை அறியவல்லவனல்லேன்; இப்படிப் பட்டதாகிய வேறு அதிசயத்தை அடியேன் எங்கும் பார்த்த தில்லை யென்று சொல்லி. - எ - று.

வேறு நல்லதோர் கோவணம் விரும்பிமுன் கொணர்ந்தேன்;
கீறு கோவணம் அன்று; நெய் தமைத்தது; கிளர்கொள்
நீறு சாத்திய நெற்றியீர்! மற்றது களைந்து
மாறு சாத்திஎன் பிழைபொறுப் பீர்"என வணங்க. 24

(இ - ள்.) வேறே ஒரு நல்ல கோவணத்தை ஆசையோடு தேவரீரது சந்நிதியில் கொடுக்கக் கொண்டு வந்தேன்; இது ஒரு வஸ்திரத்திலிருந்து கிழித்த கோவணமன்று; இயல் பாகவே கோவணமாக நெய்யப்பட்டிருப்பது; ஆதலால், பிரகாசம் பொருந்திய விபூதியையணிந்த நெற்றியையுடைய சுவாமீ! ஈரமாயிருக்கின்ற அந்தக் கோவணத்தைக் களைந்து அதற்கு மாற்றாக இந்தக் கோவணத்தைத் தரித்து அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருள் வீராக வென்று வணங்க. - எ - று.

நின்ற வேதியர் வெகுண்(டு) "அமர்நீதியார்! நிலைமை
நன்று! சாலவும் நாளிடை கழிந்ததும் அன்றால்;
இன்று நான்வைத்த கோவணங் கொண்டதற் கெதிர்வே(று)
ஒன்று கொள்கென உரைப்பதே நீர்?" என உரையா. 25

(இ - ள்.) அவ்விடத்தில் நின்ற சிவபெருமானாகிய பிராமணர் அந்தவார்த்தையைக் கேட்டு அதிககோபங் கொண்டு, அமர்நீதியாரே! உம்முடைய தருமத்தில் நிலைமை யானது மிகவும் நன்றாயிருக்கின்றது; நான் கொடுத்து ஒரு நாளாவது இடையில் கழியவுமில்லை; இன்றையத் தினத்திலே நான் உம்மிடத்தில் வைத்துவிட்டுப் போன கோவணத்தை அபகரித்துக் கொண்டு அதற்குப் பதிலாக வேறொரு கோவணத் தைக் கொண்டு வந்து இதை வாங்கிக் கொள்ளுமென்று நீர் சொல்லலாமா? என்று சொல்லி. எ-று.

"நல்ல கோவணம் கொடுப்பன்என் றுலகின்மேல் நாளும்
சொல்லு வித்ததென் கோவணம் கொள்வது துணிந்தோ?
ஒல்லை ஈங்குறு வாணிபம் அழகிதே உமக்கு!" என்(று)
எல்லை இல்லவன் எரிதுள்ளி னால்என வெகுண்டான். 26

(இ - ள்.) நீர் சிவனடியார்களுக்கு நல்ல கோவணங்களைக் கொடுப்பேனென்று உலகத்தில் நாள்தோறும் பறைசாற்றித்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெரிவித்தது என்னுடைய கோவணத்தை மோசமாக அபகரித்துக் கொள்வதற்காகவோ? விரைவாக இங்கே நீர் செய்யும் வர்த்தகம் உமக்கே அழகாயிருக்கின்றதென்று சொல்லி, அளவில்லாத அருட் பெருங்கடலாகிய சிவபெருமான் நெருப்பானது ஓரிடத்தினின்றும் விரைவாகத் தாவிவீசியது போலக் கோபித்தார். - எ - று.

மறிக ரந்துதண் டேந்திய மறையவர் வெகுளப்
பொறிக லங்கிய உணர்வின ராய்முகம் புலர்ந்து
சிறிய என்பெரும் பிழைபொறுத் தருள்வீர்! அடியேன்
அறிய வந்ததொன் றன்" றென அடிபணிந் தயர்வார். 27

(இ - ள்.) திருக்கரத்தில் மானை மறைத்துப் பலாசத் தண்டினைப் பிடித்துவந்த சிவபெருமானாகிய பிராமணர் இவ்வாறு கோபங் கொள்ளவும் (அமர்நீதி நாயனார்) ஐம்பொறி களுங் கலங்கிய உணர்வினையுடையவராய் முகம்வாடி (சுவாமி!) சிறியேனாகிய அடியேன் செய்த பெரிய குற்றத்தைப் பொறுத் தருளுவீர்; இப்பிழை அடியேன் அறிந்து செய்ததன்று, என்று சொல்லி அவரது திருவடிகளில் வணங்கிவிசனப்பட்டார். எ-று.

'செய்தத கும்பணி செய்வன; இக் கோவணம் அன்றி
நயத்த குந்தன நல்லபட் டாடைகள் மணிகள்
உயர்த்த கோடிகொண்ட ருளும்என் றுடம்பினில் அடங்காப்
பயத்தொ டுங்குலைந் தடிமிசைப் பலமுறை பணிந்தார். 28

(இ - ள்.) (இப்பிழைக்குப் பரிகாரமாகத்) தேவரீருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளெல்லாஞ் செய்கின்றேன்; இந்தக் கோவணமல்லாமல், யாவரும் விரும்பத்தகுந்த திரவியங் களும் - நல்லபட்டாடைகளும் பலவகை இரத்தினங்களுமாகிய இவைகளுள் மேன்மையாக அநேகம் பெற்றுக் கொண்டு அடியேனுக்குக் கிருபை செய்வீரென்று தமதுடம்பி லடங்காத அச்சத்தோடும் நடுநடுங்கி அவரது திருவடிகளில் பலமுறை விழுந்து வணங்கினார். - எ - று.

பணியும் அன்பரை நோக்கிஅப் பரம்பொரு ளானார்
தணியும் உள்ளத்த ராயினார் போன்று "நீர்தந்த
மணியும் பொன்னும்நல் ஆடையும் மற்றும்என் செய்ய? 29
அணியும் கோவணம் நேர்தர அமையும்" என்றருள.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) எல்லாப் பொருள்களுக்கும் மேலாகிய பொருளா யுள்ள சிவபெருமான் தம்மை வணங்கி நிற்கின்ற அமர்நீதி நாயனாரைப் பார்த்துக் கோபந்தணிந்த திருவுள்ளத்தினை யுடையவர் போலத் தோன்றி (அன்பரே! நீர் தருவதாகச் சொல்லிய இரத்தினங்களும், பொன்னும், நல்ல பட்டாடை களும், மற்றைய பொருள்களும் எமக்கு என்ன பிரயோசனத்தைக் காகவேண்டும்; நான் தரித்துக் கொள்வதற்கு உபயோகமாயிருந்த கோவணத்திற்கு இடையாக இருக்க ஒரு கோவணங் கொடுத் தால் அதுவே எமக்குப் போதுமென்று அருளிச்செய்ய. எ - று.

மலர்ந்த சிந்தைய ராகிய வணிகரே றனையார்
"அலர்ந்த வெண்ணிறக் கோவணம் அதற்குநே ராக
இலங்கு பூந்துகில் கொள்வதற் கிசைந்தருள் செய்யீர்;
நலங்கொள் கோவணம் தரும்பரி சியா"தென நம்பர். **30**

(இ - ள்.) (இவ்வாறு சொல்லிய சிவபெருமனாகிய வேதியரது வார்த்தையால்) மகிழ்ந்த மனத்தினையுடைய சிறந்தவர்த்தகராகிய அமர்நீதி நாயனார் பிரகாசம் பொருந்திய வெண்ணிறத்தையுடைய கோவணத்தின் இடைக்கு ஒத்திருக்க விளங்குகின்ற அழகிய பட்டாடை முதலியவற்றை வாங்கிக் கொள்வதற்குச் சம்மதித்துக் கிருபைசெய்யாதிருக்கிறீர்; ஆனால், நன்மையாகிய அந்தக் கோவணத்தின் இடைக்கு வேறு கோவணங் கொடுக்க எந்தக் கோவணத்தை இடையாக வைத்துக் கொடுக்க வேண்டியதென்று கேட்க, அதற்குச் சிவபெருமா னாகிய வேதியர் சொல்லுகின்றார். - எ - று.

"உடுத்த கோவணம் ஒழியநாம் உங்கையில் தரநீர்
கெடுத்த தாகமுன் சொல்லும்அக் கிழித்தகோ வணநேர்
அடுத்த கோவணம்இது" என்று தண்டினில் அவிழா
எடுத்து "மற்றிதன் எடையிடும் கோவணம்" என்றார். **31**

(இ - ள்.) நான் தரித்துக் கொண்டிருக்கிற கோவணமல் லாமல் நாம் உம்முடையகையில் நீராடுதற்குமுன் கொடுக்க நீர் போக்கடித்ததாகச் சொல்லுகிற அந்தக்கிழித்த கோவணத்தின் நிறைக்குச் சரியான நிறையுள்ள கோவணம் இதுவாகுமென்று தமதுகையிலுள்ள பலாசத்தண்டினின்றும் அவிழ்த்து எடுத்து, இந்தக் கோவணத்திற்குச் சரியான நிறையுள்ளதாக ஒரு கோவணத்தை நிறுத்துக் கொடுமென்று சொல்லியருளினார். - எ - று.

"நன்று சால!" என் றன்பரும் ஒருதுலை நாட்டக்
குன்ற வில்லியார் கோவணம் ஒருதட்டில் இட்டார்;
நின்ற தொண்டருங் கையினில் நெய்தகோ வணந்தட்(டு)
ஒன்றி லேஇட நிறைநிலா தொழிந்தமை கண்டார். 32

(இ - ள்.) இது மிகவும் நல்லதென்று அமர்நீதிநாயனார் ஒரு பெரிய தராசைக் கொண்டு வந்து நாட்ட (அப்பொழுது) மேருமலையை வில்லாகவுடைய சிவபெருமான் தாம் பலாசத்தண்டினின்றும் அவிழ்த்த கோவணத்தை அத்தராசின் ஒரு தட்டில்வைத்தார்; அதைப் பார்த்துநின்ற அமர் நீதி நாயனாரும் தம்முடைய கையிலே கொண்டு வந்த நெய்யப்பட்டுள்ள ஒரு கோவணத்தை மற்றொரு தட்டிலே வைக்க அது சிவபெருமானுடைய கோவணத்திற்கு நிறையில் ஒத்து நில்லாமல் மேலெழுந்ததைப் பார்த்தார். - எ - று.

நாடும் அன்பொடு நாயன்மார்க் களிக்கமுன் வைத்த
நீடு கோவணம் அடையநே ராகவொன் றொன்றாக்
கோடு தட்டின்மீ திடஇடக் கொண்டெழுந் ததுகண்(டு)
ஆடு சேவடிக் கடியரும் அற்புதம் எய்தி. 33

(இ - ள்.) மிகுந்த அன்போடு சிவனடியார்களுக்குக் கொடுக்கத் தாம் முன்னே வைத்திருந்த நீண்ட கோவணங்களை எல்லாம் நிறைக்கு ஒத்திருக்கும் படி ஒன்றொன்றாக மேலெழுந்த தட்டின் மேலே இட இட அக் கோவணங்களை யெல்லாம் தாங்கிக் கொண்டு மேலே எழுந்ததைப் பார்த்து, பொன்னம் பலத்தில் திரு நடனஞ் செய்தருளுகின்ற திருவடிகளுக்கு அன்பு பூண்டொழுகுகின்ற அமர்நீதி நாயனாரும் ஆச்சரியப்பட்டு. எ-று

"உலகில் இல்லதோர் மாயை!இக் கோவணம் ஒன்றுக்(கு)
அலகில் கோவணம் ஒத்தில!" என்றதி சயித்துப்
பலவும் மென்துகில் பட்டுடன் இடஇட உயர
இலகு பூந்துகிற் பொதிகளை எடுத்துமேல் இட்டார். 34

(இ - ள்.) இது உலகத்தில் இந்நாள் வரையிலும் நடந்திராத தாகிய ஒரு மாயையாக இருக்கின்றது; இந்த ஒரு கோவணத் திற்கு எண்ணிறந்த கோவணங்கள் நிறையினால் ஒத்திருக்க வில்லையென்று ஆச்சரியமடைந்து, பட்டாடைகளோடு மிருதுவாகிய பலவஸ்திரங்களையும், அத்தட்டில் ஒன்றின் மேல் ஒன்றாக இடுந்தோறும் தட்டு உயர்ந்து மேற்செல்ல, விளங்கு கின்ற அழகிய வஸ்திரப் பொதிகளை எடுத்துக் கொண்டு வந்து முன்போட்டிருக்கின்ற ஆடைகளின்மேல் வைத்தார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முட்டில் அன்பர்தம் அன்பிடுந் தட்டுக்கு முதல்வர்
மட்டு நின்றதட் டருளொடும் தாழ்வுறும் வழக்கால்
பட்டொ டுந்துகில் அநேககோ டிகளிடும் பத்தர்
தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத் தட்டு. **35**

(இ - ள்.) அன்பினை இடுவதான குறைபாடில்லாத அடியார்களுடைய நிலைமையென்னுந் தட்டுக்குச் சிவபெருமானிடத்து நின்ற அருட்குணமென்னுந் தட்டானது அருளோடு தாழ்கின்ற முறைமையினால், பட்டாடைகளோடு அநகேகோடி வஸ்திரங்களையும் அதன்மேல் கொண்டு வந்து வைக்குந் தோறும் அமர்நீதி நாயனாருடைய தட்டானது முன்போல மேல் எழும், சிவபெருமானுடைய கோவணத்தட்டானது கீழே தாழ்ந்தது. - எ - று.

ஆன தன்மைகண் டடியவர் அஞ்சிஅந் தணர்முன்
"தூந றுந்துகில் வர்க்கநூல் வர்க்கமே முதலா
மானம் இல்லன குவிக்கவும் தட்டின்மட் டிதுவால்;
ஏனை என்தனம் இடப்பெற வேண்டும்" என் றிறைஞ்ச. **36**

(இ - ள்.) இவ்விதமாக இருக்குந் தன்மையைக் கண்டு, அமர்நீதி நாயனார் அச்சப்பட்டு அவ்வேதியருக்கு முன்னே வந்து, பரிசுத்தம் பொருந்திய நல்ல ஆடைப் பொதிகளும் நூற்கட்டுகளும் முதலாக எண்ணிறந்த பொதிகளைக் குவிக்கவும் சரிவராமல் தட்டின் அளவு மேலாகவேயிருக்கின்றது; இன்னும் இவையல்லாமல் அடியேனுக்கிருக்கின்ற பொன்மணி முதலிய தனங்களையும் இத்தட்டில் இடும் படியாகத் தேவரீரது கட்டளையைப் பெற வேண்டு மென்று வணங்கி நிற்க. - எ - று.

மங்கை பாகராம் மறையவர் மற்றதற் கிசைந்தே
"இங்கு நாம்இனி வேறொன்று சொல்லுவ தென்கொல்?
அங்கு மற்றுங்கள் தனங்களி னாகிலும் இடுவீர்;
எங்கள் கோவணம் நேர்நிற்க வேண்டுவ" தென்றார். **37**

(இ - ள்.) உமாதேவியாரை இடப்பாகத்திலேயுடைய சிவபெருமானகிய பிராமணர் அமர்நீதி நாயனார் சொல்லிய வார்த்தைக்குச் சம்மதப்பட்டு இப்பொழுது உம்முடைய வார்த்தைக்கு எதிராக நாம் வேறொன்றைச் சொல்லுவதனால் பிரயோசனம் என்ன? (ஒன்றுமில்லை;) அந்தத்தட்டு நிறை நிற்கும்படி உங்கள் திரவியங்களையாவது இட்டு நிறை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒத்திருக்கச் செய்வீர்; எம்முடைய கோவணமானது எவ்வித்த திலாயினும் நிறையில் ஒத்திருக்க வேண்டியதே என்று அருளிச் செய்தார். - எ - று.

நல்ல பொன்னொடும் வெள்ளியும் நவமணித் திரளும்
பல்வ கைத்திறத் துலோகமும் புணர்ச்சிகள் பலவும்
எல்லை யில்பொருள் சுமந்தவர் இடஇடக் கொண்டே
மல்கு தட்டுமீ தெழுந்தது வியந்தனர் மண்ணோர். 38

(இ - ள்.) மாற்று உயர்ந்த பொன் கட்டிகளோடு வெள்ளிக் கட்டிகளும், நவரத்தினக்குவியல்களும், இன்னும் பலவகைப் பட்ட தாம்பிரமுதலிய உலோகக் கட்டிகளும் அவற்றைக் கலந்த வெண்கலமுதலியனவுமாகிய அளவில்லாத பொருள்களைச் சுமந்து கொண்டு வந்து அமர்நீதி நாயனார் அத்தட்டில் வைக்குந் தோறும் அப்பொருள்களையெல்லாம் தாங்கிக்கொண்டு சிறப்புப் பொருந்திய அத்தராசுத்தட்டு மேலே எழுந்தபடியே யிருந்தது; இதைக் கண்ட உலகத்திலுள்ளவர்கள் ஆச்சரிய மடைந்தார்கள். - எ - று.

தவநி றைந்தநான் மறைப்பொருள் நூல்களாற் சமைந்த
சிவன்வி ரும்பிய கோவண மிடுஞ்செழுந் தட்டுக்(கு)
அவனி மேலமர் நீதியார் தனமெலாம் அன்றிப்
புவனம் யாவையும் நேர்நிலா என்பது புகழோ? 39

(இ - ள்.) மிகுந்த மேன்மை பொருந்திய நான்கு வேதங்களின் பொருள் வடிவான நூல்களினால் அமைந்திருக்கின்ற சிவபெருமானால் விரும்பப்பட்ட கோவணத்தை இடப்பட்ட சிறந்த தட்டுக்கு இந்நிலவுலகத்தில் அமர்நீதி நாயனாருடைய திரவியங்களெல்லாம் அல்லாமல், எல்லா வுலகங்களையும் (எடுத்து) வைத்தாலும் அவைகள் நிறை ஒத்து நிற்கமாட்டா வென்று சொல்வது ஒரு புகழ்ச்சியாகுமோ? (ஆகாது). எ - று.

நிலைமை மற்றது நோக்கிய நிகரிலார் நேர்நின்(று)
உலைவில் பஃறன மொன்றொழி யாமைஉய்த் தொழிந்தேன்;
தலைவ! யானும்என் மனைவியும் சிறுவனும் தகுமேல்
துலையில் ஏறிடப் பெறுவதுன் அருள்எனத் தொழுதார். 40

(இ - ள்.) (இவ்வாறு தமது பொருள்கள் அனைத்தையும் இட்டும் நிறை ஒவ்வாது இருக்கின்ற) இந்நிலைமையைப் பார்த்த ஒப்பில்லாத அன்பினையுடைய அமர்நீதி நாயனார் சிவபெருமானாகிய வேதியருக்கு முன்னே நின்று, எமது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலைவரே! கெடுதலில்லாத பல திரவியங்களையும் ஒன்றுமில்லாமல் தட்டில் இட்டு விட்டேன்; அடியேனும், எனது மனைவியும், எனது புத்திரனும் நிறைக்கு உரிய பொருளாகத் தேவரீர் திருவுள்ளத்துக் கொப்பாயிருந்தால் அப்படியே தராசுத்தட்டில் ஏறி நிறை ஒத்துக்கொடுக்க உமது கட்டளையைப் பெற வேண்டுமென்று வணங்கினார். - எ - று.

பொச்ச மில்லடி மைத்திறம் புரிந்தவர் எதிர்நின்(று)
அச்ச முன்புற உரைத்தலும், அங்கணர் அருளால்
நிச்ச யித்தவர் நிலையினைத் துலையெனுஞ் சலத்தால்
இச்ச ழக்கினின் றேற்றுவார் ஏறுதற் கிசைந்தார். **41**

(இ - ள்.) உண்மையாகிய அடிமைத்திறஞ் செய்த அமர்நீதி நாயனார் தமக்கு எதிரே நின்று மனதில் அச்சத்தோடு இவ்வாறு சொன்னவுடனே சிவபெருமான் திருவருளினால் இவர் தொண்டிற் சிறந்தவரென்று நிச்சியித்து, அவ்வமர் நீதிநாயனாரது அன்பின் நிலைமையைத் துலாகக் கோல் கொண்டு நிறுத்தலென்னும் ஓர்வியாசத்தினால், இவ்வுலக வாழ்க்கையாகிய துன்பத்தினின்றும் நீக்கி மோக்ஷமாகிய கரையிற் சேர்க்கத் திருவுள்ளங் கொண்டவராய் அந்நாயனார் தராசுத்தட்டில் ஏறுதற்கு உடன்பட்டார். - எ - று.

மனம கிழ்ந்(து) அவர் மலர்க்கழல் சென்னியால் வணங்கிப்
புனைம லர்க்குழல் மனைவியார் தம்மொடு புதல்வன்
தனையு டன்கொடு தனித்துலை வலங்கொண்டு தகவால்
இனைய செய்கையில் ஏறுவார் கூறுவார் எடுத்து. **42**

(இ - ள்.) (சிவபெருமானாகிய வேதியர் சொல்லிய வார்த்தையைக் கேட்டு) மனமகிழ்ந்து அவரது தாமரைப் போன்ற திருவடிகளைச் சிரசினால் வணங்கி மலர்மாலை யணிந்த கூந்தலையுடை தமது மனைவியாரோடு புத்திரனையுங் கூட அழைத்துக் கொண்டு ஒப்பற்ற அந்தத் துலாக்கோலை வலஞ்செய்த தகுதியோடு இவ்வித செய்கையினால் ஏறுகின்ற அமர் நீதிநாயனார் இப்படிப்பட்ட வார்த்தைகளை எடுத்துச் சொல்லத் தொடங்கினார். - எ - று.

"இழைத்த அன்பினில் இறைதிரு நீற்றுமெய் யடிமை
பிழைத்தி லோம்எனில் பெருந்துலை நேர்நிற்க!" என்று
மழைத்த டம்பொழில் திருநல்லூர் இறைவரை வணங்கித்
தழைத்த அஞ்செழுத் தோதினார் ஏறினார் தட்டில். **43**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) உண்மையாகச் செய்கின்ற அன்போடு சிவபெருமானது திருவெண்ணீறு தரித்த மெய்யடியார்களுக்கு இதுவரையிலுஞ் செய்த அடிமைத்திறத்தில் நாம் சிறிதும் தவறாதிருந்தேமென்பது சத்தியமானால் இப்பெரிய துலை யானது சரியாக நிற்கக்கடவதென்று, மேகங்கள் தவழுகின்ற விசாலமாகிய சோலைகள் சூழ்ந்த திருநல்லூரில் வீற்றிருந் தருளும் சிவபெருமானை வணங்கி மேன்மை பொருந்திய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் செபித்துக் கொண்டு அத்தராசுத்தட்டில் ஏறியருளினார். - எ - று.

மண்டு காதலின் மற்றவர் மகிழ்ந்துடன் ஏற
அண்டர் தம்பிரான் திருஅரைக் கோவணம் அதுவும்
கொண்ட அன்பினிற் குறைபடா அடியவர் அடிமைத்
தொண்டும் ஒத்தலால் ஒத்துநேர் நின்றத் துலைதான். 44

(இ - ள்.) நிறைந்த விருப்பத்தோடு அவ்வமர் நீதி நாயனார் சந்தோஷத்தை யடைந்து தமது மனைவியாரோடும் புத்திரனோடும் தட்டில் ஏறினபொழுது, தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமானது திருவரையில் சாத்திய கோவணமும் தாம்கொண்ட பத்தியில் சிறிதும் குறைவுபடாத அமர்நீதி நாயனாரது அடிமைத் தொண்டும் ஒத்திருந்தபடியால் அத்தராசுத்தட்டும் ஒத்து நேராகநின்றது. - எ - று.

மதிவி ளங்கிய தொண்டர்தம் பெருமையை மண்ணோர்
துதிசெய் தெங்கணும் அதிசயம் உறஎதிர் தொழுதார்;
கதிர்வி சும்பிடை கரந்திட நிரந்தகற் பகத்தின்
புதிய பூமழை இமையவர் மகிழ்வுடன் பொழிந்தார். 45

(இ - ள்.) பேரறிவினால் விளக்கமுற்ற அமர்நீதி நாயனாரது மகிமையை இவ்வுலகத்திலுள்ளவர்கள் எல்லாம் துதிசெய்து ஆச்சரியப்பட்டு அவருக் கெதிரேவணங்கினார்கள்; விளங்கு கின்ற ஆகாயவெளி மறையும்படி வரிசையாயிருக்கின்ற கற்பக விருட்சத்தி லுண்டாகிய புதிய புஷ்பமழையைத் தேவர்கள் மகிழ்ச்சியோடு பொழிந்தார்கள். - எ - று.

அண்டர் பூமழை பொழியமற் றதனிடை ஒளித்த
முண்ட வேதியர் ஒருவழி யான்முதல் நல்லூர்ப்
பண்டு தாம்பயில் கோலமே விசும்பினிற் பாகங்
கொண்ட பேதையும் தாமுமாய்க் காட்சிமுன் கொடுத்தார். 46

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) தேவர்கள் புஷ்பமாரி பொழிய, அப்புஷ்பமாரியின் நடுவில் மறைந்த திரிபுண்டரத்தையணிந்த சிவபெருமானாகிய வேதியர் அந்தர்த்தானமாகி முதன்மை பொருந்திய திருநல்லூர் என்னும் க்ஷேத்திரத்தில் முன்னே தாம் எழுந்தருளியிருக்குந் திருக்கோலமாகவே ஆகாயத்தில் தமது இடப்பாகத்திலுள்ள உமாதேவியாருந் தாமுமாகத் தோன்றி அமர்நீதி நாயனாருக்கு முன்னே காட்சி கொடுத்தருளினார். - எ - று.

தொழுது போற்றிஅத் துலைமிசை நின்றுநேர் துதிக்கும்
வழுவில் அன்பரும் மைந்தரும் மனைவியார் தாமும்
முழுவதும் இன்னருள் பெற்றுத்தம் முன்தொழு திருக்கும்
அழிவில் வான்பதங் கொடுத் தெழுந் தருளினார் ஐயர். 47

(இ - ள்.) (அத்திருக்கோலத்தைக் கண்டு) கைகூப்பித் தொழுது அத்தராசுத்தட்டின்மேல் நின்று நேரே ஸ்தேரத்திரஞ் செய்கின்ற குற்றமற்ற அமர்நீதி நாயனாரும், அவரது புத்திரனும், மனைவியாருமாகிய மூவரும் இனிய திருவருளை முழுதும் பெற்றுத் தமது சந்நிதியின் முன்னே (சதாகாலமும்) தொழுது கொண்டிருக்கும்படியான அழிவில்லாத உயர்ந்த சிவபதத்தை அவர்களுக்குக் கொடுத்து சிவபெருமான் எழுந்தருளிச் சென்றார். - எ - று.

நாதர் தம்திரு வருளினால் நற்பெருந் துலையே
மீது கொண்டெழு விமானம தாகிமேற் செல்லக்
கோதில் அன்பரும் குடும்பமும் குறைவறக் கொடுத்த
ஆதி மூர்த்தியா ருடன் சிவ புரியினை அணைந்தார். 48

(இ - ள்.) சிவபெருமானுடைய திருவருளினாலே நன்மை பொருந்திய பெரிய அத்தராசு தானே மேற் கொண்டெழுகின்ற தெய்வவிமான ரூபமாகி மேலே சிவபதத்தை நோக்கிச் செல்ல, குற்றமற்ற அமர்நீதி நாயனாரும், அவரது மனைவியாரும், புத்திரனும் தமக்குக் குறைவில்லாமல் திருவருள் செய்த முதற் பெருங்கடவுளாகிய சிவபெருமானோடு சிவலோகத்தை யடைந்தார்கள். - எ - று.

மலர்மிசை அயனும் மாலும் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூர் ஆவணப் பழமை காட்டி
உலகுய்ய ஆண்டு கொள்ளப் பெற்றவர் பாதம் உன்னித்
தலைமிசை வைத்து வாழும் தலைமைநந் தலைமை யாகும். 49

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) தாமரை மலரில் வாழுகின்ற பிரமனும், விஷ்ணுவும் அடியையும் முடியையும் தேடிக் காண்பதற்கரிய சிவபெருமான், யாவரும் புகழத்தகுந்த திருவெண்ணெய் நல்லூரில் பழமை யாகிய முறியோலையைக் காண்பித்து உலகத்திலுள்ளவர்கள் (தமது பந்தத்தினின்று நீங்கிக்) கடைத்தேறும்பொருட்டுத் தடுத்தாட் கொள்ளப் பெற்ற ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருவடிகளைத் தியானஞ் செய்து அவைகளைத் தலையின்மேல் சூடிக்கொண்டு வாழுகின்ற மேன்மையே நமக்குச் சிறந்த மேன்மையாகும். - எ - று.

ஆவணப் பழைமையாவது முன்பு ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளது தந்தைன்றந்ததையாகிய ஆரூரன் என்பவரால் எழுதிக் கொடுத்த பழைய மூலவோலை எனவறிக.

அமர்நீதி நாயனார் புராணம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இலைமலிந்த சருக்கம்

8. எறிபத்த நாயனார் புராணம்

மல்லல்நீர் ஞானந் தன்னுள் மழவிடை யுடையான் அன்பர்க்(கு)
ஒல்லைவந் துற்ற செய்கை உற்றிடத் துதவும் நீரார்
எல்லையிற் புகழின் மிக்க எறிபத்தர் பெருமை எம்மால்
சொல்லலாம் படித்தன் றேனும் ஆசையால் சொல்ல லுற்றாம். 1

(இ - ள்.) வளப்பம் பொருந்திய சமுத்திரஞ் சூழ்ந்த இந்நில வுலகத்தில் இளமை பொருந்திய ரிஷபத்தை வாகனமாகவுடைய சிவபெருமானது அடியார்களுக்கு ஆபத்துவந்தபோது சீக்கிரத் தில் வந்து அதை நீக்கவேண்டிய செய்கைகளைச் செய்கின்ற பெருங்குணத்தையுடையவராகிய அளவில்லாத கீர்த்தியைப் பெற்றுச் சிறந்த எறிபத்த நாயனாரது பெருமையானது நம்மால் புகழ்ந்து சொல்லப்படுந் தகுதியையுடையதன்று; அவ்வா றிருந்தாலும், அதைச் சொல்லவேண்டு மென்னும் ஆசையினால் சொல்லத் தொடங்கினோம். - எ - று.

பொன்மலைப் புலிவென் றோங்கப் புதுமலை இடித்துப் போற்றும்
அந்நெறி வழியே யாக அயல்வழி அடைத்த சோழன்
மன்னிய அநபா யன்சீர் மரபின்மா நகர மாகும்
தொன்னெடுங் கருவூர் என்னுஞ் சுடர்மணி வீதி மூதூர். 2

(இ - ள்.) இமயமலையின் மேல் நாட்டிய தன்னுடைய புலிக்கொடியானது பகையரசர்களை வென்று விளங்க, மலை களை இடித்து நிரவித் தன்னால் உண்டாக்கப்பட்ட அப்புது வழியே நடப்போர்க்கு நேர்வழியாகச் செய்து முன்னிருந்த சுற்று வழிகளை அடைத்த சோழவமிசத் தரசனாகிய நிலைபெற்ற புகழினையுடைய அநபாயச் சோழ மகாராஜாவினது மரபின ருக்கு உரிய கருவூர் சொல்லப்பட்ட ஒளிவிளங்குகின்ற ரத்தினங்கள் பதித்த வீதிகளையுடைய ஊர். - எ - று.

மாமதில் மஞ்சு சூழும்; மாளிகை நிரைவிண் சூழும்;
தூமணி வாயில் சூழும்; சோலையில் வாசஞ் சூழும்;
தேமலர் அளகஞ் சூழும்; சிலமதி தெருவிற் சூழும்;
தாமகிழ்ந் தமரர் சூழும் சதமகன் நகரம் தாழ. 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) தேவர்கள் மிகுந்த சந்தோஷத்தையடைந்து சூழ்ந்து வாசஞ்செய்கின்ற தேவேந்திரனுடைய அமராவதி என்னும் நகரமானது இந்நகரத்தின் சிறப்புக்குத் தாழ்ந்திருக்கும் படியாகப் பெரிய மதில்களின் மேல் மேகக்கூட்டங்கள் சூழ்ந்து கொண்டிருக்கும்,மாளிகைகளின் வரிசைகள் விண்ணுலகத்தை அளாவியிருக்கும்; பரிசுத்தம் பொருந்திய இரத்தினமாலைகள் வாயில்களில் தொங்கக்கட்டியிருக்கும்; சோலைகளில் புட்பங்களிலுண்டாகிய வாசனை வீசிக்கொண்டிருக்கும்; தேன் பொருந்திய மலர் மாலைகள் மாதர்களின் கூந்தலில் சூழ்ந்து கொண்டிருக்கும்; (அம்மாதர்களின் முகமாகிய) சில சந்திரர்கள் தெருவில் சூழ்ந்து கொண்டிருக்கும். - எ - று.

கடகரி துறையி லாடும்; களிமயில் புறவி லாடும்;
அடர்மணி அரங்கி லாடும்; அரிவையர் குழல்வண் டாடும்;
படரொளி மறுகி லாடும்; பயில்கொடி கதிர்மீ தாடும்;
தடநெடும் புவிகொண் டாடும் தனிநகர் வளமை ஈதால். 4

(இ - ள்.) மதத்தைப் பொழிகின்ற யானைகள் நீர்த்துறைகளில் விளையாடும்; களிப்பினையுடைய மயில்கள் முல்லை நிலத்தில் ஆடிக் கொண்டிருக்கும்; நெருங்கிய பலவகை இரத்தினங்களிழைத்த சபையில் நடனஞ் செய்கின்ற மாதர்களின் கூந்தல்களில் வண்டுகள் சப்திக்கும்; படர்ந்த ஒளியையுடைய வீதிகளில் தோன்றக்கூடிய கொடிகள் சூரிய சந்திரமண்டலத்தின் மேல் உயர்ந்து ஆடிக்கொண்டிருக்கும்; விசாலம் பொருந்திய நீண்ட இந்நிலவுலகத்திலுள்ளவர்களால் புகழ்ந்து கொண்டாடப்பட்ட ஒப்பற்ற அக்கருவூரென்னு நகரத்தினது வளமானது இத்தன்மையதாக இருக்கும். - எ - று.

மன்னிய சிறப்பின் மிக்க வளநகர் அதனில் மல்கும்
பொன்னியல் புரிசை சூழ்ந்து சுரர்களும் போற்றும் பொற்பால்
துன்னிய அன்பின் மிக்க தொண்டர்தம் சிந்தை நீங்கா
அந்நிலை அரனார் வாழ்வ(து) ஆனிலை என்னும் கோயில். 5

(இ - ள்.) நிலைபெற்ற சிறப்பினால் உயர்ந்த வளப்பம் பொருந்திய அந்நகரத்தில் தேவர்களும் கூட்டமாக வந்து சுவர்ணமயமாகிய திருமதிலைப் பிரதக்ஷணஞ் செய்து வணங்கத் தகுந்த பெருமையினால் பொருந்திய அன்பிற் சிறந்த அடியார்களின் திருவுள்ளத்தைவிட்டு நீங்காதிருக்கின்ற தன்மையினையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடமாகிய திருவானிலை என்னுந் திருக்கோயிலானது விளங்கிக் கொண்டிருக்கும். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆனிலை என்பது கருவூரிலிருக்கும் சிவாலயத்தின் திருபெயர்.

பொருட்டிரு மறைக டந்த புனிதரை இனிதக் கோயில்
மருட்டுறை மாற்றும் ஆற்றால் வழிபடும் தொழில ராகி
இருட்கடு ஒடுங்கு கண்டத் திறையவர்க் குரிமை பூண்டார்க்(கு)
அருட்பெருந் தொண்டு செய்வார் அவர் எறிபத்த ராவார். 6

(இ - ள்.) பல பொருள்களும் அமைந்த சிறந்த வேதங்களால் அளவிடுதற்கரிய சிவபெருமானை இனிமையாக அத்திருக்கரு வூர்த் திருவானிலை என்னுந் திருக்கோயிலில் மயக்கமாகிய வழியை நீக்குகின்ற வேதாகம விதியின் படியே வழிபடுகின்ற தொழிலையுடையவராகி, கருநிறம் பொருந்திய விஷமானது அடங்கியிருக்கின்ற கண்டத்தினையுடைய அப்பெருமானுக்கு உரிமையாகத் தாங்கொண்ட அருளையுடைய பெரிய திருத் தொண்டைச் செய்கின்றவர்; (அவர் யாரெனில்) ஏறிபத்த நாயனார் என்று சொல்லப்பட்டவர். - எ - று.

மழைவளர் உலகில் எங்கும் மன்னிய சைவம் ஓங்க
அழலவிர் சடையான் அன்பர்க் கடாதன அடுத்த போது
முழையரி என்னத் தோன்றி முரண்கெட எறிந்து தீர்க்கும்
பழமறை பரசும் தூய பரசுமுன் எடுக்கப் பெற்றார். 7

(இ - ள்.) மேகங்கள் சஞ்சரிக்கின்ற இவ்வுலகத்தில் எவ்விடங் களிலும் நிலைபெற்ற சைவசமயமானது விருத்தியடைய, நெருப் பைப் போல விளங்குகின்ற சடையினையுடைய சிவபெருமானது அடியார்களுக்குத் துன்பம் நேரிட்ட பொழுது மலைமுழையில் வாழ்கின்ற சிங்கத்தைப் போல வெளிப்பட்டு (அத்துன்பத்திற்குக் காரணமாயிருந்தவர்களின்) வலிகுன்றும்படி அவர்களைத் துணித்து அத்துன்பத்தை நீக்குகின்ற பழமையாகிய வேதங் களால் துதிக்கப்பட்ட சிவபெருமானது திருக்கரத்திலுள்ள பரிசுத்தம் பொருந்திய மழுவினை ஒத்த ஒரு மழுப்படையைத் தம்முடைய கையில் எடுக்கப் பெற்றவர். - எ - று.

அண்ணலார் நிகழும் நாளில் ஆனிலை அடிக ளார்க்குத்
திண்ணிய அன்புகூர்ந்த சிவகாமி யாண்டார் என்னும்
புண்ணிய முனிவ னார்தாம் பூப்பறித் தலங்கல் சாத்தி
உண்ணிறை காத லோடும் ஒழுகுவார் ஒருநாள் முன்போல். 8

(இ - ள்.) பெருமையிற் சிறந்தவராகிய எறிபத்த நாயனார் இவ்வாறு அடியார்களுக்கு நேரிட்ட தீங்கை நீக்கி வாழ்கின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாள்களில், அத்திருவானிலை என்னும் ஆலயத்தில் வீற்றிருந் தருளும் சிவபெருமானுக்கு உறுதியான அன்பிற் சிறந்த சிவகாமி யாண்டார் என்னுந் திருப்பெயரையுடைய புண்ணிய சொரூப ராகிய ஒரு முனிவரர் மலர்களைப் பறித்து அம்மலர்களால் கட்டப்பட்ட திருப்பள்ளித்தாமங்களை அப்பெருமானுக்குச் சாத்தி, தம்முள்ளத்துள் நிறைந்த பேரன்போடும் நடக்கின்றவர்; அவர் ஒரு நாள் தாம் முன்பு செய்து வந்தது போல. - எ - று.

வைகறை உணர்ந்து போந்த புனல்மூழ்கி வாயும் கட்டி
மொய்ம்மலர் நெருங்கு வாச நந்தன வனத்து முன்னிக்
கையினில் தெரிந்து நல்ல கமழ்முகை அலரும் வேலைத்
தெய்வநா யகர்க்குச் சாத்தும் திருப்பள்ளித் தாமம் கொய்து. 9

(இ - ள்.) விடியற் காலத்தில் நித்திரை தெளிந்து எழுந்து நதிக்குப் போய் நீரில் ஸ்நானஞ் செய்து, வாயையும் வஸ்திரத்தினால் கட்டிக் கொண்டு, கூட்டமாகிய மலர்கள் நிறைந்த வாசனை கமழும் திருநந்தனவனத்தையடைந்து, கையினாலே ஆராய்ந்து மணம் வீசுகின்ற நல்ல அரும்புகள் மலரும் பொழுது, சகல தெய்வங்களுக்கும் நாயகராகிய சிவபெருமானுக்குச் சாத்துவதற்குரிய சிறந்த மலர்களைப் பறித்தெடுத்து. - எ - று.

கோலப்பூங் கூடை தன்னை நிறைத்தனர் கொண்ட நெஞ்சில்
வாலிய நேசங் கொண்டு மலர்க்கையில் தண்டுங் கொண்டங்(கு)
ஆலய மதனை நோக்கி அங்ணர்க் கமைத்துச் சாத்தும்
காலைவந் துதவ வேண்டிக் கடிதினில் வாரா நின்றார். 10

(இ - ள்.) அழகிய திருப்பூங் கூடையை மலர்களால் நிறைத்துக் கொண்டு, தமது உள்ளத்தில் சிறந்த அன்பை வைத்து, மலர் போன்ற கையில் தண்டத்தை ஊன்றிக் கொண்டு, அவ்விடத்துள்ள சிவாலயத்தைக் கருதி, சிவபெருமானுக்குத் திருப்பள்ளித் தாமஞ் சமைத்துச் சாத்த வேண்டிய சமையத்தில் கொண்டு போய் உதவும் படியாகவிரும்பிச் சீக்கிரத்தில் வந்து கொண்டிருந்தார். - எ - று.

மற்றவர் அணைய இப்பால் வளநகர் அதனில் மன்னும்
கொற்றவர் வளவர் தங்கள் குலப்புகழ்ச் சோழ னார்தம்
பற்றலர் முனைகள் சாய்க்கும் பட்டவர்த் தனமாம் பண்பு
பெற்றவெங் களிறு கோலம் பெருகுமா நவமி முன்னாள். 11

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அத்தன்மை பொருந்திய சிவகாமியாண்டார் என்னும் பெரியவர் வரும் பொழுது இப்பால் வளம் பொருந்திய அந்தப் பட்டினத்தில் நிலைபெற்று வாழ்கின்ற அரசர்களாகிய சோழராஜாக்களின் குலத்தில் அவதரித்த புகழ்ச்சோழ நாயனாருடைய பகைவர்களது போர்முனையை அழிக்கின்ற பட்டவர்த்தனமென்னும் மேன்மை பொருந்திய கொடியானை யானது திருவிழாவைக் கொண்டாடுகின்ற மகா நவமியின் முதல் நாளாகிய அஷ்டமிதினத்தில். - எ - று.

மங்கல விழவு கொண்டு வருநதித் துறைநீ ராடிப்
பொங்கிய களிப்பி னோடும் பொழிமதஞ் சொரிய நின்றார்
எங்கணும் இரியல் போக எதிர்பரிக் காரர்ஓடத்
துங்கமால் வரை போல்தோன்றித் துண்ணென அணைந்த தன்றே. 12

(இ - ள்.) மங்கலகரமாகிய அலங்காரத்தைப் பெற்று வெள்ளமாகப் பெருகி வருகின்ற காவிரி நதித்துறையில் நீராடி மிகுந்த களிப்போடும் பொழியாநின்றமதநீர் சொரிய, எதிரில் வருபவர்கள் நாற்புறத்திலும் விலகியோடிப்போக, தனக்கு முன்னே குத்துக் கோற்காரர்கள் ஓட, உயர்ந்த பெரிய மலைபோலக் காணப்பட்டு விரைவாக வந்தது. - எ - று.

வென்றிமால் யானை தன்னை மேல்கொண்ட பாக ரோடும்
சென்றொரு தெருவின் முட்டிச் சிவகாமியார்முன் செல்ல
வன்றனித் தண்டில் தூங்கும் மலர்கொள்பூக் கூடை தன்னைப்
பின்றொடர்ந் தோடிச் சென்று பிடித்துமுன் பறித்துச் சிந்த. 13

(இ - ள்.) வெற்றி பொருந்திய மதமயக்கத்தையுடைய அப்பட்டவர்த்தனயானையானது தன்மேல் ஏறிக் கொண்டிருக் கின்ற பாகர்களோடும் போய் ஒரு வீதியையடைந்து, அவ் வீதியில் தனக்கு முன்னே சிவகாமியாண்டார் போய்க் கொண்டிருக்கக்கண்டு, பின்னே தொடர்ந்தோடிப் போய் அவர் கையில் பிடித்திருக்கும் ஒப்பற்ற வலிய தண்டில் தொங்கிக் கொண்டிருந்த மலர்கள் நிறைந்த புஷ்பக்குடலையைப் பிடித்துப் பறித்துப் பூமியில் சிந்தின வளவில். - எ- று.

மேல்கொண்ட பாகர் கண்டு விசைகொண்ட களிறு சண்டக்
கால்கொண்டு போவார் போலக் கடிதுகொண்டகலப் போக
நூல்கொண்ட மார்பின் தொண்டர் நோக்கினார் பதைத்துப் பொங்கி
மால்கொண்ட களிற்றின் பின்பு தண்டுகொண் டடிக்க வந்தார். 14

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அந்த யானையின் மேல் ஏறியிருக்கின்ற பாகர்கள் அச்செய்கையைப் பார்த்து, விசையாகப் போகின்ற யானையைச் சண்டமாருதத்தை வசப்படுத்திக் கொண்டு போகிறவர்கள் போல (அவர்க்குத் தீங்கு செய்யாமல் விலக்கி) விரைவில் நடத்திக் கொண்டு அவ்விடத்தினின்றும் தூரமாகப் போக, பூணூலினையணிந்த மார்பினையுடைய சிவகாமியாண்டார் அதைப் பார்த்துமனம் பதைத்துக் கோபித்து, மதமயக்கங் கொண்ட அவ்யானையின் பின்னே தமது கையிலுள்ள தண்டினால் அடிக்கத் தொடர்ந்து வந்தார். - எ - று.

அப்பொழு தணைய வொட்டா தடற்களி றகன்று போக
மெய்ப்பெருந் தொண்டர் மூப்பால் விரைந்துபின் செல்ல மாட்டார்
தப்பினர் விழுந்து கையால் தரையடித் தெழுந்து நின்று
செப்பருந் துயரம் நீடிச் செயிர்த்துமுன் "சிவதா" என்பார். 15

(இ - ள்.) அப்பொழுது சிவகாமியாண்டாரை நெருங்க வொட்டாமல் வலி பொருந்திய யானையானது நீங்கிப்போக, உண்மையாகிய பெருந்தொண்டராகிய சிவகாமியாண்டார் தமக்கு உள்ள மூப்புப் பருவத்தினால் விரைவாக அதன்பின் தொடர்ந்தோடுவதற்குச் சக்தியற்றவராய்த் தவறி விழுந்து தமது கைகளைத்தரையில் மோதியடித்து எழுந்து நின்று கொண்டு சொல்லுதற்கரிய துயரம் அதிகரித்துக் கோபித்து முன்னே சிவதா என்னும் மொழியைச் சொல்லுகின்றவரானார்.

"களியா னையின்ஈர் உரியாய்! சிவதா!
எளியார் வலியாம் இறைவா! சிவதா!
அளியார் அடியார் அறிவே! சிவதா
தெளிவார் அமுதே! சிவதா! சிவதா! 16

(இ - ள்.) களிப்பினையுடைய யானையினது உரித்த தோலினைப் போர்த்த பெருமானே! சிவதா! எளியவர்களுக்கு வலிய துணையாக இருக்கின்ற முதல்வரே! சிவதா! அன்பு பொருந்திய மெய்யடியார்களின் அறிவாக நின்ற கடவுளே! சிவதா! தெளிவாகிய அமிர்தம் போன்ற சுவாமீ! சிவதா! சிவதா!. எ - று.

"ஆறும் மதியும் அணியுஞ் சடைமேல்
ஏறும் மலரைக் கரிசிந் துவதே?
வேறுன் நினைவார் புரம்வெந் தவியச்
சீறுஞ் சிலையாய்! சிவதா! சிவதா! 17

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) கங்காநதியையும் பிறைச்சந்திரனையும் அணிந்த தேவரீரது சடை முடியின்மேல் சாத்துவதற்குத் தகுதியாகிய மலர்களை இந்த யானை சிந்தலாமா? பகைமையை நினைத்த அசுரர்களின் முப்புரங்களும் நீறாக வெந்து அழியும் பொருட்டுக் கோபித்து மேருவாகிய வில்லையுடைய எமது ஆண்டவரே! சிவதா! சிவதா! - எ - று.

"தஞ்சே சரணம் புகுதுந் தமியோர்
நெஞ்சேய் துயரங் கெடநேர் தொடரும்
மஞ்சே வடிவாய்! மறலிக் கிறைநீள்
செஞ்சே வடியாய்! சிவதா! சிவதா! 18

(இ - ள்.) தமக்குத் தஞ்சமென்று அடைக்கலம்புகுந்த மார்க்கண்டேயரது மனத்திற் பொருந்திய துன்பம் நீங்கும்படி எதிராகத் தொடர்ந்து மேகம் போல நெருங்கி வந்த யமனுக் காகச் சிறிதளவு நீண்டுதைத்த சிவந்த திருவடிகளையுடைய கடவுளே! சிவதா! சிவதா! - எ - று.

"நெடியோன் அறியா நெடியார் அறியும்
படியால் அடிமைப் பணிசெய் தொழுகும்
அடியார் களில்யான் ஆரா அணைவாய்?
முடியா முதலாய்!" எனவே மொழிப. 19

(இ - ள்.) விஷ்ணுவினாலும் அறியப்படாத சிவானுபவ நெறியை மிகுதியும் அறிந்தடையும் படியாக அடிமைத் தொழில் செய் தொழுகுகின்ற அடியார்களில் என்னை எதிற் சேர்ந்தவ னாக மதித்து (யான் வருந்தி யழைக்குங்கால்) எழுந்தருளி வந்து அனுக்கிரகஞ் செய்வார், என்றும் அழிவில்லாத முதற் பெருங் கடவுளாகிய சிவபெருமான் என்று வருந்திச் சொல்ல. - எ - று.

என்றவ ருரைத்த மாற்றம் எறிபத்தர் எதிரே வாரா
நின்றவர் கேளா, மூளும் நெருப்புயிர்த் தழன்று பொங்கி
"மன்றவர் அடியார்க் கென்றும் வழிப்பகை களிறே யன்றோ
கொன்றது வீழ்ப்பன்" என்று கொலைமழு எடுத்து வந்தார். 20

(இ - ள்.) இவ்விதமாகச் சிவகாமியாண்டார் முறையிட்டுக் கூறிய வார்த்தையை அவர்க் கெதிரில் வருகின்ற எறிபத்த நாயனார் கேட்டுத் தம்முள்ளே அதிகரித்தெழுந்த கோபத் தீயோடு பெருமூச்சுவிட்டு மனமழன்று கோபித்து, கனக சபையில் திருநடனஞ் செய்தருளும் சிவபெருமானுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடியவராகிய இச்சிவகாமியாண்டாருக்கு எந்நாளும் வழிப் பகையாக உள்ளது யானையல்லவோ? ஆதலால், அந்த யானையைக் கொன்று பூமியில் விழத்தள்ளுவேனென்று கொலை செய்தற் கேதுவாகிய மழுப்படையைக் கையில் எடுத்துக் கொண்டு வந்தார். - எ - று.

வந்தவர் அழைத்த தொண்டர் தமைக்கண்டு வணங்கி "உம்மை
இந்தவல் இடும்பை செய்த யானைஎங் குற்ற(து)? என்ன
"எந்தையார் சாத்தும் பூவை என்கையிற் பறித்து மண்மேல்
சிந்திமுன் பிழைத்துப் போகா நின்றதித் தெருவே" என்றார். 21

(இ - ள்.) இவ்வாறு வந்த எறிபத்த நாயனார் சிவதாவென்று முறையிட்டுக் கூறிய சிவகாமியாண்டாரைக் கண்டு தொழுது, உமக்கு இக்கொடிய துன்பத்தைச் செய்த யானையானது எவ்விடத்திற் சென்றது என்று கேட்க. (அப்பொழுது அவர்) நமது சிவபெருமானுக்குச் சாத்தும் பொருட்டுக் கொண்டு வந்த மலர்களை எனது கையிலிருந்து பூக்குடலையோடு பிடுங்கிப் பூமியில் இறைத்து முன்னே தப்பி இந்தத் தெருவின் வழியாகவே ஓடுகின்றது என்று சொன்னார். - எ - று.

"இங்கது பிழைப்ப தெங்கே? இனி"என எரிவாய் சிந்தும்
அங்கையின் மழுவும் தாமும் அனலும்வெங் காலும் என்னப்
பொங்கிய விசையிற் சென்று பொருகரி தொடர்ந்து பற்றும்
செங்கண்வாள் அரியிற் கூடிக் கிடைத்தனர் சீற்ற மிக்கார். 22

(இ - ள்.) அதைக்கேட்டு எறிபத்த நாயனார் மிகுந்த கோபங் கொண்டு இனி இந்த யானையானது எப்படி உயிர்தப்பிப் பிழைத்துக் கொள்ளுமென்னு, கையிற்பிடித்த நெருப்பைச் சிந்துகின்ற கூரியமழுப்படையும் தாமுமாக, நெருப்புங் காற்றும் போல மிகுந்த வேகமாகப்போய், போர் செய்கின்ற யானை களைக் கொல்லப் பின்தொடர்ந்து செல்லுகின்ற சிவந்த கண்களையுடைய ஒளி பொருந்திய சிங்கம் போல எதிர்த்து அந்தப் பட்டவர்த்தனயாணையைக் கிட்டினார். - எ - று.

கண்டவர் "இதுமுன்(பு) அண்ணல் உரித்தஅக் களிறே போலும்!
அண்டரும் மண்ணு ளோரும் தடுக்கினும் அடர்த்துச் சிந்தத்
துண்டித்துக் கொல்வேன்" என்று சுடர்மழு வலத்தில் வீசிக்
கொண்டெழுந் தார்த்துச் சென்று காலினாற் குலுங்கப் பாய்ந்தார். 23

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அந்த யானையைக் கண்ட அன்பராகிய எறிபத்த நாயனார் இது முன்பு சிவபெருமான் தோலுரித்த கயாசுரனென்னும் யானைக்குச் சமானமாக இருப்பது போதுமென்று நினைத்து, தேவர்களும்- இந்நிலவுலகத்திலுள்ளவர்களும் இதனைக் கொல்ல வேண்டாமென்று வந்து தடுத்தாலும் கோபித்து இரத்தஞ்சிந்தும் படியாக வெட்டிக் கொன்று விடுவேனென்று விளங்குகின்ற மழுப்படையை வலதுகையில் வீசி, காலினால் கிளம்பி அந்த யானையானது நடுங்கும்படி அதன் மேல் பாய்ந்தார். - எ - று.

பாய்தலும் மிசைகொண் டுய்க்கும் பாகரைக் கொண்டு சீறிக்
காய்தழல் உமிழ்கண் வேழம் திரிந்துமேற் கதுவ "அச்சம்
தாய்தலை அன்பின் முன்பு நிற்குமே! தகைந்து பாய்ந்து
தோய்தனித் தடக்கை வீழ மழுவினால் துணித்தார் தொண்டர். 24

(இ - ள்.) எறிபத்த நாயனார் பாய்ந்தவுடனே எரிகின்ற நெருப்புப் பொறியைக் கக்குகின்ற கண்களையுடைய யானையானது தன்மேல் ஏறிச் செலுத்துகின்ற பாகர்களைத் தாங்கிக்கொண்டு சீறி, அந்நாயனார்மேல் கோபித்துத் திரும்ப, அவர் அதனுடைய பாய்தலைத் தடுத்து எதிர்த்து, நிலத்தில் தாழ்ந்த பெரிய துதிக்கையானது விழும்படியாகத் தமது கையிலுள்ள மழுவாயுதத்தினால் வெட்டித்தள்ளினார். அச்சமானது தாய்ப்பசு தன்னிளங்கன்றினிடத்து வைத்த தலையன்பு போல. இவர் சிவனடியார்க ளிடத்துவைத்து பேரன்புக்கு முன் நிற்குமோ? நில்லாது. - எ - று.

கையினைத் துணித்த போது கடலெனக் கதறி வீழ்ந்து
மைவரை அனைய வேழம் புரண்டிட மருங்கு வந்த
வெய்யகோல் பாகர் மூவர் மிசைகொண்டார் இருவ ராக
ஐவரைக் கொன்று நின்றார் அருவரை அனைய தோளார். 25

(இ - ள்.) கரியமலையையொத்த அந்த யானையானது துதிக்கையை வெட்டினபொழுது கடல் முழங்குவதுபோலப் பேரிரைச் சலிட்டு விழுந்துபுரள, அதனருகில் வந்து கொண்டிருந்த கொடியகுத்துக் கோற் காரர்கள் மூவரும், மேலேறி வந்த பாகர் இருவருமாகிய ஐந்துபேரையும் சங்கரித்து நின்றார், பெரிய மலை போன்ற தோள்களையுடைய எறிபத்த நாயனார். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெட்டுண்டு பட்டு வீழ்ந்தார் ஒழியமற் றுள்ளார் ஓடி
மட்டவிழ் தொங்கல் மன்னன் வாயிற்கா வலரை நோக்கிப்
பட்டவர்த் தனமும் பட்டுப் பாகரும் பட்டார்என்று
முட்டநீர் கடிது புக்கு முதல்வனுக் குரையும்" என்றார். 26

(இ - ள்.) எறிபத்த நாயனாரால் வெட்டுப்பட்டு இறந்து வீழ்ந்த ஐவர்கள் தவிர மற்றப்பாகர்கள் உயிர்தப்பி ஓடிப்போய்த் தேன் பொருந்திய ஆத்திமாலையைத் தரித்த புகழ்ச் சோழ நாயனாரது அரண்மனை வாயிலைக் காக்கின்ற வர்களைப் பார்த்து நீங்கள் விரைந்து சென்று பட்டவர்த்தனயானையும் அதன்பாகர்களும் இறந்தார்களென்று நமது அரசனுக்குத் தெரிவியுங்கள் என்று சொன்னார்கள். - எ - று.

மற்றவர் மொழிந்த மாற்றம் மணிக்கடை காப்போம் கேளாக்
கொற்றவன் தன்பால் எய்திக் குரைகழல் பணிந்து போற்றிப்
"பற்றலர் இலாதாய்! நின்பொற் பட்டமால் யானைவீழச்
செற்றனர் சிலராம் என்று செப்பினார் பாகர்" என்றார். 27

(இ - ள்.) அப்பாகர்கள் சொல்லிய வார்த்தையை அழகிய வாயில் காப்பவர்கள் கேட்டுப் புகழ்ச் சோழ நாயனாரது சமுகத்தையடைந்து சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடி களை வணங்கித் துதித்து, ஒரு சத்துருவும் இல்லாத அரசர் பெருமானே! தேவரீரது பட்டத்துயானை இறந்து விழும்படி சில மனிதர்கள் கொன்றார்களென்று பாகர்கள் சொன்னார் களெனக் கூறினார்கள். - எ - று.

வளவனும் கேட்ட போதில் மாறின்றி மண்காக் கின்ற
கிளர்மணித் தோள்அ லங்கல் சுரும்பினங் கிளர்ந்து பொங்க
அளவில்சீற் றத்தி னாலே 'யார்செய்தார்' என்றுங் கேளான்
இளஅரி ஏறுபோல எழில்மணி வாயில் நீங்க. 28

(இ - ள்.) புகழ்ச்சோழ நாயனாரும் அந்த வார்த்தையைக் கேட்டவுடனே ஒரு பகைவருமில்லாமல் நிலவுலகத்தைப் பாதுகாக்கின்ற பூரித்த அழகிய தோளில் தரித்த மாலையில் வண்டினங்கள் கிளம்பி ஒலிக்க, அளவில்லாத பெருங் கோபத்தினாலே யார் அந்த யானையைக் கொன்றவர்கள் என்று வாயிலாளர்களையுங் கேளாமல் இளமை பொருந்திய ஆண்சிங்கம் போல அழகிய அரண்மனை வாயிலினின்றும் வெளிப்பட்டு வர - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தந்திரத் தலைவர் தாமும் தலைவன்றன் நிலைமை கண்டு
வந்துறச் சேனை தன்னை வல்விரைந் தெழுமுன் சாற்ற
அந்தரத் தகல மெல்லாம் அணிதுகிற் பதாகை தூர்ப்ப
எந்திரத் தேரும் மாவும் இடைஇடை களிறு மாகி. **29**

(இ - ள்.) சேனைத் தலைவர்களும் புகழ்ச் சோழ நாயனார் போர் செய்யக் கருதிச் செல்லுகின்ற நிலைமையைப் பார்த்து வந்து தங்களுடைய ஆக்கினையில் கீழ்ப்பட்டிருக்கும் திரண்ட சேனைகளை விரைவில் போர்க் கோலங் கொண்டு வரும் படியாக முன்னே பறை சாற்றுவிக்க, ஆகாயத்தின் பரந்த இடங்களெல்லாம் அழகிய வஸ்திரக் கொடிகள் மறைக்க, சூத்திரங்களமைத்திருக்கின்ற தேர்களும், குதிரைகளும், நடுவில் நடுவில் யானைகளுமாகக் கூடி. - எ - று.

வில்லொடும் வேல்வாள் தண்டு பிண்டிபா லங்கள் மிக்க
வல்லெழு முசலம் நேமி மழுக்கழுக் கடைமுன் னான
பல்படைக் கலன்கள் பற்றிப் பைங்குழல் வரிந்த வன்கண்
எல்லையில் படைஞர் கொட்புற் றெழுந்தனர் எங்கும் எங்கும். **30**

(இ - ள்.) வில் - வேல் - வாள் - தண்டம் - பிண்டிபாலங்கள் - மிகுந்த வலி பொருந்திய இருப்புலக்கைகள் - சக்கரம் - மழுவாயுதம் - சூலம் இவை முதலாயுள்ள அநேக ஆயுதங்களைக் கையிற் பிடித்துக் கொண்டு கால்களில் அழகிய வீரகண்டையைத் தரித்த அஞ்சாமையையுடைய எண்ணிறந்த போர்வீரர்கள் இடசாரி வலசாரியாகச் சுற்றி எவ்விடத்தின்றும் எழுந்தார்கள். எ - று.

சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி
பொங்கொலிச் சின்னம் எல்லாம் பொருபடை மிடைந்த பொற்பதம்
மங்குல்வான் கிளர்ச்சி நாண மருங்கெழுந் தியம்பி மல்க. **31**

(இ - ள்.) சங்கவாத்தியமும் - தாரையும் - எக்காளமும் - மிகுந்த ஒலி முழங்குகின்ற பேரிகையும் - வெவ்விய ஒலியை யுடைய பம்பையும் · கண்டையும் - பெருமை பொருந்திய உடுக்கையும் - திமிலைப் பறையும் ஆகிய இவைகளை முழங்கச் செய்து மற்றும் வேண்டிய வாத்தியங்களின் ஒலித்தொகுதிக ளெல்லாம் போர் செய்கின்ற சேனைகள் நெருங்கிய தோற்றத் தோடு ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற மேகக் கூட்டங்களின் இடியொலி நாணும்படி புகழ்ச் சோழ நாயனாருக்கு நாற்புறத் திலும் எழுந்து சப்தித்து நெருங்க. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தூரியத் துவைப்பும் முட்டுஞ் சுடர்ப்படை ஒலியும் மாவின்
தார்மணி இசைப்பும் வேழ முழக்கமும் தடந்தேர்ச் சீரும்
வீரர்தஞ் செருக்கின் ஆர்ப்பும் மிக்கெழுந் தொன்றாம் எல்லைக்
காருடன் கடைநாட் பொங்குங் கடலெனக் கலித்த அன்றே. 32

(இ - ள்.) பலவகை வாத்தியங்களின் முழக்கமும், பிரகாசம் பொருந்திய ஆயுதங்கள் ஒன்றோடொன்று தாக்குதலாலுண்டாகிய முழக்கமும், குதிரைகளின் கழுத்திலணிந்த கிண்கிணி மாலையின் முழக்கமும், யானைகள் வீரிடுகின்ற முழக்கமும், விசாலமாகிய தேரோடு தலாலுண்டாகின்ற முழக்கமும், போர்வீரர்களுடைய செருக்கினாலுண்டாகின்ற முழக்கமும் அதிகரித்தெழுந்து ஒன்றாகச் சேர்ந்த பொழுது, கற்பாந்த காலத்தில் எழுந்த மேகத்தோடு பெருகி முழங்குகின்ற சமுத்திரத்தின் கோஷம் போல முழங்கின. - எ - று.

பண்ணுறும் உறுப்பு நான்கில் பரந்தெழு சேனை யெல்லாம்
மண்ணிடை இறுகால் மேன்மேல் வந்தெழுந் ததுபோல் தோன்றத்
தண்ணளிக் கவிகை மன்னன் தானைபின் தொடரத் தானோர்
அண்ணலம் புரவி மேற்கொண் டரசமா வீதி சென்றான். 33

(இ - ள்.) அலங்கரிக்கப்பட்ட ரதகஜதுரகபதாதி என்னும் நால்வகையுறுப்பாகப் பரவி யெழுகின்ற சேனைகளெல்லாம் பூமியில் ஊழிக்காற்றானது மேலுமேலும் அடித் தெழுப்பி வந்தது போலத் தோன்ற, உயிர்களிடத்துக் குளிர்ந்த கிருபை பொருந்திய வெண் கொற்றக் குடையினையுடைய புகழ்ச் சோழ நாயனார் சேனைகள் தம்மைப் பின்னே தொடர்ந்துவர, தாம் ஒருபெருமை பொருந்திய அழகிய குதிரையின்மேல் ஏறிக் கொண்டு பெரிய ராஜவீதியின் வழியாகச் சென்றார். - எ - று.

கடுவிசை முடுகிப் பொங்கிக் களிற்றொடும் பாகர் வீழ்ந்த
படுகளங் குறுகச் சென்றான் பகைப்புலத் தவரைக் காணான்
விடுசுடர் மழுவொன் றேந்தி வேறிரு தடக்கைத் தாய 34
அடுகளி றென்ன நின்ற வன்பரை முன்பு கண்டான்.

(இ - ள்.) புகழ்ச்சோழ நாயனார் மிகுந்த வேகத்தோடு சென்று கோபித்துப் பட்டவர்த்தன யானையோடு பாகர்களும் இறந்துகிடக்கின்ற போர்க்களத்திற்குச் சமீபமாகப் போய்; அங்குப் பவைர்கள் ஒருவரையுங் காணாதவராய் ஒளிவீசுகின்ற ஒருமழுப்படையைக் கையிற்றாங்கிக் கொண்டு துதிக்கையின்றி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேறெ இரண்டு பெரிய கைகளையுடைய கொலை செய்கின்ற யானையைப் போலத் தனியே நின்ற எறிபத்த நாயனாரைத் தமக்குமுன்னே பார்த்தார். - எ - று.

பொன்றவழ் அருவிக் குன்றம் எனப்புரள் களிற்றின் முன்பு
நின்றவர் மன்றுள் என்றும் நிருத்தமே பயிலும் வெள்ளிக்
குன்றவர் அடியா ரானார்; கொன்றவர் இவரென் றோரான்;
"வென்றவ ரியாவர்?" என்றான் வெடிபட முழங்குஞ் சொல்லான். 35

(இ - ள்.) பொற் பொடிகள் தவழ்ந்து வருகின்ற அருவியாற்றையுடைய மலையைப் போலப் புரளுகின்ற யானைக்கு முன்னே நிற்கின்ற இவர் கனகசபையில் எப்பொழுதும் ஆநந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற ஸ்ரீ கைலாசபதியினுடைய அடியவராயிருக்கின்றார்; அதனால் அந்த யானையைக் கொன்றவர் இவரென்று அறியாமல் இந்த யானையைக் கொன்றவர்கள் யாவரென்று கேட்டார் கோபத்தினால் பூமியதிரும்படியாக ஒலிக்கின்ற சொல்லையடைய புகழ்ச் சோழ நாயனார். - எ - று.

அரசன்ஆங் கருளிச் செய்ய அருகுசென் றணைந்து பாகர்
"விரைசெய்தார் மாலை யோய்!நின் விறற்களிற் றெதிரே நிற்கும்
திரைசெய்நீர் உலகின் மன்னர் யாருளார்? தீங்கு செய்தார்
பரசுமுன் கொண்டு நின்றஇவர்" எனப் பணிந்து சொன்னார். 36

(இ - ள்.) புகழ்ச்சோழநாயனார் இவ்வாறு சொன்னவளவில் பாகர்கள் அவரருகில் சென்று சேர்ந்து வாசனை பொருந்திய மலர் மாலையைத் தரித்த எமது அரசர் பெருமானே! உம்முடைய வெற்றி பொருந்திய பட்ட வர்த்தன யானையை எதிர்த்து நிற்கின்ற அலைகளையுடைய சமுத்திரஞ் சூழ்ந்த உலகத்திலுள்ள அரசர்கள் யாரிருக்கின்றார்கள்? (ஒருவருமில்லை;) அந்த யானையைக் கொன்றவர் மழுப்படையைக் கையில் தாங்கிக் கொண்டு முன்னே நிற்கின்ற இவர் தானென்று வணங்கிச் சொன்னார்கள். - எ - று.

"குழையணி காதி னானுக் கன்பராங் குணத்தின் மிக்கார்
பிழைபடின் அன்றிக் கொல்லார்; பிழைத்ததுண்" டென்றுட்கொண்டு
மழைமத யானைச் சேனை வரவினை மாற்றி மற்ற
உழைவயப் புரவி மேல்நின் றிழிந்தனன் உலக மன்னன். 37

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) குண்டலத்தையணிந்த திருச்செவியினையுடைய சிவபெருமானுக்கு அடியவராகிய நற்குணத்திற் சிறந்த இவ் வெறிபத்த நாயனார் இந்த யானையானது பிழை செய்தலால் லாமல் கொல்லமாட்டார்; ஆதலால் இது அவர்க்குத் தீங்கு செய்திருக்க வேண்டுமென்று மனதில் நினைத்து, மழைபோல மதத்தைப் பொழிகின்ற யானைகளோடு கூடிய சேனைகளின் வருகையை அங்கு வரவொட்டாமல் நிறுத்தி, தாம் ஏறிவந்த பிடரிமயிரையுடைய வெற்றி பொருந்திய குதிரையினின்றும் கீழே இறங்கினார், உலகத்தை யாளுகின்ற அரசராகிய புகழ்ச்சோழ நாயனார். - எ - று.

"மைத்தடங் குன்று போலும் மதக்களிற் றெதிரே இந்த
மெய்த்தவர் சென்ற போது வேறொன்றும் புகுதா விட்ட
அத்தவ முடையேன் ஆனேன்; அம்பல வாணர் அன்பர்
இத்தனை முனியக் கெட்டேன் என்கொலோ" பிழைஎன் றஞ்சி. 38

(இ - ள்.) கருநிறம் பொருந்திய பெரிய மலையையொத்த மதங்கொண்ட யானைக்கு எதிரே இந்த உண்மையாகிய தவத்தினையுடைய அடியவர் போனபொழுது வேறொரு தீங்கு இவர்க்குச் சம்பவிக்காமல் இருக்கப் பெற்ற அந்தப் பெருந் தவத்தை அடியேன் பூர்வத்தில் செய்தவனானேன்; ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு அன்பராகிய இந்நாயனார் இவ்வளவு கோபங் கொள்ள என்ன பிழை நேரிட்டதோ! என்று பயந்து. எ-று.

செறிந்தவர் தம்மை நீக்கி அன்பர்முன் தொழுது சென்(று) "ஈ(து)
அறிந்திலேன் அடியேன்; அங்குக் கேட்ட தொன்(று); அதுதான் நிற்க;
மறிந்தஇக் களிற்றின் குற்றம் பாகரோ டிதனை மாள
எறிந்ததே போது மோதான்? அருள் செயும்" என்று நின்றான். 39

(இ - ள்.) (புகழ்ச் சோழ நாயனார்) தம்மைச் சூழ்ந்து வந்த பரிசனங்களைவிலக்கி அவ்வெறிபத்த நாயனாருக்கு முன்னே போய்த் தொழுது நின்று கொண்டு இந்த யானை தேவரீருக்குத் தீங்கு செய்த தென்பதை அடியேன் அறியேன்; நான் எனது அரண்மனையில் கேள்விப்பட்ட வார்த்தை ஒன்றாயிருக் கின்றது; அது நிற்கட்டும்; எதிர்த்த இந்த யானையினுலுண் டாகிய குற்றத்திற்குப் பாகரோடு இந்த யானையை இறக்கும்படி மழுப்படையால் துணித்தது போதுமோ? போதாதாயின், அதனையும் தேவரீர் அருளிச் செய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துநின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன்னவன் தன்னை நோக்கி வானவர் ஈசர் நேசர்
"சென்னி! இத் துங்க வேழம் சிவகாமி யாண்டார் கொய்து
பன்னகா பரணர்ச் சாத்தக் கொடுவரும் பள்ளித் தாமம்
தன்னைமுன் பறித்துச் சிந்தத் தரைப்படத் துணிந்து வீழ்த்தேன்" 40

(இ - ள்.) தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமானது அடியவராகிய எறிபத்த நாயனார் (அவ்வாறு விண்ணப்பஞ் செய்து நின்ற) புகழ்ச்சோழ நாயனாரைப் பார்த்து, சோழர் பெருமானே! இந்த உயர்ந்த யானையானது சிவகாமியாண்டார் என்னும் பெரியவர் சர்ப்பாபரணராகிய சிவபெருமானுக்குச் சாத்தும்படி பறித்துக் கொண்டு வந்த திருப்பள்ளித் தாமத்திற் குரிய மலர்களை முன்னே பறித்துக் கீழே சிந்தினபடியால் இதனை நிலத்தில் விழும்படி வெட்டித் தள்ளினேன். - எ - று.

"மாதங்கம் தீங்கு செய்ய வருபரிக் காரர் தாமும்
மீதங்குக் கடாவு வாரும் விலக்கிடா தொழிந்து பட்டார்
ஈதிங்கு நிகழ்ந்த" தென்றார் எறிபத்தர் என்ன அஞ்சிப்
பாதங்கள் முறையால் தாழ்ந்து பருவரைத் தடந்தோள் மன்னன். 41

(இ - ள்.) இந்த யானையானது மலர்களைக் கீழேசிந்தித் தீங்குசெய்தபோது முன்னே வருகின்ற குத்துக் கோற் காரர்களும், மேலேறியிருந்து செலுத்துகின்ற பாகர்களும் அதனை விலக்காதிருந்த குற்றத்தினால் அவர்களும் வெட்டுண்டு இறக்கப்பட்டார்கள்; இதுதான் இவ்விடத்தில் நடந்த செய்தியென்று எறிபத்த நாயனார் சொல்ல, பருத்தலை போலும் பெரியதோள்களையுடைய புகழ்ச் சோழ நாயனார் (அதைக் கேட்டுப்) பயந்து அவரது திருவடிகளில் முறையாக வணங்கி. - எ- று.

"அங்கணர் அடியார் தம்மைச் செய்தஇவ் வபரா தத்துக்(கு)
இங்கிது தன்னாற் போதா(து); என்னையுங் கொல்ல வேண்டும்;
மங்கல மழுவால் கொல்கை வழக்கு மன்(று) இதுவாம்; என்று
செங்கையால் உடைவாள் வாங்கிக் கொடுத்தனர் தீர்வு நேர்வார். 42

(இ - ள்.) சிவபெருமானுடைய அடியார்க்கு இந்த யானை யானது செய்ததீங்குக்குப் பரிகாரமாக இந்த யானையோடு பாகரைங்கொன்றதனால் போதாது; (அத்தீங்குக் காரணமா யிருந்த) அடியேனையுங் கொல்ல வேண்டும்: தேவரீர் திருக்கரத் திலுள்ள மங்கலகரம் பொருந்திய மழுப்படையினால் கொடிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வனாகிய என்னைக் கொல்லுதல் முறைமையல்ல; அதற்கு இதுவே தகுதியானதென்று தமது சிவந்த திருக்கரத்தினால் இடையிற் கட்டிய உடைவாளை எடுத்துக் கொடுத்தார், அத்தீங்கு தீர வேண்டு மென்னுங் கருத்துடையவராகிய புகழ்ச்சோழ நாயனார்.

வெந்தழற் சுடர்வாள் நீட்டும் வேந்தனை நோக்கிக் 'கெட்டேன்!
அந்தமில் புகழான் அன்புக் களவின்மை கண்டேன்' என்று
தந்தவாள் வாங்க மாட்டார் தன்னைத்தான் துறக்கும் என்று
சிந்தையால் உணர்வுற் றஞ்சி வாங்கினார் தீங்கு தீர்ப்பார். 43

(இ - ள்.) கொடிய நெருப்பைப் போலப் பிரகாசிக்கின்ற உடைவாளை எடுத்து தமதுகையிற் கொடுக்கின்ற புகழ்ச்சோழ நாயனாரது அன்பின் மிகுதியைப் பார்த்து. ஆ கெட்டேன்; அளவில்லாத புகழையுடைய இவ்வரசர் பெருமானது அன்புக்கு ஒரு அளவில்லாமையைக் கண்டேனென்று அவர்கொடுத்த உடைவாளை வாங்காதவராய்ப் பின்பு அதனை வாங்காதிருந் தால் தம்முயிரைத் தாமே மாய்த்துக் கொள்ளுவாரென்று மனதில் ஆலோசித்து அத்தீங்கை நீக்க வேண்டுமென்னுங் கருத் துள்ளவராய் அதனைத் தம் திருக்கரத்தில் வாங்கினார். எ-று.

வாங்கிய தொண்டர் முன்பு மன்னனார் தொழுது நின்றே
"ஈங்கென வாளி னாற்கொன் றென்பிழை தீர்க்க வேண்டி
ஓங்கிய உதவி செய்யப் பெற்றனன் இவர்பால்" என்றே
ஆங்கவர் உவப்பக் கண்ட எறிபத்தர் அதனுக் கஞ்சி. 44

(இ - ள்.) தாம் கொடுத்த உடைவாளை வாங்கிக்கொண்ட எறிபத்த நாயனாருக்கு முன்னே புகழ்ச்சோழநாயனார் வணங்கி நின்று இவ்விடத்தில் அடியேனை இவ்வுடை வாளினால் கொன்று யான் செய்த குற்றத்தைத் தீர்க்கும் பொருட்டு மிகுந்த உதவிசெய்ய இந்நாயனாரிடத்தில் அடியேன் பெற்றுக் கொண்டே னென்று அப்புகழ்ச்சோழநாயனார் சொல்ல, அவரது அன்பின் மிகுதியைக் கண்ட எறிபத்த நாயனார் அவ்வாறு செய்வதற்குப் பயப்பட்டு. - எ - று.

"வன்பெருங் களிறு பாகர் மடியவும் உடைவாளைத் தந்(து)
என்பெரும் பிழையி னாலே என்னையுங் கொல்லும் என்னும்
அன்பனார் தமக்குத் தீங்கு நினைந்தான்" என்று கொண்டு
முன்பென துயிர்செ குத்து முடிப்பதே முடிவென் றெண்ணி. 45

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) வலிய பெருமைபொருந்திய தமது பட்டத் துயானையும், பாகர்களும் மடிந்து போகவும் அதற்குச் சிறிதும் விசனப்படாமல் தமது கையிலுள்ள உடைவாளைக் கொடுத்து (அசாக்கிரதையாகவிருந்த) என்னுடைய பெரிய குற்றத்தினாலே அடியேனையுங் கொல்ல வேண்டுமென்று சொல்லுகிற சிவபத்தராகிய இவ்வரசருக்குத் தீங்குசெய்ய நினைத்தேனென்று தம்முள்ளத்திற் குறித்து முதலில் என்னுடைய உயிரை உடை வாளால் குத்தி இறக்கச் செய்வதே அப்பிழைக்குத் தக்க தீர்வு என்று நினைத்து. - எ - று.

புரிந்தவர் கொடுத்த வாளை அனபர்தங் கழுத்தில் பூட்டி
அரிந்திட லுற்ற போதில் அரசனும் "பெரியோர் செய்கை
இருந்தவா றிதுஎன்? கெட்டேன்!" என்றெதிர் கடிதிற் சென்று
பெருந்தடந் தோளால் கூடிப் பிடித்தனன் வாளுங் கையும். 46

(இ - ள்.) புகழ்ச்சோழ நாயனார் தம்மை வெட்டும்படி விரும்பிக் கொடுத்த உடைவாளை அன்பராகிய எறிபத்த நாயனார் தம்முடைய கழுத்தில் சேர்த்து அறுக்கத் தொடங்கின பொழுது, புகழ்ச்சோழ நாயனாரால் இப்பெரியோரது செய்கை யானது இருந்தவிதம் இவ்வாறு தானே? ஆ கெட்டேன்! என்று அவருக் கெதிரில் விரைந்து போய் விசாலமாகிய பெரிய கைகளினால் தொடர்ந்து (அவ்வாறு செய்யாமல்) வாளையும் கையையும் தடுத்துப் பிடித்தார். எ - று.

வளவனார் விடாது பற்ற மாதவர் வருந்து கின்ற
அளவிலாப் பரிவில் வந்த இடுக்கணை அகற்ற வேண்டிக்
களமணி களத்துச் செய்ய கண்ணுதல் அருளால் வாக்குக்
கிளரொளி விசும்பின் மேல்வந் தெழுந்தது பலருங் கேட்ப. 47

(இ - ள்.) புகழ்ச் சோழ நாயனார் கையைவிடாமல் பிடித்துக் கொள்ள பெரிய தவத்தினையுடைய எறிபத்த நாயனார் தமது எண்ணம் நிறைவேறாமல் வருத்தப்பட்டு நிற்க (அப்பொழுது) அளவில்லாத பேரன்பினாலுண்டாகிய துன்பத்தை அவ்விரு வருக்கும் நீக்கத் திருவுள்ளங் கொண்டு விஷத்தையணிந்த துன்பத்தை அவ்விருவருக்கும் நீக்கத் திருவுள்ளங் கொண்டு விஷத்தையணிந்த கண்டத்தையும், சிவந்த நெற்றிக்கண்ணையு முடைய சிவபெருமானது திருவருளினால் ஓர் அசரீரிவாக் கானது விளங்குகின்ற ஒளியினையுடைய ஆகாயத்தினின்று யாவருங் கேட்கும் படியாக எழுந்தது. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"தொழுந்தகை அன்பின் மிக்கீர்! தொண்டினை மண்மேற் காட்டச்
செழுந்திரு மலரை இன்று சினக்கரி சிந்தத் திங்கட்
கொழுந்தணி வேணிக் கூத்தர் அருளினால் கூடிற்" றென்றங்(கு)
எழுந்தது பாக ரோடும் யானையும் எழுந்த தன்றே. 48

(இ - ள்.) (அவ்வசரீரிவாக்கு எவ்வா றெழுந்த தென்றால்) யாவருந் தொழுதற்குத் தகுதியாகிய அன்பிற் சிறந்தவர்களே! உங்களுடைய திருத்தொண்டின் பெருமையை உலகத்தில் யாவருக்கும் காட்டும்படி செழிப்பாகிய சிறந்த புட்பங்களை இன்றையத்தினத்தில் கோபம் பொருந்திய பட்டவர்த்தன யானையானது சிந்தும்படியாக இளம் பிறையையணிந்த சடையினையுடைய சிவபெருமானது திருவருளினால் உண்டாயினது என்று அவ்விடத்து எழுந்தது; (அப்பொழுது) இறந்து கிடந்த ஐந்து பாகர்களோடும் யானையும் உயிர்பெற்றெழுந்தது. - எ - று.

ஈரவே பூட்டும் வாள்விட் டெறிபத்தர் தாமும் அந்த
நேரியர் பெருமான் தாள்மேல் விழுந்தனர்; நிருபர் கோனும்
போர்வடி வாளைப் போக எறிந்(து) அவர் கழல்கள் பற்றிப்
பார்மிசைப் பணிந்தான்; விண்ணோர் பனிமலர் மாரி தூர்த்தார். 49

(இ - ள்.) தமது கழுத்தை அறுத்துக் கொள்ளும்படியாகப் பூட்டிய உடைவாளை எறிபத்த நாயனார் கீழேவிட்டுப் புகழ்ச்சோழ நாயனாருடைய திருவடிகளில் விழுந்து வணங் கினார்; அரசர் பெருமானாகிய புகழ்ச் சோழ நாயனாரும் போர் செய்தற்குரிய கூர்மையாகிய உடைவாளைத் தூரத்திற் போகும் படி எறிந்துவிட்டு அவ்வெறிபத்த நாயனாரது திருவடிகளைத் துதித்துப் பூமியில் விழுந்து வணங்கினார். அதைக் கண்ட தேவர்கள் குளிர்ந்த புஷ்பமாரி பொழிந்தார்கள். எ - று.

இருவரும் எழுந்து வானில் எழுந்தபே ரொலியைப் போற்ற
அருமறைப் பொருளா யுள்ளார் அணிகொள்பூங் கூடை தன்னில்
மருவிய பள்ளித் தாமம் நிறைந்திட அருள மற்(று)அத் 50
திருவருள் கண்டு வாழ்ந்து சிவகாமி யாரும் நின்றார்.

(இ - ள்.) எறிபத்த நாயனாரும் புகழ்ச்சோழநாயனாரும் ஒருவரை யொருவர் வணங்கி எழுந்து நின்று ஆகாயத்திலிருந் துண்டாகிய அசரீரி வாக்கைத் துதிக்க, அரிய வேதத்தின் பொருளாயுள்ள சிவபெருமான் அழகிய புஷ்பக்குடலையில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்பு சேர்ந்திருந்த திருப்பள்ளித் தாமத்துக்குரிய மலர்கள் முன்பு போல நிறைந்திருக்கும் படி கிருபை செய்ய, அவ்வாறாகிய சிவபெருமானுடைய திருவருளைக்கண்டு அதனால் சிவானந்தப் பெருவாழ்வடைந்து சிவகாமியாண்டாரும் நின்றருளினார்.

மட்டவிழ் அலங்கல் வென்றி மன்னவர் பெருமான் முன்னர்
உட்டரு களிப்பி னோடும் உறங்கிமீ தெழுந்த தொத்து
முட்டவெங் கடங்கள் பாய்ந்து முகிலென முழங்கிப் பொங்கும்
பட்டவர்த் தனத்தைக் கொண்டு பாகரும் அணைய வந்தார். 51

(இ - ள்.) தேன் சிந்துகின்ற மலர் மாலையைத் தரித்த வெற்றி பொருந்திய அரசர் பெருமானாகிய புகழ்ச்சோழ நாயனாருக்கு முன்னே உள்ளத்திலுண்டாகிய களிப்பினோடும் நித்திரை செய்து பின் எழுந்ததைப் போல நாற்புறத்திலும் நிறைய வெவ்விய மத நீரைச் சொரிந்து மேகம் போலக் கர்ச்சித்து ஆரவாரிக்கின்ற பட்டவர்த்தன யானையை நடத்திக் கொண்டு பாகர்களும் அவர்களுக்குச் சமீபத்தில் வந்து சேர்ந்தார்கள். எ-று

ஆனசீர்த் தொண்டர் கும்பிட்(டு) "அடியனேன் களிப்ப இந்த
மானவெங் களிற்றில் ஏறி மகிழ்ந்தெழுந் தருளும்" என்ன
மேன்மையப் பணிமேற் கொண்டு வணங்கிவெண் குடையின் நீழல்
யானைமேற் கொண்டு சென்றார் இவுளிமேற் கொண்டு வந்தார். 52

(இ - ள்.) சிறப்புப் பொருந்திய தொண்டராகிய எறிபத்த நாயனார் புகழ்ச் சோழ நாயனாரை வணங்கி அடியேன் மனமகிழ்ச்சியடையும் படியாக இந்தப் பெருமை பொருந்திய வெவ்விய யானையின்மேல் ஏறி மகிழ்ச்சியோடு எழுந்தருளு மென்று சொல்ல, மேன்மையாகிய அந்தக் கட்டளையைச் சிரசின்மேல் வைத்துக் கொண்டு அவ்வெறிபத்த நாயனாரைத் தொழுது, முன்பு குதிரையின்மேல் ஏறிக்கொண்டு வந்த புகழ்ச்சோழ நாயனார் வெண் கொற்றக் குடையின் நிழலின் கீழ் அந்தப் பட்டவர்த்தன யானையின் மேலேறிக் கொண்டு போனார். எ - று.

அந்நிலை எழுந்த சேனை ஆர்கலி ஏழும் ஒன்றாய்
மன்னிய ஒலியின் ஆர்ப்ப மண்ணெலாம் மகிழ்ந்து வாழ்த்தப்
பொன்னெடும் பொதுவில் ஆடல் நீடிய புனிதர் பொற்றாள்
சென்னியிற் கொண்டு சென்னி திருவளர் கோயில் புக்கான். 53

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அவ்விடத்தில் திரண்டெழுந்த சேனைகள் சப்த சமுத்திரங்களும் ஒன்றாகக் கூடி ஒலித்தது போல ஆரவாரிக்கவும், இந்நிலவுலகத்திலுள்ளவர்கள் யாவரும் சந்தோஷித்துத் துதிக்கவும், நெடிய பொன்னம் பலத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற ஸ்ரீ நடராஜப் பெருமானது அழகிய திருவடிகளைச் சிரசில் பொருந்தத் தியானித்துக் கொண்டு புகழ்ச்சோழ நாயனார் தமது அழகிய அரண்மனையில் புகுந்தார். எ - று.

தம்பிரான் பணிமேற் கொண்டு சிவகாமி யாருஞ் சார
எம்பிரான் அன்ப ரான எறிபத்தர் தாமும் "என்னே!
அம்பலம் நிறைந்தார் தொண்டர் அறிவதற் கரியார்" என்று
செம்பியன் பெருமை உன்னித் திருப்பணி நோக்கிச் சென்றார். 54

(இ - ள்.) சிவபெருமானுக்குத் தாம் திருப்பள்ளித்தாமம் சமைத்துச் சாத்துகின்ற திருப்பணியை மேற்கொண்டு சிவகாமி யாண்டாரும் திருக்கோயிலுக்குப் போக, எமது பரமசிவனுக்கு அன்பராகிய எறிபத்தநாயனாரும் இது என்ன ஆச்சரியம்; பொன்னம் பலத்தில் திருநடனஞ் செய்தருளுகின்ற சிவபெருமானது அடியவர்கள் யாவராலும் அளவிட்டுரைப்பதற்கரியவரென்று புகழ்ச் சோழ நாயனாரது அன்பின் மேன்மையைத் திருவுள்ளத்து நினைத்துத் தாம் செய்கின்ற திருப்பணியைக் குறித்துச் சென்றருளினார். - எ - று.

மற்றவர் இனைய வான வன்பெருந் தொண்டு மண்மேல்
உற்றிடத் தடியார் முன்சென் றுதவியே நாளு நாளும்
நற்றவக் கொள்கை தாங்கி நலமிகு கயிலை வெற்பிற்
கொற்றவர் கணத்தின் முன்னாம் கோமுதல் தலைமை பெற்றார். 55

(இ - ள்.) அவ்வெறி பத்தநாயனார் சிவகாமியாண்டாருக்கு நேர்ந்த ஆபத்தைத் தீர்த்தது போல அநேகம் வலிமையாகிய பெரிய திருத்தொண்டுகளை உலகத்தில் அடியார்களுக்கு ஆபத்துவந்தபோது அவர்களுக்கு முன்சென்று அவ்வாபத்தை நீக்கி நாள்தோறும் நல்ல தவநெறியை மேற்கொண்டு மேன்மை மிகுந்திருக்கும் ஸ்ரீ கயிலாயத்தில் வெற்றி பொருந்திய சிவகணங்களுக்கு முன்னே சிறந்த தலைவராயிருக்கின்ற முதன்மையைப் பெற்றார். - எ - று.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மையும் தம்மைக் கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற வளவனார் பெருமை தானும்
நாளுமற் றவர்க்கு நல்கும் நம்பர்தாம் அளக்கி லன்றி
நீளும்இத் தொண்டின் நீர்மை நினைக்கில்ஆர் அளக்க வல்லார்? 56

(இ - ள்.) நம்மை அடிமையாகவுடைய எறிபத்த நாயனார் செய்த திருத்தொண்டின் வல்லமையையும் (சிவகாமியாண்டார் விஷயத்தில் யானையானது செய்த தீங்கு காரணமாகத்) தம்மைக் கொல்லும்படி உடைவாளைக் கொடுத்து நின்ற புகழ்ச் சோழ நாயனாரது பெருமையையும் நாள்தோறும் அவ்விருவர்களுக்குந் திருவருள் செய்கின்ற சிவபெருமானே அளவிட வேண்டுமேயல்லாமல், உயர்ந்த இத்திருத் தொண்டின் பெருமையை ஆலோசிக்குமிடத்து வேறேயாவர் அளவிட்டுரைக்கவல்லவர்கள்; (ஒருவருமில்லை.) - எ - று.

தேனாரும் தண்பூங் கொன்றைச் செஞ்சடை யவர்பொற் றாளில்
ஆனாத காதல் அன்பர் எறிபத்தர் அடிகள் சூடி
வானாளும் தேவர் போற்றும் மன்றுளார் நீறு போற்றும்
ஏனாதி நாதர் செய்த திருத்தொழில் இயம்ப லுற்றேன். 57

(இ - ள்.) தேன் பொருந்திய குளிர்ந்த கொன்றைமலர் மாலையைத் தரித்த சிவந்த சடையினையுடைய சிவபெருமானது அழகிய திருவடிகளில் நீங்காத பேரன்பினையுடையவராகிய எறிபத்த நாயனாரது திருவடிகளை எமது சிரசின்மேல் தரித்துக் கொண்டு, விண்ணுலகத்தை யாளுகின்ற தேவர்களும் வணங்குகின்ற ஸ்ரீ நடராஜப் பெருமானது திருவெண்ணீற்றினையே மெய்ப் பொருளாகக் கருதி அன்பு செலுத்திய ஏனாதி நாதநாயனார் செய்த திருத்தொண்டின் செய்கையைச் சொல்லத் தொடங்கினேன். - எ - று.

எறிபத்த நாயனார் புராணம் முற்றிற்று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15. ஏனாதி நாதநாயனார் புராணம்

புண்டரிகம் பொன்வரைமேல் ஏற்றிப் புவியளிக்கும்
தண்டரள வெண்கவிகைத் தார்வளவர் சோணாட்டில்
வண்டறைபூஞ் சோலைவயல் மருதத்தண் பணைசூழ்ந்(து)
எண்டிசையும் ஏறியசீர் எயின்மூதூர் எயினனூர். 1

(இ - ள்.) புலிக்கொடியைப் பொன்மயமாகிய இமயமலையின்மேல் நாட்டி உலகத்தை அரசாட்சி செய்கின்ற குளிர்ந்த வெண்மையாகிய முத்துக்குடையினையுடைய ஆத்திமாலையைத் தரித்த சோழராஜாக்களது இராஜதானியாகிய சோழ தேசத்தில் வண்டுகள் சப்திக்கின்ற பூஞ்சோலைகளும், வயல்களையுடைய குளிர்ந்த மருதநிலமுஞ் சூழ்ந்த, எட்டுத் திக்குகளிலும் பரவிய சிறப்பினையுடைய பழமையாகிய ஊரானது எயினனூராம். - எ - று.

வேழக் கரும்பினொடு மென்கரும்பு தண்வயலில்
தாழக் கதிர்ச்சாலி தானோங்குந் தன்மையதாய்
வாழக் குடிதழைத்து மன்னியஅப் பொற்பதியில்
ஈழக் குலச்சான்றார் ஏனாதி நாதனார். 2

(இ - ள்.) வேழக் கரும்புகளோடு மெல்லிய கரும்புகளும் குளிர்ச்சி பொருந்திய வயல்களில் தம் வளர்ச்சியை தாழும்படி கதிர்களையுடைய செந்நெற்பயிர்கள் ஓங்கி வளருகின்ற தன்மையையுடையதாய் வாழ்கின்ற அங்குள்ள குடிகள் தழைத்து நிலைபெற்றிருக்கின்ற அந்த அழகிய எயினனூரில் ஈழக்குலத்தில் அவதரித்த சான்றார் மரபினையுடையவர் (அவர் யாரெனில்) ஏனாதி நாதநாயனார் என்று சொல்லப்பட்டவர். - எ - று.

தொன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டின்
நன்மைக்கண் நின்ற நலம்என்றுங் குன்றாதார்
மன்னர்க்கு வென்றி வடிவாட் படைபயிற்றும்
தன்மைத் தொழில் வஞ்சை யில்தலைமை சார்ந்துள்ளார். 3

(இ - ள்.) (அந்நாயனார்) பழமையாகிய திருவெண்ணீற்றின் மேல் அன்புவைத் தொழுகுகின்ற திருத்தொண்டினது நன்மையாகிய வழிபாட்டில் நிற்கின்ற நலத்தில் சிறிதுங் குறையாதவர்;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரசர்களுக்கு வெற்றி பொருந்திய கூர்மையாகிய வாட்படையைப் பயிற்றுவிக்குந் தன்மையாகிய வாள்வித்தையிலே முதன்மையாயிருக்கின்றவர். - எ - று.

வாளின் படைபயிற்றி வந்த வளமெல்லாம்
நாளும் பெருவிருப்பால் நண்ணுங் கடப்பாட்டில்
தாளும் தடமுடியும் காணாதார் தம்மையுந்தொண்(டு)
ஆளும் பெருமான் அடித்தொண்டர்க் காக்குவார். **4**

(இ - ள்.) வாள் வித்தையை யாவருக்குங் கற்பித்து அதனால் வந்த பொருள்களையெல்லாம்,திருவடிகளையும் விசாலமாகிய திருமுடியினையும் தேடிக்காணாதவர்களாகிய திருமால் பிரமன் என்னு மிருவரையும் அடிமையாகக் கொண்டருளிய சிவபெருமானது திருத்தொண்டர்களுக்கு எப்பொழுதும் மிகுந்த விருப்பத்தோடு பொருந்திய ஈகைக்குணத்தினால் கொடுக்கின்றவர். - எ - று.

நள்ளார் களும்போற்றும் நன்மைத் துறையின்கண்
எள்ளாத செய்கை இயல்பின் ஒழுகுநாள்
தள்ளாத தங்கள் தொழிலுரிமைத் தாயத்தின்
உள்ளான் அதிசூரன் என்பான் உளனானான். **5**

(இ - ள்.) தமக்குப் பகைவர்களாயுள்ளவர்களும் புகழத் தகுந்த நன்மையாகிய சிவபக்தி மார்க்கத்தில் யாவரும் நிந்திக்காத நற்செய்கையாகிய முறைமையோடு வாழ்கின்ற காலத்தில், தள்ளக்கூடாத வாள்வித்தை கற்றுக் கொடுத்தலாகிய தங்கள் தொழிலின் உரிமைக்குரிய தாயாதிகள் மரபில் பிறந்தவனாகி அதிசூரனென்னும் பெயரையுடைய ஒருவனிருந்தான். - எ - று.

மற்றவனுங் கொற்ற வடிவாட் படைத் தொழில்கள்
கற்றவர்கள் தன்னிற் கடந்துள்ளார் இல்லையெனும்
பெற்றிமையான் மாநிலத்து மிக்க பெருமிதம் வந்(து)
உற்றுலகில் தன்னையே சால மதித்துள்ளான். **6**

(இ - ள்.) அவ்வதிசூரனென்னபவனும் வெற்றி பொருந்திய கூரிய வாள்வித்தையைக் கற்றுக் கொண்டவர்களில் தன்னைப் பார்க்கிலும் சிறந்தவர்கள் ஒருவருமில்லையென்று சொல்லுந் தன்மையையுடையவனாகிப் பெரிய இந்நிலவுலகத்தில் மிகுந்த கர்வத்தையடைந்து (பிறரைச் சிறிது மதியாமல்) தனக்குத் தானே சமானமென்று தன்னை மிகுதியும் மதித்துக் கொண்டிருந்தான். எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தானாள் விருத்திகெடத் தங்கள்குலத் தாயத்தின்
ஆனாத செய்தொழிலாம் ஆசிரியத் தன்மைவளம்
மேனாளும் தான்குறைந்து மற்றவர்க்கே மேம்படலால்
ஏனாதி நாதர்திறத்(து) ஏலா இகல்புரிந்தான். 7

(இ - ள்.) தான் அனுபவித்து வருகின்ற விருத்தியானது கெடும்படி தங்கள் மரபிற்குரிய தாயாதிகளுக்குக் குறையாத செய் தொழிலாகிய ஆசாரியத்தன்மையினால் வருகின்ற வருவாயானது நாளுக்கு நாள் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து ஏனாதி நாதநாயனாருக்கே அதிகப்பட்டு வருவதினால் அந்நாயனார் விஷயத்தில் நியாயவிரோதமாகப் பகைசெய்து கொண்டான். - எ - று.

கதிரோன் எழமழுங்கிக் கால்சாயுங் காலை
மதிபோல் அழிந்துபொறா மற்றவனுஞ் சுற்றப்
பதியோ ருடன்கூடப் பண்ணி அமர்மேற்சென்(று)
எதிர்போர் விளைப்பதற்கே எண்ணித் துணிந்தெழுந்தான். 8

(இ - ள்.) சூரியன் உதயஞ்செய்ய ஒளிமழுங்கிய இருளடைகின்ற காலைவேளையில் தோன்றும் அபரபக்ஷத்துச் சந்திரனைப் போல தனது விருத்திகளனைத்தும் கெட்டு அதனைப் பொறுக்க லாற்றாத அவ்வதி சூரனும் தனது உறவினராகிய அவ்வூரிலுற்ற வர்களைத் தனக்குத் துணையாக வரும்படி செய்து கொண்டு ஏனாதி நாத நாயனார் மேல் சென்று எதிராகப் போர் செய்வ தற்கே எண்ணி மனத்தில் துணிவு கொண்டு எழுந்தான். - எ - று.

தோள்கொண்ட வல்லாண்மைச் சுற்றத் தொடுந்துணையாம்
கோள்கொண்ட போர்மள்ளர் கூட்டத் தொடுஞ்சென்று
'வாள்கொண்ட தாயம் வலியாரே கொள்வ' தென
மூள்கின்ற செற்றத்தான் முன்கடையில் நின்றழைத்தான். 9

(இ - ள்.) தோள்களில் மிகுந்த வல்லமையைப் பெற்ற தனது உறவினரோடும் உதவியாக வந்த வலிய போர்வீரர்களின் கூட்டத் தோடும் போய் வாள்வித்தையினால் நாம் அனுபவிக்கும் பங்கின் உரிமையை யாவர் வல்லவர்களோ அவர்களே கொள்வதற்கு உரியவர்களென்று மிகுந்த கோபத்தோடு அவரது தலைவாயிலில் வந்து நின்றுகொண்டு போர் செய்வதற்கு அழைத்தான். - எ - று.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெங்கட் புலிகிடந்த வெம்முழையிற் சென்றழைக்கும்
பைங்கட் குறுநரியே போல்வான் படைகொண்டு
பொங்கிப் புறஞ்சூழ்ந்து போர்குறித்து நேர்நின்றே
அங்கட் கடைநின் றழைத்தான் ஒலிகேளா. 10

(இ - ள்.) கொடிய கண்களையுடைய புலியானது வாசஞ் செய்கின்ற பயங்கரமாகிய மலைக் குகையினிடத்திற்போய் அதனைச் சண்டை செய்வதற்கு அழைக்கின்ற திருட்டுப் பார்வையையுடைய சிறிய நரியையொத்த அவ்வதிசூரன் ஆயுதங்களைக் கையில் தாங்கிக்கொண்டு கோபித்து (தானும் தன்னுடன் வந்தவர்களும்) அவரது இருக்கையைச் சூழ்ந்து யுத்தத்தைக்குறித்து நேராக நின்று அழகிய தலைக்கடை வாயிலில் நின்று கொண்டு அழைத்த அவ்வதிசூரனது ஒலியை ஏனாதி நாதநாயனார் தமது காதிற் கேட்டு. - எ - று.

"ஆர்கொல் பொரஅழைத்தார்?" என்றரியேற் றிற்கிளர்ந்து
சேர்வு பெறக்கச்சில் செறிந்தவுடை மேல்வீக்கி
வார்கழலுங் கட்டி வடிவாட் பலகைகொடு
போர்முனையில் ஏனாதி நாதர் புறப்பட்டார். 11

(இ - ள்.) போர் செய்வதற்கு எம்மை அழைத்தவர்கள் யாவரென்று ஆண்சிங்கம் போலக் கர்ச்சித்து, இடையில் உறுதியாகப் பொருந்தக் கச்சோடு சேர்ந்த ஆடையை மேலே கட்டி, நீண்ட வீரக்கழலைக் காலில் தரித்து, கூர்மையாகிய வாளாயுதத்தையும், கேடகத்தையும் கையில் தாங்கிக் கொண்டு யுத்தமுகத்தில் ஏனாதி நாதநாயனார் புறப்பட்டார். - எ - று.

புறப்பட்ட போதின்கட் போர்த்தொழில்கள் கற்கும்
விறற்பெருஞ்சீர்க் காளையர்கள் வேறிடத்து நின்றார்
மறப்படைவாட் சுற்றத்தார் கேட்டோடி வந்து
செறற்கரும்போர் வீரர்க் கிருமருங்குஞ் சேர்ந்தார்கள். 12

(இ - ள்.) ஏனாதி நாதநாயனார் இவ்வாறு போர்க்கோலங் கொண்டு புறப்பட்டபொழுது அவரிடத்தில் யுத்தத் தொழிலைக் கற்றுக் கொண்டிருக்கும் வலிய பெருஞ் சிறப்பினையுடைய பாலிய புருஷர்களும், வேறிடங்களிலிருந்து கற்றுக் கொண்டவர்களாகிய கொடிய வாளாயுதத்தைப் பிடித்த உறவினர் களும் இந்தச் சங்கதியைக் கேள்விப்பட்டு விரைந்து ஓடி வந்து ஒருவராலும் செயித்தற் கரிய யுத்தவீரராகிய அந்நாயனார்க்கு இரண்டு பக்கத்திலுஞ் சூழ்ந்து கொண்டார்கள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்தழைத்த மாற்றான் வயப்புலிப்போத் தன்னார்முன்
"நந்தமது வாட்பயிற்று நற்றாயங் கொள்ளுங்கால்
இந்தவெளி மேற்கை வகுத்திருமேம் பொருபடையும்
சந்தித் தமர்விளைத்தால் சாயாதார் கொள்வ"தென. 13

(இ - ள்.) தலைவாசலில் வந்து போர் செய்யக் கருதி அழைத்த பகைவனாகிய அதிசூரனானவன் வெற்றி பொருந்திய ஆண்புலியை யொத்த ஏனாதி நாதநாயனாருக்கு முன்னே நின்று நமது மரபினுக்குரிய வாள்வித்தையைக் கற்றுக் கொடுப்பதனால் வருகின்ற சிறந்த பங்கினுரிமையை நாமிருவரும் அனுபவிக்குமிடத்து இவ்விடத்திலுள்ள வெளியில் நம்மிருவர் சேனைவீரர்களையும் அணிவகுத்து எதிர்த்து யுத்தஞ் செய்தால் அதில் தோல்வியடையாமல் வெற்றி பெறுகின்றவர்கள்யாரோ? அவர்களே அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டியது என்று. - எ - று.

என்றுபகைத் தோனுரைப்ப ஏனாதிநாதர் "அது
நன்றுனக்கு வேண்டுமேல் நண்ணுவன்"என் றுள்மகிழ்ந்து
சென்றவன்முன் சொன்ன செருக்களத்துப் போர்குறிப்பக்
கன்றி இருபடையும் கைவகுத்து நேர்மலைவார். 14

(இ - ள்.) இவ்விதமாகப் பகைவனாகிய அதிசூரன் சொல்ல (அதனைக் கேட்ட) ஏனாதி நாதநாயனார் (அவனைப் பார்த்து) நீ சொல்லியது நன்றாயிருக்கின்றது; உனக்கு என்னோடு எதிர்த்துப் போர்செய்யச் சம்மதமிருக்குமானால் நானும் உன்னோடு யுத்தஞ் செய்வதற்குச் சித்தமாயிருக்கின்றேனென்று மனமகிழ்ந்து தம்முடைய யுத்தவீரர்களை அழைத்துக் கொண்டு சென்று அவ்வதிசூரன் முன்பு சொன்னயுத்தக் களத்தில் போர் செய்வதற்கு உரியாகலத்தை நிச்சயிக்க மேல் இருவர்களுடைய யுத்தவீரர்களும் ஒருவர்க்கொருவர் கோபங் கொண்டு அணிவகுத்து எதிர்த்துப் போர் செய்யத் தொடங்கினார்கள். - எ - று.

மேக ஒழுங்குகள் முன்கொடு மின்னிரை தம்மிடை யேகொடு
மாக மருங்கினும் மண்ணினும் வல்லுரு மேறெதிர் செல்வன
வாக நெடும்பல கைக்குல மாள்வினை வாளுடை யாடவர்
காக மிடைந்த களத்திரு களத்திரு கைகளின் வந்து கலந்தனர். 15

(இ - ள்.) வலிய இடியேறுகள் மேகக்கூட்டங்களைத் தம்முன்னே கொண்டு மின்னலின் வரிசைகளைத் தம்மிடத்திற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெற்றுக்கொண்டு ஆகாயத்திலும் பூமியிலுலும் ஒன்றற் கொன்று எதிரெதிராகப் போவது போல நெடிய கேடகக் கூட்டங்களையும், பகைவர்களைக் கொலை செய்யுந் தொழிலை யுடைய வாளாயுதத்தையுமுடைய யுத்தவீரர்கள் (இறந்தவர் களின் மாமிசங்களைத் தின்னும்பொருட்டுக்) காகங்கள் மிகுதியாக நெருங்கியிருக்கின்ற யுத்தகளத்தில் இரண்டு படை வகுப்பிலும் வந்து சேர்ந்தார்கள். - எ - று.

கால்கழல் கட்டிய மள்ளர்கள் கைகளின் மெய்கள் அடக்கிய
வாளொளி வட்ட முனைத்திட வந்திரு கைகளின் முந்தினர்;
வேலொடு வேலெதிர் நீள்வன; மேவிய பாதலம் விட்டுயர்
ஞாலமு றும்பணி வீரர்கள் நாநிமிர் கின்றன ஒத்தன. 16

(இ - ள்.) (வெற்றியைக்குறித்துத்) தமது கால்களில் வீரக் கழலையணிந்த யுத்தவீரர்கள் தங்கள் கைகளில் ஏந்தப்பட்டு, அவர்களுடம்புகளை மறைத்துக் கொண்டிருக்கின்ற மிகுந்த ஒளிபொருந்திய கேடகங்கள் சுழல இருதிறத்தார் படை வகுப்பிலும் வந்து சேர்ந்தார்கள், (அவர்கள் எதிர்த்துப் போர் செய்யுங்கால்) வேற்படைகளோடு வேற்படைகள் எதிரெதிராக நீண்டு கொண்டிருத்தல் (எப்படியிருந்ததென்றால்) நாக ராஜாக்கள் தாங்கள் வாசஞ் செய்கின்ற பாதாளலோகத்தை விட்டு உயர்ந்த இந்நிலவுலகத்தில் வந்து தங்கள் நாக்களை எதிர் நீட்டுதலுக்கு ஒப்பாயிருந்தன. - எ - று.

வெங்கண் விறற்சிலை வீரர்கள் வேறிரு கையிலும் நேர்பவர்
தங்கள் சிலைக்குலம் உந்தின தாவில் சரங்கள் நெருங்குவ
பொங்கு சினத்தெரி யிற்புகை போகு கொடிக்கள் வளைத்தெதிர்
செங்கண் விழிக்கனல் சிந்திய சீறு பொறிச்செல வொத்தன. 17

(இ - ள்.) வெவ்வேறாகிய இருதிறத்தார் படை வகுப்பிலும் எதிர்த்துப்போர் செய்கின்ற கோபக்கண்களையுடைய வெற்றி பொருந்திய வில்வீரர்கள் தங்கள் கையிற்பிடித்த விற் கூட்டத்தினின்றும் புறப்பட்ட கெடுதலில்லாத அம்புகள் ஒன்றோடொன்று நெருங்கியிருத்தல், மிகுந்த கோபமாகிய நெருப்பினின்றும் எழும்பிய கொடிபோன்று நீண்ட புகைகள் சுற்றி எதிரெதிரார்கச் சிவந்த கண்களினின்றும் எழும்பிய கோபாக்கினியினால் சிந்திய பொறிகள் விழுவதை ஒத்திருந்தன. எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாளொடு நீள்கை துடித்தன; மார்பொடு வேல்கள் குளித்தன;
தோளொடு வாளி நிலத்தன; தோலொடு தோல்கள் தகைத்தன;
தாளொடு வார்கழல் இற்றன; தாரொடு சூழ்சிரம் அற்றன;
நாளொடு சீறி மலைப்பவர் நாடிய போர்செய் களத்தினில். 18

(இ - ள்.) தங்கள் வாழ்நாள்களைக் கருதாமல் அவற்றோடு கோபித்துத் துணிந்து யுத்தஞ் செய்கின்ற வீரர்கள் விரும்பிய அந்தப் போர்க்களத்தில் வாளாயுதத்தோடு நீண்ட கைகள் அறுபட்டுவிழுந்து துடித்தன; மார்புகளில் வேலாயுதங்கள் பாய்ந்து முழுகின; வெட்டுப்பட்ட தோள்களோடு அம்புகளும் பூமியில் விழுந்துகிடந்தன; கேடகங்களோடு கேடகங்கள் நெருக்கமாயிருந்தன; கால்களோடு அக்கால்களில் கட்டிய வீரக்கழல்கள் அறுபட்டுக் கிடந்தன; மாலையோடு சூழ்ந்த தலைகள் அறுந்துகிடந்தன. - எ - று.

குருதியின் நதிகள் பரந்தன; குறையுடல் ஓடி அலைந்தன;
பொருபடை அறுதுணி சிந்தின; புடைசொரி குடர் உடல் பம்பின;
வெருவர எருவை நெருங்கின; விசியறு துடிகள் புரண்டன;
இருபடை தனினும் எதிர்ந்தவர் எதிரெதிர் அமர்செய் பறந்தலை. 19

(இ - ள்.) இருதிறத்தார் சேனைகளிலும் எதிர்த்தவர்கள் எதிரெதிராகப் போர் செய்கின்ற யுத்தகளத்தில் இறந்தவர்களின் இரத்தமாகிய ஆறுகள் பரவியோடின; தலையறுபட்ட கவந்தங்கள் ஓடியலைந்து கொண்டிருந்தன; போர் செய்கின்ற படை வீரர்களின் உடல் அற்ற துண்டுகள் சிந்திக்கிடந்தன; பக்கங்களின் ஒருபுறமாகச் சரிந்த குடல்களையுடைய உடம்புகள் நிறைந்து கிடைந்தன; யாவரும் அஞ்சும்படி கழுகுகள் நெருங்கின; வார் அறுந்த உடுக்கைகள் எங்கும் புரண்டு கொண்டிருந்தன. - எ - று.

நீளிடை முடுகி நடந்தெதிர் நேரிரு வரிலொரு வன்றொடர்
தாளிரு தொடையற முன்பெயர் சாரிகை முறைமை தடிந்தனன்;
வாளொடு விழுமுடல் வென்றவன் மார்பிடை அறமுன் எறிந்திட 20
ஆளியின் அவனு மறிந்தனன்; ஆயினர் பலருள ரெங்கணும்.

(இ - ள்.) நெடுந்தூரம் வரையில் விரைவாய் நடந்து நேராக எதிர்த்த இரண்டு வீரர்களில் ஒருவன் தன்னைத் தொடர்ந்த மற்றொருவனது இரண்டு கால்களும் துடைகளும் அற்று விழும்படி முன்னே போகின்ற சாரிகை வரிசையால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெட்டினான், (அப்படி வெட்டப்பட்டு) வாளாயுதத்தோடு பூமியில் விழுகின்ற உடம்பானது தன்னைச் செயித்த பகைவனுடைய மார்பானது இடையில் அறும்படி தன்னை வெட்டுவதற்கு முன்னே வீசி வெட்ட, சிங்கம் போன்ற அவ்வீரனும் இறந்தான்; இவ்விதமாக இறந்த அநேகம் சுத்தவீரர்கள் அப்போர்க்களத்தில் எங்கும் விழுந்து கிடந்தார்கள். - எ- று.

கூர்முனை அயில்கொடு முட்டினர் கூடிமுன் உருவிய தட்டுடன்
நேருரம் உருவ உரப்புடன் நேர்பட எதிரெதிர் குத்தினர்
ஆருயி கழியவும் நிற்பவர் ஆண்மையில் இருவரும் ஒத்தமை
போரடு படைகொ டளப்பவர் போல்பவர் அளவிலர் பட்டனர். ***21***

(இ - ள்.) கூர்மையாகிய முனைகளையுடைய வேலாயுதங் களைக் கையிற்பிடித்துக் கொண்டு எதிர்த்துப் போர் செய்த வீரர்கள் நெருங்கி முன் உருவியிருக்கின்ற கேடகத்தோடு நேராக மார்பில் உருவும்படி உறுதியாக எதிரெதிராகக் குத்திக் கொண்டவர்களாய்ப் பெறுதற்கரிய உயிர் நீங்கவும் நின்று கொண்டிருப்பவர்கள் தங்கள் வல்லமையில் இருவரும் ஒத்திருத்தலைப் போர் செய்கின்ற ஆயுதங்களைக் கொண்டு அளப்பவர்களைப் போன்றிருந்தார்கள், இவ்விதமாக அளவில்லாத போர் வீரர்கள் இறந்தார்கள். - எ - று.

பொற்சிலை வளைய எதிர்ந்தவர் புற்றர வனைய சரம்பட
விற்படை துணியவும் நின்றிலர் வெற்றிகொள் சுரிகை வழங்கினர்
முற்றிய பெருவளன் இன்றியும் முற்படு கொடைநிலை நின்றிட
உற்றன உதவிய பண்பினர் ஒத்தனர் உளர்சில கண்டகர். ***22***

(இ - ள்.) அழகியவிற்கள் வளையும்படி எதிர்த்தவர்கள் புற்றிலிருக்கும் பாம்பையொத்த அம்புகள் படுதலால் தங்கள் கையிலிருக்கும் வில்லுகள் துண்டாகவும், வீணாக நிற்காமல் வெற்றி பொருந்திய உடைவாளை அப்பாணங்களுக்குப் பதிலாகப் பிரயோகித்தார்கள், அதனால், நிரம்பிய பெருஞ் செல்வங்கள் குறைந்திருந்த காலத்தும் தாங்கள் முன்பு கொடுத்துக் கொண்டிருந்த கொடையானது கெடாமல் நிலை நிற்கும்படி தமக்கு இயன்ற பொருள்களை யாசிப்பவர்களுக்குக் கொடுக்கின்ற ஈகைக்குணமுடையதாதாக்களை ஒத்தவர்களாய் இருந்தார்கள் சிலபோர் வீரர்கள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடன்முனை மறவர் மடிந்தவர் அலர்முகம் உயிருள வென்றுறு
படர்சிறை சுலவு கருங்கொடி படர்வன கழல்வன துன்றலில்
விடுசுடர் விழிகள் இரும்புசெய் வினைஞர்தம் உலையின் முகம்பொதி
புடைமிடை கரியிடை தங்கிய புகைவிடு தழலை நிகர்த்தன. 23

(இ - ள்.) போர் முகத்தில் இறந்த வீரர்களுடைய மலர்ந்த முகங்களைப் பார்த்து இவ்வுடலில் இன்னும் உயிரிருக்கின்றன வென்று (மாமிசங்களையுண் பதற்கு) அங்குவந்த படர்ந்த சிறகினை யுடைத்தாய்ச் சூழ்ந்து கொண்டிருக்கின்ற கரிய காகங்கள் நாற்புறங்களிலும் நெருங்கியும், நீங்கிச் சூழ்ந்து கொண்டும் இருத்தலால், இறந்த வீரர்களின் பிரகாசிக்கின்ற கண்கள் இரும்புவேலை செய்கின்ற கொல்லர்களுடைய உலை முகத்தின் போட்டிருக்கின்ற சூழ்ந்து நெருங்கிய கரிகளின் மத்தியில் தங்கிய புகையை வீசுகின்ற நெருப்பினை யொத்திருந்தன. - எ - று.

திண்படை வயவர் பிணம்படு செங்கள மதனிடை முன்சிலர்
புண்படு வழிசொரி யுங்குடர் பொங்கிய கழுகு பருந்தொடு
கொண்டெழு பொழுதினும் முன்செயல் குன்றுதல் இலர்தலை நின்றனர்
விண்படர் கொடிவிடு பண்பயில் விஞ்சையர் குமரரை வென்றனர். 24

(இ - ள்.) வலிய படையினையுடைய வீரர்கள் இறந்து கிடக்கின்ற யுத்தகளத்தில் சில வீரர்களின் உடலில் ஆயுதங்களினால் காயம்பட்டவிடத்தில் நின்றும் சரிந்த குடல்களை மிகுந்த கழுகுகளும் பருந்துகளும் கௌவிக்கொண்டு மேலே எழும்பிய பொழுது, முன்னே அவர்களுக்குண்டாயிருந்த தைரியத்தில் சிறிதும் குறையாமல் நின்று கொண்டிருந்தார்கள்; ஆதலால் அவர்கள் ஆகாயத்தில் பறக்கும்படி காற்றாடியை விட்டு விளையாடுகின்ற வித்தையையுடைய சிறுவர்களை அத்தொழிலால் வென்றார்கள். - எ - று.

இம்முனைய வெம்போரில் இருபடையின் வாள்வீரர்
வெம்முனையில் வீடியபின் வீடாது மிக்கொழிந்த
தம்முடைய பல்படைஞர் பின்னாகத் தாமுன்பு
தெம்முனையில் ஏனாதி நாதர் செயிர்த்தெழுந்தார். 25

(இ - ள்.) இவ்விதமாகக் கொடிய யுத்தமுனையில் இரண்டு சேனைகளிலுமுள்ள வாளையேந்திய சுத்தவீரர்கள் கொடிதாகிய யுத்தத்தில் இறந்த பின்பு இறவாமல் மிகுதியாக இருந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தம்முடைய பல படைவீரர்களும் பின்னே நிற்கத் தாம் முன்னாகப் போர் முகத்தில் ஏனாதி நாதநாயனார் கோபித்துப் போர் செய்வதற்கு எழுந்தார். - எ- று.

வெஞ்சினவாள் தீயுமிழ வீரக் கழல்கலிப்ப
நஞ்சணிகண் டர்க்கன்பர் தாம்எதிர்ந்த ஞாட்பின்கண்
எஞ்சிஎதிர் நின்ற இகல்முனையில் வேலுழவர்
தஞ்சிரமும் தோளுரமும் தாளுரமும் தாந்துணிந்தார். 26

(இ - ள்.) வெவ்விய கோபத்தோடு வாளாயுதமானது நெருப்பினைக் கக்க, பாதங்களில் தரித்த வீரக்கழலானது சப்திக்க, காளகண்டராகிய சிவபெருமானுக்கு அன்பராகிய ஏனாதி நாதநாயனார் தாம் எதிர்த்துச் செய்கின்ற போர்க் களத்தில் (அதிசூரன்பக்ஷத்தில் இறந்தவர்கள் போக இறவாமல்) மிகையாக எதிரே நின்ற போர்முனையில் வந்த வேலைப் பிடித்த வீரர்களுடைய தலைகளையும், தோள்களையும், மார்புகளையும், வலிய கால்களையும் விழும்படி வெட்டினார். - எ - று.

தலைப்பட்டார் எல்லாரும் தனிவீரர் வாளிற்
கொலைப்பட்டார்; முட்டாதார் கொல்களத்தை விட்டு
நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதற் குற்றம்போ லாயினார். 27

(இ - ள்.) போர் செய்வதற்கு எதிர்த்தவர்களெல்லாம் ஒப்பற்ற சுத்தவீரராககிய ஏனாதி நாதநாயனாருடைய கையிலுள்ள வாளாயுதத்தினால் கொலை செய்யப் பட்டார்கள்; அவரை எதிர்க்காதவர்கள் கொலை செய்கின்ற யுத்தகளத்தை விட்டு நிலையாகிய உண்மையறிவானது ஒருவனுக்கு உண்டான பொழுது அவனைவிட்டு நீங்குகின்ற காம முதலிய குற்றங்களைப் போலானார்கள். - எ - று.

இந்நிலைய வெங்களத்தில் ஏற்றழிந்த மானத்தால்
தன்னுடைய பல்படைஞர் மீண்டார் தமைக்கண்டு
மின்னொளிவாள் வீசி விறல்வீரர் வெம்புலியே(று)
அன்னவர்தம் முன்சென்(று) அதிசூரன் நேரடர்ந்தான். 28

(இ - ள்.) இப்படிப்பட்ட தன்மையையுடைய வெவ்விய யுத்தகளத்தில் எதிர்த்துத் தான் தோல்வியடைந்த அவமானத் தினால் அதிசூரனானவன் தோற்றோடித்திரும்பிவந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்னுடைய பலபடைவீரர்களையும் அழைத்துக் கொண்டு, மின்னலைப் போல விளங்குகின்ற வாளாயுதத்தை வீசிக் கொண்டு கொடிய ஆண்புலியையொத்த சுத்தவீரராகிய ஏனாதி நாதநாயனாருக்கு முன்னே போய் எதிர்த்து யுத்தஞ் செய்தான். எ- று.

மற்றவர்தஞ் செய்கை வடிவாள் ஒளிகாணச்
சுற்றிவரும் வட்டணையில் தோன்றா வகைகலந்து
பற்றியடர்க் கும்பொழுதில் தானும் படைபிழைத்துப்
பொற்றடந்தோள் வீரர்க்(கு) உடைந்து புறகிட்டான். 29

(இ - ள்.) ஏனாதி நாதநாயனார் தமது தொழிலாகிய சூரியவாளாயுதத்தை ஒளிகாணும் படியாக வீசிக் கையிற் பிடித்து வருகின்ற கேடகத்தினால் ஒருவருக்குந் தம்முடம்பு தோன்றாதிருக்கும் வண்ணம் எதிர்த்துப் பிடித்து அவர்களைக் கொல்லும் பொழுது, அவ்வதிசூரனும் தன்னுடைய படை வீரரோடு உயிர்தப்பிப் பிழைத்து அழகிய விசாலமாகிய தோள்களையுடைய சுத்தவீரராகிய ஏனாதி நாதநாயனாருக்குத் தோற்றுப் புறங்காட்டி யோடினான். எ- று.

போன அதிசூரன் போரில் அவர்க்கழிந்த
மானமிக மீதூர மண்படுவான் கண்படான்
ஆனசெயல் ஓரிரவுஞ் சிந்தித்(து) அலமந்தே
"ஈனமிகு வஞ்சனையால் வெல்வன்" என எண்ணினான். 30

(இ - ள்.) இவ்வாறு தோற்றுப்புறங் காட்டி யோடிப்போன அதிசூரனானவன் யுத்தத்தில் ஏனாதி நாதநாயனாருக்குத் தோற்றதனாலுண்டாகிய அவமானமானது தன்னை மிகவும் வருத்த மண்ணில் படுத்து நித்திரை கொள்ளாமல் தனக்கு நேரிட்ட தோல்வியைக்குறித்து ஒரு இராத்திரி முழுமையும் சிந்தித்து மனம் வருந்திக் குற்றம் பொருந்திய வஞ்சனையினால் அவரைவெல்வேனென்று தன்மனதில் எண்ணினான். - எ - று.

சேட்டாருங் கங்குல் புலர்காலைத் தீயோனும்
"நாட்டாரைக் கொல்லாதே நாம்இருவேம் வேறிடத்து
வாட்டாயங் கொள்போர் மலைக்க வருக" எனத்
தோட்டார்பூந் தாரார்க்குச் சொல்லிச் செலவிட்டான். 31

(இ - ள்.) கொடியவனாகிய அதிசூரனானவன் நீண்ட இராக்காலங் கழிந்து விடியும் பொழுது, நமக்காக நாட்டிலுள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வர்களை அழைத்துக் கொல்லாமல் நாமிருவரும் வேறோரிடத்தில் வாள்வித்தையினால் அனுபவிக்கின்ற பங்கினுரிமையைக் கைக் கொள்ளுவதற்கு காரணமாகிய போரைச் செய்வதற்கு நீர்வரக்கடவீரென்று இதழ்களையுடைய மலர் மாலையைத் தரித்த ஏனாதி நாதநாயனாருக்கு ஒரு ஆள்வசமாகச் சொல்லியனுப்பினான். - எ - று.

இவ்வாறு கேட்டலுமே ஏனாதி நாதனார்
"அவ்வாறு செய்தல் அழகி" தெனஅமைந்து
"கைவான் அமர்விளைக்கத் தான்கருதும் அக்களத்தில்
வெவ்வாள் உரவோன் வருக" என மேற்கொள்வார். 32

(இ - ள்.) இவ்விதமாக அதிசூரனானவன் சொல்லியனுப்பிய வார்த்தையைக் கேட்டவுடனே ஏனாதி நாதநாயனார் அவன் சொல்லியபடியே தனியே சண்டை செய்வது மிகவும் நல்லதென்று அதற்குச் சம்மதித்துக் கையில் தாங்கிய வாளாயுதத்தினால் போர் செய்யும் படி அவ்வதிசூரன் குறித்த அந்தப் போர்க்களத்தில் வெவ்வியவாளைப் பிடித்த வல்லமை பொருந்திய அப்பகைவன் வரக்கடவனென்று ஒப்புக் கொண்டார். எ-று.

சுற்றத்தார் யாரும் அறியா வகைசுடர்வாள்
பொற்பலகை யுந்தாமே கொண்டு புறம்போந்து
மற்றவன்முன் சொல்லி வரக்குறித்த அக்களத்தே
பற்றலனை முன்வரவு பார்த்துத் தனிநின்றார். 33

(இ - ள்.) ஏனாதி நாதநாயனார் தம்முடைய உறவினர்கள் யாவரும் தாம்போர் செய்யச் செல்வதை அறியாமலிருக்கும்படி ஒளிவீசுகின்ற வாளாயுதத்தையும் அழகிய கேடகத்தையும் தாம் ஒருவராகவே கையிலெடுத்துக் கொண்டு புறத்தில் வந்து அவ்வதிசூரன் முன்பு போர்க்குவரும் படியாகச் சொல்லிக் குறிப்பித்த அந்தப் போர்க்களத்தில் தமது சத்துருவாகிய அக்கொடியவனுடைய வருகையை எதிர் பார்த்துக் கொண்டு தனியே நின்றார். - எ - று.

தீங்கு குறித்தழைத்த தீயோன் "திருநீறு
தாங்கிய நெற்றியினார் தங்களையே எவ்விடத்தும்
ஆங்கவருந் தீங்கிழையார்" என்ப தறிந்தானாய்ப்
பாங்கில் திருநீறு பண்டு பயிலாதான். 34

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) நன்மையைத் தருகின்ற திருவெண்ணீற்றினை முன்பு ஓர் நாளுந்தரித்தறியாதவனும், ஏனாதி நாதநாயனாருக்கு வஞ்சகமாகத் தீங்கு செய்யக்கருதிப் போர்க்கு அழைத்த கொடியவனுமாகிய அதிசூரனானவன் விபூதியைத் தரித்த நெற்றியினையுடைய சிவனடியார்களை எவ்விடத்திலும் ஏனாதி நாதநாயனார் ஒரு தீங்கும் செய்யார் என்பதை அறிந்தவனாகி. - எ - று.

வெண்ணீறு நெற்றி விரவப் புறம்பூசி
உண்ணெஞ்சில் வஞ்சக் கறுப்பும் உடன்கொண்டு
வண்ணச் சுடர்வாள் மணிப்பலகை கைக்கொண்டு
புண்ணியப்போர் வீரர்க்குச் சொன்ன இடம்புகுந்தான். 35

(இ - ள்.) வெண்மையாகிய விபூதியைத் தனது நெற்றியிலும் உடம்பிலும் பொருந்தும்படி நிறையப் பூசி நெஞ்சினுள்ளே வஞ்சமாகிய களங்கத்தையும் வைத்துக் கொண்டு பிரகாசம் பொருந்திய அழகிய வாளாயுதத்தையும், அழகிய கேடகத்தையும் கையில் பிடித்துக் கொண்டு புண்ணியத்தையுடைய போர் வீரராகிய ஏனாதி நாத நாயனாருக்குத் தான் முன்பு குறித்துச் சொல்லியனுப்பிய இடத்தில் வந்து சேர்ந்தான். - எ - று.

வென்றி மடங்கல் விடக்குவர முன்பார்த்து
நின்றாற்போல் நின்ற நிலைகண்டு தன்நெற்றி
சென்று கிடைப்பளவுந் திண்பலகை யான்மறைத்து
முன்றனிவீ ரர்க்கெதிரே மூண்டான் மறம்பூண்டான். 36

(இ - ள்.) வெற்றி பொருந்திய ஆண் சிங்கமானது தனக்கு மாமிசவுணவுக்குரிய மிருகம் வர அதனை எதிர்பார்த்துக் கொண்டு நின்றாற்போல நிற்கின்ற ஏனாதி நாதநாயனாரது நிலைமையைக் கண்டு தன் நெற்றியைத் தான் அவருக்குச் சமீபத்தில் போய் எதிர்க்கின்றவரையிலும் வலிய கேடகத்தினால் மறைத்துக் கொண்டு ஒப்பற்ற சுத்தவீரராகிய அந்நாயனாருக்கு முன்னே பாவத்தையே ஆபரணமாகப் பூண்டவனாகிய அதிசூரன் முடுகி நடந்தான். - எ - று.

அடல்விடையே றென்ன அடர்த்தவனைக் கொல்லும்
இடைதெரிந்து தாள்பெயர்க்கும் ஏனாதி நாதர்
புடைபெயர்ந்த மாற்றான் பலகை புறம்போக்கக்
கடையவன்தன் நெற்றியின்மேல் வெண்ணீறு தாம்கண்டார். 37

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) வல்லமை பொருந்திய ரிஷபம் போல எதிர்த்து வந்த அதிசூரனைக் கொல்லத்தக்க சமையந் தெரிந்து தமது பாதங்களைப் பெயர்த்து வைத்த ஏனாதி நாத நாயனார் தம்முடைய சமீபத்தில் வந்த பகைவனாகிய அவ்வதிசூரன் தன் முகத்தை மறைத்துக் கொண்டிருந்த கேடகத்தைப் புறத்தில் எடுக்க (அப்பொழுது) கொடிய பாவியாகிய அவனுடைய நெற்றியில் பூசியிருந்த திருவெண்ணீற்றைப் பார்த்தார். - எ - று.

கண்டபொழு தே "கெட்டேன்! முன்பரிவர்மேற் காணாத
வெண்டிருநீற் றின்பொலிவு மேற்கண்டேன்; வேறினிஎன்?
அண்டர்பிரான் சீரடியார் ஆயினார்" என்றுமனங்
கொண்(டு) இவர்தங் கொள்கைக் குறிவழிநிற் பேன்என்று. 38

(இ - ள்.) அவ்விதமாக அவன் நெற்றியில் விபூதியைப் பார்த்த பொழுதே ஆ கெட்டேன்; முன்பு ஒரு பொழுதும் இவருடைய தேகத்தில் காணப்படாத வெண்மையாகிய திருநீற்றின் பிரகாசத்தை இப்பொழுது இருக்கக்கண்டேன்; வேறே இனி என்னயோசனையிருக்கின்றது? தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமானுக்குச் சிறந்த அடியவராயினா ரென்று மனதில் அன்பு கொண்டு இவர் உட் கொண்ட இஷ்டப்படியே யான் நிற்பேனென்று நினைத்து. - எ - று.

கைவா ளுடன்பலகை நீக்கக் கருதியது
செய்யார் "நிராயுதரைக் கொன்றார் எனுந்தீமை
எய்தாமை வேண்டும் இவர்க்"கென் றிரும்பலகை
நெய்வா ளுடன்அடர்த்து நேர்வார்போல் நேர்நின்றார். 39

(இ - ள்.) கையிற்பிடித்த வாளாயுதத்தோடு கேடகத்தையும் விட்டுவிட முன்பு நினைத்து, பின்பு இவர்க்குக் கையில் ஆயுத மில்லாத நிராயுதரைக் கொன்றாரென்னும் பழிமொழியானது சேராதிருக்கவேண்டுமென்று ஆயுதங்களைக் கைவிடாதவ ராய்ப் பெரிய கேடகமும் வாளுமாகிய இவைகளோடு எதிர்த்து நிற்பவரைப் போல அவனுக்கு எதிரில் நின்றார். எ- று.

அந்நின்ற தொண்டர் திருவுள்ளம் ஆரறிவார்?
முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்;
இந்நின்ற தன்மை அறிவார் அவர்க்கருள
மின்னின்ற செஞ்சடையார் தாமே வெளிநின்றார். 40

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) இவ்விதமாக அவ்விடத்தில் நின்ற அன்பராகிய ஏனாதி நாதநாயனாருடைய திருவுள்ளக்குறிப்பை யாரறிந்து சொல்ல வல்லவர்கள்? (ஒருவருமில்லை;) அவருக்கெதிரில் நின்ற பாதகனாகிய அதிசூரனும் தன்னுடைய எண்ணத்தின் படியே நிறைவேற்றினான்; இத்தன்மையாகிய விபூதியின் நிலைமையை உயர்வென்றுணர்ந்தவராகிய இவ்வடியவருக்குத் திருவருள் செய்யும்படி மின்னலைப் போல் விளங்குகின்ற சிவந்த சடையினையுடைய சிவபெருமான் தாமே பிரத்தியக்ஷமாய் நின்றார். - எ - று.

மற்றினிநாம் போற்றுவதென்? வானோர் பிரான்அருளைப்
பற்றலர்தங் கைவாளால் பாசம் அறுத்தருளி
உற்றவரை என்றும் உடன்பிரியா அன்பருளிப்
பொற்றொடியாள் பாகனார் பொன்னம் பலம்அணைந்தார். 41

(இ - ள்.) இனி நாம் வேறெ புகழ்ந்து பேசவேண்டுவது என்ன? (ஒன்றுமில்லை;) பகைவனுடைய கையிற்பிடித்த வாளாயுதத்தினால் தம்முடைய பாசபந்தங்களை யறுத்துத் தேவர் நாயகராகிய சிவபெருமானது திருவருளையடைந்த அவ்வேனாதி நாத நாயனார் உமாசகாயராகிய அக்கடவுள் எந்நாளும் தம்மைவிட்டுப் பிரியாதிருந்து வாழ்கின்ற அன்பினைக் கொடுத்துப் பொன்னம்பலத்திற்கு எழுந்தருளினார். எ-று.

தம்பெருமான் சாத்துந் திருநீற்றுச் சார்புடைய
எம்பெருமான் ஏனாதி நாதர் கழல்இறைஞ்சி
உம்பர்பிரான் காளத்தி உத்தமர்க்குக் கண்ணப்ப
நம்பெருமான் செய்தபணி நாம்தெரிந்த வாறுரைப்பாம். 42

(இ - ள்.) தமது முதல்வராகிய சிவபெருமான் தரிக்கின்ற திருவெண்ணீற்றினது சார்பையே சிறந்ததாகக் கொண்டு அன்பு செலுத்திய எமது பெருமானாகிய ஏனாதி நாதநாயனாரது திருவடிகளைத் துதித்து, தேவர்பெருமானாகிய திருக்களாத்தி நாதருக்குக் கண்ணப்ப நானாராகிய நமது பெருமான் செய்த திருத்தொண்டினை நமக்குத் தெரிந்தவரையில் சொல்லுகின்றோம். - எ - று.

ஏனாதி நாதநாயனார் புராணம் முற்றிற்று.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16. கண்ணப்ப நாயனார் புராணம்

மேவலர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக்கா ளத்திக் கண்ணப்பர் திருநா டென்பர்
நாவலர் புகழ்ந்து போற்றும் நல்வளம் பெருகி நின்ற
பூவலர் வாவி சோலை சூழ்ந்தபொத் தப்பி நாடு. 1

(இ - ள்) சிறந்த வித்துவான்களால் புகழ்ந்து சொல்லப்பட்ட நன்மை பொருந்திய பலவளங்களும் குறைவின்றி நிறைந்து நிலைபெற்ற தாமரை முதலிய புட்பங்கள் மலர்ந்திருக்கின்ற தடாகங்களும், பூஞ்சோலைகளும் நாற்புறங்களிலுஞ் சூழ்ந்திருக்கின்ற போத்தப்பி நாட்டினை, பவைர்களது முப்புரங்களையும் எரித்தருளிய ரிஷபாரூடரும், வேதத்தின் உண்மைக்கடவுளுமாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்காளத்தி என்னும் க்ஷேத்திரத்தில் சிவப்பேறெய்திய கண்ணப்ப நாயனாரது திருநாடென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். - எ - று.

இத்திரு நாடு தன்னில் இவர்திருப் பதியா தென்னில்
நித்தில அருவிச் சாரல் நீள்வரை சூழ்ந்த பாங்கர்
மத்தவெங் களிற்றுக் கோட்டு வன்தொடர் வேலி கோலி
ஒத்தபேர் அரணஞ் சூழ்ந்த முதுபதி உடுப்பூர் ஆகும். 2

(இ - ள்.) இத்தன்மை பொருந்திய சிறந்த போத்தப்பி நாட்டிலே இந்தக் கண்ணப்ப நாயனார் திருவவதாரஞ் செய்தருளிய திருப்பதியாதென்றால், முத்துக்களை அரித்துக் கொண்டு வருகின்ற அருவிகள் பொருந்திய சாரல்களையுடைய நீண்ட மலைகள் சூழ்ந்த இடங்களில் மதம் பொருந்திய வெவ்வியயானைத் தந்தங்களினால் மிகுந்த தொடர்ச்சியாகிய வேலிகளை வளைத்து வரிசையாக ஒத்திருக்கின்ற பெரிய நாட்டரணால் சூழப்பட்ட பழைய நகரமாகிய உடுப்பூர் என்று சொல்லப்படும்.

குன்றவர் அதனில் வாழ்வார் கொடுஞ்செவி ஞமலி யாத்த
வன்றிரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியும் எண்கும் கடமையும் மானின் பார்வை
அன்றியும் பாறை முன்றில் ஐவனம் உணங்கும் எங்கும். 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அந்த உடுப்பூரில் வாழ்கின்ற குறவர்கள் கோணலாகிய காதுகளையுடைய நாய்களைக் கட்டிய மிகுந்த வலிமையாகிய விளாமரத்தினது கொம்புகளின் ஒரு புறத்தில் நீண்டவலைகள் தொங்கிக் கொண்டிருக்க, மிருகங்களை எளிதிற் பிடிப்பதற்குப் பன்றி - புலி - கரடி - மான் முதலாகிய பார்வை மிருகங்களை வைத்து வளர்த்துக் கொண்டிருப்பதன்றியும் பாறையாயிருக்கின்ற தமது முற்றங்களெங்கும் மலை நெல்லுகளும் காய்ந்து கொண்டிருக்கும். - எ - று.

வன்புலிக் குருளை யோடும் வயக்கரிக் கன்றி னோடும்
புன்றலைச் சிறும கார்கள் புரிந்துடன் ஆட லன்றி
அன்புறு காதல் கூர அணையுமான் பிணைக ளோடும்
இன்புற மருவி ஆடும் எயிற்றியர் மகளிர் எங்கும். 4

(இ - ள்.) புல்லிய தலைமயிரையுடைய சிறிய வேடப்பிள்ளைகள், வலியபுலிக் குட்டிகளோடும் வெற்றி பொருந்திய யானைக் கன்றுகளோடும் விரும்பிவிளையாடுவதேயல்லாமல் அன்பும் மிகுந்த ஆசையும் அதிகரிக்கும்படி தங்களிடத்தில் வருகின்ற பெண்மான்களோடும் இன்பமுண்டாகும்படி சேர்ந்து விளையாடுகின்ற சிறிய வேடப் பெண்களும் எவ்விடங்களிலும் இருப்பார்கள். - எ - று.

வெல்படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர் கூட்டந் தோறும்
கொல்வெறி குத்தென் றார்த்துக் குழுமிய ஓசை யன்றிச்
சில்லரித் துடியும் கொம்பும் சிறுகண்ஆ குளியும்கூடிக்
கல்லெனும் ஒலியின் மேலும் கறங்கிசை அருவி எங்கும். 5

(இ - ள்.) தம்மை எதிர்த்த பகைவர்களை வெல்லுகின்ற ஆயுதங்களையும், தாக்ஷண்யமில்லாமையையும், கொடுஞ் சொற்களையுமுடைய வேடர்களது கூட்டமிருக்கு மிடங்களி லெல்லாம் இதைக் கொல், இதைவளை தடி முதலியவைக களினால் எறி, இதை ஈட்டி முதலியவைகளினால் குத்து என்று ஆரவாரித்து அதனால் நிறைந்தெழுந்த ஓசைகளேயல்லாமல் சில சிறுகற்களையிட்டிருக்கின்ற உடுக்கைகளும், கொம்பு என்னும் வாத்தியமும், சிறியகண்களையுடைய சிறுபறையும் ஒன்றாகச் சேர்ந்து கல் என்றொலிக்கும் ஓசையைப் பார்க்கிலும் மிகுந்தொலிக்கின்ற அருவியாற்றினது ஓசைகள் எவ்விடங் களிலு மிருக்கும். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறலைத் துண்ணும் வேடர் அயற்புலங் கவர்ந்து கொண்ட
வேறுபல் உருவின் மிக்கு விரவும்ஆன் நிரைகளன்றி
ஏறுடை வானந் தன்னில் இடிக்குரல் எழிலி யோடு
மாறுகொள் முழக்கங் காட்டும் மதக்கைமா நிரைகள் எங்கும். 6

(இ - ள்.) வழியிற் போகின்றவர்களை அடித்துப் பறித்து அதனால் சீவனஞ் செய்கின்ற வேடர்கள் அயல் நாடுகளில் போய்க் கொள்ளையிட்டுக் கொண்டு வந்த பலவேறு வகையான உருவத்தினால் அதிகரித்து நெருங்கியிருக்கின்ற பசுக்கூட்டங் களேயல்லாமல் உயர்வாகிய ஆகாயத்தில் இடிமுழக்கமாகிய குரலையுடைய மேகங்களோடு மாறுபட்ட பேரொலியைக் காட்டுகின்ற மதம் பொழிகின்ற யானைக் கூட்டங்களும் எவ்விடங்களிலும் இருக்கின்றன. - எ - று.

மைச்செறிந் தனைய மேனி வன்றொழில் மறவர் தம்பால்
அச்சமும் அருளும் என்றும் அடைவிலார் உடைவன் தோலார்
பொச்சையின் நறவும் ஊனின் புழுக்கலும் உணவு கொள்ளும்
நச்சழற் பகழி வேடர்க் கதிபதி நாகன் என்பார். 7

(இ - ள்.) மைக்குழம்பு திரண்டதுபோலும் உடம்பினையும், கொடிய கொலைத் தொழிலையுடைய வேடர்கள் தம்மிடத்தில் அச்சமும், பிற வுயிர்களின் மேல் கிருபையும் என்று மில்லாத வர்கள், வலிய தோலினையே ஆடையாகவுடையவர்கள், மலைகளில் தேடி எடுக்கின்ற தேனையும், மிருகங்களின் தசைகளோடு கூடிய மலை நெல்லின் சோற்றையும் தமக்கு உணவாகக் கொள்ளுகின்றவர்களும் விஷம்பூசி நெருப்பை யொத்திருக்கின்ற அம்புகளையுடையவர்க ளுமாகிய அவ் வேடர்களுக்கு அரசனாயுள்ளவன் நாகனென்று சொல்லப் பட்டவன். - எ - று.

பெற்றியால் தவமுன் செய்தா னாயினும் பிறப்பின் சார்பால்
குற்றமே குணமா வாழ்வான்; கொடுமையே தலைநின் றுள்ளான்;
விற்றொழில் விறலின் மிக்கான்; வெஞ்சின மடங்கல் போல்வான்;
மற்றவன் குறிச்சி வாழ்க்கை மனைவியும் தத்தை என்பாள். 8

(இ - ள்.) கண்ணப்ப நாயனார் தன்னிடத்துப் புத்திரராகத் திருவவதாரஞ் செய்த பெருமையினால் பூர்வசன்மத்தில் பெருந் தவத்தினைச் செய்தவனாயிருந்தாலும் தான் பிறந்த வேடசாதிக் குரிய ஒழுக்கத்தினால் குற்றமாகிய தொழில்களையே நல்ல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொழிலாகக் கொண்டு வாழ்கின்றவன், தீமை செய்தலிலேயே தலைமையாக நிற்கின்றவன், வில்வித்தையிலும் தேகவலிமை யிலும் சிறந்தவன், கொடிய கோபத்தையுடைய ஆண் சிங்கத்தை யொத்தவன், அத்தன்மையாகிய சிறப்புப் பொருந்திய நாக னுடைய குறிச்சியில் வாழ்கின்ற இல்வாழ்க்கைக்குரிய மனை யாளும் தத்தை என்று சொல்லப்பட்டவள். - எ - று.

அரும்பெறல் மறவர் தாயத் தான்றதொல் குடியில் வந்தாள்;
இரும்புலி எயிற்றுத் தாலி இடையிடை மனவு கோத்துப்
பெரும்புறம் அலையப் பூண்டாள்; பீலியும் குழையும் தட்டச்
சுரும்புறு படலை முச்சிக் குருஅரிப் பிணவு போல்வாள். 9

(இ - ள்.) அவள் வேடர் குலத்தில் உயர்ந்த பழமையாகிய குடிப்பிறப்பில் பெறுதற்கரிய பேறாகப் பிறந்தவள், பெரிய புலியானது பல்லாலாகிய தாலியின் இடையிடையே சங்குமணி களைக் கோத்துக் கழுத்தின் புறமாகிய முதுகுமுதலியவிடங் களை அலையும்படியாகத் தரித்தவள், மயிற்பீலிகளும் தழை களும் ஒன்றோடொன்று தாக்க வண்டுகள் மொய்க்கின்ற மாலையைத் தரித்த உச்சிக்கொண்டையையுடைய அச்சத்தைத் தருகின்ற பெண் சிங்கத்தையொத்தவள். - எ - று.

பொருவருஞ் சிறப்பின் மிக்கார் இவர்க்கினிப் புதல்வர்ப் பேறே
அரியதென் றெவரும் கூற அதற்படு காத லாலே
முருகலர் அலங்கற் செவ்வேல் முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும் பராய்க்கடன் நெறியில் நிற்பார். 10

(இ - ள்.) ஒப்பு சொல்வதற்கரிய சிறப்பில் மிகுந்த நாதன் தத்தை என்னும் இவ்விருவர்களுக்கும் வயது முதிர்ந்த படியால் இனிப் புத்திர சந்தான மொன்றே உண்டாவது அரிதென்று பார்த்தவர்கள் யாவருஞ் சொல்ல, அதனால் புத்திரப்பேறு உண்டாகவேண்டு மென்னும் ஆசையினாலே வாசனை வீசுகின்ற கடம்ப மலர்மாலையைத் தரித்த சிவந்த வேலாயுதத்தை யுடைய சுப்பிரமணியக்கடவுளினது சந்நிதிக்கும் போய்த் துதி செய்து நாள் தோறும் வணங்கி அவர்க்குச் செய்யவேண்டிய பணிவிடையின் முறைமையில் சிறிதும் தவறாது நின்றார்கள். - எ - று.

வாரணச் சேவ லோடும் வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச் சுரும்பணி கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப் புகழ்புரி குரவை தூங்கப் 11
பேரணங் காடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) சேவற் கோழிகளையும் புள்ளிகளையுடைய மயிற்கூட்டங்களையும் பிரார்த்தனையாகச் செலுத்தி, மணிகள் கோத்த தோரணங்கள் கட்டி, வண்டுகள் வரிசையாக மொய்க் கின்ற கடம்பமலர் மாலைகளைத் தொங்கவிட்டு, போர் செய்தலையே தமக்கு ஆபரணமாகக் கொண்ட நீண்ட வேலாயுதத்தைத்தரித்த முருகக்கடவுளுக்குப் புகழ்ச்சி பொருந்திய குரவையாட்டு நடந்து கொண்டு வர, பெரிய தேவராட்டியை வெறியாட்டயர் வித்துச் சிறந்த திருவிழாவை நடத்தின பின்பு. - எ - று.

பயில்வடுப் பொலிந்த யாக்கை வேடர்தம் பதியாம் நாகற்(கு)
எயிலுடைப் புரங்கள் செற்ற எந்தையார் மைந்த ரான
மயிலுடைக் கொற்ற வூர்தி வரையுரங் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார் அருளி னாலே. 12

(இ - ள்.) தன்னை எதிர்த்த பகைவர்களாலும் மிருகங் களாலும் உண்டாகிய தழும்புகள் நிறைந்த உடம்பினையுடைய வேடர்களுக்கு அரசனாகிய நாகனென்பவனுக்குப் பொன் - வெள்ளி - இரும்பு ஆகியமதில்கள் சூழ்ந்த முப்புரங்களையும் எரித்தருளிய எமது சிவபெருமானது திருக்குமாரராகிய ஐயம்பொருந்திய மயில் வாகனத்தையுடையவரும், கிரவுஞ்ச பர்வதத்தின் வல்லமை கெடும்படி பிளந்தவலிய வேலாயுதத் தைத் தாங்கிய திருக்கரத்தை யுடையவருமாகிய வெற்றி பொருந்திய குமாரக்கடவுளினது திருவருளினாலே. - எ - று.

கானவர் குலம்வி ளங்கத் தத்தைபால் கருப்பம் நீட
ஊனமில் பலிகள் போக்கி உறுகடன் வெறியாட் டோடும்
ஆனஅத் திங்கள் செல்ல அளவில்செய் தவத்தி னாலே
பான்மதி உவரி ஈன்றா லெனமகப் பயந்த போது. 13

(இ - ள்.) வேடர்களுடைய குலமானது சிறந்து விளங்கும்படி யாகத் தத்தையின் வயிற்றில் கருப்பமுண்டாகிவளர, அக் கருப்பத்திற்கு ஓர் குறைவும் வராமல் தெய்வங்களுக்குக் கெடுதலில்லாத பலிகள் கொடுத்துச் செய்யவேண்டிய பெருங் கடமையாகிய வெறியாட்டுடனே அதுவளர்தற்குரிய பத்து மாதங்களும் ஒன்றொன்றாகச் செல்ல, அவர்கள் அளவில் லாமல் செய்த பெருந் தவத்தினாலே உவர்நீரையுடைய சமுத்திரமானது வெண்மை பொருந்திய சந்திரனைப் பெற்றது போல ஒரு குழந்தையைப் பெற்ற பொழுது. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கரிப்பரு மருப்பின் முத்தும் கழைவிளை செழுநீர் முத்தும்
பொருப்பினின் மணியும் வேடர் பொழிதரு மழையே யன்றி
வரிச்சுரும் பலைய வானின் மலர்மழை பொழிந்த தெங்கும்
அரிக்குறுந் துடியே யன்றி அமரர்துந் துபியும் ஆர்த்த. 14

(இ - ள்.) யானைகளினது பருத்த தந்தங்களிலிருந்துண்டாகிய முத்துக்களும், மூங்கில்களிலிருந்துண்டாகிய நல்ல நீரையுடைய முத்துக்களும் மலைகளிலுண்டாகிய வயிரம் முதலிய இரத்தினங்களும் ஆகிய இவைகளை வேடர்கள் யாசகர்களுக்கு வாரி இறைக்கின்ற மழையேயல்லாமல், வரிகளையுடைய வண்டுகள் சுழலும்படி ஆகாயத்தினின்றும் புஷ்பமாரியும் அவ்வேடர்களினுடைய சிற்றூரெங்கும் பொழிந்தது பரல்களையுடைய சிறிய உடுக்கை வாத்தியங்களேயல்லாமல் தேவதுந்துபியும் முழங்கின. - எ- று.

அருவரைக் குறவர் தங்கள் அகன்குடிச் சீறூர் ஆயம்
பெருவிழா எடுத்து மிக்க பெருங்களி கூருங் காலைக்
கருவரை காள மேகம் ஏந்திய தென்னத் தாதை
பொருவரைத் தோள்க ளாரப் புதல்வனை எடுத்துக் கொண்டான். 15

(இ - ள்.) ஏறுதற்கருமையாகிய மலையில் வசிக்கின்ற வேடர்கள் தங்கள் மிகுந்தகுடிகள் வாழுகின்ற சிற்றூர்களிலுள்ள சனங்கள் பெரிய உற்சவங்கொண்டாடி மிகுந்த சந்தோஷமடைந்திருக்கும் பொழுது மைநாகமானது ஒரு கருமையாகிய மேகத்தைத் தாங்கிக் கொண்டது போலத் தந்தையாகிய நாகன்போர் செய்தற்குரிய மலைபோன்ற தனது தோள்களில் பொருந்தும்படியாக அக்குழந்தையை எடுத்துக் கொண்டான். - எ - று.

கருங்கதிர் விரிக்கும் மேனிக் காமரு குழவி தானும்
இரும்புலிப் பறழின் ஓங்கி இறவுளர் அளவே யன்றி
அரும்பெறல் உலக மெல்லாம் அளப்பரும் பெருமை காட்டித் 16
தருங்குறி பலவுஞ் சாற்றும் தன்மையிற் பொலிந்து தோன்ற.

(இ - ள்.) கருமையாகிய கிரணங்களை வீசுகின்ற திருமேனியையுடைய அழகு பொருந்திய அக்குழந்தையும் பெருமையாகிய புலிக்குட்டியைப் போல நாளுக்கு நாள் வளர்ந்து வேடர்களினளவே யல்லாமல் பெறுதற்கரிய உலகமுழுமையும் அளவிட்டுரைப்பதற்கரிய பெருமையைக் காண்பிக்கும் பல அடையாளங்களையும் தெரிவிக்கின்ற தன்மையோடு பிரகாசித்துத் தோன்ற. - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அண்ணலைக் கையில் ஏந்தற்(கு) அருமையால் "உரிமைப் பேரும்
திண்ணன்என் றியம்பும்" என்னத் திண்சிலை வேடர் ஆர்த்தார்.
புண்ணியப் பொருளா யுள்ள பொருவில்சீர் உருவி னானைக்
கண்ணினுக்(கு) அணியாத் தங்கள் கலன்பல அணிந்தார் அன்றே. 17

(இ - ள்.) அக்கண்ணப்ப நாயனாராகிய குழந்தையைக் கைகளால் எடுத்துத் தாங்குவதற்குக் கூடாமையாயிருந்தபடியினால் அவருக்கு உரிமையாகிய திருநாமமும் திண்ணனாரென்று அழையுங்களென்று சொல்ல, அதைக் கேட்ட வலிய விற்களையுடைய வேடர்கள் சந்தோஷத்தினால் ஆரவாரித்தார்கள் புண்ணியமே ஒரு வடிவங் கொண்டு திரண்டு வந்ததையொத்த ஒப்பற்ற திருவுருவத்தையுடைய அத்திண்ணனாரைக் கண்களுக்கு அழகாக விளங்கும்படி தங்கள் மரபினுக்குரிய பலவகை ஆபரணங்களையும் தரித்தார்கள். - எ - று.

வரையுறை கடவுட் காப்பு மறக்குடி மரபில் தங்கள்
புரையில்தொல் முறைமைக் கேற்பப் பொருந்துவ போற்றிச் செய்து
விரையிளந் தளிருஞ் சூட்டி வேம்பிழைத் திடையே கோத்த
அரைமணிக் கவடி கட்டி அழகுற வளர்க்கும் நாளில். 18

(இ - ள்.) மலையில் வாழுகின்ற தெய்வங்களுக்குக் (குழந்தையைக் காப்பாற்றும் பொருட்டு) வழிபாடு செய்யும் காவலும், அது வல்லாமல் மறவருடைய குலத்தில் தங்கள் குற்றமற்ற பழமையாகிய நடத்தைக்குத் தகுதியாகப் பொருந்திய பூசைமுதலியவைகளையும் விரும்பிச் செய்து வாசனை பொருந்திய இளமையாகிய தளிர்களைத் தரித்து மலைவேப்பங் கொட்டைகளை அலங்கரித்து இடையிடையிற் கோத்த பல கறை மாலையை அரையில் கட்டி அழகாக வளர்க்கும் நாள்களில். - எ - று.

வருமுறைப் பருவந் தோறும் வளமிகு சிறப்பில் தெய்வப்
பெருமடை கொடுத்துத் தொக்க பெருவிறல் வேடர்க் கெல்லாம்
திருமலி துழனி பொங்கச் செழுங்களி மகிழ்ச்சி செய்தே
அருமையிற் புதல்வர்ப் பெற்ற ஆர்வமுந் தோன்ற உய்த்தார். 19

(இ - ள்.) குழந்தைக்கு முறையாக வருகின்ற பருவங்கள் தோறும் மிகுந்த வளமாகச் செய்கின்ற சிறப்போடு தெய்வங்களுக்குப் பெருமை பொருந்திய பிரசாதங்களை நிவேதித்துத் தம்மைச் சூழ்ந்துள்ள மிக்கவல்லமை பொருந்திய வேடர்களுக் கெல்லாம் மங்கலகரமாகிய வாத்தியத் தொனி அதிகரிக்கும்படி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறந்த பெருமகிழ்ச்சியைச் செய்த துமல்லாமல் அருமையாகப் பிள்ளையைப் பெற்ற அன்பும் யாவருக்கும் நன்றாகத் தோன்றும் படி நடத்தினார்கள். - எ - று.

ஆண்டெதிர் அணைந்து செல்ல விடும்அடித் தளர்வு நீங்கிப்
பூண்டிகழ் சிறுபுன் குஞ்சிப் புலியுகிர்ச் சுட்டி சாத்தி
மூண்டெழு சினத்துச் செங்கண் முளவுமுள் அரிந்து கோத்த
நாண்டரும் எயிற்றுத் தாலி நலங்கிளர் மார்பில் தூங்க. 20

(இ - ள்.) அக்குழந்தைக்கு ஒருவருஷ காலம் நிறைந்துவர, தத்தடியிட்டு நடக்கும் தளர் நடைப்பருவத்தினின்றும் நீங்கி ஆபரணங்கள் விளங்குகின்ற மிருதுவாகிய சிறிய தலைமயிரில் புலி நகம் பதித்த நெற்றிச்சுட்டியைத் தரித்து அதிகரித் தெழுகின்ற கோபத்தினால் சிவந்தகண்களையுடைய முள்ளம் பன்றியின் முட்களை நுனியில் அரிந்து கோத்திருக்கின்ற கயிற்றில் தொங்குகின்ற புலிப்பல்லின் தாலியானது நன்மை பொருந்திய மார்பினிடத்தில் பிரகாசிக்க. - எ - று.

பாசொளி மணியோ டார்த்த பன்மணிச் சதங்கை ஏங்கக்
காசொடு தொடுத்த காப்புக் கலன்புனை அரைஞாண் சேர்த்தித்
தேசுடை மருப்பில் தண்டை செறிமணிக் குதம்பை மின்ன
மாசறு கோலங் காட்டி மறுகிடை யாடும் நாளில். 21

(இ - ள்.) பசுமையாகிய நீலமணிகளோடு கோத்த வேறு பலமணிகளையுடைய சதங்கையானது திருவரையில் சப்திக்க, பல இரத்தினங்களோடு தொடுத்த காப்பினையும், ஆபரண மாகச் செய்யப்பட்ட அரைஞாணையும் திருக்கரத்திலும் திருவரையிலும் தரித்து, ஒளிவீசுகின்ற யானைக் கொம்பினால் செய்யப்பட்ட தண்டையும், நெருங்கிய மணிகள் பதித்தகுதம்பை யும் திருவடியிலும் திருச்செவியிலும் பிரகாசிக்க, இவ்விதமாகிய குற்றமற்ற திருக்கோலப் பொலிவைப் பார்ப்பவர்கள் கண்களிக்கும் படியாகக் காண்பித்து வீதியில் விளையாடிக் கொண்டிருக்கின்ற நாள்களில். - எ - று.

தண்மலர் அலங்கல் தாதை தாய்மனங் களிப்ப வந்து
புண்ணியக் கங்கை நீரில் புனிதமாம் திருவாய் நீரில்
உண்ணனைந் தமுதம் ஊறி ஒழுகிய மழலைத் தீஞ்சொல்
வண்ணமென் பவளச் செவ்வாய் குதட்டியே வளரா நின்றார். 22

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) குளிர்ந்த மலர் மாலையைத் தரித்த தந்தையாகிய நாகனும் தாயாகிய தத்தையும் மனமகிழும்படி அவர்களுக்கு அருகில் வந்து புண்ணிய சொரூபமாகிய கங்கை நீரைப் பார்க்கிலும் மிகுந்த பரிசுத்தம் பொருந்திய அழகிய வாய்நீரில் உள்நனைந்து அமுதத்தைப் பெருக்கி வெளிப்படுகின்ற இனிமையாகிய மழலைச் சொற்களை அழகிய மிருதுவாகிய பவளம் போலுஞ் சிவந்த வாயினால் குதட்டிப்பேசிக் கொண்டு வளர்ந்தார். - எ - று.

பொருபுலிப் பார்வைப் பேழ்வாய் முழையெனப் பொற்கை நீட்டப்
பரிவுடைத் தந்தை கண்டு பைந்தழை கைக்கொண் டோச்ச
இருசுடர்க் குறுகண் தீர்க்கும் எழில்வளர் கண்ணீர் மல்கி
வருதுளி முத்தம் அத்தாய் வாய்முத்தம் கொள்ள மாற்றி. 23

(இ - ள்.) பார்வை மிருகமாகிய போர் செய்யத் தக்க புலிகளினது ஆழ்ந்தவாயைச் சிறிய குகையென்று நினைத்துத் தமது அழகியதிருக்கரத்தை அதினுள்ளே நீட்ட, அதை அவர் மேலன்புடைய தந்தையாகிய நாகன் பார்த்துப் பசியதழையைத் தனது கையிலெடுத்து அப்படிச் செய்யாதேயென்று அடிக்கும் படி ஓங்க, சிவபெருமானுடைய சூரிய சந்திரர்களாகிய இரண்டு கண்களுக்கும் நேர்ந்த துன்பத்தைப் பின்னே நீக்குதற்குக் காரணமாகிய தமது அழகு பொருந்திய கண்களினின்றும் நீரைச் சொரிந்து, பெருகிவருகின்ற முத்துக்களையொத்த அக் கண்ணீர்த்துளிகளைத் தாயாகிய அந்தத் தத்தையானவள் எடுத்து வாயை முத்தமிட்டுக் கொள்ள மாற்றினவராகி. - எ - று.

துடிக்குற டுருட்டி ஓடித் தொடக்குநாய்ப் பாசஞ் சுற்றிப்
பிடித்தறுத் தெயினப் பிள்ளைப் பேதையர் இழைத்த வண்டல்
அடிச்சிறு தளிரால் சிந்தி அருகுறு சிறுவ ரோடும்
குடிச்செறு குரம்பை எங்கும் குறுநடைக் குறும்பு செய்து. 24

(இ - ள்.) உடுக்கை வடிவாகச் செய்த மரக்கட்டையை வீதியில் உருட்டி அதன் பின்னேயோடி, கட்டியிருக்கின்ற வேட்டை நாய்களின் கழுத்துக்கயிறுகளைக் கையில் சுற்றிப் பிடித்து அறுத்து, வேடர்களுடைய சிறு பெண்கள் விளையாடு தற்குக் கட்டிய சிறுவீடுகளைத் தமது தளிரையொத்த சிறிய திருவடியினால் அழித்து, தனக்கு அருகில் சூழ்ந்திருக்கின்ற வேடச்சிறுவர்களோடும் வேடர்கள் குடியிருக்கின்ற குடிசைகள் தோறுஞ் சென்று சிறிய நடையோடு பல குறும்புகளைச் செய்து. எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனையன பலவும் செய்தே ஐந்தின்மேல் ஆன ஆண்டின்
வனைதரு வடிவார் கண்ணி மறச்சிறு மைந்த ரோடும்
சினைமலர்க் காவு ளாடிச் செறிகுடிக் குறிச்சி சூழ்ந்த
புனைமருப் புழலை வேலிப் புறச்சிறு கானிற் போகி. 25

(இ - ள்.) அப்பபடிப்பட்ட பலவிளையாடல்களையுஞ் செய்து ஐந்து வயது நிறைந்து மேல் வருகின்ற ஆறாவது வயதில் அழகிய மாலையைத் தரித்த சிறிய வேடப்பிள்ளைகளோடும் கிளைகள் பொருந்திய மலர்ச் சோலைகளில் சேர்ந்து விளையாடி, நெருங்கிய குடிகளையுடைய அந்தச் சிற்றூரைச் சூழ்ந்திருக்கின்ற அலங்காரமாகிய யானைக் கொம்புகளினால் செய்யப்பட்ட உழலைவேலியின் புறத்திலிருக்கும் சிறிய காட்டில் சென்று. - எ - று.

கடுமுயற் பறழி னோடும் கானஏ னத்தின் குட்டி
கொடுவரிக் குருளை செந்நாய் கொடுஞ்செவிச் சாபமான
முடுகிய விசையி லோடித் தொடர்ந்துடன் பற்றி முற்றத்
திடுமரத் திரளிற் கட்டி வளர்ப்பன எண்ணி லாத. 26

(இ - ள்.) மிகுந்த வேகத்தையுடைய முயற்குட்டியும், காட்டுப்பன்றியின் குட்டியும், புலிக்குட்டியும், செந்நாயும் ஆகிய இவைகளைக் கொடிய காதுகளையுடைய சரபப்பட்சியைப் போல மிகுந்தவிசையோடு ஓடிப் பின்தொடர்ந்து முன்னே தடுத்து பிடித்துக் கொண்டு வந்து வாசல்களில் இருக்கின்ற மரக்கூட்டங்களில் கட்டி அந்நாயனாரால் வளர்க்கப் பட்டவைகள் அளவில்லாதனவாயிருக்கின்றன. - எ - று.

அலர்பகல் கழிந்த அந்தி ஐயவிப் புகையும் ஆட்டிக்
குலமுது குறத்தி ஊட்டிக் கொண்டுகண் துயிற்றிக் கங்குல்
புலரஊன் உணவு நல்கிப் புரிவிளை யாட்டின் விட்டுச்
சிலமுறை யாண்டு செல்லச் சிலைபயில் பருவஞ் சேர்ந்தார். 27

(இ - ள்.) உதயமாகிய பகற்காலம் கழிந்தபின்பு மாலைப் பொழுதில் கடுகின் புகையினால் திருஷ்டி கழித்துத்தங்கள் குறவர்குலத்தில் வாழ்ந்த முதிர்ந்த வயதுடையவளாகிய குறத்தியானவள் உணவுகளையூட்டி எடுத்துக் கொண்டு நித்திரை கொள்ளும்படிச் செய்வித்துப் பொழுது விடிந்த வுடனே மாமிசவுணவுகளைக் கொடுத்துத் தாம் விரும்பிய விளையாடல்களைச் செய்யும் படிவிட்டு, இப்படிச் சில

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வருஷங்கள் முறையாகப் போய்க் கொண்டிருக்கப் பின்பு வில்வித்தையைக் கற்றுக் கொள்ளத் தக்க பருவத்தையடைந்தார் கண்ணப்ப நாயனார். எ- று.

தந்தையும் மைந்த னாரை நோக்கித்தன் தடித்த தோளால்
சிந்தையுள் மகிழப் புல்லிச் சிலைத்தொழில் பயிற்ற வேண்டி
முந்தைஅத் துறையில் மிக்க முதியரை அழைத்துக் கூட்டி
வந்தநாட் குறித்த தெல்லாம் மறவர்க்குச் சொல்லி விட்டான். 28

(இ - ள்.) தந்தையாகிய நாகனென்பவனும் புத்திரராகிய திண்ணனாரைப் பார்த்துத் தனது பருத்ததோள்களினால் மனத்தில் பெருமகிழ்ச்சி யுண்டாகும்படி ஆலிங்கனஞ் செய்து அவர்க்கு வில்வித்தையைக் கற்றுக் கொடுக்க விருப்பங் கொண்டு, முன்னே அந்த வில்வித்தையில் சமர்த்தர்களாகிய சிறந்த விருத்தர்களை வரவழைத்துக் கூட்டி, வில்வித்தையைக் கற்பிக்கும்படி நல்ல நாளை நியமித்த செய்திகளை எல்லாம் தம்மைச் சார்ந்துள்ள வேடர்களுக்குச் சொல்லியனுப்பினான். - எ- று.

"வேடர்தம் கோமான் நாகன் வென்றிவேள் அருளால் பெற்ற
சேடரின் மிக்க செய்கைத் திண்ணன்வில் பிடிக்கின்ற றான்" என்(று)
ஆடியல் துடியும் சாற்றி அறைந்தபேர் ஓசை கேட்டு
மாடுயர் மலைகள் ஆளும் மறக்குலத் தலைவ ரெல்லாம். 29

(இ - ள்.) வேடர்களுக்குத் தலைவனாகிய நாகனென்பவன் வெற்றி பொருந்திய முருகக்கடவுளின் திருவருளினால் பெற்றெடுத்த அறிவுடையோர்களைப் பார்க்கிலும் சிறந்த அறிவின் செய்கையையுடைய திண்ணனென்னும் புத்திரன் இன்னதினத்தில் வில்லைப் பிடிக்கின்றானென்று அசையுமியல் பினையுடைய உடுக்கை வாத்தியத்தையும் மற்ற வாத்தியங்களை யும் முழக்கித் தெரிவித்த பேரோசையைக் கேட்டுப் பக்கங்களி லுள்ள உயர்ந்த மலைகளை ஆளுகின்ற வேடர்குலத்திற்குத் தலைவர்களெல்லாரும். -எ - று.

மலைபடு மணியும் பொன்னும் தரளமும் வரியின் தோலும்
கொலைபுரி களிற்றுக் கோடும் பீலியின் குவையும் தேனும்
தொலைவில்பல் நறவும் ஊனும் பலங்களும் கிழங்கும் துன்றச்
சிலைபயில் வேடர் கொண்டு திசைதொறும் நெருங்க வந்தார். 30

(இ - ள்.) மலையில் உண்டாகிய பலவகை இரத்தினங்களும், பொன்னும், முத்துக்களும், புலித்தோலும், கொலை செய்கின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யானைகளின் கொம்புகளும், மயிற் பீலிக் கூட்டமும், மலைத்தேனும், கெடுதலில்லாத பலவகையான கள்ளும், மாமிசங்களும், பழங்களும், கிழங்குகளும் ஒன்றாகச் சேர வில்லையுடைய வேடர்கள் எடுத்துக் கொண்டு திக்குகள் தோறும் நெருங்கும் படி வந்து சேர்ந்தார்கள்.

மல்கிய வளங்கள் எல்லாம் நிறைந்திட மாறில் சீறூர்
எல்லையில் அடங்கா வண்ணம் ஈண்டினர் கொணர்ந்தார்; எங்கும்
"பல்பெருங் கிளைஞர் போற்றப் பராய்க்கடன் பலவும் செய்து
வில்விழா எடுக்க" என்று விளம்பினான் வேடர் கோமான். 31

(இ - ள்.) இவ்விதமாக நெருங்கிய வளமாகிய பொருள்களெல்லாம் நிறையும்படி மாறுபாடில்லாத அந்தச் சிற்றூரின் எல்லையினளவும் அடங்காதிருக்கும் விதமாக எவ்விடத்தும் நெருங்கிக் கொண்டு வந்தார்கள்; அப்பொழுது வேடர்களுக்கு அரசனாகிய நாகனானவன் பெருமை பொருந்திய பல உறவினர்களும் துதிக்கும்படி வனதெய்வங்களை வழிபட்டுப் பலிமுதலாகிய பல கடமைகளைச் செய்து இனி வில்வித்தையைக் கற்பிப்பதற்காக ஒரு விழாவை நடத்தக்கடவீர்களென்று அவ்வேடர்களுக்குச் சொன்னான். - எ - று.

பான்மையில் சமைத்துக் கொண்டு படைக்கலம் வினைஞர் ஏந்தத்
தேனலர் கொன்றை யார்தந் திருச்சியைச் செம்பொன் மேரு
வானது கடலின் நஞ்சம் ஆக்கிட அவர்க்கே பின்னும்
கானஊன் அமுதம் ஆக்கும் சிலையினைக் காப்புச் சேர்த்தார். 32

(இ - ள்.) தகுந்தமுறைமைப்படியே வில்விழாவிற்கு வேண்டிய பொருள்களையெல்லாம் ஏற்படுத்திக் கொண்டு பலவகை ஆயுதங்களை வீரர்கள் அருகில் ஏந்தி நிற்க, தேன் பொருந்திய கொன்றை மலர்மாலையைத் தரித்த சிவபெருமானது சிறந்தவில்லென்று சொல்லப்பட்ட சிவந்த பொன்மயமாகிய மேருமலையானது முன்பு அக்கடவுளுக்குத் திருப்பாற் கடலில் தோன்றிய விஷத்தை அமுது செய்யும்படி கொடுத்த காரணத்தினால் (அத்தீங்கு தீரும்படி) பின்னும் அது அவருக்கே காட்டிலிருக்கின்ற மாமிசத்தை அமுதமாகச் செய்விக்கக் கருதி உருக் கொண்டு வந்தது போலுமிருக்கின்ற ஓர் வில்லுக்குக் காப்புக் கட்டினார்கள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிலையினைக் காப்புக் கட்டும் திண்புலி நரம்பிற் செய்த
நலமிகு காப்பு நன்னாண் நாகனார் பயந்த நாகர்
குலம்விளங் கரிய குன்றின் கோலமுன் கையிற் சேர்த்தி
மலையுறை மாக்கள் எல்லாம் வாழ்த்தெடுத் தியம்பி னார்கள். 33

(இ - ள்.) வில்லினைக் காப்புக் கட்டிய வலிபொருந்திய புலியின் நரம்பினால் செய்த மிகுந்த நன்மையைத் தருகின்ற அழகிய காப்பு நாணை நாகனென்னும் வேடராஜனால் பெறப்பட்டவரும், தேவர்களுக்குந் தன்னியல்பினை அறிதற்கரிய குணக்குன்றுமாகிய திண்ணனாரது அழகு பொருந்திய முன்னங்கையில் கட்டி மலையில் வசிக்கின்ற வேடர்களெல்லாம் மங்கலவாழ்த்துக் கூறினார்கள். - எ - று.

ஐவன அடிசில் வெவ்வே றமைந்தன புற்பாற் சொன்றி
மொய்வரைத் தினைமென் சோறு மூங்கில்வன் பதங்கள் மற்றும்
கைவினை எயின ராக்கிக் கலந்தஊன் கிழங்கு துன்றச்
செய்வரை உயர்ப்ப எங்கும் கலந்தனர் சினவில் வேடர். 34

(இ - ள்.) மலை நெல்லின் சோறும், வெவ்வேறாகப் பால்பெய்து சமைத்த புல்லரிசிச் சோறும், நெருங்கிய மலைச் சாரலில் விளைந்த மிருதுவாகிய தினையரிசிச்சோறும், மூங்கிலரிசியால் சமைத்த வலியசோறும், இன்னும் வேறுவகை யான அரிசிச் சோறும் சமையல் தொழிலில் வல்லவர்களாகிய வேடர்கள் சமைத்து, மாமிசத்தோடுகலந்த கிழங்குகளும் சேர்ந்திருக்கும்படி செய்குன்று போலக் குவிக்க எவ்விடத்திலும் கோபம் பொருந்திய வில்லையுடைய வேடர்கள் ஒருமித்தார்கள்.

செந்தினை இடியும் தேனும் அருந்துவார்; தேனில் தோய்த்து
வெந்தஊன் அயில்வார்; வேரி விளங்கனிக் கவளம் கொள்வார்;
நந்திய ஈயல் உண்டி நசையொடு மிசைவார்; வெவ்வே(று)
அந்தமில் உணவின் மேலோர் ஆயினர் அளவி லார்கள். 35

(இ - ள்.) சிலர் சிவந்த தினைமாவையும் தேனையும் புசிப்பார்கள்; சிலர் தேனிலே தோய்த்து வெந்தமாமிசத்தை உண்பார்கள்; சிலர் தேன்விட்டுப் பிசைந்திருக்கின்ற விளாம் பழங்களின் கவளத்தை உட்கொள்வார்கள்; சிலர் மிகுந்த ஈசெல்லினால் செய்யப்பட்ட உணவை ஆசையோடு உண்பார் கள்; இவ்வாறு வெவ்வேறாகிய அநேகவித உணவினால் எண்ணிறந்தவர்கள் உண்டு மகிழ்ச்சியினால் மேம்பட்டவர் களானார்கள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அயல்வரைப் புலத்தின் வந்தார் அருங்குடி இருப்பின் உள்ளார்
இயல்வகை உணவில் ஆர்ந்த எயிற்றியர் எயினர் எல்லாம்
உயர்கதிர் உச்சி நீங்க ஒழிவில்பல் நறவு மாந்தி
மயலுறு களிப்பின் நீடி வரிசிலை விழவு கொள்வார். 36

(இ - ள்.) அயற்புலத்திலுள்ள மலையிடங்களிலிருந்து வந்தவர்களும், அருமையாகிய அச்சிற்றூரில் குடியிருப்பாக உள்ளவர்களுமாகிய வேடிச்சிகளும் வேடர்களும் தகுந்த முறையாக உணவையுண்டு, உயர்வு பொருந்திய சூரியன் உச்சி யினின்றும் சாய, கெடுதலில்லாத பலவகையாகிய மதுவைக் குடித்து மயக்கம் பொருந்திய களிப்பினால் அதிகரித்துக் கட்டமைந்த வரிந்த வில்விழாவைச் செய்கின்றவர்களானார்கள். எ - று.

பாசிலைப் படலை சுற்றிப் பன்மலர்த் தொடையல் சூடிக்
காசுடை வடத்தோல் கட்டிக் கவடிமெய்க் கலன்கள் பூண்டார்
மாசில்சீர் வெட்சி முன்னா வருதுறைக் கண்ணி சூடி
ஆசில்ஆ சிரியன் ஏந்தும் அடற்சிலை மருங்கு சூழ்ந்தார். 37

(இ - ள்.) பசுமை பொருந்திய தழைகளால் கட்டப்பட்ட மாலைகளைச் சுற்றிப் பலவகையாகிய மலர்களால் தொடுக்கப் பட்ட மாலைகளைத் தரித்து, இரத்தினங்கள் கோத்திருக்கின்ற தோல்வடத்தை இடையில் கட்டி, உடம்பில் பலகறைகளாகிய ஆபரணங்களைத் தரித்த வேடர்கள் குற்றமற்ற வெட்சிமலர் முதலாகப் புறப்பொருளிற் சொல்லப்பட்ட மாலைகளைத் தரித்து, பழுதில்லாத வில்லாசிரியனால் ஏந்தப்பட்ட வலிய வில்லின் சமீபத்தில் சூழ்ந்தார்கள். - எ - று.

தொண்டக முரசம் கொம்பும் துடிகளும் துளைகொள் வேயும்
எண்டிசை நிறைந்து விம்ம எழுந்தபேர் ஒலியி னோடும்
திண்டிறல் மறவர் ஆர்ப்புச் சேண்விசும் பிடித்துச் செல்லக்
கொண்டசீர் விழவு பொங்கக் குறிச்சியை வலங்கொண் டார்கள். 38

(இ - ள்.) தொண்டக மென்னுங் குறிஞ்சிப்பறையும், முரசவாத்தியமும், ஊதுகொம்பும், உடுக்கைகளும், துளைகள் பொருந்திய புள்ளாங்குழல்களும் ஆகிய வாத்தியங்கள் எட்டுத் திக்குகளிலும் நிறைந்து அதிகரிக்க எழுந்த பேராசைகளோடு மிகுந்த வல்லமை பொருந்திய வேடர்களின் ஆரவாரமும் நெடுந்தூரத்திலிருக்கின்ற விண்ணுலகத்தையுந் தாண்டி அப்பாற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செல்ல, தாங்கள் செய்யக்கருதிய சிறந்த வில்விழாவானது செவ்வையாக நடக்க அச்சிற்றூரைப் பிரதட்சிணமாக வந்தார்கள். - எ - று.

குன்றவர் வரிகொண் டாடக் கொடிச்சியர் துணங்கை ஆடத்
துன்றிய மகிழ்ச்சி யோடுஞ் சூர்அர மகளிர் ஆட
வென்றிவில் விழவி னோடும் விருப்புடை ஏழா நாளாம்
அன்றிரு மடங்கு செய்கை அழகுற அமைத்த பின்னர். 39

(இ - ள்.) மலையிலுள்ள வேடர்கள் குறிஞ்சிப் பண்ணைப் பாடிக் கொண்டு ஆட, வேடப் பெண்கள் துணங்கைக் கூத்தை ஆட, அம்மலையிலுள்ள ஒருவகையான தெய்வப் பெண்கள் பொருந்திய மகிழ்ச்சியோடு கூத்தாட, வெற்றி பொருந்திய வில்விழாவோடும் விருப்பத்தைத் தருகின்ற ஏழாநாளையினன்று மற்றைய நாள்களைப் பார்க்கிலும் இரண்டுபங்கு அதிகமாகிய சிறப்புக்களை அழகாகச் செய்த பின்பு. - எ - று.

வெங்கதிர் விசும்பின் உச்சி மேவிய பொழுதில் எங்கும்
மங்கல வாழ்த்து மல்க மருங்குபல் லியங்கள் ஆர்ப்பத்
தங்கள்தொல் மரபின் விஞ்சைத் தனுத்தொழில் வலவர் தம்பால்
பொங்கொளிக் கரும்போர் ஏற்றைப் பொருசிலை பிடிப்பித் தார்கள். 40

(இ - ள்.) வெவ்விய கிரணங்களையுடைய சூரியனானவன் ஆகாயத்தின் உச்சியை யடைந்த பொழுதில் மங்கலகரமாகிய வாழ்த்தின் ஒலியானது எங்கும் நிரம்பவும், அருகில் பலவகை வாத்தியங்கள் முழங்கவும் தங்களுடைய பழமை பொருந்திய மரபினுக்கு உரிய வித்தையாகிய தனுர் வேதத்தைக் கற்பிக்க வல்லவர்களிடத்தில் மிகுந்த ஒளிவீசுகின்ற கருநிறத்தையுடைய போர் செய்யும் ஆண் சிங்கம் போன்ற திண்ணனாரைக் கையில் வில்லினைப் பிடிக்கும்படி செய்வித்தார்கள் வேடர்கள். - எ - று.

பொற்றட வரையின் பாங்கர்ப் புரிவுறு கடன்முன் செய்த
விற்றொழிற் களத்தில் நண்ணி விதிமுறை வணங்கி மேவும்
அற்றைநாள் தொடங்கி நாளும் அடற்சிலை ஆண்மை முற்றக்
கற்றனர் என்னை யாளுங் கானவர்க் கரிய சிங்கம். 41

(இ - ள்.) அழகு பொருந்திய விசாலமாகிய அம்மலைகளின் பக்கத்தில் செய்யத்தகுந்த பூசைகளை முன்னே செய்து முடித்த வில்வித்தை கற்கும் இடத்திற்குப் போய் வில்லாசிரியரை சாஸ்திரவிதிப்படி வணங்கி அவ்வித்தையைக் கற்கத் தொடங்கிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்று முதல் நாள்தோறும் வலிய விற்பயிற்சியின் வல்லமையை நிரம்பக் கற்றுக் கொண்டார் என்னையாட் கொண்டருளிய வரும், வேடர்குலத்தில் திருவவதாரஞ் செய்த அரிய சிங்கம் போன்றவருமாகிய கண்ணப்ப நாயனார். - எ - று.

வண்ணவெஞ் சிலையும் மற்றைப் படைகளும் மலரக் கற்றுக்
கண்ணகல் சாயல் பொங்கக் கலைவளர் திங்க ளேபோல்
எண்ணிரண் டாண்டின் செவ்வி எய்தினார் எல்லை இல்லாப்
புண்ணியந் தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு போல்வார். 42

(இ - ள்.) அழகு பொருந்திய கொடியவில்வித்தையையும், மற்றைய வாள்வேல் ஈட்டி முதலாகிய ஆயுதங்களைப் பிரயோகிக்கும் பலவகை வித்தைகளையும் பூரணமாகக் கற்றுக் கொண்டு கண்களுக்கடங்காத திருமேனியின் காந்தியானது அதிகப்பட நாளுக்கு நாள் கலைகள் வளருகின்ற சுக்கிலபக்ஷத்துச் சந்திரனைப் போலப் பதினாலுவயது நிரம்பிய பவருவத்தை யடைந்தார். அளவில்லாத புண்ணியங்கள் (இந்நிலவுலகத்தில்) ஒருருவாகத் தோன்றி மேலுமேலும் விருத்தியாகின்ற பொலிவை ஒத்தவராகிய திண்ணனார். எ-று.

இவ்வண்ணத் திண்ணனார் நிரம்பு நாளில் இருங்குறவர் பெருங்குறிச்சிக் கிறைவன் ஆய,
மைவண்ண வரைநெடுந்தோள் நாகன் தானும் மலையெங்கும் வனமெங்கும் வரம்பில் காலம்,
கைவண்ணச் சிலைவேட்டை யாடித் தெவ்வர் கணநிரைகள் பலகவர்ந்து கானங்காத்து,
மெய்வண்ணந் தளர்மூப்பின் பருவம் எய்தி வில்லுழவின் பெருமுயற்சி மெலிவா னானான்.
43

(இ - ள்.) இந்தவிதமாகத் திண்ணனார் வில்வித்தையைக் கற்றுப் பதினாறு வயதும் நிரம்பிய நாளில் பெருமை பொருந்திய வேடர்கள் வாழ்கின்ற பெரிய குறிச்சிகளுக்குத் தலைவனாகிய மைநாகம் போன்ற நெடிய தோள்களையுடைய நாகனென்பவ னும் மலைகளெங்கும் வனங்களெங்கும் நெடுங்காலம் வரையி லும் கையிற் பிடித்த அழகிய வில்லினால் வேட்டையாடி, பகைவர்களினது பல பசுக்கூட்டங்களைக் கவர்ந்து, காட்டினைக் காவல் செய்து உடம்பின் அழகானது தளர்தற்குக் காரணமாகிய முதுமைப் பருவத்தையடைந்து வில்வித்தையினது பெரிய முயற்சியில் இளைத்தவனானான். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***அங்கண்மலைத் தடஞ்சாரற் புனங்கள் எங்கும் அடலேனம் புலி கரடி கடமை ஆமா,
வெங்கண்மரை கலையொடுமான் முதலா யுள்ள மிருகங்கள் மிகநெருங்கி மீதூர் காலைத்,
"திங்கள்முறை வேட்டை வினை தாழ்த்த" தென்று சிலைவேடர் தாமெல்லாம் திரண்டு சென்று,
தங்கள்குல முதற்றலைவ னாகியுள்ள தண்தெரியல் நாகன்பால் சார்ந்து சொன்னார்.***

44

(இ - ள்.) அழகிய இடத்தையுடைய மலைகளின் விசாலமாகிய பக்கங்களிலிருக்கும் புனங்களிலெல்லாம் வலிபொருந்திய பன்றி - புலி - கரடி - கடமை - காட்டுப்பசு - கொடிய கோபக் கண்களையுடைய மரை - கலைமான் - பெண்மான் முதலாகிய மிருகங்கள் மிகவும் நெருங்கிப் பலன்களையழிக்க அதிகரித்திருக்கும் போது, மாதந்தோறும் முறையாகச் செய்து வருகின்ற வேட்டையாடுந் தொழிலானது தவறிதென்று வில்லையுடைய வேடர்களெல்லாம் ஒன்றாகத் திரண்டு போய்த் தங்கள் குலத்துக்கு முதற்றலைவனாக இருக்கின்ற குளிர்ந்த மாலையைத் தரித்த நாகனிடத்தில் அடைந்து சொன்னார்கள். - எ - று.

***சொன்னவுரை கேட்டலுமே நாகன் தானும் சூழ்ந்துவரும் தன் மூப்பின் தொடர்வு நோக்கி,
முன்னவர்கட் குரைசெய்வான் "மூப்பி னாலே முன்புபோல் வேட்டையினில் முயல கில்லேன்;"
என்மகனை உங்களுக்கு நாதனாக எல்லீருங் கைக்கொண்மின்! என்ற போதின்
அன்னவரும் இரங்கிப்பின் மகிழ்ந்து தங்கோன் அடிவணங்கி இம்மாற்றம் அறைகின் றார்கள்.***

45

(இ - ள்.) அவ்வேடர்கள் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டவுடனே நாகனென்பவனும் தன்னைத் தொடர்ந்து வருகின்ற மூப்புப் பவருவத்தின் சம்பந்தத்தை நினைந்து தன்முன்னே நிற்கின்ற அவ்வேடர்களுக்குச் சொல்லுகின்றான், நான் எனது வயோதிகத்தினாலே முன்போல வேட்டையாட வல்லமையில்லாதவனாயிருக்கின்றேன்; ஆதலால் எனது புத்திரனாகிய திண்ணனை உங்களுக்குத் தலைவனாக நீங்களெல்லாரும் அங்கீகரித்துக் கொள்ளுங்களென்று சொன்ன பொழுதில் அவர்களும் நாகனது மூப்புப்பவருவத்தைக்குறித்து இரக்கமுற்று, பின்பு திண்ணனாரை நமக்கு அரசனாகக் கொள்ளுதல் நல்லதென்று சந்தோஷத்தை யடைந்து தங்கள் தலைவனாகிய நாகனது பாதத்தை வணங்கி இவ்வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினார்கள். - எ - று.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

"இத்தனைகா லமும்நினது சிலைக்கீழ்த் தங்கி இனிதுண்டு தீங்கின்றி இருந்தோம்; இன்னும்,
அத்த!நின தருள்வழியே நிற்ப தல்லால் அடுத்தநெறி வேறுளதோ? அதுவே அன்றி,
மெய்த்தவிறல் திண்ணனையுன் மரபில் சால மேம்படவே பெற்றளித்தாய்; விளங்கு மேன்மை,
வைத்தசிலை மைந்தனைஈண் டழைத்து நுங்கள் வரையாட்சி அருள்" என்றார் மகிழ்ந்து வேடர். **46**

(இ - ள்.) இவ்வளவு காலமும் உமது வில்லாண்மையின் கீழே அடங்கி இனிமையாக உண்டு யாதொரு தீங்குமில்லாமல் சவுக்கியத்தை யடைந்திருந்தோம்; இன்னும் எமது தலைவரே! உமது கட்டளையின் வழியே நாங்கள் நிற்பதல்லாமல் எங்களுக்கு இசைந்தமார்க்கம் இனி வேறே இருக்கின்றதோ? இல்லை; அதுவேயல்லாமல் வல்லமை பொருந்திய தேகத்தினையுடைய திண்ணனாரை உமது வமிசத்தில் மிகுந்த மேன்மையுண்டாகவே புத்திரனாகப் பெற்றுக் கொடுத்தீர்; ஆதலால், விளங்குகின்ற மேன்மை பொருந்திய வில்லையுடைய உமது புத்திரனை இன்றைக்கு இங்கே வரவழைத்து உங்களுக்கு உரித்தாகிய மலைகளின் அரசாட்சியைக் கொடுப்பீராவென்று வேடர்கள் சந்தோஷித்துச் சொன்னார்கள். - எ - று.

சிலைமறவர் உரைசெய்ய நாகன் தானும் திண்ணனைமுன் கொண்டுவரச் செப்பி விட்டு,
'மலைமருவு நெடுங்கானில் கன்னிவேட் டை மகன் போகக் காடுபலி மகிழ வூட்டத்,
தலைமரபின் வழிவந்த தேவ ராட்டி தனை அழைமின்' என அங்குச் சார்ந்தோர் சென்று,
நிலைமையவள் தனக்குரைப்ப நரைமூ தாட்டி நெடிதுவந்து விருப்பினொடுங் கடிது வந்தாள். **47**

(இ - ள்.) வில்லையுடைய வேடர்கள் இவ்விதமாகச் சொல்ல, நாகனென்பவனும் திண்ணனாரைத் தனக்கு முன்னே அழைத்து வரும்படியாகச் சொல்லியனுப்பிவிட்டு மலைகள் பொருந்திய நெடிய காட்டில் கன்னிவேட்டையைக்குறித்துத் தனது புத்திரன் போகும்படி, காட்டிலுள்ள தெய்வங்களுக்குச் சந்தோஷமுண்டாகப் பலியிடுவதற்காகத் தலைமை பொருந்திய தமது வமிசத்தின் வழியாக வந்த தேவராட்டியை இங்கு அழையுங்களென்ன, அங்கிருந்த வேடர்கள் போய் நாகன் சொல்லிய வார்த்தையை அவளுக்குச் சொல்ல நரைத்த முதுமைப் பருவத்தையுடைய அத்தேவராட்டியானவள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து களிப்போடும் சீக்கிரத்தில் வந்தாள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கானில்வரித் தளிர்துதைந்த கண்ணி சூடிக் கலைமருப்பின் அரிந்த குழை காதிற் பெய்து,
மானின்வயிற் றரிதாரத் திலகம் இட்டு மயிற் கழுத்து மனவுமணி வடமும் பூண்டு,
தானிழிந்து திரங்கிமுலை சரிந்து தாழத் தழைப்பீலி மரவுரி மேல் சார எய்திப்,
பூநெருங்கு தோரைமலி சேடை நல்கிப் போர்வேடர் கோமானைப் போற்றி நின்றாள். 48

(இ - ள்.) காட்டிலுள்ள வரியினையுடைய தளிர்கள் நெருங்கிய மாலையைத் தரித்து, மான் கொம்பினை அரிந்து வட்டமாகச் செய்த குண்டலத்தைக் காதில் திரித்து, மானின்வயிற்றில் தோன்றிய அரிதாரத்தினால் நெற்றியில் திலகமிட்டு, மயிற்கழுத்துக்களைத் துண்டாக நறுக்கி இடையிடையில் கோத்த சங்குமணிவடத்தைக் கழுத்தில் பூண்டு கொண்டு, ஸ்தனங்கள் தம்முடைய நிலையில் நின்று இறங்கித் திரங்கி சரிந்து தொங்க இடையிற் கட்டிய மரவுரியின்மேல் சந்தனத்தழைகளும் மயிற்பீலிகளும் நிறைந்திருக்கும்படி அங்குவந்து மலர்கள் நெருங்கியிருக்கின்ற மலை நெல்லாலாகிய சேடை அரிசியை மங்களமுண்டாகும்படி வாழ்த்திக் கொடுத்துப் போர் செய்கின்ற வேடர்களுக்கு இறைவனாகிய நாகனென்பானைத் துதித்து நின்றாள். - எ - று.

நின்றமுது குறக்கோலப் படிமத் தாளை நேர்நோக்கி "அன்னை!நீ நிரப்பு நீங்கி,
நன்றினிதின் இருந்தனையோ?" என்று கூறும் நாகன் எதிர் நலம்பெருக வாழ்த்தி "நல்ல,
மென்தசையும் ஈயலொடு நறவும் வெற்பில் விளைவானும் பிறவனும் வேண்டிற் றெல்லாம்,
அன்றுநீ வைத்தபடி பெற்று வாழ்வேன் அழைத்தபணி என்?" என்றாள் அணங்கு சார்ந்தாள். 49

(இ - ள்.) தனக்குமுன்னே வந்து நின்ற படிமத்தாளாகிய வேடங் கொண்ட முதிர்ந்த வயதினையுடைய குறத்தியை நேராகப் பார்த்து தாயே! நீ குறைவில்லாமல் சுகமாக வாழ்ந்திருக்கின்றனையோ வென்று சொல்லுகின்ற நாகனுக்கு எதிரே அவனுக்கு மங்களமுண்டாகும்படி ஆசீர்வதித்து, மிருதுவாகிய நல்ல மாமிசமும், ஈசெல் பொரியும், தேனும், மலையில் விளைகின்ற கிழங்கு - காய் - கனி முதலிய பொருள்களும், மற்றைப் பொருள்களுமாகிய விரும்பியவைகளையெல்லாம் முன் னாளில் நீ எனக்குக் கொடுக்கும்படி நியமித்தபடியே பெற்று வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்; அது நிற்க, என்னை இப்பொழுது அழைத்த காரியம் என்னவென்று கேட்டாள் அந்தத் தேவராட்டியானவள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*"கோட்டமில்என் குலமைந்தன் திண்ணன் எங்கள் குலத்தலைமை யான்கொடுப்பக் கொண்டு பூண்டு,
பூட்டுறு வெஞ் சிலைவேடர் தம்மைக் காக்கும் பொருப்புரிமை புகுகின்றான்; அவனுக் கென்றும்,
வேட்டைவினை எனக்குமே லாகவாய்ந்து வேறுபுலங் கவரவென்றி மேவு மாறு,
காட்டிலுறை தெய்வங்கள் விரும்பி உண்ணக் காடுபலி ஊட்"டென்றான் கவலை இல்லான்.* **50**

(இ - ள்.) ஓர் குற்றமுமில்லாத எனது குலத்திற் பிறந்த புத்திரனாகிய திண்ணனென்பவன் எங்கள் குலத்திற்குரிய அரசனாயிருக்குந் தலைமையை யான்கொடுக்கப் பெற்றுக் கொண்டு அம்பைப் பூட்டுகின்ற வெவ்விய வில்லையுடைய வேடர்களைக் காக்கின்ற மலையாளுகையை அடைகின்றான்; ஆதலால், அவனுக்கு எப்பொழுதும் வேட்டைத் தொழிலானது என்னைப் பார்க்கிலும் அதிகமாகக் கிடைத்து, பகையரசர்களின் சிற்றூரைக் கொள்ளையிடத்தக்க வெற்றி உண்டாகும்படி வனதெய்வங்கள் மனமகிழ்ந்து உண்ணும் பொருட்டுக் காட்டில் பலியிடு என்று சொன்னான் யாதொரு வருத்தமுமில்லாத நாகனென்பவன். - எ - று.

*மற்றவன்தன் மொழிகேட்ட வரைச்சூ ராட்டி "மனமகிழ்ந்திங் கன்போடு வருகின் றேனுக்(கு),
எற்றையினுங் குறிகள்மி நல்ல ஆன இதனாலே உன்மைந்தன் திண்ண னான,
வெற்றிவரிச் சிலையோன்நின் அளவி லன்றி மேம்படுகின் றான்" என்று விரும்பி வாழ்த்திக்,
கொற்றவன தெய்வங்கள் மகிழ ஊட்ட வேண்டுவன குறைவின்றிக் கொண்டு போனாள்.* **51**

(இ - ள்.) அந்த நாகன் சொல்லிய வார்த்தையைக் கேட்ட மலையில் வாழுகின்ற தேவராட்டியானவள் மனதில் சந்தோஷத்தையடைந்து, இவ்விடத்தில் மிகுந்த அன்போடும் வருகின்ற எனக்கு முன்பு உன்னிடத்திற்கு வந்த எந்நாட்களிலும் கண்ட குறிகளைப் பார்க்கிலும் இன்று கண்ட குறிகள் மிகவும் நன்றாக இருந்தன; இந்தக் காரணத்தினாலே வெற்றி பொருந்திய நீண்டவில்லைப் பிடித்த உனது புத்திரனாகிய திண்ணனென் பவன் உன்னளவில்லாமல் மேன்மை யடையப் போகின்றா னென்று மனவிருப்பத்தோடு வாழ்த்துதல் செய்து, ஜயம் பொருந்திய அவ்வனதேவதைகள் சந்தோஷிக்கும்படி பலியூட்டு தற்கு வேண்டிய பொருள்களையெல்லாம் குறைவில்லாமல் வாங்கிக் கொண்டு போனாள். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெய்வநிகழ் குறமுதியாள் சென்ற பின்பு திண்ணனார் சிலைத்தாதை அழைப்பச் சீர்கொள்,
மைவிரவு நறுங்குஞ்சி வாசக் கண்ணி மணிநீல மலையொன்று வந்த தென்னக்,
கைவிரவு சிலைவேடர் போற்ற வந்து காதல்புரி தாதைகழல் வணங்கும் போதில்,
செய்வரைபோற் புயமிரண்டும் செறியப் புல்லிச் செழும்புலித்தோல் இருக்கையின்முன் சேர வைத்தான்.
52

(இ - ள்.) தெய்வசன்னதங் கொண்ட முதிர்ந்த வயதினையுடைய குறத்தியானவள் போன பிறகு வில்லையுடைய தன் தந்தையாகிய நாகன் அழைக்கத் திண்ணனாரானவர் சிறந்த கருநிறம் பொருந்திய நல்லகுடுமியில் மணம் பொருந்திய மாலையைத் தரித்த அழகிய ஒரு நீலமலையானது வந்தது போலக் கையில் வில்லைப் பிடித்த வேடர்கள் தம்மைச் சூழும்படியாக வந்து தம்மேல் அன்பையுடைய தந்தையாகிய நாகன் பாதங்களை வணங்கின பொழுது, அவன் அழகிய மலை போன்ற இரண்டு புஜங்களும் சேரும்படி அணைத்துக் கொண்டு செழிப்பாகிய புலித்தோல் ஆசனத்தின்மேல் தன்முன்னேயிருக்கும்படி உட்காரவைத்தான். - எ - று.

முன்னிருந்த மைந்தன்முகம் நோக்கி நாகன் "மூப்பெனைவந் தடைதலினால் முன்பு போல,
என்னுடைய முயற்சியினால் வேட்டையாட இனிஎனக்குக் கருத்தில்லை; எனக்கு மேலாய்,
மன்னுசிலை மலையர் குலக் காவல் பூண்டு மாறெறிந்து மாவேட்டை ஆடி என்றும்,
உன்னுடைய மரபுரிமை தாங்குவாய்" என் றுடை தோலுஞ் சுரிகையுங்கைக் கொடுத்தான் அன்றே.
53

(இ - ள்.) நாகனென்பவன் தனக்குமுன்னே ஆசனத்திலிருந்த புத்திரராகிய திண்ணனாரது முகத்தைப் பார்த்து மைந்தனே! எனக்கு மூப்புப்பருவமானது வந்த படியினால் முன்போல என்னுடைய முயற்சியைக் கொண்டு காட்டில் மிருகவேட்டையாடுவதற்கு இனிமேல் எனக்கு மனமில்லை; ஆதலால் என்னைப் பார்க்கிலும் சிறந்தவர்களாக நிலைபெற வில்லைப்பிடித்த வேடர் குலத்தை ஆளும்படி ஒப்புக் கொண்டு பகைவர்களை நாசஞ்செய்து மிருகவேட்டைகளையாடி, எப்பொழுதும் உன்னுடைய சாதியுரிமையை நீ தாங்கிக் கொள்ளவேண்டுமென்று தான் உடுத்தற்குரிய தோலையும் உடைவாளையும் அவர் கையிற் கொடுத்தான். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**தந்தைநிலை உட்கொண்டு தளர்வு கொண்டு தங்கள்குலத் தலைமைக்குச் சாய்வு தோன்ற,
வந்தகுறை பாடதனை நிரப்பு மாறு மனங்கொண்ட குறிப்பினால் மறாமை கொண்டு,
முந்தையவன் கழல் வணங்கி முறைமை தந்த முதசுரிகை உடைதோலும் வாங்கிக் கொண்டு,
சிந்தைபரங் கொளநின்ற திண்ண னார்க்குத் திருத்தாதை முகமலர்ந்து செப்பு கின்றான்.**
54

(இ - ள்.) தமது தகப்பன் சொல்லிய வார்த்தையை மனதில் நினைத்து (அவனுக்கு நேர்ந்த முதுமைப்பருவத்தைக் குறித்து) வருத்தமடைந்து தங்கள் குலத்திற்கு முறைமையாக வருகின்ற அரசுரிமைக்கு ஒரு துணையுண்டாகவும், (வேடர்கள் குடிக்கு) இப்பொழுது நேரிட்ட குறைவை ஒழித்துவிடவும் மனதிற் கொண்ட எண்ணித்தினால் அவன் வார்த்தையை மறுக்காமல் ஒப்புக் கொண்டு முதலில் அந்த நாகனுடைய பாதத்தை வணங்கி, கிரமமாகக் கொடுத்த முதன்மை பொருந்திய உடைவாளையும், தோலுடையையும் கையில் வாங்கிக் கொண்டு, மனதில் அரசாட்சி என்னும் ஒரு பெரும்பாரங் கொள்ளும்படி நிற்கின்ற திண்ணனாருக்குத் தந்தையாகிய நாகன் முகமலர்ச்சியோடு சொல்லத் தொடங்கினான். - எ - று.

***"நம்முடைய குலமறவர் சுற்றத் தாரை நான்கொண்டு பரித்து தன்மேல் நலமே செய்து,
தெம்முனையில் அயற்புலங்கள் கவர்ந்து கொண்ட திண்சிலையின் வளமொழியாச் சிறப்பின் வாழ்வாய்;
வெம்முனையின் வேட்டைகளும் உனக்கு வாய்க்கும்; விரைந்துநீ தாழாதே வேட்டை ஆட,
இம்முரண்வெஞ் சிலைவேடர் தங்க ளோடும் எழுக!" என. விடைகொடுத்தான் இயல்பின் நின்றான்.***
55

(இ - ள்.) நம்முடைய குலத்திற்குரிய வேடர்களாகிய பந்துக்களை நான் தாங்கிக் காப்பாற்றினதைப் பார்க்கிலும் அதிகமாகப் பாதுகாத்து, பகைவர்களது போர்முனையில் அயல் நாட்டிலிருந்து கவர்ந்து கொண்டு வந்த வலியவில்லினால் பெற்ற வளமானது என்றும் குறையாமல் சிறப்போடு வாழ்வாய்; கொடிய வேட்டைத் தொழிலில் வேட்டை மிருகங்களும் உனக்கு மிகுதியாகக் கிடைக்கும்; ஆதலால் நீ காலதாமதஞ் செய்யாமல் துரிதப்பட்டு வேட்டையாடுதற்கு இந்த வலிமை பொருந்திய கொடிய வில்லையுடைய வேடர்களோடு எழுந்து செல்வாயாக வென்று உத்தரவு செய்தான், தன் அரசுரிமையைப் புத்திரராகிய திண்ணனாருக்குச் செய்யவேண்டு மென்னும் இயல்பினை யுடைய நாகன். - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செங்கண்வயக் கோளரியே(று) அன்ன திண்மைத் திண்ணனார் செய்தவத்தின் பெருமை பெற்ற,
வெங்கண் விறல்தாதை கழல்வணங்கி நின்று விடை கொண்டு புறம் போந்து வேட ரோடும்,
மங்கலநீர்ச் சுனைபடிந்து மனையின் வைகி வைகிருளின் புலர்காலை வரிவிற் சாலைப்,
பொங்குசிலை அடல்வேட்டைக் கோலங் கொள்ளப் புனைதொழிற்கை வினைஞரொடும் பொலிந்து புக்கார்.
56

(இ - ள்.) சிவந்த கண்களையுடைய வெற்றி பொருந்திய ஆண் சிங்கத்தை யொத்த பராக்கிரமசாலியாகிய திண்ணனார் முன் அருமையாகச் செய்த தவத்தினால் பெருமையைப் பெற்ற கொடிய கோபக்கண்களையும் வெற்றியையுமுடைய தந்தை யாகிய நாகனது பாதங்களில் வணங்கி நின்று விடை பெற்றுக் கொண்டு புறத்தில் வந்து, வேடர்களோடு மங்கலகரமாகிய நீரையுடைய சுனையில் முழுகித் தம்முடைய வீட்டில் தங்கி யிருந்து பொருந்திய இருளையுடைய விடியற்காலத்தில் வரிந்த விற் சாலையிலே பொலிவினையுடைய வில்லினால் மிருகங் களைக் கொல்லுகின்ற வேட்டைக்குரிய கோலங் கொள்ளும்படி அலங்கரிக்கும் தொழிலில் கைதேர்ந்தவர்களோடும் விளங்கிப் புகுந்தார். - எ - று.

நெறிகொண்ட குஞ்சிக் சுருள்துஞ்சி நிமிர்ந்து பொங்க
முறிகொண்ட கண்ணிக் கிடைமொய் யொளிப்பீலி சேர்த்தி
வெறிகொண்ட முல்லைப் பிணைமீது குறிஞ்சி வெட்சி
செறிகொண்ட வண்டின் குலஞ்சீர் கொளப்பின்பு செய்து. 57

(இ - ள்.) வணங்கி நெறிப்படைந்திருக்கின்ற தலைமயிரினது சுருள்கள் உச்சியில் முடிக்கப்பட்டு நிமிர்ந்து விளங்க, அதன்மேல் தளிரால் கட்டப்பட்ட கண்ணிமாலைக்கு நடுவில் பிரகாசத்தையுடைய மயிற்பீலியைச்சேர்த்து, அதன் கீழ் வாசனை வீசுகின்ற முல்லை மலர் மாலையின் மேல் குறிஞ்சி மலர்மாலையையும், வெட்சி மலர் மாலையையும் நெருங்கிய வண்டின் கூட்டங்கள் மொய்த்துக் கொள்ளும்படி அலங்கரித்து. எ - று.

முன்நெற்றியின் மீது முருந்திடை வைத்த குன்றி
தன்னிற்புரி கொண்ட மயிர்க்கயி றாரச் சாத்தி
மின்னில்திகழ் சங்கு விளங்குவெண் டோடு காதின்
மன்னிப்புடை நின்றன மாமதி போல வைக. 58

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) முன்னெற்றியின் மேல் மயிலிறகின் அடிமுள்ளோடு இடையிடையே தொடுத்த குன்றிமணிகளால் புரியாகக் கொண்ட மயிரால் திரித்த கயிற்றைப் பொருந்தத் தரித்து, மின்னலைப் போல விளங்குகின்ற சங்கினால் செய்யப்பட்ட வெண்மை பொருந்திய குண்டலங்கள் இரண்டு காதுகளிலும் நிலைபெற்று இருபக்கங்களிலும் உதித்து விளங்குகின்ற பெருமை தங்கிய இரண்டு சந்திரனைப் போலத் தோன்ற. - எ-று.

கண்டத்திடை வெண்கவ டிக்கதிர் மாலை சேரக்
கொண்டக்கொடு பன்மணி கோத்திடை ஏனக்கோடு
துண்டப்பிறை போல்வன தூங்கிட வேங்கை வன்தோல்
தண்டைச்செயல் பொங்கிய சன்னவீ ரந்த யங்க. 59

(இ - ள்.) கழுத்தில் வெண்மை பொருந்திய பலகறையினாலாகிய ஒளிவிளங்குகின்ற மாலைகளைத் தரித்துக் கொண்டு, சங்குமணிகளோடு பலமணிகளையுங் கோர்த்து நடுவில் மூன்றாம் பிறைபோன்றிருக்கின்ற பன்றியினது கொம்புகள் தொங்க, புலியினது வலிய தோலினால் தடையாகச் செய்த சன்னவீர மென்னும் மாலையானது கழுத்தினிடமாகவிளங்க. - எ-று.

மார்பிற்சிறு தந்த மணித்திரள் மாலை தாழத்
தாரிற்பொலி தோள்வல யங்கள் தழைத்து மின்னச்
சேர்விற்பொலி கங்கண மீது திகழ்ந்த முன்கைக்
கார்விற்செறி நாண்எறி கைச்செறி கட்டி கட்டி. 60

(இ - ள்.) மார்பினிடத்தில் யானைத்தந்தங்களால் கடைந்த சிறிய மணிகளைக் கொத்தாகக்கோத் திருக்கின்ற தாழ்வடமானது தாழ்ந்து விளங்க, மாலையோடு விளங்குகின்ற தோளினிடத்து வாகுவலயங்கள் ஒளியை வீசிப் பிரகாசிக்க, பேரொளியையுடைய கங்கணமானது தன்மேல் விளங்கத் தரித்த முன்னங்கையில் கறுத்தவில்லினிடத்தில் கட்டியிருக்கின்ற நாணையேற்றி அம்புவிடுதற்குச் சாதனமாகிய கைக்கோதையென்னும் கவசந்தரித்து. - எ - று.

அரையிற்சர ணத்துரி ஆடையின் மீது பௌவத்
திரையிற்படு வெள்ளல கார்த்து விளிம்பு சேர்த்தி
நிரையிற்பொலி நீருடை தோல்கரி கைப்பு றஞ்சூழ்
விரையில்துவர் வார்விசி போக்கி அமைத்து வீக்கி. 61

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) இடையில் தரித்த சல்லடமாகிய புலித்தோலாடையின்மேல் சமுத்திரத்தின் அலைகளில் தோன்றிய வெண்மையாகிய பலகறைகளை ஒழுங்காக நிறைத்து ஓரத்தில் கட்டி, வரிசையாக விளங்குகின்ற நீண்ட உடையாகிய தோலினை உடையவாளின் புறத்தைச் சூழும்படி நல்ல மணம் பொருந்திய சிவந்த வார்க்கச்சைச் செலுத்தி அமையும் படி கட்டி - எ - று.

வீரக்கழல் காலின் விளங்க அணிந்து பாதம்
சேரத்தொடு நீடு செருப்பு விருப்பு வாய்ப்பப்
பாராப்பெரு வில்வலங் கொண்டு பணிந்து திண்ணன்
சாரத்திருத் தாள்மடித் தேற்றி வியந்து தாங்கி. 62

(இ - ள்.) திண்ணனார் வீரக்கழலைக் கணைக்காலில் விளங்கும் படியாகத்தரித்து, கால்களுக்கு நன்றாகப் பொருந்தத் தொடுக்கப்பட்ட நீண்ட செருப்பானது விருப்பத்தைக் கொடுக்க, மிகவும் பருத்திருக்கின்ற வில்லை வலமாக வந்து நமஸ்கரித்து, திருவடியில் பொருந்த வில்லின் குதையை வைத்து வளைத்து நாணேற்றிச் சந்தோஷித்துக் கையிற்பிடித்துக் கொண்டு. - எ - று.

அங்கப்பொழு திற்புல னத்திடர் வாங்க ஓங்கித்
துங்கப்பெரு மாழை போன்று துண்ணென் றொலிப்ப
வெங்கட்சியின் நீடு விலங்கு விலங்கி நீங்கச்
செங்கைத்தலத் தால்தட விச்சிறு நாண்எ றிந்தார். 63

(இ - ள்.) அந்தச் சமையத்தில் உலகத்திலுள்ள துன்பமானது ஒழியும்படியாகச் சிறந்து மிகுந்த பெரிய மேகம்போல விரைவாகச் சப்திக்கும்படி கொடிய கோபக்கண்களையுடைய மிருகங்கள் பயந்து நீங்கியோட அழகியகையினால் தடவிச் சிறிய நாணினை இழுத்துக் குணத்தொனி செய்தார். - எ - று.

பல்வேறு வாளி புதைபார்த் துடன்போத ஏவி
வில்வேட ராயத் துடிமேவி ஒலிக்கு முன்றில்
சொல்வேறு வாழ்த்துத் திசைதோறுந் துதைந்து விம்ம
வல்லேறு போல்வார் அடல்வாளி தெரிந்து நின்றார். 64

(இ - ள்.) பலவயையான அம்புகளை அம்புக்கட்டுகளிலிருந்து பார்த்து எடுத்துக் கொண்டு ஒருங்கே தன்னோடு வரும்படியாக வேவுகாரருக்குச் சொல்லி, வில்லைப்பிடித்த வேடர்கூட்டங்களின் உடுக்கை வாத்தியங்கள் பொருந்தி முழங்குகின்ற முற்றத்தில் சொல்லுகின்ற பல வேறுவகையான வாழ்த்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மொழிகளின் திக்குகள் தோறும் நிறைந்து சப்திக்க, வலிய ஆண் சிங்கம் போன்ற திண்ணனார் கொலை செய்தற்குரிய பாணங் களைத் தொடுத்து நின்றார். - எ - று.

மானச்சிலை வேடர் மருங்கு நெருங்கு போதில்
பானற்குல மாமல ரிற்படர் சோதி யார்முன்
தேனற்றசை தேறல் சருப்பொரி மற்றுமுள்ள
கானப்பலி நேர்கட வுட்பொறை யாட்டி வந்தாள். 65

(இ - ள்.) வலிமை பொருந்திய வில்லைப் பிடித்த வேடர்கள் தமக்குச் சமீபத்தில் நெருங்கியிருக்கும் பொழுதில் கூட்டமாகிய நீலோற் பலமலரின் ஒளிபோல விளங்குகின்ற கரிய திருமேனி யையுடைய திண்ணனாருக்கு முன்னே தேன் - நல்ல மாமிசம் - மது - அவிசு - பொரி இன்னும் மற்றபொருள்களையும் காட்டில் தேவதைகளுக்குப் பலிஇடுக்கின்ற தேவராட்டியான வள் வந்தாள். - எ - று.

நின்றெங்கு மொய்க்குஞ் சிலைவேடர்கள் நீங்கப் புக்குச்
சென்றங்கு வள்ளல் திருநெற் றியிற்சேடை சாத்தி
"உன்றந்தை தந்தைக்கும் இந்நன்மைகள் உள்ள வல்ல
நன்றும்பெரி துன்விறல் நம்மள வன்(று)" இதென்றாள். 66

(இ - ள்.) நாற்புறத்திலும் நெருங்கிச் சூழ்ந்து கொண்டிருக் கின்ற கோபத்தையுடைய வேடர்கள் விலகும்படி உள்ளே புகுந்து சென்று அவ்விடத்தில் திண்ணனாரது திரு நெற்றியில் அட்சதை யைத் தரித்து, உன்னுடைய தகப்பனுக்கும் அவனுடைய நந்தைக்கும் இப்படிப்பட்ட நல்ல சகுனங்கள் உண்டாகவில்லை, ஆதலால் உனது வல்லமையால் வரும் பெருமைகள் மிகவும் சிறப்பாயிருக்கும், இச்சிறப்பானது நம்முடைய குலத்தினளவாக இராது என்று சொன்னார். - எ-று.

அப்பெற்றியில் வாழ்த்தும் அணங்குடை யாட்டி தன்னைச்
செப்பற்கரி தாய சிறப்பெதிர் செய்து போக்கிக்
கைப்பற்றிய திண்சிலைக் கார்மழை மேகம் என்ன
மெய்ப்பொற் புடைவேட்டையின் மேற்கொண்டெழுந்து போந்தார். 67

(இ - ள்.) அத்தன்மையாக வாழ்த்துகின்ற தேவராட்டிக்குச் சொல்லுதற்கரிய பலவகைச்சிறப்புகளை அவளுடைய வாழ்த்து தலுக்குக் கைம்மாறாகச் செய்து அனுப்புவித்து, கையிற்பிடித்த வலியவில்லையுடைய கரியசூல் கொண்ட மேகம் போலத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமேனியின் பொலிவையுடையவராய் வேட்டையாடுதலை மேற்கொண்டு எழுந்து புறப்பட்டார் திண்ணனார். - எ - று.

***தாளில்வாழ் செருப்பர்தோல் தழைத்தநீடு தானையார்
வாளியோடு சாபம்மேவு கையர்வெய்ய வன்கணார்
ஆளியேறு போலஏகும் அண்ணலார்முன் எண்ணிலார்
மீளிவேடர் நீடுகூட்டம் மிக்குமேல் எழுந்ததே. 68***

(இ - ள்.) (வேட்டையாடுந் தொழிலை மேற்கொண்டு) ஆண் சிங்கத்தைப் போலச் செல்கின்ற திண்ணனாருக்கு முன்னே கால்களில் செருப்பைத் தரித்தவர்களும், தோலினால் அகலமாக நீண்ட ஆடையைத் தரித்தவர்களும், அம்புகளோடு வில்லைப் பிடித்த கையையுடையவர்களும், கொடுமை பொருந்தியவர் களும், தாட்சணிய மில்லாதவர்களுமாகிய அளவில்லாத வலிய வேடர்களின் கூட்டமானது அதிகரித்துப் புறப்பட்டது. - எ - று.

***வன்றொடர்ப்பி ணித்தபாசம் வன்கைமள்ளர் கொள்ளவே
வென்றி மங்கை வேடர்வில்லின் மீதுமேவு பாதமுன்
சென்றுநீளு மாறு போல்வ செய்ய நாவின் வாயவாய்
ஒன்றொடொன்று நேர்படாமல் ஓடுநாய்கள் மாடெலாம். 69***

(இ - ள்.) வலிய சங்கிலித் தொடரோடு கட்டப்பட்ட கயிற்றைப் பலம் பொருந்திய கையினையுடைய வேடர்கள் பிடித்துக் கொண்டுவர, விஜயலட்சுமியானவள் வேடர்களு டைய வில்லின்மேல் ஏறுதற் காகவைத்த திருவடிகள் முன்னே சென்று பின்பு நீளுதல் போல சிவந்த நாவினைப் பெற்ற வாயையுடையவைகளாய் ஒன்றோடொன்று ஒத்து நில்லாமல் அவ்வேடர்களின் பக்கங்களிலெல்லாம் நாய்கள் ஓடிக் கொண்டிருந்தன. - எ- று.

***போர்வலைச் சிலைத்தொழிற் புறத்திலே விளைப்பவச்
சார்வலைத் தொடக்கறுக்க ஏகும்ஐயர் தம்முன்னே
கார்வலைப் படுத்தகுன்று கானமா வளைக்கநீள்
வார்வலைத் திறஞ்சுமந்து வந்தவெற்பர் முந்தினார். 70***

(இ - ள்.) வேட்டைப் போர் செய்வதற்கு உதவியாயிருக்கின்ற வலைகட்டுந் தொழிலையும், வில்லினால் செய்யுந் தொழிலை யும் புறத்திலே செய்யவும், தம்மைத் தொடர்ந்து வருகின்ற ஜனனமரணங்களாகிய வலையின் பிணியை அறுக்கவும் போகின்ற திண்ணனாருக்கு முன்னே, மேகங்கள் வலையிட்டது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போல மூடிக்கொண்டிருக்கின்ற மலைகளிலும், காடுகளிலு முள்ள மிருகங்களைப் பிடிக்கும் பொருட்டு நீண்டவார்களி னால் செய்யப்பட்ட வலைத் தொகுதிகளைச் சுமந்து கொண்டு வந்த வேடர்கள் முற்பட்டு நடந்தார்கள். - எ- று.

நண்ணிமா மறைக்குலங்கள் நாடவென்று நீடும்அத்
தண்ணிலா அடம்புகொன்றை தங்குவேணி யார்தமைக்
கண்ணில்நீடு பார்வை யொன்று கொண்டுகாணும் அன்பர்முன்
எண்ணில் பார்வை கொண்டுவேடர் எம்மருங்கும் ஏகினார். 71

(இ - ள்.) பெருமை பொருந்திய அநேக வேதங்கள் விரும்பி எந்நாளும் தேடிக் கொண்டிருக்க அவைகளால் காணப்படாமல் நீடித்திருக்கின்ற தன்மையினையுடைய குளிர்ந்த சந்திரனும், அடப்பமலரும், கொன்றை மலருமம் பொருந்திய சடையினை யுடைய திருக்காளத்தியப்பரை நீண்ட ஒரு கண்ணினது பார்வை யைக் கொண்டு காணப்போகின்றவராகிய திண்ணனாருக்கு முன்னே அளவற்ற பார்வை மிருகங்களைக் கொண்டு வேடர்கள் எப்பங்களிலும் புறப்பட்டார்கள். - எ- று.

கோடுமுன் பொலிக்கவும் குறுங்கணா குளிக்குலம்
மாடுசென் றிசைப்பவும் மருங்குபம்பை கொட்டவும்
சேடுகொண்ட கைவிளிச் சிறந்தஓசை செல்லவும்
காடுகொண் டெழுந்தவேடு கைவளைந்து சென்றதே. 72

(இ - ள்.) ஊதுகொம்புகள் முன்னே முழங்கவும், குறுகிய கண்ணையுடைய சிறுபறை என்னும் வாத்தியக் கூட்டங்கள் பக்கங்களில் சேர்ந்து சப்திக்கவும், அதன்பக்கத்தில் பம்பை என்னும் வாத்தியம் அடிக்கவும், வேடர்கள் திரண்டு கைதட்டுதலால் உண்டாகிய சிறந்த பேரோசையானது நெடுந்தூரமளவும் சென்று பரவவும் காடு போலத்திரண்டு எழுந்த வேடர் கூட்டமானது திண்ணானாருடைய இரண்டு பக்கங்களிலும் சூழ்ந்து சென்றது. - எ- று.

நெருங்குபைந் தருக்குலங்கள் நீடுகாடு கூடநேர்
வருங்கருஞ் சிலைத்தடக்கை மானவேடர் சேனைதான்
பொருந்தடந் திரைக்கடற் பரப்பிடைப் புகும்பெருங்
கருந்தரங்க நீள்புனற் களிந்திகன்னி ஒத்ததே. 73

(இ - ள்.) நெருங்கிய பசுமை பொருந்திய மரக்கூட்டங்கள் நீண்டு வளர்ந்திருக்கின்ற காட்டினை அடையும்படி, நேராக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வருகின்ற கருமை நிறம் பொருந்திய வில்லைப்பிடித்த நீண்ட கைகளையுடைய வலிய வேடர்சேனையானது, கரையை மோதுகின்ற விசாலமாகிய அலைகளையுடைய பரந்த சமுத்திரத்தில் சங்கமமாகின்ற பெரிதாகிய கருநிறமுள்ள அலைகளோடு ஒலிமிகுந்திருக்கின்ற வெள்ளத்தையுடைய காளிந்தி என்னும் நதியாகிய பெண்ணையொத்திருந்தது. எ-று.

தென்றிசைப் பொருப்புடன் செறிந்தகானின் மானினம்
பன்றிவெம் மரைக்கணங்கள் ஆதியான பல்குலம்
துன்றிநின்ற என்றடிச் சுவட்டின் ஒற்றர் சொல்லவே
வன்றடக்கை வார்கொடெம் மருங்கும்வேடர் ஓடினார். 74

(இ - ள்.) நம்மூருக்குத் தெற்குத்திக்கிலுள்ளதாகிய மலையோடு மரங்கள் நெருங்கிய காட்டினிடத்தில் மான்களும், காட்டுப் பன்றிகளும், கொடியமரை என்னு மிருகங்களுமாகிய இவை முதலான பல மிருகக் கூட்டங்கள் நிறைந்திருக்கின்றன வென்று அவைகளின் காலடியின் அடையாளங்களால் வேவு காரர்கள் சொல்ல, வல்லமை பொருந்திய பெரிய கைகளில் வார் வலைகளை எடுத்துக் கொண்டு நான்கு பக்கங்களிலும் வேடர்கள் ஓடினார்கள். - எ- று.

ஓடியெறிந்து வாரொழுக்கி யோசனைப் பரப்பெலாம்
நெடியதிண் வலைத்தொடக்கு நீளிடைப் பிணித்துநேர்
கடிகொளப் பரந்தகாடு காவல்செய் தமைத்தபின்
செடிதலைச் சிலைக்கைவேடர் திண்ணனார்முன் நண்ணினார். 75

(இ - ள்.) சுருக்குவலைகளை வீசி வார்களைக்கட்டி, காட்டின் ஒருயோசனை எல்லையளவும் நீண்ட வலிமை பொருந்திய கயிற்று வலைகளை நெடுந்தூரஞ் செல்லும் படி மரங்களிற் பிடித்துக்கட்டி, நேராகக் கண்டவர்கள் அச்சங் கொள்ளும்படியாகப் பரவியிருக்கின்ற அக்காட்டில் மிருகங்கள் புறத்திற் செல்லாத படி காவல் செய்து வைத்த பின்பு தூறாகிய மயிர்கள் பொருந்திய தலையினையுடைய வில்லைப்பிடித்த வேடர்கள் திண்ணனாருக்கு முன்னே வந்து சேர்ந்தார்கள். எ-று.

வெஞ்சிலைக்கை வீரனாரும் வேட ரோடு கூடிமுன்
மஞ்சலைக்கு மாமலைச் சரிப்புறத்து வந்தமா
அஞ்சுவித் தடர்க்குநாய்கள் அட்டமாக விட்டுநீள்
செஞ்சரத்தி னோடுசூழல் செய்தகானுள் எய்தினார். 76

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) கொடியவில்லைக் கையிற்பிடித்த வீரராகிய திண்ணனாரும், வேடர்களோடு சேர்ந்து முன்னே மேகங்கள் சஞ்சரிக்கின்ற பெரிய மலைச்சாரல்களினின்றும் வந்த மிருகங் களை அஞ்சும் படி செய்து கொலைக்கு உட்படுத்துகின்ற நாய் களைக் குறுக்காவிட்டு நீண்ட கூர்மையாகிய பாணங்களோடு வேட்டையின் பொருட்டு வேடர்களால் வளைக்கப்பட்ட காட்டிற்குப் போயினார். - எ- று.

வெய்யமா எழுப்பஏவி வெற்பராயம் ஓடிநேர்
எய்யும்வாளி முன்தெரிந்து கொண்டுசெல்ல எங்கணும்
மொய்குரல் துடிக்குலங்கள் பம்பைமுன் சிலைத்தெழக்
கைவிளித் ததிர்த்துமா எழுப்பினார்கள் கானெலாம். *77*

(இ - ள்.) வேடர் கூட்டங்கள் கொடியமிருகங்களை அவைகளிருக்குமிடத்தில் நின்று எழுப்பும் படியாக வேவுகார ரைச் செலுத்தி, அவர்கள் எழுப்புங்கால் எதிர்ப்பட்ட மிருகங் களின் மேல் எய்தற்கு உரிய அம்புகளை முன்னே ஆராய்ந்து எடுத்துக் கொண்டு விரைவாகப்போக எவ்விடங்களிலும் நிறைந்த பேரோசையையுடைய உடுக்கை வாத்தியங்களும், பம்பைகளும் முன்னே முழங்கி எழும்ப, கையைத்தட்டி வாயினால் இரைச்சவிட்டு அக்காட்டில் மறைந்து சஞ்சரிக்கின்ற மிருகங்களையெல்லாம் எழுப்பினார்கள். - எ- று.

ஏனமோடு மானினங்கள் எண்குதிண் கலைக்குலம்
கானமேதி யானைவெம் புலிக்கணங்கள் கான்மரை
ஆனமா அநேகமா வெருண்டெழுந்து பாயமுன்
சேனைவேடர் மேலடர்ந்து சீறிஅம்பில் நூறினார். *78*

(இ - ள்.) காட்டுப் பன்றிகள் - மான்கள் - கரடிகள் - வலிய கலைமான் கூட்டங்கள் - காட்டெருமைகள் - யானைகள் - கொடுமை பொருந்திய புலிக்கூட்டங்கள் - காட்டுப்பசுக்கள் இவை முதலாகிய அநேக மிருகங்கள் மிகவும் பயந்து எழுந்து பாய்ந்தோடும் பொழுது அவைகளுக்கு முன்னே சென்ற கூட்டமாகிய வேடர்கள் எதிர்த்துக் கோபங் கொண்டு அம்புகளினால் அழித்தார்கள். - எ- று.

தாளறுவன இடைதுணிவன தலைதுமிவன கலைமா;
வாளிகளொடு குடல்சொரிதர மறிவனசில மரைமா;
நீளுடல்விடு சரம்உருவிட நிமிர்வனமிடை கடமா; *79*
மீளிகொள்கணை படும்உடலெழ விழுவனபல உழையே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) கலைமான்கள் கால்கள் அறுபட்டவைகளும், இடுப்புகள் துணிக்கப்பட்டவைகளும், தலைகள் வெட்டுண்டவைகளுமாய்க் கிடந்தன; சில மரைமிருகங்கள் உடம்பில் தைத்த அம்புகளோடு குடல்களும் கீழே சொரியவிழுந்து இறந்து கிடந்தன; மிகுந்த மதத்தைப் பொழிகின்ற யானைகள் தமது நீண்ட உடம்பில் வேடர்களால் விடப்பட்ட பாணங்கள் ஊடுருவ, அதனால் கீழே விழாமல் நிமிர்ந்து நின்றன; பல மான் கூட்டங்கள் பலம் பொருந்திய அம்புகள் தைத்ததனால் உடலானது மேலேழும்பிப் பின்பு நிலத்தில் விழுந்தன. - எ- று.

வெங்கணைபடு பிடர்கிழிபட விசைஉருவிய கயவாய்
செங்கனல்விட அதனொடுகணை செறியமுன்இரு கருமா
அங்கெழுசிரம் உருவியபொழு தடலெயிறுற அதனைப்
பொங்கியசின மொடுகவர்வன புரைவனசில புலிகள். 80

(இ - ள்.) முன்னேயுள்ள பெரிய பன்றிகளுக்குக் கொடுமையாகிய அம்புகள் படுதலால் பிடர்கிழிந்து போக விசையாக உருவிய ஆழ்ந்தவாயானது நெருப்பைக்கக்க, அந்தப் பன்றிகளை இழுத்துக் கொண்டு அவ்வம்புகள் நெருங்கிப் புலிகளின் அழகிய தலையில் உருவிய பொழுது அவற்றின் வாயிலுள்ள வலியபற்களில் பொருந்துதலால் அப்பன்றிகளை மிகுந்த கோபத்தோடு விழுங்குதலை ஒத்தனவாகிச் சிலபுலிகள் கிடந்தன. - எ- று.

பின்மறவர்கள் விடுபகழிகள் பிறகுறவயி றிடைபோய்
முன்நடுமுக மிசையுருவிட முடுகியவிசை யுடன்அக்
கொன்முனைஅடு சரமினமெதிர் குறுகியமுகம் உருவத்
தன்னெதிரெதிர் பொருவனநிகர் தலையனபல கலைகள். 81

(இ - ள்.) பின்புறத்திலிருந்து கொண்டு வேடர்கள் விடுகின்ற பாணங்கள் பல கலைமான்களின் பின்புறமாகப்பாய்ந்து வயிற்றின் வழியாகப் போய் முன்னேயுள்ள நடுமுகத்தில் உருவி மிகுந்த வேகத்தோடு அவ்வேட்டைப் போரில் கொல்லுகின்ற அம்புகள் தன் எதிராக வந்த கலைமான்களினது முகத்தையும் உருவுதலால் அக்கலைமான்களின் தலைகள் ஒன்றினோடொன்று எதிர்த்துத் தாக்கிப் போர் செய்தலை ஒத்திருந்தன. - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருவரைஒரு தனுவொடுவிசை கடுகியதென முனைநேர்
குரிசில்முன்விடும் அ சரம்எதிர் கொலைபயில்பொழு தவையே
பொருகரியொடு சினஅரியிடை புரையறவுடல் புகலால்
வரும்இரவொடு பகல்அணைவன எனமிடையும் அவ்வனமே. 82

(இ - ள்.) கருமை நிறம் பொருந்திய மலையானது ஒரு வில்லை யேந்திக் கொண்டு விரைந்து வந்தது போல மிருக வேட்டையில் வந்த திண்ணனார் அம்மிருகங்களுக்கு எதிரில் விடுகின்ற கொலைத் தொழிலையுடைய அம்புகள் எதிரேசென்று அவைகளைக் கொல்லும் பொழுது அவ்வம்புகள் போர் செய்தற்குரிய யானையின்மேல்தைத்து அதனோடு கோபமுள்ள சிங்கத்தினது வலிய உடலிலும்தைத்து அவ்விரண்டினையும் ஒன்றாகச் சேர்த்தலால் வருகின்ற இராக்காலத்தோடு பகற்காலமும் ஒன்றுபடச் சேர்ந்து இருந்தன போல அவ்வனமானது விளங்கிக் கொண்டிருக்கும். - எ- று.

நீளிடைவிசை மிசைகுதிகொள நெடுமுகில்தொட எழுமான்
தாளுறுகழல் மறவர்கள்விடு சரம்நிரைதொடர் வனதாம்
வாள்விடுகதிர் மதிபிரிவுற வருமெனவிழும் உழையைக்
கோளொடுபயில் பணிதொடர்நிலை கொளவுளஎதிர் பலவே. 83

(இ - ள்.) வெளிப்புறத்தில் விசையோடு மேலேகுதித்து நீண்ட மேகமண்டலத்தைத் தொடும்படி எழும்புகின்ற மான் களை வீரகண்டையைத் தரித்த காலினையுடைய வேடர்கள் விட்ட அம்பின் வரிசைகள் சென்று தொடர்வது எப்படியிருந் தன வென்றால் ஒளியை வீசுகின்ற கிரணங்களையுடைய சந்திரன் இராகுவினால் ஓர் காலத்தில் துன்பப்பட வேண்டி வரும் என்று பயந்து அதனைவிட்டுப் பிரிந்து விழுகின்ற மானை அவ்விராகுவானது வலிவோடு தொடர்ந்து பிடிக்கும் நிலைமையை யொத்திருந்தன; இப்படி எதிரே பல இடங்கள் உள்ளன. - எ- று.

கடல்விரிபுனல் கொளவிழுவன கருமுகிலென நிரையே
படர்வொடுசெறி தழைபொதுளிய பயில்புதல்வனம் அதன்மேல்
அடலுறுசரம் உடலுறவரை யடியிடம்அல மரலால் 84
மிடைகருமரை கரடிகளோடு விழுவனவன மேதி.

(இ - ள்.) வரிசையாகத் தழைகள் படர்ச்சியோடு நெருங்கிய மிருகங்கள் சஞ்சரிக்கின்ற புதல்களையும்... 'புவனத்தில் (வேடர் களுடைய) வலிமை பொருந்திய அம்புகள் உடம்பில்தைக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலையின் அடிவாரத்தில் சுழன்றுவருந்துதலோடு நெருங்கிய கருநிறம் பொருந்திய மரை என்னும் மிருகங்களும் கரடிகளோடு காட்டெருமைகளும் சமுத்திரத்தில் விரிந்த நீரையுண்ணும்படி விழுகின்ற கறுத்த மேகம் போல இறந்து விழுகின்றன. - எ- று.

பலதுறைகளின் வெருவரலொடு பயில்வலையற நுழைமா
உலமொடுபடர் வனதகையுற உறுசினமொடு கவர்நாய்
நிலவியஇரு வினைவலையிடை நிலைசுழல்பவர் நெறிசேர்
புலனுறுமன் னிடைதடைசெய்த பொறிகளின்அள வுளவே. 85

(இ - ள்.) பலவழிகளினின்றும் பயத்தோடு கட்டியருக்கின்ற வலைகள் அற்று விழும்படி நுழைகின்ற மிருகங்கள் வேகமாக ஓடுதலைத் தடுக்கும்படி மிகுந்த கோபத்தோடு அவைகளைக் கவ்வுகின்ற நாய்கள், பொருந்திய நல்வினை தீவினை என்னும் இருவினைகளாகிய வலையினிடத்தில் அகப்பட்டுத் தமது நிலை கலங்கி வருந்துகின்றவர்கள் மோக்ஷத்தை அடைதற்குச் சாதனமாகிய ஞானம் பொருந்திய மனத்தினை அம்மோக்ஷநெறியில் செல்ல வொட்டமால் இடையில் தடை செய்த ஐம்பொறிகளின் தன்மையை ஒத்திருந்தன. - எ- று.

துடியடியன மடிசெவியன துறுகயமுனி தொடரார்;
வெடிபடவிரி சிறுகுருளைகள் மிசைபடுகொலை விரவார்;
அடிதளர்வுறு கருவுடையன அணைவுறுபிணை அலையார்;
கொடியனஎதிர் முடுகியும்உறு கொலைபுரிசிலை மறவோர். 86

(இ - ள்.) கொடிய மிருகங்களை எதிராகச் சென்று தடுத்து மிகுதியாகக் கொலை செய்கின்ற வில்லையுடைய வேடர்கள் உடுக்கை போன்ற கால்களையும், மடிந்த காதுகளையுடையன வாகிய நெருங்கிய யானைக்கன்றுகளைத் தொடர்ந்து வேட்டை யாடார்கள்; முழக்குமுண்டாக ஒலித்துவிலகி ஓடுகின்ற சிறிய குட்டி மிருகங்களின் மேல் சென்று அவற்றைக் கொலை செய்யார்கள்; காலடிகள் தளர்வடைந்து கருப்பமுடையவை களாய் வருகின்ற பெண்மான்களை வருத்திக் கொல்லமாட் டார்கள். - எ- று.

இவ்வகைவரு கொலைமறவினை எதிர்நிகழ்வுழி அதிரக்
கைவரைகளும் வெருவுறமிடை கான்எழுவதொர் ஏனம்
பெய்கருமுகி லெனஇடியொடு பிதிர்கனல்விழி சிதறி
மொய்வலைகளை அறநிமிர்வுற முடுகியகடு விசையில். 87

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - று.) இவ்விதமாக வருகின்ற கொலை செய்தலாகிய வேட்டைத்தொழிலானது தனக்கு எதிரே நடக்கும் பொழுது, பூமி அதிரவும் துதிக்கையினையுடைய யானைகளும் பயங் கொள்ளவும் நெருங்கிய காட்டினின்றும் எழும்பிய ஒரு பன்றியானது மழை பெய்கின்ற கரியமேகத்தைப் போல இடித்த குரலோசையோடு நெருப்புப் பொறிகளைக் கண்களினின்றும் சிந்தி நெருங்கிய வலைகள் அறும்படி மேல் எழும்பி மிகுந்த வேகத்தோடு ஓடியது. - எ- று.

போமதுதனை அடுதிறலொடு பொருமறவர்கள் அரியே(று)
ஆமவர்தொடர் வுறும்விசையுடன் அடிவழிசெலும் அளவில்
தாமொருவரும் அறிகிலரவர் தனிதொடர்வுழி அதன்மேல்
ஏமுனைஅடு சிலைவிடலைகள் இருவர்கள்அடி பிரியார். 88

(இ - ள்.) இவ்விதமாக ஓடிப்போகின்ற அந்தப் பன்றியைக் கொல்லத்தக்க வலியோடு எதிர்க்கின்ற வேடர்களுக்கு ஆண் சிங்கம் போன்ற திண்ணனார் அதனைத் தொடர்ந்து பிடிக்கும் விசையோடு காலடியின் வழியாகப் போகும் பொழுது, அவர் தனியாக அப்பன்றியைப் பின்பற்றித் தொடர்ந்ததை அவ்வேடர்களில் ஒருவரும் அறிய வில்லை; அதன் பின்பு, போர் முனையில் விடுகின்ற அம்பையும் வில்லையுமுடைய இரண்டு காளைப்பருவமுள்ள வேடர்கள் மாத்திரம் அவரடியைப் பிரியாமல் பின் தொடர்ந்தார்கள். - எ - று.

நாடியகழல் வயவர்களவர் நாணனும்நெடு வரிவில்
காடனும்எனும் இருவரும்மலை காவலரொடு கடிதில்
கூடினர்விடு பகழிகளொடு கொலைஞமலிகள் வழுவி
நீடியசரி படர்வதுதரு நீழலின்விரை கேழல். 89

(இ - ள்.) தேடிப்புறப்பட்ட வீரக்கழலையணிந்த வீரர் களாகிய நாணனும், கட்டமைந்த நீண்ட வில்லின்னயுடைய காடனும் என்று சொல்லப்பட்ட இருவரும் மலைக்காவலராகிய திண்ணனாரோடு விரைவாகச் சேர்ந்து அவர்களால் விடப் பட்ட அம்புகளோடு கடித்துக் கொல்லுகின்ற நாய்களுக் குந்தப்பி நீண்ட மலைச் சாரலில் ஒரு மரத்தின் நீழலில் விசையாக அப்பன்றியானது ஓடியது. - எ- று.

குன்றியைநிகர் முன்செறஎரி கொடுவிழிஇடி குரல்நீள்
பன்றியும்அடல் வன்றிறலொடு படர்நெறிநெடி தோடித்
துன்றியதொரு குன்றடிவரை சுலவியநெறி சூழல் 90
சென்றதனிடை நின்றதுவலி தெருமரமர நிரையில்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) முன்னே கோபத்தினால் சிவந்த குன்றிமணியை யொத்த நெருப்புப் பொறி பறக்கின்ற கொடியகண்களையும், இடிபோன்ற குரலையுமுடைய நீண்ட பன்றியும் மிகுந்த வலி யோடு தான் போகின்ற வழியில் நெடுந்தூரம் ஓடி, நெருங்கிய ஒரு மலையினடியில் வளைவாகிய வழியையுடைய ஒரு சோலையையடைந்து அங்கு தனது வலியிழந்து மரச்செறிவில் நின்றுவிட்டது. - எ- று.

அத்தருவளர் சுழலிடை யடை அதன்நிலையறி பவர்முன்
கைத்தெரிகணை யினிலடுவது கருதலர்விசை கடுகி
மொய்த்தெழுசுடர் விடுசுரிகையை முனைபெறஎதிர் உருவிக்
குத்தினருடல் முறிபடவெறி குலமறவர்கள் தலைவர். 91

(இ - ள்.) அந்த மரங்கள் நெருங்கியிருக்கின்ற சோலையை யடைந்த அப்பன்றியின் இருப்பை அறிந்தவராய்த் தாம் முன்பு மிருகங்களைக் கொல்வதற்குக் கையில் ஆராய்ந்தெடுத்த அம்பினால் அதனைக் கொல்ல நினையாமல் விசையாகப் போய் நெருக்கி யெழுகின்ற ஒளிவீசுகின்ற உடைவாளை யுருவி அதன் முனையாயனது நன்றாயழுந்தும்படியாக அப்பன்றியின் உடல் முறியக் குத்தினார், கொலைத் தொழிலையுடைய வேடர்குலத் தலைவராகிய திண்ணனார். - எ-று.

வேடர்தங் கரிய செங்கண் வில்லியார் விசையிற் குத்த
மாடிரு துணியாய் வீழ்ந்த வராகத்தைக் கண்டு நாணன்
“காடனே! இதன்பின் இன்று காதங்கள் பலவந் தெய்த்தோம்;
ஆடவன் கொன்றான் அச்சோ!” என்(று)அவர் அடியில் தாழ்ந்தார். 92

(இ - ள்.) கரிய நிறத்தையும் சிவந்தகண்களையுமுடைய வேடர்களுக்குத் தலைவராகிய திண்ணனார் விசையோடு உடைவாளினால் குத்த, அவ்விடத்தில் இரண்டு துண்டாக விழுந்து இறந்த பன்றியை நாணனென்பவன் பார்த்து, ஓ காடனே! இந்தப்பன்றியின் பின்னாக இன்றைக்குப் பலகாததூரம் தொடர்ந்து வந்து இளைத்தோம்; இதனை ஆண் தன்மையையுடைய நமது திண்ணனாரே கொன்றார், இது ஆச்சரியமென்று அவ்விருவரும் அவருடைய திருவடிகளில் வணங்கினார்கள். - எ- று.

மற்றவர் திண்ண னார்க்கு மொழிகின்றார் “வழிவந் தாற்ற
உற்றது பசிவந் தெம்மை உதவிய இதனைக் காய்ச்சிச்
சற்றுநீ அருந்தி யாமும் தின்றுதண் ணீர்கு டித்து
வெற்றிகொள் வேட்டைக் காடு குறுகுவோம் மெல்ல” என்றார். 93

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அந்த நாணனும் காடனும் திண்ணனாரைப் பார்த்துச் சொல்லுகின்றார்கள், வெகுதூரம் வழிநடந்து வந்த படியினால் நமக்குப் பசியானது மிகவும் உண்டாயிருக்கின்றது; ஆதலால், இப்பொழுது நமக்குக்கிடைத்த இந்தப்பன்றியை நெருப்பில் காய்ச்சி நீருங் கொஞ்சம் உண்டு நாங்களுந்தின்று குளிர்ந்த நீரைக் குடித்துப் பசிதணித்துக் கொண்டு பின்பு நாம் வெற்றி பெற்ற வேட்டையாடிய காட்டிற்கு மெல்லப் போவோம் என்று சொன்னார்கள். - எ- று.

என்றவர் கூற நோக்கித் திண்ணனார் "தண்ணீர் எங்கே
நன்றும்இவ் வனத்தி உள்ள(து)?" என்றுரை செய்ய நாணன்
"நின்றஇப் பெரிய தேக்கின் அப்புறஞ் சென்றால் நீண்ட
குன்றினுக் கயலே ஓடுங் குளிர்ந்தபொன் முகலி" என்றான். ***94***

(இ - ள்.) என்று இவ்விதமாக அவ்விருவர்களும் சொல்ல, அதைக் கேட்ட திண்ணனார் அவர்களைப் பார்த்து நல்ல தண்ணீரானது இந்த வனத்தில் எவ்விடத்தில் இருக்கிறதென்று கேட்க, அதற்கு நாணனென்பவன் (இதோ நமாக்கு முன்னே) நிற்கின்ற இந்தப் பெரிய தேக்கமரத்திற்கு அப்புறம் போனால் அவ்விடத்திலுள்ள உயர்ந்தமலைக்குப் பக்கத்தில் குளிர்ச்சி பொருந்திய பொன்முகலி நதியானது ஓடுகின்றது என்று சொன்னான். - எ- று.

பொங்கிய சினவில் வேடன் சொன்னபின் "போவோம் அங்கே;
இங்கிது தன்னைக் கொண்டு போதுமின்" என்று தாமும்
அங்கது நோக்கிச் சென்றார்; காவதம் அரையிற் கண்டார்
செங்கண்ஏ றுடையார் வைகுந் திருமலைச் சாரல் சோலை. ***95***

(இ - ள்.) மிகுந்த கோபத்தினையுடைய வில்லைத்தாங்கிய நாணன் சொன்ன பின்பு, திண்ணனார் ஆனால் நீ சொன்ன இடத்திற்குப் போவோம், அவ்விடத்தில் இப்பன்றியை எடுத்துக் கொண்டு வாருங்களென்று சொல்லித் தாமும் அம்மலையை நோக்கிப் போனார், அவ்வாறு போகும் பொழுது அரைக்காத வழி தூரத்திற்கு அப்பால் சிவந்தன கண்களையுடைய இடபத்தை வாகனமாகக் கொண்டருளிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருக்காளத்தி மலையினது அடிவாரத்திலிருக் கின்ற சோலையை தரிசித்தார். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"நாணனே! தோன்றும் குன்றில் நண்ணுவோம்" என்ன நாணன்
"காணநீ போதின் நல்ல காட்சியே காணும்; இந்தச்
சேணுயர் திருக்கா ளத்தி மலைமிசை எழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவர் இருப்பார்;கும் பிடலாம்" என்றார். 96

(இ - ள்.) (திண்ணனார் நாணனைப் பார்த்து) நாணனே நமக்கு முன்னேதோன்றுகின்ற இம்மலையினிடத்திற்குப் போவோமென்று சொல்ல, அதற்கு நாணன் சொல்லுகின்றான், நீர் அதனைப் பார்க்கும்படி போனால் நல்ல தரிசனமே உண்டாகும், (அதுயாதென்றால்) ஆகாயவரையிலும் அளாவிய திருக்காளத்தி மலையின் மேல் தோன்றிச் செவ்வையாகக் குறைவில்லாத குடுமித்தேவர் இருப்பார், அவரைக் கும்பிடலாம் என்று சொன்னான். - எ- று.

"ஆவதென்? இதனைக் கண்டிங் கணைதொறும் என்மேற் பாரம்
போவதொன் றுளது போலும்; ஆசையும் பொங்கி மேன்மேல்
மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா நிற்கும்;
தேவரங் கிருப்ப தெங்கே? போ" கென்றார் திண்ண னார்தாம். 97

(இ - ள்.) திண்ணனார் இனி விளையப் போகிறது யாதோ? இந்த மலையைத் தரிசித்துக் கொண்டு இதனைச் சேரச்சேர என்மேல் ஏற்றப்பட்டுள்ள பாரமானது கொஞ்சங் கொஞ்சமாக நழுவிப் போவது போலு மிருக்கின்றது; இம்மலையை யடைந்து குடுமித்தேவரைத் தரிசிக்க வேண்டுமென்னும் ஆசையும்; அதிகரித்து மேலுமேலும் பொருந்திய மனமும் என்னால் இப்படிப்பட்ட தென்று நிச்சயித்து அறியக் கூடாத ஓர் விருப்பத்தை அடையும் படி தோன்றி நிற்கின்றது; ஆகையினால் குடுமித்தேவர் அம்மலையில் எவ்விடத்தில் எழுந்தருளி யிருப்பது, அவ்விடத்தில் நீ வரக்கடவாய் என்று சொன்னார். - எ- று.

"விரும்புற விரையா நின்று" என்றும் பாடம்.

உரைசெய்து விரைந்து செல்ல அவர்களும் உடனே போந்து
கரைவளர் கழையின் முத்தும் கார்அகில் குறடும் சந்தும்
வரைதரு மணியும் பொன்னும் வயிரமும் புளினந் தோறும்
திரைகள்முன் திரட்டி வைத்த திருமுக லியினைச் சார்ந்தார். 98

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) திண்ணனார் இவ்விதமாகச் சொல்லி விரைவாகப் போக, அவ்விருவர்களும் அவரோடு கூடப்போய்க் கரையில் வளருகின்ற மூங்கிலில் தோன்றிய முத்துக்களையும், கரிய அகிற்றூண்களையும், சந்தனக் கட்டைகளையும், மலைகளில் உண்டாகிய இரத்தினங்களையும், பொன்னையும், வயிரத்தையும் மணற்குன்றுகள் தோறும் அலைகளால் முன்னே ஒதுக்கப் பட்டிருக்கின்ற பொன் முகலியாற்றையடைந்தார்கள். எ- று.

ஆங்கதன் கரையின் பாங்கோர் அணிநிழற் கேழல் இட்டு
வாங்குவில் காடன் தன்னை மரக்கடை தீக்கோல் பண்ணி
"ஈங்குநீ நெருப்புக் காண்பாய் இம்மலை ஏறிக் கண்டு
நாங்கள்வந் தணைவோம்" என்று நாணனும் தாமும் போந்தார். 99

(இ - ள்.) அந்தப் பொன்முகலியாற்றின் கரையருகிலுள்ள ஒரு மரத்தினது அழகிய நிழலில் தாம் கொண்டு வந்த பன்றியைப் போடுவித்து, வளைந்த வில்லைத் தாங்கிய காடனென்பவனைப் பார்த்து, மரக்கொம்பினால் தீக்கடை கோல்செய்து கொண்டு இவ்விடத்தில் நீ நெருப்பையுண்டாக்குவாய், நாங்கள் இந்த மலையில் ஏறி அங்கு எழுந்தருளியிருக்கின்ற குடுமித்தேவரைத் தரிசித்துக் கொண்டு வந்து சேருகின்றோம் என்று சொல்லி நாணனுந் தாமுமாகப் போனார்கள். - எ- று.

அளிமிடை கரைசூழ் சோலை அலர்கள்கொண் டணைந்த ஆற்றின்
தெளிபுனல் இழிந்து சிந்தை தெளிவுறும் திண்ண னார் தாம்
களிவுறும் மகிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டு கொண்டு
குளிர்வரு நதியூ டேகிக் குலவரைச் சாரல் சேர்ந்தார். 100

(இ - ள்.) வண்டுகள் மொய்க்கும் கரையிலிருக்கின்ற சோலைகளிலுள்ள மலர்களை அலைக்கரங்களால் வாரிக் கொண்டு வருகின்ற பொன்முகலியாற்றினது தெளிந்த நீரில் இறங்கி மனத் தெளிவடைந்த திண்ணனார் மிகுந்த சந்தோஷமானது அதிகரிக்கத் திருக்காளத்தி மலையைப் பார்த்துக் கொண்டு குளிர்ச்சிபொருந்திய அந்நதியின் வழியாகச் சென்று சிரேஷ்டமாகிய அத்திருமலையின் அடிவாரத்தை அடைந்தார். -எ - று.

கதிரவன் உச்சி நண்ணக் கடவுள்மால் வரையின் உச்சி
அதிர்தரும் ஓசை ஐந்தும் ஆர்கலி முழக்கங் காட்ட
'இதுஎன்கொல்? நாணா! என்றார்க்(கு) "இம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து
மதுமலர் ஈக்கள் மொய்த்து மருங்கெழும் ஒலிகொல்" என்றான். 101

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) சூரியன் உச்சியில்வர, தெய்வத் தன்மை பொருந்திய பெரிய அத்திருக்காளத்தி மலையின் சிகரத்தில் தேவர்கள் முழக்குகின்ற தேவதுந்துபி ஐந்தும் சமுத்திரத்தின் கோக்ஷம் போல முழங்க, (அதனைக் காதிற் கேட்டு) நாணனே! இவ்வோசையாதென்று கேட்டவராகிய திண்ணனாருக்கு நாணன் இம்மலையினிடத்தில் பெரிய தேனடையைச் சூழ்ந்து தேனைவிரும்பிய ஈக்கள் மொய்த்தலால் இம்மலைப் பக்கத்தில் உண்டாகின்ற முழக்கம் போலும் என்றான். - எ- று.

முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்ப மான
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக் குருகி உள்ளத் தெழுபெரு வேட்கையோடும். 102

(இ - ள்.) திண்ணனார் முற்பிறப்பில் செய்த சிவபுண்ணியத்தின் தொகுதிகள் ஓர் காலத்தில் அழியாத பேரின்பத்திற்குக் காரணமாகிய அன்பினை அவர்க்கு எடுத்துக் காண்பிக்க அதனால் அளவில்லாத ஆசையானது உண்டாகி, நிலை பெற்ற பெருங்காதல் அதிகரிக்க, சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்காளத்தி மலையைப் பார்த்துக் கொண்டு எலும்பு நெக்குவிட்டுருகி உள்ளத்தில் எழுகின்ற பெரிய அவாவவோடும். எ - று.

நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத் தாமும்
பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்
நீணிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் போதில். 103

(இ - ள்.) நாணனென்பவனும் சிவபெருமானைத் தரிசிக்க வேண்டுமென்னும் தமது உள்ளத்தெழுந்த பேரன்பும் முன்பாகக் குளிர்ச்சி பொருந்திய மலையில் ஏற, பின்னே திண்ணனார், விரும்புகின்ற தத்துவங்களென்று சொல்லப்பட்ட படிகளின் வழியாக ஏறிச் சிருட்டிமுதலிய பஞ்சகிருத்தியங்களுக்கும் காரணமாககிய முடிவிலாற்றல் என்னும் சத்தியையுடைய சிவபெருமானை அடைபவர்களைப் போலத் திருக்காளத்தி நாதர் எழுந்தருளியிருக்கின்ற நீண்ட நிலையையுடைய அத் திருமலையில் ஏறி, சந்நிதியை நோக்கி நேராக நடக்கும் பொழுது - எ - று.

Public Domain. Digitization Muthulakshmi Research Academy

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில்அன் புருவம் ஆனார். 104

(இ - ள்.) சந்திரனைத் தரித்த சடையினையுடைய சிவபெருமானை யடைந்து திண்ணனார் தரிசிப்பதற்கு முன்னமே அப்பெருமானது கிருபைமிகுந்த திருவருட் பார்வை யானது தம்மை யடைந்தபடியால் முற்பிறப்பில் உண்டாகிய கன்ம பந்தங்கள் விட்டு நீங்கி, தம்முள்ளத்தில் அதிகரித்தெழுந்த திருவருணீழலில் தங்கி, ஒப்பற்ற அன்பே உருவமாயினார். - எ று.

மாகமார் திருக்கா ளத்தி மலைஎழு கொழுந்தா யுள்ள
ஏகநா யகரைக் கண்டார்; எழுந்தபே ருவகை அன்பில்
வேகமா னதுமேற் செல்ல மிக்கதோர் விரைவி னோடும்
மோகமாய் ஓடிச் சென்றார்; தழுவினார்; மோந்து நின்றார். 105

(இ - ள்.) ஆகாயத்தை யளாவிய திருக்காளத்தி மலையில் அதன் கொழுந்து போல எழுந்தருளியிருக்கின்ற முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமானைத் தரிசித்தார்; தமது உள்ளத்தில் உண்டாகிய பெருமகிழ்ச்சிக்குக் காரணமாகிய அன்பின் எழுச்சியானது அதிகப்பட மிகுந்த விரைவோடு ஆசையாய் ஓடிச் சிவபெருமானை தழுவிக் கொண்டு உச்சியை மோந்து நின்றார். எ- று.

நெடிதுபோ துயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கண்ணீர் அருவி பாய
'அடியனேற் கிவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ!' என்று 106
படியிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற.

(இ - ள்.) நெடு நேரம் வரையிலும் உச்சியை மோந்து பெருமூச்சு விட்டுக் கொண்டு நின்று, உடல் முழுவதும் வரிசையாய் எழுகின்ற மயிர்க்கால்கள் தோறும் புளகமானது நிறைந்து தோன்ற, தாமரை மலர் போன்ற, தமது கண்களி லிருந்து ஆனந்தத்தினால் வருகின்ற நீரானது அருவி போலப் பாய, அடியேனுக்கு இவ்வருட் பெருங்கடலாகிய கடவுள் இவ்விடத்திற்றானே அகப்பட்டார்; இது என்ன ஆச்சரிய மென்று, ஒப்பில்லாத அன்பே ஒரு உருவங் கொண்டது போலப் பார்ப்பவர்களுக்குத் தோன்றும்படி எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெம்மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதி யார்போல்
கைம்மலை கரடி வேங்கை அரிதிரி கானம் தன்னில்
உம்முடன் துணையாய் உள்ளார் ஒருவரும் இன்றிக் கெட்டேன்
இம்மலைத் தனியே நீரிங் கிருப்பதே!" என்று நைந்தார். 107

(இ - ள்.) கொடிய மறவர் குலத்திற் பிறந்த வேடச்சாதியார்களைப் போல யானை - கரடி - வேங்கை - சிங்கமுதலிய மிருகங்கள் திரிகின்ற இக்காட்டில் தேவரீரோடு துணையாயுள்ளவர்கள் ஒருவருமில்லாமல் இந்த மலையில் நீர் மாத்திரம் தனியே இங்கிருக்கிறதா, ஆ கெட்டேன் என்று வருந்தினார். - எ- று.

கைச்சிலை விழுந்த தோரார் காளையார் மீள "இந்தப்
பச்சிலை யோடு பூவும் பறித்திட்டு நீரும் வார்த்து
மச்சிது செய்தார் யாரோ?" என்றலும் மருங்கு நின்ற
அச்சிலை நாணன் தானும் "நானிது அறிந்தேன்" என்பான். 108

(இ - ள்.) திண்ணனார் தமது கையில் பிடித்த வில்லானது கீழே விழுந்ததையும் அறியாமல் பரவசப்பட்டு, பின்பு இந்தப் பச்சிலையோடு பூவையும் பறித்துத் தரித்து நீரையும் வார்த்துப் பயனற்ற இந்தக் காரியத்தைச் செய்தவர் யாவரோ என்று கேட்கவும், அவருக்குச் சமீபத்தில் நின்ற வில்லைப்பிடித்த அந்த நாணனென்பவனும் நான் இதனை முன்னமே அறிந்திருக்கின்றேனென்று சொல்லுகின்றான். - எ- று.

"வன்றிறல் உந்தை யோடு மாவேட்டை ஆடிப் பண்டிக்
குன்றிடை வந்தோம் ஆகக் குளிர்ந்தநீர் இவரை ஆட்டி
ஒன்றிய இலைப்பூச் சூட்டி ஊட்டிமுன் பறைந்தோர் பார்ப்பான்
அன்றிது செய்தான்; இன்றும் அவன்செய்த தாகும்" என்றான். 109

(இ - ள்.) மிகுந்த வல்லமை பொருந்திய உமது தந்தையோடு நாங்கள் மிருகவேட்டை யாடிக் கொண்டு முன்பு ஒரு நாளில் இந்த மலையினிடத்திற்கு வந்தோம்; அப்பொழுது, ஒரு பார்ப்பான் குளிர்ச்சி பொருந்திய நீரினால் இக்குடுமித்தேவரை முழுக்காட்டித் தகுதியாகி இலைகளையும் மலர்களையும் தரித்து, எதனையோ படைத்து முன்னேநின்று நமக்குத் தெரியாத சில வார்த்தைகளைச் சொல்லி இவ்வண்ணமே செய்தான்; ஆதலால் இன்றைக்கும் அவனே செய்திருக்க வேண்டுமென்று சொன்னான். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்ணிறைந் தெழுந்த தேனும் ஒழிவின்றி ஆரா அன்பில்
திண்ணனார் "திருக்காளத்தி நாயனார்க் கினிய செய்கை
எண்ணிய இவைகொ லாம்" என் றிதுகடைப் பிடித்துக் கொண்டவ்
அண்ணலைப் பிரிய மாட்டா அளவில்ஆ தரவு நீட. 110

(இ - ள்.) மனத்திலுள்ளெல்லாம் நிரம்பி யெழுந்த தாயிருந்தாலும் ஒழிவில்லாமல் இன்னும் உதிக்கின்ற அடங்காத பேரன்பினையுடைய திண்ணனார், திருக்காளத்தி மலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுக்கு இனியனவாகிய செய்கைகள் இவை தாம் போலுமென்று, இவ்வாறு செய்ய வேண்டுமென்பதையே உறுதியாயகப்பிடித்துக் கொண்டு அந்தத் திருக்காளத்தி நாதரைப் பிரியமாட்டாமல் அளவில்லாத ஆசையானது அதிகரிக்க. -எ - று.

"இவர்தமைக் கண்டேனுக்குத் தனியராய் இருந்தார்; என்னே!
இவர்தமக் கமுது செய்ய இறைச்சியும் இடுவார் இல்லை;
இவர்தமைப் பிரிய ஒண்ணா(து); என்செய்தேன்? இனியான் சால
இவர்தமக் கிறைச்சி கொண்டிங் கெய்தவும் வேண்டும்" என்று. 111

(இ - ள்.) இப் பெருமானைக் கண்ட எனக்கு ஒருவராகவே யிருக்கின்றார், இஃது என்ன காரணம்; இக்கடவுளுக்குத் திருவமுது செய்யும்படி மாமிசத்தைக் கொண்டு வந்து கொடுப்பவர் ஒருவருமில்லை; இத்தேவரைப் பிரியவுங் கூடாது; இதற்கு என்ன செய்வேன்; இனி நான் இவர் உண்பதற்காக மிகுதியாக இறைச்சியை எடுத்துக் கொண்டு இங்கு வரவேண்டும் என்று நினைத்து. - எ- று.

போதுவர்; மீண்டு செல்வர்; புல்லுவர்; மீளப் போவர்;
காதலின் நோக்கி நிற்பர்; கன்றகல் புனிற்றாப் போல்வர்;
"நாதனே! அமுது செய்ய நல்லமெல் இறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு கொண்டிங்கு வருவேன்" என்பார். 112

(இ - ள்.) திருக்காளத்தி நாதரைவிட்டுச் சிறிதுதூரம் போவார்; மறுபடியும் திரும்பிவருவார்; தழுவி யணைத்துக் கொள்ளுவார், திரும்பவும் போவார்; கொஞ்ச தூரம் போய்ப் பின்பு பேரன்போடு சுவாமியைப் பார்த்து நிற்பார்; கன்றை விட்டுப் பிரிந்த தலையீற்றுப் பசுவைப் போல அலறுவார்; எமது ஆண்டவரே! தேவரீர் திருவமுது செய்யும் படி மிருதுவாயிருக்கின்ற நல்ல மாமிசத்தை நானே பழுதில்லாமல் சோதித்து வெவ்வேறாக எடுத்துக்கொண்டு இவ்விடத்திற்கு வருவேனென்று சொல்லுவார். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஆர்தம ராகி நீரிங் கிருப்பதென் றகல மாட்டேன்;
நீர்பசித் திருக்க இங்கு நிற்கவுங் கில்லேன்" என்று
சோர்தரு கண்ணீர் வாரப் போய்வரத் துணிந்தா ராகி
வார்சிலை எடுத்துக் கொண்டு மலர்க்கையால் தொழுதுபோந்தார். 113

(இ - ள்.) யாவரை உறவினராகக் கொண்டு தேவரீர் இவ்விடத்தில் இருப்பீரென்று அதனால் பிரியவும்மாட்டேன்; நீர் பசியோடிருப்பதனால் இங்கே நிற்கவும் மாட்டேனென்று அரும்புகின்ற கண்ணீரானது ஒழுக, போய் இறைச்சி கொண்டு வரும் படியாகத் துணிந்து நீண்ட வில்லினை எடுத்துக் கொண்டு தாமரை மலர் போன்ற தமது திருக்கரத்தினால் கும்பிட்டுக் கொண்டு போயினார் எமது கண்ணப்ப நாயனார். - எ- று.

முன்புநின் றரிது நீங்கி மொய்வரை இழிந்து நாணன்
பின்புவந் தணைய முன்னைப் பிறதுறை வேட்கை நீங்கி
அன்புகொண் டுய்ப்பச் செல்லும் அவர்திரு முகலி யாற்றின்
பொன்புனை கரையி லேறிப் புதுமலர்க் காவிற் புக்கார். 114

(இ - ள்.) திருக்காளத்தி நாதரது திருமுன்னே நெடு நேரம் நின்று பின்பு ஆராமையோடு அருமையாக நீங்கி, மரங்கள் நெருங்கிய அம்மலையினின்றும் இறங்கி, நாணனென்பவன் தமக்குப் பின்னே வந்து கொண்டிருக்க முன்னே பிற விஷயங் களில் உண்டாயிருந்த ஆசையினின்றும் நீங்கி அன்பானது தள்ளிக் கொண்டு செல்லப் போகின்ற திண்ணனார் பொன் முகலியாற்றினது அழகிய கரையிலேறிப் புதிய மலர்களை யுடைய சோலையில் புகுந்தார். - எ- று.

காடனும் எதிரே சென்று தொழுது "தீக் கடைந்து வைத்தேன்;
கோடுகடை ஏனம் உங்கள் குறிப்படி உறுப்பை எல்லாம்
மாடுற நோக்கிக் கொள்ளும்; மறித்துநாம் போகைக் கின்று
நீடநீர் தாழ்த்த தென்னோ?" என்றலும் நின்ற நாணன். 115

(இ - ள்.) காடனென்பவனும் திண்ணனாருக்கு எதிராகப் போய்க் கைகுவித்து வணங்கி (தேவரீர் கட்டளைப்படியே) அரணியைக் கொண்டு தீக்கடைந்து வைத்திருக்கின்றேன், கொம்பினையுடைய பன்றியினது அவயங்களையெல்லாம் உமது அடையாளப்படியே இங்கு இருக்கப் பார்த்துக் கொள்ளும்; மீண்டும் நாம் போவதற்கு இப்பொழுது நீங்கள் மிகவும் தாமசஞ் செய்தது என்னவென்று கேட்கவும், அருகில் நின்று நாணனென்பவன் (சொல்லுகின்றான்.) - எ - று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"அங்கிவன் மலையில் தேவர் தம்மைக்கண் டணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போதா வல்லுடும்(பு) என்ன நீங்கான்;
இங்கும்அத் தேவர் தின்ன இறைச்சிகொண் டேகப் போந்தான்;
நங்குலத் தலைமை விட்டான்; நலப்பட்டான் தேவர்க்(கு)" என்றான். 116

(இ - ள்.) நாங்கள் போன அவ்விடத்தில் இத்திண்ணனார் மலை மேலிருக்கின்ற குடுமித்தேவரைப் பார்த்துத் தமது கையினால் அணைத்துக் கொண்டு மரப்பொந்தினைப்பற்றி அப்புறஞ்செல்லாத வலிய உடும்பைப் போல விட்டு நீங்காத வராய், அக்குடுமித்தேவர் உண்ணும் பொருட்டு இறைச்சி கொண்டு போவதற்கு இவ்விடத்திற்கும் வந்தார்; நம்முடைய குலத்திற்குத் தலைவராக இருப்பதையும் விட்டுவிட்டார்; அத்தேவருக்கு அடிமையானார் என்று சொன்னான். - எ- று.

"என்செய்தாய் திண்ணா! நீ தான் என்னமால் கொண்டாய்? எங்கள்
முன்பொரு முதலி யல்லை யோ?" என முகத்தை நோக்கார்
வன்பெரும் பன்றி தன்னை எரியினில் வதக்கி மிக்க
இன்புறு தசைகள் வெவ்வே றம்பினால் ஈர்ந்து கொண்டு. 117

(இ - ள்.) (இவ்வாறு நாணன் சொல்லிய வார்த்தையைக் காடன் கேட்டு அவரைப் பார்த்து) திண்ணனாரே! நீர் என்ன காரியஞ் செய்தீர்; எப்படிப்பட்ட பயித்தியங் கொண்டீர்; முன்னே எங்களுக்கு நீர் பெருமை பொருந்திய தலைவரா யிருந்தவரன்றோ? என்று சொல்ல, அவனுடைய முகத்தைப் பார்க்காமல் வலிமை பொருந்திய பெரிய பன்றியை நெருப்பினில் வதக்கிச் சிறந்த இனிமையாகிய இறைச்சிகளை வேறுவேறாக அம்பினால் அரிந்தெடுத்துக் கொண்டு. - எ- று.

கோலினிற் கோத்துக் காய்ச்சிக் கொழுந்தசை பதத்தில் வேவ
வாலிய சுவைமுன் காண்பான் வாயினில் அதுக்கிப் பார்த்துச்
சாலவும் இனிய எல்லாம் சருகிலை இணைத்த கல்லை
ஏலவே கோலிக் கூட அதன்மிசை இடுவார் ஆனார். 118

(இ - ள்.) கொழுப்பாகிய இறைச்சிகளை அம்பினில் கோத்துக் காய்ச்சிப் பக்குவமாக வெந்து கொண்டிருக்கும் பொழுது அவைகள் இனிய சுவையாயிருக்கின்றனவோ வென்று முன்னே அறியும்படிக்கு வாயில் போட்டு அதுக்கிப் பார்த்து மிகவும் இனிப்பா யிருக்கின்ற இறைச்சிகளையெல்லாம் உதிர்ந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இலைகளினால் இணைக்கப்பட்ட கல்லையை நன்றாகத் தைத்து, அதன் மேல் வைத்தார். - எ- று.

மருங்குநின் றவர்கள் பின்னும் "மயல்மிக முதிர்ந்தான்; என்னே
அரும்பெறல் இறைச்சி காய்ச்சி அதுக்கிவே றுமிழா நின்றான்
பெரும்பசி யுடைய னேனும் பேச்சிலன்; எமக்கும் பேறு
தரும்பரி சுணரான்; மற்றைத் தசைபுறத் தெறியா நின்றான்." 119

(இ - ள்.) அப்பொழுது திண்ணனாருக்குச் சமீபத்தில் நின்ற நாணன் காடன் என்னுமிருவரும் சொல்லுகின்றார்கள், முன்பு குடுமித்தேவரைக் காணும் பொழுதிருந்த பயித்தியத்திலும் இப்பொழுது அதிக பயித்தியங் கொண்டிருக்கின்றார், இது என்ன ஆச்சரியம்; கிடைத்தற்கரிய இப்பன்றியின் இறைச்சியை நெருப்பிற் காய்ச்சி வாயிவிட்டு அதுக்கி விழுங்காமல் வீணாகக் கீழேயுமிழ்கின்றார்; மிகுந்த பசியுடைய வராயிருந்தாலும் அதைக்குறித்து நம்மிடத்தில் ஒன்றும் பேசவில்லை; நமக்கும் அவ்விறைச்சிறையைப் பகிர்ந்து கொடுக்குந்தன்மையையும் அறியவில்லை; மிகுந்த இறைச்சியைப் புறத்தில் எறிந்து விடுகின்றார். - எ - று.

"தேவுமால் கொண்டான் இந்தத் திண்ணன்;மற் றிதனைத் தீர்க்கல்
ஆவதொன் றறியோம்; தேவ ராட்டியை நாக னோடு
மேவிநாய் கொணர்ந்து தீர்க்க வேண்டும்அவ் வேட்டைக் கானில்
ஏவல்ஆட் களையுங் கொண்டு போதும்"என் றெண்ணிப் போனார். 120

(இ - ள்.) இந்தத் திண்ணனார் தெய்வப் பயித்தியங் கொண்டிருக்கின்றாா; இதனைத் தீர்க்கத்தகுந்த வழியொன்றை யும் அறியோம்; நாம் போய்த் தேவராட்டியை நாகனோடு அழைத்துக் கொண்டு வந்து இந்தப் பயித்தியத்தைத் தீர்க்க வேண்டும்; ஆதலால், அந்த வேட்டைக் காட்டில் வந்திருக்கின்ற ஏவலாளர்களையும் அழைத்துக் கொண்டு நம்மூருக்குப் போவோமென்று நினைத்துப் போனார்கள். - எ- று.

கானவர் போன தோரார் கடிதினில் கல்லை யின்கண்
ஊனமு தமைத்துக் கொண்டுமஞ் சனம்ஆட்ட உன்னி
மாநதி நன்னீர் தூய வாயினிற் கொண்டு கொய்த
தூநறும் பள்ளித் தா:மங் குஞ்சிமேல் துதையக் கொண்டார். 121

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) திண்ணனார் தமக்கு அருகில் இருந்த வேடர்கள் அவ்விடத்திலிருந்து நீங்கிப் போனசங்கதியை அறியாதவராய், சீக்கிரமாகக் கல்லையில் இறைச்சியாகிய திருவமுதை வைத்துக் கொண்டு, திருமஞ்சனமாட்ட வேண்டுமென்று நினைத்துப் பெருமை பொருந்திய பொன்முகலியாற்றினது நல்ல ஜலத்தை பரிசுத்தமாகிய வாயில் எடுத்துக் கொண்டு சாத்துவதற்காகப் பறித்த தூய்மை பொருந்திய மலர்களைத்தமது தலைமயிரின் மேல் நிறையும்படி சொருகிக் கொண்டார். - எ- று.

தனுஒரு கையில் வெய்ய சரத்துடன் தாங்கிக் கல்லைப்
புனிதமெல் இறைச்சி நல்ல போனகம் ஒருகை ஏந்தி
"இனியஎம் பிரானார் சாலப் பசிப்பர்" என் றிரங்கி ஏங்கி
நனிவிரைந் திறைவர் வெற்பை நண்ணினார் திண்ண னார்தாம். 122

(இ - ள்.) தமது ஒரு திருக்கரத்தில் வில்லையும் அம்பையும் பிடித்துக் கொண்டு, கல்லையில்வைத்திருக்கின்ற பரிசுத்தம் பொருந்திய மெல்லிய இறைச்சியாகிய நல்ல உணவை மற்றொரு திருக்கரத்தில் ஏந்திக் கொண்டு, இனியவராகிய எமது ஆண்டவர் மிகவும் பசியடைந்திருப்பாரென்று மனமிரங்கி விசனப்பட்டு, அதிகவிரைவாக நடந்து, முதல்வராகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருமலையை யடைந்தார் திண்ணனார். - எ- று.

இளைத்தனர் நாய னாரென் றீண்டச்சென் றெய்தி வெற்பின்
முளைத்தெழு முதலைக் கண்டு முடிமிசை மலரைக் காலில்
வளைத்தபொற் செருப்பால் மாற்றி வாயின்மஞ் சனநீர் தன்னை
விளைத்தஅன் புமிழ்வார் போல விமலனார் முடிமேல் விட்டார். 123

(இ - ள்.) எமது கடவுள் பசியினால் இளைப்படைந்திருப்பா ரென்று விரைவாகப் போய், அத்திருமலையில் தோன்றி எழுந் தருளியிருக்கின்ற முதற் பெருங்கடவுளாகிய சிவபெருமானைக் கண்டு அவரது திருமுடியின் மேல் முன்புசாத்தப்பட்டிருந்த மலர்களைத்தமது திருவடியில் தரித்திருக்கின்ற அழகிய செருப்பினால் கீழேதள்ளி, வாயில்வைத்திருந்த திருமஞ்சனை நீரைத் தம்முள்ளத்தில் அடங்காமல் அதிகரித் தெழுந்த அன்பினை உமிழ் பவர் போலத் திருக்காளத்தி நாதரது திருமுடியின் மேல் அபிஷேகஞ் செய்தார். -எ - று.

தலைமிசைச் சுமந்த பள்ளித் தாமத்தைத் தடங்கா ளத்தி
மலைமிசைத் தம்பி ரானார் முடிமிசை வணங்கிச் சாத்திச்
சிலைமிசைப் பொலிந்த செங்கைத் திண்ணனார் சேர்த்த கல்லை 124
இலைமிசைப் படைத்த ஊனின் திருவமு தெதிரே வைத்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) சிவந்தகையினிடத்தில் விளங்குகின்ற வில்லைப் பிடித்த திண்ணனார் தமது தலையின்மேல் வைத்திருந்த புட்பங்களை விசாலமாகிய திருக்காளத்தி மலையில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானுடைய திருமுடியின்மேல் தொழுது சாத்தி, இலைகளால் இணைத்துத்தைக்கப்பட்ட கல்லையில் இட்டுப்படைத்த இறைச்சியாகிய திருவமுதைச் சந்நிதிமுன்னே வைத்து. எ- று.

"கொழுவிய தசைகள் எல்லாங் கோலினில் தெரிந்து கோத்தங்(கு)
அழலுறு பதத்திற் காய்ச்சிப் பல்லினால் அதுக்கி நாவில்
பழகிய இனிமை பார்த்துப் படைத்தஇவ் இறைச்சி சால
அழகிது; நாய னீரே! அமுதுசெய் தருளும் என்றார். 125

(இ - ள்.) கொழுமையாகிய இறைச்சிகளையெல்லாம் ஆராய்ந்தெடுத்து அம்பினில் கோத்து, நெருப்பில் மிகுந்த பதமாகக் காய்ச்சி, அதனைப் பல்லினால் அதுக்கி நாவின் பழக்கப்படியே சுவை பார்த்துத் தேவரீருக்குப் படைத்த இந்த இறைச்சியானது மிகவும் நன்றாயிருக்கின்றது; ஆதலால், எமது ஆண்டவரே! இதனைத் திருவமுது செய்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தார். -எ - று.

அன்னஇம் மொழிகள் சொல்லி அமுதுசெய் வித்த வேடர்
மன்னனார் திருக்கா ளத்தி மலையினார்க் கினிய நல்லூன்
இன்னமும் வேண்டும்" என்னும் எழுபெருங் காதல் கண்டு
பன்னெடுங் கரங்கள் கூப்பிப் பகலவன் மலையில் தாழ்ந்தான். 126

(இ - ள்.) அப்படிப்பட்ட இந்த வார்த்தைகளைச் சொல்லித் திருக்காளத்தி நாதரைத்திருவமுது கொள்ளும்படி செய்த வேடர்களுக்குத் தலைவராகிய திண்ணனார் அத்திருக்காளத்தி மலையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானுக்கு இனிமையாகிய நல்லமாமிசங்கள் இன்னும் வேண்டியிருக்குமென்னுங் கருத்தால் எழுகின்ற பெரிய ஆசையைக் கண்டு (இன்று பகல் முழுவதும் வேட்டையில் இளைத்த இவ்வன்பர் இன்னும் வேட்டையாடின் மிகுந்த வருத்தமுண்டாமென்று கருதித்) தன்னுடைய பல வாகிய நீண்ட கிரணங்களாகிய கைகளைக் கூப்பிக் கொண்டு சூரியன் அஸ்தமானகிரியையடைந்தான். எ- று.

அவ்வழி அந்தி மாலை அணைதலும் "இரவு சேரும்
வெவ்விலங் குளஎன்" றஞ்சி மெய்ம்மையின் வேறு கொள்ளாச்
செவ்விய அன்பு தாங்கித் திருக்கையில் சிலையும் தாங்கி
மைவரை என்ன ஐயர் மருங்குநின் றகலா நின்றார். 127

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அப்பொழுது அந்திப் போதாகிய மாலைக்காலம் வரவும், இனி இராக்காலத்தில் வந்து சேருகின்ற கொடிய மிருகங்கள் இந்த மலையில் இருக்கின்றன; அதனால், எமது ஆண்டவருக்கு ஒருவேளை தீங்கு நேரிடுமென்று பயந்து, உண்மையினின்றும் நீங்காத சிறந்த அன்பைத்தாங்கித் திருக்கரத்தில் வில்லையுந்தாங்கிக் கொண்டு, கரியமலையைப் போல எமது கண்ணப்ப நாயனார் திருக்காளத்தி நாதருடைய பக்கத்தில் நின்றும் பிரியாமலிருந்தார். -எ - று.

சார்வரும் தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும் காணுதற் கரியார் தம்மை
ஆர்வமுன் பெருக ஆரா அன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார் நீளிருள் நீங்க நின்றார். 128

(இ - ள்.) நீண்ட இருட் பொழுது நீங்கிப் பொழுது விடிதலை எதிர் பார்த்து நின்றவராகிய கண்ணப்ப நாயனார் முனிவர்களும், தேவர்களும் மேகங்கள் தவழுகின்றமலைகளையும் வனங்களையும் சேர்ந்து செய்வதற்கருமையாகிய தவங்களைச் செய்தும் அறியக்கூடாதவராகிய சிவபெருமானை ஆசையானது முன்னே அதிகரிக்க அடங்காத பேரன்பினால் தியானித்துக் கொண்டு (வேறொன்றையும் பாராமல்) அப்பெருமானது திருமேனியை நேரே பார்த்துக் கொண்டு நின்றார். எ- று.

கழைசொரி தரளக் குன்றிற் கதிர்நில வொருபால் பொங்க
முழையர(வு) உமிழ்ந்த செய்ய மணிவெயில் ஒருபால் மொய்ப்பத்
தழைகதிர்ப் பரிதி யோடுஞ் சந்திரன் தலைஉ வாவில்
குழையணி காதர் வெற்பைக் கும்பிடச் சென்றால் ஒக்கும். 129

(இ - ள்.) மூங்கில்கள் சொரிகின்ற முத்துக்குவைகளின் ஒளிவீசுகின்ற பிரகாசமானது ஒரு பக்கத்தில் விளங்குதலினாலும், மலைக்குகைகளிலிருக்கின்ற பாம்புகள் கக்கிய சிவந்த மாணிக்கங்களினுடைய பிரகாசமானது ஒரு பக்கத்தில் நெருங்குதலினாலும் தழைத்த கிரணங்களையுடைய சூரியனோடு கூடச் சந்திரனும் அமாவாசைத்தினத்தில் சங்கக் குழையைத் தரித்த திருச் செவியினையுடைய காளத்தி நாதரது திருமலையைத் தரிசிக்க வந்ததற் கொப்பாயிருக்கும். எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விரவுபன் மணிகள் கான்ற விரிகதிர்ப் படலை பொங்க
மரகதம் ஒளிகொள் நீல மணிகளும் இமைக்குஞ் சோதி
பொரஇரு சுடருக் கஞ்சிப் போயின புடைகள் தோறும்
இரவிருள் ஒதுங்கி னாலே போன்றுள தெங்கும் எங்கும். 130

(இ - ள்.) கூட்டமாகத்திரண்டிருக்கின்ற பலவகை இரத்தினங்கள் உமிழ்கின்ற விரிந்த ஒளித்திரள் விளங்க, மரகதமணிகளும் நீலமணிகளுமாகிய இவைகள் வீசுகின்ற பிரகாசமானது, சந்திர சூரியர்களாகிய இரண்டு சுடர்களும் தன்வலியைக் கெடுக்க அதற்குப் பயந்து சிதறிப் போன இடங்கள் தோறும் இராக்காலத்தில் வருகின்ற இருளானது ஒதுங்கியிருந் தாற் போல் இருந்தது அம்மலையிடங்களிலெல்லாம். எ- று.

செந்தழல் ஒளியிற் பொங்கும் தீபமா மரங்க ளாலும்
மந்திகள் முழையில் வைத்த மணிவிளக் கொளிக ளாலும்
ஐந்தும்ஆ றடக்கி யுள்ளார் அரும்பெரும் சோதி யாலும்
எந்தையார் திருக்கா ளத்தி மலையினில் இரவொன்றில்லை. 131

(இ - ள்.) சிவந்த நெருப்பின் ஒளியைப் போல விளங்குகின்ற பெரிய சோதி விருக்ஷங்களினாலும், குரங்குகள் தாங்கள் வாழுகின்ற குகையாகிய வீடுகளில் கொண்டு வந்து வைத்த இரத்தின தீபங்களின் பிரகாசத்தினாலும், ஐம்புலன்களையும் அறுவகைப் பகைகளையும் அடக்கினவர்களாகிய முனிவர் களினது திருமேனியின் அருமையாகிய பெரிய சோதியினாலும், எமது பெருமானாகிய காளத்தி நாதரது திருமலையினிடத்தில் எப்பொழுது இராத்திரியென்பது இல்லை. எ- று.

வருங்கறைப் பொழுது நீங்கி மல்கிய யாமஞ் சென்று
சுருங்கிட அறிந்த புள்ளின் சூழ்சிலம் போசை கேட்டுக்
கருங்கடல் என்ன நின்ற கண்துயி லாதவீரர்
அரும்பெறல் தம்பிரானார்க் கமுதுகொண் டணைய வேண்டி. 132

(இ - ள்.) வருகின்ற இராக்காலமானது நீங்கி, நிறைந்த நடுயாமமுஞ் சென்று பொழுது விடிய, அவ்விடியு நேரத்தை யறிந்த பறவைகள் சூழ்ந்து ஒலிக்கின்ற ஓசையைக் கேட்டு இராத்திரி முழுவதும் நித்திரை கொள்ளாமல் கரியகடல் போல நின்று கொண்டிருந்த கண்ணப்ப நாயனார் தமக்கு அடைதற் கரிய பேறாகக்கிடைத்த திருக்காளத்தி நாதருக்குத் திருவமுது சம்பாதித்துக் கொண்டு வரவேண்டு மென்று நினைத்து. எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏறுகாற் பன்றி யோடும் இருங்கலை புனமான் மற்றும்
வேறுவே றினங்கள் வேட்டை வினைத்தொழில் விரகி னாலே
ஊறுசெய் காலம் சிந்தித் துருமிகத் தெரியாப் போதின்
மாறடு சிலையுங் கொண்டு வள்ளலைத் தொழுது போந்தார். 133

(இ - ள்.) வயிற்றில் ஏறிய குறுகிய காலினையுடைய பன்றிகளோடும், பெரிய கலைமான்களும், வனத்திலுள்ள புள்ளி மான்களும், இவையொழிந்த வேறுவேறான மிருகங்களையும் வேட்டை யாடுதலில் தாம் கற்றுள்ள சாமர்த்தியத்தினாலே அவைகளைக் கொல்லத் தகுந்த காலம் இதுவென்று நினைத்து, உருவம் மிகவும் தெரியாதிருக்கின்ற விடியற் காலத்திலே பகைவரை வெல்லத் தகுந்த வில்லையும் கையில் எடுத்துக் கொண்டு அருள் வள்ளலாகிய திருக்காளத்தி நாதரை வணங்கி வேட்டைக்குப் போயினார். எ- று.

மொய்காட்டும் இருள்வாங்கி முகம்காட்டும் தேர்இரவி
மெய்காட்டும் அன்புடைய வில்லியார் தனிவேட்டை
எய்காட்டின் மாவளைக்க இட்டகருத் திரைஎடுத்துக்
கைகாட்டு வான்போலக் கதிர்காட்டி எழும்போதில். 134

(இ - ள்.) உலகத்தில் நிறைந்திருந்த இருளையொழித்துத் தனது மண்டலத்தை வெளிப்படக் காட்டுகின்ற தேரினை யுடைய சூரியனானவன் உண்மையாகிய பத்தியினையுடைய கண்ணப்ப நாயனார் தனியே வேட்டைக்குப் போகின்ற காட்டி லுள்ள மிருகங்களை வளைக்கும்படி சுற்றிலும் இட்டிருந்த கரிய திரையை நீக்கிக் கைகளினால் அம்மிருகங்களைக் காட்டுகின்ற வனைப் போலக் கிரணங்களை விரித்துக் கொண்டு உதயமான பொழுது. - எ- று.

எய்தியசீர் ஆகமத்தில் இயம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமல ரும்புனலும் முதலான கொண்டணைந்தார்
மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவருந் தவமுடைய முனிவர்சிவ கோசரியார். 135

(இ - ள்.) விஷத்தின் கருநிறம் பொருந்திய கண்டத்தினை யுடைய திருக்காளத்தி மலையில் வீற்றிருந்தருளும் மலை மருந்தராகிய காளத்தி நாதரை நாள் தோறும் வழிபாடு செய்து கொண்டு வருகின்ற தவமுனிவராகிய சிவகோசரியார் என்னும் ஆதிசைவமறையவர், சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறந்த காமிகமுதலிய சைவாகமங்களில் விதித்திருக்கின்ற பூசாவிதிக்கு ஏற்கும்படி பறித்தபுட்பங்களும், திருமஞ்சனம் முதலிய உபகாரணங்களை அமைத்துக் கொண்டு சுவாமிகயின் சந்நிதியை நோக்கி வந்தார். -எ று.

வந்துதிரு மலையின்கண் வானவர்நா யகர்மருங்கு
சிந்தைநிய மத்தோடுஞ் செல்கின்றார் திருமுன்பு
வெந்தஇறைச் சியும்எலும்பும் கண்டகல மிதித்தோடி
இந்தஅநு சிதங்கெட்டேன்! யார்செய்தார்? என்றழிவார். **136**

(இ - ள்.) திருக்காளத்திமலைக்கு வந்து தேவர்களுக்கு நாயகராகிய காளத்தி நாதரது சந்நிதியில் நியமம் பொருந்திய மனதோடும் போகின்ற அச்சிவகோசரியார் சுவாமியின் திருமுன்னே வெந்த மாமிசங்களையும், எலும்புகளையும் பார்த்து அவைகளை மிதியாமல் தூரத்தே கால்வைத்து மிதித்தோடி, இந்த. அநுசிதமான காரியத்தையாவர் செய்தவர்கள்; ஆ கெட்டேனென்று விசனபட்டார். - எ- று.

"மேவநேர் வரஅஞ்சா வேடுவரே இதுசெய்தார்;
தேவதே வீசனே! திருமுன்பே இதுசெய்து
போவதே! இவ்வண்ணம் புகுதநீர் திருவுள்ளம்
ஆவதே?" எனப்பதறி அழுதுவிழுந் தலமந்தார். **137**

(இ - ள்.) சந்நிதியை அடைவதற்கும், நேரே வருவதற்கும் மனதில் கொஞ்சமும் அச்சமில்லாத வேடுவர்களே இந்த அநுசிதத்தைச் செய்தவர்கள்; தேவர்களுக் கெல்லாந் தேவராயிருக்கின்ற எமது ஆண்டவரே! தேவரீருடைய சந்நிதியின் முன்னே தானே இப்படிச் செய்து போகலாமா? இத்தன்மையான காரியம் சம்பவிக்கும்படி திருவுள்ளங் கொள்ளலாமா? என்று தேகம் பதறிக் கண்ணீர் விட்டழுது பூமியில் விழுந்து மனங்கலங்கினார். - எ- று.

"பொரப்பில்எழுஞ்" சுடர்க்கொழுந்தின் பூசனையும் தாழ்க்கநான்
இருப்பதினி என்?" என்றவ் விறைச்சிஎலும் புடன்இலையும்
செருப்படியும் நாயடியும் திருவலகால் மாற்றியபின்
விருப்பினொடுந் திருமுகலிப் புனல் மூழ்கி விரைந்தணைந்தார். **138**

(இ - ள்.) திருக்காளத்தி மலையில் எழுந்தருளியிருக்கின்ற சுடர்க்கொழுந்தாகிய சிவபெருமானுக்குச் செய்ய வேண்டிய பூசைவேளையும் தவறும்படி நானிங்கேயிருப்பதில் என்ன

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரயோசனமென்று அங்கு இறைந்துகிடக்கின்ற இறைச்சி எலும்புகளோடு தேக்கிலையால் தைத்த கல்லையையும், கண்ணப்ப நாயனார் தமது பாதத்திலணிந்த செருப்பினடையாளத்தையும், நாயின் அடிச்சுவட்டையும் திருவலகைக் கொண்டு போகும்படி விளக்கிச் சுத்தஞ் செய்தபின்பு, அன்போடு பொன்முகலியாற்றின் நீரில் ஸ்நானஞ் செய்து சீக்கிரமாக வந்தார் சிவகோசரியார். - எ- று.

பழுதுபுகுந் ததுதீரப் பவித்திரமாம் செயல்புரிந்து
தொழுதுபெறு வனகொண்டு தூயபூ சனைதொடங்கி
வழுவில்திரு மஞ்சனமே முதலாக வரும்பூசை
முழுதுமுறை மையின்முடிந்து முதல்வனார் கழல்பணிந்தார். 139

(இ - ள்.) திருக்காளத்தி நாதர் வீற்றிருந்தருளும் இடத்திற்குச் சம்பவித்த குற்றம் நீங்கும்படியாகப் பரிசுத்தமாகிய பிராயச்சித்தஞ் செய்து வணங்கித் தாம் பெற்ற பூசைக்குரிய உபகரணங்களைக் கொண்டு தூய்மையாகிய பூசைசெய்யத் தொடங்கிக் குற்றமற்ற திருமஞ்சன முதலாகப் பொருந்திய பூசனை முழுவதும் கிரமப்படியே செய்து முடித்து, முதல்வராகிய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கினார். - எ- று.

பணிந்தெழுந்து "தனிமுதலாம் பர"னென்று பன்முறையால்
துணிந்தமறை மொழியாலே துதிசெய்து சுடர்த்திங்கள்
அணிந்தசடை முடிக்கற்றை அங்கணரை விடை கொண்டு
தணிந்தமரைத் திருமுனிவர் தபோவனத்தி னிடைச்சார்ந்தார். 140

(இ - ள்.) நமஸ்கரித்து எழுந்து நின்று ஒப்பற்ற முதல்வராகிய பரம்பொருளாவார் இப்பெருமானேயென்று பலதரம் நிச்சியித்துச் சொல்லுகின்ற வேதவாக்கியங்களினாலே ஸ்தோத்திரஞ் செய்து, ஒளிவிளங்குகின்ற இளம்பிறையைத் தரித்த கற்றையாகிய சடை முடியினையுடைய சிவபெருமானிடத்தினின்றும் விடை பெற்றுக் கொண்டு சாந்தமாகிய மனத்தினையுடைய சிவகோசரியார் தாம் வாசஞ் செய்கின்ற தபோவனத்தையடைந்தார். - எ- று.

இவ்வண்ணம் பெருமுனிவர் ஏகினார்; இனிஇப்பால்
மைவண்ணக் கருங்குஞ்சி வனவேடர் பெருமானார்
கைவண்ணச் சிலைவளைத்துக் கான்வேட்டை தனியாடிச்
செய்வண்ணத் திறமொழிவேன் தீவினையின் திறமொழிவேன். 141

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) இந்தப் பிரகாரம் பெருமை பொருந்திய சிவகோசரியார் சிவபெருமானைப் பூசித்து விடை பெற்றுக் கொண்டு தமது தபோவனத்தை யடைந்தார்; இனி இவ் விடத்தில் மைபோலக் கருநிறம் பொருந்திய சிகையினையுடைய வனத்திலுள்ள வேடர்களுக்கு அரசராகிய திண்ணனார் தாம் கையில் ஏந்திய அழகிய வில்லை வளைத்துக் காட்டில் தனியே வேட்டையாடி, சிவபெருமானுக்குச் செய்கின்ற பூசனையின் வகையைச் சொல்லத் தொடங்குவேன், தீவினையினது வலிமையினின்றும் நீங்கக்கருதுகின்ற யான். - எ- று.

திருமலையின் புறம்போன திண்ணனார் செறிதுறுகல்
பெருமலைக ளிடைச்சரிவில் பெரும்பன்றி புனமேய்ந்து
வருவனவும் துணிபடுத்து மானினங்கள் கானிடை நின்(று)
ஒருவழிச்சென் றேறுதுறை ஒளிநின்று கொன்றருளி. **142**

(இ - ள்.) திருக்காளத்தி மலைக்குப் புறத்தில் போன கண்ணப்ப நாயனார் நெருங்கிய துறுகற்கள் பொருந்திய பெரி·· மலையிடங்களிலும் சாரல்களிலுமுள்ள பெரிய பன்றிகள் தினைப்புனத்திலுள்ள பலங்களை மேய்ந்து வருவனவற்றையும் தமது கையிலுள்ள பாணத்தினால் துண்டித்து, மான் கூட்டங் கள் காட்டினின்றும் ஒருவழியாகப் போய் ஏறுகின்ற நீர்த்துறை களில் மறைந்து நின்று அவைகளைக் கொலை செய்து. -எ - று.

பயில்விளியால் கலைஅழைத்துப் பாடுபெற ஊடுருவும்
அயில்முகவெங் கணைபோக்கி அடியொற்றி மறையினங்கள்
துயிலிடையிற் கிடையெய்து தொடர்ந்துகட மைகளெய்து
வெயில்படுவெங் கதிர்முதிரத் தனிவேட்டை வினைமுடித்தார். **143**

(இ - ள்.) அவ்வம் மிருகங்கள் போலக் கூப்பிடுகின்ற பயிலோசையினால் கலைமான்களையழைத்து அவைகள் வருந்தும்படிதைத்து உருவத்தக்க கூர்மைபொருந்திய கொடிய அம்புகளைச் செலுத்தி, அடியினடையாளங்களைப் பற்றித் தொடர்ந்து மரை யென்னு மிருகக் கூட்டங்கள் நித்திரை செய்யுமிடங்களில் அவைகளையெய்து, பின்தொடர்ந்து கடமை மிருகங்களையுங் கொன்று ஒளிபொருந்திய சூரியன் உச்சியில் வரும் போது ஒப்பற்ற வேட்டைத் தொழிலை முடித்தார்.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பட்டவன விலங்கெல்லாம் படர்வனத்தில் ஒருசூழல்
இட்டருகு தீக்கடைகோல் இருஞ்சுரிகை தனையுருவி
வெட்டிநறுங் கோற்றேனும் மிகமுறித்துத் தேக்கிலையால்
வட்டமுறு பெருங்கல்லை மருங்குபுடை பட அமைத்தார். 144

(இ - ள்.) எமது கண்ணப்ப நாயனார் தம்மால் கொல்லப் பட்ட காட்டிலுள்ள மிருகங்களையெல்லாம் மரங்கள் நெருங்கிய அவ்வனத்தின் ஒரு புறத்தில் இட்டு, பெருமை பொருந்திய தமது உடை வாளையுருவித் தீக்கடைகோல் ஒன்றை வெட்டிச் செய்து கொண்டு நல்ல கொம்புத் தேனை மிகுதி யாகப் பிழிந்து தேக்கிலையினால் வட்டமாகத் தைக்கப்பட்ட பெரிய கல்லையினிடத்தில் நிறையும்படி வார்த்தார். எ- று.

(கல்லை - தைத்த இலை)

இந்தனத்தை முறித்தடுக்கி எரிகடையும் அரணியினில்
வெந்தழலைப் பிறப்பித்து மிகவளர்த்து மிருகங்கள்
கொந்திஅயில் அலகம்பால் குட்டமிட்டுக் கொழுப்பரிந்து
வந்தனகொண் டெழுந்தழலில் வக்குவன வக்குவித்து. 145

(இந்தனம் - விறகு, வக்கு - வதக்குதல்)

(இ - ள்.) விறகை முறித்து அடுக்கி, தீக்கடைகின்ற அரணிக் கோலினால் கொடிய நெருப்பையுண்டாக்கி மிகவும் அதிகமாக மூட்டித் தாம் கொண்டு வந்த மிருகங்களைக் கூர்மை பொருந்திய அம்பினால் கொத்தி வட்டமாகத் தோண்டியெடுக்கின்ற கொழுப்புள்ள இடத்தைத் தெரிந்து வந்த மாமிசங்களை எடுத்துக் கொண்டு மூண்டெழுகின்ற நெருப்பிலிட்டு வதக்க வேண்டிய மாமிசங்களை வதக்கி.

வாயம்பால் அழிப்பதுவும் வகுப்பதுவும் செய்தவற்றின்
ஆயஉறுப் பிறைச்சியெலாம் அரிந்தொருகல் லையில்இட்டுக்
காயநெடுங் கோல்கோத்துக் கனலின்கண் உறக்காய்ச்சித்
தூயதிரு அமுதமைக்கச் சுவைகாணல் உறுகின்றார். 146

(இ - ள்.) கூர்மை பொருந்திய அம்பினால் அழித்தும், கீறியும் வெவ்வேறாக எடுக்கப்பட்ட அம்மிருகங்களின் உறுப்புகளில மைந்த இறைச்சிகளை யெல்லாம் அரிந்து ஒரு கல்லையிட்டு அவைகளை நீண்ட அம்பில் கோத்து நெருப்பில் பொருந்தக் காயும்படியாக வெதுப்பிப் பரிசுத்தம் பொருந்திய திருவமுதைத் திருக்காளத்தி நாதருக்கு அமைக்கும்படி கருதி, முன்பு தமது வாயிலிட்டுச் சுவை பார்க்கத் தொடங்கினார். எ- று.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எண்ணிறந்த கடவுளருக் கிடும்உணவு கொண் டூட்டும்
வண்ணஎரி வாயின்கண் வைத்ததெனக் காளத்தி
அண்ணலார்க் காம்பரிசு தாம்சோதித் தமைப்பதற்குத்
திண்ணனார் திருவாயில் அமைத்தார்ஊன் திருவமுது. 147

(இ - ள்.) அளவில்லாத தேவர்களுக்கு வேள்வியில் ஊட்டு கின்ற அவிப்பாகத்தை முன்பு தான் பெற்றுக் கொண்டு பின்பு அத்தேவர்களுக்கு ஊட்டுகின்ற செந்நிறம் பொருந்திய அக்கினி யானது தனது வாயில் வைத்துச் சுவை பார்ப்பது போல, திருக்காளத்தி மலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுக்கு இவை இவை ஆகும் என்னும் தன்மையைத் தாம் பரிசோதித் தமைப்பதற்குத் திண்ணனார் தமது திருவாயில் அக்கடவு ளுக்குப் படைக்கவேண்டிய மாமிசமாகியதிருவமுதையிட்டுச் சுவை பார்த்தார். - எ- று.

நல்லபத முறவெந்து நாவின்கண் இடும்இறைச்சி
கல்லையினிற் படைத்துத்தேன் பிழிந்தகலந் ததுகொண்டு
வல்விரைந்து திருப்பள்ளித் தாமமுந்தூய் மஞ்சனமும்
ஒல்லையினின் முன்புபோல் உடன்கொண்டு வந்தணைந்தார். 148

(இ - ள்.) நல்ல பதமாக வெந்தபின்பு, நாவிவிட்டு இனிப்பா யிருக்கின்ற மாமிசத்தை தேக்கிலையினால் தைக்கப்பட்ட கல்லையில் படைத்துத் தேனைப்பிழிந்து கலந்து அதனை எடுத்துக் கொண்டு விரைவாகச் சென்று கடவுளுக்குச் சாத்த வேண்டிய மலர்களையும் பரிசுத்தம் பொருந்திய நீரையும் நொடிப் பொழுதில் முன்பு போலத் தமது குடுமியிலும், வாயிலுமாக அமைத்துக் கொண்டு சுவாமியினிடத்திற்கு வந்து சேர்ந்தார். - எ- று.

வந்துதிருக் காளத்தி மலையேறி வனசரர்கள்
தந்தலைவ னாரிமையோர் தலைவனார் தமையெய்தி
அந்தணனார் பூசையினை முன்புபோல் அகற்றியபின்
முந்தைமுறை தம்முடைய பூசனையின் செயல்முடிப்பார். 149

(இ - ள்.) வேடர்களுக்குத் தலைவராகிய திண்ணனார் அவ்விடத்தினின்றும் வந்து திருக்காளத்தி மலையின் மேலேறித் தேவர்களுக்கு நாயகராகிய காளத்தி நாதரை யடைந்து, சிவகோசரியார் அவரது திருமுடியின் மீது அருச்சித்த மலர்களை முன்பு போலத் தமது செருப்புக்காலால் நீங்கிய பின்பு தாம் செய்ய வேண்டிய பூசையை முன்செய்தது போலச் செய்து முடித்தார். - எ- று.

In Public Domain. Digitization Muthulakshmi Research Academy

ஊனமுது கல்லையுடன் வைத் "திதுமுன் னையின் நன்றால்;
ஏனமொடு மான்கலைகள் மரைகடமை இவையிற்றில்
ஆனவுறுப் பிறைச்சிஅமு(து); அடியேனும் சுவைகண்டேன்;
தேனுமுடன் கலந்ததிது தித்திக்கும்" எனமொழிந்தார். 150

(இ - ள்.) மாமிசமாகிய திருவமுதைக் கல்லையுடன் சிவபெருமானுடைய சந்நிதியின் முன்னே வைத்து எமது ஆண்டவரே! இது அடியேன் முன்பு கொண்டு வந்து கொடுத்ததைப் பார்க்கிலும் சிறந்தது; பன்றியோடு மான்களும், கலைமான்களும், மரைகளும், கடமை மிருகங்களுமாகிய இவைகளில் உண்டான அவயவங்களிலுள்ள இறைச்சிய முதாகும்; இதனை அடியேனும் சுவை பார்த்திருக்கின்றேன்; தேனும் கலந்திருக்கின்றது; ஆதலால் இது தேவரீருக்கு மிகவும் தித்திப்பாயிருக்குமென்று விண்ணப்பஞ் செய்தார். - எ- று.

இப்பரிசு திருவமுது செய்வித்துத் தம்முடைய
ஒப்பரிய பூசனைசெய் தந்நெறியில் ஒழுகுவார்
எப்பொழுதும் மேன்மேல்வந் தெழும்அன்பால் காளத்தி
அப்பர்எதிர் அல்லுறங்கார் பகல்வேட்டை ஆடுவார். 151

(இ - ள்.) இவ்விதமாக நாள்தோறும் காளத்தி நாதரை திருவமுது செய்வித்து, தமது ஒப்பில்லாத மற்றைப் பூசனையுஞ் செய்து கொண்டு அந்த மார்க்கத்தில் ஒழுகுகின்றவராகிய திண்ணனார், இடைவிடாமல் மேலுமேலும் அதிகரித்தெழுகின்ற பேரன்பினால் திருக்காளத்தி நாதருடைய சந்நிதி முன்னே நின்று இராத்திரி கால முழுவதும் நித்திரை செய்யாதவராய்ப் பகற் காலத்தில் திருவமுதுக்காக மிருகவேட்டையாடுவார். - எ- று.

மாமுனிவர் நாடோறும் வந்தணைந்து வனவேந்தர்
தாமுயலும் பூசனைக்குச் சாலமிகத் தளர்வெய்தித்
தீமையென அதுநீக்கிச் செப்பியஆ கமவிதியால்
ஆமுறையில் அர்ச்சனைசெய்(து) அந்நெறியில் ஒழுகுவரால். 152

(இ - ள்.) பெருமை பொருந்திய தவமுனிவராகிய சிவகோசரியார் தினந்தோறும் சிவபெருமானுடைய சந்நிதிக்குவந்து திண்ணனார் முயன்று செய்கின்ற பூசையைக் குறித்து அதிகமாகத் தளர்ச்சியையடைந்து, இது தீமையான காரியமென்று அவர் செய்த பூசனையை மாற்றிச் சைவாகமாங்களில் சொல்லியிருக்கின்ற விதிப்பிரகாரம் முறைமையாக அருச்சனை செய்து தாமும் அவ்வாறே நடந்துகொண்டு வந்தார். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாணனொடு காடனும்போய் நாகனுக்குச் சொல்லியபின்
ஊணும்உறக் கமும்இன்றி அணங்குவறைவா ளையுங்கொண்டு
பேணுமக னார்தம்பால் வந்தெல்லாம் பேதித்துக்
காணுநெறி தங்கள்குறி வாராமல் கைவிட்டார். 153

(இ - ள்.) நாணனும் காடனும் சென்று தந்தையாகிய நாகனென்பவனுக்குத் திண்ணனாருடைய செய்கையைச் சொன்னபின்பு, அவன் அதனைக் கேட்டதனால் ஊணும் உறக்கமுமில்லாமல், தேவராட்டியையும் அழைத்துக் கொண்டு விருப்பம் பொருந்திய தனது புத்திரராகிய திண்ணனாரிடத்துக்கு வந்து, அவருக்கு முன்னிருந்த மாயா சம்பந்தமாகிய உலகவிவகாரங்களெல்லாம் பேதித்திருக்கும் முறைமையினால் தாங்கள் தேவராட்டியைக் கொண்டு பார்க்குங் குறியானது அனுகூலப் படாமல் அவரைவிட்டுப் போய்விட்டார்கள். எ- று.

முன்புதிருக் காளத்தி முதல்வனார் அருள்நோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல்யாக்கை
தன்பரிசும் வினைஇரண்டும் சாருமல மூன்றும்அற
அன்புபிழம் பாய்த்திரிவார் அவர்கருத்தின் அளவினரோ? 154

(இ - ள்.) கண்ணப்ப நாயனார் தரிசிப்பதற்கு முன்னமே திருக்காளத்தி மலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானது கிருபாடகடாக்ஷத்தினால், இன்பத்தை தருகின்ற இரசகுளிகையினால் இரும்பானது பொன்னாது போல, உடம்பின் தன்மையும், நல்வினை தீவினையென்னும் இருவினைகளும், தம்மைப் பந்தித்துவருகின்ற ஆணவம் - கன்மம் - மாயையென்னும் மும்மலங்களும் விட்டு நீங்க, அன்பே தமக்கு ஒரு உருவமாகத்திரிகின்றவராகிய கண்ணப்ப நாயனார் அந்த நாகன் முதலினோருடைய எண்ணத்தினளவில் நிற்கின்றவரோ? அன்று. - எ- று.

அந்நிலையில் அன்பனார் அறிந்தநெறி பூசிப்ப
மன்னியஆ கமப்படியால் மாமுனிவர் அருச்சித் "திங்(கு)
என்னுடைய நாயகனே! இதுசெய்தார் தமைக்காணேன்;
உன்னுடைய திருவருளால் ஒழித்தருள வேண்டும்" என. 155

(இ - ள்.) மேற்சொல்லிய முறைமையினால் கண்ணப்ப நாயனார் தாம் அறிந்த அளவில் சிவபெருமானைப் பூசித்துவர, நிலைபெற்ற சைவாகம விதியின் பிரகாரம் சிறந்த முனிவராகிய சிவகோசரியார் பூசைசெய்து நின்று, எம்முடைய ஆண்டவரே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்விடத்தில் இந்த அநுசிதமாகிய காரியத்தைச் செய்த மனிதர்கள் இன்னாரென்று அடியேன் பார்க்கவில்லை; ஆதலால், தேவரீரது கிருபையினால் இத்தன்மையான கொடுஞ் செய்கை இனி உண்டாகாமலிருக்கும்படி நீக்கியருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து செல்ல. - எ- று.

அன்றிரவு கனவின்கண் அருள்முனிவர் தம்பாலே
மின்றிகழுஞ் சடைமலிவு வேதியர்தாம் எழுந்தருளி
"வன்திறல்வே டுவன்என்று மற்றவனை நீநினையேல்;
நன்றவன்தன் செயல்தன்னை நாமுரைப்பக் கேள்" என்று. 156

(இ - ள்.) (சிவகோசரியார் காளத்தி நாதரது சந்நிதி முன்னே நின்று இவ்வாறு வேண்டிக் கொண்டு மனவருத்தத்தோடு போன) அன்றிராத்திரியில் மின்னலைப் போல விளங்குகின்ற சடைமுடியினையுடைய சிவபெருமானானவர் அருளையுடைய சிவகோசரியாரிடத்துக்குச் சொப்பனத்தில் எழுந்தருளி வந்து அன்பனே! நீ அவனை மிகுந்த வலிமை பொருந்திய வேடுவனாக நினைக்க வேண்டாம்; அவனுடைய நல்ல செய்கைகளை நாம் சொல்லக் கேட்பாயாகவென்று. - எ- று.

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம்என்றும்
அவனுடைய நிலைஇவ்வா றறிநீ"என் றருள்செய்வார். 157

(இ - ள்.) நீ வேடனாக நினைத்திருக்கின்ற அவனுடைய " நவம் முழுமையும் நம்மிடத்திற் பொருந்தியுள்ள அன்பின் வடிவமேயென்றும், அவனுடைய உணர்வெல்லாம் நம்மை உணரு முணர்ச்சியேயென்றும், அவன் நம்விஷயமாகச் செய்கின்ற செய்கைகளெல்லாம் நமக்கு இனிய செய்கையேயா மென்றும், அவனுடைய நிலைமையானது இத்தன்மையான தென்று நீ அறிவாயாகவென்று கட்டளையிட்டருளினார். எ- று.

"பொருட்பினில்வந் தவன்செய்யும் பூசனைக்கு முன்பென்மேல்
அருப்புறுமென் மலர்முன்னை அவைநீக்கும் ஆதரவால்
விருப்புறும்அன் பெனும்வெள்ளக் கால் பெருகிற் றெனவீழ்ந்த
செருப்படிஅவ் விளம்பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால்" 158

(இ - ள்.) மலையில் ஏறிவந்து அவன் நமமக்குச் செய்யும் பூசைக்கு முன்பு, எமது முடியின் மேல் உன்னால் சாத்தப்பட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னுள்ள அரும்பாகிய மெல்லிய மலர்களை நீக்கித் தான் கொண்டு வந்த மலரைச் சாத்தவேண்டுமென்னும் ஆசையினால், விருப்பம் பொருந்திய அன்பென்னும் வெள்ளத்தினது காலானது பெருகினது போல எமது முடியில் பட்ட அவனுடைய செருப்படியானது, அவ்விளம்பருவத்தையுடைய முருகவேளினது கால் படுவதைப் பார்க்கிலும் மிகவும் சிறப்புடையதாகும. - எ- று.

"உருகியஅன் பொழிவின்றி நிறைந்தஅவன் உருவென்னும்
பெருகியகொள் கலமுகத்தில் பிறங்கியினி தொழுகுதலால்
ஒருமுனிவன் செவிஉமிழும் உயர்கங்கை முதல்தீர்த்தப்
பொருபுனலின் எனக்கவன்தன் வாயுமிழும் புனல்புனிதம்." ***159***

(இ - ள்.) உருகுதற்கு ஏதுவாகிய அன்பானது குறைவின்றி நிறைந்த அவனது வடிவமென்னும் பெரிய பாத்திரத்தினிடத்தில் விளங்கி இனிமையோடு ஒழுகுகின்றபடியால், அது சன்னு என்னும் பெயரையுடைய ஒரு முனிவன் தன் காதின் வழியாக வெளிப்படுத்திய உயர்ந்த கங்கை முதலாகிய தீர்த்தங்களின் அலைகளால் மோதுகின்ற நீரைப்பார்க்கிலும், எமக்கு அவன் வாயினின்றும் உமிழப்பட்ட நீரானது பரிசுத்தமுள்ளதாயிருக்கின்றது. - எ- று.

"இம்மலைவந் தெனையடைந்த கானவன்தன் இயல்பாலே
மெய்ம்மலரும் அன்புமேல் விரிந்தனபோல் விழுதலால்
செம்மலர்மேல் அயனொடுமால் முதல்தேவர் வந்துபுனை
எம்மலரும் அவன்தலையால் இடுமலர்போல் எனக்கொவ்வா. ***160***

(இ - ள்.) இந்த மலையில் ஏறிவந்து எம்மையடைந்த அந்தவேடுவனுடைய செய்கையினால் அவன் தன் குடுமியில் சூடியமலரும் அன்பானது மேல்விரிந் திருப்பதுபோல அவன் சிகையினின்றும் விழுகின்றபடியால், சிவந்த தாமரை மலரில் வசிக்கின்ற பிரமனோடு விஷ்ணு முதலாகிய தேவர்கள் வந்து அருச்சனை செய்கின்ற எப்படிப்பட்ட புஷ்பங்களும் அவன் தலையில் வைத்துக் கொண்டு வந்து எமக்குத் தரிக்கின்ற புஷ்பங்களுக்குச் சமானமாகாவாம். - எ- று.

"வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ எனும்அன்பால்
நையுமனத் தினிமையினில் நையமிக மென்றிடலால்
செய்யுமறை வேள்வியோர் முன்புதருந் திருந்தவியில்
எய்யும்வரிச் சிலையவன்தான் இட்டஊன் எனக்கினிய." ***161***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) வெப்பமாகிய நெருப்பினிடத்தில் காய்ச்சி இது பதமாக வெந்திருக்கின்றதோ? அதைப் பரீக்ஷிக்க வேண்டு மென்னும் விருப்பத்தினால் உருகுகின்ற மனத்திலுண்டாகிய இனிமையோடு நையும்படி மெல்லுதலினால், வேதவிதிப்படியே வேள்வி செய்கின்ற வேதியர்கள் முதலில் கொடுக்கின்ற நல்ல அவிப்பாகமாகிய மாமிசத்தைப் பார்க்கிலும், எய்கின்ற கட்டமைந்த வில்லையுடைய அவ்வேடனானவன் படைத்த ஊனமுதம் எமக்கு இனியனவாயிருக்கின்றன. - எ- று.

"மன்பெருமா மறைமொழிகள் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கும்
இன்பமொழித் தோத்திரங்கள் மந்திரங்க ளியாவையினும்
முன்பிருந்து மற்றவன்தன் முகமலர அகநெகிழ
அன்பில்நினைந் தெனையல்லால் அறிவுறா மொழிநல்ல" ***162***

(இ - ள்.) நிலை பெற்ற மிகுந்த பெருமை பொருந்திய வேதவாக்கியங்களும், சிறந்த முனிசிரேஷ்டர்கள் சந்தோஷித்துச் சொல்லுகின்ற இன்பமயமான மொழிகளையுடைய தோத்திரங் களும், மந்திரங்களுமாகிய இவையெல்லாவற்றிலும் நமக்கு முன்னே யிருந்துகொண்டு அந்த வேடன் முகமலர்ச்சி யடைந்து மனமுருக அன்பினால் நினைந்து எம்மையல்லாமல் வேறொரு வரையும் அறிந்து துதியாத அவனுடைய வார்த்தைகளே மிகவும் இனியனவாகும். - எ- று.

"உனக்கவன்தன் செய்லகாட்ட நாளைநீ ஒளித்திருந்தால்
எனக்கவன்தன் பரிவிருக்கும் பரிசெல்லாங் காண்கின்றாய்;
மனக்கவலை ஒழி"கென்று மறைமுனிவர்க் கருள்செய்து
புனற்சடிலத் திருமுடியார் எழுந்தருளிப் போயினார். ***163***

(இ - ள்.) உனக்கு அத்தன்மையாகிய வேடனது அன்பின் நிலைமையைக்காண்பிப்பதற்கு நாளைக்கு நீ அவ்விடத்தில் ஒளித்துக் கொண்டிருந்தால் எம்மிடத்தில் அவன் செய்யும் அடிமைத்திறத்தின் முறைமையனைத்தும் அறிந்து கொள்வாய்; ஆதலால், நீ அவ்வேடன் இழிவான காரியஞ் செய்தானென்று கொண்டிருக்கின்ற மனவருத்தத்தை ஒழித்துவிடக்கடவா யென்று வேதங்களையுணர்ந்த சிவகோசரியாருக்குக் கனவில் அருளிச் செய்து கங்கையைத் தரித்த சடைமுடியினையுடைய சிவபெருமான் மறைந்தருளினார். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கனவுநிலை நீங்கியபின் விழித்துணர்ந்து கங்குலிடைப்
புனைதவத்து மாமுனிவர் புலர்வளவுங் கண்துயிலார்
மனமுறுமற் புதமாகி வரும்பயமும் உடனாகித்
துணைபுரவித் தனித்தேர்மேல் தோன்றுவான் கதிர்தோன்ற. 164

(இ - ள்.) அருமையாகச் செய்த சிறந்த தவமுனிவராகிய சிவகோசரியார் அன்றிரவில் கண்ட சொப்பனமானது நீங்கின பின்பு விழித்து, சிவபெருமான் எழுந்தருளி வந்து அருள் செய்ததை யுணர்ந்த, பொழுது விடியுமளவும் நித்திரை கொள்ளாதவராய், மனத்தில் மிகுந்த ஆச்சரியமும் (அவ்வன்பர் செய்த காரியத்தை அநுசிதகமாகக் கொண்டோமென்னும்) அச்சமும் அடைந்து, வேகமாகச் செல்லுகின்ற குதிரைகள் பூட்டிய ஒப்பற்ற இரதத்தின்மேல் தோன்றுகின்ற சிறந்த சூரியன் உதயஞ் செய்ய. - எ-று.

முன்னைநாள் போல்வந்து திருமுகலிப் புனல்மூழ்கிப்
பன்முறையும் தம்பிரான் அருள்செய்த படிநினைந்து
மன்னுதிருக் காளத்தி மலைஏறி முன்புபோல்
பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருந்தார். 165

(இ - ள்.) முன்னாள் போலப் பொன் முகலியாற்றுக்கு வந்து ஸ்நானஞ் செய்து, தமது பெருமானாகிய காளத்தி நாதர் சொப்பனத்தில் எழுந்தருளிவந்து கட்டளையிட்டருளிய முறைமையைப் பலதரமும் சிந்தித்து, நிலைபெற்ற திருக்காளத்தி மலையில், ஏறி, முன்பு போலச் சிவபெருமானைப் பூசித்து, அவருக்குப் பின்புறமாக ஓரிடத்தில் ஒளித்துக் கொண்டிருந்தார். எ- று.

கருமுகில் என்ன நின்ற கண்படா வில்லி யார்தாம்
வருமுறை ஆறாம் நாளில் வரும்இர வொழிந்த காலை
அருமறை முனிவ னார்வந் தணைவதன் முன்னம் போகித்
தருமுறை முன்பு போலத் தனிப்பெரு வேட்டை யாடி. 166

(இ - ள்.) கருமையாகிய மேகம் போல இரவில் நித்திரை கொள்ளாமல் காளத்தி நாதரைப் பாதுகாத்துக் கொண்டிருந்த திண்ணனார் கிரமமாக வருகின்ற ஆறா நாளில் வந்த ஐந்தாநாளிராத்திரிப் பொழுது விடிந்தபோது, அரிய வேதங்களை யுணர்ந்த சிவகோசரியார் பூசைசெய்ய வருவதற்கு முன்னே தாம் சிவபெருமானுக்கு ஊனமுதமைத்து ஊட்டுகின்ற வழக்கம் போலக் காட்டிற்குப் போய் ஒப்பற்ற பெரிய மிருகவேட்டையாடி. எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

167, 168 பாடல்கள் குளகம்.

மாறில்ஊன் அமுதும் நல்ல மஞ்சனப் புனலும் சென்னி
ஏறுநாண் மலரும் வெவ்வே றியல்பினில் அமைத்துக் கொண்டு
தேறுவார்க் கமுத மானசெல்வனார் திருக்கா ளத்தி
ஆறுசேர் சடையார் தம்மை அணுகவந் தணையா நின்றார். 167

(இ - ள்.) குற்றமற்ற மாமிசமாகிய திருவமுதையும், பரிசுத்தம் பொருந்திய திருமஞ்சன நீரையும், திருமுடியில் சாத்துதற்குரிய புதிய பூங்கொத்துக்களையும் தனித்தனி முறைமைப்படியே அமைத்துக் கொண்டு, தம்மை உண்மைப் பொருளென்று உணர்ந்த மெய்யன்பர்களுக்கு முத்திச் செல்வத்தைத் தந்தருள் கின்றவரும் திருக்காளத்தி மலையில் வீற்றிருந்தருளும் கங்கையைத் தரித்த சடையினையுடயவருமாகிய சிவபெருமானை அடையும் படி வந்து கொண்டிருந்தார். - எ-று.

"இத்தனை பொழுது தாழ்த்தேன்" எனவிரைந் தேகு வார்முன்
மொய்த்தபல் சகுனம் எல்லாம் முறைமுறை தீங்கு செய்ய
"இத்தகு தீய புட்கள் ஈண்டமுன் உதிரங் காட்டும்
அத்தனுக் கென்கொல் கெட்டேன் அடுத்ததென்" றணையும் போதில். 168

(இ - ள்.) (எமது ஆண்டவருக்கு ஊனமுது படைப்பதற்கில் லாமல்) இவ்வளவு நேரம் காலதாமசஞ் செய்தேனென்று சீக்கிரமாகப் போகின்ற திண்ணனாருக்கு முன்னே, கூட்டமாகிய பல சகுனப்பட்சிகளெல்லாம் அடிக்கடி தீக்குறியைக் காட்ட, இத்தன்மையாகிய தீச்சகுணங்களை யுணர்த்துகின்ற பறவைகள் என் கண்களுக்குத் தோன்றுகிறதினால், முன்னே இரத்தக் குறியைக் காட்டும்; ஆதலால், நானில்லாத பொழுது எம்பெருமானுக்கு என்ன அபாயம் நேரிட்டதே, ஆகெட்டேன் என்று விசனப்பட்டு வருகிற பொழுது. - எ - று.

அண்ணலார் திருக்கா ளத்தி அடிகளார் முனிவ னார்க்குத்
திண்ணனார் பரிவு காட்டத் திருநய னத்தில் ஒன்று
துண்ணென உதிரம் பாய இருந்தனர்; தூரத் தேஅவ் 169
வண்ணவெஞ் சிலையார் கண்டு வல்விரைந் தோடி வந்தார்.

(இ - ள்.) பெருமையிற் சிறந்தவராகிய திருக்காளத்தி மலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் சிவகோசரியாருக்குக் கண்ணப்ப நாயனாருடைய அன்பின் மிகுதியைக் காட்டும் பொருட்டுத் தமது திருக்கண்களில் வலது கண்ணிலிருந்து பார்த்தவர்கள் அஞ்சும்படி உதிரஞ் சொரியக் காணப்பட்டார்; அதனை அழகு பொருந்திய கொடிய வில்லையுடைய அந்தத் திண்ணனார் தூரத்தே கண்டு மிகுந்த விரைவாக ஓடிவந்தார். எ-று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்தவர் குருதி கண்டார்; மயங்கினார்; வாயில் நன்னீர்
சிந்திடக் கையில் ஊனுஞ் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமம் குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை அலங்கல் மார்பர் நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார். 170

(இ - ள்.) பசிய தழைகளால் கட்டப்பட்ட மாலையைத் தரித்த மார்பினையுடைய திண்ணனார் வந்தவுடனே சிவபெருமானுடைய கண்ணிலிருந்து ஒழுகுகின்ற உதிரத்தைப் பார்த்து (எமது ஆண்டவருக்கு இவ்வாறு சம்பவித்ததே இதற்கு நான் என்ன செய்வேனென்று) மயங்கினார்; தாம் பொன் முகலியாற்றிலிருந்து திருமஞ்சனத்துக்காக வாயில் கொண்டு வந்த நல்ல நீரும் நிலத்தில் சிந்திப் போகவும், கையிலிருக்கின்ற மாமிசமும் வில்லுடன் சிதறிக் கீழே விழவும், கொத்தாக மலர்ந்திருக்கின்ற மலர்களும் குடுமியினின்றும் அலைந்து கீழே விழவும் பூமியில் பதைபதைத்தது விழுந்தார். எ- று.

விழுந்தவர் எழுந்து சென்று துடைத்தனர் குருதி; வீழ்வ(து)
ஒழிந்திடக் காணார்; செய்வ தறிந்திலர் உயிர்த்து மீள
அழிந்துபோய் வீழ்ந்தார்; தேறி யாரிது செய்தார்? என்னா
எழுந்தனர்; திசைகள் எங்கும் பார்த்தனர்; எடுத்தார் வில்லும். 171

(இ - ள்.) நிலத்தில் பதைத்து விழுந்த கண்ணப்ப நாயனார் மறுபடியும் எழுந்து போய்ச் சிவபெருமானுடைய திருக்கண்ணி லிருந்து ஒழுகுகின்ற உதிரமானது நிற்கும்படி தமது கையினால் துடைத்தார்; அப்படித் துடைத்ததனால் நில்லாமல் சொரியக் கண்டு, அவ்வுதிரம் சொரியாமல் நிற்பதற்கு வேறொன்றையும் அறியாதவராய்ப் பெருமூச்சுவிட்டு, மீளவும் மனம் வருந்தச் சிறிது தூரஞ் சென்று மயங்கிக் கீழேவிழுந்தார்; பின்பு மூர்ச்சை தெளிந்து எமது ஆண்டவருக்கு யார் இப்படிப்பட்ட துன்பத் தைச் செய்தவர்கள் என்று எழுந்திருந்து வில்லையெடுத்துக் கொண்டு எட்டுத்திக்கிலும் போய்ப் பார்த்தார். - எ - று.

வாளியுந் தெரிந்து கொண் "டிம்மலையிடை எனக்கு மாறா
மீளிவெம் மறவர் செய்தார் உளர்கொலோ? விலங்கின் சாதி
ஆளிமுன் னாகியுள்ள விளைத்தவோ? அறியேன்" என்று
நீளிருங் குன்றைச் சாரல் நெடிதிடை நேடிச் சென்றார். 172

(இ - ள்.) அம்புகளைத் தெரிந் தெடுத்துக் கொண்டு இம் மலையினிடத்தில் எனக்கு விரோதமாக எம்பெருமானுடைய கண்ணிற்குத் தீங்கு செய்த வலிமை பொருந்திய கொடிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேடர்கள் இருக்கின்றார்களோ? அல்லது சிங்கமுதலாகிய மிருகசாதிகள் இப்படிச் செய்தனவோ? யான் அறியமாட்டே னென்று நீண்டிருக்கின்ற பெரிய மலைப்பக்கத்தில் நெடுந்தூர மளவும் தேடிப்போனார். - எ- று.

வேடரைக் காணார்; தீய விலங்குகள் மருங்கும் எங்கும்
நாடியுங் காணார்; மீண்டும் நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத் தோடு நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு கதறினார் கண்ணீர் வார. 173

(இ - ள்.) அங்கு வேடர்கள் ஒருவரையுங் காணாதவராய்க் கொடிய மிருகங்களைப் பக்கத்தில் எவ்விடத்திலும் தேடியுங் காணாமல் திரும்பிச் சிவபெருமானிடத்திற்கு வந்து மிகுந்த வருத்தத்தோடும் ஒளிபொருந்திய தாமரை மலர் போன்ற திருவடிகளைப் பிடித்துக் கொண்டு அப்பெருமானது திருமேனியை அருகில் பொருந்தக் கட்டியனைத்துக் கொண்டு கண்ணிரொழுகும்படியாகக் கதறியழுதார்.

"பாவியேன் கண்ட வண்ணம் பரமனார்க் கடுத்த தென்னோ?
ஆவியின் இனிய எங்கள் அத்தனார்க் கடுத்த தென்னோ?
மேவினர் பிரிய மாட்டா விமலனார்க் கடுத்த தென்னோ?
ஆவதொன் றறிகி லேன்யான்; என்செய்தேன்" என்று பின்னும். 174

(இ - ள்.) பாவியாகிய நான் கண்ட தீச்சகுனத்தின் படியே எமது பரமானருக்கு இத்தீங்கு நேர்ந்தது யாது காரணமோ? எனது உயிரைப் பார்க்கிலும் சிறந்தவராகிய எங்கள் முதல் வருக்கு இத்துன்பம் சம்பவித்தது யாது காரணமோ? தம்மை யடைந்த வர்கள் அன்பினால் பிரியாமலிருக்கின்ற நின்மல ராகிய எமது ஆண்டவருக்கு இவ்வருத்தம் உண்டாகியது யாது காரணமோ? இதனைத் தீர்ப்பதற்குரிய மருந்தொன்றையும் நான் அறியேன்; ஆதலால் என்ன செய்வேனென்று விசனப்பட்டுப் பின்னும். எ- று.

"என்செய்தலால் தீரு மோதான்? எம்பிரான் திறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன்; மொய்கழல் வேடர் என்றும்
மின்செய்வார் பகழிப் புண்கள் தீர்க்குமெய் மருந்து தேடிப்
பொன்செய்தாழ் வரையிற் கொண்டு வருவன்நான்" என்று போனார். 175

(இ - ள்.) என்ன செய்தால் இக்கண்ணிலிருந்து ஒழுகுகின்ற உதிரமானது நிற்கும்; எமது ஆண்டவர் விஷயத்தில் இத் தீங்கான செய்கையை முன்னே செய்தவர்கள் ஒருவரையும் நான் பார்க்கவில்லை; ஆதலால், நெருங்கிய வீரக்கழலையணிந்த கால்களையுடைய வேடர்கள் எப்ம.. ழுதும் ஒளி பொருந்திய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீண்ட அம்பினால் உண்டாகிய புண்களைத் தீர்க்கின்றதாகிய மெய்மையாகிய மருந்தைத்தேடிப் பொன் பொடிகளையுடைய இம்மலையினடி வாரத்திற் போய்க் கொண்டு வருவேனென்று போனார். - எ- று.

நினைத்தனர் வேறு வேறு நெருங்கிய வனங்கள் எங்கும்
இனத்திடைப் பிரிந்த செங்கண் ஏறென வெருக்கொண் டெய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு பூதநா யகன்பால் வைத்த
மனத்தினுங் கடிது வந்தம் மருந்துகள் பிழிந்து வார்த்தார். 176

(இ - ள்.) மருந்துகளைத் தேடுங் கருத்துடையவராய்த் தனித்தனி மரங்கள் நெருங்கிய வனங்களெங்கும் தனது கூட்டத்தை விட்டுப் பிரிந்த சிவந்த கண்ணையுடைய ரிஷபம் போல, சுவாமிக்குச் சம்பவித்த துன்பத்தைக்குறித்து மனதில் அச்சங்கொண்டு சென்று, புனங்களில் அப்பச்சிலை மருந்து களைப் பறித்துக் கொண்டு பூதகணங்களுக்கு நாயகராகிய சிவபெருமானிடத்தில் தாம் வைத்தமனதைப் பார்க்கிலும் அதிக விரைவாக வந்து அம்மருந்துகளைப் பிழிந்து உதிரம் ஒழுகுகின்ற அவர் திருக்கண்ணில் வார்த்தார். - எ-று.

மற்றவர் பிழிந்து வார்த்த மருந்தினால் திருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடா தொழுகக் கண்டும்
"இற்றையின் நிலைமைக் கென்னோ"இனிச்செயல் என்று பார்ப்பார்
"உற்றநோய் தீர்ப்ப தூனுக் கூன்"எனும் உரைமுன் கண்டார். 177

(இ - ள்.) இவ்விதமாகத் திண்ணனார் பிழிந்து வார்த்த ஓர் மருந்தினாலும் திருக்காளத்தி மலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானது கண்ணினின்றும் பெருகி வருகின்ற உதிர மானது சிறிதும் நில்லாமல் ஒழுகப்பார்த்து, இப்படி மாறாமல் உதிரம் சொரிகின்ற நிலைமைக்கு இனிச் செய்ய வேண்டியது யாதென்று ஆலோசித்துப் பார்த்தார், ஊனுக்கு உண்டான நோயைத் தீர்ப்பது ஊனேயென்று உலகிலுள்ளவர்கள் வழங்கும் பழமொழியை நினைத்துக் கொண்டார். - எ- று.

"இதற்கினி என்கண் அம்பால் இடந்தப்பின் எந்தை யார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் அடுக்கும்" என்று
மதர்த்தெழும் உள்ளத்தோடு மகிழ்ந்துமுன் இருந்து தங்கண்
முதற்சர மடுத்து வாங்கி முதல்வர்தங் கண்ணில் அப்ப. 178

(இ - ள்.) இக்கண்ணுக்குண்டாகிய நோயைத் தீர்ப்பதற்காக இனி என்னுடைய கண்ணை அம்பினால் பெயர்த்துப் பதித்தால், எமது ஆண்டவருடைய கண்ணிற்கு இதுவே தகுந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மருந்தாகி ஒழுகுகின்ற உதிரமானது நின்றுவிடவுங் கூடுமென்று பூரித்து எழுந்தமனதோடு மகிழ்ந்து சந்நிதிமுன்னேயிருந்து கொண்டு தம்முடைய வலக்கண்ணை ஒப்பற்ற அம்பினால் தோண்டி யெடுத்துச் சிவபெருமானுடைய கண்ணில் அப்பினவளவில். - எ- று.

நின்றசெங் குருதி கண்டார்; நிலத்தினின் றேறப் பாய்ந்தார்;
குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினார்; கூத்தும் ஆடி
"நன்றுநான் செய்த இந்த மதி" என நகையுந் தோன்ற
ஒன்றிய களிப்பி னாலே உன்மத்தர் போல மிக்கார். 179

(இ - ள்.) முன் ஒழுகிக் கெண்டிருந்த உதிரமானது நின்று விடக்கண்டார்; சந்தோஷத்தினால் பூமியினின்றும் எழுந்து குதித்தார்; மலையைப்போல வளர்ந்த இரண்டு புயங்களையும் தட்டி ஆனந்தக்கூத்தாடினார்; நான் இப்போது கொண்ட இந்தப் புத்தியானது மிகவும் நன்றாயிருக்கின்றதென்று சிரிப்புமுண்டாக மனதிற் பொருந்திய சந்தோஷத்தினாலே பயித்தியங் கொண்டவர்போல ஒன்றுந் தோன்றாமல் மேம்பட்டவரானார். - எ - று.

வலத்திருக் கண்ணில் தங்கண் அப்பிய வள்ள லார்தம்
நலத்தினைப் பின்னுங் காட்ட நாயனார் மற்றைக் கண்ணில்
உலப்பில்செங் குருதி பாயக் கண்டனர் உலகில் வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து கொள்கையின் உம்பர் மேலார். 180

(இ - ள்.) சுவாமியினுடைய வலக்கண்ணில் தம்முடைய வலக்கண்ணை அம்பினால் பெயர்த்து அப்பிய எமது கண்ணப்ப நாயனாரது அன்பின் முதிர்ச்சியை மறுபடியும் சிவகோசரியா ருக்குக் காட்டும் பொருட்டுக் காளத்தி நாதர் தமது இடக் கண்ணிலும் வற்றாத சிவந்த உதிரமானது பெருகச் செய்ய, இந்நிலவுலகத்தில் வேடர்குலத்தார் செய்த பெருந் தவத்தினால் அவதரித்துப் பத்தியினால் தேவர்களுக்கும் மேம்பட்டவராகிய கண்ணப்ப நாயனார் அதனைப் பார்த்தார். - எ - று.

கண்டபின் "கெட்டேன்! எங்கள் காளத்தி யார்கண் ஒன்று
புண்டரு குருதி நிற்க மற்றைக்கண் குருதி பொங்கி
மண்டுமற் றிதனுக் கஞ்சேன் மருந்துகை கண்டேன் இன்னும்
உண்டொரு கண்;அக் கண்ணை இடந்(து) அப்பி ஒழிப்பேன்" என்று. 181

(இ - ள்.) அவ்வாறு பார்த்தபின்பு, ஆ கெட்டேன் என்று வருந்தி, எங்கள் காளத்திநாதரது கண்களில் ஒருகண் புண்பட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வருகின்ற உதிரமானது நின்று விட, மற்றை இடக்கண்ணிலிருந்து உதிரமானது பொங்கி ஓடி வருகின்றது; ஆனால் இதற்கு நான் பயப்பட்மாட்டேன்; இதனைத் தீர்க்கத்தக்க மருந்தைக் கைகண்டிருக்கின்றேன்; எனக்கு இன்னும் ஒரு கண்ணிருக்கின்றது; ஆதலால், அக்கண்ணையும் பெயர்த்து அப்பி, எமது சுவாமியினுடைய கண்ணுக்கு நேர்ந்த புண்ணைத் தீர்ப்பேனென்று. எ-று

கண்ணுதல் கண்ணில் தங்கண் இடந்(து) அப்பிற் காணு நேர்பா(டு)
எண்ணுவார் தம்பி ரான்தன் திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உண்ணிறை விருப்பி னோடும் ஒருதனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவ தேவர். 182

(இ - ள்.) சிவபெருமானுடைய திருக்கண்ணில் தம்முடைய கண்ணைப் பெயர்த்து அப்பும்போது தமக்கு இரண்டு கண்ணும் இல்லாமையால் சுவாமியினது கண்ணிருக்குமிடத்தைத் தெரிந்து கொள்ள எண்ணங் கொண்டு, காளத்தி நாதருடைய உதிரமொழுகுகின்ற கண்ணில் தமது இடக்காலை ஊன்றிக் கொண்டு, உள்ளத்தில் நிறைந்த பெருவிருப்பத்தோடும் ஒப்பற்ற ஒரு அம்பைக்கையில் எடுத்துத் திண்ணனார் தமது கண்ணைத் தோண்டும்படி ஊன்றின பொழுதே, தேவர்களுக்கெல்லாம் தேவராகிய சிவபெருமான் அதனைத் தரியாதவரானார். எ - று.

செங்கண்வெள் விடையின் பாகர் திண்ணனார் தம்மை யாண்ட
அங்கணர் திருக்கா ளத்தி அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்குங் கையைத் தடுக்கமூன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்கு "கண்ணப்ப நிற்க" என்ற. 183

(இ - ள்.) சிவந்த கண்களையுடைய வெண்மையாகிய ரிஷபவாகனத்தில் எழுந்தருளுகின்றவரும், திண்ணனாரை அடிமை கொண்டருளிய அருட் கண்ணையுடையவரும், திருக்காளத்தி மலையில் வீற்றிருந்தருளும் அற்புதமாகிய சிவபெருமானுடைய திருக்கையானது வெளிப்பட்டு, அம்பினால் தமது இடக்கண்ணை விரைந்து தோண்டுகின்ற அவரது கையைத் தடுக்க மூன்று அடுக்காக நாக்கங்கணத்தை யணிந்த எமது ஆண்டவருடைய அமுதம் போன்ற திருவாக்கானது கண்ணப்பனே! நிற்க என்று எழுந்தன. - எ- று.

கானவர் பெருமா னார்தங் கண்ணிடந் தப்பும் போதும்
ஊனமு துகந்த ஐயர் உற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார்; நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப. 184

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) வேடர்களுக்குத் தலைவராகிய கண்ணப்ப நாயனார் தமது கண்ணைத் தோண்டிச் சுவாமியினுடைய கண்ணில் அப்பும் பொழுதும், அவரால் இடப்பட்ட மாமிசமாகிய திருவமுதை விரும்பியுண்டருளிய சிவபெருமான் பிரசன்னமாகி அவரது கையைப் பிடித்த பொழுதும், சிவஞானத்தையுடைய பெரிய தவமுனிவராகிய சிவகோசரியார் பார்த்துக் கொண்டிருந்தார்; அப்பொழுது பிரமன் முதலாகிய தேவர்கள் தேவகோக்ஷங்கள் அதிகரிக்கப் புஷ்பமாரியை இடைவிடாமல் பொழிந்தார்கள். - எ- று.

பேறினி இதன்மேல் உண்டோ? பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண் இடந்தப்ப உதவுங் கையை
ஏறுயர்த் தவர்தங் கையால் பிடித்துக்கொண்(டு) "என்வ லத்தில்
மாறிலாய்! நிற்க" என்று மன்னுபேர் அருள்பு ரிந்தார். 185

(இ - ள்.) சிவபெருமானுடைய திருக்கண்ணிலுண்டாகிய கெடுதியைப் பார்த்துப் பயமடைந்து தம்முடைய கண்ணைத் தோண்டி அப்புதற்கு உதவியாயிருந்த கண்ணப்ப நாயனாருடைய கையை ரிஷபக் கொடியையுடைய சிவபெருமான் தமது திருக்கரத்தினால் பிடித்துக் கொண்டு குற்றமற்ற அன்பினையுடைய கண்ணப்பனே! நீ எமது வலப்புறத்தில் இருக்கக்கடவாயென்று நிலைபெற்ற பெரிய திருவருள் புரிந்தருளினார்; இதைப் பார்க்கிலும் சிறந்த பேறு வேறே ஒருவர்க்கு உண்டோ? இல்லை. எ- று.

மங்குல்வாழ் திருக்கா ளத்தி மன்னனார் கண்ணிற் புண்ணீர்
தங்கணால் மாற்றப் பெற்ற தலைவர்தாள் தலைமேற் கொண்டே
கங்கைவாழ் சடையார் வாழுங் கடவூரிற் கலய னாராம்
பொங்கிய புகழின் மிக்கார் திருத்தொண்டு புகல லுற்றேன். 186

(இ - ள்.) மேகங்கள் தவழுகின்ற திருக்காளத்தி மலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய திருக்கண்ணிலிருந்து ஒழுகிய உதிரத்தைத், தமது திருக்கண்ணைப் பெயர்த்து அப்பி நிற்கும்படி செய்யப்பெற்ற எமது தலைவராகிய கண்ணப்ப நாயனாரது திருவடிகளைச் சிரசின்மேற் சூடிக்கொண்டு, கங்காநதியுலாவுகின்ற சடையினையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கடவூரில் வாழ்ந்திருந்த குங்கிலியக் காலயநாயனாரென்னும் சிறந்த புகழினையுடைய அடியவரது திருத்தொண்டினை இனிச் சொல்லத் தொடங்கினேன். - எ- று.

கண்ணப்ப நாயனார் புராணம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

17. குங்குலியக் கலய நாயனார் புராணம்

வாய்ந்தநீர் வளத்தா லோங்கி மன்னிய பொன்னி நாட்டின்
ஏய்ந்தசீர் மறையோர் வாழு மெயிற்பதி யெறிநீர்க் கங்கை
தோய்ந்தநீள் சடையார் பண்டு தொண்டர்மேல் வந்த கூற்றைக்
காய்ந்தசே வடியார் நீடி யிருப்பது கடவூர் ஆகும். 1

(இ - ள்.) நீர் வளம் பொருந்தியிருப்பதினா லுயர்வடைந்து நிலைபெற்ற காவிரி நதி சூழ்ந்த சோழவளநாட்டில் சிறப்பினை யுடைய வேதியர்கள் வாழும் மதில் சூழ்ந்த நகரமானது (யாதெனில்,) அலைவீசுகின்ற கங்கை நீர் பொருந்திய நீண்ட சடையினையுடையவரும், முற்காலத்தில் அன்பராகிய மார்க் கண்டேயரை எதிர்த்துப் பிடிக்க வந்த யமனை உதைத்தருளிய சிவந்த திருவடியையுடைய வருமாகிய அமிர்தகடேசுரர் நெடு நாளாக வீற்றிருந்தருளும் திருக்கடவூரென்று சொல்லப்படும்.

வயலெலாம் விளைசெஞ் சாலி; வரம்பெலாம் மலையின் முத்தம்;
அயலெலாம் வேள்விச் சாலை; அணையெலாங் கழுநீர்க் கற்றை;
புயலெலாங் கமுகின் கா(டு);அப் புறமெலாம் அதன்சீர் போற்றல்;
செயலெலாந் தொழில்கள் ஆறே செழுந்திருக் கடவூர் என்றும். 2

(இ - ள்.) வளப்பம் பொருந்திய திருக்கடவூரில் எந்நாளும் வயல்களிலெல்லாம் விளைகின்ற செந்நெற் பயிர்களும், அவ் வயல் வரம்புகளிலெல்லாம் அலைகளால் ஒதுக்கப்பட்ட முத்துக் களும், பக்கங்களிலெல்லாம் யாகசாலைகளும், நீர்க்காலின் அணைகளிலெல்லாம் செங்கழுநீர் மலர்க் கூட்டங்களும், கமுகஞ் சோலைகளிலெல்லாம் மேகக் கூட்டங்களும், அம்மருத நிலத்தின் புறங்களிலெல்லாம் அந்நிலவளங்களைச் சீர்ப்படுத்து தலும், வேதியர்களின் செய்கைகளெல்லாம் அறுவகைத் தொழில்களுமாயிருக்கின்றன. - எ- று.

குடங்கையின் அகன்ற உண்கட் கடைசியர் குழுமி ஆடும்
இடம்படு பண்ணை தோறும் எழுவன மருதம் பாடல்;
வடம்புரி முந்நூல் மார்பின் வைதிக மறையோர் செய்கைச்
சடங்குடை இடங்கள் தோறும் எழுவன சாமம் பாடல். 3

 Public Domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) உள்ளங்கையைப் பார்க்கிலும் விசாலமாகிய மைதீட்டிய கண்களையுடைய பள்ளஸ்திரீகள் கூட்டமாகச் சேர்ந்து குரவைக் கூட்டத்தாடுகின்ற விசாலமாகிய வயலிடங்கள் தோறும் மருதப்பண்ணின் பாடல்கள் உண்டாவன; முப்புரியாகிய உபவீதத்தை யணிந்த மார்பினையுடைய வைதிகப் பிராமணர்கள் தங்கள் செய்கையாகிய சடங்குகளைச் செய்கின்ற யாகசாலைகள் தோறும் சாமவேதத்தின் கானம் உண்டாவன. - எ- று.

துங்கநீள் மருப்பின் மேதி படிந்துபால் சொரிந்த வாவிச்
செங்கயல் பாய்ந்து வாசக் கமலமுந் தீம்பால் நாறும்
மங்குல்தோய் மாடச் சாலை மருங்கிறை ஒதுங்கும் மஞ்சும்
அங்கவை பொழிந்த நீரும் ஆகுதிப் புகைப்பால் நாறும். 4

(இ - ள்.) உயர்வாக நீண்ட கொம்பினையுடைய எருமைகள் நீரில் படிந்து பாலைச் சொரிந்த தடாகத்திலுள்ள சிவந்த கெண்டை மீன்கள் பாய்ந்து, வாசனை பொருந்திய தாமரை மலர்களும் மதுரமாகிய பால்மணம்; வீசும்; ஆகாயம் வரைக்கும் அளாவிய வரிசையாகிய மேல் வீடுகளின் பக்கத்தில் சிறிது நேரம் தங்கும் மேகமும், அம்மேகங்கள் பொழிந்த நீரும் வேதியர்கள் யாகசாலையில் ஆகுதிசெய்யும் புகையினிடமாகக் கமழ்ந்து கொண்டிருக்கும். - எ- று.

மருவிய திருவின் மிக்க வளம்பதி அதனில் வாழ்வார்
அருமறை முந்நூல் மார்பின் அந்தணர் கலயர் என்பார்
பெருநதி அணியும் வேணிப் பிரான்கழல் பேணி நாளும்
உருகிய அன்பு கூர்ந்த சிந்தையார் ஒழுக்கம் மிக்கார். 5

(இ - ள்.) நிலை பெற்ற செல்வத்தினால் சிறந்திருக்கின்ற வளப்பம் பொருந்திய அத்திருக்கடவூரில் வாழ்கின்றவர்; அரிய வேதம் சம்பந்தமாகிய முப்புரி நூலையணிந்த மார்பினையுடைய மறையவர்; பெருமை பொருந்திய கங்காநதியைத் தரித்த சடையினையுடைய சிவபெருமானது திருவடியைத் தியானித்து நாள்தோறும் இளகிய அன்புமிகுந்த திருவுள்ளத்தினை யுடையவர்; நல்லொழுக்கத்திற் சிறந்தவர் (அவர் யாரென்றால்) குங்கிலியக்கலய நாயனாரென்று சொல்லப்பட்டவர். - எ- று.

பாலனாம் மறையோன் பற்றப் பயங்கெடுத் தருளும் ஆற்றால்
மாலுநான் முகனும் காணா வடிவுகொண் டெதிரே வந்து
காலனார் உயிர்செற் றார்க்குக் கமழ்ந்தகுங் குலியத் தூபம் 6
சாலவே நிறைந்து விம்ம இடும்பணி தலைநின் றுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) பாலிய வயதினை யுடையவராகிய மார்க் கண்டேயர் அஞ்சித் தம்மைத் தழுவிக்கொள்ள அவரது பயத்தை ஒழித்து அருள் செய்யும் பொருட்டுத் திருமால் பிரமன் என்னுமிருவரும் அடியையும் முடியையும் தேடிக்காணாத திருவுருவத்தைக் கொண்டு அவருக்கெதிராக வந்து யமனுடைய உயிரைப் போக்கிய அமிர்த கடேசருக்கு நல்ல மணம் வீசுகின்ற குங்கிலிய தூபமானது ஆலய முழுமையும் மிகவும் நிறைந்து பரவும்படிச் செய்கின்ற திருப்பணியை முதன்மையாகச் செய்கின்றவர். - எ- று.

கங்கைநீர் கலிக்குஞ் சென்னிக் கண்ணுதல் எம்பி ராற்குப்
பொங்குகுங் குலியத் தூபம் பொலிவுறப் போற்றிச் செல்ல
அங்கவர் அருளி னாலே வறுமைவந் தடைந்த பின்னும்
தங்கள்நா யகர்க்குத் தாம்முன் செய்பணி தவாமை உய்த்தார். 7

(இ - ள்.) கங்கை நீரானது முழங்குகின்ற சிரசினையும், நெற்றிக்கண்ணினையுமுடைய எமது சிவபெருமானுக்கு மணம் வீசுகின்ற குங்கிலிய தூபத்திருப்பணியை நாள்தோறும் அதிகரிக்கும்படி நடத்திவருங் காலத்தில் அக்கடவுளினுடைய திருவருளினாலே அவர்க்கு வறுமை யுண்டான பொழுதும் தாங்கள் நாயகராகிய அமிர்தகடேசருக்குத் தாம் முன்பு செய்து வந்த திருப்பணியைச் சிறிதும் தவறாமல் நடத்திக் கொண்டு வந்தார். - எ- று.

இந்நெறி ஒழுகு நாளில் இலம்பாடு நீடு செல்ல
நன்னிலம் முற்றும் விற்றும் நாடிய அடிமை விற்றும்
பன்னெடுந் தனங்கள் மாளப் பயில்மனை வாழ்க்கை தன்னில்
மன்னிய சுற்றத் தோடு மாக்களும் வருந்தி னார்கள். 8

(இ - ள்.) இவ்விதமாகத் தாம் செய்யும் திருப்பணியில் தவறாமல் நடத்தி வரும் நாளில், தரித்திரமானது அதிகப்படத் தமது நல்ல வளம் பொருந்திய விளை நிலங்களையெல்லாம் விற்றும், தம்மை யடைந்த அடிமையாட்களை விற்றும், பல வகையான மிகுந்த சொத்துக்களெல்லாம் அழிந்துவிட, அதனால் தாம் நடத்துகின்ற இல்வாழ்க்கையில் நிலை பெற்ற சுற்றத்தாரும் புத்திரர்களும் உணவில்லாமல் பசியினால் வருத்தமடைந்தார்கள். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாதொன்றும் இல்லை யாகி இருபகல் உணவு மாறிப்
பேதுறு மைந்த ரோடும் பெருகுசுற் றத்தை நோக்கிக்
காதல்செய் மனைவி யார்தம் கணவனார் கலய னார்கைக்
கோதில்மங் கலநூல் தாலி கொடுத்து 'நெற் கொள்ளும்' என்றார். 9

(இ - ள்.) இவ்விதமாகிய வறுமையினால் போசனஞ் செய்வதற்குப் பொன் வெள்ளி முதலிய யாதொரு பொருளுமில் லாமல் இரண்டு நாள் வரையிலும் பட்டினியிருப்பது வருத்தப் படுகின்ற பிள்ளைகளோடு தம்மைச் சூழ்ந்துள்ள மிகுந்த சுற்றத்தாரையும் பார்த்து அவர்கள்மேல் அன்புவைத்திருக்கின்ற மனைவியார் தம் கணவனாராகிய குங்கிலியக்கலய நாயனா ருடைய திருக்கரத்தில் குற்றமற்ற மங்கல கரமான கயிற்றில் கோத்திருக்கின்ற திருமங்கிலியத்தைக் கழற்றிக் கொடுத்து இதைக் கொண்டு போய் விற்று நெல்வாங்கி வாருமென்று சொன்னார். - எ- று.

அப்பொழு ததனைக் கொண்டு நெற்கொள்வான் அவரும் போக
ஒப்பில்குங் குலியங் கொண்டோர் வணிகனும் எதிர்வந் துற்றான்;
"இப்பொதி என்கொல்?" என்றார்க் குள்ளவா றியம்பக் கேட்டு
முப்புரி வெண்ணூல் மார்பர் முகமலர்ந் திதனைச் சொன்னார். 10

(இ - ள்.) தமது மனைவியார் திருமங்கிலியத்தைக் கழற்றிக் கொடுத்த பொழுது அதனைக் கையில் வாங்கிக் கொண்டு நெல் கொள்ளும்படியாக அந்தக் குங்கிலியக்கலய நாயனாரும் கடைவீதி வழியாகப் போக, உயர்வு பொருந்திய குங்கிலியப் பொதியை எடுத்துக் கொண்டு ஒரு வர்த்தகனும் இவருக்கு எதிராக வந்தான்; அவர் அதனைப் பார்த்து இது என்ன பொதி என்று கேட்க அவன் உள்ளபடியே இது குங்கிலியப் பொதி யென்று சொல்லக்கேட்டு முப்புரியாகிய வெள்ளிய பூணூலைத் தரித்த மார்பினையுடைய குங்கிலியக்கலய நாயனார் முகமலர்ச் சியை யடைந்து இவ்வித வார்த்தைகளைச் சொன்னார். - எ- று.

"ஆறுசெஞ் சடைமேல் வைத்த அங்கணர் பூசைக் கான
நாறுகுங் குலியம் ஈதேல் நான்இன்று பெற்றேன்; நல்ல
பேறுமற் றிதன்மேல் உண்டோ? பெறாப்பேறு பெற்று வைத்து
வேறினிக் கொள்வ தென்?"என் றுரைத்தெழும் விருப்பின் மிக்கார். 11

(இ - ள்.) சிவந்த சடையின்மேல் கங்கா நதியைத் தரித்தருளிய சிவபெருமானுடைய பூசைக்கு ஏற்ற மணம் பொருந்திய குங்கிலியம் இதுவேயானால் நான் இன்றைக்கு இதனைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெற்றுக் கொண்டேன், இதைப் பார்க்கிலும் சிறந்த பேறுவேறேயிருக்கின்றதோ? ஒருவராலும் பெறுதற்கரிய பேறாகிய இதனைப் பெற்று வைத்துக் கொண்டு இனி வேறே கடைக்குப் போய் நெல் முதலியவைகளைக் கொள்ளுதல் என்ன வீண் காரியமென்று சொல்லி அதிகரித் தெழுகின்ற களிப்பிற் சிறந்தவரானார். - எ- று.

"பொன்தரத் தாரும்" என்று புகன்றிட வணிகன் தானும்
"என்தர இசைந்த(து)?" என்னத் தாலியைக் கலயர் ஈந்தார்;
அன்றவன் அதனை வாங்கி அப்பொதி கொடுப்பக் கொண்டு
நின்றிலர் விரைந்து சென்றார் நிறைந்தெழு களிப்பி னோடும். 12

(இ - ள்.) (நாயனார் அவ்வர்த்தகனைப் பார்த்துச் செட்டியாரே!) நான் பொன்னைக் கொடுக்கின்றேன்; நீர் இக் குங்கிலியப் பொதியைக் கொடுமென்று கேட்க, அவ்வர்த்தகனும் நீர் எனக்கு எவ்வளவு பொன் கொடுப்பதற்கு இசைந்தீரென்று சொல்ல, குங்கிலியக்கலய நாயனார் தாம் கொண்டு போன திருமங்கிலியத்தைக் கையில் கொடுத்தார்; அப்பொழுது அவன் அதனை வாங்கிக் கொண்டு தான் கொண்டு வந்த குங்கிலியப் பொதியைக் கொடுக்கப் பெற்றுக் கொண்டு அங்கு நில்லாமல், மனத்தில் நிறைந்தெழுகின்ற சந்தோஷத்தோடும் சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கோயிலை நோக்கிச் சீக்கிரமகாப் போனார். - எ- று.

விடையவர் வீரட் டானம் விரைந்துசென் றெய்தி என்னை
உடையவர் எம்மை யாளும் ஒருவர்தம் பண்டா ரத்தில்
அடைவுற ஒடுக்கி எல்லாம் அயர்த்தெழும் அன்பு பொங்கச்
சடையவர் மலர்த்தாள் போற்றி இருந்தனர் தமக்கொப் பில்லார். 13

(இ - ள்.) ரிஷபவாகனத்தையுடைய அமிர்தகடேசரது திருவீரட்டானத்தை விரைவாகச் சென்று சேர்ந்து, என்னை அடிமையாக உடையவரும், எம்மைப் போன்ற உலகத்திலுள்ள மற்ற யாவரையும் ஆட்கொண்டருளியவருமாகிய சிவபெருமானுக்குச் செய்ய வேண்டிய பூசாதிரவியங்கள் வைத்திருக்கின்ற பண்டசாலையில் எல்லாக்குங்கிலியத்தையும் முறையாக வைத்து, மனத்தில் நிறைந்தெழுந்த பேரன்பானது அதிகரிக்க, சடாதரராகிய அச்சுவாமியினது தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கித் தமக்கொப்புயர்வில்லாதவராகிய குங்கிலியக்கலய நாயனார் அவ்விடத்தில் தூபப்பணி செய்து கொண்டிருந்தார். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்பர்அங் கிருப்ப நம்பர் அருளினால் அளகை வேந்தன்
தன்பெரு நிதியந் தூர்த்துத் தரணியிமேல் நெருங்க எங்கும்
பொன்பயில் குவையும் நெல்லும் பொருவில்பல் வளனும் பொங்க
மன்பெருஞ் செல்வம் ஆக்கி வைத்தனன் மனையில் நீட. 14

(இ - ள்.) குங்கிலியக்கலய நாயனார் திருக்கோயிலில் தானே தூபப்பணி செய்து கொண்டிருக்க, சிவபெருமானுடைய திருவருளினாலே அளாக புரிக்குத் தலைவனாகிய குபேரனான வன் தன்னுடைய பொக்கிஷ சாலையிலுள்ள மிகுந்த திரவியங் களைக் கொண்டு வந்து நிலவுகலத்தில் அந்நாயனாருடைய வீட்டில் நிறைத்து எவ்விடத்திலும் பொற்வியலும், நெற்குவிய லும், ஒப்பற்ற பல வளங்களும் அதிகரித்திருக்க நிலைபெற்ற பெருஞ் செல்வமுண்டாகும்படி வைத்தான். - எ- று.

மற்றவர் மனைவி யாரும் மக்களும் பசியால் வாடி
அற்றைநாள் இரவு தன்னில் அயர்வுறத் துயிலும் போதில்
நற்றவக் கொடிய னார்க்குக் கனவிடை நாதன் நல்கத்
தெற்றென உணர்ந்து செல்வங் கண்டபின் சிந்தை செய்வார். 15

(இ - ள்.) அக் குங்கிலியக்கலய நாயனாருடைய மனைவியும், பிள்ளைகளும் பசியினால் வருத்தப்பட்டு, அன்று இராத்திரியில் சோர்ந்து நித்திரை செய்யும் பொழுது, முற்பிறப்பில் நல்ல தவத்தைச் செய்து பிறந்த கொடி போன்ற அவ்வம்மையாருக்குச் சொப்பனத்தில் சிவபெருமான் எழுந்தருளி வந்து (செல்வ முண்டான தன்மையை) அனுக்கிரகஞ் செய்ய, உடனே நித்திரை தெளிந்தெழுந்து (தாம் சொப்பனத்தில் கண்டபடியே தங்கள் வீட்டில்) பலவகைச் செல்வங்களைப் பார்த்த பின்பு மனதில் இவ்வாறு நினைக்கின்றார். - எ- று.

கொம்பனார் இல்லம் எங்கும் குறைவிலா நிறைவிற் காணும்
அம்பொனின் குவையும் நெல்லும் அரிசியும் முதலாயுள்ள
எம்பிரான் அருளாம் என்றே இருகரங் குவித்துப் போற்றித் 16
தம்பெருங் கணவ னார்க்குத் திருவமு தமைக்கச் சார்ந்தார்.

(இ - ள்.) பொற் கொம்பு போன்ற உடம்பினையுடைய குங்கிலியக் கலய நாயனாருடைய மனைவியார் தம்முடைய வீடு முழுவதும் குறைவில்லாமல் நிறைந்து காணப்படுகின்ற அழகிய பொற் குவையும், நெற்குவையும், அரிசிக் குவையு முதலாகவுள்ள பொருள்களனைத்தும், எமது சிவபெருமானுடைய திருவருளி னால் உண்டாயினவென்று இரண்டு கைகளையுங் குவித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வணங்கித் தம்முடைய பெருமை பொருந்திய பத்தாவுக்குத் திருவமுது சமைக்கும்படி பாகசாலையை யடைந்தார்.

காலனைக் காய்ந்த செய்ய காலனார், கலய னாராம்
ஆலுமன் புடைய சிந்தை அடியவர் அறியும் ஆற்றல்
"சாலநீ பசித்தாய் உன்றன் தடநெடு மனையில் நண்ணிப்
பாலின்இன் அடிசில் உண்டு பருவரல் ஒழிக" என்றார். 17

(இ - ள்.) யமனை மாளும்படி உதைத்த சிவந்த திருவடிகளை யுடைய சிவபெருமான், சிறந்த அன்பு பொருந்திய மனத்தினை யுடைய அடியவராகிய குங்கிலியக்கலய நாயனார் அறிந்து கொள்ளும்படி (சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு, அன்பனே!) நீ மிகவும் பசித்திருக்கின்றாய்; ஆதலால் உன் னுடைய விசாலமாகிய பெரிய வீட்டிற்குப் போய்ப் பாலோடு கூடிய இனிய அன்னத்தையுண்டு உன் பசிவருத்ததை நீக்கிக் கொள்வாயாக வென்று சொல்லி யருளினார். - எ- று.

கலையனார் அதனைக் கேளாக் கைதொழு திறைஞ்சிக் கங்கை
அலைபுனற் சென்னி யார்தம் அருள்மறுத் திருக்க அஞ்சித்
தலைமிசைப் பணிமேற் கொண்டு சங்கரன் கோயில் நின்று
மலைநிகர் மாட வீதி மருங்குதம் மனையைச் சார்ந்தார். 18

(இ - ள்.) குங்கிலியக்கலய நாயனார் அவ்வார்த்தையைக் கேட்டுத் தமது கைகளைக் கூப்பி வணங்கிநின்று அசைகின்ற நீர் மயமாகிய கங்கையைத் தரித்த திருமுடியினையுடைய சிவபெரு மானது கட்டளையைத் தடுத்து அங்கிருக்கப் பயப்பட்டு, அந்தப் பணியைச் சிரசின் மேல் கொண்டு அவ்வெம்பெருமான் எழுந் தருளியிருக்கின்ற திருக்கோயிலினின்றும் மலைகளுக் கொப்பா கிய மாடவீதியிலுள்ள தம்முடைய வீட்டையடைந்தார். - எ- று.

இல்லத்திற் சென்று புக்கார் இருநிதிக் குவைகள் ஆர்ந்த
செல்வத்தைக் கண்டு நின்று திருமனை யாரை நோக்கி
"வில்லொத்த நுதலாய்! இந்த விளைவெலாம் என்கொல்?" என்ன
"அல்லொத்த கண்டன் எம்மான் அருள்தர வந்த" தென்றார். 19

(இ - ள்.) குங்கிலியக்கலய நாயனார் தமது வீட்டினுள்ளே புகுந்து அவ்விடத்தில் பெரிய நிதிக்குவைகளாக நிறைந்திருக் கின்ற செல்வத்தைக்கண்டு நின்று சிறந்த அழகினையுடைய தமது மனைவியாரைப் பார்த்து, வில்லையொத்த நெற்றியை யுடைய பெண்ணே! இப்படிப்பட்ட சம்பத்துக்களெல்லாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எவ்விதமாக உண்டாயினவென்று கேட்க, (அதற்கு அவ் வம்மையார்) இருள் போன்ற காளகண்டத்தையுடைய எமது சிவபெருமான் திருவருள் செய்தலால் வந்ததென்று சொன்னார். எ- று.

மின்னிடை மடவார் கூற மிக்கசீர்க் கலய னார்தாம்
மன்னிய பெருஞ்செல் வத்து வளமலி சிறப்பை நோக்கி
"என்னையும் ஆளும் தன்மைத் தெந்தைஎம் பெருமான் ஈசன்
தன்னருள் இருந்த வண்ணம்" என்றுகை தலைமேற் கொண்டார். 20

(இ - ள்.) இவ்விதமாக மின்னலையொத்த இடையினை யுடைய அவரது மனைவியார் சொல்ல, பெருஞ்சிறப்பினை யுடைய குங்கிலியக்கலய நாயனார் தமக்கு உண்டாகிய மிகுந்த செல்வத்தினது வளம் பொருந்திய சிறப்பைப் பார்த்து, (அன்பானது சிறிதுமில்லாத) அடியேனையும் ஆட்கொள்ளும் பொருட்டு எமது பரமபிதாவும் எம்பெருமானுமாகிய பரம சிவனது திருவருளிருந்தவண்ணம் இதுவென்று தமது இரண்டு கைகளையும் சிரசின்மேல் குவித்து வணங்கினார். - எ- று.

பதுமநற் றிருவின் மிக்கார் பரிகலந் திருத்திக் கொண்டு
கதுமெனக் கணவ னாரைக் கண்ணுதற் கன்ப ரோடும்
விதிமுறை தீபம் ஏந்தி மேவும்இன் அடிசில் ஊட்ட
அதுநுகர்ந் தின்பம் ஆர்ந்தார் அருமறைக் கலய னார்தாம். 21

(இ - ள்.) தாமரை மலரிலிருக்கின்ற இலட்சுமியைப் பார்க்கிலும் சிறந்த அழகினையுடைய குங்கிலியக்கலய நாயனாருடைய மனைவியார் திருவமுது செய்விப்பதற்காகப் பரிகலத்தைச் சுத்தி செய்து கொண்டு, சிவனடியார்களோடு தமது கணவனாரையும் முறைமைப்படியே தீபாராதனை செய்து, விரும்பத்தக்க இனிமையாகிய அன்னத்தை உண்பிக்க, அப் பாலடிசிலையுண்டு, இன்பமடைந்திருந்தார் அரிய வேதங்களை யுணர்ந்த குங்கிலியக்கலய நாயனார். - எ- று.

ஊர்தொறும் பலிகொண் டுய்க்கும் ஒருவன தருளி னாலே
பாரினில் ஆர்ந்த செல்வம் உடையராம் பண்பில் நீடிச்
சீருடை அடிசில் நல்ல செழுங்கறி தயிர்நெய் பாலால்
ஆர்தரு காதல் கூர அடியவர்க் குதவும் நாளில். 22

(இ - ள்.) (தாருகாவன முனிவர்கள் வசித்திருந்த) ஊரிடங் கடோறும் பிட்சையேற்று, அவர்களை அன்பின் வழியே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செலுத்திய ஒப்பற்ற சிவபெருமானுடைய திருவருளினாலே, உலகத்தில் நிறைந்த பெருஞ் செல்வமுடையவரா யிருக்கின்ற தன்மையில் நீடித்து, சிறந்த செந்நெ லரிசியும், நல்ல செழுமை யான கறிகளும், தயிரும், நெய்யும், பாலுமாகிய இவைகளால் உண்ணத்தக்க மிகுந்த விருப்பமுண்டாகும்படி சிவனடியார் களுக்கு அமுது செய்வித்து வருகின்ற நாள்களில். - எ- று.

செங்கண்வெள் ளேற்றின் பாகன் திருப்பனந் தாளில் மேவும்
அங்கணன் செம்மை கண்டு கும்பிட அரசன் ஆர்வம்
பொங்கித்தன் வேழம் எல்லாம் பூட்டவும் நேர்நில் லாமைக்
கங்குலும் பகலும் தீராக் கவலையுற் றழுங்கிச் செல்ல. ***23***

(இ - ள்.) சிவந்த கண்களையுடைய வெள்ளிய ரிஷப வாகனத்தையுடையவரும், திருப்பனந்தாள் என்னுந் தலத்தில் வீற்றிருந்தருளும் அழகிய கண்ணாளருமாகிய சிவலிங்கப் பெருமான் சாய்ந்திருப்பதினால் முன்புபோல் நேராக நிற்குந் தன்மையைக் கண்டு வணங்கும்படி, சோழராஜன் ஆசை மிகுந்த தன்னுடைய யானைகளையெல்லாம் பூட்டி இழுக்கவும், நேராக நில்லாமையினால் இரவும் பகலும் நீங்காத மனக் கவலை யடைந்து வருந்திச் செல்ல. - எ- று.

மன்னவன் வருத்தங் கேட்டு மாசறு புகழின் மிக்க
நன்னெறிக் கலய னார்தாம் நாதனை நேரே காணும்
அந்நெறி தலைநின் றான்என் றரசனை விரும்பித் தாமும்
மின்னெறித் தனைய வேணி விகிர்தனை வணங்க வந்தார். ***24***

(இ - ள்.) சோழராஜன் படுகின்ற வருத்தைக் கேள்விப்பட்டுக் குற்றமற்ற புகழிற்சிறந்த நன்மார்க்கத்தையுடைய குங்கிலியக் கலயநாயனார் சாய்ந்திருக்கின்ற சிவலிங்கப் பெருமானை நேராக நிற்கத் தரிசிக்க வேண்டுமென்னும் முயற்சியில் இருக்கின்றானென்று அவ்வரசனைக்குறித்துச் சந்தோஷித்து, தாமும் மின்னல் வீசுவது போல விளங்குகின்ற சடையினை யுடைய சிவபெருமானை வணங்கும் பொருட்டு வந்தார். - எ- று.

மழுவுடைச் செய்ய கையர் கோயில்கள் மருங்கு சென்று
தொழுதுபோந் தன்பி னோடுந் தொன்மறை நெறிவ ழாமை
முழுதுல கினையும் போற்ற மூன்றெரி புரப்போர் வாழும்
செழுமலர்ச் சோலை வேலித் திருப்பனந் தாளிற் சேர்ந்தார். ***25***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) மழுவாயுதத்தைத் தரித்த சிவந்த திருக்கரத்தினை யுடைய அமிர்தகடேசர் எழுந்தருளியிருக்கின்ற திருக்கோயி லுக்குப் போய் அன்பினோடும் வணங்கிவிடை பெற்றுக் கொண்டு சென்று, பழமையாகிய வேதநெறி தவறாமல் உலக முழுவதையும் காக்கும் பொருட்டு மூன்று வகையாகிய வேதநெறி தவறாமல் உலக முழுவதையும் காக்கும் பொருட்டு மூன்று வகையாகிய அக்கினியை வளர்க்கின்ற பிராமணர்கள் வாழுகின்ற செழுமை பொருந்திய மலர்ச் சோலைகள் சூழ்ந்த திருப்பனந்தாள் என்னுந் தலத்தை யடைந்தார். - எ- று.

காதலால் அரசன் உற்ற வருத்தமுங் களிற்றி னோடும்
தீதிலாச் சேனை செய்யும் திருப்பணி நேர்ப டாமை
மேதினி மிசையே எய்த்து வீழ்ந்திளைப் பதுவும் நோக்கி
மாதவக் கலயர் தாமும் மனத்தினில் வருத்தம் எய்தி. 26

(இ - ள்.) சிவலிங்கப் பெருமானை நேரே தரிசிக்க வேண்டுமென்னும் ஆசையினால் சோழராஜன் அடைந்த மனவருத்தத்தையும், யானைகளோடு குற்றமற்ற வலிய சேனைகள் செய்கின்ற திருப்பணியானது நேராய் முடியாமை யால் வலிகுறைந்து வீழ்ந்து இளைத்து நிற்பதையும் பார்த்துப் பெருந்தவத்தினையுடைய குங்கிலியக்கலய நாயனார் தம் முடைய மனத்தில் வருத்தத்தை யடைந்து. -எ - று.

சேனையும் ஆனை பூண்ட திரளும்எய்த் தெழாமை நோக்கி
"யானும்இவ் விளைப்புற் றெய்க்கும் இதுபெற வேண்டும்" என்று
தேனலர் கொன்றை யார்தம் திருமேனிப் பூங்கச் சேய்ந்த
மானவன் கயிறு பூண்டு கழுத்தினால் வருந்த லுற்றார். 27

(இ - ள்.) சேனைகளும், பூங்கச்சில் கட்டிய யானைக் கூட்டங்களும் இழுத்து இளைத்தும் அதனால் நேர்நில்லாமல் விருப்பதைப் பார்த்து, அடியேனும் இப்படிப் பட்ட இளைப்பயடைந்து எய்த்திருக்கின்றதாகிய இத்திருப்பணி செய்யப் பெற வேண்டுமென்ற தேன் பொருந்திய கொன்றை மலர்மாலையைத் தரித்த சிவபெருமானுடைய திருமேனியில் பூங்கச்சோடு பொருந்திய வலிய கயிற்றைத் தம்முடைய கழுத்தில் சுற்றிக் கொண்டு வருந்தி இழுக்கத் தொடங்கினார். - எ- று.

நண்ணிய ஒருமை அன்பின் நாருறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்தபின் திறம்பி நிற்க
ஒண்ணுமோ? கலய னார்தம் ஒருப்பாடு கண்ட போதே
அண்ணலார் நேரே நின்றார்; அமரரும் விசும்பின் ஆர்த்தார். 28

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) ஒருமையாகப் பொருந்திய அன்போடு நார்க்கயிற்றினாலே பத்திவலியினையுடைய அவ்வடியவர் தமது கழுத்திற் பூட்டி இழுத்து இளைத்த பின்பு, அவரது அன்பிற்குத் தவறி நிற்கக்கூடுமோ? குங்கிலியக் கலயநாயனாருடைய அன்பின் தன்மையைக் கண்ட பொழுதே சிவலிங்கப் பெருமான் முன்போலத் தாழ்ந்திராமல் நேராக நின்று தரிசனங் கொடுத்தார்; தேவர்களும் ஆகாயத்தின் துதித்து ஆரவாரித்தார்கள். எ-று.

பார்மிசை நெருங்க எங்கும் பரப்பினர் பயில்பூ மாரி;
தேர்மலி தானை மன்னன் சேனையும் களிறும் எல்லாம்
கார்பெறு கானம் போலக் களித்தன; கைகள் கூப்பி
வார்கழல் வேந்தன் தொண்டர் மலரடி தலைமேல் வைத்து. 29

(இ - ள்.) அப்பொழுது உலகத்தில் எங்கும் நெருங்கும்படி தேவர்கள் பொழிகின்ற புஷ்பங்கள் பரவின; தேரோடு நெருங்கிய தானைகளையுடைய சோழ ராஜனது சேனைகளும் யானைகளுமாகிய எல்லாம் மழை பொழியப்பெற்ற காடு போலச் சந்தோஷித்தன; நீண்ட வீரக்கழலை யணிந்த காலினையுடைய அச்சோழர் பெருமான் அஞ்சலியஸ்தனாய்க் குங்கிலியக்கலய நாயனாருடைய தாமரை மலர் போன்ற திருவடிகளைச் சிரசின் மேல்வைத்துக் கொண்டு. - எ- று.

'விண்பயில் புரங்கள் வேவ வைதிகத் தேரில் மேருத்
திண்சிலை குனிய நின்றார் செந்நிலை காணச் செய்தீர்;
மண்பகிர்ந் தவனுங் காணா மலரடி இரண்டும் யாரே
பண்புடை அடியார் அல்லால் பரிந்துநேர் காண வல்லார்?' 30

(இ - ள்.) ஆகாயத்தில் சஞ்சரித்திருந்த முப்புரங்களும் நீறாக வேகும்படி வேதரூபமாகிய இரதத்தின்மேல் மேருமலையாகிய வலிய வில்லானது வளையும்படி நின்ற சிவபெருமானை நேராக நிற்கச் செய்தருளினீர்; வராகவுருவங் கொண்டு பூமியைத் தோண்டிச் சென்ற விஷ்ணுவினாலுங் காணப்படாத அக் கடவுளினுடைய தாமரை மலர் போன்ற இரண்டு திருவடிகளை யும் நற்குணங்களையுடைய சிவனடியார்களேயல்லாமல் வேறே யாவர் விரும்பி நேரே காணவல்லவர்கள் (ஒருவருமில்லை.) எ-று.

என்றுமெய்த் தொண்டர் தம்மை ஏத்தியங் கெம்பி ரானுக்(கு)
ஒன்றிய பணிகள் மற்றும் உள்ளன பலவுஞ் செய்து
நின்றவெண் கவிகை மன்னன் நீங்கவும் நிகரில் அன்பர்
மன்றிடை ஆடல் செய்யும் மலர்க்கழல் வாழ்த்தி வைகி. 31

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) என்று இவ்விதமாக மெய்மை பொருந்திய குங்கிலியக் கலயநாயனாரைப் புகழ்ந்து, அங்கே எமது சிவபெருமானுக்குச் செய்ய வேண்டிய திருப்பணிகளும் மற்றுஞ் செய்யத்தக்க பலவற்றையும் செய்து, நிலைபெற்ற வெண் கொற்றக் குடையினையுடைய சோழராஜன் அத்தலத்தினின்றுந் தன்னூருக்குப் போகவும், ஒப்பற்ற குங்கிலியக்கலய நாயனார் பொன்னம்பலத்தில் திருநாடனஞ் செய்தருளுகின்ற திருவடி களைத் துதித்து வசித்திருந்து. - எ- று.

சிலபகல் கழிந்த பின்பு திருக்கட வூரில் நண்ணி
நிலவுதம் பணியில் தங்கி நிகழுநாள் நிகரில் காழித்
தலைவராம் பிள்ளை யாரும் தாண்டகச் சதுர ராகும்
அலர்புகழ் அரசுங் கூட அங்கெழுந் தருளக் கண்டு. 32

(இ - ள்.) சிலகாலஞ் சென்ற பின்பு திருக்கடவூருக்கு வந்து, விளங்குகின்ற குங்கிலியதூபத் திருப்பணி செய்தலில் அமர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாள்களில் ஒப்பற்ற சீர்காழித்தலைவ ராகிய திருஞா நசம்பந்த மூர்த்தி சுவாமிகளும், திருத்தாண்ட கச்சதுரர் என்னும் பரவிய புகழினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகளும் சேர்ந்து அத்தலத்திற்கு எழுந்தருளி வரக்கண்டு. - எ- று.

மாறிலா மகிழ்ச்சி பொங்க எதிர்கொண்டு மனையில் எய்தி
ஈறிலா அன்பின் மிக்கார்க் கின்னமு தேற்கும் ஆற்றால்
ஆறுநற் சுவைகள் ஓங்க அமைத்தவர் அருளே அன்றி
நாறுபூங் கொன்றை வேணி நம்பர்தம் அருளும் பெற்றார். 33

(இ - ள்.) குங்கிலியக்கலய நாயனார் நீங்காத பெருமகிழ்ச்சி யானது அதிகரிக்கத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளையும் திருநாவுக்கரசுவாமிகளையும் எதிர் கொண்டு தம்முடைய வீட்டிற்கு அழைத்து வந்து, கெடாத அன்பிற் சிறந்தவர்களாகிய அவ்விருவர்க்கும் இனிய திருவமுதைப் பொருந்தும் வகையி னால் அறுவகைச் சுவை பதார்த்தங்களும் குறைவுபடாமல் செய்து படைத்து அவர்கள் கிருபையைப் பெற்றதேயல்லாமல் வாசனை வீசுகின்ற கொன்றை மலர் மாலையைத் தரித்த சடை யினையுடைய சிவபெருமானது திருவருளையும் பெற்றார். எ-று

கருப்புவில் லோனைக் கூற்றைக் காய்ந்தவர் கடவூர் மன்னி
விருப்புறும் அன்பு மேன்மேல் மிக்கெழும் வேட்கை கூர
ஒருப்படும் உள்ளத் தன்மை உண்[illegible]ல் தமக்கு நேர்ந்த 34
திருப்பணி பலவுஞ் செய்து சிவபத நிழலிற் சேர்ந்தார்.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) கரும்பு வில்லினையுடைய மன்மதனையும், யமனையும் கோபித்து அழித்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கடவூரில் வசித்து யாவருக்கும் விருப்பத்தைத் தருகின்ற பேரன்பானது மேலும் மேலும் அதிகரித்தெழுகின்ற ஆசையுண்டாக ஒருமைப்பட்ட பத்திமையானது பொருந்தியிருப்பதனால் தம்மால் செய்யக் கூடிய பலதிருப்பணிகளையுஞ் செய்து, பின்பு சிவபெருமானது திருவடிநிழலையடைந்தார். - எ - று.

தேனக்க கோதை மாதர் திருநெடுத் தாலி மாறிக்
கூனல்தண் பிறையி னார்க்குக் குங்குலி யங்கொண் டுய்த்த
பான்மைத்திண் கலய னாரைப் பணிந்(து) அவர் அருளி னாலே
மானக்கஞ் சாறர் மிக்க வண்புகழ் வழுத்த லுற்றேன். 35

(இ - ள்.) தேன் பொருந்திய மலர்மாலையைத் தரித்த தமது மனைவியார் கழுத்தி லணிந்திருந்த பெரிய திருமங்கிலியத்தை விற்று வளைவாகிய குளிர்ந்த பிறைச்சந்திரனைத் தரித்த சிவபெருமானுக்குக் குங்கிலியப் பொதியை வாங்கிக் கொண்டு வந்து தூபத்திருப்பணி செய்து அன்பின் தன்மையையுடைய வலிய குங்கிலியக் கலயநாயனாரை வணங்கி, அவரது திருவருளினாலே மானக்கஞ்சாற நாயனாருடைய சிறந்தவளம் பொருந்திய புகழமைந்த சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கினேன்.

குங்கிலியக்கலய நாயனார் புராணம் முற்றிற்று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

18. மானக்கஞ்சாற நாயனார் புராணம்

மேலாறு செஞ்சடைமேல் வைத்தவர்தாம் விரும்பியது
நூலாறு நன்குணர்வார் தாம்பாடும் நோன்மையது
கோலாறு தேன்பொழியக் கொழுங்கனியின் சாறொழுகும்
காலாறு வயற்கரும்பின் கமழ்சாறூர் கஞ்சாறூர். 1

(இ - ள்.) கொம்புத் தேன்கள் அக் கொம்பின் வழியே சொரிய, அதனோடு செழுமை பொருந்திய பழங்களின் சாறும் ஒழுகுகின்ற வாய்க்காலின் வழியே வயல்களிலுள்ள கரும்பினது மணம் வீசுகின்ற சாறானது பாய்கின்ற கஞ்சாறூர் என்னுந் தலமானது, சிவந்த சடையின்மேல் ஆகாயகங்கையை வைத்தருளிய சிவபெருமானால் விரும்பப்பட்டது; பலவகையாகிய சாஸ்திரத்தின் பகுதிகளை நன்றாக அறிந்த புலவர்கள் புகழ்ந்து பாடுகின்ற பெருமையையுடையது. - எ- று.

கண்ணீலக் கடைசியர்கள் கடுங்களையிற் பிழைத்தொதுங்கி
உண்ணீர்மைப் புணர்ச்சிக்கண் உறைத்துமலர்க் கண்சிவக்கும்
தண்ணீர்மென் கழுநீர்க்குத் தடஞ்சாலி தலைவணங்கும்
மண்ணீர்மை நலஞ்சிறந்த வளவயல்கள் உளஅயல்கள். 2

(இ - ள்.) நீலோற்பல மலரையொத்த கண்களையுடைய பள்ளஸ்திரீகள் பிடுங்குகின்ற களைகளினின்றும் தப்பி ஒதுங்கி, உள்ளே நிலவுகின்ற நீர்மையாகிய புணர்ச்சியினிடத்துப் பிணங்கிப் பூவாகிய கண்கள் சிவப்படையும் குளிர்ச்சி பொருந்திய மெல்லிய செங்கழுநீர் மலராகிய நாயகிக்கு, வளர்ந்த செந்நெற்பயிராகிய நாயகன் அப்பிணக்குத் தீரும்படி தலையினால் வணங்குகின்ற நிலவளத்தினால் நன்றாகச்சிறந்திருக்கின்ற வளம்பொருந்திய வயல்கள் பக்கங்களிலுள்ளன. - எ- று.

புயல்காட்டுங் கூந்தல்சிறு புறங்காட்டப் புனமயிலின்
இயல்காட்டி இடைஒதுங்க இனங்காட்டும் உழத்தியர்கண்
முயல்காட்டும் மதிதோற்கும் முகங்காட்டக் கண்மூரிக்
கயல்காட்டுந் தடங்கள்பல கதிர்காட்டுந் தடம்பணைகள். 3

(இ - ள்.) மேகம் போலுங் கருநிறத்தைக் காட்டுகின்ற கூந்தலானது சிறிய பின்புறத்தில் தாழ்ந்திருக்கவும், புனத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சஞ்சரிக்கின்ற மயிலினது சாயலைக் காண்பித்து இடையானது தளரவும், கூட்டமாகவருகின்ற பள்ளஸ்திரிகள் முயற்களங்கத் தைத் தன்னிடத்தில் காட்டுகின்ற சந்திரனைத் தோற்கச் செய் கின்ற முகத்தைக் காட்ட, அவர்களது கண்களை வலிபொருந்திய கெண்டைமீன்கள் காட்டுகின்ற பல தடாகங்களும், நெற்கதிர் களைக், காட்டிக் கொண்டிருக்கின்ற விசாலமாகிய பல வயல்களு மிருக்கின்றன. - எ- று.

சேறணிதன் பழனவயல் செழு நெல்லின் கொழுங்கதிர்போய்
வேறருகு மிடைவேலிப் பைங்கமுகின் மிடறுரிஞ்சி
மாறெழுதிண் குலைவளைப்ப வண்டலைதண் டலையுழவர்
தாறரியும் நெடுங்கொடுவாள் அனையவுள தனிஇடங்கள். 4

(இ - ள்.) சேற்றால் அழகு பொருந்திய குளிர்ந்த வயல்களி லுள்ள செழித்த செந்நெற்பயிர்களின் கொழுமையாகிய கதிர்கள் சென்று, வேறாக அருகில் வேலி போல் நெருங்கிய பசுமை பொருந்திய கமுகமரத்தினது கழுத்தை உராய்ந்து, மாறாக எழும்பிய அதன் வலியகுலைகளை வளைக்க (அவ் வளைத்து நிற்கும் கதிர்கள்) வண்டுகள் சஞ்சரிக்கின்ற சோலை களிலிருக்கின்ற உழவர்கள் கமுகின்குலைகளை அரிகின்ற கோணலாகிய நீண்ட அரிவாளை ஒத்தனவாக இருக்கின்றன, தனித்த அநேக இடங்களில், - எ- று.

பாங்குமணிப் பலவெயிலும் சுலவெயிலும் உளமாடம்;
ஓங்கரணி துகிற்கொடியும் நகிற்கொடியும் உளஅரங்கம்;
ஓங்குநிலைத் தோரணமும் பூரணமும் பழும்உளவால்
பூங்கணைவீ தியில் அணைவோர் புலமறுகுஞ் சிலமறுகு. 5

(இ - ள்.) மேல்வீடுகள் குற்றமற்ற பலவகை இரத்தினங்களின் ஒளிகளையும், சூழ்ந்திருக்கின்றமதில்களையும் உடைத்தாயிருக் கும், சபைகள் முன் பக்கத்தில் அலங்கரிக்கப்பட்ட வஸ்திரக் கொடிகளையும், ஸ்தனங்களையுடைய மாதர்களாகிய கொடி களையும் உடையனவாயிருக்கும்; மன்மதன் புஷ்பபாணங் களைத் தொடுக்கின்ற வீதியில் அடைந்தவர்களின் அறிவு மயங்கத்தக்க சிலவீதிகள் உயர்ந்த நிலையாகிய மகரதோரணங் களையும், பூரண கலசங்களையும் உள்ளனவாயிருக்கும். - எ- று.

மனைசாலும் நிலையறத்தின் வழிவந்த வளம்பெருகும்
வினைசாலும் உழவுதொழில் மிக்கபெருங் குடிவதுவன்றிப்
புனைசாயல் மயிலனையார் நடம்புரியப் புகல்முழவம்
கனைசாறு மிடைவீதிக் கஞ்சாறு விளங்கியதால். 6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) பெருமை பொருந்திய நிலையினையுடைய இல்லறமார்க்கத்திற்கு ஒத்துநடந்து செல்வம் விருத்தியடைதற் கேதுவாகிய தொழிலிற் சிறந்த பயிரிடுந்தொழிலால் மேம்பட்ட பெரிய குடிகள் நெருங்கி அழகிய மயில் போன்ற சாயலை யுடைய பெண்கள் நாட்டியஞ் செய்யும் புகழ்ந்து சொல்லப்பட்ட மத்தளமுதலிய வாத்தியங்கள் முழங்குகின்ற திருவிழாக்கள் இடைவிடாமல் நடக்கின்ற வீதிகளையுடைய சஞ்சாறு என்னுந் திருப்பதியானது விளங்கியிருந்தது. - எ- று.

அப்பதியில் குலப்பதியாய் அரசர்சே னாபதியாம்
செப்பவருங் குடிவிளங்கத் திருஅவதாரஞ் செய்தார்
மெய்ப்பொருளை அறிந்துணர்ந்தார் விழுமியவே ளான்குடிமை
வைப்பனைய மேன்மையினார் மானக்கஞ் சாறனார். 7

(இ - ள்.) அந்த ஊரில் வாழும் வேளாண்குலத்திற்கு முதல்வராய் அரசர்களுக்குச் சேனாதிபதி என்று சொல்லப் பட்ட குடியானது விளங்கும்படியாகத் திருவவதாரஞ் செய் தருளினவர்; உண்மையாகிய பதிப்பொருளை யாராய்ந்துணர்ந் தவர்; சிறந்த வேளாளர் குலத்திற்கு ஓர் புதையலையொத்த மேன்மையையுடைவர்; மானக்கஞ்சாறநாயனார் என்னுந் திருநாமத்தை யுடையவர். - எ- று.

பணிவுடைய வடிவுடையார்; பணியினொடும் பனிமதியின்
அணிவுடைய சடைமுடியார்க் காளாகும் பதம்பெற்ற
தணிவில்பெரும் பேறுடையார் தம்பெருமான் கழல்சார்ந்த
துணிவுடைய தொண்டர்க்கே ஏவல்செயுந் தொழில் பூண்டார். 8

(இ - ள்.) (சிவனடியார்களைக் கண்டால் அவர்களை) வணங்குதல் செய்கின்ற திருவுருவத்தையுடைவர்; பாம்புகளோடு குளிர்ச்சி பொருந்திய சந்திரனையும் தரித்த சடைமுடியினை யுடைய சிவபெருமானுக்கு அடிமையாகின்ற நிலைமையைப் பெற்ற குறைவற்ற பெரும்பேற்றையுடைவர்; தமது முதல்வராகிய அக்கடவுளினது திருவடிகளையே ஆதரவாக அடைந்த துணிவு பொருந்திய தொண்டர்களுக்கே பணிவிடை செய்கின்ற தொழிலை மேற் கொண்டொழுகுகின்றவர்.

மாறில்பெருஞ் செல்வத்தின் வளம்பெருக மற்றதெலாம்
ஆறுலவுஞ் சடைக்கற்றை அந்தணர்தம் அடியாராம்
ஈரில்பெருத் திருவுடையார் உடையாரென் றியாவையுதேர் 9
கூறுவதன் முன்அவர்தங் குறிப்பறிந்து கொடுத்துள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) கெடுதலில்லாது பெருஞ் செல்வத்தின் வளமானது நாளுக்கு நாள் விருத்தியடைய அந்தச் செல்வ முழுமைக்கும் கங்காநதி யுலாவுகின்ற கற்றையாகிய சடையினையுடைய சிவபெருமானது அடியவரென்னும் முடிவில்லாத அருட் பெருஞ் செல்வத்தையுடைய மெய்யன்பர்களே உரியவர்க ளென்று, எல்லாப் பொருள்களையும் அவ்வடியவர்கள் எமக்கு இது வேண்டுமென்று எதிரே சொல்வதற்கு முன்னே அவர்கள் மனக்குறிப்பையறிந்து கொடுக்கின்றவர். - எ - று.

விரிகடல்சூழ் மண்ணுலகில் விளங்கியவித் தன்மையராம்
பெரியவர்க்கு முன்சிலநாள் பிள்ளைப்பே றின்மையினால்
அரியறியா மலர்க்கழல்க ளறியாமை யறியாதார்
வருமகவு பெறற்பொருட்டு மனத்தருளால் வழுத்தினார். 10

(இ - ள்.) விசாலமாகிய சமுத்திரஞ்சூழ்ந்த நிலவுலகத்தில் விளங்குகின்ற இப்படிப் பட்ட அன்பின் தன்மையையுடையவ ராகிய மானக்கஞ் சாற நாயனாருக்குச் சிலநாள் வரையிலும் புத்திரப் பேறில்லாமையினால், விஷ்ணுவினால் முன்பு தேடிக் காணப்படாத தாமரைமலர் போன்ற திருவடிகளின் பெருமையை அறிந்தவராகிய அந்நாயனார் தமது குலம் விருத்தியாவதற்கு ஏதுவாக வருகின்ற புத்திரப் பேறு பெறும் பொருட்டுத் தமது மனதில் நிறைந்த அன்போடும் சிவபெருமானைத் தோத்திரஞ் செய்தார். - எ - று.

குழைக்கலையும் வடிகாதில் கூத்தனார் அருளாலே
மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக்கிழத்தி யார்தம்பால்
இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த இப்பிறவிக் கொடுஞ்சூழல்
பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார். 11

(இ - ள்.) குண்டலமாகிய அலைகின்ற நீண்ட திருச்செவி யினையுடைய ஸ்ரீ நடராசப் பெருமானது திருவருளினாலே, மழை வேண்டிப் பெய்யென்றால் பெய்யத்தக்க பெருங்கற்பினை யுடைய அவரது மனைவியாரிடத்து, முற்பிறப்பில் செய்த வினைப்பயனை யனுபவிப்பதற் கேதுவாயிருக்கின்ற இந்தப் பிறவியாகிய கொடிய காட்டில் நின்றும் பிழைத்து உய்யும் நல்லநெறியைத் தமக்குக் கொடுக்கும் பொருட்டு ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறந்தபெரு மகிழ்ச்சியினால் பெருமூதூர் களிசிறப்பச்
சிறந்தநிறை மங்கலதூ ரியம்முழங்கத் தேவர்பிரான்
அறந்தலைநின் றவர்க்கெல்லாம் அளவில்வளத் தருள்பெருக்கிப்
புறந்தருவார் போற்றிசைப்பப் பொற்கொடியை வளர்க்கின்றார். 12

(இ - ள்.) தமக்குக் குழந்தைபிறந்த மிகுந்த சந்தோஷத்தினாலே பெரிய பழமையாகிய அவ்வூரானது மகிழ்ச்சியினால் அதிகரிக்க, சிறப்புப் பொருந்திய நிறைந்த மங்கலவாத்தியங்கள் கோஷிக்க, தேவர்கள் நாயகராகிய சிவபெருமானது திருவருள் வழியே நின்ற அடியார்களுக்கெல்லாம் அளவில்லாத வளத்தினையுடைய கொடையினால் சிறப்புண்டாகச் செய்து, புறத்திற் சூழ்ந்துள்ள பலரும் வாழ்த்துதல் சொல்ல, பொற்கொடி போன்ற அப்புத்திரியை வளர்க்கின்றவராயினார்.

காப்பணியும் இளங்குழவிப் பதநீங்கிக் கமழ்சுரும்பின்
பூப்பயிலுஞ் சுருட்குழலும் பொலங்குழையும் உடன்தாழ
யாப்புறுமென் சிறுமணிமே கலையணிசிற் றாடையுடன்
கோப்பமைகிண் கிணியசையக் குறுந்தளிர்மெல் லடியொதுங்கி. 13

(இ - ள்.) காப்பணிதற்குரிய இளமை பொருந்திய குழந்தைப் பருவங்கழித்து, வாசனை வீசுகின்ற வண்டுகளையுடைய மலர் களை முடித்த சுருண்ட கூந்தலும், பொன்னாற் செய்யப்பட்ட குண்டலமும் தாழ்ந்து தொங்கிக் கொண்டிருக்க, சிறிய மணிகளால் கட்டப்பட்ட மெல்லிய மேகலாபரணமணிந்த சிற்றாடையோடு கோக்கப்பட்ட சிறு சதங்கையானது அசையும்படி சிறிய தளிர் போன்ற மிருதுவாகிய பாதங்களினால் ஒதுங்கி நடந்து. - எ- று.

புனைமலர்மென் கரங்களினால் போற்றியதா தியர்நடுவண்
மனையகத்து மணிமுன்றில் மணற்சிற்றில் இழைத்துமணிக்
கனைகுரல்நூ புரம்அலையக் கழன்முதலாப் பயின்றுமுலை
நனைமுகஞ்செய் முதற்பருவம் நண்ணினள் அப்பெண் அமுதம். 14

(இ - ள்.) அழகிய தாமரைமலர் போன்ற மிருதுவாகிய கைகளினால் தன்னையெடுத்துப் பாதுகாக்கின்ற தாதியர்களுக்கு நடுவில், வீட்டிலுள்ள அழகிய முற்றத்தில் மணலினால் சிறு வீடுகட்டியும், பரல் மணிகளினால் சப்திக்கின்ற பாதச் சிலம்புகள் அசையும்படி கழங்காடல் முதலிய விளையாடல்களைச் செய்தும், ஸ்தனங்கள் அரும்புபோலத் தோன்றுகின்ற பேதைப் பருவத்தை அடைந்தார், அந்தப் பெண்ணமிர்தமாகிய மானக்கஞ்சாற நாயனாருடைய மகள். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உறுகவின்மெய்ப் புறம்பொலிய ஒளிநுசுப்பை முலைவருத்த
முறுவல்புற மலராத முகிண்முத்த நகையென்னும்
நறுமுகைமென் கொடிமருங்குல் நளிரச்சுருள்அந் தளிர்செங்கை
மறுவில்குலக் கொழுந்தினுக்கு மணப்பருவம் வந்தணைய. 15

(இ - ள்.) நிலை பெற்ற பேரழகானது தேகத்தின் புறத்தில், விளங்க, ஒளி பொருந்திய இடையை ஸ்தனங்கள் பாரத்தினால் வருத்த, இளஞ்சிரிப்பானது புறத்தில் வெளிப்படாத ஒளி பொருந்திய முத்துக்களையொத்த தந்தபந்திகளாகிய நல்ல அரும்பினையுடைய மிருதுவாகிய கொடி போன்ற இடையினை யும், நெய்ப்பசையினால் குளிர்ந்த கூந்தலையும், அழகு பொருந் திய தளிர் போன்ற சிவந்த கையினையுமுடைய குற்றமற்ற மானக்கஞ்சாறநாயனாருடைய குலத்திற்குக் கொழுந்து போன்றி ருக்கின்ற அப்புத்திரிக்குக் கலியாணப்பருவம் வந்துசேர. - எ- று.

திருமகட்கு மேல்விளங்கும் செம்மணியின் தீபம்எனும்
ஒருமகளை மண்ணுலகில் ஓங்குகுல மரபினராய்க்
கருமிடற்று மறையவனார் தமராய கழல்ஏயர்
பெருமகற்கு மகட்பேச வந்தணைந்தார் பெருமுதியோர். 16

(இ - ள்.) அழகில் இலட்சுமியைப் பார்க்கிலும் மேலாக விளங்குகின்ற சிவந்தமாணிக்க தீபம் போன்ற ஒப்பற்றப் புத்திரியை நிலைபெற்ற உலகத்தில் உயர்ந்த வேளாளர் குலத்திற் கேற்ற மரபினையுடையவராய்க் காளகண்டத்தையுடைய சிவபெருமானுக்கு அடியவராகிய கழலேயர் என்பவரது சிறந்த புத்திரராகிய ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்குப் பெண் பேசும்படி பெருமை பொருந்திய சிலமுதியோர்கள் வந்து சேர்ந்தார்கள். - எ- று.

வந்தமூ தறிவோரை மானக்கஞ் சாறனார்
முந்தைமுறை மையின்விரும்பி மொழிந்தமணத் திறங்கேட்டே
"எந்தமது மரபினுக்குத் தரும்பரிசால் ஏயும்" எனச்
சிந்தைமகிழ் வுறவுரைத்து மணநேர்ந்து செலவிட்டார். 17

(இ - ள்.) மானக்கஞ்சாற நாயனார் தம்மிடத்தில் பெண் கேட்கும்படி வந்த பேரறிவினையுடைய பெரியோர்களைத் தமது பழைய உறவினரென்னும் முறைமையால் விரும்பிவரவழைத்து, அவர்கள் சொல்லிய கலியாணவார்த்தையைக் கேட்டு எம்முடைய வமிசத்திற்குத் தகுதியாயிருக்கின்ற படியால்

அக்கலிக் காமநாயானாருக்குப் பெண்கொடுக்கத்தகுமென்று மனமகிழ்வோடு சொல்லிமணஞ் செய்து கொடுக்கச் சம்மதித்து அவர்களை அனுப்புவித்தார். - எ- று.

சென்றவருங் கஞ்சாறர் மணம்இசைந்த படிசெப்பக்
குன்றனைய புயத்தேயர் கோனாரும் மிகவிரும்பி
நின்றநிலை மையின்இரண்டு திறத்தார்க்கும் நேர்வாய
மன்றல்வினை மங்கலநாள் மதிநூல்வல் லவர்வகுத்தார். 18

(இ - ள்.) மானக்கஞ்சாறநாயனார் தமது புத்திரியைக் கலியாணஞ் செய்து கொடுக்க ஒப்புக் கொண்டதைக் கேட்டுப் போன பெரியோர்கள் சொல்ல, மலைபோன்ற புயத்தினையுடைய ஏயர்கோன்கலிக்காம நாயனாரும் மிகுந்த சந்தோஷமடைந்து நிற்குமிடத்து, அவ்விருதிறத்தாருக்கும் ஒத்திருக்கின்ற கலியாணஞ் செய்தற்குரிய முகூர்த்த நாளைப் பேரறிவினையுடைய சோதிட சாஸ்திரிகள் வகுத்து நியமித்தார்கள். -எ - று.

மங்கலமாஞ் செயல்விரும்பி மகட்பயந்த வள்ளலார்
தங்குலநீள் சுற்றமெலாந் தயங்குபெருங் களிசிறப்பப்
பொங்கியவெண் முளைப்பெய்து பொலங்கலங்க ளிடைநெருங்கக்
கொங்கலர்தண் பொழில்மூதூர் வதுவை முகங் கோடித்தார். 19

(இ - ள்.) கலியாணப் பெண்ணைப் பெற்ற மானக்கஞ்சாறநாயனார் மங்கலகரமாகிய காரியத்தைச் செய்யவிருப்பமுற்று, தமது குலத்திலுள்ள பெரிய உறவினரெல்லாம் மிகுந்த களிப்பினால் சிறப்படையப் பொற் பாத்திரங்களில் நெருங்கும்படி விளங்குகின்ற வெண்மையாகிய பாலிகை முளைகளை வைத்து, மணம் வீசுகின்ற குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த பழமையாகிய கஞ்சாறூரைக் கலியாணஞ் செயதற்குரிய சிறப்புண்டாக அலங்காரஞ் செய்தார்கள். - எ- று.

கஞ்சாறர் மகட்கொடுப்பக் கைப்பிடிக்க வருகின்ற
எஞ்சாத புகழ்ப்பெருமை ஏயர்குலப் பெருமானும்
தஞ்சால்பு நிறைசுற்றம் தலைநிறைய முரசியம்ப 20
மஞ்சாலும் மலர்ச்சோலைக் கஞ்சாற்றின் மருங்கணைய.

(இ - ள்.) மானக்கஞ்சாற நாயனார் தமது புத்திரியைக் கொடுக்கக் கலியாணஞ் செய்து கொள்ள வருகின்ற குறையாத பெரும்புகழையுடைய ஏயர்கோன் கலிக்காம நாயனாரால் தம்முடைய பெருமை பொருந்திய உறவினர்கள் கூட்டமாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிறைந்துவர, முரசவாத்தியம் முழங்க, மேகங்கள் தவழுகின்ற மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த கஞ்சாறு என்னும் ஊருக்குச் சமீபமாக வந்து சேர. - எ- று.

வள்ளலார் மணம்அவ்வூர் மருங்கணையா முன்மலர்க்கண்
ஒள்ளிழையைப் பயந்தார்தந் திருமனையில் ஒருவழியே
தெள்ளுதிரை நீருலகம் உய்வதற்கு மற்றவர்தம்
உள்ளநிலைப் பொருளாய உம்பர்பிரான் தாம் அணைவார். 21

(இ - ள்.) ஏயர்கோன் கலிக்காம நாயனாருடைய மணவெழுச்சியானது அவ்வூரில் வருவதற்குமுன்னமே நீலோற்பலமலர் போன்ற கண்களையும், பிரகாசம் பொருந்திய ஆபரணத்தையுமுடைய அம்மணமகளைப் பெற்ற மானக் கஞ்சாற நாயனாருடைய அழகிய வீட்டில், ஒருவழியாக, தெளிவாகிய அலைகளையுடைய சமுத்திரஞ் சூழ்ந்த உலகத் திலுள்ளவர்கள் கதிபெற்றுய்யும் பொருட்டு அம்மானக்கஞ்சாற நாயனாருடைய திருவுள்ளத்தில் நிலைத்து வாசஞ் செய்கின்ற மெய்ப் பொருளாகிய சிவபெருமான் எழுந்தருளத் திருவுள்ளங் கொண்டருளினார். - எ- று.

முண்டநிறை நெற்றியின்மேல் முண்டித்த திருமுடியில்
கொண்டசிகை முச்சியின்கண் கோத்தணிந்த எற்புமணி
பண்டொருவன் உடல்அங்கம் பரித்தநாள் அதுகடைந்த
வெண்டரளம் எனக்காதின் மிசைஅசையுங் குண்டலமும். 22

(இ - ள்.) திரிபுண்டரம் நிறைந்த திருநெற்றியின்மேல் க்ஷௌரஞ் செய்துள்ள சிரசினுச்சியில் வைத்திருக்கின்ற குடுமியும், அக்குடுமியில் கோத்துத்தரிக்கப்பட்ட எலும்புமணி களும் முற்காலத்தில் வாமனவுருவங் கொண்ட விஷ்ணுவினது உடம்பிலுள்ள முதுகெலும்பைத் தரித்துக் கொண்ட பொழுது அவ்வெலும் பாற்கடைந்தெடுத்த வெள்ளியமுத்தைப் போலக்காதில் அசைகின்ற குண்டலங்களும். எ - று.

அவ்வென்பின் ஒளிமணிகோத் தணிந்ததிருத் தாழ்வடமும்
பைவன்பேர் அரவொழியத் தோளில்இடும் பட்டிகையும்
மைவந்த நிறக்கேச வடப்பூணு நூலும்மனச்
செவ்வன்பர் பவமாற்றுந் திருநீற்றுப் பொக்கணமும். 23

(இ - ள்.) மேற் சொல்லிய அவ்வெலும்பினாற் செய்த ஒளி பொருந்திய மணிகளைக் கோத்துத் தரிக்கப்பட்ட அழகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாழ்வடமும், படத்தினையுடைய வலிய பாம்பில்லாமல் தோளில் தரித்த யோகபட்டையும், கருமை நிறம் பொருந்திய மயிரினால் வடமாகச் செய்யப்பட்டிருக்கின்ற பூணூலும், சிவஞானம் பொருந்திய நல்ல மனத்தினையுடைய அடியார்களின் பிறவித்துன்பத்தைப் போக்குகின்ற திருநீற்றுப்பையும். எ-று

ஒருமுன்கைத் தனிமணிகோத் தணிந்தஒளிர் சூத்திரமும்
அருமறைநூற் கோவணத்தின் மிசைஅசையுந் திருவுடையும்
இருநிலத்தின் மிசைதோய்ந்த எழுதரிய திருவடியும்
திருவடியில் திருப்பஞ்ச முத்திரையும் திகழ்ந்திலங்க. 24

(இ - ள்.) முன்னங்கையொன்றில் ஒரு எலும்புமணியைக் கோத்து தரித்த விளங்குகின்ற சூத்திரமும், அரிய வேதமாகிய கோவணத்தின்மேல் கட்டியிருக்கின்ற அழகிய உடையும், பெரிய பூமியின் மேல் பொருந்தியிருக்கின்ற எழுதுதற்குரிய திருவடிகளும், அத்திருவடிகளில் (இரேகைசாஸ்திரத்திற் சொல்லப்பட்ட) சிறந்த பஞ்சமுத்திரைகளும் விளங்கித்தோன்ற. - எ- று.

பொடிமூடு தழல்என்னத் திருமேனி தனிற்பொலிந்த
படிநீடு திருநீற்றின் பரப்பணிந்த பான்மையராய்க்
கொடிநீடு மறுகணைந்து தம்முடைய குளிர்கமலத்
தடிநீடும் மனத்தன்பர் தம்மனையின் அகம்புகுந்தார். 25

(இ - ள்.) நீறு பூத்த நெருப்புப் போலத் தமது திருமேனியில் விளங்குகின்ற சிறப்புப் பொருந்தி திருவெண்ணீற்றினது உத்தூளனத்தை யணிந்த தன்மையையுடையவராய், கொடிகள் கட்டிய நீண்ட வீதியில் சேர்ந்து, தமது குளிர்ந்த தாமரை மலர் போன்ற திருவடிகள் தங்குகின்ற திருவுள்ளத்தையுடைய மெய்யன்பராகிய மானக்கஞ் சாற நாயனாரது வீட்னுள்ளே புகுந்தருளினார். - எ- று.

வந்தணைந்த மாவிரத முனிவரைக்கண் டெதிரெழுந்து
சிந்தைகளி கூர்ந்துமகிழ் சிறந்தபெருந் தொண்டனார்
"எந்தைபிரான் புரிதவத்தோர் இவ்விடத்தே எழுந்தருள
உய்ந்தொழிந்தேன் அடியேன்" என் றுருகியஅன் பொடுபணிந்தார். 26

(இ - ள்.) தமது வீட்டில் எழுந்தருளிய மாவிரத சமயத்தினராகிய முனிவரைப் பார்த்து உடனே எழுந்து எதிர்கொண்டு மனதில் மிகவும் சந்தோஷித்துப் பெருவிருப்பமடைந்த சிறந்த மானக்கஞ்சாற நாயனார் எமது ஆண்டவராகிய சிவபெருமானிடத்தில் அன்பு செலுத்துகின்ற தவத்தினையுடைய இப் பெரியவர் இவ்விடத்தில் எழுந்தருளி வந்ததனாலே அடியேன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறவித்துன்பத்தினின்றும் நீங்கிப் பிழைத்தேன் என்று உருக்க மாகிய அன்போடு பணிந்தார். - எ- று.

நற்றவராம் பெருமானார் நலமிகும்அன் பரைநோக்கி
"உற்றசெயல் மங்கலம்இங் கொழுகுவதென்" என "அடியேன்
பெற்றதொரு பெண்கொடிதன் வதுவை"எனப் பெருந்தவரும்
"மற்றுமக்குச் சோபனம்ஆ குவ" தென்று வாய்மொழிந்தார். 27

(இ - ள்.) நல்ல தவமுனிவர்போலத் திருவேடங் கொண்டு வந்த சிவபெருமான் நற்குணமிகுந்த மானக்கஞ்சாற நாயனாரைப் பார்த்து, இப்பொழுது மங்கலகரமான செயலை இங்கே செய்து கொண்டிருப்பது எதற்காகவென்று கேட்க, (அதற்கு அந் நாயனார்) அடியேன் அருமையாகப் பெற்ற ஒரு பெண் குழந்தை யினது கலியாணம் என்று சொல்ல, சிறந்த தவமுனிவராகிய கடவுளும் (அன்பரே!) உமக்குச் சுபமுண்டாகக்கடவதென்று திருவாய் மலர்ந்தருளினார். - எ- று.

ஞானச்செய் தவரடிமேற் பணிந்துமனை யகம்நண்ணி
மானக்கஞ் சாறனார் மணக்கோலம் புனைந்திருந்த
தேனக்க மலர்க்கூந்தல் திருமகளைக் கொண்டணைந்து
பானற்கந் தரமறைத்து வருமவரைப் பணிவித்தார். 28

(இ - ள்.) மானக்கஞ்சாற நாயனார் சிவஞானம் பொருந்திய தவத்தினையுடைய மாவிரதவேடங் கொண்டு வந்த சிவபெருமா னுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, வீட்டினுள் புகுந்து, திருமணக்கோலந்தரித்திருந்த தேன் மணங்கமழும் மலர்களை முடிந்த கூந்தலையுடைய தமது புத்திரியை அழைத்துக் கொண்டு வந்து நீலோற் பலமலர் போன்ற காள கண்டத்தை மறைத்து எழுந்தருளி வந்த சுவமியைப் பணியும் படி செய்வித்தார். - எ- று.

தஞ்சரணத் திடைப்பணிந்து தாழ்ந்தெழுந்த மடக்கொடிதன்
மஞ்சுதழைத் தெனவளர்ந்த மலர்க்கூந்தல் புறம்நோக்கி
அஞ்சலிமெய்த் தொண்டரைப்பார்த் "தணங்கிவள்தன் மயிர் நமக்குப்
பஞ்சவடிக்காம்" என்றார் பரவஅடித் தலங்கொடுப்பார். 29

(இ - ள்.) தம்மை வணங்குகின்ற ஜீவகோடிகளுக்குத் திருவடி யைத் தந்தருளுகின்றவராகிய சிவபெருமான் தம்முடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்காரஞ் செய்து எழுந்த இளமை பொருந்திய அப்பெண்ணினது மேகம் பரவினது போல அசைந்து கொண்டிருக்கின்ற மலர்களை முடித்த கூந்தலின் புறத்தைப் பார்த்து, தம்மை அஞ்சலி செய்து கொண்டு நிற்கின்ற மெய்யன் பராகிய மானக்கஞ் சாறநாயனாரை நோக்கி உமது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புத்திரியாகிய இப்பெண்ணினது கூந்தலானது நமக்குப் பஞ்ச வடிக்கயிற்றுக்குத் தகுதியாயிருக்கு மென்று சொன்னார். - எ று.

அருள்செய்த மொழிகேளா அடற்சுரிகை தனைஉருவிப்
"பொருள்செய்தாம் எனப்பெற்றேன்" எனக்கொண்டு பூங்கொடிதன்
இருள்செய்த கருங்கூந்தல் அடியில் அரிந் தெதிர்நின்ற
மருள்செய்த பிறப்பறுப்பார் மலர்க்கரத்தி னிடைநீட்ட. 30

(இ - ள்.) மாவிரதமுனிவராகிய கடவுள் அருளிச் செய்த வார்த்தையை மானக்கஞ்சாற நாயனார் கேட்டு, வலிமை பொருந்திய உடைவாளையுருவி, பெரும் பொருளை விருத்தி யாக்கிக் கொண்டவனைப் போல, இத்தவமுனிவர் இதனைக் கேட்கப் பெற்றேனென்று மனத்தில் எண்ணி, பூங்கொடி போன்ற அப்புத்திரியினது இருளையொத்த கருமையாகிய கூந்தலை அடியில் அரிந்து தமக்கு எதிரே நிற்கும் மயக்கத்தைத் தருகின்ற பிறப்பை ஒழிக்க வல்லராகிய சிவபெருமானது மலர் போன்ற திருக்கரத்தில் கொடுக்கும் படி நீட்ட. - எ- று.

வாங்குவார் போல்நின்ற மறைப் பொருளாம் அவர்மறைந்து
பாங்கின்மலை வல்லியுடன் பழையமழ விடையேறி
ஓங்கியவின் மிசைவந்தார்; ஒளிவிசும்பின் நிலன்நெருங்கத்
தூங்கியபொன் மலர்மாரி; தொழும்பர்தொழு தெதிர்விழுந்தார். 31

(இ - ள்.) அக்கூந்தலைக் கைநீட்டி வாங்குகின்றவரைப் போல மாவிரதவேடங் கொண்டு நின்ற வேதத்தின் மெய்ப் பொருளாகிய சிவபெருமான் மறைந்தருளி, இடப்பாகத்தி லிருக்கும் உமாதேவியாரோடு பழமையாகிய இளமை பொருந்திய ரிஷபவாகனத்தின் மேல் எழுந்தருளி, உயர்ந்த ஆகாயத்தில் காட்சி கொடுத்தருளினார்; ஒளி பொருந்திய ஆகாயத்திலும் பூமியிலும் நெருங்கும் படி கற்பகமலர்மாரி மிகுதியாகச் சொரிந்தன; அடியவராகிய மானக்கஞ்சாற நாயனார் தமது கைகளைச் சிரமேற்குவித்து எதிரே பூமியில் விழுந்து வணங்கினார். - எ- று.

விழுந்தெழுந்து மெய்மறந்த மெய்யன்பர் தமக்குமதிக்
கொழுந்தலைய விழுங்கங்கை குதித்தசடைக் கூத்தனார்
"எழும்பரிவு நம்பக்கல் உனக்கிருந்த பரிசிந்தச்
செழும்புவனங் களில்ஏறச் செய்தோம்" என் றருள்செய்தார். 32

(இ - ள்.) இவ்வாறு பூமியில் விழுந்து வணங்கி எழுந்து, தேகம் பரவசமடைந்து நின்ற மெய்யன் பராகிய மானக்கஞ்சாற நாயனாருக்கு, இளம்பிறையானது அசையும் படிவிழுகின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கங்கைதங்கிய சடைமுடியினையுடைய சிவபெருமான் மிகுந்த அன்போடு நம்மிடத்தில் உனக்கிருந்த அன்பின் தன்மையை இந்தச் செழுமைபொருந்திய உலகங்களில் பரவும் படி செய்தோமென்று திருவாய் மலர்ந்தருளினார். - எ- று.

மருங்குபெருங் கணநாதர் போற்றிசைப்ப வானவர்கள்
நெருங்கவிடை மேற்கொண்டு நின்வர்முன் நின்றவர்தாம்
ஒருங்கியநெஞ் சொடுகரங்கள் உச்சியின்மேற் குவித்தையர்
பெருங்கருணைத் திறம்போற்றும் பெரும்பேறு நேர்பெற்றார். 33

(இ - ள்.) தமக்கு அருகில் பெருமை பொருந்திய சிவகணத்தலைவர்கள் துதி செய்யும், தேவர்கூட்டங்கள் சூழவும், ரிஷபவாகனத்தின் மேல் எழுந்தருளி நின்ற சிவபெருமானுக்கு முன்னே நிற்கின்ற மானக்கஞ் சாறநாயனார் ஒருமைப்பட்ட மனதோடு கைகளைச் சிரசின்மேல் குவித்துக் கொண்டு சிவபெருமானது பெருங்கருணைத்திறத்தைச் சதாகாலமும் துதித்துக் கொண்டிருக்கின்ற பெருமை பொருந்திய சிவப்பேற்றை உடனே பெற்றுக் கொண்டார். - எ- று.

தொண்டனார் தமக்கருளிச் சூழ்ந்திமையோர் துதிசெய்ய
இண்டைவார் சடைமுடியார் எழுந்தருளிப் போயினார்
வண்டுவார் குழற்கொடியைக் கைப்பிடிக்க மணக்கோலங்
கண்டவர்கள் கண்களிப்பக் கலிக்காமனார் புகுந்தார். 34

(இ - ள்.) மானக்கஞ்சாற நாயனாருக்கு இவ்விதமாக அருள் செய்து, தேவர்கள் நாற் புறத்திலுஞ் சூழ்ந்து துதிக்க இண்டை மாலையைத் தரித்த நீண்ட சடைமுடியினையுடைய சிவபெருமான் மறைந்தருளினார்; வண்டுகள் மொய்க்கின்ற நீண்ட கூந்தலையுடைய அவரது புத்திரியைக் கலியாணஞ் செய்யும் பொருட்டுக் கொண்ட மணக்கோலத்தைப் பார்த்தவர்கள் கண்கள் களிப்படையும் படி ஏயர்கோன் கலிக் காமநாயனார் அங்குவந்து சேர்ந்தார். - எ- று.

வந்தணைந்த ஏயர்குல மன்னவனார் மற்றந்தச்
சிந்தைநினை வரியசெயல் செறிந்தவர்பால் கேட்டருளிப்
புந்தியினில் மிகஉவந்து புனிதனார் அருள்போற்றிச்
சிந்தைதளர்ந் தருள்செய்த திருவாக்கின் திறங்கேட்டு. 35

(இ - ள்.) மானக்கஞ்சாற நாயனாருடைய வீட்டிற்கு வந்து சேர்ந்து ஏயர்கோன் கலிக்காம நாயனார் மனதினால் நினைத்தற் கரிய அந்தத் தெய்வீகச் செயலை அங்கு நிறைந்திருக்கின்றவர் களிடத்தில் கேள்விப்பட்டு, தமது உள்ளத்தில் மிகவும் மகிழ்ந்து,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமானது திருவருளைத்துதித்து, மனத்தளர்ச்சியடைந்து (அத்தளர்ச்சி நீங்கும் பொருட்டுச்) சிவபெருமானருளிச் செய்த திருவாக்கின் உறுதியைக் கேட்டு. - எ- று.

இது முதலிரண்டு பாடலுங் குளகம்.

மனந்தளரும் இடர்நீங்கி வானவர்நா யகர்அருளால்
புனைந்தமலர்க் குழல்பெற்ற பூங்கொடியை மணம்புணர்ந்து
தனம்பொழிந்து பெருவதுவை உலகெலாந் தலைசிறப்ப
இனம்பெருகத் தம்முடைய எயின்மூதூர் சென்றணைந்தார். 36

(இ - ள்.) ஏயர்கோன் கலிக்காம நாயனார் தம்மனதிற்குத் தளர்ச்சியையுண்டாக்குகின்ற துன்பத்தினின்றும் நீங்கித் தேவர்கள் நாயகராகிய சிவபெருமானது திருவருளினால் முன்போல அலங்கரித்த மலர்களை முடித்த கூந்தலை மறுபடியும் பெற்றுக் கொண்ட மானக்கஞ்சாற நாயனாருடைய புத்திரியை விவாகஞ் செய்து கொண்டு, பெருமை பொருந்திய இக்கலியாணச் செயல் உலகமுழுமையும் சிறப்புற்றோங்க வேதியர் முதலானவர்களுக்கு மிகுந்த திரவியங்களைத் தானமாகச் சொரிந்து, சுற்றத்தார் சந்தோஷமடைய மதில் சூழ்ந்த பழமையாகிய திருப்பெருமங்கல மென்னும் தமது ஊருக்குச் சென்று சேர்ந்தார். - எ- று.

ஒருமகள் கூந்தல் தன்னை வதுவைநாள் ஒருவர்க் கீந்த
பெருமையார் தன்மை போற்றும் பெருமைஎன் அளவிற் றாமே?
மருவிய கமரிற் புக்க மாவடு விடேல்! என் னோசை
உரிமையால் கேட்க வல்லார் திறம்இனி உரைக்க லுற்றேன். 37

(இ - ள்.) தம்முடைய ஏக புத்திரியினது கூந்தலை அப் பெண்ணின் கலியாண காலத்தில் (மாவிரத வேடங் கொண்டு வந்த அடியவராகிய) சிவபெருமானுக்கு அரிந்து கொடுத்த மேன்மையையுடைய மானக்கஞ்சாற நாயனாரைக் குறித்துத் துதிக்கும் பெருமை என்னளவில் சொல்லி முடியுமோ? முடியாது. இனி, மேன்மை பொருந்திய கமரினுள் புகுந்த மாவடு வினது விடேல் விடேல் என்னும் ஓசையை அன்பினுரிமை யினால் கேட்கவல்ல அரிவாட்டாய நாயனாரது திருத் தொண்டைக் குறித்துச் சொல்லுகின்றேன். - எ- று.

மானக்கஞ்சாற நாயனார் புராணம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

19. அரிவாட்டாய நாயனார் புராணம்

வரும்பு னற்பொன்னி நாட்டொரு வாழ்பதி
கரும்பு வண்டொடு சூழ்ந்து முரன்றிட
விரும்பு மென்க ணுடையவாய் விட்டுநீள்
கரும்பு தேன்பொழி யுங்கண மங்கலம். 1

(இ - ள்.) இடையறாது ஒழுகுகின்ற நீர்வளம் பொருந்திய சோழ நாட்டில் குடிகள் சுகமாக வாழ்வதற்கிடமாகிய ஒப்பற்ற ஊரானது, ஆண்வண்டுகள் பெண்வண்டுகளோடு சூழ்ந்து ஒலிக்க நீண்ட கரும்புகள் விரும்பத்தகுந்த மிருதுவாகிய கணுக்களையுடைய வாயைப் பிளந்து மதுரமாகிய சாற்றைச் சொரிகின்ற கணமங்கலம் என்னும் நகரமாம். - எ- று.

செந்நெல் லார்வயல் கட்டசெந் தாமரை
முன்னர் நந்துமிழ் முத்தஞ் சொரிந்திடத்
துன்னு மள்ளர்கைம் மேற்கொண்டு தோன்றுவார்
மன்னு பங்கய மாநிதி போன்றுள்ளார். 2

(இ - ள்.) செந்நெற் பயிர்களையுடைய வயல்களினிடத்துக் களை கடிந்த செந்தாமரை மலர்களின்மேல் முற்பட்டுச் சங்குகள் ஈன்ற முத்துக்கள் சொரிய, நெருங்கிய பள்ளர்கள் அத்தாமரை மலர்களைக் கையில் எடுத்துக் கொண்டு நிலைபெற்ற பதுமநிதியையுடையவர்களைப் போல வருவார்கள். - எ- று.

வளத்தின் நீடும் பதியதன் கண்வரி
உளர்த்தும் ஐம்பால் உடையோர் முகத்தினும்
களத்தின் மீதும் கயல்பாய் வயலயல்
குளத்தும் நீளும் குழையுடை நீலங்கள். 3

(இ - ள்.) பல வளங்களாலும் உயர்ந்திருக்கின்ற அந்தக் கணமங்கலமென்னும் நகரத்தில் வண்டுகள் கிண்டுகின்ற கூந்தலையுடைய மாதர்களின் முகத்திலும், அவர்கள் கழுத்திலும், கெண்டைமீன்கள், பாய்கின்ற வயல்களின் புறத்திலுள்ள குளங்களிலும் குழையையடைந்த நீலமலர்கள் மிகுதியாக இருக்கும். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்கு லப்பதி தன்னில் அறநெறித்
தக்க மாமனை வாழ்க்கையில் தங்கினார்
தொக்க மாநிதித் தொன்மையில் ஓங்கிய
மிக்க செல்வந்து வேளாண் தலைமையார். 4

(இ - ள்.) அந்தச் சிரேஷ்டம் பொருந்திய கணமங்கல நகரத்தின் தருமநெறியினால் சிறந்த பெருமைகளையுடைய இல்வாழ்க்கையில் நிலைத்து வாழ்கின்றவர்; தலைமுறை தலைமுறையாகத் திரண்டிருக்கின்ற மிகுந்த திரவியத்தின் பழமையால் உயர்ந்திருக்கின்ற பெருஞ் செல்வத்தினையுடைய வேளாளர்குலத்திற்குத் தலைவராயுள்ளவர். - எ- று.

தாய னார்எனும் நாமம் தரித்துளார்;
சேய காலந் தொடர்ந்துந் தெளிவிலா
மாய னார்மண் கிளைத்தறி யாதஅத்
தூய நாண்மலர்ப் பாதந் தொடர்ந்துளார். 5

(இ - ள்.) தாயனாரென்னுந் திருநாமந்தரித்தவர்; அஞ்ஞானத்தையுடைய விஷ்ணுவானவர் அநேககாலமாகத் தேடியும் (வராகவுருவங்கொண்டு) மண்ணைத் தோண்டியும் அறியக் கூடாத அந்தச் சிறப்பினையுடைய சிவபெருமானது பரிசுத்தம் பொருந்திய புதிய தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தமக்குப் பற்றுக் கோடாகக் கொண்டொழுகுகின்றவர். - எ- று.

மின்னு செஞ்சடை வேதியர்க் காமென்று
செந்நெல் இன்னமு தோடுசெங் கீரையும்
மன்னு பைந்துணர் மாவடு வுங்கொணர்ந்
தன்ன என்றும் அமுதுசெய் விப்பரால். 6

(இ - ள்.) அவர் மின்னலைப் போல விளங்குகின்ற சிவந்த சடையினையுடைய சிவபெருமானுக்கு ஆகுமென்று செந்நெலரிசியாலாகிய இனிய அன்னத்தோடு சிவந்த கீரையும், நிலை பெற்ற பசுமை பொருந்திய பூங்கொத்துக்களையுடைய மாம்பிஞ்சுங் கொண்டு வந்து அவைகளை எப்பொழுது அப்பெருமானுக்குத் திருவமுது செய்விப்பார். - எ- று.

இந்த நன்னிலை இன்னல்வந் தெய்தினும்
சிந்தை நீங்காச் செயலின் உவந்திட
முந்தை வேத முதல்வர் அவர்... 7
வந்த செல்வம் அறியாமை மாற்றின...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) இப்படி திருவமுது செய்விக்கின்ற நல்ல திருத் தொண்டினை வறுமை நேரிட்ட காலத்திலும் மனதில் மறவாமல் செய்கின்ற இந்நாயனாரது செய்கை காரணமாக உலகத்தார் சந்தோஷிக்கும் பொருட்டு, பழமையாகிய வேதங்களை யருளிச் செய்த முதல்வராகிய சிவபெருமான் அவரிடத்திருந்த செல்வங்களனைத்தும் இவ்வாறு சென்ற தென்று ஒருவரும் அறியாத விதமாகப் போக்கிவிட்டார்.

மேவு செல்வம் களிறுண் விளங்கனி
ஆவ தாகி அழியவும் அன்பினால்
பாவை பங்கர்க்கு முன்பு பயின்றஅத்
தாவில் செய்கை தவிர்ந்திலர் தாயனார். 8

(இ - ள்.) தாயனார் தம்மிடத்து நிலைபெற்றிருந்த பலவகைச் செல்வங்களும் யானையுண்ட விளாம்பழத்தைப் போல நிலை கெட்டு அழிந்து போகவும், பத்தியினாலே பார்வதி பாகராகிய சிவபெருமானுக்குத் தாம் முன்பு செல்வத்தோடிருந்த காலத்தில் செய்து வந்த அந்தக் கெடுதலில்லாத செய்கையினின்றும் சிறிதும் தவறாமல் நடத்திக் கொண்டு வந்தார். - எ- று.

அல்லல் நல்குர வாயிடக் கூலிக்கு
நெல்அ றுத்துமெய்ந் நீடிய அன்பினால்
நல்ல செந்நெலிற் பெற்றன நாயனார்க்(கு)
ஒல்லை இன்னமு தாக்கொண் டெழுகுவார். 9

(இ - ள்.) துன்பத்தைத் தருகின்ற தரித்திரமானது அதிகரிக்கக் கூலிக்கு நெல்லறுத்தும் உண்மையாகிய பேரன்பினால் நல்ல சம்பாநெல்லினால் கிடைத்த அரிசிகளைச் சிவபெருமானுக்கு விரைவில் இனிமைபொருந்திய திருவமுதாகச் சமைத்துக் கொண்டு அத் திருத்தொண்டு செய்து வருவார். - எ- று.

சாலி தேடி அறுத்தவை தாம்பெறும்
கூலி எல்லாம் திருஅமு தாக்கொண்டு
நீல நெல்லெரி கூலிகொண் டுண்ணுநாள்
மால யற்கரி யாரது மாற்றுவார். 10

(இ - ள்.) சம்பாநெற்கள் எவர்கள் வயலில் விளைந்திருக்கின் றன வோவென்று தேடி, அதற்கு உரியவர்களின் உத்தரவு பெற்றுக் கொண்டு அறுத்து, அவைகளில் தரம் பெறுகின்ற கூலி நெற்களையெல்லாம் சுவாமிக்குத் திருவமுதுக்குரியனவாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமைத்துக் கொண்டு, கார் நெல்லரிந்த கூலியைத் தாம்பெற்றுக் கொண்டு அந்தநெல்லின் அரிசியினால் சீவனஞ் செய்து கொண்டு வரும் நாள்களில், திருமால் பிரமன் என்னும் இருவருக்கும் அரியராகிய சிவபெருமான் அந்தக் கார் நெல்லில்லாமல் நீக்கத் திருவுள்ளங் கொண்டருளினார். - எ- று.

நண்ணிய வயல்கள் எல்லாம் நாடொறும் முன்னங் காண
வண்ணவார் கதிர்ச்செஞ் சாலி ஆக்கிட மகிழ்ந்து சிந்தை
அண்ணலார் அறுத்தகூலி கொண்(டு) "இஃ்தடியேன் செய்த
புண்ணியம்" என்றுபோத அமுதுசெய் விப்பார் ஆனார். 11

(இ - ள்.) தாம் கூலிக்கு அறுக்கும் படியாகச் சென்ற அவ்வூரிலுள்ள வயல்களிலெல்லலாம் நாள்தோறும் தன் கண்முன்னே காணும்படி சிவபெருமான் அழகிய நீண்ட கதிர்களையுடைய சம்பாநெல்லாகச் செய்ய, அதனால் தாயநாயனார் மனமகிழ்ந்து தாம் அறுத்த சம்பாநெற்கூலியைப் பெற்றுக் கொண்டு, இப்படி எல்லாம் சம்பா நெல்லாகக்கிடைத்தது அடியேன் பூர்வத்தில் செய்த புண்ணியத்தின் பயனென்று சுவாமிக்கு முன் செய்து வந்ததைப் பார்க்கிலும் மிகுதியாகத் திருவமுது செய்விப்பவராயினார். - எ- று.

வைகலும் உணவி லாமை மனைப்படப் பையினிற் புக்கு
நைகரம் இல்லா அன்பின் நங்கைகை அடகு கொய்து
பெய்கலத் தமைத்து வைக்கப் பெருந்தகை அருந்தித் தங்கள்
செய்கடன் முட்டா வண்ணந் திருப்பணி செய்யும் நாளில். 12

(இ - ள்.) இப்படி நடக்கின்ற படியினால் நாள்தோறும் உணவில்லாமை பற்றி, தமது வீட்டின் பின்புறத்திலுள்ள தோட்டத்திற்குப் போய், குறைவில்லாத அன்பினையுடைய அவரது மனைவியார் தமது கையினால் இலைக்கறிகளைக் கொய்து சமைத்துப் போசனபாத்திரத்தில் படைக்க, பெருங் குணத்தையுடைய தாயநாயனார் அதனைப் புசித்துத் தங்கள் இருவரும் செய்துவருகின்ற கடமையானது தடைபடாதிருக்கும் விதமாகத் திருப்பணி செய்து வரும் நாள்களில். - எ- று.

மனைமருங் கடகு மாள வடநெடு வானமீனே
அனையவர் தண்ணீர் வார்க்க அமுதுசெய் தன்ப னாரும்
வினைசெயல் முடித்துச் செல்ல மேவுநாள் ஒருநாள் மிக்க
முனைவனார் தொண்டர்க் கங்கு நிகழ்ந்தது மொழியப் பெற்றேன். 13

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) தமது தோட்டத்திலுள்ள இலைக்கறிகளெல்லாம் அற்றுப் போக, சிறந்த அருந்ததியையொத்த கற்பினையுடைய அவரது மனைவியார் குளிர்ந்த நீரைப் பாத்திரத்தில் வார்க்க அதனைப் பானம் பண்ணி, மெய்யன் பராகிய தாயநாயனாரும் தாம் சுவாமிக்குச் செய்து வருகின்ற திருப்பணிகளை முடித்துக் கொண்டுவர, அவ்வாறு நடந்து கொண்டிருக்கும் நாள்களில் ஒரு நாள் ஒப்பற்ற சிவபெருமானுடைய அடியவராகிய அத்தாயநாயனாருக்கு அவ்விடத்தில் சம்பவித்த ஓர் விசேடத்தைச் சொல்லத் தொடங்குகின்றேன். - எ- று.

முன்புபோல் முதல்வ னாரை அமுதுசெய் விக்க மூளும்
அன்புபோல் தூய செந்நெல் அரிசிமா வடுமென் கீரை
துன்புபோம் மனத்துத் தொண்டர் கூடையிற் சுமந்து போகப்
பின்புபோம் மனைவி யார்ஆன் பெற்றஅஞ் சேந்திச் சென்றார். 14

(இ - ள்.) தாம் செல்வத்தை யனுபவித்திருந்த காலத்தைப் போலச் சிவபெருமானுக்குத் திருவமுது செய்விக்கும் பொருட்டு அதிகரித்தெழுந்த அன்புபோலப் பரிசுத்தம் பொருந்திய சம்பாநெல் அரிசியும், மாவடுவும், மிருதுவாகிய கீரையும் துன்பமில்லாத மனத்தினையுடைய தாயநானார் கூடையில் வைத்துச் சுமந்து கொண்டு போகப் பின்னே போகின்ற அவரது மனைவியார் பஞ்சகவ்வியத்தை எடுத்துக் கொண்டு போனார். - எ- று.

போதரார் நின்ற போது புலர்ந்துகால் தளர்ந்து தப்பி
மாதரார் வருந்தி வீழ்வார் மட்கல மூடு கையால்
காதலால் அணைத்தும் எல்லாம் கமரிடைச் சிந்தக் கண்டு
பூதநா யகர்தந் தொண்டர் "போவதங் கினியேன்" என்று. 15

(இ - ள்.) தாயநாயனார் இவ்வாறு கூடையையெடுத்துக் கொண்டு போகும் பொழுது உணவில்லாமையால் தேகம் இளைத்து, அதனால் கால் தள்ளாடித் தவறி வருந்திவிழுந்தார்; அவரது மனைவியார் பஞ்சகவ்விய பாத்திரத்தை மூடியிருக்கின்ற தமது கையினால் மிகுந்த அன்போடு அவரை அணைத்துக் கொண்டும் எல்லாம் கமரில் சிந்திவிழக் கண்டு, பூதகணங்களுக்கு நாயகராகிய சிவபெருமானது அடியவராகிய தாயநாயனார் இனி நாம் சுவாமி சந்நிதிக்குப் போவதனால் என்ன பிரயோசனமென்று. - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நல்லசெங் கீரை தூய மாவடு அரிசி சிந்த
“அல்லல் தீர்த் தாள வல்லார் அமுதுசெய் தருளும் அப்பே(று)
எல்லையில் தீமையேன்இங் கெய்திடப் பெற்றிலேன்” என்(று)
ஒல்லையில் அரிவாள் பூட்டி ஊட்டியை அரியலுற்றார். 16

(இ - ள்.) நல்ல செங்கிரையும், பரிசுத்தம் பொருந்திய மாவடுவும், செந்நெலரிசியும் கமரில் சிந்திவிடவும், பிறவித் துன்பத்தை நீக்கி ஆண்டருள வல்லவராகிய சிவபெருமான் திருவமுது செய்தருளுகின்ற பெரும் பேற்றை அளவில்லாத தீமையையுடைய அடியேன் இவ்விடத்து அடையும்படி பெற வில்லை யென்று விரைவில் தமது கையிலுள்ள அரிவாளைக் கழுத்திற்பூட்டி ஊட்டியை அறுக்கத்தொடங்கினார். - எ- று.

“ஆட்கொளும் ஐயர் தாமிங் கமுதுசெய் திலர்கொல்” என்னாப்
பூட்டிய அரிவாள் பற்றிப் புரையற விரவும் அன்பு
காட்டிய நெறியின் உள்ளத் தண்டறக் கழுத்தி னோடே
ஊட்டியும் அரியா நின்றார் உறுபிறப் பரிவார் ஒத்தார். 17

(இ - ள்.) எம்மை அடிமையாகக் கொண்டருளிய சிவபெருமான் இங்குத் திருவமுது செய்யவில்லையென்று கழுத்திற்பூட்டிய அரிவாளைப் பிடித்துக் கொண்டு, குற்றமறக் கலந்த பேரன்பைக்காட்டும் வழியால், உள்ளந் தண்டானது அறும்படி கழுத்தினோடு ஊட்டியையும் அறுத்துக் கொண் டார்; (அதனால் அவர்) பொருந்திய பிறவித் துன்பமாகிய வேரை அரிகின்றவரை யொத்துள்ளவரானார். -எ - று.

மாசறு சிந்தை யன்பர் கழுத்தரி யரிவாட் பற்றும்
ஆசில்வண் கையை மாற்ற வம்பலத் தாடு மையர்
வீசிய செய்ய கையு மாவடு விடேல் விடேலென்
றோசையுங் கமரி னின்று மொக்கவே யெழுந்த தன்றே. 18

(இ - ள்.) குற்றமற்ற மனத்தினையுடைய தாயநாயனார் தமது கழுத்தை யறுத்துக் கொள்ளுகின்ற அரிவாளைப் பிடித்த சிறந்த வளப்பம் பொருந்திய கையைத் தடுக்கும்படியாகக் கனகசபையில் திருநடனஞ் செய்தருளும் சிவபெருமானது வீசியெடுத்த சிவந்த கையும், மாவடுவைக் கடிப்பதனாலுண்டாகிய விடேல் விடேல் என்னும் ஓசையும் கமரினின்றும் ஏககாலத்தில் எழும்பியது. - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கைசென் றரிவாள் பற்றும் திண்கையைப் பிடித்த போது
வெருக்கொடங் கூறு நீங்க வெவ்வினை விட்டு நீங்கிப்
பெருக்கவே மகிழ்ச்சி நீடத் தம்பிரான் பேணித் தந்த
அருட்பெருங் கருணை நோக்கி அஞ்சலி கூப்பி நின்று. 19

(இ - ள்.) சிவபெருமானுடைய அழகிய கையானது வெளிப்பட்டு அரிவாளைப்பிடித்துக் கொண்டிருக்கும் அவரது வலிமை பொருந்திய கையைப் பிடித்தபொழுது, அவ்விடத்துத் தாயநாயனார் அச்சமுற்று அரிவாளினாலரிந்த துன்பமானது நீங்கிவிட, கொடிய தீவினைகள் தம்மைவிட்டு நீங்கி மிகுந்த சந்தோஷமுண்டாகும் படி சிவபெருமான் விரும்பி அனுக்கிரகஞ் செய்த திருவருளாகிய பெருங்கருணையைக்கண்டு கைகளை அஞ்சலியாகக் குவித்துக் கொண்டு நின்று. - எ- று

"அடியனேன் அறிவி லாமை கண்டும்என் அடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்திங் கமுதுசெய் பரனே போற்றி!
துடியிடை பாக மான தூயநற் சோதி போற்றி!
பொடியணி பவள மேனிப் புரிசடைப் புராண போற்றி!" 20

(இ - ள்.) அடியேனுடைய அறிவில்லாமையைப் பார்த்திருந்தும் என்னை அடிமையாகக் கொள்ள விரும்பிப் பூமியின் மேல் கமரில் எழுந்தருளி வந்து திருவமுது செய்தருளிய பரமனே! உமக்கு வந்தனம்; உடுக்கை போன்ற இடையினையுடைய உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய பரிசுத்தம் பொருந்திய அருட்பெருஞ் சோதியே! உமக்கு வந்தனம்; திருவெண்ணீற்றையணிந்த பவளம் போன்ற திருமேனியையும் முறுக்காகிய சடையையுமுடைய பழம் பொருளாயுள்ளவரே! உமக்கு வந்தனம். எ- று.

என்றவர் போற்றி செய்ய இடபவா கனராய்த் தோன்றி
"நன்றுநீ புரிந்த செய்கை; நன்னுத லுடனே கூட
என்றும்நம் உலகில் வாழ்வாய்" என்றவர் உடனே நண்ண
மன்றுளே ஆடும் ஐயர் மழவிடை உகைத்துச் சென்றார். 21

(இ - ள்.) என்று இவ்விதமாக அத்தாயநாயனார் துதிசெய்ய, ரிஷபவாகன ரூடராய்க் காட்சிகொடுத்தருளி (அன்பனே!) நீ செய்த திருத்தொண்டானது மிகவும் நன்றாயிருக்கின்றது; உனது மனைவியோடு வந்து எக்காலத்தும் நமது சிவலோகத்தில் வாழ்வாயாகவென் றருளிச் செய்து, அத்திருத் தொண்டரும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரது மனைவியாரும் தம்முடனே வர, பொன்னம்பலத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற சிவபெருமான் இளமை பொருந்திய ரிஷபவாகனத்தை நடத்திக் கொண்டு திருக்கயிலா யத்திற் கெழுந்தருளினார். - எ- று.

பரிவுறு சிந்தை அன்பர் பரம்பொரு ளாகியுள்ள
பெரியவர் அமுது செய்யப் பெற்றிலேன் என்று மாவின்
வரிவடு விடேலெ னாமுன் வன்கழுத் தரிவாள்பூட்டி
அரிதலால் "அரிவாட் டாயர்" ஆயினார் தூய நாமம். 22

(இ - ள்.) அன்பு பொருந்திய மனதினையுடைய அத் தாயநாயனார் பரம் பொருளாயிருக்கின்ற சிவபெருமான் திருவமுது செய்யும்படி அடியேன் புண்ணியஞ் செய்யவில்லை யென்று, மாவினது நீண்டவடுவானது விடேலென்று ஒலிப்பதற்கு முன்னே வலியகழுத்தில் அரிவாளைப்பூட்டி அரிந்தகாரணத்தினால் அரிவாட்டாய நாயனாரால் என்னும் பரிசுத்தம் பொருந்திய திருநாமத்தையுடையவரானார். - எ- று.

முன்னிலை கமரே யாக முதல்வனார் அமுது செய்யச்
செந்நெலின் அரிசி சிந்தச் செவியுற வடுவின் ஓசை
அந்நிலை கேட்ட தொண்டர் அடியிணை தொழுது வாழ்த்தி
மன்னும் ஆனாயர் செய்கை அறிந்தவா வழுந்த லுற்றேன். 23

(இ - ள்.) கமரே முன்னிலையாயிருக்க முதற் பெருங்கடவுளா கிய சிவபெருமான் திருவமுது செய்யும் பொருட்டுச் சம்பாநெல்லின் அரிசி அந்தக் கமரில் சிந்த, மாவடுவினது கடியுண்ட ஓசையை அப்பொழுதே தமது காதிற் பொருந்தக் கேட்ட அரிவாட்ட நாயனாருடைய இரண்டு திருவடிகளையும் வணங்கித் துதித்து, நிலை பெற்ற புகழினையுடைய ஆனாய நாயனாரது திருத்தொண்டின் செய்கையை எனக்குத் தெரிந்தவளவில் சொல்லத் தொடங்கினேன். - எ- று.

அரிவாட்டாய நாயனார் புராணம் முடிவுற்றது.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

20. ஆனாயநாயனார் புராணம்

மாடு விரைப்பொலி சோலையின் வான்மதி வந்தேறச்
சூடு பரப்பிய பண்ணை வரம்பு சுரும்பேற
ஈடு பெருக்கிய போர்களின் மேகம் இளைத்தேற
நீடு வளத்தது மேன்மழ நாடெனும் நீர்நாடு. 1

(இ - ள்.) பக்கங்களிலுள்ள சோலைகளில் வெண்மை பொருந்திய சந்திரன் வந்து தவழவும், நெல்லரிசிகளைப் பரப்பியிருக்கின்ற வயல்வரம்புகளில் வண்டுகள் உயர்ந்து மொய்க்கவும், ஒன்றுக் கொன்று சமானமாக உயர்ந்திருக்கின்ற நெற் போர்களில் மேகங்கள் இளைப்படைந்து ஏறவுமாகிய மிகுந்த வளப்பத்தையுடையது மேன் மழை நாடென்று சொல்லப்பட்ட நீர் வளம் பொருந்திய நாடு. - எ- று.

நீவி நிதம்ப உழத்தியர் நெய்க்குழல் மைச்சூழல்
மேவி உறங்குவ மென்சிறை வண்டு; விரைக்கஞ்சப்
பூவில் உறங்குவ நீள்கயல்; பூமலி தேமாவின்
காவின் நறுக்குளிர் நீழல் உறங்குவ கார்மேதி. 2

(இ - ள்.) ஆடையைக் கொய்சகமாக வைத்து உடுத்திய நிதம்பத்தினையுடைய பள்ளஸ்திரிகளின் மயிர்ச்சாந்தணிந்த கூந்தலாகிய இருண்டவிடத்தில் மெல்லிய சிறகினையுடைய வண்டுகள் சேர்ந்து நித்திரை செய்யும்; நீண்ட கெண்டை மீன்கள் வாசனை பொருந்திய தாமரை மலர்களில் தூங்கும்; புட்பங்கள் நிறைந்த தேமாமரத்தினையுடை சோலைகளின் நல்ல குளிர்ச்சி பொருந்திய நீழலில் கரு நிறம் பொருந்திய எருமைகள் நித்திரை கொள்ளும். - எ- று.

வன்னிலை மள்ளர் உகைப்ப எழுந்த மரக்கோவை
பன்முறை வந்தெழும் ஓசை பயின்ற முழக்கத்தால்
அன்னம் மருங்குறை தண்டுறை வாவி அதன் பாலைக்
கன்னல் அடும்புகை யால்முகில் செய்வ கருப்பாலை. 3

(இ - ள்.) வலிமை பொருந்திய மள்ளர்கள் மாடுகளைப் பூட்டி யோட்டுதலால் சுற்றுகின்ற கருப்பாலையில் இணைத் திருக்கும் மரங்கள் பலதரமும் சுற்றி வருதலால் உண்டாகின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதிர்ச்சியோடு கூடிய முழக்கத்தினாலும், அன்னப்பறவைகள் வாசஞ் செய்கின்ற குளிர்ந்த துறையினையுடைய தடாகங்களின் பக்கத்தில் கருப்பஞ் சாற்றைக் காய்ச்சுகின்ற புகையினால், அக் கரும்பாலைகள் முழக்கத்திலும் உருவத்திலும் மேகத்தை யொத்திருக்கும். - எ- று.

பொங்கிய மாநதி நீடலை உந்து புனற்சங்கம்
துங்க இலைக்கத லிப்புதல் மீது தொடக்கிப் போய்த்
தங்கிய பாசடை சூழ்கொடி யூடு தவழ்ந்தேறிப்
பைங்கமு கின்தலை முத்தம் உதிர்க்குவ பாளையென. 4

(இ - ள்.) வெள்ளமாகப் பொங்குகின்ற பெரிய காவிரி நதியினது நீண்ட அலைகளால் ஒதுக்கப்பட்ட நீரிலுற்ற சங்குகள் உயர்ந்த இலையினையுடைய வாழைப்புதல்களின் மேல் தொடர்ந்து சென்று, பசுமை பொருந்திய இலைகளை யுடைய கொடிகளின் வழியாகத் தவழ்ந்து ஏறி, பசிய கமுக மரத்தின் தலைமேல் அக்கமுகம்பாளை பூக்களையுதிர்ப்பது போல முத்துக்களைச் சொரிகின்றன. - எ- று.

அல்லி மலர்ப்பழ னத்தயல் நாகிள ஆன்ஈனும்
ஒல்லை முழுப்பை உகைப்பின் உழக்கு குழக்கன்று
கொல்லை மடக்குல மான்மறி யோடு குதித்தோடும்
மல்கு வளத்தது முல்லை யுடுத்த மருங்கோர்பால். 5

(இ - ள்.) அல்லிமலர்களையுடைய வயல்களின் பக்கத்தில் மிகவும் இளமை பொருந்திய பசுவானது பெற்றசீக்கிரத்தில் சிறுபுதல்களை காலுதையினால் கலக்குகின்ற இளங்கன்றானது கொல்லையிலிருக்கின்ற அறியாமையுள்ள சிறியமான் கன்றுக ளோடு குதித்து ஓடுகின்ற நிறைந்த வளப்பத்தையுடையதா யிருக்கும் முல்லை நிலத்தைச் சூழ்ந்திருக்கின்ற நிலத்தின் ஒரு புறத்தில். - எ- று.

கண்மலர் காவிகள் பாய இருப்பன கார்முல்லைத்
தண்ணகை வெண்முகை மேவு சுரும்பு; தடஞ்சாலிப்
பண்ணை எழுங்கயல் பாய இருப்பன காயாவின்
வண்ண நறுஞ்சினை மேவிய வன்சிறை வண்டானம். 6

(இ - ள்.) கார் காலத்தில் மலருகின்ற முல்லையினது குளிர்ந்த ஒளிபொருந்திய வெண்மையாகிய அரும்புகளிலிருக் கும் வண்டுகள், தேன் தங்கிய நீலோற் பல மலர்களில் பாயும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படியிருக்கின்றன; காயாமரத்தினது கரிய மணம் பொருந்திய கிளைகளில் சேர்ந்திருக்கின்ற அழகிய சிறகினையுடைய நாரைகள், விசாலமாகிய செந்நெற் பயிர்களையுடைய வயல்களி லிருந்து எழுகின்ற கெண்டை மீன்கள் பாயும்படியாக இருக்கின் றன. - எ- று.

பொங்கரில் வண்டு புறம்பலை சோலைகள் மேலோடும்
வெங்கதிர் தங்க விளங்கிய மேன்மழ நன்னாடாம்
அங்கது மண்ணின் அருங்கல மாக அதற்கேயோர்
மங்கல மானது மங்கல மாகிய வாழ்மூதூர். 7

(இ - ள்.) மரக் கொம்புகளிலிருக்கின்ற வண்டுகள் புறத்தில் அலைகின்ற சோலைகள் ஆகாயத்திற் செல்லுகின்ற சூரியன் தடைபடும்படியாக உயர்ந்துவிளங்குகின்ற நல்ல மேன்மழ நாடாகிய அந்நாடானது உலகத்திற்கு அருமையாகிய ஒரு ஆபரணம் போல விளங்க அஃதற்கு ஓர் மங்கலகரமாயுள்ளது திருமங்கலமென்னும் பெயரையுடைய செல்வமிகுந்த பழமை யாகிய ஊர். - எ- று.

ஒப்பில் பெருங்குடி நீடிய தன்மையில் ஓவாமே
தப்பில் வளங்கள் பெருக்கி அறம்புரி சால்போடும்
செப்ப உயர்ந்த சிறப்பின் மலிந்தது சீர்மேவும்
அப்பதி மன்னிய ஆயர் குலத்தவர் ஆனாயர். 8

(இ - ள்.) (அவ்வூர்) ஒப்பில்லாத பெருமை பொருந்திய பிரம க்ஷத்திரிய - வைசிய - சூத்திரரென்னும் நான்கு வருணத்துக் குடிகளும் அதிகரித்திருக்கும் தன்மையிற் குறையாமல் குற்றமற்ற பல வளங்களையுடைய பெருக்கித் தருமஞ் செய்கின்ற மேன்மையால் யாவரும் புகழ்ந்து சொல்லும் படி உயர்ந்த சிறப்போடு விளங்குகின்றது; சிறப்புப் பொருந்திய அத் திருமங்கலமென்னும் நகரத்தில் நிலைபெற்று வாழ்கின்ற இடையர் குலத்தில் திருவவதாரஞ் செய்தவர் ஆனாயநாயனார். - எ- று.

ஆயர் குலத்தை விளக்கிட வந்துத யஞ்செய்தார்;
தூய சுடர்த்திரு நீறு விரும்பு தொழும்புள்ளார்;
வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப்பாலிற்
பேயுட னாடு பிரானடி அல்லது பேணாதார். 9

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) (அவ்வானாய நாயனார்) இடையர்கள் குலத்தை உலகத்தில் பரசித்தஞ் செய்யும் பொருட்டு வந்து அவதராஞ் செய்தவர்; பரிசுத்தம் பொருந்திய விளங்குகின்ற விபூதியை விரும்பித் தரிக்கின்ற பத்தியையுடையவர்; வாக்கினாலும் காயத்தினாலும், துதிக்கின்ற மனத்தினாலும், (வாழ்த்துதலும், வணங்குதலும் நினைத்தலுமாகிய) செய்கைகளினால் பேயோடு ஆடுகின்ற சிவபெருமானது திருவடிகளையல்லாமல் வேறொன்றையும் விரும்பாதவர். - எ- று.

ஆனிரை கூட அகன்புற விற்கொடு சென்றேறிக்
கானுறை தீய விலங்குறு நோய்கள் கடிந்தெங்கும்
தூநறு மென்புல் அருந்தி விரும்பிய தூநீருண்(டு)
ஊனமில் ஆயம் உலப்பில பல்க அளித்துள்ளார். 10

(இ - ள்.) பசுமந்தைகள் முழுவதையும் விசாலமாகிய இடத்தையுடைய காட்டில் கொண்டு போய், அக்காட்டில் வசிக்கும் புலி முதலிய கொடிய மிருகங்களால் உண்டாகின்ற துன்பத்தை யொழித்து, எங்கும் பரிசுத்தமாகிய நல்ல மிருதுவான புல்லைமேய்ந்து, விரும்பத்தக்க நல்லநீரையுண்டு குற்றமற்ற பசுக்கூட்டங்கள் அளவற்றகைள் விருத்தியடையும்படி காப்பாற்றுகின்றனர். -எ - று.

கன்றொடு பால்மறை நாகு கறப்பன பாலாவும்
புன்றலை மென்சினை ஆனொடு நீடு புனிற்றாவும்
வென்றி விடைக்குல மோடும் இனந்தொறும் வெவ்வேறே
துன்றி நிறைந்துள சூழ லுடன்பல தோழங்கள். 11

(இ - ள்.) கன்றுகளும், பால்மறுத்த பசுக்களும், இளங்கன்றுகளும், பால் கறக்கின்ற சிறிய தலையினையுடைய மிருதுவான சினைப்பசுக்களும், சிறந்த கன்றினை யீன்ற பசுக்களும், பலம் பொருந்திய இடபங்களுமாகிய இவைகள் கூட்டங்கள் தோறும் வெவ்வேறாகச் சேர்ந்து நிறைந்திருக்கின்ற சோலைகளோடு பல தோழங்களும் எங்கும் இருக்கின்றன. - எ- று.

தோழர் - மாடு கட்டும் தொழுவம்.

ஆவின் நிறைக்குலம் அப்படி பல்க அளித்தென்றும்
கோவலர் ஏவல் புரிந்திட ஆயர் குலம்பேணும்
காவலர் தம்பெரு மானடி அன்புறு கானத்தின்
மேவு துளைக்கரு விக்குழல் வாசனை மேற்கொண்டார். 12

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) பசுக் கூட்டங்களின் தொகுதிகள் அவ்விதமாக நாள்தோறும் விருத்தியடையும்படி காப்பாற்றி, எப்பொழுதும் இடையர்கள் தாம் இடுகின்ற வேலையைச் செய்யும் படி இடையர் குலத்தைப் பாதுகாக்கின்ற தலைவராகிய ஆனாய நாயனார் தமது ஆண்டவராகிய சிவபெருமானது திருவடி களுக்கு அன்புமிகுந்து இசையோடு பொருந்திய துளைக் கருவியாகிய புள்ளாங்குழலை வாசித்தலை மேற் கொண்டொ ழுகினார். - எ- று.

முந்தைமறை நூன்மரபின் மொழிந்தமுறை எழுந்தவேய்
அந்தமுதல் நாலிரண்டில் அரிந்துநரம் புறுதானம்
வந்ததுளை நிரையாக்கி வாயுமுதல் வழங்குதுளை
அந்தமில்சீர் இடையீட்டின் அங்குலிஎண் களின்அமைத்து. 13

(இ - ள்.) பழமையாகிய காந்தருவவேதத்தில் சொல்லியிருக் கின்ற முறைமைப்படியே (இருபதுவிரல் நீளத்தில் ஓர் கணுவும், சுற்று நாலரைவிரலுமுள்ள தாய்) நன்றாக வளர்ந்திருக்கின்ற மூங்கிலை நுனியில் இரண்டு பங்கும், முதலில் நாலுபங்கும் நீக்கி (நடுப்பாகத்தை மேற்கூறிய இருபதுவிரலளவில்) அரிந்தெடுத் துக் கொண்டு, மெட்டுக்க ளிருக்க வேண்டிய இடங்களில் செய்யப்பட்ட துளைகளை வரிசையாக அமைத்து, காற்றுண்டா வதற்கு ஓர் துளையையும் குற்றமில்லாத சிறப்போடு ஒவ்வொரு துவாரத்தின் இடையில் ஒவ்வோர் அங்குலவளவு இருக்கும் படி செய்து. - எ- று.

எடுத்தகுழற் கருவியினில் எம்பிரான் எழுத்தஞ்சும்
தொடுத்தமுறை ஏழிசையின் சுருதிபெற வாசித்துத்
தடுத்தசரா சரங்களெலாந் தங்கவருந் தங்கருணை
அடுத்தஇசை அமுதளித்துச் செல்கின்றார் அங்கொருநாள். 14

(இ - ள்.) மேற் சொல்லிய படியே அமைத்துக் கையிற் பிடித்த புள்ளாங்குழலில் எமது சிவபெருமானுடைய ஸ்ரீ பஞ் சாக்ஷரத்தையும் வைத்த முறைமைப் படி சப்தசுரங்களுக்குரிய சுருதிகள் அமையும்படி வாதித்து, இசையால் தடுக்கப் பட்ட சரம் அசரமாகிய எல்லா உயிர்வர்க்கங்களும் உருகி நிற்றற் கேதுவாக வருகின்ற தமக்குண்டாயிருக்கும் கருணையினால் பாடுகின்ற இசையாகிய அமிர்தத்தைக் காதின் வழியாகப் புகட்டி ஒழுகுகின்றவர் அப்படி யொழுகுநாளில் ஒரு நாள். எ-று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாசமலர்ப் பிணைபொங்க மயிர்நுழுதி மருங்குயர்ந்த
தேசுடை சிகழிகையிற் செறிகண்ணித் தொடைசெருகிப்
பாசிலைமென் கொடியின்வடம் பயிலநறு விலிபுனைந்து
காசுடைநாண் அதற்கயலே கருஞ்சுருளின் புறங்கட்டி. 15

(இ - ள்.) வாசனை பொருந்திய மலர்களால் தொடுத்த பிணையல் மாலையானது விளங்க, மயிரைக் கோதி வலப் புறத்தில் உயரமுடிக்கப் பட்ட ஒளி பொருந்திய மயிர் முடியில் நெருக்கமாகக் கட்டியிருக்கின்ற கண்ணிமாலையைச் செருகி, அதன் மேல் மிருதுவாகிய பசிய இலைகளையுடைய கொடியின் வடமானது பொருந்த அதில் நறுவிலிக்காயைக் கட்டி, பொற்காசு கோத்திருக்கின்ற மயிர்க்கயிற்றை அப்பச்சிலையின் அருகில் கறுத்த மயிர்முடியின் புறத்தில் கட்டி. - எ- று.

நறுவிலி - ஒருவகை மரம்.

வெண்கோடல் இலைச்சுருளிற் பைந்தோட்டு விரைத்தோன்றித்
தண்கோல மலர்புனைந்த வடிகாதின் ஒளிதயங்கத்
திண்கோல நெற்றியின்மேல் திருநீற்றின் ஒளிகண்டோர்
கண்கோடல் நிறைந்தாராக் கவின்விளங்க மிசையணிந்து. 16

(இ - ள்.) வெண்காந்தளினிலையைச் சுருளாகச் செய்து வைத்து அதில் பசுமையாகிய புறவிதழையுடைய மணம் பொருந்திய செங்காந்தளினது குளிர்ந்த அழகிய மலரைத்தரித்த நீண்ட காதின் ஒளியானது விளங்க, சிறந்த அழகினையுடைய நெற்றியின் மீது திருநீற்றின் ஒளியானது கண்டவர்களுடைய கண்களைக் கவரும் படி நன்றாக நிறைந்து நீங்காத அழகு விளங்கத்தரித்து. - எ- று.

நிறைந்தநீ றணிமார்பின் நிரைமுல்லை முகைசுருக்கிச்
செறிந்தபுனை வடந்தாழத் திரள்தோளின் புடைஅலங்கல்
அறைந்தசுரும் பிசை அரும்ப அரையுடுத்த மரவுரியின் 17
புறந்தழையின் மலிதானைப் பூம்பட்டுப் பொலிந்தசைய.

(இ - ள்.) நிறைவாகிய திருநீற்றைத்தரித்த மார்பில் முல்லை யரும்பை வரிசையாகச் சுருக்கிக்கட்டப்பட்ட அலங்காரமாகிய மாலையானது தாழவும், திரண்ட தோள்களினிடத்தில் தொங்கும் மாலைகளில் ஒலிக்கின்றவண்டுகள் இசைபாடவும், இடையில் உடுத்தியமரவுரியின் புறத்தில் தழையால் செய்யப் பட்ட முன்தானையையுடைய பூம்பட்டானது பிரகாசித்து அசையவும். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேவடியில் தொடுதோலும் செங்கையினில் வெண்கோலும்
மேவும்இசை வேய்ங்குழலும் மிகவிளங்க வினைசெய்யும்
காவல்புரி வல்லாயர் கன்றுடைஆன் நிரைசூழப்
பூவலர்தார்க் கோவலனார் நிரைகாக்கப் புறம்போந்தார். 18

(இ - ள்.) சிவந்த திருவடிகளில் தரித்த செருப்பும், அழகிய திருக்கரத்தில் வெண்மை பொருந்திய கோலும், இசை பொருந்திய புள்ளாங்குழலும் மிகவும விளங்கவும், ஏவற்றொழிலைச் செய்கின்ற பசுமந்தைகளைக்காக்கும் வலிமை பொருந்திய இடையர்களும், கன்றுகளையுடைய பசுக்கூட்டங்களும் சூழ்ந்து வரவும், பூக்கள் அலர்ந்த மாலையையணிந்த ஆனாய நாயனார் அப்பசுமந்தைகளைக் காக்கும் படி புறத்தில் வந்தார். - எ- று.

நீலமா மஞ்ஞை ஏங்க நிரைக்கொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகையோர் முல்லை கோபம்வாய் முறுவல் காட்ட
ஆலுமின் னிடைசூழ் மாலைப் பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீ டரங்கி லாடக் காரெனும் பருவ நல்லாள். 19

(இ - ள்.) நீலநிறத்தையுடைய பெருமை பொருந்திய மயில்கள் ஒலிக்கவும், வரிசையாகிய கொடிகளிலுள்ள (வண்டுகள்) முல்லைப் பண்ணைப்பாடவும், அழகிய வெண்மை பொருந்திய சிறந்த முல்லையரும்புகளும் இந்திரகோபமும், வாயையும் பற்களையும் காட்டவும், துவளுகின்ற மின்னலாகிய இடையோடு மாலைப் பயோதரம் அசையவும், கார்காலமாகிய இளம் பருவத்தையுடைய பெண்ணானவள் நிலவுலகமாகிய பெரியசபையில் ஆடும்படி வந்தாள்.- எ- று.

எம்மருங்கு நிரைபரப்ப எடுத்தகோ லுடைப்பொதுவர்
தம்மருங்கு தொழுதணையத் தண்புறவில் வருந்தலைவர்
அம்மருங்கு தாழந்தசினை அலர்மருங்கு மதுவுண்டு
செம்மருந்தண் சுரும்புசுழல் செழுங்கொன்றை மருங்கணைந்தார். 20

(இ - ள்.) நான்கு பக்கங்களிலும் பசுக்கூட்டங்கள் பரவும் படி கையிற்பிடித்த கோலையுடைய இடையர்கள் தமக்குச் சமீபத்தில் தொழுதுகொண்டுவர, குளிர்ந்த முல்லைநிலமாகிய காட்டில் வருகின்ற ஆனாயநாயானார் அவ்விடத்தில் தாழ்ந்திருக்கும் மரக்கிளைகளில் புட்பித்தமலர்களிலுள்ள தேனையுண்டு களிப்படைந்திருக்கும் குளிர்ந்த வண்டுகள் சூழ்ந்திருக்கின்ற செழுமை பொருந்திய கொன்றைவிருட்சத்தின் சமீபத்தில் வந்து சேர்ந்தார். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்றணைந்த ஆனாயர் செய்தவிரைத் தாமமென
மன்றல்மலர்த் துணர்தூக்கி மருங்குதாழ் சடையார்போல்
நின்றநறுங்கொன்றையினை நேர்நோக்கி நின்றுருகி
ஒன்றியசிந் தையில்அன்பை உடையவர்பால் மடைதிறந்தார். 21

(இ - ள்.) கொன்றைவிருட்சத்தின் சமீபத்தில் சென்று சேர்ந்த ஆனாயநாயனார் கட்டப்பட்ட வாசனை பொருந்திய மலர் மாலையைப் போலப் பரிமளமிகுந்த பூங்கொத்துக்களைத் தாங்கி, புறத்தில் தாழ்ந்திருக்கின்ற சடையினையுடைய சிவபெருமானைப் போல நிற்கின்ற நல்ல கொன்றைமரத்தை நேராகப் பார்த்து மனமுருகி நின்று, (புலன்களின்வழியே செல்லாமல்) ஒருமைப்பட்ட தமது மனதில் உதித்தபேரன்பை, தம்மை அடிமையாகவுடைய சிவபெருமானிடத்தில் மடை திறந்தது போலப் பாயச் செய்தார். - எ- று.

அன்பூறி மிசைப்பொங்கும் அமுதஇசைக் குழலொலியால்
வன்பூதப்ப டையாளி எழுத்தைந்தும் வழுத்தித்தாம்
முன்பூதி வருமளவின் முறைமையே எவ்வுயிரும்
என்பூடு கரைந்துருக்கும் இன்னிசைவேய்ங் கருவிகளில். 22

(இ - ள்.) அன்பானது அதிகரித்து மேலே பொங்குகின்ற அமுதம் போன்ற இசையினையிடைய புள்ளாங்குழலின் ஓசையினால் வலிமை பொருந்திய பூதப்படையினையுடைய சிவபெருமானது திருவெழுத்தைந்தையும் தோத்திரஞ் செய்து, தாம் முன்பு ஊதிக் கொண்டு வருகின்ற முறைமைப்படி எல்லாவுயிர்களும் எலும்பும் கரைந்துருகச் செய்கின்ற இனிய இசை பொருந்திய பலவகைப் புள்ளாங்குழல்களில். - எ- று.

ஏழுவிர லிடையிட்ட இன்னிசைவங் கியம்எடுத்துத்
தாழுமலர் வரிவண்டு தாதுபிடிப் பனபோலச்
சூழுமுரன் றெழநின்று தூயபெருந் தனித்துளையில்
வாழியநந் தோன்றலார் மணிஅதரம் வைத்தூத. 23

(இ - ள்.) ஒவ்வொரு துளைக்குப் புறத்திலும் ஒவ்வொரு விரலளவாக ஏழுவிரலளவு இடையில் இடம் விட்டிருக்கின்ற (முத்திரை யென்னும் துவாரத்தோடு) எட்டுத்துவாரங்களை யுடைய இனிய இசைபொருந்திய வங்கியமென்னும் புள்ளாங் குழலையெடுத்து மலரில் விழுகின்ற வரிகளையுடையவண்டுகள் அந்த மலர்களிலுள்ள தாதுக்களைப் பிடித்துக் கொண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அசையாமல் ஊதுவது போல நாற்புறமும் இசையானது நிறைந்து பரவும்படி நின்று, (புள்ளாங்குழலின் முதலிலுள்ள) பரிசுத்தம் பொருந்திய பெரிய ஒப்பற்ற துளையில் நமது ஆனாயநாயனார் அழகிய அதரத்தை வைத்து ஊத. -எ - று.

முத்திரையே முதலனைத்தும் முறைத்தானஞ் சோதித்து
வைத்ததுளை ஆராய்ச்சி வக்கானை வழிபோக்கி
ஒத்தநிலை உணர்ந்ததற்பின் ஒன்றுமுதல் படிமுறையாம்
அத்தகைமை ஆரோசை அமரோசை களின்அமைத்தார். 24

(இ - ள்.) முத்திரைமுதலிய எல்லாத்துளைகளையும் முறைமையாக ஸ்தான சோதனை செய்து அமைக்கப்பட்ட துளைகளை ஆராய்ச்சி செய்து, இராக சோதனையறிய விரல்களை முறையே செலுத்தி ஸ்வரங்களெல்லாம் ஒத்திருக்கின்ற நிலைமையை யறிந்தபின்பு சட்சம் முதல் நிஷாதம் வரைக்கும் வரிசையாக, எச்சாகவும், தக்காகவும் அமைத்து அவ்வுயர்ந்த தகுதியாகப் பாடினார். - எ- று.

மாறுமுதற் பண்ணின்பின் வளர்முல்லைப் பண்ணாக்கி
ஏறியதா ரமும்உழையும் கிழமைகொள இடுந்தானம்
ஆறுலவுஞ் சடைமுடியார் அஞ்செழுத்தின் இசைபெருகக்
கூறியபட் டடைக்குரலாங் கொடிப்பாலை யினில்நிறுத்தி. 25

(இ - ள்.) சுரங்கள் மாறுபட்டுவருகின்ற குறிஞ்சிப் பண்ணைப் பாடின பின்பு, வளர்ந்த முல்லைப்பண்ணை யமைத்துப்பாடி, பாலையாழுக் கமைந்த தாரம் உழை என்னும் இரண்டு பண்களையும் பொருந்தும் படி இடப்பட்ட தாளங்களில் கங்கா நதி யுலாவுகின்ற சடை முடியினையுடைய சிவபெருமானது திருவைந்தெழுத்தின் இசையானது பெருகும்படி (அப்பாலையாழின் பேதங்களை முடித்துப் பின்பு) சொல்லப்பட்ட இளியைக்குரலாகவுடைய கொடிப்பாலைப் பண்ணில் நிறுத்தி. - எ- று.

ஆயஇசைப் புகல்நான்கின் அமைந்தபுகல் வகையெடுத்து
மேயதுளை பற்றுவன விடுப்பனவாம் விரல்நிரையிற்
சேயவொளி யிடையலையத் திருவாளன் எழுத்தஞ்சந்
தாயஇசைக் கிளைகொள்ளுந் துறையஞ்சின் முறைவிளைத்தார். 26

(இ - ள்.) இசைக்குரித்தாகிய பண் - பண்ணியல் - திறம் - திறத்திறம் என்னும் இசைவகை நான்கிலும் தாம் பாடுகின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொடிப்பாலைக் கமைந்த இசையையெடுத்துப் பொருந்திய புள்ளாங்குழலில் துளைகளைப் பொத்துதலும் விடுதலுமாகிய விரல்வரிசையில் தோன்றுகின்ற சிவந்த பிரகாசமானது அப் புள்ளாங்குழலின் நடுவில் ததும்பி விளங்க, சிவபெருமானது திருவெழுத் தைந்தையும் குற்றமற்ற இசையின் பிரிவாயிருக்கின்ற ஆயத்தம், எடுப்பு, உக்கிரம், சஞ்சாரம், இடாயம் என்னும் ஐந்து துறைகளிலும் முறைமையாகப் பாடினார். - எ- று.

மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன்முறையால்
தந்திரிகள் மெலிவித்தும் சமங்கொண்டும் வலிவித்தும்
அந்தரத்து விரற்றொழில்கள் அளவுபெற அசைத்தியக்கிச்
சுந்தரச்செங் கனிவாயும் துளைவாயும் தொடக்குண்ண. 27

(இ - ள்.) மந்தரம் - மத்திமம் - தாரம் என்னும் மூன்று சுருதிகளின் முறைமைப்படியே தெரிவிக்கின்ற துளைகளை விரல்களினால் மென்மையாகப் பொத்தியும், சமமாகப் பொத்தியும், வலிவாகப் பொத்தியும் இம்மூன்றுமல்லாத மற்ற துளைகளின் விரற்றொழில்களை அளவு குறையாமல் அசைத்து இயக்குவித்தும் அழகு பொருந்திய சிவந்த கனிபோன்ற அதரமும், புள்ளாங்குழலின் துவாரவாயும் ஒன்றுபட்டிணங்க. - எ- று.

எண்ணியநூற் பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பென்னும்
வண்ணஇசை வகையெல்லாம் மாதுரிய நாதத்தில்
நண்ணியபா ணியும்இயலும் தூக்குநடை முதற்கதியில்
பண்ணமைய எழும்ஓசை எம்மருங்கும் பரப்பினார். 28

(இ - ள்.) உயர்வாக மதிக்கப்பட்ட இசை நூலிற் கூறிய பெருவண்ணம் இடைவண்ணம் - வனப்பு என்னும் அழகிய இசையின் வேறுபாடுகளையெல்லாம் இனிமையாகிய நாதத்தால் அமைந்த தாளமும், இராகமும், ஏற்றமும், நடைமுதலாகிய கதியோடு பண்ணானது அமையும்படி எழுகின்ற ஓசையை எவ்விடத்திலும் பரவச் செய்தார். - எ- று.

வள்ளலார் வாசிக்கும் மணித்துளைவாய் வேய்ங்குழலின்
உள்ளுறைஅஞ் செழுத்தாக ஒழுகியெழு மதுரவொலி
வெள்ளநிறைந் தெவ்வுயிர்க்கும் மேலமரர் தருவிளைதேன்
தெள்ளமுதின் உடன்கலந்து செவிவார்ப்ப தெனத்தேக்க. 29

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) இவ்வாறு ஆனாயநாயனார் வாசிக்கின்ற அழகிய துளைகள் பொருந்திய புள்ளாங்குழலின் உள்ளமைந்த மொழியானது திருவைந்தெழுத்தாகப் பரவி எழுகின்ற இனிய ஓசையாகிய வெள்ளமானது நிறைவு பெற்று எல்லாவுயிர்களுக்கும் விண்ணுலகத்திலுள்ள கற்பகத்தருவின் தேனைத் தெளிவாகிய அமிர்தத்தோடு கலந்து காதாகியவாயில் வாப்பது போல நிறைக்க. - எ- று.

ஆனிரைகள் அறுகருந்தி அசைவிடா தணைந்தயரப்
பானுரைவாய்த் தாய்முலையில் பற்றும்இளங் கன்றினமும்
தானுணவு மறந்தொழியத் தடமருப்பின் விடைக்குலமும்
மான்முதலாம் கான்விலங்கும் மயிர்முகிழ்த்து வந்தணைய. **30**

(இ - ள்.) பசுக்கூட்டங்கள் அறுகம்புற்களை மேய்ந்து பின் அதனை அசைவு இடாமல் தம்மையடைந்து உருக, பாலின் நுரைபொருந்திய வாயினை யுடையன வாகித் தாய்ப்பசுவின் முலையைப்பற்றி யுண்ணுகின்ற இளங்கன்றின் கூட்டமும் தான் உண்ணுகின்ற உணவாகிய பாலை மறந்து நீங்க, பெரிய கொம்புகளையுடைய இடபக் கூட்டங்களும், மான்முதலாகிய காட்டிலுள்ள மிருகங்களும் மயிர் சிலிர்த்துக் கொண்டு வந்து சேர. - எ- று.

ஆடுமயில் இனங்களும்அங் கசைவயர்த்து மருங்கணுக
ஊடுசெவி இசைநிறைந்த உள்ளமொடு புள்ளினமும்
மாடுபடிந் துணர்வொழிய மருங்குதொழில் புரிந்தொழுகும்
கூடியவண் கோவலரும் குறைவினையின் துறைநின்றார். **31**

(இ - ள்.) காட்டில் சிறைவிரித்தாடுகின்ற மயிற் கூட்டங்களும் அவ்வாடுதலொழிந்து சமீபத்தில் வர, பலவகைப் பறவைக் கூட்டங்களும் பண்ணோசையானது காதின் வழியாகச் சென்று நிறைந்த மனதோடு அருகில் சேர்ந்து உணர்வொழிந்து நிற்க, தமக்குச் சமீபத்தில் பசுமேய்த்தலாகிய தொழிலைச் செய்து கொண்டிருக்கும் திரண்ட வலிபொருந்திய இடையர்களும் தாங்கள் செய்யும் வேலையில் நின்றும் ஒழிந்து புள்ளாங்குழலின் இசையைக் கேட்டு மன முருகி நின்றார்கள். - எ- று.

பணிபுவனங் களிலுள்ளார் பயில்பிலங்கள் வழியணைந்தார்;
மணிவரைவாழ் அரமகளிர் மருங்குமயங் கினர்மலிந்தார்;
தனிவில்ஒளி விஞ்சையர்கள் சாரணர்கின் னரர்அமரர்
அணிவிசும்பில் அயர்வெய்தி விமானங்கள் மிசைஅணைந்தார். **32**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.)நாகலோகத்திலுள்ளவர்கள் (இப்புள்ளாங் குழலி னிசையைக்கேட்டு) தாம் பழகியிருக்கின்ற பிலங்களின் வழியாகப் பூவுலகத்தில் வந்தார்கள்; அழகிய மலைகளில் வாழுகின்ற தெய்வப் பெண்கள் இசையால் மயங்கி அவருக்குச் சமீபத்தில் வந்து நெருங்கினார்கள்; குறைவில்லாத தேககாந்தி யையுடைய வித்தியாதரர்களும், சாரணர்களும், கின்னரர்களும், தேவர்களும் இசையைக் கேட்டு மெய்மறந்து அழகிய ஆகாயத்தினின்றும் விமானங்களின்மேல் ஏறிவந்தார்கள். - எ- று.

சுரமகளிர் கற்பகப்பூஞ் சோலைகளின் மருங்கிருந்து
கரமலரின் அமுதூட்டுங் கனிவாய்மென் கிள்ளையுடன்
விரவுநறுங் குழல்அலைய விமானங்கள் விரைந்தேறிப்
பரவியஏ ழிசைஅமுதம் செவிமடுத்துப் பருகினார். ***33***

(இ - ள்.) தெய்வப் பெண்கள் மலர்களையுடைய கற்பகச் சோலைகளின் அருகிலிருந்து கொண்டு மலர் போன்ற கைகளில் வைத்து அமிர்தத்தை யூட்டுகின்ற கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயினையுடைய மெல்லிய கிளிப்பிள்ளைகளோடு வாசனை வீசுகின்ற கூந்தல்கள் அலையும் படி தேவவிமானங் களில் விரைவாக ஏறி எவ்விடத்திலும் பரவியிருக்கின்ற ஏழிசை களா லுண்டாகிய சங்கீதமாகிய அமிர்தத்தைச் செவியின் வழியாக நிறையவுண்டார்கள். - எ- று.

நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றாய் நயத்தலினால்
மலிவாய்வெள் ளெயிற்றரவம் மயில்மீது மருண்டுவிழும்;
சலியாத நிலைஅரியும் தடங்கரியும் உடன்சாரும்;
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும். ***34***

(இ - ள்.) வருத்துகின்ற வலியவர்களும், அவ்வருத்தத்தை யனுபவிக்கின்ற எளியவர்களும் (இக்குழலோசையைக் கேட்டுப் பேதமில்லாமல்) மனம் ஒருமைப் பட்டு விருப்பங் கொள்ளு தலால் அகன்ற வாயையும், வெள்ளிய பற்களையுமுடைய பாம்புகள் மயில்களின் மேல் மயங்கிவிழும்; கெடாத வலியினை யுடைய சிங்கங்களும் பெரிய யானைகளும் விரோதமில்லாமல் ஒன்றாகச் சேர்ந்திருக்கும்; சிறிய வாயினையுடைய மான்களும், புலியின் வாயினிடமாகப் பயமின்றிப் போகும்.

மருவியகால் விசைத்தசையா மரங்கள்மலர்ச் சினைசலியா;
கருவரைவீழ் அருவிகளும் கான்யாறும் கலித்தோடா;
பெருமுகிலின் குலங்கள்புடை பெயர்வொழியப் புனல்சோரா;
இருவிசும்பி னிடைமுழங்கா; எழுகடலும் இடைதுளும்பா. ***35***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) (ஆனாயநாயனார் வாசிக்கின்ற புள்ளாங்குழலின் இசையினால்) சஞ்சரிக்கின்ற காற்றுகள் விசைகொண்டு அசையாமலிருந்தன; மரங்களிலுள்ள மலர்களையுடைய கிளைகள் அசைவற்றிருந்தன; கருமையாகிய மலைகளிலிருந்து விழுகின்ற அருவிகளும், காட்டாறுகளும் இரைச்சலிட்டு ஓடாமலிருந்தன; பெரியமேகக் கூட்டங்கள் ஓரிடம் விட்டு வேறோரிடத்திற்குப் போவது ஒழிந்து நீரைப் பொழியாமலிருந் தன; அம்மேகங்கள் பெரிய ஆகாயத்தில் முழங்காமலிருந்தன; சப்தசமுத்திரங்களும் தம்மிடத்தில் நீர் ததும்பாமலிருந்தன. எ- று

இவ்வாறு நிற்பனவும் சரிப்பனவும் இசைமயமாய்
மெய்வாழும் புலன்கரண மேவிவொன் றாயினவால்
மொய்வாச நறுங்கொன்றை முடிச்சடையார் அடித்தொண்டர்
செவ்வாயின் மிசைவைத்த திருக்குழல்வா சனையுருக்க. 36

(இ - ள்.) இவ்விதமாக மரம் மலைமுதலிய நிலையியற் பொருள்களும், மனிதர் விலங்கு முதலிய இயங்கியற் பொருள்களுமாகிய எல்லாம் புள்ளாங்குழலிசையின் மயமாகி உடம்பிலுள்ள ஐம்புலன்களும், அந்தக் கரணங்களும் வேறுபாடில்லாமல் கேட்பதில் ஒன்றுபட்டுப் போயின; மிகுந்த வாசனை பொருந்திய நல்ல கொன்றை மலர்மாலையைத் தரித்த சடைமுடியினையுடைய சிவபெருமானது திருவடிகளுக் கன்பராகிய ஆனாயநாயனார் தமது சிவந்த வாயில் வைத்து ஊதுகின்ற சிறந்த புள்ளாங் குழலின் நாதமானது உருகச் செய்தபடியால். - எ- று.

மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்தஇசைக் குழலோசை
வையந்தன் னையும்நிறைத்து வானம்தன் வயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத பொற்பொதுவில் நடம்புரியும்
ஐயன்றன் திருச்செவியின் அருகணையப் பெருகியதால். 37

(இ - ள்.) மெய்யன்பராகிய ஆனாயநாயனாரது மனதிற் பொருந்திய அன்பினாலுண்டாகிய புள்ளாங்குழலின் ஓசை யானது மண்ணுலகத்தையும் நிரப்பி, விண்ணுலகத்தையும் அப்படியே தன் வசப்படுத்தி, பொய்யாகிய அன்புக்கு எட்டாத பொன்னம் பலத்தில் திருநடனஞ் செய்தருளுகின்ற சிவபெருமா னது திருச்செவியினருகில் சென்று நிறைந்தது. - எ- று.

ஆனாயர் குழலோசை கேட்டருளிஅருட்கருணை
தானாய திருவுள்ளம் உடையதவ வல்லியுடன்
கானாதி காரணராம் கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார் மதிநாறுஞ் சடைதாழ. 38

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) ஆனாயநாயனார் வாசிக்கின்ற புள்ளாங்குழலின் ஓசையைத் திருச் செவியிற் கேட்டு உயிர்களிடத்தில் வைத்த பெருங்கருணையே வடிவமாயமைந்த திருவுள்ளத்தையுடைய உமாதேவியாரோடு இசைக்கு ஆதிகாரணராய் விளங்குகின்ற நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் ரிஷபவாகனத்தை நடத்திக் கொண்டு பிறைச்சந்திரன் விளங்குகின்ற சடையானது தாழும்படி ஆகாயமார்க்கத்தில் எழுந்தருளி வந்தார். - எ- று.

திசைமுழுதுங் கணநாதர் தேவர்கட்கு முன்நெருங்கி
மிசைமிடைந்து வரும்பொழுது வேற்றொலிகள் விரவாமே
அசையஎழுங் குழல்நாதத் தஞ்செழுத்தால் தமைப்பரவும்
இசைவிரும்பும் கூத்தனார் எழுந்தருளி எதிர்நின்றார். 39

(இ - ள்.) எல்லாத் திக்குகளிலும் சிவகணநாதர்கள் தேவர் கூட்டங்களுக்கு முன்னே நெருங்கி ஆகாயவழியாக நிறைந்து வரும் பொழுது, வேறே எந்த ஒலிகளும் உண்டாகாமல் அசைந்து எழுகின்ற புள்ளாங்குழலின் நாதத்தில் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தினால் தம்மைத் தோத்திரஞ் செய்கின்ற இசையை விரும்பிய சிவபெருமான் ஆனாயநயனாருக்குமுன்னே ரிஷபவாகனத்தின் மேல் எழுந்தருளிக் காட்சி கொடுத்து நின்றார். - எ- று.

முன்னின்ற மழவிடைமேல் முதல்வனார் எப்பொழுதும்
செந்நின்ற மனப்பெரியோர் திருக்குழல்வா சனைகேட்க
"இந்நின்ற நிலையேநம் பாலணைவாய்" எனஅவரும்
அந்நின்ற நிலைபெயர்ப்பார் ஐயர்திரு மருங்கணைந்தார். 40

(இ - ள்.) இளமை பொருந்திய ரிஷபவாகனத்தின்மேல் காட்சி கொடுத்தருளிய முதற் பெருங்கடவுளாகிய சிவ பெருமான் (ஆனாயநாயனாரைப் பார்த்து அன்பனே!) சிறந்த அன்பு பொருந்திய மனதினையுடைய நமது அடியார்கள் எப்பொழுதும் நீவாசிக்கின்ற புள்ளாங்குழலின் இசையைக் கேட்கும் பொருட்டு இப்பொழுது இவ்விடத்தில் நீ நின்றபடியே நம்மிடத்திற்கு வருவாயாகவென்று திருவாய்மலர்ந்தருள, அவ்வானாய நாயனாரும் அவ்வாறு தாம் நின்ற நிலையை நீங்கி (அப்புள்ளாங்குழல் வாசித்துக் கொண்டு) சிவபெருமானது பக்கத்தில் சேர்ந்தார். - எ- று.

விண்ணவர்கள் மலர்மாரி மிடைந்துலக மிசைவிளங்க
எண்ணிலரு முனிவர்குழாம் இருக்குமொழி எடுத்தேத்த
அண்ணலார் குழற்கருவி அருகிசைத்தங் குடன்செல்லப்
புண்ணியனார் எழுந்தருளிப் பொற்பொதுவி னிடைப்புக்கார். 41

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) தேவர்கள் பொழிகின்ற புஷ்பமாரியானது நிலவுலகத்தில் நிறைந்துவிளங்கவும், அருமையாகிய அளவற்ற முனிவர்கூட்டங்கள் வேதவாக்கியங்களை எடுத்துத் துதிக்கவும், ஆனாயநாயனார் புள்ளாங்குழலை அருகில்நின்று வாசித்துக் கொண்டு தம்மோடு செல்லவும், புண்ணியப் பொருளாயுள்ள சிவபெருமான் எழுந்தருளிப் பொன்னம் பலத்தில் புகுந்தருளி னார். - எ- று.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

தீதுகொள் வினைக்கு வாரோம் செஞ்சடைக் கூத்தர் தம்மைக்
காதுகொள் குழைகள் வீசும் கதிர்நில(வு)இருள்கால் சீப்ப
மாதுகொள் புலவி நீக்க மனையிடை இருகால் செல்லத்
தூதுகொள் பவராம் நம்மைத் தொழும்புகொண் டுரிமை கொள்வார். 42

(இ - ள்.) சிவந்த சடையினையுடைய சிவபெருமானைத் திருச்செவியில் தரித்த குண்டலங்கள் வீசுகின்ற கிரணங்களின் பிரகாசமானது இருளைப் பற்றற வொழிக்கப் பரவை நாச்சியார் தம்மனத்திற் கொண்டிருந்த பிணக்கைத் தீர்க்கும் பொருட்டு அவரது திருமாளிகைக்கு இரண்டு தரம் போகும்படி தூதாகக் கொண்டருளிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளே நம்மை அடிமை கொண்டு நமக்கு உரிமையாகக் கொள்ளவல்லவர்; அதனால், தீமை பொருந்திய வினையின் வழியில் பிறக்கவரமாட்டோம். - எ- று.

ஆனாயநாயனார் புராணம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

21. மூர்த்தி நாயனார் புராணம்

சீர்மன்னு செல்வக் குடிமல்கு சிறப்பின் ஓங்கும்
கார்மன்னு சென்னிக் கதிர்மாமணி மாடவைப்பு
நார்மன்னு சிந்தைப் பலநற்றுறை மாந்தர் போற்றும்
பார்மன்னு தொன்மைப் புகழ்பூண்டது பாண்டி நாடு. 1

(இ - ள்.) சீரினையுடைய ஐசுவரியமிகுந்த குடிகள் நிறைந் திருத்தலால் சிறந்தோங்கி மேகங்கள் தாங்கிய சிகரத்தையும், ஒளிவீசுகின்ற மாணிக்கங்களிழைத்த மாளிகைகளையுமுடைய நாடாவது, அன்பு பொருந்திய உள்ளத்தினையுடைய பல நன்னெறிகளில் ஒழுகுகின்ற மனிதர்களால் துதிக்கப்பட்ட உலகத்தில் நிறைந்த பழமையான புகழைப் பெற்றதாகிய பாண்டி நாடாம். - எ- று.

சாயுந்தளிர் வல்லி மருங்குல் நெடுந்த டங்கண்
வேயும்படு தோளியர் பண்படும் இன்சொற் செய்ய
வாயும்படும்; நீள்கரை மண்பொருந் தண்பொ ருந்தம்
பாயுங்கட லும்படும்; நீர்மை பணித்த முத்தம். 2

(இ - ள்.) தளிர்கள் சாய்ந்திருக்கின்ற கொடி போன்ற இடையையும், நீண்டவிசாலமாகிய கண்களையும், மூங்கில் போன்ற தோள்களையுமுடைய மாதர்களினது பண்ணமைந்த இனியசொற்களையுடைய சிவந்த வாயிலும், நீண்டகரையி லுள்ள மண்ணை அலையாகிய கைகளால் மோதுகின்ற குளிர்ந்த தாம்பிரபர்ணி நதியானது பாய்கின்ற கடலிலும் நிறமுள்ள முத்துக்கள் உண்டாயிருக்கும். - எ- று.

மொய்வைத்த வண்டின் செறிசூழல் முரன்ற சந்தின்
மைவைத்த சோலை மலயந்தர வந்த மந்த
மெய்வைத்த காலுந் தரும்; ஞாலம் அளந்த மேன்மைத்
தெய்வத்தமி ழும்தருஞ் செவ்வி மணஞ்செ மீரம். 3

(இ - ள்.) வண்டின் கூட்டங்கள் சூழ்ந்து ஒலிக்கின்ற மேகங்கள் தவழும் சந்தனச் சோலையையுடைய பொதியமலை யினின்றும் வந்த சிறு தென்றற் காற்றும், உலகமுழுமையும் பரந்த மேன்மையையுடைய தெய்வத்தன்மை பொருந்தியதமிழும் மணத்தோடு குளிர்ச்சியையுங் கொடுக்கும். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூழுமி தழ்ப்பங்கய மாகஅத் தோட்டின் மேலாள்
தாழ்வின்றி என்றும் தனிவாழ்வதத் தையல் ஒப்பார்
யாழின் மொழியிற் குழலின் னிசையுஞ்சு ரும்பும்
வாழும் நகரம் மதுராபுரி என்ப தாகும். 4

(இ - ள்.) இதழ்கள் பொருந்திய தாமரை மலராக எண்ணி அந்த மலரில் வாசஞ் செய்கின்ற இலக்குமியானவள் குறைவின்றி எக்காலத்திலும் தனிமையாக வாழ்ந்து கொண்டிருப்பது; அந்த இலக்குமியையொத்த மாதர்களினுடைய இனிமையாகிய மொழியின் வீணையினிசையும், கூந்தலில் இனிய இசையோடு வண்டுகளும் வாழ்கின்ற நகரமாகிய மதுராபுரியென்று சொல்லப்படுவதாகும். - எ- று.

சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய அங்கண் மூதூர்
நூல்பா யிடத்தும் உள; நோன்றலை மேதி பாயப்
பால்பாய் முலைதோய் மதுப்பங்கயம் பாய எங்குஞ்
சேல்பாய் தடத்தும் உள; செய்யுள்மிக் கேறு சங்கம். 5

(இ - ள்.) பெருமை பொருந்திய இயல் - இசை - நாடகம் என்னும் மூன்று தமிழுந் தங்கிய இடமகன்ற பழமையாகிய அம்மதுரா புரியில் சாஸ்திரப் பயிற்சி செய்யுமிடத்திலும் செய்யுள்களான் மிகவும் உயர்ந்தகல்விச் சங்கங்களுள்ளன; பெரியதலையினையுடைய எருமைக்கடாக்கள் பாய்ந்து அவைகளின் முலையிலிருந்து ஒழுகுகின்ற பாலானது தேனையுடைய தாமரை மலர்களில் பாய எவ்விடத்திலும் கெண்டைமீன்கள் பாய்கின்ற தடாகங்களிலும் வயல்களில் மிகுதியாகத்தவழுகின்ற சங்குகள் உள்ளன. - எ- று.

மந்தாநிலம் வந்தசை பந்தரின் மாட முன்றில்
பந்தாடிய மங்கையர் பங்கயச் செங்கை தாங்கும்
சந்தார்முலை மேலன; தாழ்குழை வாள்மு கப்பொற்
செந்தாமரை மேலன; நித்திலஞ் சேர்ந்த கோவை. 6

(இ - ள்.) சிறு தென்றற் காற்றானது வந்து உலாவுகின்ற பந்தலையுடைய வீடுகளின் முற்றங்களில் பந்தடித்து விளையாடு கின்ற மாதர்களினுடைய தாமரைமலர் போன்ற சிவந்த கைகளால் தாங்கப்பட்ட சந்தனமணிந்த ஸ்தனங்களின்மேல் முத்து மாலைகளிருக்கின்றன; தாழ்ந்தகுழையோடு கூடிய ஒளி பொருந்திய அழகிய தாமரை மலர் போன்ற முகங்களின்மேல் முத்துப் போலும் வேர்வையினது கோவைகளிருக்கின்றன. எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மும்மைப் புவனங்களின் மிக்கதன் றேஅம் மூதூர்
மெய்மைப் பொருளாந் தமிழ்நூலின் விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளுந் தருவார்திரு வால வாயில்
எம்மைப் பவந்தீர்ப் பவர்சங்கம் இருந்த தென்றால். 7

(இ - ள்.) உண்மைப் பொருளையுடைய தமிழ் நூல்களில் (அவற்றின் பொருளைக் குறித்து மாறுகொண்டெழுந்த புலவர் களின் சந்தேகம் நீங்கும்படி) விளங்குகின்ற மெய்ம்மையாகிய சிறந்த பொருளை அருளிச் செய்கின்றவராய்த் திருவாலவாயின் கண் வீற்றிருந்தருளி அடியேங்களைப் பிறவித் துன்பத்தினின் றும் நீக்கியருளுகின்றவராகிய சோமசுந்தரப் பெருமான் (தலைமைப் புலவராயிருந்து ஏற்படுத்திய) செந்தமிழ்ச்சங்கம் மிருக்கப்பெற்றதென்றால், பழமை பொருந்திய அம்மதுரை மாநகரமானது சுவர்க்க மத்திய பாதலமென்னும் மூன்று உலகங்களிலும் சிறந்ததேயாகும். - எ- று.

அப்பொற் பதிவாழ் வணிகக்குலத் தான்ற தொன்மைச்
செப்பத் தகுசீர்க் குடி செய்தவஞ் செய்ய வந்தார்
எப்பற் றினையும்அறுத்(து) ஏறுகைத் தேறு வார்தான்
மெய்ப்பற் றெனப்பற்றி விடாத விருப்பின் மிக்கார். 8

(இ - ள்.) அந்த அழகு பொருந்திய மதுரை மாநகரத்தில் வாழ்கின்ற வணிகர்களுடைய குலத்தில் பரம்பரையாகச் செல்வம் பொருந்தி பழமையான அறிஞர்களால் புகழத்தக்க சிறப்பினையுடைய ஒரு குடும்பமானது செய்த தவத்தினால் அவதரித்தவர்; எல்லா ஆசைகளையும் ஒழித்து, ரிஷபத்தை வாகனமாகச் செலுத்துகின்ற சிவபெருமானது திருவடிகளையே உண்மையாகிய ஆதரவாகப் பிடித்து அவ்வன்பினின்றும் நீங்காத விருப்பத்தில் சிறந்தவர். - எ- று.

நாளும்பெருங் காதல் நயப்புறும் வேட்கை யாலே
கேளும் துணையும் முதற்கேடில் பதங்க ளெல்லாம்
ஆளும்பெரு மான்அடித் தாமரை அல்ல தில்லார்
மூளும்பெரு கன்பெனும் மூர்த்தியார் மூர்த்தி யார்தாம். 9

(இ - ள்.) நாள் தோறும் மிகுந்த ஆசையானது அதிகரித் தெழுகின்ற அன்பினாலே பந்துக்களும் துணைவர்களும் முதலாகிய குறைவற்ற எல்லாப் பேறுகளும் தம்மை யடிமை கொண்டருளிய சிவபெருமானது திருவடித்தாமரையே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யல்லாமல் வேறொன்றையும் கொள்ளாதவர்; (அவர்யாரென் றால்) மிகுந்த பேரன்பே திருவுருவமாகக் கொண்ட மூர்த்தி நாயனார். - எ- று.

அந்திப் பிறைசெஞ் சடைமேலணி ஆல வாயில்
எந்தைக் கணிசந் தனக்காப்பிட என்றும் முட்டா
அந்தச் செயலின் நிலைநின் றடியா ருவப்பச்
சிந்தைக் கினிதாய திருப்பணி செய்யும் நாளில். ***10***

(இ - ள்.) மாலைக்காலத்தில் தோன்றுகின்ற மூன்றாம் பிறையைச் சிவந்த சடையின்மேல் தரித்த திருவாலவாயில் வீற்றிருந்தருளும் எமது பெருமானாகிய சுந்தரேசருக்குச் சந்தனக் காப்பணிகின்ற திருப்பணியானது இடையில் என்றைக்கும் முட்டுப்பாடு வராமல் செய்கின்ற அத்திருத்தொண்டின் நிலைமையில் நின்று, அடியார்கள் மனமகிழும்படி தமது திருவுள்ளத்திற்கு இனிமையாகிய அத்திருப்பணியைச் செய்து கொண்டு வரும் நாள்களில். - எ- று.

கானக் கடிசூழ் வடுகக்கரு நாடர் காவல்
மானப் படைமன்னன் வலிந்து நிலங்கொள் வானாய்
யானைக் குதிரைக் கருவிப்படை வீரர்திண்டேர்
சேனைக் கடலுங் கொடுதென் றிசைநோக்கி வந்தான். ***11***

(இ - ள்.) காட்டரண்சூழ்ந்த வடுகச்சாதியானாகிய கரு நாடதேசத்தாரையாளுகின்ற வலிமை பொருந்திய ஆயுதத்தை யுடைய ஒரு அரசன் வலியவே அன்னியதேசத்தரசர்களைப் பிடித்து அவர்கள் இராச்சியத்தைக் கைக் கொள்ளம் பொருட்டு யானைகளும், குதிரைகளும், ஆயுதங்களைப் பிடித்த படைவீரர்களும், வலிமை பொருந்திய தேர்களுமாகிய சமுத்திரம் போன்ற நால்வகைச் சேனைகளையும் அழைத்துக் கொண்டு தென் திசையை நோக்கிப் போர்செய்யும் படிவந்தான். எ- று.

வந்துற்ற பெரும்படை மண்புதை யப்ப ரப்பிச்
சத்நப்பொதி யில்தமிழ் நாடுடை மன்னன்வீரம்
சிந்தச்செரு வென்றுதன் னாணை செலுத்து மாற்றால்
கந்தப்பொழில் சூழ்மது ராபுரி காவல் கொண்டான். ***12***

(இ - ள்.) கருநாடதேசத்தரசன் தன்னோடு வந்த பெரிய சேனைகளை அந்நாடு முழுமையும் பரவச் செய்து, சந்தன

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மரங்களையுடைய பொதியமலையிற் பிறந்த தமிழ் வழங்குகின்ற நாட்டையாளுகின்ற பாண்டியனுடைய வீரமானது குன்றும்படி யுத்தஞ் செய்து வென்று, அந்நாட்டில் தனது ஆக்கினையைச் செலுத்தும்படி மணம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த மதுராபுரியின் ஆளுகையைக் கைக் கொண்டான். - எ- று.

வல்லாண்மையின் வண்டமிழ் நாடு வளம்ப படுத்தி
நில்லாநிலை ஒன்றிய இன்மையின் நீண்ட மேரு
வில்லான் அடி மைத்திற மேவிய நீற்றின் சார்பு
செல்லாதரு தந்தர் திறத்தினிற் சிந்தை தாழ்ந்தான். ***13***

(இ - ள்.) வலிய ஆண்மையினால் சிறந்த பாண்டி நாட்டை வளஞ் செய்து நில்லாத நிலைமையோடு கூடிய வறுமையினால் நீண்ட மேருமலையை வில்லாகவுடைய சிவபெருமானுக்கு அடிமைத் திறஞ் செய்தற்கு அமைந்த திருநீறு தரித்தலாகிய தொழிலின் சார்பில் அவ்வரசன் செல்லாமல், சமணர்களுடைய போதனைக்குட்பட்டு அவர்கள் மதத்தில் பிரவேசிக்க எண்ணங் கொண்டான். - எ- று.

தாழுஞ்சமண் கையர் தவத்தைமெய் யென்று சார்ந்து
வீழுங்கொடி யோன்அது வன்றியும் வெய்ய முன்னைச்
சூழும்வினை யால்அர வஞ்சுடர்த் திங்க ளோடும்
வாழுஞ்சடை யான்அடி யாரையும் வன்மை செய்வான். ***14***

(இ - ள்.) தாழ்வு பொருந்திய சமணர்களாகிய வஞ்சகர்களின் தவத்தை மெய்யென்று நம்பி, அந்த மதத்தில் விழுகின்ற கொடியவனாகிய அக்கரு நாடதேசத்தரசன் தான் அம்மதத்தில் சேர்ந்த தல்லாமலும், முற்பிறப்பிற் செய்த கொடிய தீவினையினால், பாம்பானது சந்திரனோடு வாழுகின்ற சடைமுடியையுடைய சிவபெருமானது அடியார்களையும் வருத்தப்படுத்துவான். - எ- று.

செக்கர்ச்சடை யார்விடை யார்திரு வால வாயுள்
முக்கட்பர னார்திருத் தொண்டரை மூர்த்தி யாரை
மைக்கற்புரை நெஞ்சுடை வஞ்சகன் வெஞ்ச மண்பேர்
எக்கர்க்குட னாகஇகழ்ந்தன செய்ய எண்ணி. ***15***

(இ - ள்.) செவ்வானம் போலும் சிவந்த சடையினையுடையவரும், ரிஷபவாகனத்தையுடையவரும், மூன்று கண்களையுடையவருமாகிய திருவாலவாயில் எழுந்தருளிய சிவபெருமானது அடியவராகிய மூர்த்தி நாயனாரைக் கருங்கல்லையொத்த நெஞ்சினையுடைய வஞ்சகனாகிய அவ்வரசன் கொடிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமணர்களுடைய கூட்டத்துக்கு உட்படுத்தும் பொருட்டு அவருக்கு இழிவாகிய கொடுஞ் செய்கைகளைச் செய்ய நினைத்து - எ- று.

அந்தம்இல வாமிறை செய்பவும் அன்ப னார்தாம்
முந்தைம்முறை மைப்பணி முட்டலர் செய்து வந்தார்
தந்தம் பெருமைக் களவாகிய சார்பில் நிற்கும்
எந்தம் பெருமக் களையாவர் தடுக்க வல்லார்? 16

(இ - ள்.) (அவ்வரசன்) அளவில்லாத துன்பங்களைச் செய்யவும் அடியவராகிய அம்மூர்த்தி நாயனார் தாம் முன்பு சிவபெருமானுக்குச் செய்து வந்த சந்தனக்காப்புத்திருப்பணியில் சிறிதும் குறைவுவராமல் செய்து கொண்டு வந்தார்; தங்கள் தங்கள் பெருமைக்கு ஏற்ற அளவாகிய திருத்தொண்டின் சார்பில் நிற்கின்ற எமது பெரியோர்களைத் தடுக்கல்லவர்கள் யாவர் (ஒருவருமில்லை.) - எ - று.

எள்ளுஞ்செயல் வன்மைகள் எல்லையில் லாதசெய்யத்
தள்ளுஞ்செய லில்லவர் சந்தனக் காப்புத் தேடிக்
கொள்ளுந்துறை யும்அடைத் தான்கொடுங் கோன்மை செய்வான்
தெள்ளும்புனல் வேணியர்க் கன்பருஞ் சிந்தை நொந்து. 17

(இ - ள்.) சமண சமயத்தில் புகுந்து கொடுங்கோல் செலுத்து கின்ற அவ்வரசனானவன் எல்லாராலும் இகழத்தக்க கொடிய செய்கைகளை மூர்த்தி நாயனாருக்கு அளவில்லாதனவாகச் செய்ய, அதனால் தாம் செய்யும் திருப்பணியில் குறைவுபடாதவ ராகிய அந்நாயனார் சந்தனக்காப்புக்குரிய சந்தனக் கட்டை களைத் தேடி வாங்குகின்ற இடங்களிலும் அவர்க்குக் கொடுக்க வொட்டாமல் தடுத்துவிட்டான்; (அவன் அப்படிச் செய்தபடி யால்) தெளிவாகிய கங்காநதியைத் தரித்த சடையினையுடைய சிவபெருமானுக்கு அன்பராகிய அம்மூர்த்தி நாயனாரும் மனவருத்தமடைந்து - எ - று.

புன்மைச் செயல்வல் அமண்குண்டரிற் போது போக்கும்,
வன்மைக் கொடும்பா தகன்மாய்த்திட வாய்மை வேத
தன்மைத் திருநீற் றுயர்நன்னெறி தாங்கு மேன்மைத்
தன்மைப் புவிமன் னரைச்சார்வதென்(று)?" என்று சார்வார். 18

(இ - ள்.) இழிவாகிய செயலில் வல்லவர்களாகிய கொடிய சமணர்கள் கூட்டத்திற் சேர்ந்து வீணாகப் பொழுது போக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கின்ற வலிய கொடும்பாதகனாகிய இவ்வரசன் இறந்து, உண்மை யாகிய வேதத்தில் சொல்லியபடி நன்மை பொருந்திய திருநீற்றைத் தரிக்கின்ற உயர்ந்த நன்மார்க்கத்தை அனுசரிக்கும் பெருங்குணத்தையுடைய அரசரை இந்நாடு எப்பொழுது அடையுமென்று தம் முள்ளத்தில் நினைத்து விசனப்படுவார். - எ- று.

காய்வுற்ற செற்றங்கொடு கண்டகன் காப்ப வுஞ்சென்(று)
ஆய்வுற்ற கொட்பிற் பகலெல்லை அடங்க நாடி
ஏய்வுற்ற நற்சந் தனமெங்கும் பெறாது சிந்தை
சாய்வுற்றிட வந்தனர் தம்பிரான் கோயில் தன்னில். 19

(இ - ள்.) (இவர் செய்துவரும் சந்தனக்காப்புத் திருப் பணிக்குத் தடையுண்டாகும்படி) கோபத்தோடு பகைமையையுங் கொண்டு வஞ்சகனாகிய அவ்வரசன் சந்தனக்கட்டையை யாவரும் கொடுக்காமல் தடை செய்யவும், மூர்த்தி நாயனார் பகற் கால முழுமையும் பல விடங்களிலும் சென்று அலைந்து தேடித் தகுதியாகிய சந்தனக்கட்டை எவ்விடத்திலும் கிடைக்கப் பெறாமல், மனமானது மிகவும் தளர்ச்சியையடைய சொக்கலிங்கப் பெருமான் வீற்றிருந்தருளும் திருக்கோயிலுக்கு வந்தார். எ - று.

நட்டம்புரி வாரணி நற்றிரு மெய்ப்பூச் சின்று
முட்டும்பரி சாயினுந் தேய்க்குங்கை முட்டா தென்று
வட்டந்தமிழ் பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார்
கட்டும்புறத் தோல்நரம் பென்பு கரைந்து தேய. 20

(இ - ள்.) திருநடனஞ் செய்தருளுகின்ற சிவபெருமான் திருமேனியில் தரிக்கத்தக்க நல்ல சந்தனம் இன்றைக்குக் கிடையாமற் போயினும் சந்தனக்கட்டையைத் தேய்க்கின்ற கைக்கு ஒரு முட்டுப்பாடும் இல்லையென்று, வட்டமாக விளங்குகின்ற சந்தனக்கல்லின்மேல் தமது முழங்கையை வைத்துத்தேகத்துக்கு உறுதியாகக் கட்டியிருக்கின்ற புறத்திலுள்ள தோலும், அதனுள்ளிருக்கும் நரம்பும், எலும்பும் கரைந்து குறையும் படி தேய்த்தார். - எ- று.

கல்லின்புறத் தேய்த்த முழங்கை கலுழ்ந்து சோரி
செல்லும்பரப் பெங்கணும் என்பு திறந்து மூளை
புல்லும்படி கண்டு பொறுத்திலர் தம்பி ரானார்;
அல்லின்கண் எழுந்த(து) உவந்தருள் செய்த வாக்கு. 21

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) (மூர்த்தி நாயனார்) சந்தனக்கல்லினிடத்தில் வைத்து தேய்த்த முழங்கையானது உதிரத்தைப் பெருக்கிச் செல்லு மிடங்களிலெல்லாம் எலும்பு வெளிப்பட்டு அதனுள் ளிருக்கும் மூளை வெளியில் ஒழுகுவதைப் பார்த்து, சொக்க லிங்கப் பெருமான் மனம் பொறுக்காதவராய் அவரைக் காப்பாற் றும் பொருட்டுத் திருவுள்ளங்களித்து அருளிச் செய்த ஒரு அசரீரி வாக்கானது அவ்விராத்திரியில் உண்டாயிற்று. - எ- று.

"அன்பின்துணி வால்இது செய்திடல்; ஐய! உன்பால்
வன்புன்கண் விளைத்தவன் கொண்டமண் எல்லாங் கொண்டு
முன்பின்னல் புகுந்தன முற்றவும் நீத்துக் காத்துப்
பின்புன் பணிசெய்துநம் பேருல கெய்து"கென்ன. ***22***

(இ - ள்.) அன்பனே! பத்தியினது உறுதிப்பாட்டினால் இப்படிப்பட்ட செய்கையைச் செய்யாதிருக்கக்கடவாய்; உனக்கு மிகுந்த துன்பத்தைச் செய்த அக் கொடுங் கோலரசன் பெற்றிருக் கின்ற இராச்சியமுழுமையும் நீயே கைக்கொண்டு, முன்பு அவனால் உண்டாகிய கொடுமை களனைத்தையும் ஒழித்து, செங்கோல் செலுத்தி, நீ செய்து வருகின்ற சந்தனக்காப்புத் திருப்பணியைச் செய்து, பின்பு நமது சிவலோகத்தை யடைவா யாகவென்று - எ- று.

இவ்வண்ணம் எழுந்தது கேட்டெழுந் தஞ்சி முன்பு
செய்வண்ணம் ஒழிந்திடத் தேய்ந்தபுண் ஊறு தீர்ந்து
கைவண்ணம் நிரம்பின வாசமெல் லாங்க லந்து
மொய்வண்ண விளங்கொளி எய்தினர் மூர்த்தி யார்தாம். ***23***

(இ - ள்.) இவ்விதமாக எழுந்த திருவாக்கினைக் கேட்டு அச்சமுற்று எழுந்து, தாம் முன்பு செய்யும் முழங்கையைத் தேய்க்கும் தொழிலினின்றும் நீங்க, உடனே அம் முழங்கை யானது தேய்ந்ததனாலுண்டாகிய காயம் ஒழிந்து அக்கையின் அழகனைத்தும் ஒரு குறைவுமின்றி வளர்ந்தன; இரத்த நாற்றம் போய் நல்ல மணங்களெல்லாங் கலந்து மிகுந்த அழகைத் தருகின்ற காந்தியைத்தேகத்தில் அடைந்தார் மூர்த்தி நாயனார். எ- று.

அந்நாள்இர வின்கண் அமண்புகல் சார்ந்து வாழும்
மன்னாகிய போர்வடு கக்கரு நாடர் மன்னன்
தன்னாளும் முடிந்தது சங்கரன் சார்பி லோர்க்கு
மின்னாமென் நீடிய மெய்ந்நிலை யாமை வெல்ல. ***24***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அன்று இராத்திரியில் சமணர்களுடைய மதத்தில் பிவேசித்துக் கொடுங்கோல் செலுத்தி வாழ்கின்ற அரசனாகிய வடுகக் கருநாடராசனுடைய வாழ்நாளும் முடிந்தது; சிவபெருமானுடைய திருவருளில்லாதவர்களுக்கு நீடித்த பூரணாயுளையுடைய தேகமும் பாவமிகுதியால் மின்னலைப் போல நிலையாமல் அழிந்துவிடுமென்பதை யாவர்க்கும் புலப்படுத்துங் காரணமாக. - எ- று.

இவ்வா றுலகத்தின் இறப்ப உயர்ந்த நல்லோர்
மெய்வா ழுலகத்து விரைந்தணை வார்க ளேபோல்
அவ்வா றரனார் அடியாரை அலைத்த தீயோன்
வெவ்வாய் நிரயத் திடைவீழ விரைந்து வீந்தான். 25

(இ - ள்.) இந்நிலவுலகத்தில் மேன்மை பொருந்திய நல்லோர்கள் தேகவியோகமடைந்தால் மெய்ப் பொருளாகிய சிவபெருமான் வாழ்ந்தருளுகின்ற சிவலோகத்தில் எவ்வாறு விரைந்து சேர்வார்களோ, அதுபோல, சிவனடியவராகிய மூர்த்தி நாயனாரை மேற் சொல்லிய விதமாக வருத்தப்படுத்திய கொடியவனாகிய அவ்வரசன் கொடியவாயினையுடைய நரகத்தில் வீழ்ந்து வருந்தும் படி விரைந்து இறந்தாள். - எ- று.

முழுதும்பழு தேபுரி மூர்க்கன் உலந்த போதின்
எழுதுங்கொடி போல்பவ ருட்பட ஏங்கு சுற்றம்
முழுதும்புலவர் வுற்றது; மற்றவன் அன்ன மாலைப்
பொழுதும்புலர் வுற்றது; செங்கதிர் மீது போத. 26

(இ - ள்.) சிவனடியார்களுக்கு முழுமையும் துன்பத்தையே செய்து கொண்டிருந்த மூர்க்கனாகிய அவ்வரசன் இறந்த பொழுது, சித்திரமெழுதுங் கொடிபோன்றவராகிய அவன் மனைவி மார்களோடு எவ்விடத்திலுமுள்ள உறவினரெல்லாம் விசனப்பட்டார்கள்; சிவந்த கிரணங்களையுடைய சூரியனுதய மாக அவ்வரசனுடைய மனதையொத்த இராக்காலமும் விடிந்தது. - எ- று.

அவ்வேலையில் அங்கண் அமைச்சர்கள் கூடித் தங்கள்
கைவேறுகொள் ஈம அருங்கடன் காலை முற்றி
வைவேலன் றன்குல மைந்தரும் இன்மை யாலே
செய்வேறுவி னைத்திறஞ் சிந்தனை செய்து தேர்வார். 27

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அப்பொழுது அந்தப் பட்டணத்திலுள்ள மந்திரிகள் ஒன்றாகக் கூடித் தங்கள் ஒழுக்கத்திற்கு வேறுவகையாகச் செய்கின்ற தகனமுதலாகிய கடன்களைக் காலைப் பொழுதே செய்து முடித்து, கூர்மை பொருந்திய வேலாயுதத்தைப் பிடித்த அவ்வரசனது குலத்துக்குரிய புதல்வர்களும் இல்லாதபடியினால் தாம் செய்யத்தகுந்த வேறாகிய ஒரு செயலை மனதில் சிந்தித்துத் தெளிவாராயினார். - எ- று.

"தாழுஞ்செய லின்றொரு மன்னவன் தாங்க வேண்டும்;
கூழும்குடி யும்முத லாயின கொள்கைத் தேனும்
சூழும்படை மன்னவன் தோளிணைக் காவ லின்றி
வாழுந்தகைத் தன்றிந்த வையகம்" என்று சொன்னார். 28

(இ - ள்.) பயிர், குடி முதலிய பலவகைச் சிறப்புக்களையுடையதாயிருந்தாலும் தன்னைச் சூழ்ந்துள்ள சேனைகளையுடைய அரசனது இரண்டு புயங்களாலும் காக்குங்காவலில்லாமல் இவ்வுலகமானது வாழ்வடையும் தகுதிகயையுடையதல்ல; (அதனால்) இராசநீதியிற் குறைவுபடாமல் ஒரு அரசன் உலகத்தை யாளுகை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். - எ- று.

"பன்முறை உயிர்கள் எல்லாம் பாலித்து ஞாலங் காப்பான்
தன்னெடுங் குடைக்கீழ்த் தத்தம் நெறிகளில் சரித்து வாழும்
மன்னரை இன்றி வைகும் மண்ணுல கெண்ணுங் காலை
இன்னுயிர் இன்றி வாழும் யாக்கையை ஒக்கும்" என்பார். 29

(இ - ள்.) பலவகைப்பட்ட உயிர்களையெல்லாம் பரிபாலித்து உலகத்தையாளும்படி தனது நெடிய வெண்கொற்றக் குடையின் கீழ் நான்கு வருணத்தாரும் தங்கள் தங்களுக்குரிய தருமநெறிகளில் தவறாமல் நடக்கும் படிச் செய்து வாழ்கின்ற அரசர்களில்லாமல் தங்கிய இப்பூவுலகமானது ஆலோசிக்குமிடத்தில் இனிய உயிரில்லாமல் வாழ்கின்ற உடம்பையொக்குமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். எ-று

இவ்வகை பலவும் எண்ணி "இங்கினி அரசர் இல்லை;
செய்வகை இதுவே" என்று தெளிபவர் "சிறப்பின் மிக்க
மைவரை அனைய வேழம் கண்கட்டி விட்டால் மற்றக்,
கைவரை கைக்கொண் டார்மண் காவல்கைக் கொள்வார்" என்று. 30

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) இப்படிப்பலவற்றையும் தாங்கள் யோசித்து, இவ்விடத்தில் இனிபட்டத்துக்குரிய அரசர்கள் ஒருவருமில்லை ஆதலால் செய்ய வேண்டியது இதுவேயென்று தெளிந்தவர் களாகிய அம்மந்திரி மார்கள் அலங்கரிக்கப்பட்ட கரியமலையை யொத்த யானையைக் கண்ணைக்கட்டி வீதியில் விட்டால் அந்த யானை எவரையெடுத்துக் கொள்ளுகிறதோ, அவரே இந்த இராச்சியத்தைத அரசாட்சி செய்வதற்கு உரியவரென்று நினைத்து. - எ- று.

செம்மாண்வினை அர்ச்சனை நூன்முறை செய்து "தோளால்
இம்மாநிலம் ஏந்தஓர் ஏந்தலை ஏந்து"கென்று
பெய்ம்மாமுகில் போல்மதம் பாய்பெரு கோடை நெற்றிக்
மைக்மாவை நறுந்துகில் கொண்டுகண் கட்டி விட்டார். *31*

(இ - ள்.) செவ்விய மாட்சிமையையுடைய அர்ச்சனை முதலாகிய செய்கைகளை சாஸ்திரவிதிப்படியே யானைக்குச் செய்து, தோளினால் இந்தப் பெரிய நிலவுலகத்தைத் தாங்கும்படி ஓர் அரசனை நீ எடுத்து உன் முதுகில் தாங்கென்று, நீரைப் பெய்யாநின்ற பெரியமேகத்தைப் போல மதம் பாய்ந்து பெருகு கின்ற பட்டத்தையணிந்த நெற்றியையுடைய யானையை நல்ல வஸ்திரங் கொண்டு கண்ணைக் கட்டிவிட்டார்கள். - எ- று.

கண்கட்டி விடுங்களி யானைஅக் காவல் மூதூர்
மண்கொட்புற வீதி மருங்கு திரிந்து போகித்
திண்பொற்றட மாமதில் சூழ்திரு வால வாயின்
விண்பிற்பட ஓங்கிய கோபுரம் முன்பு மேவி. *32*

(இ - ள்.) வஸ்திரத்தினால் கண்ணைக் கட்டி விடப்பட்ட மதச் செருக்கினையுடைய பட்டவர்த்தனயானையானது காவலையுடைய பழமையாகிய அந்த மதுரை மாநகரத்தில் தூசுகள் மேலேகிளம்பிச்சுழல, வீதிகளில் திரிந்து கொண்டு போய், வலியபொன்மயமாகிய மிகவும் உயர்ந்த மதில்கள் சூழ்ந்த திருவாலவாயென்னும் ஆலயத்தின் விண்ணுலகமும் பின்னிடும் படியாக உயர்ந்த முதற் கோபுரத்திற்கு முன்னே போய். - எ- று.

நீங்கும்இர வின்கண் நிகழ்ந்தது கண்ட தொண்டர்
"ஈங்கெம்பெரு மான்அரு ளாம்எனில் இந்த வையம்
தாங்கும்செயல் பூண்பன்"என் றுள்ளத் தளர்வு நீங்கிப்
பூங்கொன்றை மலைந்தவர் கோயிற் புறத்து நிற்ப. *33*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) நீங்கிய முதல் நாளிரவில் தமக்காக அசரீரி வாக்குண்டானதை யறிந்த அன்பராகிய மூர்த்திநாயனார் இவ்விடத்தில் எமது பெருமானாகிய சொக்கலிங்க மூர்த்தி யினது திருவருளானது இப்படியிருந்ததென்றால், இந்த வுலகத்தையாளுதற்குரிய அரசுரிமையை நான் பெற்றுக் கொள்வேனென்று, தம்மனதிலுள்ள துயரம் ஒழிந்து அழகிய கொன்றைமலர்மாலையைத் தரித்த சொக்கலிங்கப் பெருமானது திருக்கோயிலின் புறத்தில்நிற்க. - எ- று.

வேழத் தரசங்கண் விரைந்து நடந்து சென்று
வாழ்வுற் றுலகஞ்செய் தவத்தினின் வள்ள லாரைச்
சூழ்பொற் சுடர்மாமணி மாநிலத் தோய முன்பு
தாழ்வுற் றெடுத்துப் பிடர்மீது தரித்த தன்றே. **34**

(இ - ள்.) பட்டத்துயானையானது அவ்விடத்தில் சீக்கிரமாக நடந்து போய், வாழ்வையடையும்படி உலகத்தார் செய்த தபோபலத்தினால் மூர்த்தி நாயனாரைத்தன் கழுத்திற் சூழ்ந்திருக்கின்ற ஒளி பொருந்திய பொன்மயமாகிய மணிகள் பெரிய பூமியில் படும்படி அவர் முன்பாகத் தாழ்ந்து எடுத்துத் தன் முதுகின்மேல் வைத்துக் கொண்டது. - எ- று.

மாதங்கம் எருத்தினில் வைத்தவர் தம்மைக் காணா
ஏதங்கெட எண்ணிய திண்மை அமைச்சர் எல்லாம்
பாதங்களின் மீது பணிந்தெழுந் தார்கள் அப்போ(து)
ஓதங்கிளர் வேலையை ஒத்தொலி மிக்க தவ்வூர். **35**

(இ - ள்.) பட்டத்துயானையானது தன் முதுகின்மேல் எடுத்துவைக்கப் பெற்றவராகிய மூர்த்தி நாயனாரைக்கண்டு, உலகத்தில் தீங்கு நீங்கும்படி நினைத்த சாமர்த்தியத்தையுடைய மந்திரிகளெல்லாம் அவருடைய திருவடிகளில் வணங்கியெழுந் தார்கள்; அப்பொழுது பிரவாகித் தெழுகின்ற சமுத்திரத்தை யொத்து சந்தோஷத்தினாலுண்டாகிய ஆரவாரமானது அவ்வூரில் மிகுதியாக உண்டாயிற்று.

சங்கங்கள் முரன்றன; தாரைகள் பேரி யோடும்
எங்கெங்கும் இயம்பின பல்லியம்; எல்லை யில்ல
அங்கங்கு மலிந்தன வாழ்த்தொலி; அம்பொற் கொம்பின்
பங்கன்அரு ளால்உலக காள்பவர் பாங்கர் எங்கும். **36**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அழகிய பொற்கொம்பு போன்ற உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய சொக்கலிங்கப் பெருமானது திருவருளினால் உலகத்தை அரசாளப்பெற்றவராகிய மூர்த்திநாயனாருடைய நான்கு பக்கங்களிலும், தாரைகள் பேரிகைகளோடு சங்கவாத்தியங்களும் ஒலித்தன; அளவில்லாதனவாகிய பல வாத்தியங்கள் எவ்வெவ்விடங்களிலும் முழங்கின; அவ்வவ்விடங்களிலும் வாழ்த்துதலாலுண்டாகிய முழக்கங்கள் நிறைந்தன. எ-று

வெங்கட்களிற் றின்மிசை நின்றும் இழிச்சி வேரித்
தொங்கற்சுடர் மாலைகள் சூழ்முடி சூடு சாலை
அங்கட்கொடு புக்கரி யாசனத் தேற்றி ஒற்றைத்
திங்கட்குடைக் கீழ்உரி மைச்செயல் சூழ்ந்து செய்வார். ***37***

(இ - ள்.) கொடிய கோபக்கண்ணையுடைய பட்டவர்த்தன யானையினது முதுகினின்றும் மூர்த்திநாயனாரை இறக்கித் தேன் பொருந்திய மலர் மாலைகளும், விளங்குகின்ற இரத்தின மாலைகளும் சூழ்ந்திருக்கும் முடிசூட்டு மண்டபத்திற் கொண்டு போய்ச்சிங்காசனத்தின் மேல் எழுந்தருளச் செய்து, ஒப்பற்ற சந்திரவட்டக்குடையின் கீழ் பட்டாபிஷேகத்திற்குரிய மங்கல கிருத்தியங்களை ஆலோசித்துச் செய்யத் தொடங்கினார்கள். - எ- று.

மன்னுந் திசைவேதியில் மங்கல ஆகு திக்கண்
துன்னுஞ் சுடர்வன்னி வளர்த்துத் துதைந்த நூல்சூழ்
பொன்னின் கலசங்கள் குடங்கள் பூரித்த தூநீர்
உன்னுஞ் செயல்மந் திரயோகர் நிறுத்தி னார்கள். ***38***

(இ - ள்.) மூர்த்தி நாயனார் வீற்றிருக்கும் கிழக்குத்திக்கில் அவரெதிரில் இடப்பட்ட வேதிகையில் மங்களகரமான ஆகுதிகள் பண்ணுகின்ற யாககுண்டத்தில் விளங்குகின்ற அக்கினியை வளர்த்து, முப்புரி நூலை நெருங்கச் சுற்றிய பொற்கலசங்க ளிலும், குடங்களிலும் நிறைக்கப்பட்ட பரிசுத்தம் பொருந்திய கங்கை முதலிய தீர்த்தங்களைத் தியானிக்கின்ற செய்கையை யுடைய மந்திரவிதிப்படியே நிறுத்தினார்கள். எ- று.

வந்துற்றெழு மங்கல மாந்தர்கள் தம்மை நோக்கிச்
சிந்தைச்சிவ மேதெளி யுந்திரு மூர்த்தியார்தாம்
"முந்தைச்செய லாம்அமண் போய்முதற் சைவம் ஓங்கில்
இந்தப்புவி தாங்கிஇவ் வின்னர சாள்வன்" என்றார். ***39***

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) தம்மை வந்து வணங்கி மங்கலகரமான செயல்களைச் செய்கின்ற மந்திரிமுதலானவர்களைப் பார்த்துச் சித்தத்தில் சிவபெருமானையே மெய்ப்பொருளென்று தெளிகின்ற தவச் செல்வத்தையுடைய மூர்த்தி நாயனார் இதற்கு முன்னே கொடிய செயலில் இருந்த சமணமதம் அழித்து முதன்மையாகிய சைவசமயம் விருத்தியானால் இந்த இராச்சியத்தைத் தாங்கப் பெற்று இவ்விடத்தில் இனிய அரசாட்சியைக் கைக்கொள்வேனென்று சொன்னார். - எ - று.

அவ்வாறு மொழிந்தது கேட்ட அமைச்ச ரோடு
மெய்வாழ்தரு நூலறி வின்மிகு மாந்தர் தாமும்
"எவ்வாறருள் செய்தனை மற்றவை யன்றி யாவர்
செய்வார்? பெரியோய்," எனச்சேவடி தாழ்ந்து செப்ப. **40**

(இ - ள்.) அந்தப் பிரகாரம் மூர்த்தி நாயனார் அருளிச் செயத்தைக் கேட்ட மந்திரிகளோடு உண்மையாகிய வேதாகம சாஸ்திரங்களைக் கற்று அறிவிற் சிறந்த பெரியோர்களும் (அவரைப் பார்த்து) சுவாமீ! தேவரீர் எவ்விதமாகக் கட்டளை யிடுகின்றீரோ அவ்வாறு செய்வதேயல்லாமல் வேறு வகையாக யாவர் செய்யவல்லவர்கள் என்று அவருடைய திருவடிகளில் வணங்கிச் சொல்ல. - எ- று.

வையம் முறைசெய் குவனாகில் வயங்கு நீறே
செய்யும் அபிடே கமுமாக, செழுங்கலன்கள்
ஐயன் அடையா ளமுமாக, அணிந்து தாங்கும்
மொய்புன் சடைமா முடியேமுடி யாவ" தென்றார். **41**

(இ - ள்.) யான் இவ்வுலகத்தை அரசாட்சி செய்வதற்கு உரியவனானால் விளங்குகின்ற விபூதியே செய்யப்பட்ட அபிஷேகதிரவியமாகவும், சிவபெருமானது அடியவனென்று தெரிந்து கொள்வதற்குக் குறியாகவுள்ள ருத்திராக்ஷமாலையே செழுமை பொருந்திய திருவாபரணங்களாகவும் அணிந்து கொண்டு, நான் தரிக்கின்ற நெருங்கிய சடைமுடியே என்தலையில் பின்சூட்டும் கிரீடமாகவும் இருக்கத்தக்கதென்று சொன்னார். - எ- று.

என்றிவ்வுரை கேட்டலும் எல்லையில் கல்வி யோரும்
வன்திண்மதி நூல்வளர் வாய்மை அமைச்சர் தாமும்
"நன்றிங்கருள் தான்" என நற்றவ வேந்தர் சிந்தை
ஒன்றும்அர சாள்உரி மைச்செய லானஉய்த்தார். **42**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) என்று இவர் சொல்லியவார்த்தையைக் கேட்டவுடனே அளவில்லாத பெருங் கல்வியையுடைய பெரியோர்களும், சிறந்த நீதி நூலையறிந்த பேரறிவினையும் உண்மையையுமுடைய மந்திரிமார்களும், இவ்விடத்தில் தேவரீர் அருளிச்செய்த மொழியானது மிகவும் நன்றாயிருக்கின்றதென்று இசைந்து, நல்ல தவத்தினையுடைய அம் மூர்த்தி நாயனார் தமது திருவுள்ளத்திற்குப் பொருந்திய படி அரசாட்சி செய்வதற்கு வேண்டிய செய்கைகளைச் செய்தார்கள். எ - று.

மாடெங்கும் நெருங்கிய மங்கல ஓசை மல்கச்
சூடுஞ்சடை மௌலி அணிந்தவர் தொல்லை ஏனம்
தேடுங்கழ லார்திரு வாலவாய் சென்று தாழ்ந்து
நீடுங்களிற் றின்மிசை நீள்மறு கூடு போந்தார். 43

(இ - ள்.) மங்கலவாத்தியங்களின் ஓசைகள் பக்கங்களிலெல்லாம் நெருங்கி நிறைய, சூட்டப்பட்ட சடையையே முடியாகக் கொண்ட மூர்த்தி நாயனார் முன்னாளில் விஷ்ணுவாகிய பன்றியினால் தேடிக் காணப்படாத திருவடியையுடைய சொக்கலிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருவாலவாயென்னும் ஆலயத்தையடைந்து வணங்கிப் பின்பு உயர்ந்த பட்டவர்த்தனயானையின்மேலேறி நீண்ட வீதியின் வழியாகப் பவனிவந்தார். - எ- று.

மின்னும்மணி மாளிகை வாயிலின் வேழ மீது
தன்னின்றும் இழிந்து தயங்கொளி மண்ட பத்திற்
பொன்னின்அரி மெல்லணைச் சாமரைக் காமர் பூங்கால்
மன்னுங்குடை நீழல் இருந்தனர் வையம் தாங்கி. 44

(இ - ள்.) ஒளிவிளங்குகின்ற மணிகளிழைத்த அரண்மனை வாசலிற் சென்றவுடனே அந்த யானையினின்றும் கீழே இறங்கி விளங்குகின்ற காந்தியையுடைய அரசாட்சிமண்டபத்தில் பொன்னினால் செய்யப்பட்ட மெல்லிய சிங்காசனத்தில் சாமரம்வீச, அழகிய பொலிவுள்ள காலினையுடைய வெண்கொற்றக்குடையின் நீழலில் உலகத்தைத் தாங்கி வீற்றிருந்தருளினார். - எ- று.

குலவுந்துறை நீதி அமைச்சர் குறிப்பின் வைகக்
கலகஞ்செய் அமண்செய லாயின கட்டு நீங்கி
நிலவுந்திரு நீற்று நெறித்துறை நீடு வாழ
உலகெங்கும் நிரம்பிய சைவம் உயர்ந்து மன்ன. 45

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) நல்ல தருமநெறியில் ஒழுகுகின்ற நீதியையுடைய மந்திரிமார்கள் தம்முடைய குறிப்பின் வழியே நடக்கவும், கலகஞ்செய்து கொண்டிருந்த சமணர்களுடைய மதக்கொள்கை களாகிய கட்டுப்பாடுகள் ஒழிந்து விளங்குகின்ற திரு வெண்ணீற்றைத் தரிக்கும் நல்லொழுக்கமானது நீடித்து வாழவும் உலகமுழுமையும் நிரம்பிய சைவசமயமானது நிலை பெற்றோங்கவும். - எ- று.

நுதலின்கண் விழித்தவர் வாய்மை நுணங்கு நூலின்
பதமெங்கும் நிறைந்து விளங்கப் பவங்கள் மாற்ற
உதவுந்திரு நீறுயர் கண்டிகை கொண்ட வேணி
முதன்மும் மையினால்உல காண்டனர் மூர்த்தி யார்தாம். 46

(இ - ள்.) நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட உண்மை பொருந்திய வேதாகமங்களிற் சொல்லிய வைதிகமார்க்கமானது எவ்விடத்திலும் பரவி விளங்கவும், பிறவித்துன்பத்தை நீக்குதற் கேதுவாக வுதவுகின்ற திருநீறும், உயர்ந்த ருத்திராக்ஷமும், தரித்துக் கொண்ட சடைமுடியுமாகிய முதன்மை பொருந்திய இம்மூன்று அடையாளங்களோடும் மூர்த்தி நாயனார் உலகத்தை அரசாண்டருளினார். - எ- று.

ஏலங்கமழ் கோதையர் தந்நிறம் என்றும் நீங்கும்
சீலங்கொடு வெம்புலன் தெவ்வுடன் வென்று நீக்கி
ஞாலந்தனி நேமி நடாத்தி நலங்கொள் ஊழிக்
காலம்உயிர் கட்கிட ரான கடிந்து காத்து. 47

(இ - ள்.) மயிர்ச்சாந்து மணக்கின்ற கூந்தலையுடைய ஸ்திரிகளாலுண்டாகும் ஆசையை எப்போதும் ஒழிந்திருப்பதற் கேதுவாகிய துறவை ஒழுக்கமாகக் கொண்டு, பகைவர்களோடு கொடிய ஐம்புலன்களையும் செயித்துத் தள்ளி, உலகத்தில் ஒப்பற்ற தனது ஆஞ்ஞாசக்கரத்தை நடத்தி நன்மை பெறும்படி வெகுகாலம் ஆன்மகோடிகளுக் குண்டாகின்ற துன்பங்களை யொழித்துப் பாதுகாத்து. - எ- று.

பாதம்பர மன்னவர் சூழ்ந்து பணிந்து போற்ற
ஏதம்பிணி யாவகை இவ்வுல காண்டு தொண்டின்
பேதம்புரி யாஅருட் பேரர சாளப் பெற்று
நாதன்கழற் சேவடி நண்ணினர் அண்ண லாரே. 48

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அன்னியதேசத்து அரசர்கள் கப்பங் கொண்டு சூழ்ந்து தமது திருவடிகளில் வணங்கித் துதிக்க, உயிர்களுக்கு ஓர் துன்பமும் நேரிடாமல் இந்த உலகத்தை ஆண்டு, (அதனோடு) சிவபெருமானுக்குச் செய்யும் பணிவிடைகளில் யாதொரு வித்தியாசமும் வரவொட்டாத பெருமை பொருந்திய அருளரசாளவும் பெற்று மூர்த்தி நாயனார் அவ்வெம்பெருமானுடைய வீரக்கழலையணிந்த சிவந்த திருவடியை அடைந்தார். - எ- று.

அகல்பாறையின் வைத்து முழங்கையை அன்று தேய்த்த
இகலார்களிற் றன்பரை ஏத்தி முருக னாராம்
முகில்சூழ் நறுஞ்சோலையின் மொய்யொளி மாட வீதிப்
புகலூர்வரும் அந்தணர் தந்திறம் போற்ற லுற்றாம். 49

(இ - ள்.) சந்தனக்கட்டை கிடைக்காத காலத்தில் அகன்ற சன்தனக்கல்லில் முழங்கையை வைத்துத் தேய்த்த பகைகொண்ட யானையை யொத்த மூர்த்தி நாயனார் ஸ்தோத்திரஞ் செய்து, மேகங்களால் சூழப்பட்ட நல்ல மணம் பொருந்திய சோலைகளையும், மிகுந்த ஒளிவீசுகின்ற மாடவீதிகளையுமுடைய திருப்புகலூரில் அவதாரஞ் செய்த முருக நாயனாரென்று சொல்லப்பட்ட வேதியர் செய்த அடிமைத்திறத்தைச் சொல்லத் தொடங்குவோம். - எ- று.

மூர்த்தி நாயனார் புராணம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22. முருகநாயனார் புராணம்

தாது சூழும் குழல்மலையாள் தளிர்க்கை சூழும் திருமேனி
மீது சூழும் புனற்கற்றை வேணி நம்பர் விரும்புபதி
சோதி சூழ மணிமௌலிச் சோழர் பொன்னித் திருநாட்டுப்
போது சூழுந் தடஞ்சோலைப் பொய்கை சூழும் பூம்புகலூரர். 1

(இ - ள்.) பூந்தாதுகள் பொருந்திய கூந்தலையுடைய உமாதேவியரது தளிர் போன்ற கைகளினால் தழுவிக் கொள்ளப் பட்ட திருமேனியையும், திருமுடியின்மேல் பெருக்கெடுக்கும் கங்கைநதி தங்கிய சடைமுடியையுமுடைய சிவபெருமான் விருப்பங் கொண்டு வீற்றிருந்தருளும் ஸ்தலமானது, பிரகாசாம் பொருந்திய மாணிக்கங்களிழைத்த கிரீடத்தையணிந்த சோழ ராஜாக்கள் அரசாட்சி செய்கின்ற சிறந்த காவிரி நாட்டில் மலர்கள் நிறைந்த பெரிய சோலைகளும், தடாகங்களும் நாற்புறத்திலும் சூழ்ந்திருக்கும் திருப்புகலூராகும். - எ- று.

நாம மூதூர் மற்றதனுள் நல்லோர் மனம்போல் அவரணிந்த
சேம நிலவு திருநீற்றின் சிறந்த வெண்மைத் திருந்தொளியால்
யாம இருளும் வெளியாக்கும் இரவே அல்ல; விரைமலர்மேல்
காமர் மதுவுண் சிறைவண்டும் களங்கம் இன்றி விளங்குமால். 2

(இ - ள்.) புகழ் பெற்றிருக்கின்ற பழமையாகிய அத்திருப்புகலூரில் நன்மை பொருந்திய சிவனடியார்களின் திருவுள்ளத்தைப் போல் அவ்வடியார்களணிந்த மோட்ச வின்பத்தைக் கொடுக்கும் விபூதியினது வெண்மை பொருந்திய பிரகாசத்தினால் இராக்காலத்து இருளும் வெளிச்சமாகச் செய்யப்படும்; அவ்வாறான இரவேயல்லாமல், வாசனை பொருந்திய மலர்களிலுள்ள மதுரமாகியதேனையுண்ணும் சிறகினையுடைய வண்டுகளும் (விடியற் காலத்தில் அவ் வடியார்கள் மலர் கொய்ய வருகின்ற நந்தனவனங்களில்) கருமை நிறம்நீங்கி வெண்ணிறத்தையுடையனவாய்ப் பிரகாசிக்கும். எ-று

நண்ணும் இசைதேர் மதுகரங்கள் நனைமென் சினையின் மருங்கலைய
வண்ண மதுரத் தேன்பொழிவ வாச மலர்வா யேயல்ல;
தண்ணென் சோலை எம்மருங்கும் சாரும் மடமெ‌ஃ சாரிகையின்
பண்ணின் கிளவி மணிவாயும் பதிகச் செழுந்தேன் பொழிவுமால். 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) சோலைகளிலுள்ள இசை பாடுகின்ற வண்டுகள் அரும்புகளையுடைய புறத்தில் அலைதலாலே வாசனை பொருந்திய மலர்களின் வாய்மாத்திரம் அழகிய மதுரமாகிய தேனைப் பொழிவனவல்ல; குளிர்ச்சி பொருந்திய சோலை களின் எந்தப்புறத்திலும் வாசஞ் செய்யும் இளமை பொருந்திய மெல்லிய காகணவாய்ப்புள்ளின் பண்ணமைந்த சொல்லை யுடைய அழகிய வாயும் தேவாரப் பதிகங்களாகிய செழுமை தங்கிய தேனைப் பொழியும். - எ- று.

வண்டு பாடப் புனல்தடத்து மலர்ந்து கண்ணீர் அரும்புவன
கொண்ட வாச முகைஅவிழ்ந்த குளிர்பங் கயங்க ளேயல்ல;
அண்டர் பெருமான் திருப்பாட்டின் அமுதம் பெருகச் செவிமடுக்கும்
தொண்டர் வதன பங்கயமும் துளித்த கண்ணீர் அரும்புமால். 4

(இ - ள்.) வண்டுகள் பாடும்படி நீரையுடைய தடாகத்தில் விகசித்துக் கண்ணீரைத் துளிப்பன, வாசனை பொருந்திய முறுக்குவிட்டு விரிந்த குளிர்ச்சியாகிய தாமரை மலர்கள் மாத்திரமேயல்ல; தேவர்கள் நாயகராகிய சிவபெருமானைத் துதிக்கின்ற தேவாரப் பதிகத்திலுள்ள இசையமுதமானது பெருக, அதனைக் காதுகளாகிய வாயினால் பானம் பண்ணுகின்ற அடியார்களின் முகமாகிய தாமரைமலர்களும் துளிக்கின்ற ஆனந்தக் கண்ணீரைச் சொரியும். - எ- று.

ஆன பெருமை வளஞ்சிறந்த அத்தண் புகலூர் அதுதன்னில்
மான மறையோர் குலமரபின் வந்தார் முந்தை மறைமுதல்வர்
ஞான வரம்பின் தலைநின்றார் நாகம் புனைவார் சேவடிக்கீழ்
ஊனம் இன்றி நிறை அன்பால் உருகு மனத்தார் முருகனார். 5

(இ - ள்.) இப்படிப்பட்ட பெருமையோடு வளப்பம் பொருந்திய அழகிய திருப்புகலூரில் வாழும் மேன்மை பொருந்திய பிராமணர் குலத்தில் அவதரித்தவர்; முதன்மை யாகிய வேதங்களையுணர்ந்தவர்; ஞானமார்க்கத்தில் தலைமை யாக நின்றவர்; சர்ப்பாபரணத்தை யணிந்த சிவபெருமானுடைய சிவந்த திருவடிகளில் குற்றமில்லாமல் நிறைந்த அன்பினால் உருகுகின்ற மனதினையுடைவர் (அவர் யாரென்றால்) முருக நாயனார். - எ- று.

அடைமேல் அலவன் துயிலுணர அலர்செங் கமல வயற்கயல்கள்
மடைமேல் உகளும் திருப்புகலூர் மன்னி வாழுந் தன்மையராய்
விடைமேல் வருவார்க் காளான மெய்ம்மைத் தவத்தால் அவர்கற்றைச்
சடைமேல் அணியத் திருப்பள்ளித் தாமம் பறித்துச் சாத்துவார். 6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) நண்டுகள் தாமரையிலைகளில் நித்திரை செய்ய, அலர்ந்த செந்தாமரை மலர்களையுடைய வயல்களிலுள்ள கெண்டைமீன்கள் நீர்மடைகளின் மேல் பாய்கின்ற திருப்புகலூரில் நிலை பெற்றுவாழுந் தன்மையையுடையவராய், ரிஷப வாகனத்தின்மேல் எழுந்தருளி வருகின்ற சிவபெருமானுக்கு அடிமைத்திறம் பூண்ட மெய்மையாகிய தபோபலத்தினால் அப்பெருமானது கூட்டமாகிய சடையின் மேல் தரிக்கும்படி திருப்பள்ளித்தாமத்துக்குரிய மலர்களைப் பறித்துச் சாத்துகின்றவர். - எ- று.

புலரும் பொழுதின் முன்னெழுந்து புனித நீரில் மூழ்கிப்போய்
மலருஞ் செவ்வித் தம்பெருமான் முடிமேல் வான்நீர் ஆறுமதி
உலவு மருங்கு முருகுயிர்க்க நகைக்கும் பதத்தின் உடன்பறித்த
அலகில் மலர்கள் வெவ்வேறு திருப்பூங் கூடை களிலமைப்பார். 7

(இ - ள்.) சூரியன் உதயமாவதற்குமுன்னே விடியற்காலத்தில் நித்திரை விட்டெழுந்து, பரிசுத்தம் பொருந்திய நீரில் ஸ்நாநஞ் செய்து திருநந்தனவனத்திற்குச் சென்று, விடிந்தவுடனே தமது நாயகராகிய சிவபெருமானது திருமுடியின் மேல் கங்காநதியும், சந்திரனும் சஞ்சரிக்கின்ற இடத்தில் வாசனைவீசும் படியாக, மலரும்பக்குவத்தில் பறித்த எண்ணிறந்த மலர்களை வெவ்வேறு இனமாகப் புஷ்பக் குடலைகளில் வைப்பார். - எ- று.

கோட்டு மலரும் நிலமலரும் குளிர்நீர் மலரும் கொழுங் கொடியின்
தோட்டு மலரும் மாமலரும் சுருதி மலருந் திருவாயில்
காட்டு முறுவல் நிலவலரக் கனக வரையிற் பன்னகநாண்
பூட்டும் ஒருவர் திருமுடிமேல் புனைய லாகும் மலர்தெரிந்து. 8

(இ - ள்.) கோட்டுப் பூவும், நிலப்பூவும், குளிர்ச்சியாகிய நீர்ப்பூவும், செழுமை பொருந்திய கொடியில் பூத்த இதழ்களையுடைய பூவும் ஆகிய நால்வகைமலர்களும், வேதங்களை அருளிச் செய்த திருவாயினிடத்தில் காட்டப்பட்ட புன்முறுவலானது நிலவை வீச மேருமலையாகிய வில்லில் ஆதிசேஷனாகிய நாணியைப் பூட்டிய ஒப்பற்ற சிவபெருமானது திருமுடியின்மேல் (காலை முதலிய காலங்களுக்கேற்கத்) தரிக்கத்தக்க மலர்களென்று தெரிந்து பறித்து. - எ- று.

கொண்டு வந்து தனியிடத்தில் இருந்து கோக்கும் கோவைகளும்
இண்டைச் சுருக்கும் தாமமுடன் இசைக்கும் வாச மாலைகளும்
தண்டில் கட்டும் கண்ணிகளும் தாளிற் பிணைக்கும் பிணையல்களும்
நுண்டா திறைக்கும் தொடையல்களும் சமைத்து நுடப்கு நூன்மார்ப் 9

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) நால்வகை மலர்களையும் பறித்து எடுத்துக் கொண்டு வந்து, தனியான இடத்திலிருந்து கோக்கப்பட்ட கோவை மாலைகளும், இண்டை மாலைகளும், சுருக்கிக்கட்டப் பட்ட பத்திமாலைகளும், ஒன்றோடொன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்ட வாசனை பொருந்திய ஆரம் முதலிய மாலைகளும், தண்டு போலப் பெரிதாகக் கட்டப்பட்ட கொண்டைமாலை களும், மலர்களின் காம்போடு காம்பைச் சேர்த்துப் பிணைக் கின்ற சரமாலைகளும், நுட்பமாகிய மகரந்தப் பொடிகளை இறைக்கும் தொங்கல் மாலைகளும் கட்டி, அசைகின்ற பூணூலை யணிந்த மார்பினையுடைய முருக நாயனார். - எ- று.

ஆங்கப் பணிக ளானவற்றுக் கமைத்த காலங் களின்அமைத்துத்
தாங்கிக் கொடுசென் றன்பினொடுஞ் சாத்தி வாய்ந்த அர்ச்சனைகள்
பாங்கிற் புரிந்து பரிந்துள்ளார்; பரமர் பதிகப் பற்றான
ஓங்கிச் சிறந்த அஞ்செழுத்தும் ஓவா நாவின் உணர்வினார். 10

(இ - ள்.) மாலைகளைச் சாத்துவதற்கு நியமிக்கப்பட்ட காலை முதலிய நான்கு காலங்களிலும் கட்டி எடுத்துக் கொண்டு ஆலயத்துக்குப் போய் அன்போடு சாத்திச் செய்ய வேண்டிய அர்ச்சனைகளைத் தகுதியாகச் செய்து, உருகிய மனதையுடைய வராகிய, சிவபெருமானுடைய திருப்பதிகச் சார்பாகிய உயர் வாகிச் சிறந்த திருவைந் தெழுத்தையும் இடைவிடாமல் நாவி னால் உச்சரிக்கின்ற உணர்வினையுடையவராயிருந்தார். - எ- று.

தள்ளும் முறைமை ஒழிந்திடஇத் தகுதி ஒழுகும் மறையவர்தாம்
தெள்ளு மறைகள் முதலான ஞானஞ் செம்பொன் வள்ளத்தில்
அள்ளி அகிலம் ஈன்றளித்த அம்மை முலைப்பா லுடனுண்ட
பிள்ளை யார்க்கு நண்பருமாம் பெருமை யுடையா ராயினார். 11

(இ - ள்.) வேதாகமங்களில் விலக்கி யிருக்கின்றவற்றை யாவரும் நீங்க, (அவர்களுக் குணர்த்தும் பொருட்டு) இப்படிப் பட்ட தகுதியில் நடக்கின்ற முருக நாயனார் தெளிந்த வேதாகம முதலிய ஞானங்களைச் சிவந்த பொன்னாற் செய்யப்பட்ட கிண்ணத்திலிருந்து எடுத்து சர்வலோகங்களையும் பெற்றெடுத்த உமாதேவியாரது திருமுலைப்பாலோடு உண்டருளிய திருஞான சம்பந்தப்பிள்ளையாருக்குச் சிநேகிதராகவும் இருக்கின்ற பெருமையையுடையவராயினார். - எ- று.

அன்ன வடிவும் ஏனமுமாய் அறிவார் இருவர் அறியாமல்
மன்னும் புகலூர் உறைவாரை வர்த்த மான வீச்சுரத்து
நன்னர் மகிழ்ச்சி மனங்கொள்ள நாளும் பூசை வழுவாமே
பன்னும் பெருமை அஞ்செழுத்தும் பயின்றே பணிந்து பரவினார். 12

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அன்னமும் பன்றியுமாக உருவங்கொண்டு முடியையும் அடியையும் அறியத் தொடங்கிய பிரமன் விஷ்ணு என்னும் இருவராலும் அறியப்படாமல் நிலை பெற்ற திருப் புகலூரில் வாசஞ் செய்கின்ற சிவபெருமானை அவர் வீற்றிருந் தருளும் வர்த்தமான வீச்சரமென்னும் ஆலயத்தில் தம் மனதில் அதிக சந்தோஷமுண்டாக நாள்தோறும் தவறாமல் பூசை செய்து, செபித்தற்குரிய பெருமை பொருந்திய திருவைந்தெழுத் தையும் செபித்து வணங்கித் துதிசெய்து வந்தார். - எ - று.

அங்கண் அமருந் திருமுகர் அழகார் புகலிப் பிள்ளையார்
பொங்கு மணத்தின் முன்செய்த பூசை அதனால் புக்கருளிச்
செங்கண் அடலே றுடையவர்தாஞ் சிறந்த அருளின் பொருள்அளிக்கத்
தங்கள் பெருமான் அடிநீழல் தலையாம் நிலைமை சார்வுற்றார். 13

(இ - ள்.) அவ்விடத்தில் இவ்விதமாகத் திருத்தொண்டு செய்து கொண்டிருந்த முருகநாயனார் அழகு பொருந்திய சீகாழியில் திருவவதாரஞ் செய்தருளிய திருஞான சம்பந்தப் பிள்ளையாரது சிறந்த திருமணத்தில் தாம் முன்பு செய்த சிவபூசையின் பலத்தினால் அவ்விடத்திற்குச் சென்று சிவந்த கண்களையுடைய வலிய ரிஷபத்தை வாகனமாகக் கொண்ட ருளிய சிவபெருமான் சிறப்பாகிய திருவருட் செல்வத்தைக் கொடுத்தருள (அதனால்) தங்கள் பெருமானாகிய அக்கடவுளின் திருவடி நீழலில் வாசஞ் செய்யும் தலைமையாகிய மோக்ஷ நிலைமையை அடைந்தார். - எ- று.

அரவம் அணிந்த அரையாரை அருச்சித் தவர்தங் கழல்நிழற்கீழ்
விரவு புகலூர் முருகனார் மெய்ம்மைத் தொண்டின் திறம்போற்றிக்
கரவி லவர்பால் வருவாரைக் கருத்தில் உருத்தி ரங்கொண்டு
பரவும் அன்பர் பசுபதியார் பணிந்த பெருமை பகர்வுற்றேன். 14

(இ - ள்.) சர்ப்பத்தையணிந்த இடையினையுடைய சிவபெருமானை அர்ச்சனைசெய்து அப்பெருமானுடைய திருவடி நிழலின் கீழ் அடைந்தருளிய திருப்புகலூரில் அவதரித்த முருக நாயனார் செய்த மெய்மையாகிய திருத்தொண்டின் பெருமை யைத் துதித்து, வஞ்சகமற்ற நெஞ்சினையுடைய அடியார் களிடத்தில் எழுந்தருளித் திருவருள் செய்கின்ற சிவபெருமா னைத் தம்மனதில் திருவுருத்திரமந்திரத்தைக் கொண்டு (இரவும் பகலும்) துதிக்கின்ற உருத்திரபசுபதி நாயனார் வழிபட்ட பெருமையைக் குறித்துச் சொல்லத் தொடங்கினேன். - எ- று.

முருகநாயனார் புராணம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

23. உருத்திரபசுபதி நாயனார் புராணம்

நிலத்தின் ஓங்கிய நிவந்தெழும் பெரும்புனல் நீத்தம்
மலர்த்த டம்பணை வயல்புகு பொன்னிநன் னாட்டுக்
குலத்தின் ஓங்கிய குறைவிலா நிறைகுடி குழுமித்
தலத்தின் மேம்படு நலத்தது பெருந்திருத் தலையூர். 1

(இ - ள்.) உலகத்தில் உயர்வு பெற்று அதிகமாகப் பெருகி வருகின்ற சிறந்த காவிரி நதியின் பிரவாகமானது தாமரை மலர்களையுடைய விசாலமாகிய வயல்களில் செல்லுகின்ற சோழ வள நாட்டில், குலத்திற் சிறந்து யாதொரு குறைவுமில்லாமல் நிறைந்த குடிகள் நெருங்கி அந்நாட்டிலுள்ள எல்லா ஊர்களிலும் மேம்பட்ட நலத்தையுடையது; (அது யாதெனின்) பெருமை பொருந்திய திருத்தலையூர் என்னு நகரமாம். - எ- று.

வான ளிப்பன மறையவர் வேள்வியின் வளர்தீ;
தேன ளிப்பன நறுமலர் செறிசெழுஞ் சோலை;
ஆன ளிப்பன அஞ்சுகந் தாடுவார்க்(கு) அவ்வூர்
தான ளிப்பன தருமமும் நீதியுஞ் சால்பும். 2

(இ - ள்.) பிராமணர்கள் செய்யும் யாகத்தில் ஆகுதியால் வளர்ந்தெரிகின்ற அக்கினியானவை மழை பெய்யச் செய்கின் றன; நன்மணம் பொருந்திய மலர்கள் நிறைந்த செழிப்பாகிய சோலைகள் தேனைப் பொழிகின்றன; பசுக்கள் பஞ்சகௌவி யத்தை விரும்பி அபிஷேகங் கொண்டருளுகின்ற சிவபெருமா னுக்கு அக்கௌவியங்களைக் கொடுக்கின்றன; அவ்வூரிலுள்ள வர்கள் தருமத்தையும் நீதியையும் பெருமையையும் கொடுக்கின் றார்கள். - எ- று.

அங்கண் மாநக ரதனிடை அருமறை வாய்மைத்
துங்க வேதியர் குலத்தினில் தோன்றிய தூயோர்
செங்கண் மால்விடை யார்செழும் பொன்மலை வல்லி
பங்க னாரடி மைத்திறம் புரிபசு பதியார். 3

(இ - ள்.) அழகிய இடமகன்ற பெருமை பொருந்திய அந்நகரத்தில் அருமையாகிய வேதத்திற் சொல்லுகின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மெய்மை யமைந்த ஒழுக்கத்தில் சிறந்த பிராமணர் குலத்தில் அவதரித்த பரிசுத்தராயுள்ளவர்; (அவர்யாரெனின்) சிவந்த கண்களையுடைய விஷ்ணுவாகிய ரிஷபத்தை வாகனமாக வுடையவரும், செழித்த பர்வத ராஜபுத்திரியாகிய உமா தேவியாரை இடப் பாகத்தி லுடையவருமாகிய சிவபெருமானுக்கு அடிமைத்திறம் பூண்டொழுகுகின்ற பசுபதி நாயனார் என்னுந் திருப்பெய ருடையவர். - எ- று.

ஆய அந்தணர் அருமறை உருத்திரங் கொண்டு
மாய னாரறி யாமலர்ச் சேவடி வழுத்தும்
தூய அன்பொடு தொடர்பினில் இடையறாச் சுருதி
நேய நெஞ்சின ராகிஅத் தொழில்தலை நின்றார். 4

(இ - ள்.) அப்படிப்பட்ட சிறப்பினையுடைய பசுபதி நாயனார் அருமையாகிய எசுர் வேதத்திற் சொல்லும் திருவுருத்திர மந்திரத்தைக் கொண்டு, விஷ்ணுவினால் தேடியறியப்படாத தாமரை மலர் போன்ற திருவடிகளைத் துதிக்கின்ற பரிசுத்தமாகிய அன்புடனே தொடர்ச்சியாக இடைவிடாமல் சுருதியை விரும்பிய மனமுடையவராயிருக்கும் ஓதற்றொழிலில் சிறந்தவராயினார். - எ- று.

கரையில் கம்பலை புள்ளொலி கறங்கிட மருங்கு
பிரச மென்சுரும் பறைந்திடக் கருவரால் பிறழும்
நிரைநெடு டுங்கயல் நீரிடை நெருப்பெழுந் தனைய
விரைநெ கிழ்ந்தசெங் கமலமென் பொய்கையுள் மேவி. 5

(இ - ள்.) கரைகளில் முழக்கத்தைப் பறவைகள் உண்டாக்கிச் சுழல, பக்கத்தில் தேனையுண்ணும் படி வந்த ஆண் வண்டுகள் சப்திக்க, பெரிய வரால்மீன்கள் துள்ளுகின்ற அலைகளையுடைய நீண்ட தடாகத்திலுள்ள நீரில் நெருப்பின் சுவாலையெழுந்தது போன்ற மணம் விரிந்த மெல்லிய செந்தாமரை மலர்களையுடைய தடாகத்துக்குப் போய். - எ- று.

தெள்ளு தண்புனல் கழுத்தள வாயிடைச் செறிய
உள்ளு றப்புக்கு நின்றுகை உச்சிமேற் குவித்துத்
தள்ளு வெண்டிரைக் கங்கைநீர் ததும்பிய சடையார்
கொள்ளும் அன்பினில் உருத்திரங் குறிப்பொடு பயின்றார். 6

(இ - ள்.) அத்தாடகத்திலுள்ள தெளிவாகிய குளிர்ந்த நீரானது தமது கழுத்தளவாகப் பொருந்தும்படி அந்நீரினுள்ளே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புகுந்து நின்று, இரண்டு கைகளையும் சிரசின்மேல் குவித்து வைத்துக் கொண்டு, வெண்மையாகிய அலை வீசுகின்ற கங்கை நதியானது நிறைந்து ததும்புகின்ற சடைமுடியினையுடைய சிவபெருமான் விரும்பிக் கொள்ளத்தக்க அன்பினால் திருவுருத்திர மந்திரத்தை உள்ளக்கருத்தோடு செபித்தார். - எ- று.

அரும றைப்பய னாகிய உருத்திரம் அதனை
வருமு றைப்பெரும் பகலும்எல் லியும்வழு வாமே
திரும லர்ப்பொகுட் டிருந்தவன் அனையவர் சிலநாள்
ஒருமை உய்த்தி உமைஇடம் மகிழ்ந்தவர் உவந்தார். 7

(இ - ள்.) அருமையாகிய வேதத்தின் சாரமாயிருக்கின்ற திருவுருத்திரமந்திரத்தைக் கிரமமாக ஓதி வருகின்ற முறைமையில் பெரிய பகற்காலத்திலும் இராக்காலத்திலும் தவறாமல் சிறந்த தாமரை மலரின் கர்ணிகையில் வீற்றிருக்கின்ற நான்முகனையொத்த உருத்திர பசுபதி நாயனார் சிலநாள் வரையிலும் ஒருமைப்பட்ட மனதோடு தோத்திரஞ் செய்து வர, உமாதேவியாரை இடப்பாகத்தில் கொண்டருளிய சிவபெருமான் அவர் பணிக்குத் திருவுள்ள மகிழ்ந்தார். - எ- று.

காதல் அன்பர்தம் அருந்தவப் பெருமையும் கலந்த
வேத மந்திர நியதியின் மிகுதியும் விரும்பி
ஆதி நாயகர் அமர்ந்தருள் செய்யமற் றவர்தாம்
தீதி லாநிலைச் சிவபுரி எல்லையிற் சேர்ந்தார். 8

(இ - ள்.) அன்பினையுடைய உருத்திர பசுபதி நாயனாரது அருமையாகிய தவத்தின் பெருமையையும், அதனோடு சேர்ந்த வேதமந்திர நியமத்தின் மிகுதியையும் விரும்பி, முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமான் திருவுள்ளங் கொண்டு அருள் செய்ய, அந்நாயனார் குற்றமில்லாத நிலையையுடைய சிவலோகத்தின் எல்லையைத் தமக்கு இடமாகச் சென்றருளினார். - எ- று.

நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்
ஆடு சேவடி அருகுற அணைந்தனர்; அவர்க்குப்
பாடு பெற்றசீர் உருத்திர பசுபதி யாராம்
கூடு நாமமும் நிகழ்ந்தது குவலயம் போற்ற. 9

(இ - ள்.) சிறந்த பேரன்போடு திருவுருத்திரமந்திரத்தைச் செபித்த நியமத்தால் பொன்னம்பலத்தில் ஆநந்தத் தாண்டவஞ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்தருளுகின்ற சிவபெருமானது திருவடியின் அருகில் அடைந்தார்; (அதனால்) அவருக்கு பெருமை பொருந்திய சிறப்பினை யுடைய உருத்திர பசுபதி நாயனார் என்னும் சம்பந்தத்தையுடைய திருநாமமும் உலகத்தார் துதிக்கும்படியாக உண்டாயிற்று. - எ- று.

அயில்கொள் முக்குடு மிப்படை யார்மருங் கருளால்
பயில் உருத்திர பசுபதி யார்திறம் பரசி
எயிலு டைத்தில்லை எல்லையில் நாளைப்போ வாராம்
செயலு டைப்புறத் திருத்தொண்டர் திறத்தினை மொழிவாம். ***10***

(இ - ள்.) கூர்மை பொருந்திய மூன்று சுவராயிருக்கின்ற சூலத்தை ஆயுதமாகக் கொண்ட சிவபெருமானுக்கு அருகில் அவரது திருவருளினால் அன்பு செய்கின்ற உருத்திரபசுபதி நாயனாருடைய அடிமைத்திறத்தைத் துதிசெய்து, மதில்கள் சூழ்ந்ததில்லை மாகநகரத்தின் எல்லையில் நாளைப் போவார் என்னும் திருப்பெயரையுடைய புறத்திலிருந்து வணங்குகின்ற அடியவரது அன்பின்திறத்தைச் சொல்லுகின்றோம். - எ- று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

24. திருநாளைப் போவார் நாயனார் புராணம்

பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகும்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிகள் திரைக்கரத்தால்
முகந்துதர இருமருங்கும் முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணை நீர் நன்னாட்டு மேற்கா நாட்(டு) ஆதனூர். 1

(இ - ள்.) உலகத்தார் சொல்லிப் புகழத்தக்க சிறப்பினையுடைய பழமையாகிய வளப்பம் பொருந்திய நகரமாயிருக்கின்றது; விளங்குகின்ற நீரையையுடைய கொள்ளிட நதியானது பொன்னையும், செழுமையாகிய மணிகளையும், அலைகளாகிய கைகளினால் வாரிக் கொடுக்க, அதன் இரண்டு பக்கத்திலுமுள்ள தாமரைகள் தமது மலராகிய ்கைகளினால் ஏற்றுக் கொள்ளுகின்ற விசாலமாகிய வயல்களையுடைய நல்ல சோழ நாட்டில் மேற்கா நாட்டைச் சார்த்த ஆதுனூரானது. - எ- று.

நீற்றலர்பே ரொளிநெருங்கும் அப்பதியின் நிறைகரும்பின்
சாற்றலைவன் குலைவயலில் தகட்டுவரால் எழப்பகட்டேர்
ஆற்றலவன் கொழுக்கிழித்த சால்வழிபோய் அசைந்தேறிச்
சேற்றலவன் கருவுயிர்க்க முருகுயிர்க்கஞ் செழுங்கமலம். 2

(இ - ள்.) விபூதியைத் தரித்தலால் விரிந்த பெரிய ஒளியானது பரவியிருக்கின்ற அந்த ஊரில், நிறைந்த கரும்பின் சாற்றினால் அலைகின்ற வலிய நெற்குலைகளையுடைய வயலில் அச்சவடிவாகிய வரால்மீன்கள் எழும்பும்படி, எருமைக் கடாக்கள் பூட்டிய ஏர் செல்லும் வழியில் கலப்பையின் நுனியிலிருக்கும் வலிய கொழுவினால் பிளக்கப்பட்ட படைச்சாலின் வழியில் கலப்பையின் நுனியிலிருக்கும் வலிய கொழுவினால் பிளக்கப்பட்ட படைச்சாலின் வழியே போய் அசைந்து கொண்டு ஏறி, சேற்றில் நண்டுகள், கருவை ஈனச் செழுமை பொருந்திய தாமரை மலர்கள் மலர்ந்து தேனைச் சொரியும். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நனைமருவுஞ் சினைபொதுளி நறுவிரைசூழ் செறிதளிரில்
தினகரன்மண் டலம்வருடுஞ் செழுந்தருவின் குலம்பெருகிக்
கனமருவி அசைந்தலையக் களிவண்டு புடைசூழப்
புனல்மழையோ மதுமழையோ பொழிவொழியா பூஞ்சோலை. 3

(இ - ள்.) அரும்புகளையுடைய கிளைகள் நெருங்கி நல்ல வாசனை பொருந்திய நிறைந்த தளிர்களினால் சூரியனுடைய வட்டவடிவைத் தடவுகின்ற செழுமையாகிய விருட்சக் கூட்டங்கள் நிறைந்து, மேகக்கூட்டங்கள் அதில் சேர்ந்து அசைந்து சஞ்சரித்தலாலும், களிப்பினையுடைய வண்டுகள் புறத்தில் சூழ்ந்து மொய்த்தலாலும் பூஞ்சோலைகள் பொழிதல் ஒழியவில்லை; அவ்வாறு பொழிவது நீர் மழையோ? அல்லது தேன்மழையோ? அறியோம். - எ- று.

பாளைவிரி மணங்கமழும் பைங்காய்வன் குலைத்தெங்கின்
தாளதிர மிசைமுட்டித் திடங்கிடங்கின் எழப்பாய்ந்த
வாளைபுதை யச்சொரிந்த பழமிதப்ப வண்பலவின்
நீளமுதிர் கனிகிழதேன் நீத்தத்தில் எழுந்துகளும். 4

(இ - ள்.) பாளைகள் விரிந்து மணம்வீசுகின்ற பசிய காய்கள் நிறைந்த சூலைகளையுடைய தென்னமரங்களின் அடிப்புற மானது அதிரும்படியாக அதனிடத்து முட்டி, விசாலமாகிய குளங்களிலிருந்து எழும்பிப் பாய்ந்த வாளைமீனானது புதைந்து போகும்படி அத்தென்னமரங்கள் சொரிந்த நெற்றுக்கள் மிதக்க, (பின்பு) செழித்த பலாமரத்தினது நீண்டு முதிர்ந்த பழங்கள் வெடித்து ஒழுகுகின்ற தேன்வெள்ளத்தினால் மேலே எழும்பிக் குதித்துவிளையாடும். - எ- று.

வயல்வளமும் செயல்படுபைந் துடவையிடை வருவளமும்
வியலிடமெங் கணும்நிறைய மிக்கபெருந் திருவினவாம்
புயலடையும் மாடங்கள் பொலிவெய்த மலிவுடைத்தாய்
அயலிடைவே றடிநெருங்கக் குடிநெருங்கி உளதவ்வூர். 5

(இ - ள்.) வயல்களில் உண்டாகின்ற வளங்களும், வைத்து வளர்க்கப்பட்ட பசுமை பொருந்திய சோலைகளில் உண்டா கின்ற வளங்களும் விசாலமாகிய அந்நாடெங்கும் நிறைய அதனால் மேம்பட்ட பெருஞ் செல்வத்தை யுடைத்தாயிருக் கின்ற மேகங்கள் தவழும் மாளிகைகள் சிறப்படையும்படி மிகுந்த தோற்றமுடையதாய்ப் பக்கங்களில் அடிக்கொருகுடியாக நெருங்கியுள்ளது அந்த ஊர். - எ- று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்றவூர்ப் புறம்பணையின் வயல்மருங்கு பெருங்குலையில்
சுற்றம்விரும் பியகிழமைத் தொழில்உழவர் கிளைது வன்றிப்
பற்றியபைங் கொடிச்சுரைமேற் படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல நிறைந்துளதோர் புலைப்பாடி. 6

(இ - ள்.) இப்படிப்பட்ட வளங்களையுடைய அந்த ஆதனூரின் மருதநிலத்தைச் சார்ந்த வயலின் புறத்திலுள்ள பெரிய கரையில், சுற்றத்தாரால் விரும்பப்பட்டுத் தமக்கு உரித்தாகிய உழுது நாற்றுநடுதல் முதலிய தொழில்களைச் செய்கின்ற பள்ளர்களது கூட்டம் நெருங்கித் தாவியோடுகின்ற பசிய சுரைக்கொடியானது மேலே படர்ந்திருக்கின்ற விழலினால் மேயப்பட்ட பழங் கூரையையுடைய பல சிறுகுடிசைகள் நிறைந்துள்ளது ஒரு புலைச்சேரி. - எ- று.

கூருகிர்மெல் லடியளகின் குறும்பார்ப்புக் குழூச்சுழலும்
வார்பயின்முன் றிலில்நின்ற வள்ளுகிர்நாய்த் துள்ளுபறழ்
காரிரும்பின் சரிசெறிகைக் கருஞ்சிறார் கவர்ந்தோட
ஆர்சிறுமென் குரைப்படக்கும் அரைக்கசைத்த இருப்புமணி. 7

(இ - ள்.) கூர்மையாகிய நகத்தோடு கூடிய மென்மை பொருந்திய அடியையுடைய கோழிப்பெடையின்சிறிய குஞ்சுகளின் கூட்டங்கள் சுழன்றுகொண்டிருக்கும் வார்வலைகள் தொங்குகின்ற முற்றத்தில்நிற்கின்ற கூரிய நகத்தையுடைய நாய்களின் துள்ளியோடுங் குட்டிகளைக் கரிய இரும்பினால் செய்யப்பட்ட காப்பைக் கையில் தரித்த கருநிறத்தையுடைய புலைச்சிறுவர்கள் பிடித்துக் கொண்டு ஓட, அச்சிறுவர்கள் இடையில் கட்டிய இரும்புமணிகளின் ஓசையானது அந்தக் குட்டிகளின் குரைக்கின்ற சிறிய ஓசையை அடக்கும். - எ- று.

வன்சிறுதோல் மிசையுழத்தி மகவுறங்கும் நிழல்மருதும்
தன்சினைமென் பெடையொடுங்குந் தடங்குழிசிப் புதைநீழல்
மென்சினை வஞ்சிகளும் விசிப்பறைதூங் கினமாவும்
புன்றலைநாய்ப் புனிற்றுமுழைப் புடைத்தெங்கும் உடைத்தெங்கும். 8

(இ - ள்.) வலிதாகிய சிறிய தோலின் மேல் பள்ளஸ்திரிகள் தங்கள் பிள்ளைகளைத் தூங்கச் செய்கின்ற நிழலையுடைய மருதமரமும், தன்னுடைய சினையோடு மெல்லிய கோழிப் பெடைகள் ஒடுங்குகின்ற பெரிய பானைகளைப் புதைத்திருக்கும் நிழலையுடைய கிளைகள் பொருந்திய வஞ்சிமரங்களும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாரினால் கட்டப்பட்ட பறைகள் தொங்குகின்ற மாமரங்களும், சிறிய தலையினையுடைய நாய்க்குட்டிகளிருக்கின்ற பள்ளத்தினருகிலுள்ள தென்னைமரங்களும் எங்கு முடைத்தாயிருக்கின்றது. - எ-று.

செறிவலித்திண் கடைஞர்வினைச் செயல்புரிவை கறையாமக்
குறியளக்க வழைக்குஞ்செங் குடுமிவா ரணச்சேக்கை
வெறிமலர்த்தண் சினைக்காஞ்சி விரிநீழல் மருங்கெல்லாம்
நெறிகுழற்புன் புலைமகளிர் நெற்குறுபாட் டொலிபரக்கும். 9

(இ - ள்.) மிகுந்த வல்லமை பொருந்திய கடையர்கள் தங்களுக்குரிய உழவுத்தொழிலைச் செய்கின்ற விடியற் சாமத்தினது குறியைத் தெரிவிக்கக் கூவுகின்ற சிவந்த உச்சிக் கொண்டையையுடைய கோழிச் சேவல்களின் படுக்கையிடமாகிய வாசனை பொருந்திய மலர்களையுடைய கிளைகளோங்கிய காஞ்சிமரத்தினது அகன்ற நிழலின் இடங்களெல்லாம் நெறித்த கூந்தலையுடைய புலைச்சியர்கள் நெல்லைக் குத்தும் போது பாடுகின்ற பாட்டின் ஓசையானது பரவியிருக்கும். - எ- று.

புள்ளுந்தண் புனற்கலிக்கும் பொய்கையுடைப் புடைஎங்கும்
தள்ளுந்தாள் நடையசைத் தளையவிழ்பூங் குவளைமது
விள்ளும்; பைங் குழற்கதிர்நெல் மிலைச்சியபுன் புலைச்சியர்கள்
கள்ளுண்டு களிதூங்கக் கறங்குபறை யுங்கலிக்கும். 10

(இ - ள்.) பறவைகள் முழங்குகின்ற நீரையுடைய குளங்களிலெல்லாம் தள்ளாடுகின்ற அப்பறவைகளின் கால்நடையானது படுதலால் இதழ்கள் விரிந்த நீலோற்பலமலர்கள் தேனைச் சிந்தும்; கரிய கூந்தலில் நெற்கதிர்களை அழகாகச் சூடிய சிறிய புலைச்சியர்கள் கள்ளைக் குடித்துக் கூத்தாட, அக்கூத்துக்கிசைய அடிக்கின்ற பறை யென்னும் வாத்தியமும் முழங்கும். - எ-று.

இப்படித்தா கியகடைஞர் இருப்பின்வரைப் பினின்வாழ்வார்;
மெய்ப்பரிவு சிவன்கழற்கே விளைத்தவுணர் வொடும்வந்தார்;
அப்பதியில் ஊர்ப்புலைமை ஆன்றதொழில் தாயத்தார்;
ஒப்பிலவர்; நந்தனார் எனஒருவர் உளரானார். 11

(இ - ள்.) இத்தன்மையையுடைய தீண்டாதார் இருப்பிடமாகிய அப் புலைச்சேரியில் வாழ்கின்றவர்; சிவபெருமானுடைய திருவடிகளுக்கே உண்மையாகிய அன்பைச் செலுத்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கின்ற மெய்யறிவையுடையவர்; அவ்வூரில் ஊர்வெட்டியா னென்னும் நிறைந்த காணியாட்சியையுடையவர்; ஒருவரும் தமக்கு ஒப்பில்லாதவர்; நந்தனார் என்று சொல்லும் பெயரை யுடைய ஒருவரிருந்தார். - எ-று.

பிறந்துணர்வு தொடங்கியபின் பிறைக்கண்ணிப் பெருந்தகைபால்
சிறந்தபெருங் காதலினால் செம்மைபுரி சிந்தையராய்
மறந்தும்அயல் நினைவின்றி வருபிறப்பின் வழிவந்த
அறம்புரிகொள் கையராயே அடித்தொண்டின் நெறிநின்றார். 12

(இ - ள்.) (அவர்) தாம் அவதரித்து விவேகம் வந்தபின்பு, சந்திரனைத் தரித்த சிவபெருமானிடத்தில் வைத்த சிறந்த பேரன்பினால் நன்மார்க்கத்தில்செல்லுகின்ற மனமுடைய வராய், மறந்தும் பிறதெய்வங்களை நினையாமல் (அச்சிவபரஞ் சுடரையே தியானித்துக் கொண்டு) தாம் பிறந்த குலாசாரமுறை மைக்கு ஏற்றபடி செய்ய வேண்டிய சிவதருமங்களைச் செய்யுங் கொள்கையையுடையவராய் அக்கடவுளது திருவடிகளுக்குத் தொண்டுபூண் டொழுகுவதில் சிறந்தவரானார். - எ-று.

ஊரில்விடும் பறைத்துடவை உணவுரிமை யாக்கொண்டு
சார்பில்வருந் தொழில்செய்வார் தலைநின்றார் தொண்டினால்;
கூரிலைய முக்குடுமிப் படையண்ணல் கோயில்தொறும்
பேரிகையே முதலாய முகக்கருவி பிறவினுக்கும். 13

(இ - ள்.) ஊரிலுள்ளவர்களால் வெட்டிமைக்காக மானியமாக விடப்பட்டிருக்கின்ற நிலத்தில் விளைகின்ற தானியத்தைத் தமக்கு உரியனவாகப் பெற்றுக் கொண்டு, அவர் சார்பிற்குச் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து, திருத்தொண்டிற் சிறந்தவராய்க் கூர்மை பொருந்திய அச்சவடி வான சூலாயுதத்தைத் தாங்கிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கோயில்களிலெல்லாம் பேரிகைவாத்தியம் முதலாகிய முகத்தையுடைய பிற வாத்தியங்களுக்கும். - எ-று.

போர்வைத்தோல் விசிவார்என் றினையனவும் புகலும்இசை
நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலைவகையால்
சேர்வுற்ற தந்திரியும் தேவர்பிரான் அர்ச்சனைகட்(கு)
ஆர்வத்தி னுடன்கோரோ சனமும்இவை அளித்துள்ளார். 14

(இ - ள்.) (வாத்தியங்களின் வாயைமூடுதற்குப்) போர்வையா யிருக்கின்ற தோலும், அதனைக்கட்டுதற்காக வேண்டிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வருமாகிய இப்படிப் பட்டவைகளும், புகழ்ந்து சொல்லப்பட்ட இசையையுடைய நல்ல வீணைக்கும், யாழ்வாத்தியத்துக்கும் ஏற்றவகையினால் பொருந்திய நரம்புகளும், தேவர்கள் நாயகராகிய சிவபெருமானுக்குரிய பூசனைக்குக் கோரோசனமுமாகிய இவைகளை ஆசையோடு கொடுக்கின்ற வராயினார். - எ-று.

இவ்வகையில் தந்தொழிலின் இயன்றவெலாம் எவ்விடத்தும்
செய்வனவும் கோயில்களில் திருவாயிற் புறநின்று
மெய்விரவு பேரன்பு மிகுதியினால் ஆடுதலும்
அவ்வியல்பின் பாடுதலு மாய்நிகழ்வார் அந்நாளில். 15

(இ - ள்.) இந்தப்பிரகாரம் தம்முடைய சாதித் தொழிலுக் கமைந்த பணிகளை எல்லாம் போகின்ற எல்லா ஆலயங்களுக்கும் செய்து வருதலும், அவ்வாலயங்களின் திருவாசலின் புறத்தில் நின்றுகொண்டு உண்மை பொருந்திய பேரன்பின் மிகுதியினால் ஆனந்தக் கூத்தாடுதலும், அத்தன்மையாகவே பாடுதலுமாகிய குணங்களைப் பொருந்தி வாழ்ந்து கொண்டிருந் தார்; அந்த நாள்களில் ஒருநாள்.

திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகள் மிகநினைந்து
விருப்பினொடுத் தம்பணிகள் வேண்டுவன செய்வதற்கே
அருத்தியினால் ஒருப்பட்டங் காதனூர் தனில்நின்றும்
வருத்தமுறுங் காதலினால் வந்தவ்வூர் மருங்கணைந்தார். 16

(இ - ள்.) திருப்புன்கூர் என்னும் க்ஷேத்திரத்தில் வீற்றிருந் தருளும் சிவலோக நாதராகிய சிவபெருமானது திருவடிகளை மிகவும் நினைந்து அன்புடனே தாம் செய்யத்தக்க திருப் பணிகளைச் செய்வதற்காக ஆசையினால் மனவொருமைப்பட்டு அந்த ஆதனூரிலிருந்து (நமக்குத் தரிசனங்கிடைக்குமோ வென்னும்) வருத்தத்தை விளைக்கும் அன்பினால் அத்திருப்புன் கூருக்கு வந்து சேர்ந்தார். - எ-று.

சீரேறும் இசைபாடித் திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டும் எனநினைந்தார்க் கதுநேர்வார்
காரேறும் எயிற்புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலங்கஅருள் புரிந்தருளிப் புலப்படுத்தார். 17

(இ - ள்.) சிவபெருமானது சிறப்புப் பொருந்திய புகழைப்பாடித் திருவாசலில் நின்று கொண்டு அப்பெருமானை நேராகவே தரிசிக்க வேண்டுமென்று நினைந்த திருநாளைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போவார் நாயனாருக்கு அப்படியே அருள் செய்யவிரும்பி, மேகங்கள் தவழ்கின்ற மதில்சூழ்ந்த திருப்புன்கூரி லெழுந்தருளி யிருக்கும் நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் தமது சந்நிதியின் முன்னேயிருக்கின்ற வலிமை பொருந்திய திருநந்தி தேவரை விலகும்படிச் செய்து தரிசனங்கொடுத்தருளினார். எ-று

சிவலோகம் உடையவர்தம் திருவாயில் முன்னின்று
பவலோகங் கடப்பவர்தம் பணிவிட்டுப் பணிந்தெழுந்து
சுவலோடு வாரலையப் போவார்பின் பொருசூழல்
அவலோடும் அடுத்ததுகண்(டு) ஆதரித்துக் குளந்தொட்டார். 18

(இ - ள்.) அத்திருப்புன்கூரி லெழுந்தருளிய சிவலோகநாத ருடைய திருவாசலின் முன்னே நின்று பிறவிக்குக்காரணமாகிய இந்த உலகத்தைக் கடந்து செல்பவராகிய திருநாளைப் போவார் நாயானர் தம்முடைய பணிவிடையைவிட்டு வணங்கி எழுந் திருந்து முதுகில் வாத்தியங்களைக் கட்டுதற்காக வைத்திருக் கின்ற வார்கள் அலையும்படிப் போகின்றவர் பின்பு ஓரிடத்தில் ஒரு பள்ள மிருப்பதைக் கண்டு ஆசைக் கொண்டு அதை ஒரு குளமாகவெட்டினார். - எ-று.

வடங்கொண்ட பொன்னிதழி மணிமுடியார் திருவருளால்
தடங்கொண்ட குளத்தளவு சமைத்ததற்பின் தம்பெருமான்
இடங்கொண்ட கோயில்புறம் வலங்கொண்டு பணிந்தெழுந்து
நடங்கொண்டு விடைகொண்டு தம்பதியில் நண்ணினார். 19

(இ - ள்.) பொன்போலும் நிறமுள்ள கொன்றைமலர் மாலையைத் தரித்த அழகிய முடியையுடைய சிவபெருமானது திருவருளினால் அப்பள்ளத்தை விசாலமாகிய குளத்தளவாக வெட்டி ஏற்படுத்தின பின்பு தமது ஆண்டவராகிய சிவலோக நாதர் எழுந்தருளியிருக்கின்ற திருக்கோயிலைப் புறத்தில் வலமாக வந்து வணங்கியெழுந்து ஆனந்தத்தால் கூத்தாடி அக்கடவுளின் அனுமதி பெற்றுக் கொண்டு தம்முடைய ஊருக்கு வந்தார். - எ-று.

இத்தன்மை ஈசர்மகிழ் பதிபலவுஞ் சென்றிறைஞ்சி
மெய்த்ததிருத் தொண்டுசெய்து விரவுவார் மிக்கெழுந்த
சித்தமொடுந் திருத்தில்லைத் திருமன்று சென்றிறைஞ்ச
உய்த்தபெருங் காதலுணர்(வு) ஒழியாது வந்துதிப்ப. 20

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) இவ்விதமாகச் சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற பல ஸ்தலங்களுக்கும் போய் வணங்கி உண்மையாகிய திருத்தொண்டுகளைச் செய்து வருகின்றவராகிய அந்நாயனார் அன்பானது அதிகரித்தெழுந்த மனதோடு சிதம்பரத்திலுள்ள கனகசபைக்குப் போய் ஸ்ரீ நடராஜப் பெருமானை வணங்கும்படி தூண்டுகின்ற பேராசையோடு கூடிய விவேகமானது தம்மை விட்டு நீங்காமல் அடிக்கடி தோன்றிக் கொண்டிருக்க. - எ-று.

அன்றிரவு கண்துயிலார்; புலர்ந்ததற்பின் "அங்கெய்த
ஒன்றியணை தருதன்மை உறுகுலத்தோ டிசைவில்லை"
என் "றிதுவும் எம்பெருமான் ஏவல்" எனப் போக்கொழிவார்;
நன்றுமெழுங் காதல்மிக "நாளைப்போ வேன்" என்பார். 21

(இ - ள்.) (தாம் உள்ளத்திற் கொண்டிருக்கின்ற ஆசையின் மிகுதியினால்) அன்று இராத்திரி முழுமையும் நித்திரை கொள்ளாதவராய்ப் பொழுதுவிடிந்த பின்பு அச்சிதம்பரத்துக்குப் போகவென்றால் அவ்வூரினுள்ளே புகுந்து திருக்கோயிலுக்குப் போய் சுவாமியை வணங்கத் தகுந்த யோக்கியதை நம்முடைய குலத்துக்குச் சம்பந்தமில்லையேயென்று நினைத்து, இவ்வாறு போகக் கூடாமையும் எமது ஆண்டவருடைய திருவருளே யென்று அங்குப்போகாமல் நிற்பார்; பின்பு நன்றாக எழுந்த ஆசையானது தூண்ட நாளைக்கு அச்சிதம்பரத்துக்குப் போவேனென்று சொல்லுவார். - எ-று.

"நாளைப்போவேன்" என்று நாள்கள்செலத் தரியாது,
பூளைப்பூ வாம்பிறவிப் பிணிப்பொழியப் போவாராய்ப்,
பாளைப்பூங் கமுகுடுத்த பழம்பதியின் நின்றும்போய்,
வாளைப்போத் தெழும்பழனஞ் சூழ்தில்லை மருங்கணைவார். 22

(இ - ள்.) இவ்வாறு நாளைக்குப் போவேன் என்று அநேக நாள்கள் கழிந்து போக, ஸ்ரீநடராசப் பெருமானைத் தரிசிக்க வேண்டுமென்னும் ஆசையை அடக்கக் கூடாமல் பூளைப்பூவை யொத்த (நிலையாமையையுடைய) இப்பிறவியின் சம்பந்தமானது நீங்கும் பொருட்டுப் போகின்ற எண்ணமுடையவராய்ப் பாளைகளையுடைய பொலிவாகிய கமுகமரங்கள் சூழ்ந்த தம்முடைய பழமையாகிய ஆதனூரினின்றும் புறப்பட்டு ஆண்வாளை மீன்கள் துள்ளிவிளையாடுகின்ற வயல்கள் சூழ்ந்த தில்லைப்பதியின் எல்லையை வந்தடைந்தார். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செல்கின்ற போழ்தந்தத் திருவெல்லை பணிந்தெழுந்து,
பல்குஞ்செந் தீவளர்த்த பயில்வேள்வி எழும்புகையும்,
மல்குபெருங் கிடையோது மடங்கள் நெருங் கினவுங்கண்(டு),
அல்குந்தம் குலநினைந்தே அஞ்சிஅணைந் திலர்நின்றார். 23

(இ - ள்.) திருநாளைப் போவார் நாயனார் போகும் பொழுது அந்தச் சிதம்பரத்தின் திருவெல்லையைக் கண்டு நமஸ்கரித்து எழுந்து, சுவாலித்தெரிகின்ற சிவந்த அக்கினியை வளர்த்துச் செய்கின்ற யாக சாலைகளில் உண்டாகிய புகையும், மிகுந்த பிராமணப்பிள்ளைகளின் கூட்டங்கள் வேதத்தியயனஞ் செய்கின்ற நெருங்கிய மடங்களையும் பார்த்து, இழிவாகிய தம்முடைய குலத்தை நினைத்துப் பயந்து உள்ளே போகாமல் நின்றுவிட்டார். - எ-று.

நின்றவர்அங் கெய்தரிய பெருமையினை நினைப்பார் 'முன்,
சென்றிவையுங் கடந்தூர்சூழ் எயிற்றிருவா யிலைப்புக்கார்,
குன்றனைய மாளிகைகள் தொறுங்குலவும் வேதிகைகள்,
ஒன்றியமூ வாயிரம்அங் குளஎன்பார் ஆகுதிகள். 24

(இ - ள்.) அவ்வெல்லையில் நின்று கொண்டிருந்த திருநாளைப் போவார் நாயனார் தாம் உள்ளே போகக்கூடாத அவ்வாலயத்தின் பெருமையை நினைத்து முற்பட்டுப் போய், அந்த எல்லையையுங் கடந்து, ஊரைச்சூழ்ந்திருக்கும் மதிலின் திருவாசலையடைந்தார்; மலைபோலுயர்ந்த மாளிகைகள் தோறும் விளங்குகின்ற வேதிகைகளும், பொருந்திய மூவாயிரம் ஓமசாலைகளும் அங்குள்ளனவென்று சொல்லிக் கொள்வார். - எ-று.

"இப்பரிசா யிருக்கவெனக் கெய்தல்அரி" தென்றஞ்சி
அப்பதியின் மதிற்புரத்தின் ஆராத பெருங்காதல்
ஒப்பரிதாய் வளர்ந்தோங்க உள்ளுருகிக் கைதொழுதே
செப்பரிய திருவெல்லை வலங்கொண்டு செல்கின்றார். 25

(இ - ள்.) தில்லை மூவாயிரவர்களுடைய வீடுகள் இத்தன்மையாயிருக்க (அதனால்) எனக்கு அவ்விடத்திற்குப் போகுதல் அருமையென்று பயந்து அந்தச் சிதம்பரத்தின் மதிலின் புறத்தில் நீங்காத பேரன்பானது சமானமில்லாமல், வளர, மனமுருகிக்கைகூப்பி வணங்கிக் கொண்டு சொல்லுதற் கரிய திருவெல்லையை வலஞ்செய்து கொண்டு போகின்றவரா யினார். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"இவ்வண்ணம் இரவுபகல் வலஞ்செய்தங் கெய்தரிய,
அவ்வண்ணம் நினைந்தழிந்த அடித்தொண்டர் அயர்வெய்தி,
"மைவண்ணத் திருமிடற்றார் மன்றில்நடங் கும்பிடுவ,
தெவ்வண்ணம்" எனநினைந்தே ஏசறவி னொடுந்துயில்வார். 26

(இ - ள்.) இந்தப் பிரகாரம் இரவும் பகலுமாக வலம் வந்து கொண்டு, தாம் உள்ளே போகக்கூடாத தன்மையை நினைத்து வருத்தப்பட்ட திருத்தொண்டராகிய திருநாளைப் போவார் நாயனார் சோர்வடைந்து, காளகண்டத்தையுடைய ஸ்ரீநடராஜப் பெருமான் கனகசபையில் செய்தருளுகின்ற திருநடனத்தைத் தரிசிப்பது எவ்வாறென்று நினைத்து மன வருத்தத்தோடும் நித்திரைச் செய்வாராயினார். - எ-று.

"இன்னல்தரும் இழிபிறவி இதுதடை" என் றேதுயில்வார்
அந்நிலைமை அம்பலத்துள் ஆடுவார் அறிந்தருளி
மன்னுதிருத் தொண்டரவர் வருத்தமெலாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்துணை முறுவலொடும் அருள் செய்வார். 27

(இ - ள்.) துன்பத்தைத் தருகின்ற இழிவாகிய இந்த நீசப் பிறவியானது (நாம் ஸ்ரீ நடராச மூர்த்தியைத் தரிசிப்பதற்குத்) தடையா யிருக்கின்றதென்று நினைத்து நித்திரை செய்கின்ற அத்திருநாளைப் போவார் நாயனாருடைய மனநிலைமையைக் கனகசபையில் ஆநந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற ஸ்ரீநடராசப் பெருமான் அறிந்து, நிலைபெற்ற திருத்தொண்டரா கிய அந்நாயனாரது மனவருத்தத்தையெல்லாம் தீர்க்கும் பொருட்டுச் சொப்பனத்தில் அவர்க்கு முன்னே வந்து புன்சிரிப் புடனேயருளிச் செய்கின்றார். - எ-று.

"இப்பிறவி போய்நீங்க எரியினைட நீ மூழ்கி
முப்புரிநூல் மார்பருடன் முன்னணைவாய்" என்னமொழிந்(து)
அப்பரிசே தில்லைவாழ் அந்தணர்க்கும் எரியமைக்க
மெய்ப்பொருளா னார்அருளி அம்பலத்தே மேவினார். 28

(இ - ள்.) மெய்ப் பொருளாகிய சிவபெருமான் (அன்பனே!) இந்த இழிபிறப்பானது ஒழியும்படி நீ அக்கினியில் முழுகி யெழுந்து மூன்று புரியாகிய பூணூலைத் தரித்த மார்பினை யுடைய தில்லை வாழந்தணர்களோடு நம்முடைய சபைக்கு முன்னே வந்து தரிசிக்கக்கடவாயென்று அருளிச் செய்து, அவ்வரறாகவே தில்லையில் வாழ்ந்தருளும் மூவாயிரம் பிராமணர்களுக்கும் (சொப்பனத்தில் தோன்றி திருநாளைப் போவார் மூழ்குதற்கு) நெருப்பினை வளர்க்கக் கட்டளையிட்டுத் திருவம்பலத்தில் எழுந்தருளினார். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தம்பெருமான் பணிகேட்ட தவமறையோர் எல்லாரும்
அம்பலவர் திருவாயின் முன்(பு)அச்ச முடன்ஈண்டி
"எம்பெருமான் அருள்செய்த பணிசெய்வோம்" என்றேத்தித்
தம்பரிவு பெருகவருந் திருத்தொண்டர் பாற்சார்ந்தார். 29

(இ - ள்.) தமது பெருமானாகிய ஸ்ரீ நடராசமூர்த்தியினது கட்டளையைக் கேட்ட தவத்தினையுடைய தில்லை மூவாயிர வர்கள் யாவரும் அம்பலவாணரது கோயிற்றிருவாசலின் முன்னே அச்சத்தோடுகூடி எமது ஆண்டவராகிய சிவ பெருமான் கட்டளையிட்டருளிய பணிவிடையை யாம் செய்வோமென்று துதித்து, தம்முடைய அன்பானது அதிகரிக்கும்படி அங்குவந்திருக்கும் திருநாளைப் போவார் நாயனாரிடத்தில் அடைந்தார்கள். - எ-று.

"ஐயரே! அம்பலவர் அருளால்இப் பொழுதணைந்தோம்;
வெய்யஅழல் அமைத்துமக்குத் தரவேண்டி" எனவிளம்ப
நையுமனத் திருத்தொண்டர் "நான்உய்ந்தேன்" எனத்தொழுதார்;
தெய்வமறை முனிவர்களும் தீயமைத்த படிமொழிந்தார். 30

(இ - ள்.) ஐயரே! ஸ்ரீ நடராசப் பெருமானுடைய கட்டளை யினால் இப்பொழுது வெவ்விய அக்கினியை மூட்டி (நீர் அதில் மூழ்கும்படி) உமக்குக் கொடுக்க வேண்டி வந்தோமென்று சொல்ல, இளகிய மனதினையுடைய திருநாளைப் போவார் நாயனார் அடியேன் கடைத்தேறினேன் என்று அவர்களை வணங்கினார்; தெய்வத் தன்மை பொருந்திய வேதங்களை யுணர்ந்த தில்லை மூவாயிரவர்களும் அங்கு அக்கினி வளர்த் ததைச் சொன்னார்கள். - எ-று.

மறையவர்கள் மொழிந்ததற்பின் தென்றிசையின் மதிற்புறத்துப்
பிறையுரிஞ்சுந் திருவாயின் முன்னாகப் பிஞ்ஞகர்தம்
நிறையருளால் மறையவர்கள் நெருப்பமைத்த குழிஎய்தி
இறையவர்தாள் மனங்கொண்டே எரிசூழ வலங்கொண்டார். 31

(இ - ள்.) (தீயைவளர்த்தோமென்று) தில்லைவாழந் தணர்கள் சொன்னபின்பு, தெற்குத்திக்கிலுள்ள மதிலின் புறத்தில் சந்திரன் தவழுகின்ற திருக்கோபுர வாசலுக்குமுன்னே சிவபெருமானுடைய நிறைந்த திருவருளினால் தில்லைமூவாயிர வர்கள் அக்கினியைவளர்த்திருக்கின்ற குழியையடைந்து, ஸ்ரீ நடராசப் பெருமானுடைய நிறைந்ததிருவருளினால் தில்லை மூவாயிரவர்கள் அக்கினியை வளர்ந்திருக்கின்ற குழியை யடைந்து, ஸ்ரீ நடராசப் பெருமானுடைய திருவடியை மனதில் தியானித்துக் கொண்டு அந்த அக்கினியை வலமாகச் சூழ்ந்து வந்தார். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கைதொழுது நடமாடுங் கழலுன்னி அழல்புக்கார்;
எய்தியஅப் பொழுதின்கண் எரியின்கண் இம்மாயப்
பொய்தகையும் உருவொழித்துப் புண்ணியமா முனிவடிவாய்
மெய்திகழ்வெண் ணூல்விளங்க வேணிமுடி கொண்டெழுந்தார். 32

(இ - ள்.) தமது கைகளைக் கூப்பி வணங்கித் திருநடனஞ் செய்கின்ற சபாநாதரது குஞ்சிதபாதத்தை மனதில் தியானித்துக் கொண்டு அந்த அக்கினியில் முழுகினார்; அப்படிச் செய்த பொழுது, அந்த நெருப்பில் இந்த மயக்கத்துக் கேதுவாகிய நிலையில்லாத சரீரத்தையொழித்துப் புண்ணியத்தையுடைய பெருமை பொருந்திய பிராமணமுனியின் வடிவமாய்த் திருமேனியில் பூணூலானது விளங்கச் சடை முடியோடு எழுந்தார். - எ-று.

செந்தீமேல் எழும்பொழுது செம்மலர்மேல் வந்தெழுந்த
அந்தணன்போல் தோன்றினார்; அந்தரதுந் துபிநாதம்
வந்தெழுந்த(து) இருவிசும்பில்; வானவர்கள் மகிழ்ந்தார்த்துப்
பைந்துணர்மந் தாரத்தின் பனிமலர்மா ரிகள் பொழிந்தார். 33

(இ - ள்.) சிவந்த நெருப்பில் முழுகி மேல் எழுந்த பொழுது (விஷ்ணுவினது நாபியாகிய) சிவந்த தாமரை மலரில் தோன்றி யெழுந்த பிரமனைப் போல் விளங்கினார்; (அப்பொழுது) பெருமை பொருந்திய ஆகாயத்தில் தேவதுந்துபியின் ஒலியானது உண்டாயிற்று; தேவர்கள் மனமகிழ்ந்து ஆரவாரித்துப் பசியதுளிர்களையுடைய கற்பகவிருடசத்தின் குளிர்ந்த மலர் மழைகளைச் சொரிந்தார்கள். - எ-று.

திருவுடைய தில்லைவாழ் அந்தணர்கள் கைதொழுதார்;
பரவரிய தொண்டர்களும் பணிந்துமனம் களிபயின்றார்;
அருமறைசூழ் திருமன்றில் ஆடுகின்ற கழல்வணங்க
வருகின்றார் திருநாளைப் போவாராம் மறைமுனிவர். 34

(இ - ள்.) திருவருட் செல்வத்தையுடைய தில்லை வாழந்தணர்கள் மூவாயிர வரும் கைகூப்பித் தொழுதார்கள்; சொல்லுதற்கரிய மற்றைச் சிவனடியார்களும் வணங்கி மனதில் களிப்படைந்தார்கள்; அருமையாகிய வேதங்கள் சூழ்ந்து முழங்குகின்ற கனகசபையில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற (சிவபெருமானது) திருவடிகளை வணங்கும் பொருட்டுத் திருநாளைப் போவார் என்னும் திருப்பெயரையுடைய ஒரு வேத முனிவரானவர் வருகின்றவரனார். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தில்லைவாழ் அந்தணரும் உடன்செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி
ஒல்லைபோய் உட்புகுந்தார்; உலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்படார் யாவர்களும் கண்டிலரால். 35

(இ - ள்.) தில்லைவாழந்தணர்கள் மூவாயிரவரும் தம்மோடு கூடவரப்போய்த் தினைக் கொல்லையிலிருக்கின்ற மானைத் தரித்த திருக்கரத்தினையுடைய ஸ்ரீ நடராசப் பெருமானது தெற்குக் கோபுரத்தைத் தொழுது வணங்கி விரைவாகப் போய் உள்ளே புகுந்து, உலகத்தார் திருவருள் பெற்றுய்யும் பொருட்டு ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற கனகசபையின் திருவெல்லையை யடைந்தார்; பின்பு அங்கு நின்ற யாவர்களும் அவரைக் காணாதவர்களானார்கள். - எ-று.

அந்தணர்கள் அதிசயித்தார்; அருமுனிவர் துதிசெய்தார்;
வந்தணைந்த திருத்தொண்டர் தம்மைவினை மாசறுத்துச்
சுந்தரத்தா மரைபுரையுந் துணையடிகள் தொழுதிருக்க
அந்தமிலா ஆனந்தப் பெருங்கூத்தர் அருள்புரிந்தார். 36

(இ - ள்.) தில்லை வாழந்தணர்கள் ஆச்சரியப்பட்டார்கள்; அருமையாகிய முனிவர்கள் ஸ்தோத்திரஞ் செய்தார்கள்; முடிவில்லாத ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற ஸ்ரீ நடராசப் பெருமான் முனிவர் வடிவமாகத் தம்மைவந்தடைந்த அத்திரு நாளைப் போவார் நாயனாரது தீவினையாகிய களங்கத்தை யொழித்து அழகிய தாமரைமலர் போன்ற தமது இரண்டு திருவடிகளையும் வணங்கியிருக்கும்படி கிருபை செய்தருளினார். - எ-று.

மாசுடம்பு விடத்தீயின் மஞ்சனசெய் தருளியெழுந்(து)
ஆசில்மறை முனியாகி அம்பலவர் தாளடைந்தார்
தேசுடைய கழல்வாழ்த்தித் திருக்குறிப்புத் தொண்டர் வினைப்
பாசமற முயன்றவர்தம் திருத்தொண்டின் பரிசுரைப்பாம். 37

(இ - ள்.) (தமக்குமுன்னிருந்த) களங்கமாகிய உடம்பானது நீங்கும்படி அக்கினியில் முழுகிஎழுந்து, குற்றமற்ற பிராமண முனிவராகிச் சபாநாதருடைய திருவடியையடைந்த திருநாளைப் போவார் நாயனாருடைய அழகிய ஸ்ரீ பாதங்களைத் துதித்து, தீவினையாகிய பாசம் அறும்படியாக முயன்ற திருக்குறிப்புத் தொண்ட நாயனார் செய்த திருத் தொண்டின் தன்மையைச் சொல்லுகின்றோம். - எ-று.

திருநாளைப் போவார் நாயனார் புராணம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25. திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணம்

ஏயு மாறுபல் உயிர்களுக் கெல்லையில் கருணைத்
தாய னாள்தனி யாயின தலைவரைத் தழுவ
ஆயு நான்மறை போற்றநின் றருந்தவம் புரியத்
தூய மாதவம் செய்தது தொண்டைநன் னாடு. 1

(இ - ள்.) பல உயிர்களுக்கும் பக்குவத்திற்கிசைய அளவில்லாத கிருபையைவிளைக்கின்ற உலகமாதாவாகிய உமாதேவியார் ஒப்பற்ற தமது நாயகராகிய சிவபெருமானைத் தழுவும் பொருட்டு, அறிஞர்களால் ஆராயப்பட்ட நான்கு வேதங்களும் துதிக்கும்படி நின்று அருமையாகிய தவஞ் செய்ய பரிசுத்தம் பொருந்திய பெரிய தவத்தைச் செய்திருப்பது நல்ல தொண்டை நாடாம். - எ-று.

நன்மை நீடிய நடுநிலை ஒழுக்கத்து நயந்த
தன்மை மேவிய தலைமைசால் பெருங்குடி தழைப்ப
வன்மை ஓங்கெயில் வளம்பதி பயின்றது வரம்பின்
தொன்மை மேன்மையில் நிகழ்பெருந் தொண்டைநன்னாடு. 2

(இ - ள்.) நன்மை மிகுந்த நடுவுநிலைமையாகப் பொருந்திய ஒழுக்கத்தால் விரும்பிய குணத்தினையுடைய தலைமையாகிய பெரிய குடிகள் விருத்தியடையும் படி வலிமை பொருந்திய மதிலால் சூழப்பட்ட வளப்பத்தையுடைய நகரங்களுக்கு இடமாயிருக்கின்றது, நன்னெறியின் பழமையான மேன்மையினால் விளங்குகின்ற பெருமையினையுடைய நல்ல தொண்டை நாடு. - எ-று.

நற்றி றம்புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்(து)
உற்ற போதுதம் உயிரையும் வணிகனுக் கொருகால்
சொற்ற மெய்ம்மையுந் தூக்கிஅச் சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெருந்தொண்டைநாடு. 3

(இ - ள்.) நல்ல செய்கைகளைச் செய்கின்ற பழையனூரில் வாசஞ் செய்து சிவபெருமானுக்குக் குற்றேவல்செய்யும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடியவர்களாகிய வேளாளர்கள் ஒரு குற்றம் நேரிட்ட பொழுது, தங்கள் உயிரையும், ஒருவர்த்தகனுக்கு ஒருதரம் தாங்கள் சொல்லிய சத்தியவார்த்தையையும் சீர்தூக்கி பார்த்து, அவ்வர்த்தகனுக்குச் சொல்லிய சத்தியமொழியையே காப்பாற்றும் பொருட்டுப் பழிக்குப் பழியாகத் தங்களுயிரைக் கொடுக்கப் பெற்ற மேன்மையினால் சிறப்படைந்துள்ளது, பெரிய தொண்டைநாடு. -எ-று.

ஆணை யாமென நீறுகண்(டு) "அடிச்சேரன்" என்னும்
சேணு லாவுசீர்ச் சேரனார் திருமலை நாட்டு
வாணி லாவுபூண் வயவர்கள் மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது பெருந்தொண்டை நாடு. 4

(இ - ள்.) சிவபெருமானது அருள்வடிவமென்று (ஒரு வண்ணான் ஆடையைவெளுக்க உழமண் மூட்டையைக் கொண்டு போக அது அவனுடம்பிற் கசிவுற்றிருத்தலைத்) திருவெண்ணீறாகக் கண்டு அடியேன் சேரனென்று வணங்கிக் கூறிய நெடுந்தூரம் பரவிய கீர்த்தியையுடைய சேரமான் பெருமாணாயனார் அரசு செய்திருந்த மலை நாட்டிலுள்ள ஒளிவீசுகின்ற ஆபரணங்களையணிந்த வணிகர்கள் மைத்துன ராயிருக்கும் சம்பந்தத்தை விரும்ப நீடித்த முறைமையை யுடையது பெருமை பொருந்திய தொண்டை நாடு. -எ-று.

கறைவி ளங்கிய கண்டர்பாற் காதல்செய் முறைமை
நிறைபு ரிந்திட நேரிழை அறம்புரிந் ததனால்
பிறையு ரிஞ்(சு)எயிற் பதியில் "பெருந்தொண்டை நாட்டு
முறைமை யா"மென உலகினில் மிகுமொழி உடைத்தால். 5

(இ - ள்.) கருநிறம் விளங்குகின்ற காளகண்டத்தையுடைய சிவபெருமானிடத்தில் அன்பு செய்கின்ற முறைமையானது நிறைவாக உமாதேவியார் முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்தபடியினால், சந்திரன் தவழ்ந்து செல்கின்ற மதில் சூழ்ந்த காஞ்சிபுரம் விளங்குதற்கிடமாகிய பெருமை பொருந்திய தொண்டை நாடனாது, எல்லா நாடுகளைப் பார்க்கிலும் சிறந்த நீதியையுடையதாமென்று உலகத்தில் மேம்பட்டதாகிய ஒரு வார்த்தையையுடைத்தா யிருக்கின்றது. - எ-று.

தாவில் செம்மணி அருவியா றிழிவன சாரல்;
பூவில் வண்டினம் புதுநற(வு) அருந்துவ புறவம்;
வாவி நீள்கயல் வரம்பிற உகைப்பன மருதம்;
நீவி நித்திலம் பரத்தியர் உணக்குவ நெய்தல். 6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அத் தொண்டை நாட்டிலுள்ள மலைச்சாரலிலிருந்து குற்றமற்ற மாணிக்கங்களோடு அருவியாறுகள் இறங்குகின்றன; முல்லை நிலத்தில் மலர்களிலுள்ள புதிய தேனை வண்டின் கூட்டங்கள் உண்ணுகின்றன; மருதநிலத்தில் தடாகங்களிலுள்ள நீண்ட கெண்டை மீன்கள் வயல் வரம்புகள் இற்றுவிழும்படியாகப் பாய்கின்றன; நெய்தல் நிலத்தில் பரத்தியர்களால் முத்துக்கள் கழுவி உலர்த்தப்படுகின்றன. எ-று.

குறவர் பன்மணி அரித்(து)இதை விதைப்பன குறிஞ்சி;
கறவை ஆன்நிரை மானுடன் பயில்வன கானம்;
பறவை தாமரை யிருந்திற வருந்துவ பழனம்;
சுறவ முள்மருப் பணங்காய் வனகழிச் சூழல். 7

(இ - ள்.) குறிஞ்சி நிலத்திலுள்ள குறவர்களால் பல ரத்தினங்களையும் அரித்தெடுத்து காராமணிமுதலிய தானியங்கள் விதைக்கப்படுகின்றன; முல்லை நிலத்தில் கறக்கின்ற பசுக் கூட்டங்கள் மான் கூட்டங்களோடு சஞ்சரிக்கின்றன; மருத நிலத்தில் பறவைகள் தாமரைமலர்களிலிருந்து இறால் மீன்களைப் புசிக்கின்றன; கழியையுடைய நெய்தல் நிலத்தில் சுறாமீன்களினது முள்ளையுடைய கொம்புகளை தெய்வத்தின் அறிகுறியாக வைத்து திருவிழாக் கொண்டாடப்படுகின்றன. - எ-று.

கொண்டல் வானத்தின் மணிசொரி வனகுல வரைப்பால்;
தண்டு ணர்க்கொன்றை பொன்சொரி வனதள வயற்பால்;
வண்டல் முத்தநீர் மண்டுகால் சொரிவன வயற்பால்;
கண்டல் முன்துறைக் கரிசொரி வனகலங் கடற்பால். 8

(இ - ள்.) மேகங்கள் ஆகாயத்திலிருந்து உயர்வாகிய மலைகளின் மேல் முத்துக்களைச் சொரிகின்றன; முல்லை நிலத்தின் அருகில் குளிர்ந்த பூங்கொத்துக்களையுடைய கொன்றை விருட்சங்கள் மலர்களாகிய பொன்னைச் சொரிகின்றன; மருத நிலத்தில் நீர் விசையாகச் செல்கின்ற வாய்க்கால்கள் அந்த நிலத்துச் சிறுபெண்கள் விளையாடிச்சிந்திய முத்துக்களைக் கரையில் ஒதுக்குகின்றன; கடலினிடத்துள்ள கப்பல்கள் தாழைகளையுடைய துறைகளினிடத்தில் யானைகளைச் சொரிகின்றன. - எ-று.

தேனி றைந்தசெந் தினையிடி தருமலைச் சீறூர்;
பானி றைந்தபுற் பதத்தன முல்லைநீள் பாடி;
தூநெ லன்னம்நெய் கன்னலின் கனியதண் டுறையூர்;
மீனி றைந்தபே ருணவின வேலைவைப் பிடங்கள். 9

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) குறிஞ்சிநிலத்திலிருக்கின்ற சிறிய ஊர்கள் தேன்விட்டு பிசைந் சிவந்த தினைமாவைத் தன்னிடத்தில் வைத்திருக்கின்றன; முல்லை நிலத்திலிருக்கின்ற நீண்ட இடையர்பாடிகள் பால்விட்டு சமைத்த புல்லரிசிச் சோற்றை யுடையனவா யிருக்கின்றன; குளிர்ந்த நீர்த்துறைகளையுடைய மருதநிலத்தூர்கள் பரிசுத்தமாகிய நெல்லரிசிச்சோறும், செய்யும், கருப்பஞ் சாறும், இனிய பழங்களுமாகிய இவைகளை யுடையனவாயிருக்கின்றன; சமுத்திரச்சார்பாகிய நெய்தல் நிலத்தூர்கள் மீன்கள் கலந்த பெரிய உணவினையுடையனவா யிருக்கின்றன. - எ-று.

குழல்செய் வண்டினங் குறிஞ்சியாழ் முரல்வன குறிஞ்சி;
முழவு கார்கொள முல்லைகள் முகைப்பன முல்லை;
மழலை மென்கிளி மருதமர் சேக்கைய மருதம்;
நிழல்செய் கைதைசூழ் நெற்தலங் கழியன நெய்தல். 10

(இ - ள்.) குறிஞ்சிநிலத்தில் (குறப் பெண்களுடைய) கூந்தலில் மொய்க்கின்ற வண்டின் கூட்டங்கள் குறிஞ்சியாழி னிசையைப் பாடுகின்றன; முல்லை நிலத்தில் முழவப்பறைபோல மேகங்கள் முழங்க முல்லைச் செடிகள் அரும்புவிடுகின்றன; மருத நிலத்தில் மழலைச் சொற்களையுடைய மிருதுவாகிய கிளிப்பிள்ளைகள் மருதமரங்களைத் தமக்குத் துயிலிடமாக வுடையன; நெய்தல்நிலங்கள் நிழலைக் கொடுக்கின்ற தாழைகள் சூழ்ந்த நெய்தல் மலர்கள் மலர்ந்திருக்கும் கழிக்கரையை யுடையன. - எ-று.

மல்கும் அப்பெரு நிலங்களில் வரைபுணர் குறிஞ்சி
எல்லை எங்கணும் இறவுளர் ஏனல்முன் விளைக்கும்
பல்பெ ரும்புனம் பயில்வன படர்சிறைத் தோகை
சொல்லும் அப்புனங் காப்பவுஞ் சுரிகுழல் தோகை. 11

(இ - ள்.) வளம் பொருந்திய முன்சொல்லிய அந்த நால்வகை நிலங்களில் மலையைச் சார்ந்த குறிஞ்சி நிலத்தின் இடங்களி லெல்லாம் குறவர்கள் தினைப்பயிரிடுகின்ற பல பெரிய தினைப் புனங்களில், படர்ந்த கலாபத்தையுடைய மயில்கள் சஞ்சரிக்கின் றன; புகழ்ந்து சொல்லப்பட்ட அந்தத் தினைப்புனங்களைக் காக்கின்றவர்களும் சுருண்ட கூந்தலையுடைய மயில் போலும் சாயலைப் பெற்ற குறமாதர்களாய். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்கண் வான்மிசை அரம்பையர் கருங்குழற் சுரும்பு
பொங்கு பூண்முலைக் கொடிச்சியர் குழல்மூழ்கிப் போகாச்
செங்கண் மால்விடை யார்திருக் காளத்தி என்னும்
மங்குல் சூழ்வரை நிலவிய வாழ்வினால் மல்கும். 12

(இ - ள்.) அழகிய இடமகன்ற விண்ணுலகத்தில் வாழ்ந் திருக்கும் அரம்பை முதலிய தெய்வப் பெண்களினது கரிய கூந்தலில் மொய்க்கின்ற வண்டுகள் ஒளி விளங்குகின்ற ஆபரணத்தையணிந்த ஸ்தனங்களையுடைய குறப்பெண்களினது கூந்தலில் விழுந்து (வாசனை மிகுதியால்) அக்கூந்தலைவிட்டு நீங்காதிருக்கின்ற சிவந்த கண்களையுடைய விஷ்ணு வாகிய ரிஷபத்தை வாகனமாகவுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்காளத்தியென்று சொல்லப்பட்ட மேகங்கள் சூழ்ந்த மலையானது விளங்குகின்ற பல வளங்களினால் உயர்வு பெற்றிருக்கும். - எ-று.

பேறு வேறுசூழ் இமையவர் அரம்பையர் பிறந்து
மாறில் வேடரும் மாதரு மாகவே வணங்கும்
ஆறு சூழ்சடை அண்ணலார் திருவிடைச் சுரமும்
கூறு மேன்மையின் மிக்கதந் நாட்டுவண் குறிஞ்சி. 13

(இ - ள்.) மோக்ஷத்தை விரும்பி வெவ்வேறாகச் சூழ்ந்து வலம் வருகின்ற தேவர்களும் தெய்வமாதர்களும், மாறுபாடில்லாத வேடர்களும் வேடிச்சிகளுமாகப் பிறந்து வணங்குகின்ற கங்கை நதிதங்கிய சடையினையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருவிடைச்சுரமென்னும் ஸ்தலமும் புகழ்ந்து சொல்லத்தக்க மேன்மையோடு சிறந்திருக்கிறது; அத்தொண்டை நாட்டிலுள்ள வளப்பம் பொருந்திய குறிஞ்சி நிலத்தில். - எ-று.

அம்பொன் வார்குழற் கொடிச்சிய ருடன்அர மகளிர்
வம்பு லாமலர்ச் சுனைபடிந் தாடுநீள் வரைப்பின்
உம்பர் நாயகர் திருக்கழுக் குன்றமும் உடைத்தால்
கொம்பர் வண்டுசூழ் குறிஞ்சிசெய் தவங்குறை உளதோ? 14

(இ - ள்.) அழகிய பொன்னிறமுள்ள மலர்களைமுடித்த கூந்தலையுடைய வேடப் பெண்களோடு தெய்வமாதர்கள் வாசனை வீசுகின்ற மலர்கள்நெருங்கிய சுனைநீரில் படிந்து முழுகுகின்ற நீண்ட இடங்களையுடைய தேவர்களுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாயகராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கழுக்குன்ற மென்னும் ஸ்தலத்தையும் பூங்கொம்புகளினிடத்துள்ள வண்டுகள் சூழ்ந்திருக்கும் குறிஞ்சிநிலம் உடைத்தாயிருக்கின் றது; ஆதலால் அந்நிலம் செய்த தவமானது குறைவுள்ளதென்று சொல்லலாமே. - எ-று.

கோல முல்லையுங் குறிஞ்சியும் அடுத்தசில் லிடங்கள்
நீல வாட்படை நீலிகோட் டங்களும் நிரந்து
கால வேனிலிற் கடும்பகற் பொழுதினைப் பற்றிப்
பாலை யுஞ்சொல் லாவன உளபரல் முரம்பு. **15**

(இ - ள்.) அழகிய முல்லை நிலத்தையும் குறிஞ்சி நிலத்தை யும் அடுத்த சில இடங்கள் நீலநிறமுள்ள வாளாயுதத்தைப் பிடித்த காளியினது கோயில்களும் நெருங்கியுள்ளதாய்ப் பெரும் பொழுதாகிய வேனிற்காலத்தில் கொடிய பகற் பொழுதைச் சேர்த்துப் பாலைநிலமென்றுஞ் சொல்லப்படுகின்றன; பருக்கைக் கற்களையுடைய சிலமேட்டுநிலங்கள். - எ-று.

சொல்லும் எல்லையின் புறத்தன துணர்ச்சுரும் பலைக்கும்
பல்பெ ரும்புனற் கானியா றிடையிடை பரந்து
கொல்லை மெல்லிணர்க் குருத்தின்மேற் படர்ந்தபூம் பந்தர்
முல்லை மென்புதல் முயலுகைத் தடங்குநீள் முல்லை. **16**

(இ - ள்.) வண்டுகள் மொய்க்கினற் பூங்கொத்துக்களை அலைத்துக் கொண்டு ஓடிவருகின்ற வெள்ளமாகிய நீரை யுடைய பல காட்டாறுகள் இடையிடையே பெருக் கெடுத்து முல்லை நிலத்திலுள்ள மிருதுவான துளிர்களையுடைய குருந்தமரத்தின்மேல் பூப்பந்தல் போலப் படர்ந்திருக்கின்ற முல்லைக் கொடிகளின் சிறியபுதரிலிருக்கும் முயல்களை ஓட்டித் தானும் தன் பெருக்கினின்றும் அடங்கும் நீண்ட முல்லை நிலம் முன் சொல்லிய குறிஞ்சி நிலத்தினது எல்லையின் புறத்திலுள் ளன.

பிளவு கொண்டதண் மதிநுதற் பேதையர் எயிற்றைக்
களவு கொண்டது தளவெனக் களவலர் தூற்றும்;
அளவு கண்டவர் குழல்நிறங் கனியும்அக் களவைத்
தளவு கண்டெதிர் சிரிப்பன் தமக்குமுண் டென்று. **17**

(இ - ள்.) குளிர்ச்சி பொருந்திய மூன்றாம்பிறையையொத்த நெற்றியையுடைய இடைச்சியர்களின் பற்களினழகை முல்லை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யரும்புகள் திருடிக் கொண்டனவென்று களாச்செடிகள் அலர்தூற்றுகின்றன; அத்தன்மையையறிந்து அப்பெண்களினது கூந்தலின் நிறம்போலப் பழுத்திருக்கின்ற அக்களாச் செடியை முல்லைச் செடிகள் பார்த்துத் தமக்குச் சொல்லியது போல அவைகளுக்கும் திருட்டுத்தனம் உண்டென்று எதிரே சிரிக்கின்றன. - எ-று.

மங்கை யர்க்குவாள் விழியிணை தோற்றமான் குலங்கள்
எங்கும்; மற்றவ ரிடைக்கிடை மலர்க்கொடி எங்கும்;
அங்கண் "முல்லையின் தெய்வ"மென் றருந்தமிழ் உரைக்கும்
செங்கண் மால்தொழுஞ் சிவன்மகிழ் திருமுல்லை வாயில். 18

(இ - ள்.) அழகிய முல்லை நிலத்திற்குத் தெய்வமென்று அருமையாகிய பொருளிலக்கண நூலிற் சொல்லப்பட்ட சிவந்த கண்களையுடைய விஷ்ணுவானவர் தொழுகின்ற சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருமுல்லை வாயிலினிடத்து, இடைப் பெண்களினது வாள்போன்ற கண்களுக்குத் தோற்ற மான் கூட்டங்கள் எவ்விடத்தும் உள்ளன; அப்பெண்களின் இடைகளுக்குத் தோற்ற பூங்கொடிகள் எங்கும் படர்ந்திருக்கின்றன. - எ-று.

நீறு சேர்திரு மேனியர் நிலாத்திகழ் முடிமேல்
மாறில் கங்கைதான் அவர்க்குமஞ் சனந்தர அணைந்தே
ஊறு நீர்தரும் ஒளிமலர்க் கலிகைமா நகரை
வேறு தன்பெரு வைப்பென விளங்குமா முல்லை. 19

(இ - ள்.) திருநீறு சேர்ந்து விளங்குகின்ற திருமேனியையுடைய சிவபெருமானது திருமுடியின் மேலுள்ள அழிவில்லாத கங்கையானது அப்பெருமானுக்குத் திருமஞ்சன நீரைக் கொடுக்கும் படியாக உலகத்தில் வந்து இடைவிடாமல் நீர் ஊறுகின்ற ஓர் தீர்த்தத்தைக் கொடுக்கின்ற ஒளி பொருந்திய மலர்களையுடைய திருவூறலென்னும் ஸ்தலத்தை வேறாகத் தனக்குப் பெரிய இடமாகக் கொண்டு முல்லைநிலம் விளங்குகின்றது. - எ-று.

வாச மென்மலர் மல்கிய முல்லைசூழ் மருதம்
வீசு தெண்டிரை நதிபல மிக்குயர்ந் தோடிப்
பாச டைத்தடந் தாமரைப் பழனங்கள் மருங்கும்
பூசல் வன்கரைக் குளங்களும் ஏரியும் புகுவ. 20

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) வாசனை வீசுகின்ற மிருதுவாகிய மலர்கள் நிறைந்த முல்லை நிலத்தையடுத்த மருதநிலத்தில் தெளிவாகிய அலைவீசுகின்ற அநேக நதிகள் மிகுதியாக வெள்ளம் பெருகிப் பாய்ந்து பசுமை பொருந்திய இலைகள் தங்கிய விசாலமாகிய தாமரை மலர்களையுடைய வயல்களிலும், அலைமோதுகின்ற வலிய கரைகளையுடைய குளங்களிலும், ஏரிகளிலும் புகுகின்றன. எ-று.

துங்க மாதவன் சுரபியின் திருமுலை சொரிபால்
பொங்கு தீர்த்தமாய் நந்திமால் வரைமிசைப் போந்தே
அங்கண் நித்திலம் சந்தனம் அகிலொடு மணிகள்
பங்க யத்தடம் நிறைப்பவந் திழிவது பாலி. 21

(இ - ள்.) உயர்வாகிய தவத்தினையுடைய வசிட்ட முனிவரது காமதேனுவின் திருமுலையினின்றும் சொரிந்த பாலானது பெருமை பொருந்திய தீர்த்தமாய் நந்திபர்வதத்தினின்றும் பூமியில் இழிந்து, அவ்விடத்திலுள்ள முத்துக்களையும், சந்தனக்கட்டைகளையும், அகிற் கட்டைகளோடு இரத்தினங்களையும் தாமரைத் தடாகங்களில் கொண்டு வந்து நிறைக்கும் படி இறங்குகின்றது பாலாறானது.

பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலின் மணல்திடர் பிசைந்துகை வருட
வெள்ள நீரிரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயல் பருமடை உடைப்பது பாலி. 22

(இ - ள்.) குழந்தைகள் தடவ மிகுந்த பாலைச் சொரிகின்ற முலையையுடைய தாயைப் போல, உழவர்கள் வேனிற் காலத்தில் அந்நதியிலுள்ள மணல் மேடுகளைக் கையினால் தோண்டி மணல்களை வாரி ஊற்றுண்டாக்க, அதனால் வெள்ளமாகப் பெருகுகின்ற நீரானது இரண்டு பக்கங்களிலுமுள்ள வாய்க்கால்களில் நிறைந்து சென்று, பள்ளமாகிய நீண்ட வயல்களிலுள்ள பருத்த நீர்மடைகளை யுடைப்பதற்குக் காரணமாயிருக்கின்றது பாலாறு. - எ-று.

அனைய வாகிய நதிபரந் தகன்பணை மருங்கில்
கனைநெ டும்புனல் நிறைந்துதிண் கரைப்பெருங் குளங்கள்
புனைமி ருங்கடி மதகுவாய் திறந்திடப் புறம்போய்
வினைஞ ரார்ப்பொலி எடுப்பநீர் வழங்குவ வியன்கால். 23

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அப்படிப்பட்ட மேன்மையை யுடைய பாலாறானது பெருகுதலால் விசாலமாகிய வயல்களின் பக்கத்திலுள்ள வலிய கரைகளையுடைய பெரிய குளங்களில் ஒலிக்கின்ற மிகுந்த நீரானது நிறைந்து அவைகளுக்குக் கட்டப்பட்ட பெரிய காவலையுடைய மதகுகளும் உடைத்துக் கொள்ளும்படி புறத்திற் போய் உழவர்கள் ஆரவாரஞ் செய்ய விசாலமாகிய கால் வாய்கள் நீரைக் கொடுக்கின்றன. - எ-று.

மாறில் வண்பகட் டேர்பல நெருங்கிட வயல்கள்
சேறு செய்பவர் செந்நெலின் வெண்முளை சிதறி
நாறு வார்ப்பவர் பறிப்பவர் நடுபவ ரான
வேறு பல்வினை யுடைப்பெருங் கம்பலை மிகுமால். 24

(இ - ள்.) மாறுபாடில்லாத வளத்தினையுடைய எருமைக்கடாக்களைப் பூட்டிய பல ஏர்கள் வயல்களில் நெருங்க அவ்வயல்களைச் சேறுசெய்கின்றவர்களும், சம்பா நெல்லினது வெண்மையாகிய முளைகளை விதைத்து நாற்று விடுகின்றவர்களும்., அந்த நாற்றைப் பறிக்கின்றவர்களும், அதனை நடுகின்றவர்களுமாகிய வெவ்வேறான பல தொழில்களை யுடைய (உழவர்களினது) பெரிய முழக்கம் அதிகரித்திருக்கும்.

வரும்பு னற் பெருங் கால்களை மறித்திட வாளை
பெருங்கு லைப்பட விலங்கும் பிறங்குநீர்ப் பழனம்;
நெருங்கு சேற்குல முயர்த்துவ நீள்கரைப் படுத்துச்
சுருங்கை நீர்வழக் கறுப்பன பருவரால் தொகுதி. 25

(இ - ள்.) நீர் வருகின்ற பெரிய கால்வாய்களை வாளை மீன்கள் அணைபோல் குறுக்கிட்டு மறிக்க, அந்த நீர் பெரிய கரை உடைபட்டுப் போகும் படி விலங்கிப் போகின்றன; விளங்குகின்ற நீரையுடைய வயல்களில் நெருங்கியிருக்கின்ற கெண்டை மீன்கள் அவ்வுடைப்பட்ட நீண்ட கரைவழியாக நீர் வராமல் ஒன்றின் மேலொன்றாகப் படுத்து உயர்த்துகின்றன; பருத்த வரால் மீன்களின் கூட்டம் மதகுகளிலிருந்து நீர்வரும் வழக்கத்தை அவ்வாறு வரவொட்டாமல் அதில் புகுந்து அடைக்கின்றன. - எ-று.

தளைத்த டம்பணை எழுந்தசெந் தாமரைத் தவிசின்
இளைத்த சூல்வளை கண்படுப் பனஇடை எங்கும்;
விளைத்த பாசொளி விளங்குநீள் விசும்பிடை ஊர்கோள்
வளைத்த மாமதி போன்றுள மருதநீர் வைப்பு 26

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) எவ்விடத்திலும் தளைகளாயிருக்கின்ற விசாலமாகிய வயல்களில் முளைத்த செந்தாமரை மலர்களாகிய ஆசனத்தில் சூல் கொண்டிருத்தலால் இளைப்பை யடைந்த சங்குகள் நித்திரை செய்து கொண்டிருப்பன; அவை பசிய ஒளிவிளங்குகின்ற நீண்ட ஆகாயத்தில் பரிவேடத்தால் வளைக்கப்பட்ட பூரணசந்திரனை யொத்திருந்தன; நீர்வளம் பொருந்திய மருதநிலத்தில். - எ-று.

ஓங்கு செந்நெலின் புடையன உயர்கழைக் கரும்பு;
பூங்க ரும்பயல் மிடைவன பூகம்;அப் பூகப்
பாங்கு நீள்குலைத் தெங்குபைங் கதலிவண் பலவு
தூங்கு தீங்கனிச் சூதநீள் வேலிய சோலை. ***27***

(இ - ள்.) ஓங்கி வளர்ந்திருக்கின்ற செந்நெற்பயிரின் பக்கத்தில் உயர்வாகிய கரும்புகளிருக்கின்றன; பொலிவினை யுடைய அக்கரும்புகளின் பக்கத்தில் கமுக மரங்கள் நெருங்கி யிருக்கின்றன; அக்கமுகமரங்களின் பக்கத்தில் நீண்ட குலை யினையுடைய தென்னமரங்களும், பசுமையாகிய வாழை மரங்களும், வளம் பொருந்திய பலாமரங்களும், தொங்குகின்ற மதுரமான கனிகளையுடைய மாமரங்களுமாகிய இவைகளின் நீண்ட சோலைகள் வேலியாக இருக்கின்றன. - எ-று.

நீடு தண்பணை உடுத்தநீள் மருங்கின; நெல்லின்
கூடு துன்றிய இருக்கைய விருந்தெதிர் கொள்ளும்
பீடு தங்கிய பெருங்குடி மனையறம் பிறங்கும்
மாடம் ஓங்கிய மறுகின; மல்லல்மூ தூர்கள். ***28***

(இ - ள்.) வளப்பந் தங்கிய பழமையாகிய ஊர்கள் குளிர்ச்சி பொருந்திய பெரிய வயல்கள் சூழ்ந்த நீண்ட பக்கங்களையுடை யனவாயும், நெற்கூடுகள் நெருங்கிய வீடுகளையுடையனவாயும், வந்த விருந்தினரை எதிர் கொண்டழைத்து வருகின்ற பெருமை பொருந்திய பெரிய குடிகளின் இல்லறமானது விளங்கியிருக்கும் மாளிகைக ளுயர்ந்த வீதிகளை யுடையனவாயு மிருக்கின்றன. - எ-று.

தொல்லை நான்மறை முதற்பெருங் கலையொலி துவன்றி
இல்ல றம்புரிந் தாகுதி வேள்வியில் எழுந்த
மல்கு தண்புகை மழைதரு முகிற்குலம் பரப்பும்
செல்வம் ஓங்கிய திருமறை யவர்செழும் பதிகள். ***29***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) பழமையகிய நான்கு வேதங்கள் முதலாகிய பெருமை பொருந்திய சாஸ்திரங்களை ஓதுதலா லுண்டாகிய ஒலிகள் நிறைந்து இல்லறத்தை நடத்தி ஆகுதிகளைச் செய்யும் யாகத்தி லுண்டாகிய குளிர்ச்சியாகிய மிகுந்த புகையானது மழையைப் பெய்கின்ற மேகக்கூட்டங்களோடு படர்ந்து செல்கின்ற பலவகைச் செல்வங்களால் மேன்மை பெற்றிருக்கின்ற பிராமணர்களின் செழுமை பொருந்திய ஊர்களிருக்கின்றன. - எ-று.

தீது நீங்கிடத் தீக்கலி யாம்அவு ணற்கு
நாதர் தாம்அருள் புரிந்தது; நல்வினைப் பயன்செய்
மாதர் தோன்றிய மரபுடை மறையவர் வல்லம்
பூதி சாதனம் போற்றிய பொற்பினால் விளங்கும். 30

(இ - ள்.) (விஷ்ணுவின் சக்கரத்தினால் இறக்கும் படிநேரிட்ட) தீங்கு நீங்கும் படி தீக்கலியென்னும் அசுரனுக்குச் சிவபெருமான் அனுக்கிரகஞ் செய்ததாய், நல்வினைகளின் பயனையே தமக் குரித்தாகச் செய்தொழுகும் மாதர்கள் பிறந்த மரபினையுடைய பிராமணர்கள் வாழ்கின்ற திருவல்ல மென்னும் ஸ்தலமானது விபூதிமுதலாகிய மோக்ஷசாதனத்தை அனுஷ்டித்து வருகின்ற அழகினால் விளங்கியிருக்கும் - எ-று.

அருவி தந்தசெம் மணிகளும், புறவில்ஆய் மலரும்
பருவி ஓடைகள் நிறைந்திழி பாலியின் கரையின்
மருவு கங்கைவாழ் சடையவர் மகிழ்ந்தமாற் பேறாம்
பொருவில் கோயிலும் சூழ்ந்ததப் பூம்பணை மருதம். 31

(இ - ள்.) மலைச் சாரலிலிருந்து வருகின்ற அருவிகள் கொழித்து வந்து சிவந்த இரத்தினங்களையும், முல்லை நிலத்திலிருந்து பறிக்கப்பட்ட மலர்களையும் கலந்து கொண்டு ஓடைகளில் நிறைந்து ஓடுகின்ற பாலாற்றின் கரையிலிருக்கின்ற கங்கைதங்கிய சடையினையுடைய சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருமாற்பேறு என்னும் ஒப்பற்ற திருக் கோயிலும் இருக்கப் பெற்றது, வயல்களைப் புறத்திலுள்ள அந்த மருதநிலம். - எ-று.

விரும்பு மேன்மையென் பகர்வது; விரிதிரை நதிகள்
அருங்க ரைப்பயில் சிவாலயம் அனேகமும் அணைந்து
பருங்கை யானையை உரித்தவர் இருந்தஅப் பாசூர்
மருங்கு சூழ்தவம் புரிந்ததன் றோ? மற்ற மருதம். 32

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) விரிந்த அலைகளையுடைய பாலாறு முதலிய நதிகளின் அருமையாகிய கரையிலிருக்கின்ற அநேகஞ் சிவாலயங்களைத் தன்னிடத்தி லுடைத்தாய்ப் பருத்த துதிக்கையையுடைய கயாசுரனென்னும் யானையை உரித்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் அந்தத் திருப்பாசூர் என்னும் ஸ்தலமும் தன்னிடத்தி லிருக்கத்தக்க தவத்தை மருதநிலம் செய்திருக்கின்ற படியால் யாவராலும் விரும்பத்தகுந்த அந்நிலத்தின் மேன்மையை விசேஷமாக எடுத்துச் சொல்ல வேண்டியது என்ன இருக்கின்றது. - எ-று.

பூம ரும்புனல் வயற்களம் பாடிய பொருநர்
தாம ருங்கிளை யுடன்தட மென்மலர் மிலைந்து
மாம ருங்குதண் ணீழலின் மருதயாழ் முரலும்
காமர் தண்பணைப் புறத்தது கருங்கழி நெய்தல். 33

(இ - ள்.) பூக்கள் மருவிய நீரையுடைய மருதநிலத்தின் போர்க்களத்தைக் குறித்து மருதப் பண்ணைப் பாடுகின்ற உழவர்கள் நெருங்கிய சுற்றத்தாரோடு தடாகங்களிலுள்ள மெல்லிய மலர்களைத் தரித்துக் கொண்டு மாமரத்தினது குளிர்ந்த நீழலிலிருந்த மருதயாழை வாசிக்கின்ற அழகிய குளிர்ந்த வயல்களின் புறத்திலுள்ளது கருமையாகிய கழிகளையுடைய நெய்தல் நிலம். - எ-று.

தூய வெண்டுறைப் பரதவர் தொடுப்பன வலைகள்;
சேய நீள்விழிப் பரத்தியர் தொடுப்பன செருந்தி;
ஆய பேரளத் தளவர்கள் அளப்பன உப்பு;
சாயன் மெல்லிடை அளத்தியர் அளப்பன தரளம். 34

(இ - ள்.) (நெய்தல்நிலத்தில்) தூய்மையாகிய வெள்ளிய மணலையுடைய கடற்கரைகளில் பரதவர்களால் வலைகள் பின்னப்படுகின்றன; செவ்வரிபரந்த நீண்ட கண்களையுடைய பரத்தியர்களால் செருந்திமலர்கள் மாலையாகத் தொடுக்கப் படுகின்றன; அந்நிலத்திலுள்ள பெரிய அளங்களில் அளவர் களால் உப்பு அளக்கப்படுகின்றன; மயில் போன்ற சாயலையும் மிருதுவாகிய நடையையு முடைய அளத்தியர்களால் முத்துகள் அளக்கப்படுகின்றன. - எ-று.

கொடுவி னைத்தொழில் நுளையர்கள் கொடுப்பன கொழுமீன்;
படும ணற்கரை நுளைச்சியர் கொடுப்பன பவளம்;
தொடுக டற்சங்கு துறையவர் குளிப்பன; அவர்தம்
வடுவ கிர்க்கண்மங் கையர்குளிப் பனமணற் கேணி. 35

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) கொடிய தொழிலைச் செய்கின்ற நுளையர்களால் கொழுமையாகிய மீன்கள் விற்கப்படுகின்றன; மிகுந்த மணற் கரைகளிலிருந்து நுளைச்சியர்களால் பவளம் விற்கப்படுகின்றன; சகரர்களால் தோண்டப்பட்ட கடலிலுள்ள சங்குகள் அத்துறையிலுள்ள நுளையர்களால் குளித்தெடுக்கப்படுகின்றன; அவர்களுடைய மாவடுவின் பிளப்பினையொத்த கண்களையுடைய பெண்களால் மணற்கேணிகள் குளிக்கப் படுகின்றன. - எ-று.

கழிப்பு னற்கடல் ஓதமுன் சூழ்ந்துகொண் டணிய
வழிக்க ரைப்பொதிப் பொன்னவிழ்ப் பனமலர்ப் புன்னை;
விழிக்கு நெய்தலின் விரைமலர்க் கட்சுரும் புண்ணக்
கழிக்க ரைப்பொதி சோறவிழ்ப் பனமடற் கைதை. ***36***

(இ - ள்.) சுழித்தலையுடைய நீர் நிறைந்த சமுத்திரத்தின் பெருக்கானது முற்பட்டுச் சூழ்ந்து தரித்துக் கொள்ளும்படி அந்நீர் செல்லும் வழிக்கரையிலிருக்கும் புன்னை மரங்கள் பொன்னிறமாகிய புஷ்பங்களை மலர்கின்றன; கண்போலத் தோன்றுகின்ற வாசனை பொருந்திய நெய்தற் பூவிலுள்ள வண்டுகள் உண்ணும்படி கடற்கரையிலிருக்கும் மடலையுடைய தாழைகள் தம்முடைய மலர்களிலிருந்து கட்டுச் சோறுகளை அவிழ்க்கின்றன. - எ-று.

காயல் வண்கரைப் புரைநெறி அடைப்பன கனிமுட்
சேய தண்ணறுஞ் செழுமுகை செறியுமுண் டகங்கள்
ஆய நுண்மணல் வெண்மையை மறைப்பன அன்னம்
தாய முன்றுறைச் சூழல்சூழ் ஞாழலின் தாது. ***37***

(இ - ள்.) கழிகளின் வளப்பமாகிய கரையிலுள்ள குற்றமானவழிகளை மிருதுவான முட்கள் நிறைந்த சிவந்த குளிர்ச்சியோடு கூடிய செழுமையாகிய முகையையுடைய தாழைகள் அடைக்கின்றன;அன்னங்கள் தாவி விளையாடுகின்ற துறையையுடைய நெய்தல் நிலைத்திலிருக்கும் சோலையைச் சூழ்ந்த ஞாழல் மலர்களின் தாதுக்கள் கடற்கரையிலிருக்கின்ற நுண்மையாகிய மணல்களின் வெண்மையை மறைக்கின்றன. - எ-று.

வாம்பெ ருந்திரை வளாகமுன் குடிபயில் வரைப்பில்
தாம்ப ரப்பிய கயல்களின் விழிக்கயல் தவிரக்
காம்பி னேர்வருந் தோளியர் கழிக்கயல் விலைசெய்
தேம்பொ திந்தசின் மழலைமென் மொழியசெவ் வழியாழ். ***38***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) மோதுகின்ற பெரிய அலைகளையுடைய கடற்கரையில் பரதவர்கள் குடியிருக்குமிடங்களில் அவர்கள் பரப்பிக் காயப்போட்டிருக்கின்ற கெண்டை மீன்களுள் கண்களாகிய கெண்டைகள் நீங்க, மூங்கிலை யொத்த தோள்களையுடைய நுளைச்சியர்கள் அந்தக் கழியிற் பிடித்த கயல்களை விற்கின்ற தேன்போல இனிமையாகிய சிறிய மழலைச் சொல்லுக்கு ஒப்பாக அந்நிலத்துச் செவ்வழியாழ் வாசிக்கப்படுகின்றன. - எ-று.

மருட்கொ டுந்தொழில் மன்னவன் இறக்கிய வரியை
நெருங்கி முன்திரு வொற்றியூர் நீங்கலென் றெழுதும்
ஒருத்தர் தம்பெருங் கோயிலின் ஒருபுறஞ் சூழ்ந்த
திருப்ப ரப்பையும் உடையதத் திரைக்கடல் வரைப்பு. 39

(இ-ள்.) மயக்கத்தோடு கொடுந்தொழிலைச் செய்யக்கருதிய மாந்தா என்னும் அரசனானவன் (எல்லாச்சிவாலயங்களுக்கும் ஏற்படுத்திய படித் திட்டத்தைக்) குறைப்ப, (அவ்வாறு குறைத் தெழுதப்பட்ட) ஏட்டின் முன்வரியை நெருக்கித் திருவொற்றியூர் நீங்கலாகவென்று எழுதிய ஒப்பற்ற சிவபெருமான் வீற்றிருந் தருளும் பெரிய திருக்கோயிலுக்கு ஒருபக்கத்தில் சூழ்ந்திருக்கும் திருவெல்லையையுமுடையது மேற் சொல்லிய அலைகளை யுடைய கடலின் இடமாகிய நெய்தல் நிலம். - எ-று.

மெய்த ரும்புகழ்த் திருமயி லாபுரி விரைசூழ்
மொய்த யங்குதண் பொழில்திரு வான்மியூர் முதலாப்
பைத ரும்பணி அணிந்தவர் பதியெனைப் பலவால்
நெய்தல் எய்தமுன் செய்தஅந் நிறைதவம் சிறிதோ? 40

(இ - ள்.) மெய்ம்மையாகிய புகழினையுடைய திருமயிலையும், வாசனை வீசுகின்ற நெருங்கிய குளிர்ச்சி பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருவான்மியூரும் முதலாகப் படத்தை யுடைய சர்ப்பத்தை ஆபரணமாக அணிந்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் வேறு பலதிருப்பதிகளும் இருக்கின்றன; ஆதலால், நெய்தல் நிலமானது அத்திருப்பதிகளைத் தன்னிடத் திலுடைத்தாயிருக்கும்படி முன்னே செய்ய நிறைந்த தவமானது குறைவானதோ? அன்று. - எ-று.

கோடு கொண்டெழும் திரைக்கடற் பவளமென் கொழுந்து
மாடு மொய்வரைச் சந்தனச் சினைமிசை வளரும்
நீடு நெய்தலும் குறிஞ்சியும் புணர்நிலம் பலவால்
ஆடு நீள்கொடி மாடமா மல்லையே அனைய. 41

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அலைகளையுடைய சமுத்திரத்தில் கொம்புகளால் கிளைத் தெழுகின்ற பவளக் கொடிகளின் மிருதுவாகிய கொழுந்துகள் பக்கத்தில் நெருங்கிய மலைகளிலிருக்கும் சந்தனமரத்தின் கிளைகளின் மேல் வளர்கின்ற நீண்ட நெய்தல் நிலமும் குறிஞ்சி நிலமும் மயங்கியிருக்கும் நிலங்கள் பலவுள்ளன; அவை நீண்ட கொடிகள் ஆடுகின்ற மாளிகைகளையுடைய மல்லை நகரத்தை ஒத்திருக்கின்றன. - எ-று.

மலைவி ழிப்பன எனவயற் சேல்வரைப் பாலறைத்
தலையு கைப்பவும் தளைச்செறு விடைநெடுங் கருமான்
கலைகு திப்பன கரும்பகட் டேர்நிகர்ப் பவுமாய்
அலைபு னற்பணை குறிஞ்சியோ டணைவன அனேகம். 42

(இ - ள்.) மருதநிலத்திலிருக்கின்ற சேல்மீன்கள் மலைகள் கண்ணைத்திறந்து பார்த்தல் போல் மலைப்பாறைகளில் பாய்ந்து புரளவும், தலைகளாகத் தடுத்திருக்கின்ற வயல்களையுடைய மருதநிலத்தில் நீண்ட கருமையாகிய கலைமான் கூட்டங்கள் குதிப்பது அந்நிலத்திலுள்ள ஏரில்பூட்டும் கரிய எருமைக்கடாக் களை ஒப்பனவுமாகி அலைவீசுகின்ற நீரையுடைய மருத நிலம் குறிஞ்சிநிலத்தோடு மயங்கியிருக்குமிடங்கள் பல இருக்கின்றன. எ-று.

புணர்ந்த ஆனிரைப் புறவிடைக் குறுமுயல் பொருப்பின்
அணைந்த வான்மதி முயலினை இனமென அணைந்து
மணங்கொள் கொல்லையில் வரகுபோர் மஞ்சன வரைக்கார்
இணைந்து முல்லையுங் குறிஞ்சியுங் கலப்பன எங்கும். 43

(இ - ள்.) பசுமந்தைகள் நெருங்கியிருக்கின்ற முல்லை நிலத்திலிருக்கும் சிறிய முயலானது மலையில் தவழ்ந்து போகின்ற வெண்மையாகிய சந்திரனிடத்திலுள்ள முயலைத் தன் இனமென்று நினைத்துச் சேர்தலினாலும், வாசனை பொருந்திய முல்லை நிலத்திலிருக்கும் வரகு போர்களில் மலைகளிலிருக்கும் கரிய மேகங்கள் சேர்தலினாலும் முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் எவ்விடத்திலும் கலந்திருக்கின்றன.

கவரும் மீன்குவை கழியவர் கானவர்க் களித்துச்
சிவலும் சேவலும் மாறியும் சிறுகழிச் சியர்கள்
அவரை ஏனலுக் கெயிற்றியர் பவளமுத் தளந்தும்
உவரி நெய்தலும் கானமும் கலந்துள ஒழுக்கம். 44

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) நெய்தல் நிலத்திலுள்ள பரதவர்கள் தாங்கள் பிடித்த மீன்குவியலை முல்லை நிலத்திலிருக்கும் இடையர் களுக்குக் கொடுத்து அவர்களிடத்துள்ள கவுதாரியையும் சேவலையும் மாறிக் கொள்ளுதலினாலும், சிறிய நெய்தனிலப் பெண்கள் அவரைக்கும் தினைக்கும், இடைச்சியர்களுக்குப் பவளத்தையும் முத்தையும் அளந்து கொடுத்தலினாலும் கடற்கரையிலிருக்கின்ற நெய்தல் நிலமும் முல்லை நிலமும் தொழிலினால் கலந்திருக்கின்றன. - எ-று.

அயல்ந றும்புற வினில்இடைச் சியர்அணி நடையும்
வியன்நெ டும்பணை உழத்தியர் சாயலும் விரும்பி
இயலும் அன்னமும் தோகையும் எதிர்எதிர் பயில
வயலும் முல்லையும் இயைவன பலவுள மருங்கு. 45

(இ - ள்.) சமீபத்திலிருக்கும் நல்ல முல்லை நிலத்திலுள்ள இடைச்சியர்களுடைய அழகிய நடையையும், விசாலமாகிய நீண்ட மருதநிலத்திலிருக்கின்ற உழத்தியர்களுடைய உடம்பின் சாயலையும் விரும்பி நடக்கின்ற அன்னமும் மயிலும் ஒன்றற்கொன்று எதிரெதிராகச் சஞ்சரிக்க மருதநிலமும் முல்லை நிலமும் அடுத்திருக்கும் இடங்கள் பலவுள்ளன; அத்தொண்டை நாட்டில். - எ-று.

மீளும் ஓதமங் கொழித்த வெண் தரளமும் கமுகின்
பாளை உக்கவும் விரவலிற் பரத்தியர் பணைமென்
தோளு ழத்தியர் மகளிர்மா றாடிமுன் தொகுக்கும்
நீளு நெய்தலும் மருதமும் கலந்துள நிலங்கள். 46

(இ - ள்.) கரையிற் போய்த் திரும்பிவருகின்ற கடற் பெருக் கானது அக்கரையில் ஒதுக்கிய வெண்மையாகிய முத்துக்களும் மருதநிலத்திலுள்ள கமுகம் பாளைகளிலிருந்து உதிர்ந்த மலர்களும் ஒன்றாகக் கலந்திருக்கின்ற படியால் பரத்தியர்களும், மூங்கில் போன்ற மெல்லிய தோள்களையுடைய உழத்தியர்களும் ஒருவருக் கொருவர் மாறுபட்டு அவைகளை முன்னே வாரிக் குவிக்கின்ற நீண்ட நெய்தலும் மருதமுமாகிய நிலங்கள் அந் நாட்டில் கலந்திருக்கின்றன. - எ-று.

ஆய நானிலத் தமைதியில் தத்தமக் கடுத்த
மேய செய்தொழில் வேறுபல் குலங்களின் விளங்கித்
தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத்
தூய மாந்தர்வாழ் தொண்டைநாட் டியல்புசொல் வரைத்தோ? 47

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) இவ்வாறாகிய குறிஞ்சி - முல்லை - மருதம் நெய்தல் என்னும் நால்வகைப்பட்ட நிலங்களில் தங்கள் தங்களுக்கு ஏற்ற வெவ்வேறு தொழில்களைச் செய்கின்ற அநேக சாதிகளால் விளக்கமுற்றுத் தீமையாகிய காரியங்களைச் சொப்பனத்திலும் செய்ய நினையாத பரிசுத்தம் பொருந்திய சிந்தையையுடைய மனிதர்கள் வாழ்கின்ற தொண்டை நாட்டின் சிறப்பானது என்சொல்லின் அளவினதோ? அன்று. - எ-று.

இவ்வ ளந்தரு பெருந்திரு நாட்டிடை என்றும்
மெய்வ ளந்தரு சிறப்பினால் உலகெலாம் வியப்ப
"எவ்வு கங்களும் உள்ள" தென் றியாவரும் ஏத்தும்
கைவி ளங்கிய நிலையது காஞ்சிமா நகரம். **48**

(இ - ள்.) இப்படிப்பட்ட வளங்களைத்தருகின்ற பெருமை பொருந்திய தொண்டை நாட்டில் எந்நாளும் உண்மையாகிய முத்திச் செல்வத்தைக் கொடுக்கின்ற சிறப்பினால் எல்லா வுலகத்திலுள்ளவர்களும் சந்தோஷிக்கும் படி எந்த யுகங்களிலும் அழியாதிருக்கும் நிலைமையையுடை தென்று எல்லாச் சமயத்தாரும் துதி செய்கின்ற ஒழுக்கத்தால் விளங்குந் தன்மையையுடையது காஞ்சிபுரம். - எ-று.

ஆன தொல்நகர் அம்பிகை தம்பெரு மானை
மான அர்ச்சனை யாலொரு காலத்து வழிபட்(டு)
ஊன மில்அறம் அனேகமும் உலகுய்ய வைத்த
மேன்மை பூண்டஅப் பெருமையை அறிந்தவர் விளம்பில். **49**

(இ - ள்.) அப்படிப்பட்ட சிறப்பினையுடைய பழமையாகிய காஞ்சி புரமானது உமாதேவியார் தமது நாயகராகிய சிவபெருமானைப் பெருமை பொருந்திய அர்ச்சனையினால் முன்பு ஒரு காலத்தில் வழிபாடு செய்து குற்றமற்ற அநகே தருமங்களையும் உலகத்திலுள்ள ஆன்மகோடிகள் பிழைக்கும் பொருட்டு வளர்த்த மேன்மையடைந்த அந்தப் பெருமையை அறிந்த விதமாகச் சொல்லப் புகுந்தால். - எ-று.

வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணியார் அருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையின் ஆகமத் திறனெலாந் தெரிய
உள்ள வாறுகேட் டருளினாள் உலகைஆ ளுடையாள். **50**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) பெருமை பொருந்திய வெள்ளிமலையாகிய ஸ்ரீ கயிலாசத்தில் வீற்றிருந்து ததும்புகின்ற மிகுந்த கங்கை நீரைத்தரித்த சடைமுடியினையுடைய சிவபெருமான் கிருபை செய்ய வணங்கித் தெளிவாகிய உண்மையினையுடைய ஆகமங்களின் வலிய பாகுபாடுகளையெல்லாம் தெரியும்படி உள்ளபடியே கேட்டறிந்து கொண்டார்; சர்வலோகங்களையும் தமக்கு அடிமையாகவுடைய உமாதேவியார். - எ-று.

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரியஆ தரித்தாள்
பெண்ணின் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து. 51

(இ - ள்.) (அக்காலத்தில் உமாதேவியார் பொருட்டு) அளவில்லாத ஆகமங்களை அருளிச் செய்த சிவபெருமான் அவ்வாகமசாரமாய்த் தாம் விரும்புகின்ற உண்மை நெறியாவது பூசனையேயென்று சொல்லியருள (அதனைத்திருவுள்ளத்திற் கொண்டு) தெய்வத்தன்மை பொருந்திய மாதர்களில் உயர்ந்தவராகிய பெருமை பொருந்திய தவக்கொழுந்து போன்ற உமாதேவியார் சிவபெருமானை அர்ச்சனை செய்வதற்கு விருப்பங் கொண்டார். - எ-று.

நங்கை உள்நிறை காதலை நோக்கி நாய கன்திரு உள்ளத்து மகிழ்ந்தே,
அங்கண் எய்திய முறுவலுந் தோன்ற "அடுத்த தென்கொனிநின் பால்"என வினவ,
"இங்கு நாத!நீ மொழிந்தஆ கமத்தின் இயல்பி னால்உனை அர்ச்சனை புரியப்,
பொங்கு கின்றதென் ஆசை "என் றிறைஞ்சிப் போக மார்த்தபூண் முலையினாள் போற்ற. 52

(இ - ள்.) பிராட்டியாரது மனத்தில் நிறைந்த விருப்பத்தைப் பார்த்துச் சிவபெருமான் திருவுள்ளம் மகிழ்ந்து அப்போ துண்டாகிய புன்முறுவலும் விளங்க உனக்குண்டாகிய விருப்பம் யாதென்று கேட்க, இப்பொழுது நாதரே! தேவரீர் அருளிச் செய்த திவ்வியாகமங்களில் விதித்த முறைமைப்படியே உம்மை அர்ச்சனை செய்ய எனக்கு ஆசை மேன்மேலும் அதிகரிக்கின்ற தென்று சொல்லி வணங்கிச்சிவபோகமமைந்த ஆபரணங்களை யணிந்த ஸ்தனங்களையுடைய உமாதேவியார் ஸ்தோத்திரஞ் செய்ய. - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவ தேவனும் அதுதிரு வுள்ளஞ் செய்து தென்றிசை மிக்கசெய் தவத்தால்,
யாவ ருந்தனை அடைவது மண்மேல் என்றும் உள்ளது காஞ்சி;மற் றதனுள்,
மாஅ மர்ந்தநம் இருக்கையில் அணைந்து மன்னு பூசனை மகிழ்ந்துசெய் வாய்" என்(று)
ஏவ எம்பெரு மாட்டியும் பிரியா இசைவு கொண்டெழுந் தருளுதற் கிசைந்தாள். 53

(இ - ள்.) தேவர்களுக்கெல்லாம் நாயகராகிய சிவ பெருமானும் உமாதேவியார் சொல்லிய வார்த்தையைத் திருவுள்ளத்திற் கொண்டு, தெற்குத்திக்கானது செய்திருக்கின்ற மிகுந்த தபோபலத்தினால் பிரமாதிதேவர்கள் யாவரும் தன்னையடையத்தக்கதும், பூலோகத்தில் என்றும் அழியா திருப்பதுமாள்ளது காஞ்சிபுரமாம்; அக்காஞ்சி புரத்தில் மாமரத்தின் கீழிருக்கும் நம்முடைய ஆலயத்திற்கு வந்து நிலை பெற்ற பூசனையை விரும்பிச் செய்வாயக வென்று கட்டளை யிட்டனுப்ப, எமது பெருமாட்டியாராகிய உமாதேவியாரும் சுவாமியைப் பிரியக்கூடாத உடன் பாட்டைக் கொண்டு அவ்விடத்திற்குப் போகும்படி சம்மதித்தார். - எ-று.

ஏத மில்பல யோனியெண் பத்து நான்கு நூறாயி ரந்தனுள் வைத்த,
பேத மும்புரந் தருளும்அக் கருணைப்பிரான்மொ ழிந்தஆ கமவழி பேணிப்போது நீர்மையில் தொழுதனள்
போதப் பொருப்பிவ் வேந்தனும் விருப்பில்வந் தெய்தி,
மாத வம்புரிந் தருளுதற் கமைந்த வளத்தொ டும்பரி சனங்களை விடுத்தான். 54

(இ - ள்.) (உமா தேவியார்) குற்றமற்ற பலவகையாகிய எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களையும் பாதுகாத்தருள்கின்ற கருணையையுடைய சிவபெருமான் அருளிச் செய்த சைவகாமவிதியை அனுசரித்து (தவஞ்செய்ய நினைத்துப்) போக வேண்டுமென்னும் எண்ணத்தோடு அப்பெருமானை வணங்கிப் புறப்பட, அதனையுணர்ந்த பர்வதராசனும் விருப்பத்தோடு வந்து சேர்ந்து, பிராட்டியார் மகத்தாகிய தவத்தைச் செய்வதற்கு அமைந்த வளத்துடனே பரிசனங்களை அனுப்பினான். - எ-று.

துன்னு பல்லுயிர் வானவர் முதலாச் சூழ்ந்து டன்செலக் காஞ்சியில் அணையத்,
தன்னை நேர்வரும் பதுமமா நாகம் தம்பி ராட்டிதான் தலைமிசை வைத்தே,
"அன்னை யாயுல கனைத்தையும் ஈன்றாய்! அடியனேன்உறை பிலமத னிடையே,
மன்னு கோயில்கொண் டருளுவாய்" என்ன மலைம டந்தைமற் றதற்கருள் புரிந்து. 55

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) பர்வத ராசபுத்திரியாகிய உமாதேவியார் நெருங்கிய தேவர்கள் முதலாகச் சொல்லப்பட்ட பலவகை யாகிய சீவராசிகளும் தம்மைச் சூழ்ந்துவரும் படி காஞ்சி புரத்திற்கு வந்தவுடனே தனக்குத் தானே ஒப்பாகிய பதும னென்னும் நாகமானது தங்கள் பெருமாட்டியாகிய உமா தேவியாரது திருவடிகளைச் சிரசின் மேல் வைத்துக் கொண்டு, தாயாகியச் சர்வலோகங்களையும் பெற்றருளிய தலைவியே! அடியேன் வாசஞ் செய்கின்ற பிலத்தினிடத்தில் நிலைபெற்ற திருக்கோயில் கொண்டருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அதற்குச் சம்மதித்து. - எ-று.

அங்கு மண்ணுல கத்துயிர் தழைப்ப அளவில் இன்பத்தி னருட்கரு விருத்தித்,
திங்கள் தங்கிய புரிசடை யார்க்குத் திருந்து பூசனை விரும்பினள் செய்ய,
எங்கும் நாடவுந் திருவிளை யாட்டால் ஏக மாமுதல் எதிர்ப்படா தொழியப்,
பொங்கு மாதவஞ் செய்துகாண் பதற்கே புரிவு செய்தனள் பொன்மலை வல்லி.
56

(இ - ள்.) அக்காஞ்சி புரத்தில் நிலவுலகத்திலுள்ள சீவகோடிகளெல்லாம் விருத்தியடையும் பொருட்டு அளவில் லாத இன்பங்களைக் கொடுக்கும் கிருபையென்னுங் காரணத் தைத் திருவுள்ளத்திற்கொண்டு, சந்திரனைத் தரித்த முறுக்காகிய சடைமுடியையுடைய சிவபெருமானுக்குத் திருத்தமாகிய பூசையைவிருப்பத்தோடு செய்யும் படி எவ்விடத்துந்தேட, ஒப்பற்ற முதற் பெருங்கடவுளாகிய சிவபெருமான் ஒருதிருவிளை யாட்டினால் தரிசனங் கொடுக்காமல் மறைய, பொலிவினை யுடைய மகத்தாகிய தவத்தைச் செய்து காண்பதற்காக விருப்பங் கொண்டார் உமாதேவியார். - எ-று.

நெஞ்ச ஈசனைக் காண்பதே விரும்பி நிரந்த ரந்திரு வாக்கினில் நிகழ்வ(து),
அஞ்செ ழுத்துமே ஆகஆ ளுடைய அம்மை செம்மலர்க் கைகுவித் தருளித்,
தஞ்சமாகிய அருந்தவம் புரியத் தரிப்ப ரேஅவள் தனிப்பெருங் கணவர், வஞ்சம்
நீக்கிய மாவின்மூ லத்தில் வந்து தோன்றினார் மலைமகள் காண.
57

(இ - ள்.) எம்மை அடிமையாகக் கொண்டருளிய உமாதேவியார் தமது உள்ளத்தில் சிவபெருமானைக் காண்பதே முக்கியமாக விருப்பங் கொண்டு, எப்பொழுதும் திருவாயில் உச்சரிப்பது ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாகச் சிவந்த தாமரை மலர் போன்ற திருக்கரங்களைக் கூப்பித்தொழுது, தமது அன்பிற்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதரவாகிய அருமையான தவத்தைச் செய்ய, அப்பெருமாட்டியாரது ஒப்பற்ற நாயகராகிய சிவபெருமான் தரியாதவராய்க் குற்றமற்ற மாமரத்தினடியில் இயமப் பர்வதராசன் புத்திரியாகிய பார்வதிதேவியார் காணும் படிவந்து சிவலிங்க ரூபமாகத் தோன்றினார். - எ-று.

கண்ட போதிலப் பெருந்தவப் பயனாம் கம்பம் மேவிய தம்பெருமானை, வண்டு
லாங்குழற் கற்றைமுன் தாழ வணங்கி வந்தெழும் ஆசைமுன் பொங்கக்,
கொண்ட காதலின் விருப்பள வின்றிக் குறித்த பூசனைக் கொள்கை மேற்கொண்டு,
தொண்டை யங்கனி வாயுமை நங்கை தூய அர்ச்சனை தொடங்குதல் புரிவாள்.

58

(இ - ள்.) தாம் செய்த பெரிய தவத்திற்குப் பயனாயிருக்கும் திருவேகம் பத்தையடைந்த தமது நாயகராகிய சிவ பெருமானைத் தரிசித்த பொழுதே வண்டுகள் உலாவுகின்ற கற்றையாகிய கூந்தலானது முன்னே தாழும்படி வணங்கி, மனத்தில் தோன்றி யெழுந்த ஆசையானது அதிகரிக்க, மேம்பட்ட பெருங் காதலினாகிய விருப்பமானது அளவில் லாமல் தாம் நினைத்திருந்த சிவபூசையாகிய கொள்கையை மேற் கொண்டு, கொவ்வைக்கனி போன்ற அழகிய வாயினையுடைய உமாதேவியார் பரிசுத்தமாகிய அர்ச்சனை செய்யத் தொடங்கினார். - எ-று.

உம்பர் நாயகர் பூசனைக் கவர்தாம் உரைத்த ஆகமத் துண்மையே தலைநின்(று),
எம்பி ராட்டிஅர்ச் சனைபுரி வதனுக் கியல்பில் வாழ்திருச் சேடியரான,
கொம்பனார்கள்பூம் பிடகைகொண் டணையக் குலவுமென்தளிர் அடியிணை ஒதுங்கி,
அம்பி காவன மாந்திரு வனத்திலான தூநறும் புதுமலர் கொய்தாள்.

59

(இ - ள்.) தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமான் தம்மைப் பூசிப்பதற்காக அவரருளிச் செய்த ஆகமத்திற் கூறும் உண்மையாகிய விதிவழியே நின்று எமது பிராட்டியாராகிய உமாதேவியார் பூசை செய்வதற்கு, இயல்பினால் வாழ்கின்ற தோழியர்களாகிய கமலினி - அனிந்திதை என்பவர்கள் புஷ்பக் குடலை எடுத்துக் கொண்டுவர, விளங்குகின்ற மிருதுவாகிய தனிர் போன்ற இரண்டு பாதங்களால் (சிறுகற்களுக்கு) ஒதுங்கி நடந்து, அம்பிகாவனமென்னும் திருநந்தனவனத்தில் சிவ பெருமானுக்குப் பொருந்திய பரிசுத்தமாகிய நல்லமலர்களைப் பறித்தார். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**கொய்த பன்மலர் கம்பைமா நதியிற் குலவு மஞ்சனம் நிலவுமெய்ப் பூச்சு,
நெய்த ருங்கொழுந் தூபதீ பங்கள் நிறைந்த சிந்தையில் நீடிய அன்பின்,
மெய்த ரும்படி வேண்டின எல்லாம் வேண்டும் போதினில் உதவமெய்ப் பூசை,
எய்த ஆகம விதியெலாஞ் செய்தாள் உயிர்கள் யாவையும் ஈன்றஎம் பிராட்டி.** 60

(இ - ள்.) பலவகை மலர்களைப் பறித்து, திருமஞ்சனமாகக் கம்பையாற்றினீரையும், பிரகாசமுள்ள சந்தனத்தையும், நெய்யினாலமைந்த செழிய தூபதீபங்களையும் கிருபைதங்கிய மனத்தில் தோன்றிய பேரன்பினால் உண்மையாகப் பூசைக்கு வேண்டிய மற்றத் திரவியங்களையும் தமக்கு வேண்டிய பொழுது ஏவலாளர்கள் கொடுக்க, மெய்மையாகிய பூசையை ஆகமவிதி வழுவாமல் முழுமையும் செய்தார் எல்லாவுயிர்களையும் பெற்றருளிய எமது தாயாராகிய உமாதேவியார். - எ-று.

**கரந்த ரும்பயன் இதுவென உணர்ந்து கம்பம் மேவிய உம்பர்நா யகர்பால்,
நிரந்த காதல்செய் உள்ளத்த ளாகி நீடு நன்மைகள் யாவையும் பெருக, வரந்த
ரும்பொரு ளாம்மலை வல்லி மாறி லாவகை மலர்ந்தபே ரன்பால்,
சிரம்பணிந்தெழு பூசைநா டோறும் திருவு ளங்கொளப் பெருகிய தன்றே.** 61

(இ - ள்.) இவ்வாறு பூசைசெய்வது கையைப் பெற்றதனாலுண்டாகிய பயனே என்றறிந்து திருவேகம் பத்தில் வீற்றிருந்தருளும் தேவர்கள் நாயகராகிய சிவபெருமானிடத்தில் பரந்த விருப்பத்தைச் செய்கின்ற மனமுடையவராய்ச்சிறந்த நன்மைகள் யாவு முண்டாக யாவர்க்கும் வரத்தைத் தந்தருள்கின்ற மெய்ப்பொருளாகிய உமாதேவியார் மாறுபாடில்லாமல் விளங்கிய பேரன்பினால் தலையால் வணங்கிச் செய்கின்ற பூசனையானது நாள்தோறும் அக்கடவுளின் திருவுள்ளத்துக்குப் பொருந்தும் படி விருத்தியாயிற்று. - எ-று.

**நாத ரும்பெரு விருப்பொடு நயந்துநங்கை யர்ச்சனை செய்யும்அப் பொழுதில்,
காதல் மிக்கவோர் திருவிளை யாட்டில் கனங்கு ழைக்கருள் புரிந்திட வேண்டி,
ஓத மார்கடல் ஏழுமொன் றாகி ஓங்கி வானமும் உட்படப் பரந்து,
மீது செல்வது போல்வரக் கம்பை வெள்ள மாந்திரு வுள்ளமுஞ் செய்தார்.** 62

(இ - ள்.) திருவேகம் பநாதரும் மிகுந்த ஆசையோடு நயந்து உமாதேவியார் தம்மைப் பூசைசெய்யும் பொழுதில் விருப்ப மிகுந்த ஒரு திருவிளையாட்டாகக் கனத்த குண்டலத்தையணிந்த அவ்வுமாதேவியாருக்குத் திருவருள் செய்யவிரும்பி, குளிர்ச்சி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருந்திய சப்தசமுத்திரங்களும் ஒன்றாகித் தேவலோகமும் கீழாகும்படி எழும்பிப்பரந்து மேல்வருவது போலக் கம்பா நதியில் வெள்ளம் வரும்படி திருவுள்ளங் கொண்டருளினார். - எ-று.

அண்ண லார்அருள் வெள்ளத்தை நோக்கி அங்கயற்கண்ணி தம்பெரு மான்மேல்,
விண்ணெ லாங்கொள வரும்பெரு வெள்ளம் மீது வந்தறும் எனவெருக் கொண்டே,
உண்ணி லாவிய பதைப்புறு காத லுடன்தி ருக்கையால் தடுத்தும்நில் லாமை,
தண்ணி லாமலர் வேணியி னாரைத் தழுவிக் கொண்டனள் தன்னையே ஒப்பாள்.
63

(இ - ள்.) சிவபெருமானது கட்டளையால் வருகின்ற வெள்ளத்தை அழகிய சேற்கெண்டை போன்ற கண்களை யுடைய ஒப்பற்ற உமாதேவியார் பார்த்து ஆகாயமுழுமையும் கொள்ளும் படி வரும் இந்தப் பெரிய வெள்ளமானது, பெருகித் தமது ஆண்டவன் மேல் வருமென்று பயந்து, மனதினின்றும் பதைத் தெழுகின்ற ஆசையோடு திருக்கைகளால் அவ்வெள்ளம் வரவொட்டாமல் தடுக்க, அது நில்லாமையைக் கண்டு குளிர்ந்த சந்திரன் விளங்குகின்ற சடைமுடியினையுடைய சிவபெருமா னைத் தழுவிக் கொண்டார். - எ-று.

மலைக்கு லக்கொடி பரிவுறு பயத்தால் மாவின் மேவிய தேவநா யகரை,
முலைக்கு வட்டொடு வளைக்கயால் நெருக்கி முறுகு காதலால் இறுகிடத் தழுவச்,
சிலைத்த னித்திரு நுதல்திரு முலைக்கும் செந்த ளிர்க்கரங் களுக்கும்மெத் தெனவே,
கொலைக்க ளிற்றுரி புனைந்ததம் மேனி குழைந்து காட்டினார் விழைந்தகொள் கையினார்.
64

(இ - ள்.) மலையரசனது குலத்தில் அவதரித்தருளிய உமாதேவியார் (இந்நதிப் பெருக்கினால் எமது ஆண்டவருக்கு இடையூறுண்டாகுமென்னும்) துன்பத்தோடு பயத்தையும் அடைத்து, மாமரநிழலில் வீற்றிருந்தருளும் தேவர்கள் நாயக ராகிய திருவேகம்பநாதரை மலைச்சிகரத்தையொத்த ஸ்தனங் களோடு வளையலையணிந்த கைகளாலும் நெருக்கி மிகுந்த அன்பினால் இறுகத்தழுவும் போது அவ்வம்மையாரது அழகிய ஸ்தனங்களுக்கும், சிவந்ததளிர்போன்ற கைகளுக்கும் மெத் தென்று, கொலைத் தொழிலையுடைய கயாசுரனென்னும் யானையின் தோலைப் போர்த்த தம்முடைய திருமேனியைக் குழையும்படிச் செய்தார்; அப்பூசையை விரும்பியவராகிய கடவுள். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**கம்பர் காதலி தழுவமெய் குழையக் கண்டு நிற்பவுஞ் சரிப்பவுமான,
உம்ப ரேமுதல் யோனிகள் எல்லாம் உயிரும் யாக்கையும் உருகியொன் றாகி,
"எம்பி ராட்டிக்கு மெல்லிய ரானார் என்றும் ஏகம்பர்" என்றெடுத் தேத்த,
வம்பு லாமலர் நிறையவிண் பொழியக் கம்பை யாறுமுன் வணங்கிய தன்றே.**

65

(இ - ள்.) திருவேகம்ப நாதர் தமது மனைவியார் தழுவுதலால் திருமேனி குழையப்பார்த்துச் சரமும் அசரமுமாகிய தேவர்கள் முதல் எழுவகைப்பட்ட ஜீவராசிகளும் உடம்பும் உயிரும் உருகி ஒரு தன்மைப்பட்டு, இத்திருவேகம்ப நாதர் எங்கள் தாயாகிய உமாதேவியாருக்குத் தழுவக் குழைந்த திருமேனியையுடைய வரானாரென்று எடுத்து ஸ்தோத்திரஞ் செய்யவும், வாசனை பொருந்திய கற்பகமலர்களை ஆகாயத்திலிருந்து நிறையும்படி தேவர்கள் பொழியவும், கம்பாநதியின் வெள்ளமானது பிராட்டியார் திருமுன்னே (சுவாமிக்கு ஒரு இடையூறும் நேரிடாமல்) வந்து வணங்கி அடங்கிவிட்டது. - எ-று.

**பூதி யாகிய புனிதநீ றாடிப் பொங்கு கங்கைதோய் முடிச்சடை புனைந்து,
காதில் வெண்குழை கண்டிகை தாழக் கலந்த யோகத்தின் மருவிய கருத்தால்,
ஆதி தேவனா ராயு மாதவஞ்செய் அவ்வரங்கொலோ அகிலன்மீன் றளித்த,
மாது மெய்ப்பயன் கொடுப்பவே கொண்டு வளைத்த ழும்புடன் முலைச்சுவ டணிந்தார்.**

66

(இ - ள்.) முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான் மகதயிசுவரியமென்று கூறும் பரிசுத்தம் பொருந்திய விபூதியை உத்தூளனமாகத்தரித்து, பொங்குகின்ற கங்கை நதிபொருந்திய சங்கக் குழைகளும் ருத்திராக்ஷமுந் தாழும்படி பொருந்திய சிவயோகத்தில் வீற்றிருந்த கருத்தோடு அறிஞர்களால் ஆராயத்தக்க மகத்தாகிய தவத்தைச் செய்து விசேடந்தானோ? சர்வலோகங்களையும் பெற்றெடுத்த தாயாகிய உமாதேவியார் தேகஸ்பரிச முண்டாகப் பெற்று வளைத்தழும் போடு முலைத்தழும்பையும் கொண்டருளினார். - எ-று.

**கோதி லாவமு தனையவள் முலைக்குக் குழைந்த தம்மண வாளநற் கோலம்,
மாது வாழவே காட்டிமுன் நின்று "வரங்கள் வேண்டுவ கொள்க" என் றருள,
வேத காரண ராயஏ கம்பர் விரைம லர்ச்செய்ய தாமரைக் கழற்கீழ், ஏதம்
நீங்கிய பூசனை முடிந்த தின்மை தானறி விப்பதற் கிறைஞ்சி.**

67

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) குற்றமற்ற தேவாமிர்தத்தையொத்த உமா தேவியாரது ஸ்தனங்களுக்குக் குழைவுற்ற தமது நன்மை பொருந்திய மணவாளக் கோலத்தை அவ்வம்மையார் வாழ் வடையும் படி காண்பித்து முன்னே நின்று நீ வேண்டியவரங் களைப் பெற்றுக் கொள்வாயாக வென்று அருளிச் செய்ய, பிராட்டியார் வேதங்களுக்குக் காரணராயிருக்கின்ற திருவேகம்ப நாதரது வாசனை பொருந்திய சிவந்ததாமரை மலர் போன்ற திருவடியின் கீழ் குற்றமறச் செய்யும் பூசையானது முடியாதிருப் பதை அறிவிக்கும் படியாக வணங்கி. - எ-று.

அண்டர் நாயகர் எதிர்நின்று கூறும் அளவி னால்அஞ்சி அஞ்சலி கூப்பிக்,
கொண்ட இற்றைஎன் பூசனை இன்னும் குறைநிரம்பிடக் கொள்க" என் றருள,
வண்டு வார்குழல் மலைமகள் கமல வதனம் நோக்கிஅம் மலர்க் கண்நெற் றிபின்மேல்,
முண்ட நீற்றர் "நின் பூசனை என்றும் முடிவ தில்லைநம் பால்" என மொழிய
68

(இ - ள்.) தேவர்களுக்கு நாயகராகிய திருவேகம்பநாதர் தமக்கு எதிரே நின்று, கட்டளையிட்ட அளவில் வண்டுகள் மொய்க்கின்ற நீண்ட கூந்தலையுடைய உமாதேவியார் அச்சப்பட்டுக் கைகளை அஞ்சலியாகக் குவித்து, இன்று அடியேன் செய்யத் தொடங்கிய பூசையை இன்னும் குறையும் நிரம்பும்படி கொண்டருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அவ்வம்மையாரது தாமரை மலர் போன்ற முகத்தைப் பார்த்தருளிய சிவபெருமான் நம்மிடத்திற் செய்யும் உன்னுடைய பூசையானது என்றும் முடிகிறதில்லையென்று சொல்ல. - எ-று.

மாறி லாதஇப் பூசனை என்றும் மன்றுள எம்பிரான் மகிழ்ந்துகொண் டருளி,
ஈறிலாஇப் பதியினுள் எல்லா அறமும் யான்செய அருள்செய வேண்டும், வேறு
செய்வினை திருவடிப் பிழைத்தல் ஒழிய இங்குளார் வேண்டின செயினும்,
பேறு மாதவப் பயன்கொடுத்தருளப் பெறவும் வேண்டும்" என் றனள்பிறப் பொழிப்பாள்.
69

(இ - ள்.) மாறுபாடில்லாத இந்தப் பூசனையானது எந்நாளும் நிலைபெறும் படி எமது பெருமானே! தேவரீர் திருவுள்ளங் கொண்டருளி, ஓர் காலத்திலும் அழிவில்லாத இந்த ஸ்தலத்தில் எல்லாத் தருமங்களையும் அடியேன் செய்யும் படி கிருபை செய்ய வேண்டும்; இந்நகரத்திலுள்ளவர்கள் தேவரீர் திருவடிகளுக்குச் செய்யும் குற்றம் நீங்கலாகத் தங்கள் மனதின் படி வேண்டிய எந்தத் தீமைகளைச் செய்தாலும் அத்தீமைக்குப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெறும் பேறாக மகத்தாகிய தவப்பயனை அவர்களுக்குக் கொடுத்தருளவும் வேண்டுமென்றருளிச் செய்தார்; உயிர்களின் பிறவித்துன்பத்தை நீக்கியருள்பவராகிய உமாதேவியார். - எ-று.

விடையின் மேலவர் மலைமகள் வேண்ட விரும்பு பூசையை மேவிவீற் றிருந்தே,
இடைய றாஅறம் வளர்க்கும்வித் தாக இகப ரத்திரு நாழி நெல் அளித்துக்,
கடைய ராகியும் உயர்ந்தவ ராயும் காஞ்சி வாழ்பவர் தாஞ்செய்தீ வினையும்,
தடைய பாதுமெய்ந் நெறியடை வதற்காம் தவங்க ளாகவும் உவந்தருள் செய்தார்.
70

(இ - ள்.) ரிஷபவாகனத்தின் மேல் வீற்றிருந்தருளும் சிவபெருமான் உமாதேவியார் வேண்டிக் கொள்ள, அவர் விரும்பிச் செய்கின்ற பூசையை அங்கீகரித்து அங்கு வீற்றிருந் தருளி, நீங்காத தருமத்தை வளர்க்கும் பொருட்டு இகத்துக்கும் பரத்துக்கும் பயனாக இருநாழி நெல்லைக் கொடுத்து, தாழ்ந்தசாதியாராகியும், உயர்ந்த சாதியாராகியும் காஞ்சி நகரத்தில் வாழ்கின்றவர்கள் செய்கின்ற பாவங்களும், தடை படாமல் உண்மையாகிய மோட்சத்தை யடைவதற்கேதுவாகிய தவங்களாயிருக்கவும் விரும்பி வரங்கொடுத்தருளினார். - எ-று.

எண்ண ரும்பெரு வரங்கள்முன் பெற்றங் கெம்பி ராட்டிதம் பிரான் மகிழ்ந் தருள,
மண்ணின் மேல்வழி பாடுசெய் தருளி மனைய றம்பெருக் குங்கரு ணையினால்,
நண்ணும் மன்னுயிர் யாவையும் பல்க நாடு காதலின் நீடிய வாழ்க்கைப், புண்ணி
யத்திருக் காமக்கோட் டத்துப் பொலிய முப்பதோ டிரண்டறம் புரக்கும்.
71

(இ - ள்.) எமது தாயாராகிய உமாதேவியார் அளவில்லாத பெரியவரங்களை முன்னே பெற்றுக் கொண்டு, தமது பெருமான் மகிழ்ந்தருளும்படி பூசை செய்து, உலகத்தில் இல்லற தருமத்தை விருத்திசெய்ய வேண்டுமென்னும் கருணையினால் நிலை பெற்றவுயிர்களெல்லாம் நாளுக்கு நாள் பெருகும்படி பொருந்திய ஆசையோடு நீடித்த வாழ்க்கைக்குரிய இடமாகிய புண்ணிய சொரூபமான திருக்காமக் கோட்டத்தில் வீற்றிருந்து முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்க்கின்றவரானார். - எ-று.

அலகில் நீள்தவத் தறப்பெருஞ் செல்வி அண்ட மாம்திரு மனைக்கிடுந் தீபம்,
உலகில் வந்துறு பயனறி விக்க ஓங்கும் நாண்மலர் மூன்றுடன் ஒன்று, நிலவ
ஆண்டினுக் கொருமுறை செய்யும் நீடு தொன்மையால் நிறைந்தபே ருலகம்,
மலர்பெ ருந்திருக் காமக்கோட் டத்து வைத்த நல்லறம் மன்னவே மன்னும். **72**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அளவில்லாத மிகுந்த தவத்தையுடைய அறப்பெருஞ் செல்வியாகிய உமாதேவியார் பிரமாண்டமாகிய திருமாளிகைக்கு இடப்பட்ட விளக்காகிய (சோமசூரியாக்கினி யென்னும் முச்சுடரும்) பிராட்டியார் உலகத்தில் வந்த பயனை அறிவிக்கும்படி (வந்தாற் போல) உயர்ந்த புதிய நீலமலர்கள் மூன்றோடு கூடிய ஒரு பூவானது வருஷத்துக்கு ஒரு தரம் முறையாக மலரும் நீடித்த பழமையினால் நிறைந்த பெரிய உலகத்தில் விளங்குகின்ற பெருமை பொருந்திய திருக்காமக் கோட்டத்தில் வைக்கப்பட்ட நல்ல தருமங்கள் விருத்தியாகும்படி வளர்க்கப்படும். - எ-று.

தீங்கு தீர்க்குநல் தீர்த்தங்கள் போற்றுஞ் சிறப்பி னால்திருக் காமக்கோட் டத்தின்,
பாங்கு மூன்றுல கத்தினுள் ளோரும் பரவு தீர்த்தமாம் பைம்புனற் கேணி,
வாங்கு தெண்டிரை வேலைமே கலைசூழ் வைய கந்தனக் கெய்திய படியாய்,
ஓங்கு தன்வடி வாய்நிகழ்ந் தென்றும் உள்ள தோன்(று)உல காணியென் றுளதால்.
73

(இ - ள்.) முழுகினவர்களுடைய பாவங்களைப் போக்குகின்ற நன்மை பொருந்திய தீர்த்தங்களெல்லாம் போற்றுகின்ற சிறப்பினால் திருக்காமக் கோட்டத்தினருகில் சுவர்க்கமத்திய பாதலமென்னும் மூன்றுலகத்திலுள்ளவர்களும் துதிக்கக் தக்க தீர்த்தமாகிய குளிர்ந்த நீரையுடைய ஒரு தடாகமானது, வளைந்த தெளிவாகிய அலைவீசுகின்ற சமுத்திரமாகிய மேகலை சூழ்ந்த உலகத்திலுள்ளவர்களுக்கு மோக்ஷத்திற்கு ஏறக்கிடைத்த ஏணியாகி உயர்ந்த நீர்வடிவாகவே நிறைவுற்று எக்காலத்தும் உள்ளதாய் உலகாணியென்னும் பெயர் பெற்றுள்ளது. - எ-று.

அந்த மின்றிநல் லறம்புரிந் தளிக்கும் அன்னை தன்திருக் காமக்கோட் டத்தில்,
வந்து சந்திர சூரியர் மீது வழிக்கொ ளாததன் மருங்குபோ தலினால், சந்த
மாதிர மயங்கிஎம் மருங்கும் சாயை மாறிய தன்றிசை மயக்கம், இந்த மாநிலத்
தவரெலாம் காண என்றும் உள்ளதோன் றின்றும்அங் குளதால்.
74

(இ - ள்.) கெடு தலில்லாமல் நல்ல தருமங்களைச் செய்து உயிர்களைக் காப்பாற்றுகின்ற உமாதேவியார் வீற்றிருந்தருளும் திருக்காமகக் கோட்ட மென்னும் ஆலயத்தில், சந்திர சூரியர்கள் வந்து அவ்வாயலத்தின்மேலே செல்லாமல் பக்கத்தில் போகின்ற படியால் நல்ல திக்குகள் மாறுபட்டு, அதனால் எவ்விடத்திலும் நிழல்கள் மாறியிருக்கின்ற அவ்விடத்தின் திசைமயக்கமானது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்தப் பெரிய உலகத்திலுள்ளவர்கள் யாவருங்காணும்படி எந்நாளும் உள்ளதாகிய ஒன்று இக்காலத்திலும் அங்கு இருக்கின்றது. - எ-று.

கன்னி நன்னெடுங் காப்புடை வரைப்பில் காஞ்சி யாந்திரு நதிக்கரை மருங்கு,
சென்னி யிற்பிறை அணிந்தவர் விரும்பும் திருப்பெரும்பெய ரிருக்கையில் திகழ்ந்து,
மன்னு வெங்கதிர் மீதெழும் போதும் மறித்து மேற்கடல் தலைவிழும் போதும்,
தன்னி ழற்பிரி யாதவண் காஞ்சித் தானம் மேவிய மேன்மையும் உடைத்தால். 75

(இ - ள்.) உமா தேவியாரது நல்ல பெருங்காவலையுடைய காஞ்சிபுரத்தில் காஞ்சியென்னும் பெயர்பெற்ற நதிக்கரையினருகில், சிரசில் மூன்றாம் பிறையைத் தரித்த சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருப்பெரும் பெயரிருக்கையென்னும் ஆலயத்திலிருந்த விளங்கி நிலைபெற்ற வெவ்விய கிரணங்களையுடைய சூரியன் உதயகிரியினின்றும் உதயமாகும் பொழுதும், மீண்டும் மேல்கடலில் அஸ்தமிக்கும் பொழுதும் நிழலானது தன்னிடத்திலிருந்து மேற்குக் கிழக்குகளில் பிரிந்து செல்லாத வளம் பொருந்திய காஞ்சிவிருட்சமிருக்கின்ற மேன்மையையுமுடையது; அந்த நகரம். - எ-று.

மறைக ளால்துதித் தருந்தவம் புரிந்து மாறி லாநிய மந்தலை நின்று, முறைமை யால்வரும் பூசனை செய்ய முனிவர் வானவர் முதல்உயி ரெல்லாம்,
நிறையும் அன்பினால் அர்ச்சனை செய்ய நீடு காமங்கள் அவரவர்க் கருளி,
இறைவர் தாம்மகிழ்ந் தருளிய பதிகள் எண்ணி றந்தஅத் திருநகர் எல்லை. 76

(இ - ள்.) முனிவர்கள் வேதங்களால் துதித்து, அருமையாகிய தவங்களைச் செய்து, கெடுதலில்லாத நியம நெறியில் நின்று, வேதாகம விதிப்படியே பூசனை செய்தலாலும், தேவர்கள் முதலிய உயிர்களெல்லாம் உள்ளத்தில் நிறைந்த அன்புடனே அர்ச்சனை செய்தலாலும் வேண்டியவரங்களை அவரவர்களுக்குக் கொடுத்தருளிச் சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளுகின்ற ஆலயங்கள் அந்த நகரத்தின் எல்லையில் அளவில்லாதனவாம். - எ-று.

மன்னு கின்றஅத் திருநகர் வரைப்பின் மண்ணில் மிக்கதோர் நன்மையி னாலே,
துன்னும் யானையைத் துற்றில்வாழ் முயல்முன் துரக்க எய்திய தொலைவில்ஊக் கத்தால்,
தன்னிலத்துநின் றகற்றுதல் செய்யும் தானம் அன்றியும் தனுவெழுந் தரணி,
எந்நி லத்தினுங்காண்பரும் இறவாத்தானம் என்றிவை இயல்பினில் உடைத்தால். 77

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) நிலைபெற்ற அந்தக்காஞ்சிபுரத்தின் எல்லையில், உலகத்தார் செய்த தவப்பேற்றினால், வலிய ஒரு யானையைப் புதலில் வாழ்கின்ற ஒரு முயலானது முன் சென்று துரத்தும்படி வந்த கெடாதவல்லமையினால் தன்னிடத்தில் நின்றும் போகும்படி செய்யும் ஸ்தானம் இருப்பதல்லாமலும், இறந்து கிடக்கின்ற உடம்புகள் மறுபடியும் உயிர் பெற்றெழுகின்ற இடமும், எவ்விடத்திலுங் காண்பதற் கருமையாகிய அடைந்த வர்கள் இறவாத தானமுமாகிய இவைகள் இயல்பாகவுள்ளன.

ஈண்டு தீவினை யாவையும் நீக்கி இன்ப மேதரும் புண்ணிய தீர்த்தம், வேண்டி
னார்தமக்(கு) இட்டசித் தியதாய் விளங்கு தீர்த்தம்நன் மங்கல தீர்த்தம்,
நீண்ட காப்புடைத் தீர்த்தம்மூன் றுலகில் நிகழ்ந்த சாருவ தீர்த்தமு முதலா,
ஆண்டு நீடிய தீர்த்தம் எண்ணிலவும் அமரர் நாட்டவர் ஆடுதல் ஒழியார்.
78

(இ - ள்.) இவ்வுலகத்தில் (முழுகினவர்களுடைய) பாலங்களையெல்லாம் ஒழித்து இன்பத்தையே கொடுக்கும் (துரித நாசமென்னும்) புண்ணிய தீர்த்தமும், விரும்பினவர் களுக்கு இஷ்டமான பொருளைச் சித்திக்கச் செய்வதாய் விளங்குகின்ற இஷ்டசித்தி தீர்த்தமும், நல்ல சுபத்தைத் தருகின்ற மங்கல தீர்த்தமும், தேவர்களால் காக்கப்பட்ட (சுரரட்சிதம் என்னும்) காப்புடைத் தீர்த்தமும், மூன்றுலகத்திலுள்ள (தீர்த் தங்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்த) சர்வதீர்த்தமும் முதலாக அந்நகரத்திலுள்ள எண்ணிறந்த தீர்த்தங்களில் விண்ணுலகத் திலுள்ள தேவர்கள் ஸ்நானஞ் செய்தலை யொழியார்கள். எ-று.

தாள தொன்றினில் மூன்றுபூ மலரும் தமனி யச்செழுந் தாமரைத் தடமும்,
நீள வார்புனல் குடதிசை யோடி நீர்க ரக்குமா நதியுடன் நீடு,
நாள லர்ந்துசெங் குவளைபைங் கமலம் நண்ப கல்தரும் பாடலம் அன்றிக்,
காள மேகம்ஒப் பாள்உறை வரைப்பில் கண்படாதகா யாப்புளி உளதால்.
79

(இ - ள்.) ஒரு நாளில் மூன்றுபுஷ்பங்கள் மலர்கின்ற பொற் றாமரையையுடைய தடாகமும், மிகுந்த நீரானது கிழக்கிலிருந்து மேற்குத்திக்கில் ஓடிப் பின் அந்நீர் மறைந்து போகின்ற (பம்பை யென்னும்) நதியுடனே நீண்ட பகற்க காலத்தில் மலர்ந்த செங்குவளை மலரும் (இரவில் மலர்ந்த) பசிய தாமரைமலரும், நல்ல பகலில் மலரும் பாதிரிமரமுமில்லாமல், கரிய மேகம் போன்ற திருமேனியையுடைய காமாட்சியம்மையார் வீற்றிருக் கும் அந்த நகரத்தில் மனிதர் கண்களுக்குத் தோற்றாத காயாப் புளிய மரமும் இருக்கின்றது. - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***சாயை முன்பிணிக் குங்கிண றொன்று தஞ்ச முண்ணின் நஞ்சாந்தடம் ஒன்று,
மாயை இன்றிவந் துள்ளடைந் தார்கள் வான ரத்துரு வாம்பிலம் ஒன்று,
மேயஅவ்வுரு நீங்கிடக் குளிக்கும் விளங்கு பொய்கையும் ஒன்றுவிண் ணவரோ,
டாய இன்பம்உய்க் கும்பிலம் ஒன்றோ டனைய ஆகிய அதிசயம் பலவால்.***

80

(இ - ள்.) தன்னைப் பார்த்தவர்களுடைய சாயையை அவர்களுக்குத் தோன்றாமல் தன்னுள் அடக்கிக் கொள்ளும் ஒருகிணறும், எளிதாகக்குடித்தால் விஷமாய்க் கொல்லுகின்ற ஒரு தடாகமும், வஞ்சகமின்றி வந்து உட்புகுந்தவர்கள் குரங்கினுருவத்தையடையும் ஒரு பிலத்துவாரமும், அப்படி யடைந்த அந்தக் குரங்கினுருவம் நீங்கும்படி குளிக்கின்ற காந்தியுள்ள ஒரு பொய்கையும், தேவர்களோடு கலந்து அவ்விடத்திலுண்டாகிய இன்பத்தையனுபவிக்கின்ற ஒரு பிலத்துவாரமுமாகிய இவைகளுடனே அத்தன்மையாகிய அதிசயங்கள் அக்காஞ்சி புரத்திலிருக்கின்றன. - எ-று.

***அஞ்சு வன்கரத் தாறிழி மதத்தோர் ஆனை நிற்கவும் அரையிருட் டிரியும்,
மஞ்சு நீள்வது போலுமா மேனி மலர்ப்ப தங்களில் வண்சிலம் பொலிப்ப, நஞ்சு
பில்கெயிற் றரவவெற் றரையின் நாம மூன்றிலைப் படையுடைப் பிள்ளை,
எஞ்ச லின்றிமுன் திரியவும் குன்றம் எறிந்த வேலவன் காக்கவும் இசையும்.***

81

(இ - ள்.) வலிய ஐந்து திருக்கரங்களையும் ஆறுபோலப் பெருகுகின்ற மதத்தையுமுடைய விநாயகமூர்த்தியாகிய ஓர் யானையானது நின்று காக்கவும், தாமரை மலர் போன்ற திருவடிகளில் வளம் பொருந்திய சிலம்புகள் ஒலிக்க மேகம் செல்வது போல அர்த்தராத்திரியில் சஞ்சரிக்கின்ற பெரிய திருமேனியையும், நஞ்சு ஒழுகுகின்ற பற்களையுடைய பாம்பைக் கச்சாக அணிந்த இடையினையு முடைய அச்சத்தைத் தருகின்ற சூலப்படையைத் தரித்த வயிரவமூர்த்தி இடைவிடாமல் முன்னே திரிந்து கொண்டுகாக்கவும், கிரவுஞ்சமலையைப் பிளந்த வேலாயுதத்தையுடைய முருகக்கடவுள் காக்கவும் அந்த நகரம் ஓரிடையூறுமில்லாமலிருக்கின்றது.

***சத்தி தற்பர சித்தயோ கிகளும் சாத கத்தனித் தலைவ ரும்முதலா, நித்தம்
எய்திய ஆயுள்மெய்த் தவர்கள் நீடு வாழ்திருப் பாடியும் அனேகம்,
சித்தர் விஞ்சையர் இயக்கர்கந் தருவர் திகழ்ந்து மன்னுவார் செண்டுகை ஏந்தி.
வித்த கக்கரி மேற்கொளுங் காரி மேவு செண்டனை வெளியும்ஒன் றுளதால்.***

83

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) சத்திகளும், மேலாகிய சித்தத்தையுடைய யோகிகளும், அவ்யோக நெறியைச் சாதிக்கும் சாதகரென்னும் ஒப்பற்ற தலைவர்களும், அழிவில்லாத வாழ்நாளையுடைய மெய்ம்மையான தவத்தையுடையவர்களுமாகிய இவர்கள் முதலாயுள்ளவர்கள் நீடித்து வாழ்கின்ற இடங்களும் அநேக மிருக்கின்றன; சித்தர்களும், வித்தியாதரர்களும், இயக்கர்களும், கந்தருவர்களும் விளங்கி அந்நகரத்தில் வசிப்பார்கள்; செண்டாயுதத்தைக் கையிற்பிடித்துச் சிறந்த யானையின் மேல் ஏறிச் செல்லும் ஐயனார் உலாவிவருகின்ற வையாளிவெளியும் ஒன்றிருக்கின்றது. - எ-று.

வந்த டைந்தவர் தம்முரு மாய மற்று ளாரைத்தாங் காண்பிடம் உளது, சிந்தை
யோகத்து முனிவர்யோ கினிகள் சேரும் யோகபீ டமும்உள தென்றும் அந்த
மில்அறம் புரப்பவள் கோயில் ஆள போகபீ டமும்உள தாகும்,
எந்தை யார்மகிழ் காஞ்சிநீ டெல்லை எல்லை இல்லன உள்ள; ஆரறிவார்?
83

(இ - ள்.) வந்து சேர்ந்தவர்கள் உடலம் பிறருக்குத் தோன்றாமல் மறைய, அவர்கள் பிறரைக் காணும் படியான ஒரு சபையிருக்கின்றது; யோகஞ் செய்கின்ற சிந்தையையுடைய முனிவர்களும், யோகினிகளும், சேர்ந்திருக்கின்ற யோகபீடமும் ஒன்றிருக்கின்றது; அழிவில்லாத முப்பத்திரண்டு தருமங்களை யும் வளர்க்கின்ற காமாட்சியம்மையார் வீற்றிருந்தருளும் திருக்கோயிலில் சிறந்த (திருக்காமக் கோட்டமென்னும்) போகபீடமும் ஒன்றிருக்கின்றது; எமது ஆண்டவராகிய திருவேகம்ப நாதர் வீற்றிருக்கின்ற காஞ்சி நகரத்தின் நீண்ட எல்லையில் அளவற்ற அதிசயங்கள் உள்ளன; அவைகளை யாவரறிவார்கள்? (ஒருவருமில்லை.) எ-று.

தூண்டு சோதியொன் றெழுந்திருள் துரக்கும் சுரர்கள் வந்துசூழ் உருத்திர சோலை,
வேண்டி னார்கள்தம் பிறப்பினை ஒழிக்கும் மெய்ந்நெறிக்கணின் றார்கள்தாம் விரும்பித்,
தீண்டில் யாவையுஞ் செம்பொனாக் குவதோர் சிலையும் உண்டுறை செய்வதற் கரிதால்,
ஆண்ட நாயகி சமயங்கள் ஆறும் அகில யோனியும் அளிக்கும் அந் நகரம்.
84

(இ - ள்.) விளங்கி யெழுகின்ற ஒருசோதியானது இரவில் தோன்றி இருளை நீக்குதற் கிடமாயிருக்கும் தேவர்கள் வந்து சூழ்ந்து கொண்டிருக்கின்ற உருத்திர சோலையென்னும் பூங்காவனமும், விரும்பிவர்களுடைய பிறப்பினை யொழிக்கின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(ஒரு கல்லும்) மெய்ம்மையான நன்னெறியில் நின்றவர்கள் (பொன்னாக்கவேண்டுமென்று) விரும்பித்தீண்டும் படிச் செய்தால் (ஓடுமுதலிய எல்லாப் பொருள்களையும்) சிவந்த பொன்னாகச் செய்கின்ற ஒரு கல்லும் உண்டு; இத்தன்மையான அதன் பெருமையைச் சொல்வதற்கு அரிதாகும்; எம்மை யடிமையாகக் கொண்ட முதல்வியாகிய காமாட்சியம்மையார் அறுசமயங் களையும் எல்லாவுயிர்களையும் காப்பாற்றுகின்ற அந்த நகரத்தில். - எ-று.

என்றும் உள்ளஇந் நகர்கலி யுகத்தில் இலங்கு வேற்கரி காற்பெரு வளத்தோன்,
வன்தி றற்புலி இமயமால் வரைமேல் வைக்க ஏகுவோன் தனக்கிதன் வளமை,
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத் திருந்து காதநான் குட்பட வகுத்துக்,
குன்று போலுமா மதில்புடை போக்கிக் குடியிருத்தின கொள்கையின் விளங்கும்.
85

(இ - ள்.) எக்காலத்திலும் அழிவில்லாதிருக்கின்ற இந்தக் காஞ்சிநகரமானது கலியுகத்திலே மிகுந்த வலிமை பொருந்திய புலிக் கொடியை இமயமலையின் மேல் நாட்டும் படி சென்றவனாகிய விளங்குகின்ற வேலைப்பிடித்த கரிகாற் சோழனென்னும் அரசனுக்கு இந்நகரத்தின் வளத்தை முன்னாகச் சிந்துமேதனென்னும் ஒரு வேடன் போய்க்கண்டு சொல்ல, திருத்தமான சுற்றெல்லை நான்கு காததூரம் அடங்கும்படி ஒருபட்டணமாக வகுத்து மலையைப் போல் உயர்ந்த மதிலை நான்கு பக்கத்திலும் சூழ்ந்திருக்கும்படி உண்டாக்கி அநேகங்குடிகளை அவ்விடத் தில் வாசம் பண்ணும்படி செய்த பெருமையோடு விளங்கும். - எ-று.

தண்காஞ்சி மென்சினைப்பூங் கொம்ப ராடல் சார்ந்தசைய அதன் மருங்கு சுரும்பு தாழ்ந்து,
பண்காஞ்சி இசைபாடும் பழனவேலிப் பணை மருதம் புடையுடைத்தாய்ப் பாரில் நீடும்,
திண்காஞ்சி நகர்நொச்சி இஞ்சி சூழ்ந்த செழுங்கிடங்கு திருமறைகள் ஒலிக்குந் தெய்வ,
வண்காஞ்சி அல்குல்மலை வல்லி காக்க வளர்கருணைக் கடலுலகஞ் சூழ்ந்தால் மானும்.
86

(இ - ள்.) குளிர்ச்சி பொருந்திய காஞ்சி மரத்தினது மெல்லிய பூங்கொத்துக்களையுடைய கொம்புகள் காற்றால் அசைந்தாட, அக்கொம்புகளிலுள்ள மலர்களில் வண்டுகள் விழுந்து காஞ்சியென்னும் பண்ணை இசையோடு பாடுகின்ற சோலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாகிய வேலிகளையுடைய வயலோடு கூடிய மருதநிலத்தை அருகிலுடையதாய் உலகத்தில் சிறந்த காஞ்சி நகரத்தினது வலிய நொச்சியாகிய மதிலைச் சூழ்ந்த செழுமை பொருந்திய அகழியானது சிறந்த வேதங்கள் ஒலிக்கும் தெய்வீகமாகிய காஞ்சியென்னும் ஆபரணத்தைத் தரித்த இடையினையுடைய உமாதேவியார் காப்பதனால் அவ்வம்மையாருடைய மிகுந்த திருபையாகிய கடலானது அந்நகரத்தைச் சூழ்ந்திருப்பதை யொக்கும். -எ -று.

கொந்தலர்பூங் குழல்இமயக் கொம்பு கம்பர் கொள்ளும்பூ சனை குறித்த தானங்காக்க,
மந்திரமா மதில் அகழி அவர்தாந் தந்த வாய்மைஆ கமவிதியின் வகுப்புப் போலும்;
அந்தமில்சீர்க் காஞ்சியைவந் தடைந்தார்க் கன்றி அடைகளங்கம் அறுப்பரிதென் றறிந்து சூழ
வந்தணைந்து தன்கறுப்பும்உவர்ப்பும் நீக்கும்மாகடலும் போலும்மலர்க் கிடங்கு மாதோ. **87**

(இ - ள்.) தாமரை மலர்களையுடைய அகழியானது கொத்துக்களாக அலர்ந்த மலர்களை முடித்த கூந்லையுடைய உமாதேவியார் திருவேகம்பநாதர் விரும்பி ஏற்றுக் கொள்ளும் பூசனையைச் செய்யக் குறித்த இடத்தைக் காப்பாற்றும் பொருட்டு மந்திரமயமான மதிலோடு கூடிய அகழியை அக்கடவுளால் அருளிச் செய்யப்பட்ட, உண்மையாகிய சிவாகமவிதியினால் நிருமித்தலையொத்திருக்கும். அன்றியும், கெடாத சிறப்பினையுடைய காஞ்சி நகரத்தை வந்தடைந்த வர்களுக்கல்லாமல் தம்மையடைந்த குற்றத்தை நீக்கிக் கொள்ளுதல் அருமையென்று அக்காஞ்சியைச் சூழும்படிவந்து தன்னிடத்திலுள்ள கறுப்பையும் உவர்ப்பையும் நீக்கிக் கொள்ளும் பெரிய கடலையும் ஒத்திருக்கும். - எ-று.

ஆங்குவளர் எயிலினுடன் விளங்கும் வாயில் அப்பதியில் வாழ் பெரியோர் உள்ளம் போல,
ஓங்குநிலைத் தன்மையவாய் அகிலம் உய்ய உமைபாகர் அருள்செய்த ஒழுக்க மல்லால்,
தீங்குநெறி அடையாத தடையுமாகிச் செந்நெறிக்கண் நிகழ்வாய்மை திருந்து மார்க்கம்
தாங்குலவ நிலவிவளர் ஒளியால் என்றும் தடநெடுவான் அளப்பனவாம் தகைய வாகும். **88**

(இ - ள்.) அவ்வகழியி னருகில் ஓங்கிய மதிலுடன் விளங்கு கின்ற கோபுர வாசல்களை அந்நகரத்தில் வாசஞ் செய்கின்ற பெரியோர்களது மனம் போல உயர்ந்த தன்மையையுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

னவாய், உலகத்திலுள்ளவர்கள் நற்கதியடையும் படி சிவபெருமான் அருளிச் சசெய்த ஆகமத்தில் விதித்த நல்ல நடத்தையல்லாமல் தீமையாகிய நடத்தையைச் சேர்வதற்கு ஓர் தடையாகியும், நேரான வழியில் நடக்கும்படி செய்கின்ற மெய்மை பொருந்திய விளங்குகின்ற சோதியோடு தாம் நிலைபெற வணங்கி அகன்று நெடிதாயிருக்கும் ஆகாயத்தை அளப்பதற்கு எழுந்த தன்மையையுடையனவா யிருக்கும். - எ-று.

மாறுபெறல் அருங்கனக மாடம் நீடு மணிமறுகும் நெடுந்தெருவும் வளத்தில் வந்த,
ஆறுபயில் ஆவணவீதிகளும் மற்றும் அமைந்தநகர் அணிவரைகள் நடுவு போக்கிக்,
கூறுபடு நவகண்ட மன்றி மல்கக் கொண்டஅனே கங்கண்ட மாகிஅன்ன,
வேறொருமண் ணுலகுதனில் உளதாம் என்ன விளங்கியமா லோகநிலை மேவிற் றன்றே.
89

(இ - ள்.) களங்கமற்ற பொன்மயமாகிய மண்டபங்கள் மிகுதியாயிருக்கின்ற அழகிய வீதிகளும், நீண்ட தெருக்களும், வளம் பொருந்திய பண்டங்கள் விற்கின்ற கடைவீதிகளும் மற்றுமுள்ளவைகளும் பொருந்திய அந்த நகரமானது அழகிய இமயமுதலிய மலைகளை எல்லையாக நடுவில் அமைத்து வெவ்வேறாகப் பிரிக்கப் பட்டிருக்கும் நவகண்டங்கள்போல் இருப்பதலல்லாமல், நெருக்கமாகக் கொண்ட அநேகங்கண்டங் களாக வகுக்கப்பட்ட வேறொரு பூவுலகத்தை இந்தக் காஞ்சி மண்டலம் தன்னிடத்தில் உளதென்று சொல்லும்படி விளங்கு கின்ற ஒரு மகாலோகத்தின் தன்மையை யடைந்தது. - எ-று.

பாகமருங் கிருபுடையும் உயர்ந்து நீண்ட படரொளிமா ளிகைநிரைகள் பயில்மென் கூந்தல்,
தோகையர்தங் குழாம்அலையத் தூக்கு முத்தின் கூர்க்கோவைக் குளிர்நீர்மை துதைந்த வீதி,
மாகமிடை ஒளிதழைப்ப மன்னி நீடு மருங்குதா ரகைஅலைய வரம்பில் வண்ண,
மேகமிடை கிழித்தொழுகும் தெய்வக் கங்கை மேல்நதிகள் பலமண் மேல் விளங்கி ஒக்கும்.
90

(இ - ள்.) ஓரமாகிய இருபுறத்திலும் உயர்ந்து நீண்டிருக்கின்ற படர்ந்த ஒளியையுடைய மாளிகைகளின் வரிசைகளில் வாசஞ் செய்கின்ற மிருதுவாகிய கூந்தலையுடைய மாதர் கூட்டங்கள் அவ்வுப் பரிகைகளில் அலையும் படி தொங்கக் கட்டியிருக்கும் முத்து மாலைகளின் கோவைகளினால் குளிர்ந்த தன்மையை யுடைய வீதியானது ஆகாயத்தில் விளங்க நிலை பெற்றுள்ள நட்சத்திரங்கள் அலையும்படி ஒப்பற்ற கருநிறத்தையுடைய மேகங்களை நடுவில் கிழித்துக் கொண்டு பூமியில் இறங்குகின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெய்வத்தன்மை பொருந்திய ஆகாயகங்கையினின்றும் பிரிந்த பல நதிகள் உலகத்தில் வந்தது போல விளங்கியிருக்கும். - எ-று.

கிளரொளிச்செங் கனகமயந் தானாய்ப் பாடு கீழ்நிலைபோர் நீலச்சோ பானம் பூணக்,
கொளஅமைத்து மீதொருபாற் கன்னசாலை குலவயிரத் தாலமைத்த கொள்கை யாலே,
அளவில்சுடர்ப் பிழம்பானார் தம்மைத் தேடி அகழ்ந்தேனம் ஆனானும் அன்ன மாகி,
வளர் விசும்பில் எழுந்தானும் போல நீடு மாளிகையும் உளமற்று மறுகு தோறும். 91

(இ - ள்.) அவ்வீதிகள் தோறு மிருக்கின்ற சிவமாளிகைகள் மிகுந்த ஒளியையுடைய சிவந்த பொன்மயமாகச் செய்யப்பட்டு அருகிலுள்ள கீழ் நிலையில் நீலமணிகளிழைத்த படியையுடையனவாகி மேல் நிலையில் ஓர் பக்கத்தில் சிறந்த வயிரத்தால் அமைத்த சாளரத்தையுங் கொண்டிருக்கின்ற முறைமையினால், அளவில்லாத ஒளிப்பிழம்பாய் நின்ற சிவபெருமானுடைய அடியையும் முடியையும் தேடிக்காணும் படி பன்றியுருவங் கொண்டு பூமியைத் தோண்டி விஷ்ணுவும், அன்னவுருவங் கொண்டு நீண்ட ஆகாயத்தில் பறந்த பிரமனும் (இவர்கள் கலகத்தைதயொழிக்கச் சோதியாயெழுந்த சிவபெருமானும்) போன்றிருக்கின்றன. -எ-று.

மின்னொளியுடன் மணிப்படைந்த தவள மாட மிசைப்பயில்சந் திரகாந்தம் விசும்பின் மீது,
பொன்புரையுஞ் செக்கர்நிறப் பொழுது தோன்றும் புனிற்றுமதி கண்டுருகிப் பொழிந்த நீரால்,
வன்புலியின் உரியுடைத் திருஏ கம்பர் வளர்சடையும் இளம்பிறையும் கண்டு கும்பிட்,
டன்புருகி மெய்பொழிக் கண்ணீர் வாரும் அடியவரும் அனையனவுள அலகி லாத. 92

(இ - ள்.) மின்னலைப் போல விளங்குகின்ற பல மணிகளிழைத்த வெண்மை பொருந்திய உப்பரிகைகளின் மேற்புறத்தில் பதித்திருக்கின்ற சந்திரகாந்தக்கற்கள் ஆகாயத்தில் பொன் போலுஞ் செந்நிறத்தையுடைய மாலைப் பொழுதில் தோன்றுகின்ற இளம்பிறையைக்கண்டு உருகிச் சொரிந்த நீரினால், வலியபுலித்தோலாகிய ஆடையையுடைய திருவேகம்பரது வளர்ந்த சடையையும், இளமையாகிய பிறையையும் தரிசித்துக் கைகுவித்து வணங்கி அன்பினால் உருகித்தமது உடம்பில் சிதறும் படி ஆனந்தக்கண்ணீர் சொரிகின்ற அடியவரையும் ஒத்திருந்தன; இப்படி அளவில்லாத மேல் வீடுகளிருக்கின்றன. - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முகிலுரிஞ்சுங் கொடிதொடுத்த முடிய வாகும் முழுப்பளிங்கின் மாளிகைகள் முற்றுஞ் சுற்று,
நிகரில்சரா சரங்களெல்லாம் நிழலினாலே நிறைதலினால் நிறைதவஞ்செய் இமயப் பாவை,
நகில்உழுத சுவடும்வளைத் தழும்பும் பூண்ட நாயகனார் நான்முகற்குப் படைக்க நல்கும்,
அகிலயோ னிகளெல்லாம் அமைத்து வைத்த அரும்பெரும்பண் டாரநிலை அனைய வாகும்.
93

(இ - ள்.) மேகங்கள் உராய்ந்து செல்கின்ற கொடிகள் கட்டிய சிகரங்களையுடைய பெரிய பளிங்குக்கற்களினால் கட்டப்பட்ட மாளிகைகளின் புறம் முழுவதும், சுற்றுகின்ற ஒப்பற்ற சரம் அசரமாகிய எல்லாவுயிர்களும் அவைகளின் பிரதி பிம்பத்தினால் நிறைந்திருப்பது போலத் தோன்றுதலினால், நிறைவாகி தவத்தைச் செய்த பர்வதராசபுத்திரியாகிய உமா தேவியாரது ஸ்தனங்கள் அழுந்திய தழும்பையும், வளையல் களழுந்திய தழும்பையும் தமது திருமேனியில் தரித்துக் கொண்ட திருவேகம்பநாதர் பிரமனுக்கு உலகங்களைச் சிருஷ்டிக்கும்படி கொடுக்கும் சகல சீவராசிகளையும் சேர்த்துவைத்திருக்கின்ற அருமையாகிய பெரிய பொக்கிஷ சாலையை யொத்திருக்கும். - எ-று.

பொற்களப மாளிகைமேல் முன்றில் நின்று பூங்கழங்கு மணிப்பந்தும் போற்றி ஆடும்,
விற்புருவக் கொடிமடவார் கலன்கள் சிந்தி விழுவனவும் கெழுவுதுணை மேவு மாதர்,
அற்புமுதிர் கலவியினிற் பரிந்து சிந்தும் அணிமணிச்சே டியர்தொகுக்கும் அவையும் ஆகி,
நற்கனக மழை யன்றிக் காஞ்சி எல்லை நவமணிமா ரியும்பொழியும் நாளும் நாளும்.
94

(இ - ள்.) பொன்மயமாகிய களபச்சாந்து பூசிய உப்பரிகைகளின்மேல் முற்றத்தினின்று மெல்லிய கழற்காய்களையும் அழகிய பந்துகளையும் விரும்பி விளையாடுகின்ற வில்லையொத்த புருவத்தையுடைய கொடி போன்ற மாதர்களின் ஆபரணங்களினின்றும் சிந்திவிழுந்த பொன்களும், தழுவுகின்ற புருஷர்களோடு கூடிய மாதர்கள் அன்பு முதிர்ந்த புணர்ச்சியில் உண்டாகிய பிணக்கினால் வருந்திச்சிந்திய ஆபரணங்களும் பாங்கியர்களால் ஒதுக்கப்பட்ட முத்து முதலாகிய மணிகளுமாய்ச் சேர்ந்து விழுதலால் காஞ்சிபுரத்தின் எல்லையில் நாள்தோறும் நல்ல பொன்மழையேயல்லாமல் நரவத்தின மழையும் பொழிவது போலத் தோன்றும். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூமகளுக் குறையுளெனுந் தகைமையவாம் பொன்மாடத் தாமங்கள் பொலிய நின்று,
மாமகரக் குழைமகளிர் மைந்த ரங்கண் வந்தேறு முன்நறுநீர் விளையாடத்,
தூமணிப்பொன் புனைநாளத் துருத்தி வீசுஞ் சுடர்விடுசெங் குங்குமநீர்த் துவலை தோய்ந்த
காமர்மணி நாசிகையின் மருங்கு தங்குங் கருமுகில்கள் செம்முகில்க ளாகிக் காட்டும். 95

(இ-ள்.) திருமகளுக்கு இருப்பிடமென்று சொல்லத்தக்க தகுதியையுடைய பொன்மயமாகிய மாளிகைகளின் மேலுள்ள நிலாமுற்றங்களில் அழகு விளங்கும்படி நின்று பெரிய மகரகுண்டலங்களை பணிந்த மாதர்கள் தங்கள் புருஷர்கள் அந்நிலாமுற்றங்களில் வந்து ஏறுவதற்கு முன்னே நல்ல பனிநீரால் விளையாடும்படி விரும்பிக் குற்றமற்ற பொன்னினாற் செய்து மணிகளழுத்திய துளைகளையுடைய நீர் தூவுந் துருத்தியினின்றும் இறைத்த ஒளிவீசுகின்ற சிவந்த குங்குமங் கலந்த பனிநீர்த்துளிகள் தோய்ந்திருக்கின்ற அழகிய மணி களிழைத்த கோபுரநாசிகளின் பக்கத்தில் தங்கிய கரியமேகங்கள் செந்நிறத்தையுடைய மேகங்களாய்த் தோன்றும். -எ-று.

நிரைமலி எடுத்தநெடு வரைகள் போல இலங்குசுதைத் தவளமா ளிகைநீள் கோட்டுச்,
சிகரமிசைப் படியோடு விண்ணுந் தெரியாத தன்மையினால் அவற்றுட் சேர்ந்து
தமர்களுடன் இழிந்தேறு மைந்தர் மாதர் தங்களையும் விசும்பிடைநின் றிழியா நிற்கும்
அமரரையும் அரமகளிர் தமையும் வெவ்வே றறிவரிதாந் தகைமையன அநேகம் அங்கண். 96

(இ-ள்.) பன்முறைப்படி உயர்ந்த நெடியமலைகள் போன்று விளங்குகின்ற சுண்ணச் சாந்து பூசுதலால் வெண்மையாகிய மாளிகைகளின் நீண்ட சிகரத்தின் உச்சியையடையும்படி அமைத்திருக்கும் படிகளின் வரிசையையும், விண்ணுலகத்தையும் வேறாகப் பிரித்து அறியக் கூடாத தன்மையினால், அவைகளைச் சேர்ந்து உறவினரோடு இறங்கி ஏறுகின்ற புருஷர்களையும் ஸ்திரீகளையும், விண்ணுலகத்தினின்றும் இறங்கி வருகின்ற தேவர்களையும் தேவரம்பையர்களையும் வெவ்வேறாக அறிதற்கு அருமையான தன்மையையுடையனவாய் அந்நகரத்தில் அநேகம் மாளிகைகள் இருக்கின்றன. -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**அரவநெடுந் தேர்வீதி அருகு மாடத் தணிமணிக்கோ புரத்தயலே வியல்வாய் நீண்ட,
விரவுமர கதச்சோதி வேதித் திண்ணை விளிம்பின் ஒளி துளும்புமுறைப் படிமீ தேறும்,
குரவலருங் குழல்மட வார் அடியில் ஊட்டுங் குழம்படுத்த செம்பஞ்சின் சுவட்டுக் கோலம்,
பரவைநெடுந் தரங்கமிசை விளங்கித் தோன்றும் பவளநறுந் தளிரனைய பலவும் பாங்கர்.** 97

(இ - ள்.) ஒலியையுடைய நெடியதேரோடும் வீதிகளில் இருபுறத்திலுமிருக்கும் மண்டபங்களின் அழகிய மணிகள் பதித்த கோபுரத்தின் அருகிலுள்ள விசாலமாய் நீண்ட மரகத மணிகளிழைத்து ஒளி பொருந்திய திண்ணை விளிம்புகளின் ஒளியானது பாயும் முறைமையினால் அப்படிகளின் மேல் ஏறுகின்ற குராமலர்கள் விளங்கும் கூந்தலையுடைய மாதர் களின் பாதங்களில் பூசிய செம்பஞ்சுக் குழம்பின் வைப்புகளின் அடையாளங்கள் நீண்ட அலைகளையுடைய கருங்கடலின் மேல் விளங்கித்தோன்றுகின்ற நல்ல பவளக் கொழுந்துகளை யொத்திருக்கின்றன; இப்படி அநேக இடங்கள். -எ-று.

**வெம்புசினக் களிற்றதிர்வும் மாவின் ஆர்ப்பும் வியன்நெடுந்தேர்க் காலிசைப்பும் விழவ றாத,
அம்பொன்மணி வீதிகளில் அரங்கி லாடும் அரிவையர்நூ புரவொலியோ டமையும் இம்பர்,
உம்பரின்இந் திரன் களிற்றின் முழக்குந் தெய்வ உயர்இரவி மாக்கலிப்பும் அயனூர் தித்தேர்,
பம்பிசையும் விமானத்துள் ஆடுந் தெய்வப் பாவையர்நூ புர அரவத் துடனே பல்கும்.** 98

(இ - ள்.) காஞ்சி புரத்தின் கீழிடத்தில், மிகுந்த கோபத்தை யுடை யானைகளின் முழக்கமும், குதிரைகளின் கனைப்பும், விசாலமாகிய நீண்ட தேர்ச்சக்கரங்களின் ஒலியும், என்றும் திருவிழாக்கள் நீங்காத அழகிய பொன்னையும் மணிகளையும் பரப்பிய வீதிகளிலுள்ள நாடக சாலைகளிலும் ஆடுகின்ற நாடகப் பெண்களின் காலிலணிந்த சிலம்புகளினொலியும் பொருந்தியிருக்கும்; அந்நகரத்தின் மேலிடத்தில் தேவேந்திர னுடைய அயிராவதமென்னும் யானையின் முழக்கமும், தெய்வத்தன்மை பொருந்திய சூரியனுடைய தேரிற்பூட்டியசப்தா வென்னும் குதிரையின் கனைப்பும், பிரமனுடைய ஊர்தியாகிய தேரினின்றும் பரவிய முழக்கமும், தேவவிமானங்களில் ஆடுகின்ற தெய்வமாதர்களின் காலில் தரித்த சிலம்பின் ஓசையும் நிறைந்திருக்கும். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருமறையந் தணர்மன்னும் இருக்கையான ஆகுதியின் புகைஅடுத்த அம்பொன் மாடப்,
பெருமறுகு தொறும்வேள்விச் சாலை எங்கும் பெறும்அவிர்ப்பா கங்கொடுக்கும் பெற்றி மேலோர்,
வருமுறைமை அழைக்கவிடு மந்திரங்கள் மருங்கும் வானவர்நா யகர்திருவே கம்பர் முன்றில்,
திருமலிபொற் கோபுரத்து நெருங்கும் எல்லாத் தேவரையும் அணித்தாகக் கொண்டு செல்லும்.

99

(இ - ள்.) அரிய வேதங்களை யுணர்ந்த பிராமணர்கள் வாழ்ந்திருக்கின்ற இடங்களாகிய அழகிய பொன்மயமாகிய மாளிகைகளையுடைய வீதிகள் தோறும் ஆகுதி செய்வதால் புகைகள் பரவிய யாகசாலைகளிலெல்லாம் தேவர்கள் பெறுதற்குரிய அவிர்ப்பாகத்தைக் கொடுக்கின்ற குணத்தினை யுடைய மேலோர்கள் அத்தேவர்கள் அந்த அவியைப் பெறும்படி அழைக்கின்ற மந்திரங்கள் தேவர்களுக்கு நாயகராகிய திருவேகம்பநாதரது திருக் கோபுரவாசலினுடைய நாற்புறத்திலும் (சேவை செய்யும் பொருட்டு) நெருங்கியிருக் கின்ற எல்லாத் தேவர்களையும் யாகசாலையின் சமீபமாக அழைத்துக் கொண்டு போகும். -எ-று.

அரசர்குலப் பெருந்தெருவும் தெற்றி முற்றத் தாயுதங்கள் பயிலும்வியல் இடமும் அங்கண்,
புரசைமதக் கரிகளொடு புரவி ஏறும் பொற்புடைய வீதிகளும் பொலிய எங்கும்,
விரைசெய்நறுந் தொடைஅலங்கல் குமரர் செய்யும் வியப்புறுசெய் தொழில்கண்டு விஞ்சை விண்ணோர்,
நிரை செறியும் விமானவூர் திகளின் மேலும் நிலமிசையும் பலமுறையும் நிரந்து நீங்கார்.

100

(இ - ள்.) அரசர்குலத்தார் வாழ்கின்ற பெரிய வீதிகளும், சித்திரகூடங்களின் முற்றத்தில் படைக்கலங்களைப் பழகுகின்ற விசாலமாகிய இடமும், கழுத்துக் கயிற்றையுடைய மதயானை களோடு குதிரைகளையும் ஏறி நடத்துகின்ற அழகிய வீதிகளும் ஆகிய எவ்விடத்திலும் பொலிவடையும் படி வாசனை பொருந்திய நல்ல மலர் மாலைகளைத் தரித்த அரசகுமாரர்கள் செய்கின்ற அதிசயிக்கத்தக்க பலவகைத் தொழில்களைக் கண்டு வித்தியாதரர்முதலிய தேவர்கள் வரிசையாக நெருங்கியிருக் கின்ற தேவவிமானங்களின் மேலும் பூமியிலும் பலதரமும் வந்து கூடி நீங்காதிருப்பார்கள். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெயிலுமிழும் பன்மணிப்பூண் வணிக மாக்கள் விரவுநிதி வளம் பெருக்கும் வெறுக்கை மிக்க,
வயின்நிலவு மணிக்கடைமா நகர்கள் எல்லாம் வளப்புடைய பொருட்குலங்கள் மலித லாலே,
கயிலைமலை யார்கச்சி ஆல யங்கள் கம்பமுமே வியதன்மை கண்டு போற்றப்,
பயிலுமுருப் பலகொண்டு நிதிக்கோன் தங்கப் பயில்அளகா புரிவகுத்த பரிசு காட்டும்.
101

(இ - ள்.) ஒளிவீசுகின்ற பல ரத்தினங்களிழைத்த ஆபரணத்தை யணிந்த வணிகர்கள் வர்த்தகஞ் செய்தலால் பெற்ற செல்வமிகுந்த காசுக்கடைகளையுடைய வீதிகளிலெல்லாம் சிறப்புப் பொருந்திய பொன் மணிமுதலிய பொருட் குப்பைகள் மிகுதியாக நிறைந்திருப்பதினால், சிவபெருமான் காஞ்சி நகரத்திலுள்ள பலசிவாலயங்களிலும் திருவேகம் பத்திலும் வீற்றிருந்தருளும் தன்மையை அறிந்து வணங்கும்படி குபேரன் தான் பழகிய பல வுருவங்களையெடுத்து அந்நகரத்தில் வாசஞ் செய்யத் தனக்கு இடமாகிய அளகாபுரியையும் பலவுருவங்கொள்ள வகுக்கப்பட்டது போலத் தோன்றுகின்றன. எ-று.

விழவுமலி திருக்காஞ்சி வரைப்பின் வேளாண் விழுக்குடிமைப் பெருஞ்செல்வர் விளங்கும் வேணி,
மழஇளவெண் திங்கள்புனை கம்பர் செம்பொன் மலைவல்லிக் களித்தவள ருணவின் மூலம்,
தொழவுலகு பெறுமவள்தா னருளப் பெற்றுத் தொன்னிலத்து மன்னுயயிர் வேத வாய்மை,
உழவுதொழி லாற்பெருக்கி உயிர்களெல்லாம் ஓங்கவருந் தருமவினைக் குளரால் என்றும்.
102

(இ - ள்.) திருவிழாக்களால் சிறந்திருக்கின்ற காஞ்சி நகரத்தின் எல்லையில் வாழ்கின்ற சிறந்த வேளாளர் குலத்திற் பிறந்த செல்வர்கள் ஒளிவிளங்குகின்ற சடையில் வெண்மை யாகிய இளம்பிறையைத் தரித்த திருவேகம்ப நாதர் பர்வதராச புத்திரியாகிய உமாதேவியாருக்குக் கொடுத்தருளிய அருள் வடிவமான இருநாழி நெல்லையும், சர்வலோகங்களையும் பெற்றருளிய அவ்வம்மையார் கொடுக்கத்தொழுது பெற்றுக் கொண்டு பழமையாகிய இவ்வுலகத்தில் நிலைபெற்ற பயிர்களை வேதத்தில் விதித்த உழவுத்தொழிலினால் விருத்தி செய்து ஆன்மகோடிகளெல்லாங் ஓங்கும்படி வருகின்ற தருமச் செய்கைகளின் குறைவில்லாதவர்களாய் எந்நாளும் இருக்கின் றார்கள். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓங்கியநாற் குலத்தொவ்வாப் புணர்வில் தம்மில் உயர்ந்தனவும் இழிந்தனவும் ஆன சாதி,
தாங்குழுமிப் பிறந்தகுல பேதம் எல்லாம் தம்தகைமைக் கேற்றதனி இடங்கள் மேவி,
ஆங்குநிறை கிளைபயின்று மரபின் ஆற்ற அடுத்தவினைத் தொழின்முறைமை வழாமை நீடு,
பாங்குவளர் இருக்கைநிலை பலவும் எல்லாம் பண்புநீ டியவுரிமைப் பால அன்றே. **103**

(இ - ள்.) உயர்வு பொருந்திய பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர ரென்னும் நான்கு சாதிகளில் உயர்ந்த சாதி யாண் தாழ்ந்த சாதிப் பெண்ணையும், தாழ்ந்த சாதி யாண் உயர்ந்த சாதிப் பெண்ணையும் புணர்ந்ததனால் பிறந்த அனுலோமர் பிரதி லோமர் என்கிற உயர்வுதாழ்வாகிய சாதிகளும், அவ்விரண்டு சாதிகளில் ஒரு சாதி யாணும் பெண்ணும், மற்றொரு சாதிப் பெண்ணையும் ஆணையும் சேர்ந்து பிறந்த பல வகைப்பட்ட சாதியாரும் அவரவர்கள் யோக்கியதைக்குத் தகுந்த வெவ்வேறு இடங்களிலிருந்து கொண்டு அவ்வவ்விடங்களில் நிறைந்த உறவினர்களோடு கலந்து தங்கள் மரபிற்கு ஏற்ற தொழில் முறைமை தவறாமல் மிகுந்த குணத்தோடு வாழ்ந்திருக்கும் வீடுகளையுடைய இடங்களெல்லாம் உரிமையும் நற்குணங் களும் பொருந்திய தன்மையையுடையனவாயிருக்கின்றன. எ-று

ஆதி மூதெயில் அந்நகர் மன்னிய
சோதி நீள்மணித் தூபமுந் தீபமும்
கோதில் பல்லிய முங்கொடி யும்பயில்
வீதி நாளும் ஒழியா விழாவணி. **104**

(இ - ள்.) முதன்மையாகிய பழையமதில் சூழ்ந்த அந்தக் காஞ்சி நகரத்திலுள்ள வீதிகள் ஒளிவிளங்குகின்ற பெரிய மணிகளிழைத்த தூபகலசங்களில் இடுகின்ற தூபங்களும், தீபங்களும், குற்றமற்ற பலவகையாகியவாத்தியங்களும், கொடி யாடைகளும் உடையனவாகி எந்நாளம் திருவிழாக்களின் சிறப்புக்களை நீங்காதிருக்கின்றன. -எ-று.

வாயில் எங்கணுந் தோரணம் மாமதில்
ஞாயில் எங்கணுஞ் சூழ்முகில் நாண்மதி
தோயில் எங்கணும் மங்கலம் தொண்டர்சூழ்
கோயில் எங்கணும் உம்பர் குலக்குழாம். **105**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அந்நகரத்திலுள்ள மாளிகைகளின் வாயில்கள் தோறும் மகரதோரணங்கள் கட்டியிருக்கின்றன. பெரிய மதிலின் உறுப்புக்களிலெல்லாம் மேகங்கள் தவழ்கின்றன. ஒளிவிளங்குகின்ற சந்திரன் தவழ்கின்ற மேல்வீடுகளிலெல்லாம் மங்கலகரமான காரியங்கள் நடக்கின்றன. சிவனடியார்கள் சூழ்ந்திருக்கின்ற திருக்கோயில்களிலெல்லாம் தேவர்களுடைய கூட்டங்கள் மிகுதியாக நிறைந்திருக்கின்றன. -எ-று.

வேத வேதியர் வேள்வியே தீயன;
மாத ரோதி மலரே பிணியன;
காதல் வீதிவி லக்கே கவலைய;
சூத மாதவி யேபுறஞ் சூழ்வன. 106

(இ - ள்.) வேதங்களையுணர்ந்த பிராமணர்கள் செய்கின்ற யாகங்களே தீயனவாயிருக்கின்றன. ஸ்திரீகளின் கூந்தல்களிலுள்ள மலர்களே பிணியனவாயிருக்கின்றன. விருப்பத்தைத் தரத்தக்க வீதிகளிலுள்ள விலக்காகிய வழிகளே கவலையுடையனவாயிருக்கின்றன. மாமரங்களும் குருக்கத்தி மரங்களுமே புறத்திற் சூழ்ந்துக் கொண்டிருப்பன. -எ-று.

சாய லார்கள் நுசுப்பே தளர்வன;
ஆய மாடக் கொடியே அசைவன;
சேய ஓடைக் களிறே திகைப்பன;
பாய சோலைத் தருவே பயத்தன. 107

(இ - ள்.) மயில் போன்ற சாயலையுடைய பெண்களின் இடைகளே தளர்வடைந்திருக்கின்றன. நன்றாகக் கட்டியிருக்கின்ற உப்பரிகைகளின் மேலுள்ள கொடிகளே அசைகின்றன. சிவந்த பொன்மயமாகிய நெற்றிப் பட்டத்தையணிந்த யானைகளே திகைக்கின்றன. விசாலமாகிய சோலைகளிலுள்ள மரங்களே பயத்தையுடையனவா யிருக்கின்றன. -எ-று.

அன்ன லார்அன்பர் அன்பேமுன் ஆர்த்தன;
தன்ன றுஞ்செழுந் தாதே துகளன;
வண்ண நீள்மணி மாலையே தாழ்வன;
எண்ணில் குங்குமச் சேறே இழுக்கின. 108

(இ - ள்.) சிவபெருமானுடைய அடியார்களின் அன்பே வலிவாகக் கட்டப் பட்டன. குளிர்ச்சியும் வாசனையுமுள்ள செழிய பூந்தாதுக்களே துகளாயிருக்கின்றன. அழகு பொருந்திய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீண்ட இரத்தினமாலைகளே தாழ்கின்றன. மிகுந்த குங்குமக் குழம்பே இழுக்கை யுடையனவாயிருக்கின்றன. எ-று.

வென்றி வானவர் தாம்விளை யாடலும்
என்றும் உள்ளவர் வாழும் இயற்கையும்
நன்றும் உள்ளத்து நண்ணினர் வேட்கைகள்
ஒன்றும் அங்கொழி யாவகை உய்ப்பது. 109

(இ - ள்.) வெற்றி பொருந்திய தேவர்கள் விளையாடல் செய்தலையும், எந்நாளும் அழியாத நிலைமையைப் பெற்ற சித்தர்கள் வாழ்ந்திருக்கின்ற இயல்பையும், எல்லா நன்மைகளை யும் தங்கள் மனதில் நினைத்திருக்கின்ற அவரவர்களுடைய விருப்பத்துள் ஒன்றையும் அவ்விடத்தில் நீங்காமலிருக்கும்படி செலுத்துவது அக்காஞ்சி நகரம். எ-று.

புரங்க டந்தவர் காஞ்சி புரம்புகழ்
பரம்பு நீள்புவ னம்பதி னான்கினும்
வரம்பில் போக வனப்பின் வளமெலாம்
நிரம்பு கொள்கலம் என்ன நிறைந்ததால். 110

(இ - ள்.) திரிபுரத்தை யெரித்தருளிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் காஞ்சிபுரமானது புகழ்பரவிய நீண்ட பதினான்கு உலகங்களிலு முண்டாகிய அளவற்ற போகங்களின் அழகியவளப்பங்களெல்லாம் நிறைந்திருக்கின்ற ஒரு பாண்டம் போல விளங்கி இருந்தது. எ-று.

அவ்வகைய திருநகரம் அதன்கண்ஒரு மருங்குறைவார்;
இவ்வுலகிற் பிறப்பினால் ஏகாலிக் குலத்துள்ளார்;
செவ்வியஅன் புடைமனத்தார்; சீலத்தின் நெறிநின்றார்;
மைவிரவு கண்டரடி வழித்தொண்டர் உளரானார். 111

(இ - ள்.) அத்தன்மையாகிய சிறப்பினையுடைய காஞ்சிபுரத் தில் ஓரிடத்தில் வாழ்கின்றவரும், இந்தவுலகத்தில் அவரது பிறப்பைக்குறித்து விசாரிக்குமிடத்து ஏகாலியர்குலத்தில் அவதரித்தவரும், செம்மையாகிய அன்பு பொருந்திய மனத்தினையுடையவரும், நல்லொழுக்க நெறியில் வழுவாமல் நின்றவரும், காள கண்டத்தினையுடைய சிவபெருமானது திருவடிகளுக்கு வழிவழியே தொண்டு செய்தொழுகுகின்ற வருமாகிய ஒரு அடியவரிருந்தார். எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்ணின்மிசை வந்ததற்பின் மனமுதலா யினமூன்றும்
அண்ணலார் சேவடியின் சார்வாக அணைவிப்பார்
புண்ணியமெய்த் தொண்டர்திருக் குறிப்பறிந்து போற்றுநிலைத்
திண்மையினால் "திருக்குறிப்புத் தொண்டர்" எனுஞ் சிறப்பினார். 112

(இ - ள்.) அவர் இவ்வுலகத்தில் அவதரித்த பின்பு மனம் வாக்கு காயம் என்னும் திரிகரணங்களும் சிவபெருமானுடைய சிவந்த திருவடிகளினிடத்தே பொருந்தும் படி செலுத்துகின்றவர்; சிவபுண்ணியத்தையுடைய உண்மை பொருந்திய அடியார்களின் திருவுள்ளக் குறிப்பையறிந்து அவர்களுக்கு வழிபாடு செய்கின்ற நிலைமையான உறுதியினால் திருக்குறிப்புத் தொண்டரென்னும் பெயர் பெற்ற் சிறப்பினையுடையவர். எ-று.

தேரொலிக்க மாவொலிக்கத் திசையொலிக்கும் புகழ்க்காஞ்சி
ஊரொலிக்கும் பெருவண்ணார் எனவொண்ணா உண்மையினார்;
நீரொலிக்க அராஇரைக்க நிலாமுகிழ்க்குந் திருமுடியார்
பேரொலிக்க உருகுமவர்க் கொலிப்பர்பெரு விருப்பினொடும். 113

(இ - ள்.) தேர்களும் குதிரைகளும் ஒலித்தலால் சிறப்புற்றுத் திக்குகளிலெல்லாம் பரவிய புகழினையுடைய காஞ்சி புரத்தில், ஊரிலுள்ள ஆடைகளை வெண்மை செய்கின்ற பெரிய வண்ணாரென்று சொல்லக் கூடாத மெய்யன் பினையுடையவர்; கங்கைநீர் முழங்கவும், பாம்புகள் இரைக்கவும் இளம்பிறை யானது விளங்குகின்ற சடைமுடியையுடைய சிவபெருமானது திருநாமங்களை உச்சரித்த பொழுதே மனமுருகுகின்ற அடியார்களுக்கு மிகுந்த விருப்பத்தோடு அவர்கள் வஸ்திரங்களை ஒலித்துக் கொடுப்பவர். எ-று.

ஒலித்தல் - வெண்மையாக்கல்

தேசுடைய மலர்க்கமலச் சேவடியார் அடியார்தம்
தூசுடைய துகள்மாசு கழிப்பார்போல் தொல்லைவினை
ஆசுடைய மலமூன்றும் அணையவரும் பெரும்பிறவி
மாசுதனை விடக்கழித்து வருநாளில் அங்கொருநாள். 114

(இ - ள்.) ஒளி பொருந்திய தாமரை மலர் போன்ற சிவந்த திருவடிகளையுடைய சிவபெருமானது அடியார்களின் வஸ்திரங்களிலுள்ள குற்றமாகிய அழுக்கினை நீக்குகின்றவரைப் போலப் பழைய கன்மமுதலாகிய குற்றத்தை விளைக்கும் மும்மலங்களும் பொருந்தும்படி தொடர்ந்து வருகின்ற பெரிய பிறவியாகிய அழுக்கானது தம்மைவிட்டு நீங்கும்படி செய்து வருகின்ற நாள்களில் ஒருநாள். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொன்னிமயப் பொருப்பரையன் பயந்தருளும் பூங்கொடிதன்
நன்னிலைமை அன்றளக்க எழுந்தருளும் நம்பெருமான்
தன்னுடைய அடியவர்தம் தனித்தொண்டர் தம்முடைய
அந்நிலைமை கண்டன்பர்க் கருள்புரிவான் வந்தணைவார். 115

(இ - ள்.) பொன்மயமாகிய இமய பர்வதராசன் பெற்றருளிய உமாதேவியாருடைய நல்ல அன்பின் நிலைமையைப் பரிசோதிக்கும்படி முன்னாளில் எழுந்தருளிய நமது பெருமானாகிய திருவேகம் பநாதர் தம்முடைய அடியார்களுக்கு அடியவரா யிருக்கின்ற ஒப்பற்ற திருக்குறிப்புத் தொண்ட நாயனாருடைய அன்பின் நிலைமையை யறிந்து அவர்க்குக் கிருபை செய்யும் படி வருகின்றவராயினார். எ-று.

சீதமலி காலத்துத் திருக்குறிப்புத் தொண்டர்பால்
ஆதுலராய் மெலிந்துமிக அழுக்கடைந்த கந்தையுடன்
மாதவவே டந்தாங்கி மாலறியா மலரடிகள்
கோதடையா மனத்தவர்முன் குறுநடைகள் கொளக்குறுகி. 116

(இ - ள்.) சீதள மிகுந்த குளிர்காலத்தில் திருக்குறிப்புத் தொண்ட நாயனாரிடத்தில் ஏழை போலத் திருமேனி இளைத்து, மிகவும் அழுக்காகிய கந்தையுடனே மகத்தான தவவேடமாகிய விபூதி ருத்திராக்ஷங்களை யணிந்து, விஷ்ணு வினால் தேடி யறியப்படாத தாமரை மலர் போன்ற திருவடிகள் குற்றமற்ற மனத்தினையுடைய அத்திருக்குறிப்புத்தொண்ட நாயனாருக்கு முன்னே தளர்ந்த நடைகொள்ளும்படியாக எழுந்தருளி. எ-று.

திருமேனி வெண்ணீறு திகழ்ந்தொளிருங் கோலத்துக்
கருமேக மெனஅழுக்குக் கந்தையுடன் எழுந்தருளி
வருமேனி அருந்தவரைக் கண்டுமனம் மகிழ்ந்தெதிர்கொண்(டு)
உருமேவும் மயிர்ப்புளகம் உளவாகப் பணிந்தெழுந்தார். 117

(இ - ள்.) திருமேனியில் வெண்மையாகிய திருநீறு விளங்குகின்ற கோலத்துடனே கருநிறம் பொருந்திய மேகம் போல அழுக்குப் பிடித்த கந்தையையுடையவராய் எழுந்தருளி வருகின்ற அரிய தவவேடத்தையுடைய சிவபெருமானைப் பார்த்து மனதில் மகிழ்வடைந்து எதிர்கொண்டு சென்று தமது தேகத்தில் மயிர்புளகிக்கும்படி வணங்கி யெழுந்தார். எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எய்துமவர் குறிப்பறிந்தே இன்மொழிகள் பலமொழிந்து
"செய்தவத்தீர்! திருமேனி இளைத்திருந்த தென்?" என்று
கைதொழுது "கந்தையினைத் தந்தருளும் கழுவ" என
மைதிகழ்கண் டங்கரந்த மாதவத்தோர் அருள்செய்வார். 118

(இ - ள்.) இவ்வாறு தம்மிடத்திற்கு எழுந்தருளிய சிவபெருமானாகிய அடியவரின் திருவுள்ளக்குறிப்பை யறிந்து இனிமையாகிய பல உபசாரவார்த்தைகளைச் சொல்லி, அருமையாகச் செய்த தவத்தினையுடைய பெரியோரே! தேவரீருடைய திருமேனி இளைத்திருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்டுக் கைகூப்பி வணங்கி நீர் தரித்திருக்கின்ற ஆடையை அழுக்குநீக்கித் தருவதற்குக் கொடுத்தருளுமென்று கேட்க, கருநிறம் பொருந்திய கண்டத்தை மறைத்துப் பெரிய தவமுனிவர் போல எழுந்தருளிய சிவபெருமான் அருளிச் செய்வார். எ-று.

"இக்கந்தை அழக்கேறி எடுக்கவொணா தெனினும்யான்
மெய்க்கொண்ட குளிர்க்குடைந்து விடமாட்டேன்; மேல்கடற்பால்
அக்குன்றம் வெங்கதிரோன் அணைவதன்முன் தருவீரேல்
கைக்கொண்டு போயொலித்துக் கொடுவாரும்கடி" தென்றார். 119

(இ - ள்.) நான் தரித்திருக்கின்ற இந்தக் கந்தைத் துணியானது அதிக அழுக்கடைந்து தரிப்பதற்குத் திகுதியற்றதாயிருந்தாலும் உடம்பில் வீசுகின்ற குளிர் காற்றுக்குப் பயந்து இதனைக் கைவிடாமல் வைத்துக் கொண்டிருக்கின்றேன்; ஆதலால், நீர் மேற்கடலிலுள்ள அஸ்தமயகிரியில் சூரியன் அடைவதற்கு முன்னே கொடுப்பீராயின் இதனைக் கையில் எடுத்துக் கொண்டு போய் வெளுக்க வொலித்து விரைவில் கொண்டு வாருமென்று சொன்னார். எ-று.

"தந்தருளும் இக்கந்தை தாழாதே ஒலித்துமக்கின்(று)
அந்திபடு வதன்முன்னந் தருகின்றேன்" எனஅவரும்
"கந்தைஇது ஒலித்துணக்கிக் கடிதின்றே தாரீரேல்
இந்தவுடற் கிடர்செய்தீர்" என்றுகொடுத் தேகினார். 120

(இ - ள்.) (திருக்குறிப்புத் தொண்ட நாயனார் இவ்வாறு அருளிச் செய்த சிவபெருமானாகிய அடியவரைப் பார்த்து) தேவரீர் இக்கந்தையைக் கொடுத்தருளும்; அடியேன் பொழுது போக்காமல் வெளுத்து இன்று அந்திவேளையாவதற்கு முன்னமே தருகின்றேனென்று சொல்ல, அடியவர் வேடங் கொண்டு வந்த அக்கடவுளும், கந்தையாகிய இத்துணியை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெண்மையாக்கி உலர்த்தி உலர்த்தி விரைவில் இத்தினத் திலேயே, கொடுக்காமற் போவீராயின் இந்த உடலுக்கு நீர் துன்பஞ் செய்தவராவீரென்று கொடுத்துவிட்டுப் போனார். எ-று.

குறித்தபொழு தேஒலித்துக் கொடுப்பதற்குக் கொடுபோந்து
வெறித்தடநீர்த் துறையின்கண் மாசெறிந்து மிகப்புழுக்கிப்
பிறித்தொலிக்கப் புகும்அளவில் பெரும்பகல் போய்ப் பின்பகலாய்
மறிக்கரத்தார் திருவருளால் மழைஎழுந்து பொழிந்திடுமால். 121

(இ - ள்.) (சிவபெருமானாகிய அடியவர்) குறித்த பொழுதிலேயே வெளுத்துக் கொடுக்கும்படி வாங்கிக் கொண்டு போய் மலர்களின் வாசனை பொருந்திய (ஆடையொலிக்கும்) ஒரு தடாகத்தின் நீர்த்துறையில் அழுக்கு நீங்கும் படி தோய்த்து பின்பு வெள்ளாவியில்லைத்துப் புழுக்கி, அவ்வழுக்கைப் பிரித்து ஒலிக்கப் போன பொழுது உச்சிப் பகலானது ஒழிந்து அந்திவேளைபோலத் தோன்ற, மானைத்தரித்த திருக்கரத்தினை யுடைய சிவபெருமானது கிருபையினால் மேகங்கள் திரண் டெழுந்து மழைபொழிந்தன. எ-று.

திசைமயங்க வெளியடைத்த செறிமுகிலின் குழாமிடைந்து
மிசைசொரியும் புனல்தாரை விழிநுழையா வகைமிடைய
அசையுடைய மனத்தன்பர் அறிவுமறந் தருந்தவர்பால்
இசைவுநினைந் தழிந்(து) 'இனியான் என்செய்கேன்' எனநின்றார். 122

(இ - ள்.) திக்குகள் தெரியாமல் மங்கும்படி ஆகாயத்தின் இடைவெளியை மூடி நெருங்கிய மேகக்கூட்டங்கள் ஒன்றாகச் சேர்ந்து மேலிடத்திலிருந்து சொரிகின்ற நீர்த்தாரைகள் கட்பொறிகள் நுழைந்து செல்வ தற்கிடமில்லாமல் நெருங்கி விழுந்து கொண்டிருக்க, (அப்பொழுது அந்திவேளைக்கு முன்னமே கந்தையைத் தோய்த்து உலர்த்திக் கொடுக்கிறே னென்று சொல்லிய சங்கதி எவ்வாறாகுமோ வென்று) வருத்தப் பட்டுக் கொண்டிருக்கின்ற மனத்தினையுடைய திருக்குறிப்பத் தொண்ட நாயனார் தமது உணர்வுமயங்கி அரியதவமுனிவர் வேடங் கொண்டு வந்த சிவபெருமானிடத்தில் தாம் வாக்குத்தத் தஞ் செய்ததை நினைந்து மனம்புழுங்கி இனி இதற்கு நான் என்ன செய்வேனென்று வருத்தமுற்று நின்றார். எ-று.

"ஓவாதே பொழியுமழை ஒருகால்விட் டொழியும்" எனக்
காவாலி திருத்தொண்டர் தனிநின்றார்; விடக்காணார்;
மேவார்போற் கங்குல்வர "மெய்குளிரும் விழுத்தவர்பால்
ஆ! ஆ! என் குற்றேவல் அழிந்தவா" என விழுந்தார். 123

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) சிவபெருமானுக்கு அன்பராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார் இடைவிடாமல் பெய்கின்ற மழையானது ஒருதரம் விட்டுவிடுமென்று தனியே யோசித்துக் கொண்டு நின்றார்; மழைவிடாததைக் கண்டு பகைவரைப் போல இராக் காலம் வந்தால் குளிரினால் திருமேனி நடுங்குகின்ற சிறந்த தவத்தினையுடைய அப்பெரியவரிடத்தில் அடியேன் செய்ய விரும்பிய சிறிய பணிவிடையானது ஐயோ! அழிந்து போயிற்றே யென்று பூமியில் மயங்கிவிழுந்தார். எ-று.

"விழுந்தமழை ஒழியாது மெய்த்தவர்சொல் லியஎல்லை
கழிந்தது; முன் பொலித்துமனைக் காற்றேற்க அறிந்திலேன்
செழுந்தவர்தந் திருமேனி குளிர்காணுந் தீங்கிழைத்த
தொழும்பனேற் கினியிதுவே செயல்" என்று துணிந்தெழுவார். 124

(இ - ள்.) பெய்கின்ற மழையானது விடாதிருக்கின்றது. உண்மையாகிய தவத்தினையுடைய அவ்வடியவர் (ஆடையை வெளுத்துக் கொடுக்கும்படி) சொல்லிய மாலைப் பொழுதும் நீங்கிவிட்டது. முன்னமே இவ்வாடையை வெளுத்து வீட்டில் காற்றையேற்றி உலர்த்திக் கொடுக்கவும் அறியவில்லை சிறந்த தவத்தையுடைய அப்பெரியவரது திருமேனியானது குளிரினால் வருந்தும்படி குற்றஞ் செய்த அடியேனுக்கு இனிமேல் செய்ய வேண்டிய செய்கை இதுவேயென்று துணிவுகொண்டு எழுந்தார். எ-று.

"கந்தைபுடைத் திடஎற்றுங் கற்பாறை மிசைத்தலையைச்
சிந்தஎடுத் தெற்றுவன்" என் றணைந்துசெழும் பாறைமிசைத்
தந்தலையைப் புடைத்தெற்ற அப்பாறை தன்மருங்கு
வந்தெழுந்து பிடித்ததணி வளைத்தழும்பர் மலர்ச்செங்கை. 125

(இ - ள்.) கந்தைகளைத் தோய்ப்பதற்குக் கருவியாயிருக்கின்ற கற்பாறையின் மேல் என்னுடைய தலையைச் சிதறும் படியாக மோதிக் கொள்வேனென்று போய்ச் செழிய துறைக்கல்லின் மேல் தம்முடைய சிரசினை உறுதியாக மோதியடித்துக் கொள்ள, அப்பொழுது அந்தத் துறைக்கல்லி னிடத்திலிருந்து (காமாட்சியம்மையாரின்) அழகியவளைத் தழும்பினையணிந்த திருவேகம்பநாதருடைய தாமரை மலர் போன்ற சிவந்த கையானது தோன்றி அவரைப் பிடித்துக் கொண்டது. எ-று.

வானிறைந்த புனல்மழைபோய் மலர்மழையா யிடமருங்கு
தேனிறைந்த மலரிதழித் திருமுடியார் பொருவிடையின்
மேனிறைந்த துணைவியொடும் வெளிநின்றார்; மெய்த்தொண்டர்
தானிறைந்த அன்புருகக் கைதொழுது தனிநின்றார். 126

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) ஆகாயத்திலிருந்து நிறைந்து விழுகின்ற நீர்மழை நீங்கித் தேவர்கள் பொழிகின்ற கற்பகமலர் மழையாய்ச் சொரிய, தேன்ததும்பிய கொன்றை மலர் மாலையைத் தரித்த திருமுடியையுடைய சிவபெருமான் போர் செய்கின்ற ரிஷபவாகனத்தின்மேல் விளங்குகின்ற தமது தேவியாராகிய பார்வதியாரோடும் வெளிப்பட்டருளினார், அப்பொழுது மெய்யன்பராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார் தமது திருவுள்ளத்தில் நிறைந்த பேரன்பானது அதிகரிக்கும்படி கைகளைக் கூப்பி வணங்கித் தனியே நின்றார். எ-று.

முன்னவரை நேர்நோக்கி முக்கண்ணர் "மூவுலகும்
நின்னிலைமை அறிவித்தோம்; நீயும்இனி நீடியநம்
மன்னுலகு பிரியாது வைகுவாய்" எனஅருளி
அந்நிலையே எழுந்தருளி அணிஏகாம் பரம்அணைந்தார். 127

(இ - ள்.) சோமசூரியாக்கினி யென்னும் மூன்று கண்களை யுடைய சிவபெருமான் தமக்கு முன்னே நிற்கின்ற திருக்குறிப்புத் தொண்ட நாயனாரை நேராகப்பார்த்தருளி உன்னுடைய அன்பின் நிலைமையை சுவர்க்க மத்திய பாதலமென்னும் மூன்றுலகங்களிலும் விளங்கும்படிச் செய்தோம், (அதுவன்றியும்) நீயும் இனிஎன்றும் அழியாத நமது சிவலோகத்தில் எம்மை நீங்காதிருப்பாயாக வென்று கிருபை செய்து, அப்பொழுதே மறைந்து எழுந்தருளி அழகிய திருவேகாம்பரத்தை யடைந்தருளினார். எ-று.

சீர்நிலவு திருக்குறிப்புத் தொண்டர்திருத் தொழில் போற்றிப்
பார்குலவத் தந்தைதாள் அறஎறிந்தார் பரிசுரைக்கேன்;
பேரருளின் மெய்த்தொண்டர் "பித்தன்" எனப் பிதற்றுதலால்
ஆருலகில் இதனுண்மை அறிந்துரைக்க இசைந்தெழுவார்? 128

(இ - ள்.) சிறப்புப் பொருந்திய திருக்குறிப்புத்தொண்ட நாயனாருடைய திருத்தொண்டின் சிறப்பைத் துதித்து, உலகத்தாரறியத் தமது தந்தையாகிய எச்சத்தத்தனுடைய தாள்கள் அறும்படி மழுவினால் துணித்த சண்டேசுர நாயனாருடைய சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கினேன், (தந்தை தாளெறிதல் குற்றமன்றோவெனில்) பேரருளினையுடைய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமான் தம்மை யாட்கொள்ள வருங்கால் பித்தனென்று கூறியதனால் உலகத்தில் யாவர் தாம் இதனுடைய உண்மையை அறிந்து சொல்வதற்குச் சம்மதித்து எழுவார்கள். (ஒருவருமில்லை.) எ-று.

திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

26. சண்டேசுர நாயனார் புராணம்

**பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யா தளிக்கும் புனல்நாட்டு
வாய்ந்த மண்ணித் தென்கரையில் மன்ன முன்னாள் வரைகிழிய
ஏந்தும் அயில்வேல் நிலைகாட்டி இமையோர்இகல்வெம் பகைகடக்கும்
சேந்தன் அளித்த திருமறையோர் மூதூர் செல்வச் சேய்ஞலூர். 1**

(இ - ள்.) பொலிவினையும் குளிர்ச்சியையுமுடைய காவிரி நதியானது எக்காலத்திலும் மாறாமல் நீரைத்தருகின்ற சோழ வளநாட்டில் சிறப்புப் பொருந்திய மண்ணியாற்றின் தென்கரை யில் நிலைபெறும்படி, ஆதிகாலத்தில் கிரவுஞ்ச கிரியானது இருகூறாகப் பிளவுபடக் கையிற் பிடித்த கூர்மையாகிய வேலாயுதத்தின் வலிமையைக் காண்பித்துத் தேவர்களுடைய பெரும் பகைவராகிய சூரபதுமன் முதலிய அசுரர்களைக் கொன்றருளிய சுப்பிரமணியக்கடவுள் உண்டாக்கிய பழமை யாகிய ஊரானது (யாதெனின்) சிறந்த வேதியர்கள் வாழ்ந் திருக்கும் செல்வமிகுந்த திருச்சேய்ஞலூராம். எ-று.

**செம்மை வெண்ணீற் றொருமையினார்; இரண்டு பிறப்பின் சிறப்பினார்
மும்மைத் தழலோம் பியநெறியார்; நான்கு வேதம் முறைபயின்றார்;
தம்மை ஐந்து புலனும்பின் செல்லும் தகையார்; அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகம் போற்றும் மறையோர் விளங்குவது. 2**

(இ - ள்.) செம்மையாகிய திருவெண்ணீறுதரிக்கும் ஒருமைப்பட்ட அன்பையுடையவர்களும், சன்மத்தினாலும் கன்மத்தினாலுமாகிய இரண்டு பிறப்பின் சிறப்பினையுடையவர் களும், மூன்றக்கினிகளை வளர்க்கும் வைதிக நெறியையுடையவர் களும், நான்கு வேதங்களையும் கிரமமாக ஓதியுணர்ந்தருவர் களும், ஐம்புலன்களும் அவைகள் போம் வழியில் போகாமல் தங்கள் கருத்தின் படியே செலுத்துந் தகுதியையுடையவர்களும், அறுவகைத் தொழிலோடுகூடிய மெய்மையாகிய ஒழுக்கத்தை ஏழுலகத்தாரும் புகழத்தக்கவர்களுமாகிய மறையவர்கள் விளங்கி யிருப்பது (அந்தத் திருச்சேய்ஞலூர்.) - எ-று.

**கோதில் மான்தோல் புரிமுந்நூல் குலவு மார்பிற் குழைக்குடுமி
ஓது கிடைசூழ் சிறுவர்களும் உதவும் பெருமை ஆசானும்
போதின் விளங்குந் தாரகையும் மதியும் போலப் புணர்மடங்கள்
மீது முழங்கு முகிலொதுங்க வேத ஒலிகள் முழங்குவன. 3**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) குற்றமற்ற மான்றோலைப்பிணித்த முப்புரியாகிய பூணூலைத் தரித்து விளக்குகின்ற மார்பினையும், மிருதுவாகிய குடுமியையுமுடைய கூட்டமாகச் சேர்ந்து வேதமோதுகின்ற சிறுவர்களும், அவ்வேதத்தை ஓதுவிக்கின்ற பெருமை பொருந்திய ஆசாரியனும், இராக்காலத்தில் விளங்குகின்ற நக்ஷத்திரங்களையும், சந்திரனையும் போலச் சேர்ந்திருப்பதற்கிடமாகிய பலமடங்களின் மேலிடத்தில் மேகங்கள் முழங்கியொதுங்கக், கீழிடத்தில் வேதகோஷங்கள் முழங்குகின்றன. எ-று.

யாகம் நிலவும் சாலைதொறும் மறையோர் ஈந்த அவியுணவின்
பாகம் நுகர வருமாலும் அயனும் ஊரும் படர்சிறைப்புள்
மாகம் இகந்து வந்திருக்கும் சேக்கை எனவும் வானவர்கோன்
நாகம் அணையும் கந்தெனவும் நாட்டும் யூப ஈட்டமுள. 4

(இ - ள்.) விளங்குகின்ற யாகசாலைகளிலெல்லாம் பிராமணர்கள் கொடுக்கின்ற அவிப்பாகத்தை உண்ணவருகின்ற விஷ்ணுவினாலும் பிரமனாலும் நடத்தப்படுகின்ற படர்ந்த சிறகினையுடைய கருடனும் அன்னமும் ஆகாயத்திலிருந்து வந்து தங்குகின்ற கூண்டுபோலவும், தேவேந்திரனுடைய ஐராவதமென்னும் வெள்ளை யானையைக் கட்டுந் தறிபோலவும் நாட்டியிருக்கின்ற யூபஸ்தம்பங்கள் அநேகம் உண்டு (அந்தத் திருச்சேய்ஞலூரில்.) எ-று.

தீம்பா லொழுகப் பொழுதொறும் ஓம தேனுச் செல்வனவும்
தாம்பா டியசா மங்கணிப்போர் சமிதை இடக்கொண் டணைவனவும்
பூம்பா சடைநீர்த் தடம்மூழ்கி மறையோர் மகளிர் புகுவனவும்
ஆம்பான் மையினில் விளங்குவன அணிநீள் மறுகு பலவுமுள. 5

(இ - ள்.) மதுரமாகிய பால் ஒழுகும்படி காலங்கள் தோறும் ஓமத்திற்குப் பால் கொடுக்கும் பசுக்கள் போவனவும், தாங்கள் ஓதிய வேதங்களை உருவோட்டுகின்ற பிரமசாரிகள் ஓமத்தீயில் இடும்படியாகச் சமித்துக்கள் கொண்டு வருகின்றனவும், மலர்களையும் பசிய இலைகளையுடைய நீர் நிறைந்த தடாகங்களில் முழுகிப் பிராமண ஸ்திரீகள் புகுவனவுமாகிய தன்மையோடு விளங்கும் அழகிய நீண்ட வீதிகள் (அந்த ஊரில்) பல இருக்கின்றன. -எ-று.

வாழ்பொற் பதிமற் றதன்மருங்கு மண்ணித் திரைகள் வயல்வரம்பின்
தாழ்வில் தரளம் சொரிகுலைப்பால் சமைத்த யாகத் தடஞ்சாலை
சூழ்வைப் பிடங்கள் நெருங்கியுள தொடங்கு சடங்கு முடித்தேறும்
வேள்வித் தலைவர் பெருந்தேர்கள் விண்ணோர் ஏறும் விமானங்கள். 6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) இத்தன்மையாகிய பிரமாணர்கள் வாழ்கின்ற அழகினையுடைய அந்தத் திருச்சேய்ஞலூரில் வயல்வரம்பின் பள்ளத்தில் முத்துக்களை வீசுகின்ற அலைகளையுடைய மண்ணியாற்றின் கரையில் ஏற்படுத்திய விசாலமாகிய யாகசாலைகளைச் சூழ்ந்த இடங்களில், தாங்கள் செய்யத் தொடங்கிய யாகச் சடங்குகளைச் செய்து முடித்து, யாகத் தலைவர்கள் ஏறுகின்ற பெரியதேர்களும், தேவர்கள் ஏறுகின்ற விமானங்களும் மிகுதியாக நெருங்கியிருக்கின்றன. எ-று.

மடையில் கழுநீர் செழுநீர்சூழ் வயலில் சாலிக் கதிர்க்கற்றைப்
புடையில் கரும்பு மிடைகமுகு புனலில் பரம்பு பூம்பாளை
அடையில் பயிலுந் தாமரைநீள் அலரில் துயிலுங் கயல்கள்வழி
நடையில் படர்மென் கொடிமௌவல் நனையில் திகழுஞ் சினைக்காஞ்சி. 7

(இ - ள்.) நீர் ஓடுகின்ற மடைகளில் செங்கழுநீரும், செழித்த நீர்சூழ்ந்த வயல்களில் நெற்கதிர்களின் கூட்டமும், அதன் பக்கங்களில் வண்டுகள் வாசனை பற்றி மொய்க்கும் கமுக மரங்களும், நீரில் பரவியிருக்கின்ற கமுகமரத்தின் பூம்பாளை களும், இலைகளையுடைய நீண்ட தாமரை மலர்களில் நித்திரை செய்கின்ற கெண்டைமீன்களும், நடக்கும் வழிகளில் படர்ந்த மிருதுவாகிய கொடிகளையுடைய முல்லைகளும், அரும்பு களால் விளங்கும் கினைகளையுடைய காஞ்சிமரங்களும் (அவ்வூரில் மிகுதியாக இருக்கின்றன.) எ-று.

சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளர் போரே(று) என்றும் புவிகாக்கும்
மன்னர் பெருமான் அநபாயன் வருந்தொல் மரபின் முடிசூட்டுந்
தன்மை நிலவு பதிஐந்தின் ஒன்றாய் நீடும் தகைத்தவ்வூர். 8

(இ - ள்.) அபய குலசேகர சோழனும், குலோத்துங்கச் சோழனும், ஸ்ரீ சிதம்பரத்தின் திருவெல்லையைப் பொன் தகட்டினால் வேய்ந்த அச்சோழ வமிசத்திற் பிறந்து, போர் செய்கினற் ஆண்சிங்கம் போன்று, தன் காலமுழுவதும் உலகத் தைக் காக்கும் அரசர் பெருமானாகிய அநபாயச் சோழனும் அவதரித்த பழமையான மரபினராகிய சோழராசாக்கள் முடிசூட்டிக் கொண்டு அரசாட்சி செய்தற்கு இடமாகிய சிறந்த ஐந்து நகரங்களில் ஒன்றாக விளங்குந் தன்மையையுடையது; அந்தத் திருச்சேய்ஞலூர். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பண்ணின் பயனா நல்லிசையும் பாலின்பயனா மின்சுவையுங்
கண்ணின் பயனாம் பெருகு(ஒ)ளியும் கருத்தின் பயனா மெழுத்தஞ்சும்
விண்ணின் பயனாம் பொழிபழையும் வேதப் பயனாஞ் சைவமும்போல்
மண்ணின் பயனா மப்பதியின் வளத்தின் பெருமை வரம்புடைத்தோ. **9**

(இ - ள்.) இராகங்களுக்குப் பயனாகிய நல்ல இசையும், பாலினுக்குப் பயனாகிய இனியசுவையும், கண்களுக்குப் பயனாகிய மிகுந்த ஒளியும், நினைப்பிற்குப் பயனாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரமும், ஆகாயத்திற்குப் பயனாகிய பொழிகின்ற மேகமும், வேதத்திற்குப் பயனாகிய சைவசமயமும் போல, உலகத்திற்குப் பயனாயமைந்திருக்கின்ற அந்தத் திருச்சேய்ஞ லூரின் வளத்தின் பெருமையானது ஒரு அளவினையுடையதோ? (அன்று) -எ-று.

பெருமை பிறங்கும் அப்பதியின் மறையோர் தம்முள் பெருமனைவாழ்
தருமம் நிலவு காசிபகோத் திரத்துத் தலைமை சால்மரபில்
அருமை மணியும் அளித்ததுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல்
இருமை வினைக்கும் ஒருவடிவாம் எச்ச தத்தன் உளனானான். **10**

(இ - ள்.) பெருமைவிளங்கிய அந்தத் திருச்சேய்ஞலூரில் வாழ்கின்ற பிராமணர்களுக்குள் சிறந்த இல்வாழ்க்கைக்கு வேண்டிய தருமங்களை வழுவாமல் செய்து கொண்டு வரும் காசிப கோத்திரத்தில் தலைமையாகிய குடியில் கிடைத்தற்கரிய மாணிக்கத்தையும் பிறர்க்குக் கொடுத்துப் பின் விஷத்தையும் கொடுக்கும் பாம்புபோல, நல்வினை தீவினையென்னும் இரண்டினையுஞ் செய்வதற்கு ஒரே வடிவு கொண்ட எச்சதத்த னென்பவன் ஒரு வனிருந்தான். -எ-று.

மற்றை மறையோன் திருமனைவி வாய்ந்த மரபின் வந்துதித்தாள்
சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத் தொழிலாள் உலகில் துணைப்புதல்வர்
பெற்று விளங்குந் தவஞ்செய்தாள் பெறும்பே றெல்லைப் பயன்பெறுவாள்;
பற்றை எறியும் பற்றுவரச் சார்பா யுள்ள பவித்திரையாம். **11**

(இ - ள்.) மேற் சொல்லிய தன்மையைப் பெற்ற எச்சதத்தனுடைய மனைவியானவள் நல்ல மரபில் பிறந்தவள். சுற்றத்தார் விரும்பத்தக்க இல்வாழ்க்கையைக் குறைவின்றி நடத்துகின்ற நற்செய்கையை யுடையவள். உலகத்தில் தமக்குத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துணையாய்ச் சண்டேசுர நாயனாரைப் புத்திரராகப் பெறுதற் குரிய சிறந்த தவத்தைச் செய்தவள். பெற வேண்டிய வீடு பேற்றின் முடிவாகிய பயனைப் பெறத்தக்கவள் உலகப்பற்றை நீக்குதற்குக் கருவியாகிய சிவநேசமானது வருதற்குச் சார்பான குணத்தினை யுடைய பவித்திரையென்பவ ளிருந்தாள். -எ-று.

நன்றி புரியும் அவர்தம் பால் நன்மை மறையின் துறைவிளங்க
என்றும் மறையோர் குலம்பெருக ஏழு புவனங் களும்உய்ய
மன்றில் நடஞ்செய் பவர்சைவ வாய்மை வளர மாதவத்தோர்
வென்றி விளங்க வந்துதயம் செய்தார் விசார சருமனார். 12

(இ - ள்.) நன்மையைச் செய்து வருகின்ற எச்சதத்தன் - பவித்திரை என்பவர்களினிடமாகச் சிறந்த வேதவொழுக்கங் குறைவின்றி விளங்கவும், எந்நாளும் பிராமணர்களுடைய குலம் விருத்தியடையவும், ஏழுலகத்திலுள்ளவர்களும் கடைத்தேறவும், பொன்னம்பலத்தில் ஆநந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற சிவபெருமானுடைய சைவசமயமானது வளர்ந்தோங்கவும், மகத்தாகிய தவத்தினையுடைய பெரியோர்களின் தபோமகிமை நிறைந்து விளங்கவும் விசாரசருமர் என்னும்புத்திரர் திருவவதாரஞ் செய்தருளினார். எ-று.

ஐந்து வருடம் அவர்க்கணைய அங்கம் ஆறும் உடன்நிறைந்த
சந்த மறைகள் உட்படமுன் தலைவர் மொழிந்த ஆகமங்கள்
முந்தை அறிவின் தொடர்ச்சியினால் முகைக்கு மலரின் வாசம்போல்
சிந்தை மலர உடன்மலரும் செவ்வி உணர்வு சிறந்ததால். 13

(இ - ள்.) அவ்விசாரசருமருக்கு ஐந்தாம் வயது வந்தவுடனே வேதாங்கங்களாறும் நிறைந்தஸ்வரங்களையுடைய நான்கு வேதங்களும் உட்படச் சிவபெருமான் அருளிச் செய்த ஆகமங் களும் பூர்வ சன்மத்தி லுண்டாகிய அறிவின் சம்பந்தத்தினால், அரும்பாயிருக்கும் மலரில் அடங்கியிருக்கின்ற மணம் (அலருங் காலத்தில் விளங்குவது) போலச் சித்திவிருத்தியானது விகசித்த வுடனே தாமேயறிந்து கொள்ளுகின்ற உயர்ந்த அறிவானது அவர்க்கு உண்டாயிற்று. -எ-று.

நிகழும் முறைமை ஆண்டேழும் நிரப்பும் பருவம் வந்தெய்தப்
புகழும் பெருமை உபநயனப் பொருவில் சடங்கு முடித்தறிவின்
இகழு நெறிய அல்லாத எல்லாம் இயைந்த எனினும்தம்
திகழு மரபின் ஓதுவிக்கும் செய்கை பயந்தார் செய்வித்தார். 14

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) இவ்வாறு நடக்கின்ற முறைமைப்படியே அவர்க்கு ஏழுவயது நிரம்பினவுடனே நூல்களால் புகழ்ந்து சொல்லப் பட்ட பெருமையினையுடைய ஒப்பற்ற உபநயனச்சடங்கைச் செய்து முடித்து, அவரது அறிவினால் நிந்திப்பதற்கிடமில்லாத எல்லாக் கலைகளும் அறிந்திருந்தாலும், தங்கள் குலாசாரப்படி உபநயனஞ் செய்தபின்பு வேதமோதுவிக்கின்ற முறைமையான தொழிலைத் தாய்தந்தையர்கள் அவருக்குச் செய்வித்தார்கள். எ-று.

குலவு மறையும் பலகலையும் கொளுத்து வதன்முன் கொண்டமைத்த
நிலவும் உணர்வின் திறங்கண்டு நிறுவும் மறையோர் அதிசயித்தார்;
"அலகில் கலையின் பொருட்கெல்லை ஆடுங் கழலே" எனக்கொண்ட
செலவு மிகுந்த சிந்தையினில் தெளித்தார் சிறிய பெருந்தகையார். 15

(இ - ள்.) விளங்குகின்ற வேதங்களையும், பலகலைஞானங் களையும் ஓதுவிப்பதற்கு முன்னமே அப்பொருள்களைத் தாமே அறிந்து கொண்டு அமைந்து விளங்குகின்ற அவரது அறிவின் திறத்தைக் கண்டு, அவரை ஓதுந்தொழிலில் நிறுத்தும் பிராம ணர்கள் ஆச்சரியமடைந்தார்கள். அளவில்லாத எல்லா நூல்களி லும் கூறும் பொருள்களுக்கெல்லாம் முடிந்த பொருள் சிவ பெருமானுடைய திருவடியேயென்று விசாலமாகிய தமது சித்தத்தில் தெளித்து கொண்டார்; உருவத்தால் சிறியவரா யினும் உணர்வினால் பெருந்தகைமையை யுடையவராகிய விசாரசருமர். எ-று.

"நடமே புரியுஞ் சேவடியார் நம்மை உடையார்" எனும்மெய்ம்மை
உடனே தோன்றும் உணர்வின்கண் ஒழியா தூறும் வழியன்பின்
கடனே இயல்பாய் முற்றிவருங் காதல் மேன்மேல் எழுங்கருத்தின்
திடம்நேர் நிற்குஞ் செம்மலார் திகழு நாளில் ஆங்கொருநாள். 16

(இ - ள்.) ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற திருவடியையுடைய சிவபெருமான் நம்மை அடிமையாக வுடையவரென்று அறிவினிடமாக ஒழியாமல் வளர்கின்ற உண்மையாகிய அன்பினால் செய்ய வேண்டிய அடிமைத்திறம் முதலாகிய கடமைகளை இயல்பாகவே செய்து கொண்டு வருகின்ற ஆசையானது மேன்மேலும் அதிகரிக்கின்ற திருவுள்ளக்கருத்தின் உறுதிப்பாட்டில் நிலைபெற்று நிற்கும் விசாரசருமனார் இவ்வாறு விளங்கியிருக்கும் நாள்களில் ஒரு நாள். எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓது கிடையி னுடன்போவார் ஊர்ஆன் நிரையி னுடன்புக்க
போது மற்றங் கொருபுனிற்றா போற்றும் அவன்மேல் மருப்போச்ச
யாதும் ஒன்றுங் கூசாதே எடுத்த கோல்கொண் டவன்புடைப்ப
மீது சென்று மிகும்பரிவால் வெகுண்டு விலக்கி மெய்யுணர்ந்து. 17

(இ - ள்.) வேதமோதுகின்ற பிராமணச் சிறுவர்களுடனே போகின்ற விசாரசருமர் ஊரிலுள்ளவர்களின் பசுமந்தையோடு கூடப் போனபொழுது, அவ்விடத்தில் ஒரு கன்று போட்ட பசுவானது தன்னை மேய்க்கின்ற இடையனைக் கொம்பால் முட்ட, அவன் மனத்தில் சிறிதும் அச்சமில்லாமல் தன் கையில் பிடித்திருக்கின்ற கோலினால் அந்தப் பசுவையடித்தான். அப்பொழுது விசாரசருமர் அவ்விடையனிடத்திற் சென்று, அப்பசுவின் மேல் வைத்திருக்கின்ற அன்பினால் அவனைக் கோபித்து, அதனை அடிப்பதை விலக்கிப் பசுவிற்குள்ள மகிமையை யுணர்ந்து. - எ-று.

பாவுங் கலைகள் ஆகமநூல் பரப்பின் தொகுதிப் பான்மையினால்
மேவும் பெருமை அருமறைகள் மூல மாக விளங்குலகில்
யாவுந் தெளிந்த பொருள்நிலையே எய்த உணர்ந்த உள்ளத்தால்
ஆவின் பெருமை உள்ளபடி அறிந்தார் ஆயற் கருள்செய்வார். 18

(இ - ள்.) பரவிய மிருதி புராணம் முதலிய கலைகளும், பலவாக விரிந்திருக்கின்ற சைவாகமங்களின் தொகுதியும், பகுதியினால் பெருமை பொருந்திய அரிய வேதங்களும் ஆகிய இவைகள் மூலமாக நிலைபெற்று விளங்கும் உலகத்தில், எல்லாப் பொருளியல்புகளையும் ஒருங்கேயுணர்ந்திருக்கின்ற மனத்தினால் பசுவினது பெருமையை உள்ளபடியே யறிந்த விசாரசருமர் அவ்விடையனுக்கு அருளிச் செய்கின்றார். எ-று.

"தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத் தகைமையன;
பொங்கு புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன;
துங்க அமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்துந் தாமுடைய அல்ல வோ?நல் ஆனினங்கள். 19

(இ - ள்.) உலகத்தில் வாழ்கின்ற எல்லா யோனிகளுக்கும் மேலாக விளங்குந் தகுதிகளையுடையனவும், நீர் பெருகுகின்ற பரிசுத்தமாகிய கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களெல்லாம் எந்நாளும், பொருந்தியிருப்பனவும், உயர்வாகிய தேவகணங்களும் முனிவர்கணங்களும் சூழ்ந்து பிரியாமலிருக்கும் எல்லா உறுப்புக்களையும் தம்மிடத்தில் உடையனவுமாயிருக்கின்றன வல்லவோ? நல்ல பசுக் கூட்டங்கள். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆய சிறப்பி னாற்பெற்ற அன்றே மன்றுள் நடம்புரியும்
நாயனார்க்கு வளர்மதியும் நதியும் நகுவெண் டலைத்தொடையும்
மேய வேணித் திருமுடிமேல் விரும்பி ஆடி அருளதற்குத்
தூய திருமஞ் சனம்ஐந்தும் அளிக்கும் உரிமைச் சுரபிகள்தாம். 20

(இ - ள்.) கனகசபையில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற ஸ்ரீநடராசப் பெருமானுக்கு வளர்கின்ற இளம்பிறையும், கங்கையும், சிரிக்கின்ற வெண்டலைமாலையும் பொருந்திய சடையையுடைய திருமுடியின்மேல் விரும்பி அபிஷேகஞ் செய்வதற்குப் பரிசுத்தம் பொருந்திய திருமஞ்சனப் பொருள்கள் ஐந்தையும் கொடுக்கின்ற உரிமையையுடைய பசுக்கள் தமக்குரிய சிறப்பினால் பெற்றனவல்லவோ? - எ-று.

சீல முடைய கோக்குலங்கள் சிறக்குந் தகைமைத் தேவருடன்
கால முழுதும் உலகனைத்துங் காக்கும் முதற்கா ரணராகும்
நீலகண்டர் செய்யசடை நிருத்தர் சாத்து நீறுதரும்
மூலம் அவதா ரஞ்செய்யும் மூர்த்தம் என்றால் முடிவென்னோ? 21

(இ - ள்.) எக்காலமும், பரிசுத்தம் பொருந்திய பசுக் கூட்டங்கள், சிறந்த பெருமையையுடைய திருமால் பிரமன் முதலிய தேவர்களோடு, எல்லா வுலகங்களையும் காக்கின்ற முதற் காரணராயிருக்கும், காளகண்டத்தையும் சிவந்த சடையை யுமுடைய சிவபெருமான் திருமேனியில் தரித்தருளும் விபூதி யுண்டாவதற்கு மூலமாயிருக்கும் திருச்சாணம் தோன்றுவதற்குக் காரணமாயிருக்கின்றனவென்றால், இதைவிட வுயர்ந்த பொருள் வேறே என்ன இருக்கின்றது. -எ-று.

உள்ளுந் தகைமை இனிப்பிறவே றுளவே! உழைமான் மறிக்கன்று
துள்ளுங் கரத்தார் அணிபணியின் சுடர்சூழ் மணிகள் சுரநதிநீர்
தெள்ளுஞ் சடையார் தேவர்கள்தம் பிராட்டி யுடனே சேரமிசைக்
கொள்ளுஞ் சினமால் விடைத்தேவர் குலமன் றோ?இச் சுரபிகுலம். 22

(இ - ள்.) இந்தப் பசுக்ககூட்டங்கள், மான்கன்று துள்ளிக் கொண்டிருக்கும் திருக்கரத்தினையுடையவரும், தரித்திருக்கும் பாம்புகளின் ஒளிவீசும் மாணிக்கங்களைக் கங்கை நீரானது அலையால் கொழிக்கின்ற சடையினையுடையவருமாகிய சிவபெருமான், உமாதேவியாரோடு ஏறி நடத்துகின்ற கோபத் தினையுடைய பெரிய விடைத்தேவரது பத்தினிகளாகிய பசுக் களின் குலமல்லவோ? ஆதலால் இப்பசுக்களின் பெருமையைக் குறித்துச் சொல்ல வேண்டிய சிறப்புக்கள் வேறென்ன இருக்கின் றன.; (ஒன்றுமில்லை.) - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றின் னனவே பலவும்நினைந்(து) "இதத்தின் வழியே மேய்த்திந்தக்
கன்று பயில்ஆன் நிரைகாக்கும் இதன்மேல் இல்லை கடன்; இதுவே
மன்றுள் ஆடுஞ் சேவடிகள் வழுத்து நெறியா வதும்" என்று
நின்ற ஆயன் தனைநோக்கி "நிரைமேய்ப் பொழிக நீ" என்பார். 23

(இ - ள்.) இவ்விதமாகப் பசுக்களுக்கு இருக்கும் பல உயர்வு களையும் நினைந்து, அவைகளின் இஷ்டப்படியே மேய்த்து, இந்தக் கன்றையுடைய பசுக்ககூட்டத்தைக் காப்பதைக் காட்டிலும் சிறந்தது ஒன்றுமில்லை. இப்பசுக்களைக் காத்தலே கனகசபையில் திருநடனஞ் செய்தருளுகின்ற சிவபெருமா னுடைய திருவடிகளை வணங்குவதற்குரிய மார்க்கமாவதும் என்று, அங்குநிற்கின்ற இடையனைப்பார்த்து, இனி நீ பசுக்களை மேய்க்க வேண்டிய தில்லையென்று சொல்கின்றவராயினார். எ-று

"யானே இனிஇந் நிரைமேய்ப்பன்" என்றார்; அஞ்சி இடைமகனும்
தானோர் இறைஞ்சி விட்டகன்றான்; தாமும் மறையோர் இசைவினால்
ஆனே நெருங்கும் பேராயம் அளிப்பா ராகிப் பைங்கூழ்க்கு
வானே என்ன நிரைகாக்க வந்தார் தெய்வ மறைச்சிறுவர். 24

(இ - ள்.) இனிமேல், நானே இப்பசுக்களை மேய்ப்பே னென்று சொன்னார். அதனைக் கேட்ட இடையனும் தான் செய்த குற்றத்திற்குப்பயந்து, அவர்க்கு எதிராக வந்து வணங்கி நீங்கிப் போயினான். பின், தெய்வத்தன்மை பொருந்திய பிராமணச் சிறுவராகிய விசாரசருமர் பசுக்களுக்குரிய பிராமணர்களின் சம்மதியின் மேல் பசுக்கள் நெருங்கியிருக்கும் பெரிய மந்தையைக் காப்பாற்றுகின்றவராகிப் பயிர்களுக்கு மேகம் போலப் பசுக்களை மேய்க்கும்படி வந்தார். எ-று.

கோலும் கயிறும் கொண்டுகுழைக் குடுமி அலையக் குலவுமான்
தோலும் நூலும் சிறுமார்பில் துவள அரைக்கோ வணஞ்சுடரப்
பாலும் பயனும் பெருகவரும் பசுக்கள் மேய்க்கும் பான்மையினால்
சாலும் புல்லின் அவைவேண்டுந் தனையும் மிசையுந் தலைச்சென்று. 25

(இ - ள்.) பசுமேய்குங் கோலையும், அணைகயிற்றையும் கையில் எடுத்துக் கொண்டு குடுமிமுடியானது அலையவும், விளங்குகின்ற மான்றோலோடு பூணூலானது சிறிய மார்பி னிடத்தில் அசையவும், இடையில் தரித்த கோவணம் பிரகாசிக்க வும், பாலும் அதனாலுண்டாகிய பயனும் பெருகும்படி வரும் பசுக்களை மேய்க்க வேண்டுமென்னும் விருப்பத்தினால் மிகுந்த புற்களில் அப்பசுக்கள் வேண்டுமளவும் மேயத்தக்க இடத்தில் ஓட்டிக் கொண்டு போய். - எ-று.

பதவு காலங் களில்மேய்த்தும் பறித்தும் அளித்தும் பரிவகற்றி
இதம்உண் துறையுள் நற்றண்ணீர் ஊட்டி அச்சம் எதிர்நீக்கி
அதர்நல் லனமுன் செலநீழல் அமர்வித்தமுத மதுரப்பால்
உதவும் பொழுது பிழையாமல் உடையோர் இல்லந் தொறும்உய்த்தார். 26

(இ - ள்.) பசும்புல் தரையில் பசுக்களை மேய்க்க வேண்டிய காலங்களில் மேய்த்தும், மேய்க்கக் கூடாத இடத்திலிருக்கின்ற புல்லினைப்பறித்து அவைகள் உண்ணும்படி கொடுத்தும், அவைகளின் துன்பத்தை நீக்கியும், இனிமையாக நீருண்ணத்தக்க துறையிலே நல்ல நீரை உண்பித்தும், வேற்றுமிருகங்களால் அவைகளுக்கு அச்சமுண்டாகாமல் எதிர் நின்று காத்தும், நல்லவழியிலே போகும்படி செய்து, வெயிலில் நிழலிருக்கு மிடத்தில் ஓட்டியும், மதுரமாகிய பால் கொடுக்குங்காலத்தில் அப்பசுக்கள் தப்பிப் போகாமல் அவைகளுக்குரிய பிராமணர் களின் வீடுகள் தோறும் ஓட்டிக் கொண்டு போய் விடுகின்றவரா யிருந்தார். எ- று.

மண்ணிக் கரையின் வளர்புறவின் மாடும் படுகர் மருங்கினிலும்
தண்ணித் திலநீர் மருதத்தண் டலைசூழ் குலையின் சார்பினிலும்
எண்ணிற் பெருகு நிரைமேய்த்துச் சமிதை யுடன்மேல் எரிகொண்டு
நண்ணிக் கங்குல் முன்புகுந்தும் நன்னாள் பலவாம் அந்நாளில். 27

(இ - ள்.) மண்ணியாற்றின் கரைப்புறத்திலுள்ள குறுங் காட்டிலும், அவ்வாற்றின் நீர்நிற்கின்ற பள்ளங்களிலும், குளிர்ந்த முத்துக்களையுடைய நீர்வளம் பொருந்திய மருதநிலத்தைச் சேர்ந்த சோலைசூழ்ந்த கரையோரங்களிலும் அளவில்லாத பசுக்களை மேய்த்து, சமித்துக்களையும், அரணிக்கோல்களையும் எடுத்துக் கொண்டு ஊரில் வந்து, அஸ்தமித்தவுடனே வீட்டிற்குச் செல்கின்ற நல்ல நாள்கள் பலகழிகின்ற நாள்களில். எ-று.

ஆய நிரையின் குலமெல்லாம் அழகின் விளங்கி மிகப்பல்கி
மேய இனிய புல்லுணவும் விரும்பு புனலும் ஆர்தலினால்
ஏய மனங்கொள் பெருமகிழ்ச்சி எய்தி இரவும் நண்பகலும்
தூய தீம்பால் மடிபெருகிச் சொரிய முலைகள் சுரந்தனவால். 28

(இ - ள்.) மேய்தற்கினிய புல்லாகிய உணவையும், நல்ல நீரையும் உண்ணுதலினால், அப்பசுக்கூட்டங்களெல்லாம் அழகிட்டுவிளங்கி மிகுதியாகப் பெருகி மனதில் பொருந்திய

மிகுந்த மகிழ்ச்சியையடைந்து, இரவிலும், பகலிலும், பரிசுத்தம் பொருந்திய மதுரமாகிய பாலானது மடியினின்றும் பெருகிச் சொரியும்படி முலைகளைச் சுரந்தன. - எ-று.

பூணுந் தொழில்வேள் ஆனினங்கள் அணைந்த மகிழ்ச்சி அளவின்றி
மனைக்கண் கன்று பிரிந்தாலும் மருவுஞ் சிறிய மறைக்கன்று
தனைக்கண் டருகு சார்ந்துருகித் தாயாந் தன்மை நிலைமையவாய்க்
கனைத்துச் சுரந்து முலைக்கண்கள் கறவா மேபால் பொழிந்தனவால். 29

(இ - ள்.) பிராமணர்கள் நியமமாகக் கொண்டொழுகுந் தொழிலாகிய யாகச்சடங்குகளைச் செய்தற்கேதுவாக ஔபாசனத்துக்குப் பால் கொடுக்கும் பசுக்கள், காணத்தக்க பொலிவோடு முன் கறப்பதைப் பார்க்கிலும் அநேகம் பங்கு பாலைக்கறக்கின்றனவாய்த் தோன்றுகின்ற படியால், பசுக் களைப் பாதுகாக்கின்ற தகுதியாகிய அன்போடு இந்த விசார சருமரென்னும் பிரமசாரியானவர் மேய்ப்பதற்கு உடன்பட்ட பின்பு செழித்திருக்கின்றனவென்று, பிராமணர்களெல்லாம் மனமகிழ்ச்சியடைந்தார்கள். -எ-று.

அனைத்துத் திறத்தும் ஆனினங்கள் அணைந்த மகிழ்ச்சி அளவின்றி
மனைக்கண் கன்று பிரிந்தாலும் மருவுஞ் சிறிய மறைக்கன்று
தனைக்கண் டருகு சார்ந்துருகித் தாயாந் தன்மை நிலைமையவாய்க்
கனைத்துச் சுரந்து முலைக்கண்கள் கறவா மேபால் பொழிந்தனவால். 30

(இ - ள்.) பலவகை உபசாரங்களினாலும் அப்பசுக்கூட் டங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓரளவில்லாமல், வீட்டில் கட்டியிருக்கும் கன்றுகள் ஒருவேளை பிரிந்திருந்தாலும் (அதனால் வருந்தாமல்,) தங்களை அன்போடு மேய்க்கின்ற பிராமணச்சிறுவராகிய கன்றினைக் கண்டு, அவரருகில் சென்று மனமுருகி, தாய்க்கு உண்டாகிய அன்பு போலக்கனைந்து மடிசுரந்து, முலைக்கண்களிலிருந்து ஒருவரும் கறவாமலிருக்கத் தாமே பாலைப் பொழிந்தன. - எ-று.

தம்மை அணைந்து ஆன்முலைப்பால் தாமே பொழியக் கண்டுவந்து
செம்மை நெறியே உறுமனத்தில் திருமஞ் சனமாங் குறிப்புணர்ந்தே
எம்மை யுடைய வள்ளலார் எய்த நினைந்து தெளிந்ததனில்
மெய்ம்மைச் சிவனார் பூசனையை விரும்பும் வேட்கை விரைந்தெழலும். 31

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) விசாரசருமர் தம்மையடைந்த பசுக்கள் முலையினின்றும் தாமே பாலைச் சொரியக்கண்டு, அதனால் களிப்படைந்து, நன்மையாகிய சிவபத்திமார்க்கத்தில் செல்கின்ற தமது மனதில், இது சிவபெருமானது திருமஞ்சனத்திற்கு தகுதியாயிருக்குமென்னுங் குறிப்பையறிந்து, எம்மை யடிமையாகவுடைய அக்கடவுள் வரும்படி நினைந்து மனந்தெளிந்து, மெய்மையாகிய சிவபூசையைச் செய்ய விரும்புகின்ற ஆசையானது உண்டாகவும். எ -று.

அங்கண்முன்னை அர்ச்சனையின் அளவின் தொடர்ச்சி விளையாட்டாப்
பொங்கும் அன்பால் மண்ணிமணற் புளினக் குறையில் ஆத்தியின்கீழ்ச்
செங்கண் விடையார் திருமேனி மணலால் ஆக்கிச் சிவாலயமும்
துங்க நீடு கோபுரமும் சுற்றா லயமும் வகுத்தமைத்தார். 32

(இ - ள்.) அவ்வாறு சிவபெருமானைப் பூசை செய்ய வேண்டுமென்னும் ஆசையுண்டாகவும், முற்பிறப்பிற் செய்த, பூசாபலத்தின் தொடர்ச்சியே ஒருவிளையாட்டாக அதிகரிக்கும் அன்பினால், மண்ணியாற்றின் கரையிலிருக்கும் மணற் குன்றுகளையுடைய ஒருதிட்டில், திருவாத்திமரத்தின் கீழே, சிவந்த கண்களையுடைய ரிஷபத்தை வாகனமாகக் கொண்டருளிய சிவபெருமானது இலிங்கத் திருமேனியை மணலால் சமைத்து, அக்கடவுளுக்குத் திருக்கோயிலையும், உயர்ந்த கோபுரத்தையும், திருமதிலையும் அம்மணலினால் வகுத்துச் செய்தார். - எ-று.

ஆத்தி மலரும் செழுந்தளிரும் முதலா அருகு வளர்புறவில்
பூத்த மலர்கள் தாந்தெரிந்து புனிதர் சடிலத் திருமுடிமேல்
சாத்த லாகுந் திருப்பள்ளித் தாமம் பலவுந் தாங்கொய்து
கோத்த இலைப்பூங் கூடையினிற் கொணர்ந்து மணந்தங் கிடவைத்தார். 33

(இ - ள்.) திருவாத்திமலரும், செழுமையாகிய துளிர்களும் முதலாக அருகில் வளர்ந்த காட்டில் பூத்த பலவகை மலர்களையும் நோக்கி, அவற்றுள், சிவபெருமானது சடைமுடியின்மேல் சாத்துவதற்குத் தகுதியாயிருக்கின்ற பலவகை மலர்களையும் பறித்து, இணைத்துத்தைத்த இலையாகிய திருப்பூங்கூடையில் எடுத்துக் கொண்டு வந்து வாசனை வீசும் படி வைத்தார். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நல்ல நவகும் பங்கள்பெற நாடிக் கொண்டு நாணற்பூங்
கொல்லை யிடத்தும் குறைமறைவும் மேவுங் கோக்கள் உடன்கூட
ஒல்லை அணைந்து பாலாக்கள் ஒன்றுக் கொருகா லாகஎதிர்
செல்ல அவையும் கனைத்துமுலை தீண்டச் செழும்பால் பொழிந்தனவால். 34

(இ - ள்.) நன்மையாகிய புதிய குடங்களைத் தேடிச் சம்பாதித்துக் கொண்டு வந்து, நாணற்செடிகள் முளைத்திருக்கின்ற அழகிய கொல்லைகளிலும், மறைவாயிருக்கின்ற ஆற்றிடைக்குறைகளிலும் போகின்ற பசுக்களோடு கூட விரைவாகப் போய்ப் பாலுள்ள பசுக்கள் ஒவ்வொன்றுக்கு ஒரு தரமாகக் கறக்கும்படி தொட்ட பொழுதே, அவைகள் கனைத்து மதுரமாகிய பாலைச் சொரிந்தன. - எ-று.

கொண்டு மடுத்த குடநிறையக் கொணர்ந்து விரும்புங் கொள்கையினால்
அண்டர் பெருமான் வெண்மணல்ஆ லயத்துள் அவைமுன் தாபித்து
வண்டு மருவுந் திருப்பள்ளித் தாமங் கொண்டு வரன்முறையே
பண்டைப் பரிவால் அருச்சித்துப் பாலின் திருமஞ் சனம்ஆட்டி. 35

(இ - ள்.) பால்கறந்து குடங்கள் நிறைந்தவுடனே எடுத்துக் கொண்டு வந்து, விரும்பிய குணத்தோடு தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமானை ஸ்தாபித்திருக்கும் வெண்மையாகிய மணலால் அமைத்த ஆலயத்தின் ஒரு புறத்தில் வைத்து, வண்டுகள் மொய்க்கின்ற மலர்களையெடுத்துக் கொண்டு, முற்பிறப்பின் வாசனையினால் தோன்றிய அன்புடனே விதிப்படி அருச்சித்து, பாலாகிய திருமஞ்சனத்தை அபிஷேகஞ் செய்து. - எ-று.

மீள மீள இவ்வண்ணம் வெண்பால் சொரிமஞ் சனம்ஆட்ட
ஆள உடையார் தம்முடைய அன்பர் அன்பின் பாலுளதாய்
மூள அமர்ந்த நயப்பாடு முதிர்ந்த பற்று முற்றச்சூழ்
கோளம் அதனில் உள்நிறைந்து குறித்த பூசை கொள்கின்றார். 36

(இ - ள்.) அடிக்கடி இவ்விதமாக வெண்மை பொருந்திய பாலைச் சொரிந்து அபிஷேகஞ் செய்ய, அடியார்களை ஆளுதற்குரியவராகிய சிவபெருமான் தமது அன்பராகிய விசாரசருமருடைய அன்பிற் கலந்து அதிகரிக்கும் படி பொருந்திய பூசைத் தொண்டில் முதிர்ந்த பேரன்பானது முற்றும் பொருட்டு, விளங்குகின்ற சிவலிங்கத்தில் கலந்து நின்று, அவர் கருதிச் செய்கின்ற பூசையை ஏற்றுக் கொண்டார். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருமை பிறங்குஞ் சேய்ஞலூர்ப் பிள்ளை யார்தம் உள்ளத்தில்
ஒருமை நினைவால் உம்பர்பிரான் உவக்கும் பூசை உறுப்பான
திருமஞ் சனமே முதலவற்றில் தேடா தனஅன் பினில்நிரப்பி
வரும்அந் நெறியே அர்ச்சனைசெய் தருளி வணங்கி மகிழ்கின்றார். 37

(இ - ள்.) பெருமை பொருந்திய திருச்சேய்ஞலூரில் அவதரித்தருளிய விசாரசருமனார், தமது திருவுள்ளத்தில் ஒருமைப்பட்ட அன்பினால், தேவர்கள் நாயகராகிய சிவபெருமான் விரும்பத்தக்க பூசையின் அங்கமாயிருக்கின்ற திருமஞ்சனமுதலாகிய பொருள்களில் தாம் சம்பாதிக்காத பிறபொருள்களை மானசிகமாக அன்பினால் பாவித்து நிரப்பி, தாம் செய்து வருகின்ற விதிப்படியே பூசைசெய்து வணங்கி மகிழ்ச்சியடைந்தார். - எ-று.

இறையோன் அடிக்கீழ் மறையவனார் எடுத்துத் திருமஞ் சனம்ஆட்டும்
நிறைபூ சனைக்குக் குடங்கள்பால் நிரம்பச் சொரிந்து நிரைக்குலங்கள்
குறைபா டின்றி மடிபெருகக் குவிந்த முலைப்பால் குறைவின்றி
மறையோர் மனையின் முன்புதரும் வளங்கள் பொலிய வைகுமால். 38

(இ - ள்.) சிவபெருமானுடைய திருவடிகளில் விசாரசருமர் தமது கையால் எடுத்து அபிஷேகஞ் செய்யும் நிறைந்த பூசைக்குப் பசுக்கூட்டங்கள் குடங்களில் நிறையும்படி பாலைச் சுரந்து கொடுத்தும், குறைவில்லாமல் மடியானது பெருகும் படி குவிந்திருக்கும் முலைகளினின்றும் பாலைக் குறையாமல் பிராமணர்களின் வீடுகளில் முன்போலக் கொடுக்குந் தன்மையில் சிறந்து இருக்கும். - எ-று.

செயலிப் படியே பலநாளுஞ் சிறந்த பூசை செய்வதற்கு
முயல்வுற் றதுவே திருவிளையாட் டாக முந்நூல் அணிமார்பர்
இயல்பில் புரியும் மற்றிதனைக் கண்டித் திறத்தை அறியாத
அயல்மற் றொருவன் அப்பதியில் அந்த ணாளர்க் கறிவித்தான். 39

(இ - ள்.) முப்புரியாகிய பூணூலையணிந்த மார்பினையுடைய விசாரசருமர் அநேகநாளாக இவ்விதமான முறைமைப் படியே சிறப்பாகிய பூசையைச் செய்யத் தொடங்கி, அதுவே ஓர் விளையாட்டாக நடத்துவதைப் பார்த்து இதன் உண்மையை அறியாத ஒரு அயலான் அவ்வூரில்வாழ்கின்ற பிராமணர் களுக்குக் (கோபமுண்டாகும்படி விரோதமாகத்) தெரிவித்தான். எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**அச்சொற் கேட்ட அருமறையோர் "ஆயன் அறியான் என்றவற்றின்
இச்சை வழியே யான்மேய்ப்பேன் என்றெம் பசுக்கள் தமைக்கறந்து
பொச்சம் ஒழுகு மாணவகன் பொல்லாங் குரைக்க அவன்தாதை
எச்ச தத்தன் தனையழைமின்" என்றார் அவையில் இருந்தார்கள். 40**

(இ - ள்.) அயலான் சொல்லிய அந்தவார்த்தையைக் கேட்ட சபையிலிருந்த அரிய வேதங்களை யுணர்ந்த பிராமணர்கள், இடையனுக்குப் பசுக்களை மேய்க்கத் தெரியாதென்றும், அப்பசுக்களின் கருத்தின்படியே யான் மேய்ப்பேனென்றும் சொல்லி வஞ்சித்து, எம்முடைய பசுக்களின்பாலைக் கறந்து (தன்னிஷ்டப்படியே செலவிட்டு, அப்படிச் செய்யாதவன் போல்) பொய்வேடங்கொண்டு நடிக்கின்ற இந்தப் பிரமசாரி யினுடைய பொல்லாங்கைத் தெரிவிக்க, அவன் தந்தையாகிய எச்சதத்தனை அழையுங்களென்று சொன்னார்கள். - எ-று.

**ஆங்கு மருங்கு நின்றார்கள் அவ்வந் தணன்தன் திருமனையின்
பாங்கு சென்று மற்றவனை அழைத்துக்கொண்டு வரப்பரந்த
ஓங்கு சபையோர் அவனைப்பார்த்(து) "ஊரா னிரைமேய்த்(து) உன் மகன்செய்
தீங்கு தன்னைக் கேள்" என்று புகுந்த பரிசு செப்புவார். 41**

(இ - ள்.) (அப்படிச் சொன்ன பொழுது) அங்கே சபையினருகில் நின்ற ஏவலாளர்கள் அவ்வெச்சதத்தனுடைய திருமாளிகைக்குப் போய், அவனை அழைத்துக் கொண்டு வந்தார்கள்; மிகுதியாகப் பரவியிருக்கின்ற அச்சபையிலுள்ள வர்கள் அவ்வெச்சதத்தனைப் பார்த்து, ஊராருடைய பசுக்களை மேய்கின்றேனென்று சொல்லி மேய்த்து, உன் மகன் செய்த தீங்கைக் கேளென்று நடந்த செய்கையைச் சொல்லத் தொடங்கினார்கள். - எ-று.

**"அந்தண் மறையோர் ஆகுதிக்குக் கறக்கும் பசுக்களா னவெலாம்
சிந்தை மகிழ்ந்து பரிவினால் திரளக் கொடுபோய் மேய்ப்பான்போல்,
கந்தம் மலிபூம் புனல்மண்ணி மணலிற் கறந்து பாலுகுத்து,
வந்த பரிசே செய்கின்றான் என்றான்" என்று வாய்மொழிந்தார். 42**

(இ - ள்.) பிராமணர்கள் ஓமத்தின் ஆகுதிக்குப் பால் கறக்கின்ற பசுக்களையெல்லாம் மனமகிழ்ந்து அன்போடு மேய்க்கிறவன் போலச் சேர்த்துக் கொண்டு போய், வாசனை வீசுகின்ற மலர்கள் பொருந்திய நீரையுடைய மண்ணியாற்றின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மணலில் பாலைக்கறந்து வீணாகச் சொரிந்து, தன் மனம்வந்தபடி செய்கின்றானென்று ஒருவன் வந்து சொன்னதாகத் தங்கள் கருத்தைச் சொன்னார்கள். - எ-று.

மறையோர் மொழியக் கேட்டஞ்சிச் "சிறுமா ணவகன் செய்தஇது
இறையும் நான்முன் பறிந்திலேன்; இதற்கு முன்பு புகுந்ததனை,
நிறையும் பெருமை அந்தணர்காள்! பொறுக்க வேண்டும் நீங்கள்எனக்,
குறைகொண் டிறைஞ்சி" "இனிப்புகுதிற் குற்றம் எனதே யாம்" என்றான்.
43

(இ - ள்.) (எச்சதத்தன் தன்பிள்ளைசெய்த குற்றத்தைக் குறித்துப்) பிராமணர்கள் சொல்லக் கேள்விப்பட்டுப் பயங்கொண்டு, சிறுபிள்ளையாகிய என்குமாரன் செய்த இக்குற்றத்தை இதற்கு முன்பு நான் கொஞ்சமும் அறியேன். நீங்கள் எனக்குத் தெரிவிப்பதற்கு முன்னே நடந்தசங்கதியைக் குறித்துப் பெருமை பொருந்திய மறையவர்களே! நீங்கள் மன்னிக்க வேண்டுமென்று அவர்களைக் குறையிரந்து வணங்கி, இனிமேல் அவன் இவ்வாறு செய்வானாயின் அக்குற்றம் யான்செய்ததே யாகுமென்று சொன்னான். - எ-று.

அந்த ணாளர் தமைவிடைகொண் டந்தி தொழுது மனைபுகுந்து,
"வந்த பழியொன்(று)" எனநினைந்தே மகனார் தமக்கு வாய்நேரான்,
"இந்த நிலைமை அறிவேன்"என் றிரவு கழிந்து நிரைமேய்க்க,
மைந்த னார்தாம் போயினபின் மறைந்து சென்றான் மறைமுதியோன். 44

(இ - ள்.) வேதங்களையுணர்ந்த முதியோனாகிய எச்சதத்தன் இவ்விதமாகச் சொல்லி, அச்சபையிலிருந்த பிராமணர்களிடத்தில் விடை பெற்றுக் கொண்டு மாலைக் காலத்தில் செய்ய வேண்டிய அனுஷ்டானத்தை முடித்துத் தன் வீட்டிற்கு வந்து, இப்புத்திரனால் நமக்குவந்த பழி இது ஒன்றென்று நினைத்து, அவர்க்கு இச்செய்தியைத் தெரிவிக்காமல், இவன் செய்யும் இச்செயலை யான் சோதிக்கவேண்டுமென்றிருந்து, அன்றிரவு கழிந்து விசாரசருமர் பசுக்களை மேய்க்கப் போன பின்பு, அவர்க்குத் தெரியாமல் மறைவாக அவர்பின்னே போயினான். - எ-று.

சென்ற மறையோன் திருமகனார் சிறந்த ஊர்ஆன் நிரைகொடு போய்,
மன்றல் மருவும் புறவின்கண் மேய்ப்பார் மண்ணி மணற்குறையில்,
அன்று திரளக் கொடுசென்ற அதனை அறிந்து மறைந்தப்பால்,
நின்ற குரவின் மிசையேறி நிகழ்வ தறிய ஒளித்திருந்தான். 45

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) அவ்வாறு மறைந்து பின்னே சென்ற எச்சதத்தன், தனது செல்வப்புத்திரராகிய விசாரசருமர் சிறப்புப் பொருந்திய அவ்வூரிலுள்ள பசுக்கூட்டங்களை ஓட்டிக் கொண்டு போய் மலர்களின் வாசனை நிறைந்த சிறுகாட்டில் மேய்க்கின்றவர், மண்ணியாற்றிலுள்ள மணற்றிட்டில் அன்றைக்குத் திரளாக ஓட்டிக் கொண்டு போனதைப் பார்த்து, மறைவாக அருகிலிருந்த ஒரு குராமரத்தில் ஏறி, அங்கே நடப்பதை அறியும்படி ஒளித்துக் கொண்டிருந்தான். - எ-று.

அன்பு புரியும் பிரமசா ரிகளும் மூழ்கி அரனார்க்கு,
முன்பு போல மணற்கோயில் ஆக்கி முகைமென் மலர்கொய்து,
பின்பு வரும்ஆன் முலைபொழிபால் பெருகுங் குடங்கள் பேணுமிடந்,
தன்பாற் கொணர்ந்து தாபித்துப் பிறவும் வேண்டு வனசமைத்தார். 46

(இ - ள்.) சிவபெருமானிடத்திலேயே எப்பொழுதும் அன்பைச் செலுத்துகின்ற பிரமாசாரியாகிய விசாரசருமரும், மண்ணியாற்றில் ஸ்நானஞ் செய்து, சிவபெருமானுக்குத் தாம் முன்பு செய்தது போல மணலினால் திருக்கோயிலும், சிவலிங்க முஞ்செய்து, மலர்கின்ற மிருதுவாகிய மலர்களைப் பறித்துக் கொண்டு வந்து வைத்து, பின்பு பசுக்கள் மடியினின்றும் பொழிந்த பால்நிறைந்த குடங்களைவைக்க வேண்டிய இடத்தில் கொண்டு வந்து ஸ்தாபித்து, பூசைக்கு வேண்டுவனவாகிய பிறபொருள்களையும் சித்தப்படுத்தினார். - எ-று.

நின்ற விதியின் விளையாட்டால் நிறைந்த அரும்பூ சனைதொடங்கி
ஒன்றும் உள்ளத் துண்மையினால் உடைய நாதன் திருமுடிமேல்,
மன்றல் விரவுந் திருப்பள்ளித் தாமஞ் சாத்தி மஞ்சனமா,
நன்று நிறைதீம் பாற்குடங்கள் எடுத்து நயப்புற் றாட்டுதலும். 47

(இ - ள்.) சைவாகமத்தில் நிலைபெற்ற விதிப்படியே விளையாட்டாக நிறைந்த அருமையாகிய பூசனையைச் செய்யத் தொடங்கி, தமது மனதில் பொருந்திய உண்மையாகிய அன்போடு தம்மை அடிமையாகவுடைய சிவபெருமானது திருமுடியின்மேல் வாசனை பொருந்திய மலர்களை எடுத்துச் சாத்தி, திருமஞ் சனமாக நன்றாக நிறைந்த மதுரமான பாற்குடங்களையெடுத்து விருப்பத்தோடு அபிஷேகஞ் செய்த வளவில். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரவ மேன்மேல் எழும்பரிவும் பழைய பான்மை மிகும்பண்பும்,
விரவ மேதக் கவர்தம்பால் மேவும் பெருமை வெளிப்படுப்பான்,
அரவமேவுஞ் சடைமுடியார் அருளாம் என்ன அறிவழிந்து,
குரவ மேவு முதுமறையோன் கோப மேவும் படிகண்டான். 48

(இ - ள்.) வணங்குதலால் மேலும் மேலும் அதிகரித்தெழு கின்ற அன்பும், முற்பிறப்பின் வாசனையினால் உண்டாகிய முறைமையும் பொருந்த, மேன்மையை யுடைய விசாரசருமரிடத்தில் பொருந்திய பெருமையை யாவர்க்கும் வெளிப்படுத்தும் பொருட்டு, சர்ப்பத்தையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானது திருவருள் வெளிப்பட்டது போல, குராமரத்தில் ஏறியிருந்த கிழப்பிராமணனாகிய எச்சதத்தன் புத்தி மயங்கிக் கோபமுண்டாகும்படி பார்த்தான். - எ-று.

கண்ட போதே விரைந்திழிந்து கடிது சென்று கைத்தண்டு,
கொண்டு மகனார் திருமுதுகில் புடைத்துக் கொடிதாம் மொழிகூறத்,
தொண்டு புரியுஞ் சிறியபெருந் தோன்ற லார்தம் பெருமான்மேல்,
மண்டு காதல் அருச்சனையின் வைத்தார் மற்றொன் றறிந்திலரால். 49

(இ - ள்.) எச்சதத்தன் அவர் செய்கையைப் பார்த்த பொழுதே குராமரத்தினின்றும் விரைவாக இறங்கி ஓடி, கையில் வைத்திருக்குங் கோலினால் தன் புத்திரராகிய விசாரசருமருடைய முதுகில் அடித்துக் கொடிய வார்த்தைகளைச் சொல்ல, பூசைத் தொண்டு செய்து கொண்டிருக்கின்ற சிவபெருமான் விஷயத்தில் அதிகரித்திருக்கின்ற பேரன்பு பொருந்திய மனதைப் பூசிக்கும் முறைமையில் செலுத்தியிருக்கின்ற படியால், எச்சதத்தன் அடித்தல் முதலிய வேறொன்றையும் அறியாதவராயிருந்தார். - எ-று.

மேலாம் பெரியோர் பலகாலும் வெகுண்டோன் அடிக்க வேறுணரார்,
பாலார் திருமஞ் சனம்ஆட்டும் பணியிற் சலியாதது கண்டு,
மாலா மறையோன் மிகச்செயிர்த்து வைத்த திருமஞ்சனக் குடப்பால்,
காலால் இடறிச் சிந்தினான் கையாற் கடைமைத் தலைநின்றான். 50

(இ - ள்.) எச்சதத்தன் பின்னுங் கோபமுடையவனாகிப் பலதரம் கோலினால் அடிக்கவும், திருவருட் செல்வராகிய விசாரசருமர் (தாம் பூசைசெய்தலே யன்றி அவன் அடித்தலாலுண்டாகிய வருத்தம்) ஒன்றுந் தோன்றாதவராய்ப் பாலினாலாகிய திருமஞ்சனத்தை அபிஷேகஞ் செய்யும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருத்தொண்டில் தவறாமலிருப்பதைக்கண்டு, அஞ்ஞானத்தை யுடைய அவ்வெச்சதத்தன் மிகுந்த கோபங் கொண்டு, அருகில் வைத்திருக்கின்ற திருமஞ்சனக் குடத்திலிருந்தபாலைத் தன் காலினால் உதைத்துக் கவிழ்த்தான். - எ-று.

சிந்தும் பொழுதில் அதுநோக்குஞ் சிறுவர் இறையில் தீயோனைத்,
தந்தை எனவே அறிந்தவன்தன் தாள்கள் சிந்தும் தகுதியினால்,
முந்தை மருங்கு கிடந்தகோல் எடுத்தார்க் கதுவே முறைமையினால்,
வந்து மழுவா யிடஎறிந்தார்; மண்மேல் வீழ்ந்தான் மறையோனும். 51

(இ - ள்.) திருமஞ்சனக் குடத்திலிருந்த பாலைச் சிந்தின பொழுது, அதைப் பார்த்த விசாரசருமர் அந்த நிமிஷத்திலேயே கொடியவனாகிய எச்சதத்தனைத் தந்தையென்றறிந்து கொண்டு, அவன் கால்களைத் துணிக்க வேண்டுமென்னுங் கருத்துள்ள வராய்த் தமக்கு முன் அருகில் கிடந்த ஒரு கோலை எடுத்த பொழுது, அக்கோலே அவர் கருத்தின் படி முழுப்படையாய்க் கிடக்க, அதனால் அவன் கால்களைவெட்டினார். அப்பொழுது எச்சதத்தனும் நிலத்தில் விழுந்து இறந்தான். - எ-று.

எறிந்த அதுவே அர்ச்சனையில் இடையூ றகற்றும் படையாக,
மறிந்த தாதை இருதாளும் துணித்த மைந்தர் பூசனையில்,
அறிந்த இடையூ றகற்றினராய் முன்போல் அருச்சித் திடப்புகலும்,
செறிந்த சடைநீள் முடியாரும் தேவி யோடும் விடையேறி. 52

(இ - ள்.) எறியப்பட்ட அம்மழுப்படையே சிவபூசை காலத்தில் உண்டாகிய விக்கினத்தை ஒழிக்கின்ற ஆயுதமாக இருக்க, தடை செய்த தமது தந்தையாகிய எச்சதத்தனுடைய இரண்டு கால்களையும் வெட்டிய விசாரசருமர் தாம் செய்யும் சிபூசையில் சம்பவித்த வியாகுலத்தை நீக்கினவராய் முன்போலப் பூசை செய்யத்தொடங்கவும், நெருங்கிய சடையினால் நீண்ட திருமுடியினையுடைய சிவபெருமானும் உமாதேவியாரோடும் ரிஷபவாகனத்தில் எழுந்தருளி. - எ-று.

பூத கணங்கள் புடைசூழப் புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிகள் எடுத்தேத்த விமல மூர்த்தி திருவுள்ளம்
காதல் கூர வெளிப்படலும் கண்டு தொழுது மனங்களித்துப்
பாத மலர்கள் மேல்விழுந்தார் பத்தி முதிர்ந்த பாலகனார். 53

(இ - ள்.) பூதக்கூட்டங்கள் பக்கத்தில் சூழவும், பழமையாகிய முனிவர்களும், தேவர்களும் வேதவாக்கியங்களால் புகழ்ந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துதிக்கவும், மலரகிதராகிய சிவபெருமான் திருவுள்ளத்தில் கருணை மிகுதியாகக் காட்சி கொடுத்தருளவும், முதிர்ந்த அன்பினையுடைய சிறுவராகிய விசாரசருமர் தரிசித்துக் கைகூப்பித்தொழுது மனதில் களிப்புற்று, அப்பெருமானது தாமரை மலர் போன்ற திருவடிகளில் விழுந்து சாஷ்டாங்கமாக வணங்கினார். - எ-று.

தொடுத்த இதழி சூழ்சடையார் துணைத்தாள் நிழற்கீழ் விழுந்தவரை,
எடுத்து நோக்கி "நம்பொருட்டால் ஈன்ற தாதை விழஎறிந்தாய்;
அடுத்த தாதை இனிஉனக்கு நாம்" என் றருள்செய்(து) அணைத்தருளி
மடுத்த கருணை யால்தடவி உச்சி மோந்து மகிழ்ந்தருள. 54

(இ - ள்.) தொடுக்கப்பட்ட கொன்றைமலர்மாலையைத் தரித்த சடைமுடியையுடைய சிவபெருமான் தமது இரண்டு திருவடிகளில் வீழ்ந்து வணங்கின விசாரசருமரைத் திருக்கரத்தினால் எடுத்துக் கிருபாநோக்கஞ் செய்து, எமக்காகவே, உன்னைப் பெற்ற தகப்பன் இறக்கும்படி அவனுடைய கால்களை வெட்டினாய்; ஆதலால், இனிமேல் நாமே உனக்குரிய தந்தை யாயினோமென்று அருளிச் செய்து, (திருமார்பில்) அணைத்து, நிறைந்த கருணையினால் உடலைத் தடவி, அரவது உச்சியை மோந்து மகிழ்ந்தருளவும் எ- று.

செங்கண் விடையார் திருமலர்க்கை தீண்டப் பெற்ற சிறுவனார்
அங்கண் மாயை யாக்கைமின்மேல் அளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி எழுந்த திருவருளின் மூழ்கிப் பூமேல் அயன்முதலாம்
துங்க அமரர் துதிசெய்யச் சூழ்ந்த ஒளியில் தோன்றினார். 55

(இ - ள்.) சிவந்த கண்களையுடைய ரிஷபத்தை வாகனமாகக் கொண்டருளிய சிவபெருமான் அழகிய தாமரை மலர் போன்ற திருக்கைகளால் தீண்டும்படி பெற்றுக் கொண்ட விசாரசருமர் அவ்விடத்தில் மாயாகாரியமாகிய தேகத்தின் மேல் அளவின்றி உயர்ந்த சிவசொருபத்தையடைந்து, அதிகரித்தெழுந்த திருவருளாகிய வெள்ளத்தில் முழுகினவராய்த் தாமரை மலரில் வாழும் பிரமன் முதலாகிய உயர்ந்த தேவர்கள் துதிக்கும்படி பரவிய ஒளியோடு விளங்கினார். - எ-று.

அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னாக்கி "அனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவும்சூடு வனவும்உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம்" என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார். 56

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமானும் அவரைத் திருத்தொண்டர்களுக்குத் தலைவராகச் செய்து, நாம் ஏற்றுக் கொண்ட அமுதும், பரிவட்டமும், தரிக்கப்பட்ட மாலை முதலியனவும் ஆகிய எல்லாம் உனக்கே கிடைக்கும்படி சண்டீ சர்பதத்தையும் கொடுத்தோம் என்று அருளிச் செய்து, அவ் விசாரசருமருடைய அழகிய திருமுடியின்மேல், இளம்பிறையை யணிந்த தமது சடைமுடியிலுள்ள கொன்றைமலர் மாலையை யெடுத்துச் சூட்டியருளினார். - எ-று.

எல்லா உலகும் ஆர்ப்பெடுப்ப எங்கும் மலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர் பாடி ஆடிக் களிபயிலச்
சொல்லார் மறைகள் துதிசெய்யச் சூழ்பல் லியங்கள் எழச்சைவ
நல்லா றோங்க நாயகமாம் நங்கள் பெருமான் தொழுதணைந்தார். 57

(இ - ள்.) சர்வலோகத்திலுள்ளவர்களும் மகிழ்ச்சியினால் அரகரவென்று ஆரவாரிக்கவும், தேவர்கள் எவ்விடத்திலும் புஷ்பவருஷங்கள் பொழியவும், அநேகமாயிரம் சிவகண நாதர்கள் புகழ்ந்து பாடி ஆனந்தக் கூத்தாடிக் களிப்படையவும், சிறந்த வேதங்கள் துதிசெய்யும், நாற்புறத்திலுஞ் சூழ்ந்த பலவாத்தியங்கள் முழங்கவும், நன்மை பொருந்திய சைவசமய மானது நிலைபெற்றோங்கவும், நமது தலைவராகிய சண்டேசுர நாயானார் சிவபெருமானைத் தொழுது சிவலோகத்தை யடைந்தார். - எ-று.

ஞாலம் அறியப் பிழைபுரிந்து நம்பர் அருளால் நான்மறையின்
சீலந் திகழுஞ் சேய்ஞலூர்ப் பிள்ளை யார்தந் திருக்கையில்
கோல மழுவால் ஏறுண்டு குற்றம் நீங்கிச் சுற்றமுடன்
மூல முதல்வர் சிவலோகம் எய்தப் பெற்றான் முதுமறையோன். 58

(இ - ள்.) முதிர்ந்த வேதியனாகிய எச்சதத்தன் உலகத்தார் அறியும் படி சிவபூசைக்கு இடையூறாகிய குற்றத்தைச் செய்து, சிவபெருமானது திருவருளினால் நான்கு வேதங்களிலும் சொல்லப்பட்ட நல்லொழுக்கமானது விளங்கப் பெற்ற திருச்சேய்ஞலூரில் அவதரித்தருளிய சண்டேசுர நாயனாரது திருக்கரத்தில் தாங்கிய அழகிய மழுப்படையினால் வெட்டுப் பட்டு, தான் முன்பு செய்த குற்றத்தினின்று நீங்கித் தன் சுற்றத் தாரோடு மூலகாரணராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கயிலையை யடைந்தான். - எ-று.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்து மிகைசெய் தாதைதாள் மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனார் ஆயினார்;
இந்த நிலைமை அறிந்தாரார்?ஈறி லாதார் தமக்கன்பு
தந்த அடியார் செய்தனவே தவமாம் அன்றே சாற்றுங்கால்? **59**

(இ - ள்.) தமக்கு முன்னே வந்து சிவபூசைக்கு இடையூறு செய்த தந்தையாகிய எச்சதத்தனுடைய கால்களை மழுப்படையினால் வெட்டிய விசாரசருமர் தாம் கொண்டிருந்த அந்த மானிடதேகத்துடனே சிவபெருமானுக்குத் திருக்குமாரரானார். இப்படிப்பட்ட நிலைமையை யறிந்தவர்கள் யாவர்? சொல்லுமிடத்தில் நித்தியராகிய சிவபெருமானுக்கு அன்பு செய்கின்ற அடியவர்கள் செய்கின்ற காரியங்கள் அவமாயினும் அவைகள் தவமாகவே விளங்கும். - எ-று.

நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்(து)
ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம். **60**

(இ - ள்.) அன்பு நிறைந்த திருவுள்ளத்தோடு நீல நிறமாகிய காளகண்டத்தினையுடைய சிவபெருமானது அடியவர்களின் பெருமையை உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் பிழைக்கும் பொருட்டுத் தொழும்படி திருத்தொண்டத்தொகையை முன்பு அருளிச் செய்த திருவருளாளராகிய ஸ்ரீ சுந்தர மூர்த்திசுவாமிகளின் மணம் வீசுகின்ற தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கும்படி எமக்குக்கிடைத்த இந்த மானிடப் பிறப்பினை வணங்குகின்றோம். - எ-று.

சருக்கம் நான்கிற்குத் திருவிருத்தம் 1,270.

சண்டேசுர நாயனார் புராணமுற்றிற்று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநின்ற சருக்கம்

27. திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன்; பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணாமை உணராதேன். 1

(இ - ள்.) சிறந்தோங்குகின்ற திருத்தொண்டினைச் செய்கின்ற பத்திநெறியானது உலகில் நீடித்து வாழும் பொருட்டு (திருக்கயிலாயத்தினின்றும்) எழுந்தருளி வந்த சிவஞானத்தையுடைய தவமுனிவராகிய ஸ்ரீ வாகீசமூர்த்திகளின் திருவவதாரமாகிய திருநாவுக்கரசு சுவாமிகளினுடைய உண்மை பொருந்திய பெரிய சரிதத்தின் சிறப்பைக் குறித்துத் துதிக்கத் தொடங்கினேன், விசாலமகிய இவ்வுலகத்தில் அதனை என் ஒருநாவினால் புகழ்ந்து சொல்ல முடியாதென்பதை அறியாதவனாகிய யான். - எ-று.

தொன்மைமுறை வருமண்ணின் துகளன்றித் துகளில்லா
நன்மைநிலை ஒழுக்கத்து நலஞ்சிறந்த குடிமல்கிச்
சென்னிமதி புனையவளர் மணிமாடச் செழும்பதிகள்
மன்னிநிறைந் துளதுதிரு முனைப்பாடி வளநாடு. 2

(இ - ள்.) பழமையாகிய முறைமைப்படியே வருகின்ற மண்ணில் தோன்றிய புழுதித்துகளிருப்பதேயன்றி, வேறே யாதொரு குற்றமுமில்லாத நல்ல அறநிலைக்குரிய குலவொழுக்கத்தினால் சிறப்புற்றிருக்கின்ற குடிகள் நிறைந்து, சிகரங்களில் சந்திரன் பொருந்தும் படியாக உயர்ந்திருக்கின்றமணிகளிழைத்த உப்பரிகைகளையுடைய பலநகரங்கள் நிலைபெற்று நிறைந்துள்ளது, வளப்பம் பொருந்திய திருமுனைப்பாடிநாடு. - எ-று.

புனப்பண்ணை மணியினொடும் புறவின்நறும் புதுமலரின்
கனப்பெண்ணில் திரைசுமந்து கரைமருங்கு பெரும்பகட்டேர்
இனப்பண்ணை உழும்பண்ணை எறிந்துலவி எவ்வுலகும்
வனப்பெண்ண வரும்பெண்ணை மாநதிபாய் வளம்பெருகும். 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) குறிஞ்சி நிலத்திலிருக்கும் மூங்கில்களிலுண்டாகிய முத்துக்களோடு முல்லை நிலத்திலுள்ள வாசனை பொருந்திய புதிய மலர்களின் தொகுதிகளையும் அளவில்லாத அலையாகிய கைகளால்வாரி இரண்டு கரையோரங்களில் பெரிய எருமைக் கடாக்களைப் பூட்டிய ஏர்க்கூட்டங்களால் உழப்பட்ட வயல் களில் வீசி எறிந்து உலாவி, எவ்வுலகத்திலுள்ளவர்களும் தன் பெருமையைக் குறித்து மதிக்கும்படி நீர் பெருகிவருகின்ற பெரிய பெண்ணையாறானது பாய்கின்ற வளத்தினால் சிறப்புற்றிருக்கும் அந்தத் திருமுனைப்பாடி நாடு. - எ-று.

காலெல்லாந் தகட்டுவரால்; கரும்பெல்லாங் கண்பொழிதேன்;
பாலெல்லாங் கதிர்ச்சாலி; பரப்பெல்லாங் குலைக்கமுகு;
சாலெல்லாந் தரளநிரை; தடமெல்லாஞ் செங்கழுநீர்;
மேலெல்லாம் அகிற்றூபம்; விருந்தெல்லாந் திருந்துமனை. 4

(இ - ள்.) வயல்களுக்கு நீர் பாய்ச்சுங் கால்களிலெல்லாம் அச்சவடிவாகிய வரால் மீன்களும், கரும்புகளிலெல்லாம் கணுக்கள் வெடித்துப் பொழிகின்ற தேனும், பக்கங்களிலெல் லாம் கதிர்களையும் கமுகமரங்களும், படைச்சால்களிலெல்லாம் முத்துக்களின் வரிசைகளும், தடாகங்களிளெல்லாம் செங்கழுநீர் மலர்களும், மேல்வீடுகளிலெல்லாம் அகிற்கட்டையினாலுண் டாகிய புகைகளும், திருத்தமாகிய வீடுகளிலெல்லாம் பலவகை விருந்தினர்களுமாக விளங்கிக் கொண்டிருக்கும். - எ-று.

கடைஞர்மிடை வயற்குறைத்த கரும்புகுறை பொழிகொழுஞ்சா(று)
இடைதொடுத்த தேன்கிழிய இழிந்தொழுகு நீத்தமுடன்
புடைபரந்து ஞிமிறொலிப்பப் புதுப்புனல்போல் மடையுடைப்ப
உடைமடையக் கரும்படுகட் டிமினடைப்ப ஊர்கள்தொறும். 5

(இ - ள்.) பள்ளர்கள் நெருக்கமாகிய வயல்களில் வெட்டிய கரும்புகளின் அடித்துண்டுகளினின்றும் பொழிந்த கொழுமை யாகிய சாறான அவ்வடித் துண்டுகளின் இடையிடையே கட்டியிருக்கின்ற தேன் கூடுகள் கிழிதலால் பெருகி ஓடுகின்ற தேன்வெள்ளத்தோடு, பக்கங்களில் வண்டுகள் பரவி ஒலிக்கும்படி செல்கின்ற புதியநீரோடு சென்று மடைகளை யுடைத்துவிட, அவ்வாறு உடைக்கப்பட்ட மடைகளை அக் கருப்பஞ்சாற்றைக் காய்ச்சிய வெல்லக்கட்டிகளைக் கொண்டு அடைப்பார்கள்; அந்நாட்டிலுள்ள ஊர்கள் தோறும். எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கைம் முகங்காட்ட
மருங்குவளர் கதிர்ச்செந்நெல் வயப்புரவி முகங்காட்ட
பெருஞ்சகடு தேர்காட்ட வினைஞர்ஆர்ப் பொலிபிறங்க
நெருங்கியசா துரங்கபல நிகர்ப்பனவாம் நிறைமருதம். 6

(இ - ள்.) வளப்பம் நிறைந்த மருதநிலங்கள், கருவாழை மரங்களின் பெரிய குலைகள் யானைகளின் துதிக்கையோடு கூடிய முகத்தினுருவத்தைக் காட்டவும், பக்கங்களில் வளர்கின்ற செந்நெல்களின் கதிர்க்குலைகள் வெற்றி பொருந்திய குதிரை களின் முகத்தினுருவத்தைக் காட்டவும், பெரியப்பண்டிகள் தேரினுருவத்தைக் காட்டவும், வேலை செய்கின்ற பள்ளர்களின் ஆரவாரமானது படைவீரர்களின் ஒலிபோல விளங்கவும் தோன்றும் காரணத்தினால், நெருக்கமாகிய நால்வகைச் சேனைகளையுடைய இடத்தையொத்திருக்கும். - எ-று.

நறையாற்றுங் கமுகுநவ மணிக்கழுத்தி னுடன்கூந்தல்
பொறையாற்ற மகளிரெனப் புறம்பலைதண் டலைவேலித்
துறையாற்ற மணிவண்ணச் சுரும்பிரைக்கும் பெரும்பண்ணை
நிறையாற்று நீர்க்கொழுந்து படர்ந்தேறு நிலைமையதால். 7

(இ - ள்.) வாசனை வீசுகின்ற கமுகமரங்கள் (கழுத்தி னிடத்துப் பழங்களையும், காய்களையும், பாளைகளையும், நீண்டபச்சோலைகளையும் உடையனவாயிருத்தலால்) கழுத்தில் நவரத்தினங்களிழைத்த ஆபரணங்களோடு கூந்தலின் பாரத்தை யும் தாங்கமாட்டாத மாதர்களைப் போன்று, புறத்தில் அலை கின்ற சோலைகளாகிய வேலியையுடைய கரையில் மிகுந்த கருநிறத்தையுடைய வண்டுகள் முழங்குகின்ற பெரிய பெண்ணை யாற்றினது நிறைந்த நீர்க் கொழுந்தானது படர்ந்து செல்கின்ற நிலைமையையுடையது (அந்தமருதநிலம்.) -எ-று.

மருமேவு மலர்மேய மாகடலி னுட்படியும்
உருமேகம் எனமண்டி உகைத்தகருங் கன்றுபோல்
வருமேனிச் செங்கண்வரால் மடிமுட்டப் பால்சொரியும்
கருமேதி தனைக்கொண்டு கரைபுரள்வ திரைவாவி. 8

(இ - ள்.) மணம் வீசுகின்ற மலர்களைமேயும்படி பெரிய கடலில் நீரையுண்ணும் பொருட்டுப் படிகின்ற கருநிறத்தை யுடைய மேகம் போலத் தடாகத்தில் விழுந்து, துள்ளுகின்ற கரிய கன்றுகள் போலப் பருத்த உடலையும், சிவந்த கண்களையு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடைய வரால் மீன்கள் மடிகளைமுட்டப் பாலைச் சொரிகின்ற கரிய எருமைகளை அடித்துக் கொண்டு கரைபுரளுகின்றன அலைகளையுடைய தடாகங்கள். - எ-று.

மெய்யளிசூழ் நிரைநீல முழுவலயங் களின்அலையச்
செய்யதளிர் நறுவிரலிற் செழுமுகையின் நகஞ்சிறப்ப
மெய்யொளியின் நிழற்காணும் ஆடியென வெண்மதியை
வையமகள் கையணைத்தாற் போலுயர்வ மலர்ச் சோலை. 9

(இ - ள்.) மலர்களையுடைய சோலைகள், சூழ்ந்து மொய்த்துக் கொண்டிருக்கும் வண்டுகளின் கூட்டங்கள் நீலமணிகளாற் செய்த பெரியவளையல்கள் போல அசையவும், சிவந்ததளிர்களாகிய நல்லவிரல்களினிடத்து நகத்தைப் போலச் செழுமை பொருந்திய பூவரும்புகள் சிறப்படையவும், பூமிதேவியானவள் தன் திருமேனி அழகின் பிரதிபிம்பத்தைப் பார்த்தற்குரிய கண்ணாடியென்று வெண்மையாகிய சந்திரனைத் தன்கைகளால் அணைத்தாற் போல உயர்ந்திருக்கின்றன. - எ-று.

எயில்குலவும் வளம்பதிகள் எங்குமணந் தங்கும்வயற்
பயிர்க்கண்வியல் இடங்கள்பல பரந்துயர்நெற் கூடுகளும்
வெயிற்கதிர்மென் குழைமகளிர் விரவியமா டமும்மேவி
மயிற்குலமும் முகிற்குலமும் மாறாட மருங்காடும். 10

(இ - ள்.) மதில் சூழ்ந்த வளப்பம் பொருந்திய அந்நாட்டிலுள்ள நகரங்களிலெல்லாம், மணம்வீசுகின்ற பயிரையுடைய வயலிடங்களிலுள்ள விசாலமாகிய களங்களில் பரவி உயர்ந்திருக்கின்ற நெற்போர்களிலும், ஒளி பொருந்திய கிரணங்களை வீசுகின்ற குண்டலங்களையணிந்த மாதர்கள் நெருங்கியிருக்கும் உப்பரிகைகளிலும், மயிற்கூட்டங்களும் மேகக்கூட்டங்களும் தங்கிக் கண்டோர்க்கு இது அது என்று வேற்றுமை தோன்றாதிருக்க அவ்விடங்களில் ஆடும் - எ-று.

மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்மளவோ? பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு. 11

(இ - ள்.) பாவத்தை விளைவிக்கின்ற கொடிய சமயநெறிகள் நீங்கும்படிக்குக் காளகண்டத்தையுடைய சிவபெருமான் அருளிய உண்மை நெறியாகிய சைவசமயத்தில் கூறும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தருமங்களை நிலைநிறுத்திய திருநாவுக்கரசுவமிகளும், ஸ்ரீ சுந்தர மூர்த்திசுவாமிகளும் திருவவதாரஞ் செய்யத்தக்க மேன்மையைப் பெற்ற தென்றால், பெரிய உலகத்தில் சிறப்புப் பொருந்திய அத்திருமுனைப்பாடி நாட்டின் வளப்பத்தைக் குறித்துப் புகழ்கின்ற சிறப்பானது நம்மளவினதோ? அன்று. - எ-று.

இவ்வகைய திருநாட்டில் எனைப்பலவூர் களுமென்றும்
மெய்வளங்கள் ஓங்கவரும் மேன்மையான; ஆங்கவற்றுள்
சைவநெறி ஏழுலகும் பாலிக்குந் தன்மையினால்
தெய்வநெறிச் சிவம்பெருக்குந் திருவாமூர் திருவாமூர். 12

(இ - ள்.) இத்தன்மையாகிய சிறப்பினையுடைய திருமுனைப்பாடி நாட்டில், எல்லா ஊர்களும் எந்நாளும் அழிவில்லாதவளங்கள் வளர்ந்தோங்கும்படிக்குத் தங்கிய பெருமையையுடையன; அவ்வூர்களுள், சைவசமயமார்க்கத்தை ஏழுலகத்திற்குந் தெரிவிக்கின்ற மேன்மையை யுடைத்தாயிருப் பதினால், திருமகள் வாசஞ் செய்யும் ஊராகிய திருவாமூரானது தெய்வத்தன்மை பொருந்திய நன்மார்க்கத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கும். - எ-று.

ஆங்குவன முலைகள்சுமந் தணங்குவன மகளிரிடை;
ஏங்குவன நூபுரங்கள்; இரங்குவன மணிக்காஞ்சி;
ஓங்குவன மாடநிரை; ஒழுகுவன வழுவில்அறம்;
நீங்குவன தீங்குநெறி; நெருங்குவன பெருங்குடிகள். 13

(இ - ள்.) அத்திருவாமூரில் மாதர்களின் இடைகளானவை அழகிய ஸ்தனபாரங்களைத் தாங்குவதனால் வருந்துகின்றன; அவர்கள் காலில் தரித்த சிலம்புகள் (ஸ்தனங்களைச் சுமப் பதனால் அவ்விடைகளுக்குத் துன்பமுண்டாகுமேயென்று அலறுதல் போல) சப்திக்கின்றன; இடையில் தரித்த நவமணி களிழைத்த மேகலாபரணமானது (தனக்கும் அபாயம் சம்பவிக்கு மென்று விசனப்படுவதுபோல) ஒலிக்கின்றன; மாளிகைகளின் வரிசைகள் உயர்ந்திருக்கின்றன; குற்றமற்ற சிறந்த தருமங்கள் தவறாமல் நடக்கின்றன; தீயவொழுக்கங்கள் விலகுகின்றன; பெரிய குடிகள் (செழிப்புற்று) நிறைகின்றன. - எ-று.

மலர்நீலம் வயல்காட்டும்; மைஞ்ஞீலம் மதிகாட்டும்
அலர்நீடு மறுகாட்டும் அணியூசல் பலகாட்டும்;
புலர்நீலம் இருள்காட்டும் பொழுதுழவர் ஒலிகாட்டும்
கலநீடு மனைகாட்டும் கரைகாட்டப் பெருவளங்கள். 14

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ - ள்.) வயல்கள் நீலோற்பலமலர்களைக் காட்டுகின்றன; பூரணசந்திரன்கரிய மறுவைத் தன்னிடத்துக்காட்டுகின்றது; விசாலமாகிய நீண்ட வீதிகள் மனிதர்களால் ஆட்டப்பட்ட அழகிய பல ஊசல்களைக் காட்டுகின்றன; கரிய இருளுண்டா கின்ற விடியற் காலமானது உழவர்களினுடைய ஒலியைக் காட்டுகின்றது; பல பாண்டங்களும் நிறைந்திருக்கின்ற வீடுகள் அளவில்லாத பெரிய வளங்களைக் காட்டுகின்றன. - எ-று.

தலத்தின்கண் விளங்கியஅத் தனிப்பதியில் அனைத்துவித
நலத்தின்கண் வழுவாத நடைமரபிற் குடிநாப்பண்
விலக்கின்மனை ஒழுக்கத்தின் மேதக்க நிலைவேளாண்
குலத்தின்கண் வரும்பெருமைக் குறுக்கையர்தங் குடிவிளங்கும். **15**

(இ - ள்.) உலகத்தில் சிறந்து விளங்குகின்ற ஒப்பற்ற அத்திரு வாமூரில் எல்லாவித நன்மைகளிலும் தவறாத நல்லொழுக் கத்தையுடைய குடிகளினிடையில், பழிப்பில்லாத இல்லற வொழுக்கத்தில் மேன்மை பொருந்திய வேளாளர் மரபில், தொன்று தொட்டு வருகின்ற பெருமையையுடைய குறுக்கையர் குடியானது விளங்கியிருக்கும். - எ-று.

அக்குடியின் மேல்தோன்ற லாயபெருந் தன்மையினார்
மிக்கமனை அறம்புரிந்து விருந்தளிக்கும் மேன்மையினார்
ஒக்கல்வளர் பெருஞ்சிறப்பின் உளரானார் உளரானார்
திக்குநில வும்பெருமை திகழவரும் புகழனார். **16**

(இ - ள்.) அந்தக் குறுக்கையர் குடியில் தோன்றிய மேலாகிய பெருமையையுடையவரும், சிறந்த இல்லறத்தை நடத்தி விருந்தினரைப் பாதுகாக்கின்ற மேன்மையையுடையவரும், உறவினர்களுக்கு உதவி புரிந்து விருத்திசெய்கின்ற பெருஞ் சிறப்பினையுடையவருமாகிய திக்குகளிலெல்லாம் பரவிய பெருமையானது விளகும்படி வந்த புகழனாரென்பவர் ஒருவரிருந்தார். - எ-று.

புகழனார் தமக்குரிமைப் பொருவில்குலக் குடியின்கண்
மகிழவரு மணம்புணர்ந்த மாதினியார் மணிவயிற்றில்
நிகழுமலர்ச் செங்கமல நிரையிதழின் அகவயினில்
திகழவருந் திருவனைய திலகவதி யார்பிறந்தார். **17**

(இ - ள்.) அவர் தமக்குரிய ஒப்பற்ற குடிமரபில் விருப்பமாகக் கலியாணஞ் செய்து கொண்ட மாதினியாரென்னும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனைவியாரது திருவயிற்றில், மலர்ந்த செந்தாமரை மலரினது வரிசையாகிய இதழ்களில் நடுவில் விளங்குகின்ற திருமகளை யொத்த திலதவதியாரென்னும் புத்திரியார் அவதரித்தார். எ-று.

திலகவதி யார்பிறந்து சிலமுறையாண் டகன்றதற்பின்
அலகில்கலைத் துறைதழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில்வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போற்பின்
மலருமரு ணீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார். 18

(இ - ள்.) திலகவதியாரென்னும் புத்திரியார் அவதரித்து, முறையாகச் சில வருஷங்கள் கடந்தபின்பு, அளவில்லாத வேதாகமங்களிற் கூறும் தருமங்கள் தழைத்தோங்கவும், அருமையாகிய தவத்தினையுடையவர்களது நல்லொழுக்கமானது சிறப்புற்று வாழவும், உலகத்தில் நிறைந்த இருளையொழித்துப் பிரகாசிக்கின்ற சூரியனைப் போல விளங்குகின்ற மருணீக்கியா ரென்றும் புத்திரர் திருவவதாரஞ் செய்தருளினார். - எ-று.

மாதினியார் திருவயிற்றின் மன்னியசீர்ப் புகழனார்
காதலனார் உதித்ததற்பின் கடன்முறைமை மங்கலங்கள்
மேதகுநல் வினைசிறப்ப விரும்பியபா ராட்டினுடன்
ஏதமில்பல் கிளைபோற்ற இளங்குழவிப் பதங்கடந்தார். 19

(இ - ள்.) தமது பத்தினியாகிய மாதினியாரது திருவயிற்றில் மருணீக்கியாரென்னும் புத்திரர் அவதரித்தவுடனே, நிலை பெற்ற சிறப்பினையுடைய புகழனாரானவர் விதிப்படி செய்ய வேண்டிய மங்கலங்களாகிய நல்வினைகளைச் சிறக்கச் செய்த பின்பு குற்றமற்ற சுற்றத்தார் யாவரும் மருணீக்கியார்க்கு வரிசை எடுத்துப் பாராட்டி வளர்க்க, அவர் இளமையாகிய குழந்தைப் பருவங்கடந்தார். - எ-று.

மருணீக்கி யார்சென்னி மயிர்நீக்கும் மணவினையும்
தெருணீர்ப்பன் மாந்தரெலாம் மகிழ்சிறப்பச் செய்ததற்பின்
பொருணீத்தங் கொளவீசிப் புலன்கொளுவ மனமுகிழ்த்த
கருணீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்குவித்தார். 20

(இ - ள்.) (புகழனார்) தம்புத்திரராகிய மருணீக்கியாரது தலையிலுள்ள சிகையைக் கழிக்கின்ற குடுமிக்கலியாணத்தைத் தெளிந்த நற்குணத்தையுடைய சுற்றத்தார் பலரும் மகிழ்ச்சி யடையும்படி செய்தபின்பு, பொருள்களை வெள்ளமாக எடுத்துத் தானஞ் செய்து, ஞானமுண்டாகும் பொருட்டுச் சுருள் போல் மூடியிருக்கின்ற மனதை விரியச் செய்யுங் கருவியாகிய நூல்களைப் படிக்கும்படி வித்தியாரம்பஞ் செய்வித்தார். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தந்தையார்களி மகிழ்ச்சி தலைசிறக்கு முறைமையினால்
சிந்தைமலர்ந் தெழும்உணர்வில் செழுங்கலையின் திறங்களெல்லாம்
முந்தைமுறை மையிற்பயின்று முதிரஅறி வெதிரும்வகை
மைந்தனார் மறுஒழித்த இளம்பிறைபோல் வளர்கின்றார். 21

(இ - ள்.) தந்தையாராகிய புகழனார்க்குப் பெருங்களிப்பானது படிப்படியாகச் சிறந்தோங்குகின்ற முறைமையினால், புத்திரராகிய மருணீக்கியார் சிந்தையினின்றும் அதிகரித்தெழுந்த அறிவினிடத்தில் அருமையாகிய சாஸ்திரங்களின் வேறுபாடுகளையெல்லாம் தொன்றுதொட்டு வருகின்ற சம்பிரதாயப்படியே கற்று அறிவுமுதிர்ந்து களங்கமற்ற இளம்பிறைப் போல நாளுக்கு நாள் வளர்கின்ற வராயினார். - எ-று.

அந்நாளில் திலகவதி யாருக்காண் டாறிரண்டின்
முன்னாக ஒத்தகுல முதல்வேளாண் குடித்தலைவர்
மின்னார்செஞ் சடைஅண்ணல் மெய்யடிமை விருப்புடையார்
பொன்னாரும் மணிமௌலிப் புரவலன்பால் அருளுடையார். 22

(இ - ள்.) அப்படி வளர்ந்து வருகின்ற நாள்களில், திலகவதியாரென்னும் புத்திரியாருக்குப் பன்னிரண்டாம் வயதில் பழமையாகத் தம்மரபிற்கு ஒத்த வேளாளர் குலத்தில் பிறந்த தலைவரும், மின்னலைப் போல் விளங்குகின்ற சிவந்த சடை முடியையுடைய சிவபெருமானுக்கு மெய்யாகிய அடிமைத் திறஞ் செய்வதில் விருப்பமுடையவரும், பொன்னால் செய்யப் பட்டு மணிகளழுத்திய கிரீடத்தைத் தரித்த அரசனிடத்தில் அன்புள்ளவரும். - எ-று.

ஆண்டகைமைத் தொழிலின்கண் அடலரியே றெனவுள்ளார்
காண்டகைய பெருவனப்பிற் கலிப்பகையார் எனும்பெயரார்
பூண்டகொடைப் புகழனார் பாற்பொருவின் மகட்கொள்ள
வேண்டிஎழுங் காதலினால் மேலோரைச் செலவிட்டார். 23

(இ - ள்.) ஆண் தன்மையாகிய வீரத்தொழிலில் வல்லமை பொருந்திய ஆண் சிங்கத்தையொத்த வருமாகிய பலரும் விரும்பத்தகுந்த பேரழகினையுடைய கலிப்பகையாரென்னும் பெயரையுடையவர், யாவருக்கும் வரையாது கொடுக்கின்ற ஈகைத் தன்மையையே ஆபரணமாகப் பூண்ட புகழனாரிடத்தில் ஒப்பற்ற அவரது புத்திரியாரைக் கலியாணஞ் செய்து கொள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விரும்பி, அதனாலுண்டாகிய ஆசையினால், தம்முறவினர் களுள் பெரியோர்களைப் புகழனாரிடத்தில் பெண்கேட்கும்படி அனுப்பினார். - எ-று.

அணங்கனைய திலகவதி யார்தம்மை ஆங்கவர்க்கு
மணம்பேசி வந்தவரும் வந்தபடி அறிவிப்பக்
குணம்பேசிக் குலம்பேசிக் கோதில்சீர்ப் புகழனார்
பணங்கொளரவகல்அல்குல் பைந்தொடியை மணம்நேர்ந்தார். 24

(இ - ள்.) இலட்சுமியையொத்த அழகினையுடைய திலகவதியாரை அந்தக் கலிப்பகையாருக்கு மணம் பேசும்படி வந்த பெரியவர்களும் தாங்கள் வந்த காரியத்தைத் தெரிவிக்க, குற்றமற்ற சிறப்பினையுடைய புகழனாரானவர் அப்பிள்ளை யினது குணத்தையும், குலத்தையும் விசாரித்துப் பின்பு பசியவளையலையணிந்த திலவதியாரைக் கலியாணஞ் செய்து கொடுப்பதற்குச் சம்மதித்தார். - எ-று.

கன்னிதிருத் தாதையார் மணம்இசைவு கலிப்பகையார்
முன்அணைந்தார் அறிவிப்ப வதுவையினை முடிப்பதன்முன்
மன்னவற்கு வடபுலத்தோர் மாறேற்க மற்றவர்மேல்
அன்னவர்க்கு விடைகொடுத்தான் அவ்வினைமேல் அவர்அகன்றார். 25

(இ - ள்.) புகழனார் தம்முடைய புத்திரியாரைக் கலியாணஞ் செய்து கொடுக்கச் சம்மதித்ததைப் பெண்கேட்கப் போன வர்கள் வந்து கலிப்பகையாருக்குத் தெரிவிக்க, அவர் தாம் கலியாணஞ் செய்து கொள்வதற்கு முன்னே, தம்முடைய அரசன்மேல் வடதேசத்திலுள்ள பகையரசர்கள் படையெடுத்து வர, அவர்கள் மேல் யுத்தஞ் செய்யும்படி அவ்வரசன் கலிப் பகையாருக்கு உத்தரவு செய்தான்; அப்போர்த்தொழிலை மேற்கொண்டு அவர்போயினார். -எ-று.

வேந்தற்குற் றுழிவினைமேல் வெஞ்சமத்தில் விடைகொண்டு
போந்தவரும் பொருபடையும் உடன்கொண்டு சிலநாளில்
காய்ந்தசினப் பகைப்புலத்தைக் கலந்துகடுஞ் சமர்க்கடலை
நீந்துவார் நெடுநாள்கள் நிறைவெம்போர்த் துறைவிளைத்தார். 26

(இ - ள்.) தமது அரசனுக்குப் பகைவர்களால் துன்பம் உண்டானபொழுது, அதனை யொழிக்கும் பொருட்டுக் கொடிய போர்த்தொழிலைச் செய்ய விடைபெற்று, நால்வகைச் சேனைகளையும் தம்முடன் அழைத்துக் கொண்டு போன கலிப்பகையாரும் சிலதினத்தில் மிகுந்த கோபத்தையுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகைவர்கள் போர் செய்யும் இடத்தையடைந்து கொடிய போராகிய கடலைக் கடக்க வேண்டுமென்னுங் கருத்துடைய வராய் நெடுநாள்வரையிலும் கொடிய போர்த் தொழிலைச் செய்தார். - எ-று.

ஆயநா ளிடைஇப்பால் அணங்கனையாள் தனைப்பயந்த
தூயகுலப் புகழனார் தொன்றுதொடு நிலையாமை
மேயவினைப் பயத்தாலே இவ்வுலகை விட்டகலத்
தீயஅரும் பிணியுழந்து விண்ணுலகிற் சென்றடைந்தார். 27

(இ - ள்.) கலிப்பகையார் பகைவர் மேற் சென்று போர்செய்து கொண்டிருக்கும் நாள்களில், திருவாமூரில், இலட்சுமியை யொத்த திலகவதியாரைப் பெற்ற சிறந்த குலத்திற் பிறந்த புகழனார் தொன்று தொட்டு வருகின்ற தேகம் நிலையாமைக்குக் காரணமாகிய இருவினையின் பயனால் இவ்வுலகத்தைவிட்டு நீங்கும்படியாகக் கொடியவியாதியினால் வருந்திப் பின்பு சுவர்க்கலோகத்தை யடைந்தர். - எ-று.

மற்றவர்தம் உயிர்நீப்ப மனைவியார் மாதினியார்
சுற்றமுடன் மக்களையுந் துகளாக வேநீத்துப்
பெற்றிமையால் உடன்என்றும் பிரியாத உலகெய்தும்
கற்புநெறி வழுவாமல் கணவனா ருடன் சென்றார். 28

(இ - ள்.) புகழனார் சுவர்க்கபதவியை யடையவும், அவர் மனைவியாராகிய மாதினியாரும் தமது சுற்றத்தாரையும் மக்களிருவரையும் அலட்சியமாக நினைத்து நீக்கிவிட்டு, மனம் ஒத்த தன்மையையுடையவராய்த் தம் நாயகரோடு என்றும் பிரியாதிருக்கும் உலகத்தையடையும் கற்பு நெறிதவறாமல் கணவனாரோடு சககமனஞ் செய்தார். -எ -று.

தாதையா ரும்பயந்த தாயாரும் இறந்ததற்பின்
மாதரார் திலகவதி யாரும்அவர் பின்வந்த
காதலனார் மருணீக்கி யாரும்மனக் கவலையினால்
பேதுறுநற் சுற்றமொடும் பெருந்துயரில் அழுந்தினார். 29

(இ - ள்.) தம்மைப் பெற்ற தாய் தந்தையர்களிருவரும் இறந்த பின்பு அவர்கள் புத்திரியாராகிய திலகவதியாரும் அவருக்குப் பின்னே அவதரித்தருளிய புத்திரராகிய மருணீக்கியாரும், மனதிலுண்டாகிய கவலையினால் வருந்துகின்ற நல்ல சுற்றத் தாரோடும் பெரிய துன்பமாகிய கடலில் முழுகினவர்களா னார்கள். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருவாறு பெருங்கிளைஞர் மனந்தேற்றத் துயரொழிந்து
பெருவானம் அடைந்தவர்க்குச் செய்கடன்கள் பெருக்கினார்
மருவார்மேல் மன்னவற்கா மலையப்போங் கலிப்பகையார்,
பொருவாரும் போர்க்களத்தில் உயிர்கொடுத்துப் புகழ்கொண்டார். 30

(இ - ள்.) தமது பெரிய சுற்றத்தார்களாயுள்ளவர்கள் திலகவதியாரையும் மருணீக்கியாரையும் மனந்தேற்ற ஒருவகையாகத்துயரம் ஒழிந்து, பெருமை பொருந்திய சுவர்க்கப் பதவியை யடைந்த தாய்தந்தையர்களிருவருக்கும் செய்ய வேண்டிய நீர்க்கடன் முதலிய கருமங்களைச் செய்து முடித்தார்கள்; இங்கு இவ்வாறிருக்க, தம்முடைய அரசனுக்காகப் பகையரசர்கள்மேல் யுத்தஞ்செய்யப் போயின கலிப்பகையாரும் சண்டைசெய்கின்ற யுத்தகளத்தில் தம்பூ தவுடலைக் கொடுத்துப் புகழுடம்பைப் பெற்றுக் கொண்டார். - எ-று.

வெம்முனைமேற் கலிப்பகையார் வேல்வேந்தன் ஏவப்போய்
அம்முனையில் பகைமுருக்கி அமருலகம் ஆள்வதற்குத்
தம்முடைய கடன்கழித்த பெருவார்த்தை தலஞ்சாற்றச்
செம்மலர்மேல் திருவனைய திலகவதி யார்கேட்டார். 31

(இ - ள்.) கலிப்பகையார் வேலைத்தாங்கிய தம்முடைய அரசன் கட்டளையிட்டனுப்பக் கொடிய போர் செய்யச் சென்று அப்போர் முகத்திலுள்ள பகைவர்களைக் கொன்று, தாமும் வீரசுவர்க்கத்தையாளும் பொருட்டு, அரசனுக்குச் செய்ய வேண்டிய போர் செய்யும் முறைமையைக் கழித்து இறந்தாரென்னும் பெரும்புகழாகிய வார்த்தையை உலகத்தார் சொல்ல, அதனைச் செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலட்சுமியையொத்த திலகவதியார் கேள்விப்பட்டார். -எ-று.

எந்தையும்எம் அனையும்அவர்க் கெனைக்கொடுக்க இசைந்தார்கள்
அந்தமுறை யால்அவர்க்கே உரியதுநான் ஆதலினால்
இந்தவுயிர் அவருயிரோ டிசைவிப்பன் எனத்துணிய
வந்தவர்தம் அடியிணைமேல் மருணீக்கி யார்விழுந்தார். 32

(இ - ள்.) என் தந்தையாரும் தாயாரும், அவருக்கு என்னை விவாகஞ் செய்து கொடுக்கும் படி சம்மதித்திருந்தார்கள்; அவர்கள் எண்ணியிருந்த முறைமைப் படியே இந்த வுயிர் அவருக்கே சொந்தமாயுள்ளது; ஆகையினால், இந்தவுயிரை வீரசுவர்க்கத்தையடைந்த அவருயிருடன் சேர்த்துவிடுகிறே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

னென்று இறக்கும்படி துணிந்தார்; அப்பொழுது மருணீக்கியார் வந்து தமக்கையாராகிய திலதவதியாருடைய இரண்டு பாதங்களிலும் விழுந்து புலம்பினார். - எ-று.

அந்நிலையில் மிகப்புலம்பி "அன்னையும்அத் தனும்அகன்ற
பின்னையுநான் உமைவணங்கப் பெறுதலினா லுயிர்தரித்தேன்;
என்னைஇனித் தனிக்கைவிட் டேகுவீர் எனில்யானும்
முன்னம்உயிர் நீப்பன்" என மொழிந்திடரின் அழுந்தினார். 33

(இ - ள்.) மருணீக்கியார் திலகவதியாருடைய திருவடிகளில் விழுந்துகிடக்கும் நிலையில் மிகவும் அழுது, தாய்தந்தையர்கள் இறந்த பின்பும், அடியேன் உம்மையே அவர்களாகப் பாவித்து வணங்கப் பெற்றதனாலன்றோ உயிர்வைத்துக் கொண்டிருக் கின்றேன்; அங்ஙனமாக இனி அடியேனைத்தனியே கைவிட்டு நீர் இறப்பிராயின், நானும் உமக்கு முன்னமே உயிரைவிடுவே னென்று சொல்லித் துன்பத்தை யடைந்தார். - எ-று.

"தம்பியார் உளராக வேண்டும்"என வைத்ததயா
உம்பருல கணையவுறு நிலைவிலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார். 34

(இ - ள்.) மருணீக்கியார் சொன்ன வார்த்தையைக் கேட்ட திலகவதியார், தம்முடைய தம்பியார் உயிரோடிருக்க வேண்டு மென்று அவர்மேல் வைத்திருக்கும் அன்பானது உயிரைத் துறந்து சுவர்க்கத்தை யடையவேண்மென்று எண்ணங் கொண்ட உறுதிப்பாட்டை விலக்கியபடியால், தம்முயிரைத் தாங்கிக் கொண்டு வேறொருவரையும் விவாகஞ் செய்து கொள்ளாமல் எல்லா உயிர்களிடத்திலும் காருண்ணியமுடையவராய் இவ் வுலகத்தில் வீட்டிலேயே தவஞ் செய்து கொண்டிருந்தார். எ-று.

மாசின்மனத் துயரொழி மருணீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினால்
ஆசில்அறச் சாலைகளும் தண்ணீர்ப்பந் தரும்அமைப்பார். 35

(இ - ள்.) மருணீக்கியார் (தமது தமக்கையார் உயிரோடிருக் குங் காரணத்தினால்) குற்றமற்ற மனத்திலுள்ள துயர மொழிந்து, மகிழ்வடைந்து, இவ்வுலகியலின் நிலையாமையை யுணர்ந்து தருமங்களைச் செய்யவிரும்பி, உலகத்தில் புகழுண்டாகும்படி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்புடனே திரவியங்களைச் செலவுசெய்து, குற்றமற்ற தரும சாலைகளையும், தண்ணீர்ப் பந்தல்களையும் அமைத்தார். எ-று.

காவளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவருக்குந் தவிராத ஈகைவினைத் துறைநின்றார். 36

(இ - ள்.) (வெளியில் இளைப்புற்று வருவோர் அவ்விளைப் பாறும்படி வழிகளில்) சோலைகளை வைத்து வளர்த்தும், (நீர் விடாய் தணித்தற்கும், முழுகுவதற்கும் தகுதியாகக்) குளங்களை வெட்டியும், ஈகை நிலை தவறாமல் தம்மை யடைந்தவர்களுக்கு அவர்கள் விரும்பிய பொருள்களை மகிழ்ச்சியோடு கொடுத்தும், வந்த விருந்தினைப் பாதுகாத்தும், புலவர்களுக்கு வளமுண் டாகப் பொருள்களை மிகுதியாகக் கொடுத்தும் இவ்வாறு இவ்வுலகத்திலுள்ள யாவருக்கும் இல்லையென்று சொல்லாமல் கொடுக்கின்ற கொடைத் தொழிலிலேயே சிறந்து நின்றார். - எ-று.

நில்லாத உலகியல்பு கண்டு "நிலை யாவாழ்க்கை
அல்லேன்" என் றறத்துறந்து சமயங்க ளானவற்றின்
நல்லாறு தெரிந்துணர நம்பர்அரு ளாமையினால்
கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயங் குறுகுவார். 37

(இ - ள்.) அநித்தியமாகிய உலக வாழ்க்கையை யறிந்து, நிலையில்லாத இல்வாழ்க்கைக்கு யான் உரியவனல்லேனென்று எல்லாவற்றையும் அறவே யொழித்துவிட்டு, எல்லாச் சமயங் களுள்ளும் சற்சமயம் இதுதானென்று அறிந்து கொள்ளும் படி சிவபெருமான் அனுக்கிரகஞ் செய்யாமையினால் கொல்லா விரதம் என்னும் அறமொன்றில் மறைந்து வாழ்கின்ற சமண சமயத்தை யடைந்தார். - எ-று.

பாடலிபுத் திரமென்னும் பதிஅணைந்து சமண்பள்ளி
மாடணைந்தார் வல்லமணர் மருங்கணைந்து மற்றவர்க்கு
"வீடறியும் நெறிஇதுவே" எனமெய்போல் தங்களுடன்
கூடவரும் உணர்வுகொளக் குறிபலவுங் கொளுவினார். 38

(இ - ள்.) அந்தச் சமணசமயத்தை யடைந்த மருணீக்கியார் பாடலிபுத்திரமென்னும் நகரத்திற் சென்று சமணர்களுடைய கோயிலை யடைந்தார்; அப்பொழுது வலிய சமணர்கள் அவரிடத்திற்கு வந்து மோக்ஷத்தை யடைதற்குரிய மார்க்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுவேயென்று தங்களோடு அவர் சேர்தற்கு எண்ணங் கொள்ளும் பொருட்டு, மெய்போலக் குறித்தறியும் பல வஞ்சனையான நூல்களையும் போதித்தார்கள். - எ-று.

அங்கவரும் அமண்சமயத் தருங்கலைநூ லானவெலாம்
பொங்கும்உணர் வுறப்பயின்றே அந்நெறியிற் புலன்சிறப்பத்
துங்கமுழு உடற்சமணர் சூழ்ந்துமகிழ் வார்அவர்க்குத்
தங்களின்மே லாந்தரும சேனர்எனும் பெயர்கொடுத்தார். 39

(இ - ள்.) அம்மருணீக்கியாரும் சமணசமயத்திலுள்ள அருமையான நூல்களெல்லாவற்றையும் மிகுந்த அறிவில் அமையும்படியாக ஓதியுணர்ந்து, அந்தவிஷயத்தில் உணர்வு அதிகரித்திருப்பதனால், பருத்த உடம்பினையுடைய சமணர்கள் இவரை எப்பொழுதும் சூழ்ந்து மகிழ்கின்றவர்களாய்த் தங்களுக் கெல்லாம் தலைவராக இருக்கின்ற தருமசேனரென்னும் பட்டப் பெயரை கொடுத்தார்கள். - எ-று.

அத்துறையின் மீக்கூரும் அமைதியினால் அகலிடத்தில்
சித்தநிலை அறியாத தேரரையும் வாதின்கண்
உய்த்தவுணர் வினில்வென்றே உலகின்கண் ஒளியுடைய
வித்தகராய் அமண்சமயத் தலைமையினில் மேம்பட்டார். 40

(இ - ள்.) அந்தச் சமணசமய நூல்களைப்படித்துச் சிறப்புற் றிருக்குந் தன்மையினால், இவ்வுலகத்தில் மனம் ஒருமைப்படும் நெறி இதுவென்று அறியாத பௌத்தர்களையும், தம்முடைய உணர்வின் மிகுதியினால் வாதத்தில்வென்று, உலகத்தில் நீங்காத புகழுடையவராய்ச் சமண சமயத்திலுள்ள தலைமையான ஒழுக்கத்தில் சிறந்திருந்தார். - எ-று.

அந்நெறியின் மிக்கார் அவரொழுக ஆன்றதவச்
செந்நெறியின் வைகுந் திலகவதியார் தாமும்
தொன்னெறியின் சுற்றத் தொடர்பொழியத் தூயசிவ
நன்னெறியே சேர்வதற்கு நாதன்தாள் நண்ணுவார். 41

(இ - ள்.) மருணீக்கியார் அச்சமணமார்க்கத்தில் சிறந்த வராய் ஒழுகிவர, உயர்ந்த தவத்தினையுடைய நல்ல சைவ சமய நெறியில் இருக்கின்ற திலகவதியாரும் தொன்று தொட்டு வருகின்ற முறைமையினையுடைய பந்துக்களின் தொடர்ச்சி யானது நீங்க, பரிசுத்தம் பொருந்திய சிவபதத்தையடையும் படிக்குச் சிவபெருமானுடைய திருவருளைப் பெறுங்கருத் துடையவராயிருந்தார். - எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பேராத பாசப் பிணிப்பொழியப் பிஞ்ஞகன்பால்
ஆராத அன்புபெற ஆதரித்த அம்மடவார்
நீரார் கெடிலவட நீள்கரையில் நீடுபெருஞ்
சீரார் திருவதிகை வீரட்டா னஞ்சேர்ந்தார். 42

(இ - ள்.) தம்மைவிட்டு நீங்காத ஆணவாதி பாசபந்தங்கள் நீங்கவும், சிவபெருமானிடத்தில் நீங்காத பேரன்பினைப் பெறவும் விரும்பியிருக்கின்ற அந்தத் திலகவதியார் நீர்நிறைந்த கெடில நதியின் நீண்ட வடகரையிலுள்ள பெருஞ் சிறப்பினையுடைய திருவதிகை வீரட்டானத்தை யடைந்தார். - எ-று.

சென்றுதிரு வீரட்ட னத்திருந்த செம்பவளக்
குன்றை அடிபணிந்து கோதில் சிவச்சின்னம்
அன்று முதல்தாங்கி ஆர்வமுறத் தங்கையால்
துன்று திருப்பணிகள் செய்யத் தொடங்கினார். 43

(இ - ள்.) திருவதிகையிற் சென்று திருவீரட்டானமென்னும் ஆலயத்தில் கண் வீற்றிருந்தருளும் சிவந்த பவளமலை போல் விளங்குகின்ற சிவபெருமானுடைய திருவடிகளில் வணங்கிக் குற்றமற்ற சிவசின்னங்களை அன்று முதலாகத் தரித்துக் கொண்டு, அன்பானது பெருகத் தம்முடையகையினால் நிலை பெற்ற பலதிருப்பணிகளைச் செய்யத் தொடங்கினார். - எ-று.

புலவர்தன்முன் திருவலகு பணிமாறிப் புனிறகன்ற
நலமலிஆன் சாணத்தால் நன்குதிரு மெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து மாலைகளும் தொடுத்தமைத்துப்
பலர்புகழும் பண்பினால் திருப்பணிகள் பலசெய்தார். 44

(இ - ள்.) தினந்தோறும் சூரியோதயத்திற்கு முன்னே திருக்கோயிலின் உள்ளும் புறமும், திருவலகிட்டு, இளமை போய்ப் பருவமடைந்த நல்ல பசுவின் சாணத்தினால் நன்றாக மெழுகி, நல்லமலர்களைப் பறித்துக் கொண்டு வந்து திருப் பள்ளித் தாமங்கள் தொடுத்துச் சாத்தி, யாவரும் புகழ்ந்து சொல்லுகின்ற முறைமையோடு இவை முதலாகிய பல திருப் பணிகளைச் செய்து வந்தார் அத்திலகவதியார். - எ-று.

நாளுமிகும் பணிசெய்தங் குறைந்தடையும் நன்னாளில்
கேளுறும்அன் புறவொழுகுங் கேண்மையினால் பின்பிறந்தார்
கோளுறுதீ வினைமுந்தப் பரசமயங் குறித்ததற்கு
மூளுமனைக் கவலையினால் முற்றவருந் துயருழந்து. 45

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.

(இ - ள்.) தமது சுற்றத்தாரிடத்தில் அன்புண்டாகும்படிக்கு ஒழுகுகின்ற நண்பினையுடைய திலகவதியார் இவ்வாறாக நாள்தோறும் மிகுந்த திருப்பணிகளைச் செய்து, தமது குறையை விண்ணப்பஞ் செய்து கொண்டு வரும் நாள்களில், தம்பியா ராகிய மருணீக்கியார் வலியதீவினையை யனுபவிக்கக் காலம் நேரிட்டபடியினாலே சமணசமயத்தில் பிரவேசித்ததைக் குறித்து உண்டாகிய மனவருத்தத்தினால் மிகுந்த துயரத்தை யடைந்து. - எ-று.

தூண்டுதவ விளக்கனையார் சுடரொளியைத் தொழு(து)என்னை
ஆண்டருளும் நீராகில் அடியேன்பின் வந்தவனை
ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்றும் எடுத்தாள
வேண்டும்" எனப் பலமுறையும் விண்ணப்பஞ் செய்தனரால். 46

(இ - ள்.) தூண்டப்பட்ட தவவிளக்கினையொத்த அத்திலக வதியார் விளங்குகின்ற சோதி சொரூபராகிய சிவபெருமானைத் தொழுது, எம்பெருமானே! தேவரீர் என்னை அடிமை கொண் டருளியது சத்தியமாயின், என் தம்பியைத் தீவினையே மிகுதி யாகச் செய்கின்ற சமணசமயமாகிய படுகுழியினின்றும் எடுத்துக் காத்தருள வேண்டுமென்று பலதரமும் விண்ணப்பஞ் செய்து கொண்டார். - எ-று.

"தவமென்று பாயிடுக்கித் தலைபறித்து நின்றுண்ணும்
அவமொன்று நெறிவீழ்வான் வீழாமே அருளும்" எனச்
சிவமொன்றும் நெறிநின்ற திலகவதி யார்பரவப்
பலமொன்றும் வினைதீர்ப்பார் திருவுள்ளம் பற்றுவார். 47

(இ - ள்.) தவமென்று சொல்லிப் பாயையிடுக்கித் தலைமை யிரைப்பறித்து நின்று கொண்டுண்ணுகின்ற தீமைபொருந்திய சமணமார்க்கத்தில் வீழ்ந்து அலைகின்ற என்தம்பியை அவ்வாறு வீழாமல் திருவருள் செய்ய வேண்டுமென்று சிவத்தையடையத் தக்க சைவநெறியில் நிற்கின்ற திலகவதியார் விண்ணப்பஞ் செய்ய, பிறவிக்கேதுவாயிருக்கும் தீவினையை நீக்கியருள் பவராகிய சிவபெருமான் அவ்வம்மையாருக்கு இதனைத் திருவுள்ளம் பற்றுகின்றார். - எ-று.

மன்னுதபோ தனியார்க்குக் கனவின்கண் மழவிடையார்
"உன்னுடைய மனக்கவலை ஒழிநீஉன் உடன் பிறந்தான்
முன்னமே முனியாகி எமைஅடையத் தவம் முயன்றான்
அன்னவனை இனிச்சூலை மடுத்தாள்வம்." எனஅருளி. 48

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) இளமை பொருந்திய ரிஷபவாகனத்தையுடைய சிவபெருமான் நிலைபெற்ற தவச்செல்வத்தையுடைய திலகவதியாரது சொப்பனத்தில் வெளிப்பட்டு, நீ உன்னுடைய மனதிற் கொண்டிருக்கின்ற வருத்தத்தை யொழிப்பாயாக; உன்னோடு பிறந்தவன், முற்சனனத்திலேயே ஒரு முனிவனாக இருந்து எம்மை அடையும் பொருட்டுத் தவஞ் செய்திருக்கின்றான்; ஆதலால், இனி சூலை நோயைக்கொடுத்து நாம் அவனை ஆட்கொள்வோமென்று அருளிச்செய்து. -எ-று.

பண்டுபுரி நற்றவத்துப் புழுதினள விறைவழுவும்
தொண்டரைஆ ளத்தொடங்குஞ் சூலைவே தனைதன்னைக்
கண்தருநெற் றியர்அருளக் கடுங்கனல்போல் அடுங்கொடிய
மண்டுபெருஞ் சூலைஅவர் வயிற்றினிடைப் புக்கதால். 49

(இ-ள்.) நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான், முற்சனனத்திற் செய்த நல்ல தவத்தில் கொஞ்சங்குற்றத்தால் வழுவிச் சமணமதத்தில் பிரவேசித்திருந்த தொண்டராகிய மருணீக்கியாரை மறுபடியும் அடிமைகொள்ளும் பொருட்டுச் சூலைநோயைக் கொடுக்க, கொடிய நெருப்பைப் போலப் பற்றி வருத்துகின்ற தீமை பொருந்திய அந்தச் சூலைநோயானது அவர் வயிற்றிற்புகுந்தது. -எ.று.

அடைவிலமண் புரிதரும சேனர்வயிற் றடையும்அது
வடஅனலும் கொடுவிடமும் வச்சிரமும் பிறவுமாம்
கொடியஎலாம் ஒன்றாகும் எனக்குடரின் அகங்குடையப்
படருழந்து நடுங்கிஅமண் பாழியறை யிடைவிழுந்தார். 50

(இ-ள்.) நல்லொழுக்கமில்லாத சமண சமயத்தை விரும்பியிருக்கின்ற தருமசேனருடைய வயிற்றில் அடைந்த அந்தச் சூலைநோயானது வடவாமுகாக்கினியும், கொடிய விஷமும், வச்சிராயுதமும் மற்றுள்ள கொடிய பொருள்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்ததென்று சொல்லும்படி குடலினுள்ளே புகுந்து குடைய, அதனால் வருந்தி நடுக்கமுற்றுச் சமணர்களுடைய மடத்தின் அறையில் மூர்ச்சித்து விழுந்தார். -எ.று.

அச்சமயத் திடைத்தாமுன் அதிகரித்து வாய்த்துவரும்
விச்சைகளால் தடுத்திடவும் மேன்மேலும் மிகமுடுகி
உச்சமுற வேதனைநோய் ஓங்கிஎழ ஆங்கவர்தாம்
நச்சரவின் விடந்தலைக்கொண் டெனமயங்கி நவையுற்றார். 51

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அவ்வாறு விழுந்தபொழுது அந்தச் சமண சமயத்தில் தாம் முன்பு அப்பியசித்துக்கை வந்திருக்கும் மந்திரவித்தைகளினால் தடுக்கவும், தடைபடாமல் மேலும் மேலும் அதிகப்பட்டு மிகுந்த துன்பத்தைத் தருகின்ற அந் நோயானது மேற்கொண்டெழும்ப, அத்தருமசேனர் பாம்பின் விஷந்தலைக்கேறினாற்போல மயங்கி வருத்தப்பட்டார். -எ.று.

அவர்நிலைமை கண்டதற்பின் அமண்கையர் பலர்ஈண்டிக்
"கவர்கின்ற விடம்போல்முன் கண்டறியாக் கொடுஞ்சூலை
இவர்தமக்கு வந்த(து)இனி யாதுசெயல்?" என்றழிந்தார்
தவமென்று வினைபெருக்கிச் சார்பல்லா நெறிசார்வார். 52

(இ-ள்.) அத்தருமசேனர் சூலைநோயினால் வருந்துகின்ற நிலைமையைப் பார்த்தபின்பு, தவமென்று தீவினையைவளர்த்து உறுதியில்லாத சமணமார்க்கத்தை அனுசரித்து ஒழுகுகின்றவர் களாகிய கொடிய சமணர்கள் பலர் ஒன்றாகக்கூடி, உயிரை வாங்குகின்ற விஷம்போல, நாம் முன்பு ஒருபோதும் பார்த் தறியாத கொடிய இச்சூலை நோயானது இவருக்கு வந்தது; இதனை நீக்குவதற்கு இனி என்ன செய்ய வேண்டியதென்று துன்பப்பட்டார்கள். -எ.று.

புண்தலைவன் முருட்டமணர்புலர்ந்துசெயல் அறியாது
குண்டிகைநீர் மந்திரித்துக் குடிப்பித்தும் தணியாமை
கண்டுமிகப் பீலிகொடு கால்அளவுந் தடவிடவும்
பண்டையினும் நோவுமிகப் பரிபவத்தால் இடர்உழந்தார். 53

(இ-ள்.) மயிரைப் பறித்தலாற் புண்கொண்டிருக்கின்ற தலையினையும், வலிய முரட்டுத் தன்மையையுமுடைய சமணர்கள் மனம் வருந்தி, அந்நோயை நீக்குவதற்குச் செய்ய வேண்டிய முறைமை இன்னதென்றறியாமல் தங்கள் கமண்டலத் திலுள்ள நீரை மந்திரித்துக் குடிக்கச் செய்தும் அந்நோய் தணியாமலிருப்பதைப் பார்த்து, மிகுந்த மயிற்பீலியைக் கொண்டு சிரசுமுதல் கால்வரைக்கும் தடவவும், அதனால் அந்நோயானது முன்னிருந்ததைப் பார்க்கிலும் அதிகப்பட, அதனைச் சகிக்க முடியாமையால் துன்பத்தையடைந்தார். -எ.று.

தாவாத புகழ்த்தரும சேனருக்கு வந்தபிணி
ஓவாது நின்றிடலும் ஒழியாமை உணர்ந்தாராய்
'ஆ! ஆ! நாம் என்செய்கோம்' என்றழிந்த மனத்தினராய்ப்
போவார்கள் "இதுநம்மாற் போக்கரிதாம்" எனப்புகன்று. 54

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) கெடாத கீர்த்தியையுடைய தருமசேனர்க்கு வந்த சூலைநோயானது அந்தச் சமணர்கள் செய்யும் மந்திரங்களால் ஒழியாமல் நின்று வருத்தவும், அது நீங்காதிருப்பதை யுணர்ந்து, ஐயோ! இதற்கு நாம் என்ன செய்வோமென்று மனங்கலங்கி னவர்களாய், இந்நோய் நம்மால் நீக்கமுடியாத தாயிருக்கின்ற தென்று சொல்லிக் கொண்டு அவரைக் கைவிட்டுப் போவார் களாயினார். -எ.று.

குண்டர்களுங் கைவிட்டார்; கொடுஞ்சூலை மிசைக்கொண்டு
மண்டிமிக மேன்மேலும் பெருகுதலால் மதிமயங்கிப்
பண்டையுற வுணர்ந்தார்க்குத் திலகவதி யார்உளராக்
கொண்டவர்பால் ஊட்டுவான் தனைவிட்டார் குறிப்புணர்த்த. 55

(இ-ள்.) சமணர்களும் (இந்த நோய்க்குப் பரிகாரமில்லை யென்று) கைவிட்டார்கள்; கொடிய சூலைநோயானது வயிற் றைப் பற்றி மேலும்மேலும் அதிகரித்து வருத்துதலால் புத்தி மயங்கிப் பழைய உறவைக் கருதிய தருமசேனர் தமக்குத் திலகவதியாரென்னும் தமக்கையார் இருக்கின்றாரென்று நினைத்துத் தம்முடைய சமாசாரத்தைத் தெரிவிக்கும் பொருட் டுச் சமையற்றொழில் செய்கின்ற பாகுகனை அவரிடத்திற்கு அனுப்பினார். -எ.று.

ஆங்கவன்போய்த் திருவதிகை தனைஅடைய அருந்தவத்தார்
பூங்கமழ்நந் தனவனத்தின் புறம்பணையக் கண்டிறைஞ்சி
"ஈங்கியான் உமக்கிளையார் ஏவலினால் வந்த" தெனத்
"தீங்குளவோ" எனவினவ மற்றவனுஞ் செப்புவான். 56

(இ-ள்.) தருமசேனரால் அனுப்பப் பட்ட அந்தப் பாகுகன் திருவதிகைக்குப்போய், அரியதவத்தினையுடைய திலகவதியார் மலர்கள் மணம்வீசுகின்ற ஒரு திருநந்தனவனத்திற்குச் சமீபத்தில் வர, அவரைக் கண்டு வணங்கி, நான் உம்முடைய தம்பியார் கட்டளையினால் இவ்விடத்திற்கு வந்தேன் என்றுசொல்ல, திலகவதியார் தம்பியாருக்கு யாதாயினும் தீங்கு நேரிட்ட துண்டோவென்று கேட்க, அதற்கு அவன் சொல்லுகின்றான். - எ.று.

கொல்லாது சூலைநோய் குடமுடக்கித் தீராமை
எல்லாருங் கைவிட்டார்இது செயல்என் முன்பிறந்த
நல்லாள்பால் சென்றியம்பி நான்உய்யும் படிகேட்டிங்(கு)
அல்லாகும் பொழுணைவாய் என்றார்என் றறிவித்தான். 57

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) உயிரை வாங்காமல் வருத்துகின்ற சூலை நோயானது குடலைச் சுருட்டியிழுத்து, மருந்து மந்திரங்களினால் தீராமையினால் சமண முனிவர்கள் எல்லாரும் கைவிட்டார்கள்; இச்செய்தியை என் தமக்கையாராகிய திலகவதியாரிடத்திற் போய்த் தெரிவித்து நான் பிழைக்கும் பொருட்டுச் செய்யவேண்டிய உபாயத்தைக் கேட்டுக்கொண்டு இராப்பொழுதில் இங்குவந்து சேர்வாயென்று என்னை யனுப்பினாரென்று சொன்னான். -எ.று.

என்றவன்முன் கூறுதலும் "யான் அங்(கு)உன் னுடன்போந்து
நன்றறியா அமண்மொழி நண்ணுகிலேன் எனும்மாற்றம்
சென்றவனுக் குரை"என்று திலகவதி யார்மொழிய
அன்றவனும் மீண்டுபோய்ப் புகுந்தபடி அவர்க்குரைத்தான். 58

(இ-ள்.) இவ்விதமாக அந்தப்பாகுகன் முன்னேநின்று சொல்லவும், அதைக் கேட்ட திலகவதியார் நான் உன்னோடு அவ்விடத்திற்கு வந்து நன்மார்க்கத்தை யறியாத சமணர்களுடைய பள்ளியை அடையமாட்டேனென்னும் வார்த்தையை நீ போய் என் தம்பிக்குச் சொல்லென்று கூற, அவன் அதைக் கேட்டுத் திரும்பிப் போய் நடந்த சங்கதியைத் தருமசேனருக்குச் சொன்னான். -எ.று.

அவ்வார்த்தை கேட்டலுமே அயர்வெய்தி "இதற்கினியான்
எவ்வாறு செய்வன்?" எனஈசர்அருள் கூடுதலால்
"ஒவ்வாஇப் புன்சமயத் தொழியாஇத் துயரொழியச்
செவ்வாறு சேர்திலக வதியார்தாள் சேர்வன்"என. 59

(இ-ள்.) திலகவதியார் சொல்லியனுப்பிய அந்த வார்த்தையைக் கேட்டவுடனே மனவருத்தமடைந்து, இந்நோய் நீங்குவதற்கு இனி யான் என்ன உபாயம் செய்வேனென்று விசனப்பட்டிருக்கும் பொழுது, சிவபெருமானுடைய திருவருளானது அவர்க்குக் கைகூடியபடியால், தீமை செய்வதில் தனக்கு ஒன்றும் ஒப்பில்லாத இவ்வற்பமாகிய சமண சமயத்தில் நீங்காத இந்நோயானது ஒழியும்படிக்குச் செம்மையாகிய சைவசமய மார்க்கத்தை அனுஷ்டிக்கின்ற திலகவதியாருடைய திருவடிகளை யான் அடைவேனென்று நினைத்து. -எ.று.

எடுத்தமனக் கருத்துய்ய எழுதலால் எழுமுயற்சி
அடுத்தலுமே அயர்வொதுங்கத் திருவதிகை அணைவதனுக்(கு)
உடுத்துழலும் பாயொழிய உறியுறுகுண் டிகையொழியத்
தொடுத்தபீ லியும்ஒழியப் போவதற்குத் துணிந்தெழுந்தார். 60

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) தாம் மனத்திற்கொண்ட கருத்தானது கடைத் தேறுதற்கேதுவாகத் தோன்றினமையால், அவ்விடத்தினின்றும் புறப்படுவதற்கு முயற்சியுண்டாகவும், அதனால் தமக்குண்டா யிருந்த துன்பம் ஒருவாறு நீங்க, அவ்விடத்தினின்றும் திருவதிகை வீரட்டானத்தை யடையும்பொருட்டு இடையில் உடுத்துக் கொண்டிருந்த பாயையும், உறியில் உற்ற கமண்டலத்தையும், சேர்த்துக் கட்டியிருக்கின்ற மயிற்பீலியையும் நீக்கிவிட்டுப் போகும்படி துணிவுகொண்டு எழுந்தார். -எ.று.

பொய்தருமால் உள்ளத்துப் புன்சமணர் இடங்கழிந்து
மெய்தருவான் நெறியடைவார் வெண்புடைவை மெய்சூழ்ந்து
கைதருவார் தமையூன்றிக் காணாமே இரவின்கண்
செய்தவமா தவர்வாழுந் திருவதிகை சென்றடைவார். 61

(இ-ள்.) பொய்யை விளைவிக்கின்ற மயக்கம் பொருந்திய மனத்தினையுடைய புல்லிய சமணர்களிடத்தினின்றும் நீங்கி, மெய்யாகிய உயர்ந்த சவைசமயநெறியை அடைய விரும்பின வராய், தமது உடம்பை வெண்மையாகிய வஸ்திரத்தினால் மூடிக்கொண்டு, தமக்குப் பற்றுக்கோடாகக் கைகொடுத்து வருகின்ற ஏவலாளர்களைப் பிடித்துக் கொண்டு அன்றிரவில் ஒருவருங்காணாமல், தவஞ்செய்யும் பெரிய முனிவர்கள் வாழ்கின்ற திருவதிகை வீரட்டானத்தை நோக்கிச் செல்கின்ற வராயினார். -எ.று.

சுலவிவயிற் றகங்கனலுஞ் சூலைநோ யுடன்தொடரக்
குலவியெழும் பெருவிப்புக் கொண்டணையக் குலவரைபோன்(று)
இலகுமணி மதிற்சோதி எதிர்கொள்திரு வதிகையினில்
திலகவதி யார்இருந்த திருமடத்தைச் சென்றணைந்தார். 62

(இ-ள்.) வயிற்றினுள்ளே குடலைச்சுற்றி நெருப்பைப்போல் எரிகின்ற சூலைநோயானது ஒழியாமல் தொடர்ந்து வரவும், உள்ளத்தில் அதிகரித்தெழுந்த மிகுந்த விருப்பமானது தம்மைக் கொண்டு செலுத்தவும், உயர்ந்த மலைகளையொத்து விளங்கு கின்ற மணிகளிழைத்த மதில்களின் பிரகாசமானது எதிரெதிராக வீசுகின்ற திருவதிகை வீரட்டானத்தில் திலவதியார் எழுந்தருளி யிருக்கும் திருமடத்தை யடைந்தார். -எ.று.

வந்தணைந்து திலகவதி யார்அடிமே லுறவணங்கி
"நந்தமது குலஞ்செய்த நற்றவத்தின் பயன்அனையீர்!
இந்தவுடற் கொடுஞ்சூலைக் கிடைந்தடைந்தேன் இனிமயங்கா(து)
உய்ந்துகரை ஏறுநெறி உரைத்தருளும்" எனஉரைத்து. 63

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருமடத்தில் வந்து சேர்ந்து திலகவதியாருடைய திருவடிகளில் சாஷ்டாங்கமாக வணங்கி, நமது குலத்தார் செய்த நல்லதவப் பயனெல்லாம் திரண்டு ஒருவடிவங்கொண்டது போலும் அம்மே! இந்த உடலைப் பற்றி வருத்துகின்ற கொடிய சூலைநோயைச் சகிக்கமாட்டாமல் உம்மையே கதியென்று அடைந்தேன்; இனி நான் வருத்தப்படாமல் பிழைத்துக் கரை யேறும் வழியைக் கட்டளையிட்டருளுமென்று விண்ணப்பஞ் செய்து. -எ.று.

தாளிணைமேல் விழுந்தயருந் தம்பியார் தமைநோக்கி
ஆளுடைய தம்பெருமான் அருள்நினைந்து கைதொழுது
"கோளில்பர சமயநெறிக் குழியில்விழுந் தறியாது
மூளும்அருந் துயர்உழந்தீர்! எழுந்திரீர்!" எனமொழிந்தார். **64**

(இ-ள்.) திலதவதியார் தமது இரண்டு திருவடிகளில் விழுந்து வருந்துகின்ற தம்பியாராகிய மருணீக்கியாரைப் பார்த்துத் தம்மை அடிமையாகவுடைய சிவபெருமானது திருவருளை நினைந்து கைகூப்பித்தொழுது, உறுதியில்லாத புறச் சமயப் படுகுழியில் அறியாமல் விழுந்து கொடுந்துன்பத்தை அனுபவிக்கின்ற தம்பியாரே! எழுந்திருமென்று கட்டளை யிட்டார். -எ.று.

மற்றவுரை கேட்டலுமே மருணீக்கி யார்தாமும்
உற்றபிணி உடல்நடுங்கி எழுந்துதொழ உயர்தவத்தோர்
"கற்றைவே ணியர்அருளே காணும்இது; கழலடைந்தோர்
பற்றறுப்பார் தமைப்பணிந்து பணிசெய்வீர்" எனப்பணித்தார். **65**

(இ-ள்.) அவர் சொன்ன வார்த்தையைக் கேட்டவுடனே மருணீக்கியாரும் தம்மை வருத்துகின்ற சூலைநோயுடனே நடுக்கமுற் றெழுந்திருந்து வணங்க, உயர்ந்த தவத்தினையுடைய திலகவதியார் (அவரைப் பார்த்துத் தம்பியாரே!) உமக்கு இச்சூலைநோய் வந்தது கூட்டமாகிய சடைமுடியையுடைய சிவபெருமானது திருவருளேயாகும்; ஆதலால், தம்முடைய திருவடியையடைந்த மெய்யன்பர்களின் பாசபந்தங்களை நீக்கி யருள்கின்ற அப்பெருமானையே வணங்கித் திருத்தொண்டு செய்யுமென்று கட்டளையிட்டருளினார். -எ.று.

என்றபொழு தவரருளை எதிரேற்றுக் கொண்டிறைஞ்ச
நின்றதபோ தனியாரும் நின்மலன்பேர் அருள்நினைந்து
சென்றுதிரு வீரட்டம் புகுவதற்குத் திருக்கயிலைக்
குன்றுடையார் திருநீற்றை அஞ்செழுத்தோ திக்கொடுத்தார். **66**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திலகவதியார் இவ்வாறு சொன்னபொழுது அவருடைய உபதேசமொழியை மருணீக்கியார் அங்கீகரித்துக் கொண்டு பின்னும் வணங்க, அப்பொழுது அவ்வம்மையாரும் சிவபெருமானுடைய பெருங்கருணையைச் சிந்தித்து, அவருடன் தாமும் போய்த் திருவதிகை வீரட்டானத்தை யடையும் பொருட்டுத் திருக்கயிலைமலையையுடைய சிவபெருமானது திருவெண்ணீற்றை ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துக் கொடுத் தருளினார். -எ.று.

திருவாளன் திருநீறு திலகவதி யார்அளிப்பப்
"பெருவாழ்வு வந்த"தெனப் பெருந்தகையார் பணிந்தேற்றங்
குருவார அணிந்துதமக் குற்றவிடத் துய்யுநெறி
தருவாராய்த் தம்முன்பு வந்தார்பின் தாம்வந்தார். 67

(இ-ள்.) சிறந்த திருவருட்செல்வத்தையுடைய சிவபெருமானது திருவெண்ணீற்றைத் திலகவதியார் கொடுக்க, மருணீக்கியார் தமக்குப் பெரிய சம்பத்து வந்ததாக எண்ணி, வணங்கி வாங்கித் திருமேனியில் அணிந்து கொண்டு, தமக்கு ஆபத்து நேரிட்டபோது அவ்வாபத்தினின்றும் நீக்கிப் பிழைக்கும் வழியைக் கொடுக்கும் பொருட்டுத் தமக்குமுன் பிறந்திருக்கின்ற திலகவதியாருக்குப்பின்னே தாம் வந்தார். -எ.று.

நீறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குல் புறத்திருளும்
மாறவருந் திருப்பள்ளி எழுச்சியினில் மாதவஞ்செய்
சீறடியார் திருவலகுந் திருமெழுக்குந் தோண்டியுங்கொண்(டு)
ஆறணிந்தார் கோயிலினுள் அடைந்தவரைக் கொடுபுக்கார். 68

(இ-ள்.) திருநீற்றை யணிந்த மருணீக்கியாரது அகத்திலுள்ள அஞ்ஞானமாகிய இருளும், நிறைந்த இரவாகிய புறத்திலுள்ள இருளும் நீங்கும்படியாக வருகின்ற திருப்பள்ளியெழுச்சிக் காலத்தில் பெருமை பொருந்திய தவத்தைச் செய்கின்ற திலகவதியார் திருவலகையும், திருமெழுக்குத் தோண்டியையும் எடுத்துக் கொண்டு, கங்கை நதியைத் தரித்த சடைமுடியை யுடைய சிவபெருமானது திருக்கோயிலுனுள் அம்மருணீக்கி யாரை அழைத்துக் கொண்டு போயினார். -எ.று.

திரைக்கெடில வீரட்டா னத்திருந்த செங்கனக
வரைச்சிலையார் பெருங்கோயில் தொழுதுவலங் கொண்டிறைஞ்சித்
தரைத்தலைத்தின் மிசைவீழ்ந்து தம்பிரான் திருவருளால்
உரைத்தமிழ்மா லைகள்சாத்தும் உணர்வுபெற உணர்ந்துரைப்பார். 69

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அலைகளையுடைய கெடிலநதியின் வடகரையி லுள்ள திருவீரட்டானத்திலிருக்கின்ற மேருமலையாகிய வில்லையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் பெரிய திருக்கோயிலைப் பிரதக்ஷணஞ் செய்து சிரசின்மேல் கைகூப்பி வணங்கிப் பின்பு பூமியில் சாஷ்டாங்கமாக வணங்கி யெழுந்து, அப்பெருமானுடைய திருவருளினாலே தமிழ்ச் செய்யுளாகிய பாமாலைகளைப் பாடுஞ் சத்தியுண்டாகத் திருவருளைச் சிந்தித்துப் பாடத் தொடங்கினார். -எ.று.

நீற்றால்நிறை வாகிய மேனியுடன் நிறைஅன்புறு சிந்தையில் நேசமிக
மாற்றாபுரம் மாற்றிய வேதியரை மருளும்பிணி மாயை அறுத்திடுவான்,
"கூற்றாயின வாறுவிலக்ககிலீர்" எனநீடிய கோதில் திருப் பதிகம்,
போற்றாலுல கேழின் வருந்துயரும் போமாறெதிர் நின்று புகன்றனரால். 70

(இ-ள்.) திருவெண்ணீற்றினால் நிறைவுபெற்ற திருமேனி யுடன் குறையாத அன்புபொருந்திய உள்ளத்தில் அவ்வன்பானது அதிகரிக்க, பகைவர்களின் முப்புரத்தை எரித்தருளிய வீரட் டானே சுவரரைக் குறித்து மயக்கத்தை விளைவிக்கின்ற சூலை நோயையும், பிறவிக்கேதுவாகிய மாயையின் வலியையும் அறுக்கும் பொருட்டுக் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்பதை முதலிலுள்ள குற்றமற்ற திருப்பதிகத்தின் துதியினால் தமக்குண்டாகிய துன்பமேயன்றி ஏழுலகத்திலுள்ளவர்களுக்கும் வருந்துன்பமும் நீங்கும்படி சிவபெருமானுடைய சந்நிதியின் முன்னே நின்று பாடியருளினார். -எ.று.

மன்னும்பதி கம்மது பாடியபின் வயிறுற்றடு சூலை மறப்பிணித்தான்,
அந்நின்ற நிலைக்கண் அகன்றிடலும் "அடியேன்உயி ரோடருள் தந்த"தெனாச்,
செந்நின்ற பரம்பொரு ளானவர்தம் திருவாரருள் பெற்ற சிறப்புடையோர்,
முன்னின்ற தெருட்சி மருட்சியினால் முதல்வன் கருணைக்கடல் மூழ்கினரே.
71

(இ-ள்.) நிலைபெற்ற அத்திருப்பதிகத்தைப் பாடியபின்பு வயிற்றினிடமாகப் பொருந்தி வருத்துகின்ற கொடிய சூலை நோயானது அப்பொழுதே தம்மைவிட்டு நீங்கவும், நேராக வெளிப்பட்டு நின்ற பரம்பொருளாகிய சிவபெருமானது சிறந்த திருவருளைப் பெற்ற பெருமையினையுடைய மருணீக்கியார், அந்நோய் நீக்கமானது அடியேனுடைய உயிரையும் திருவருளை யுங் கொடுத்ததென்று தம்மிடத்துண்டாகிய தெளிவின் மயக்கத்தினால் முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமானது கிருபையாகிய கடலில் மூழ்கினார். -எ.று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்கங்கள் அடங்கஉ ரோமமெலாம் அடையப்புள கங்கண் முகிழ்த்தலரப்,
பொங்கும்புனல் கண்கள் பொழிந்திழியப் புவிமீது விழுந்து புரண்டயர்வார்,
"இங்கென்செய லுற்ற பிழைப்பதனால் ஏராத பெருந்திட ரேறிடநின்,
தங்குங்கரு ணைப்பெரு வெள்ளமிடத் தகுமோ?" என இன்னன தாம்மொழிவார்.
72

(இ-ள்.) அவயவங்கள் முழுவதுமுள்ள உரோமங்களெல் லாம் ஒருங்கே புளகாகிதங்கொண்டு விளங்கித் தோன்றவும், பொங்குகின்ற ஆனந்தபாஷ்பமானது கண்களினின்றும் ஒழுகவும், பூமியில் விழுந்து புரண்டு ஆனந்த பரவசராயிருக் கின்ற அம்மருணீக்கியார் இங்கு அடியேன் செய்த குற்றங் காரணமாக ஏறக்கூடாத பெரியமேட்டில் ஏறும்படிக்குத் தேவரீருடைய நிலைபெற்ற கிருபையாகிய வெள்ளத்தைப் பெருச் ஈத் தகுமோவென்று இப்படிப்பட்ட பல தாழ்ந்தமொழி களைக் கூறத் தொடங்கினார். -எ.று.

"பொய்வாய்மை பெருக்கிய புன்சமயப் பொறியில்சமண் நீசர் புறத்துறையாம்,
அவ்வாழ்குழி யின்கண் விழுந்தெழுமா றறியாது மயங்கி அவம்புரிவேன்,
மைவாச நறுங்குழல் மாமலையாள் மணவாளன் மலர்க்கழல் வந்தடையும்,
இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக் கெதிர் செய்குறை என்கொல்?" எனத்தொழுவார்.
73

(இ-ள்.) பொய்யை மெய்யாகப் புனைந்து கூறுகின்ற புன்சமயத்தையுடைய பொறுமையில்லாத சமணர்களாகிய நீசர்கள் அனுஷ்டிக்கும் புறச்சமயமாகிய படுகுழியில் விழுந்து, அதினின்றும் கரையேறும் வழியை யறியாமல், மயங்கிப் பாவத்தைச் செய்கின்ற அடியேன், மயிர்ச் சாந்தணிந்து மணம் வீசுகின்ற நல்ல கூந்தலையுடைய உமாதேவியாருக்கு மணவாள ராகிய சிவபெருமானது தாமரை மலர் போன்ற திருவடிகளை வந்து அடையும்படியானது இந்தப் பெருவாழ்வைப் பெறும்படிச் செய்த சூலைநோய்க்கு என்ன கைம்மாறு செய்வேனென்று அச்சூலைநோயைச் சுட்டி வணங்கினார். -எ.று.

மேவுற்றஇவ் வேலையில் நீடியசீர் வீரட்டம் அமர்ந்தபிரான் அருளால்,
"பாவுற்றலர் செந்தமி ழின்சொல்வளப் பதிகத் தொடை பாடிய பான்மையினால்,
நாவுக்கரசென் றுல கேழினும்நின் நன்னாமம் நயப்புற மன்னுக" என்(று),
யாவர்க்கும் வியப்புற மஞ்சுறைவா னிடையே ஒரு வாய்மை எழுந்ததுவே.
74

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) இவ்வாறு தோத்திரஞ் செய்த வேளையில் சிறந்த புகழினையுடைய திருவீரட்டத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய திருவருளினால், செய்யுளுக்கிசைந்து விளங்கிய செந்தமிழ்ச் சொல்லமைந்த திருப்பதிகமாகிய பாமாலையைப் பாடியருளிய முறைமையினால், "திருநாவுக்கரசு" என்று ஏழுலகத்திலும் உன்னுடைய பெயர் சிறந்து விளங்கக்கடவதென்று அங்குள்ள யாவர்க்கும் ஓர் வியப்புண்டாகும்படி மேகங்கள் சஞ்சரிக்கும் ஆகாயத்தில் ஒரு அசரீரி வாக்கியம் தோன்றியது. -எ.று.

இத்தன்மை நிகழ்ந்துழி நாவின்மொழிக் கிறையாகிய அன்பரும் "இந்நெடுநாள்,
சித்தந்திகழ் தீவினை யேன்அடையுந் திருவோஇது என்று தெருண்டறியா,
அத்தன்மைய னாய இராவணனுக் கருளுங்கரு ணைத்திற மானஅதன்,
மெய்த்தன்மை அறிந்து துதிப்பதுவே மேல்கொண்டு வணங்கினர் மெய்யுறவே.
75

(இ-ள்.) இவ்வாறு அசரீரிவாக்கானது தோன்றியபொழுது, திருநாவுக்கரசு சுவாமிகளும், இவ்வளவு நெடுங்காலமாகத் தீவினை குடிகொண்டிருக்கின்ற மனத்தினையுடைய அடியேன் அடையத் தக்கபாக்கியம் இதுவோவென்று மகிழ்ந்து, சிவபெருமானுடைய பெருமையை உள்ளவாறு தெளிந்தறியாத அஞ்ஞானத்தையுடைய இராவணனுக்கும் அனுக்கிரகஞ் செய்த காருண்ணியத்தின் கூறுபாடாகிய திருவருளினுண்மையை யறிந்து தமது திருப்பதிகத்தில் துதிக்கின்றதையே நியமமாகக் கொண்டு பூமியில் உடலம் பொருந்த விழுந்து வணங்கினார். -எ.று.

"பரசுங்கரு ணைப்பெரி யோன்அருளப் பறிபுன்தலை யோர்நெறி பாழ்படவந்(து),
அரசிங்கருள் பெற்றுல குய்ந்த(து)" எனா அடியார்புடை சூழ்அதி கைப்பதிதான்,
முரசம்பட கந்துடி தண்ணுமையாழ் முழவங்கிளை துந்துபி கண்டையுடன்,
நிரைசங்கொலி எங்கும் முழங்குதலால் நெடு மாகடல் என்ன நிறைந்துளதே.
76

(இ-ள்.) யாவராலும் துதிக்கப்பட்ட கணையையுடைய சிவபெருமான் அனுக்கிரகஞ்செய்ய, மயிரைப் பறித்த புல்லிய தலையையுடைய சமணர்களின் சமயமானது அழிந்து போகும்படி திருநாவுக்கரசு சுவாமிகள் சைவ சமயத்திற் பிரவேசித்துத் திருவருளைப் பெற்றதனால் உலகம் பிழைத்த தென்று சொல்லி அடியார்கள் சூழ்ந்திருக்கின்ற திருவதிகை யென்னும் ஸ்தலமானது முரசும், படகம், உடுக்கை, தண்ணுமை,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீணை, மத்தளம், புள்ளாங்குழல், துந்துபி, கண்டாமணி இவைகளோடு வரிசையாகிய சங்ககங்களின் ஒலியும் எவ்விடத்திலும் முழங்குதலால், நீண்ட பெரிய சமுத்திரம்போல ஒலியால் நிறைந்திருந்தது. -எ.று.

மையற்றுறை ஏறி மகிழ்ந்தலர்சீர் வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்,
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய் விரவுஞ்சில சின்னம் விளங்கிடவே,
எய்துற்ற தியானம் அறாவுணர்வும் ஈறின்றி எழுந்திரு வாசகமும்,
கையில்திக ழும்உழ வாரமுடன் கைக்கொண்டு கலந்து கசிந்தனரே.
77

(இ-ள்.) மயக்கமாகிய சமண சமயமென்னும் படுகுழியின்றும் கரையேறி அதனால் மகிழ்வடைந்திருக்கின்ற சிறந்த திருநாவுக்கரசு சுவாமிகள் மனம்-வாக்கு-காயம் என்னும் திரிகரணங்களாலும் பொருந்திய திருத்தொண்டு செய்யுங் கருத்தினையுடையவராய்த் திருமேனியில் விபூதி, ருத்திராக்ஷ முதலிய சிவசின்னங்கள் சேர்ந்து பிரகாசிக்க, எப்போதும் திருவடித் தியானம் மறவாத உணர்ச்சியும், அவ்வுணர்ச்சியோடு வரம்பின்றி உண்டாகின்ற துதிரூபமாகிய வாசகமும், திருக்கரத்தில் விளங்குகின்ற உழவாரப் படையோடு கைத்தொண்டும் ஒருங்கே நடந்து கொண்டிருக்க மனமுருகினார். -எ.று.

மெய்ம்மைப்பணி செய்த விருப்பதனால் விண்ணோர்தனி நாயக னார்கழலில்,
தம்மிச்சை நிரம்ப வரம்பெறும்அத் தன்மைப்பதி மேவிய தாபதியார்,
"பொய்ம்மைச்சம யப்பிணி விட்டவர்முன் போதும்பிணி விட்டரு ளிப்பொருளா,
எம்மைப்பணி கொள்கரு ணைத்திறமிங் கியார்பெற்றனர்?" என்ன இறைஞ்சினரே.
78

(இ-ள்.) உண்மையான திருத்தொண்டு செய்கின்ற விருப்பத்தால், தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமானுடைய திருவடிகளினிடமாகத் தங்கருத்து நிரம்பும்படி அனுக்கிரகம் பெற்றுக்கொண்ட அந்தத் திருவதிகையென்னுந் தலத்தில் வாசஞ்செய்கின்ற திலகவதியார் உடன் பிறந்தவர் பொய்ச் சமயமாகிய பிணியைவிட்டு முன் தம்மிடத்திற்குவரும்படி சூலைநோயைப் போகவிட்டு எங்களை ஒருபொருளாக ஆட்கொண்டருளுங் கருணைத் திறத்தை இவ்வுலகத்தில் யார்பெற்றார்களென்று அப்பெருமானுடைய திருவருளைச் சிந்தித்து) வணங்கினார். -எ.று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்ன தன்மையில் இவர்சிவ நெறியினை எய்தி
மன்னு பேரருள் பெற்றிடர் நீங்கிய வண்ணம்
பன்னு தொன்மையிற் பாடலி புத்திர நகரில்
புன்மை யேபுரி அமணர்தாம் கேட்டது பொறாராய். 79

(இ-ள்.) இப்படிப்பட்ட தன்மையாகத் திருநாவுக்கரசு சுவாமிகள் சைவ சமயத்தை யடைந்து, சிவபெருமானுடைய நிலைபெற்ற திருவருளைப் பெற்றுத் தமக்குண்டாயிருந்த துன்பத்தினின்றும் நீங்கிய சமாசாரத்தைப் பழைமையாகிய பாடலிபுத்திரமென்னும் நகரத்தில் அற்பமாகிய தொழிலைச் செய்கின்ற சமணர்கள் கேள்விப்பட்டு அதனைச் சகிக்காதவர் களாய். -எ.று.

"தரும சேனர்க்கு வந்தஅத் தடுப்பருஞ் சூலை
ஒருவ ராலும்இங் கொழிந்திடா மையின்அவ ருயப்போய்ப்
பெருகு சைவராய்ப் பெயர்ந்துதம் பிணியொழித் துய்ந்தார்
மருவு நம்பெருஞ் சமயம்வீழ்ந் தது"என மருள்வார். 80

(இ-ள்.) நமது சமயத்திலிருந்த தருமசேனர்க்கு வந்த எவ் வகையாலும் தடுப்பதற்கரிய சூலைநோயானது இவ்விடத்தி லுள்ள ஒருவராலும் நீங்காதபடியால், அவர் பிழைக்கும் பொருட்டு சென்று, முன்போலச் சிறந்து சைவராகித் தம் முடைய பிணி நீங்கிப் பிழைத்தார்; ஆகையால், நிலையாகிய நமது பெரிய சமயமானது அழிந்து போயிற்றென்று மயங்கி னார்கள். -எ.று.

"மலையும் பல்சம யங்களும் வென்றுமற் றவரால்
நிலையும் பெற்றஇந் நெறிஇனி அழிந்த"தென் றழுங்கிக்
'கொலையும் பொய்ம்மையும் இல'மென்று கொடுமையே புரிவோர்
தலையும் பீலியும் தாழவந் தொருசிறை சார்ந்தார். 81

(இ-ள்.) ஒன்றோடொன்று மாறுபட்டிருக்கும் பல சமயங் களையும் வாதித்து வென்று, அச்சமயிகளால் அழியாமையை யும் பெற்றிருக்கின்ற இந்தச சமயமானது இனி அழிந்து போயிற் றென்று விசனப்பட்டு, கொலை செய்தலும் பொய் சொல்லுத லும் செய்யயமாட்டோமென்று கொடிய தொழிலையே செய்கின்ற சமணர்கள் தலையும், பீலியும் தாழும்படி ஓரிடத்தில் வந்து கூடினார்கள். -எ.று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வ கைப்பல அமணர்கள் துயருடன் ஈண்டி
"மெய்வ கைத்திறம் அறிந்திடில் வேந்தனும் வெகுண்டு
சைவ னாகிநம் விருத்தியுந் தவிர்க்கும்மற் றினிநாம்
செய்வ தென்?"என வஞ்சனை தெரிந்துசித் திரிப்பார். 82

(இ-ள்.) இவ்வாறாகப் பல சமணர்கள் விசனத்தோடு ஒன்றாகச் சேர்ந்து, இதன் உண்மையை அரசன் அறிந்தால் நம்மேற் கோபங்கொண்டு தானும் சைவனாகி நம்முடைய விருத்தியையும் நிறுத்துவான்; ஆதலால் இனி இதற்கு நாம் என்ன செய்ய வேண்டியதென்று ஆலோசித்து, வஞ்சனையாகிய ஒரு உபாயத்தைத் தெரிந்து அதனைச் செய்ய முயன்றார்கள். - எ.று.

"தவ்வை சைவத்து நிற்றலின் தருமசே னருந்தாம்
பொய்வ குத்ததோர் சூலைதீர்ந் திலதெனப் போயிங்
கெவ்வ மாகஅங் கெய்திநஞ் சமயலங் கனமும்
தெய்வ நிந்தையும் செய்தனர்" எனச்சொலத் தெளிந்தார். 83

(இ-ள்.) தம்முடைய தமக்கையாகிய திலகவதியார் சைவசமயத்தில் நிற்கின்றபடியால், தருமசேனரும் நம்முடைய மதத்திற்குக் கபடமாக வந்திருந்து (எல்லா விஷயங்களையுங் கற்றுக்கொண்டு) பின்பு தாம் பொய்யாக வகுத்த ஒரு சூலை நோயானது எம்மிடத்துள்ள மந்திரங்களால் தீரவில்லையென்று நம்முடைய சமயலங்கனத்தையும், தெய்வ நிந்தையையும் செய்தனரென்று அரசனுடன் சொல்லத் துணிந்தார்கள். எ.று

சொன்ன வண்ணமே செய்வது துணிந்ததுன் மதியோர்
"முன்னம் நாம்சென்று முறைப்படு வோம்"என முயன்றே
இன்ன தன்மையில் இருட்குழாஞ் செல்வது போல
மன்ன னாகிய பல்லவன் நகரில்வந் தணைந்தார். 84

(இ-ள்.) சொல்லிய பிரகாரமே செய்யும்படி நிச்சயித்த அற்பபுத்தியையுடைய சமணர்கள், அரசன் இதைக் கேள்விப் படுமுன்னமே நாம் அவனிடத்திற் போய் முறையிடுவோமென்று எண்ணங்கொண்டு இருட்கூட்டமானது நடந்து செல்வது போலச் சோழவமிசத்தரசனாகிய பல்லவராசனுடைய நகரத்தில் வந்து சேர்ந்தார்கள். -எ.று.

உடை ஒழிந்தொரு பேச்சிடை யின்றிநின் றுண்போர்
கடை அணைந்தவன் வாயில்கா வலருக்கு "நாங்கள்
அடைய வந்மை அரசனுக் கறிவியும்" என்ன
இடை அறிந்துபுக் கவருந்தம் இறைவனுக் கிசைப்பார். 85

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) வஸ்திரம் உடாமலும் போசனவேளையில் ஒரு பேச்சும் இடையில் பேசாமலும் நின்று கொண்டு உண்கின்ற சமணர்கள் அப்பல்லவ ராசனுடைய அரண்மனை வாசலில் வந்து வாயில் காப்பவருக்கு நாங்களெல்லாம் ஒரு சேரவந்த சங்கதியை எம்மரசனுக்குத் தெரிவியுங்களென்று சொல்ல, அவர்களும் சமயம் அறிந்து கொண்டு போய்த் தங்களுடைய அரசனுக்குத் தெரிவித்தார்கள். -எ.று.

"அடிகண்மார் எல்லாரும் ஆகுலமாய் மிகஅழிந்து
கொடிநுடங்கு திருவாயிற் புறத்தணைந்தார்" எனக்கூற
வடிநெடுவேல் மன்னவனும் மற்றவர்சார் பாதலினால்,
கடிதணைவான் "அவர்க்குற்ற தென்கொல்" எனக் கவன்றுரைத்தான்.86

(இ-ள்.) நம்முடைய ஆசாரியர்களெல்லாரும் வியாகுலத்தால் மிகவும் மனம் வருந்திக் கொடியாடைகள் அசைகின்ற அரண்மனை வாசலின் புறத்தே வந்திருக்கிறார்களென்று சொல்ல, கூர்மை பொருந்திய நீண்ட வேலைப் பிடித்த பல்லவ ராசனும் அச்சமணர்களுடைய மதத்திற் சேர்ந்திருக்கின் றமையால், அவர்கள் இவ்விடத்தில் விரைந்து வருவதற்கு என்னதுன்பம் நேரிட்டதென்று மனம் வருந்தி அழைத்துவரச் சொன்னான். -எ.று.

கடைக்காவ லுடையார்கள் புகுதவிடக் காவலன்பால்
நடையாடுந் தொழிலுடையார் நண்ணித்தாம் எண்ணியவா(று)
"உடையாரா கியதரும சேனர்பிணி உற்றாராய்ச்
சடையானுக் கானாய்நின் சமயம்ஒழித் தார்"என்றார். 87

(இ-ள்.) வாயில் காய்பவர்கள் அரண்மனையினுள்ளே போகும்படிச் செய்த வளவில், நடக்குந் தொழி லொன்றையே உடையவர்களாய் மற்றச் செய்கைகளெல்லாவற்றையுமிழந்த சமணர்கள் பல்லவ ராசனிடத்திற் சென்று, தாங்கள் முன்பு சொல்லும்படி நினைத்தவிதமாகவே, நமக்கு முதல்வராகிய தருமசேனர் சூலைநோயடைத்தவர்போலக் காட்டி (அது நம்மால் தீர்த்திலதென்று) உம்முடைய சமயத்தைவிட்டு சிவனுக்கு அடிமையாய்ப் புகுந்தாரென்று சொன்னார்கள். -எ.று.

விரையலங்கற் பல்லவனும் அதுகேட்டு வெகுண்டெழுந்து
புரையுடைய மனத்தினராய்ப் போவதற்குப் பொய்ப்பிணிகொண்(டு)
உரைசிறந்த சமயத்தை அழித்தொழியப் பெறுவதே
கரையில்தவத் தீர்!இதனுக் கென்செய்வது?" எனக்கனன்றான். 88

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) வாசனை பொருந்திய ஆத்திமாலையைத் தரித்த பல்லவராசனும் அந்த வார்த்தையைக் கேட்டுக் கோபங்கொண் டெழுந்து, குற்றம் பொருந்திய மனமுடையவராகப் போகும் பொருட்டுப் பொய்யாகிய சூலைநோயைக் கற்பித்துக் கொண்டு உண்மை பொருந்திய நம்முடைய சமயத்தை அழித்துவிட்டு நீங்குவது தகுதியாகுமோ? அளவில்லாத தவத்தினையுடைய முனிவர்களே! இதற்கு என்ன செய்யலாமென்று, கோபங் கொண்டு சொன்னான். -எ.று.

"தலைநெறியா கியசமயந் தன்னையழித்(து) உன்னுடைய
நிலைநின்ற தொல்வரம்பின் நெறியழித்த பொறியிலியை
அலைபுரிவாய்" எனப்பரவி வாயால்அஞ் சாதுரைத்தார்
கொலைபுரியா நிலைகொண்டு பொய்யொழுகும் அமண்குண்டர். 89

(இ-ள்.) கொல்லாவிரத மொன்றையே மேலான தரும மெனக் கொண்டு அதிலும் பற்றில்லாதவர்களாய்ப் பொய் கொண்டொழுகுகின்ற கொடும்பாவிகளாகிய சமணர்கள், உத்தமமார்க்கமாகிய நம்முடைய சமண சமயத்தின் பெருமை யைக் கெடுத்து, நீர் அனுஷ்டித்து வருகின்ற நிலையாகிய பழைய ஒழுக்கத்தின் நெறியை யழித்த அஞ்ஞானத்தையுடைய தருமசேனனைத் துன்பப்படுத்துவாயென்று தங்கள் வாயினால் சிறிதும் அஞ்சாமல் சொன்னார்கள். -எ.று.

அருள்கொண்ட உணர்வின்றி நெறிகோடி அறிவென்று
மருள்கொண்ட மன்னவனும் மந்திரிகள் தமைநோக்கித்
"தெருள்கொண்டோர் இவர்சொன்ன தீயோனைச் செறுவதற்குப்
பொருள்கொண்டு விடாதென்பால் கொடுவாரும்" எனப் புகன்றான். 90

(இ-ள்.) இரக்கம் பொருந்திய உணர்வில்லாமல், முறைதவறி, மயக்கத்தை அறிவென்று கொண்டிருக்கின்ற பல்லவராசனும் தன்னுடைய மந்திரிகளைப் பார்த்து, தெளிவுடையவர்களாகிய இம்முனிவர்கள் குற்றஞ் சாட்டிச் சொல்லிய, அக்கொடிய தருமசேனனைத் தண்டிப்பதற்கு அவனிடத்துப் பொருள் வாங்கிக் கொண்டு விட்டுவிடாமல் என்னிடத்தில் கொண்டு வாருங்களென்று சொன்னான்.

அரசனது பணிதலைநின் றமைச்சர்களும் அந்நிலையே
முரசதிருந் தானையொடு முன்சென்று முகில்சூழ்ந்து
விரைசெறியுஞ் சோலைசூழ் திருவதிகை தனைமேவிப்
பரசமயப் பற்றறுத்த பான்மையினார் பாற்சென்றார். 91

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) மந்திரிகள் அரசனுடைய கட்டளையைத் தலைமேற் கொண்டு, அப்பொழுதே, முரசவாத்தியம் முழங்குகின்ற சேனைகளோடு புறப்பட்டுச் சென்று, மேகங்களால் சூழப்பட்டு மணம் வீசுகின்ற சோலைகள் சூழ்ந்ததிருவதிகையையடைந்து புறச் சமயமாகிய சைனமதத்தில் வைத்திருந்த பற்றை யொழித் தருளிய திருநாவுக்கரசு சுவாமிகளிடத்திற்குச் சென்றார்கள். - எ.று.

சென்றணைந்த அமைச்சருடன் சேனைவீ ரஞ்சூழ்ந்து
மின்தயங்கு புரிவேணி வேதியனார் அடியவரை
"இன்று நுமை அரசன்அழைத் தெமைவிடுத்தான்; போதும்" என
நின்றவரை நேர்நோக்கி நிறைதவத்தோர் உரைசெய்வார். 92

(இ-ள்.) அவ்வாறு திருவதிகையைச் சேர்ந்த மந்திரிமார்க ளோடு சேனைத்தலைவர்களும், மின்னைப்போல விளங்குகின்ற முறுக்காகிய சடை முடியையுடைய சிவபெருமானது அடியவ ராகிய திருநாவுக்கரசு சுவாமிகளைச் சூழ்ந்து கொண்டு (தருமசேனரே!) இன்று உம்மை அழைத்துவரும்படி அரசன் எங்களை யனுப்பினான், ஆதலால் வாருமென்று சொல்ல, அதை நிறைந்த தவத்தினையுடைய எமது குருராயர்கேட்டுத் தமக்கு அருகில்நின்ற மந்திரி முதலானவர்களைப் பார்த்து அருளிச் செய்கின்றார். -எ.று.

"நாமார்க்குங் குடியல்லோம்" என்றெடுத்து நான்மறையின்
கோமானை நதியினுடன் குளிர்மதிவாழ் சடையானைத்
தேமாலைச் செந்தமிழின் செழுந்திருத்தாண் டகம்பாடி
"ஆமாறு நீரழைக்கும் அடைவிலம்" என் றருள்செய்தார். 93

(இ-ள்.) நான்கு வேதங்களினும் முடிந்த பொருளாயுள்ள தலைவரும், கங்கை நதியோடு குளிர்ச்சி பொருந்திய இளம்பிறை யும் வாழ்கின்றசடையினையுடைய வருமாகிய சிவபெருமா னைக் குறித்து "நாமார்க்குங் குடியல்லோம்" என்பதை முதலில் எடுத்து இனிய செந்தமிழ்ப் பாமாலையாகிய திருத்தாண்டகம் பாடி, நீர் அழைத்தபடியே வருவதற்கு அரசனிடத்தில் எமக்கு ஒரு சம்பந்தமுமில்லை யென்று அருளிச் செய்தார். -எ.று.

ஆண்டஅர சருள்செய்யக் கேட்டவரும் அடிவணங்கி
வேண்டியவர்க் கொண்டேக விடையுகைத்தார் திருத்தொண்டர்
"ஈண்டுவரும் வினைகளுக்கெம் பிரான்உளன்" என் றிசைந்திருந்தார்;
மூண்டசினப் போர்மன்னன் முன்னணைந்தங் கறிவித்தார். 94

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் இவ்வாறு அருளிச் செய்ய, அதைக் கேட்ட மந்திரி முதலானவர்களும் அவருடைய திருவடிகளைத் தொழுது பிரார்த்தித்து அவரை அழைத்துக் கொண்டு போக, ரிஷபத்தை வாகனமாகச் செலுத்திய சிவபெருமானது திருத்தொண்டராகிய அப்பெரியாரும், இங்கே இவ்வரசனால் எமக்கு நேரிடப்போகின்ற அபாயங்களை நீக்குவதற்கு எமது ஆண்டவராகிய சிவபெருமான் இருக்கின் றார் என்று சம்மதித்திருந்தார். அம்மந்திரி முதலானவர்கள், (சமணர்களின் வஞ்சக வார்த்தையில் மயங்கி) இவர்மேல் அதிக கோபங்கொண்டிருக்கின்ற போர்த்தொழில் வல்லவனாகிய பல்லவராசனிடத்திற்குப் போய்த் தெரிவித்தார்கள். -எ.று.

பல்லவனும் அதுகேட்டுப் பாங்கிருந்த பாயுடுக்கை
வல்லமணர் தமைநோக்கி "மற்றவனைச் செய்வதினிச்
சொல்லும்" என அறந்துறந்து தமக்குறுதி அறியாத
புல்லறிவோர் அஞ்சாது நீற்றறையில் இடப்புகன்றார். 95

(இ-ள்.) பல்லவராசனும் அவர்கள் சொல்லிய வார்த்தை யைக் கேட்டுத் தனக்கு அருகிலிருந்து பாயை ஆடையாகவுடைய கொடிய சமணர்களைப் பார்த்து, அத்தருமசேனனை இனி என்ன செய்ய வேண்டியது நீங்கள் சொல்லுங்களென்று கேட்க, தருமநெறியை யொழித்துத் தமக்கு உறுதியைத் தரத்தக்க மார்க்கம் இன்னதென்று அறிந்துகொள்ளாத சிற்றறிவினை யுடைய சமணர்கள் கொஞ்சமும் அஞ்சாமல் நீற்றறையில் இடல்வேண்டும் என்று சொன்னார்கள். -எ-று.

அருகணைந்தார் தமைநோக்கி "அவ்வண்ணஞ் செய்க" எனப்
பெருகுசினக் கொடுங்கோலான் மொழிந்திடலும் பெருந்தகையை
உருகுபெருந் தழல்வெம்மை நீற்றறையின் உள்ளிருத்தித்
திருகுகருந் தாட்கொளுவிச் சேமங்கள் செய்தமைத்தார். 96

(இ-ள்.) மிகுந்த கோபத்தையுடைய கொடுங்கோல் மன்னவனாகிய பல்லவராசன் தன்னருகிலிருக்கின்ற ஏவலாளர் களைப் பார்த்து, இவனை இச்சமண முனிவர்கள் சொல்லிய படியே செய்வீர்களாகவென்று கட்டளையிட்டவுடனே, பெருந்தன்மையையுடைய திருநாவுக்கரசு சுவாமிகளை, தன்னை யடைந்த பொருள்கள் உருகுவதற்குக் காரணமாயிருக்கின்ற பெருஞ் சூட்டினையுடைய நீற்றறையினுள்ளே விட்டுக் கதவை யடைத்துச் சுழலுந் தன்மையையுடைய இரும்பினாற் செய்த தாளிட்டார்கள். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆண்டஅர(சு) அதனகத்துள் அணைந்தபொழு தம்பலத்துத்
தாண்டவமுன் புரிந்தருளுந் தாள்நிழலைத் தலைக்கொண்டே
"ஈண்டுவருந் துயருளவோ ஈசன் அடியார்க்"கென்று
மூண்டமனம் நேர்நோக்கி முதல்வனையே தொழுதிருந்தார். 97

(இ-ள்.) நம்மை அடிமையாகவுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் அந்த நீற்றறையினுள்ளே போனபொழுது, திருவம்பலத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற சிவபெருமானுடைய திருவடி நிழலைச் சிரமேற்கொண்டு, சிவனடியார்களுக்கு இவ்வுலகத்தில் யாதொரு துன்பமும் வருவதுண்டோவென்று அன்பு பொருந்திய மனத்தை ஒருவழியாகத் திருப்பி அவ்வெம்பெருமானையே தியானித்துக் கொண்டிருந்தார். -எ-று.

வெய்யநீற் றறையதுதான் விங்கிளவே னிற்பருவம்
தைவருதண் தென்றல்அணை தண்கழுநீர்த் தடம்போன்று
மொய்யொளிவெண் ணிலவளர்ந்து முரன்றயாழ் ஒலியினதாய்
ஐயர்திரு வடிநீழல் அருளாகிக் குளிர்ந்ததே. 98

(இ-ள்.) அப்பொழுது, வெப்பம் பொருந்திய அந்த நீற்றறையானது மேலும் மேலும் அதிகரிக்கின்ற இளவேனிற் காலமும், மிருதுவாக வருகின்ற குளிர்ந்த தென்றற்காற்றும், அலைகளையுடைய சிறந்த செங்கழுநீர்த்தடாகமும், மிகுந்த ஒளியை வீசுகின்ற வெண்மையாகிய சந்திரனும், இனிமையாக ஒலிக்கின்ற யாழினது ஓசையுமொத்துச் சிவபெருமானுடைய திருவடி நீழலாகிய அருண்மயமாகக் குளிர்ந்திருந்தது. -எ-று.

மாசில்மதி நீடுபுனல் மன்னிவளர் சென்னியனைப்
பேசஇனி யனைஉல காளுடைய பிஞ்ஞகனை
ஈசனைஎம் பெருமானை எவ்வுயிருந் தருவானை
ஆசையில்ஆ ராவமுதை அடிவணங்கி இனிதிருந்தார். 99

(இ-ள்.) களங்கமில்லாத சந்திரனும், மிகுந்த கங்கை நதியும் நிலைபெற்று வாழ்கின்ற சடைமுடியையுடையவரும், சொல்லு தற்கு இனிமையாயுள்ளவரும், சர்வலோகங்களையும் ஆளுகின்ற தலைவரும், ஜகதீசரும், எமது ஆண்டவரும், எல்லா உயிர்களை யும் படைத்தருளியவரும், அடியார்களது பெருவிருப்பில் தெவிட்டாது நிறைந்த அமிர்தம்போல்பவருமாகிய சிவபெருமானை வணங்கிக் கொண்டு இனிமையாக வீற்றிருந் தருளினார். -எ-று.

In Public Domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரெழுநாள் கழிந்ததற்பின் உணர்வில்அம ணரைஅழைத்துப்
"பாரும்இனி நீற்றறையை" என உரைத்தான் பல்லவனும்;
காரிருண்ட குழாம்போலும் உருவுடைய காரமணர்
தேருநிலை இல்லாதார் நீற்றறையைத் திறந்தார்கள். 100

(இ-ள்.) ஏழுநாள் சென்ற பின்பு பல்லவராசன் அறிவில்லாத சணமர்களை அழைத்து இனி நீங்கள் நீற்றறையைத் திறந்து பாருங்களென்று சொன்னான்; அப்பொழுது, இருண்ட மேகக்கூட்டம் போலும் உருவத்யையுடைய மூடர்களாகிய சமணர்கள் ஆராய்ந்தறியு முணர்ச்சியில்லாதவர்களாய் அந்த நீற்றறையைத் திறந்து பார்த்தார்கள். -எ-று.

ஆனந்த வெள்ளத்தின் இடைமூழ்கி அம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தான் இலராகி உவந்திருந்தார் தமைக்கண்டே
"ஈனந்தங் கியதிலதாம் என்னஅதி சயம்!" என்றார். 101

(இ-ள்.) சிவானந்தமாகிய வெள்ளத்தில் முழுகி, ஸ்ரீநடராசப் பெருமானுடைய தேன் துளிக்கின்ற தாமரை மலர் போன்ற குஞ்சிதபாதத்தினின்றும் பெருகுகின்ற ஆனந்தாமிர்தத்தை யுண்டு தெளிவையடைந்து, யாதொரு குறைவுமில்லாமல் மகிழ்ந்து வீற்றிருந்தருளிய திருநாவுக்கரசு சுவாமிகளை அச் சமணர்கள் பார்த்து, இவனுக்கு ஒரு துன்பமும் இல்லாமலிருக் கின்றது, இது என்ன ஆச்சரியமென்று சொன்னார்கள். -எ-று.

"அதிசயம்அன் றிது; முன்னை அமண்சமயச் சாதகத்தால்
இதுசெய்து பிழைத்திருந்தான்" எனவேந்தற் குரைசெய்து
"மதிசெய்வ தினிக்கொடிய வல்விடமூட் டுவ"தென்று
முதிரவரும் பாதகத்தோர் முடைவாயால் மொழிந்தார்கள். 102

(இ-ள்.) அப்பொழுது, கொடிய பாவரூபிகளாகிய சமணர்கள் இது ஒரு ஆச்சரியமன்று; முன்பு தான் சேர்ந்திருந்த நமது சமண சமயத்தில் கற்றுக் கொண்ட மந்திரசாதகத்தினால் இந்நீற்றறையில் தான் வேகாமல் செய்து பிழைத்திருக்கின்றா னென்று பல்லவராசனுக்குச் சொல்லி, இனி நாம் செய்ய வேண்டிய ஆலோசனையாவது கொல்லத்தக்க கொடிய விஷத்தை யுண்ணச் செய்வதே தகுதியாகுமென்று தங்களுடைய தீநாற்றம் பொருந்திய வாயினால் சொன்னார்கள். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆங்கதுகேட் டலுங்கொடிய அமண்சார்பால் கெடுமன்னன்
ஓங்குபெரு மையலினால் "நஞ்சூட்டும்" எனஉரைப்பத்
தேங்காதார் திருநாவுக் கரையரைஅத் தீயவிடப்
பாங்குடைய பாலடிசில்அமுதுசெயப் பண்ணினார். 103

(இ-ள்.) அவ்வார்த்தையைக் கேட்டவுடனே கொடிய சமணர்களின் சார்பினாலே கெட்ட பல்லவராசன் அதிகரித் திருக்கின்ற மயக்கவுணர்வினால், அவ்வாறே விஷத்தை யூட்டிக் கொல்லுங்களென்று சொல்ல, கொலைசெய்வதற்குச் சிறிதும் அஞ்சாதவர்களாகிய சமணர்கள் திருநாவுக்கரசு சுவாமிகள் விரைவில் கொல்லத்தக்க கொடிய விஷங்கலந்த சோற்றை உண்ணும்படிச் செய்வித்தார்கள். -எ-று.

"நஞ்சும்அமு தாம்எங்கள் நாதன்அடி யார்க்"கென்று
வஞ்சமிகு நெஞ்சுடையார் வஞ்சனையாம் படியறிந்தே
செஞ்சடையார் சீர்விளங்கும் திறலுடையார் தீவிடத்தால்
வெஞ்சமணர் இடுவித்த பாலடிசில் மிசைந்திருந்தார். 104

(இ-ள்.) கபடமிகுந்த மனத்தினையுடைய சமணர்களின் வஞ்சகத்தை யறிந்துகொண்டு சிவந்த சடைமுடியையுடைய சிவபெருமானது திருவருள் விளங்கியிருக்கும் அன்பினுறுதியை யுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் எங்கள் ஆண்டவராகிய பரம சிவனுடைய அடியவர்களுக்குக் கொடிய விஷமும் அமிர்த மாகுமென்று, கொடிய சமணர்கள் தீயவிஷத்தோடு கலந்து கொடுத்த அந்தப் பாற் சோற்றை யுண்டு ஒரு துன்பமுமின்றி இருந்தார். -எ-று.

பொடியார்க்குந் திருமேனிப் புனிதர்க்குப் புவனங்கள்
முடிவாக்குந் துயர்நீங்க முன்னைவிடம் அமுதானால்
படியார்க்கும் அறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுதம் ஆவதுதான் அற்புதமோ? 105

(இ-ள்.) திருவெண்ணீற்றைத் தரிக்கும் திருமேனியையுடைய சிவபெருமானுக்கு, சர்வலோகங்களையும் அழிக்கத்தக்க துன்பத் தினின்றும் நீங்கும் பொருட்டு முன்னாளில் திருப்பாற்கடலிற் றோன்றிய ஆலாகல விஷமானது அமிர்தமாயிருந்ததென்றால், இவ்வுலகத்தில் யாவராலும் அறிவதற்கரியவராகிய அக்கடவு ளின் அடியார்களுக்கு ஓர்விஷம் தன்வேகமடங்கி அமுதமாக உண்ணப்படுவது ஒரு ஆச்சரியமோ? (அன்று.) -எ-று.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்விடத்தை ஆண்டஅரச சமுதுசெய்து முன்னிருப்ப
"வெவ்விடமும் அமுதாயிற்" றெனஅமணர் வெருக்கொண்டே
"இவ்விடத்தில் இவன்பிழைக்கில் எமக்கெல்லாம் இறுதி"எனத்
தெவ்விடத்துச் செயல்புரியுங் காவலற்குச் செப்புவார். **106**

(இ-ள்.) அச்சமணர்களிட்ட விஷங்கலந்த சோற்றை திருநாவுக்கரசு சுவாமிகள் திருவமுது செய்து (அதனால் ஒரு தீங்குமின்றி) அவர்களுக்கு முன்னேயிருக்க, அதைக் கண்ட சமணர்கள் இவனுக்குக் கொடியவிஷமும் அமிர்தமாயிற் றென்று பயங்கொண்டு, இத்தேசத்தில் இவன் உயிர்பிழைத்திருப் பானானால் எங்களுக்கெல்லாம் அழிவு நேரிடுமென்று நினைத்து, பகைவர்களிடத்தில் கொடுந்தொழிலைச் செய்கின்ற பல்லவராசனுக்குச் சொல்லுகின்றார்கள். -எ-று.

"நஞ்சுகலந் தூட்டிடவும் நஞ்சமயத் தினில்விடந்தீர்
தஞ்சமுடைய மந்திரத்தால் சாதியா வகைதடுத்தான்;
எஞ்சும்வகை அவற்கிலதேல் எம்முயிரும் நின்முறையும்
துஞ்சுவது திடம்" என்றார் சூழ்வினையின் துறைநின்றார். **107**

(இ-ள்.) நாங்கள் இத்தருமசேனனுக்கு விஷத்தைச் சோற்றில் கலந்து உண்பித்தும், நம்முடைய சமய நூல்களிலே கற்றுக் கொண்ட விஷந்தீர்க்கும் மந்திரவலியினால் அந்தவிஷம் தன்னைக் கொல்லாதவிதமாகத் தடுத்துப் பிழைத்து விட்டான்; அவன் எந்த வகையிலாயினும் இறவாதிருப்பானானால் எங்க ளுடைய உயிரும் உமது அரசாட்சியும் அழிந்து விடுவது நிச்சயமென்று சொன்னார்கள், தீமை செய்யும் மார்க்கத்தில் முதன்மையாக நின்றவர்களாகிய சமணர்கள். -எ-று.

மற்றவர்தம் மொழிகேட்டு மதிகெட்ட மன்னவனும்
"செற்றவனை இனிக்கடியுந் திறம்எவ்வா(று)?" எனச்செப்ப
உற்றவரும் "மந்திரசா தகநாங்கள் ஒழித்திடநின்
கொற்றவயக் களிற்றெதிரே விடுவ"தெனக் கூறினார். **108**

(இ-ள்.) அறிவில்லாத பல்லவராசனும் அவர்கள் சொல்லிய வஞ்சக வார்த்தையைக் கேட்டு நமது மதத்தையழித்த அத்தருமசேனனை இனிக் கொல்வதற்குச் செய்ய வேண்டிய உபாயம் என்னவென்று கேட்க, அங்குள்ள சமணர்களும் நாங்கள் மந்திர சாதகங்களால் அவனைக் கொல்லாமல் நீங்க, உமது வெற்றி பொருந்திய யானையை அவனுக்கு எதிரில் கொல்லும்படி விடுவதே தகுந்த உபாயமென்று சொன்னார்கள். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாபாவிக் கடையமணர் வாகிசத்திருவடியாம்
காபாலி அடியவர்பால் "கடக்களிற்றை விடு"கென்னப்
பூபாலர் செயல்மேற்கொள் புலைத்தொழிலோன் அவர்தம்மேல்
கோபாதி சயமான கொலைக்களிற்றை விடச்சொன்னான். 109

(இ-ள்.) மகாபாவிகளாகிய கொடிய சமணர்கள் ஸ்ரீ வாகீசமுனிவரென்னும் சிவனடியாரிடத்தில் மதம்பொருந்திய யானையை மிதிக்க விடுகவென்று சொன்னவளவில், அரசர்களது செய்கையைத் தான்மேற்கொண்டு (அதனைச் செய்யாமல் விடுத்து) நீசத் தொழிலைச் செய்கின்றவனாகிய பல்லவராசன் அத்திருநாவுக்கரசு சுவாமிகளின்மேல் மிகுந்த கோபத்தையுடைய கொலைசெய்யும் யானையை விடும்படிச் சொன்னான். -எ-று.

கூடத்தைக் குத்திஒரு குன்றமெனப் புறப்பட்டு
மாடத்தை மறித்திட்டு மண்டபங்கள் எடுத்தெற்றித்
தாடத்திற் பரிக்காரர் தலைஇடறிக் கடக்களிற்றின்
வேடத்தால் வருங்கூற்றின் மிக்கதொரு விறல்வேழம். 110

(இ-ள்.) வலிமை பொருந்திய ஒரு யானையானது தான் வாழுங் கூடத்தைக் கொம்பினால் குத்தி, ஒரு பெரிய மலை போலப் புறப்பட்டு, வீடுகளை அழித்து, மண்டபங்களை எடுத்து வீசி, கால்களினுடைய எற்றுதலினால் முன்னே செல்கின்ற குத்துக் கோற்காரர்களின் தலைகளை இடறி, மதம் பாய்கின்ற யானையினுருவங் கொண்டு வருகின்ற கொடிய யமனைப் பார்க்கிலும் மிகுந்த தோற்றமுடையதாயிருந்தது. -எ-று.

பாசத்தொடை நிகளத்தொடர் பறியத்தறி முறியா
மீசுற்றிய பறவைக்குலம் வெருவத்துணி விலகா
ஊசற்கரம் எதிர்சுற்றிட உரறிப்பரி உழறா
வாசக்கட மழைமுற்பட மதவெற்பெதிர் வருமால். 111

(இ-ள்.) காலில் பூட்டியிருக்கின்ற கயிறுகளும் சங்கிலித் தொடரும் அறுந்து போகும்படிக் கட்டுத் தறியைமுறித்து, மேலே பறக்கின்ற பறவைக் கூட்டங்கள் அஞ்சும்படித் துணிவு கொண்டு தனக்கு முன்னேயுள்ள தடைகளுக்குச் சிறிதும் விலகாமல் ஊசல் போல அசைகின்ற துதிக்கையானது முன்னே சுற்ற, மிகுந்த கோபங்கொண்டு குதிரைகளை ஒன்றோடொன்று மோதும்படித் தள்ளி, வாசனை பொருந்திய மதநீரானது பிரவாகம் போல முன்னே பெருக, மதத்தையுடைய யானையாகிய ஒரு மலையானது எதிரில் வருகின்றது. -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடியுற்றெழும் ஒலியில்திசை இபமுட்கிட அடியில்
படிபுக்கற நெளியப்படர் பவனக்கதி விசையில்
கடிதுற்றடு செயலிற்களிர் கடலிற்படு கடையின்
முடிவிற்கன லெனமுற்சினம் முடுகிக்கடு கியதே. 112

(இ-ள்.) அந்த யானையானது இடி போல வீரிட்ட முழக்கத்தினால் அஷ்டதிக்கிலுமிருக்கின்ற யானைகள் அச்சத்தையடையவும், அடியெடுத்து வைப்பதனால் பூமியானது ஆழ்ந்து நெளியவும், செல்கின்ற வாயுவேகம்போல விரைந்து வந்து; கொல்லுந் தொழிலில் விளங்குகின்ற கடலில் பொருந்திய ஊழித் தீயைப் போல முற்பட்ட கோபத்தோடு நடந்து விரைவாக வந்தது. -எ-று.

மாடுற்றணை இவுளிக்குலம் மறியச்செறி வயிரக்
கோடுற்றிரு பிளவிட்டறு குறைகைக்கொடு முறியச்
சாடுற்றிடு மதில்தெற்றிகள் சரியப்புடை அணிசெற்(று)
ஆடுற்றகல் வெளியுற்ற(து);அவ் வடர்கைக்குல வைரயே. 113

(இ-ள்.) கொலை செய்கின்ற துதிக்கையினையுடைய மலையையொத்த அந்தச் சிரேஷ்டம் பொருந்திய யானையானது தன் சமீபத்தில் வருகின்ற குதிரைக் கூட்டங்கள் இறக்கும்படி வயிரம் பொருந்திய கொம்பினால் இருதுண்டாகச் செய்து, அதில் ஒருகுறையைத் துதிக்கையில் எடுத்துக்கொண்டு மதில்கள் இடியவும், திண்ணைகள் சரியவும் மோதி, இருபுறத்திலுமிருக்கின்ற அலங்காரமாகிய மற்றப் பொருள்களையழித்து அசைந்துகொண்டு வெளிப்புறத்தில் வந்தது. -எ-று.

பாவக்கொடு வினைமுற்றிய படிறுற்றடு கொடியோர்
நாவுக்கர செதிர்முற்கொடு நுணுகிக்கரு வரைபோல்
ஏவிச்செறு பொருகைக்கரி யினைஉய்திட வெருளார்
சேவிற்றிகழ் பவர் பொற்கழல் தெளிவுற்றனர் பெரியோர். 114

(இ-ள்.) பாவமாகிய தீவினையில் முதிர்ந்திருக்கின்ற பொய்யையுடைய கொடியவர்களாகிய சமணர்கள் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு முன்னே, கொல்லுகின்ற துதிக்கையினையுடைய யானையைக் கொண்டு வந்து கரிய மலையைப் போல ஏவ, அதற்கு எமது பெரியோராகிய குருராயர் சிறிதும் பயப்படாமல், ரிஷபவாகனத்தின்மேல் விளங்குகின்றவராகிய சிவபெருமானது அழகிய திருவடிகளைத் தியானஞ் செய்திருந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அண்ணல் அருந்தவ வேந்தர் ஆனைதம் மேல்வரக் கண்டு
விண்ணவர் தம்பெரு மானை விடையுகந் தேறும் பிரானைச்
"சுண்ணவெண் சந்தனச் சாந்து" தொடுத்த திருப்பதி கத்தை
மண்ணுல குய்ய எடுத்து மகிழ்வுட னேபாடு கின்றார். 115

(இ-ள்.) பெருமை பொருந்திய அருமையாகிய தவத்தலைவ ராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் யானையானது தம்மைக் கொலைசெய்ய வருவதைப் பார்த்து, தேவர்களுக்கு நாயகரும், ரிஷப வாகனத்தில்மேல் விரும்பி எழுந்தருளுகின்றவருமாகிய சிவபெருமானைக் குறித்து "சுண்ணவெண்சந்தனச்சாந்து" என்பதை முதலில் தொடுத்துச் செய்யப்பட்ட திருப்பதிகத்தை உலகத்திலுள்ளவர்கள் பிழைக்கும் பொருட்டு மிகுந்த மகிழ்ச்சியோடு பாடுகின்றார். -எ-று.

வஞ்சகர் விட்ட சினப்போர் மதவெங் களிற்றினை நோக்கிச்
"செஞ்சடை நீள்முடிக் கூத்தர் தேவர்க்குந் தேவர் பிரானார்
வெஞ்சுடர் மூவிலைச் சூல வீரட்டர் தம்அடி யோம்நாம்!
அஞ்சுவ தில்லை"என் றென்றே அருந்தமிழ் பாடி யறைந்தார். 116

(இ-ள்.) வஞ்சகர்களாகிய சமணர்களால் அனுப்பப்பட்ட கோபத்தினை யுடைய வெவ்விய மதயானையைத் திருநாவுக்கரசு சுவாமிகள் பார்த்து, சிவந்து நீண்ட சடைமுடியையுடைய ஆனந்தத் தாண்டவமூர்த்தியும், தேவர்களுக்கெல்லாம் முதற்றே வரும், வெவ்விய கிரணங்களையுடைய மூன்று அச்சவடிவாகிய சூலாயுதத்தைத் தாங்கியவருமாகிய ஸ்ரீவீரட்டானேசுவரருக்கு அடியோமாக இருக்கின்றோம்; அதனால், நாம் யாதொன்றுக் கும் அஞ்சுவதில்லை! அஞ்சுவதில்லை! என்று அரிய தமிழ்ப் பதிகத்தைப் பாடியருளினார். -எ-று.

தண்டமிழ் மாலைகள் பாடித் தம்பெரு மான்சர ணாகக்
கொண்ட கருத்தில் இருந்து குலாவிய அன்புறு கொள்கைத்
தொண்டரை முன்வல மாகச் சூழ்ந்தெதிர் தாழ்ந்து நிலத்தில்
எண்டிசை யோர்களுங் காண இறைஞ்சி எழுந்தது வேழம். 117

(இ-ள்.) அந்த யானையானது இனிமையைத் தரத்தக் திருப்பதிகத்தைப்பாடித் தமது ஆண்டவராகிய சிவபெருமானே கதியென்று மனதில் எண்ணி, விளங்குகின்ற பேரன்புபொருந்திய கொள்கையையுடைய திநாவுக்கரசு சுவாமிகளை முன்னே வலமாக வந்து பூமியில் தாழ்ந்து வணங்கி, எட்டுத் திக்கிலுள் ளவர்களுங் காணும்படி எழுந்தது. -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆண்ட அரசை வணங்கி அஞ்சிஅவ் வேழம் பெயரத்
தூண்டிய மேன்மறப் பாகர் தொடக்கி அடர்த்துத் திரித்து
மீண்டும் அதனை அவர்மேல் மிறைசெய்து காட்டிட வீசி
ஈண்டவர் தங்களை யேகொன் றமணர்மேல் ஓடிற் றெதிர்ந்தே. 118

(இ-ள்.) இவ்வாறு அந்த யானையானது திருநாவுக்கரசு சுவாமிகளைத் தொழுது அவரைக் கொல்வதற்குப் பயந்து நீங்கிப்போக, அதன் மேலிருந்து நடத்துகின்ற வலிய பாகர்கள் மறுபடியும் அதனைக்காட்டி அங்குசத்தால் குத்தி அவர்மேல் திருப்பிக் கொல்லவேண்டுமென்னுங் குறிப்பைக்காட்ட, அது அவ்வாறு செய்யாமல் துதிக்கையினால் அவர்களையெடுத்து வீசிக் கொன்றுவிட்டுப் பின் சமணர்கள்மேல் எதிர்ந்தோடியது. -எ-று.

ஓடி அருகர்கள் தம்மை உழறி மிதித்துப் பிளந்து
நாடிப் பலரையுங் கொன்று நகரங் கலங்கி மறுக
நீடிய வேலை கலக்கும் நெடுமந் தரகிரி போல
ஆடிஅவ் யானையும் மன்னற் காகுலம் ஆக்கிய தன்றே. 119

(இ-ள்.) அங்குள்ள சமணர்களைத் தேடித்தேடி ஓடி, அவர்களை ஒருவர்மேலொருவராகத் தள்ளிக் காலினால் மிதித்துக் கிழித்தெறிந்து கொன்று, அந்நகரத்திலுள்ளவர் களெல்லாரும் மனங்கலங்கி வருந்தும்படி, முற்காலத்தில் பெரிய சமுத்திரத்தைக் கலக்கிய நீண்ட மந்தரகிரியைப்போலத் திரிகின்ற அந்தயானையானது அப்பல்லவராசனுக்கு மிகுந்த துன்பத்தை யுண்டாக்கியது. -எ-று.

யானையின் கைமிற் பிழைத்த வினைஅமண் கையர்கள் எல்லாம்
மானம் அழிந்து மயங்கி வருந்திய சிந்தைய ராகித்
தானை நிலமன்னன் தாளில் தனித்தனி வீழ்ந்து புலம்ப
"மேன்மை நெறிவிட்ட வேந்தன் வெகுண்"டினிச் செய்வதென் என்றான். 120

(இ-ள்.) அந்த யானையின் கையில் அகப்படாமல் தப்பி ஓடிப் பிழைத்த வஞ்சகர்களாகிய அச்சமணர்களெல்லாரும் தங்கள் மானமிழந்து மதிமயங்கி வருந்திய மனமுடையவர் களாய், நால்வகைச் சேனைகளையுடைய பூமியை யாளுகின்ற பல்லவராசனது காலில் தனித்தனியே வீழ்ந்து புலம்ப, (சமணர்களின் துர்ப்போதனையினால்) நல்லொழுக்கத்தை யிழந்த அவ்வரசன் மிகுந்த கோபங்கொண்டு இனிச் செய்ய வேண்டியது என்னவென்று கேட்டான். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**"நங்கள் சமயத்தின் நின்றே நாடிய முட்டி நிலையால்
எங்கள் எதிரே றழிய யானையால் இவ்வண்ணம் நின்சீர்ப்
பங்கப் படுத்தவன் போகப் பரிபவந் தீரும் உனக்குப்
பொங்கழல் போக அதன்பின் புகையகன் றாலென" என்றார். 121**

(இ-ள்.) நம்முடைய சமய நூல்களிலிருந்து கற்றுக்கொண்ட மந்திரத்தின் பலத்தினால் நாங்கள் விட்ட யானையைக் கொண்டே எங்களுடைய வல்லமையானது கெடும்படி இவ் வண்ணம் கொல்லச்செய்து, உம்முடைய கீர்த்தியையழித்த அத்தருமசேனன் இறந்து போனால், மிகுதியாகப் பற்றியெரி கின்ற அக்கினியவிந்த பின்பு புகையும் அதனுடன் நீங்குவது போல உமக்குண்டாகிய துன்பமும் நிங்கிப் போமென்று சொன்னார்கள். -எ-று.

**அல்லிருள் அன்னவர் கூற அரும்பெரும் பாவத் தவன்தான்
"தொல்லைச் சமயம் அழித்துத் துயரம் விளைத்தவன் தன்னைச்
சொல்லும் இனிச்செய்வ" தென்னச் சூழ்ச்சி முடிக்குந் தொழிலோர்
"கல்லுடன் பாசம் பிணித்துக் கடலிடைப் பாய்ச்சுவ(து)" என்றார். 122**

(இ-ள்.) இராக்காலத்துண்டாகின்ற இருளையொத்த நிறத்தினையுடைய சமணர்கள் இவ்வாறு சொல்ல, மிகுந்த பெரும் பாவத்தையுடைய பல்லவராசன் பழமையாகிய நமது சைன சமயத்தை யழித்து நமக்கெல்லாம் துன்பத்தையுண்டாக் கிய தருமசேனனைக் கொல்வதற்கு இனிச் செய்ய வேண்டிய தைச் சொல்லுங்களென்று கேட்க, தாங்கள் எண்ணிய வஞ்சக தந்திரத்தை நிறைவேற்றக் கருதியிருக்கின்ற கொடுஞ்செய்கையை யுடைய சமணர்கள் அவனைக் கல்லோடு சேர்த்துக் கயிற்றினால் கட்டிக் கடலில் தள்ளவேண்டுமென்று சொன்னார்கள். -எ-று.

**ஆங்கது கேட்ட அரசன் அவ்வினை மாக்களை நோக்கித்
"தீங்கு புரிந்தவன் தன்னைச் சேமம் உறக்கொடு போகிப்
பாங்கொரு கல்லில் அணைத்துப் பாசம் பிணித்தோர் படகில்
வீங்கொலி வேலையில் எற்றி வீழ்த்துமின்" என்று விடுத்தான். 123**

(இ-ள்.) அச்சமணர்கள் சொல்லிய வார்த்தையைக் கேட்ட பல்லவராசன் அந்தக் கொலைத் தொழிலைச் செய்கின்றவர் களைப் பார்த்து, நம்முடைய மதத்திற்குத் தீங்கு விளைத்தவ னாகிய அத்தருமசேனனைக் காவலோடு அழைத்துக் கொண்டு போய், அங்கு ஒரு கருங்கல்லோடு சேர்த்துக் கயிற்றினால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறுகக்கட்டி ஒருபடகில் ஏற்றி, மிகுந்த ஒலியையுடைய சமுத்திரத்திலே விழும்படி தள்ளி விடுங்களென்று உத்தரவு செய்து அனுப்பினான். -எ-று.

அவ்வினை செய்திடப் போகும் அவருடன் போயருகந்த
வெவ்வினை யாளருஞ் சென்று மேவிட நாவுக்கரசர்
செவ்விய தந்திரு வுள்ளஞ் சிறப்ப அவருடன் சென்றார்;
பவ்வத்தில் மன்னவன் சொன்ன படிமுடித் தார்அப் பதகர். 124

(இ-ள்.) கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலில் தள்ளுதலாகிய கொடுந்தொழிலைச் செய்யும்படிப் போகின்ற கொலைக்காரர் களோடு கொடிய தீவினையையுடையவர்களாகிய சமணர்களும் போய்க் கொண்டிருக்க, திருநாவுக்கரசு சுவாமிகள் செவ்விய தமது திருவுள்ளமானதுபின்னும் பெருமகிழ்ச்சிகொள்ளும்படி அச்சமணர்களோடு எழுந்தருளினார். அப்பொழுது பல்லவராசன் சொன்னபடியே அக்கொலைக்காரராகிய பாவிகள் அவரைக் கடலில்தள்ளினார்கள். -எ-று.

அப்பரி சவ்வினை முற்றி அவரகன் றேகிய பின்னர்
ஒப்பரும் ஆழ்கடல் புக்க உறைப்புடை மெய்த்தொண்டர் தாமும்
"எப்பரி சாயினும் ஆக ஏத்துவன் எந்தையை" என்று
செப்பிய வண்டமிழ் தன்னால் சிவன்அஞ் செழுத்தும் துதிப்பார். 125

(இ-ள்.) அவ்விதமாகவே அக்கொலையாளிகள் கடலில் தள்ளிவிட்டு நீங்கிப் போனபின்பு, ஒப்பில்லாத பெரிய சமுத்திரத்தில் தள்ளிவிடப்பட்ட உறுதியான மெய்யன்பினை யுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் அடியேனுக்கு என்னகதி வந்தாலும் வரட்டும்; யான் எமது ஆண்டவரைத் துதிப்பே னென்று, புகழ்ந்து சொல்லப்பட்ட வளம் பொருந்திய தமிழ்ப் பதிகத்தினால் சிவபெருமானது திருவைந்தெழுத்தையும் துதிக்கின்றவராயினார். -எ-று.

"சொற்றுணை வேதியன்" என்னுந் தூய்மொழி
நற்றமிழ் மாலையா "நமச்சி வாய" என்(று)
அற்றமுன் காக்கும்அஞ் செழுத்தை அன்பொடு
பற்றிய உணர்வினால் பதிகம் பாடினார். 126

(இ-ள்.) "சொற்றுணை வேதியன்" என்னும் பரிசுத்தம் பொருந்திய மொழியை முதலில் எடுத்து, நல்ல தமிழ்மாலையாக நமச்சிவாயவென்று அந்தத்தில் முடித்து, ஆபத்து நேரிட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போது முன்னின்று காத்தருளுகின்ற ஸ்ரீபஞ்சாக்ஷர மந்திரத்தை மெய்யன்போடு பற்றியிருக்கின்ற உணர்ச்சினால் திருப்பதி கத்தைப் பாடியருளினார். -எ-று.

பெருகிய அன்பினர் பிடித்த பெற்றியால்
அருமல ரோன்முதல் அமரர் வாழ்த்துதற்
கரியஅஞ் செழுத்தையும் அரசு போற்றிட
கருநெடுங் கடலினுட் கல்மி தந்ததே. 127

(இ-ள்.) சிறந்த பேரன்பினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் உறுதியாகப் பெற்றிருக்கின்ற அன்பின் தன்மை யினால், அரிய தாமரை மலரில் வாசஞ் செய்கின்ற பிரமன் முதலாகிய தேவர்கள் வாழ்த்துவதற்கு அருமையாகிய ஸ்ரீபஞ்சா க்ஷரத்தைத் திருநாவுக்கரசு சுவாமிகள் துதிசெய்ய, அதனால், கருமையாகிய நீண்டகடலினிடத்தில் கருங்கல்லாது மிதந்தது. -எ-று.

அப்பெருங் கல்லும்அங்(கு) அரசு மேல்கொளத்
தெப்பமாய் மிதத்தலில் செறிந்த பாசமும்
தப்பிய(து) அதன்மிசை இருந்த தாவில்சீர்
மெய்ப்பெருந் தொண்டனார் விளங்கித் தோன்றினார். 128

(இ-ள்.) அந்தப் பெரிய கல்லும் திருநாவுக்கரசு சுவாமிகள் மேற்பக்கத்தில் வீற்றிருக்கும்படிக்குத் தெப்பமாக மிதந்தபடியி னால், அதனிடத்தில் கட்டப்பட்டிருக்கும் கயிறும் அறுந்து போயிற்று; அந்தக் கல்லின்மேல் இருந்த குற்றமற்ற சிறப்பினை யுடைய மெய்த்தொண்டராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் பிரகாசித்துத் தோன்றினார். -எ-று.

இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ? 129

(இ-ள்.) நல்வினை தீவினையாகிய பாசமும், ஆணவமல மாகிய கல்லும் தம்மைக்கட்டியதனால் இடையறாது வருகின்ற பிறவியாகிய கடலில் வீழ்ந்து வருந்துகின்ற மனிதர்கள் அக் கடலைக் கடந்து கரையேறும்படித் திருவருள் செய்கின்ற உண்மை பொருந்திய ஸ்ரீபஞ்சாக்ஷரமானது திருநாவுக்கரசு சுவாமிகளை இந்தக் கடலில் கட்டிவிடப்பட்ட ஒரு கல்லின் மேல் கரையேற்றியதைக் குறித்து ஒரு புதுமையாகச் சொல்ல வேண்டுமோ! -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்நயந் தஞ்செழுத் தேத்தப் பெற்றஅக்
கருணைநா வரசினைத் திரைக்க ரங்களால்
தெருள்தெறி நீர்மையின் சிரத்தில் தாங்கிட
வருணனுஞ் செய்தனன் முன்பு மாதவம். 130

(இ-ள்.) சிவபெருமானுடைய திருவருளை விரும்பி ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைத் துதிக்கப் பெற்ற கருணையே திருவுருவமாகக் கொண்ட திருநாவுக்கரசு சுவாமிகளை அலையாகிய கைகளினால் தெளிந்தமுறையாகிய குணத்தோடு தன் சிரசினாலே தாங்கும்படி வருணபகவானும் முற்காலத்தில் மகத்தாகிய தவத்தைச் செய்தான் போலும். -எ-று.

வாய்ந்தசீர் வருணனே வாக்கின் மன்னரைச்
சேர்ந்தடை கருங்கலே சிவிகை ஆயிட
ஏந்தியே கொண்டெழுந் தருளுவித்தனன்
பூந்திருப் பாதிரிப் புலியூர்ப் பாங்கரில். 131

(இ-ள்.) நிலைபெற்ற சிறப்பினையுடைய வருணபகவான் தானே திருநாவுக்கரசு சுவாமிகளை அவர் சேர்ந்திருந்த கருங்கல்லே ஏறுதற்குரிய சிவிகையாக அலையாகிய கைகளால் தாங்கிக்கொண்டு அழகிய திருப்பாதிரிப்புலியூர் என்னுந் தலத்திற்குச் சமீபத்தில் எழுந்தருளும்படிச் செய்தான். -எ-று.

அத்திருப் பதியினில் அணைந்த அன்பரை
மெய்த்தவக் குழாமெலாம் மேவி ஆர்த்தெழ
எத்திசை யினும் அரஎன்னும் ஓசைபோல்
தத்துநீர்ப் பெருங்கடல் தானம் ஆர்த்ததே. 132

(இ-ள்.) அந்தத் திருப்பாதிரிப்புலியூர் என்னும் க்ஷேத்திரத்தில் வந்து கரையேறிய திருநாவுக்கரசு சுவாமிகளை அங்கு வாசஞ் செய்கின்ற மெய்மையாகிய தவத்தினையுடைய சிவனடியார் கூட்டங்களெல்லாம் மகிழ்ச்சியினால் ஆரவாரித்துச் சூழ்ந்துகொள்ள, நான்கு திக்குகளிலும் அவ்வடியார்கள் கூறுகின்ற அரகரவென்னும் ஓசைபோல மடங்குகின்ற அலைநீரையுடைய பெரிய சமுத்திரமும் முழங்கியது. -எ-று.

தொழுந்தகை நாவினுக் கரசும் தொண்டர்முன்
செழுந்திருப் பாதிரிப் புலியூர்த் திங்கள்வெண்
கொழுந்தணி சடையரைக் கும்பிட் டன்புற
விழுந்தெழுந் தருள்நெறி விளங்கப் பாடுவார். 133

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) யாவராலும் தொழத்தகந்த பெருமையையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் தம்மை வந்து சூழ்ந்த அடியார் திருக்கூட்டங்களோடு வளப்பம்பொருந்திய திருப்பாதிரிப் புலியூரில் வீற்றிருந்தருளும் வெண்மையாகிய இளம்பிறையை தரித்த சடைமுடியினையுடைய சிவபெருமானைக் கும்பிட்டு அன்போடு பூமியில் சாஷ்டாங்கமாக வணங்கி யெழுந்து, அவ்வெம்பெருமானுடைய அருள்மயமாகப் பிரகாசிக்கின்ற சைவசமயநெறியானது விளங்கும்படிப் பாடுகின்றவராயினார். -எ-று.

"ஈன்றாளு மாய்எனக் கெந்தையு மாகி" எனஎடுத்துத்
"தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்அடி யோங்கட்(கு)" என்று
வான்தாழ் புனற்கங்கை வாழ்சடை யானைமற் றெவ்வுயிர்க்கும்
சான்றாம் ஒருவனைத் தண்டமிழ் மாலைகள் சாத்தினரே. 134

(இ-ள்.) திருப்பதிகத்தின் முதலில் "ஈன்றாளுமாயெனக் கெந்தையுமாய்" என்று எடுத்து, "தோன்றாத் துணையாயிருந்த னன் றன்னடியோங்களுக்கு" என்று அத்திருவிருத்தத்தின் இறுதியில் வைத்து, ஆகாயத்தினின்றும் இறங்கிய நீர் மயமாகிய கங்கை நதிதங்கிய சடைமுடியையுடைய சிவபெருமானை, அடியவரல்லாத எல்லாவுயிர்களுக்கும் சீவசாட்சியாயெழுந் தருளியிருந்து அவ்வுயிர்கள் செய்கின்ற எல்லாக் காரியகளையும் பார்த்துக் கொண்டிருக்கும் ஒப்பற்ற எமது ஆண்ட வரைக் குறித்து இனிமைபொருந்திய தமிழ்ப் பதிகமாகிய மாலயைச் சாத்தினார். -எ-று.

மற்றும் இனையன வண்டமிழ் மாலைகள் பாடிவைகி
வெற்றி மழவிடை வீரட்டர் பாதம் மிகநினைவால்
உற்றதொர் காதலின் அங்குநின் றேகிஒன் னார்புரங்கள்
செற்றவர் வாழுந் திருவதி கைப்பதி சென்றடைவார். 135

(இ-ள்.) பின்னும் இத்தன்மையனவாகிய வளம்பொருந்திய தமிழ்ப் பதிகங்களைப் பாடிச் சிலநாள் அங்குவாசஞ்செய்து, வெற்றி பொருந்திய இளமையாகிய ரிஷபத்தை வாகனமாக வுடைய வீரட்டானேசுவரரது திருவடிகளை வணங்குவதற்கு மிகுதியாகத் தம்மனதில் பொருந்திய ஆசையினால் அத்திருப் பாதிரிப்புலியூரில் நின்றும் எழுந்தருளிப் பகைவர்களின் திரிபுரங்களை எரித்த சிவபெமான் வீற்றிருந்தருளும் திருவதிகை யென்னும் ஸ்தலத்தை யடைகின்றவராயினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவர் பிரான்திரு மாணி குழியுந் தினைநகரும்
மேவினர் சென்று விரும்பிய சொன்மலர் கொண்டிறைஞ்சிப்
பூவலர் சோலை மணமடி புல்லப் பொருள்மொழியின்
காவலர் செல்வத் திருக்கெடி லத்தைக் கடந்தணைந்தார். 136

(இ-ள்.) மெய்ப்பொருளமைந்த சொல்லினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருமாணிகுழியையும், திருத்தினைநகரையும் விருப்பங்கொண்டு சென்று, தம்மால் விரும்பப்பட்ட பாமாலையைச் சாத்தி வணங்கி, சோலையில் மலர்ந்திருக்கின்ற மலர்கள் மணமானது தமது பாதங்களில் பொருந்தும்படிச் செல்வம் நிறைந்த திருக்கெடில நதியைக் கடந்து சென்றார். -எ-று.

வெஞ்சமண் குண்டர்கள் செய்வித்த தீய விறைகளெல்லாம்
எஞ்சவென் றேறிய இன்தமிழ் ஈசர் எழுந்தருள
மஞ்சிவர் மாடத் திருவதி கைப்பதி வாணர்எல்லாம்
தஞ்செயல் பொங்கத் தழங்கொலி மங்கலஞ் சாற்றலுற்றார். 137

(இ-ள்.) கொடிய சமணர்களாகிய வஞ்சகர்கள் பல்லவ ராசனைக் கொண்டு செய்வித்த கொடூரமாகிய துன்பங்களெல் லாம் தம்மை வருத்தாமல் நீங்கும்படி அவைகளைவென்று சமுத்திரத்தில் மிதந்து கரையேறிய சிறந்த திருநாவுக்கரசு சுவாமிகள் எழுந்தருளிவருதலைக் கேள்வியுற்று, மேகங்கள் தவழ்கின்ற உப்பரிகைகளையுடைய திருவதிகையென்னும் ஸ்தலத்தில் வாழ்கின்ற சிவனடியார்களெல்லாரும் தங்களுடைய மங்களகரமான செய்கையெல்லாம் விருத்தியாகும்படி, மிகுதியாக முழங்குகின்ற மங்களவாத்தியஞ் செய்தார்கள். -எ-று.

மணிநெடுந் தோரணம் வண்குலைப் பூகம் மடற்கதலி
இணையுற நாட்டி எழுநிலைக் கோபுரந் தெற்றிஎங்கும்
தணிவில் பெருகொளித் தாமங்கள் நாற்றிச்செஞ் சாந்துநீவி
அணிநகர் முன்னை அணிமேல் அணிசெய்(து) அலங்கரித்தார். 138

(இ-ள்.) நவரத்தினங்கள் பதித்த நீண்ட மகரதோரணங்களை யும் வளம் பொருந்திய குலைகளையுடைய கமுகமரங்களையும், மடல்களையுடைய வாழைமரங்களையும் வரிசையாக நாட்டி, ஏழுநிலையையுடைய கோபுரங்களிலும், திண்ணைகளிலும் நீங்குதலில்லாத மிகுந்த ஒளியினையுடைய பொன்னரிமாலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களைத் தொங்கவிட்டு, பூமியைச் சிவந்த சந்தனத்தினால் மெழுக்கிட்டு, அழகிய அந்நகரத்தை முன்னுள்ள அழகிலும் அதிகமாகச் சிறப்புச் செய்து அலங்கரித்தார்கள். -எ-று.

மன்னிய அன்பின் வளநகர் மாந்தர் வயங்கிழையார்
இன்னிய நாதமும் ஏழிசை ஓசையும் எங்கும்விம்மப்
பொன்னியல் சுண்ணமும் பூவும் பொரிகளும் தூவிஎங்கும்
தென்னக ரின்புறஞ் சூழ்ந்தெதிர் கொண்டனர் தொண்டரையே. 139

(இ-ள்.) நிலைபெற்ற அன்பினையுடைய வளம்பொருந்திய அந்நகரத்தில் வாழ்கின்ற மனிதர்களும், விளங்குகின்ற ஆபரணத்தை யணிந்த மாதர்களும் இனிமையாகிய வாத்தியங்களின் முழக்கமும், சப்தசுரங்களினுடைய இசையும் எவ்விடங்களிலும் மிகுந்து ஒலிக்க, அழகிய பொற்சுண்ணங்களையும் மலர்களையும், பொரிகளையும் எவ்விடங்களிலும் இறைத்துப் பழமையாகிய அந்நகரின் புறத்திலே வந்து சூழ்ந்து திருநாவுக்கரசு சுவாமிகளை எதிர்கொண்டார்கள். -எ-று.

தூயவெண் ணீறுதுதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே. 140

(இ-ள்.) பரிசுத்தம் பொருந்திய திருவெண்ணீற்றை உத்தூளனஞ் செய்த அழகிய திருமேனியும், தாழ்வடமும், சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டிருக்கின்ற சிந்தையும், உள்ளிருக்கும் அன்பானது உருகிப் பாய்வதுபோல ஆனந்த பாஷ்பம் பொழிகின்ற கண்களும், இனிய சொற்களமைந்த திருப்பதிகங்களை அருளிச் செய்கின்ற சிவந்தவாயும் உடையவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் அத்திருவதிகைத் திருவீதியினுள்ளே புகுந்தருளினார். -எ-று.

கண்டார்கள் கைதலை மேல்குவித்(து) "இந்தக் கருணைகண்டால்
மிண்டாய செய்கை அமண்கையர் தீங்கு விளைக்கச் செற்றம்
உண்டா யினவண்ணம் எவ்வண்ணம்?" என்றுரைப் பார்கள்பின்னும்
தொண்டாண்டு கொண்ட பிரானைத் தொழுது துதித்தனரே. 141

(இ-ள்.) எமது திருநாவுக்கரசு சுவாமிகளைக் கண்ட அந்நகரவாசிகள் தங்கள் கைகளைத் தலைமேற்குவித்து, இந்தக் கருணைத் திருவுருவத்தைத் தரிசித்தால், கொடுஞ் செய்கையை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யுடைய வஞ்சகர்களாகிய சமணர்கள் இவருக்குத் துன்ப முண்டாக்குவதற்கு ஏதுவாக அவர்களுக்குப் பகையுண்டான காரணம் என்னவென்று வருந்திப் பின்னும் சிவபெருமானால் தொண்டராக அடிமை கொள்ளப்பட்ட அப்பேரருளாளரை வணங்கித் துதித்தார்கள். -எ-று.

இவ்வண்ணம் போல எனைப்பல மாக்கள் இயம்பிரத்த
மெய்வண்ண நீற்றொளி மேவும் குழாங்கள் விரவிச்செல்ல
அவ்வண்ணம் நண்ணிய அன்பரும் வந்தெய்தி அம்பவளச்
செவ்வண்ணர் கோயில் திருவீரட் டானத்தைச் சேர்ந்தனரே. 142

(இ-ள்.) இதுபோல மற்றைய எல்லா மனிதர்களும் புகழ்ந்து துதிக்கத் திருமேனியில் அழகிய விபூதியின் பிரகாசமானது விளங்கப் பெற்ற அடியார் திருக்கூட்டங்கள் தம்மோடு திரண்டுவர, அவ்வாறு எழுந்தருளிவருகின்ற திருநாவுக்கரசு சுவாமிகள் மகிழ்ந்து சென்று, அழகிய பவளம்போலும் சிவந்த நிறத்தினையுடைய சிவபெருமானது திருவீரட்டான மென்னுந் திருக்கோயிலை அடைந்தார். -எ-று.

உம்பர்தங் கோனைஉடைய பிரானைஉள் புக்கிறைஞ்சி
நம்புறும் அன்பின் நயப்புறு காதலி னால்திளைத்தே
எம்பெரு மான்தனை ஏழையேன் நான்பண் டிகழ்ந்த"தென்று
தம்பரி வால்திருத் தாண்டகச் செந்தமிழ் சாற்றிவாழ்ந்தார். 143

(இ-ள்.) தேவர்களுக்கு நாயகரும், எம்மை அடிமையாக வுடையவருமாகிய வீரட்டானேசுவரரைத் திருக்கோயிலி னுள்ளே புகுந்து வணங்கி மிகவும் விரும்புகின்ற அன்பின் மிகுதியினாலுண்டாகிய ஆசையில் முழுகி "எம்பெருமான் றன்னை யேழையேனான்பண்டிகழ்ந்தது" என்று இறுதியில் வைத்துத் தமக்கு உண்டாகிய அன்பினால் ஏழைத்திருத் தாண்டகத் தமிழைப்பாடி மகிழ்வடைந்தார். -எ-று.

அரியயனுக் கரியானை அடியவருக் கெளியானை
விரிபுனல்சூழ் திருவதிகை வீரட்டா னத்(து) அமுதைத்
தெரிவரிய பெருந்தன்மைத் திருநாவுக் கரசுமனம்
பரிவுறுசெந் தமிழ்ப்பாட்டுப் பலபாடிப் பணிசெயுநாள். 144

(இ-ள்.) திருமால் பிரமன் என்னும் இருவர்களாலும் காண்டற்கு அரியவரும், மெய்யடியார்களுக்கு எளியவரும், பரந்த நீரையுடைய கெடிலநதியானது சூழ்ந்த திருவதிகை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீரட்டானத்தில் வீற்றிருந்தருளும் அமிர்தம் போன்றவருமாகிய சிவபெருமானை யாவராலும் அறிந்துரைப்பதற்கரிய மகிமையை யுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் மனதிற்கு அன்பை விளைக் கின்ற செவ்விய தமிழ்ப்பாடல்களை அநேகமாகப் பாடித் திருப்பணிசெய்து கொண்டிருக்கும் நாளில். -எ-று.

புல்லறிவிற் சமணர்க்காப் பொல்லாங்கு புரிந்தொழுகும்
பல்லவனும் தன்னுடைய பழவினைப்பா சம்பறிய
அல்லல்ஒழிந் தங்கெய்தி ஆண்டஅர சினைப்பணிந்து
வல்லமணர் தமைநீத்து மழவிடையோன் தாளடைந்தான். 145

(இ-ள்.) அற்பமாகிய அறிவினையுடைய சமணர்களின் துர்ப்போதனைக்கு இசைந்து பொல்லாங்கான செய்கைகளைச் செய்து கொண்டிருந்த பல்லவராசனும் தன்னையடைந்திருந்த தீவினையாகிய பாசம் ஒழியுங்காலம் சமீபித்தபடியால் பிறவித்துன்பத்தினின்றும் நீங்கிக் கொடியவர்களாகிய சமணர்களையொழித்து அத்திருவதிகையையமைத்து எம்மை அடிமையாகவுடைய திருநாவுக்கரசு சுவாமிகளை வணங்கிச் சிவபெருமானுடைய திருவடிகளைத் துணையாகச் சேர்ந்தான். -எ-று.

வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனும் திருவதிகை நகரின்கண் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்தில்அமண் பள்ளியொடு பாழிகளும்
கூடிஇடித் துக்கொணர்ந்து குணபரவீச் சரம்எடுத்தான். 146

(இ-ள்.) மோக்ஷநெறியானது இப்படிப்பட்டதென்று அறிந்துகொள்ளாத சமணர்களின் துர்ப்போதனையைப் பொய்யென்று ஒழித்து, சைவசமயமே உண்மையான மார்க்க மென்று அறிந்துகொண்ட பல்லவராசனும் திருவதிகையில் சிவபெருமானுக்குப் பாடலிபுத்திரத்தில் சமணர்களுக்காகக் கட்டப்பட்டிருந்த மடங்களையும், கோயில்களையும் ஒருங்குசேர இடித்துக் கொண்டுவந்து, குணபரவீச்சரமென்னும் ஆலயத் தைக் கட்டினான். -எ-று.

இந்நாளில் திருப்பணிகள் செய்கின்ற இன்றமிழ்க்கு
மன்னான வாகிசத் திருமுனியும் மதிச்சடைமேல்
பன்னாகம் அணிந்தவர்தம் பதிபலவுஞ் சென்றி[illegible]
சொன்னாமத் தமிழ்புனைந்து கொண்டுசெ[illegible]ன [illegible]டர்ந்தெழுவார். 147

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அவ்வாறிருக்கும் நாள்களில் உழவாரத்திருத்தொண்டு செய்கின்ற இனிய தமிழ்த் தலைவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் சந்திரனையணிந்த சடைமுடியின்மேல் சர்ப்பங்களைத் தரித்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் பலஸ்தலங்களுக்கும் போய் வணங்கிப் புகழ்ந்து சொல்லப்பட்ட திருநாமமாகிய தமிழ்ப்பதிகங்களைப் பாடித் திருத்தொண்டு செய்யும்படித் திருவுள்ளங்கொண்டு புறப்படுவதற்கு யத்தனப்பட்டார். -எ-று.

திருவதிகைப் பதிமருங்கு திருவெண்ணெய் நல்லூரும்
அருளுதிரு ஆமாத்தூர் திருக்கோவ லூர்முதலா
மருவுதிருப் பதிபிறவும் வணங்கிவளர்த் தமிழ்பாடிப்
பெருகுவிருப் புடன்விடையார் மகிழ்பெண்ணாகடம் அணைந்தார். 148

(இ-ள்.) திருவதிகைக்குச் சமீபத்திலிருக்கின்ற வெண்ணெய் நல்லூரும், அருளைத்தருகின்ற திருவாமாத்தூரும், திருக்கோவிலூரும் முதலாகப் பொருந்திய பல திருப்பதிகளையும் வணங்கி இனிய தமிழ்ப்பதிகம்பாடி, மிகுந்த விருப்பத்தோடும் ரிஷப வாகனத்தையுடைய சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருப் பெண்ணாகடமென்னும் ஸ்தலத்தை யடைந்தருளினார். -எ-று.

கார்வளரும் மாடங்கள் கலந்தமறை ஒலி வளர்க்குஞ்
சீருடைஅந் தணர்வாழுஞ் செழும்பதியின் அகத்தெய்தி
வார்சடையார் மன்னுதிருத் தூங்கானை மாடத்தைப்
பார்பரவுந் திருமுனிவர் பணிந்தேத்திப் பரவினார். 149

(இ-ள்.) மேகங்கள் தவழ்கின்ற மாளிகைகளில் இசை பொருந்திய வேதங்களின் ஓசையையுண்டாக்குகின்ற சிறப்பினையுடைய வேதியர்கள் வாழ்கின்ற வளம் பொருந்திய திருப் பெண்ணாகடமென்னும் ஸ்தலத்தையடைந்து, நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருத்தூங்கானைமாடமென்னும் திருக்கோயிலை உலகத்தார் வணங்கத் தக்க சிறப்பினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் சாஷ்டாங்கமாக வணங்கி அஞ்சலி செய்து துதித்தார். -எ-று.

"புன்னெறியாம் அமண்சமயத் தொடக்குண்டு போந்தவுடல்
தன்னுடனே உயிர்வாழத் தரியேன்நான்; தரிப்பதனுக்(கு)
என்னுடைய நாயக!நின் இலச்சினையிட் டருள்" என்று
பன்னுசெழுந் தமிழ்மாலை முன்னின்று பாடுவார். 150

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்:) இழிந்தமார்க்கமாகிய சமண சமயச் சார்பில் கட்டுப்பட்டு வருத்த முற்றிருந்த இத்தேகத்துடனே உயிர் வாழ்வதற்குச் சிறிதும் பொறுக்கமாட்டேன்; ஆதலால், அடியேன் இவ்வுடலோடு கூடி உயிர் வாழ்ந்திருப்பதற்கு, எனது ஆண்டவரே! தேவரீருடைய இடபமுத்திரையையும், சூல முத்திரையையும் அடியேன் மேற்பொறித் தருளவேண்டு மென்று, யாவருந் துதிக்கத்தக்க செவ்விய திருப்பதிகத்தைச் சந்நிதிக்குமுன்னே நின்று பாடுவாராயினார். -எ-று.

பொன்னார்ந்த திருவடிக்கென் விண்ணப்பம்" என்றெடுத்து
முன்னாகி எப்பொருட்கும் முடிவாகி நின்றானைத்
தன்னாகத் துமைபாகங் கொண்டானைச் சங்கரனை
நன்னாமத் திருவிருத்தம் நலஞ்சிறக்கப் பாடுதலும். 151

(இ-ள்.) "பொன்னார் திருவடிக்கொன்றுண்டு விண்ணப்பம்" என்று முதலில் எடுத்து, எல்லாப் பொருள் களுக்கும் முதலாகியும், முடிவாகியும் நிற்கின்ற பெருமானை, தமது திருமேனியில் உமாதேவியாரை ஒருபாகமாகக் கொண் டருளிய கடவுளை, சங்கரனென்னுந் திருநாமத்தினையுடைய எமது ஆண்டவரைக் குறித்து நன்மைபொருந்திய திருவிருத் தத்தை உலகத்தார் கடைத் தேறும் படியாகப் பாடவும். -எ-று.

நீடுதிருத் தூங்கானை மாடத்து நிலவுகின்ற
ஆடகமே ருச்சிலையான் அருளாலோர் சிவபூதம்
மாடொருவர் அறியாமே வாகீசர் திருத்தோளில்
சேடுயர்மூ விலைச்சூலம் சினவிடையி னுடன்சாத்த. 152

(இ-ள்.) உயர்ந்த திருத்தூங்கானைமாடமென்னும் ஆலயத் தில் வீற்றிருந்தருளும் பொன்மலையை வில்லாகக் கொண் டருளிய சிவபெருமானுடைய திருவருளினால் ஒரு சிவபூதமா னது அருகிலுள்ள ஒருவரும் அறியாமல் திருநாவுக்கரசு சுவாமிகளது இரண்டு திருத்தோள்களிலும் திரட்சியோடு உயர்ந்த மூவிலைச் சூலமுத்திரையையும், ரிஷபமுத்திரையையும் சாத்தியருள. -எ-று.

ஆங்கவர்தம் திருத்தோளில் ஆர்ந்ததிரு இலச்சினையைத்
தாங்கண்டு மனங்களித்துத் தம்பெருமான் அருள்நினைந்து
தூங்கருவி கண்பொழியத் தொழுதுவிழுந் தார்வத்தால்
ஓங்கியசிந் தையாகி "உய்ந்தொழிந்தேன்" எனஎழுந்தார். 153

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அத்திருநாவுக்கரசு சுவாமிகள் தம்முடைய திருத்தோள்களில் பொறிக்கப்பட்ட முத்திரைகளைத் தரிசித்து, மனதில் மகிழ்வடைந்து, தம்மை யாட்கொண்டருளிய சிவபெருமானுடைய திருவருளை நினைந்து, மிகுந்த அருவி யாற்றைப்போல ஆனந்தக் கண்ணீர் பொழியச் சாஷ்டாங்கமாக வணங்கி, அன்பினால் சிறந்த திருவுள்ளமுடையவராய் அடியேன் தீவினையினின்றும் பிழைத்துக் கடைத்தேறினே னென்று எழுந்தார். -எ-று.

தூங்கானை மாடத்துச் சுடர்க்கொழுந்தின் அடிபரவிப்
பாங்காகத் திருத்தொண்டு செய்துபயின் றமருநாள்
பூங்கானின் மணங்கமழும் பொருவில்திரு அரத்துறையும்
தேங்காவின் முகில்உறங்குந் திருமுதுகுன் றமும்பணிந்து. **154**

(இ-ள்.) திருத்தூங்கானை மாடமென்னுந் திருக்கோயிலில் வீற்றிருந்தருளும் சுடர்க்கொழுந்தீசரது திருவடிகளைத் தொழுது நன்றாகத் திருத்தொண்டு செய்து அங்கு வசித்திருக் கும் நாள்களில், பூஞ்சோலையின் வாசனை வீசுகின்ற ஒப்பற்ற திருவரத்துறையையும், தேனையுடைய சோலைகளில் மேகங்கள் உறங்குகின்ற விருத்தாசலத்தையும் அடைந்து தரிசனஞ்செய்து. -எ-று.

வண்டமிழ்மென் மலர்மாலை புனைந்தருளி மருங்குள்ள
தண்டுறைநீர்ப் பதிகளிலுந் தனிவிடையார் மேவியிடம்
கொண்டருளுந் தானங்கள் கும்பிட்டுக் குணதிசைமேல்
புண்டரிகத் தடஞ்சூழ்ந்த நிவாக்கரையே போதுவார். **155**

(இ-ள்.) வளம்பொருந்திய தமிழ்ச்சொற்களாகிய மெல்லிய மலர்களால் தொடுத்த திருப்பதிக மாலையைச் சாத்தி, அத னருகிலுள்ள குளிர்ந்த நீர்த் துறைகளையுடைய திருப்பதிகளி லுஞ் சென்று, ஒப்பற்ற ரிஷபவாகனத்தையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கோயில்களை வணங்கிக் கிழக்குத் திசைநோக்கித் தாமரைத் தடாகங்கள் சூழ்ந்த நிவாநதிக்கரையின் வழியாக வருகின்றவராயினார். -எ-று.

ஆனாத சீர்த்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
வானாறு புடைபரக்கும் மலர்ச்சடையார் அடிவணங்கி
ஊனாலும் உயிராலும் உள்ளபயன் கொளநினைந்து
தேனாம் மலர்ச்சோலைத் திருப்புலியூர் மருங்கணைந்தார். **156**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) கெடாத சிறப்பினையுடைய திருத்தில்லையில் பொன்னம்பலத்தில் திருநடனஞ் செய்தருளுகின்ற ஸ்ரீநடராசப் பெருமானதுதிருவடியை வணங்கி, உடலினாலும் உயிரினாலும் தாம் பெறவேண்டிய பிரயோசனத்தை யடையும்படி நினைத்துத் தேன் பொருந்திய மலர்களையுடைய சோலை சூழ்ந்த ஸ்ரீசிதம்பரத்தின் சமீபத்தில் அடைந்தார். -எ-று.

நாவுக் கரசரும் இருவர்க் கரியவர் நடமா டியதிரு எல்லைப்பால்,
மேவித் தலமுற மெய்யில் தொழுதபின் மேன்மேல் எழுதரும் விரைவோடும்,
காவிற் களிமயில் மகிழ்வுற் றெதிரெதிர் ஆடக் கடிகமழ் கமலஞ்சூழ்,
வாவித் தடமலர் வதனம் பொலிவுறு மருதத் தண்பணை வழிவந்தார்.
157

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகளும், பிரம விஷ்ணுக்களுக்கு அரியவராகிய ஸ்ரீநடராசப் பெருமான் திருநடனஞ் செய்தருளு கின்ற திருத்தில்லைத்திருவெல்லையை யடைந்து தேகம் பூமியிற்பொருந்தும்படி விழுந்து வணங்கினபின்பு, மேலும் மேலும் அதிகரிக்கின்ற பேரன்போடும், சோலைகளில் வாழும் களிப்பினையுடைய மயில்கள் மகிழ்வடைந்து ஒன்றினோ டொன்று எதிரெதிராக நின்று நடிக்க, வாசனை வீசுகின்ற தாமரை மலர்கள் பொருந்திய தடாகங்கள் அம்மலராகிய முகத்தினால் மகிழ்ச்சியடைகின்ற மருத நிலத்தின் குளிர்ந்த வயல்களின் வாயாக வந்தார். -எ-று.

முருகிற் செறிஇதழ் முளரிப் படுகரில் முதுமே திகள்புது மலர்மேயும்,
அருகிற் செறிவன மெனமிக் குயர்கழை அளவிற் பெருகிடை வளர்இக்குப்,
பெருகிப் புடைமுதிர் தரளஞ் சொரிவன பெரியோ ரவர்திரு வடிவைக்கண்(டு),
உருகிப் பரிவுறு புனல்கண் பொழிவன எனமுன் புளவுள வயலெங்கும்.
158

(இ-ள்.) முதிர்ந்த எருமைகள் புதிய மலர்களை மேய்வதற் கிடமாய்த் தேனையும் நெருங்கிய இதழ்களையுமுடைய தாமரைத் தடாகங்களினருகில், நெருங்கிய காடு போல மிகவும் உயர்ந்திருக்கின்ற மூங்கில்களினளவாக உயர்ந்து வளர்ந்திருக் கின்ற கரும்புகள் கணுக்களில் தோன்றி முதிர்ந்த முத்துக்களைச் சொரிக்கின்றன; அவை, எமது பரமாசாரியாகிய திருநாவுக்கரசு சுவாமிகளின் திருவுருவத்தைப் பார்த்து மனமுருகி அன்பாலுறு கின்ற நீரைக் கண்களில் நின்றும் பொழிவனபோல வளம் பொருந்திய வயலிடங்களெங்கும் இருந்தன. -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறிவிற் பெரியவர் அயல்நெற் பணைவயல் அவையிற் படும் வகை அணைகின்றார்,
"பிறவிப் பகைநெறி விடுவீர் இருவினை பெருகித் தொடர்பிணி உறுபாசம்,
பறிவுற் றிடஅணை யுமின்" என் றிருபுடை பயில்சூழ் சினைமிசை குயில்கூவும்,
செறிவிற் பலதரு நிலையிற் பொலிவுறு திருநந் தனவனம் எதிர்கண்டார்.

159

(இ-ள்.) அறிவிற் சிறந்தவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் அயலிலுள்ள நெல்விளையும் வயல்கள் பின்னிடும்படி வருகின்றார்; ஆதலால், தமது பிறவிக்குக் காரணமாயிருக்கின்ற பாவநெறிகளை யொழிக்கவேண்டுமென்னுங் கருத்தினை யுடையவர்களே! நீங்கள் நல்வினை தீவினையென்னும் இருவினைகளும் அதிகப்பட்டுச் சங்கிலிபோலப் பிணிக்கப்பட்ட பாசமானது நீங்கும்படி இத்திருப்பதியை அடையுங்களென்று இரண்டு பக்கங்களிலுஞ் சூழ்ந்த கிளைகளிலிருந்து குயில்கள் கூவுகின்ற நெருக்கமாகிய பல மரங்களின் நிலையினால் விளங்குகின்ற திருநந்தனவனத்தைத் தமக்கு எதிராகக் கண்டார். -எ-று.

அவர்முன் பணிவொடு தொழுதங் கணைவுற அணிகொம் பரின்மிசை அருகெங்கும்,
"தவமுன் புரிதலில் வருதொண் டெனுநிலை தலைநின் றுயர்தமிழ் இறையோராம்,
இவர்தந் திருவடி அதுகண் டதிசயம்" எனவந் ததிர் "அர கர" என்றே,
சிவமுன் பயில்மொழி பகர்கின் றனவளர் சிறைமென் கிளியொடு சிறுபூவை.

160

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் சோலையைத் தமக்கு எதிரில் கண்டவுடனே வணக்கத்தோடு தொழுது அங்கு நெருங்கிவர, அழகிய அந்தநந்தனவனத்திலுள்ள கொம்பு களின்மேலெல்லாம் வளர்ந்த மெல்லிய சிறகினையுடைய கிளிப்பிள்ளைகளோடு சிறிய நாகணவாய்ப் பறவைகளும், முற்பிறப்பில் தவஞ்செய்திருந்தபடியால் தமக்குக் கிடைத் திருக்கும் அடிமையென்னும் நிலைமையில் முதன்மையாக நின்று சிறப்புற்றிருக்கின்ற திருநாவுக்கரசு சுவாமிகள் என்னும் இப்பெரியோருடைய திருவுருவத்தைக் கண்டு, இஃது ஓர் அற்புதமாயிருக்கின்றதென்று எதிராக வந்து அரகரவென்று சொல்லி, மங்களகரமாக முன்னே பழகிய வாழ்த்து மொழிகளைக் கூறுகின்றன. -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஞ்சொல் திருமறை அவர்முன் பகர்தலும் அவரும் தொழுதுமுன் அளிகூரும்,
நெஞ்சிற் பெருகிய மகிழ்வும் காதலும் நிறையன் பொடும்உரை தடுமாறச்,
செஞ்சொல் திருமறை மொழியந் தணர்பயில் தில்லைத் திருநகர் எல்லைப்பால்,
மஞ்சிற் பொலிநெடு மதில்சூழ் குடதிசை மணிவா யிற்புறம் வந்துற்றார்.

161

(இ-ள்.) அச்சோலையிலுள்ள கிளிகளும், நாகணவாய்ப் பறவைகளும் அழகியவார்த்தையினால் தாம் பழகிய வேதவாக்கியங்களைத் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு முன்னே ஓதினவளவில், அவரும் தொழுது, முன்னமே திருவருள் நிறைந்த மனதினிடமாக மிகுந்த சந்தோஷமும், பெருவிருப்பமுமுள்ள முறைமையான அன்போடு, செல்லும் வார்த்தைகள் குழறும்படி சொல்லிய சொற்களமைந்த சிறந்தவேதங்களையோதும் தில்லை வாழந்தணர்கள் வாழ்ந்திருக்கின்ற தில்லைமாநகரத்தின் எல்லையினுட்புறத்தில் மேகங்களோடு விளங்குகின்ற நீண்டமதில்சூழ்ந்த மேற்றிசைக் கோபுரத்தின் அழகிய திருவாசலை வந்து சேர்ந்தருளினார். -எ-று.

அல்லற் பவம்அற அருளுந் தவமுதல் அடியார் எதிர்கொள அவரோடும்,
மல்லற் புனல்கமழ் மாடே வாயிலின் வழிபுக் கெதிர்தொழு தணைவுற்றார்,
கல்வித் துறைபல வருமா மறைமுதல் கரைகண் டுடையவர் கழல்பேணும்,
செல்வக் குடிநிறை நல்வைப் பிடைவளர் சிவமே நிலவிய திருவீதி.

162

(இ-ள்.) தம்மையடைந்தவர்களின் பிறவித் துன்பம் நீங்கும்படித் திருவருள் செய்யும் தவமுதல்வராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் அடியார்கள் தம்மை எதிர்கொண்டு வந்து காண, அவர்களோடு வளம்பொருந்திய நீர்தங்கிய அகழியை அருகிலுடைய மதில் வாசலின் வழியாகப் புகுந்து, அருமையாகிய சிறந்த வேதமுதலாகிய பலகலையும் நன்றாக வுணர்ந்து எம்மையடிமையாகவுடைய சிவபெருமானது திருவடிகளை விரும்புகின்ற செல்வம் பொருந்திய தில்லைமூவாயிரவர்கள் நிறைந்து வாசஞ்செய்யும், நல்ல தில்லைமாநகரத்தில் சிவமணம் வீசுகின்ற திருவீதியைத் தமக்கு எதிரேகண்டு தொழுது அடைந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நவமின் சுடர்மணி நெடுமா லையுநறு மலர்மா லையுநிறை திருவீதிப்
புவனங் களின்முதல் இமையோர் தடமுடி பொருதுந் தியமணி போகட்டிப்,
பவனன் பணிசெய வருணன் புனல்கொடு பணிமா றவும்அவை பழுதாமென்(று),
எவருந் தொழுதெழும் அடியார் திருவல கிடுவார் குளிர்புனல் விடுவார்கள். 163

(இ-ள்.) மின்னலைப்போல விளங்குகின்ற நீண்ட நவரத்தின மாலைகளும், நல்ல மணம் வீசுகின்ற மலர்மாலைகளும் நிறையத் தூக்கியிருக்கின்ற திருவீதியில் பலபுவனங்களிலுமிருக்கின்ற முதன்மையாகிய தேவர்களுடைய இரத்தினமிழைத்த கிரீடங்கள் ஒன்றோடொன்று தாக்கியதனால் சிதறிக்கிடக்கின்ற இரத்தினங்களை ஒதுக்கி வாயுபகவான் திருவலகிடவும், வருணதேவன் நீரைத்தெளித்துத் திருப்பணி செய்யவும் அவைகளிரண்டும் தகுதியுள்ளனவாயிருக்கவில்லை யென்று, யாவராலும் வணங்குதற்குரிய சிவனடியார்கள் திருவலகிட்டுக் குளிர்ந்த நீரைக் கொண்டுவந்து தெளிப்பார்கள். -எ-று.

மேலம் பரதலம் நிறையுங் கொடிகளில் விரிவெங் கதிர்நுழை வரிதாகும்,
கோலம் பெருகிய திருவீ தியைமுறை குலவும் பெருமையர் பணிவுற்றே,
ஞாலந் திகழ்திரு மறையின் பெருகொலி நலமார் முனிவர்கள் துதியோடும்,
ஓலம் பெருகிய நிலையேழ் கோபுரம் உறமெய் கொடுதொழு துள்புக்கார். 164

(இ-ள்.) ஆகாயத்தின்மேல் நிறைந்து விளங்குகின்ற கொடியாடைகளில் விரிந்த வெப்பமாகிய சூரிய கிரணங்கள் நுழையக் கூடாமலிருக்கின்ற அழகு பொருந்திய திருவீதியை விளங்குகின்ற பெருமையினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் முறைமையாக வணங்கி, உலகத்தில் பிரசித்தியாக விளங்குகின்ற வேதங்களின் மிகுந்த ஒலியானது நன்மைபொருந்திய முனிவர்கள் செய்யும் தோத்திரவோசையோடும் மிகுந்தொலிக்கின்ற ஏழ்நிலைக் கோபுரத்தை முறையாகப் பணிந்து உள்ளே புகுந்தார். -எ-று.

வளர்பொற் கனமணி திருமா ளிகையினை வலம்வந் தலமரு வரைநில்லா,
அளவிற் பெருகிய ஆர்வத் திடைஎழும் அன்பன் கடல்நிறை உடலெங்கும்,
புளகச் செறிநிரை விரவத் திருமலி பொற்கோ புரமது புகுவார்முன், களனிற்
பொலிவிடம் உடையார் நடநவில் கனகப் பொதுஎதிர் கண்ணுற்றார். 165

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) சிறந்த பொன்மயமாகிய அழகிய திருமாளிகையை வலமாக வந்து சூழ்வதற்குள்ளே அளவில்லாமல் ஆசையினால் அதிகரித்தெழுந்த அன்பாகிய கலானது நிறைந்த திருமேனி முழுமையும் நெருங்கிய மயிர்க்குச் செறிந்து அழகிய பொன் மயமாகிய கோபுரத்தினுள்ளே புகுவதற்கு முன்னே, விஷம் பொருந்திய கண்டத்தினையுடைய சிவபெருமான் திருநடனஞ் செய்கின்ற பொன்னம்பலத்தைத் தமக்கு எதிரில் தரிசனஞ் செய்தருளினார். -எ-று.

நீடுந் திருவுடன் நிகழும் பெருகொளி நிறைஅம் பலம்நினை வுறநேரே,
கூடும் படிவரும் அன்பால் இன்புறு குணமுன் பெறவரு நிலைகூடத்
தேடும் பிரமனும் மாலும் தேவரும் முதலாம் யோனிகள் தெளிவான்றா,
ஆடுங் கழல்புரி அமுதத் திருநடம் ஆரா வகைதொழு தார்கின்றார்.
166

(இ-ள்.) சிறந்த சிவஞானச் செல்வத்தோடு திவ்யதேஜசும் நிறைந்த திருவம்பலத்தைத் தன்கருத்தில் பொருந்தும்படி நேரே தரிசிக்கத் தம்மிடத்துண்டாகிய பேரன்பினால் ஆனந்தபரவச மாகுங் குணத்தைத் தாம்பெறத்தக்க நிலையானது வந்தடைய, முன்னாளில் தேடியறியாத பிரமன், விஷ்ணு, தேவர்கள் முதலாகிய எல்லாச் சிவராசிகளினுடைய வுணர்விற்கு விஷயமாய்த் தூக்கியாடுகின்ற குஞ்சிதபாதத்தால் செய்கின்ற அமிர்தம் போன்ற ஆனந்தத்தாண்டவத்தைத் தம் முள்ளத்தில் தெவிட்டாதவண்ணம் வணங்கி நிறைகின்றவ ரானார். -எ-று.

கையுந் தலைமிசை புனைஅஞ் சலியன; கண்ணும் மொழிமழை ஒழியாதே,
பெய்யுந் தகையன; கரணங் களும்உடன் உருகும் பரிவின; பேறெய்தும்,
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும்; மின்தாழ் சடையோடு நின்றாடும்,
ஐயன் திருநடம் எதிர்கும் பிடும்அவர் ஆர்வம் பெருகுதல் அளவின்றால்.
167

(இ-ள்.) இரண்டுகைகளும் சிரசின்மேல் அஞ்சலியாகக் குவிக்கப்பட்டிருக்கின்றன; கண்களும் பொழிகின்ற ஆனந்தக் கண்ணீர் நீங்காமல் சொரியுந்தன்மையை யுடையன; மனம் - புத்தி - சித்தம் - அகங்காரமென்னும் அந்தக் கரணங்கள் நான்கும் ஒருங்கே உருகத்தக்க அன்பையுடையன; தன்னாலாகிய பயனைப் பெற்ற உடம்பும் பூமியில் விழுவதும் முன்னே எழுவதுமா யிருக்கும்; மின்னலைப் போல விளங்குகின்ற தாழ்ந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சடையுடனே நின்று திருநடனஞ் செய்கின்ற சிவபெருமானது ஆனந்தத்தாண்டவத்தை எதிரே தரிசிக்கின்ற அந்தத் திருநாவுக்கரசு சுவாமிகளுடைய அன்பின் பெருக்கத்திற்கு ஓரளவில்லை. - எ-று.

இத்தன் மையர்பல முறையுந் தொழுதெழ "என்றெய்தினை" எனமன்றாடும்,
அத்தன் திருவருள் பொழியுங் கணையின் அருள்பெற்றிட வரும் ஆனந்தம்,
மெய்த்தன்மையினில் விருத்தத் திருமொழி பாடிப் பின்னையும் மேன்மேலும்,
சித்தம் பெருகிய பரிவால் இன்புறு திருநே ரிசைமொழி பகர்கின்றார்.
168

(இ-ள்.) எமது திருநாவுக்கரசு சுவாமிகள் இத்தன்மையினை யுடையவராய் பலதரமும் வணங்கி எழ, நீ இவ்விடத்திற்கு என்று வந்தாய் என்னுந் திருக்குறிப்போடு கனகசபையில் நிருத்தஞ் செய்தருளுகின்ற ஸ்ரீநாடராசப் பெருமானுடைய அருளைப் பொழிகின்ற கடைக்கண்ணின் கருணையைப் பெறுதலால் வருகின்ற உண்மையாகிய ஆனந்தத்தினால் திருவிருத்தத் திருப்பதிகம்பாடி, பின்னும் மேன்மேலும் திருவுள்ளத்தினின்றும் அதிகரித்தெழுந்த பேரன்பினால் இன்பத்தைத் தருகின்ற திருநேரிசையும் பாடுகின்றார். -எ-று.

"பத்தனாய்ப் பாட மாட்டேன்" என்றுமுன் னெடுத்துப் பண்ணால்
"அத்தா! உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்த வா"றென்(று)
இத்திறம் போற்றி நின்றே இன்றமிழ் மாலை பாடிக்
கைத்திருத் தொண்டு செய்யுங் காதலிற் பணிந்து போந்தார். 169

(இ-ள்.) "பத்தனாய்ப்பாடமாட்டேன்" என்று பண்ணோடு முதலில் எடுத்து "அத்தாவுன்னாடல் காண்பானடியனேன் வந்தவாறே" என்று அச்செய்யுளினிறுதியில் முடித்து இவ்விதமாகத் தொழுது நின்ற, இனிய தமிழ்மாலையாகிய திருநேரிசைத் திருப்பதிகத்தைப் பாடி, உழவாரத் தொண்டு செய்கின்ற விருப்பத்தினால் வணங்கி அக்கனகசபையினின்றும் புறத்தில் வந்தார். -எ-று.

நீடிய மணியின் சோதி நிறைதிரு முன்றின் மாடும்
ஆடுயர் கொடிசூழ் பொற்றோர் அணிதிரு வீதி யுள்ளும்
கூடிய பணிகள் செய்து கும்பிடுந் தொழில ராகிப்
பாடிய புனித வாக்கின் பண்களும் பயிலச் செய்வார். 170

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) சிறந்த இரத்தினங்களின் ஒளிநிறைந்த கனகசபையின் திருமுன்றிலின்புறத்திலும், அசைக்கின்ற உயர்ந்த கொடியாடைகள் கட்டியிருக்கின்ற பொன்மயமாகிய தேர்களினால் அழகு பெற்ற திருவீதிகளிலும் தம்மால் செய்யக் கூடிய திருப்பணிகள் செய்து வணங்குந் தொழிலுடையவராய்த் தம்மால் பாடப்பட்ட பரிசுத்தம் பொருந்திய திருப்பதிகத்தின் பணிகளையும் பொருந்தும்படி செய்து கொண்டு வருவார். -எ-று.

அருட்பெரு மகிழ்ச்சிபொங்க "அன்னம்பா லிக்கும்" என்னும்,
திருக்குறுந் தொகைகள் பாடித்திருவுழ வாரங்கொண்டு,
பெருத்தெழு காதலோடும் பெருந்திருத்தொண்டு செய்து,
விருப்புறு மேனி கண்ணீர் வெண்ணீற்று வண்டலாட. 171

(இ-ள்.) அன்பினால் பேராநந்தமுண்டாக "அன்னம் பாலிக்கும்" என்னும் முதலையுடைய திருக்குறுந்தொகைத் திருப்பதிகம்பாடி அழகிய உழவாரப் படையைக் கையில் கொண்டு, அதிகரித்தெழுந்த ஆசையோடும் பெரியகைத் தொண்டையும் செய்து, யாவரும் விரும்பத்தக்க திருமேனியில் ஆனந்தக் கண்ணீரானது திருவெண்ணீற்றோடு கலந்து வண்டலாட்டயர. -எ-று.

மேவிய பணிகள் செய்து விளங்குநாள் வேட்க ளத்துச்
சேவுயர் கொடியார் தம்மைச் சென்றுமுன் வணங்கிப் பாடிக்
காவியங் கண்டர் மன்னுந் திருக்கழிப் பாலை தன்னில்
நாவினுக் கரசர் சென்று நண்ணினார் மண்ணோர் வாழ. 172

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் தமக்குரிய திருத்தொண்டுகளைச் செய்து கொண்டிருக்கும் நாள்களில், திருவேட்களத்திற்குப் போய் அங்கு வீற்றிருந்தருளும் ரிஷபக் கொடியையுடைய சிவபெருமானைத்தொழுது திருப்பதிகம் பாடி, நீலமலர்போலுங் கரியகண்டத்தையுடைய அவ்வெம் பெருமான் வீற்றிருந்தருளும் திருக்கழிப்பாலையென்னும் ஸ்தலத்திற்கு உலகத்திலுள்ள ஆன்மகோடிகள் கடைத் தேறும்படி போய்ச் சேர்ந்தார். -எ-று.

சினவிடையே றுகைத்தேறும் மணவாள நம்பிகழல் சென்று தாழ்ந்து
"வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே! என்கின்றாள்". என்,
றனையதிருப் பதிகமுடன் அன்புறுவண்டமிழ்பாடி அங்குவைகி,
நினைவரியார்தமைப்போற்றி நீடுதிருப் புலியூரைநினந்து மீள்வார். 173

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) கோபத்தையுடைய ரிஷபத்தை வாகனமாகக் கொண்டருளிய மணவாளநம்பியென்னும் சிவபெருமானுடைய திருவடிகளைச் சென்று வணங்கி, "வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே யென்கின்றாள்" என்று முதலில் எடுத்து அத் திருப்பதிகத்தோடு அன்புபொருந்திய வேறு சில திருப்பதிகங்களையும் பாடி அவ்விடத்தில் சிலநாள் வாசஞ் செய்து நினைப்பதற்கரியவராகிய சிவபெருமானைத் துதித்து உயர்வு பொருந்திய ஸ்ரீசிதம்பரத்தை நினைத்து அவ்விடத்தி னின்றும் திரும்பி வருகின்றவராயினார். -எ-று.

மனைப்படப்பிற் கடந்கொழுந்து வளைசொரியுங் கழிப்பாலை மருங்குநீங்கி,
நலனச்சினைமென் குளிர்ஞாழற் பொழிலூடு வழிக்கொண்டு நண்ணும் போதில்,
"நினைப்பவர்தம் மனக்கோயில் கொண்டருளும் அம்பலத்து நிருத்த னாரைத்,
தினைத்தனையாம் பொழுதுமறந் துய்வனோ" எனப்பாடித் தில்லை சார்ந்தார்.
174

(இ-ள்.) வீடுகளின் பின்புறத்திலுள்ள தோட்டத்தில் சமுத்திரத்தினது அலைகள் சங்குகளை வீசுகின்ற திருக்கழிப் பாலையென்னுந் திருப்பதியினின்றும் நீங்கிக் கிளைகளில் அரும்புகளையுடைய மிருதுவான குளிர்ந்த மணம் வீசுகின்ற சுரபுன்னைச் சோலையின் வழியாக நடந்து வரும்போது, தம்மைத் தியானஞ் செய்கின்ற அடியார்களின் மனதையே திருக்கோயிலாகக் கொண்டெழுந்தருளும் அம்பலக் கூத்தராகிய ஸ்ரீநடராசப் பெருமானை "தினைத்தனைப்பொழுதும் மறந்துய்வனோ" என்னுந் திருப்பதிகம்பாடி ஸ்ரீசிதம்பரத்தை யடைந்தார். -எ-று.

"அரியானை" என்றெடுத்தே அடியவருக் கெளியானை அவர்தஞ் சிந்தை,
பிரியாத பெரியதிருத் தாண்டகச்செந் தமிழ்பாடிப் பிறங்குசோதி,
விரியாநின் றெவ்வுலகும் விளங்கியபொன் னம்பலத்து மேவி ஆடல்,
புரியாநின் றவர்தம்மைப் பணிந்துதமி ழாற்பின்னும் போற்றல் செய்வார்.
175

(இ-ள்.) "அரியானை" என்று முதலில் எடுத்து அடியார் களுக்கு எளிவந்தருளும் பெருங்கருணையை யுடைய சிவபெரு மானைக் குறித்து, அவ்வடியார்களுடைய திருவுள்ளத்தினின் றும் நீங்காத பெரிய திருத்தாண்டகமென்னும் செந்தமிழ்ப் பதிகத்தைப் பாடியருளி, மிகுந்த ஒளியைப் பரப்பி எவ் வுலகங்களிலும் சிறந்து விளங்குகின்ற பொன்னம்பலத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விரும்பி ஆனந்தத் தாண்டவஞ் செய்தருள்கின்ற ஸ்ரீநடராசப் பெருமானைத் தொழுது தமிழ்ப் பதிகத்தால் பின்னும் துதிசெய்தார். -எ-று.

"செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா எறிக்கும்" எனுஞ் சிறந்த வாய்மை,
அஞ்சொல்வளத் தமிழ்மாலை அதிசயமாம் படிபாடி அன்பு சூழ்ந்த,
நெஞ்சுருகப் பொழிபுனல்வார் கண்ணிணையும் பரவிய சொல் நிறைய வாயும்,
தஞ்செயலின் ஒழியாத திருப்பணியும் மாறாது சாரும் நாளில்.

176

(இ-ள்.) "செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலாவெறிக்கும்" என்னும் முதலையுடைய திருப்பதிகமாலையை யாவரும் அதிசயிக்கும்படிப் பாடியருளி, அன்பு பொருந்திய திருவுள்ள மானது உருகுதலினால் ஆனந்தக் கண்ணீர் ஒழுகுகின்ற இரண்டு கண்களும், திருப்பதிகங்களோதுகின்ற சொற்கள் நிறைந்த திருவாயும், தமது செயலினின்றும் இடைவிடாமல் செய்கின்ற உழவாரத் திருத்தொண்டும் தவறாமல் செய்து கொண்டிருக்கும் நாள்களில். -எ-று.

கடையுகத்தில் ஆழியின்மேல் மிதந்ததிருக் கழுமலத்தின் இருந்த செங்கண்,
விடையுகைத்தார் திருவருளால் வெற்பரையன் பாவைதிரு முலைப்பா லோடும்,
அடையநிறை சிவம்பெருக வளர்ஞானம் குழைத்தூட்ட அமுது செய்த,
உடையமறைப் பிள்ளையார் திருவார்த்தை அடியார்கள் உரைப்பக் கேட்டார்.

177

(இ-ள்.) கற்பாந்தத்தில் பெருகும் சமுத்திர வெள்ளத்தின் மேல் தோணியாக மிதந்த சீகாழியென்னும் ஸ்தலத்தில் எழுந் தருளியிருக்கும் சிவந்தக் கண்களையுடைய ரிஷபத்தை வாகன மாகச் செலுத்தும் சிவபெருமானது திருவருளினால், பர்வதராச புத்திரியாகிய உமாதேவியார் தம்முடைய திருமுலைப் பாலுடனே எங்கும் நிறைந்த சிவமயமாக விளங்கி வளர்கின்ற ஞானத்தைக் குழைத்து உண்பிக்க அதனைத் திருவமுது செய்தருளிய திருஞானசம்பந்தப் பிள்ளையாருடைய தெய்வீக மாகிய செய்கைகளை அடியார்கள் சொல்லக் கேள்விப்பட்டார். -எ-று.

ஆழிவிடம் உண்டவரை அம்மைதிருப் பாலமுதம்உண்ட போதே,
ஏழிசைவண் தமிழ்மாலை "இவன்எம்மான்" எனக்காட்டி இயம்பவல்ல,
காழிவரும் பெருந்தகைசீர் கேட்டலுமே அதிசயமாங் காதல்கூர,
வாழியவர் மலர்க்கழல்கள் வணங்குதற்கு மனத்தெழுந்த விருப்பு வாய்ப்ப

178

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருப்பாற்கடலிற்றோன்றிய ஆலகாலவிஷத்தைப் பானம்பண்ணியருளிய சிவபெருமானை, உமாதேவியார் ஊட்டிய திருமுலைப்பாலமுதத்தை யுண்டபொழுதே, இவனே எமது பெருமான் என்று சுட்டிக்காட்டி, சப்தசுரங்களோடு கூடிய வளம்பொருந்திய தமிழ்ப்பதிகத்தை அருளிச் செய்யும் வல்லமையைப் பெற்ற சீகாழியில் திருவவதாரஞ் செய்தருளிய பேரருளாளராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய மகிமையைக் கேட்டபொழுதே அதிசயமாகிய பேரன்பானது அதிகரிக்க, அவரது தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கும் பொருட்டுத் தம்மனதில் ஆசையானது தூண்டு தலால். -எ-று.

அப்பொழுதே அம்பலத்துள் ஆடுகின்ற கழல்வணங்கி அருள்முன் பெற்றுப்,
பொய்ப்பிறவிப் பிணியோட்டுந் திருவீதி புரண்டுவலங் கொண்டு போந்தே,
எப்புவனங் களும்நிறைந்த திருப்பதியின் எல்லையினை, இறைஞ்சி ஏத்திச்,
செப்பரிய பெருமையினார் திருநாரை யூர்பணிந்து பாடிச் செல்வார்.
179

(இ-ள்.) திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைத் தரிசிக்க வேண்டுமென்னும் விருப்பமுண்டானபொழுதே பொன்னம் பலத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற ஸ்ரீநடராசப் பெருமானது திருவடிகளை வணங்கித் திருவருளைப் பெற்று, பொய்யாகிய பிறவிநோயை யோட்டுவதற்குக் கருவியாயிருக் கின்ற திருவீதியில் புரண்டு அங்கப்பிரதக்ஷிணம் வந்து, சர்வலோகத்திலுள்ளவர்களும் நிறைந்திருக்கின்ற ஸ்ரீசிதம்பரத் தின் திருவெல்லையை வணங்கித் துதித்து, சொல்லுதற்கரிய பெருமையினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் திருநாரையூர் என்னும் ஸ்தலத்தை வணங்கித்திருப்பதிகம்பாடி எழுந்தருள் வாராயினார்.-எ-று.

தொண்டர்குழாம் புடைசூழத் தொழுதகரத் தொடுநீறு துதைந்த கோலங்,
கண்டவர்தம் மனங்கசிந்து கரைந்துருகுங் கருணைபுறம் பொழிந்து காட்டத்,
வெண்டிரைவாய்க் கல்மிதப்பில் உகைத்தேறுந் திருநாவுக் கரசர் தாமும்,
வண்தமிழால் எழுதுமறை மொழிந்தபிரான் திருப்புகலி மருங்கு சார்ந்தார்.
180

(இ-ள்.) அடியார் திருக்கூட்டமானது தம்மைச் சூழ்ந்துவர அஞ்சலி செய்யும் திருக்கரத்தோடு திருவெண்ணீறுதரித்த திருக்கோலத்தைத் தரிசித்தவர்களுடைய மனம் இளகிக் கரைந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உருகுதற்கேதுவாகிய திருவுள்ளக் கருணையானது தான் அகத்திலுள்ள நிலையைப் புறத்தில் பொழிந்து யாவர்க்கும் வெளிப்படுத்த, தெளிவாகிய அலைகளையுடைய சமுத்திரத்தில் சமணர்களிட்ட கருங்கல்லாகிய தெப்பத்தில் ஏறிநடத்திய திருநாவுக்கரசு சுவாமிகள் வளம்பொருந்திய தமிழ் மொழியினால் எழுதும் வேதமாகிய தேவாரப் பதிகத்தைப் பாடியருளிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவவதாரஞ் செய்த சீகாழியின் சமீபத்தையடைந்தார். -எ-று.

நீண்டவரை வில்லியார் வெஞ்சூலை மடுத்தருளி நேரே முன்னாள்
ஆண்டஅர செழுந்தருளக் கேட்டருளி ஆளுடைய பிள்ளையாருங்
காண்டகைய பெருவிருப்புக் கைம்மிக்க திருவுள்ளக் கருத்தினோடு
மூண்டஅருள் மனத்தன்பர் புடைசூழ எழுந்தருளி முன்னே வந்தார். 181

(இ-ள்.) உயர்ந்த மகாமேருவை வில்லாகவுடைய சிவபெருமான் முன்னாளில் கொடிய சூலைநோயைக் கொடுத்து தாமே தடுத்தாட்கொள்ளப் பெற்றவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் எழுந்தருளிவரக்கேட்டு, திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் அவரைத் தாம் தரிசிக்க வேண்டுமென்னும் பெரிய ஆசையானது அதிகரித்த திருவுள்ளக்குறிப்போடும் அன்பு பொருந்திய மனத்தினையுடைய அடியார்கள் பக்கத்திலே சூழ எழுந்தருளி அவருக்கு எதிராக வந்தார். -எ-று.

தொழுதணைவுற் றாண்டஅர(சு) அன்புருகத் தொண்டர்குழாத்திடையே சென்று,
பழுதில்பெருங் காதலுடன் அடிபணியப் பணிந்த வர்தங் கரங்கள் பற்றி,
எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி விடைமின்மேல் வருவார் தம்மை,
அழுதழைத்துக் கொண்டவர்தாம் "அப்பரே" எனஅவரும் "அடியேன்" என்றார். 182

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் தொழுது கொண்டே வந்து அன்பானது கசிந்துருகும்படி அடியார் திருக்கூட்டத்தினடுவே சென்று, குற்றமற்ற பேரன்போடு ஆளுடைய பிள்ளையாரது திருவடிகளில் வணங்கவும், ரிஷபவாகனத்தின் மேல் எழுந்தருளி வருகின்றவராகிய சிவபெருமானைத் திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து அழுது அழைத்துத் தமக்குக் காட்சி கொடுக்கப் பெற்றுக் கொண்டவராகிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் எழுதுவதற்கரிய தாமரை மலர் போன்ற தமது திருக்கரங்களால் அவ்வாறு வணங்கிய அவருடைய திருக்கரங்களைப் பிடித்து எடுத்துத் தாமும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஞ்சலி செய்து அப்பரே! என்று திருவாய்மலர்ந்தருள, அதற்கு அத்திருநாவுக்கரசு சுவாமிகள் அடியேன் என்று அருளிச் செய்தார். -எ-று.

அம்பிகைசெம் பொற்கிண்ணத் தமுதஞா னங்கொடுப்ப அழுகை தீர்ந்த,
செம்பவள வாய்ப்பிள்ளை திருநாவுக்கரசரெனச் சிறந்த சீர்த்தி,
எம்பெருமக் களும்இயைந்த கூட்டத்தில் அரனடியார் இன்பம் எய்தி,
உம்பர்களும் போற்றிசைப்பச் சிவம் பெருகும் ஒலிநிறைந்தார் உலகம் எல்லாம். 183

(இ-ள்.) உமாதேவியார்சிவந்த பொற்கிண்ணத்தில் திருமுலைப் பாலோடு ஞானத்தையும் கலந்து ஊட்ட அதனை உண்டு அழுகை நீங்கிய சிவந்த பவளம் போலும் திருவாயினை யுடைய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் என்று சொல்லப்பட்ட மிகுந்த புகழினையுடைய எமது இரண்டு பெருமக்களும் சேர்ந்த திருக்கூட்டத்திலுள்ள சிவனடியார்கள் ஆனந்தத்தை யடைந்து, தேவர்களும் துதிசெய்யும்படி மங்கலகரமான பேரோசையை உலகமெல்லாம் நிறைத்தார்கள். -எ-று.

"பிள்ளையார் கழல்வணங்கப் பெற்றேன்" என் றரசுவப்பப் பெருகு ஞான,
வள்ளலார் வாகீசர் தமைவணங்கப் பெற்றதற்கு மகிழ்ச்சி பொங்க,
உள்ளநிறை காதலினால் ஒருவரொரு வரிற்கலந்த உண்மை யோடும்,
வெள்ளநீர்த் திருத்தோணி வீற்றிருந்தார் கழல் வணங்கும் விருப்பின் மிக்கார். 184

(இ-ள்.) திருஞானசம்பந்தப்பிள்ளையாருடைய திருவடிகளை யான் வணங்கத்தக்க பேறுபெற்றேனென்று திருநாவுக்கரசு சுவாமிகள் மகிழ்ச்சியடையவும், மிகுந்த சிவஞானத்தையுடைய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகளைத் தரிசிக்கப் பெற்றதற்கு மகிழ்ச்சியடையவும், மனதில் நிறைந்த ஆசையின் மிகுதியினால் ஒருவரோடொருவர் கலந்த உண்மையோடும் பிரளயவெள்ளத்தின் நீர்மேல் மிகுந்த திருத்தோணியில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கும் விருப்பத்தில் சிறந்தவரானார்கள். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம் அன்புசெறி கடலுமாம் எனவும் ஓங்கும்,
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற புண்ணியக்கண் இரண்டெனவும் புவனம் உய்ய,
இருட்கடுவுண் டவர் அருளும் உலகம் எல்லாம் ஈன்றாள்தன் திருவருளும் எனவுங் கூடித்,
தெருட்கலைஞானக் கன்றும் அரசுஞ் சென்று செஞ்சடையா னவர்கோயில் சேர்ந்தார் அன்றே.
185

(இ-ள்.) எல்லா வுலகங்களுக்கும் திருவருள் பாலிக்கின்ற ஒப்பற்ற கிருபைக் கடலும், அன்பு நிறைந்த ஓர் கடலும் போலவும், சிறந்த சிவபரம் பொருளை முதன்மையாகக் கொண்ட சைவ சமய நெறியானது தான் பெற்றுக் கொண்ட புண்ணிய சொரூபமாகிய இரண்டு கண்கள் போலவும், உலக முய்யும் பொருட்டுக் கரிய விஷத்தையுண்டருளிய சிவபெருமானுடைய திருவருளும் சர்வலோகங்களையும் பெற்றருளிய உமாதேவியாருடைய திருவருளும் போலவும் ஒருங்கு சேர்ந்து, தெளிவாகிய எல்லாக் கலைஞானங்களையும் ஓதாதுணர்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும் எழுந்தருளிச் சிவந்த சடைமுடியையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கோயிலையடைந்தார்கள். -எ-று.

பண்பயில்வண் டறைசோலை சூழுங் காழிப் பரமர்திருக் கோபுரத்தைப் பணிந்துள் புக்கு,
விண்பணிய ஓங்குபெரு விமானந் தன்னை வலங்கொண்டு தொழுதுவிழுந் தெழுந்த எல்லைச்,
சண்பைவரு பிள்ளையார் "அப்பர் உங்கள் தம்பிரா னாரைநீர் பாடீர்" என்னக்
கண்பயிலும் புனல்பொழிய அரசும் வாய்மைக் கலைபயிலும் மொழிபொழியக் கசிந்துபாடி.
186

(இ-ள்.) பலவகை இராகங்களையும் பயின்ற வண்டுகள் பாடுகின்ற சோலைகள் சூழ்ந்த சீகாழிப்பதியில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய திருக்கோபுரத்தைப் பணிந்து உள்ளே புகுந்து, விண்ணுலகமும் தாழும்படி உயர்ந்திருக்கின்ற பெரிய விமானத்தைப் பிரதக்ஷிணம்வந்து சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்த பொழுது, திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகளைப் பார்த்து அப்பரே! உங்கள் ஆண்டவரை நீர் பாடுவீராகவென்று அருளிச் செய்ய, கண்களினின்றும் ஆனந்த பாஷ்பஞ்சொரிந்த திருநாவுக்கரசு சுவாமிகளும் உண்மையாகிய கலைகளிலுள்ள நல்ல சொற்கள் பொருந்தும்படி மனங்கசிந்து பாடி -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**பெரியபெரு மாட்டியுடன் தோணி மீது பேணிவீற் றிருந்தருளும் பிரான்முன் நின்று,
பரிவுறுசெந் தமிழ்மாலை பத்தியோடும் "பார்கொண்டு மூடி" எனப் பதிகம் போற்றி,
அரியவகை புறம்போந்து பிள்ளை யார்தம் திருமடத்தில் எழுந்தருளி அமுது செய்து,
மருவியநண் புறுகேண்மை அற்றை நாள்போல் வளர்ந்தோங்க உடன்பலநாள் வைகும் நாளில். 187**

(இ-ள்.) பெரிய பிராட்டியாருடனே திருத்தோணியின்மேல் விரும்பி வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய திருமுன்னே நின்று ஆசைமிகுந்த செந்தமிழ்ப் பாமாலையாகிய "பார்கொண்டுமூடி" என்னும் திருப்பதிகத்தைப் பத்தியோடும் பாடித் துதித்து நீங்குதற்கரிய ஆராமையோடு புறத்தே வந்து திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய திருமடத்தி லெழுந்தருளித் திருவமுது செய்து, ஒருவரோடொருவர் கலந்து பெற்ற சினேகமானது இருவருங்கண்ட அந்நாள் போல நாளுக்குநாள் வளர்ந்தேற இருவரும் கலந்து பலநாள் வசிக்கும் நாள்களில். -எ-று.

**அத்தன்மை யினில்அரசும் பிள்ளை யாரும் அளவளா வியமகிழ்ச்சி அளவி லாத,
சித்தநெகிழ்ச் சியினோடு செல்லும் நாளில் திருநாவுக்கரசுதிரு வுள்ளந் தன்னில்,
மைத்தழையும் மணிமிடற்றார் பொன்னி நாட்டு மன்னியதா னங்களெல்லாம் வணங்கிப் போற்ற,
மெய்த்தெழுந்த பெருங்காதல் பிள்ளை யார்க்கு விளம்புதலும் அவருமது மேவி நேர்வார். 188**

(இ-ள்.) அத்தன்மையாகிய திருநாவுக்கரசு சுவாமிகளும், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் ஒருவரோடொருவர் கலந்ததனாலுண்டாகிய சந்தோஷமானது அளவில்லாத மனவுருக்கத்தோடு அதிகரிக்க வாழும் நாள்களில் திருநாவுக்கரசு சுவாமிகள், கரியகண்டத்தினையுடைய சிவபெருமான் வீற்றிருந் தருளும் சோழ நாட்டில் நிலைபெற்றுள்ள திருப்பதிகளை யெல்லாம் வணங்கித் துதிக்கும்படி திருவுள்ளத்தில் உண்மை யாய் உதித்தெழுந்த பெருங்காதலைத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குச் சொல்லவும், அவரும் அதற்கு உடன்படுவா ராயினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**ஆண்டஅர செழுந்தருளக் கோலக் காவை அவரோடுஞ் சென்றிறைஞ்சி அன்புகொண்டு,
மீண்டருளி னார்;அவரும் விடைகொண்டிப்பால் வேதநா யகர்விரும்பும் பதிக ளான,
நீண்டகருப் பறியலூர் புன்கூர் நீடூர் நீடுதிருக் குறுக்கைதிரு நின்றி யூருங், காண்டகைய
நனிபள்ளி முதலா நண்ணிக் கண்ணுதலார் கழல்தொழுது கலந்து செல்வார்.**

189

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் சீகாழியினின்றும் எழுந்தருள, அவரோடும் திருக்கோலக்காவிற்குச் சென்று வணங்கி அன்புடனே திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சீகாழிக்குத் திரும்பியருளினார்; அப்பர்சுவாமிகளும் அவரிடத்தில் விடைபெற்றுக் கொண்டு, பின்பு, வேதங்களுக்கு முதல்வராகிய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் திருப்பதிகளாகிய பெருமைபொருந்திய திருக்கருப்பறியலூர் - திருப்புன்கூர் - திருநீடூர் - சிறந்த திருக்குறுக்கை திருநின்றியூர் - காணத் தகுந்த திருநனிபள்ளி முதலாகிய ஸ்தலங்களையடைந்து ஆங்காங்கு வீற்றிருந்தருளும் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானது திருவடிகளைத் தொழுது அன்போடு கலந்து செல்கின்றவராயினார். -எ-று.

**மேவுபுனற் பொன்னியிரு கரையுஞ் சார்ந்து விடையுயர்த்தார் திருச்செம்பொன் பள்ளி பாடிக்,
காவுயரு மயிலாடு துறைநீள் பொன்னிக் கரைத்துருத்தி வேள்விகுடி எதிர்கொள் பாடி,
பாவுறு செந் தமிழ்மாலை பாடிப் போற்றிப் பரமர்திருப் பதிபலவும் பணிந்து போந்தே,
ஆவுறும்அஞ் சாடுவர் கோடி காவில் அணைந்துபணிந் தாவடுதண் டுறையைச் சார்ந்தார்.**

190

(இ-ள்.) நீர் பெருகி வருகின்ற காவிரிநதியின் இரண்டு பக்கத்திலுஞ் சென்று, ரிஷபக் கொடியையுயர்த்திய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருச்செம்பொன்பள்ளியும், சோலைகள் உயர்ந்ததிருமயிலாடுதுறையும், திருத்துருத்தியும், திருவேள்விக்குடியும், திருவெதிர்கொள்பாடியுமாகிய க்ஷேத்திரங்களுக்குப் போய்ச் சிறப்புப் பொருந்திய செந்தமிழ்ப் பதிகப் பாமாலைகளைப் பாடித் துதித்து, அவ்வெம்பெருமான் எழுந்தருளியிருக்கும் மற்றைத் திருப்பதிகளையும் வணங்கிச் சென்ற, பஞ்சகவ்வியத்தை அபிஷேகங்கொண்டருளும் அக்கடவுளுடைய திருக்கோடிக்காவிற்குப் போய்ப் பணிந்து திருவாவடுதுறையைச் சேர்ந்தருளினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஆவடுதண் டுறையானை அடைந்துய்ந் தேன்" என் றாவில் திருத்தாண்டகமுன் அருளிச்செய்து
மேவுதிருக் குறுந்தொகைநே ரிசையுஞ் சந்த விருத்தங்க ளானவையும் வேறு வேறு,
பாவலர்செந் தமிழ்த் தொடையாற் பள்ளித் தாமம் பலசாத்தி மிக்கெழுந்த பரிவினோடும்,
பூவலயத் தவர்பரவப் பலநாள் தங்கிப் புரிவுறுகைத் திருத்தொண்டு போற்றிச் செய்வார். 191

(இ-ள்.) திருவாவடுதுறையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானை "அடைந்துய்ந்தேன்" என்னும் இறுதியையுடைய ஒப்பற்ற திருத்தாண்டகத் திருப்பதிகம் பாடியருளி, பின் திருக்குறுந்தொகையும், திருநேரிசையும், திருச்சந்தவிருத்தங் களுமாகிய வேறுவேறாகச் செந்தமிழ்ப் பதிகப் பாமாலைகளைச் சாத்தி அதிகரித்தெழுந்த பேரன்போடும் இப்பூவுலகத்தி லுள்ளவர்கள் துதிக்கும்படி அநேகநாள் அவ்விடத்திலேயே வசித்திருந்து உழவாரப் படையைக் கொண்டு செய்யும் கைத்தொண்டினை விரும்பிச் செய்கின்றவராயினார். -எ-று.

எறிபுனல்பொன் மணிசிதறும் திரைநீர்ப் பொன்னி இடைமருதைச் சென்றெய்தி அன்பினோடு,
மறிவிரவு கரத்தாரை வணங்கி வைகி வண்டமிழ்ப்பா மாலைபல மகிழச் சாத்திப்,
பொறியரவம் புனைந்தாரைத் திருநாகேச் சுரத்துப் போற்றிஅருந் தமிழ்மாலை புனைந்து போந்து,
செறிவிரைநன் மலர்ச்சோலைப் பழையா றெய்தித் திருச்சத்தி முற்றத்திற் சென்று சேர்ந்தார். 192

(இ-ள்.) வீசுகின்ற அலைநீரானது பொன்னையும், மணிகளையும் சிதறுகின்ற கரையினையுடைய காவிரிநதியின் அருகிலுள்ள திருவிடைமருதூரை அடைந்து அன்புடனே மானைத் தரித்த கையினையுடைய சிவபெருமானைத் தொழுது அங்குச் சிலநாள் வாசஞ்செய்து, வளம்பொருந்திய பல தமிழ்ப்பதிகமாலைகளை மகிழும்படி சாத்தி, படப்பொறியை யுடைய பாம்பை ஆபரணமாகத் தரித்த அக்கடவுளைத் திருநாகேச்சரமென்னும் ஸ்தலத்திற்சென்று வணங்கி அரிய தமிழ்ப் பதிகமாலையைச் சாத்தி, அவ்விடத்தினின்றும் புறப்பட்டு வாசனைபொருந்திய நல்லமலர்களையுடைய சோலைசூழ்ந்த திருப்பழையாற்றுக்கு வந்து, திருச்சத்திமுற்ற மென்னும் ஸ்தலத்தை யடைந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்று சேர்ந்து திருச்சத்தி முற்றத் திருந்த சிவக்கொழுந்தைக்
குன்றமகள்தன் மனக்காதல் குலவும் பூசை கொண்டருளும்
என்றும் இனிய பெருமானை இறைஞ்சி இயல்பில் திருப்பணிகள்
முன்றில் அணைந்து செய்துதமிழ் மொழிமா லைகளுஞ் சாத்துவார். 193

(இ-ள்.) (திருநாவுக்கரசு சுவாமிகள்) திருச்சத்திமுற்ற மென்னும் ஸ்தலத்தையடைந்து அங்கு வீற்றிருந்தருளும் சிவக்கொழுந்தீசரும், பர்வதராசபுத்திரியாகிய உமாதேவியார் தமது திருவுள்ளத்தில் அன்போடு செய்த பூசையை ஏற்றுக் கொண்டருளியவரும், மெய்யடியார்களுக்கு எக்காலத்தும் இனியராயிருந்து பேரருள் புரிபவருமாகிய சிவபெருமானைத் தொழுது அத்திருக்கோயிலின் திருமுற்றத்திற் சென்று தாம் இயல்பான அன்போடு செய்கின்ற உழவாரத் திருப்பணிகளைச் செய்து, தமிழ்ச் சொற்களாலாகிய திருப்பதிகமாலைகளையும் பாடிச் சாத்துகின்றவராயினார் -எ-று.

“கோவாய் முடுகி” என்றெடுத்துக் ‘கூற்றம் வந்து குமைப்பதன்முன்
பூவா ரடிகள் என்றலைமேல் பொறித்து வைப்பாய்’ எனப்புகன்று
நாவார் பதிகம் பாடுதலும் நாதன் தானும் “நல்லூரில்
வாவா” என்றே அருள்செய்ய வணங்கி மகிழ்ந்து வாகீசர். 194

(இ-ள்.) “கோவாய் முடுகி” என்று முதலில் எடுத்து “கூற்றம் வந்து குமைப்பதன்முன் பூவாரடிகளென்றலைமேற் பொறித் துவைப்பாய்” என்று கூறி, நாவானது நிறைந்த திருப்பதிகம் பாடவும், அதற்குச் சிவபெருமானும் நீ திருநல்லூருக்கு வாவா என்று அசரீரிவாக்காக அருளிச் செய்ய அதனைக் கேட்டுத் திருநாவுக்கரசு சுவாமிகள் பூமியில் சாஷ்டாங்கமாக வணங்கி மகிழ்ச்சியடைந்து. -எ-று.

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
“உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்!” என்றவர்தஞ்
சென்னிமிசை பாதமலர் சூட்டினான் சிவபெருமான். 195

(இ-ள்.) நிலைபெற்ற திருத்தொண்டினையுடைய திருநாவுக் கரசு சுவாமிகள் நன்மை பொருந்திய சிவபெருமானது கட்டளையின் வழியே திருநல்லூருக்கு வந்து சுவாமியை நிலத்தில் சாஷ்டாங்கமாக வணங்கி மகிழ்ந்து எழுந்திருக்கும் பொழுது, சிவபெருமான் (அவரைப் பார்த்து அன்பனே!) உன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனதிலுள்ள எண்ணத்தை முடிக்கின்றோமென்று அவருடைய சிரசின்மேல் தமது தாமரை மலர் போன்ற திருவடிகளைச் சூட்டியருளினார். -எ-று.

"நனைந்தனைய திருவடிஎன் தலைமேல்வைத் தார்"என்று
புனைந்ததிருத் தாண்டகத்தால் போற்றிசைத்துப் புனிதரருள்
நினைந்துருகி விழுந்தெழுந்து நிறைந்துமலர்ந்(து) ஒழியாத
தனம்பெரிதும் பெற்றுவந்த வறியோன்போல் மனந்தழைத்தார். 196

(இ-ள்.) (அப்பொழுது திருநாவுக்கரசு சுவாமிகள்) "நனைந்தனைய திருவடியென் றலைமேல் வைத்தார்" என்று முதற்பாசுரத்தின் ஈற்றடியில் வைத்த திருத்தாண்டகத் திருப்பதிகத்தினால் துதித்து, சிவபெருமானது திருவருளைக் குறித்து நினைந்து மனமுருகிப் பூமியில் விழுந்து வணங்கி யெழுந்து, நிறைந்து விளங்கி ஒழியாத பெருஞ் செல்வத்தைப் பெற்று அதனால் மகிழ்வடைந்த ஒரு தரித்திரன் போல மனத்தில் மகிழ்ச்சியையடைந்தார். -எ-று.

நாவுக்கு மன்னர்திரு நல்லூரில் நம்பர்பால்
மேவுற்ற திருப்பணிகள் மேவுறநா ளுஞ்செய்து
பாவுற்ற தமிழ்மாலை பலபாடிப் பணிந்தேத்தித்
தேவுற்ற திருத்தொண்டு செய்தொழுகிச் செல்லுநாள். 197

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் திருநல்லூரில் வீற்றிருந் தருளும் சிவபெருமானிடத்தில் அன்போடு செய்ய வேண்டிய திருப்பணிகளைத் தமது கருத்துக்கிசைந்தபடி நாள்தோறுஞ் செய்து, பாடலாகப் பொருந்திய பல தமிழ்ப் பதிகங்களைப் பாடி வணங்கித் துதித்துத் தெய்வீகமாகிய திருத்தொண்டுகளைச் செய்து கிரமமாக வருகின்ற நாள்களில். -எ-று.

கருகாவூர் முதலாகக் கண்ணுதலோன் அமர்ந்தருளும்
திருவாரூர் திருப்பாலைத் துறைபிறவுஞ் சென்றிறைஞ்சிப்
பெருகார்வத் திருத்தொண்டு செய்துபெருந் திருநல்லூர்
ஒருகாலும் பிரியாதே உள்ளுருகிப் பணிகின்றார். 198

(இ-ள்.) நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் வீற்றிருந் தருளும் திருக்கருகாவூர் முதலாகத் திருவாரூரையும் திருப் பாலைத் துறையையும் மற்ற ஸ்தலங்களையும் சென்று வணங்கி, நிறைந்த பேரன்போடு கூடிய திருப்பணிகளைச் செய்து, பெருமை பொருந்திய திருநல்லூரை விட்டு ஒருபொழுதும் பிரியாமல் மனங் கசிந்து வணங்குவாராயினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆளுடைய நாயகன்றன் அருள்பெற்றங் ககன்றுபோய்
வாளைபாய் புனற்பழனத் திருப்பழன மருங்கணைந்து
காளவிடம் உண்டிருண்ட கண்டர்பணிக் கலன்பூண்டு
நீளிரவில் ஆடுவார் கழல்வணங்க நேர்பெற்றார். 199

(இ-ள்.) தம்மை அடிமையாகவுடைய சிவபெருமானது திருவருளைப் பெற்று அவ்விடத்தினின்றும் நீங்கி, வாளை மீன்கள் தாவிப் பாய்கின்ற நீர் நிறைந்த வயல்கள் சூழ்ந்த திருப்பழனமென்னும் திருப்பதியை யடைந்து, கரிய விஷத்தை யுண்டு அதனால் இருண்ட கண்டத்தையுடையவராய்ச் சர்ப்பா பரணத்தை யணிந்து நீண்ட அர்த்தயாமத்தில் திருநடனஞ் செய்பவராகிய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கும் படிப் பெற்றுக் கொண்டார். -எ-று.

அப்பதியைச் சூழ்ந்ததிருப் பதியில்அர னார்மகிழும்
ஒப்பரிய தானங்கள் உள்ளுருகிப் பணிந்தணைவார்
மெய்ப்பொருள்தேர் நாவினுக்கு வேந்தர்தாம் மேவினார்
செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளூர் திங்களூர். 200

(இ-ள்.) அந்தத் திருப்பழனமென்னும் ஸ்தலத்தைச் சூழ்ந்திருக்கின்ற பல ஸ்தலங்களிலும் சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் ஒப்பற்ற ஆலயங்களை மனமுருகித் தொழுது செல்கின்ற உண்மைப் பொருளையுணர்ந்த திருநாவுக்கரசு சுவாமிகள் யாவராலும் புகழ்ந்து சொல்லுதற்கரிய சிறப்பினை யுடைய அப்பூதியடிகணாயனார் வாழ்ந்திருக்கும் ஊராகிய திங்களூரையடைந்தார். -எ-று.

அந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகளார்
தந்தனய ருடன்சாலை கூவல்குளந் தருதண்ணீர்ப்
பந்தர்பல ஆண்டஅர செனும்பெயரால் பண்ணினமை
வந்தணைந்த வாகீசர் கேட்டவர்தம் மனைநண்ண. 201

(இ-ள்.) பிராமணர்களில் மேம்பாடு பெற்ற குலத்தினராகிய அப்பூடியடிகணாயனார் தமது புத்திரர்களோடு அன்னசத்திரம்-கிணறு - தடாகம் - தண்ணீர்ப் பந்தல் முதலாகிய பலபொருள் களையும் திருநாவுக்கரசு என்னும் திருப்பெயரால் அமைத் திருக்குந் தன்மையை அவ்விடத்திற்கு எழுந்தருளிய திருநாவுக் கரசு சுவாமிகள் அங்குள்ளவர்கள் சொல்லக்கேட்டு அவ்வப் பூதியடிகணாயனாருடைய திருமனைக்கு எழுந்தருளிவர. -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்றவரும் மனமகிழ்ந்து மனைவியார் மைந்தர்பெருஞ்
சுற்றமுடன் களிகூரத் தொழுதெழுந்து சூழ்ந்துமொழிக்
கொற்றவரை அமுதுசெயக் குறைகொள்வார் இறைகொள்ளப்
பெற்றபெருந் தவத்தொண்டர் திருவுள்ளம் பெறப்பெற்றார். 202

(இ-ள்.) அப்பூதியடிகணாயனாரும் மகிழ்ச்சியையடைந்து தமது மனைவியாரும், புத்திரர்களும், பெரிய சுற்றத்தாரும் களிப்படைய வணங்கி எழுந்து பிரதக்ஷிணஞ் செய்து, திருநாவுக்கரசு சுவாமிகளைத் திருவமுதுசெய்யும்படிப் பிரார்த்தித்து, சிவபெருமானால் அடிமைகொள்ளப் பெற்ற பெருந்தவத்தினையுடைய அப்பர் சுவாமிகள் அதற்கு அங்கீகரிக்கப் பெற்றுக் கொண்டார்கள். -எ-று.

காண்டகைமை இன்றியுமுன் கலந்தபெருங் கேண்மையினார்
பூண்டபெருங் காதலுடன் போனகமுங் கறியமுதும்
வேண்டுவன வெவ்வேறு விதங்கள்பெற விருப்பினால்
ஆண்டஅர சமுதுசெயத் திருவமுதாம் படிஅமைத்து. 203

(இ-ள்.) முன் திருநாவுக்கரசு சுவாமிகளைக் காணாதிருந்தும் அவருடைய மகிமையைக் கேட்டதனாலுண்டாகிய பெரிய நண்பினையுடையவராகிய அப்பூதியடிகணாயனார் பொருந்திய பேரன்போடு திருவமுதும் கறியமுதுமாக வேண்டியவைகளை வெவ்வேறு வகையாயிருக்க விருப்பதோடு திருநாவுக்கரசு சுவாமிகள் உண்டருளும்படித் திருவமுதாகச்சமைத்து. -எ-று.

திருநாவுக் கரசமுது செய்தருள மற்றவர்தம்
பெருநாமஞ் சாத்தியஅப் பிள்ளைதனை அழைத்தன்பு
தருஞானத் திருமறையோர் தண்டலையின் வண்கதலிக்
குருநாளக் குருத்தரிந்து கொண்டுவரத் தனிவிட்டார். 204

(இ-ள்.) அன்பையும் சிவஞானத்தையுமுடைய அப்பூதியடிகணாயனார் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவமுது செய்யும்படி அவரது திருநாமத்தைத் தரித்திருக்கின்ற தமது புத்திரனாகிய மூத்த திருநாவுக்கரசை யழைத்துத் தோட்டத்தில் சென்று வளம்பொருந்திய வாழைமரத்தினுடைய நல்ல நிறத்தோடு கூடிய குருத்தை யறிந்து கொண்டு வரும்படி தனியே அனுப்பினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆங்கவனும் விரைந்தெய்தி அம்மருங்கு தாழாதே
பூங்கதலிக் குருத்தரியப் புகும்அளவில் ஒருநாகம்
தீங்கிழைக்க அதுபேணான் திருஅமுது செய்தருள
ஓங்குகத லிக்குருத்துக் கொண்டொல்லை வந்தணைந்தான். 205

(இ-ள்.) அந்த மூத்த திருநாவுக்கரசு என்னும் புத்திரனும் அவ்விடத்தில் காலதாமசஞ் செய்யாமல் விரைவாகச் சென்று அழகிய வாழைக்குருத்தை அரியத் தொடங்கினபொழுது, ஒரு பாம்பானது அவனைத் தீண்ட, அதை அவன் ஒருபொருளாக மதியாமல் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவமுது செய்யும்படி நீண்ட வாழைக் குருத்தை அரிந்து கொண்டு விரைவில்வந்து சேர்ந்தான். -எ-று.

தீயவிடந் தலைக்கொள்ளத் தெருமந்து செழுங்குருத்தைத்
தாயகரத் தினில்நீட்டித் தளர்ந்துதனைத் தழல்நாகம்
மேயபடி உரைசெய்யான் விழக்கண்டு "கெட்டொழிந்தோம்;
தூயவர்இங் கமுதுசெயத் தொடங்கார்" என் றதுஒளித்தார். 206

(இ-ள்.) கொடிய பாம்பின் விடமானது தலைக் கேறுதலால் மயக்கமடைந்து தான்கொண்டு வந்த செழுமையாகிய வாழைக் குருத்தைத் தன்னுடைய தாயார் கையில் கொடுத்து வருத்தமுற்றுத் தன்னைக் கொடிய விஷத்தினையுடைய பாம்பு தீண்டிய தன்மையைச் சொல்லாமல் பூமியில்விழ, அதனைப் பார்த்து, அப்பூதியடிகணாயனாரும் அவர்மனைவியாரும் ஆகெட்டோம், இதனைத் திருநாவுக்கரசு சுவாமிகள் அறிந்தால் இங்குத் திருவமுது செய்யாரென்று வருந்தி அச்சவத்தை மறைத்து வைத்தார்கள். -எ-று.

தம்புதல்வன் சவமறைத்துத் தடுமாற்றம் இலராகி
"எம்பெருமான்! அமுதுசெய வேண்டும்" என வந்திறைஞ்ச
உம்பர்பிரான் திருத்தொண்டர் உள்ளத்தில் தடுமாற்றம்
நம்பர்திரு வருளாலே அறிந்தருளி நவைதீர்ப்பார். 207

(இ-ள்.) உயிர் நீங்கிக் கிடக்கின்ற தம்முடைய பிள்ளையின் பிணத்தை மறைத்து வைத்துச் சிறிதும் மனவருத்தமில்லாதவர் களாய், எமது பெருமானே! தேவரீர் எழுந்தருளித் திருவமுது செய்தருள வேண்டுமென்று வணங்கினவுடனே, சிவபெருமா னுடைய திருத்தொண்டராகிய, திருநாவுக்கரசு சுவாமிகள் அவர்களுடைய மனதில் பற்றியிருக்கும் புத்திரசோகத்தைச் சிவபெருமானுடைய திருவருளாலறிந்து அதனைத் தீர்க்க வேண்டுமென்னுங் கருத்துடையவராய். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**அன்றவர்கள மறைத்ததனுக் களவிறந்த கருணையராய்க்
கொன்றைநறுஞ் சடையார்தம் கோயிலின்முன் கொணர்வித்தே
"ஒன்றுகொலாம்" எனப்பதிகம் எடுத்துரையான் சீர்பாடப்
பின்றைவிடம் போய்நீங்கிப் பிள்ளையுணர்ந் தெழுந்திருந்தான். 208**

(இ-ள். அப்பொழுது அப்பூதியடிகணாயனாரும் அவரது மனைவியாரும் தம் புத்திரன் இறந்ததைச் சொல்லாமல் மறைத்து வைத்ததற்காக அளவற்ற பெருங்கருணையுடைய வராய் வாசனை பொருந்திய கொன்றைமலர் மாலையைத் தரித்த சடைமுடியையுடைய சிவபெருமானது திருக்கோயிலின் முன்னே அந்தச் சவத்தைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டு "ஒன்றுகொலாம்" என்று திருப்பதிகத்தை முதலில் எடுத்து, நம்மை அடிமையாகவுடைய சிவபெருமானது புகழைப் பாடியருள, பின்பு தலைக்கேறிய விஷமானது இறங்கி அந்த மூர்த்த திருநாவுக்கரசு என்னும் புதல்வன் உயிர் பெற்றெழுந் திருந்தான். -எ-று.

**அருந்தனயன் உயிர்பெற்ற அதுகண்டும் அமுதுசெயா(து)
இருந்ததற்குத் தளர்வெய்தி இடருழந்தார் துயர்நீங்க
வருந்துமவர் மனைப்புகுந்து வாகீசத் திருமுனிவர்
விருந்தமுது செய்தருளி விருப்பினுடன் மேவுநாள். 209**

(இ-ள்.) பாம்பினால் இறந்த தமது அருமையான புத்திரன் மீண்டும் உயிர் பெற்ற தன்மையைக் கண்டும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருவமுது செய்யாமலிருந்ததற்காக மனத்தளர்ச்சி யையடைந்து வருந்துகின்ற அப்பூதியடிகணாயனாரும் அவரது மனைவியாரும் கொண்டிருக்கின்ற துன்பம் நீங்கும்படி அவர் களுடைய திருமனைக்கு எழுந்தருளி அவர்கள் படைத்த விருந்தைத் திருவமுது செய்து விருப்பத்தோடு அங்கு எழுந்தருளியிருக்கும் நாளில். -எ-று.

**திங்களூர் தனில்நின்றும் திருமறையோர் பின்செல்லப்
பைங்கண்விடைத் தனிப்பாகர் திருப்பழனப் பதிபுகுந்து
தங்குபெருங் காதலொடும் தம்பெருமான் கழல்சார்ந்து
பொங்கியஅன் புறவணங்கி முன்னின்று போற்றிசைப்பார். 210**

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் திங்களூரிலிருந்து அப்பூதியடிகள் முதலிய சிறந்த வேதியர்கள் தமக்குப்பின்னேவர, அழகிய கண்களையுடைய ரிஷபத்தை வாகனமாகக் கொண் டருளிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருப்பழனம் என்னும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்தலத்துக்குப் போய் நிலைபெற்ற பேரன்போடு தமது முதல்வராகிய அவ்வெம்பெருமானது திருவடியை யடைந்து அதிகரித்த அன்போடு வணங்கிச் சந்நிதியின் முன்னே நின்று துதிப்பாராயினார். -எ-று.

புடைமாலை மதிக்கண்ணிப் புரிசடையார் பொற்கழற்கீழ்
அடைமாலைச் சீலமுடை அப்பூதி அடிகள்தமை
நடைமாணச் சிறப்பித்து நன்மைபுரி தீந்தமிழின்
தொடைமாலைத் திருப்பதிகச் "சொன்மாலை" பாடினார். 211

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள், ஒருபக்கத்தில் மாலைக் காலத்தில் தோன்றுகின்ற இளம்பிறையாகிய கொன்றை மாலையைத் தரித்த முறுக்கிய சடைமுடியையுடைய சிவபெருமானது அழகிய திருவடிகளில் அடையத்தக்க ஒழுங்காகிய அன்பினையுடைய அப்பூதியடிகணாயனாரை அவரது நல்லொழுக்கத்தின் மேன்மையை யெடுத்துச் சிறப்பித்து நன்மை பொருந்திய மதுரமாகிய தமிழ்ச் சொற்களால் தொடுக்கப்பட்ட மாலையாகிய திருப்பதிகமென்னும் பாமாலையைப் பாடியருளினார். -எ-று.

எழும்பணியும் இளம்பிறையும் அணிந்தவரை எம்மருங்குந்
தொழும்பணிமேற் கொண்டருளித் திருச்சோற்றுத் துறைமுதலாத்
தழும்புறுகேண் மையில்நண்ணித் தானங்கள் பலபாடிச்
செழும்பழனத் திறைகோயில் திருத்தொண்டு செய்திருத்தார். 212

(இ-ள்.) படம்விரித்து எழுகின்ற பாம்பையும், இளம்பிறையையுமணிந்த சிவபெருமானை அவர் வீற்றிருந்தருளும் ஸ்தலங்கள் தோறுஞ் சென்று வணங்குந் திருத்தொண்டையே தலைமையாகக் கொண்டு, அடியார்க் கருள் செய்கின்ற திருச்சோற்றுத் துறை முதலாகிய ஸ்தலங்களைத் தடித்த பேரன்போடு அடைந்து திருப்பதிகம்பாடிச் செழுமை பொருந்திய திருப்பழனத்திலிருக்கும் சிவபெருமானுடைய திருக்கோயிலில் திருத்தொண்டு செய்து கொண்டிருந்தார். -எ-று.

சாலநாள் அங்கமர்ந்து தந்தலைமேல் தாள்வைத்த
ஆலமார் மணிமிடற்றார் அணிமலர்ச்சே வடிநினைந்து
சேலுலாம் புனற்பொன்னித் தென்கரையே றிச்சென்று
கோலநீள் மணிமாடத் திருநல்லூர் குறுகினார். 213

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் நெடுநாள் வரையிலும் அத்திருப்பழனமென்னும் ஸ்தலத்தில் வாசஞ்செய்திருந்து, பின்பு, தம்முடைய தலையின்மேல் ஸ்ரீபாதத்தை வைத்துத் திருவடி தீட்சை செய்தருளிய காளகண்டராகிய சிவபெருமானது அழகிய தாமரை மலர் போலும் சிவந்த திருவடிகளை நினைத்து, சேற்கெண்டைகளுலாவுகின்ற நீரையுடைய காவிரிநதியின் தென்கரை வழியாக நடந்து சென்று, அழகிய மணிகளழுத்திய மாளிகைகளையுடைய திருநல்லூரையடைந்தருளினார். -எ-று.

அங்கணைந்து தம்பெருமான் அடிவணங்கி ஆராது
பொங்கியஅன் பொடுதிளைத்துப் போற்றிசைத்துப் பணிசெயுநாள்
தங்குபெருங் காதலினால் தாமரைமேல் விரிஞ்சனொடு
செங்கண்மால் அறிவரியார் திருவாரூர் தொழநினைந்தார். 214

(இ-ள்.) அத்திருநல்லூரையடைந்து தமது ஆண்டவராகிய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, அடங்காமல் அதிகரித்த பேரன்பினால் சிவானந்த வெள்ளத்தில் முழுகி ஸ்தோத்திரஞ் செய்து திருப்பணி செய்து கொண்டுவரும் நாள்களில், நிலைபெற்ற பேரன்பினால் தாமரை மலரின்மேல் இருக்கும் பிரமனோடு சிவந்த கண்களையுடைய விஷ்ணுவும் அறிதற்கரியவராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருவாரூரை வணங்கும்படி திருவுள்ளங்கொண்டார். -எ-று.

நல்லூரில் நம்பர்அருள் பெற்றுப்போய்ப் பழையாறை
பல்லூர்வெண் தலைக்கரத்தார் பயிலும்இடம் பலபணிந்து
சொல்லூர்வண் தமிழ்பாடி வலஞ்சுழியைத் தொழுதேத்தி
அல்லூர்வெண் பிறையணிந்தார் திருக்குடமூக் கணைந்திறைஞ்சி. 215

(இ-ள்.) திருநல்லூரில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று அவ்விடத்தினின்றும் நீங்கித் திருப்பழையாறை முதலிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பல ஸ்தலங்களுக்கும் போய்த் தொழுது, நல்லசொற்களமைந்த வளம்பொருந்திய தமிழ்ப் பதிகங்களைப் பாடி, திருவலஞ்சுழியை வணங்கித் துதித்து, மாலைக் காலத்தில் தோன்றுகின்ற வெள்ளிய மூன்றாம்பிறையைத் தரித்த கடவுள் வீற்றிருந் தருளும் ஸ்ரீ கும்பகோணமென்னும் ஸ்தலத்தை யடைந்து தொழுது: -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாலூர்தென் திருச்சேறை குடவாயில் நறையூர்சேர்
பாலூரும் இன்மொழியாள் பாகனார் கழல்பரவி
மேலூர்தி விடைக்கொடியார் மேவும் பலபாடிச்
சேலூர்தண் பணைசூழ்ந்த தென்திருவாஞ் சியம்அணைந்தார். 216

(இ-ள்.) திருநாலூர் - அழகிய திருச்சேறை - திருக்குடவாயில்- திருநறையூர் என்னும் ஸ்தலங்களில் வீற்றிருந்தருளும் பால்போலும் இனியவார்த்தையை யுடைய உமாதேவியை இடப்பாகத்திற் கொண்ட சிவபெருமானுடைய திருவடிகளைத் தொழுது, வாகனமாகிய ரிஷபத்தைக் கொடியாகவுடைய அவ்வெம் பெருமான் எழுந்தருளியிருக்கும் பல திருப்பதிகளை யும் வணங்கித் திருப்பதிகம் பாடிச் சேற்கெண்டைகள் உலாவு கின்ற குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த அழகிய திருவாஞ்சியமென்னும் ஸ்தலத்தையடைந்தார். -எ-று.

பெருவாச மலர்ச்சோலைப் பெருவேளூர் பணிந்தேத்தி
முருகாரும் மலர்க்கொன்றை முதல்வனார் பதிபிறவும்
திருவாரும் விளமருடன் சென்றிறைஞ்சி வாகீசர்
மருவாரூர் எரித்தவர்தம் திருவாரூர் வந்தடைந்தார். 217

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் மிகுந்த வாசனை பொருந்திய மலர்களையுடைய சோலைசூழ்ந்த திருப்பெரு வேளூரை வணங்கித் துதித்து, தேன் நிறைந்த கொன்றை மலர் மாலையைத் தரித்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் மற்றைத் திருப்பதிகளையும், செல்வம் நிறைந்த திருவிளமென்னும் ஸ்தலத்தையும் சென்று வணங்கிப் பகைவர்களின் முப்புரங்களை எரித்தருளிய அக்கடவுள் வீற்றிருந்தருளும் திருவாரூருக்கு வந்து சேர்ந்தார். -எ-று.

ஆண்டஅர செழுந்தருள ஆரூரில் அன்பர்கள்தாம்
நீண்டசடை முடியார்பால் நிறைந்தஅருள் பெற்றுடையார்
காண்டகுமா ளிகைமாடங் களின்சிறந்தோங் கிடஎங்கும்
சேண்டிகழ்வீ திகள்பொலியத் திருமலிமங் கலஞ்செய்தார். 218

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூருக்கு எழுந்தருளவும், நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமானிடத் தில் நிறைந்த திருவருளைப் பெற்ற அந்த ஸ்தலத்தில் வாழும் அடியார்கள், காணத் தகுந்த மாளிகைகளும், மாடங்களும் அழகினால் சிறப்புற்றோங்க, எவ்விடத்தும் நீண்ட வீதிகளிலெல் லாம் பிரகாசிப்பதற்கேதுவாக அழகிய மங்கலகரமான அலங்காரஞ் செய்தார்கள். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வல்லமண் குண்டர்தம் மாயை கடந்து மறிகடலில்
கல்லே மிதப்பாகப் போந்தவர் வந்தா ரெனுங்களிப்பால்
எல்லையில் தொண்டர் எயிற்புறஞ் சென்றெதிர் கொண்டபோது
சொல்லின் அரசர் வணங்கித் தொழுதுரை செய்தணைவார். 219

(இ-ள்.) கொடிய துஷ்டர்களாகிய சமணர்கள் செய்த வஞ்சனையினின்று நீங்கி, அலைகள் மடங்குகின்ற சமுத்திரத்தில் சேர்த்துக் கட்டிய கருங்கல்லே தெப்பமாகக் கரையேறி வந்த திருநாவுக்கரசு சுவாமிகள் இங்கு எழுந்தருளினாரென்னும் சந்தோஷத்தினால் அளவற்ற சிவனடியார்கள் மதிலின் புறத்தே வந்து எதிர் கொண்டு வணங்கினபொழுது திருநாவுக்கரசு சுவாமிகள் அவர்களை வணக்கமாகத் தொழுது இவ்வாறு அருளிச் செய்துகொண்டு வருகின்றவராயினார். -எ-று.

"பற்றொன் றிலாவரும் பாதக ராகும் அமணர்தம்பால்
உற்ற பிணியொழிந் துய்யப்போந் தேன்பெற லாவ(து)ஒன்றே?
புற்றிடங் கொண்டான்தன் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணிய"
மென்று, உற்ற உணர்வொடும் ஆரூர்த் திருவீதி உள்ளணைந்தார். 220

(இ-ள்.) உயிர்களிடத்தில் சிறிதும் அன்பில்லாத கொடும்பாதகர்களாகிய சமணர்களிடத்திலகப்பட்டு அடைந்த துன்பத்தினின்றும் நீங்கிக் கடைத்தேறும் பொருட்டு வந்த யான் அடையவேண்டியது ஒன்றுளது; அது யாதென்றால், "புற்றிடங் கொண்டார்த்ந தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம்" என்று திருப்பதிகம் பாடிக்கொண்ட, பரவசப்பட்ட வுணர்ச்சியோடு திருவாரூர்த் திருவீதியினுள்ளே எழுந்தருளியினார்.-எ-று.

சூழுந் திருத்தொண்டர் தம்முடன் தோரண வாயில்நண்ணி
வாழி திருநெடுந் தேவாசிரியன்முன் வந்திறைஞ்சி
ஆழி வரைத்திரு மாளிகை வாயில் அவைபுகுந்து
நீள்சுடர் மாமணிப் புற்றுகந் தாரைநேர் கண்டுகொண்டார். 221

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் தம்மைச் சூழ்ந்து வருகின்ற திருத்தொண்டர்களோடு மகரதோரணங்கள் கட்டியிருக்கும் திருவாயிலையடைந்து அருட்செல்வத்துக்கு இடமாயிருக்கின்ற உயர்ந்த தேவாசிரிய மண்டபத்திற்கு முன்னே வந்து நமஸ்கரித்து, சக்கிரவாளகிரிபோலச் சூழ்ந்திருக்கும் திருமாளிகையின் திருவாசலினுள்ளே புகுந்து, மிகுந்த கிரணங்களை வீசுகின்ற நாகமணிகளையுடைய புற்றையிடமாகக் கொண்டருளிய சிவபெருமானை நேரேவந்து தரிசனஞ் செய்தருளினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***கண்டு தொழுது விழுந்து கரசர ணாதிஅங்கம்
கொண்ட புளகங்க ளாக எழுந்தன்பு கூரக்கண்கள்
தண்டுளி மாரி பொழியத் திருமூலத் தானர்தம்மைப்
புண்டரி கக்கழல் போற்றித் திருத்தாண் டகம்புனைந்து.*** **222**

(இ-ள்.) தரிசித்து வணங்கிக் கைகால் முதலிய அவயவங்க ளெல்லாம் மயிர்க்குச் செறிய, அன்பின் எழுச்சியினால் இரண்டுகண்களும் குளிர்ந்த ஆனந்த பாஷ்பமாகிய மழையைப் பொழிய திருமூலத்தானருடைய தாமரை மலர் போன்ற திருவடிகளைத் துதித்துத் திருத்தாண்டகத் திருப்பதிகம்பாடிச் சாத்தி. -எ-று.

***'காண்ட லேகருத் தாய்நினைந்(து)' என்னுங் கலைப்பதிகம்
தூண்டா விளக்கன்ன சோதிமுன் நின்று துதித்துருகி
ஈண்டு மணிக்கோயில் சூழ வலஞ்செய் திறைஞ்சி அன்பு
பூண்ட மனத்தொடு நீள்திரு வாயிற் புறத்தணைந்தார்.*** **223**

(இ-ள்.) "காண்டலே கருத்தாயின" என்னும் முதலையுடைய சிறந்த திருப்பதிகத்தைத் தூண்டாவிளக்கையொத்த சிவபெருமானுடைய சந்நிதி முன்னே நின்று துதித்து மனமுருகி, பலவகை மணிகளிழைத்திருக்கும் திருக்கோயிலை வலமாகச் சூழ்ந்து வணங்கி அன்பு பொருந்திய திருவுள்ளத்தோடு உயர்ந்த திருவாசலினின்றும் நீங்கிப் புறத்தில் வந்து சேர்ந்தார். -எ-று.

***செய்யமா மணிஒளிசூழ் திருமுன்றில் முன்தேவா சிரியன் சார்ந்து,
"கொய்யுமா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலும் ஆரூ ராரைக்,
கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேன்" என்(று),
எய்தரிய கையறவால் திருப்பதிகம் அருள்செய்தங் கிருந்தார் அன்றே.***
224

(இ-ள்.) சிவந்த மாணிக்கங்களின் ஒளிகள் சூழ்ந்த திருவாசலின் முன்னேயுள்ள தேவாசிரிய மண்டபத்தை யடைந்து "கொய்யுலாமலர்ச் சோலைக் குயில்கூவ மயிலாலு மாரூரரைக் கையினாற்றொழாதே முன்கனியிருக்கக் காய்கவர்ந்தகள் வனேன்" என்று அடைதற்கரிய துயரத்தோடு திருப்பதிகம் பாடியருளி அந்த ஸ்தலத்தில் வாசஞ் செய்திருந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடியும் மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின் மாலைகளுஞ் செம்பொற்றாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும்ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார். 225

(இ-ள்.) மார்பில் வழிந்தோடும்படி பொழிகின்ற மழையைப் போலக் கண்ணீரொழுகுகின்ற திருமேனியும், திருவாயினிடத்தில் மதுரமான மொழிகளால் தொடுக்கப்பட்ட இனிய திருப்பதிகப் பாமாலைகளும், சிவபெருமானுடைய சிவந்த பொன்னடிகளையே ஆதரவாகப் பற்றியிருக்கின்ற திருவுள்ளமும், ஒப்பற்ற உழவாரப்படையும் தாமுமாகி, உலகத்தார் வாழும்படி திருவீதிகளில் உழவாரத் திருத்தொண்டு செய்து வணங்கித் துதித்துச் செல்வாராயினார். -எ-று.

நீடுபுகழ்த் திருவாரூர் நிலவுமணிப் புற்றிடங்கொள் நிருத்தர் தம்மைக்,
கூடியஅன் பொடுகாலங் களில்அணைந்து கும்பிட்டுக் கோதில் வாய்மைப்,
"பாடிளம் பூதத்தினான்" எனும்பதிகம் முதலான பலவும் பாடி,
நாடியஆர் வம்பெருக நைந்துமனங் கரைந்துருகி நயந்து செல்வார். 226

(இ-ள்.) மிகுந்த புகழோங்கிய திருவாரூரில் விளங்குகின்ற நாகரத்தினங்களையுடைய புற்றையிடமாகக் கொண்ட தியாகராசப் பெருமானை நீங்காத பேரன்போடு பூசாகாலங்கள் தோறும் தவறாமல்போய் வணங்கிக் குற்றமற்ற மெய்மையையுடைய "பாடிளம்பூதத்தினான்" என்னும் பதிக முதலாகிய பல திருப்பதிகங்களைப் பாடி, பொருந்திய ஆசை அதிகரிக்க மனமானது நைந்து அதனால் கரைந்துருகி விரும்பிப் போய்க் கொண்டிருப்பார். -எ-று.

நான்மறைநூற் பெருவாய்மை நமிநந்தி அடிகள்திருத் தொண்டின் நன்மைப்,
பான்மைநிலை யால்அவரைப் பரமர்திரு விருத்தத்துள் வைத்துப் பாடித்,
தேன்மருவும் கொன்றையார் திருவாரூர் அரனெறியில் திகழுந் தன்மை,
ஆனதிற மும்போற்றி அணிவீதிப் பணிசெய்தங் கமரும் நாளில். 227

(இ-ள்.) நான்கு வேதங்களிலும் கூறுகின்ற சிறந்த உண்மைப் பொருளை யுணர்ந்த நமிநந்தியடிகணாயனார் செய்யும் மேன்மை பொருந்திய திருத்தொண்டு காரணமாக அவரைத் தாம் சுவாமியைக் குறித்துப் பாடும் திருவிருத்தத்திருப்பதிகத்துள் வைத்துப் பாடி, தேன் பொருந்திய கொன்றை மலர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாலையைத் தரிக்க சிவபெருமான் திருவாரூரில் அரனெறி யென்னும் ஆலயத்தில் வீற்றிருந்தருளும் நிலைமையும் துதித்து, அழகிய திருவீதியில் உழவாரத் திருத்தொண்டு செய்து அங்கு வாசஞ்செய்யும் நாளில். -எ-று.

நீராருஞ் சடைமுடியார் நிலவுதிரு வலிவலமும் நினைந்து சென்று,
வாராரு முலைமங்கை உமைபங்கர் கழல்பணிந்து மகிழ்ந்து பாடிக்
காராருங் கறைக்கண்டர் கீழ்வேளூர் கன்றாப்பூர் கலந்து பாடி
ஆராத காதலினால் திருவாரூர் தனில்மீண்டும் அணைந்தார் அன்றே. 228

(இ-ள்.) கங்கை தங்கிய சடைமுடியையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருவலிவலம் என்னும் ஸ்தலத்தை நினைந்து அவ்விடத்துச் சென்று கச்சணிந்த ஸ்தனங்களையுடைய உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய சிவபெருமானது திருவடிகளை வணங்கி, மகிழ்ந்து திருப்பதிகம்பாடி, காள கண்டத்தையுடைய அவ்வெம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கீழ்வேளூரையும், திருகன்றாப்பூரையும் அடைந்து திருப்பதிகம்பாடி, நீங்காத பேரன்போடு திருவாரூருக்கு மறுபடியும் வந்து சேர்ந்தார். -எ-று.

மேவுதிரு வாதிரைநாள் வீதிவிடங் கப்பெருமாள் பவனி தன்னில்
தேவருடன் முனிவர்கள்முன் சேவிக்கும் அடியார்க ளுடன்சே வித்து
மூவுலகுங் களிகூர வரும்பெருமை முறைமையெலாங் கண்டு போற்றி
நாவினுக்குத் தனியரசர் நயக்குநாள் நம்பர்திரு அருளினாலே. 229

(இ-ள்.) திருவாதிரை நட்சத்திரத்தில் வருகின்ற தியாகராசப் பெருமானுடைய பவனியுற்சவத்தில் தேவர்களும் முனிவர்களு மாகிய இவர்களுக்கு முன்னே நின்று சேவிக்கும் அடியார் களோடு தாமும் வணங்கி, சுவர்க்க மத்திய பாதலமென்னும் மூன்றுலகத்திலுள்ளவர்களும் சந்தோஷிக்கும்படி வருகின்ற பவனிச் சிறப்பையெல்லாம் தரிசித்துத் துதித்து, ஒப்பற்ற திருநாவுக்கரசு சுவாமிகள் மகிழ்ந்திருக்கும் நாள்களில் சிவபெருமானுடைய திருவருளினால். -எ-று.

திருப்புகலூர் அமர்ந்தருளுஞ் சிவபெருமான் சேவடிகள் கும்பிட் டேத்தும்,
விருப்புடைய உள்ளத்து மேவிஎழுங் காதல்புரி வேட்கை கூர,
ஒருப்படுவார் திருவாரூர் ஒருவாறு தொழுதகன்றங் குன்னம் வைத்துப்,
பொருப்பரையன் மடப்பாவை இடப்பாகர் பதிபிறவும் பணிந்து போந்தார். 230

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருப்புகலூரில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கித் துதிக்கவேண்டுமென்னும் அன்பு பொருந்திய மனதில் அதிகரித்தெழுந்த விருப்பமானது தூண்டுதலால் ஒருமைப்பட்ட கருத்தினையுடையவராய்த் திருவாரூரைத் தொழுது, ஒருவகையாக அவ்வூரைவிட்டு நீங்கி, அதனை மனதில் நினைத்துக்கொண்டே, பருவதராசபுத்திரியாகிய உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் பல திருப்பதிகளையும் வணங்கிச் சென்றார். -எ-று.

அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் திருப்புகலி அதன்கண் நின்று
பன்னாகப் பூணணிவார் பயின்றதிருப் பதிபலவும் பணிந்துசெல்வார்
புன்னாக மணங்கமழும் பூம்புகலூர் வந்திறைஞ்சிப் பொருவில் சீர்த்தி
மின்னாரும் புரிமுந்நூல் முருகனார் திருமடத்தில் மேவுங் காலை. 231

(இ-ள்.) அந்தநாளில் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சீகாழியினின்றும் பல சர்ப்பத்தை ஆபரணமாகத் தரித்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் பல திருப்பதிகளையும் தொழுது வருகின்றவராய்ச் சுரபுன்னை மலர்கள் வாசனை வீசுகின்ற திருப்பூம்புகலூருக்கு எழுந்தருளிச் சுவாமியைப் பணிந்து, ஒப்பற்ற புகழையுடைய மின்னல் போல விளங்குகின்ற முப்புரி நூலையணிந்த முருகநாயனாருடைய திருமடத்தில் எழுந்தருளும் பொழுது. -எ-று.

ஆண்டஅர செழுந்தருளி அணியாரூர் மணிப்புற்றில் அமர்ந்து வாழும்,
நீண்டசுடர் மாமணியைக் கும்பிட்டு நீடுதிருப் புகலூர் நோக்கி,
மீண்டருளி னாரென்று கேட்டருளி எதிர்கொள்ளும் விருப்பி னோடும்,
ஈண்டுபெருந் தொண்டர்குழாம் புடைசூழ எழுந்தருளி எதிரே சென்றார். 232

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் எழுந்தருளி அழகிய திருவாரூரின்கண் நாகரத்தினங்கள் பொருந்திய புற்றினிடத்தில் வீற்றிருந்தருளும் பேரொளியையுடைய மாணிக்கம் போன்ற வன்மீகநாதரை வணங்கி, சிறந்த திருப்புகலூரை நோக்கித் திரும்பிவருகின்றாரென்று கேள்விப்பட்டு, அவரைத் தாம் எதிர்கொண்டு காணவேண்டுமென்னும் ஆசையோடு, தம்மை நெருங்கிய பெரிய அடியார் கூட்டங்கள் அருகில் சூழ்ந்துவர எழுந்தருளி அவரை எதிர்கொண்டார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கரண்டமலி தடம்பொய்கைக் காழியர்கோன் எதிரணையுங் காதல் கேட்டு,
வரன்றுமணிப் புனற்புகலூர் நோக்கிவரும் வாகீசர் மகிழ்ந்து வந்தார்;
திரண்டுவருந் திருநீற்றுத் தொண்டர்குழாம் இருதிறமுஞ் சேர்ந்த போதில்,
இரண்டுநில வின்கடல்கள் ஒன்றாகி அணைந்தனபோல் இசைந்த அன்றே.
233

(இ-ள்.) நீர்க்காக்கைகள் கூட்டமாக நெருங்கியிருக்கும் விசாலமாகிய தடாகங்கள் சூழ்ந்த சீகாழியிலுள்ளவர்களுக்குத் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் எதிர் கொண்டு வருகின்றாரென்னும் அன்பான வார்த்தையைக் கேட்டு, மணிகளைவாரிக் கொண்டு பெருகுகின்ற நீரையுடைய திருப்புகலூரை நோக்கி வருகின்ற திருநாவுக்கரசு சுவாமிகள் மகிழ்ந்து வந்தருளினார்; திரளாக வருகின்ற திருவெண்ணீறு தரித்த அடியார் திருக்கூட்டங்கள் இரண்டு பகுதியும் ஒன்றாகச் சேர்ந்த பொழுதில் ஒளிவீசுகின்ற இரண்டு திருப்பாற்கடல்கள் ஒன்றாகச் சேர்ந்த தன்மை போலிருந்தன. -எ-று.

திருநாவுக் கரசர்எதிர் சென்றிறைஞ்சச் சிரபுரத்துத் தெய்வ வாய்மைப்,
பெருஞான சம்பந்தப் பிள்ளையார் எதிர்வணங்கி "அப்பரே! நீர்,
வருநாளில் திருவாரூர் நிகழ்பெருமை வகுத்துரைப்பீர்" என்றுகூற,
அருநாமத் தஞ்செழுத்தும் பயில்வாய்மை அவரும் எதிர் அருளிச் செய்தார்.
234

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் எதிராகப்போய் வணங்கி, சீகாழியில் அவதரித்தருளிய தெய்வத் தன்மை பொருந்திய சிறந்த திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அவருக்கு எதிராகத் தாமும் வணங்கி அப்பரே! நீர் திருவாரூருக்கு எழுந்தருளும் நாளில் அங்கு நடந்த பவனிச் சிறப்பை வகுத்துச் சொல்லு மென்று கேட்க, அரிய திருநாமமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரிக்கின்ற மெய்மையை யுடைய திருநாவுக்கரசு சுவாமிகளும் ஆளுடையபிள்ளை யாருக்கு எதிரே அருளிச் செய்கின்றார். -எ-று.

"சித்தம் நிலாவுந் தென்திரு ஆரூர் நகராளும்
மைத்தழை கண்டர் ஆதிரை நாளின் மகிழ்செல்வம்
இத்தகை மைத்தென் றென்மொழி கேன்?" என் றருள்செய்தார்
முத்து விதான மணிப்பொற் கவரி" மொழிமாலை. 235

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அழகிய திருவாரூரை யரசு செய்கின்ற அடியார் களுள்ளத்தில் வீற்றிருந்தருளும் காளகண்டராகிய சிவபெருமான் திருவாதிரை நட்சத்திரத்தில் பவனி வருகின்ற திருவிழாச் சிறப்பை இப்படிப்பட்டதென்று எவ்வாறு சொல்வேனென்று "முத்துவிதான மணிப் பொற்கவரி" என்னும் முதலையுடைய திருப்பதிக மாலையை அருளிச் செய்தார். -எ-று.

அம்மொழி மாலைச் செந்தமிழ் கேளா அணிசண்பை
மைம்மலர் கண்டத் தண்டர்பிரானார் மகனாரும்
கொய்ம்மலர் வாவித் தென்திரு வாரூர் கும்பிட்டே
உம்முடன் வந்திங் குடன்அமர் வேன்என் றுரைசெய்தார். 236

(இ-ள்.) அந்தச் செந்தமிழ்மொழியாற் செய்யப்பட்ட திருப்பதிகமாலையைக் கேட்டு, அழகிய சீகாழிப்பதியில் அவதரித்தருளிய விஷம் பொருந்திய கண்டத்தினையுடைய சிவபெருமான் திருக்குமாரராகிய திஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் கொய்யத்தகுந்த மலர்களையுடைய தடாகங்கள் சூழ்ந்த அழகிய திருவாரூரைத் தரிசித்து, பின் இத்திருப்புகலூரில் உம்முடன் வந்து இருப்பேனென்று அருளிச் செய்தார். -எ-று.

மாமதில் ஆரூர் மன்னரை அங்கு வணங்கச்செந்
தாமரை யோடைச் சண்பையர் நாதன் தான்ஏக
நாமரு சொல்லின் நாதரும்ஆர்வத் தொடுபுக்கார்
பூமலர் வாசத் தண்பணை சூழும் புகலூரில். 237

(இ-ள்.) பெரிய மதில்கள் சூழ்ந்த திருவாரூரில் வீற்றிருந்தருளும் தியாகராசப் பெருமானை அவ்விடத்திற்போய் வணங்கும்படி செந்தாமரை மலர்களையுடைய ஓடைகள் சூழ்ந்த சீகாழிக்குத்தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் எழுந்தருள, திருநாவுக்கரசு சுவாமிகளும் பூக்கள் மலர்தலால் வாசனை வீசுகின்ற குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப்புகலூருக்கு எழுந்தருளினார். -எ-று.

அத்திரு மூதூர் மேவிய நாவுக் கரசுந்தம்
சித்தம் நிறைந்தே அன்பு தெவிட்டுந் தெளிவெள்ளம்
மொய்த்திழி தாரைக் கண்பொழி நீர்மெய்ம் முழுதாரப்
பைத்தலை நாகப் பூண்அணி வாரைப் பணிவுற்றார். 238

(இ-ள்.) அந்தப் பழமையாகிய திருப்புகலூரை யடைந்தருளிய திருநாவுக்கரசு சுவாமிகளும் அன்பானது தமது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவுள்ளத்தில் நிறைந்து தெவிட்டுகின்ற தெளிவாகிய வெள்ளம்போலத் திரண்டொழுகுகின்ற ஆனந்தக் கண்ணீரானது திருமேனி முழுமையும் பரவி நிறைய, படம்பொருந்திய தலையினையுடைய சர்ப்பத்தை ஆபரணமாகத் தரித்த சிவபெருமானைப் பணிந்தார். -எ-று.

தேவர் பிரானைத் தென்புக லூர்மன் னியதேனைப்
பாவியல் மாலைச் செந்தமிழ் பாடிப் பரிவோடு
மேவிய காலந் தோறும் விருப்பிற் கும்பிட்டே
ஓவுதல் ஓவுந் திருப்பணி செய்தங் குறைகின்றார். ***239***

(இ-ள்.) தேவர்களுக்கு நாயகரும், அழகிய திருப்புகலூரில் வீற்றிருந்தருளும் தேன்போன்றவருமாகிய சிவபெருமானைப் பாக்களால் தொடுக்கப்பட்ட செந்தமிழ்ப் பதிகமாலையை அன்போடு அருளிச் செய்து, பொருந்திய காலங்கள் தோறும் விருப்பத்தோடு வணங்கி, குறைவில்லாத திருப்பணிகளைச் செய்து அங்கு வாசஞ் செய்திருந்தார். -எ-று.

சீர்தரு செங்காட் டங்குடி நீடுந் திருநள்ளா(று)
ஆர்தரு சோலை சூழ்தரு சந்தை அயவந்தி
வார்திகழ் மென்முலை யாளொரு பாகன் திருமருகல்
ஏர்தரும் அன்பால் சென்று வணங்கி இன்புற்றார். ***240***

(இ-ள்.) சிறப்புப் பொருந்திய திருச்செங்காட்டங்குடியும், உயர்ந்த திருநள்ளாறும், பொருந்திய சோலைகள் சூழ்ந்த சாத்தமங்கையிலுள்ள அயவந்தியென்னும் ஆலயமும், கச்சணிந்த மிருதுவான ஸ்தனங்களையுடைய உமாதேவியாரை இடப் பாகத்திலுள்ள சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருமருகலுமாகிய ஸ்தலங்களைச் சிறந்த பேரன்போடுசென்று பணிந்து இன்புற்றிருந்தார். -எ-று.

அப்படிச் சின்னாள் சென்றபின் ஆரூர் நகராளும்
துப்புறழ் வேணிக் கண்ணுத லாரைத் தொழுதிப்பால்
மெய்ப்பொருள் ஞானம் பெற்றவர் வேணு புரத்தெங்கள்
பொற்புரி முந்நூல் மார்பரும் வந்தார் புகலூரில். ***241***

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் அவ்வாறு க்ஷேத்திர யாத்திரை செய்து, திருப்புகலூரில் சிலநாள் எழுந்தருளியிருந்த பின்பு, திருவாரூரை அரசு செய்யும் பவளம் போலுஞ் சிவந்த சடைமுடியையும் நெற்றிக்கண்ணையுமுடைய சிவபெருமானைத் தொழுது, மீண்டு உண்மைஞானத்தைப் பெற்றவரும், சீகாழிப்பதியில்அவதரித்தருளிய பொன்போலும் முபபுரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலையணிந்த மார்பினை யுடையவருமாகிய எமது திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளும் திருப்புகலூருக்கு எழுந்தருளினார். -எ-று.

பிள்ளையார் எழுந்தருளப் பெருவிருப்பால் வாகீசர்
உள்ளமகிழ்ந் தெதிர்கொண்டங் குடன்உறையு நாளின்கண்
வள்ளலார் சிறுத்தொண்டர் மற்றவர்பால் எழுந்தருள
எள்ளருஞ்சீர் நீலநக்கர் தாமும்எழுந் தருளினார். 242

(இ-ள்.) திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருப்புகலூருக்கு எழுந்தருளவும் அதைக்கேட்டுத் திருநாவுக்கரசு சுவாமிகள் மிகுந்த விருப்பத்தோடு மனமகிழ்ந்து எதிர்கொண்டு வந்தழைத்து அந்தஸ்தலத்தில் வாசஞ்செய்யும் நாள்களில், ஈகையிற் சிறந்தவராகிய சிறுத்தொண்டநாயனார் அங்கு எழுந்தருளியிருக்கும் அவ்விருவரிடத்தும் எழுந்தருள, குறைவில்லாத புகழையுடைய திருநீலநகக்க நாயனாரும் அவர்களிடத்தில் வந்தருளினார். -எ-று.

ஆங்கணையும் அவர்களுடன் அப்பதியில் அந்தணராம்
ஓங்குபுகழ் முருகனார் திருமடத்தி லுடனாகப்
பாங்கில்வருஞ் சீரடியார் பலருமுடன் பயில்கேண்மை
நீங்கரிய திருத்தொண்டின் நிலையுணர்ந்து நிகழ்கின்றார். 243

(இ-ள்.) அங்கு எழுந்தருளிய சிறுத் தொண்டர்நாயனார் திருநீலநக்க நாயனார் என்னும் இருவர்களோடு அத்திருப்புகலூரில் வாழும் வேதியராகிய சிறந்த புகழையுடைய முருகநாயனார் திருமடத்தில் ஒருங்கு சேர்ந்து, பாங்காக வருகின்ற சிறப்புப் பொருந்திய அடியார்கள் பலரும் ஒற்றுமைப்பட்டிருக்கின்ற கேண்மையையும், நீங்குதற்கரிய திருத்தொண்டின் நிலைமையையும் விசாரித்துத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் என்னும் மிருவரும் விளங்கியிருந்தார்கள். -எ-று.

திருப்பதிகச் செழுந்தமிழின் திறம்போற்றி மகிழ்வுற்றுப்
பொருப்பரையன் மடப்பாவை இடப்பாகர் பொற்றாளில்
விருப்புடைய திருத்தொண்டர் பெருமையினை விரித்துரைத்தங்
கொருப்படுசிந் தையினார்கள் உடனுறைவின் பயன்பெற்றார். 244

(இ-ள்.) அங்கு அவ்விருவரும் செவ்விய தமிழ்ப் பதிகங்களைப் பாடி மகிழ்ச்சியடைந்து, பர்வதராசபுத்திரியாகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய சிவபெருமானது திருவடிகளில் அன்பு செலுத்துகின்ற மெய்யடியார்களின் பெருமையை விரிவாகப் புகழ்ந்து பேசி, அத்திருமடத்தில் ஒருமைப்பட்ட திருவுள்ளத்தினையுடைய அடியார்கள் தங்களோடு கலந்து மகிழ்ந்திருத்தலாகிய பயனைப் பெற்றார்கள். எ-று.

அந்நாளில் தமக்கேற்ற திருத்தொண்டின் நெறியாற்ற
மின்னார்செஞ் சடைஅண்ணல் மேவுபதி எனைப்பலவும்
முன்னாகச் சென்றேத்தி முதல்வன்தாள் தொழுவதற்குப்
பொன்னாரும் மணிமாடப் பூம்புகலூர் தொழுதகன்றார். ***245***

(இ-ள்.) அவ்விருவரும் அவ்வாறு ஒழுகும் நாள்களில் தங்களுக்கு உரியனவாகிய திருத்தொண்டின் முறைமையைச் செய்யும் பொருட்டு, மின்னல்போலும் விளங்குகின்ற சிவந்த சடைமுடியையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் மற்றத் திருப்பதிகளையும் முன்னே சென்று தொழுது, அவ்வெம் பெருமானுடைய திருவடிகளை வணங்குவதற்குப் பொன்மயமாகிய அழகிய மாளிகைகளையுடைய திருப்பூம்புகலூரைத் தொழுது அவ்விடத்தை விட்டு நீங்கினார்கள். -எ-று.

திருநீல நக்கடிகள் சிறுத்தொண்டர் முருகனார்
பெருநீர்மை அடியார்கள் பிறரும்விடை கொண்டேக
ஒருநீர்மை மனத்துடைய பிள்ளையா ருடன்அரசும்
வருநீர்செஞ் சடைக்கரத்தார் திருஅம்பர் வணங்கினார். ***246***

(இ-ள்.) திருநீலநக்கநாயனாரும், சிறுத் தொண்டநாயனாரும், முருகநாயனாரும், பெருமை பொருந்திய நல்லகுணத்தையுடைய மற்றச் சிவனடியார்களும் விடைபெற்றுக் கொண்டு தங்கள் தங்களிடத்திற்குப் போக, ஒருமைப்பட்ட மனதினையுடைய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும் பெருகுகின்ற கங்கை நதியைச் சிவந்த சடையில் தரித்தவராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருவம்பர் என்னும் ஸ்தலத்தை வணங்கினார்கள். -எ-று.

செங்குமுத மலர்வாவித் திருக்கடவூர் அணைந்தருளிப்
பொங்கியவெங் கூற்றடர்த்த பொன்னடிகள் தொழுதேத்திக்
குங்குலியக் கலயனார் திருமடத்தில் குறைவறுப்ப
அங்கவர்பால் சிவனடியா ருடன்அமுது செய்தார்கள்; ***247***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) செவ்வல்லி மலர்களையுடைய தடாகங்கள் சூழ்ந்த திருக்கடவூரை யடைந்து (மார்க்கண்டேயரைப் பிடிக்கும் பொருட்டுக்) கோபித்து வந்த கொடிய யமனை உதைத்தருளிய சிவபெருமானுடைய அழகிய திருவடிகளை வணங்கித் துதித்து, குங்கிலியக்கலயநாயகனாருடைய திருமடத்தில் அவர் குறைநீங்கும்படி சிவனடியார்களோடு அவ்விருவரும் திருவமுது செய்தார்கள். -எ-று.

சீர்மன்னுந் திருக்கடவூர்த் திருமயா னமும்வணங்கி
ஏர்மன்னும் இன்னிசைப்பாப் பலபாடி இனிதமர்ந்து
கார்மன்னும் கறைக்கண்டர் கழலிணைகள் தொழுதகன்று
தேர்மன்னும் மணிவீதித் திருவாக்கூர் சென்றணைந்தார். 248

(இ-ள்.) நிலைபெற்ற சிறப்பினையுடைய திருக்கடவூர்த் திருமயானத்தையும் வணங்கி, அழகு பொருந்திய இனிய இசையோடு கூடிய பல திருப்பதிகங்களைப் பாடி இனிமையாக எழுந்தருளியிருந்து, கருமை பொருந்திய விஷத்தைக் கண்டத் திலுடைய சிவபெருமானது திருவடிகளைத் தொழுது அவ்விடத்தினின்றும் நீங்கித் தேர்கள் பொருந்திய அழகிய வீதிகளையுடைய திருவாக்கூர் என்னும் ஸ்தலத்தை யடைந்தார்கள். -எ-று.

சார்ந்தார்தம் புகலிடத்தைத் தான்தோன்றி மாடத்துக்
கூர்ந்தார்வம் உறப்பணிந்து கோதில்தமிழ்த் தொடைபுனைந்து
வார்ந்தாடுஞ் சடையார்தம் பதிபலவும் வணங்கியுடன்
சேர்ந்தார்கள் தம்பெருமான் திருவீழி மிழலையினை. 249

(இ-ள்.) தான்தோன்றி மாடமென்னும் திருக்கோயிலில் தம்மைச் சார்ந்த அடியார்களுக்குப் புகலிடமாக வீற்றிருந் தருளும் சிவபெருமானை மிகுந்த பேரன்போடும் வணங்கிக் குற்றமற்ற தமிழ்ப் பதிகத்தைப்பாடி, நீண்டு அசைகின்ற சடைமுடியையுடைய சிவபெருமானது பல திருப்பதிகளையும் சென்று வணங்கி உடனே தமது ஆண்டவர் வீற்றிருந்தருளும் திருவீழிமிழலை என்னும் திருப்பதியை அடைந்தார்கள். -எ-று.

வீழி மிழலை வந்தணைய மேவு நாவுக் கரசினையும்
காழி ஞானப் பிள்ளையையும் கலந்த உள்ளக் காதலினால்
ஆழி வலவன் அறியாத அடியார் அடியார் அவர்களுடன்
வாழி மறையோர் எதிர்கொண்டு வணங்க வணங்கி உள்புக்கார். 250

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருவீழிமிழலைக்கு எழுந்தருளும் திருநாவுக்கரசு சுவாமிகளையும், சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளையும் தம் மனத்தில் பொருந்திய அன்போடு, சக்கரத்தையுடைய விஷ்ணுவினால் அறியப்படாத திருவடிவையுடைய சிவபெருமானது அடியார்களும் அவ்வூரிலுள்ள பிராமணர்களும் எதிர்கொண்டு வந்து வணங்க, இவ்விருவரும் அவர்களை வணங்கி ஊரினுள்ளே புகுந்தார்கள். -எ-று.

மாட வீதி அலங்கரித்து மறையோர் வாயின் மணிவிளக்கு
நீடு கதலி தழைப்பூகம் நிரைத்து நிறைபொற் குடமெடுத்துப்
பீடு பெருகும் வாகீசர் பிள்ளை யாரும் தொண்டர்களும்
கூட மகிழ்ந்து விண்ணிழிந்த கோயில் வாயில் சென்றணைந்தார். 251

(இ-ள்.) திருக்கோயிலின் மாடவீதியை அலங்காரஞ்செய்து, பிராமணர்களுடைய வீட்டு வாயில்கள் தோறும் இரத்தின விளக்குகள் வைத்து, நீண்ட வாழை மரங்களையும், தழைத்த கமுக மரங்களையும் வரிசையாக நாட்டிப் பொன்னாலாகிய பூரணகலசங்களையெடுத்து வரிசைசெய்ய, பெருமை பொருந்திய திருநாவுக்கரசு சுவாமிகளும், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், அடியார்களும் சேர்ந்து மகிழ்ந்து, ஆகாயத்தினின்றும் இழிந்த விமானக் கோயிலின் திருவாயிலில் வந்து சேர்ந்தார்கள். -எ-று.

சென்றுள் புகுந்து திருவீழி மிழலை அமர்ந்த செங்கனகக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த கோயில் வலமா வந்துதிரு
முன்றில் வணங்கி முன்னெய்தி முக்கட் செக்கர்ச் சடைமவுலி
வென்றி விடையார் சேவடிக்கீழ் விழுந்தார் எழுந்தார் விம்மினார். 252

(இ-ள்.) திருவாயிலினுள்ளே போய்ப் புகுந்து, திருவீழிமிழலையில் எழுந்தருளியிருக்கும் சிவந்த பொன்மலையை வில்லாகவுடைய சிவபெருமானுடைய திருக்கோயிலைப் பிரதக்ஷிணஞ்செய்து திருமுற்றத்தை வணங்கி முன்னே வந்து மூன்று கண்களையும் செவ்வானம் போலும் சடைமுடியையும் வெற்றி பொருந்திய ரிஷப வாகனத்தையுமுடைய அவ்வெம்பெருமானது திருவடிகளின் கீழே விழுந்து வணங்கினார்கள்; எழுந்து ஆராமையால் அழுதார்கள். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கைகள் குவித்துக் கழல்போற்றிக் கலந்த அன்பு கரைந்துருக
மெய்யில் வழியுங் கண்ணருவி விரவப் பரவுஞ் சொன்மாலை
"செய்ய சடையார் தமைச்சேரார் தீங்கு நெறிசேர் கின்றார்" என்(று)
உய்யு நெறித்தாண் டகமொழிந்தங் கொழியாக் காதல் சிறந்தோங்க. 253

(இ-ள்.) இரண்டுகைகளையும் சிரசின்மேல் குவித்து வைத்துக்கொண்டு திருவடிகளை வணங்கிப் பொருந்திய பேரன்பினால் மனம் நெக்குருகவும், அவ்வன்பு காரணமாகத் திருமேனியில் வழிகின்ற ஆனந்தக் கண்ணீர் அருவி போலப் பெருகவும், துதிக்கின்ற திருப்பதிகமாலையை "திருவீழிமிழலை யானைச் சேராதார் தீநெறிக்கே சேர்க்னிறாரே" என்று முத்திநெறியை யடைதற்குரிய திருத்தாண்டகத்தை அருளிச் செய்து, அவ்விடத்தைவிட்டு நீங்காமைக்குக் காரணமாகிய ஆசையானது அதிகரித்து ஓங்கவும். -எ-று.

முன்னாள் அயனுந் திருமாலும் முடிவும் முதலும் காணாத
பொன்னார் மேனி மணிவெற்பைப் பூநீர் மிழலை யினில்போற்றிப்
பன்னாள் பிரியா நிலைமையினால் பயிலக் கும்பிட் டிருப்பாராய்
அந்நாள் மறையோர் திருப்பதியில் இருந்தார் மெய்ம்மை அருந்தவர்கள். 254

(இ-ள்.) மெய்ம்மையாகிய அரிய தவத்தினையுடைய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமி களும் முற்காலத்தில் பிரமன் விஷ்ணு என்னு மிருவரும் முடியை யும் அடியையும் தேடிக் காணாத அழகு பொருந்திய திருமேனி யையுடைய மாணிக்கமலை போன்ற சிவபெருமானை மலர்கள் தங்கிய நீரையுடைய திருவீழிமிழலையில் துதிசெய்து, அநேக நாள்கள் நீங்காத நிலைமையோடு பொருந்தும்படி வணங்கிக் கொண்டிருக்கின்றவர்களாய், அந்நாளில் பிராமணர்கள் வாசஞ் செய்யும் அந்த ஸ்தலத்தில் எழுந்தருளியிருந்தார்கள். -எ-று.

சீரின் விளங்குந் திருத்தொண்டர் இருந்து சிலநாள் சென்றதற்பின்
மாரி சுருங்கி வளம்பொன்னி நதியும் பருவம் மாறுதலும்
நீரின் இயன்ற உணவருகி நிலவும் பலமன் னுயிர்களெலாம்
பாரின் மலிந்த இலம்பாட்டில் படர்கூர் வறுமை பரந்ததால். 255

(இ-ள்.) சிறப்போடு விளங்குகின்ற திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் என்னு மிருவரும் அத்திருவீழிமிழலையில் வாசஞ்செய்து சிலநாள் போனபின்பு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மழைக் காலத்தில் பெருகுவதல்லாமல் கோடைக் காலத்திலும் வெள்ளம் வருகின்ற வளம் பொருந்திய காவிரியாறும் பருவ காலத்தில் பெய்யாமல் வற்றிப் போகவும், நீரினால் விளைகின்ற தானியங்கள் குறைந்து உலகத்தில் வாசஞ்செய்யும் பல உயிர்களும் அதிகரிக்கின்ற வறுமையினால் துன்ப மடைதற்குக் காரணமாகிய பஞ்சகாலம் உண்டாயிற்று. -எ-று.

வையம் எங்கும் வற்கடமாய்ச் செல்ல உலகோர் வருத்தமுற
நையும் நாளில் பிள்ளையார் தமக்கும் நாவுக் கரசருக்கும்
கையில் மானும் மழுவுமுடன் காணக் கனவில் எழுந்தருளிச்
செய்ய சடையார் திருவீழி மிழலை யுடையார் அருள்செய்வார். 256

(இ-ள்.) உலக முழுவதும் பஞ்சமுண்டாகிப் பரவ, அதனால் உலகத்திலுள்ளவர்கள் துன்பப்பட்டு வருந்துங் காலத்தில் திருஞானசம்பந்தப்பிள்ளை யாருக்கும் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கும், திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளும் சிவந்த சடைமுடியையுடைய சிவபெருமான் திருக்கரத்தில் மானும் மழுவும் தோன்றும்படி சொப்பனத்தில் வெளிப்பட்டு அருளிச் செய்வார். -எ-று.

"கால நிலைமை யால்உங்கள் கருத்தில் வாட்ட முறீர்எனினும்
ஏல உம்மை வழிபடுவார்க் களிக்க அளிக்கின் றோம்"என்று
கோலங் காண எழுந்தருளிக் குலவும் பெருமை இருவர்க்கும்
ஞாலம் அறியப் படிக்காசு வைத்தார் மிழலை நாயகனார். 257

(இ-ள்.) காலவித்தியாசத்தினால் உங்கள் மனதில் சிறிதும் வாட்டத்தை யடையீர்களானாலும் அன்பு பொருந்த உங்களை வழிபடுகின்ற அடியார்களுக்குக் கொடுத்து உதவும்படியாக நாம் உங்களுக்குக் கொடுக்கின்றோமென்று, யாவரும் தமது திருக் கோலத்தைக் காணும்படி ஆசாரியமூர்த்திகளாய் எழுந்தருளி விளங்குகின்ற மேன்மையையுடைய அவ்விருவர்களுக்கும் திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் உலகத் தாரறியும்படி படிக்காசுவைத் தருளினார். -எ-று.

விண்ணின் றிழிந்த விமானத்தில் கிழக்கும் மேற்கும் பீடத்தில்
அண்ணல் புகலி ஆண்டகையார் தமக்கும் ஆண்ட அரசினுக்கும்
நண்ணும் நாள்க டொறுங்காசு படிவைத் தருள நானிலத்தில்
எண்ணில் அடியா ருடன்அமுது செய்தங் கிருந்தார் இருவர்களும். 258

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) ஆகாயத்தினின்றும் இறங்கிய விமானக் கோயிலினது கிழக்குப் பீடத்திலும் மேற்குப் பீடத்திலும் முறையே பெருமை பொருந்திய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்கும், திருநாவுக்கரசு சுவாமிகளுக்கும் வருகின்ற நாள்கள் தோறும் படிக்காசு வைத்தருள, அதனால் விசால மாகிய உலகத்திலுள்ள அளவில்லாத சிவனடியார்களோடு திருவமுது செய்து அவ்விருவர்களும் அவ்விடத்திலேயே இருந்தார்கள். -எ-று.

"அல்லார் கண்டத் தண்டர்பிரான் அருளால் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப் பரமன் அடியா ரானார்கள்
எல்லாம் எய்தி உண்க" வென இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார்; துயர்கூர் வறுமை தொலைத்திட்டார். 259

(இ-ள்.) இருள்போலும் கரியகண்டத்தையுடைய சிவ பெருமானது திருவருளினால் தாங்கள் பெற்ற படிக்காசானது பலவகையாலும் இயைந்த பொருள்களை வாங்கத் தகுதியாயிருக்க, சிவனடியார்களா யுள்ளவர்களெல்லாரும் இங்கே வந்து போசனம் பண்ணக் கடவர்களென்று இரண்டு காலங்களிலும் பறைசாற்றித் தெரிவித்தும், சொல்லித் தெரிவித்தும் திருவமுது செய்வித்து அடியார்களுடைய துன்பமிகுந்த வறுமையை நீக்கினார்கள். -எ-று.

ஈசர் மிழலை இறையவர்பால் இமையப் பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய உண்டவர்தாம் திருமா மகனார் ஆதலினால்
காசு வாசி யுடன்பெற்றார் கைத்தொண் டாகும் படிமையினால்
வாசி இல்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர். 260

(இ-ள்.) திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளும் முதல்வ ராகிய சிவபெருமானது இடப்பாகத்திலமர்ந்த உமாதேவியா ருடைய திருமுலைப்பாலை உலகத்தார் பிழைக்கும் பொருட்டு உண்டருளிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சிவ பெருமானுக்குத் திருக்குமாரரானபடியால் படிக்காசுக்கு வட்டங்கொடுத்து மாற்றப் பெற்றார்; திருநாவுக்கரசு சுவாமிகள் திருமேனி வருந்தக் கைத்தொண்டு செய்கின்ற அடிமைத் தன்மை யுடையவராயிருப்பதினால் வட்டமில்லாமல் மாறுகின்ற படிக்காசைப் பெற்று வந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறு சடைமேல் அணிந்தருளும் அண்ணல் வைத்த படிக்காசால்
ஈறி லாத பொருளுடைய இருவ ருடைய திருமடங்கள்
சோறு நாளுந் தொண்டர்மகிழ்ந் துண்ண உண்ணத் தொலையாதே
ஏறு பெருமை புவிபோற்ற இன்புற் றிருக்கும் அந்நாளில். 261

(இ-ள்.) கங்கை நதியைத் தரித்த சடைமுடியையுடைய சிவபெருமான் வைத்தருளியபடிக்காசினால் குறையாத செல்வத்தையுடைய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் என்னும் இவ்விருவர்களது திருமடங்களில் போசனத்தை நாள்தோறும் அடியார்கள் விரும்பிப் புசிக்கப் புசிக்கக் குறையாமல் அதிகரிக்கின்ற பெருமையை உலகத்தார் புகழும்படி இன்பமடைந்திருக்கும் நாளில். -எ-று.

காலந் தவறு தீர்ந்தெங்கும் கலிவான் பொழிந்த புனல்கலந்து
ஞாலம் எல்லாம் குளிர்தூங்கி உணவு பெருகி நலஞ்சிறப்ப
மூல அன்பர் இருவர்களும் மொழிமா லைகளும் பலசாத்தி
நீல கண்டர் உறைபதிகள் பிறவும் வணங்க நினைவுற்றார். 262

(இ-ள்.) பஞ்சகாலம் ஒழிந்து எவ்விடத்திலும் ஒலியையுடைய மேகங்கள் பொழிந்த நீரானது பரவிப் பூமியெங்குங் குளிர்ந்து, உணவுக்கு வேண்டிய தானியங்கள் விளைந்து வளமுண்டாக, உலகத்தார் கடைத்தேறுதற்குக் காரணராயிருக்கின்ற அவ்விருவர்களும் பல திருப்பதிகளைப் பாடித் துதித்து, காளகண்டராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் மற்றத் திருப்பதிகளையும் சென்று வணங்கும்படி நினைத்தார்கள். -எ-று.

வாய்ந்த மிழலை மாமணியை வணங்கிப் பிரியா விடைகொண்டு
பூந்தண் புனல்சூழ் வாஞ்சியத்தைப் போற்றிப் புனிதர் வாழ்பதிகள்
ஏய்ந்த அன்பி னால்இறைஞ்சி இசைவண் டமிழ்கள் புனைந்துபோய்ச்
சேர்ந்தார் செல்வத் திருமறைக்கா டெல்லை இல்லாச் சீர்த்தியினார். 263

(இ-ள்.) திருவீழிமிழலையில் வீற்றிருந்தருளம் சிவபெருமானை வணங்கி நீங்காத விடைபெற்றுக் கொண்டு, மலர்களையுடைய குளிர்ந்த நீர்சூழ்ந்த திருவாஞ்சியமென்னும் ஸ்தலத்தில் எழுந்தருளியிருந்து, சிவபெருமான் வீற்றிருந்தருளும் பலதிருப்பதிகளையும் உள்ளத்திற்பொருந்திய பேரன்போடு வணங்கி, இசை பொருந்திய வளவிய பல திருப்பதிகங்களைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாடிச் சென்று, அளவில்லாத கீர்த்தியையுடைய அவ்விருவர்களும் செல்வம் நிறைந்த திருமறைக்காடு என்னும் ஸ்தலத்தையடைந்தார்கள். -எ-று.

மன்றல் விரவு மலர்ப்புன்னை மணஞ்சூழ் சோலை உப்பளத்தின்
முன்றில் தோறுஞ் சிறுமடவார் முத்தங் கொழிக்கும் மறைக்காட்டுக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த கோயில் புகுந்து வலங்கொண்டு
சென்று சேர்ந்தார் தென்புகலிக் கோவும் அரசுந் திருமுன்பு. 264

(இ-ள்.) அழகிய சீகாழிக்குத் தலைவராகிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும் வாசனை வீசுகின்ற மலர்களையுடைய புன்னை மரங்களையும் மணம்பொருந்திய மற்றைச் சோலைகளையுமுடைய கழிநிலத்தின் முற்றங்களிலெல்லாம் பரதவருடைய சிறுபெண்கள் முத்துக்களைக் கொழித்து விளையாடுகின்ற திருமறைக்காட்டில் மேருமலையை வில்லாகவுடைய சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருக்கோயிலில் புகுந்து பிரதக்ஷிணஞ் செய்து சந்நிதியில் வந்து சேர்ந்தார்கள். -எ-று.

பரவை ஓதக் கழிக்கானற் பாங்கு நெருங்கும் அப்பதியில்
அரவச் சடைஅந் தணனாரை அகில மறைகள் அர்ச்சனைசெய்(து)
உரவக் கதவந் திருக்காப்புச் செய்த அந்நாள் முதல்இந்நாள்
வரையும் அடைத்தே நிற்கின்ற மணிநீள் வாயில் வணங்குவார். 265

(இ-ள்.) கடலின் பெருக்கையுடைய கழிநிலத்தினருகில் நெருங்கிய அந்தத் திருப்பதியில் பாம்பை யணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானை நான்கு வேதங்களும் பூசித்து வலிமை பொருந்திய கதவைத் திருக்காப்புச் செய்த அந்த நாள் தொடங்கி இந்நாள்வரையிலும் அடைத்திருக்கின்ற அழகிய திருவாயிலை வணங்கும்படி முயன்றார்கள். -எ-று.

தொல்லை வேதம் திருக்காப்புச் செய்த வாயில் தொடர்வகற்ற
வல்ல அன்பர் அணையாமை மருங்கோர் வாயில் வழிஎய்தி
அல்லல் தீர்ப்பர் தமையருச்சிப் பார்கள் தொழுவார் ஆம்படிகண்(டு)
எல்லை இல்லாப் பெரும்புகழார் இதனை அங்குக் கேட்டறிந்தார். 266

(இ-ள்.) பழமையாகிய வேதங்கள் திருக்காப்புச் செய்து வைத்த திருவாயிலின் கதவைத் திறக்க வல்லமையுடைய அடியார்கள் வராமையால், அதன் சமீபத்திலுள்ள வேறொரு வாயிலின் வழியாக வந்து, பிறவித் துன்பத்தை நீக்குகின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமானைப் பூசை செய்கின்றவர்களும் தொழுகின்றவர் களுமாயிருக்கின்ற முறைமையைப் பார்த்து, அளவில்லாத பெரும் புகழையுடையவர்களாகிய திருஞான சம்பந்தப் பிள்ளையாரும் அப்பர் சுவாமிகளும் இந்தச் செய்தியை அங்குள்ளவர்களைக் கேட்டறிந்து கொண்டார்கள். -எ-று.

ஆங்கப் பரிசை அறிந்தருளி ஆழித் தோணி புரத்தரசர்
ஓங்கு வேதம் அருச்சனைசெய் உம்பர் பிரானை உள்புக்குத்
தேங்கா திருவோம் நேர்இறைஞ்சத் திருமுன் கதவந் திருக்காப்பு
நீங்கப் பாடும் அப்பர்என நீடுந் திருநாவுக்கரசர். **267**

(இ-ள்.) அவ்விடத்தில் வேதங்கள் திருக்காப்புச் செய்த செய்கையைக் கேட்டறிந்து, பிரளயகாலத்தில் பொங்கிய சமுத்திரத்தில் தோணிபோல் மிதந்த சீகாழித் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் உயர்ந்த வேதங்கள் பூசை செய்த சிவபெருமானை திருவாயிலினுள்ளே புகுந்து தடையில் லாமல் நாமிருவோரும் நேரே தரிசித்து வணங்கும்படி சந்நிதிக்கு முன்னே யிருக்கின்ற திருக்கதவுக்கு இட்டிருக்கும் திருக்காப்பு நீக்கும்படி, அப்பரே! நீர் பாடுவீராகவென்று அருளிச் செய்ய சிறந்த திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

உண்ணீர் மையினால் பிள்ளையார் உரைசெய் தருள அதனாலே,
"பண்ணினேரு மொழியாள்"என் றெடுத்துப் பாடப் பயன்துய்ப்பான்
தெண்ணீர் அணிந்தார் திருக்காப்பு நீக்கத் தாழ்க்கத் திருக்கடைக் காப்(பு),
எண்ணீர்! இரக்கம் ஒன்றில்லீர்! என்று பாடிஇறைஞ்சு தலும். **268**

(இ-ள்.) திருவுள்ளத்திற் பொருந்திய பேரன்பினால் திருஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிச் செய்தபடியால் "பண்ணினேர்மொழியாள்" என்று முதலில் எடுத்துத் தாம் எண்ணிய பயனை அடையும்படியாகத் திருப்பதிகம்பாட, தெளிந்த கங்கை நதியைத் தரித்த சிவபெருமான் திருக்கதவந் திருக்காப்பு நீக்குவதற்குச் சற்றுத் தாமதஞ்செய்ய, அதனால் யாம் பாடுதலைக் கருதீர். "இரக்கமொன்றிலீர்" என்று திருக்கடைக்காப்பில் வைத்துப்பாடி வணங்கினவுடனே. -எ-று.

வேத வனத்தின் மெய்ப்பொருளின் அருளால் விளங்கும் மணிக்கதவம்
காதல் அன்பர் முன்புதிருக் காப்பு நீங்கக் கலைமொழிக்கு
நாதர் ஞான முனிவருடன் தொழுது விழுந்தார்; ஞாலத்துள்
ஓத ஒலியின் மிக்கெழுந்த தும்பர் ஆர்ப்பும் மறையொலியும். **269**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருமறைக் காட்டில் வீற்றிருந்தருளும் மெய்ப் பொருளாகிய சிவபெருமானது திருவருளினால், விளங்குகின்ற மணிகளழுத்திய திருக்கதவானது பேரன்பினையுடைய அவ்விருவர்களுக்கு முன்பாகத் திருக்காப்பு நீங்கினவுடனே, திருநாவுக்கரசு சுவாமிகளும் திருஞானசம்பந்தமூர்த்திகளும் பூமியில் விழுந்து வணங்கினார்கள்; உலகத்தில் தேவர்கள் வாழ்த்துதலாலுண்டாகின்ற ஆரவாரமும், வேதங்களின் முழக்கமும் சமுத்திரத்தின் ஓசையைப் பார்க்கிலும் மிகுதியாக முழங்கின. -எ-று.

அன்பர் ஈட்டங் களிசிறப்ப ஆண்ட அரசுஞ் சிவக்கன்றும்
இன்ப வெள்ளத் திடைமூழ்கி எழுந்துள் புகுந்து தம்பெருமான்
முன்பு பணிந்து போற்றிசைத்துப் பரவி மொழிமா லைகள்பாடி
என்பு கரைய உள்ளுருகி இறைஞ்சி அரிதிற் புறத்தணைந்தார். 270

(இ-ள்.) அடியார் திருக்கூட்டங்கள் மகிழ்ச்சியடையத் திருநாவுக்கரசு சுவாமிகளும் திருஞானசம்பந்தப்பிள்ளையாரும் பேரின்பமாகிய வெள்ளத்தில் முழுகி யெழுந்து ஆலயத்தி னுள்ளே புகுந்து, தமது ஆண்டவராகிய சிவபெருமானது திருமுன்னே வணங்கித் துதித்துத் திருப்பதிகமாலைகளைப் புகழ்ந்துபாடி, எலும்புங்கரையும்படி உள்ளமானது உருகி வணங்கிக் கொண்டு பிரிவாற்றாமையோடு வெளியில் வந்தார்கள். -எ-று.

புறம்பு நின்று வாகீசர்புனிதர் அருளால் இக்கதவம்
திறந்து அடைத்தும் செல்லுநெறி திருத்த மலையாள் திருமுலையில்
கறந்த ஞானங் குழைந்தமுது செய்த புகலிக் கவுணியரை
"நிறைந்த கதவம் அடைக்கும்வகை நீரும்பாடி அருளும்" என 271

(இ-ள்.) புறத்தில் வந்து நின்ற திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமானுடைய திருவருளினால் இந்தத் திருக்கதவை நாள்தோறும் திறந்தும் அடைத்தும் வரும் முறைமை வழக்கமாகும்படி பார்வதியாருடைய ஸ்தனங்களினின்றும் கறந்த பாலோடு சிவஞானத்தையும் குழைத்துத் திருவமுது செய்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைப் பார்த்து, நிறைந்த திருக்கதவை அடைக்கும்படி தேவரீரும் திருப்பதிகம் பாடியருளி வேண்டுமென்று சொல்ல. -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சண்பை ஆளுந் தமிழ்விரகர் தாமும் திருநா வுக்கரசர்
பண்பின் மொழிந்த உரைகொண்டு பதிகம் பாடும் அவ்வளவில்
கண்பொற் பமைந்த நுதற்காள கண்டர் அருளால் கடிதுடனே
திண்பொற் கதவந் திருக்காப்புச் செய்த(து) எடுத்த திருப்பாட்டில். 272

(இ-ள்.) சீகாழிக்குத் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகள் அன்போடு கதவை மூடும்படி சொல்லிய வார்த்தையைக் கேட்டுத் திருப்பதிகம் பாடும்பொழுது, கண்ணினால் அழகுவிளங்குகின்ற நெற்றியை யுடைய காளகண்டராகிய சிவபெருமானது திருவருளினால் வலிய பொன்மயமாகிய திருக்கதவானது முதலில் அருளிச் செய்த திருப்பாட்டிலேயே விரைந்து உடனே அடைபட்டது. - எ-று.

அதுகண்டு டைய பிள்ளையார் தாமும் ஆண்ட அரசும்மகிழ்ந்(து)
"இதுநம் பெருமான் அருள்செய்யப் பெற்றோம்" என்றங் கிறைஞ்சியபின்
பதிகம் நிரம்பப் பிள்ளையார் பாடித் தொழுது பணிவுற்றார்
எதிர்பொற் றிருவா யிலின்வழக்கம் என்றும் நிகழ்ச்சி எய்தியதால். 273

(இ-ள்.) அப்படி அடைபட்டதைக் கண்டு ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய அரசும் மகிழ்ச்சியடைந்து, இப்படி திறக்கவும் அடைக்கவுமாகிய பாக்கியத்தை நமது சிவபெருமான் திருவருள் செய்யப் பெற்றுக் கொண்டோமென்று வணங்கின பின்பு, திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருப்பதிகமுழுவதும் பாடியருளித் தொழுது வணங்கினார். அதுமுதலாகத் திருக் கோயிலின் எதிரிலுள்ள திருவாயிலின் திருக்கதவம் திறத்தலும் மூடுதலுமாகிய வழக்கம் எந்நாளும் நடந்து கொண்டு வந்தது. - எ-று.

அங்கு நிகழ்ந்த அச்செயல்கண் டடியார் எல்லாம் அதிசமித்துப்
பொங்கு புளகம் எய்திடமெய் பொழியுங் கண்ணீர் பரந்திழிய
எங்கும் நிகரொன் றில்லாத இருவர் பாதம் இறைஞ்சினார்
நங்கள் புகலிப் பெருந்தகையும் அரசும் மடத்தில் நண்ணியபின். 274

(இ-ள்.) அவ்விடத்தில் நடந்த அந்தச் செய்கையைப் பார்த்து அடியவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டுத் தங்கள் திருமேனியில் மிகுந்த மயிர்க்குச்சுண்டாகவும், பொழிகின்ற ஆனந்தக் கண்ணீரானது பரவிக் கீழேசிந்தவும், எவ்விடத்திலும் தமக்கு ஒருவரும் நிகரில்லாத அவ்விருவர்களுடைய திருவடிகளையும்

 Public domain. Digitization Muthulakshmi Research Academy

வணங்கினார்கள். அப்பால், நமது சீகாழித்தலைவராகிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் திருமடத்துக்கு வந்தபின்பு. -எ-று.

அரிதிற் றிறக்கத் தாம்பாட அடைக் அவர்பா டியஎளிமை
கருதி "நம்பர் திருவுள்ளம் அறியா தயர்ந்தேன்" எனக்கவன்று
பெரிதும் அஞ்சித் திருமடத்தில் ஒருபால் அணைந்து பேழ்கணித்து
மருவும் உணர்வில் துயில்கொண்டார் வாய்மை திறம்பா வாகீசர். 275

(இ-ள்.) உண்மை நிலையில் சிறிதும் தவறுதலில்லாத திருநாவுக்கரசு சுவாமிகள் தாம் திருப்பதிகம் முழுதும் பாடியபின்னே திருக்கதவு அருமையாகத் திறந்த தன்மையையும், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் முதற்பாட்டைப் பாடினவுடனே திருக்கதவு அடைந்த எளிமையையும் நினைந்து, சிவபெருமானுடைய திருவுள்ளம் இதுவென்று அறிந்து கொள்ளாமல் கலங்கினேனென்று வருந்தி, மிகவும் பயந்து, திருமடத்தில் ஒருபக்கத்தில் போய்த் தம்பிழையைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டு பொருந்திய உணர்வோடு கூடிய நித்திரை கொண்டார். -எ-று.

மன்னுஞ் செல்வ மறைக்காட்டு மணியின் பாதம் மனத்தின்கண்
உன்னித் துயிலும் பொழுதின்கண் உமையோர் பாகம் உடைவர்தாம்
பொன்னின் மேனி வெண்ணீறு புனைந்த கோலப் பொலிவினொடும்
துன்னி அவர்க்கு "வாய்மூரில் இருப்போந் தொடரவா" என்றார். 276

(இ-ள்.) நிலைபெற்ற பெருஞ்செல்வத்தையுடைய திருமறைக்காட்டில் வீற்றிருந்தருளும் மாணிக்கம் போன்ற சிவபெருமானுடைய திருவடிகளை மனதில் தியானித்துக் கொண்டு அறிதுயில் செய்யும்பொழுது உமாதேவியை ஓர் பாகத்திலுடைய கடவுள் பொன்போல் விளங்கும் திருமேனியில் திருவெண்ணீறு தரித்த திருக்கோலப் பொலிவோடும் அத்திருநாவுக்கரசு சுவாமிகளிடத்திற்கு எழுந்தருளி, நாம் திருவாய்மூரில் வீற்றிருந்தருளுவோம்; நீ அவ்விடத்திற்கு நம்மைப் பின்தொடர்ந்து வா, என்று அருளிச் செய்தார். -எ-று.

போதம் நிகழ "வாஎன்று போனார் என்கொல்" எனப்பாடி
"ஈதெம் பெருமான் அருளாகி லியானும் போவேன்" என்றெழுந்து
வேத வனத்தைப் புறகிட்டு விரைந்து போக அவர்முன்னே
ஆதி மூர்த்தி முன்காட்டும் அவ்வே டத்தால் எழுந்தருள. 277

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) "போதநிகழவாவென்று போனாரென்கொல்" என்று திருப்பதிகம்பாடி, இது எமது சிவபெருமானுடைய கட்டளையானால், அடியேனும் அவ்வாறே போவேனென்று எழுந்து வேதாரணியத்தில் நின்றும் புறப்பட்டுச் சீக்கிரமாகத் தொடர்ந்துபோக, அந்தத் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு முன்பாக முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமான் அவர்க்கு முன் சொப்பனத்திற்காட்டிய அத்திருக்கோலத்தோடு எழுந்தருள. -எ-று.

சீரார் பதியி னின்றெழுந்து செல்லுந் திருநாவுக்கரசர்
ஆரா அன்பில் ஆரமுதம் உண்ண எய்தா வாறேபோல்
நீரார் சடையார் எழுந்தருள நெடிது பின்பு செல்லுமவர்
பேராளரைமுன் தொடர்ந்தணையப் பெறுவார்எய்தப் பெற்றிலரால். 278

(இ-ள்.) சிறப்புப் பொருந்திய வேதாரணியத்தினின்றும் புறப்பட்டுப் போகின்ற திருநாவுக்கரசு சுவாமிகள் குறைவில்லாத அன்போடு அருமையாகிய அமுதம் கிடைத்தும் அதனைத் தாம் உண்ணப் பெறாதவாறுபோல, கங்கை நீர் தங்கிய சடைமுடியை யுடைய சிவபெருமான் முன்னே எழுந்தருளவும் நெடுந்தூரம் பின் தொடர்ந்து போகின்ற அத்திருநாவுக்கரசு சுவாமிகள் எமது ஆண்டவரை முன்னே தொடர்ந்து அடைய விருப்பங் கொண்டு விரைந்து சென்றும் சமீபிக்கப் பெறவில்லை. -எ-று.

அன்ன வண்ணம் எழுந்தருளி அணித்தே காட்சி கொடுப்பார்போல்
பொன்னின் கோயில் ஒன்றெதிரே காட்டி அதனட் புக்கருளத்
துன்னுந் தொண்டர் அம்மருங்கு விரைந்து தொடரப் போந்தபடி
மன்னும் புகலி வள்ளலார் தாமுங் கேட்டு வந்தணைந்தார். 279

(இ-ள்.) அவ்வாறு தம்மைப் பின்தொடர்ந்து அடையாத வண்ணம் எழுந்தருளி, சமீபத்திலேயே காட்சி கொடுக்கின்றவர் போலப் பொன்மயமாகிய ஒரு திருக்கோயிலை அவருக்கு எதிரே தோற்றுவித்து அதனுள்ளே புகுந்து மறைந்தருள, மிகுந்த அன்பராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் அவ்விடத்தில் விரைவாகத் தொடர்ந்து சென்ற சங்கதியை நிலைபெற்ற சீகாழித்தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் கேள்விப்பட்டுத் தாமும் அங்கு வந்து சேர்ந்தார். -எ-று.

"அழைத்துக் கொடுபோந் தணியார்போல் காட்டி மறைந்தார்" எனஅயர்ந்து,
பிழைத்துச் செவ்வி அறியாதே திறப்பித் தேனுக் கேயல்லால்,
உழைத்தா மொளித்தால் கதவந்தொண் டுறைக்கப்பாடி.
அடைப்பித்த தழைத்த மொழியார் உப்பாலர் தாமிங் கெப்பால் மறைவ(து)? என" 280

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) என்னை அழைத்துக் கொண்டு வந்து நெருங்கினவர் போலக் காட்டி மறைந்தருளினாரென்று வருத்தப்பட்டு, எம்பெருமானே! தேவரீர் இங்கு ஒளித்தருளினால், திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளே திறக்கவேண்டுமென்றுந் திருவுள்ளக்கருத்தை யறியாமல் பிழைபட்டுத் திறப்பித்த அடியேனுக்கேயல்லாமல், திருக்கதவைத் தமது திருத் தொண்டானது விளங்கும்படி பாடி, ஒரு திருப்பாட்டிலேயே அடைப்பித்த செழித்த அருள்வாக்கையுடைய திருஞான சம்பந்தர் மூர்த்தி சுவாமிகள் இங்கே எழுந்தருளியிருக்கின்றார். ஆதலால் தேவரீர் இனி எங்கே மறைவதென்று சொல்ல. -எ-று.

மாட நீடு திருப்புகலி மன்ன ரவர்க்கு மாலயனும்
நேடி இன்னங் காணாதார்நேரே காட்சி கொடுத்தருள
ஆடல் கண்டு பணிந்தேத்தி அரசங் காணக் காட்டுதலும்
"பாட அடியார்" என்றெடுத்துப் பரமர் தம்மைப் பாடினார். 281

(இ-ள்.) மாடங்கள் உயர்ந்து விளங்குகின்ற சீகாழித் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்கு, விஷ்ணுவும் பிரமனும் (அடியையும் முடியையும்) தேடி இன்னமுங் காணப்படாதவராகிய சிவபெருமான் நேராக வெளிப்பட்டுக் காட்சி கொடுத்தருள, அவரது திருக்கூத்தைத் தரிசனஞ் செய்து வணங்கித் துதித்து, திருநாவுக்கரசு சுவாமிகளும் தரிசிக்கும்படி காட்டினவுடனே, அவர் "பாடவடியார்" என்று முதலில் எடுத்துச் சிவபெருமானைத் திருப்பதிகம் பாடியருளினார். -எ-று.

பாடுந் தமிழ்மா லைகள்கொண்டு பரமர் தாமும் எழுந்தருள
நீடுந் திருவாய் மூரடைந்து நிலவுங் கோயில் வலஞ்செய்து,
சூடும் பிறையார் பெருந்தொண்டர் தொழுது போற்றித் துதிசெய்து
நாடுங் காதல் வளர்ந்தோங்க நயந்தந் நகரில் உடனுறைந்தார். 282

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய தமிழ்ப் பதிகமாலைகளை ஏற்றுக்கொண்டு சிவபெருமானும் மறைந் தருள, மூன்றாம்பிறையைத் தரித்து ஆண்டவருடைய பெருந் தொண்டராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் பின் சிறந்த திருவாய்மூரையடைந்து விளங்குகின்ற திருக்கோயிலை வலமாக வந்து, வணங்கி ஸ்தோத்திரஞ்செய்து, நிலைபெற்ற பேரன் பானது மேன்மேலும் விருத்தியாக விருப்பங்கொண்டு, அந்த க்ஷேத்திரத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளோடு வாசஞ்செய்து கொண்டிருந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆண்ட அரசும் பிள்ளையா ருடனே அங்கண் இனிதமர்ந்து
பூண்ட காதல் பொங்கிஎழ வாய்மூர் அடிகள் அடிபோற்றி
மூண்ட அதன்பின் மொழிமாலை சாத்தி ஞான முனிவரொடு
மீண்டும் வந்து திருமறைக்கா டெய்தி விமலர் தாள்பணிந்தார். 283

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகளும் திருஞானசம்பந்தப் பிள்ளையாரோடு அவ்விடத்தில் இனிதாக எழுந்தருளியிருந்து, தாங்கள் கொண்டிருக்கின்ற பேரன்பானது மேன்மேலும்வளர, திருவாய்மூரில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய திருவடி களைத் துதித்து, பொருந்திய அன்பினால் திருப்பதிக மாலை யைச் சாத்தித் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளோடு மறுபடியும் வேதாரணியத்தை வந்து சேர்ந்து அவ்வெம் பெருமானுடைய திருவடிகளை வணங்கினார். -எ-று.

ஆதி முதல்வர் தமைப்பணிந்தங் கான பணிசெய் தமருநாள்
சித மதிவெண் குடைவளவர் மகளார் தென்னன் தேவியாம்
கோதில் குணத்துப் பாண்டிமா தேவி யார்முன் குலச்சிறையார்
போத விட்டார் சிலர்வந்தார் புகலி வேந்தர் தமைக்காண. 284

(இ-ள்.) முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமானைத் தொழுது தகுந்த திருப்பணிகளைச் செய்து அவ்விடத்தில் வாசஞ்செய்திருக்கும் நாளில், குளிர்ந்த சந்திரன் போன்ற வெண்கொற்றக் குடையையுடைய சோழராசன் புத்திரியும், பாண்டியராசனது மனைவியுமாகிய குற்றமற்ற பெருங்குணத் தினையுடைய மங்கையர்க்கரசியார் உத்தரவின்படி மந்திரி யாகிய குலச்சிறைநாயனார் அனுப்பிய சிலவேவுகாரர்கள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைக் காணும்படி வந்தார்கள். -எ-று.

வந்து சிவனார் திருமறைக்கா டெய்தி மன்னு வேணுபுரி
அந்த ணாளர் தமக்கறிவித் தவர்பால் எய்தி அடிவணங்கச்
சிந்தை மகிழ்ந்து திதின்மை வினவத் "தீங்கும் உளவாமோ
இந்த உலகம் உயவந்தீர் இருதாள் நினைவார்க்(கு)" என்றுரைப்பார். 285

(இ-ள்.) அவ்வேவுகாரர்கள் சிவபெருமானது திருமறைக் காட்டுக்கு வந்து சேர்ந்து, நிலைபெற்ற சீகாழியில் திருவவதாரஞ் செய்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குத் தாங்கள் வந்த செய்தியைத் தெரிவித்து, பின் அவரது திருமுன்னே சென்று திருவடிகளில் வணங்கத் திருவுள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகிழ்ந்து க்ஷேமத்தை விசாரிக்க, அவர்கள் இவ்வுலகத்தி லுள்ளவர்கள் கடைத்தேறும்படி திருவவதாரஞ்செய்தருளிய தேவரீருடைய இரண்டு திருவடிகளையும் தியானித்துக் கொண்டிருக்கும் எங்களுக்கு ஒரு குறையும் உண்டாகுமோ என்று சொல்வார்கள். -எ-று.

"சைவ நெறிவை திகம்நிற்கச் சழக்கு நெறியைத் தவம்என்னும்
பொய்வல் அமணர் செயல்தன்னைப் பொறுக்க கில்லோம்" எனகேட்டே
அவ்வன் தொழிலோர் செயல்மாற்றி ஆதி சைவ நெறிவிளங்கத்
தெய்வ நீறு நினைந்தெழுந்தார் சீர்கொள்சண்பைத் திருமறையோர். 286

(இ-ள்.) வேதசம்பந்தமாகிய சைவசமயமானது உலகத்தில் நிலைபெற்று விளங்கவும் (அதனையடையாமல்,) குற்றம் பொருந்திய மார்க்கத்தைத் தவநெறியென்று மேற்கொண் டொழுகும் பொய்சொல்வதில் வல்லவர்களாகிய சமணர்கள் செய்யுங் கொடுஞ்செய்கைகளைப் பொறுக்கமாட்டோமென்று சொல்ல, அதைக் கேட்டு, சிறந்த சீகாழித் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அந்தக் கொடுந்தொழிலை யுடைய சமணர்கள் செய்யும் தீமைகளை விலக்கி, முதன்மை யாகிய சைவசமயமானது விளங்கும் பொருட்டுத் தெய்வத் தன்மை பொருந்திய திருவெண்ணீற்றைத் திருவுள்ளத்திற் சிந்தித்துக் கொண்டு எழுந்தருளினார். -எ-று.

ஆய பொழுது திருநாவுக் கரசு புகலி ஆண்டகைக்குக்
"காய மாசு பெருக்கியுழல் கலதி அமணர் கடுவினைசெய்
மாயை சாலம் மிகவல்லார்; அவர்மற் றென்னை முன்செய்த
தீய தொழிலும் பல; கெட்டேன்; செல்ல இசையேன் யான்"என்றார். 287

(இ-ள்.) அப்பொழுது திருநாவுக்கரசு சுவாமிகளும் சீகாழித் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைப் பார்த்து, உடம்பில் அழுக்கைக்கழுவாமல் விருத்தியாக்கி திரிகின்ற துஷ்டர்களாகிய சமணர்கள் கடுந்தொழிலைச் செய்கின்ற வஞ்சனையில் மிகவும் வல்லவர்கள்; அவர்கள் எனக்கு முன்னாளில் செய்த கொடுந் தொழில்களும் பலவாகும்; ஐயோ! தேவரீர் அங்குச் செல்ல அடியேன் சம்மதிக்கமாட்டேன் என்று அருளிச் செய்தார். -எ-று.

என்று கூற "எல்லையிலா நீறு போற்றும் இருவரையும்
சென்று காணுங் கருத்துடையேன் அங்குத் தீங்கு புரிஅமணர்
நின்ற நிலைமை அழிவித்துச் சைவ நெறிபா ரித்தன்றி
ஒன்றுஞ் செய்யேன் ஆணைஉம(து)" என்றார் உடைய பிள்ளையார். 288

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) இப்படி திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்ய, அதற்குத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் அளவில்லாத மகிமையையுடைய திருவெண்ணீற்றில் அன்புபூண்டொழுகும் மங்கையர்க்கரசியாரையும், குலச்சிறைநாயனாரையும் போய்க் காணவேண்டுமென்னுங் கருத்தைக் கொண்டிருக்கின்றேன்; அந்தப் பாண்டி நாட்டில் தீங்கு செய்கின்ற சமணர்களுடைய பொருந்திய நிலைமையை, அரசனால் அழியும்படி செய்து, சைவசமயத்தை விருத்தி செய்யுந் தொழிலைச் செய்வதேயல்லாமல், உமது ஆணையின்படியே வேறொன்றையுஞ் செய்ய மாட்டேன் என்று அருளிச் செய்தார். -எ-று.

"போமா துணிந்துநீர் அங்குப்போகப் போதா; அவ்வமணர்
தீமா யையினை யானேபோய்ச் சிதைத்து வருகின் றேன்" என்ன
ஆமா றெல்லாம் உரைத்தவரை மறுக்க மாட்டா தரசிருப்பத்
தாமா தரவால் தமிழ்நாட்டில் போனார் ஞானத் தலைவனார். 289

(இ-ள்.) போகும்படியாகத் துணிவு கொண்டு தேவரீர் அவ்விடத்துக்குச் செல்லுதல் தகாது; அந்தச் சமணர்கள் செய்யும் கொடியவஞ்சனையை யானே போய் அழித்து வருகிறேன் என்று; அவர் போகாமலிருப்பதற்கு வேண்டிய யுத்திகளைச் சொல்லியும், அவர்போவதை மறுக்கமாட்டாமல் திருநாவுக்கரசு சுவாமிகள் இருந்துவிட, திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் மிகுந்த அன்போடு பாண்டி நாட்டிற்குப் போயருளினார். -எ-று.

வேணு புரக்கோன் எழுந்தருள விடைகொண் டிருந்த வாகீசர்
பூணும் அன்பால் மறைக்காட்டில் புனிதர்தம்மைப் போற்றிசைத்துப்
பேணி இருந்தங் குறையுநாள் பெயர்வார் வீழி மிழலைஅமர்
தாணு வின்தன் செய்யகழல் மீண்டுஞ் சாரா நினைக்கின்றார். 290

(இ-ள்.) சீகாழித் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாண்டி நாட்டிற்கு எழுந்தருள, அவரிடத்தில் விடைபெற்றுக் கொண்டிருந்த திருநாவுக்கரசு சுவாமிகள் நிலைபெற்று அன்போடு வேதாரணியத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமானைத் துதி செய்து விருப்பமுற்று அந்த ஸ்தலத்தில் வசித்திருக்கும் நாளில், அவ்விடத்தினின்றும் நீங்குகின்றவராய்த் திருவீழிமிழலையில் வீற்றிந்தருளும் சிவபெருமானுடைய சிவந்த திருவடிகளை மீளவும் அடைய நினைக்கின்றார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோலை மறைக்கா டமர்ந்தருளுஞ் சோதி அருள்பெற்ற கன்றுபோய்
"வேலை விடமுண் டவர்வீழி மிழலை மீண்டுஞ் செல்வன்" என
ஞாலம் நிகழ்ந்த நாகைக்கா ரோணம் பிறவுந் தாம்பணிந்து
சாலு மொழிவண் டமிழ்பாடித் தலைவர் மிழலை வந்தடைந்தார். 291

(இ-ள்.) சோலைகள் சூழ்ந்த வேதாரணியத்தில் வீற்றிருந் தருளும் சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று, அவ் விடத்தில் நின்றும் நீங்கி, சமுத்திரத்தில் தோன்றிய ஆலாகல விஷத்தையுண்ட அவ்வெம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருவீழிமிழலைக்கு மீண்டும் போவேனென்று, உலகத்தில் பெருமையோடு விளங்குகின்ற திருநாகைக்காரோணம் முதலிய ஸ்தலங்களையும் வணங்கிச் செல்கின்றவராய்ப் பெருமை பொருந்திய சொற்களாலாகிய வளவிய தமிழ்ப் பதிகத்தைப் பாடி ஆண்டவருடைய திருவீழிமிழலைக்கு வந்து சேர்ந்தார். -எ-று.

வீழி மிழலை தனைப்பணிந்து வேத முதல்வர் தாமிருப்ப
ஆழி வலமேந் தியஅரியால் ஆகா சத்தின் நின்றிழிந்த
வாழி மலர்ந்த கோயில்தனின் மன்னும் பொருளைப் போற்றிசைத்துத்
தாழும் நாளிற் பிறபதியும் பணியுங் காதல் தலைநிற்பார். 292

(இ-ள்.) திருவீழிமிழலையைப் பணிந்து, வேதமுதல்வராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் பொருட்டு, சக்கரத்தை வலக்கரத்திலேந்திய விஷ்ணுவினால் ஆகாயத்தினின்றும் இறங்கிய பெருமை பொருந்திய விமானக் கோயிலில் வீற்றிருந் தருளும் சுவாமியைத் துதிசெய்து வணங்கி வரும்நாளில் மற்ற ஸ்தலங்களையும் தரிசனஞ்செய்ய வேண்டுமென்னும் அன்பில் சிறந்தவராயினார். -எ-று.

பூவிற்பொலியும் புனற்பொன்னிக்கரைபோய்ப் பணிவார்பொற்பமைந்த
ஆவுக் கருளும் ஆவடுதண் டுறையார் பாதம் அணைந்திறைஞ்சி
நாவுக் கரசர் ஞானபோ னகர்க்குச் செம்பொன் ஆயிரமும்
பாவுக் களித்த திறம்போற்றிப் போந்து பிறவும் பணிகின்றார். 293

(இ-ள்.) உலகத்தில் புண்ணிய தீர்த்தமாகச் சிறப்புற்று விளங்குகின்ற நீரையுடைய காவிரி நதியின் கரைவழியாகப் போய்ப் பணிகின்றவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் அழகு பொருந்திய பசுவுக்கு முத்தி கொடுத்தருளிய திருவாவடுதுறை யில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய திருவடிகளை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யணைந்து வணங்கித் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்கு அவர்பாடிய திருப்பதிகத்திற்காக ஆயிரம் பொன்னைக் கொடுத் தருளிய திறத்தைத் தமது திருப்பதிகத்தில் வைத்துத் துதித்து, அவ்விடத்தினின்றும் புறப்பட்டு மற்றைய ஸ்தலங்களையும் வணங்குகின்றவராயினார். -எ-று.

செய்ய சடையார் பழையாறை எய்த அதனிற் செல்பொழுதில்
மையல் அமணர் மறைத்தவட தளியின் மன்னுஞ் சிவனாரைக்
கைகள் கூப்பித் தொழுதருளக் கண்ட வாற்றால் அமணர்கள்தம்
பொய்கொள் விமான மெனக்கேட்டுப் பொறாத வுள்ளம் மிகப்புழுங்கி. 294

(இ-ள்.) சிவந்த சடைமுடியையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருப்பழையாறை யென்னும் ஸ்தலத்தை யடையும்படி அதன் சமீபத்தில் போனபொழுது, மயக்கத்தை யுடைய சமணர்கள் மறைத்தலால் வடதளியென்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளம் சிவபெருமானைத் தமது இரண்டு கைகளையுங் கூப்பித்தொழ, அதனைக் கண்டதனால், இது சமணர்கள் கொண்டாடும் பொய்த் தெய்வத்தின் விமானமென்று அங்குள்ளார் சொல்லக்கேட்டு மனஞ் சகிக்காமல் மிகவும் வருத்தமுற்று. -எ-று.

அந்த விமானந் தனக்கருகா ஆங்கோர் இடத்தின் பாங்கெய்திக்
கந்த மலருங் கடிக்கொன்றை டியார் செய்ய கழல்உன்னி
"மந்த அமணர் வஞ்சனையால் மறைத்த வஞ்சம் ஒழித்தருளிப்
பந்தங் கொண்ட குண்டர்திறம் பாற்றும்" என்று பணிந்திருந்தார். 295

(இ-ள்.) அந்த விமானத்தின் சமீபமாக அங்குள்ள ஓரிடத்தில் வந்து, வாசனை வீசுகின்ற புதிய கொன்றை மாலையைத் தரித்த திருமுடியையுடைய சிவபெருமானது சிவந்த திருவடிகளைச் சிந்தித்து, மூடர்களாகிய சமணர்கள் வஞ்சனையினால் மறைத்த மறைப்பை யொழித்துத்து வினையையுடைய அவ்வஞ்சர்கள் செய்கையை அழித்தருளுமென்று வணங்கியிருந்தார். -எ-று.

"வண்ணங் கண்டு நான்உம்மை வணங்கி யன்றிப் போகேன்" என்று
எண்ண முடிக்கும் வாகீசர் இருந்தார் அமுது செய்யாதே;
அண்ண லாரும் அதுவுணர்ந்தங் கரசு தம்மைப் பணிவதற்குத்
திண்ண மாக மன்னனுக்குக் கனவில் அருளிச் செய்கின்றார். 296

(இ-ள்.) அடியேன் தேவரீரது திருவுருவத்தைக் கண்டு வணங்கியல்லாமல் போகமாட்டேனென்று, தமது எண்ணத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிறைவேற்ற வேண்டுமென்னுங் கருத்தினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் திருவமுது செய்யாமல் இருந்தார்; அதனைச் சிவபெருமான் அறிந்தருளி, அவ்விடத்தில் அப்பர் சுவாமிகள் தம்மை வணங்கும் பொருட்டு, சோழராஜனுக்கு உறுதியாகக் கனவில் தோன்றி அருளிச் செய்கின்றார். -எ-று.

"அறிவில் அமணர் நமைமறைப்ப இருந்தோம்" என்றங் கடையாளக்,
குறிகள் அறியச் செய்தருளி "நம்மை அரசு கும்பிடுவான்
நெறியில் அமணர் தமையறித்து நீக்கிப் போக்"கென் றருள்புரியச்
செறிவில் அறிவுற் றெழுந்தவனுஞ் செங்கை தலைமேற் குவித்திறைஞ்சி. 297

(இ-ள்.) நல்லறிவில்லாத சமணர்கள் நம்மை மறைக்கும் படியாக இருந்தோமென்று, அக்கோயிலில் தாமிருக்குமிடத்தில் அடையாளங்களைச் சொல்லி, நம்மைத் திருநாவுக்கரசு வெளிப்படக்கண்டு, வணங்கும் பொருட்டு நல்லொழுக்கமில்லாத சமணர்களை யழித்து, ஒழிந்தவர்களை அவ்விடத்தினின்றும் துரத்திவிடுமென்று, அருளிச் செய்ய, கனவினின்றும் விழித்த அந்தச் சோழராசனும் சிவந்த கைகளைத் தலையின் மேல் குவித்து வணங்கி. -எ-று.

கண்ட வியப்பு மந்திரிகட் கியம்பிக் கூடக் கடிதெய்தி
அண்டர் பெருமான் அருள்செய்த அடையா ளத்தின் வழிகண்டு
குண்டர் செய்த வஞ்சனையைக் குறித்து வேந்தன் குலவுபெருந்
தொண்டர் தம்மை அடிவணங்கித் தொக்க அமணர் தூர்அறுத்தான். 298

(இ-ள்.) சோழராசன் தான் இராத்திரி சொப்பனத்திற்கண்ட அதிசயத்தை மந்திரிகளுக்குச் சொல்லி அவர்களோடு கூட விரைவில் கோயிலுக்கு வந்து, தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமான் சொப்பனத்தில் அருளிச் செய்த அடையாளத்தின் வழியே சுவாமியைக் கண்டு, சமணர்கள் மறைத்து வைத்திருக்கும் வஞ்சகத்தைக் கருதி, விளங்குகின்ற சிறந்த திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு சுவாமிகளை வணங்கிக் கூட்டமாயிருக்கின்ற சமணர்களை வேரோடும் அழித்துவிட்டான். -எ-று.

ஆனை இனத்தில் துகைப்புண்ட அமணா யிரமும் மாய்ந்ததற்பின்
மேன்மை அரசன் ஈசர்க்கு விமான மாக்கி விளக்கியபின்
ஆன வழிபாட் டர்ச்சனைக்கு நிபந்தம் எல்லாம் அமைத்திறைஞ்ச
ஞான அரசும் புக்கிறைஞ்சி நாதர் முன்பு போற்றுவார். 299

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அரசன் ஏவிய யனைகளால் துவைக்கப்பட்ட அநேகமாயிரம் சமணர்களும் இறந்தபிற்பாடு, மேன்மை பொருந்திய சோழராசன் சிவபெருமானுக்கு விமானமமைத்து ஆலயத் திருப்பணி செய்தபின்பு, செய்யவேண்டிய நித்தியபூசை முதலிய ஆராதனங்களுக்கு வேண்டியவைகளையெல்லாம் அமைத்து வணங்க, சிவஞானத்தையுடைய திருநாவுக்கரசு சுவாமிகளும் ஆலயத்துக்குள் புகுந்து வணங்கிச் சிவபெருமான் முன்னே துதிசெய்வாராயினார். -எ-று.

"தலையின் மயிரைப் பறித்துண்ணுஞ் சாதி அமணர் மறைத்தாலும்,
நிலைமி லாதார் நிலைமையினால் மறைக்க ஒண்ணு மோ?" என்றும்,
விலையில் வாய்மைக் குறுந்தொகைகள் விளம்பிப் புறம்போந் தங்கமர்ந்தே,
இலைகொள் சூலப் படையார்சேர் இடங்கள் பிறவுந்தொழ வணைவார்.
300

(இ-ள்.) "தலையின் மயிரைப் பறித்துண்ணுஞ் சாதியமணர்மறைத்தாலும், நிலையில்லாதார் நிலைமையினால் மறைக்கவொண்ணுமோ" என்னும் ஒப்பற்ற மெய்மையையுடைய திருக்குறுந் தொகைத் திருப்பதிகம்பாடி வெளியில் வந்து, அங்குச் சிலநாள் வாசஞ்செய்து, அச்ச வடிவாகிய சூலாயுதத்தை யேந்திய சிவபெருமான் வீற்றிருந் தருளும் மற்ற ஸ்தலங்களையும் வணங்கும்படி செல்வாராயினார். -எ-று.

பொங்கு புனலார் பொன்னியினில் இரண்டு கரையும் பொருவிடையார்,
தங்கும் இடங்கள் புக்கிறைஞ்சித் தமிழ்மா லைகளுஞ் சாத்திப் போய்,
எங்கும் நிறைந்த புகழாளர் ஈறில்தொண்டர் எதிர்கொள்ளச்,
செங்கண் விடையார் திருவானைக் காவின் மருங்கு சென்றணைந்தார்.
301

(இ-ள்.) வெள்ளமாகப் பெருகுகின்ற நீரையுடைய காவிரிநதியின் இரண்டு கரையிலும், போர்செய்யத் தக்க ரிஷபத்தை வாகனமாகக் கொண்ட சிவபெருமான் வீற்றிருந் தருளும் பல ஸ்தலங்களுக்கும்போய் வணங்கித் திருப்பதிக மாலைகளையுஞ் சாத்திச் சென்று, உலகமெங்கும் நிறைந்த புகழினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் தம்மை அழிவில்லாத சிவனடியார்கள் எதிர்கொள்ளும்படி அக்கடவுள் வீற்றிருந் தருளும் திருவானைக்காவிற்குப் போய்ச் சேர்ந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிலந்திக் கருளுங் கழல்வணங்கிச் செஞ்சொன் மாலை பலபாடி
இலங்கு சடையார் எறும்பியூர் மலையும் இறைஞ்சிப் பாடியபின்
மலர்ந்த சோதித் திருச்சிராப் பள்ளி மலையுங் கற்குடியும்
நலங்கொள் செல்வத் திருப்பராய்த் துறையுந் தொழுவான் நண்ணினார். 302

(இ-ள்.) சிலந்திப் பூச்சிக்குக் கோச்செங்கட் சோழனாக விருந்து அரசாளும்படி திருவருள்செய்த திருவடியை வணங்கி, செவ்விய சொற்களமைந்த பல திருப்பதிகமாலைகளைப் பாடி, விளங்குகின்ற சடைமுடியையுடைய சிவபெருமான் வீற்றிருந் தருளும் திருவெறும்பியூர் மலையையும் வணங்கித் திருப்பதிகம் பாடி, அதன்பின்பு, சோதிசொரூபமாக விளங்குகின்ற திருச்சிராப்பள்ளி மலையையும், கற்குடியையும், நன்மை பொருந்திய செல்வத்தையுடைய திருப்பராய்த்துறையையும் வணங்கும்படி சென்றார். -எ-று.

மற்றப் பதிகள் முதலான மருங்குள் எனவுங் கைதொழுது
பொற்புற் றமைந்த திருப்பணிகள் செய்து பதிகங் கொடுபோற்றி
உற்ற அருளால் காவிரியை ஏறி ஒன்னார்புரமெரியச்
செற்ற சிலையார் திருப்பைஞ்ஞீ லியினைச் சென்று சேர்கின்றார். 303

(இ-ள்.) அத்திருப்பதிகள் முதலாகிய சமீபத்திலுள்ள மற்ற ஸ்தலங்களையும் வணங்கி அழகு பொருந்திய திருப்பணிகள் செய்து திருப்பதிகம்பாடித் துதித்து மிகுந்த அன்போடு காவிரிநதியைக் கடந்து, பகைவர்களுடைய முப்புரங்களை யெரித்த (மேருமலையாகிய) வில்லையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருப்பைஞ்ஞீலியென்னும் ஸ்தலத்தைச் சென்று சேர்கின்றவராயினார். -எ-று.

வழிபோம் பொழுது மிகஇளைத்து வருத்தம் உறநீர் வேட்கையொடும்,
அழிவாம் பசிவந் தணைந்திடவும் அதற்குச் சித்தம் அலையாதே,
மொழிவேந் தரும்முன் எழுந்தருள முருகார் சோலைப் பைஞ்ஞீலி,
விழிஏந் தியநெற் றியினார்தம் தொண்டர் வருத்தம் மீட்பாராய். 304

(இ-ள்.) வழியில் போகும்பொழுது மிகவும் இளைப் படைந்து வருத்தமுண்டாகத் தாகமும், எல்லாக் குணங்களையுங் கெடுக்கின்ற பசியும் உண்டாகவும், அதற்கு மனம் சிறிதும் சலிக்காமல் திருநாவுக்கரசு சுவாமிகள் முன்னே செல்லும் பொழுது, மணம்பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருப் பைஞ்ஞீலியில் வீற்றிருந்தருளும் நெற்றிக் கண்ணையுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெமான் தமது அடியவராகிய அப்பர் சுவாமிகளது வருத்தத்தை திருவுள்ளங்கொண்டு. -எ-று.

காவும் குளமும் முன்சமைத்துக் காட்டி வழிபோங் கருத்தினால்
மேவுந் திருநீற் றந்தணராய் விரும்பும் பொதிசோ றுங்கொண்டு
நாவின் தனிமன் னவர்க்கெதிரே நண்ணி யிருந்தார் விண்ணின்மேல்
தாவும் புள்ளும் மண்கிழிக்குந் தனிஏ னமுங்காண் பரியவர்தாம். 305

(இ-ள்.) இளைப்பாறத்தக்க ஒரு சோலையையும் குளத்தையும் அவ்வழியில் முன்னே யுண்டாக்கிக் காட்டி, வழிநடந்து போகுங் கருத்தோடு அங்கு வந்திருக்கும் விபூதியைத் தரித்த ஒருபிராமணராய், விரும்பத்தக்க கட்டுச்சோறு எடுத்துக் கொண்டு ஒப்பற்ற திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு எதிரே எழுந்தருளியிருந்தார்; ஆகாயத்தில் பறந்து சென்ற அன்ன வுருவங்கொண்ட பிரமனும், பூமியைப் பிளந்து சென்ற பன்றி யுருவங்கொண்ட விஷ்ணுவும் காணுதற்கரியவராகிய சிவ பெருமான். -எ-று.

அங்கண் இருந்த மறையவர்பால் ஆண்ட அரசும் எழுந்தருள
வெங்கண் விடைய தியர்நோக்கி "மிகவும் வழிவந் திளைத்திருந்தீர்!
இங்கென் பாலே பொதிசோறுண்(டு); இதனை உண்டு தண்ணீர்இப்
பொங்கு குளத்தில் குடித்திளைப்புப் போக்கிப்போவீர்" எனப்புகன்றார். 306

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் அவ்விடத்தில் தமக்கு எதிராக இருந்த பிராமணருக்குச் சமீபத்தில்போக, கோபங் கண்ணையுடைய ரிஷபத்தை வாகனமாகக் கொண்ட சிவபெருமானாகிய வேதியர் அவரைப் பார்த்து, நீர்வெகுதூரம் வழிநடந்து இளைப்படைந்திருக்கின்றீர் இங்கே என்னிடத்தில் கட்டுச் சோறிருக்கின்றது; இதனைப் புசித்து, இந்தக் குளத்தில் தண்ணீர் குடித்து வழிவந்த இளைப்பை யொழித்துக்கொண்டு போமென்று சொல்யிருளினார். -எ-று.

நண்ணுந் திருநா வுக்கரசர் நம்பர் அருள்என் றறிந்தார்போல்
"உண்ணும்" என்று திருமறையோர் உரைத்துப் பொதிசோ றளித்தலுமே
எண்ண நினையா தெதிர் வாங்கி இனிதா அமுது செய்தினிய
தண்ணீர் அமுது செய்தருளித் தூய்மை செய்து தளர்வொழிந்தார். 307

(இ-ள்.) சிவபெருமானாகிய பிராமணர் நீர் சாப்பிடுமென்று சொல்லிக் கட்டுச் சோற்றையெடுத்து கொடுக்கவும், அங்கு வந்த திருநாவுக்கரசு சுவாமிகள் இது சிவபெருமானுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவருளென்று அறிந்தவர்போல், (தம்முள்ளத்தில் சிவபெருமானே இவ்வாறெழுந்தருளினாரென்பதைச்) சிறிதும் ஆலோசியாமல், அவரெதிரே அதனை வாங்கி இனிமையாகத் திருவமுது செய்து, மதுரமாகிய தண்ணீரைக் குடித்துவாய் கை கால்களைச் சுத்தி செய்து இளைப்பு நீங்கினார். -எ-று.

எய்ப்பு நீங்கி நின்றவரை நோக்கி இருந்த மறையவனார்
"அப்பால் எங்கு நீர்போவ(து)?" என்றார்; அரசும் அவர்க்கெதிரே
செப்பு வார்"யான் திருப்பைஞ்ஞீ லிக்குப்போவ" தென்றுரைப்ப
ஒப்பிலாரும் "யான்அங்குப் போகின்றேன்"என் றுடன்போந்தார். 308

(இ-ள்.) வழிநடந்துவந்த இளைப்பு நீங்கியிருந்த திருநாவுக்கரசு சுவாமிகளைப் பாட்டைசாரிபோல அங்கிருந்த பிராமணர் பார்த்து, இனி நீர் எங்கே போகின்றவர் என்று கேட்டார்; திருநாவுக்கரசு சுவாமிகளும் அவருக்கு எதிராக நின்று நான்திருப்பைஞ்ஞீலிக்குப் போகின்றேனென்று சொன்னார்; ஒப்பற்ற சிவபெருமானாகிய பிராமணரும், யானும் அவ்விடத்துக்குத்தான் போகவேண்டியதென்று சொல்லி அவருடனே கூடப் போயினார். -எ-று.

கூட வந்து மறையவனார் திருப்பைஞ் ஞீலி குறுகியிட
வேடம் அவர்முன் மறைத்தலுமே மெய்ம்மைத் தவத்து மேலவர்தாம்
"ஆடல் புரிந்தார் அடியேனைப் பொருளா அளித்த கருணை"எனப்
பாடல் புரிந்து விழுந்தெழுந்து கண்ணீர் மாரி பயில்வித்தார். 309

(இ-ள்.) அந்த பிராமணர் அப்பர்சுவாமிகளோடு கூடவந்து திருப்பைஞ்ஞீலி யென்னும் ஸ்தலத்தை நெருங்கித் தாம் கொண்ட திருவேடத்தை அவருக்கு முன்னே மறைக்கவும், மெய்மையாகிய தவத்தினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் தாண்டவமூர்த்தியாகிய சிவபெருமான் அடியேனை ஒரு பொருளாகக் கருதிய பெருங்கருணை யீதென்று திருப்பதிகம் பாடிப் பூமியில் விழுந்து வணங்கி யெழுந்து ஆனந்தக் கண்ணீரை மழைபோலச் சொரிந்தார். -எ-று.

பைஞ்ஞீ லியினில் அமர்ந்தருளும் பரமர் கோயில் சென்றெய்தி
மைஞ்ஞீ லத்து மணிகண்டர் தம்மை வணங்கி மகிழ்சிறந்து
மெய்ஞ்ஞீர் மையினில் அன்புருக விரும்புந் தமிழ்மா லைகள்பாடிக்
கைஞ்ஞீ டியதந் திருத்தொண்டு செய்து காத லுடனிருந்தார். 310

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருப்பைஞ்ஞீலி யென்னும் ஸ்தலத்தில் வீற்றிருந் தருளும் சிவபெருமானுடைய திருக்கோயிலை யடைந்து, கரிய நீலமணி போன்ற கண்டத்தையுடைய கடவுளை வணங்கிக் களிகூர்ந்து, உண்மைத் தன்மையோடு அன்பானது உருக, யாவரும் விரும்பத்தக்க திருப்பதிகமாலைகளைப் பாடிக் கையினால் செய்ய வேண்டிய திருத்தொண்டையுஞ் செய்து ஆசையோடு அவ்விடத்தில் எழுந்தருளியிருந்தார். -எ-று.

நாதர் மருவுந் திருமலைகள் நாடும் பதிகள் பலமிகவும்
காதல் கூரச் சென்றிறைஞ்சிக் கலந்த இசைவண் டமிழ்பாடி
மாதொர் பாகர் அருளாலே வடபால் நோக்கி வாகீசர்
ஆதி தேவர் அமர்ந்ததிரு வண்ணா மலையை நண்ணினார். 311

(இ-ள்.) சிவபெருமான் வீற்றிந்தருளும் அநேக மலைகளை யும், விரும்பத்தக்க பலதிருப்பதிகளையும் மிகுந்த அன்போடு சென்று வணங்கி, இசையோடு கூடிய வளம்பொருந்திய தமிழ்ப் பதிகங்களைப் பாடி, உமாதேவியை வாம பாகத்திலுடைய சுவாமியினது திருவருளினாலே வடதிசையை நோக்கி முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருவண்ணாமலையை யடைந்தார்; திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

செங்கண் விடையார் திருவண்ணா மலையைத் தொழுது வலங்கொண்டு
துங்க வரையின் மிசையேறித் தொண்டர் தொழும்புக் கெதிர்நிற்கும்
அங்கண் அரசைத் தொழுதெழுந்து திளைத்துத் திருநா வுக்கரசர்
தங்க பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சாதித்தார். 312

(இ-ள்.) சிவந்த கண்களையுடைய ரிஷபத்தை வாகனமாகக் கொண்ட ஆண்டவருடைய திருவண்ணாமலையை வணங்கிப் பிரதக்ஷிணஞ்செய்து, உயர்ந்த மலையின் மீதேறி அடியார்கள் செய்யும் அடிமைத் திறத்துக்கு எதிரே நின்று கிருபை செய்கின்ற அழகிய கண்ணாளராகிய சிவபெருமானை வணங்கி எழுந் திருந்து, ஆனந்த வெள்ளத்தில் முழுகி, ஒருவனுக்குக் கிடைத்த மானுடப்பிறவியே மோட்சமடைதற்குக் காரணமாகிய சிறந்த பெருமையையுடைய தென்பதை விளக்கிக் காட்டினார் திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

அண்ணா மலைமேல் அணிமலையை ஆரா அன்பின் அடியவர்தங்
கண்ணார் அமுதை விண்ணோரைக் காக்கக் கடலில் வந்தெழுந்த
உண்ணா நஞ்சம் உண்டானைக் கும்பிட் டுருகுஞ் சிந்தையுடன்
பண்ணார் பதிகத் தமிழ்பாடிப் பணிந்து பரவிப் பணிசெய்தார். 313

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருவண்ணாமலையில் வீற்றிருந்தருளும் மாணிக்கமலை போன்றவரும், அடங்காத பேரன்பினையுடைய அடியார்களது கண்களுக்கு நிறைந்த அமிர்தம் போன்றவரும், தேவர்களைக் காப்பாற்றும் பொருட்டுத் திருப்பாற் கடலில் தோன்றிய உண்ணுதற்கரிய ஆலாகல விஷத்தை யுண்டருளிய வருமாகிய சிவபெருமானைத் தொழுது, கசிந்துருகுகின்ற மனதோடு இசைபொருந்திய தமிழ்ப்பதிகம் பாடி வணங்கித் துதித்து, அவ்விடத்திலேயே திருத்தொண்டுசெய்து கொண் டிருந்தார். -எ-று.

பணியார் வேணிச் சிவபெருமான் பாதம் போற்றிப் பணிசெயுநாள்
மணியார் கண்டத் தெம்பெருமான் மண்மேல் மகிழும் இடமெங்கும்
தணியாக் காத லுடன்சென்று வணங்கித் தக்க பணிசெய்வார்
அணியார் தொண்டைத் திருநாட்டில் அருளால் அணைவா ராயினார். 314

(இ-ள்.) பாம்புகள் தங்கிய சடைமுடியை யுடைய சிவபெருமானது திருவடிகளைத் துதித்துத் திருத்தொண்டு செய்து கொண்டுவரும் நாளில், காளகண்டத்தையுடைய எமது சிவபெருமான் பூமியில் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் ஸ்தலங்கள் தோறும் நீங்காத ஆசையோடு போய்த்தொழுது, தகுந்த திருப்பணி செய்கின்றவராய் அழகிய தொண்டை நாட்டிற்கு அவ்வெம்பெருமானது திருவருளினால் செல்கின்றவராயினார். -எ-று.

காதல் செய்யுங் கருத்தினுடன் காடும் மலையும் கான்யாறும்
சூத மலிதண் பணைப்பதிகள் பலவும் கடந்து சொல்லினுக்கு
நாதர் போந்து பெருந்தொண்டை நன்னா டெய்தி முன்னாகச்
சீதமலர்மென் சோலைசூழ் திருவோத் தூரிற் சென்றடைந்தார். 315

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் தொண்டை நாட்டி லுள்ள ஸ்தலங்களைத் தெரிசிக்க வேண்டுமென்னும் ஆசை பொருந்திய மனதோடு காடுகள், மலைகள், காட்டாறுகள், மாமரங்கள் நெருங்கிய குளிர்ந்த வயல்சூழ்ந்த கிராமங்கள் முதலிய பலவற்றையுங் கடந்து, பெருமை பொருந்திய நல்லதொண்டை நாட்டையடைந்து, முன்னாக, குளிர்ந்த மிருதுவாகிய மலர்களையுடைய சோலை சூழ்ந்த திருவோத்தூர் என்னும் ஸ்தலத்துக்கு வந்து சேர்ந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செக்கர்ச் சடையார் திருவோத்தூர்த் தேவர் பிரானார் தங்கோயில்
புக்கு வலங்கொண் டெதிர்இறைஞ்சிப் போற்றிக் கண்கள் புனல்பொழிய
முட்கட் பிரானை விரும்புமொழித் திருத்தாண் டகங்கள் முதலாகத்
தக்க மொழிமா லைகள்சாத்திச் சார்ந்து பணிசெய் தொழுகுவார். 316

(இ-ள்.) செவ்வானம் போலும் சிவந்த சடைமுடியையுடைய தேவர்கள நாயகராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருவோத்தூர்த் திருக்கோயிலினுள்ளே புகுந்து பிரதக்ஷிணஞ் செய்து, திரிநேத்திரங்களையுடைய சுவாமியை விரும்பிப் பாடும் மொழிகளையுடைய திருத்தாண்டகங்கள் முதலாகத் தகுந்த திருப்பதிக மாலைகளைச் சாத்தி, அவ்விடத்திலேயே யிருந்து திருப்பணி செய்கின்றவராயினார். -எ-று.

செய்ய ஐயர் திருவோத்தூர் ஏத்திப் போந்து செழும்புவனம்
உய்ய நஞ்சுண் டருளுமவர் உறையும் பதிகள் பலவணங்கித்
தையல் தழுவக் குழைந்தபிரான் தங்குந் தெய்வப் பதிஎன்று
வையம் முழுதுந் தொழுதேத்தும் மதில்சூழ் காஞ்சி மருங்கணைந்தார். 317

(இ-ள்.) சிவந்த திருமேனியையுடைய சிவபெருமானது திருவோத்தூரை வணங்கி, அவ்விடத்தினின்றும் நீங்கிச் செழுமை பொருந்திய உலகத்திலுள்ளவர்கள் பிழைக்கும் பொருட்டு ஆலாகலவிஷத்தையுண்ட ஆண்டவர் வீற்றிருந் தருளும் பலஸ்தலங்களையும் வணங்கி, காமாட்சியம்மையார் தழுவுதலால் திருமேனிகுழைந்த திருவேகம்பநாதர் வீற்றிருந் தருளும் தெய்வத்தன்மை பொருந்திய ஸ்தலமென்று உலக முழுமையும் வணங்கித் துதிக்கின்ற மதில்சூழ்ந்த காஞ்சிபுரத்தின் சமீபத்தில் வந்து சேர்ந்தார். -எ-று.

ஞாலம் உய்யத் திருவதிகை நம்பர் தம்பேர் அருளினால்
சூலை மடுத்து முன்னாண்ட தொண்டர் வரப்பெற் றோம்" என்று
காலை மலருங் கமலம்போல் காஞ்சி வாணர் முகமெல்லாம்
சால மலர்ந்து களிசிறப்பத் தழைத்த மனங்கள் தாங்குவார். 318

(இ-ள்.) உலகத்தார் பிழைக்கும் பொருட்டுத் திருவதிகையில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் தமது திருவருளினால் சூலை நோயைக் கொடுத்து முன்னே அடிமை கொண்ட திருநாவுக்கரசு சுவாமிகள் இவ்விடத்திற்கு எழுந்தருளப் பெற்றோமென்று, காலைப்பொழுதில் சூரியனைக்கண்டு மலர்கின்ற தாமரை மலரைப் போல் காஞ்சிபுரத்தில் வாழ்கின்றவர்களுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முகங்களெல்லாம் மிகவும் மலர்சியையடைந்து களிப்புண்டாகித் தழைத்த மனமுடையவர்களாயினார்கள். -எ-று.

மாட வீதி மருங்கெல்லாம் மணிவா யில்களில் தோரணங்கள்
நீடு கதலி யுடன்கமுகு நிரைத்து நிறைபொற் குடந்தீபம்
தோடு குலவு மலர்மாலை சூழ்ந்த வாசப் பந்தர்களும்
ஆடு கொடியு முடனெடுத்தங் கணிநீள் காஞ்சி அலங்கரித்தார். 319

(இ-ள்.) மாடவீதியிலும், மற்றை யெல்லா வீதிகளிலுமுள்ள அழகிய திருவாயில்களில் மகர தோரணங்களையும், நெருங்கிய பொன்மயமாகிய பூரணகும்பங்களையும், தீபங்களையும், இதழ்கள் பொருந்திய மலர்மாலைகளையும் வாசனை பொருந்திய தண்ணீர்ப் பந்தல்களையும், ஆடுகின்ற கொடிகளையும் அங்கங்குத் தகுதியாக அமைத்து, அழகு பொருந்திய பெரிய காஞ்சிபுரத்தை அலங்காரஞ்செய்தார்கள். -எ-று.

தொண்டர் ஈண்டி எதிர்கொள்ள எழுந்து சொல்லுக் கரசர்பால்
கொண்ட வேடப் பொலிவினொடுங் குலவும் வீதி பணிசெய்யும்
அண்டர் அறிதற் கரியதிரு வலகு முதலாம் அவையேந்தி
இண்டை புனைந்த சடைமுடியார்க் கன்பர்தம்மை எதிர்கொண்டார். 320

(இ-ள்.) அடியார்கள் கூட்டமாகக்கூடி எதிர்கொள்ளும்படி வந்து திருநாவுக்கரசு சுவாமிகளிடத்தில் தாம் கொண்டிருக்கின்ற திருவேடப் பொலிவோடும் விளங்கிய திருவீதிகளில் திருப்பணி செய்கின்ற தேவர்களாலும் அறிதற்கரிய பெருமையையுடைய திருவலகு முதலிய கருவிகளை எடுத்துக்கொண்டு, கொண்டை மாலையைத் தரித்த சடைமுடியையுடைய் சிவபெருமானுக்கு அடியவராகிய அப்பர்சுவாமிகளை எதிர்கொண்டார்கள். -எ-று.

எதிர்கொண் டிறைஞ்சுஞ் சீரடியார் தம்மை இறைஞ்சி எழுந்தருளி
மதில்கொண் டணிந்த காஞ்சிநகர் மறுகுட்போந்து வானநதி
குதிகொண் டிழிந்த சடைக்கம்பர் செம்பொற் கோயில் குறுகினார்
அதிர்கொண் டலைநேர் மணிமிடற்றார் ஆண்ட திருநா வுக்கரசர். 321

(இ-ள்.) சப்திக்கின்ற மேகம் போன்ற கரியகண்டத்தையுடைய சிவபெருமானால் சூலைநோயைக் கொடுத்துத் தடுத்தாட்கொள்ளப்பட்ட திருநாவுக்கரசு சுவாமிகள் தம்மை எதிர்கொண்டு வந்து வணங்கும் சிறப்புப் பொருந்திய அடியார்களைத் தாமும் வணங்கி யெழுந்து, மதிலால் சிறந்திருக்கின்ற காஞ்சிபுரத்தின் திருவீதியிற் புகுந்து, ஆகாயகங்கையானது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குதித்துப் பாய்கின்ற சடைமுடியையுடைய திருவேகம்பநாதரது சிவந்த பொன்மயமாகிய திருக்கோயிலை யடைந்தார். -எ-று.

திருவா யிலினைப் பணிந்தெழுந்து செல்வத்திருமுன்றிலை அணைந்து
கருவார் கச்சி ஏகம்பர் கனக மணிமா ளிகைசூழ்ந்து
வருவார் செம்பொன் மலைவல்லி தழுவக் குழைந்த மணிமேனிப்
பெருவாழ் வினைமுன் கண்டிறைஞ்சிப் பேராஅன்பு பெருக்கினார். 322

(இ-ள்.) கோபுரத்தின் திருவாசலைப் பணிந்து எழுந்து, செல்வம் பொருந்திய திருமுற்றத்தையடைந்து, எல்லாப் பொருள்களுக்குங் காரணராகிய திருவேகம்பநாதரது மணி களிழைத்துப் பொன்னாற் செய்யப்பட்ட விமானத்தை வலமாக வருகின்ற திருநாவுக்கரசு சுவாமிகள் பர்வதராசபுத்திரியாகிய காமாட்சியம்மையார் தழுவுதலால் குழைந்த அழகிய திருமேனியையுடைய பெருவாழ்வாகிய கடவுளை முன்னே தெரிசித்து வணங்கி, நீங்காத அன்பை வளரச் செய்தார். -எ-று.

வார்ந்து சொரியுங் கண்ணருவி மயிர்க்கால் தோறும் வரும்புளகம்
ஆர்ந்த மேனிப் புறம்பலைப்ப அன்பு கரைந்தென் புள்ளலைப்பச்
சேர்ந்த நயனப் பயன்பெற்றுத் திளைப்பத் திருவே கம்பர்தமை
நேர்ந்த மனத்தில் உறவைத்து நீடும்பதிகம் பாடுவார். 323

(இ-ள்.) பெருகிச்சொரிகின்ற கண்ணீராகிய அருவியும், மயிர்க்கால்கள் தோறும் உண்டாகிய புளகாங்கிதமும் பூரித்த திருமேனியின் புறத்தில் காண, அன்பானது கரைந்து உள்ளே எலும்பையுருக்க, தமக்குப் பொருந்திய கண்ணாலடைய வேண்டிய பயனைப்பெற்று ஆனந்தத்தையடைய, திருவேகம்ப நாதரை உருகிய மனதில்பொருந்தும்படி தியானித்து, உயர்ந்த திருப்பதிகம் பாடுகின்றவராயினார். -எ-று.

"கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை" என்றெடுத்துப்
பரவாய சொன்மாலைத் திருப்பதிகம் பாடியபின்
விரவார்தம் புரமெரித்த விளையவனார் வெள்ளெயிற்றின்
அரவாரம் புனைந்தவர்தந் திருமுன்றிற் புறத்தணைந்தார். 324

(இ-ள்.) "கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானை" என்று முதலில் எடுத்துத் துதிசெய்தற்குரிய சொல்லாலாகிய திருப் பதிகமாலையைப் பாடியபின்பு, அசுரர்களுடைய முப்புரத்தை யெரித்த ரிஷபவாகனத்தையுடையவரும், வெண்மையாகிய பற்களையுடைய பாம்பை மாலையாகத்தரித்தவருமாகிய சிவபெருமானது கோயில் திருவாசலின்புறத்தில் வந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கையார்ந்த திருத்தொண்டு கழியமிகுங் காதலொடுஞ்
செய்யாநின் றேயெல்லாச் செந்தமிழ்மா லையும்பாடி
மையார்ந்த மிடற்றர்திரு மயானத்தை வலங்கொண்டு
மெய்யார்வ முதற்றொழுது விருப்பினொடு மேவுநாள். 325

(இ-ள்.) கையால் செய்கின்ற உழவாரத் திருத்தொண்டை மிகுந்தபேரன் போடும்செய்து, எல்லாச் செவ்விய தமிழ்ப் பதிகமாலைகளையும் பாடி, காளகண்டத்தையுடைய சிவபெருமானது கச்சிமயானமென்னும் ஸ்தலத்தை வலமாக வந்து, உண்மையாகிய அன்புடன் வணங்கி விருப்பத்தோடு எழுந்தருளியிருந்தார். -எ-று.

சீர்வளரு மதிற்கச்சி நகர்த்திருமேற் றளிமுதலாம்
நீர்வளருஞ் சடையவர்தாம் நிலவியுறை ஆலயங்கள்
ஆர்வமுறப் பணிந்தேத்தி ஆய்ந்ததமிழ்ச் சொன்மலரால்
சார்வுறுமா லைகள்சாத்தித் தகுந்தொண்டு செய்திருந்தார். 326

(இ-ள்.) சிறப்புப் பொருந்திய மதில்சூழ்ந்த காஞ்சிபுரத்தி லுள்ள திருமேற்றளி முதலாகிய கங்கைநதி பொருந்திய சடைமுடியையுடைய சிவபெருமான் விளங்கி வீற்றிருந்தருளும் திருக்கோயில்களை அன்போடு வணங்கி துதித்து, ஆராய்ந் தெடுக்கப்பட்ட தமிழ்ச் சொல்லாகிய மலர்களால் சமைத்த திருப்பதிக மாலைகளைச் சாத்தித் திருப்பணிகளைச் செய்து கொண்டிருந்தார். -எ-று.

அந்நகரில் அவ்வண்ணம் அமர்ந்துறையும் நாளின்கண்
மன்னுதிரு மாற்பேறு வந்தணைந்து தமிழ்ப்பாடிச்
சென்னிமிசை மதிபுனைவார் பதிபலவுஞ் சென்றிறைஞ்சித்
துன்னினார் காஞ்சியினைத் தொடர்ந்தபெருங் காதலினால். 327

(இ-ள்.) அந்த நகரத்தில் அவ்விதமாக விரும்பி வாசஞ் செய்யுநாளில், நிலைபெற்ற திருமாற்பேது என்னும் ஸ்தலத்தை யடைந்து (சுவாமியைத் தொழுது) திருப்பதிகம்பாடி, திருமுடியில் இளம்பிறையைத் தரித்த சிவபெருமான் வீற்றிருந் தருளும் பல ஸ்தலங்களுக்கும் போய் வணங்கித் தம்மைத் தொடர்ந்து பற்றிய பேரன்போடு காஞ்சிபுரத்தை யடைந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஏகம்பன் காண்அவன்என் எண்ணத்தான்" எனப் போற்றிப்
பாகம்பெண் ணுருவானைப் பைங்கண்விடை உயர்த்தானை
நாகம்பூண் உகந்தானை நலம்பெருகும் திருநீற்றின்
ஆகந்தோய் அணியானை அணைந்துபணிந் தின்புற்றார். 328

(இ-ள்.) "ஏகம்பன் காணவனென்னெண்ணத்தான்" என்று இறுதியில் வைத்துத் திருப்பதிகம்பாடி, ஒரு பாகத்தில் பெண்ணுருவாயிருக்கின்றவரும், பசிய கண்களையுடைய ரிஷபக்கொடியை யுயர்த்தவரும், பாம்பை ஆபரணமாக விரும்பியணிந்தவரும், நன்மைமிகுந்த விபூதியைத் திருமேனியில் தரித்த பேரழகருமாகிய சிவபெருமானை யடைந்து வணங்கி இன்பத்தையடைந்தார். -எ-று.

திருக்கச்சி ஏகம்பம் பணிந்தேத்தித் திங்களார்
நெருக்கச்செஞ் சடைக்கணிந்தார் நீடுபதி தொழநினைவார்
வருக்கைச்செஞ் சுளைபொழிதேன் வயல்விளைக்கும் நாட்டிடைப் போய்ப்
பருக்கைத்திண் களிற்றுரியார் கழுக்குன்றின் பாங்கணைந்தார். 329

(இ-ள்.) ஸ்ரீகாஞ்சிபுரத்தில் திருவேகம்பத்தை வணங்கித் துதித்து, சந்திரனையும், ஆத்திமாலையையும் நெருக்கமாகிய சிவந்த சடைமுடியில் அணிந்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் மற்ற ஸ்தலங்களையும் வணங்கும்படி திருவுள்ளங்கொண்டு, பலாப்பழங்கள் சிவந்த சுளைகளிலிருந்து பொழிகின்ற தேனானது வயல்களை விளையச் செய்கின்ற நாட்டில்போய், பருத்த துதிக்கையையுடைய வலிய யானையின் தோலைப் போர்த்த சிவபெருமான் வீற்றிருந்திருளும்திருக்கழுக்குன்றத்தின் பக்கத்தில் வந்தார். -எ-று.

நீடுதிருக் கழுக்குன்றில் நிருத்தனார் கழல்வணங்கிப்
பாடுதமிழ்த் தொடைபுனைந்து பாங்குபல பதிகளிலுஞ்
சூடும்இளம் பிறைமுடியார் தமைத்தொழுது போற்றிப் போய்
மாடுபெருங் கடலுடுத்த வான்மியூர் மருங்கணைந்தார். 330

(இ-ள்.) உயர்ந்த திருக்கழுக்குன்றத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கிப் பாடுகின்ற திருப்பதிகமாலைகளைச் சாத்தி, அதன் சமீபத்திலுள்ள பல ஸ்தலங்களுக்கும்போய், இளம்பிறையைத் தரித்த திருமுடியை யுடைய சிவபெருமானை வணங்கித் துதித்துச் சென்று, அருகில் பெரிய கடல் சூழ்ந்த திருவான்மியூரை யடைந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவான்மி யூர்மருந்தைச் சேர்ந்துபணிந் தன்பினொடும்
பெருவாய்மைத் தமிழ்பாடி அம்மருங்கு பிறப்பறுத்துத்
தருவார்தங் கோயில்பல சார்ந்திறைஞ்சித் தமிழ்வேந்தர்
மருவாரும் மலர்ச்சோலை மயிலாப்பூர் வந்தடைந்தார். 331

(இ-ள்.) தமிழ்த் தலைவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் திருவான்மியூரில் வீற்றிருந்தருளும் மருந்தீசரையடைந்து அன்போடு வணங்கிப் பெருமை பொருந்திய உண்மையாகிய தமிழ்ப்பதிகங்களைப்பாடி, அத்திருவான்மியூருக்கருகில் பிறப்பை யொழித்து மோட்சத்தைத் தந்தருளும் சிவபெருமானுடைய பல திருக்கோயில்களை யடைந்து வணங்கி, வாசனை பொருந்திய மலர்களையுடைய சோலைசூழ்ந்த திருமயிலாப்பூரை வந்து சேர்ந்தார். -எ-று.

வரைவளர்மா மயிலென்ன மாடமிசை மஞ்சாடும்
தரைவளர்ச்சீர்த்திருமயிலைச் சங்கரனார் தாள்வணங்கி
உரைவளர்மா லைகள்அணிவித்(து) உழவாரப் படையாளி
திரைவளர்வே லைக்கரைபோய்த் திருவொற்றி யூர்சேர்ந்தார். 332

(இ-ள்.) மலையில் வாசஞ்செய்கின்ற சிறந்த மயில்போல, உப்பரிகைகளின்மேல் மேகங்கள் தவழ்கின்ற உலகத்தில் கீர்த்தி பொருந்திய திருமயிலாப்பூர் என்னும் ஸ்தலத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, நல்ல சொற்களமைந்த திருப்பதிகமாலைச் சாத்தி, அலைகள் மோதுகின்ற சமுத்திரக் கரையின் வழியே போய்த் திருவொற்றியூரை யடைந்தார்; உழவாரப் படையையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

ஒற்றியூர் வளநகரத் தொளிமணிவீ திகள்விளக்கி
நற்கொடிமா லைகள்பூகம் நறுங்கதலி நிரைநாட்டிப்
பொற்குடங்கள் தூபங்கள் தீபங்கள் பொலிவித்து
மற்றவரை எதிர்கொண்டு கொடுபுக்கார் வழித்தொண்டர். 333

(இ-ள்.) திருவொற்றியூரென்னும் வளம்பொருந்திய நகரத்திலுள்ள பிரகாசிக்கின்ற அழகிய திருவீதிகளை விளக்கி, நல்ல கொடிகளையும், பூமாலைகளையும், கமுக மரங்களையும், நல்ல வாழை மரங்களையும் வரிசையாக நாட்டி, பொன்மயமாகிய பூரணகும்பங்களையும், தூபங்களையும், தீபங்களையும் விளங்கும் படி வைத்துப் பரம்பரையாகத் தொண்டு செய்கின்ற அடியார்கள் அத்திருநாவுக்கரசு சுவாமிகளை எதிர்கொண்டு அழைத்துப் போனார்கள். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநாவுக் கரசரும்அத் திருவொற்றி யூர்அமர்ந்த
பெருநாகத் திண்சிலையார் கோபுரத்தை இறைஞ்சிப்புக்(கு)
ஒருஞானத் தொண்டருடன் உருகிவலங் கொண்டடியார்
கருநாமம் தவிர்ப்பாரைக் கைதொழுது முன்வீழ்ந்தார். 334

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகளும் அந்தத் திருவொற்றியூரில் வீற்றிருந்தருளும் மேருமலையாகிய போர்செய்யும் வலிய வில்லையுடைய சுவாமியினது திருக்கோபுரத்தை வணங்கியுள்ளே புகுந்து, ஒப்பற்ற சிவஞானத்தையுடைய அடியார்களோடு மனமுருகிப் பிரதக்ஷிணஞ்செய்து, அடியார்களது பிறவியாகிய அச்சத்தை நீக்கியருளும் சிவபெருமானைக் கைகுவித்துச் சந்நிதியின்முன்னே விழுந்து வணங்கினார். -எ-று.

எழுதாத மறைஅளித்த எழுத்தறியும் பெருமானைத்
தொழுதார்வ முறநிலத்தில் தோய்ந்தெழுந்தே அங்கமெலாம்
முழுதாய பரவசத்தின் முகிழ்த்தமயிர்க் கால்மூழ்க
விழுதாரை கண்பொழிய விதிர்ப்புற்று விம்மினார். 335

(இ-ள்.) எழுதப்படாத வேதங்களை யருளிச்செய்த எழுத்தறியும் ருெமான் என்னும் ஆண்டவரை வணங்கி, அன்பு பொருந்திப் பூமியில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து, திருமேனி முழுவதுமுண்டாகிய ஆனந்த பரவசத்தால் அரும்பிய மயிர்க்கால்கள் மறையும்படி விழுகின்ற நீர்த்தாரைகள் கண்களினின்றும் பெருக, தேகம் நடுங்கி விம்மியழுதார். -எ-று.

"வண்டோங்குஞ் செங்கமலம் எனஎடுத்து மனமுருகப்
பண்தோய்ந்த சொற்றிருத்தாண் டகம்பாடிப் பரவுவார்
விண்தோய்ந்த புனற்கங்கை வேணியார் திருவுருவம்
கண்டோங்கு களிசிறப்பக் கைதொழுது புறத்தணைந்தார். 336

(இ-ள்.) "வண்டோங்கு செங்கமலம்" என்று முதலில் எடுத்து மனமுருகும்படி பண்ணமைந்த சொற்களால் திருத்தாண்டகத் திருப்பதிகம்பாடி வணங்குகின்றவராய், ஆகாய கங்கையைத் தரித்த சடைமுடியையுடைய சிவபெருமானது திருவுருவத்தைத் தரிசனஞ்செய்து மிகுந்த சந்தோஷமுண்டாகத் தமது கைகளைக் குவித்து வணங்கிப் புறத்தில் வந்தார். -எ-று.

விளங்குபெருந் திருமுன்றில் மேவுதிருப் பணிசெய்தே
உளங்கொள்திரு விருத்தங்கள் ஓங்குதிருக் குறுந்தொகைகள்
களங்கொள்திரு நேரிசைகள் பலபாடிக் கைதொழுது
வளங்கொள்திருப் பதியதனில்பல நாள்கள் வைகினார். 337

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) பிரகாசிக்கின்ற பெரிய கோயிலின் திருவாசலில் செய்ய வேண்டிய திருப்பணிகளைச் செய்து, திருவுள்ளத்தி லமைந்த திருவிருத்தங்களும், உயர்ந்த திருக்குறுந் தொகைகளும், திருநேரிசைகளுமாகிய பல திருப்பதிகங்களைப் பாடிக் கைகுவித்து வணங்கி, வளம்பொருந்திய திருவொற்றியூர் என்னும் ஸ்தலத்தில் அநேக நாள்கள் வரையிலும் வாசஞ் செய்திருந்தார். -எ-று.

அங்குறையு நாளின்கண் அருகுளவாம் சிவாலயங்கள்
எங்குஞ்சென் றினிதிறைஞ்சி ஏத்துமவர் இறைஅருளால்
பொங்குபுனல் திருவொற்றி யூர்தொழுது போந்துமையாள்
பங்குடையார் அமர்ந்ததிருப் பாசூராம் பதிஅணைந்தார். 338

(இ-ள்.) அத்திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கும் நாளில், பக்கத்திலுள்ள சிவாலயங்களுக்கெல்லாம் போய் இனிதாக வணங்கித் துதிக்கின்ற திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெரு மானது திருவருளினால், மிகுந்த நீர்வளம் பொருந்திய திருவொற்றியூரைத் தொழுது, அவ்விடத்தினின்றும் புறப்பட்டு, உமாதேவியை வாமபாகத்திலுடைய சிவபெருமான் வீற்றிருந் தருளும் திருப்பாசூர் என்னும் ஸ்தலத்தை யடைந்தார். -எ-று.

திருப்பாசூர் நகர்எய்திச் சிந்தையினில் வந்தூறும்
விருப்பார்வம் மேற்கொள்ள வேயிடங்கொண் டுலகுய்ய
இருப்பாரைப் புரமூன்றும் எரித்தருள எடுத்ததனிப்
பொருப்பார்வெஞ் சிலையாரைத் தொழுதெழுந்து போற்றுவார். 339

(இ-ள்.) திருப்பாசூர் என்னும் ஸ்தலத்தையடைந்து, மனதில் எழுந்து தோன்றிய ஆசையானது அதிகரிக்க, மூங்கில் இடமாகக் கொண்டு உலகத்தார் பிழைக்கும் பொருட்டு எழுந்தருளியிருக் கின்றவரும், முப்புரங்களையும் அழிக்கும்படி யெடுத்த ஒப்பற்ற மேருமலையாகிய கொடிய வில்லையுடையவருமாகிய சிவபெருமானை வணங்கி யெழுந்து துதிப்பாராயினார். -எ-று.

"முந்திமூ வெயில்எய்த முதல்வனார்" எனஎடுத்துச்
சிந்தைகரைந் துருகுதிருக் குறுந்தொகையும் தாண்டகமும்
சந்தநிறை நேரிசையும் முதலான தமிழ்பாடி
எந்தையார் திருவருள்பெற் றேகுவார் வாகீசர். 340

(இ-ள்.) "முந்திமூவெயிலெய்த முதல்வனார்" என்று முதலில் எடுத்து மனங்கரைந்துருகுதற்குக் காரணமாகிய திருக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறுந்தொகை - திருத்தாண்டகம், சந்தமமைந்த திருநேரிசை முதலாகிய தமிழ்ப் பதிகங்களைப் பாடி, எமது சிவபெருமானுடைய திருவருளைப் பெற்றுக் கொண்டு போகின்றவராயினார்; திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

அம்மலர்ச்சீர்ப் பதியைஅகன் றயல்உளவாம் பதிஅனைத்தின்
மைம்மலருங் களத்தாரை வணங்கிமகிழ் வொடும்போற்றி
மெய்ம்மைநிலை வழுவாத வேளாள விழுக்குடிமைச்
செம்மையினாற் பழையனூர்த் திருஆல வனம்பணிந்தார். 341

(இ-ள்.) விளங்குகின்ற சிறப்பினையுடைய அந்தத் திருப்பாசூர் என்னும் ஸ்தலத்தினின்றும் நீங்கி அயலிலுள்ள எல்லா ஸ்தலங்களிலும் எழுந்தருளியிருக்கும் கருநிறம் பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமானை வணங்கி மகிழ்ச்சியோடு துதிசெய்து, உண்மை நெறியினின்றும் தவறாத மேன்மையான ஒழுக்கத்தையுடைய உயர்ந்த குடியிற் சிறந்தோராகிய வேளாளர்கள் வாழ்ந்திருக்கும் பழையனூரையடுத்த திருவாலங் காட்டை வணங்கினார். -எ-று.

“திருவாலங் காடுறையுஞ் செல்வர்தாம்” எனச்சிறப்பின்
ஒருவாத பெருந்திருத்தாண் டகம்முதலாம் ஓங்குதமிழ்ப்
பெருவாய்மைத் தொடைமாலை பலபாடிப் பிறபதியும்
மருஆர்வம் பெறவணங்கி வடதிசைமேல் வழிக்கொள்வார். 342

(இ-ள்.) “திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாம்” என்று இறுதியில் வைத்துச் சிறப்பினின்றும் நீங்காத பெரிய திருத்தாண்டக முதலாகிய உயர்ந்த தமிழால் செய்யப்பட்ட உண்மை மிகுந்த பலதிருப்பதிகமாலைகளைப் பாடி, மற்றை ஸ்தலங்களையும் மிகுந்த அன்போடு வணங்கி வடதிசை நோக்கிச் செல்கின்றவராயினார். -எ-று.

பல்பதியும் நெடுங்கிரியும் படர்வனமுஞ் சென்றடைவார்
செல்கதிமுன் அளிப்பார்தந் திருக்காரி கரைபணிந்து
தொல்கலையின் பெருவேந்தர் தொண்டர்கள்பின் உம்பர்குழாம்
மல்குதிருக் காளத்தி மாமலைவந் தெய்தினார். 343

(இ-ள்.) அநேகம் ஊர்களையும், நீண்டமலைகளையும்,
பரவிய வனங்களையுங் கடந்து அடைகின்றவராய், அடியார்
களுக்கு மோட்சத்தை விரைவில் கொடுக்கின்ற சிவபெருமா
னுடைய திருக்காரிக் கரை யென்னும் ஸ்தலத்தை வணங்கி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடியார்களும், அவர்களுக்குப் பின்னே தேவர் கூட்டங்களும் நெருங்கியிருக்கின்ற திருக்காளத்தியென்னும் பெருமை பொருந்திய திருமலைக்கு வந்து சேர்ந்தார் திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

பொன்முகலித் திருநதியின் புனிதநெடுந் தீர்த்தத்தில்
முன்முழுகிக் காளத்தி மொய்வரையின் தாழ்வரையில்
சென்னியுறப் பணிந்தெழுந்து செங்கண்விடைத் தனிப்பாகர்
மன்னுமலை மிசையேறி வலங்கொண்டு வணங்குவார். 344

(இ-ள்.) பொன்முகலியென்னும் திருநதியினது பரிசுத்த மாகிய தீர்த்தத்தில் முதலில் ஸ்நானஞ்செய்து, மரங்கள் நெருங்கிய திருக்காளத்தி மலையினது அடிவாரத்தில் சிரசு பொருந்தும்படி வணங்கி யெழுந்து, சிவந்த கண்களையுடைய ரிஷபத்தை வாகனமாகக் கொண்ட சிவபெருமான் வீற்றிருந் தருளும் மலையின் மேல் ஏறி வலமாக வந்து வணங்குகின்றவ ராயினார். -எ-று.

காதணிவெண் குழையானைக் காளத்திமலைக் கொழுந்தை,
வேதமொழி மூலத்தை விழுந்திறைஞ்சி எழுந்துபெருங்
காதல்புரி மனங்களிப்பக் கண்களிப்பப் பரவசமாய்
நாதனை "என்கண்ணுளான்" எனுந்திருந்தாண் டகம்நவின்றார். 345

(இ-ள்.) காதில் அணிந்த வெண்மையாகிய சங்கக் குழையை யுடையவரும், திருக்காளத்தி மலையின்மேல் வீற்றிருந்தருளும் கொழுந்து போன்றவரும், வேதங்களால் புகழ்ந்து சொல்லப் பட்ட காரணப் பொருளாயுள்ளவருமாகிய சிவபெருமானைப் பூமியில் விழுந்து வணங்கி யெழுந்து, பேரன்பு பொருந்திய மனமானது களிப்படையவும், தரிசித்த கண்கள் குளிரவும் ஆனந்தபரவசமடைந்து, சிவபெருமானைக் குறித்து "என் கண்ணுள்ளான்" என்று இறுதியிலுடைய திருத்தாண்டகத்தைப் பாடி யருளினார். -எ-று.

மலைச்சிகரச் சிகாமணியின் மருங்குறமுன் னேநிற்குஞ்
சிலைத்தடக்கைக் கண்ணப்பர் திருப்பாதம் சேர்ந்திறைஞ்சி
அலைத்துவிழுங் கண்ணருவி ஆகத்துப் பாய்ந்திழியத்
தலைக்குவித்த கையினராய்த் தாழ்ந்துபுறம் போந்தணைந்தார். 346

(இ-ள்.) திருக்காளத்தி மலையின் சிகரத்தில் வீற்றிருந் தருளும் தெய்வசிகாமணியாகிய சிவபெருமானுடைய வலப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாகத் திருமுன்னே நிற்கும் வில்லைப் பிடித்த நீண்ட கையை யுடைய கண்ணப்பநாயனாரது திருவடிகளை யடைந்து வணங்கி, ததும்பி விழுகின்ற ஆனந்தக் கண்ணீரருவியானது திருமேனியில் பெருகி யொழுகச் சிரசின் மேல் குவித்த கையையுடையவராய் வணங்கிப் புறத்தில் வந்தார். -எ-று.

சேணிலவு திருமலையில் திருப்பணியா யினசெய்து
தாணுவினை அம்மலைமேல் தாள்பணிந்த குறிப்பினால்
பேணிதிருக் கயிலைமலை வீற்றிருந்த பெருங்கோலங்
காணுமது காதலித்தார் கலைவாய்மைக் காவலனார். 347

(இ-ள்.) ஆகாயம் வரையிலு முயர்ந்த திருக்காளத்தி மலையில் செய்ய வேண்டிய திருப்பணிகளைச் செய்து, சிவபெருமானை அந்த மலையின் மேல் பிராட்டியாரோடு திருக்கயிலையில் வீற்றிருக்குங் கோலமாக வணங்கிய திருவுள்ளக்குறிப்பால், யாவராலும் துதிசெய்யத் தக்க ஸ்ரீகயிலாசகிரியில் வீற்றிருந்தருளும் பெரிய திருக்கோலத்தைத் தரிசிக்கவேண்டுமென்னும் விருப்பங்கொண்டார்; சாஸ்திரங் களின் உண்மையை யுணர்ந்த திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

அங்கண் மாமலை மேல்ம ருந்தைவ ணங்கி யாரு ளால்பிகப்
பொங்கு காதலின் உத்த ரத்திசை மேல்வி ருப்பொடு போதுவார்
துங்க மால்வரை கானி யாறு தொடர்ந்த நாடு கடந்தபின்
செங்கண் மால்விடை அண்ணல் மேவு திருப்ப ருப்பதம் எய்தினார். 348

(இ-ள்.) அழகிய இடமகன்ற பெரிய திருக்காளத்திமலையின் மேல் வீற்றிருந்தருளும் அமிர்தம் போன்ற சிவபெருமானை வணங்கி, நிறைந்த திருவருளினால் வடதிசைக்குப் போகவேண்டு மென்னும் ஆசையால் மகிழ்ந்து போகின்ற திருநாவுக்கரசு சுவாமிகள் உயர்ந்த பெரிய மலைகளும், காட்டாறுகளும் தொடர்ந்திருக்கின்ற நாடுகளைக் கடந்தபின்பு, சிவந்த கண்களையுடைய விஷ்ணுவாகிய ரிஷபத்தை வாகனமாகக் கொண்ட சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஸ்ரீசைலத்தை யடைந்தார். -எ-று.

மான விஞ்சையர் வான நாடர்கள் வான்இ யக்கர்கள் சித்தர்கள்
கான கின்னரர் பன்ன காதிபர் காம சாரி கணேமுதல்
ஞான மோனிகள் நாளும் நம்பரை வந்தி றைஞ்சி நலம்பெறுந்
தான மானதி ருச்சி லம்பை வணங்கி வண்டமிழ் சாற்றினார். 349

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) வலிமை பொருந்திய வித்தியாதரர்களும், விண்ணுலகத்திலுள்ள தேவர்களும், சிறந்த இயக்கர்களும், சித்தர்களும், இசைபாடுகின்ற கின்னரர்களும், நாகலோகத்தாரும், தம் இச்சையின் வழியே சஞ்சரிக்கின்றவர்களும், சிவஞானத்தையுடைய மௌனிகளும், நாள்தோறும் சிவபெருமானை வந்து வணங்கி வேண்டிய வரங்களைப் பெறுதற்குரிய இடமாகிய ஸ்ரீசைலத்தைத் தொழுது, வளம்பொருந்திய தமிழ்ப் பதிகத்தைப் பாடியருளினார். -எ-று.

அம்ம ருங்குக டந்து போமவர் ஆர்கொள் சூல அயிற்படைச்
செம்மல்வெண்கயி லைப்பொருப்பைநி னைந்தெழுந்தோர்சிந்தையால்
எம்ம ருங்குமொர் காத லின்றி இரண்டு பாலும் வியந்துளோர்
கைம்ம ருங்கணை யுந்தெலுங்கு கடந்து கன்னடம் எய்தினார். 350

(இ-ள்.) அந்தஸ்தலத்தில் நின்றும் நீங்கிச் செல்கின்றவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் கூர்மை பொருந்திய சூலாயுதத்தையேந்திய சிவபெருமான் வீற்றிருந்தருளும் வெள்ளிய திருக்கயிலாயமலையை நினைந்து, அதனைத் தரிசிக்க வேண்டுமென்று அதிகரித்தெழுந்த மனதோடு, அதுதவிர, மற்றை எந்த ஸ்தலங்களிலும் விருப்பமில்லாமல், இரண்டு பக்கத்திலும் வியப்படைந்து வருகின்ற அடியார்கள் சமீபத்தில் வரும்படி தெலுங்க தேசத்தைக் கடந்து கன்னட தேசத்தையடைந்தார். -எ-று.

கருந டங்கழி வாக ஏகிய பின்க லந்தவ னங்களும்
திருந தித்துறை யாவை யும்பயில் சேண்நெ டுங்கிரி வட்டையும்
பெருந லங்கிளர்நாடும் எண்ணில் பிறப டச்செறி பொற்பினால்
வருநெ டுங்கதிர் கோலு சோலைய மாள வத்தினை நண்ணினார். 351

(இ-ள்.) கன்னடதேசம் நீங்கும்படி போனபின்பு, மரங்கள் நெருங்கியிருக்கின்ற பலவனங்களும், அழகிய துறைகளையுடைய அநேகநதிகளும், நெடுந்தூரத்திலுயர்ந்த மலைவழிகளும், மிகுந்த செழிப்பினையுடை தேசங்களுமாகிய அளவில்லாதவழிகள் பிற்படும்படி, மரங்களுயர்ந்து நெருங்கியிருக்கும் அழகினால், ஆகாயத்தில் வருகின்ற சூரியன் தவழ்கின்ற சோலைகள் சூழ்ந்த மாளவதேசத்தயடைந்தார்.-எ-று.

அங்கு முற்றி அகன்று போகி அருஞ்சு ரங்கள் கடந்து சென்(று)
எங்கு மிக்க அறங்கள் நீடும் இலாட பூமி இகழ்ந்துபோய்
மங்குல் சுற்றிய வெற்பி னோடு வல[illegible] ஆறு கடந்தயற்
பங்க யப்பழ னத்து மத்திய பைதி ரத்தினை எய்தினார். 352

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அந்த மாளவ தேசத்தைக் கடந்து சென்று, அரிய காடுகளையும் தாண்டிப்போய், எவ்விடத்திலும் சிறந்த தருமங்கள் மிகுந்து நடக்கின்ற இலாட தேசத்தைக் கடந்து சென்று, மேகங்கள் சூழ்ந்து தவழும் மலைகளையும், வனங்களை யும், நதிகளையும் தாண்டி, பக்கத்தில் தாமரை மலர்களையுடைய வயல்கள் சூழ்ந்த மத்திய தேசத்தை யடைந்தார். -எ-று.

அன்ன நாடுக டந்து கங்கை அணைந்து சென்று வலங்கொளும்
மின்னு வேணியர் வார ணாசி விருப்பி னோடு பணிந்துடன்
பின்ன னைந்தவர் தம்மை அரங்கண் ஒழிந்து கங்கை கடந்துபோய்
மன்னு காதல்செய் நாவின் மன்னவர் வந்து கற்சுரம் முந்தினார். 353

(இ-ள்.) அந்த மத்தியதேசத்தைக் கடந்து, கங்காநதி பெருகி வலமாக வருகின்ற பிரகாசிக்கும் சடைமுடியையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் வாரணாசியை அன்பொடு வணங்கி, உடனே தமக்குப் பின்னாக வந்தவர்களை அவ் விடத்திலேயே விட்டுக் கங்கைநதியைக் கடந்து சென்று, கல்வழியை யடைந்தார். நிலைபெற்ற அன்பினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

மாக மீதுவ ளர்ந்த கானக மாகி எங்கும் மனித்தரால்
போக லாநெறி அன்றி யும்புரி கின்ற காதல்பொ லிந்தெழச்
சாக மூலப லங்கள் துய்ப்பன வுந்த விர்ந்துத னித்துநேர்
ஏகி னாரிர வும்பெ ருங்கயி லைக்கு லக்கிரி எய்துவார். 354

(இ-ள்.) ஆகாயம் வரையிலும் வளர்ந்திருக்கின்ற மரங்களை யுடைய காடுகள் நிறைந்துள்ளதாய், எவ்விடத்திலும் மனிதர் களால் போகக்கூடாத வழியாயிருந்தும், தாம்கொண்ட ஆசை யானது அதிகரிக்க, இலை-கிழங்கு - பழங்களாகிய இவைகளைப் புசித்தலையும் ஒழிந்து, ஒன்றியாய் நேராகவே பகலில் நடப்பதேயல்லாமல் இரவிலும் நடந்து சென்றார்; பெருமை பொருந்திய ஸ்ரீகயிலாசகிரியை அடைய வேண்டுமென்னும் விருப்பங்கொண்ட திருநாவுக்கரசு சுவாமிகள் -எ-று.

ஆய வாரிரு ளின்கண் ஏகுமவ் வன்பர் தம்மை அணைந்துமுன்
தீய வாயவி லங்கு வன்தொழில் செய்ய அஞ்சின நஞ்சுகால்
வாய நாக மணிப்ப ணங்கொள் விளக்கெ டுத்தன வந்துகால்
தோய வானவ ராயி னுந்தனி துன்ன ருஞ்சுரம் முன்னினார். 355

(இ-ள்.) அவ்வாறு மிகுந்த இராக்காலத்திலும் போகின்ற அந்தத் திருநாவுக்கரசு சுவாமிகளைக் கொடிய புலி முதலாகிய மிருகங்கள் சமீபத்தில் வந்து ஒரு இடையூறும் செய்யாமல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஞ்சிப்போயின; விஷத்தைக்கக்குகின்ற வாயினையுடைய பாம்புகள் படத்திலுள்ள மாணிக்கங்களாகிய விளக்கைக் காட்டின; தேவர்களாயிருந்தாலும் கால் பூமியில்படும்படி தனியேபோவதற்குக் கூடாததாகிய பாலைநிலைத்தை யடைந்தார். -எ-று.

வெங்க திர்ப்பகல் அக்க டத்திடை வெய்ய வன்கதிர் கைபரந்(து)
எங்கு மிக்க பிளப்பில் நாகர்தம் எல்லை புக்கெரி கின்றன
பொங்க ழற்றெறு பாலை வெந்நிழல் புக்க சூழல் புகும்பகல்
செங்க திர்க்கனல் போலும் அத்திசைதிண்மை மெய்த்தவர் நண்ணினார். 356

(இ-ள்.) அந்தப் பாலைநிலத்தில் கொடிய உஷ்ணத்தைத் தருகின்ற பகற்காலத்தில் சூரியனுடைய கிரணங்கள் மிகுதியாகப் பரவி எவ்விடத்திலும் அதிகரித்திருக்கும் வெடிப்பின் வழியாக நாகலோகத்தின் எல்லையை யடைந்து விளங்குகின்ற தோற்றம் எவ்வாறிருந்ததென்றால், சுவாலித்து எரிகின்ற அக்கினியையும் வருத்தத்தக்க அப்பாலையினது கொடிய நிழல் இருந்துள்ள இடத்தை (அப்பாலை தன்னை வருத்தாமல்) சரணமாக வடையும் சூரியனுடைய சிவந்த கிரணங்களின் காந்தியை யொத்திருக்கும்; அத்தன்மையாகிய திசையில் உறுதியாகிய மெய்த் தவத்தினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் போயினார். -எ-று.

இங்ங னம்இர வும்ப கற்பொழு தும்ம ருஞ்சுரம் எய்துவார்
பங்க யம்புரை தாள்ப ரட்டள வும்ப சைத்தசை தேயவும்
மங்கை பங்கர்தம் வெள்ளி மால்வரை வைத்த சிந்தை மறப்பரோ?
தம்க ரங்கள் இரண்டு மேகொடு தாவி ஏகுதல் மேவினார். 357

(இ-ள்.) இவ்வாறு இராக்காலமும் பகற்காலமும் அடைதற் கரிய பாலை நிலத்தில் செல்கின்ற திருநாவுக்கரசு சுவாமிகள் தாமரை மலரையொத்த திருவடிகள் பாடுவரையிலும் பசையை யுடைய மாமிசந் தேய்ந்துபோயும், பார்வதிதேவியை இடப் பாகத்திலுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் பெருமை பொருந்திய திருக்கயிலாயமலையில் சென்று தரிசிக்க வேண்டு மென்று தாம்கொண்ட எண்ணத்தை மறக்காதவராய்த் தம்முடைய இரண்டு கைகளையுமே ஆதரவாகக் கொண்டு தாவிப்போகும்படி விருப்பமுற்றார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கைக ளும்மணி பந்த சைந்துற வேக ரைந்துசி தைந்தபின்
மெய்க லந்தெழு சிந்தை அன்பின் விருப்பு மீமிசை பொங்கிட
மெய்க டுங்கனல் வெம்ப ரற்புகை மூளு மத்த முயங்கியே
செல்ல வருந்தி உந்தினர் மார்பினால். 358

(இ-ள்.) இரண்டு கைகளும் மணிக்கட்டு அசைந்து கரைந்து தேய்ந்தபின்பு உண்மையோடு கலந்தெழுந்த மனதில் தோன்றிய அன்பின் உறுதியானது மேலுமேலும் அதிகரிக்க, நெருங்கிய கொடிய நெருப்பை யொத்த வெவ்விய பருக்கைக் கற்களி னின்றுண்டாகிய புகைகள் எழும்புகின்ற வழியையடைந்து, காளகண்டத்தையுடைய சிவபெருமானது அடியவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் போவதற்கு வருத்தப்பட்டு மார்பினால் நகர்ந்து சென்றார். -எ-று.

மார்ப முந்தசை நைந்து சிந்தி வரிந்த என்பு முரிந்திட
நேர்வ ருங்குறி நின்ற சிந்தையின் நேசம் ஈசனை நேருநீ(டு)
ஆர்வம் அங்குயிர் கொண்டு கைக்கும் உடம்ப டங்கவும் ஊன்கெடச்
சேர்வ ரும்பழு வம்பு ரண்டுபு ரண்டு சென்றனர் செம்மையோர். 359

(இ-ள்.) மார்பும் சதைகள் நைந்துபோய் இற்றுவிழ, கட்டப்பட்ட எலும்புகளும் முறிய, தாம் திருக்கயிலாயத்தை அடையாமையாகிய குறையானது பொருந்தியிருக்கின்ற மனதில், தம்மால் நேகிக்கப்படும் சிவபெருமானை யடைய வேண்டுமென்னும் மிகுந்த ஆசையானது அங்கு உயிரால் நடத்தும் தம்முடம்பு முழுவதையும் முன்னே கொண்டு, யாவராலும் அடைதற் கருமையாகிய அந்தக் காட்டில் புரண்டு புரண்டு போயினார், திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

அப்பு றம்புரள் கின்ற நீளிடை அங்கம் எங்கும் அரைந்திடச்
செப்ப ருங்கயி லைச்சி லம்படி சிந்தை சென்றுறும் ஆதலால்
மெய்ப்பு றத்தில் உறுப்ப ழிந்தபின் மெல்லஉந்து முயற்சியும்
தப்பு றச்செய லின்றி அந்நெறி தங்கி னார்தமிழா ளியார். 360

(இ-ள்.) அப்புறம் புரண்டுகொண்டு போகின்ற மார்க்கத் தில், தேகமுழுவதும் தேய, சொல்லுதற்கரிய திருக்கயிலாயமலை யினிடத்தில் தரிசிக்க வேண்டுமென்று மனம் செல்லுதலினால், தேகத்திலுள்ள அவயவங்களெல்லாம் சிதைந்த பின்பு, மிருதுவாக நகர்ந்து செல்லும் உயிர்முயற்சியும் நீங்க, ஒரு செயலுமில்லாமல் அந்த வழியிலேயே கிடந்தார்; தமிழ்த் தலைவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்ன தன்மையர் கயிலையை அணைவதற் கருளார்
மன்னு தீந்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த
நன்னெ டும்புனல் தடமும்ஒன் றுடன்கொடு நடந்தார்
பன்ன கம்புனை பரமரோர் முனிவராம் படியால். 361

(இ-ள்.) அப்படிப்பட்ட தன்மையையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்கயிலாயமலையை யடைவதற்குக் கிருபை செய்யாதவராய், நிலைபெற்ற மதுரமாகிய தமிழ்ப் பதிகத்தினால் பூமியின்மேல் பின்பும் தம்மைத் துதிக்கும் பொருட்டு, பாம்பை ஆபரணமாக அணிந்த சிவபெருமான் ஒரு தவமுனிவ ரென்று சொல்லத்தக்க திருவுருவமெடுத்து, நல்ல நிரையுடைய ஒரு தடாகத்தையும் அவ்விடத்தில் உண்டாக்கிக் கொண்டு நடந்தருளினார். -எ-று.

வந்து மற்றவர் மருங்குற அணைந்துநேர் நின்று
நொந்து நோக்கிமற் றவர்எதிர் நோக்கிட நுவல்வார்
"சிந்தி இவ்வுறுப் பழிந்திட வருந்திய திறத்தால்
இந்த வெங்கடத் தெய்தியதென்?" எனஇசைத்தார். 362

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகளுக்குச் சமீபத்தில் வந்து எதிரே நின்று கொண்டு இரக்கத்தோடு பார்த்து, அவர் தம்மை எதிராகப் பார்த்தபொழுது அம்முனிவர் சொல்கின்றார்; எவ்வாறெனில், உம்முடைய அவயவங்களெல்லாம் சிதைந்து அழிந்துபோக மனவருத்தத்தோடு இந்தக் கொடிய காட்டில் என்ன காரியத்திற்காக வந்தீர் என்று கேட்டார். -எ-று.

மாசில் வற்கலை ஆடையும் மார்பின்முன் நூலும்
தேசு டைச்சடை மவுலியும் நீறும்மெய் திகழ
ஆசின் மெய்த்தவ ராகிநின் றவர்தமை நோக்கிப்
பேச உற்றதோர் உணர்வுற விளம்புவார் பெரியோர். 363

(இ-ள்.) குற்றமற்ற மரவுரியாகிய ஆடையும், மார்பினிடத்தில் பூணூலும், பிரகாசம் பொருந்திய சடைமுடியும், திருவெண்ணீறும் திருமேனியில் விளங்க, குற்றமற்ற மெய்மையாகிய தவவேடங் கொண்டவராய் நின்ற சிவபெருமானாகிய முனிவரைப் பார்த்துப் பேசும்படியான ஒரு அற்பவுணர்ச்சியுண்டாகத் திருநாவுக்கரசு சுவாமிகள் சொல்கின்றார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"வண்டு லாங்குழல் மலைமக ளுடன்வட கயிலை
அண்டர் நாயகர் இருக்கம்அப் பரிசவர் அடியேன்
கண்டு கும்பிட விருப்பொடுங் காதலின் அடைந்தேன்;
கொண்ட என்குறிப் பிதுமுனியே!" எனக்கூற. **364**

(இ-ள்.) உத்தரகயிலாசத்தில் தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமான் வண்டுகள் தேனுண்ணும்படி உலாவுகின்ற கூந்தலையுடைய உமாதேவிசமேதராய் வீற்றிருந்தருளும் திருக்கோலத்தை அவரது அடியேனாகிய யான் தரிசித்து வணங்கும் பொருட்டு விருப்பத்தோடு வந்தேன்; முனிவரே அடியேன் கருத்திற் கொண்டிருக்கின்ற எண்ணம் இதுதான் என்று சொல்ல. -எ-று.

"கயிலை மால்வரை யாவது காசினி மருங்கு
பயிலும் மானுடப் பான்மையோர் அடைவதற் கெளிதோ?
அயில்கொள் வேற்படை அமரரும் அணுகுதற் கரிதால்;
வெயில்கொள் வெஞ்சுரத் தென்செய்தீர்! வந்"தென விளம்பி. **365**

(இ-ள்.) பெருமை பொருந்திய ஸ்ரீகயிலாசகிரியானது பூமியில் வாசஞ்செய்கின்ற மானிடத்தன்மையுடையவர்கள் அடைவதற்கு எளிதாகுமோ? கூர்மை பொருந்திய வேலாயுதத்தையுடைய தேவர்களும் அடைகிறதற்கு அரிதாயிருக்கின்றது; அங்ஙனமாக, நீர் உஷ்ணத்தையுடைய இந்தப் பாலை நிலத்தில் வந்து என்ன காரியஞ் செய்தீர் என்று சொல்லி. -எ-று.

"மீளும் அத்தனை உமக்கினிக் கடன்" எனவிளங்கும்
தோளும் ஆகமும் துவளுமுந் நூல்முனி சொல்ல
"ஆளும் நாயகன் கயிலையில் இருக்கைகண் டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டுமீ ளேன்"என மறுத்தார். **366**

(இ-ள்.) இனி திரும்பிப் போவதே உமக்கு உத்தமமாகும் என்று விளங்குகின்ற தோளிலும் மார்பிலும் அசைகின்ற பூணூலைத் தரித்தசிவபெருமானாகிய முனிவர் சொல்ல, (அதற்குத் திருநாவுக்கரசு சுவாமிகள்) எம்மை அடிமையாக வுடைய சிவபெருமான் உத்தரகயிலாசத்தில் வீற்றிருந்தருளும் திருக்கோலத்தைத் தரிசித்தல்லாமல், அநித்தியமாகிய இந்த உடம்பைக்கொண்டு திரும்பேன் என்று மறுந்துவிட்டார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆங்கு மற்றவர் துணிவறிந் தவர்தமை அறிய
நீங்கு மாதவர் விசும்பிடைக் கரந்துநீள் மொழியால்
"ஓங்கு நாவினுக் கரசனே! எழுந்திர்" என் றுரைப்பத்
தீங்கு நீக்கிய யாக்கைகொண் டெழுந்தொளி திகழ்வார். 367

(இ-ள்.) அவ்விடத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் கொண்ட துணிவைத் திருவுள்ளத்திற் கொண்டு, அவர் தம்மைக் கயிலாச பதியென்று அறிந்துகொள்ளும் பொருட்டு, அவ்விடத்தினின் றும் நீங்கிய முனிவர் ஆகாயத்தில் மறைந்து, சிறந்த அசரீரி யினால், உயர்ந்த திருநாவுக்கரசனே! எழுந்திரு என்று சொல்ல, அப்போது அழிந்த உறுப்புக்களெல்லாம் முன்போல நிரம்பப் பெற்றுச் சிறந்த திருமேனியோடும் எழுந்து விளங்கினார். -எ-று.

"அண்ணலே! எனை ஆண்டுகொண் டருளிய அமுதே!
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே!
கண்ணி னால்திருக் கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரி" எனப் பணிந்தார். 368

(இ-ள்.) பெருமையிற் சிறந்தவரே! என்னை அடிமைகொண் டருளிய அமிர்தமானவரே! ஆகாயத்தில் மறைந்து நின்று அசரீரியாகத் திருவருள் புரிந்த வேதமுதல்வரே! எனது இரண்டு கண்களினாலும் திருக்கயிலாயத்தில் வீற்றிருந்தருளும் தேவரீ ருடைய திருக்கோலத்தை அடியேன் அடைந்து தரிசித்துத் தொழும்படி இரங்கி அருள் செய்யவேண்டுமென்று வணங் கினார். -எ-று.

தொழுதெ ழுந்தநற் றொண்டரை நோக்கிவிண் தலத்தில்
எழுபெ ருந்திரு வாக்கினால் இறைவர் "இப் பொய்கை
முழுகி நம்மைநீ கயிலையில் இருந்தஅம் முறைமை
பழுதில் சீர்திரு வையாற்றிற் காண்" எனப் பணித்தார். 369

(இ-ள்.) இந்தப் பிரகாரம் வணங்கி எழுந்த நல்ல திருநாவுக் கரசு சுவாமிகளைச் சிவபெருமான் பார்த்து, ஆகாயத்தினின்றும் எழுந்த பெருமைபொருந்திய அசரீரிவாக்கினால், நீ இந்தத் தடாகத்தில் முழுகி, நம்மைத் திருக்கயிலாசத்தில் வீற்றிருக்கும் முறைமைப்படியே குற்றமற்ற சிறப்பினையுடைய திருவை யாற்றில் தரிசிப்பாயாகவென்று கட்டளையிட்டருளினார்.-எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏற்றி னார்அருள் தலைமிசைக் கொண்டெழுந் திறைஞ்சி
"வேற்று மாகிவிண் ணாகிநின்றார்" மொழி விரும்பி
ஆற்றல் பெற்றஅவ் வண்ணலார் அஞ்செழுத் தோதிப்
பாற்ற டம்புனற் பொய்கையில் மூழ்கினார் பணியால். 370

(இ-ள்.) அன்பினுறுதியைப் பெற்றவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் ரிஷபவாகனத்தையுடைய சிவபெருமானது திருவருளைச் சிரசின்மேல் கொண்டு, எழுந்து வணங்கி, "வேற்றாகிவிண்ணாகி நின்றாய்" என்னும் முதலையுடைய போற்றித் திருத்தாண்டகத்தை அருளிச் செய்து, சிவபெருமானுக்குரிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரித்து ஆண்டவருடைய கட்டளைப்படியே பால்போலும் நீரையுடைய விசாலமாகிய தடாகத்தில் மூழ்கினார். -எ-று.

ஆதி தேவர்தந் திருவருட் பெருமையார் அறிந்தார்?
போத மாதவர் பனிமலர்ப் பொய்கையில் மூழ்கி
மாதொர் பாகனார் மகிழும்ஐ யாற்றிலோர் வாவி
மீது தோன்றிவந் தெழுந்தனர் உலகெலாம் வியப்ப. 371

(இ-ள்.) எல்லாத் தேவர்களுக்கும் முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமானது திருவருளின் பெருமையை யாவர் தாம் அறிந்தவர்கள்; சிவஞானம் நிறைந்த தவத்தினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் குளிர்ந்த மலர்களையுடைய தடாகத்தில் முழுகி, உமாதேவியை இடப்பாகத்திலுடைய சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருவையாற்றிலுள்ள ஒரு தடாகத்திலிருந்து எழுந்து உலகத்தாரெல்லாம் ஆச்சரியப்படும்படி மேலே வந்தார். -எ-று.

வம்பு லாமலர் வாவியின் கரையில்வந் தேறி
உம்பர் நாயகர் திருவருட் பெருமையை உணர்வார்
"எம்பி ரான்தருங் கருணைகொல் இது" என இருகண்
பம்பு தாரைநீர் வாவியிற் படிந்தெழும் படியார். 372

(இ-ள்.) வாசனை வீசுகின்ற மலர்களையுடைய தடாகத்திலிருந்து கரையில் ஏறிவந்து, தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமானது திருவருளின் பெருமையை யுணர்ந்தவராகி, இவ்வாறு எனக்கு நேரிட்டது எமது ஆண்டவர் தந்தருளிய திருவருள்போலுமென்று இரண்டு கண்களிலுமிருந்து ததும்பு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கின்ற தாரையாகிய ஆனந்தக் கண்ணீர் என்னும் தடாகத்தில் மறுபடியும் முழுகி யெழுந்தன்மையை யுடையவராயினார்.-எ-று.

மிடையும் நீள்கொடி வீதிகள் விளங்கிய ஐயா(று)
உடைய நாயகர் சேவடி பணியவந் துறுவார்
அடைய அப்பதி நிற்பவுஞ் சரிப்பவு மான
புடைஅ மர்ந்ததந் துணையொடும் பொலிவன கண்டார். 373

(இ-ள்.) நீண்ட கொடிகளை நெருங்கக்கட்டியிருக்கின்ற வீதிகளால் பிரகாசிக்கின்ற திருவையாற்றில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானது சிவந்த திருவடிகளை வணங்கும்படி வருகின்ற திருநாவுக்கரசு சுவாமிகள் அந்தத் திருப்பதியிலுள்ள சரம் அசரமாகிய எல்லாப் பொருள்களும் பக்கத்தில் தங்கிய தங்கள்தங்கள் துணையோடும் கூடியிருக்கும் தோற்றத்தைப் பார்த்தார். -எ-று.

பொன்ம லைக்கொடி யுடன்அமர் வெள்ளியம் பொருப்பில்
தன்மை யாம்படி சத்தியுஞ் சிவமுமாஞ் சரிதைப்
பன்மை யோனிகள் யாவையும் பயில்வன பணிந்தே
மன்னு மாதவர் தம்பிரான் கோயில்முன் வந்தார். 374

(இ-ள்.) பர்வதராசபுத்திரியாகிய உமாதேவியாரோடு வீற்றிருந்தருளும் ஸ்ரீகயிலாசதரிசனம் போலிருக்கும்படி சத்தியும் சிவமுமாகவிருக்கின்ற நிலைமையோடு பலவகைப்பட்ட சீவராசிகளெல்லாம் இருக்கும் முறைமையைக் கண்டு வணங்கி, நிலைபெற்ற பெருந்தவத்தினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமான் வீற்றிருந்தருளும்திருக்கோயிலுக்கு முன்பாக வந்தார். -எ-று.

காணும் அப்பெருங் கோயிலுங் கயிலைமால் வரையாய்ப்
பேணும் மால்அயன் இந்திரன் முதற்பெருந் தேவர்
பூணும் அன்பொடு போற்றிசைத் தெழும்ஒலி பொங்கத்
தாணு மாமறை யாவையும் தனித்தனி முழங்க. 375

(இ-ள்.) திருவையாற்றில் காணப்பட்ட அந்தப் பெரிய திருக்கோயிலும் பெருமைபொருந்திய ஸ்ரீகயிலாசகிரியாய், யாவரும் விரும்புகின்ற திருமால் - பிரமன் - இந்திரன் முதலாகிய பெரியதேவர்கள் நிறைந்த பேரன்புடனே தோத்திரஞ் செய்தலாலெழுகின்ற பேரொலியானது எவ்விடத்திலும் நிறையவும், மகிமை பொருந்திய வேதங்களெல்லாம் தனித் தனியாக முழங்கவும். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவர் தானவர் சித்தர்விச் சாதரர் இயக்கர்
மேவு மாதவர் முனிவர்கள் புடையெலாம் மிடையக்
காவி வாள்விழி அரம்பையர் கானமும் முழவும்
தாவில் ஏழ்கடல் முழக்கினும் பெருகொலி தழைப்ப. 376

(இ-ள்.) தேவர்களும், அசுரர்களும் சித்தர்களும், வித்தியா தரர்களும், இயக்கர்களும், நிலைபெற்ற தவத்தர்களும், முனிவர் களும்\\புக்கங்களிலெல்லாம் நெருங்கியிருக்கவும், நீலோற்பல மலரையும் வாளையுமொத்த கண்களை யுடைய தேவரம் பையர்கள் பாடுகின்ற சங்கீதமும், மத்தளவோசையும் கெடுதலில் லாத சப்த சமுத்திரங்களின் முழக்கத்தைப் பார்க்கிலும் அதிகமா முழங்கவும். -எ-று.

கங்கை யேமுதல் தீர்த்தமாங் கடவுள்மா நதிகள்
மங்க லம்பொலி புனற்பெருந் தடங்கொடு வணங்க
எங்கும் நீடிய பெருங்கண நாதர்கள் இறைஞ்சப்
பொங்கி யங்களால் பூதவே தாளங்கள் போற்ற. 377

(இ-ள்.) தீர்த்தங்களென்று சொல்லப்பட்ட கங்கை முதலாகிய தெய்வத் தன்மை பொருந்திய அநேக நதிகள் மங்களம் பொருந்திய நீர்நிறைந்த பெரியதடாகங்களினு ருவங்கொண்டு வணங்கவும், எவ்விடத்திலும் நிறைந்த பெருமை தங்கிய கணநாதர்கள் தொழவும், பலவாத்தியங்களினால் பூதவேதாளங்கள் தோத்திரஞ் செய்யவும். -எ-று.

அந்தண் வெள்ளிமால் வரையிரண் டாம்என அணைந்தோர்
சிந்தை செய்திடச் செங்கண்மால் விடைஎதிர் நிற்ப
முந்தை மாதவப் பயன்பெறு முதன்மையால் மகிழ்ந்தே
நந்தி எம்பிரான் நடுவிடை யாடிமுன் நணுக. 378

(இ-ள்.) அழகும் குளிர்ச்சியும் பொருந்திய இரண்டு பெரிய வெள்ளிமலைகள் நிற்கின்றனவென்று அடைந்தவர்கள் நினைக்கும்படி, சிவந்த கண்களையுடைய விஷ்ணுவாகிய ரிஷபம் எதிரே நிற்கப் பூர்வத்தில் செய்த மகத்தாகிய தவத்தின் பயனைத் தான் அத்தலத்தில் பெற்ற முதன்மையினால் மகிழ்ச்சி யடைந்து எமது ஆண்டவராகிய திருநந்திதேவர் நடுவிலுள்ள கண்ணாடி முன்னே நிற்கவும். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனஇடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார். ***379***

(இ-ள்.) வெள்ளிமலையின்மேல் ஒரு மரகதக் கொடியே பிரகாசிக்கின்ற தெளிவாகிய பேரொளியினையுடைய பவள மலைபோல, இடதுபாகத்தில் தமக்குத் திருமேனியாகக் கொண்ட பார்வதி யாரோடு கூடி வீற்றிருந்தருள்கின்ற அருள் வள்ளலாகிய சிவபெருமானைத் தமக்குமுன்னே தரிசித் தருளினார்; திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

கண்ட ஆனந்தக் கடலினைக் கண்களால் முகந்து
கொண்டு கைகுவித் தெதிர்விழுந் தெழுந்துமெய் குலைய
அண்டர் முன்புநின் றாடினார்; பாடினார்; அழுதார்;
தொண்ட னார்க்கங்கு நிகழ்ந்தன யார்சொல வல்லார்? ***380***

(இ-ள்.) தாம் தரிசித்த பேரானந்தக் கடலாகிய சிவபெருமானைக் கண்களாகிய பாத்திரத்தால் முகந்து உட்கொண்டு, இரண்டு கைகளையுங் குவித்து எதிரே விழுந்து வணங்கி யெழுந்து, தேகம்நடுங்கச் சிவபெருமான் திருமுன்னே நின்று ஆனந்தக் கூத்தாடினார்; பாடினார்; ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்; அடியவராகிய திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு அவ்விடத்தில் உண்டாகிய பேரானந்தத்தை யாவர்தாம் சொல்லவல்லவர்கள். -எ-று.

மூன்பு கண்டுகொண்(டு) அருளின்ஆர் அமுதுண்ண மூவா
அன்பு பெற்றவர் அளவிலா ஆர்வம்முன் பொங்கப்
பொன்பி றங்கிய சடையரைப் போற்றுதாண் டகங்கள்
இன்பம் ஓங்கிட ஏத்தினார் எல்லையில் தவத்தோர். ***381***

(இ-ள்.) சுவாமியை எதிராகத் தரிசித்துக்கொண்டு திருவருளினால் விளைந்த சிவானந்தத் தெள்ளமுதத்தை யுண்ணும்படி, கெடாத அன்பைப் பெற்றவரும் அளவில்லாத பெருந்தவத்தினையுடையவருமாகிய திருநாவுக்கரசு சுவாமிகள் உளவுபடாத ஆசையானது முற்பட்டு அதிகரிக்க, பொன்னைப் போல் விளங்குகின்ற சடைமுடியையுடைய சிவபெருமானைத் துதிக்கின்ற திருத்தாண்டகங்களால் பேரின்பமுண்டாகும்படி ஸ்தோத்திரஞ் செய்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆய வாறுமற் றவர்மனங் களிப்புறக் கயிலை
மேய நாதர்தம் துணையொடும் வீற்றிருந் தருளித்
தூய தொண்டரும் தொழுதெதிர் நிற்கஅக் கோலம்
சேய தாக்கினார் திருவையாறு அமர்ந்தமை திகழ. 382

(இ-ள்.) அவ்விதமாகத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவுள்ளங் களிப்படையும்படி ஸ்ரீ கயிலாசத்தில் வீற்றிருந் தருளும் சிவபெருமான் பார்வதியாரோடு காட்சி கொடுத்தருளி, பரிசுத்தராகிய அப்பர்சுவாமிகளும் தொழுதுகொண்டு எதிரே நிற்க அந்தத் திருக்கோலத்தை மறைத்தருளினார்; திருவை யாற்றில் அத்திருக்கோலத்தோடு வீற்றிருந்தருளுந் தன்மை உலகத்தில் விளங்கும்படி. -எ-று.

ஐயர் கோலம்அங் களித்தகன் றிடஅடித் தொண்டர்
மையல் கொண்டுளம் மகிழ்ந்திட வருந்திமற் "றிங்குச்
செய்ய வேணியர் அருளிது வோ" எனத் தெளிந்து
வையம் உய்ந்திடக் கண்டமை பாடுவார் மகிழ்ந்து. 383

(இ-ள்.) சிவபெருமான் தமது திருக்கோலத்தைக் காண்பித்து அவ்விடத்தினின்றும் நீங்க, திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் மனமகிழ்வடைதலால் பரவசப்பட்டு வருந்தி, இவ்வாறாதற்கு இங்குச் சிவந்த சடைமுடியையுடைய சிவபெருமானது திருவருளிதுவோவென்று தெளிவடைந்து, உலகத்தார் பிழைக்கும்படி தாம் தரிசனஞ் செய்ய தோற்றத்தைச் சந்தோஷமுற்றுப் பாடுவாராயினார். -எ-று.

"மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும்" என்னும்
கேதறு தண்டமிழச் சொல்லால் குலவு திருப்பதி கங்கள்
"வேத முதல்வர்ஐ யாற்றில் விரவுஞ் சராசரம் எல்லாம்
காதல் துணையொடும் கூடக் கண்டேன்" எனப்பாடி நின்றார். 384

(இ-ள்.) "மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்" என்னும் முதலையுடைய குற்றமற்ற இனிய தமிழ்ச் சொற்களால் விளங்குகின்ற திருப்பதிகங்களை வேதமுதல்வ ராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருவையாற்றில் நெருங்கியிருக்கும் சராசரங்களெல்லாம் விருப்பம்பொருந்திய தம் துணையோடு கூடியிருக்கும்படி கண்டேனென்று பாடி யருளினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்டு தொழுது வணங்கிக் கண்ணுத லார்தமைப் போற்றிக்
கொண்ட திருத்தாண் டகங்கள் குறுந்தொகை நேரிசை அன்பின்
மண்டு விருத்தங்கள் பாடி வணங்கித் திருத்தொண்டு செய்தே
அண்டர் பிரான்திரு வையா றமர்ந்தனர் நாவுக் கரசர். 385

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் அவ்வாறு சிவபெருமானை உமாதேவியாரோடு தரிசித்து அஞ்சலி செய்து சாஷ்டாங்கமாக வணங்கித் துதித்து, எடுத்துக் கொண்ட திருத்தாண்டகங்கள், திருக்குறுந்தொகை, திருநேரிசை, அன்புநிறைந்த திருவிருத்தங்கள் இவைகளைப்பாடி வணங்கி, உழவாரத் திருத்தொண்டு செய்து, தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருவையாற்றில் எழுந்தருளி யிருந்தார். -எ-று.

நீடிய அப்பதிநின்று நெய்த்தான மேமுத லாக
மாடுயர் தானம் பணிந்து மழபாடி யாரை வணங்கிப்
பாடிய செந்தமிழ் மாலை பகர்ந்து பணிசெய்து போற்றித்
தேடிய மாலுக் கரியார்திருப்பூந் துருத்தியைச் சேர்ந்தார். 386

(இ-ள்.) சிறப்புப் பொருந்திய அந்தத் திருவையாற்றின்றும் திருநெய்த்தான்ம முதலாகிய பக்கங்களிலிருக்கும் உயர்ந்த ஸ்தலங்களைப் பணிந்து, திருமழபாடியில் வீற்றிருந்தருளும் சிவபெருமானை வணங்கித் தாம் பாடுகின்றதாகிய செந்தமிழ்த் திருப்பதிகத்தைப்பாடி யருளித் திருப்பணி செய்து துதித்து, முன்னாளில் பன்றியுருவங்கொண்டு திருவடியைத்தேடி விஷ்ணுவுக்கு அரியவராகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருப்பூந்துருத்தியென்னும் ஸ்தலத்தையடைந்தார். -எ-று.

சேர்ந்து விருப்பொடும் புக்குத் திருநடை மாளிகை முன்னர்ச்
சார்ந்து வலங்கொண் டிறைஞ்சித் தம்பெரு மான்திரு முன்பு
நேர்ந்த பரிவொடுந் தாழ்ந்து நிறைந்தொழி யாஅன்பு பொங்க
ஆர்ந்தகண் ணீர்மழை தூங்க அயர்வுறும் தன்மைய ரனார். 387

(இ-ள்.) திருப்பூந்துருத்தியை யடைந்து விருப்பத்தோடு உள்ளே புகுந்து திருக்கோயிலின் முன்னடைந்து பிரதக்ஷிணஞ் செய்து தொழுது, தமது ஆண்டவருடைய சந்நிதியில் பொருந்திய ஆசையோடும் வணங்கி, நிறைந்து நீங்காத பேரன்பானது அதிகரித்தலால் ஒழுகுகின்ற ஆனந்தக் கண்ணீர் மழைபோலச் சொரியப் பரவசமடைகின்ற தன்மையை யுடையவராயினார். -

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்பூந் துருத்தி அமர்ந்த செஞ்சடை யானைஆன் ஏற்றுப்
பொருப்பூர்ந் தருளும் பிரானைப் பொய்யிலி யைக்கண்டேன்என்று
விருப்புறு தாண்டகத் தோடு மேவிய காதல் விளைப்ப
"இருப்போம் திருவடிக் கீழ்நாம்" என்னும் குறுந்தொகை பாடி. 388

(இ-ள்.) திருப்பூந்துருத்தியென்னும் ஸ்தலத்தில் வீற்றிருந் தருளும் சிவந்த சடைமுடடியையுடையவரும், மலைபோன்ற ரிஷபத்தை வாகனமாக நடத்துகின்றவருமாகிய சிவபெருமானைக் குறித்து "பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன்" என்று அன்பு பொருந்திய திருத்தாண்டகத்தோடு மிகுந்த ஆசையானது அதிகரிக்க "சேவடிக்கீழ் நாமிருப்பதே" என்னும் இறுதியையுடைய திருக்குறுந்தொகையையும் அருளிச்செய்து. -எ-று.

அங்குறை யுந்தன்மை வேண்டி "நாமடி போற்றுவ" தென்று
பொங்கு தமிழ்ச்சொல் விருத்தம் போற்றிய பாடல் புரிந்து
தங்கித் திருத்தொண்டு செய்வார் தம்பிரா னார்அருள் பெற்றுத்
திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஆங்கொன்று செய்தார். 389

(இ-ள்.) அத்திருப்பூந்துருத்தியில் சிவபெருமான் வீற்றிருந் தருளும் திருக்கோலத்தை விரும்பி "நாமடிபோற்றுவதே" என்று இறுதியிலுள்ள சிறந்த தமிழ்ச் சொற்களாலமைந்த திருவிருத்தமாகத் துதித்த திருப்பாடலை அருளிச்செய்து, சிவபெருமானது திருவருளைப் பெற்று அங்கு வாசஞ்செய்து திருத்தொண்டு செய்யவேண்டியவராய், சந்திரனும் சூரியனும் தவழும்படியான உயர்ந்த ஒரு திருமடத்தை அவ்வூரில் கட்டுவித்தார். -எ-று.

பல்வகைத் தாண்டகத் தோடும் பரவுந் தனித்தாண் டகமும்
அல்லல் அறுப்பவர் தானத் தடைவு திருத்தாண் டகமும்
செல்கதி காட்டிடப் போற்றுந் திருஅங்க மாலையும் உள்ளிட்(டு)
எல்லையில் பன்மைத் தொகையும் இயம்பினார் ஏத்தி இருந்தார். 390

(இ-ள்.) பலவகைத் திருத்தாண்டகமும், புகழ்கின்ற தனித்திருத்தாண்டகமும், பிறவித் துன்பத்தை யொழித்தருளும், சிவபெருமானது திருப்பதிகளை யெடுத்துச் சொல்லுகின்ற அடைவுதிருத்தாண்டகமும், முத்திநெறியைக் காட்டும்படி துதிக்கத்தகுந்த திருவங்கமாலையும் இவை முதலாக அளவில் லாத பல திருப்பதிகங்களையும் பாடித் துதித்து, அங்கு எழுந் தருளியிருந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொன்னிவலங் கொண்டதிருப் பூந்துருத்தி அவர்இருப்பக்
கன்மனத்து வல்லமணர் தமைவாதிற் கட்டழித்துத்
தென்னவன்கூன் நிமிர்த்தருளித் திருநீற்றின் ஒளிகண்டு
மன்னியசீர்ச் சண்பைநகர் மறையவனார் வருகின்றார். 391

(இ-ள்.) காவிரி நதியானது வலமாக வருகின்ற திருப்பூந்துருத்தி யென்னும் ஸ்தலத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் வாசஞ்செய்து கொண்டிருக்க, கல் மனதையுடைய கொடிய சமணர்களை வாதஞ்செய்து அழித்து, நின்ற சீர்நெடுமாற நாயனாரென்னும் பாண்டியராசனுடைய முதுகின் கூனை நிமிர்த்து, திருநீற்றின் ஒளியை விளங்கச் செய்து, நிலைபெற்ற சிறப்பினையுடைய சீகாழித் தலைவராகிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் வருகின்றவராயினார். -எ-று.

தீந்தமிழ்நாட் டிடைநின்றும் எழுந்தருளிச் செழும்பொன்னி
வாய்ந்தவளந் தருநாட்டு வந்தணைந்தார் வாக்கினுக்கு
வேந்தர்இருந் தமைகேட்டு "விரைந்தவர்பால் செல்வன்"எனப்
பூந்துருத்தி வளம்பதியின் புறம்பணையில் வந்தணைந்தார். 392

(இ-ள்.) இனிய தமிழையுடைய பாண்டிநாட்டி னின்றும் எழுந்தருளிச் செழுமை பொருந்திய காவிரி நதியானது சிறந்த வளத்தைத் தருகின்ற சோழநாட்டில் எழுந்தருளி வந்த திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருப்பூந்துருத்தியில் திருநாவுக்கரசு சுவாமிகள் எழுந்தருளியிருந்தமையைக் கேள்வியுற்று, அவரிடத்துக்கு விரைவாகப் போவேனென்று, வளம் பொருந்திய திருப்பூந்துருத்தியென்னும் ஸ்தலத்தின் புறத்திலுள்ள வயல்களின் சமீபத்தில்வந்தருளினார். -எ-று.

சண்பைவருந்த தமிழ்விரகர் எழுந்தருளத் தாங்கேட்டு
மண்பரவும் பெருங்கீர்த்தி வாகீசர் மனமகிந்து
கண்பெருகுங் களிகொள்ளக் கண்டிறைஞ்சுங் காதலினால்
எண்பெருகும் விருப்பெய்த எழுந்தருளி எதிர்சென்றார். 393

(இ-ள்.) சீகாழியில் அவதரித்தருளிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் எழுந்தருளி வந்தாரென்பதைக் கேள்வியுற்று, உலகத்தார் துதிக்கின்ற சிறந்த கீர்த்தியையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் மனமகிழ்வடைந்து, கண்கள் நிறைந்த ஆனந்தமடையும்படி அவரைத்தரிசித்து வணங்வேண்டுமென்னும் பேரன்பினால் எண்ணத்தக்க மிகுந்த ஆசையுண்டாக எழுந்து எதிர்கொண்டார். -எ-று.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காழியர்கோன் வரும்எல்லை கலந்தெய்திக் காதலித்தார்
சூழுமிடைந் திருநெருக்கிற் காணாமே தொழுதருளி
"வாழியவர் தமைத்தாங்கும் மணிமுத்தின் சிவிகையினைத்
தாழும்உடல் இதுகொண்டு தாங்குவன்யான்" எனத்தரித்தார். 394

(இ-ள்.) திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகள் எழுந்தருளி வரும் இடத்தை யடைந்து, அடியார்கள் நாற்புறம் சூழ்ந்திருக்கும் நெருக்கத்தில் தம்மை ஒருவரும் இன்னாரென்று அறியாதபடி உட்புகுந்து தொழுது, அவரைத் தாங்குகின்ற அழகிய முத்துச் சிவிகையை இழிவாகிய இந்த உடம்பைக்கொண்டு அடியேனும் தாங்குவேனென்று அதனைச் சுமந்தார். -எ-று.

வந்தொருவர் அறியாமே மறைந்தவடி வொடும்புகலி
அந்தணனார் ஏறியெழுந் தருளிவரும் மணிமுத்தின்
சந்தமணிச் சிவிகையினைத் தாங்குவா ருடன்தாங்கிச்
சிந்தைகளிப் புறவருவார் தமையாருந் தெளிந்திலரால். 395

(இ-ள்.) ஒருவரும் அறியாமல் வந்துமறைந்த திருவுருவோடு சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தமூர்த்திகள் ஏறி யெழுந்தருளி வருகின்ற அழகிய முத்துக்களாலாகிய சிறந்த சிவிகையைச் சுமக்கின்ற அடியார்களோடு கூடத் தாமும் சுமந்து கொண்டு மனமகிழும்படி வருகின்ற திருநாவுக்கரசு சுவாமிகளை யாவரும் இன்னாரென்று அறியாதிருந்தார்கள். -எ-று.

திருஞான மாமுனிவர் அரசிருந்த பூந்துருத்திக்(கு)
அருகாக எழுந்தருளி "எங்குற்றார்? அப்பர்"என
உருகாநின்(று) "உம்அடியேன் உம்அடிகள் தாங்கிவரும்
பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற் றேன்"என்றார். 396

(இ-ள்.) திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் வாசஞ்செய்து கொண்டிருக்கும் திருப்பூந் துருத்திக்குச் சமீபமாக எழுந்தருளி, அப்பர் எங்கே இருக்கின்றா ரென்று கேட்க, உமது அடியேனாகிய யான் அன்பினால் மனமுருகி, தேவரீருடைய திருவடிகளைச் சுமந்து வருகின்ற பேரானந்தவாழ்வு கிடைக்கப் பெற்று இங்கு இருக்கின்றே னென்று சொன்னார். -எ-று.

பிள்ளையார் அதுகேளாப் பெருகுவிரை வுடன்இழிந்தே
உள்ளமிகு பதைப்பெய்தி உடையஅர சினைவணங்க
வள்ளலார் வாகீசர் அவர்வணங்கா முன்வணங்கத்
துள்ளுவான் மறிக்கரத்தார் தொண்டரெலாந் தொழுதார்த்தார். 397

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருஞானசம்பந்தப்பிள்ளையார் அந்த வார்த்தை யைக் கேட்டு அதிகவிரைவோடு முத்துப்பல்லக்கினின்றும் இறங்கித் திருவுள்ளத்தில் மிகுந்த பதைபதைப்படைந்து திருநாவுக்கரசு சுவாமிகளை வணங்க, அருள்வள்ளலாகிய திருநாவுக்கரசு சுவாமிகள் அத்திருஞானசம்பந்தமூர்த்திகள் வணங்குவதற்கு முன்னே தாமும் விரைந்து வணங்க, துள்ளுகின்ற மானேந்திய திருக்கரத்தினையுடைய சிவபெருமானது அடியார் களெல்லாரும் வணங்கி ஆரவாரஞ் செய்தார்கள். -எ-று.

கழுமலக்கோன் திருநாவுக் கரசருடன் கலந்தருளிச்
செழுமதியந் தவழ்சோலைப் பூந்துருத்தித் திருப்பதியின்
மழுவினொடு மான்ஏந்து திருக்கரத்தார் மலர்த்தாள்கள்
தொழுதுருகித் இன்புற்றுத் துதிசெய்தங் குடனிருந்தார். 398

(இ-ள்.) சீகாழித் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகளோடு சேர்ந்து, அழகிய சந்திரன் தவழ்கின்ற சோலை சூழ்ந்த திருப்பூந் துருத்தியென்னும் ஸ்தலத்தில் மழுவையும் மானையுமேந்திய திருக்கரத்தினை யுடைய சிவபெருமானது தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கி, அன்பினால் மனமிரங்கிப் பேரானந்தமடைந்து திருப் பதிகங்கள் பாடி அவ்விடத்தில் இருவரும் வசித்திருந்தார்கள். - எ-று.

வல்அமணர் தமைவாதில் வென்றதுவும் வழுதிபால்
புல்லியகூன் நிமிர்த்ததுவும் தண்பொருந்தப் புனல்நாட்டில்
எல்லையில்லாத் திருநீறு வளர்த்ததுவும் இருந்தவத்தோர்
சொல்லஅது கேட்டுவந்தார் தூயபுகழ் வாகீசர். 399

(இ-ள்.) கொடிய சமணர்களை வாதில் ஜயித்ததும், பாண்டியராசனிடத்தில் சேர்ந்திருந்த கூனை நிமிரும்படி செய்ததும், குளிர்ந்த தாம்பிரபர்ணி நீரையுடைய பாண்டிவள நாட்டில் அளவில்லாத மகிமைபொருந்திய விபூதியை யாவரும் தரித்துக் கொள்ளும்படி பரவச் செய்ததுமாகிய செய்கைகளைச் சிறந்த தவச் செல்வராகிய திருஞானசம்பந்தமூர்த்திகள் சொல்லியருள, அதைப் பரிசுத்தமாகிய புகழையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் கேட்டு மகிழ்ச்சியடைந்தார். -எ-று.

பண்புடைய பாண்டிமா தேவியார் தம்பரிவும்
நண்புடைய குலச்சிறையார் பெருமையும்ஞா ... தலைவர்
எண்பெருக வுரைத்தருள எல்லையில்சீர் வாகீசர்
மண்குலவு தமிழ்நாடு காண்பதற்கு மனங்கொண்டார். 400

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) நல்ல குணத்தினையுடைய பாண்டியராச பத்தினியாகிய மங்கையர்க்கரசியாரது சிவநேசமும், சிவனடியார்களிடத்து அன்பினையுடைய குலச்சிறை நாயனாரது பெருமையும் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் விரித்துச் சொல்ல, அளவில்லாத சிறப்பினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் உலகத்தில் சிறந்து விளங்குகின்ற செந்தமிழ்ப் பாண்டிநாட்டைத் தரிசிப்பதற்குத் திருவுள்ளங் கொண்டருளினார். -எ-று.

பிரமபுரத் திருமுனிவர் பெருந்தொண்டை நன்னாட்டில்
அரனுறையுந் தானங்கள் அணைந்திறைஞ்சிப் பாடுதற்கங்(கு)
உரனுடைய திருநாவுக் கரசர்உரை செய்தருளப்
புரமெரித்தார் திருமகனார் பூந்துருத்தித் தொழுதகன்றார். 401

(இ-ள்.) திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் பெருமை பொருந்திய தொண்டை நாட்டில்சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஸ்தலங்களை யடைந்து வணங்கித் திருப்பதிகங்கள் பாடும்படி தேவரீர் எழுந்தருள வேண்டுமென்று சிவஞானம் பொருந்திய திருநாவுக்கரசு சுவாமிகள் சொல்லியருள, திரிபுரத்தை எரித்தருளிய சிவபெருமானது திருக்குமாரராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருப்பூந் துருத்தியை வணங்கி அவ்விடத்தினின்றும் நீங்கினார். -எ-று.

ஆண்டஅர சங்கணர்சீர் அருள்பெற்றப் பதிநின்றும்
பாண்டிநாட் டெழுந்தருளும் பான்மையராய்த் தென்றிசைப்போய்க்
காண்டகைய திருப்புத்தூர் பணிந்தேத்திக் கதிர்மதியம்
தீண்டுகொடி மதில்மதுரைத் திருஆல வாய்சேர்ந்தார். 402

(இ-ள்.) திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமானது திருவருளைப் பெற்று, அத்திருபூந்துருத்தியினின்றும் பாண்டி நாட்டுக்கு எழுந்தருளுங் கருத்துடையவராய்த் தென்திசையிலே போய்க் காணத்தகுந்த சிறப்பினையுடைய திருப்புத்தூரை வணங்கித் துதித்து, சூரியனும் சந்திரனும் தீண்டுகின்ற கொடிகள் நாட்டிய மதில்சூழ்ந்த மதுரையை யடைந்தார். -எ-று.

சென்றணைந்து மதுரையினில் திருந்தியநூற் சங்கத்துள்
அன்றிருந்து தமிழாராய்ந் தருளியஅங் கணர்கோயில்
முன்றிலினை வலங்கொண்டு முன்இறைஞ்சி உள்புக்கு
வன்றனிமால் விடையாரை வணங்கிமகிழ் வொடுந்திளைத்தார். 403

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) மதுரைக்குப் போய்ச் சேர்ந்து திருத்தமாகிய நூல்களை யாராயும் முதற்சங்கத்தில் அந்நாளில் சவுந்தர பாண்டியராய் வீற்றிருந்து, தமிழை ஆராய்ச்சி செய்தருளிய சொக்கநாதருடைய திருக்கோயிலை வலமாக வந்து திருமுற்றத்தில் முன்னே வணங்கி உள்ளே புகுந்து, வலிமை பொருந்திய ஒப்பற்ற விஷ்ணுவாகிய ரிஷபத்தையுடைய ஆண்டவரைத் தொழுது பேரானந்தத்தை யடைந்தார். -எ-று.

எய்தியபே ரானந்த இன்பத்தி னிடைஅழுந்தி
மொய்திகழுஞ் சடையானை "முளைத்தானை" என்றெடுத்துச்
செய்தவத்தோர் தாண்டகச் செந்தமிழ்பாடித் புறத்தணைவார்
கைதொழுது பணிந்தேத்தித் திருவுள்ளங் களிசிறந்தார். 404

(இ-ள்.) செய்கின்ற தவத்தை யுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் தாம் அடைந்த பேரானந்தவெள்ளத்தில் முழுகி, நெருங்கி விளங்குகின்ற சடைமுடியையுடைய சிவபெருமானை "முளைத்தானை" என்று முதலில் எடுத்துத் திருத்தாண்டக மென்னும் செவ்விய தமிழ்ப்பதிகம்பாடிப் புறத்தில்வருகின்ற வராய்க் கைகுவித்து வணங்கித் துதித்து மனதில் களிப்படைந்த வராயினார். -எ-று.

சீர்திகழும் பாண்டிமா தேவியார் திருநீற்றின்
சார்வடைய கூர்நிமிர்ந்த தென்னவனார் தம்முடனே
பார்பரவுங் குலச்சிறையார் வாகீசர் தமைப் பணிவுற்(று)
ஆரகிலாக் காதல்மிக அடிபோற்ற அங்கிருந்தார். 405

(இ-ள்.) சிறப்புப் பொருந்திய மங்கையர்க் கரசியாருடைய திருமேனியைச் சேரும்படி திருவருளைப் பெற்றிருந்தபடியால், தன்முதுகிலுள்ள கடன்நிமிரப் பெற்ற நின்றசீர் நெடுமாற நாயனாரென்னும் பாண்டியராசனும், உலகத்தார் துதிக்கின்ற குலச்சிறைநாயனாரும் திருநாவுக்கரசு சுவாமிகளைப் பணிந்து, அடங்காத பேரன்பு பெருகி அவர் திருவடிகளைத் துதிக்க, அவ்விடத்திலேயே எழுந்தருளியிருந்தார். -எ-று.

திருவால வாய்அமர்ந்த செஞ்சுடரைச் செழும் பொருள்நூல்
தருவானை நேரிசையும் தாண்டகமும் முதலான
பெருவாய்மைத் தமிழ்பாடிப் பேணுதிருப் பணிசெய்து
மருவார்தம் புரம்எரித்தார் பூவணத்தை வந்தடைந்தார். 406

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருவாலவாய் என்னும் திருக்கோயிலில் வீற்றிருந் தருளும் சிவந்த சோதி சொரூபமாகிய ஆண்டவரை, செவ்விய அகப் பொருணூலை அருளிச் செய்த சுவாமியைக் குறித்துத் திருநேரிசையும்திருத்தாண்டகமும் முதலாகிய சிறந்த மெய்ம்மை பொருந்திய தமிழப்பதிகங்களைப் பாடி விருப்பம் பொருந்திய உழவாரத்திருத் தொண்டு செய்து, பகைவர்களுடைய திரிபுரத்தை யெரித்தருளிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருப்பூவண மென்னும் ஸ்தலத்தில் வந்து சேர்ந்தார். -எ-று.

கொடிமாடம் நிலவுதிருப் பூவணத்துக் கோயிலினுள்
நெடியானுக் கறிவரியார் நேர்தோன்றக் கண்டிறைஞ்சி
"வடிவேறு திரிசூல"த் தாண்டகத்தால் வழுத்திப்போய்ப்
பொடிநீடு திருமேனிப் புனிதர்ப்பதி பிறபணிவார். **407**

(இ-ள்.) கொடிகள் கட்டிய மாடங்கள் பிரகாசிக்கின்ற திருப்பூவணமென்னுந் திருப்பதியிலுள்ள திருக்கோயிலில் விஷ்ணுவுக்கு அறிதற்கரியவராகிய சிவபெருமான் தமக்கு எதிரே காட்சி கொடுத்தருளத் தரிசித்து வணங்கி "வடிவேறு திரிசூலம்" என்னும் முதலையுடைய திருத்தாண்டகத் திருப்பதிகத்தால் ஸ்தோத்திரஞ்செய்து சென்று, விபூதியினால் விளங்குகின்ற திருமேனியையுடைய சிவபெருமானது மற்றைத் திருப்பதிகளை யும் தொழுவாராயினார். -எ-று.

தென்னிலங்கை இராவணன்தன் சிரமீரைந் தும்துணித்த
மன்னவனாம் இராமனுக்கு வரும்பெரும்பா தகந்தீர்த்த
பிஞ்ஞகரைத் தொழுவதற்கு நினைந்து போய்ப் பெருமகிழ்ச்சி
துன்னிமனங் கரைந்துருகத் தொழுதெழுந்தார் சொல்லரசர். **408**

(இ-ள்.) தெற்கின் கண்ணுள்ள இலங்காபுரியில் வாழ்ந் திருந்த இராவணனுடைய பத்துத் தலைகளையும் வெட்டிய க்ஷத்திரியவமிசத்தானாகிய இராமனுக்கு நேரிட்ட பெரிய பாதகத்தைத் தீர்த்தருளிய இராமநாதரை வணங்குவதற்கு நினைவுகொண்டு போய் அதனால் பெரியமகிழ்ச்சியை யடைந்து மனங்கரைந்துருகும்படி வணங்கியெழுந்தார்; திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

தேவர்தொழுந் தனிமுதலைத் திருவிரா மேச்சுரத்து
மேவியசங் கரனைஎதிர் நின்றுவிருப் புறுமொழியால்
பாவுதிரு நேரிசைகள் முதலான தமிழ்பாடி
நாவரசர் திருத்தொண்டு நலம்பெருகச் செய்தமர்ந்தார். **409**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) தேவர்களால் வணங்கப்பட்ட ஒப்பற்ற முதற்பெருங் கடவுளாயுள்ளவரும், திருவிராமேச்சரமென்னுந்தலத்தில் வீற்றிருந்தருளும் சங்கரருமாகிய சிவபெருமானை எதிராக நின்று விருப்பந்தருகின்ற இனியசொற்களால் அமைந்த திருநேரிசைகள் முதலிய தமிழ்ப்பதிகங்களைப் பாடியருளி, நன்மையுண்டாகும் பொருட்டு உழவாரத் திருப்பணி செய்து அவ்விடத்திலேயே சிலநாள் வாசஞ்செய்து கொண்டிருந்தார் திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

அங்குறைந்து கண்ணுதலார் அடிசூடி அகன்றுபோய்ப்
பொங்குதமிழ்த் திருநாட்டுப் புறம்பணைசூழ் நெல்வேலி
செங்கண்விடை யார்மன்னுந் திருக்கானப் பேர்முதலா
எங்குநிகழ் தானங்கள் எல்லாம்புக் கிறைஞ்சுவார். **410**

(இ-ள்.) அங்கே சிலநாள் வாசஞ்செய்துசிவபெருமானுடைய திருவருளைப் பெற்று அவ்விடத்தினின்றும் நீங்கிச் சிறந்த தமிழையுடைய பாண்டி நாட்டில் வயல்கள் சூழ்ந்த திருநெல்வேலியும், சிவந்த கண்களையுடைய ரிஷபத்தை வாகனமாகக் கொண்ட சிவபெருமன் வீற்றிருந்தருளும் திருக்கானப்பேரூரும் முதலாக அந்தநாடெங்குமுள்ள ஸ்தலங்களை யெல்லாம் சென்று வணங்குவாராயினார். -எ-று.

தொழுதுபல வகையாலும் சொற்றொடைவண் டமிழ்பாடி
வழுவில்திருப் பணிசெய்து மனங்கசிவுற் றெப்பொழுதும்
ஒழுகியகண் பொழிபுனலும் ஓவாது சிவன்தாள்கள்
தழுவியசிந் தையில்உணர்வும் தங்கியநீர் மையிற்சரித்தார். **411**

(இ-ள்.) சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஸ்தலங்கள் தோறும் சென்று வணங்கி, திருநேரிசை - திருத்தாண்டக முதலிய பலவேறுபாட்டாலும் நல்ல சொற்களால் தொடுக்கப்பட்ட வளவிய தமிழ்ப்பதிகங்களைப் பாடியருளி, குற்றமற்ற உழவாரத் திருப்பணி செய்து மனங்கசிவுகொண்டு இடைவிடாது பொழிகின்ற ஆனந்தக் கண்ணீரும், எப்பொழுதும் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டிருக்கின்ற மனதிலுண்டாகிய மெய்யுணர்ச்சியும் பொருந்திய குணத்தோடு இருந்தார். -எ-று.

தேம்பொழியும் செந்தமிழ்நாட் டினில்எங்குஞ் சென்றிறைஞ்சிப்
பாம்பணிவார் தமைப்பணிவார் பொன்னிநா டதுஅணைந்து
வான்புனல்சூழ் வளநகர்கள் பின்னும்போய் வணங்கியே
பூம்புகலூர் வந்தடைந்தார் பொய்பாசம் போக்குவார். **412**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) மதுரம் பொருந்திய செவ்விய தமிழையுடைய பாண்டிநாட்டிலுள்ள ஸ்தலங்கள் தோறும்போய் வணங்கிப் பாம்பை ஆபரணமாக அணிந்த சிவபெருமானைப் பணிய வேண்டியவராய்ச் சோழநாட்டையடைந்து, தாவிச் செல்கின்ற நீர்வளம்பொருந்திய மற்றைத் திருப்பதிகளையும் பின்னும் போய்த் தொழுது திருப்புகலூருக்கு வந்து சேர்ந்தார்; பொய் யாகிய பாசங்களைப் போக்குகின்றவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

பொய்கைசூழ் பூம்புகலூர்ப் புனிதர்மலர்த் தாள்வணங்கி
நையுமனப் பரிவினொடும் நாடோறும் திருமுன்றில்
கைகலந்த திருத்தொண்டு செய்துபெருங் காதலுடன்
வைகுநாள் எண்ணிறந்த வண்டமிழ்மா லைகள்மொழிவார். ***413***

(இ-ள்.) பொய்கைகள் சூழ்ந்த திருப்புகலூரில் வீற்றிருந் தருளும் சிவபெருமானுடைய தாமரைமலர் போன்ற திருவடி களை வணங்கிக் கசிந்துருகுகின்ற மனதில் பதிந்த அன்புடனே தினந்தோறுந் திருக்கோயில் திருவாசலில் கையினால் செய்தற் குரிய திருத்தொண்டுகளைச் செய்து, மிகுந்த ஆசையோடும் வாசம்பண்ணிக் கொண்டிருக்கும் நாளில் அளவில்லாத வளம்பொருந்திய திருப்பதிகங்களைப் பாடுவாராயினார். -எ-று.

நின்றதிருத் தாண்டகமும் நீடுதனித் தாண்டகமும்
மன்றுறைவார் வாழ்பதிகள் வழுத்துதிருத் தாண்டகமும்
கொன்றைமலர்ச் சடையார்பால் குறைந்ததிரு நேரிசையும்
துன்றுதனி நேரிசையும் முதலான தொடுத்தமைத்தார். ***414***

(இ-ள்.) நின்ற திருத்தாண்டகமும், உயர்ந்த தனித்திருத் தாண்டகமும், பொன்னம்பலத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளும் சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஸ்தலங்களைக் கோவையாக எடுத்துத் தோத்திரஞ் செய்கின்ற க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகமும், கொன்றை மலர் மாலையைத் தரித்த சடைமுடியையுடைய சிவபெருமானிடத்தில் தமது குறையைச் சொல்லியடைந்ததைக் குறிக்கும் திருநேரிசையும், மேன்மை பொருந்திய தனித்திருநேரிசையும் முதலாகிய பல திருப்பதிகங்களைப் பாடியருளினார். -எ-று.

ஆருயிரின் திருவிருத்தம் தசபுரா ணத்தடைவும்
பார்பரவும் பாவநாசப்பதிகம் பன்முறையும்
நேர்படநின் றறைகூவும் திருப்பதிகம் முதற்பிறவும்
பேரருளின் கடல்அளிக்கும் பெருமானைப் பாடினார். ***415***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) ஆருயிர்த்திருவிருத்தமும், தசபுராணத்தடைவு என்னுந் திருப்பதிகமும் உலகத்திலுள்ளவர்களால் துதிசெய்யத் தக்க பாவநாசத்திருப்பதிகமும், பலதரமும் நேராக நின்று அழைக்கும் பொருளையுடைய சரக்கறைத் திருவிருத்தமும் முதலாகிய மற்றைத் திருப்பதிகங்களும் பெருமைபொருந்திய திருவருட்கடலைத் தமக்குத் தந்தருளும் சிவபெருமானைப் பாடினார். -எ-று.

அந்நிலைமை யினில்ஆண்ட அரசுபணி செய்யஅவர்
நன்னிலைமை காட்டுவார் நம்பர்திரு மணிமுன்றில்
தன்னில்வரும் உழவாரம் நுழைந்தவிடந் தானெங்கும்
பொன்னினொடு நவமணிகள் பொலிந்திலங்க அருள்செய்தார். 416

(இ-ள்.) அப்படிப்பட்ட நிலைமையோடு திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தொண்டு செய்து கொண்டிருக்க, சிவ பெருமான் அவருக்குப் பொருளில்சிறிதும் விருப்பமில்லாமை யாகிய நல்ல நிலைமையை உலகத்தாருக்குக் காட்டுங் கருத்துடையவராய் அழகிய திருமுற்றத்தில் அவர் திருக்கரத்தில் தாங்கிய உழவாரப்படை புல்லைச் செதுக்கும்போது நுழைந்த விடங்களெங்கும் பொன்னும் நவரத்தினங்களும் பொலிந்து விளங்கியிருக்கும்படி செய்தருளினார். -எ-று.

செம்பொன்னும் நவமணியும் சேண்விளங்க ஆங்கெவையும்
உம்பர்பிரான் திருமுன்றில் உருள்பருக்கை யுடன்ஒக்க
எம்பெருமான் வாகீசர் உழவாரத் தினில்ஏந்தி
வம்பலர்மென் பூங்கமல வாவியினிற் புகஎறிந்தார். 417

(இ-ள்.) மாற்றுயர்ந்த பொன்னும், நவரத்தினங்களும் வெகுதூரம் உரையில் விளங்கித் தோன்ற, அவைகளை யெல்லாம் தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமானது கோயில் திருமுற்றத்தில் உண்டுகிடக்கின்ற பருக்கைக் கற்களோடு ஒப்பாக எமது முதல்வராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் உழவாரப் படையால் எடுத்து, (திருக்கோயிலின் புறத்திலுள்ள) வாசனை வீசுகின்ற மிருதுவாகிய தாமரைமலர்களையுடைய தடாகத்தில் விழும்படி எறிந்து விட்டார். -எ-று.

புல்லோடும கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்முன் திருப்புகலூர் நாயகனார் திருவருளால்
வில்லோடு நுதல்மடவார் விசும்பூடு வந்திழிந்தார். 418

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) புல்லையும், கல்லையும், பொன்னையும், மணியையும் அவைகளுக்கு அமைந்திருக்கும் சொற்களால் வேறுபாடுணர்ந்தாரேயன்றி, அவைகளின் பொருளில் தமக்கோர் சிறிதும் வேறுபாடில்லாத நிலைமையை நிச்சயித்தறிந்த நல்லவராகிய திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு முன்னே திருப்புகலூரில் வீற்றிருந்தருளும் சிவபெருமானது திருவருளினால் வில்லையொத்த நெற்றியையுடைய தேவரம்பையர்கள் தெய்வலோகத்திலிருந்து வந்து இறங்கினார்கள். -எ-று.

வானகமின் னுக்கொடிகள் வந்திழிந்தால் எனவந்து
தானநிறை சுருதிகளில் தகும்அலங்கா ரத்தன்மை
கானஅமு தம்பரக்குங் கனிவாயில் ஒளிபரப்பப்
பானல்நெடுங் கண்கள்வெளி பரப்பிஇசை பாடுவார். **419**

(இ-ள்.) ஆகாயத்தில் தோன்றுகின்ற மின்னற்கொடிகள் பூமியில் வந்திறங்கினாற்போலவந்து, உரம்-கண்டமுதலிய தானங்களிலே நிறைந்த சுருதிகளினாலுண்டாகின்ற அழகோடு கூடிய கானமாகிய இசையமுதமானது வெளிப்பட்டு வருகின்ற கொவ்வைக்கனி போன்ற தந்தங்களின் காந்திவிளங்க, நீலோற்பல மலர்போன்ற நெடியகண்களின் பார்வையை வெளியிற்பரப்பி இசையைப்பாடுவாராயினார். -எ-று.

கற்பகப்பூந் தளிரடிபொங் காமருசா ரிகைசெய்ய,
உற்பலமென் முகிழ்விரல்வட் டணையோடுங் கைபெயரப்
பொற்புறும்அக் கையின்வழிப் பொருகயற்கண் புடைபெயர
அற்புதப்பொற் கொடிநுடங்கி ஆடுவதுபோல் ஆடுவார். **420**

(இ-ள்.) கற்பகவிருட்சத்தின் பொலிவாகிய தளிர்போன்ற கால்கள் தாம் கற்றுத்தேர்ந்த அழகிய சரிகைகளைச் செய்ய, செங்கழுநீரின் மெல்லிய அரும்பு போன்ற விரல்கள் சுழுலுதலோடு கைகள் அசைய, அழகுபொருந்திய அக்கைகளின் வழியே போர் செய்கின்ற கெண்டைமீன் போன்ற கண்கள் புடைபெயர்ந்து செல்ல, அற்புதமாகிய பொற்கொடியானது துவண்டு ஆடுதல் போல் ஆடினார்கள். -எ-று.

ஆடுவார்; பாடுவார்; அலர்மாரி மேற்பொழிவார்
கூடுவார் போன்றணைவார்; குழல்அவிழ இடைநுடங்க
ஓடுவார்; மாரவே ளுடன்மீள்வார்; ஒளிபெருக
நீடுவார் துகில்அசைய நிற்பாரும் ஆயினார். **421**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அத்தேவரம்பையர்கள் பரதநாட்டியஞ் செய்பவர்களும், சங்கீதங்களைப் பாடுபவர்களும், மலர்மழைகளை அவர்மேல் சொரிபவர்களும், கூந்தல் விழ இடைதுவள ஓடுபவர்களும், காமவிகாரத்தோடு திரும்புபவர்களும், தேககாந்தியுண்டாகப் பின்செல்பர்களும், இடையில் உடுத்த வஸ்திரங்களசைய நிற்பவர்களுமாயினார்கள். -எ-று.

இத்தன்மை அரம்பையர்கள் எவ்விதமுஞ் செயல்புரிய
அத்தனார்திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகும்
மெய்த்தன்மை உணர்வுடைய விழுத்தவத்து மேலோர்தம்
சித்தநிலை திரியாது செய்பணியின் தலைநின்றார். 422

(இ-ள்.) இவ்விதமாகத் தேவரம்பையர்கள் பலவகையாலும் ஆசையை விளைவிக்கும் நாட்டியமுதலிய தொழில்களைச் செய்ய, சிவபெருமானுடைய திருவடிகளில் தங்கருத்து நீங்காமல் அன்பினால் உருகும் மெய்யுணர்ச்சியையுடைய சிறந்த தவச்செல்வராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் தம்முடைய மனவுறுதியானது (அம்மயக்கினால்) சிறிதும் வேறுபடாமல் தாம்செய்யும் திருத்தொண்டின் வழியே நின்றருளினார். -எ-று.

இம்மாயப் பவத்தொடக்காம் இருவினைகள் தமைநோக்கி
"உம்மால்இங் கென்னகுறை உடையேன்யான்? திருவாரூர்
அம்மானுக் காளானேன்: அலையேன்மின் நீர்"என்று
"பொய்ம்மாயப் பெருங்கடலுள்" எனுந்திருத்தாண் டகம்புன்றார். 423

(இ-ள்.) மயக்கத்தையுண்டாக்கும் இந்தப் பிறப்பின் சம்பந்தமாக விருக்கின்ற நல்வினை தீவினைகளை முன்னிலையாக நோக்கி உங்களால் அடைய வேண்டிய உபகாரம் எனக்கு என்னவிருக்கின்றது; யான் திருவாரூரில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுக்கு அடிமையாயிருக்கின்றேன்; ஆதலால், நீங்கள் என்னை வருத்தவேண்டாமென்று "பொய்ம்மாயப் பெருங் கடலுள்" என்னும் முதலையுடைய திருத்தாண்டகத்தைப் பாடியருளினார். -எ-று.

மாதரவர் மருங்கணைய வந்தெய்தி மதனவசக்
காதலவர் புரிந்தொகுழுங் கைதவங்கள் செய்திடவும்
பேதமிலா ஒருணர்விற் பெரியவரைப் பெயர்விக்க
யாதும்ஒரு செயலில்லா மையில்இறைஞ்சி எதிர்அகன்றார். 424

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) தேவரம்பையர்கள் திருநாவுக்கரசு சுவாமிகளுக்குச் சமீபத்தில் வந்து, மன்மதன் வசத்தில் அகப்படத்தக்க ஆசையை அவர் விரும்பி யொழுகுதற் கேதுவாகிய அநேகவஞ்சனையாகிய செய்கைகளைச் செய்யவும், அவர்களால் சிறிதும் மாறுபடாத ஒப்பற்ற மெய்யுணர்ச்சியையுடைய திருநாவுக்கரசு சுவாமிகளைத் தங்கள் வசப்படுத்தத் தமக்கு யாதொரு செய்கையும் இல்லாமையினால் அவர் எதிர் நின்று வணங்கி அவ்விடத்தினின்றும் நீங்கினார்கள். -எ-று.

இந்லைமை உலகேழும் எய்தஅறிந் தியல்பேத்த
மன்னியஅன் புறுபத்தி வடிவான வாகீசர்
மின்னிலவுஞ் சடையார்தம் மெய்யருள்தான் எய்தவரும்
அந்நிலைமை அணித்தாகச் சிலநாள்அங் கமர்ந்திருந்தார். **425**

(இ-ள்.) இப்படிப்பட்ட நிலைமையை ஏழுலகத்திலுள்ளவர்களும் நன்றாக அறிந்து அவரது சிறப்பை ஸ்தோத்திரஞ்செய்ய, நிலைபெற்ற அன்பினையே ஒருவடிவமாகவுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் மின்னல்போல விளங்குகின்ற சடைமுடியையுடைய சிவபெருமானது மெய்ம்மையாகிய திருவருளையடைதற்குரிய காலம் சமீபமாயிருக்கச் சிலநாள் அந்தத் திருப்புகலூரிலேயே வாசஞ்செய்து கொண்டிருந்தார். -எ-று.

மன்னியஅந் தக்கரணம் மருவுதலைப் பாட்டினால்
"தன்னுடைய சரணான தமியேனைப் புகலூரன்
என்னையினிச் சேவடிக்கீழ் இருத்திடும்" என் றெழுகின்ற,
முன்னுணர்வின் முயற்சியினால் திருவிருத்தம் பலமொழிந்தார். **426**

(இ-ள்.) நிலைபெற்ற மனம் முதலிய அந்தக்கரணங்கள் நான்கும் ஒருமைப்பட்டுத் தியானிக்கும் உறுதிப்பாட்டினால் திருப்புகலூரில் வீற்றிருந்தருளும் சிவபெருமான் தமக்குப் புகலாகவிருக்கின்ற அடியேனாகிய என்னை இனி தமது சிவந்ததிருவடி நிழலில்சேர்ந்தருளுவரென்று தோன்றிய பூர்வஞானத்தின் முயற்சியினால் பலதிருப்பதிகங்களைப் பாடியருளினார். -எ-று.

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
"புண்ணியா! உன்னடிக்கே போதுகின்றேன்" எனப் புகன்று
தண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அர(சு) அமர்ந்திருந்தார். **427**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) பூலோக முதலாகிய மூன்றுலகத்திலுள்ளவர்களும் துதிக்கும் பொருட்டு நிலைபெற்ற திருத்தாண்டகத் திருப்பதிகத்தை "புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்" என்று இறுதியில் வைத்துப் பாடி, அடைதற்கரிய சிவஞானா னந்தத் திருவுருவமடைந்து, சிவபெருமானனடைய திருவடியின்கீழ் வீற்றிருந்தருளினார் திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

வானவர்கள் மலர்மாரி மண்ணிறைய விண்ணுலகின்
மேனிறைந்த ஐந்துபே ரியவொலியும் விரிஞ்சன்முதல்
யோனிகளா யினஎல்லாம் உள்நிறைந்த பெருமகிழ்ச்சி
தானிறைந்த சித்திரையிற் சதயமாம் திருநாளில். 428

(இ-ள்.) தேவர்கள் பொழியும் புஷ்பவருஷமானது பூமி யெங்கும் நிறைந்திருக்க, விண்ணுலகத்தில் ஐவகைப்பட்ட பெருமைபொருந்திய வாத்திய ஒலிகளும் நிறைந்தன; பிரமன் முதல் ஸ்தாவரமீறான ஜீவராசிகளெல்லாம் தம்முள்ளே கொண்ட பெருமகிழ்ச்சியானது நிறைதற்கேதுவாகிய சித்திரை மாதத்தில் வருகின்ற சதயநட்சத்திரத்தில். -எ-று.

அடியனேன் ஆதரவால் ஆண்டஅர சின்சரிதப்
படியையான் அறிந்தபடி பகர்ந்தேன்;அப் பரமுனிவன்
கடிமலர்மென் சேவடிகள் கைதொழு குலச்சிறையார்
முடிவில்புகழ்த் திருத்தொண்டின் முயற்சியினை மொழிகின்றேன். 429

(இ-ள்.) அடியேன் மனதில்கொண்ட ஆசையினால் திருநாவுக்கரசு சுவாமிகளுடைதிவ்ய சரித்திரத்தின் தன்மையை யான்அறிந்தவளவில் சொல்லினேன்; இனி, அந்தச் சிவஞானச் செல்வராகிய ஸ்ரீவாகீசமுனிவரது வாசனை பொருந்திய தாமரை மலர் போன்ற மிருதுவான சிவந்த திருவடிகளைக் கைகுவித்து வணங்கிக் குலச்சிறை நாயனாரது அளவில்லாத புகழையுடைய திருத்தொண்டின் முயற்சி தொடங்குவேன். -எ-று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

28. குலச்சிறை நாயனார் புராணம்

பன்னு தொல்புகழ்ப் பாண்டிநன் நாட்டிடைச்
செந்நெ லார்வயல் தீங்கரும் பின்னயல்
துன்னு பூகப் பறம்பணை சூழ்ந்தது
மன்னு வண்மையி னார்மண மேற்குடி. 1

(இ-ள்.) புலவர்களால் சிறப்பித்துச் சொல்லப்பட்ட பழமையாகிய புகழையுடைய நல்ல பாண்டி நாட்டில் செந்நெற் பயிர்கள் நிறைந்த வயல்களிலுள்ள மதுரம் பொருந்திய கருப்பம் வேலியினருகில் நெருங்கிய கமுகமரங்களையுடைய மருத நிலத்தால் சூழப்பட்டுள்ளது; நிலைபெற்ற கொடையாளர்கள் வாழ்ந்திருக்கும் மணமேற்குடி என்னும் நகரம். -எ-று.

அப்ப திக்கு முதல்வர்வன் றொண்டர்தாம்
ஒப்ப ரும் "பெரு நம்பி" என் றோதிய
செப்ப ருஞ்சீர்க் குலச்சிறை யார்;திண்மை
வைப்பி னால்திருத் தொண்டில் வழாதவர். 2

(இ-ள்.) அந்த மணமேற்குடி என்னும் நகரத்திற்குத் தலைவராயுள்ளவர் (யாரென்றால்) ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் ஒப்பற்ற "பெருநம்பி" என்று திருத்தொண்டத் தொகையில் அருளிச் செய்த சொல்லுதற்கரிய பெருஞ்சிறப்பினையுடைய குலச்சிறை நாயனாரென்னும் திருநாமமுடையவர்; உறுதியான அன்பினால் திருத்தொண்டினின்றும் சிறிதும் தவறாதவர்.-எ-று.

கார ணம்கண் ணுதற்கன்பர் என்னவே
வார மாகி மகிழ்ந்தவர் தாள்மிசை
யாரும் அன்பொடு வீழ்ந்தஞ் சலிமுகிழ்த்(து)
ஈர நன்மொழி எய்த இசைத்துளார். 3

(இ-ள்.) சிவபெருமானுக்குரிய அடியவர்களே நாம் முத்தி யடைதற்குக் காரணமா யுள்ளவர்களென்று, அன்புடையவராய் மனமகிழ்ந்து அவ்வடியார்களுடைய திருவடிகளில் நிறைந்த பேரன்போடு விழ்ந்துவணங்கி இரண்டுகைகளையுங் கூப்பி நின்று, அன்புபொருந்திய நல்லவார்த்தைகளை அவரவர்களுக்கு ஏற்றபடியே சொல்கின்றவர். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறியின் நான்கு குலத்தின ராயினும்
நெறியின் அக்குலம் நீங்கின ராயினும்
அறிவு சங்கரர்க் கன்பர் எனப்பெறில்
செறிவு றப்பணிந் தேத்திய செய்கையார். 4

(இ-ள்.) அந்தணர் - அரசர் - வைசியர் - சூத்திரர் என்னும் குறியினையுடைய நான்கு குலத்தினராயிருந்தாலும், ஒழுக்கத்தினையுடைய அக்குலவரம்பினின்றும் தவறியவர்களாயிருந்தாலும், நாம் சிவபெருமானுக்கு அடியவர்களென்னும் நல்லறிவைப் பெறுவாராயின் அவர்களை வணங்கித் துதிக்கின்ற செய்கையையுடையவர். -எ-று.

உலகர் கொள்ளும் நலத்தின ராயினும்
அலகில் தீமைய ராயினும் அம்புலி
இலகு செஞ்சடை யார்க்கடி யாரெனில்
தலமு றப்பணிந் தேத்தும் தகைமையார். 5

(இ-ள்.) உலகிலுள்ளவர்கள் ஒப்புக்கொள்ளும் நல்லொழுக்கமுடையவர்களாயிருந்தாலும், அளவில்லாத கொடுந்தொழிலைச் செய்கின்றவர்களாயிருந்தாலும், சந்திரன் விளங்குகின்ற சிவந்த சடைமுடியையுடைய சிவபெருமானது அடியவர்களாயிருப்பின், அவர்களைத் தமது தேகம் பூமியில் பொருந்தும்படி விழுந்து வணங்கித் துதிக்குந் தகுதியையுடையவர். -எ-று.

பண்பு மிக்கார் பலராய் அணையினும்
உண்ப வேண்டி ஒருவர் அணையினும்
எண்பெ ருக்கிய அன்பால் எதிர்கொண்டு
நண்பு கூர்ந்தமு தூட்டும் நலத்தினார். 6

(இ-ள்.) நற்குணங்களில் சிறந்த அடியார்கள் பலர் கூடிவந்தாலும், போசனபலகாரமுதலியவைகளை உண்ணுதற்கு விரும்பித் தனித்து ஒருவராக வந்தாலும் அளவற்ற பேரன்போடு எதிர்கொண்டழைத்துவந்து, அவர்களிடத்தில் நட்பு பாராட்டித் திருவமுது செய்விக்கும் நன்மையையுடையவர். -எ-று.

பூதி கோவணஞ் சாதனத் தாற்பொலிந்
தாதி தேவர்தம் அஞ்செழுத் தாமவை
ஓது நாவணக் கத்தால் உரைப்பவர்
பாதம் நாளும் பரவிய பண்பினார். 7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருவெண்ணீறு-கோவணம் முதலிய சிவசாதனங்களால் பொலிவடைந்து, முதற்பெருங்கடவுளாகிய சிவபெருமானுடைய ஸ்ரீபஞ்சாக்ஷர மந்திரத்தைத் தன்னியல்பால் ஓதும் நாவானது வணங்கும் இயல்பாலுச் சரிக்கின்ற சிவனடியார்களுடைய திருவடிகளை நாள்தோறும் ஸ்தோத்திரஞ் செய்கின்ற நற்குணத்தையுடையவர். -எ-று.

இன்ன நல்லொழுக் கத்தினார்; ஈற்றில்சீர்த்
தென்ன வன்நெடு மாறற்குச் சீர்திகழ்
மன்னு மந்திரி கட்குமே லாகியார்
ஒன்ன லர்ச்செற்(று) உறுதிக்கண் நின்றுளார். 8

(இ-ள்.) இத்தன்மையனவாகிய நல்லொழுக்கங்களையுடையவர்; கெடாத கீர்த்திபொருந்திய நின்றசீர்நெடுமாற நாயனாரென்னும் பாண்டியராசனது நிலைபெற்ற சிறப்பினையுடைய மந்திரிகளுக்கு மேலாகிய முதன்மந்திரியாக வுள்ளவர்; சத்துருக்களை யழித்து இராஜகாரியங்களைக் குறைவறச் செலுத்தும் உறுதியில் நிற்கின்றவர். -எ-று.

ஆய செய்கைய ராயவர் ஆறணி
நாய னார்திருப் பாதம் நவின்றுளார்;
பாய சீர்புனை பாண்டிமா தேவியார்
மேய தொண்டுக்கு மெய்த் தொண்ட ராயினார்; 9

(இ-ள்.) அத்தன்மையாகிய முதன்மந்திரிப்பட்டம் பெற்று அரசு செலுத்துகின்றவராயிருப்பினும் கங்கை நதியைத் தரித்த சிவபெருமானுடைய திருவடிகளைத் துதித்துக் கொண்டிருக்குமியல்பினையுடையவர்; உலகமுழுமையம் பரவிய புகழையுடைய மங்கையர்க்கரசியாரது நிலைபெற்ற திருத்தொண்டைக் குறைவற நடத்தும் மெய்த்தொண்டராயுள்ளவர். -எ-று.

புன்ன யத்தரு கந்தர்பொய் நீக்கவும்
தென்னர் நாடு திருநீறு போற்றவும்
மன்னு காழியர் வள்ளலார் பொன்னடி
சென்னி சேர்த்தி மகிழ்ந்த சிறப்பினார். 10

(இ-ள்.) பயனற்ற இழிவாகிய ஞாயத்தையுடைய சமணர்கள் மேற்கொண்டொழுகும் பொய்ச் சமயத்தை யழிக்கவும், பாண்டி நாட்டிலுள்ளவர்கள் திருநீற்றைத் தரித்துக் கொள்ளவும், நிலைபெற்ற சீகாழித்தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுவாமிகளுடைய அழகிய திருவடிகளைச் சிரசின் மேல் சேர்த்து, அதனால் மகிழ்வடைந்திருக்கும் சிறப்பினையுடையவர். -எ-று.

வாதில் தோற்ற அமணரை வன்கழுத்
தீது நீங்கிட ஏற்றுவித் தார்திறம்
யாது போற்றினேன்? மேலினி ஏத்துகேன்
வேத நீதி மிழலைக் குறும்பர்தாள். 11

(இ-ள்.) திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளோடு தாங்கள் செய்யும் வாதத்தில் தோல்வியடைந்த சமணர்களை வலிமைபொருந்திய கழுமுனையில் உலகத்தார் தீமையினின்றும் நீங்கும்படி ஏற்றுவித்த குலச்சிறைநாயனாருடைய அன்பின் பெருமையைக் குறித்து எனக்குத் துதிக்குந் திறமில்லாமையால் சிறிது துதித்தேன். இனி, வேதத்திற்கூறும் விதிப்படி நடந்த பெருமிழலைக் குறும்பநாயனாருடைய திருவடிகளைத் துதிக்கத் தொடங்குகின்றேன். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

29. பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம்

சூத நெருங்கு குலைத்தெங்கு பலவு பூகஞ் சூழ்புடைத்தாய்
வீதி தோறும் நீற்றினொளி விரிய மேவி விளங்குபதி
நீதி வழுவா நெறியினராய் நிலவுங் குடியால் நெடுநிலத்து
மீது விளங்கும் தொன்மையது மிழலை நாட்டுப் பெருமிழலை. 1

(இ-ள்.) மாமரங்களும், நெருங்கிய குலைகளையுடைய தென்னமரங்களும், பலாமரங்களும், கமுகமரங்களும் சூழ்ந்திருக்கும் பக்கங்களையுடையதாய், வீதிகள்தோறும் திருவெண்ணீற்றின் பிரகாசமானது விரியும்படிபெற்று விளங்குகின்ற நகரமானது, தங்கள் தங்களுக்குரிய குலத் தருமத்தில் சிறிதும் தவறாத முறைமையினையுடையவர்களாய் விளங்குகின்ற குடிகளால் நீண்ட உலகத்தில் விளங்கியிருக்கும் பழமையுடையது; (அது யாதென்றால்) மிழலை நாட்டிலுள்ள பெருமிழலையென்னு மூராகும். -எ-று.

அன்ன தொன்மைத் திருப்பதிக்கண் அதிபர் மிழலைக் குறும்பனார்
சென்னி மதியம் வைத்தவர்தம் அடியார்க்கான செய்பணிகள்
இன்ன வண்ணம் என்றவர்தாம் உரையா முன்னம் எதிரேற்று
முன்னம் உணர்ந்து செய்வாராய் முதிரும் அறிவின் பயன்கொள்வார். 2

(இ-ள்.) அப்படிப்பட்ட பழமையாகிய க்ஷேத்திரத்தில் தலைவராயுள்ள பெருமிழலைக்குறும்பநாயனா ரென்பவர் முடியில் சந்திரனைத் தரித்த சிவபெருமானுடைய அடியார் களுக்குச் செய்யவேண்டிய திருத்தொண்டுகளை இவ்வாறு செய்யவேண்டுமென்று அவர்கள் சொல்வதற்கு முன்னமே எதிர்கொண்டு முன்னே மனமகிழ்ந்து செய்கின்றவராய், முதிர்ந்த பேரறிவின் பயனாகிய சிவபக்தியைக் கைக்கொள்கின்றவர்.எ-று.

தொண்டர் பலரும் வந்தீண்டி உண்ணத் தொலையா அமுதூட்டிக்
கொண்டு செல்ல இருநிதியம் முகந்து கொடுத்துக் குறைந்தடைவார்
வண்டு மருவுங் குழலுமையாள் கேள்வன் செய்ய தாளென்னும்
புண்ட ரீகம் அகமலரில் வைத்துப் போற்றும் பொற்பினார். 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) சிவனடியார்கள் பலரும் கூட்டமாகக் கூடிவந்து போசனஞ் செய்யக் குறைவில்லாத திருவமுதையுண்பித்து, அவர்கள் எடுத்துக்கொண்டு போகும்படி மிகுந்த திரவியங்களை வாரிக்கொடுத்து, அவர்களுக்குத் தாழ்ந்து நடக்கின்றவர்; தேனுண்ணும்படி வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய உமாதேவியாருக்கு நாயகராகிய சிவபெருமானது சிவந்த திருவடிகளாகிய தாமரை மலர்களைத் தமது இதயாரவிந்தத்தில் வைத்துத் தியானிக்கின்ற பெருங்குணத்தை யுடையவர். -எ-று.

இத்தன் மையராய் நிகழுநாள் எல்லை இல்லாத் திருத்தொண்டின்
மெய்த்தன் மையினை உலகறிய விதியால் வணங்கி மெய்யடியார்
சித்தம் நிலவுந் திருத்தொண்டத் தொகைபா டியநம் பியைப்பணிந்து
நித்தன் அருள்பெற் றவர்பாதம் நினைக்கும் நியமத் தலைநின்றார். 4

(இ-ள்.) பெருமிழலைக்குறும்பநாயனார் இத்தன்மையினை யுடையவராய் ஒழுகும் நாள்களில், அளவில்லா திருத்தொண்டினது உண்மைத் தன்மையை உலகத்தாரறியும்படி விதிப்படியே வணங்கி மெய்யடியார்களுடைய திருவுள்ளத்தில் விளங்குகின்ற திருத்தொண்டத் தொகையென்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளிய ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளை வணங்கி, சிவபெருமானது திருவருளைப் பெற்று, அச் சுந்தரமூர்த்திசுவாமிகளுடைய திருவடிகளைத் தியானிக்கின்ற நியமத்தில் முதன்மையாக நிற்கின்றவர். -எ-று.

மையார் தடங்கட் பரவையார் மணவா ளன்தன் மலர்க்கழல்கள்
கையால் தொழுது வாய்வாழ்த்தி மனத்தால் நினைக்கும் கடப்பாட்டில்,
"செய்யாள் கோனும் நான்முகனும் அறியாச் செம்பொற் றாளிணைக்கீழ்,
உய்வான் சேர உற்றநெறி இதுவே" என்(று)அன் பினில்உய்த்தார். 5

(இ-ள்.) மைதீட்டிய விசாலமாகிய கண்களையுடைய பரவைநாச்சியாருக்கு நாயகராகிய ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளது தாமரைமலர் போன்ற திருவடிகளைக் கைகளால் கூப்பித் தொழுது, வாயினால் துதித்து, மனதினால் தியானிக்கின்ற முறைமையில், இலட்சுமிநாயகனாகிய விஷ்ணுவும், பிரமனும் தேடியறியாத சிவபெருமானது சிவந்த பொன்போன்ற இரண்டு திருவடிகளின்கீழ் நாம்பிழைக்கும் பொருட்டுச் சேர்தற்கு உறுதியானமார்க்கம் இதுவேயென்று அன்போடு மனதைச் செலுத்தி வந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாளும் நம்பி ஆரூரர் நாமம் நவின்ற நலத்தாலே
ஆளும் படியால் அணிமாதி சித்தி யான அணைந்ததற்பின்
மூளும் காத லுடன்பெருக முதல்வர் நாமத் தஞ்செழுத்தும்
கேளும் பொருளும் உணர்வுமாம் பரிசு வாய்ப்பக் கெழுமினார். 6

(இ-ள்.) நாள்தோறும் ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளுடைய திருநாமத்தை உச்சரித்து வந்த நன்மையினால் தாம் ஆளும்படி அணிமாமுதலிய அஷ்டமாசித்திகளும் தமக்குப் பலிதமான பின்பு, மிகுந்தபேரன்புண்டாகச் சிவபெருமானது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தையும், உறவும்-பொருளும்-விவேகமும் இவைகளேயென்னும் தன்மைவாய்க்கும்படி உச்சரித்துக் கொண்டு வந்தார். -எ-று.

இன்ன வாறே இவரொழுக ஏறுகொடிமேல் உயர்த்தவர்தம்
பென்னங் கழல்கள் மண்ணின்மேல் பொருந்த வந்து வழக்குரைத்து
மன்னும் ஓலை அவைமுன்பு காட்டிஆண்ட வன்றொண்டர்
சென்னி மதிதோய் மாடமலி கொடுங்கோ ளூரைச் சேர்வுற்றார். 7

(இ-ள்.) இவ்வாறு இப்பெருமிழலைக்குறும்பநாயனார் நடந்துகொண்டுவர, ரிஷபக்கொடியை யுயர்த்திய சிவபெருமான் (பிராமணத் திருவுருவங்கொண்டு) தமது பொன் போன்ற திருவடிகள் பூமியின்மேல் பொருந்தும்படி வந்து (திருமணத்தைத் தடுத்து) வல்வழக்குப்பேசி, நிலைபெற்ற முறியோலையைச் சபையாருக்கு முன்னே காட்டித் தடுத்தாட் கொண்ட ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் சிகரங்களில் சந்திரன் தவழ்கின்ற மாடங்கள் நிறைந்த கொடுங்கோளூரையடைந்தார். -எ-று.

அஞ்சைக் களத்து நஞ்சுண்ட அமுதைப் பரவி அணைவுறுவார்
செஞ்சொல் தமிழ்மா லைகள்மொழியத் தேவர் பெருமான் அருளாலே
மஞ்சில் திகழும் வடகயிலைப் பொருப்பில் எய்த வரும்வாழ்வு
நெஞ்சில் தெளிய இங்குணர்ந்தார் நீடு மிழலைக் குறும்பனார். 8

(இ-ள்.) திருவஞ்சைக்களமென்னும் ஸ்தலத்தில் வீற்றிருந் தருளும் விஷத்தையுண்டருளிய சிவபெருமானைத் துதித்து அடைகின்றவராய்ச் சொல்லியசொற்களமைந்த திருப்பதிகங்களை அருளிச்செய்ய, தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமானுடைய திருவருளினால், மேகங்கள் தவழ்கின்ற உத்தரகயிலாசகிரியை அடையும்படி அச்சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிடைத்த பெருவாழ்வானது தமது திருவுள்ளத்தில் நன்றாக விளங்கும்படி தாமிருக்கும் இடத்திலேயே யோகப் பிரத்தியட் சத்தாலறிந்தவரானார்; உயர்ந்த பெருமிழலைக்குறும்ப நாயனார். -எ-று.

"மண்ணில் திகழும்திருநாவ லூரில் வந்த வன்றொண்டர்
நண்ணற் கரிய திருக்கயிலை நாளை எய்த நான்பிரிந்து
கண்ணிற் கரிய மணிகழிய வாழ்வார் போல வாழேன்என்(று)
எண்ணிச் "சிவன்தாள் இன்றேசென் றடைவன் யோகத் தால்"என்பார். 9

(இ-ள்.) உலகத்தில் சிறந்து விளங்குகின்ற திருநாவலூரில் அவதரித்தருளிய ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள், யாவரும் அடைதற்கருமையாகிய திருக்கயிலாசகிரியை நாளைக்கு அடைவாராயிருக்க, நான் அவரைவிட்டுப்பிரிந்து, கண்ணினுள் ளிருக்கின்ற கருமணியாகிய பார்வையானது நீங்க, உயிர் வாழ்கின்ற குருடரைப் போல இங்கு அடியேன் வாழ்ந்திருக்க மாட்டேனென்று நினைத்து, இன்றைக்கே யோகத்தினால் சிவபெருமானுடைய திருவடிகளை அடைவேனென்னுங் கருத்துடையவராய். -எ-று.

நாலு கரணங் களும்ஒன்றாய் நல்ல அறிவு மேற்கொண்டு
காலும் பிரம நாடிவழிக் கருத்துச் செலுத்தக் கபாலநடு
ஏல வேமுன் பயின்றநெறி எடுத்த மறைமூ லந்திறப்ப
மூல முதல்வர் திருப்பாதம் அணைவார் கயிலை முன்னடைந்தார். 10

(இ-ள்.) மனம்-புத்தி-சித்தம்-அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் நான்கும் இந்திரியங்களின் வழியே செல்லாமல் ஒன்றுபட்டுச் சிறந்த அறிவை மேற்படுத்தி, ஒளிவீசுகின்ற பிரமநாடியின்வழியே சித்தம் செல்லும்படி செய்ய, கபாலத்தின் நடுவில் பொருந்தும்படிமுன் தாம்பழகிய மார்க்கத்தில் உச்சரிப் பாக எடுத்து பிரணவமானது பிரமரந்திரவாயிலைத் திறக்க, அப்பிரணவமந்திரத்திற்குத் தலைவராகிய சிவபெருமானது திருவடிகளை அடையுங் கருத்துடையவராய்த் திருக்கயிலா யத்தை அச்சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு முன்னே அடைந்தார். பெருமிழலைக் குறும்பநாயனார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பயிலைச் செறிந்த யோகத்தால் பரவை கேள்வன் பாதமுறக்
கயிலைப் பொருப்பர்அடியடைந்த மிழலைக் குறும்பர் கழல்வணங்கி
மயிலைப் புறங்கொள் மென்சாயல் மகளிர் கிளவி யாழினொடும்
குயிலைப் பொருவும் காரைக்கால் அம்மை பெருமை கூறுவாம். 11

(இ-ள்.) தாம் நாள்தோறும் அப்பியாசம்பண்ணுதலால் தம்மையடைந்த யோகத்தினால், ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளுடைய திருவடிகளைப் பொருந்தும்படி திருக்கயிலாயகிரிக்கு நாதராகிய சிவபெருமானது திருவடிகளையடைந்த பெருமிழலைக் குறும்பநாயனாருடைய திருவடிகளை வணங்கி, மயிலையும் வெல்லுகின்ற. மிருதுவாகிய சாயலையுடைய மாதர்களது சொற்கள் யாழோசையையும் குயிலோசையையும் ஒத்திருக்கும் காரைக்கால் என்னுமூரில் அவதரித்தருளிய அம்மையாருடைய பெருமையைச் சொல்லத்தொடங்குவோம். -எ-று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

௩௦. காரைக்காலம்மையார் புராணம்

மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி மண்டுகழிக்
கானல்மிசை உலவுவளம் பெருகுதிருக் காரைக்கால். 1

(இ-ள்.) பெருமைபொருந்திய தருமமார்க்கதில் நின்று, சத்தியவார்த்தையில் சிறிதும் தவறுதலில்லாத சிறப்பினையுடைய பெரிய வணிகர்களது குடிகள் நிறைந்து விளங்குகின்ற நகரமானது, அலைகள் வளைந்த சங்குகளை வாரிக்கொண்டு கரையில் செல்ல, அதனால், அச்சங்குகள் நீர்நிறைந்த கழிக் கரையின்மேல் உலாவுகின்ற வளப்பமிகுந்த அழகிய காரைக் காலாகும். -எ-று.

வங்கமலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார் தனதத்த னார்தவத்தால்
அங்கவர்பால் திருமடந்தை அவதரித்தாள் எனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தார். 2

(இ-ள்.) கப்பல்கள் மிகுதியாக நிறைந்த கடற்கரையிலுள்ள காரைக்காலென்னும் நகரத்தில் வாழ்கின்ற வணிகர்கள் குலத் துக்குத் தலைவராகிய தனதத்தனா ரென்பவர் செய்த தபோ பலத்தினால், அவரிடத்தில் இலட்சுமி தேவியே புத்திரியாக வந்து அவதரித்தா ளென்று சொல்லும்படி, ஒப்பற்ற பேரழ கோடும் புனிதவதியா ரென்னும் அம்மையார் திருவவதாரஞ் செய்தருளினார். -எ-று.

வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் அடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
பணிஅணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காதல் ததும்பவரும் மொழிபயின்றார். 3

(இ-ள்.) வணிகர்களுடைய பெருமைதங்கிய குலமானது உலகத்தில் சிறந்தோங்குபம்டி வந்து திருவவதாரஞ்செய்தபின்பு, அழகுவிளங்குகின்ற மிருதுவாகிய பாதங்கள்தள்ளாடி அசைந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைக்கும் தளர்நடைப்பருவத்தில், பாம்பை ஆபரணமாக அணிந்த சிவபெருமானுடைய திருவடிகளுக்குத் திருத்தொண்டு செய்யும் பழக்கம் மிகுதியும் உண்டாகக் குறைவில்லாத மனதில் மிகுந்த விருப்பமானது ததும்பும்படி வருகின்ற மழலை வார்த்தையைப் பழகினார். -எ-று.

பல்பெருநற் கிளைஉவப்பப் பயில்பவருச் சிறப்பெல்லாம்
செல்வமிகு தாதையார் திருப்பெருகுஞ் செயல்புரிய
மல்குபெரும் பாராட்டின் வளர்கின்றார் விடையவர்பால்
அல்கியஅன் புடன்அழகின் கொழுந்தெழுவ தெனவளர்வார். 4

(இ-ள்.) பலவாகிய பெருமை பொருந்திய நல்ல சுற்றத்தார்கள் களிப்படையும் வண்ணம் வருகின்ற அவ்வப்பருவங்கள் தோறும் செய்யவேண்டிய சிறப்புக்களை யெல்லாம் செல்வத்தால் மிகுந்த தந்தையாராகிய தனதத்தரென்பவர் அதிக சிறப்போடு செய்ய, (தாய்மார்கள்) மிகுந்த அருமை பாராட்டி வளர்ப்பதனால் வளர்கின்ற அவ்வம்மையார் ரிஷபவாகனத்தையுடைய சிவபெருமானிடத்தில் நிலைபெற்ற பேரன்போடு அழகின் கொழுந்தானது வளர்வதுபோல வளர்கின்றவராயினார். -எ-று.

வண்டல்பயில் வனஎல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
அண்டர்பிரான் திருவார்த்தை அணைவரு வனபயின்று
தொண்டர்வரில் தொழுதுதா தியர்போற்றத் துணைமுலைகள்
கொண்டநுசுப் பொதுங்குபதக் கொள்கையினிற் குறுகினார். 5

(இ-ள்.) விளையாடும்பொழுது பயிலும் வார்த்தைகளெல்லாம் வளர்கின்ற இளம்பிறையைத்தரித்த சடைமுடியையுடைய தேவர்கள் நயகராகிய சிவபெருமானது திருநாமங்களாகவே பொருந்த உச்சரித்து, அடியார்கள் வந்தால் அவர்களை எதிர்கொண்டு வணங்கிச் செவிலித்தாய்மார்கள் பாதுகாத்து வளர்க்க இரண்டு ஸ்தனங்களைத் தாங்கி அதனால் இடைதுவளும் பருவத்தையடைந்தார். -எ-று.

நல்லவென உறுப்புநா லவர்உரைக்கும் நலம்நிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சியினால்
இல்லிகவாப் பருவத்தல் இவர்கள்மர பினுக்கேற்கும்
தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார். 6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) தேகங்களின் உறுப்புக்கள் இவ்வாறிருப்பின் நம்மைஎன்று சொல்லும் சாமுத்திரிக விலக்கமுணர்ந்த புலவர்கள் கூறும் நலமெல்லாம் நிறைந்து, மிகுந்த பேரழகானது அதிகரிக்க மாட்சிமையோடு வீட்டினின்றும் வெளியே புறப்படாத மங்கைப் பருவத்தில், இந்த வணிர்களுடைய குலத்துக்கு ஒத்த பழைமையாகிய குடிப்பிறப்பினையுடைய வணிகர்கள் அந்தப் புதல்வியை விவாகம் பேசுவதற்கு முயற்சி செய்தார்கள். -எ-று.

நீடியசீர்க் கடல்நாகை நிதிபதிஎன் றுலகின்கண்
பாடுபெறு புகழ்வணிகன் பயந்தகுல மைந்தனுக்குத்
தேடவருந் திருமரபில் சேயிழையை மகட்பேச
மாடமலி காரைக்கால் வளநகரில் வரவிட்டார். 7

(இ-ள்.) மிகுந்த சிறப்பினையுடைய கடற்கரையிலுள்ள நாகப்பட்டணத்தில் நிதிபதியென்னும் பெயரோடு உலகத்தில் பெருமைபெற்ற கீர்த்தியையுடைய ஒரு வணிகன் பெற்ற குலத்திற் பிறந்த பரமதத்தனென்னும் புதல்வனுக்குத் தேடுதற்கரிய நல்லமரபில் அவதரித்த புனிதவதியாரைக் கலியாணஞ் செய்விக்கக் கேட்கும்படி மாடங்கள் நிறைந்த காரைக்கா லென்னும் வளம்பொருந்திய நகரத்தில் மனிதர்களை அனுப்பு வித்தார்கள். -எ-று.

வந்தமூ தறிவோர்கள் மணங்குறித்த மனைபுகுந்து
தந்தையாம் தனதத்தன் தனைநேர்ந்து "நீபயந்த
பைந்தொடியை நிதிபதிமைந் தன்பரம தத்தனுக்கு
முந்தைமர பினுக்கேற்கும் முறைமைமணம் புரி"கென்றார். 8

(இ-ள்.) பெண்கேட்க வந்த பேரறிவினையுடைய வணிகர்கள், தாம் மணம் பேசக் குறித்து வந்த அவர் வீட்டிற்குப் போய்ப் பெண்ணைப் பெற்ற தந்தையாகிய தனதத்தனைப் பார்த்து, நீர்பெற்ற புத்திரியை நிதிபதியினுடைய புத்திரனாகிய பரம தத்தனக்குப் பழைமையாகிய நமது மரபினுக்கு ஏற்ற முறைமைப்படியே கலியாணஞ்செய்து கொடுமென்று கேட்டார்கள். -எ-று.

மற்றவனும் முறைமையினால் மனம்இசைந்து செலவிடச்சென்று
உற்றவர்கள் உரைகேட்ட நிதிபதியும் உயர்சிறப்புப்
பெற்றனன்போல் உவந்துதனிப் பெருமகட்குத் திருமலியும்
சுற்றமுடன் களிகூர்ந்து வதுவைவினைத் தொழில்பூண்டான். 9

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அந்தத் தனதத்தனும் முறைமைப்படியே தன் மகளைக் கலியாணஞ் செய்துகொடுக்கச் சம்மதித்து வந்தவர்களை யனுப்ப, அவர்கள் போய்ப் பெண் பேசிவந்த சங்கதியைச் சொல்லக்கேட்ட நிதிபதியென்பவனும் உயர்ந்த சிறப்பைப் பெற்றவனைப் போல மனமகிழ்ந்து, ஒப்பற்ற தன்பெரிய புதல்வனுக்குச் செல்வவந்தர்களாகிய தன்பந்துக்களோடு ஆனந்தமடைந்து கலியாணஞ் செய்தற்குரிய தொழிலைச் செய்யத் தொடங்கினான். -எ-று.

மணமிசைந்த நாளோலை செலவிட்டு மங்கலநாள்
அணையவது வைத்தொழில்க ளானவெலாம் அமைவித்தே
இணைரலங்கல் மைந்தனையும் மணவணியின் எழில்விளக்கிப்
பணைமுரசும் எழுந்தார்ப்பக் காரக்கால் பதிபுகுந்தார். 10

(இ-ள்.) கலியாணஞ் செய்வதற்குரியநான் இதுவென்று நிச்சயித்த திருமணப் பத்திரிகையை எவ்விடத்து மனுப்பி, பின் முகூர்த்தநாள்வரக் கலியாணத்துக்கு வேண்டியவைகளை யெல்லாம் சித்தப்படுத்தி, பூங்கொத்துக்களால் தொடுத்த மாலையையணிந்த பிள்ளையையும் மணக்கோலத்தினால் அழகடையும்படி செய்து, பருத்த மணமுரசானது அதிகரித்து முழங்கக் காரைக்காலென்னும் நகரத்தையடைந்தார்கள். -எ-று.

அளிமிடைதார்த் தனதத்தன் அணிமாடத் துள்புகுந்து
தெளிதருநூல் விதிவழியே செயல்முறைமை செய்தமைத்துத்
தளிரடிமென் நகைமயிலைத் தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணஞ் செய்தார்கள். 11

(இ-ள்.) வண்டுகள் மொய்க்கின்ற மாலையைத் தரித்த தனதத்தனுடைய அழகிய மாளிகையினுள்ளே புகுந்து, தெளிவாகிய வேதவிதிப்படியே செய்யவேண்டிய சடங்குகளை யெல்லாம் செய்துமுடிந்து, தளிர் போன்ற பாதங்களையும், மிருதுவான பற்களையுமுடைய புனிதவதியாரை மகரந்தங்கள் சிந்தும் மாலையை யணிந்த பரமத்தனென்னும் மணமகனுக்குக் களிகூர்ந்திருக்கும் சுற்றத்தார்கள் வாழ்த்தக் கலியாணஞ் செய்வித்தார்கள். -எ-று.

மங்கலமா மணவினைகள் முடித்தியல்பின் வைகுநாள்
தங்கள்குடிக் கொருபுதல்வி ஆதலினால் தனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினிற் போகாமே கணவனுடன்
அங்கண்அமர்ந் தினிதிருக்க அணிமாடம் மருங்கமைத்தான். 12

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) மங்களகரமாகிய கலியாணச்சடங்குகளை முடித்து இயல்பாக அவ்விடத்தில் வாசஞ்செய்து கொண்டிருக்குநாளில், தனத்தத்தன் தன்னுடைய குடிக்கு ஒரேபுத்திரியாக விருப்பத னால், மிகுந்த ஒலிபொருந்திய நீரையுடைய நாகபட்ணத்திற்குப் போகாமல் தன் புத்திரியார் கணவனாகிய பரமதத்தனோடு காரைக்காலிலேயே சுகமாக வாழ்ந்திருக்கும்படி அழகிய ஒரு மாளிகையைத் தன் வீட்டிற்குச் சமீபத்தில் கட்டுவித்தான். -எ-று.

மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பில்தனங் கொடுத்ததற்பின்,
நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பில் நிதிபதிதன் குலமகனும்
தகைப்பில்பெருங் காதலினால் தங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியும் கொள்கையினில் மேம்படுதல் மேவினான். 13

(இ-ள்.) தன்புத்திரியாரைக் கலியாணஞ் செய்து கொடுத்த காரணமாக மகிழ்ச்சியை யுண்டாக்கும் அளவில்லாத திரவியத் தைச் சீதனமாகக் கொடுத்தபின்பு, ஒப்பற்ற பெருஞ்சிறப்பினை யுடைய நிதிபதியென்பவனுடைய புத்திரனாகிய பரம தத்தனும் அடங்காத பெரிய ஆசையோடு பொருந்திய இல்வாழ்க்கைக்கு வேண்டிய வளங்களை வாணிகத்தால் பெருக்கி, விருத்தி செய்யுந் தன்மையில் மேம்பாடுடையவனாயினான். -எ-று.

ஆங்கவன்தன் இல்வாழ்க்கை அருந்துணையாய் அமர்கின்ற
பூங்குழலார் அவர்தாமும் பொருவிடையார்திருவடிக்கீழ்
ஓங்கியஅன் புறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரும் மனைஅறத்தின் பண்புவழா மையில் பயில்வார். 14

(இ-ள்.) அந்தப் பரமதத்தனுடைய இல்வாழ்க்கைக்குச் சிறந்த உதவியாயிருக்கின்ற மலர்களை முடித்த கூந்தலையுடைய புனிதவதியாரும், போர்செய்யும் ரிஷபவாகனத்தையுடைய சிவபெருமானது திருவடிகளில் வைத்த அன்பினாலுண்டாகும் பெருவிருப்பானது ஒழியாமல் மேலுமேலும் பெருக, சிறப்போடு நடந்து வருகின்ற இல்வாழ்க்கைக்குச் செய்யவேண்டிய செயல் கள் சிறிதும் தவறாமல் நடத்திக் கொண்டு வந்தார். -எ-று.

நம்பர்அடி யார்அணைந்தால் நல்லதிரு அமுதளித்தும்
செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் முதலான
தம்பரிவி னால்அவர்க்குத் தகுதியின்வேண் டுவகொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக ஒழுகுநாள். 15

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) சிவபெருமானுடைய அடியார்கள் வந்தால் நல்ல திருவமுது படைத்தும், சிவந்தபொன்னும் - நவரத்தினங்களும், நல்லவஸ்திரங்களும் முதலான பொருள்களைத் தம்முடைய வேண்டுதலோடு அவ்வடியார்களுக்குச் சிறப்போடு வேண்டியவைகளைக் கொடுத்தும் தேவர்கள் நாயகராகிய அவ்வெம் பெருமானுடைய திருவடிகளில் அன்புமிகும்படி வாழ்ந்திருக்கும் நாள்களில். -எ-று.

பாங்குடைய நெறியின்கட் பயில்பரம தத்தனுக்கு
மாங்கனிகள் ஓரிரண்டு வந்தணைந்தார் சிலர்கொடுப்ப
ஆங்கவைதான் முன்வாங்கி அவர்வேண்டுங் குறையளித்தே
"ஈங்கிவற்றை இல்லத்துக் கொடுக்க" என இயம்பினான். 16

(இ-ள்.) நன்மைபொருந்திய இல்லறமார்க்கத்தில் செல்லுகின்ற பரமதத்தனுக்குக் காரியமூலமாக அவனிடத்தில் வந்தவர்கள் சிலர் இரண்டு மாம்பழங்களைக் கொடுக்க, தான் அப்பழங்களை முன்னே வாங்கிக் கொண்டு அவர்கள் விரும்பி வந்த குறையை முடித்து, இப்பழங்களைத் தன்மாளிகையில் கொடுங்களென்று சொல்லியனுப்பினான். -எ-று.

கணவன்தான் வரவிடுத்த கனிஇரண்டுங் கைக்கொண்டு
மணமலியும் மலர்க்கூந்தல் மாதரார் வைத்ததற்பின்
பணஅரவம் புனைந்தருளும் பரமனார் திருத்தொண்டர்
உணவின்மிகு வேட்கையினால் ஒருவர்மனை யுட்புகுந்தார். 17

(இ-ள்.) வாசனைவீசுகின்ற மலர்களை முடிந்த கூந்தலையுடைய புனிதவதியார் தமது கணவன் கொடுத்தனுப்பிய இரண்டு மாம்பழங்களையும் கையில் பெற்றுக் கொண்டு வீட்டில் வைத்தபின்பு, படத்தையுடைய பாம்பை ஆபரணமாக அணிந்த சிவபெருமானுடைய அடியவர் ஒருவர் திருவமுதில் மிகுந்த விருப்பத்தால் அவ்வீட்டில் வந்தார். -எ-று.

வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலைகண்டு
"நாதன்தன் அடியாரைப் பசிதீர்ப்பேன்" எனநண்ணிப்
பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப் பரிகலம்வைத்(து)
ஏதந்தீர் நல்விருந்தா இன்அடிசில் ஊட்டுவார். 18

(இ-ள்.) வேதங்களை அருளிச் செய்த சிவபெருமானுடைய மெய்யடியார் திருவமுதுவேண்டிவந்த நிலைமையைக்கண்டு, அவ்வெம்பெருமானுடைய அடியாரை வருத்துகின்ற பசியை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீக்குவேனென்று அவரையடைந்து, திருவடிகளை அலம்பும்படி நீரை முன்னேகொடுத்துப் பரிகலம் வைத்துக் குற்றமற்ற நல்ல விருந்தினராக எண்ணி இனிய திருவமுதை உண்பிப்பாரா யினார். -எ-று.

கறியமுதங் குதவாதே திருஅமுது கைகூட
வெறிமலர்மேல் திருவனையார் "விடையவன்தன் அடியாரே
பெறலரிய விருந்தானால் பேறிதன்மேல் இல்லை"யெனும்
அறிவினராய் அவர்அமுது செய்வதனுக் காதரிப்பார். 19

(இ-ள்.) அந்தவேளையில் கறியமுது பாகம்பண்ணப் படாமையால் அன்னமாத்திரம் பாகமாயிருக்க, வாசனை பொருந்திய தாமரை மலரிலிருக்கும் இலட்சுமியை யொத்த அழகினையுடைய புனிதவதியார் சிவபெருமானுடைய அடியவரே பெறுதற்கரிய விருந்தினராகக் கிடைத்தால் இதைப் பார்க்கிலும் பெறவேண்டிய பேறு நமக்கு ஒன்றுமில்லை யென்னும் அறிவையுடையவராய், அவ்வடியவர் (பசியினால் வருந்தாமல்) திருவமுது செய்வதற்காக உபசாரஞ் செய்வாரா யினார். -எ-று.

இல்லாளன் "வைக்க" எனத் தம்பக்கல் முன்னிருந்த
நல்லநறு மாங்கனிகள் இரண்டினில்ஒன் றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினால்
அல்லல்தீர்ப் பவர்அடியார் தமைஅமுது செய்வித்தார். 20

(இ-ள்.) தம்முடைய கணவன் பத்திரமாக வைத்திருக்கும்படி சொல்லிக் கொடுக்கத் தம்மிடத்து முன்னதாகவேயிருந்த நல்ல மதுரமாகிய இரண்டு மாம்பழங்களில் ஒன்றையெடுத்துக் கொண்டு அதிக விரைவில்வந்து, அவர் பரிகலத்தில் படைத்து, மனமகிழ்ச்சியோடு பிறவித் துன்பத்தை நீக்கியருளும் சிவ பெருமானுடைய அடியவரைத் திருவமுது செய்வித்தார். -எ-று.

மூப்புறும்அத் தளர்வாலும் முதிர்ந்துமுடு கியவேட்கைத்
தீப்பசியின் நிலையாலும் அயர்ந்தணைந்த திருத்தொண்டர்
வாய்ப்புறுமென் சுவைஅடிசில் மாங்கனியோ டினிதருந்திப்
பூப்பயில்மென் குழல்மடவார் செயல்உவந்து போயினார். 21

(இ-ள்.) மூப்பினாலுண்டாகிய தளர்ச்சியினாலும், அதிகரித்துக் கிட்டிய விருப்பத்தோடு கூடிய கொடிய பசியின் நிலைமையினாலும் இளைப்படைந்து வந்த அச்சிவனடியவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிருதுவான சுவையோடு கூடிய அன்னத்தை மாம்பழத்தோடு இனிதாகவுண்டு, மலர்களை முடித்த மிருதுவாகிய கூந்தலை யுடைய புனிதவதியாரது அன்பின் செய்கையைக் குறித்துச் சந்தோஷமடைந்து போயினார். -எ-று.

மற்றவர்தாம் போயினபின் மனைப்பதியா கியவணிகள்
உற்றபெரும் பகலின்கண் ஓங்கியபே ரில்லெய்திப்
பொற்புறமுன் நீராடிப் புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடைய மடவாரும் கடப்பாட்டில் ஊட்டுவார். 22

(இ-ள்.) அந்த அடியார் போயினபின்பு அவ்வீட்டிற்குத் தலைவனாகிய பரம தத்தன் நடுப்பகலில் உயர்வாகிய பெரிய தன் மாளிகைக்கு வந்து, முன்னே அழகாக நீரில் ஸ்நானஞ்செய்து, போசன அறையிற்சென்று விரும்பிப் போசனஞ் செய்ய, கற்பினையுடைய புனிதவதியாரும் உபசாரத்தோடு தங் கணவனை உண்பிப்பாராயினார். -எ-று.

இன்னடிசில் கறிகளுடன் எய்துமுறை இட்டதற்பின்
மன்னியசீர்க் கணவன்தான் மனையிடைமுன் வைப்பித்த
நன்மதுர மாங்கனியில் இருத்ததனை நறுங்கூந்தல்
அன்னமனை யார்தாமுங் கொடுவந்து கலத்தளித்தார். 23

(இ-ள்.) இனிமையாகிய அன்னத்தைக் கறிவர்க்கங்களோடு முறைமைப்படி படைத்தபின்பு, நிலைபெற்ற சிறப்பினையுடைய பரமதத்தன் தான்முன்னே வீட்டில் வைக்கும்படி கொடுத் தனுப்பிய நல்ல மதுரமான மாங்கனிகளில் மிகையாயிருந்த ஒரு பழத்தை வாசனைவீசுங் கூந்தலையுடைய அன்னம்போன்ற புனிதவதியார் கொண்டு வந்து கலத்தில் படைத்தார். -எ-று.

மனைவியார் தாம்படைத்த மதுரமிக வாய்த்தகனி
தனைநுகர்ந்த இனியசுவை ஆராமைத் தார்வணிகன்
"இனையதொரு பழம் இன்னும் உளததனை இடுக
அனைத்துதாங் கொண்டுவர அணைவார்போல் அங்ககன்றார். 24

(இ-ள்.) மனைவியாராகிய புனிதவதியார் கொண்டு வந்து படைத்த அதிக மதுரம் பொருந்திய மாங்கனியைப் புசித்ததனா லுண்டாகிய இனிய சுவையானது தனக்குத் தெவிட்டாமையால், மாலையைத் தரித்த அப்பரமதத்தன் இப்படிப்பட்ட மதுரம் பொருந்திய பழம் இன்னுமொன்றிருப்பதனால், அதனையும் இடுகவென்று சொல்ல, தாம் அப்பழத்தைக் கொண்டு வந்து கொடுப்பவர் போல அவ்விடத்தினின்றும் நீங்கினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***அம்மருங்கு நின்றயர்வார்; அருங்கனிக்கங் கென்செய்வார்?
மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள்
தம்மனங்கொண் டுணர்தலுமே அவர்அருளால் தாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த(து) அதிமதுரக் கனியொன்று. 25***

(இ-ள்.) தாம்போன அவ்விடத்திலே நின்றுகொண்டு வருத்தப்படுகின்ற அவ்வம்மையார் அருமையான மற்றொரு பழத்துக்கு என்ன செய்வார்; பரவசப்பட்டு நினைந்து, ஆபத்து நேரிட்டவிடத்துத் தன்மை நினைத்தால் அப்போதே அனுக்கிரகஞ்செய்யும் சிவபெருமானுடைய திருவடிகளைத் தமது மனதிலிருத்தித் தியானிக்கவும், அவ்வெம்பெருமானுடைய திருவருளினால், தாழ்ந்த கூந்தலையுடைய புனிதவதியாரது திருக்கரத்தில் அதிக மதுரமாகிய ஒரு மாம்பழம் வந்திருந்தது. -எ-று.

***மற்றதனைக் கொடுவந்து மகிழ்ந்திடலும் அயின்றதனில்
உற்றசுவை அமுதினுமேற் படவுளதா யிட "இதுதான்
முற்றருமாங் கனியன்று; மூவுலகில் பெறற்கரிதால்
பெற்றதுவே றெங்"கென்று பெய்வளையார் தமைக்கேட்டான். 26***

(இ-ள்.) சிவபெருமான் கிருபையினால் தமது கையில் வந்திருந்த மாங்கனியைக் கொண்டு வந்து சந்தோஷத்தோடு படைக்கவும், அவன் உண்ட அக்கனியின் சுவையானது தேவாமுதத்தைப் பார்க்கினும் அதிக மதுரமுள்ளதாக இருக்க இது முன்னே நான்கொடுத்த மாம்பழமன்று; இது மூன்றுலகங்களிலும் பெறுதற்கு அருமையானது; ஆதலால், இதனை நீ வேறு எங்கேபெற்றாயென்று வளையலையணிந்த புனிதவதியாரைக் கேட்டான். -எ-று.

***அவ்வுரைகேட் டலும்மடவார் "அருளுடையார் அளித்தருளுஞ்
செவ்வியபேர் அருள்விளம்புந் திறமன்"றென் றுரைசெய்யார்;
"கைவருகற் புடைநெறியால் கணவன்உரை காவாமை
மெய்வழியன்"றெனவிளம்பல் விடமாட்டார்; விதிர்ப்புறுவார். 27***

(இ-ள்.) அந்தவார்த்தையைக் கேட்டவுடனே புனிதவதியார் அருள்வள்ளலாகிய சிவபெருமான் தம் அடியார்களுக்குப் பிரசாதிக்கும் செவ்விய திருவருளின் பெருமை பிறர்க்குச் சொல்லுந் தகுதியன்றென்று நினைந்தமையால் நிகழ்ந்ததைச் சொல்லமாட்டாதவரும், கற்புவழியில் நிற்பவர்கள் புருஷன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லைக் காவாதிருத்தல் கற்புடைமையன்றென்று நினைந் தமையால் உண்மை கூறுதலை விடமாட்டாதவருமாய் வருந்துவாராயினார். -எ-று.

"செய்தபடி சொல்லுவதே கடன்" என்னுஞ் சீலத்தார்
மைதழையுங் கண்டர்சே வடிகள்மனத் துறவணங்கி
"எய்தவருங் கனியளித்தார் யார்? என்னுங் கணவனுக்கு
மொய்தருபூங் குழல்மடவார் புகுந்தபடி தனைமொழிந்தார். 28

(இ-ள்.) பழத்தின் பொருட்டுத் தாம்செய்த வண்ணம் சொல்லுகிறதே முறைமையென்று நினைக்கும் ஒழுக்கத்தை யுடையவராய், விஷம் பொருந்திய கண்டத்தினையுடைய சிவபெருமானது திருவடிகளை மனதில் பொருந்தும்படி வணங்கி, கிடைத்தற்கரிய இம்மாங்கனியைக் கொடுத்தவர் யார்என்று கேட்கும் தன்நாயகனுக்கு மலர்கள் நெருங்கிய கூந்தலையுடைய புனிதவதியார் சிவபெருமான் திருவருளால் நடந்த வண்ணம் தவறாமல் சொன்னார். -எ-று.

"ஈசனருள்" எனகேட்ட இல்இறைவன் அதுதெளியான்
வாசமலர்த் திஅனையார் தமைநோக்கி மற்றிதுதான்
தேசுடைய சடைப்பெருமான் திருவருளேல் இன்னமும்ஓர்
ஆசில்கனி அவனருளால்அழைத்தளிப்பாய்" எனமொழிந்தான். 29

(இ-ள்.) சிவபெருமானுடைய திருவருளால் கிடைத்த தென்று சொல்லக் கேட்ட பரமதத்தன் அவ்வார்த்தை உண்மை யானதென்று தெளியாதவனாய், வாசனைபொருந்திய தாமரை மலரிலிருக்கும் சீதேவியையொத்த புனிதவதியாரைப் பார்த்து, நீ இப்போது கொடுத்த மாம்பழம் விளங்குகின்ற சடைமுடியை யுடைய சிவபெருமானது அனுக்கிரகத்தால் கிடைத்ததாயின் இன்னமும் குற்றமற்ற ஒரு பழத்தை அக்கடவுள் கிருபையினால் அழைத்துக் கொடுவென்று சொன்னான். -எ-று.

பாங்ககன்று மனைவியார் பணியணிவார் தமைப்பரவி
"ஈங்கிதளித் தருளீரேல் என்னுரைபொய் யாம்"என்ன
மாங்கனியொன் றருளால்வந் தெய்துதலும் மற்றதனை
ஆங்கவன்கைக் கொடுத்தலுமே அதிசயித்து வாங்கினான். 30

(இ-ள்.) புனிதவதியார் அவ்விடத்தினின்றும் நீங்கிப் பாம்பை யணிந்த சிவபெருமானை வணங்கி, (எம்பெருமானே!) தேவரீர் இவ்விடத்தில் மாங்கனியொன்று கொடுக்காவிட்டால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடியேன் சொன்னவார்த்தை பொய்யாய்விடுமென்று வேண்ட, அப்பொழுது ஆண்டவருடைய திருவருளினால் ஒரு மாம்பழம் புனிதவதியார் கையில் வருதலும் அந்தப் பழத்தை அப்பரமதத்தனுடைய கையில்கொடுக்க, அவன் உடனே ஆச்சரியப்பட்டுக் கையில் வாங்கினான். -எ-று.

வணிகனும் தன்கைப் புக்க மாங்கனி பின்னைக் காணான்
தணிவரும் பயமேற் கொள்ள உள்ளமுந் தடுமா றெய்தி
அணிகுழ லவரை வேறோர் அணங்கெனக் கருதி நீங்கும்
துணிவுகொண் டெவர்க்குஞ் சொல்லான்தொடர்வின்றி ஒழுகுநாளில். 31

(இ-ள்.) பரமதத்தனும் தன்கையில் வந்த மாம்பழத்தைப் பின்பு காணாதவனாய் அடங்காத அச்சமுண்டாக அதனால் மனமுங்கலங்கி, அழகிய கூந்தலையுடைய புனிதவதியாரை வேறொரு தெய்வப்பெண்ணென்று நினைத்து, அவரை விட்டு நீங்கவேண்டுமென்னும் நிச்சயத்தை மனதிற்கொண்டு, இச்செய்தியை ஒருவர்க்குஞ் சொல்லாதவனாய் அவரோடு சம்பந்தமில்லாமல் வாழும்நாளில். -எ-று.

விடுவதே எண்ண மாகமேவிய முயற்சி செய்வான்
"படுதிரைப் பரவைமீது படர்கலங் கொண்டுபோகி
நெடுநிதி கொணர்வேன்" என்ன நிரந்தபல் கிளைஞ ராகும்
வடுவில்சீர் வணிக மாக்கள் மரக்கலஞ் சமைப்பித் தார்கள். 32

(இ-ள்.) தான் அப்புநிதவதியாரைவிட்டு நீங்குவதே எண்ணமாகக் கொண்டு, அதற்குவேண்டிய முயற்சி செய்கின்றவனாகிய பரமதத்தன் சப்திக்கின்ற அலைகளை யுடைய சமுத்திரத்தில் செல்லுங் கப்பலேறிப்போய் அதிக திரவியத்தைச் சம்பாதித்துவருவேனென்று சொல்ல, அவனைச் சூழ்ந்திருக்கும் பல உறவினர்களாகிய குற்றமற்ற சிறப்பினை யுடைய வணிகர்கள் ஒருகப்பலைச் செய்வித்தார்கள். -எ-று.

கலஞ்சமைத் ததற்கு வேண்டுங் கம்மிய ருடனே செல்லும்
புலங்களில் விரும்பு பண்டம் பொருந்துவ நிரம்ப ஏற்றிச்
சலந்தரு கடவுட் போற்றித் தலைமையாம் நாய்கன்றானும்
நலந்தரு நாளில்ஏறி நளிதிரைக் கடல்மேற் போனான். 33

(இ-ள்.) ஒரு மரக்கலத்தைச் செய்து அதனை ஓட்டுதற்கு வேண்டிய மாலுமி முதலானவர்களுடனே தான் போகின்ற தேசங்களில் விரும்பிக் கொள்ளத்தக்க அரும்பண்டங்களா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யுள்ளவைகளை அக்கப்பலில் நிறைய ஏற்றி (க்ஷேமமாகப் போய்ச் சேரவேண்டுமென்று) சமுத்திர ராஜனாகிய வருணபகவானைத் துதித்துத் தலைவனாகிய பரமத்தனும் ஒரு சுபதினத்தில் கப்பலேறிக் குளிர்ந்த அலைகளையுடைய கடலின் மேற்போயினான். -எ-று.

கடல்மிசை வங்கம் ஓட்டிக் கருதிய தேயந் தன்னில்
அடைவுறச் சென்று சேர்ந்தங் களவில்பல் வளங்கள் முற்றி
இடைசில நாட்கள் நீங்க மீண்டும் அக்கலத்தில் ஏறிப்
படர்புனற் கன்னி நாட்டோர் பட்டினம் மருங்கு சேர்ந்தான். ***34***

(இ-ள்.) கடலின்மேல் கப்பலைச் செலுத்தித் தான்போக வேண்டுமென்று எண்ணிய தேசத்தில் முறைமையாகப் போய்ச் சேர்ந்து, அவ்விடத்தில் (தான் கொண்டுபோன சரக்குகளை விற்று) அளவில்லாத பலவளமுள்ள பண்டங்களைப் பெற்று, அதற்கு நடுவில் சிலநாட்கள் கழிய மறுபடியும் அந்த மரக்கலத்தில் ஏறி, பரவிய நீரையுடைய பாண்டி நாட்டிலுள்ள ஒரு பட்டணத்தை யடைந்தான், பரமதத்தன். -எ-று.

அப்பதி தன்னில் ஏறி அலகில்பல் பொருள்கள் ஆக்கும்
ஒப்பில்மா நிதியம் எல்லாம் ஒருவழிப் பெருக உய்த்து
மெய்ப்புகழ் விளங்கும் அவ்வூர் விரும்பவோர் வணிகன் பெற்ற
செப்பருங் கன்னி தன்னைத் திருமலி வதுவை செய்தான். ***35***

(இ-ள்.) அந்த நகரத்தில் வந்து தான் மறுதேசத்திலிருந்து கொண்டு வந்த அளவில்லாத பல பொருள்களை விற்று, அதனால் சம்பாதித்த ஒப்பற்ற மிகுந்த திரவியங்களையெல்லம் வட்டி முதலிய ஒவ்வோர் வழிகளில் பெருகும்படி செய்து, மெய்மையான புகழால் விளங்குகின்ற அவ்வூரிலுள்வர்கள் விரும்பும்படி ஒரு வைசியன் பெற்றெடுத்த சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய ஒரு கன்னிகையை மிகுந்த சிறப்போடு கலியாணஞ்செய்துகொண்டான். -எ-று.

பெறலருந் திருவி னாளைப் பெருமணம் புணர்ந்து முன்னை
அறலியல் நறுமென் கூந்தர் அணங்கனார் திறத்தில் அற்றம்
புறமொரு வெளியு றாமற் பொதிந்தசிந் தனையி னோடு
முறைமையின் வழாமை வைகி முகமலர்ந் தொழுகு நாளில். ***36***

(இ-ள்.) பெறுதற்கரிய திருமகளை யொத்த அந்தக் கன்னிகையைப் பெருமையோடு கலியாணஞ்செய்துகொண்டு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்புதான் விவாகஞ் செய்து கொண்ட கருமணல் போலும் நல்லமிருதுவாகிய கூந்தலையுடைய தெய்வப் பெண் போன்ற புனிதவதியார் விஷயத்தில் தான்செய்த வஞ்சகத்தைப் புறத்தில் ஒருவருக்கும் வெளிப்படுத்தாமல் மனதில் அடக்கிக்கொண்ட, இல்லறமுறைமையில் சிறிதும் தவறாமலிருந்து மிகுந்த சந்தோஷத்தோடு வாழும் நாளில். -எ-று.

முருகலர் சோலை மூதூ ரதன்முதல் வணிக ரோடும்
இருநிதிக் கிழவன் என்ன எய்திய திருவின் மிக்குப்
பொருகடற் கலங்கள் போக்கும் புகழினான் மனைவி தன்பால்
பெருகொளி விளக்குப் போலோர் பெண்கொடி அரிதிற் பெற்றான். 37

(இ-ள்.) வாசனை பொருந்திய மலர்களையுடைய சோலை சூழ்ந்த பழைமை யாகிய அவ்வூரிலிருக்கின்ற முதன்மையாகிய வணிகர்களோடு குபேரனைப் போல வியாபாரத்தால் கிடைத்த செல்வத்தினால் பெருமைபெற்று, அலைகள் மோதுகின்ற கடலில் மரக்கலங்களைச் செலுத்தி வர்த்தகஞ்செய்யும் கீர்த்திமானாகிய பரமதத்தன் தன் மனைவியினிடமாகப் பேரொளியை வீசுகின்ற விளக்குப்போல ஒரு பெண் குழந்தையை அருமையாகப் பெற்றான். -எ-று.

மடமகள் தன்னைப் பெற்று மங்கலம் பேணித் தான்முன்(பு)
உடனுறை(வு) அஞ்சி நீத்த ஒருபெரு மனைவி யாரைத்
தொடர்வற நினைந்து தெய்வத் தொழுகுலம் என்றே கொண்டு
கடன்மைத் தவர்தம் நாமங் காதல்செய் மகவை இட்டான். 38

(இ-ள்.) இளமையையுடைய அப்பெண் குழந்தையைப் பெற்று, அதற்குச் செய்ய வேண்டிய மங்களகரமான காரியங் களைச் செய்து, தான் முன்பு கூடி வாழ்வதற்குப் பயந்து நீங்கி வந்த ஒப்பற்ற மூத்த மனைவியாராகிய புனிதவதியாரைத் தன் மனையாளென்னும் தொடர்ச்சி நீங்கும்படி நினைந்து, எல்லாராலும் தொழப்படுகின்ற தெய்வகுலத்தில் சேர்ந்தவ ரென்று எண்ணி, நாமகரணத்துக்குச் செய்யவேண்டிய சடங்கு களைச் செய்து, அவ்வம்மையாருடைய புனிதவதியாரென்னுந் திருநாமத்தைத் தான் விருப்பமுற்றொழுகும் புத்திரிக்குத் தரித்தான். -எ-று.

இந்நிலை இவன்இங் கெய்தி இருந்தனன் இப்பால் நீடுங்
கன்னிமா மதில்சூழ் மாடக் காரைக்கால் வணிகனான
தன்னிகர் கடந்த செல்வத் தனதத்தன் மகளார் தாமும்
மன்னிய கற்பி னோடு மனையறம் புரிந்து வைக. 39

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) இவ்வாறாகப் பரமதத்தன் பாண்டி நாட்டிலுள்ள ஒருபட்டணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாளில், அழிவில்லாத பெரிய மதில்கள் சூழ்ந்த மாளிகைகளையுடைய காரைக்காலில் வாழும் வணிகனாகிய ஒப்பற்ற பெருஞ்செல்வத்தையுடைய தனதத்தனது புத்திரியாராகிய புனிதவதியாரும் நிலைபெற்ற கற்போடு இல்லறத்தை வழுவாமல் நடத்திக் கொண்டு வர.-எ-று.

விளைவளம் பெருக்க வங்க மீதுபோம் பரம தத்தன்
வளர்புகழ்ப் பாண்டி நாட்டோர் மாநகர் தன்னில் மன்னி
அளவில்மா நிதியம் ஆக்கி அமர்ந்தினி திருந்தான்" என்று
கிளரொளி மணிக்கொம் பன்னார் கிளைஞர்தாங் கேட்டா ரன்றே. 40

(இ-ள்.) அதிக இலாபத்தை விருத்திசெய்யும்படி கப்பலேறிச் சென்ற பரமதத்தனென்பவன் மிகுந்த புகழையுடைய பாண்டி நாட்டிலுள்ள ஒரு பெரியபட்டணத்தையடைந்து, அளவில்லாத பெரும்பொருளைச் சம்பாதித்து, அவ்விடத்திலேயே இனிதாக வாழ்ந்திருக்கின்றானென்று, விளக்குகின்ற ஒளியையுடைய மாணிக்கக் கொம்பு போன்ற புனிதவதியாருடைய சுற்றத்தார் கேள்விப்பட்டார்கள். -எ-று.

அம்மொழி கேட்ட போதே அணங்கனார் சுற்றத்தாரும்
நம்முறு கிளைஞர்ப் போக்கி அவன்நிலை தாமும் கேட்டு
மம்மர்கொள் மனத்த ராகி "மற்றவன் இருந்த பாங்கர்க்
கொம்மைவெம் முலையினாளைக் கொண்டுபோய் விடுவ"தென்றார். 41

(இ-ள்.) பரமதத்தன் பாண்டிநாட்டை யடைந்து கலியாணஞ் செய்து கொண்டு ஒரு குழந்தையைப் பெற்று வாழ்ந்திருக்கின்றானென்னும் வார்த்தையைக் கேள்விப்பட்ட பொழுதே புனிதவதியாருடைய சுற்றத்தார்கள் தம்முடைய உறவினர்களை யனுப்பி, அவனுடைய நிலைமையைத் தாங்களும் அறிந்துகொண்டு, மனங் கலங்கினவர்களாய் அப்பரமதத்தன் இருக்குமிடத்துக்குப் புனிதவதியாரைத் தாமே அழைத்துக் கொண்டுபோய் விடவேண்டுமென்று நிச்சயித்தார்கள். -எ-று.

மாமணிச் சிவிகை தன்னில் மடநடை மயில்அன் னாரைத்
தாமரைத் தவிசில் வைகுந் தனித்திரு என்ன ஏற்றிக்
காமரு கழனி வீழ்த்துக் காதல்செய் சுற்றத் தாரும்
தேமொழி யவருஞ் சூழச் சேணிடைக் கழிந்து சென்றார். 42

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) உயர்ந்த இரத்தினங்கள் பதித்த பல்லக்கில் மிருதுவாகிய நடையையுடைய மயில்போன்ற புனிதவதியாரைத் தாமரை மலராகிய ஆசனத்தில் வீற்றிருக்கும் ஒப்பற்ற சீதேவியைப் போல ஏற்றிக் கொண்டு, அழகிய இடுதிரையை விடுத்து, ஆசைபொருந்திய சுற்றத்தார்களும் இனிய சொற்களையுடைய சிலமாதர்களும் சூழ்ந்துவரப் பிரயாணத்தில் வெகுதூரம் நீங்கிப் போனார்கள். -எ-று.

சிலபகல் கடந்து சென்று செந்தமிழ்த் திருநா டெய்தி
மலர்புகழ்ப் பரம தத்தன் மாநகர் மருங்கு வந்து
குலமுதல் மனைவி யாரைக் கொண்டுவந் தணைந்த தன்மை
தொலைவில்சீர்க் கணவ னார்க்குச் சொல்லிமுன் செல்லவிட்டார். 43

(இ-ள்.) இடையில் சிலநாள்கள் கழியப்போய்ச் செந்தமிழ் வழங்கும் பாண்டி நாட்டையடைந்து, பரவிய கீர்த்தியையுடைய பரமதத்தன் வாசஞ்செய்யும் பெரியபட்டணத்துக்குச் சமீபத்தில் வந்து, குலத்துக்கு முதல்மனைவியாகிய புனிதவதியாரை அழைத்துக் கொண்டு வந்த தன்மையைக் கெடாத சிறப்பினையுடைய கணவனாகிய பரமதத்தனுக்கு முன்னேபோய்த் தெரிவிக்கும்படி சொல்லியனுப்பினார்கள். -எ-று.

வந்தவர் அணைந்த மாற்றங் கேட்டலும் வணிகன் தானும்
சிந்தையில் அச்சம் எய்திச் "செழுமணம் பின்பு செய்த
பைந்தொடி தனையுங் கொண்டு பயந்தபெண் மகவினோடு
முந்துறச் செல்வேன்" என்று மொய்குழ லவர்பால் வந்தான். 44

(இ-ள்.) தனது மனைவியார் வந்து சேர்ந்தாரென்னும் செய்தியைக் கேட்டவுடனே பரமதத்தனும் மனதில் அச்சமடைந்து, இரண்டாவது செழுமையாகக் கலியாணஞ்செய்து கொண்ட மனைவியையும் தான் அவளிடமாகப் பெற்ற பெண் குழந்தையையும் அழைத்துக் கொண்டு சீக்கிரம் போவேனென்று நெருங்கிய கூந்தலையுடைய புனிதவதியாரிடத்தில் வந்தான். -எ-று.

தானும்அம் மனைவி யோடும் தளர்நடை மகவி னோடும்
மானிளம் பிணைபோல் நின்ற மனைவியார் அடியில் தாழ்ந்தே
"யான்உம தருளால் வாழ்வேன்; இவ்விளங் குழவி தானும்
பான்மையால் உமது நாமம்" என்றுமுன் பணிந்து வீழ்ந்தான். 45

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அப்பரமதத்தனும் தன்னுடைய இரண்டாவது மனைவியோடும் தளர்ந்த நடையையுடைய பெண் குழந்தையோடும் இளமைபொருந்திய பெண் மான் போல் நின்ற முதல்மனைவியாராகிய புனிதவதியாருடைய திருவடிகளில் வணங்கி, அடியேன் உம்முடைய கருணையினாலே வாழ்கின்றேன், இந்த இளங்குழந்தைக்கும் முறைமைப்படி உம்முடைய திருநாமத்தையே தரித்திருக்கின்றேனென்று முன்னே சாஷ்டாங்கமாக வணங்கினான். -எ-று.

கணவர்தாம் வணங்கக் கண்ட காமர்பூங் கொடிய னாரும்
அணைவுறுஞ் சுற்றத் தார்பால் அச்சமோ டொதுங்கி நிற்ப
உணர்வுறு கிளைஞர் வெள்கி "உன்திரு மனைவி தன்னை
மணமலி தாரி னாய்!நீ வணங்குவ தென்கொல்!" என்றார். 46

(இ-ள்.) நாயகனாகிய பரமதத்தன் தம்மை வணங்கப்பார்த்த அழகிய பூங்கொடி போன்ற புனிதவதியாரும் தம்மோடுகூட வந்த சுற்றத்தார்களிடமாகப் பயத்தோடு ஒதுங்கி நிற்க, விவேகத்தையுடைய சுற்றத்தார்கள் இவன் செய்கைக்கு வெட்கப்பட்டு (அப்பரமதத்தனைப் பார்த்து) வாசனை பொருந்திய மலர்மாலையைத் தரித்த பரமதத்தனே! நீ உன்னுடைய அழகிய மனைவியை வணங்குகிறது என்ன காரணமென்று கேட்டார்கள். -எ-று.

மற்றவர் தம்மை நோக்கி "மானுடம் இவர்தாம் அல்லர்;
நற்பெருந் தெய்வ மாதல் நானறிந் தகன்ற பின்பு
பெற்றஇம் மகவு தன்னைப் பேரிட்டேன்; ஆத லாலே
பொற்பதம் பணிந்தேன்; நீரும் போற்றுதல் செய்மின்" என்றான். 47

(இ-ள்.) அவ்வாறு கேட்ட சுற்றத்தார்களைப் பரமதத்தன் பார்த்து, இவர் மானுடப் பெண்ணல்லர்; நல்ல பெரிய தெய்வப் பெண்ணாயிருத்தலை நான் தெரிந்து இவரை விட்டு நீங்கினபின்பு, இரண்டாவது கலியாணஞ் செய்து பெற்ற இப்பெண்குழந்தைக்கு இவர் திருநாமத்தையிட்டு அழைத்தேன்; ஆகையால் இவருடைய அழகிய திருவடிகளை வணங்கினேன்; நீங்களும் இவரைத் தெய்வமாக நினைத்து வணங்குகளென்று சொன்னான். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றலுஞ் சுற்றத் தாரும் "இதுஎன்கொல்!" என்று நின்றார்
மன்றலங் குழலி னாரும் வணிகன்வாய் மாற்றங் கேளாக்
கொன்றைவார் சடையினார்தங் குரைகழல் போற்றிச் சிந்தை
ஒன்றிய நோக்கில் மிக்க உணர்வுகொண் டுரைசெய் கின்றார். 48

(இ-ள்.) இவ்வாறு பரமதத்தன் சொன்ன பின்பு உறவினர்களும் இது என்ன ஆச்சரியமென்று திகைத்து நின்றார்கள்; வாசனை வீசுகின்ற அழகிய கூந்தலையுடைய புனிதவதியாரும் பரமதத்தனுடைய வாயிற்பிறந்த சொல்லைக்கேட்டு, கொன்றை மலர்மாலையைத் தரித்த நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமானது சப்திக்கின்ற சிலம்பையணிந்த திருவடிகளை வணங்கி, மனதில் பொருந்திய அன்போடு பேருணர்ச்சி கொண்டு சொல்லத் தொடங்கினார். -எ-று.

"ஈங்கிவன் குறித்த கொள்கை இது; இனி இவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடி(வு) அடியே னுக்குப்
பாங்குற வேண்டும்" என்று பரமர்தாள் பரவி நின்றார். 49

(இ-ள்.) இப்பரமதத்தன் மனதிற்குறித்த எண்ணம் இவ்வாறிருக்கின்றது; அதனால், இனிமேல் இவன்பொருட்டு சுமந்திருந்த அழகமைந்த மாமிசப் பொதியை இங்கு ஒழித்து, ஸ்ரீகயிலாசகிரியில் உம்மிடத்தில் சூழ்ந்து நிற்கின்ற சிவகணங்கள் போற்றுதற்குரிய பேய்க்கணங்களின் வடிவத்தை அடியேனுக்கு முறைமையாகத் தந்தருளவேண்டுமென்று சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி நின்றார். -எ-று.

ஆனஅப் பொழுது மன்றுள் ஆடுவார் அருளி னாலே
மேனெறி உணர்வு கூர வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
ஊனடை வனப்பை எல்லாம் உதறிஎற் புடம்பே யாக
வானமும் மண்ணும் எல்லாம் வணங்குபேய் வடிவம் ஆனார். 50

(இ-ள்.) புனிதவதியார் அவ்வாறு வேண்டி வணங்கி நின்றபொழுது, கனக சபையில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளும் சிவபெருமானுடைய திருவருளினால் மேலான முத்திநெறியை யடைதற்கேதுவாகிய உணர்ச்சி அதிகரிக்கத் தாம் வேண்டியவாறே பெறுகின்றவராகிய புனிதவதியார் தமது திருமேனியில் மாமிசத்தைப் பற்றியிருந்த அழகையெல்லாம் உதறிவிட்டு எலும்புடம்பாக விண்ணுலகமும் மண்ணுலகமுமாகிய எல்லாவுலகங்களும் வணங்குதற்குரிய பேய் வடிவத்தை யடைந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலர்மழை பொழிந்த தெங்கும்; வானதுந் துபியின் நாதம்
உலகெலாம் நிறைந்து விம்ம உம்பரும் முனிவர்தாமும்
குலவினர்; கணங்கள் எல்லாங் குணலையிட் டன; முன் நின்ற
தொலைவில்பல் சுற்றத் தாரும் தொழுதஞ்சி அகன்று போனார். 51

(இ-ள்.) எவ்விடத்திலும் கற்பகமலர்மாரி பொழிந்தது; தேவதுந்துபியின் ஒலியானது எவ்விடத்திலும் நிறைந்து சப்திக்கத் தேவர்களும், முனிவர்களும் கொண்டாடினார்கள்; பூதகணங்களெல்லாம் வீராவேசத்தால் கொக்கரித்தன; புனிதவதியாருக்கு முன்னேநின்ற அளவில்லாத பல உறவினர்களும் அவரை வணங்கிப் பயந்து நீங்கிப் போயினார்கள். -எ-று.

உற்பவித் தெழுந்த ஞானத் தொருமையின் உமைகோன் தன்னை
அற்புதத் திருவந் தாதிஅப்பொழு(து) அருளிச் செய்வார்
"பொற்புடைச் செய்ய பாத புண்டரீ கங்கள் போற்றும்
நற்கணத் தினில்ஒன் றானேன் நான்" என்று நயந்து பாடி. 52

(இ-ள்.) தம் உள்ளத்தில் தோன்றியெழுந்த சிவஞானத்தின் ஒருமையினால் உமாதேவிநாயகராகிய சிவபெருமானைக் குறித்து "அற்புதத்திருவந்தாதி" என்னும் பிரபந்தத்தை அப்பொழுதே அருளிச் செய்கின்றவராய், அழகு பொருந்திய சிவந்த திருவடித் தாமரைகளைத் துதிக்கின்ற நல்ல அடியார் திருக்கூட்டத்தில் நானும் ஒன்றாய்விட்டேனென்று விரும்பிப் பாடியருளி. -எ-று.

ஆய்ந்தசீர்இரட்டை மாலை அந்தாதி எடுத்துப் பாடி
ஏய்ந்தபே ருணர்வு பொங்க எயிலொரு மூன்றும் முன்னாள்
காய்ந்தவர் இருந்த வெள்ளிக் கைலைமால் வரையை நண்ண
வாய்ந்தபே ரருள்முன் கூர வழிபடும் வழியால் வந்தார். 53

(இ-ள்.) ஆராய்ந்த சிறப்பினையுடைய "திருவிரட்டைமணி மாலையை" அந்தாதித் தொடையாக எடுத்துப்பாடி, தம்மிடத்துப் பொருந்திய பேருணர்வானது அதிகரிக்க, முற்காலத்தில் பொன் வெள்ளி இரும்பு என்னும் மூன்று மதில்களையும் எரித்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஸ்ரீகைலாசகிரியை அடையும் படியாகப் பொருந்திய திருவருளானது முற்பட்டு நடத்த அத்திருவருள் வழித்தாயிருக்கும் முறைமையினால் ஒழுகி வந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்டவர் வியப்புற் றஞ்சிக் கையகன் றோடுவார்கள்
கொண்டதோர் வேடத் தன்மை உள்ளவா கூறக் கேட்டே
"அண்டநா யகனார் என்னை அறிவரேல் அறியா வாய்மை
எண்டிசை மாக்க ளுக்கியான் எவ்வுரு வாயேன்" என்பார். 54

(இ-ள்.) பார்த்தவர்கள் அதியப்பட்டு அச்சமடைந்து அவரைவிட்டு ஓடுகின்றவர்களாய்த் தாமடைந்த பேய் வேடத்தின் தன்மையை அவர்கள் உள்ளபடி சொல்ல, அதனைப் புனிதவதியார்கேட்டு, தேவர்கள் நாயகராகிய சிவபெருமான் என்னைத் தமது அடிமையென்று அறிவாராகில், இவ்வடிமைத் தன்மையின் நிலைமையை யறியாத எட்டுத் திக்கிலுள்ள மனிதர்களுக்கு யான் இப்பேயுருவன்றி வேறு எவ்வுருவடைந்தும் என்ன பிரயோசனமென்று சொல்லுவார். -எ-று.

வடதிசைத் தேசம் எல்லாம் மனத்தினுங் கடிது சென்று
தொடையவிழ் இதழி மாலைச் சூலபா ணியனார் மேவும்
படரொளிக் கைலை வெற்பின் பாங்கணைந் தாங்குக் காலின்
நடையினைத் தவிர்ந்து பார்மேல் தலையினால் நடந்து சென்றார். 55

(இ-ள்.) வடதிசையிலுள்ள கன்னட முதலிய எல்லாத் தேசங்களையும் மனவேகத்திலும் அதிக வேகமாக நடந்து சென்று, கொத்தாகவிரிந்த கொன்றை மாலைத் தரித்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் பரவிய ஒளியையுடைய ஸ்ரீ கைலாசகிரியின் சமீபமாகப்போய், அவ்விடத்தில் காலால் நடந்து செல்லுதலை யொழிந்து பூமியின்மேல் தலையினால் நடந்துபோயினார், புனிதவதியார். -எ-று.

தலையினால் நடந்து சென்று சங்கரன் இருந்த வெள்ளி
மலையின்மேல் ஏறும்போது மகிழ்ச்சியால் அன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுதல் ஒருபா கத்துச்
சிலைநுதல் இமய வல்லி திருக்கண்நோக் குற்ற தன்றே. 56

(இ-ள்.) தலையினால் நடந்துபோய்ச் சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கயிலாயமலையின்மேல் ஏறும்போது, மனமகிழ்ச்சியினாலே அன்பானது பொங்கும் படியாகக் கலை பொருந்திய இளம்பிறையை மாலையாகத் தரித்த சிவபெருமானுடைய வாமபாகத்தில் வீற்றிருந்தருளும் வில்லையொத்த புருவத்தையுடைய உமாதேவியாரது திருக்கண்ணோக்கத்திற்குப் புனிதவதியார்தலையினால் நடந்து வந்தது காணப்பட்டது. -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பிகை திருவுள் ளத்தின் அதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித் "தலையினால் நடந்திங் கேறும்
எம்பெரு மானோர் எற்பின் யாக்கைஅன் பென்னே!" என்ன
நம்பெரு மாட்டிக் கங்கு நாயகன் அருளிச் செய்வான். 57

(இ-ள்.) உமாதேவியார் திருவுள்ளத்தில் அதிசயமடைந்து, தமது நாயகராகிய சிவபெருமானைப் பார்த்து வணங்கி, எமது பெருமானே! தலையினால் நடந்து இக்கயிலாசகிரியில் ஏறிவரு கின்ற ஒரு எலும்புடம்பையுடைய பைசாசத்தினது அன்பின் பெருமை என்னவென்று கேட்க, நமது பெருமாட்டியாராகிய உமாதேவியாருக்கு அவ்விடத்தில் சிவபெருமான் அருளிச் செய்வாராயினார். -எ-று.

"வரும்இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்; உமையே! மற்றிப்
பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றனள்" என்று பின்றை
அருகுவந் தணைய நோக்கி ""அம்மையே! என்னுஞ் செம்மை
ஒருமொழி உலகம் எல்லாம் உய்யவே அருளிச் செய்தார். 58

(இ-ள்.) உமையவளே! இங்குத் தலையால் நடந்து வருகின்ற இவள் நம்மை விரும்பித் துதிக்கும் புனிதவதியம்மையார்; இந்தப் பெருமை பொருந்திய பேய் வடிவத்தையும் தான்வேண்டியே பெற்றுக் கொண்டாள் என்று அருளிச் செய்து, பின்பு அப்புனிதவதியார் தமக்குச் சமீபமாக வந்து நிற்க, அவரைப் பார்த்து, "அம்மையே" என்று அழைக்கும் செம்மையாகிய ஒரு திருவாக்கை உலகமெல்லாங் கடைத்தேறும்படி அருளிச் செய்தார். -எ-று.

அங்கணன் "அம்மையே!"என் றருள்செய "அப்பா!" என்று
பங்கயச் செம்பொற் பாதம் பணிந்துவீழ்ந் தெழுந்தார் தம்மைச்
சங்கவெண் குழையி னாருந் தாமெதிர் நோக்கி "நம்பால்
இங்குவேண் டுவதென்"? என்ன இறைஞ்சிநின் றியம்பு கின்றார். 59

(இ-ள்.) சிவபெருமான் அவரைப் பார்த்து "அம்மையே" என்று அழைத்தருள, அதற்குப் பதிலுத்தரமாக "அப்பா" என்று சொல்லிக் கொண்டே செந்தாமரைமலர் போன்ற அழகிய திருவடிகளில் விழுந்து வணங்கி யெழுந்த அவ்வம்மையாரை வெண்மையாகிய சங்கக்குழையையணிந்த சிவபெருமானும் நேராகப் பார்த்து, நம்மிடத்தில் இங்கு உனக்கு வேண்டிய வரம் என்னவென்று கேட்க, புனிதவதியார் வணங்கி நின்று கொண்டு சொல்லத் தொடங்கினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடம் போதுன் அடியின்கீழ் இருக்க" என்றார். 60

(இ-ள்.) அழிவில்லாத பேரின்பமயமாகிய அன்பை வேண்டிப் பின்னும் வேண்டுகின்றார்; இவ்வுலகத்தில் பிறவா திருத்தல் வேண்டும்; இருவினைவசத்தால் மறுபடியும் பிறப் புண்டாயிருப்பினும், தேவரீரை ஒருகாலமும் மறவாதிருத்தல் வேண்டும்; இன்னும் ஒருவரம், தருமசொரூபியாகிய எம் பெருமானே! தேவரீர் ஆனந்தத்தாண்டவஞ் செய்யும்பொழுது அடியேன் மனமகிழ்நது பாடிக்கொண்டு உமது திருவடியின் கீழிருக்கே வேண்டுமென்றார்; புனிதவதியார். -எ-று.

கூடுமா றருள்கொ டுத்துக் "குலவுதென் றிசையில் என்றும்
நீடுவாழ பழன மூதூர் நிலவிய ஆலங் காட்டில்
ஆடுமா நடமும் நீகண் டானந்தஞ் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை" என்றான் பரவுவார் பற்றாய் நின்றான். 61

(இ-ள்.) தம்மைத் துதிக்கும் அடியார்களுக்குத் துணையா யிருந்து அருள் புரியும் சிவபெருமான் புனிதவதியார் கேட்ட வரங்கள் பொருந்தும்படி கிருபை செய்து, விளங்குகின்ற தென்றிசையில் நிலைபெற்ற நீடூழி வாழ்கின்ற வயல்கள் சூழ்ந்த பழையனூர்த் திருவாலங்காட்டில் நாம் ஆடியருளும் ஊர்த்த தாண்டவத்தையும் நீ தரிசித்துப் பேரானந்தமடைந்து, எப்பொழுதும் நம்மைப்பாடுவாயாக வென்று அருளிச் செய்தார். -எ-று.

அப்பரி சருளப் பெற்ற அம்மையுஞ் செம்மை வேத
மெய்ப்பொரு ளானார் தம்மை விடைகொண்டு வணங்கிப் போந்து
செப்பரும் பெருமை அன்பால் திகழ்திரு வாலங் காடாம்
நற்பதி தலையி னாலே நடந்துபுக் கடைந்தார் அன்றே. 62

(இ-ள்.) அவ்வாறு சிவபெருமான் அருளியவரத்தைப் பெற்ற காரைக்காலம்மையாரும், செம்மையாகிய வேதத்திற் கூறும் உண்மைப் பொருளாகிய ஆண்டவரை நமஸ்கரித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அநுமதிபெற்றுக்கொண்டு திரும்பி, சொல்லுதற்கரிய பெருமையோடு கூடிய அன்பினால் விளங்குகின்ற திருவாலங் காடென்னும் நல்ல திருப்பதியைத் தமது தலையினாலே நடந்துபோய்ச் சேர்ந்தார். -எ-று.

ஆலங்கா டதனில் அண்ட முறநிமிர்ந் தாடுகின்ற
கோலங்காண் பொழுது "கொங்கை திரங்கி"என் றெடுத்துத் தங்கு
மூலங்காண் பரியார் தம்மை மூத்தநற் பதிகம் பாடி
ஞாலங்கா தலித்துப் போற்றும் நடம்போற்றி நண்ணு நாளில். 63

(இ-ள்.) திருவாலங்காட்டில் அண்டத்தை அளாவும்படி திருவடியைத் தூக்கி ஊர்த்ததாண்டவஞ் செய்தருளுகின்ற திருக்கோலத்தைத் தரிசித்தபொழுது, "கொங்கைதிரங்கி" என்று முதலில் எடுத்து, அநாதிநித்தியராகிய சிவபெருமானைக் குறித்து, "மூத்ததிருப்பதிகம்" பாடியருளி, உலகத்திலுள்ளவர்கள் விரும்பித் துதிக்கின்ற திருநடனத்தைப் போற்றி செய்திருக்கும் நாளில். -எ-று.

மட்டவிழ்கொன் றையினார்தம் திருக்கூத்து முன்வணங்கும்
இட்டமிகு பெருங்காதல் எழுந்தோங்க வியப்பெய்தி
"எட்டிஇல வம்மீகை" எனஎடுத்துத் திருப்பதிகம்
"கொட்டமுழ வங்குழகன் ஆடும்" எனப் பாடினார். 64

(இ-ள்.) தேன்சிந்துசின்ற கொன்றைப் பூமாலையைத் தரித்த சிவபெருமானுடைய திருநடனத்தை முன்னே நின்று தரிசிக்கும் ஆசைமிகுந்த பேரன்பானது மனதில் எழுந்து வளர்ந்தோங்க, அதிசயமடைந்து "எட்டியிலவமீகை" என்று முதலில் எடுத்துத் திருப்பதிகத்தைக் "கொட்டமுழவங் கூளிபாடக் குழகனாடுமே" என்று பாடியருளினார். -எ-று.

மடுத்தபுனல் வேணியினார் "அம்மை"என மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண் டவத்தில்அவர்
எடுத்தருளுஞ் சேவடிக்கீழ் என்றும்இருக் கின்றாரை
அடுத்தபெருஞ் சீர்ப்பரவல் ஆரளவா யினதம்மா. 65

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) கங்கைநீர் பெருகுகின்ற சடைமுடியையுடைய சிவபெருமான் "அம்மையே" என்று மதுரம்பொருந்திய திருவாக்குக் கொடுத்து அழைக்கப் பெற்றவரும், விளங்குகின்ற ஊர்த்ததாண்டவத்தில் அவ்வெம்பெருமான் தூக்கிய திருவடி நிகற்கீழ் எக்காலத்து மிருக்கப் பெற்றவருமாகிய காரைக் காலம்மையாரை அடுத்த பெரும்புகழைத் துதித்தல் யார் புத்திக்கு அளவுபடும்; (ஒருவர்க்கும் அளவுபடாது). -எ-று.

ஆதியோ டந்தமில்லான் அருள்நடம் ஆடும்போது
கீதமுன் பாடும் அம்மை கிளரொளி மலர்த்தாள் போற்றிச்
சீதநீர் வயல்சூழ் திங்க ளூரில்அப் பூதி யாராம்
போதமா முனிவர் செய்த திருத்தொண்டு புகல லுற்றேன். ***66***

(இ-ள்.) ஆதியு மந்தமுமில்லாத சிவபெருமான் அருண்மய மாகிய ஊர்த்ததாண்டவஞ் செய்யும்பொழுது அவர்திருமுன்னே நின்று கீதத்தைப்பாடி யருள்கின்ற காரைக்காலம்மையாருடைய விளங்குகின்ற ஒளிபொருந்திய தாமரைமலர் போன்ற திருவடி களைத் துதித்து, குளிர்ந்த நீர்வளம் பொருந்திய வயல்கள் சூழ்ந்த திங்களூரில் வாழும் அப்பூதியடிகணாயனார் என்னும் சிவஞானம் நிறைந்த முனிவரர் செய்த திருத்தொண்டின் சிறப்பைச் சொல்லத் தொடங்கினேன். -எ-று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

31. அப்பூதியடிகள் நாயனார் புராணம்

தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னாருக் கன்பர்
ஈண்டிய புகழின் பாலார் எல்லையில் தவத்தின் மிக்கார்;
ஆண்டசீர் அரசன் பாதம் அடைந்தவர் அறியா முன்னே
காண்டகு காதல் கூரக் கலந்தஅன் பினராய் உள்ளார். 1

(இ-ள்.) பர்வதராஜபுத்திரியாகிய பார்வதிதேவியாரோடு வீற்றிருந்தருளும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பழனமென்னும் திருப்பதியை வணங்கித் திருத்தொண்டு செய்கின்ற திருநாவுக்கரசுசுவாமிகள் ஒருமைப்பட்ட பேரன்பினால் நம்மை அடிமையாகவுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் மற்றைத் திருப்பதிகளையும் வணங்கவேண்டு மென்னும் விருப்பத்தோடு திங்களூரின் சமீபத்திலுள்ள வழியில் போகின்றவராய். -எ-று.

களவுபொய் காமம் கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்;
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார்; மனைப்பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்
உளவெலாம் அரசின் நாமஞ் சாற்றும்அவ் வொழுக லாற்றார். 2

(இ-ள்.) பிறர்பொருளைத் திருடுதல்-பொய்வார்த்தை சொல்லுதல்-பிறர்மனைவியை விரும்புதல்-கோபங்கொள்ளுதல் முதலாகிய மனக்குற்றங்களை யொழித்தவர்; வளம்பொருந்திய இல்லறவாழ்க்கையில் ஒழுகும் நிலைமையை யுடையவர்; தமது வீட்டிலிருக்கின்ற நாழி-மரக்கால் முதலிய முகத்தலளவைக் கருவிகளும், எடுத்தளக்கும் நிறைகோலும், புத்திரர்களும், பசுக்களும், எருமைகளும், மற்றுமுள்ள பொருள்களுமாகிய எல்லாவற்றிற்கும் திருநாவுக்கரசுசுவாமிகளது திருநாமத்தை இட்டுவழங்கும் நல்லொழுக்கநெறியில் நிற்கின்றவர். -எ-று.

வடிவுதாங் காணா ராயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையுந் தம்பி ரானார் அருளுங்கேட் டவர்நா மத்தால்
படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலா யுள்ள
முடிவிலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில். 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) நிலைபெற்ற சிறப்பினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவுருவத்தைக் காணாதவராயிருந்தும், அவர்செய்யும் அடிமைத் திறத்தையும், அவர்க்கு எமது சிவபெருமான் செய்யும் திருவருளின் பிரபாவத்தையும் கேள்விப்பட்டு, (அவரிடத்துவைத்த அன்பினால்) அவருடைய திருநாமத்தினால் உலகத்தில் சிறப்புற்று விளங்கும் திருமடங்கள் - தண்ணீர்ப் பந்தல்கள் முதலிய கெடாத தருமங்களைச் செய்து முறைமையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் நாளில். -எ-று.

பொருப்பரையன் மடப்பிடியி னுடன்புணருஞ் சிவக்களிற்றின்
திருப்பழனம் பணிந்துபணி செய்திருநா வுக்கரசர்
ஒருப்படுகா தலிற்பிறவும் உடையவர்தம் பதிவணங்கும்
விருப்பினொடுந் திங்களூர் மருங்குவழி மேவுவார். 4

(இ-ள்.) பர்வதராஜபுத்திரியாகிய பார்வதி தேவியாரோடு வீற்றிருந்தருளும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பழனமென்னுந் திருப்பதியை வணங்கி திருத்தொண்டு செய்கின்ற திருநாவுக்கரசுசுவாமிகள் ஒருமைபட்ட பேரன்பினால் நம்மை அடிமையாகவுடைய சிவபெருமான் வீற்றிருந் தருளும் மற்றைத் திருப்பதிகளையும் வணங்கவேண்டுமென்னும் விருப்பதோடு திங்களூரின் சமீபத்திலுள்ள வழியில் போகின்ற வராய். -எ-று.

அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறுவேனிற் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம் போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவும் நிழல்தருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார். 5

(இ-ள்.) அளவில்லாத சனங்கள் இடைவிடாமல் போய்க் கொண்டிருக்கும் வழியருகில் காருண்ய புருஷராகிய அப்பூதியடிகணாயனாரது திருவுள்ளம் போன்ற மிகுந்த குளிச்சியுடையதாய்க் கொடுமை பொருந்திய கோடையால் வரும் வெம்மையையொழித்து, நீர் நிறைந்த தாமரைத் தடாகம்போலக் குளிர்ச்சி மிகுந்திருக்கும் அதிக பரப்பினையுடையதாய் வளம் பொருந்திய நிழலைத் தருகின்ற தண்ணீர்ப் பந்தலில் வந்து சேர்ந்தருளினார்; திருநாவுக்கரசுசுவாமிகள். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருடன் அமுதமாந் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை எம்மருங்குந் தாங்கண்டார். 6

(இ-ள்.) அங்கு எழுந்தருளிய திருநாவுக்கரசுசுவாமிகள் சிறுதென்றல் வீசுகின்ற குளிர்ந்த தண்ணீர்ப்பந்தரோடு அமுதமயமாக விளங்குந் தண்ணீரையும் பார்த்தருளி; மனம் சந்தோஷிக்கும்படி வருகின்றவர் "திருநாவுக்கரசு" என்னும் தமது திருநாமத்தை அழகு பொருந்த எழுதியிருத்தலைத் தாம் எவ்விடத்திலும் பார்த்தருளினார். -எ-று.

'இப்பந்தர் இப்பெயரிட் டிங்கமைத்தார் யார்' என்றார்க்(கு)
அப்பந்தர் அறிந்தார்கள் "ஆண்டஅர செனும் பெயரால்
செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்;
தப்பின்றி எங்குமுள சாலைகுளங் கா" என்றார். 7

(இ-ள்.) (அங்குள்ளவர்களைப் பார்த்து) இந்தத் தண்ணீர்ப் பந்தருக்கு இத் "திருநாவுக்கரசு" என்னும் பெயரிட்டு அமைத் தவர்கள் யாவரென்று கேட்க, அத்தண்ணீர்ப் பந்தரின் வரலாற்றை யறிந்தவர்களாகிய அவ்வூரிலுள்ளவர்கள் திருநாவுக்கரசு என்னும் திருப்பெயரினால் சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய அப்பூதியடிகணாயனாரென்பவர் நன்றாக எவ்விடத்துமிருக்கின்ற தண்ணீர்ப் பந்தரும், தடாகங்களும் திருநந்தனவனங்களுமாகிய இவைகளைத் செய்து வைத்தா ரென்று சொன்னார்கள். -எ-று.

என்றுரைக்க அரசுகேட் "டிதற்கென்னோ கருத்"தென்று
நின்றவரை நோக்கி "அவர் எவ்விடத்தார்" எனவினவத்
"துன்றியநூல் மார்பரும்இத் தொல்பதியார்; மனையின்கண்
சென்றனர்இப் பொழுததுவுஞ் சேய்த்தன்று; நணித்" தென்றார். 8

(இ-ள்.) அவர்கள் இவ்வாறு சொல்ல, அதனைத் திருநாவுக்கரசு சுவாமிகள் கேட்டு, இங்ஙனம் அமைத்திருப் பதற்கு அவர்கருத்து என்னவென்று நினைத்து, அங்கு நின்ற அவ்வூராரைப் பார்த்து, அவர் எவ்விடத்திலிருக்கின்றவர் என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேட்க, அவர்கள் நெருங்கிய பூணூலையணிந்த மார்பினை யுடைய அவ்வப்பூதியடிகணாயனாரும் இந்தப் பழைமையாகிய ஊரிலுள்ளவரே; இப்பொழுதுதான் அவர் தம் வீட்டிற்குச் சென்றார்; அவ்வீடும் தூரமன்று; சமீபத்திலேயே யுள்ளதென்று சொன்னார்கள். -எ-று.

அங்ககன்று முனிவரும்போய் அப்பூதி அடிகளார்
தங்குமனைக் கடத்தலைமுன் சார்வாக உள்ளிருந்த
திங்களூர் மறைத்தலைவர் "செழுங்கடையில் வந்தடைந்தார்
நங்கள்பிரான் தமர்ஒருவர்" எனக்கேட்டு நண்ணினார். 9

(இ-ள்.) உடனே திருநாவுக்கரசுசுவாமிகளும் அவ்விடத்தி னின்றும் நீங்கிச் சென்று, அப்பூதியடிகணாயனார் வாசஞ் செய்கின்ற திருமாளிகையின் தலைக்கடை வாசலின் முன்னேசேர, திருமாளிகையினுள்ளே யிருந்த பிராமணகுல சிரேஷ்டராகிய அப்பூதியடிகள் நமது சிவபெருமானுடைய அடியவரொருவர் அழகிய தலைவாயிலில் வந்து நிற்கின்றார் என்று அங்குள்ளவர்கள் சொல்லக்கேட்டு அவ்விடத்து வந்தார். -எ-று.

கடிதணைந்து வாகீசர் கழல் பணிய மற்றவர்தம்
அடிபணியா முன்பணியும் அரசின்எதிர் அந்தணனார்
"முடிவில்தவஞ் செய்தேன்கொல்! முன்பொழியுங் கருணைபுரி
வடிவுடையீர் என்மனையில் வந்தருளிற் றென்?" என்றார். 10

(இ-ள்.) விரைவாக வந்து திருநாவுக்கரசுசுவாமிகளுடைய திருவடிகளிலே நமஸ்கரிக்க, அவ்வப்பூதியடிகள் தமது திருவடிகளை வணங்குவதற்குமுன்னமே தாம் வணங்கா நின்ற திருநாவுக்கரசுசுவாமிகளது திருமுன்னே அப்பூதியடிகணா யனார் நின்று, அடியேன் பூர்வத்தில் அளவற்ற பெருந்தவத்தைச் செய்தேனோ அறியேன்; உயிர்களின்மேல் பொழிகின்ற கருணையே ஒன்றாகத்திரண்ட திருவுருவத்தையுடைய சுவாமீ! தேவரீர் அடியேனுடைய சிறுகுடிசையில் எழுந்தருளியது யாதுகாரணமென்று கேட்டார். -எ-று.

ஒருகுன்ற வில்லாரைத்திருப்பழனத் துள்ளிறைஞ்சி
வருகின்றோம்; வழிக்கரையில் நீர்வைத்த வாய்ந்தவளந்
தருகின்ற நிழல்தண்ணீர்ப் பந்தருங்கண் டத்தகைமை
புரிகின்ற அறம்பிறவுங் கேட்டணைந்தோம்" எனப் புகல்வார். 11

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) (அதற்கு திருநாவுக்கரசுசுவாமிகள்) ஒப்பற்ற மேருமலையாகிய வில்லையுடைய சிவபெருமானைத் திருப்பழனமென்னும் ஸ்தலத்தில் தரிசித்து வணங்கிக்கொண்டு இப்பொழுது வருகின்றோம்; வழியோரத்தில் நீர் வைத்திருக் கின்ற சிறந்த வளம்பொருந்திய நிழலைத் தருகின்ற தண்ணீர்ப் பந்தரையும் பார்த்து, அப்படியே நீர் செய்து வருகின்ற மற்றைத் தருமங்களையுங் கேள்வியுற்று உம்மைக் காணவிரும்பிவந்தோ மென்று சொல்கின்றவராய். -எ-று.

"ஆறணியுங் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என் கொல்?
கூறும்" என எதிர்மொழிந்தார் கோதில்மொழிக் கொற்றவனார். 12

(இ-ள்.) கங்கை நதியைத் தரித்த சடைமுடியையுடைய சிவபெருமானது அடியார்கள் இளைப்பாறும் பொருட்டு நீர் வைத்திருக்கின்ற முடிவில்லாத பெருமை பொருந்திய தண்ணீர்ப் பந்தரில் உம்முடைய பெயரை எழுதாமல், வேறொரு பெயரை முன்னே எழுதவேண்டிய காரணம் யாதோ? அதனைச் சொல்லு மென்று எதிரில் சொன்னார், குற்றமற்ற திருநாவுக்கரசு சுவாமிகள். -எ-று.

நின்றமறை யோர்கேளா நிலையழிந்த சிந்தையராய்
"நன்றருளிச் செய்திலீர்! நாணில்அமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூட்சி திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர்தந் திருப்பேரோ வேறொருபேர்?" எனவெகுள்வார். 13

(இ-ள்.) (அவர் அவ்வாறு கூறிய வார்த்தையை) அங்குநின்ற அப்பூதியடிகள் கேட்டுத் தமது நிலைமை கலங்கிய மனமுடைய வராய், நீர் நல்லவார்த்தையை அருளிச் செய்திலீர்; சிறிதும் வெட்கமில்லாத பாதகர்களாகிய சமணர்களோடு சேர்ந்திருந்த பல்லவராஜன் செய்த விக்கினங்களைத் தாம் செய்யும் திருத் தொண்டின் வலிமையினாலே ஜயித்த எமது திருநாவுக்கரசு சுவாமிகளது திருப்பெயரோ? வேறொரு பெயரென்று கோபிப் பாராயினார். -எ-று.

"நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதென என்போல்வா ருந்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயர்எழுத
வெம்மைமொழி யான்கேட்க விளம்பினீர்" எனவிளம்பி. 14

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) நம்மை அடிமையாகவுடைய சிவபெருமானது திருவடிகளில் விரும்பிய திருத்தொண்டு செய்யுங் காரணத்தினால் (மறுமையிலேயன்றி) இம்மையிலும் பிழைக்கலாம் என்று என்போன்ற அறிவிலிகளும் தெளியும் பொருட்டு, நன்மைகளையே செய்கின்ற திருநாவுக்கரசுசுவாமிகளுடைய திருப்பெயரைத் தண்ணீர்ப் பந்தர் - தடாகம் - திருநந்தனவனம் முதலியவைகளில் நான் எழுதி வைக்க, நீர் அதைச் சிறிதும் கவனியாமல் இந்தக் கொடுஞ்சொல்லை நான் கேட்கும்படி பேசினீர் என்று சொல்லி. -எ-று.

"பொங்குகடற் கல்மிதப்பில் போந்தேறும் அவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே!
மங்கலமாந் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்;
எங்குறைவீர்? நீர்தாம்யார்? இயம்பும்" என இயம்பினார். 15

(இ-ள்.) அலைகள் பொங்குகின்ற கடலில் சமணர்கள் கட்டிப் போட்ட கற்றூணாகிய தெப்பத்தைக் கொண்டு அக்கடலைக் கடந்து கரையேறிய திருநாவுக்கரசுசுவாமிகளது மகிமையை இந்தவுலகத்தில் அறியாதவர்கள் யாரிருக்கின்றார்கள் (ஒருவருமில்லை;) இங்ஙனமாக, மங்களகரமாகிய சிவனடியார் திருவேடத்தோடு எம்முன்னே நின்று இத்தகைய தகாத வார்த்தயைச் சொன்னீர்; நீர் எங்கே இருக்கின்றவர்; உம்முடைய பெயரென்ன எமக்குச் சொல்லுமென்று கேட்டார். -எ-று.

திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்
பெருமையறிந் துரைசெய்வார் "பிறதுறையி னின்றேற
அருள்பெருகு சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்" என்றார். 16

(இ-ள்.) சிறந்த பிராமண சிரேஷ்டராகிய அப்பூதியடிகணாயனார் அவ்வாறான வார்த்தைகளைச் சொல்லியருள, திருநாவுக்கரசுசுவாமிகள் அவ்வப்பூதியடிகணாயனாருடைய அன்பின் பெருமையை யறிந்து சொல்லுவார், (அஃது என்னையெனின்) சமணசமயப் படுகுழியினின்றும் கரையேற்றும் பொருட்டுச் சிவபெருமான் தமது கருணைமிகுந்த சூலை நோயினால் தடுத்தாட்கொள்ள அதுகாரணமாக இச்சைவ நெறியையடைந்து கடைத்தேறிய தெளிந்த உணர்ச்சியில்லாத சிறியேன் யான்றான என்று அருளிச் செய்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரசறிய உரைசெய்ய அப்பூதி அடிகள்தாங்
கரகமல மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உலரகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ் சரணகம லம்பூண்டார். 17

(இ-ள்.) திருநாவுக்கரசுசுவாமிகள் தம்மைத் தெரிந்து கொள்ளும்படி தமது சரித்திரத்தைச் சொல்லியருள, அதனைக்கேட்ட அப்பூதியடிகணாயனர் தாமரைமலர் போன்ற இரண்டு கைகளும் சிரசின்மேலே குவிய, கண்களினின்றும் அருவிபோல ஆனந்தபாஷ்பம் சொரிய, உரைதடுமாறித் தேகமுழுவதும் உரோமஞ் சிலிர்க்கப் பூமியில் விழுந்து அத்திருநாவுக்கரசுசுவாமிகளுடைய ஸ்ரீபாதாரவிந்தங்களைச் சிரசில் சூடிக்கொண்டார். -எ-று.

மற்றவரை எதிர்வணங்கி வாகீசர் எடுத்தருள
அற்றவர்கள் அருநிதியம் பெற்றார்போல் அருமறையோர்
முற்றவுளங் களிகூர முன்னின்று கூத்தாடி
உற்றவிருப் புடன்சூழ ஓடினார் பாடினார். 18

(இ-ள்.) திருநாவுக்கரசுசுவாமிகள் அப்பூதியடிகணாயனாரை எதிரே வணங்கித் தமது திருக்கரங்களால் எடுத்தருளவும், அரிய செல்வத்தைப் பெற்ற தரித்திரர்களைப்போல அப்பூதியடிகள் மிகுந்த மனக்களிப்படைந்து அவர் திருமுன்னே நின்று ஆனந்தக் கூத்தாடி மனதிற் பொருந்திய விருப்பத்தோடு வலமாக ஓடினார்; தோத்திரங்களைப் பாடினார். -எ-று.

மூண்டபெரு மகிழ்ச்சியினால் முன்செய்வ தறியாதே
ஈண்டமனை அகத்தெய்தி இல்லவர்க்கும் மக்களுக்கும்
ஆண்டஅர செழுந்தருளும் ஓகையுரைத் தார்வமுறப்
பூண்டபெருஞ் சுற்றமெலாங் கொடுமீளப் புறப்பட்டார். 19

(இ-ள்.) மனதிலுண்டாகிய சந்தோஷமேலீட்டினால் முன்னே செய்யவேண்டியது இன்னது என்று அறியாமல், விரைவாகத் தமது திருமாளிகையிற் சென்று மனைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் திருநாவுக்கரசுசுவாமிகள் எழுந்தருளி வந்த சந்தோஷசமாசாரத்தைச் சொல்லிப் பெருங்களிப்புண்டாகத் தம்மைச் சேர்ந்த பெரிய சுற்றத்தார்களையெல்லாம் அழைத்துக் கொண்டு மீண்டுவந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனைவியா ருடன்மக்கள் மற்றுமுள்ள சுற்றத்தோர்
அனைவரையுங் கொண்டிறைஞ்சி ஆராத காதலுடன்
முனைவரைஉள் ளெழுந்தருளு வித்தவர்தாள் முன்விளக்கும்
புனைமலர்நீர் தங்கள்மேல் தெளித்துள்ளும் பூரித்தார். 20

(இ-ள்.) மனைவியாரும், பிள்ளைகளும், மற்றுமுள்ள சுற்றத்தார்களுமாகிய அனைவரையும் அழைத்து வந்து அவரை வணங்கச் செய்து, நீங்காத பெருமகிழ்ச்சியோடு திருநாவுக்கரசு சுவாமிகளைத் தமது திருமாளிகையினுள்ளே எழுந்தருளும் படிசெய்து, அவர் திருவடிகளை முன்னே விளக்கிய மலரமைந்த காலலம்பக் கொடுக்கும் நீரைத் தங்கள்மேல் தெளித்துக் கொண்டு உள்ளும் கொண்டார்கள். -எ-று.

ஆசனத்தில் பூசனைகள் அமர்வித்து விருப்பினுடன்
வாசநிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசம்உய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
நேசம்உற விண்ணப்பஞ் செயஅவரும் அதுநேர்ந்தார். 21

(இ-ள்.) அவரை ஆசனத்தி லெழுந்தருளப் பண்ணி, விதிப்படி செய்யவேண்டிய அருச்சனைகளைச் செய்து, விருப்பத்தோடு வாசனை நிறைந்த விபூதி மடலை அவர் திருமுன்னே காட்டி, மனமகிழும்படி உலகத்திலுள்ளவர்கள் தீவினையினின்றும் கடைத்தேறும்பொருட்டு அவதரித்தருளிய திருநாவுக்கரசுசுவாமிகளைத் திருவமுது செய்விக்கும்படியான அன்பு அதிகரித்தலால் அவரைப் பிரார்த்திக்க, அவரும் அதற்கு உடன்பட்டருளினார். -எ-று.

செய்தவர் இசைந்த போது திருமனை யரை நோக்கி
"எய்திய பேறு நம்பால் இருந்தவா றென்னே!" என்று
"மைதிகழ் மிடற்றி னான்றான் அருளினால் வந்த தென்றே
உய்தும்" என் றுவந்து கொண்டு திருவமு தாக்கல் உற்றார். 22

(இ-ள்.) அருமையாகச் செய்த தவத்தினையுடைய திருநாவுக்கரசுசுவாமிகள் திருவமுது செய்ய உடன்பட்ட பொழுது, அப்பூதியடிகள் தமது மனைவியாரைப் பார்த்து, இவர் இவ்விடத்தில் எழுந்தருளுவதற்கேதுவான தவப்பயன் நம்மிடத்தி லிருந்தவண்ணம் என்ன ஆச்சரியமென்று சொல்லி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இது காளகண்டத்தையுடைய சிவபெருமானது திருவருளினாலேயே கிடைத்ததென்று நினைத்து, இனி இதனால் நாம் கடைத்தேறுவோமென்று மகிழ்ச்சி யடைந்து, திருவமுது சமைக்கத் தொடங்கினார். -எ-று.

தூயநற் கறிக ளான அறுவகைச் சுவையால் ஆக்கி
ஆயஇன் னமுதும் ஆக்கி அமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மில் மூத்த திருநாவுக் கரசை "வாழை
மேயபொற் குருத்துக் கொண்டு வா" என விரைந்து விட்டார். **23**

(இ-ள்.) பரிசுத்தமாகிய நல்ல கறியமுதுகளை அறுவகைச் சுவையோடு அமைத்து இனிமைபொருந்திய அன்னத்தையும் சமைத்து, பின் திருநாவுக்கரசுசுவாமிகள் திருவமுது செய் தருளும் பொருட்டுத் தம்முடைய புத்திரர்களில் மூத்த திருநாவுக்கரசு என்னும் புதல்வனை வாழைமரத்தில் பொருந்திய அழகிய குருத்தை அரிந்துகொண்டு வாவென்று அனுப்பினார். -எ-று.

"நல்லதாய் தந்தைஏவ நான்இது செயப்பெற் றேன்"என்(று)
ஒல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரிய வாழை
மல்லலங் குருத்தை யீரும் பொழுதினில் வாள ராஒன்(று)
அல்லல்உற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே. **24**

(இ-ள்.) நற்குணமுடைய தாய் தந்தைகள் அனுப்ப, நான் இப்பணி செய்யப் பெற்றேனென்று, அம்மூத்த திருநாவுக்கரசு விரைந்து போய்த் தோட்டத்தினுள்ளே புகுந்து, பெரிய வாழை மரத்தினது வளம்பொருந்திய அழகிய குருத்தை அரியும் பொழுது ஒளியினையுடைய ஒரு பாம்பானது அப்புதல்வன் துயரமுற்று மயங்கி விழும்படி அவனது அழகிய கையில் கடித்தது. -எ-று.

கையினிற் கவர்ந்து சுற்றிக் கண்ணெரி காந்து கின்ற
யைரா வுதறி வீழ்த்துப் பதைப்புடன் "பாந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா முன்னம்வே கத்தால் எய்திக்
கொய்தஇக் குருத்தைச் சென்று கொடுப்பன்"என் றோடி வந்தான். **25**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) கையில் கடித்துச் சுற்றிக்கொண்டு கண்ணினின்றும் கோபத் தீயைச் சொரிகின்ற படத்தையுடைய பாம்பை யுதறிக் கீழே தள்ளி, பதைபதைப்புடனே பாம்பு கடித்த கொடிய வேகத்தினாலே நிலத்தில் வீழுமுன்னே வேகத்தோடு ஓடி அரிந்த இந்த வாழைக்குருத்தைக் கொண்டுபோய்க் கொடுப்பேனென்று ஓடிவந்தான். -எ-று.

பொருந்திய விடவே கத்திற் போதுவான் வேகம் முந்த
வருந்தியே அணையும் போழ்து "மாசுணம் கவர்ந்த திர்க்கும்
அருந்தவர் அமுதுசெய்யத் தாழ்க்கயான் அறையேன்" என்று
திருந்திய கருத்தினோடு செழுமனை சென்று புக்கான். 26

(இ-ள்.) தன்னைக்கடித்த பாம்பின் விஷவேகத்தோடு ஓடுகின்ற அம்மூத்த திருநாவுக்கரசு, விஷவேகமானது அதிகரித் தலால் வருந்தி வீட்டையடையும் பொழுது, என்னைப் பாம்பு கடித்ததை, அரிய தவத்தையுடைய திருநாவுக்கரசுசுவாமிகள் திருவமுது செய்யத் தடைபடும்வண்ணம் ஒருவருக்குஞ் சொல்லமாட்டேனென்று நிச்சயித்த எண்ணத்தோடு வளந்தங்கிய திருமாளிகையில் போய்ப்புகுந்தான். -எ-று.

எரிவிடம் முறையே ஏறித் தலைக்கொண்ட ஏழாம் வேகம்
தெரிவுற எயிறும் கண்ணும் மேனியும் கருகித் தீந்து
விரியுரை குழறி ஆவி விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயார் பால்வைத்துப் படிமேல் வீழ்ந்தான். 27

(இ-ள்.) தீப்போல் எரிகின்ற விஷமானது வரிசையாக ஏறித் தலைக்கொண்ட ஏழாம்வேகமானது தெரியும்படிக்குப் பற்களும், கண்களும், சரீரமும் கருகித் தீந்து, விரிந்த சொற்கள் தடுமாறிப் பிராணன் நீங்கும்படி மயங்கி விழுகின்றவன் தான் அரிந்துகொண்டுவந்த அந்த வாழைக்குருத்தைத் தாயார் கையில் கொடுத்துப் பூமியில் விழுந்தார். -எ-று.

தளர்ந்துவீழ் மகனைக்கண்டு தாயருந் தந்தை யாரும்
உளம்பதைத் துற்று நோக்கி உதிரஞ்சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியும் கண்டு "விடத்தினால் வீந்தான்" என்று
துளங்குதல் இன்றித் தொண்டர் அமுதுசெய் வதற்குச் சூழ்வார். 28

(இ-ள்.) மயங்கி விழுந்த புதல்வனைக் கண்டு அப்பூதியடி களும் அவர் மனைவியாரும் மனம்பதைத்து நன்றாகப் பார்த்து, உதிரம்சிந்துகின்ற உடம்பையும், அவ்வுடம்பில் விளங்கித்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தோன்றுகின்ற (கருகித் தீய்ந்த) குறியையுங் கண்டு, இவன் பாம்பின் விஷவேகத்தால் இறந்தானென்று அதனால்மனம் வருந்தாமல் திருநாவுக்கரசுசுவாமிகள் திருவமுது செய்வதற்கு நினைக்கின்ற வர்கள். -எ-று.

பெறலரும் புதல்வன் தன்னைப் பாயினுட் பெய்து மூடிப்
புறமனை முற்றிற் பாங்கோர் புடையினில் மறைத்து வைத்தே
"அறஇது தெரியா வண்ணம் அமுதுசெய் விப்போம்" என்று
விறலுடைத் தொண்ட னார்பால் விருப்பொடு விரைந்து வந்தார். 29

(இ-ள்.) பெறுதற்கரிய மூத்ததிருநாவுக்கரசு என்னும் புதல்வனைப் பாயில் வைத்து மூடி, வீட்டின் புறத்திலுள்ள முற்றத்தின் ஓர் பக்கத்திலே ஒருவருமறியாமல் மறைத்து வைத்துவிட்டு, இச் செயல் முழுவதும் திருநாவுக்கரசுசுவாமிகள் அறியாதபடி, அவருக்குத் திருவமுது செய்விப்போமென்று, அன்பின் வலிமையையுடைய திருநாவுக்கரசுசுவாமிகளிடத்தில் ஆசையோடு விரைவாக வந்தார். -எ-று.

கடிதுவந் "தமுது செய்யக் காலந்தாழ்க் கின்ற" தென்றே
அடிசிலும் கறியும் எல்லாம் அழகுற அணைய வைத்துப்
படியில்சீர்த் தொண்ட னார்முன் பணிந்தெழுந்து "அமுது செய்தெங்
குடிமுழு துய்யக் கொள்வீர் என்றவர் கூறக் கேட்டு." 30

(இ-ள்.) எமது திருநாவுக்கரசுசுவாமிகள் திருவமுது செய்வதற்குக் காலதாமதமாகின்றதென்று விரைவாக வந்து, அன்னமும் பதார்த்தங்களுமாகிய எல்லாவற்றையும் அழகாக ஓரிடத்தில் சூழவைத்து, ஒப்பற்ற சிறப்பினையுடைய திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு முன்னே வணங்கி யெழுந்து, தேவரீர் திருவமுது செய்து எமது குடியிலுள்ள மூவேழ்சுற்றத் தினரும் கடைத்தேறும்படி திருவுள்ளங்கொண்டருள்வீரென்று அப்பூதியடிகள் பிரார்த்திக்க, அதனைத் திருநாவுக்கரசு சுவாமிகள் கேட்டு. -எ-று.

அருந்தவர் எழுந்து செய் அடியினை விளக்கி வேறோர்
திருந்தும்ஆ சனத்தில் ஏறிப் பரிகலந் திருத்து முன்னர்
இருந்துவெண் ணீறு சாத்தி இயல்புடை இருவ ருக்கும்
பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கும் அளிக்கும் போழ்தில். 31

(இ-ள்.) அரிய தவத்தினையுடைய திருநாவுக்கரசுசுவாமிகள் எழுந்து தமது சிவந்த திருவடிகளைச் சுத்திசெய்துகொண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருத்தமாகிய வேறொரு ஆசனத்தில் எழுந்தளி, அப்பூதியடிகள் பரிகலத்தைத் திருத்துவதற்கு முன்னே அங்கிருந்து விபூதிதரித்து, அவ்வீட்டில் வாழ்கின்ற அப்பூதியடிகணாயனாருக்கும் அவர் மனைவியாருக்கும் மகிமைதங்கிய விபூதியைக் கொடுத்துப் புதல்வர்களுக்கும் கொடுக்கும் சமையத்தில். -எ-று.

ஆதிநான் மறைநூல் வாய்மை அப்பூதி யாரை நோக்கிக்
“காதலர் இவர்க்கு மூத்த சேயையுங் காட்டுகெ ன்ன
மேதகு பூதி சாத்த” என்றலும் விளைந்த தன்மை
யாதுமொன் றுரையார் “இப்போ திங்கவன் உதவான்” என்றார். **32**

(இ-ள்.) முதன்மையாகிய நான்கு வேதங்களிலும் கூறுகின்ற மெய்ம்மையை யுணர்ந்த அப்பூதியடிகணாயனாரைப் பார்த்து விருப்பத்தோடு இவர்களுக்கு மூத்த புதல்வனையும் மேன்மை பொருந்திய விபூதிசாத்துதற்குக் காட்டுவீராகவென்று அருளிச் செய்யும், அவர் நடந்த செய்திகள் ஒன்றையும் சொல்லாதவராய் இப்பொழுது அப்புதல்வன் இங்கே உதவான் என்று கூறினார். -எ-று.

அவ்வுரை கேட்ட போதே அங்கணர் அருளால் அன்பர்
செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேர நோக்கி
“இவ்வுரை பொறாதென் உள்ளம்; என்செய்தான் இதற்கொன் றுண்டால்
மெய்விரித் துரையும்” என்ன விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி. **33**

(இ-ள்.) அப்புதல்வன் உதவான் என்று அப்பூதியடிகள் கூறிய வார்த்தையைத் திருநாவுக்கரசுசுவாமிகள் கேட்டவுடனே சிவபெருமானுடைய திருவருளினால் தம்முடைய நல்ல திருவுள்ளத்திலே ஒரு தடுமாற்றந் தோன்ற, அப்பூதியடிகணாய னாரைப் பார்த்து நீர் சொல்லுகின்ற இந்த வார்த்தையை என்னுடைய மனமானது பொறுக்கலாற்றாது; அப்புதல்வன் என்ன செய்தான்; இதற்குச் செய்யத் தக்க தீர்வு ஒன்றிருக் கின்றது; நீர் உண்மையை விரித்துச சொல்லுமென்று கேட்க, அப்பூதியடிகள் தேகம் நடுங்கி அச்சமுற்றுச் சொல்வாராயினார். -எ-று.

“பெரியவர் அமுது செய்யும் பேறிது பிழைக்க என்னோ
வருவ(து)என் றுரையா ரேனும் மாதவர் வினவ வாய்மை
தெரிவுற உரைக்க வேண்டுஞ் சீலத்தால் சிந்தை நொந்து
பரிவொடு வணங்கி மைந்தர்க் குற்றது பகர்ந்தார் அன்றே. **34**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருநாவுக்கரசுசுவாமிகள் திருவமுதுசெய்யத் தக்கதாகிய இப்பேற்றை இழக்கும்படி யாதுவருவதோவென்று சொல்லாதொழிந்தாரேனும், சிறந்த தவத்தினையுடைய திருநாவுக்கரசுசுவாமிகள் கேட்க உண்மையை அவர் அறியும்படி சொல்லவேண்டுமென்னும் ஒழுக்கத்தால் மனம்நொந்து துயரத்தோடு வணங்கி, தமது புதல்வனுக்கு நேர்ந்த கெடுதியை எடுத்துச் சொன்னார். -எ-று.

நாவினுக் கரசர் கேளா "நன்றுநீர் புரிந்த வண்ணம்!
யாவர்இத் தன்மை செய்தார்?" என்றுமுன் எழுந்து சென்றே
ஆவிதீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார். 35

(இ-ள்.) (அப்புதல்வன் விஷந்தீண்டியிருந்தானென்று அப்பூதியடிகள் கூறிய செய்தியைத்) திருநாவுக்கரசுசுவாமிகள் கேட்டு, அவன் இங்கு உதவானென்று நீர் சொல்லிய வார்த்தை நன்றாயிருக்கின்றது; இத்தன்மையான செய்கையை வேறேயார் செய்தார்களென்று சொல்லிக்கொண்டு முன்னே விரைவாக எழுந்துபோய் உயிர் நீங்கிக்கிடக்கின்ற அந்தச் சவத்தைப் பார்த்து, சிவபெருமான் அச்சவத்திற்கு உயிர் கொடுத்தருளும் வண்ணம் பரவிய இசையினையுடைய "ஒன்றுகொலாம்" என்னும் முதலையுடைய திருப்பதிகம் பாடியருளிப் பாம்பின் விஷத்தைப் போக்குவித்தார். -எ-று.

தீவிடம் நீங்க உய்ந்த திருமறை யவர்தஞ் சேயும்
மேவிய உறக்கம் நீங்கி வரைந்தெழு வானைப் போன்று
சேவுகைத் தவர்ஆட் கொண்ட திருநாவுக் கரசர் செய்
பூவடி வணங்கக் கண்டு புனிதநீ றளித்தார்அன்றே. 36

(இ-ள்.) கொடிய பாம்பின் விஷமானது தன்னைவிட்டு நீங்க, அதனால் உயிர் பெற்றெழுந்த அப்பூதியடிகணாயனாருடைய மூத்தகுமாரனும் தான்கொண்ட நித்திரையினின்று நீங்கி விரைவாக எழுகின்றவனைப் போன்று, ரிஷபத்தை வாகனமாகக் கொண்ட சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பெற்ற திருநாவுக்கரசுசுவாமிகளுடைய சிவந்த தாமரை மலர் போன்ற திருவடிகளை நமஸ்கரிக்க, அவரைப் பார்த்துப் பரிசுத்தம் பொருந்திய விபூதியைக் கொடுத்தருளினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரிவுறும் ஆவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார் நின்றஅப் பயந்தார் தாங்கள்
"அறிவரும் பெருமை அன்பர் அமுதுசெய் தருளுதற்குச்
சிறிதிடை யூறு செய்தான் இவன்" என்று சிந்தை நொந்தார். 37

(இ-ள்.) பாம்பினால் உடலை விட்டு நீங்கிய உயிரைப் பின்வரப்பெற்ற அம்மூத்த புதல்வனைப் பார்த்த அவ்வூரிலுள்ளவர்கள் அப்பூதியடிகணாயனாருடைய திருத்தொண்டின் முறைமையைத் துதித்து வாழ்ந்தார்கள்; அங்குநின்ற அத்தாய் தந்தையர் தங்களால் அறிதற்கரிய பெருமையையுடைய திருநாவுக்கரசுசுவாமிகள் திருவமுது செய்தருளுதற்கு இவன் சிறிது தடைசெய்தானென்று அவன் உயிர் பெற்றதற்குச் சந்தோஷியாமல் மனம்வருந்தினார்கள். -எ-று.

ஆங்கவர் வாட்டந் தன்னை அறிந்துசொல் அரசர் கூட
ஓங்கிய மனையில் எய்தி அமுதுசெய் தருள வுற்ற
பாங்கினில் இருப்ப முந்நூல் பயில்மணி மார்பர் தாமும்
தாங்கிய மகிழ்ச்சி யோடுந் தகுவன சமைத்துச் சார்வார். 38

(இ-ள்.) அப்பூதியடிகளும், அவர் மனைவியாரும் அடைந்திருக்கும் மனவருத்தத்தையறிந்து திருநாவுக்கரசு சுவாமிகள் அவர்களோடு உயர்ந்த திருமாளிகைக்கு எழுந்தருளித் திருவமுது செய்தருளுதற்குத் தகுந்த இடத்தில் வீற்றிருப்ப, பூணூலையணிந்த மார்பினையுடைய அப்பூதியடிகளும் மனதிற்பொருந்திய பெருமகிழ்ச்சியோடு தகுந்த பொருள்களை எடுத்துக் கொண்டு வந்து. -எ-று.

புகழ்ந்தகோ மயத்து நீரால் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச் சிறப்புடைத் தீபம் ஏற்றி
நிகழ்ந்தஅக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம்பெற மரபின் வைத்தார். 39

(இ-ள்.) நூல்களில் சிறப்பித்துச் சொல்லப்பட்ட கோமயத்தின் நீரினால் திருவமுதுசெய்யும் இடத்தை நன்றாகமெழுகி, விளங்குகின்ற வெள்ளிய சுண்ணச்சாந்தையும் சதுரமாக இட்டு, மங்களகரமான திருவிளக்கை ஏற்றி, அப்புதல்வன் கொண்டு வந்த வாழையின் நீண்ட பரிகலக் குருத்தை விரித்து, நல்ல நீரினால் மகிழ்ச்சியோடு உடனே அதைச் சுத்திசெய்து, அரிந்த பக்கம் வலத்தில் இருக்கும்படி முறைமையாக இட்டார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**திருந்திய வாச நன்னீர் அளித்திடத் திருக்கை நீவும்
பெருந்தவர் மறையோர் தம்மைப் பிள்ளைக ளுடனே நோக்கி
"அரும்புதல் வர்களும் நீரும் அமுதுசெய் வீர்இங்கென்ன
விரும்பிய உள்ளத் தோடு மேலவர் ஏவல் செய்வார். 410**

(இ-ள்.) திருத்தமாகிய மணம்பொருந்திய நல்லநீரைக் கொடுக்க, திருவமுது செய்யும் பொருட்டுத் திருக்கரத்தைச் சுத்திசெய்யும் திருநாவுக்கரசுசுவாமிகள் அப்பூதியடிகளை அவர்புத்திரர்களுடனே பார்த்து, அருமையாகிய புதல்வர்களும், நீரும் இவ்விடத்தே திருவமுது செய்வீர்களென்று கட்டளை யிட, விருப்பம் பொருந்திய திருவுள்ளத்தோடு திருநாவுக்கரசு சுவாமிகளுடைய கட்டளையை மறாது செய்கின்றவர்களாய். -எ-று.

**மைந்தரும் மறையோர் தாமும் மருங்கிருந் தமுது செய்யச்
சிந்தைமிக் கில்ல மாதர் திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக் கூத்தனார் அடியா ரோடும்
அந்தமி ழாளி யார்அங் கமுதுசெய் தருளி னாரே. 41**

(இ-ள்.) புதல்வர்களும், அப்பூதியடிகணாயனாரும் அவருக்குச் சமீபத்திலிருந்து திருவமுது செய்ய, மனைவியார் மனதில் மகிழ்ச்சிமிகுந்து திருவமுது கொண்டுவந்து படைக்க, கொத்தாக மலர்ந்த கொன்றை மாலையையணிந்த சடைமுடி யையுடைய சிவபெருமானது அடியார்களோடு அழகிய தமிழ்த் தலைவராகிய திருநாவுக்கரசுசுவாமிகள் அங்குத் திருவமுது செய்தருளினார். -எ-று.

**மாதவ மறையோர் செல்வ மனையிடை அமுது செய்து
காதல்நண் பளித்துப் பன்னாள் கலந்துடன் இருந்த பின்றை
மேதகு நாவின் மன்னர் விளங்கிய பழன மூதூர்
நாதர்தம் பாதஞ் சேர்ந்து நற்றமிழ்ப் பதிகஞ் செய்வார். 42**

(இ-ள்.) மகத்தாகிய தவத்தையுடைய அப்பூதியடிகணாய னாரது செல்வமிகுந்த திருமாளிகையில் திருவமுது செய்து, அன்போடு கூடிய நேசத்தை அவரிடத்தில் வைத்துப் பலநாள் அவரோடு கூடியிருந்த பின்பு, மேன்மையாகிய பெருங்குணத்தை யுடைய திருநாவுக்கரசுசுவாமிகள் புகழ்விளங்கிய திருப்பழன மென்னும் பழைய திருப்பதியில் சிவபெருமான் திருவடிகளை யடைந்து நல்ல தமிழ்ப் பதிகத்தையருளிச் செய்கின்றவராய். எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பூதி அடிக ளார்தம் அடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி அணிந்தார் தம்மை விரும்பு "சொன்மாலை" வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோர் எல்லையில் அன்பால் என்றுஞ்
செப்(பு)ஊதி யங்கைக் கொண்டார் திருநாவுக் கரசர் பாதம். 43

(இ-ள்.) அருள்நிறைந்த மெய்ம்மையாகிய விபூதியைத் தரித்த சிவபெருமானைப் பாடிய திருப்பதிகத்தில் தமது அடிமைத் தன்மையைச் சிறப்பித்துப் பாடப் பெற்றதாகிய இப்பெருஞ் செல்வத்தை யடைந்த நல்லோராகிய அப்பூதியடிகணாயனார் அளவில்லாத பேரன்பினால் எக்காலத்தும் அத்திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகளைத் துதிக்கின்ற பயனை யடைந்தார். -எ-று.

இவ்வகை அரசின் நாமம் ஏத்திஎப் பொருளும் நாளும்
அவ்வருந் தவர்பொற் றாளே எனவுணர்ந்த தடைவார் செல்லுஞ்
செவ்விய நெறிய தாகத் திருத்தில்லை மன்றுள் ஆடும்
நவ்வியங் கண்ணாள் பங்கர் நற்கழல் நண்ணி னாரே. 44

(இ-ள்.) இவ்விதமாகத் திருநாவுக்கரசுசுவாமிகளுடைய திருநாமத்தைத் துதித்து, எல்லாப் பொருள்களும் எந்நாளும் அந்தத் தவமுனிவராகிய திருநாவுக்கரசுசுவாமிகளது அழகிய திருவடிகளே யென்று உணர்ந்தொழுகுகின்ற அப்பூதியடிகணா யனார் தாம் ஒழுகிவரும் நன்மார்க்கப்படியே நடந்து, திருத் தில்லையில் கனகசபையிலே ஆனந்தத் தாண்டவஞ் செய் தருளும் சிவகாமவல்லிபாகராகிய சிவபெருமானுடைய ஸ்ரீகுஞ்சிதபாதத்தை யடைந்தார். -எ-று.

மான்மறிக் கையர் பொற்றாள் வாகீசர் அடைவால் பெற்ற
மேன்மைஅப் பூதி யாராம் வேதியர் பாதம் போற்றிக்
சான்மலர்க் கமல வாவிக் கழனிசூழ் சாத்த மங்கை
நான்மறை நீல நக்கர் திருத்தொழில் நவில லுற்றேன். 45

(இ-ள்.) மான் கன்றை ஏந்திய திருக்கரதையுடைய சிவபெருமானது அழகிய திருவடிகளைத் திருநாவுக்கரசுசுவாமி களுடைய சார்பினால் பெற்ற மேன்மை பொந்திய அப் பூதியடிகணாயனாரென்னும் வேதியரது திருவடிகளைத் துதித்து, வாசனை வீசுகின்ற தாமரை மலர்கள் பொருந்திய தடாகங்களும் கழனிகளும் சூழ்ந்த திருச்சாத்தமங்கை யென்னும் ஊரில் அவதரித்த நான்கு வேதங்களையுணர்ந்த திருநீலநக்க நாயனாருடைய திருத்தொண்டைச் சொல்லத் தொடங்கினேன். -எ-று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

௩௨. திருநீலநக்க நாயனார் புராணம்

பூத்த பங்கயப் பொகுட்டின்மேற் பொருகயல் உகளுங்
காய்த்த செந்நெலின் காடுசூழ் காவிரி நாட்டுச்
சாத்த மங்கைஎன் றுலகெலாம் புகழ்வுறுந் தகைத்தால்
வாய்த்த மங்கல மறையவர் முதற்பதி வனப்பு. 1

(இ-ள்.) மலர்ந்த தாமரைப் பொகுட்டின்மேல் மோதுகின்ற கெண்டை மீன்கள் புரள்கின்ற (வயல்களில்) காய்க்கப்பட்ட செந்நெற்றொகுதிகள் மிகுதியாகச் சூழ்ந்த சோழவளநாட்டிலே சிறந்த மங்களகரம் பொருந்திய வேதியர்கள் வாழ்கின்ற முதன்மையாகிய அவ்வூரின் சிறப்பானது திருச்சாத்தமங்கை யென்று உலக முழுமையும் வழங்குகின்ற பெருமையையுடையது. -எ-று.

நன்மை சாலும்அப் பதியிடை நறுநுதல் மடவார்
மென்ம லர்த்தடம் படியமற் றவருடன் விரவி
அன்னம் முன்துறை ஆடுவ; பாடுவ சாமம்
பன்ம றைக்கிடை யுடன்பயிற் றுவபல பூவை. 2

(இ-ள்.) நன்மை மிகுந்த அந்தச் சாத்தமங்கையென்னுமூரில் நல்ல நெற்றியையுடைய மாதர்கள் மிருதுவாகிய மலர்களை யுடைய தடாகத்தில் ஸ்நானஞ்செய்ய அம்மாதர்களோடு கலந்து அன்னங்களும் முன்னே அத்துறைகளில் நீராடுவன; பலவேதங்களை அத்தியயனஞ்செய்யும் பிராமணச் சிறுவர் களோடு தாம்கற்ற சாமவேதத்தைப் பல நாகணவாய்ப் பறவைகள் தம் குஞ்சுகளுக்குக் கற்பிக்கின்றன. - எ-று.

"ஆய்ந்த மெய்ப்பொருள் நீ"றென வளர்க்கும்அக் காப்பில்
ஏய்ந்த மூன்றுதீ வளர்த்துளார் இருபிறப் பாளர்;
நீந்து நல்லறம் நீர்மையின் வளர்க்கும்அத் தீயை
வாய்ந்த கற்புடன் நான்கென வளர்ப்பர்கண் மடவார். 3

(இ-ள்.) வேதத்தில் ஆராய்ந்து தேர்ந்த உண்மைப் பொருள் திருவெண்ணீறேயென்று அதனை விருத்திசெய்கின்ற அந்தச் சாத்தமங்கையில் வேதியர்கள் வேதத்தில் சொல்லுகின்ற ஆவகனீயம் - காருகபத்தியம் - தக்கணாக்கினி என்னும் முத்தீயையும் வளர்ப்பார்கள்; நல்ல தருமத்தின் முறைமைப்படியே மிகுதியாக வளர்க்கின்ற அம்முத்தீயைச் சிந்த கற்புடனே நான்கென்று அவ்வேதியர் மாதர்கள் வளர்ப்பார்கள். -எ-று.

சீலம் உய்த்தஅத் திருமறை யோர்செழு மூதூர்
ஞாலம் மிக்கநான் மறைப்பொருள் விளக்கிய நலத்தார்
ஆலம் வைத்தகண் டத்தவர் தொண்டராம் அன்பர்
"நீல நக்கனார்" என்பவர் நிகழ்ந்துளார் ஆனார். 4

(இ-ள்.) நல்லொழுக்க நெறியில் தம்மைச் செலுத்திய அவ்வேதியர்கள் வாழும் வளந்தங்கிய சாத்த மங்கையில், உலகத்தில் சிறந்தோங்கும் வேதியர்குலத்தை விளங்கும் நன்மையையுடையவரும், விஷத்தையணிந்த கண்டத்தையுடைய சிவபெருமானுக்குத் தொண்டு பூண்டொழுகும் மெய்யன்பரும், திருநீலநக்கநாயனாரென்னுந் திருநாமமுடையவருமாகிய ஒருவர் வாழ்ந்து கொண்டிருந்தார். -எ-று.

"வேத உள்ளுறை யாவன விரிபுனல் வேணி
நாதர் தம்மையும் அவரடி யாரையும் நயந்து
பாதம் அர்ச்சனை புரிவதும் பணிவதும்" என்றே
காத லால்அவை இரண்டுமே செய்கருத் துடையார். 5

(இ-ள்.) வேதங்களிற் கூறும் உட்பொருளாவன, பரவிய கங்கைநதியைத் தரித்த சடைமுடியையுடைய சிவபெருமானையும், அவரது அடியார்களையும் விரும்பிப் பாதபூசை செய்வதும் வணங்குவதுமேயாகுமென்று நினைத்து, மிகுந்த விருப்பத்தோடு அவ்விரண்டையுமே செய்கின்ற கருத்தையுடையவர், அந்தத் திருநீலநக்கநாயனார். -எ-று.

மெய்த்த ஆகம விதிவழி வேதகா ரணரை
நித்தல் பூசனை புரிந்தெழு நியமமுஞ் செய்தே
அத்தர் அன்பருக் கமுதுசெய் விப்பது முதலா
எத்தி றத்தன பணிகளும் ஏற்றெதிர் செய்வார். 6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) உண்மையாகிய சிவாகமவிதியின்படியே, வேதகாரணராகிய சிவபெருமானைத் தினந்தோறும் இடைவிடாது பூசித்துவருகின்ற நியமத்தையுஞ் செய்து வருவதுமல்லாமல், அச்சிவபெருமானுடைய அடியார்களுக்குத் திருவமுது செய்விப்பது முதலாகிய எவ்வகைப்பட்ட திருத்தொண்டுகளையும் மேற்கொண்டு செய்கின்றவர். -எ-று.

ஆய செய்கையில் அமருநாள் ஆதிரை நாளில்
மேய பூசனை நியதியை விதியினால் முடித்துத்
தூய தொண்டனார் தொல்லைநீ டயவந்தி அமர்ந்த
நாய னாரையும் அருச்சனை புரிந்திட நயந்தார். 7

(இ-ள்.) நல்ல குணத்தையுடைய திருநீலநக்கநாயனார் அவ்வாறு சிவபூசை அடியார் பூசைகளைச் செய்தொழுகும் நாளிலே, ஒருநாள் திருவாதிரை நட்சத்திரத்திலே, தாம் செய்தற்குரிய ஆன்மார்த்த பூசா விதிகளை முறைமைப்படி செய்து முடித்து, பழைமையாகிய உயர்ந்த அயவந்தி என்னும் ஆலயத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமானையும் அருச்சிக்கும்படி விருப்பங்கொண்டார். -எ-று.

உறையு ளாகிய மனைநின்றும் ஒருமைஅன் புற்ற
முறைமை யால்வரு பூசைக்கும் முற்றவேண் டுவன
குறைவ றக்கொண்டு மனைவியார் தம்மொடுங்கூட
இறைவர் கோயில்வந் தெய்தினர் எல்லையில் தவத்தோர். 8

(இ-ள்.) அளவற்ற பெருந்தவத்தையுடைய திருநீலநக்கநாயனார், தமது வாசஸ்தானமாகிய திருமாளிகையினின்றும் ஒருமைப் பட்ட அன்புகாரணமாகச் செய்கின்ற பூசைக்கு வேண்டிய உபகரணங்களையெல்லாம் குறைவில்லாமல் எடுத்துக் கொண்டு தமது பத்தினியாரோடுகூடச் சிவபெருமான் வீற்றிருந்தருளும் அயவந்தியென்னும் ஆலயத்தை வந்தடைந்தார். -எ-று.

அணைய வந்துபுக் கயவந்தி மேவிய அமுதின்
துணைம லர்க்கழல் தொழுதுபூ சனைசெயத் தொடங்கி
இணைய நின்றங்கு வேண்டுவ மனைவியார் ஏந்த
உணர்வின் மிக்கவர் உயர்ந்தஅர்ச் சனைமுறை உய்த்தார். 9

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அத்திருக்கோயிலின் சமீபமாகவந்து உள்ளே நுழைந்து, அயவந்தி என்னும் ஆலயத்தில் வீற்றிருந்தருளும் அமுதத்தையொத்த சிவபெருமானது தாமரைமலர் போன்ற இரண்டு திருவடிகளையும் வணங்கிப் பூசை செய்யத் தொடங்கி, அருகில் நின்று கொண்டு அங்குவேண்டிய உபகரணங்களைத் தமது பத்தினியார் எடுத்துக்கொடுக்க, அறிவிற்சிறந்த திருநீலநக்க நாயனார் சிறந்த பூசையை விதிப்படியே செய்தார். -எ-று.

நீடு பூசனை நிரம்பியும் அன்பினால் நிரம்பார்
மாடு சூழ்புடை வலங்கொண்டு வணங்கிமுன் வழுத்தித்
தேடு மாமறைப் பொருளினைத் தெளிவுற நோக்கி
நாடும் அஞ்செழுத் துணர்வுற இருந்துமுன் நவின்றார். 10

(இ-ள்.) மிகுந்த சிவபூசையை விதிப்படி செய்தும் அன்புகுறையாதவராய் அருகில் சூழ்ந்துள்ள பிரகாரத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து, திருமுன்னேநின்று வணங்கித்துதித்து, அறிஞர்களால் தேடப்பட்ட சிறந்த வேதப்பொருளாகிய சிவபெருமானை நன்றாகத் தரிசித்து, விரும்புகின்ற திருவைந் தெழுத்தும் உணர்விலே பொருந்தத் திருமுன்னின்று ஜபித்தார். -எ-று.

தொலைவில் செய்தவத் தொண்டனார் சுருதியே முதலாங்
கலையின் உண்மையாம் எழுத்தஞ்சுஞ் கணிக்கின்ற காலை
நிலையின் நின்றுமுன் வழுவிட நீண்டபொன் மேருச்
சிலையி னார்திரு மேனிமேல் விழுந்ததோர் சிலம்பி. 11

(இ-ள்.) அழிவில்லாத தவத்தைச் செய்த திருநீலநக்க நாயனார் வேதமுதலாகிய சகல சாஸ்திரங்களிலும் கூறும் மெய்ப்பொருளாகிய திருவைந்தெழுத்தையும் ஜபிக்கும் பொழுது, ஒரு சிலம்பிப்பூச்சியானது தானிருக்கும்மிடத்தினின் றும் முன்னே வழுவுதலால் நீண்ட பொன் மயமாகிய மேருவைவில்லாகவுடைய சிவபெருமானது திருமேனிமேல் விழுந்தது. -எ-று.

விழுந்த போதில்அங் கயல்நின்ற மனைவியார் விரைவுற்(று)
எழுந்த அச்சமோ டிளங்குழ வியில்விழுஞ் சிலம்பி
ஒழிந்து நீங்கிட ஊதிமுன் துமிப்பவர் போலப்
பொழிந்த அன்பினால் ஊதிமேல் துமிந்தனர் போக. 12

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அவ்வாறு சிலம்பிப்பூச்சி விழுந்தபொழுது, அங்குச் சமீபத்தில் நின்ற அவரது மனைவியார் விரைந்து மனதிலுண் டாகிய அச்சத்தோடு சிறுகுழந்தைமேல்விழுகின்ற சிலம்பிப் பூச்சியின் விஷமானது நீங்கும்படி ஊதி முன்னே வாய்நீரை உமிழ்பவர் போல அன்பின் மிகுதியினால் அது நீங்கும்படி வாயினால் ஊதித் திருமேனியில் வாய் நீர் உமிழ்ந்தார். -எ-று.

பதைத்த செய்கையால் மனைவியார் முற்செயப் பந்தஞ்
சிதைக்கு மாதவத் திருமறை யவர்கண்டு தங்கண்
புதைத்து 'மற்றிது செய்ததென்? பொறியிலாய்!' என்னச்
"சுதைச்சி லம்பிலே விழவூதித் துமிந்தனன்" என்றார். 13

(இ-ள்.) (சிவபெருமானது திருமேனியின்மேல் சிலம்பி விழுந்தமை பற்றித்) தமது திருவுள்ளம் பதைத்த காரணத்தினால், மனைவியார் முன்னே இவ்வாறு ஊதித்துமிய, அதனைப் பாசபந்தங்களையொழிக்கும் மகத்தாகிய தவத்தையுடைய திருநீலைநக்கநாயனார் பார்த்துத் தம்முடைய கண்களை மூடிக்கொண்டு, அறிவில்லாதவளே! நீ இப்படிச் செய்த தென்னை? என்று கேட்க, மனைவியார், வெண்சிலம்பியானது சிவபெருமானுடைய திருமேனியில் விழுந்ததனால் ஊதித் துமிந்தேனென்று சொன்னார். -எ-று.

மனைவி யார்செய்த அன்பினை மனத்தினிற் கொள்ளார்
புனையும் நூல்மணி மார்பர்தம் பூசனைத் திறத்தில்
"இனைய செய்கைஇங் கநுசித மாம்" என எண்ணும்
நினைவி னால்அவர் தம்மைவிட் டகன்றிட நீப்பார். 14

(இ-ள்.) பூணூலையணிந்த அழகிய மார்பினையுடைய திருநீலநக்கநாயனார் தமது மனைவியார் சிவபெருமான் விஷயத்தில் செய்த அன்பின் திறத்தைத் சிறிதும் மனதிற்கொள் ளாமல், தாம் செய்யும் சிவபூசையில் இவ்வாறு செய்தது இங்கே அநுசிதமானகாரியமாம் என்று நினைக்கும், நினைவினால் அம்மனைவியாரை விட்டு நீங்கும்படி விலக்குவாராயினார். -எ-று.

"மின்நெ டுஞ்சடை விமலர்மேல் விழுந்தநூல் சிலம்பி
தன்னை வேறொரு பரிசினால் தவிர்ப்பது தவிர
முன்அ ணைந்துவந் தூதிவாய் நீர்ப்பட முயன்றாய்;
உன்னை யான்இனித் துறந்தனன் ஈங்" கென உரைத்தார். 15

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) மின்னலைப்போல விளங்குகின்ற நீண்டசடை முடியையுடைய சிவபெருமானது திருமேனியின்மேல் தவறி விழுந்த நூற்சிலம்பியை வேறொரு வகையால் விலக்குவதல்லாமல் முன்னே விரைந்துவந்து ஊதி வாய்நீரைத் துமிந்தாய்; இங்கே இவ்வநுசிதஞ்செய்த உன்னை யான் இனிமேல் துறந்தேனென்று சொன்னார். -எ-று.

மற்ற வேலையிற் கதிரவன் மலையிசை மறைந்தான்;
உற்ற ஏவலின் மனைவியார் ஒருவழி நீங்க
முற்ற வேண்டுவ பழுதுதீர் பூசனை முடித்துக்
கற்றை வேணியார் தொண்டருங் கடிமனை புகுந்தார். 16

(இ-ள்.) அச்சமயத்தில் சூரியன் அஸ்தமனகிரியில் மறைந்தான்; மனைவியார் கணவனாருடைய ஏவலின்படி ஒருவழி மறைவாக ஒதுங்கி நிற்க, செய்யவேண்டிய பிராயச்சித்த பூசையைச் செய்து முடித்துக் கூட்டமாகிய சடைமுடியையுடைய சிவபெருமானடியவராகிய திருநீலநக்கநாயனாரும் காவலையுடைய தமது திருமாளிகைக்குச் சென்றார். -எ-று.

அஞ்சும் உள்ளமோ டவர்மருங் கணைவுற மாட்டார்
நஞ்சம் உண்டவர் கோயிலில் நங்கையார் இருந்தார்;
செஞ்சொல் நான்மறைத் திருநீல நக்கர்தாம் இரவு
பஞ்சின் மெல்லணைப் பள்ளியிற் பள்ளிகொள் கின்றார். 17

(இ-ள்.) மனைவியார் அஞ்சுகின்ற உள்ளத்தோடும் தங் கணவனாரிருக்குமிடத்திற் செல்லமாட்டாதவராய், விஷத்தை யுண்டருளிய சிவபெருமான் வீற்றிந்தருளும் திருக்கோயிலில் இருந்தார்; செவ்விய சொற்களையுடைய நான்கு வேதங்களையுமுணர்ந்த திருநீலநக்கநாயனார் அன்றிரவில், பஞ்சாலமைத்த மிருதுவாகிய மெத்தையை யுடைய சயனத்தில் நித்திரை செய்கின்றார். -எ-று.

பள்ளி கொள்பொழு தயவந்திப் பரமர்தாங் கனவில்
வெள்ள நீர்ச்சடை யொடுநின்று மேனியைக் காட்டி
"உள்ளம் வைத்தெமை யூதிமுன் துமிந்தபால் ஒழியக்
கொள்ளும் இப்புறஞ் சிலம்பியின் கொப்புள்" என்றருள. 18

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருநீலநக்கநாயனார் நித்திரை செய்யும்பொழுது அயவந்தியில் வீற்றிருந்தலும் சிவபெருமான் அவருக்குச் சொப்பனத்தில் கங்கை நீர்தங்கிய சடைமுடியோடும் எழுந் தருளித் தமது திருமேனியைக் காட்டி, உன்மனைவி எம்மிடத்து அன்புவைத்து ஊதி முன்னேதுமிந்த இடமொழிய, இப்புறம் சிலம்பியின் கொப்புளமுண்டாயிருக்கிறதென்று சொல்லியருள. -எ-று.

கண்ட அப்பெருங் கனவினை நனவெனக் கருதிக்
கொண்ட அச்சமோ டஞ்சலி குவித்துடன் விழித்துத்
தொண்ட னார்தொழு தாடினார்; பாடினார்; துதித்தார்;
அண்ட நாயகர் கருணையைப் போற்றநின் றழுதார். 19

(இ-ள்.) திருநீலநக்கநாயனார் தாம்கண்ட அப்பெரிய சொப்பனத்தை நனவென்று நினைத்து, மனதிற்கொண்ட அச்சத்துடனே கைகளை அஞ்சலியாகக் குவித்து உடனே விழித்துத் தொழுதுகொண்டு ஆனந்தக் கூத்தாடினார்; பாடினார்; ஸ்தோத்திரஞ்செய்தார்; தேவர்களுக்கு நாயகராகிய சிவபெருமானது கருணைத் திறத்தையே போற்றி நின்று அழுதார். -எ-று.

போது போயிருள் புலர்ந்திடக் கோயிலுட் புகுந்தே
ஆதி நாயகர் அயவந்தி அமர்ந்தஅங் கணர்தம்
பாத மூலங்கள் பணிந்துவீழ்ந் தெழுந்துமுன் பரவி
மாத ராரையுங் கொண்டுதம் மனையில்மீண் டணைந்தார். 20

(இ-ள்.) இரவு நீங்கிப்பொழுது விடிந்தவுடனே திருக்கோயி லினுள் புகுந்து அயவந்தியில் வீற்றிருந்தருளும் முதற் பெருங்கடவுளாகிய சிவபெருமானுடைய திருவடிகளை விழுந்து வணங்கி எழுந்து முன்னின்று துதித்து, தம் பத்தினியாரையும் அழைத்துக்கொண்டு தமது திருமாளிகைக்குத் திரும்பி வந்தார்; திருநீலநக்கநாயனார். -எ-று.

பின்பு முன்னையிற் பெருகிய மகிழ்ச்சிவந் தெய்த
இன்பு றுந்திறத் தெல்லையில் பூசனை இயற்றி
அன்பு மேம்படும் அடியவர் மிகஅணை வார்க்கு
முன்பு போலவர் வேண்டுவ விருப்புடன் முடிப்பார். 21

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அதற்குப் பின்பு, முன்னையிலும் அதிக மகிழ்ச்சியை யடைந்து மிகுந்த இன்பமுண்டாகும்படி சிவபெருமானுக்கு அளவில்லாத விசேடபூசைகளைச் செய்து, அன்பினால் மேம்பட்டவர்களாய்க் கூட்டமாக வருகின்ற அடியார்களுக்கு வேண்டிய திருவமுது முதலிவைகளை மிகுந்த விருப்பத்தோடு செய்து கொண்டிருந்தார். -எ-று.

அன்ன தன்மையில் அமர்ந்தினி தொழுகும்அந் நாளில்
மன்னு பூந்தராய் வருமறைப் பிள்ளையார் பெருமை
பன்னி வையகம் போற்றிட மற்றவர் பாதஞ்
சென்னி வைத்துடன் சேர்வுறும் விருப்பினிற் சிறந்தார். 22

(இ-ள்.) அவ்வாறாகிய திருவமுது படைத்தல் முதலில் திருத்தொண்டினிலைமையில் விரும்பி இனிதாக வாழ்ந்து கொண்டிருக்கும் நாளில், நிலைபெற்ற சீகாழியில் திருவவதாரஞ் செய்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய மகிமையை உலகத்தார் சொல்லித்துதிக்க, (அதனைக் கேள்வி யுற்று) அவரது திருவடிகளைச் சிரசில்சூடிக்கொண்டு உடனே அவரைத் தரிசிக்க வேண்டுமென்னும் அதிக ஆசையையுடைய வராயிருந்தார். -எ-று.

பண்பு மேம்படு நிலைமையார் பயிலும்அப் பருவ
மண்பெ ருந்தவப் பயன்பெற மருவுநற் பதிகள்
விண்பி றங்குநீர் வேணியார் தமைத்தொழ அணைவார்
சண்பை மன்னருஞ் சாத்தமங் கையில்வந்து சார்ந்தார். 23

(இ-ள்.) அன்பானது அதிகரித்துள்ள நிலைமையினை யுடைய திருநீலநக்கநாயனார் அவ்வாறு ஒழுகிவரும் நாளில், உலகத்திலுள்ளவர்கள் பெரிய தவப்பயனை யடையும் பொருட்டு நிலைபெற்ற திருப்பதிகள் தோறும் வீற்றிருந்தருளும் ஆகாயகங்கையைத் தரித்த சடைமுடியையுடைய சிவ பெருமானை வணங்கும்படி வருகின்றவராகிய திருஞான சம்பந்தமூர்த்திசுவாமிகளும் (அயவந்திநாதரை வணங்கும் பொருட்டுச்) சாத்தமங்கையில் எழுந்தருளினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீடு சீர்த்திரு நீலகண் டப்பெரும் பாணர்
தோடு லாங்குழல் விறலியர் உடன்வரத் தொண்டர்
கூடும் அப்பெருங் குழாத்தொடும் புகலியர் பெருமான்
மாடு வந்தமை கேட்டுளம் மகிழ்நீல நக்கர். 24

(இ-ள்.) மிகுந்த புகழையுடைய திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் மலர்களை முடித்த கூந்தலையுடைய விறலியாரோடு வர, அடியார்கள் கூடியிருக்கின்ற பெரிய திருக்கூட்டத்தோடும் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் சாத்தமங்கையென்னும் ஸ்தலத்திற்குச் சமீபமாக எழுந்தருளியதைக் கேள்வியுற்று மனமகிழ்ச்சி யடைந்த திருநீலநக்கநாயனார். -எ-று.

கேட்ட அப்பொழு தேபெரு மகிழ்ச்சியிற் கிளர்ந்து
தோட்ட லங்கலுங் கொடிகளும் புனைந்துதோ ரணங்கள்
நாட்டி நீள்நடைக் காவண மிட்டுநற் சுற்றத்(து)
ஈட்ட முங்கொடு தாமுமுன் எதிர்கொள எழுந்தார். 25

(இ-ள்.) (திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் சாத்த மங்கைக்கு எழுந்தருளினாரென்று) கேட்டவுடனே மிகுந்த மகிழ்ச்சியைடைந்து, இதழ்கள் பொருந்திய மலர்மாலைகளையும் கொடிகளையுங்கட்டித் தோரணங்கள் நாட்டி நீண்ட நடைப்பந்தரிட்டு, தம்முடைய நல்ல உறவினரது கூட்டத்தையும் அழைத்துக் கொண்டு நாமும் முன்னே எதிர்கொள்ளும்படி எழுந்து சென்றார். -எ-று.

சென்று பிள்ளையார் எழுந்தரு ளுந்திருக் கூட்டம்
ஒன்றி அங்கெதிர் கொண்டுதங் களிப்பினால் ஒருவா(று)
அன்றி ஆடியும் பாடியுந் தொழுதெழுந் தணைவார்
பொன்ற யங்குநீள் மனையிடை யுடன்கொடு புகுந்தார். 26

(இ-ள்.) எதிர்கொண்டு சென்று திருஞானசம்பந்தப் பிள்ளையார் எழுந்தருளிவருந் திருக் கூட்டத்தையடைந்தது, அவரை அங்கு எதிர்கொண்டு, தம்முடைய மன மகிழ்ச்சியினால் பலதரமும் ஆடியும் பாடியும் வணங்கி எழுந்து செல்கின்ற திருநீலநக்கநாயனார் இலட்சுமிகரம் பொருந்திய நீண்டதமது திருமாளிகையில்அவரை அழைத்துக் கொண்டு வந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிள்ளை யாரெழுந் தருளிய பெருமைக்குக் தக்க
வெள்ள மாகிய அடியவர் கூட்டமும் விரும்ப
உள்ளம் ஆதர வோங்கிட ஓங்குசீ காழி
வள்ள லாரைத்தம் மனையிடை அமுதுசெய் வித்தார். 27

(இ-ள்.) திருஞானசம்பந்தப் பிள்ளையார் தமது திருமாளிகைக்கு எழுந்தருளிய சிறப்பிற்குத் தகுந்தமிகுதியாகிய அடியார் திருக்கூட்டங்களும் விரும்பும்படி தமது திருவுள்ளத்தில் அன்பானது அதிகரிக்க, உயர்ந்த சீகாழித் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளைத் தமது திருமாளிகையில் திருவமுது செய்வித்தார். -எ-று.

அமுது செய்தபின் பகலவன் மேல்கடல் அணையக்
குமுத வாவியிற் குளிர்மதிக் கதிரணை போதில்
இமய மங்கைதன் திருமுலை அமுதுண்டார் இரவும்
தமது சீர்மனைத் தங்கிட வேண்டுவ சமைத்தார். 28

(இ-ள்.) திருவமுது செய்த பின்பு, சூரியன் மேற்றிசைக் கருங்கடலில் அஸ்தமிக்க, அல்லிமலர்களையுடைய தடாகங் களில் குளிர்ந்த சந்திர கிரணங்கள் கூசும் இராப்பொழுதில், பார்வதிதேவியாருடைய திருமுலைப்பாலமுதத்தை யுண்டருளிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் அன்றிரவு தமது திருமாளிகையில் தங்கும்படி வேண்டிய உபகரணங்களை அமைத்தார்; திருநீலநக்கநாயனார். -எ-று.

சீல மெய்த்திருத் தொண்டரோ டமுதுசெய் தருளி
ஞாலம் மிக்கிட நாயகி யுடன்நம்பர் நண்ணும்
காலம் முற்பெற அழுதவர் அழைத்திடக் கடிது
நீல நக்கனார் வந்தடி பணிந்துமுன் நின்றார். 29

(இ-ள்.) நல்லொழுக்கத்தையுடைய மெய்ம்மையாகிய திருத்தொண்டர்களோடு திருவமுது செய்தருளி, உலகத்தார் கடைத்தேறும் பொருட்டு உமாதேவியாரோடு தோணியப்பர் வெளிப்பட்டருளும் பரிபாககாலம் முன்னுண்டாக (அதனால் அத்திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து 'அம்மே அப்பா' வென்றுகூறி) அழுதருளிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருநீலநக்கநாயனாரை அழைக்கவும், அந்நாயனார் விரைந்து வந்து அவருடைய திருவடிகளில் வணங்கித் திருமுன்னே நின்றார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நின்ற அன்பரை "நீலகண் டப்பெரும் பாணர்க்(கு)
இன்று தங்கவோர் இடங்கொடுத் தருளுவீர்" என்ன
நன்றும்இன்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்
சென்று மற்றவர்க் கிடங்கொடுத் தனர்திரு மறையோர். 30

(இ-ள்.) திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் தமது திருமுன்னே நின்ற திருநீலநக்கநாயனாரைப் பார்த்து, திருநீல கண்டயாழ்ப்பாணர் இன்று தங்குவதற்கு ஓரிடங்கொடுத் தருளுவீரென்று சொல்லியருள, அதற்கு மிகவும் மகிழ்ந்து தமது மனையின் நடுவிலிருக்கின்ற வேதிகையின் பக்கத்தில் அழைத்துக் கொண்டுபோய், அத்திருநீலகண்டயாழ்ப்பாணருக்கு இடங் கொடுத்தார்; திருநிலநக்கநாயனார். -எ-று.

ஆங்கு வேதியில்அறாதசெந் தீவலஞ் சுழிவுற்(று)
ஓங்கி முன்னையில் ஒருபடித் தன்னியே ஒளிரத்
தாங்கு நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த் தலைவர்
பாங்கு பாணியா ருடன்அரு ளாற்பள்ளி கொண்டார். 31

(இ-ள்.) அவ்விடத்து ஔபாசன வேதிகையிலுள்ள நித்தி யாக்கினிவலஞ் சுழித்து ஓங்கி முன்னையிலும் அதிகமதிக மாக விளங்கவும், அதனால் பூணூலையணிந்த திருநீலநக்கநாய னார் மகிழ்ச்சியடையவும், சகோடயாழ்த் தலைவராகிய திருநீல கண்டயாழ்ப்பாணநாயனார் அவ்வேதிகையின் சமீபத்தில் விறலியாரோடு பள்ளி கொண்டருளினார். -எ-று.

கங்கு விற்பள்ளி கொண்டபின் கவுணியர்க் கிறைவர்
அங்கு நின்றெழுந் தருளுவார் அயவந்தி அமர்ந்த
திங்கள் சூடியை நீலநக் கரைச்சிறப் பித்தே
பொங்கு செந்தமிழ்த் திருப்பதி கத்தொடை புனைந்தார். 32

(இ-ள்.) கவுணியர் குலத் தலைவராகிய திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகள் அன்றிரவில் பள்ளிகொண்டு, விடிந்த பின்பு அவ்விடத்தினின்றும் எழுந்தருளி அயவந்தி என்னும் ஆலயத் தில் வீற்றிருந்தருளும் சந்திரஜடாதரராகிய சிவபெருமான் மேலே திருநீலநக்கநாயனாரைச் சிறப்பித்து அழகிய செந்தமிழ்த் திருப்பதிகம் பாடியருளினார். -எ-று.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிக நாண்மலர் கொண்டுதம் பிரான்கழல் பரவி
அதிக நண்பினை நீலநக் கருக்களித் தருளி
எதிர்கொ ளும்பதி களில்எழுந் தருளினார் என்றும்
புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்தபூ சுரனார். 33

(இ-ள்.) திருப்பதிகமாகிய புதிய மலர்களைக் கொண்டு சிவபெருமானுடைய திருவடிகளைத் துதித்து, அதிகமான நேசத்தைத் திருநீலநக்கநாயனாரிடத்துச் செலுத்தி, அவ்விடத்தினின்றும் தமக்கு எதிரிலுள்ள தொழுதற்குரிய திருப்பதிகளில் எழுந்தருளினார்; எந்நாளும் புதிதாகிய சிறந்த தமிழ்மொழியினாலேயே பழைமையாகிய வேதங்களை அருளிச்செய்த திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள். -எ-று.

பிள்ளை யார்எழுந் தருளஅத் தொண்டர்தாம் பின்பு
தள்ளும் அன்புடன் கேண்மையும் தவிர்ப்பில எனினும்
வள்ள லார்திரு வருளினை வலியமாட் டாமை
உள்ளம் அங்குடன் போக்கிமீன் டொருவகை இருந்தார். 34

(இ-ள்.) திருஞானசம்பந்தப்பிள்ளையார் சாத்தமங்கையினின்றும் எழுந்தருளும்பொழுது, அந்தத்திருநீலநக்கநாயனார் தாம் அவர்பின்னே செல்லவேண்டுமென்னும் அன்பும் நேசமும் தம் மனதைவிட்டு நீங்காதிருந்ததும், அருள்வள்ளலாகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் இட்ட கட்டளையைத் தடுக்கக் கூடாமையால், தமது திருவுள்ளத்தை அவர் பின்னே செலுத்தித் திரும்பித் தமது திருமாளிகைக்கு வந்து, ஒருவாறு மனந்தேறியிருந்தார். -எ-று.

மேவு நாளில்அவ் வேதியர் முன்புபோல் விரும்பும்
தாவில் பூசனை முதற்செய்கை தலைத்தலை சிறப்பச்
சேவின் மேலவர் மைந்தராந் திருமறைச் சிறுவர்
பூவ டித்தலம் பொருந்திய உணர்வொடும் பயின்றார். 35

(இ-ள்.) திருநீலநக்கநாயனார் அங்கு வசித்திருக்கும் நாளில், முன்பு செய்து வந்ததுபோலப் பலரும் விரும்புகின்ற கெடாத மாகேசுவரபூசை முதலிய செய்கைகள் மேன்மேலும் வளர, ரிஷபத்தின் மேலெழுந்தருளிவரும் சிவபெருமானது திருக்குமாரராகிய திருஞானசம்பந்தப்பிளையாரது ஸ்ரீபாதாரவிந்தங்களைத் தம் மனதிற் பொருந்திய உணர்ச்சியோடும் இடைவிடாது சிந்தித்துவந்தார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சண்பை யாளியார் தாமெழுந் தருளும்எப் பதியும்
நண்பு மேம்பட நாளிடைச் செலவிட்டு நண்ணி
வண்பெரு ம்புக ழவருடன் பயின்றுவந் துறைந்தார்
திண்பெ ருந்தொண்ட ராகிய திருநீல நக்கர். 36

(இ-ள்.) சீகாழித் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளியிருக்கும் எந்தத் திருப்பதிகளிலும், அவரிடத் துண்டாகிய நேசமானது அதிகரிக்க இடையே சிலநாட்கள் செல்லவிட்டுச் சென்று, சிறந்த பெரும்புகழை யுடைய அத்திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி களோடு கலந் திருந்து பின் தம்மூருக்குத் திரும்பி வந்தார்; வலிய பெருந் தொண்டராகிய திருநீலநக்கநாயனார். -எ-று.

பெருகு காதலிற் பின்நெடு நாள்முறை பிறங்க
வருபெ ருந்தவ மறையவர் வாழிசீ காழி
ஒருவர் தந்திருக் கல்லியா ணத்தினி லுடனே
திரும ணத்திறஞ் சேவித்து நம்பர்தாள் சேர்ந்தார். 37

(இ-ள்.) மிகுந்த ஆசையோடும் அநேகநாள் இவ்வாறு நீங்காமல் வந்து தரித்துப் போகின்ற பெருந்தவத்தையுடைய திருநீலநக்கநாயனார் சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகளுடைய திருநீலநக்கநாயனார் சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளுடைய திருக் கலியாணத்தில் அடியார்களோடு அத்திருமணக் குறிப்பைச் சேவைசெய்து சிவபெருமானுடைய திருவடிகளை யடைந்தார். -எ-று.

தருதொ ழில்திரு மறையவர் சாத்தமங் கையினில்
வருமு தற்பெருந் திருநீல நக்கர்தாள் வணங்கி
இருபி றப்புடை அந்தணர் ஏறுயர்த் தவர்பால்
ஒருமை உயத்துணர் நமிநந்தி யார்தொழில் உரைப்பாம். 38

(இ-ள்.) ஓதல் முதலிய அறுவகைத் தொழில்களையும் செய்கின்ற வேதியர்கள் வாழும் சாத்தமங்கை என்னும் க்ஷேத்திரத்தில் அவதரித்த முதன்மையாகிய பெரிய திருநீலநக்க நாயனாரது திருவடிகளை வணங்கி, ரிஷபக் கொடியையுடைய சிவபெருமானிடத்தில் அன்பு செலுத்திச் சிவஞானத்தை யுணர்ந்த இருபிறப்பையுடைய அந்தணராகிய நமிநந்தியடிக ணாயனாரது திருத்தொண்டைச் சொல்லத் தொடங்குவோம். -எ-று.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

३३. நமிநந்தியடிகள் நாயனார் புராணம்

வையம் புரக்குந் தனிச்செங்கோல் வளவர் பொன்னித் திருநாட்டுச்
செய்ய கமலத் தடம்பணையும் செழுநீர்த் தடமும் புடையுடைத்தாய்ப்
பொய்தீர் வாய்மை அருமறைநூல் புரிந்த சீலப் புகழதனால்
எய்தும் பெருமை எண்டிசையும் ஏறூர் ஏமப் பேறூரால். 1

(இ-ள்.) உலகத்தை நீதியோடு அரசாட்சி செய்கின்ற ஒப்பற்ற செங்கோலையுடைய சோழராஜாக்களுக்குரிய அழகிய காவிரிநாட்டிலே செந்தாமரை மலர்கள் பொருந்திய விசால மாகிய வயல்களையும், செழுமையாகிய நீர் நிறைந்த தடாகங் களையும் தன்னிடத்திலுடையதாய்ச் சிறந்த மெய்ம்மையாகிய அரிய வேதத்திற்கூறும் ஒழுக்கத்தையுடைய புகழினாலடைந்த பெருமையானது எட்டுத் திக்குகளிலும் பரவிய ஊர் (யாதெனில்) ஏமப்பேறூராகும். -எ-று.

மாலை பயிலும் தோரணங்கள் மருங்கு பயிலும் மணிமறுகு
வேலை பயிலும் புனல்பருகு மேகம் பயிலும் மாடங்கள்
சோலை பயிலும் குளிர்ந்தஇருள் சுரும்பு பயிலும் அரும்பூகம்
காலை பயிலும் வேதஒலி கழுநீர் பயிலும் செழுநீர்ச்செய். 2

(இ-ள்.) (அவ்வூரில்) மாலைகளோடு சேர்ந்த தோரணங்கள் அழகிய வீதிகளில் கட்டியிருக்கும்; சமுத்திரத்திற்பொருந்திய நீரை யுண்ணுகின்ற மேகங்கள் மேல் வீடுகளில் சஞ்சரிக்கும்; இருள் குளிர்ந்த சோலைகளில் தங்கியிருக்கும்; வண்டுகள் அரிய கமுகமரங்களில் சூழ்ந்திருக்கும்; வேதியர்கள் அத்தியயனஞ் செய்யும் வேதவொலி விடியற்காலையில் முழங்கும்; செங்கழுநீர் மலர்கள் குளிர்ந்த நீரையுடைய வயல்களில் மலர்ந்திருக்கும். -எ-று.

பணையில் விளைந்த வெண்ணெல்லின் பரப்பின் மீது படச்செய்ய
துணர்மென் கமலம் இடைஇடையே சுடர்விட் டெழுந்து தோன்றுவன
புணர்வெண் புரிநூ லவர்வேள்விக் களத்தில் புனைந்த வேதிகைமேல்
மணல்வெண் பரப்பின் இடைஇடையே வளர்த்த செந்தீமானுமால். 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) வயல்களில் விளைந்த வெண்மையாகிய நெல்லினது பரப்பின்மேல் பொருந்தக் கொத்துக்களையுடைய மெல்லிய செந்தாமரைமலர்கள் இடையிடையே ஒளிவிட்டெழுந்து தோன்றுகின்ற தோற்றம், (எவ்வாறிருக்குமென்றால்,) முறுக்காகிய மெல்லியபூணூலையணிந்த வேதியர்கள் தாங்கள் செய்யும் யாகசாலையில் அலங்கரித்த வேதிகையின்மேலிட்ட வெண் மணற் பரப்பினிடையிடையே வளர்த்த ஓமத்தீயை யொத்திருக்கும். -எ-று.

பெருமை விளங்கும் அப்பதியிற் பேணும் நீற்றுச் சைவநெறி
ஒருமை நெறிவாழ் அந்தணர்தம் ஓங்கு குலத்தி னுள்வந்தார்
இருமை உலகும் ஈசர்கழல் இறைஞ்சி ஏத்தப் பெற்றதவத்
தருமை புரிவார் நமிநந்தி அடிகள் என்பா ராயினார். 4

(இ-ள்.) பெருமை பொருந்திய அந்த ஏமாப்பேறூரென்னும் ஸ்தலத்தில் விபூதியைத் தரித்தொழுகும் சைவநெறியாகிய ஒப்பற்ற நன்மார்க்கத்தில் வாழ்கின்ற வேதியர்களுடைய சிறந்த குலத்தில் அவதரித்தவர்; இம்மையிலும், மறுமையிலும் சிவ பெருமானுடைய திருவடிகளை வணங்கித் துதிக்கப்பெற்ற அருமையாகிய தவத்தைச் செய்பவர்; நமிநந்தியடிகளென்று ஒருவர் இருந்தார். -எ-று.

வாய்மை மறைநூல் சீலத்தால் வளர்க்கும் செந்தீ எனத்தகுவார்
தூய்மைத் திருநீற் றடைவேமெய்ப் பொருளென் றறியுந்துணிவினார்
சாம கண்டர் செய்யகழல் வழிபட் டொழுகுந் தலைமைநிலை
யாம இரவும் பகலும்உணர் வொழியா இன்பம் எய்தினார். 5

(இ-ள்.) மெய்ம்மையாகிய வேதத்திற் கூறும் ஒழுக்கத்தினால் வளர்க்கின்ற சிவந்த யாகாக்கினி யென்று சொலத்தக்கவர்; பரிசுத்தமாகிய திருவெண்ணீற்றைத் தரித்தலே உண்மைப் பொருளென்றுணரும் மனோநிச்சயமுடையவர்; சிவபெருமானுடைய சிவந்த திருவடிகளில் வழிபாடு செய்தொழுகுகின்ற தன்மையில் இரவிலும் பகலிலும் தமது உணர்ச்சியினின்றும் நீங்காத இன்பத்தை யடைந்தவர். -எ-று.

அவ்வூர் நின்றுந் திருவாரூ ரதனை அடைவார் "அடியார்மேல்
வெவ்வூ றகற்றும் பெருமான்றன் விரைசூழ் மலர்த்தாள் பணிவுறுதல்
எவ்வூதியமும் எனக்கொள்ளும் எண்ணம் உடையார் பலநாளும்
தெவ்வூர் எரித்த வரைச்சிலையார் திருப்பா தங்கள் வணங்கினார்." 6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அந்த ஏமப் பேறூரினின்றுந் திருவாரூரையடைகின்ற நமிநந்தியடிகணாயனார் அடியார்களுடைய கொடிய துன்பத்தை நீக்கியருளும் சிவபெருமானது வாசனை வீசுகின்ற தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குவதே எமக்கு எவ்வகைப்பட்ட பயனுமென்று நினைத்து, அவ்வாறு செய்தலை மேற்கொண்டொழுகும் எண்ணமுடையவராய்ப் பகைவர்களுடைய முப்புரங்களை எரித்த வரிந்த மேருவில்லையுடைய வன்மீகநாதரது திருவடிகளைப் பலநாள்களிலும் வணங்கி வருவாராயினார். -எ-று.

செம்பொற் புற்றின் மாணிக்கச் செழுஞ்சோ தியைநேர் தொழுஞ்சீலம்
தம்பற் றாக நினைந்தணைந்து தாழ்ந்து பணிந்து வாழ்ந்துபோந்
தம்பொற் புரிசைத் திருமுன்றில்அணைவார் பாங்கோர் அரனெறியின்
நம்பர்க் கிடமாங் கோயிலினுட் புக்கு வணங்க நண்ணினார். 7

(இ-ள்.) சிவந்த பொன்மயமாகிய புற்றினிடத்து வீற்றிருந்தருளும் மாணிக்கத்தின் செழுமையாகிய சோதிபோன்ற வன்மீகநாதரை நேரே தரிசிக்கின்ற நல்லொழுக்கமானது தமக்குரிய சார்பாக நினைந்து சென்று விழுந்து வணங்கிச் சிவாநந்தப் பெருவாழ்வடைந்து போய், அழகிய பொன்மயமாகிய மதில்சூழ்ந்த திருமுற்றத்தில் அணைகின்றவர் ஒருபக்கத்திலுள்ள அரனெறியென்னும் ஆலயத்தில் சிவபெருமான் வீற்றிருந்தருளுதற்கிடமாகிய திருக்கோயிலினுள்ளே புகுந்து சுவாமியை வணங்கும்படி சென்றார்; நமிநந்தியடிகணாயனார். -எ-று.

நண்ணி இறைஞ்சி அன்பினால் நயப்புற் றெழுந்த காதலுடன்
அண்ண லாரைப் பணிந்தெழுவார் அடுத்த நிலைமைக் குறிப்பினால்
பண்ணுந் தொண்டின் பாங்குபல பயின்று பரவி விரவுவார்
எண்ணில் தீபம் ஏற்றுவதற் கெடுத்த கருத்தின் இசைந்தெழுவார். 8

(இ-ள்.) அரனெறியப்பரையடைந்து கைகூப்பித் தொழுது, அன்புகாரணமாக மனங் கசிந்தெழுந்த ஆசையோடு வணங்கியெழுகின்றவராய்த் தமது திருவுள்ளத்துத் தோன்றிய மனக் குறிப்பினால், அங்குத் தாம் செய்தற்குரிய பல திருத்தொண்டுகளைச் செய்து, துதிசெய்து கொண்டிருக்கும் நமிநந்தியடிகணாயனார் (அவ்வெம்பெருமானுடைய திருக்கோயிலில் தீபங்குறைவாயிருந்தமையால்) அளவற்ற தீபங்களை இங்கு ஏற்ற வேண்டுமென்று தோன்றிய எண்ணத்தினால் அவ்வாறே செய்வதற்குடன்பட்டு அவ்விடத்தினின்றும் புறப்படுவாராயினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எழுந்த பொழுது பகற்பொழுதிங் கிறங்கு மாலை எய்துதலும்
செழுந்தண் பதியி னிடையப்பாற் செல்லிற் செல்லும் பொழுதென்ன
ஒழிந்தங் கணைந்தோர் மனையில்விளக் குறுநெய் வேண்டி உள்புகலும்
அழிந்த நிலைமை அமணர்மனை ஆயிற் றங்கண் அவருரைப்பார். 9

(இ-ள்.) அவர் தீபத்திற்கு நெய் வேண்டிப் புறப்பட்ட பொழுது, அங்குப் பகற்காலம் பொழுதிறங்கி மாலைக்கால மாதலையறிந்து, செழுமையாகிய இத்திருப்பதியிலே அப்பால் யான் நெய்வேண்டிச் சென்றால், பொழுது போய்விடுமென்று செல்லாமல், சமீபத்திலுள்ள ஒரு வீட்டில்சென்று திருவிளக்கு ஏற்றுதற்கு நெய்யை விரும்பி உள்ளேபோகவும், அது தீயவொழுக்கத்தையுடைய சமணர் வீடாயிருந்தது. அவ்விடத்து அச்சமணர்கள் அவரைப் பார்த்துச் சொல்வார்கள். -எ-று.

"கையில் விளங்கு கனலுடையார்
தமக்கு விளக்கு மிகைகாணும்;
நெய்யிங் கில்லை; விளக்கெரிப்பீ
ராகில் நீரை முகந்தெரித்தல்
செய்யும்" என்று திருத்தொண்டர்க்
குரைத்தார் தெளியா(து) ஒரு பொருளே,
பொய்யும் மெய்யும் ஆம்" என்னும்
பொருள்மேற் கொள்ளும் புரைநெறியார். 10

(இ-ள்.) ஒருபொருளையே அதனுண்மையையுணராமல், இஃது இல்லதும் உள்ளது மாகுமென்னும் பொருளை மேற்கொண்டுரைக்கும் தீயவொழுக்கத்தையுடைய சமணர்கள் 'கையில் சுவாலிக்கின்ற அக்கினியையுடைய உமது பரம சிவனுக்கு விளக்கு மிகையன்றோ? இவ்விடத்தே நெய்யில்லை; விளகெரிக்கவேண்டுமானால் நீரை முகந்து விட்டு எரியும்' என்று நமிநந்தியடிகணாயனாருக்குச் சொன்னார்கள். -எ-று.

அருகர் மதியா துரைத்தவுரை ஆற்றா ராகி அப்பொழுதே
பெருக மனத்தில் வருத்தமுடன் பெயர்ந்து போந்து பிறையணிந்த
முருகு விரியும் மலர்க்கொன்றை முடியார் கோயில் முன்எய்தி
உருகும் அன்பர் பணிந்துவிழ ஒருவாக் கெழுந்த(து) உயர்விசும்பில். 11

(இ-ள்.) சமணர்கள் சிவபெருமானைச் சிறிதுமதியாமல் சொல்லிய பரிகாச வார்த்தையை நமிநத்தியடிகணாயனார் கேட்டு மனம் பொறாதவராகி, அப்பொழுதே மிகுந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனவருத்தத்தோடு அவ்விடத்தினின்றுந் திரும்பிப்போய், இளம்பிறையையும் வாசனை வீசுகின்ற கொன்றை மலர் மாலையையும் தரித்த திருமுடியையுடைய சிவபெருமானது திருக்கோயிலின் முன்னே சென்று, மணமுருகுகின்ற அந் நமிநந்தியடிகள் விழுந்து வணங்க, அப்பொழுது உயர்ந்த ஆகாயத்தில் ஒரு அசரீரி வாக்குத் தோன்றியது. -எ-று.

"வந்த கவலை மாற்றும்இனி விளக்குப் பணிமாற
இந்த மருங்கில் குளத்துநீர் முகந்து கொடுவந் தேற்றும்"என
அந்தி மதியம் அணிந்தபிரான் அருளால் எழுந்த மொழிகேளாச்
சிந்தை மகிழ்ந்து நமிநந்தி அடிகள் செய்வ தறிந்திலரால். 12

(இ-ள்.) நீர் உம்முடைய மனக்கவலையை யொழியும்; இனி, நீங்காத திருவிளக்குப் பணி செய்ய இதற்குச் சமீபத்திலிருக்கின்ற குளத்து நீரை முகந்து கொண்டு வந்து விளக்கேற்றுமென்று இளம்பிறை யணிந்த சிவபெருமானது திருவருளாலெழுந்த அசரீரிவார்த்தையைக் கேட்டு, நமிநந்தியடிகணாயனார் திருவுள்ள மகிழ்ந்து தாம் செய்வதொன்று மறியாதவராயினார். -எ-று.

சென்னி மிசைநீர் தரித்தபிரான் அருளே சிந்தை செய்தெழுவார்
நன்னீர்ப் பொய்கை நடுப்புக்கு நாதர் நாமம் நவின்றேத்தி
அந்நீர் முகந்து கொண்டேறி அப்பர் கோயில் அடைந்(து) அகலுள்
முந்நீர்உலகம் அதிசயிப்ப முறுக்குந் திரிமேல் நீர்வார்த்தார். 13

(இ-ள்.) திருமுடியில் கங்கை நதியைத் தரித்த சிவபெருமானுடைய திருவருளையே சிந்தித்துக் கொண்டு போகின்ற நமிநந்தியடிகணாயனார் நல்ல நீரையுடைய குளத்தின் நடுவில் இறங்கிச் சிவபெருமானது திருநாமத்தை உச்சரித்துத் துதித்து அந்தக் குளத்து நீரை முகந்து கொண்டு கரையேறி, அரனெறியப்பரது திருக்கோயிலிலே வந்து, சமுத்திரஞ்சூழ்ந்த உலகத்தாரதிசயிருக்கும்படி அகலிலே முறுக்கிய திரியின்மேலே அந்நீரை வார்த்தார். -எ-று.

சோதி விளக்கொன் றேற்றுதலுஞ் சுடர்விட் டெழுந்த(து) அதுநோக்கி
ஆதிமுதல்வர் அரனெறியார் கோயில் அடைய விளக்கேற்றி
ஏதம் நினைந்த அருகந்தர் எதிரேமுதிருங் களிப்பனுடன்
நாதர் அருளால் திருவிளக்கு நீரால் எரித்தார் நாடறிய. 14

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) ஒளிபொருந்திய ஒரு விளக்கை நீர்விட்ட அகலில் ஏற்றவும், அது சுடர்விட்டெரிந்தது; அதைப் பார்த்து, முதற் பெருங்கடவுளாகிய அரனெறியப்பரது திருக்கோயிலில் முழுதிலும் அந்நீரால் திருவிளக்கு ஏற்றி, தமது திருப்பணியைக் குற்றமாக நினைந்த சமணர்களுக்கெதிரே மிகுந்த மனக்களிப் புடனே சிவபெருமானது திருவருளினால் உலகத் தாரறியும்படி நீரினாலே திருவிளக்கெரித்தார்; நமிநந்தியடிகணாயனார். -எ-று.

நிறையும் பரிசு திருவிளக்கு விடியு மளவும் நின்றெரியக்
குறையுந் தகளி களுக்கெல்லாங் கொள்ள வேண்டும் நீர்வார்த்து
மறையின் பொருளை அருச்சிக்கும் மனையின் நியதி வழுவாமல்
உறையும் பதியின் அவ்விரவே அணிவார் பணிவுற் றொருப்பட்டார். 15

(இ-ள்.) ஆலய முழுதும் நிறையும் முறைமையால் திருவிளக்குகளை விடியற்காலமளவும் நின்று எரியும்படி, நீர் குறைந்த அகல்களுக்கெல்லாம் அவை கொள்ளத்தக்க நீரை வார்த்து, வேதப்பொருளாகிய சிவபெருமானை அருச்சித்து, தமது மனையிற் செய்துவரும் நியதிவழுவாமல் தாம் வாசஞ்செய்யும் ஏமப்பேறூருக்கு அவ்விரவிலேயே போகுங் கருத்துடையவராய அரனெறியப்பரை வணங்கிச் சென்றார்; நமிநந்தியடிகணாயனார். -எ-று.

இரவு சென்று தம்பதியில் எய்தி மனைப்புக் கென்றும்போல்
விரவி நியமத் தொழில்முறையே விமலர் தம்மை அருச்சித்தும்
பரவி அமுது செய்தருளிப் பள்ளி கொண்ட புலர்காலை
அரவம் அணிவார் பூசைஅமைத் தாரூர் நகரின் மீண்டணைந்தார். 16

(இ-ள்.) அவ்விரவில் தம்முடைய ஊரைப்போய்ச் சேர்ந்து திருமாளிகையிற் சென்று, தாம் செய்து வருகின்ற நித்தியகன்ம விதிப்படி சிவபெருமானை அருச்சித்துத் துதித்துத் திருவமுது செய்து நித்திரைகொண்டு, விடியற்காலத்தில் சர்ப்பாபரண ராகிய சிவபெருமானுடைய நித்தியபூசையைச் செய்து, திருவாரூருக்குத் திரும்ப வந்தார். -எ-று.

வந்து வணங்கி அரனெறியார் மகிழுங் கோயில் வலங்கொண்டு
சிந்தை மகிழப் பணிந்தெழுந்து புறம்பும் உள்ளுந் திருப்பணிகள்
முந்த முயன்று பகலெல்லாம் முறையே செய்து மறையவனார்
அந்தி அமையத்(து) அரியவிளக் கெங்கும் ஏற்றி அடிபணிவார். 17

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) திருவாரூரை யடைந்து வன்மீகநாதரை வணங்கி, அரனெறியப்பர் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருக்கோயிலைப் பிரதக்ஷிணஞ் செய்து, மனமகிழும்படி சாஷ்டாங்கமாக வணங்கி யெழுந்து, ஆலயத்தின் புறத்தும் உள்ளும் தாம் செய்யும் திருத்தொண்டுகளை முற்பட்டு முயற்சித்துப் பகற்காலமுழுதும் முறைமையாகச் செய்து, மாலைப் பொழுதில் அரிய திருவிளக்குகளை ஆலயமெங்கும் ஏற்றிச் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கினார்; நமிநந்தியடிகணாயனார். -எ-று.

பண்டு போலப் பலநாளும் பயிலும் பணிசெய் தவரொழுகத்
தண்டி அடிக ளால்அமணர் கலக்கம் விளைந்து சார்வில்அமண்
குண்டர் அழிய ஏழுலகும் குலவும் பெருமை நிலவியதால்
அண்டர் பெருமான் தொண்டர்கழல் அமரர் பணியு மணியாரூர். 18

(இ-ள்.) முன்போலவே பலநாள்களும் அந்நமிநந்தியடிகணாயனார் தாம் செய்யும் திருத்தொண்டுகளைச் செய்துகொண்டு வரும் நாளிலே, தண்டியடிகணாயனார் காரணமாகச் சமணர்கள் அவர் செய்யும் திருப்பணிக்கு இடையூறுவிளைக்க, (அதனால்) நற்சார்பில்லாத சமணர்கள் (கண்கெட்டு) அழிய, தேவர்கள் நாயகராகிய சிவபெருமானடியார்களது திருவடிகளைத் தேவர்கள் வணங்குகின்ற திருவாரூரில் ஏழுலகத்திலும் பரவுகின்ற மகிமையானது விளங்கியது. -எ-று.

நாத மறைதேர் நமிநந்தி அடிக ளார்நற் றொண்டாகப்
பூத நாதர் புற்றிடங்கொள் புனிதர்க் கமுது படிமுதலாம்
நீதி வளவன் தான்வேண்டும் நிபந்தம் பலவும் அரியணையின்
மீது திகழ இருந்தமைத்தான் வேதா கமநூல் விதிவிளங்க.

19

(இ-ள்.) அக்காலத்திருந்த நீதியையுடைய சோழமகாராஜன் சிங்காதனத்தில் வீற்றிருந்து, இசை வடிவாகிய வேதங்களை யுணர்ந்த நமிநந்தியடிகணாயனார் செய்யும் நல்ல திருத் தொண்டாகப், பூதகணநாதராகிய வன்மீகநாதருக்கு வேதாகமவிதி விளங்க அமுதுபடி முதலாக வேண்டிய நிபந்தங்கள் பலவற்றை யும் ஏற்படுத்தினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**வென்றி விடையார் மதிச்சடையார் வீதி விடங்கப் பெருமாள்தாம்
என்றும் திருவா ரூர்ஆளும் இயல்பின் முறைமைத் திருவிளையாட்
டொன்றுஞ் செயலும் பங்குனியுத் தரமாந் திருநாள் உயர்ச்சிறப்பும்
நின்று விண்ணப் பஞ்செய்த படிசெய் தருளும் நிலைபெற்றார். 20**

(இ-ள்.) வெற்றி பொருந்திய ரிஷபத்தை வாகனமாகவுடைய வரும், சந்திரனையணிந்த சடைமுடியையுடையவருமாகிய தியாகராஜப் பெருமான் எந்நாளும் திருவாரூரை அரசாட்சி செய்யுமியல்பினால், முறைமையான லீலைகளைச் செய்தருளும் தன்மையும், பங்குனியுத்திரத் திருநாளின் உயர்ந்த சிறப்பு, தாம் சந்நிதி முன்னே நின்று விண்ணப்பஞ் செய்தபடியே அவ்வெம் பெருமான் செய்தருளும் முறைமையைப் பெற்றுக் கொண்டார்; நமிநந்தியடிகணாயனார். - எ-று.

**இன்ன பரிசு திருப்பணிகள் பலவுஞ் செய்தே ஏழுலகும்
மன்னும் பெருமைத் திருவாரூர் மன்னர் அடியார் வழிநிற்பார்
அன்ன வண்ணந் திருவிளையாட் டாடிஅருள எந்நாளும்
நன்மை பெருக நமிநந்தி அடிகள் தொழுதார் நாம்உய்ய. 21**

(இ-ள்.) உலகத்திற்கு எந்நாளும் நன்மை யுண்டாகும்படி இத்தன்மையாகப் பலதிருப்பணிகளையுஞ் செய்து, ஏழுலகத் திலும் நிலைபெற்ற பெருமையையுடைய திருவாரூரில் வீற்றிருந் தருளும் தலைவரும், அடியார்களுடைய பத்திவழியிலே பொருந்தி நிற்பவருமாகிய தியாகராஜப் பெருமான் அவ்வாறு திருவிளையாட்டைச் செய்தருள, நமிநந்தியடிகணாயனார் நாம் அனைவருங் கடைத்தேறும் பொருட்டு வணங்கினார். -எ-று.

**தேவர் பெருமான் எழுச்சிதிரு மணலூர்க் கொருநாள் எழுந்தருள
யாவ ரென்னா துடன்சேவித் தெல்லாக் குலத்தி லுள்ளோரும்
மேவ அன்பர் தாமுமுடன் சேவித் தணைந்து விண்ணவர்தங்
காவ லாளர் ஓலக்கம் அங்கே கண்டு களிப்புற்றார். 22**

(இ-ள்.) தியாகராஜப் பெருமான் திருவிழாக் கொண்டு ஒரு நாள் திருமணலூருக்கு எழுந்தருள, சகலசாதியார்களும், இவர் இன்னார் இன்னாரென்னும் சாதிபேதமில்லாமல் ஒருங்கே சேவித்துக்கொண்டுவர, நமிநந்தியடிகணாயனாரும் அவர் களோடு கலந்து திருவிழாவைச் சேவித்துப்போய்த், தேவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாயகராகிய அவ்வெம்பெருமானுடைய திருவோலக்கத்தை அங்கே தரிசித்து மனமகிழ்ச்சியை யடைந்தார். -எ-று.

பொழுது வைகச் சேவித்துப் புனிதர் மீண்டுங் கோயில்புகத்
தொழுது தம்மூர் மருங்கணைந்து தூய மனையுட் புகுதாதே
இழுதும் இருள்சேர் இரவுபுறங் கடையில் துயில இல்லத்து
முழுதுந் தருமம் புரிமனையார் வந்துட் புகுத மொழிகின்றார். 23

(இ-ள்.) நமிநந்தியடிகணாயனார் நெடுநேரம் வரையிலும் உற்சவதரிசனஞ் செய்து, தியாகராஜப்பெருமான் திருமணலூரி னின்றுந் திருக்கோயிலுக்கெழுந்தருள வணங்கிக்கொண்டு, தம்முடை ஊரையடைந்து, பரிசுத்தம் பொருந்திய திருமாளிகை யினுள்ளே புகாமல், மிகுந்த இருள் பொருந்திய அன்றிரவில் தலைவாசலில் பள்ளிகொள்ளவும், அத்திருமாளிகையில் இல்லறநெறியைக் குறைவற நடத்துகின்ற அவரது மனைவியார் வந்து உள்ளேவரும்படி சொல்லுகின்றார். -எ-று.

"திங்கள் முடியார் பூசனைகள் முடித்துச் செய்யுங் கடன்முறையால்
அங்கி தனைவேட் டமுதுசெய்து பள்ளி கொள்வீர்" என அவர்க்குத்
"தங்கள் பெருமான் திருமணலூர்க் கெழுச்சி சேவித் துடன்நண்ண
எங்கும் எல்லா ரும்போத இழிவு தொடக்கிற் றெனை" என்று. 24

(இ-ள்.) சந்திரனையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானுக்குச் செய்யும் பூசனைகளைச் செய்து, நித்தியப் படி செய்கின்ற அக்கினி காரியத்தையும் செய்து முடித்துத் திருவமுது செய்து பள்ளிகொள்ளுமென்று சொல்ல, அவ்வாறு கேட்ட மனைவியார்க்குப் (பதிலுத்தரவாகத்) தமது தியாகராஜப் பெருமான் திருமணலூர்க்கெழுந்தருளும் உற்சவகோலத்தைத் தரிசித்து அவருடன் வர, அங்குச் சகல சாதியாரும் கலந்து வந்தபடியால், எனக்குத் தீட்டுண்ணடாயிற் றென்று சொல்லி. -எ-று.

ஆத லாலே குளித்தடுத்த தூய்மை செய்தே அகம்புகுந்து
வேத நாதர் பூசனையைத் தொடங்க வேண்டும்; அதற்குநீ
சீத நன்னீர் முதலான கொண்டிங் கணைவாய்" எனச்செப்பக்
காதல் மனையார் தாமும்அவை கொணரு மதற்குக் கடிதணைந்தார். 25

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) ஆகையால் ஸ்நானம் பண்ணி அத்தீட்டு நீங்கும்படிப் பிராயச்சித்தஞ் செய்து கொண்டே வீட்டினுள்ளே புகுந்து வேதகாரணராகிய சிவபெருமான் பூசனைகளைத் தொடங்கல் வேண்டும்; அதற்கு நீ நல்ல தண்ணீர் முதலியவைகளை எடுத்துக் கொண்டு இங்குவரக்கடவாயென்று சொல்ல, அன்பு பொருந்திய அவரது மனைவியாரும் அந்நீர் முதலிவைகளைக் கொண்டு வரும் பொருட்டு, விரைந்து சென்றார். -எ-று.

ஆய பொழுது தம்பெருமான் அருளா லேயோ? மேனியினில்
ஏயும் அசைவின் அயர்வாலோ? அறியோம்; இறையும் தாழாதே
மேய உறக்கம் வந்தணைய விண்ணோர் பெருமான் கழல்நினைந்து
தூய அன்பர் துயில்கொண்டார்; துயிலும்பொழுது கனவின்கண். 26

(இ-ள்.) அப்பொழுது நமது சிவபெருமானுடைய திருவருளினாலேயோ! வழிநடந்ததனாலுண்டாகிய அவரது திருமேனியிற் பொருந்திய சோர்வினாலேயோ! யாம் அறியோம். கொஞ்சநேரமுந் தரியாமல் பொருந்திய உறக்கம்வர, பரிசுத்தம் பொருந்திய மெய்யன்பராகிய நமிநந்தியடிகணாயனார் சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டு நித்திரை செய்தார்; அவ்வாறு நித்திரை செய்யும்பொழுது அவரது சொப்பனத்தில். -எ-று.

மேன்மை விளங்குந் திருவாரூர் வீதி விடங்கப் பெருமாள்தாம்
மான அன்பர் பூசனைக்கு வருவார்போல வந்தருளி
“ஞான மறையோய்! ஆரூரில் பிறந்தார் எல்லாம் நங்கணங்கள்
ஆன பரிசு காண்பாய்”என் றருளிச் செய்தங் கெதிரகன்றார். 27

(இ-ள்.) மகிமை விளங்குகின்ற திருவாரூரில் வீற்றிருந் தருளும் தியாகராஜப் பெருமான் பெருமை பொருந்திய நமிநந்தி யடிகணாயனார் செய்யும் பூசையை ஏற்றுக் கொள்ளும்படி வருகின்றவர்போல (ஒரு திருவுருவங்கொண்டு) எழுந்தருளி, சிவஞானத்தையுடைய வேதியர்கள் வாழும் திருவாரூரில் பிறந்தவர்களென்று அருளிச் செய்து, அங்கு அவரெதிரே மறைந்தருளினார். -எ-று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதி தேவர் எழுந்தருள உணர்ந்தார் "இரவர்ச் சனைசெய்யா(து)
ஏதம் நினைந்தேன்" எனஅஞ்சி எழுந்த படியே வழிபட்டு
மாத ரார்க்கும் புகுந்தபடி மொழிந்து விடியல் விரைவோடு
நாத னார்தந் திருவாரூர் புகுத எதிர்அந் நகர்காண்பார். 28

(இ-ள்.) முதற்பெருங்கடவுளாகிய தியாகராஜப் பெருமான் அவ்வாறு சொப்பனஞ் சாதித்து மறைந்தளவும், உடனே துயில் நீங்கிய நமிநந்தியடிகணாயனார் இன்றிரவு சிவார்ச்சனை செய்யாமல் (தீட்டுண்டாயிற் றென்று) குற்றமாக நினைந்தே னென்று அச்சமுற்று, நித்திரையினின்றும் எழுந்தபடியே சிவார்ச்சனையைச் செய்து, தமது மனைவியாருக்கும் சொப் பனத் தில் நிகழ்ந்த தன்மையைச் சொல்லி, விடியற்காலத்தில் விரைந்து தியாகராஜப்பெருமான் வீற்றிருந்தருளும் திருவாரூ ரெல்லையை யடைய, தமக்கு எதிரே தோன்றுகின்ற அத்திருவா ரூரைக் காண்கின்ற நமிநந்தியடிகணாயனார். -எ-று.

தெய்வப் பெருமாள் திருவாரூர்ப் பிறந்து வாழ்வார் எல்லாரும்
மைவைத் தனைய மணிகண்டர் வடிவே யாகிப் பெருகொளியால்
மொய்வைத் தமர்ந்த மேனியராம் பரிசு கண்டு முடிகுவித்த
கைவைத் தஞ்சி அவனிமிசை விழுந்து பணிந்து களிசிறந்தார். 29

(இ-ள்.) தெய்வங்கள் நாயகராகிய தியாகராஜப் பெருமான் வீற்றிருந்தருளும் திருவாரூரிலே பிறந்து வாழ்கின்றவர்கள் யாவரும், காளகண்டத்தையுடைய சிவபெருமானது சாரூப்பிய முடையவர்களாய், மிகுந்த ஒளிப்பிழம்பால் திரண்டு விளங்குந் திருமேனியை யுடையவர்களாயிருக்கும் முறைமையைத் தரிசித்து, அஞ்சலியாகக் குவித்த கையை முடியின்மேல் வைத்து, அச்சமுற்று, பூமியில் சாஷ்டாங்கமாக வணங்கி மகிழ்ச்சி யடைந்தார். -எ-று.

படிவம் மாற்றிப் பழம்படியே நிகழ்வுங் கண்டு பரமர்பால்
"அடியேன் பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று பணிந்தருளால்
குடியும் திருவா ரூரகத்துப் புகுந்து வாழ்வார் குவலயத்து
நெடிது பெருகுந் திருத்தொண்டு நிகழச் செய்து நிலவுவார். 30

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இ-ள்.) அத்திருவாரூரிற் பிறந்தவர்கள் சிவகணங்களா யிருக்கும் முறைமையை மறைத்து முன்போலாயின தன்மையை யும் பார்த்துத் தியாகராசப் பெருமானை யடைந்து (எமது ஆண்டவரே!) அடியேன் (திருவாரூரிற் பிறந்தவர்களைச் சாமானியராக நினைத்த) இப்பெரும்பிழையைப் பொறுத்தருள வேண்டுமென்று வணங்கி, அவ்வெம்பெருமானுடைய திருவருளினாலே தம்மூரைவிட்டு அத்திருவாரூரிலேதானே குடிபுகுந்து வாழ்கின்றவர், உலகத்தில் நீடித்து விளங்குகின்ற பல திருத்தொண்டுகளைக் குறைவின்றிச் செய்து விளங்குவாரா யினார். -எ-று.

நீறு புனைந்த அடியார்க்கு நெடுநாள் நியதி யாகவே
வேறு வேறு வேண்டுவன எல்லாஞ் செய்து மேவுதலால்
ஏறு சிறப்பின் மணிப்புற்றில் இருந்தார் "தொண்டர்க் காணி" யெனும்
பேறு திருநா வுக்கரசர் விளம்பப் பெற்ற பெருமையினார். 31

(இ-ள்.) திருவெண்ணீறு தரித்தசிவனடியார்களுக்கு நெடுங்காலம் வரையிலும் நியதியாகத் தனித்தனி அவரவர்கள் வேண்டிய எல்லாவற்றையும் செய்து கொண்டிருந்தமையால், உயர்ந்த சிறப்பினையுடைய மாணிக்கங்கள் பொருந்திய புற்றி னிடத்தில் வீற்றிந்தருளும் வன்மீகநாதருடைய அடியார்களுக்கு "ஆணிப்பொன்" என்னும் பேற்றைத் திருநாவுக்கரசுசுவாமிகள் தமது திருப்பதிகத்தில் அருளிச் செய்யப் பெற்ற பெருமையை யுடையவராயினார்; நமிநந்தியடிகணாயனார். -எ-று.

இன்ன வகையால் திருப்பணிகள் எல்லா உலகுந் தொழச்செய்து
நன்மை பெருகும் நமிநந்தி அடிகள் நயமார் திருவீதிச்
சென்னி மதியும் திருநதியும் அலைய வருவார் திருவாரூர்
மன்னர் பாத நீழல்மிகும் வளர்பொற் சோதி மன்னினார். 32

(இ-ள்.) நன்மை மிகுந்த நமிநந்தியடிகணாயனார் இந்தப் பிரகாரம் எல்லா வுலகத்திலுள்ளவர்களும் வணங்கும்படி பல திருத்தொண்டுகளைச் செய்து, திருமுடியில் தரித்த சந்திரனும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கங்கை நதியும் அசையும்படி சிறப்புப் பொருந்திய திருவீதியில் பவனிவருகின்ற தியாகராஜப் பெருமானுடைய திருவடிநீழலில் மிகுந்து வளர்கின்ற அழகிய சோதியிற் கலந்தருளினார். -எ-று.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

நாட்டார் அறிய முன்னாளில் நன்னாள் உலந்த ஐம்படையின்
பூட்டார் மார்பின் சிறியமறைப் புதல்வன் தன்னைப் புக்கொளியூர்த்
தாட்டா மரையின் மடுவின்கண் தனி'ா முதலை வாய்நின்றும்
மீட்டார் கழல்கள் நினைவாரை மீளா வழியின் மீட்பனவே. 33

(இ-ள்.) முன்னாளில் முதலையின் வாய்ப்பட்டிறந்த ஐம்படை என்னும் ஆபரணமணிந்த மார்பினையுடைய சிறிய பிராமணப் பிள்ளையைத் திருப்புக்கொளியூரிலுள்ள தாளை யுடைய தாமரை மலர்கள் பொருந்திய நீர்தங்கிய மடுவிலே ஒப்பற்ற பெரிய முதலைவாயினின்றும், உலகத்தாரறியும்படி உபநயனஞ் செய்யும் நல்ல பருவத்தில், திருப்பதிகம் பாடி வரவழைத்தருளிய ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளுடைய திருவடி களையே தியானிக்கின்ற அடியார்களை (அத்திருவடிகள்) தொலையாத பிறவி வழியினின்றும் நீக்கி உய்விப்பனவாகும். -எ-று.

சருக்கம் ஐந்துக்குத் திருவிருத்தம் 1903

முதற் காண்டம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

❑ ❑ ❑

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Public domain. Digitized by Muthulakshmi Research Academy

பெரியபுராணம்

(மூலமும் - உரையும்)

91112310

உரையாசிரியர்
கூ. சுப்பராயநாயகரவர்கள்